உ

கடவுள்துணை.

செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

மூன்றாந்தொகுதி.

மதுரைத் தமிழ்ச்சங்கம் ※ THE MADURA TAMIL SANGAM ※

பத்திராசிரியர்—ரா. இராகவையங்கார்.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1904-1905.

"செந்தமிழ்" மூன்றுந்தொகுதியின்

உள்ளுறை.

அங்கச்சேதன சாஸ்திரம்.—ஸ்ரீமத்-செ. வீ. இராஜகோபாலா [சாரியர். ௩௩௨.

அசோகன் காலத்துக்குமுன்னும் சிலாசாஸனமுண்டென்பது.— } ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை. [௩௭௨.

இடைச்சங்கம்.—ஸ்ரீமத்-ஐயன் ஆரிதன். ... ... ௨௭௧.

இரட்டையர்.—பத்திராசிரியர். ... ... ௪௪௪.

இராமாவதாரச்செய்யுட் பாடாந்தரம்.—ஸ்ரீமத்-கணேசையர். ௨௧. [௬௩, ௧௪௫, ௧௮௦, ௨௩௫, ௩௩௯, ௪௪௯.

உயிர்.—ஸ்ரீமத்-சேற்றூர்-இராமசாமிக்கவிராயர். ... ௪௩௭.

"ஐயாறதனிற் சைவனாகியும்" என்றதன் வரலாறு.— } ஸ்ரீமத்-சேற்றூர். அருணாசலக் கவிராயர். ௩௯௧.

ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம்.— } ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ் M. A. ௩௬௩.

ஓரடித் தமிழ்ச்சொற்கள்.—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௧௮.

ஓர் தமிழ்ச்சாஸநம்.— ஸ்ரீமத்-எம். நாராயணசாமி ஐயர், பீ. ஏ. [பீ. எல்., ௧௦௫.

கம்பர்.—பத்திராசிரியர். ... ... ௧, ௪௨, ௭௭, ௯௭.

கம்பர்காலம்.—பத்திராசிரியர் ... ... ௧௭௧.

கம்பர் குறித்த தமிழ்ப்பெருமை.—பத்திராசிரியர். ... ௩௯௫.

கூத்தரும் குலோத்துங்கன் கோவையும்.—பத்திராசிரியர். ௧௯௪.

கொச்சிதேசத்துக் "காடர்கள்."—ஸ்ரீமத்-ல. அனந்தையர். ௪௯௩.

சுந்தரமூர்த்திநாயனார்.—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், எம்.ஏ. ௩௧௨.

செந்தமிழ்க்குத் தொண்டு செய்தோர்.— } ஸ்ரீமத்- சேற்றூர். அருணாசலக் கவிராயர். ௯௯.

செய்யுள்.—ஸ்ரீமத்-தி. செல்வக்கேசவராயமுதலியார், எம். ஏ., ௪௬௭, [௫௫௫.

செல்வம்.—ஸ்ரீமத்-தி. செல்வக்கேசவராய முதலியார், எம். ஏ. உ௮, [௬௧.

சென்னிகுலோத்துங்கன் அநபாயன்.—பத்திராசிரியர். உ௯௮,௩௪௮.

சேக்கிழார்காலம்.—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், எம். ஏ. ௧௮௮.

சேதுபுராணம்.—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ... ௪0௭.

சேந்தனாரும் திருமாளிகைத் தேவரும்.— ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், எம். ஏ., ௩௫௮.

தமிழிலக்கவரலாறு.—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௧௪௬.

தமிழிலக்கவரலாற்றுச் சர்ச்சை.— ஸ்ரீமத்-கோ. வெங்கோபராவ். உ௩௬.

தமிழ்ப்பெருமை.— ஸ்ரீமத்-வி. கனகசபைப்பிள்ளை, பீ. ஏ., பீ. எல்,. உ௪௬, உ௫௬.

தமிழ்வினைச்சொல்லில் எதிர்காலம்.— *Prof.* ஜூலியன் வின்ஸன், பாரிஸ். ௧௮௫.

தருக்கசூத்திரமுதற்பாடம்.—ஸ்ரீமத்-எஸ். பால்வண்ண முதலி [யார். உ௪௩.

தனிச்செய்யுட்கோவை.—ஸ்ரீமத்-சேற்றூர். இராமசாமிக்கவிராயர். [உ௯௩, ௩௪௩, ௩௮௭, ௪௮0.

தாயுமான சுவாமிகள் வரலாறும் அவர் மதக்கொள்கையும் ஸ்ரீமத்-கல்குளம். குப்புசாமி முதலியார் பீ. ஏ,. ௪௭௪.

திருக்குறள்-வீட்டின்பால்.— ஸ்ரீமத்-ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை. பீ.ஏ,. பீ.எல்,. உ௬௫, ௩உஉ, ௩௫௪.

திருப்பதியைப்பற்றிய சில ஆசங்கை.— ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், எம். ஏ,. ௧௪உ.

திருமங்கையாழ்வார் கால வாராய்ச்சி.— ஸ்ரீமத்-மு. இராகவையங்கார். ௪௮௩.

திருவெள்ளறைச் சாஸநங்கள்.— ஸ்ரீமத்-பண்டித-நடேச சாஸ்திரியார், பீ. ஏ., ௧௯0.

தோல்வித்தானம்.—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௧உ.

நல்லொழுக்கம்.—ஸ்ரீமத்-டி. என். பார்த்தசாரதி ஐயங்கார். ௩எஅ.
நிருத்தம்.—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ... ... ௯0.
நூலாராய்ச்சி.—ஸ்ரீமத்-அ. மாதவையர், பீ. ஏ. ... சகங, ச௫0.
பராந்தகன் I.—ஸ்ரீமத்-க. வை. சுப்பிரமணிய ஐயர், பீ. ஏ. உஅஅ.
பன்னிருமாதப்பெயர்கள்.— ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை. உ௩௧, ௩உஅ.
பாண்டவர்காலம்.—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௩௬௯.
பாண்டவர்காலம் II.—ஸ்ரீமத்-மு. இராகவையங்கார். ௩எ௩.
பாரதசாலமும் தமிழரும்.—ஸ்ரீமத்-மு. இராகவையங்கார். ௩0௩.
பாலமுது.—ஸ்ரீமத்-செ. வீ. இராஜகோபாலாசாரியர். ௩அ௩, ச௩௩. [சஅ௬.
பிராசீனதர்மங்களின் உயர்வும், இக்காலஆசாரங்களும். ௩ச, ககஎ.
புகழேந்தியொட்டக்கூத்தர்.—பத்திராசிரியர். ... ... உ௬.
புத்தகக்குறிப்பு.—பத்திராசிரியர். ச0, உ0௯, உ௫எ, ௩ச௬, [௩௯ச, சச0.
புலவிநுணுக்கம்.—ஸ்ரீமத்-சி. கணேசையர். ... ... உஅ௩.
பொய்யாமை.—பத்திராசிரியர். ... ... க௩ச.
பொன்பரப்பினனை மகதைப் பெருமாள் கவி.— ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், எம். ஏ., சஉ௩.
பௌத்தமதவிசாரணை.—ஸ்ரீமத்-ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை, [பீ. ஏ, பீ. எல். கஉ௬, உ0க.
மெய்கண்டதேவர்காலம்.—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், எம். ஏ., கஅ௯.
வானசாஸ்திரம்.—ஸ்ரீமத்-தி. வேங்கடராம ஐயங்கார். க௫௫, க௯0.
"வீரகல் மாஸ்திகல்."—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், [எம். ஏ,. ௫௫, அ௭.
வேளிர்வரலாறு.—ஸ்ரீமத்-மு. இராகவையங்கார். உகஉ.
ஸ்ரீரங்கம் தமிழ்ச்சாஸநம்.—ஸ்ரீமத்-எம். நாராயணசாமி ஐயர், [பீ. ஏ. பீ. எல்., உ௫உ.

"செந்தமிழ்" மூன்றாந் தொகுதியில் வெளிவந்த நூல்கள்.

[முடிந்தவை.]

க. திருச்செந்திற்கலம்பகம்—[இலக்கணக்கொத்துச் சுவாமிநாததேசிகர் இயற்றியது] ஸ்ரீமத்-சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயர் பரிசோதித்தது: பகுதி-க, உ.

உ. முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் [க0௫]—பத்திராசிரியர் பரிசோதித்தது. பகுதி-ங.

[முடியாதவை].

ங. இயற்கைப்பொருட்பாடம்.—ஸ்ரீமத்-செ. வீ. இராஜகோபாலாசாரியர். பகுதி-எ, அ, கூ, க0, கக, கஉ.

௪. சுகசந்தர்சனதீபிகை—ஸ்ரீமத்-பண்டித-நடேசசாஸ்திரியார், பகுதி-ங-முதல் கஉ-வரை.

௫. திருவாரூருலா—[அந்தகக்கவி-வீரராகவமுதலியார் இயற்றியது]. ஸ்ரீமத்-உ. வே. சாமிநாதையர் பரிசோதித்தது. பகுதி-௪, ௫, சு, அ, கக, கஉ.

சு. தொல்காப்பியம் செய்யுளியல் நச்சினார்க்கினியருரை.—பத்திராசிரியர் பரிசோதித்தது. பகுதி-உ, ங, ௪, ௫, சு, எ, அ, கூ, கக, கஉ.

எ. விவசாயநூல்—ஸ்ரீமத்-சே. ப. நரசிம்மலு நாயடு, பகுதி-க, உ, ங, ௪, ௫, சு.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௫.] குரோதி ௵ கார்த்திகைமீ [பகுதி-௧.

கம்பர்.

'கல்வியிற்பெரியர்' என்றும், 'கவிச்சக்கரவர்த்தி' என்றும் நல்லியற்புலவரெல்லாம் மனமொத்து வாயாரப்புகழும் பெருமாண்புடைய அருமைக் கம்பரின் பெருமைச்சிறப்பு முழுதும், இத்தமிழுலகம் நன்றறிந்து நாளும் பாராட்டுவதேயாம். இக்கவியரசர் வரலாறு, காலம் முதலியன, இக்காலத்து, ஒன்றோடொன்றுவ்வாப் பல்வேறுவகையால் வழங்கப்படுகின்றன. சிறிது பண்டைத் தமிழ் நூல்களையே பெருங்கருவியாகக்கொண்டுநோக்கின், அவற்றதுண்மை இன்னதென்று துணியலாகும். இவ்வாராய்ச்சிக்குப் பெருந்துணையாகக் காண்பன:—தமிழ்நாவலர் சரிதை, தொண்டைமண்டலசதகம், சோழமண்டலசதகம், பாண்டிமண்டலசதகம் என்பனவும், பிறவுமாம். இவற்றுட்கண்ட சிலபாடல்களையும் அடிகளையும் ஈண்டு எடுத்தோதி விளக்குதலானே, இத்தெய்வப்புலவரது மெய்வைத்தவரலாறு முதலியன ஒருவாறு நன்குணரலாகும்.

இவர் ஊர்.

திருவழுந்தூர்த் தாதியை, சோழன், எந்த ஊர் என்று கேட்டபோதுபாடியது.

கம்பன் பிறந்தவூர் காவேரி தங்குமூர்
கும்பமுனி சாபங் குலைந்தவூர்—செம்பதுமத்
தாதகத்து நான்முகனுந் தாதையுந்தே டிக்காணு
*வோதகத்தார் வாழுமழுந் தூர். (தமிழ்நாவலர் சரிதை)

---

* ஓது அகத்தார்-ஓதுகின்ற உள்ளமே இடமாகக் கொண்டார்.

இவர் சாதி.

நாரணன் விளையாட் டெல்லா நாரத முனிவன் சொல்ல
வாரணக் கவிதைசெய்தா னறிந்துவான் மீகி யென்பான்
சீரணி சோழ நாட்டுத் திருவழுந் தூருவச்சன் *
†காரணி கொடையான் கம்பன் றமிழினாற் கவிதை செய்தான்.
(இராமாவதாரப்பாயிரம்.)

இப்பாட்டில் 'உவச்சன்' என்பதற்கியைய, வாணியன்தாதன் என்பான் இக்கம்பரைப்பாடிய வசைப்பாட்டின்கண், "கைம்மணிச் சீரன்றிச் சீரறி யாக்கம்ப நாடன்" (தமிழ் நாவலர் சரிதை) எனவருதல் காண்க. கைம்மணிச்சீர்-கையின்மணியோசை. உவச்சர் என்பார் காளிகோயில் முதலியவற்றிற் பூசைபுரியும் வகுப்பினராதலால், அவர்க்குக் கையால் மணியொலிப்பித்தலுந் தொழிலாம்.

இவர் வளர்ந்து கல்விபயின்று சிறந்தவாறு.

பெற்றுவளர்த்தும் வித்தைதனைப் பேணிக்கொடுத்தும் பெயர்கொடுத்தும்
பற்றவரும்பா லமுதளித்தும் பகைத்தவறுமைப் பயந்தீர்த்துங்
கற்றமுதனாற் றிருவழுந்தூர்க் கம்பன்றனையக் கருணைசெய்தோர்
மற்றும்புலவோ ரையும்வாழ வைத்தார்சோழ மண்டலமே.
(சோழமண்டல சதகம்.)

இங்ஙனம் கம்பரை வளர்த்துச் சிறப்பித்தவன், வெண்ணெய் நல்லூர்ச் சடையன் என்பான். இதனை மேல்வருஞ் செய்யுளானும் உணர்க.

கம்பர், தெய்வஙபரத்தினாற் கவிசொல்லிய நாளிற் பாடிய வெண்பா.

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணையே—நாட்டி
லடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லு
முடையான் சரராம னூர் (தமிழ் நாவலர் சரிதை.)

சரராமன் என்பது வெண்ணெய்நல்லூர்ச் சடையற்கு ஒரு பெயர். "மழையென், முசங்கை கொண்ட கொடைமீளி யண்ணல்

* இவ்வரிய பாடம், இச்சங்கத்துக்குக் கிடைத்த மிகப்பழையவாகிய பாலகாண்டஏடுகள் பலவற்றிற்கண்டது. இப்பிரதிகளில் இக்காலத்து வழங்காத சில இனிய பாயிரச் செய்யுட்களும் உள்ளன.

† 'தாரணி கொண்டான்' எனவும் பாடம்.

சரராமன் வெண்ணை" (நாகபாசப்படலம்) என இவர் இராமாவதார த்து வழங்குதலானு முணர்க.

இவர் ஏரேழுபதுபாடி அரங்கேற்றியது.

குணங்கொள்சடையன் புதுச்சேரிக் கொடையன்சேதி ராயன்முதற்
கணங்கொள்பெரியோர் பலர்கூடிக் கம்பநாடன் களிகூற
விணங்கும்பரிசி லீந்துபுவி யேழும்புகழே ரெழுபதெனு
மணங்கொள்பெருங்காப் பியப்பனுவல் வகுத்தார்சோழ மண்டலமே.
(சோழமண்டலசதகம்).

சடையனாகிய புதுச்சேரிக்கொடையன் என்க. சேதிராயனுக்கும் புதுவைஊராதல்பற்றிப்புதுச்சேரிக்கொடையனாகியசேதிராயன் எனினுமமையும். சடையன், சேதிராயன் முதலிய பெரியோர்நிறைந்த அவையிற்றான் இவர் ஏரெழுபது அரங்கேற்றியது.

இப்பாட்டின்கண் 'குணங்கொள்சடையன்' எனப்பட்டவன், மேற்கூறிய வெண்ணைச்சரராமனாவன். புதுவை, புதுச்சேரி என வழங்குகின்ற ஊரும் இவனதாதல்பற்றி இவனையே 'புதுச்சேரிக்கொடையன்' எனவும், 'புதுவைச்சடையன்' எனவும் வழங்குப வெனத் தெரிகின்றது. இவனைப் 'புதுவைத்திரிகர்த்தன்' 'வெண்ணைத்திரிகர்த்தன்' எனவழங்குதலுமுண்டு. இவன், மூவேந்தர்க்கும் அவர் பரிசனங்கட்கும் ஒருகாற் பெருவிருந்தளித்து, அவரால் திரிகர்த்தராயன் எனச் சிறப்புப்பெயர் சூட்டப்பெற்றான் என்பர். இவன் சோணாட்டில் மிகப்பெரியகாணிவளமுடையனாயிருந்தனனெனவும், நாளும்பல்லாயிரவர்க்குப் பாலுஞ்சோறும் பரிந்தளித்தனனெனவும், சிங்களமாண்ட பரராசசிங்கப்பெருமான் என்னுமரசன், ஈழநாடு பஞ்சம்பட்டபோது இவ்வள்ளலைப்பாட, இவன் ஆயிரங்கப்பலில் நெல் நிறைத்துக் கொடுபோய்க்கொடுத்து அவன் நாடுமுற்றும் பாதுகாத்துச் சிறந்தனனெனவும் சொல்லுப. இவன் சங்கரன் என்பவற்குப் புதல்வனென்பதும், இணையாரமார்பன் என்பவனைத் தம்பியாகவுடையவனென்பதும், பெரும்பாலும் திருவெண்ணெய்நல்லூரையே தனது பெருங்குடிக்கிருக்கையாகக்கொண்டவனென்பதும், கல்வியிற்சிறந்தானென்பதும் தெரிகின்றன. சிறுபான்மை, இவனைப் புதுவைச் சடையன் எனவழங்குவது, அதன்கண், இவன் தந்தையாகிய சங்க

ரன் வதிந்த சிறப்புப்பற்றியும், அவ்வூர் இவனுக்குச் சிறந்த கடற்று றைப்பட்டினமாதல் பற்றியும் ஆகும். இவன் வியலூர் என்னுமிடத்துமிருந்தனனென்ப. புதுவையும் வெண்ணையும் வியலூரும் தூரவூர்களல்லாமை உணர்ந்துகொள்க. இவன் தந்தையாகிய சங்கரனுக்கு ஒட்டக்கூத்தர் முதலில்உதவித்தொழில் புரிந்துகொண்டிருந்தனரெனவும், அவரை, அப்புதுவைக்கணிருந்த காங்கேயன் என்னும் உபகாரியொருவன் கல்விபயிலுவித்து நல்லறிஞராக்கிக் கவிராக்ஷதன் எனவும், கௌடப்புலவன் எனவும் பெயர்சிறப்பித்து உயரச்செய்தனனெனவும், அந்நன்றிபாராட்டி அக்கூத்தர், காங்கேயன்மேல் 'நாலாயிரக்கோவை' யொன்று பாடினரெனவும் அறியலாவன. கௌடம் என்பது ஒருவகைக் கவிமார்க்கம். அது, பொருள்புலப்படத் தொடுப்பதினும் சொல்வளம்படத் தொடுப்பதே சிறப்பெனக்கருதுவதாம். 'இடுக்கட்புண்படு' 'பத்துக்கொண்டன' 'விச்சாவுக்கு' என்பன முதலாகவரும் இக்கூத்தர்பாடல்கள் அக்கௌடநெறியே சென்றனவாதலுணர்க. ஒட்டக்கூத்தர், சடையன்றந்தையாகிய சங்கரனுக்கு உதவித்தொழில் புரிந்துகொண்டிருந்தனரெனவும், கம்பர் இச்சடையனால் வளர்த்துச் சிறப்பிக்கப்பட்டனரெனவும் தெரிதலால், கம்பர் கூத்தருக்கு இளையராவரென உய்த்துணரப்படுகின்றது. மற்றுமிச்சடையனைப்பற்றியன ஆங்காங்குக் கூறப்படும்: பின்னர்க் கண்டுகொள்க.

இனி, புதுவைச்சடையனும், வெண்ணைச்சடையனும் வேறு வேறுவரெனக்கூறின், இருவரும் 'திரிகர்த்தன்' எனச் சிறப்புப்பெயர் புனையப்பெற்றனரெனவும், இருவரும் நாளும்பல்லாயிரவர்க்குப் பசியாற்றும் வண்மையும் வளப்பமுமுடையராயிருந்தனரெனவும், அவ்விருவரும் கல்வியிற் பெரிய கம்பரைப் போற்றினரெனவும், "புதுவைச்சடையனிருந்த வியலூர்" என்று பாடப்பெற்ற வியலூர் வெண்ணெய்நல்லூர்க்கு மிக அணித்தாதலால், அவ்விருவரும் நெருங்கி வதிந்தனரெனவும் கொள்ளநேரும். அங்ஙனம் திரிகர்த்தனென்னும்பட்டம்அக்காலத்துஇருவர்க்குச்சூட்டியமை அறியப்படாமையானும்,புதுவையானொருவனே திரிகர்த்தனெனப்பட்டம்பெற்றானாக வெண்ணைத்திரிகர்த்தன் எனவும் வழங்குதலறியப்படுதலானும், திரி

கர்த்தனென்னுஞ் சிறப்புடையானொருவனே வெண்ணையும் புதுவைபுமுடையனுயினுன் எனக்கருதுதலே இயைப்புடைத்தாமென்பது உணரத்தக்கது. அன்றியும்,ஊரன்றி மற்றைவளமுங் குணமும் வண்மையும் பெயரும், கம்பராற் புகழப்படுஞ் சீருஞ்சிறப்புமென்னுமிவற்றில் எவ்வகைவேற்றுமையும் அறியப்படாமைகாண்க. இவற்றுக்கெல்லாம் செய்யுள் வருமாறு:—

அளிக்கும்படைமூ வேந்தருங்கொண் டாடும்விருந்தா லதிசயமாய்த்
திளைக்குந் திரிகர்த் தநாயனைனச் செப்பும்வரிசைத் திறஞ்சேர்ந்தோன்
விளைக்குமரிசி மாற்றியநீர் வெள்ளங்கிழக்கு விளையுமென
வளைக்கும் பெருமைப் புதுவையர்கோன் வளஞ்சேர்சோழமண்டலமே.

(சோழமண்டல சதகம்.)

[மேற்கோள்]

புரந்தர தாரு புதுவைச் சடையன்
னிருந்தவிய லூர்தெற்கு மேற்கு—பரந்தபொன்னி
யாற்றுநீ ரால்விளையு மப்பாற் கிழக்கரிசி
மாற்றுநீ ரால்விளையு மாம். (க)

யாமார் புகழ வியற்கம்ப நாட னிராமரொடும்
பாமாலை சூட்டுங் குலமுடை யானைப் படிபுரக்கக்
கோமாற னிட்டபொற் சிங்கா தனம்பெற்ற கொற்றவனைத்
தேமாலை யச்சந் தவிர்ப்பான்வெண் ணைத்திரி கர்த்தனையே. (உ)

தண்ணார் கமலச் சதுமுகத் தோனையுந் தப்புவதோ
பண்ணு மணித்தலைக் கட்செவி யானது பாரிலுள்ளே
கண்ணுக வாழும்வெண் ணைத்திரி கர்த்தன் கலைத்தமிழ்கேட்
டெண்ணு முடியசைத் தாலுல கேழு மிறக்குமன்றே. (ங)

எட்டுத்திசையும் பரந்தநிலா வெறிக்குங்கீர்த்தி யேருழவர்
சட்டப்படுஞ்சீர்வெண்ணெய்நல்லூர்ச்சடையன்கெடிலன்சரிதமெலா
மொட்டிப்புகழ வாயிரநா வுடையார்க்கன்றி யொருநாவின்
மட்டுப்படுமோ வவன்காணி வளஞ்சேர் சோழமண்டலமே.

(சோழமண்டலசதகம்)

தேனார்தொடையார் பரராச சிங்கப்பெருமான் செழுந்தமிழ்க்குக்
கானார்நெல்லின் மலைகோடி கண்டிநாடு கரைசேரக்
கூனார்கப்ப லாயிரத்திற் கொடுபோயளித்த கொடைத்தடக்கை
மானாகரன் சங்கரன்சடையன் வளஞ்சேர்சோழ மண்டலமே.

(சோழமண்டலசதகம்)

[மேற்கோள்]

இரவுநண்பக லாகிலென்பக லிருளாகுவிர வாகிலெ
    ன்ிரவியெண்டிசை மாறிலென்கட லேழுமேறிலென் வற்றிலென்
மரபுதங்கிய முறைமைபேணிய மன்னர்போகிலெ னாகிலென்
    வளமையின்புறு சோழமண்டல வாழ்க்கைகாரண மாகவே
கருதுசெம்பொனி னம்பலத்திலோர் கடவுணின்று நடிக்குமே
    காவிரித்திரு நதியிலேயொரு கருணைமாமுகி றுயிலுமே
தருவுயர்ந்திடு புதுவையம்பதி தங்குமன்னிய சேகரன்
    சங்கரன்றரு சடையனென்றொரு தருமதேவதை வாழவே.

இது பரராசசிங்கப்பெருமான் சடையனுக்கு எழுதிவிடுத்த செய்யுளாயினுமாம்.

கம்பர் காவிரி எச்சிற்படப்பாடிய வெண்பா.

மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதுங் காவிரியே—பொய்கழுவும்
போர்வேள் சடையன் புதுவையான் றன்புகழை
யார்போற்ற வல்லா ரறிந்து. (தமிழ்நாவலர் சரிதை)

விருந்துநுகர்வோர் கைகழுவ விளங்கும்புனற்கா விரியென்றூர்
தருந்தயனைய புகழ்ப்புதுவைச் சடையன்கொடையார் சாற்றவல்லார்
பரிந்தாரெவர்க்கு மெப்போதும் பாலுஞ்சோறும் பசிதீர
வருந்தாதளிக்க வல்லதன்றோ வளஞ்சேர்சோழ மண்டலமே.
(சோழமண்டலசதகம்)

இவற்றால் இவன் நாளும்பல்லாயிரவர்க்குணவளித்ததுணரப்படும்.

கோலாகலமன் னரிலவன்போற் கொடுத்தேபுகழுங் கொண்டாரார்
மேலோர்கவுடப் புலவனெனும் விழுப்பேர்க்கூத்தன் முழுப்போரா
னாலாயிரக்கோ வையும்புனைய நவில்கென்றிசைத்து நாட்டுபுகழ்
மாலாமெனுங்காங் கயன்வாழ்வு வளஞ்சேர் சோழமண்டலமே.
(சோழமண்டலசதகம்)

[மேற்கோள்]

புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்
குதவித் தொழில்புரி யொட்டக் கூத்தனைக்
கவிக்களி றுகைக்குங் கவிராக்ஷதனெனப்
புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி
வேறுமங் கலநாள் வியந்துகாங் கயன்மேற்
கூறுநாலாயிரக்கோவைகொண் டெர்ந்தோன்.

இனிச் சேதிராயனென்பான் புதுவையின்கணிருந்தவொருபகாரி: இவன் 'கம்பர் வேளாளரைச் சிறப்பித்துப்பாடிய ஏரெழுபது' என்னும்நூலைச் சடையனுடனிருந்து கேட்டவன். கம்பர் ஏரெழுபது அரங்கேற்றும்போது இச்சேதிராயனை விடந்தீண்டிற்றாகவும் அதனாலரங்கேற்றம் இடையறவுபடலாகாது என்னுங்கருத்தாற் சேதிராயன் தனக்கு நிகழ்ந்ததனைப் பிறர்க்குரையாது மறைத்து அவையத்திருந்து நூல்கேட்க, விடந்தலைக்கேறுதலால் மயங்கி வீழ்ந்தனன். அவ்வளவில் ஆங்குக்கூடிய பெரியார் பலரும் உடற்குறியால் விடமென்றுகண்டு வருந்தாநிற்கையிற் கம்பர் தமதருமைத்தெய்வவாக்கினாற் சிலவெண்பாக்கள்பாடி விடத்தையேறியபண்பே யிறக்கி அவனை உயிர்ப்பித்தார் என்ப. இச்சேதிராயனுக்குத் தொண்டைநாட்டிலுங் காணிவளமுண்டு. இவற்றிற்குச் செய்யுள்:—

அழுவதுங் கொண்டு புலம்பாது நஞ்சுண் டதுமறைந்தே
ரெழுபதுங் கொண்டு புகழ்க்கம்ப வாணனெழுப்பவிசை
முழுவதுங் கொண்டொரு சொற்பேச நெய்யின் முழுகிக்கையின்
மழுவதுங் கொண்டு புகழ்கொண்ட தாற்றொண்டை மண்டலமே.
(தொண்டைமண்டலசதகம்)

" ....பாவலர்தா
மேரெழுப தோதியரங் கேற்றுங் களரியிலே
சாரிவிட நாகங் கடிக்குங்கை." (திருக்கைவழக்கம்)

கம்பர் ஏரெழுபதுபாடி யரங்கேற்றும்போது புதுவைச் சேதிராயனை விடந்தீண்டத் தீர்த்தவெண்பா.

ஆழியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே யகல நட.

மங்கை யொருபாகர் மார்பிலணி யாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே—திங்களையுஞ்
சீறியதன் மேலூருந் தெய்வத் திருநாணே
யேறிய பண்பே யிறங்கு. (தமிழ்நாவலர்சரிதை)

இவர் சோழன்பாற் சிறப்பெய்தியது.

கம்பரது கல்வியுங் காட்சியுமே காசினிமுற்றும் மேம்படுத்துப் புகழ்ந்து பாராட்டுதலைச் சோழன்றெரிந்து அவரைத் தன்பாலழைப்

பித்து, தான் கேள்வியுற்றதினும் இவர் ஆயிரம்பங்கு அதிகமாகப் பல்லாற்றானுஞ் சிறத்தலைக் கண்கூடாகக்கண்டு, அரசர்க்கொத்த வரிசைபலவளித்து கவிச்சக்ரவர்த்தியெனப் பட்டந்தந்து, அவ்வரிசைக்கும் பெயர்க்குந்தக நாடொன்றுநல்கித் தானல்கிய அந்நாட்டிற்கும் கம்பநாடு எனப் பெயர்வழங்குவித்து, இவரைப்பெரிதும் உயர்த்தினன். இவர், அக்காலத்துக் காவிரி கரைகடக்குமளவிற் பொங்கிப் பெருகியதாக, அதன் பெருக்கடங்கப் பாடி, தம் தெய்வவாக்கின் பெருமை பலர்க்கும் புலப்படுத்தினரென்ப. இவரிங்ஙனம் சிறந்து வாழும்போது, சோழன், தாதன் எனப் பெயரியசெக்கான் ஒருவன் தமிழ்ப்புலமையுடையனாய்த் தன்அவைக்களத்தெய்திப் பாடினானுக்கு ஊரும் பேருமளித்துக் காளமுதலிய விருதுகளும்நல்கியவளவிற், கம்பர்அரசனைநோக்கி, இவ்வாணியற்கு இத்தகைவரிசையளித்துயர்த்தல் எம்போன்ற குலக்கவிகளைச் சிறுமைப்படுத்தலோடொக்குமென்றுரைத்துப், புலவர்களைவரிசையானோக்கவும் அவர்கண்மாட்டுப் பொதுநோக்கொழியவும் வேண்டினர்எனவும், இதனைத் தாதன் கண்டு பொறானாய், அச்சோழன்முன்னே, இவர் பாடிய மும்மணிக் கோவை என்னும் ஓர்நூலிற்குக் குற்றங்கூறி இவரையுமிழித்துக் கவிபாடினன் எனவுங்கூறுப. தாதன் சோழன்பாற் பெற்ற ஊர் தொண்டைநாட்டின்கண்ணுள்ள கூவமென்பதாகும். கம்பர் ஒருகால் தொண்டைநாடு செல்லும்போது அத்தாதனுக்கு அடிமைப்பட்ட கூவத்தூர்வழியே சிவிகையிற் சென்றாராக, அவ்வூரார் அதுதெரிந்தெய்தித் தங்களைப்பாடுமாறு கம்பரை இறைஞ்சிவேண்ட, அதற்குக் கம்பர் தாதனுக்கு அடிமைப்பட்ட அவ்வூரைத் தாம்பாடுவதில்லையென்னக்கேட்டு அவ்வூரார், அம்மட்டிலொழியாராய்க் கம்பர் சிவிகையை நெடுந்தூரஞ்சுமந்து அடைப்பையிட்டு வழிபட்டுநின்றதற்கு உவந்து அவர்களைப்பாடினரென்ப. இவர் பெற்றசெல்வமெல்லாம் பிறர்க்கு வரையாது வழங்கும் வள்ளன்மை யுடையரென்வுஞ் சொல்லுப. இவர்காலத்துச் சோழனிவன் என்பது மேலிவர்காலம் கூறும்வழிக்காண்க.

கம்பர் காவிரி பெருக்கடங்கப் பாடியது.

கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரையழிந்து போனாளென்—றிந்நீ

ருமை கிடக்க லாமோ வுலகுடைய தாயே
கரைகடக்க லாகாது காண். (தமிழ் நாவலர் சரிதை)

கன்னி என்பது குமரியாறு. அதனை முன்னரே கடல்கொண்டதாகலின் 'அழிந்தனள்' என்றார். 'கங்கை திறம்பினள்' என்பது வானுகியமேனிலையிருந்தவள், பாதலம் வரைசென்றிழிந்தன ளாதலிற் கங்கை மாறுபட்டனள் என்றவாறு.

கம்பர் வாணியன்தாதன் விருதுகாளம்பிடிக்கப் பாடியது.

கூளம் பிடித்தெள்ளின் கோதுவைப் பாணங் குலக்கவிக்குக்
காளம் பிடித்திடிற் சின்னம் படுமன்னர் காதலிமார்
வேளம் பிடித்தகண் வெள்ளம் பிடிக்கவெம் பேய்க்கிளம்பேய்
தாளம் பிடிக்கத் தனிவேல் பிடித்த சயதுங்கனே.

(தமிழ்நாவலர் சரிதை)

தாதன் பாடிய வசை.

கைம்மணிச் சீரன்றிச் சீரறி யாக்கம்ப நாடன்சொன்ன
மும்மணிக் கோவை முதற்சீர் பிழைமுனை வாளெயிற்றுப்
பைம்மணித் துத்திக் கனமணிப் பாந்தட் படம்பிதுங்கச்
செம்மணிக் கண்பிதுங் கப்பதம் பேர்த்த செயதுங்கனே. (௳௨)

பேணிய செந்தமிழ்த் தாதனுக் கேயன்பு பெற்றமையா
ஞணிய கம்பன் சிவிகையுந் தாங்கி நயந்ததமிழ்
பூணிய நின்றதும் பொச்சாப் பிலாது புகுந்துபின்னும்
வாணியன் தாதற்குத் தாதா னதுந்தொண்டை மண்டலமே.

(தொண்டைமண்டல சதகம்)

[மேற்கோள்]

ஓங்கிய செந்தமிழ்த் தாதற் கடிமையவ் வூரதனு
ஞங்கவி சொல்வது மில்லையென் றேகம்ப நாடன்சொல்ல
வாங்கவ னேறுஞ் சிவிகை சுமந்து மடப்பையிட்டுத்
தாங்கவி கொண்டதுங் கூவந் தியாக சமுத்திரமே.

இனி, 'கம்பநாடுடையவள்ளல்' 'காரணி கொடையான் கம்பன்' (இராமாவதாரப்பாயிரம்) "மன்றே புகழுந் திருவழுந்தூர் வள்ளல்' (சடகோபரந்தாதி) எனவருதலான் இவர் வள்ளன்மை புணரலாகும்: ஈண்டுக் கூறியன இவரது கல்விவண்மையா மென்பாருமுளர்; இருவகை வண்மையுமுடையா ரென்றல் பொருந்துமென்க.

இவர் வல்லியை விழைந்தது.

இவர் ஒருகாற் றொண்டைநாட்டுள்ள திருவொற்றியூருக்குச் சென்றபோது, அங்குச் சதுரானனபண்டிதன் மடத்திருந்த வல்லி எனப்பெயரிய கணிகையொருத்தியை விழைந்து, பலகாலம் அவளுடன் அங்கேதங்கிமகிழ்ந்து அவளுக்கு எருமைகள்வாங்கிவரப் புழற்கோட்டம்புக்குக் காளிம்பன் என்னும் நிரைமேய்ப்பானொருவனைக் கண்டு பாட, அவன் ஈன்ற எருமைகள் ஆயிரம் (பல) கொடுக்கப்பெற்று, அவற்றையெல்லாம் வல்லிபாலுய்த்துப், பின் அவளுக்கு அணி பலவியற்றித்தருதற்குத் திருமயிலைபோய் ஆண்டுத்திருவாலி என்னும் தட்டான் ஒருவனைப்பாடி அணியெலாம் இயற்றுவித்துக்கொண்டு மீண்டு அவளுக்கு அணிந்து, இன்னவாறு அவளுக்கு வேண்டுவன பலவும் உதவிவந்தனர். அவள் இவர்பாற் பாராட்டிய பேரன்பினாற் பின் அவளைப் பிரியலாற்றாது உடன்கொண்டு சோணாடுபுக்கு ஆங்கும் அவளுடன் இனிது களித்தனர் என்ப. அக்காலத்து ஆங்கு வல்லியிருந்த வீட்டினை மழையால் நனையாமற், கம்பருக்கு ஆருயிர்த்துணைவனான சடையவள்ளல் ஓரிரவிற்குள் நெற்கதிராலே வேய்ந்து இனிது புரிந்தனன் என்ப. இவற்றிற்குச் செய்யுள் வருமாறு;—

கம்பர் திருவொற்றியூர் வல்லியைக்கண்டு சொல்லியது.

இல்லென்பார் தாமவரை யாமவர்தம் பேரறியோம்
பல்லென்று செவ்வாம்பன் முல்லையையும் பாரித்துக்
கொல்லென்று காமனையுங் கண்காட்டிக் கோபுரக்கீழ்
நில்லென்று போனாரென் னெஞ்சைவிட்டுப் போகாரே.

(தமிழ்நாவலர்சரிதை.)

இதுவுமது.

நடக்கி லன்னமா நிற்கினல் வஞ்சியாங்
கிடக்கி லோவியப் பாவை கிடந்ததாங்
தடக்கை யான்சது ரானன பண்டிதன்
மடத்து ளாளென் மனத்துறை வல்லியே. (ஷ)

கம்பர் வல்லிவீட்டுக்கு எருமை வாங்கிவரப்போய்க்காளிம்பன்
நிரைமேய்ப்பானைக்கண்டு அவன்பேரிற் பாட அவன்
ஈன்ற எருமை ஆயிரம் கொடுத்த வெண்பா.

புக்கு விடைதழுவிக் கோழைத புண்ணெல்லாந்
திக்கிலுயர் காளிம்பன் றென்புழன்மா—னைக்கணமே

தோள்வேது கொண்டிலனேற் சுந்தரப்பொற் றோன்றலுக்கு
வாழ்வேது கண்டிலமே மற்று. (தமிழ் நாவலர் சரிதை.)

கம்பர் மயிலாப்பூரிற்போய்த் தட்டான் திருவாலிமேற் பாடிய வெண்பா.

அண்ணறிரு வாலி யணிமயிலை யத்தனையும்
வெண்ணிலவின் சோதி விரித்ததே—நண்ணுந்
தடந்துப்பு விற்பாணந் தன்முகத்தே கொண்டு
நடந்துப்பு விற்பா ணகை. (ஷ)

தனதானியத்தி லுயர்ந்தோர்க டாமேயென்னுந் தருக்கேயோ
வினவாதிரவி னெற்கதிரான் வேய்ந்தார்வல்லி வீடதல்லாற்
கனிசேர்தமிழ்க்குப் பன்னிரண்டு கடகயானைக் காடளித்த
மனைவாழ்வுடையான்வெண்ணெய்நல்லூர்வாழ்வான்சோழமண்டலமே.
(சோழமண்டல சதகம்.)

[மேற்கோள்]

பொதுமாதர் வீட்டைப் புகழ்பெற வேநெற்
கதிரானே வேய்ந்தருளுங் கங்கைப்—பதிநேர்
வருவெண்ணை நாடன் வருநா வலர்க்குத்
தருவா னவன்சடையன் றான்.

கம்பர் குரும்பை என்னுந்தாதியைத் தழுவிச்சொல்லிய கலித்துறை.

சொல்லியைச் சொல்லி னமுதான செல்வியைச் சொற்கரும்பு
வில்லியை மோக விடாய்தவிர்ப் பாளை விழியம்பினாற்
கொல்லியைக் கொல்லியம் பாவையொப் பாளைக் குளிரொற்றியூர்
வல்லியைப் புல்லிய கைக்கோ விவர்வந்து வாய்த்ததுவே.
(தமிழ்நாவலர் சரிதை)

இப்பாட்டினு லிவர் வல்லியைப் பிரிந்தகாலத்துக் குரும்பை என்பாளைத்தழுவி மனம் பொருந்தாமையால் வெறுத்தனர் எனத் தெரிகின்றது. இவர் வல்லியைப் பிரிகின்றபோது பாடியதாக "வடிப் பாளை வீசுந் திருவொற்றியூர்வல்லி" என்னும் முதலையுடைய பாட்டொன்றும் வழங்குகின்றது. இவர்களையன்றிக் களந்தைப்பதியிலொருத்தியையும் இவர் விழைந்தனரென "வில்லிகளந்தைமின்னை" (தமிழ் நாவலர் சரிதை) என்னும் முதலையுடைய செய்யுளான் விளங்குகின்றது. இப்புலமைக்கரசரது அறிவுவீற்றிருந்த செறிவுடை மனத்தையும் இவ்வாறு அலைக்கவல்ல காமனே யாரினும் பெருவலி

புடையன் என்பது ஒருதலை. 'எவர்க்கும் வேள்களை நீர்திறமின்று' என்பரன்றே. இவ்விழைவெலாமுட்கொண்டுபோலும் இப்புலவர் பெருந்தகையார் "கற்றனர் ஞான மின்றேற் காமத்தைக் கடக்கலா மோ" (மாரீசன்வதை) எனப்பாடியதூஉம்.

(இன்னும் வரும்.)

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

உ

தோல்வித்தானம்.

தோல்வித்தானமாவது யாதேனும் ஒரு விஷயத்திலே ஒருவர் கொள்கைக்கு மற்றொருவர் கொள்கை மாறுபட்டுழி மெய்யுணர்வு கைவருதல்காரணமாக நியாயசபையிலே வாதியும், பிரதிவாதியுமாகி நின்று பிரமாணாதிகளோடும் வாதிக்குந் தருக்கவாதத்திலே தடுமாறிக் கூறுதலினாலாவது வேறொன்றாகக் கூறுதலினாலாவது ஒருவர் தோல்விக்கிடனாதலேயாம். "வாதம் பேசுவார் தோல்வியுறுதற் கேதுவே தோல்வித்தானம்" என்பது தருக்கசங்கிரகதீபிகை. தோல்வித்தானத்தினை வடநூலார் நிக்கிரகத்தானம் என்பர். நிக்கிரகம்-தோல்வி, தள்ளுதல். தானம் - இடம், இருக்கை. வாதி - தன்பக்ஷத்தை முதலெடுத்துக்கூறுவோன். பிரதிவாதி - வாதிகூற்றுக்களை மறுத்துரைப்போன்.

தோல்வித்தானம் இருபத்திரண்டு வகைப்படும் என்று சில தருக்கநூல்களுஞ் சிவஞானசித்தியும் கூறும். "காண்டுந் தோல்வித் தானமிரண்டிருபத்திரண்டாம்" என்பது சிவஞானசித்தி. தோல்வித்தானங்கள் இருபத்திரண்டும் சிவஞானசித்தி யுரைகளுள்ளே மறைஞானசம்பந்தர், சிவாக்கிரயோகியர், சிவஞானமுநிவர், நிரம்பவழகியதேசிகர் என்னும் நால்வருஞ்செய்தவுரைகளினும்,சௌதமருடைய

நியாயசூத்திரவுரையிலும், தருக்கசங்கிரகதீபிகையின் உரையாகிய நீலகண்டீயத்திலும் விரித்துக்கூறப்பட்டிருக்கின்றன. நியாயசூத்திரத்திலே கூறப்பட்டுள்ள பதினாறு பதார்த்தங்களுள்ளே தோல்வித்தானமும் ஒன்று; அதுவே இறுதியிற் கூறப்பட்டுள்ளது. தருக்கசங்கிரகதீபிகையிலும் உத்தேசமாத்திரையாகக் கூறப்பட்டிருக்கின்றன. தருக்கபரிபாடையிலுஞ் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. பிரபாகரம், பாட்டம் முதலிய நூல்களிலே விரித்துக்கூறப்பட்டிருக்கின்றன என்பது சில நூலுரைகளால் விளங்குகின்றது.

தோல்வித்தானங்கள் இருபத்திரண்டினுள்ளே சிலசிலவற்றிலே மேற்சொல்லப்பட்ட சிவஞானசித்தியுரைகாரர்களும் தம்முள்ளே மாறுபடுவர். அவர்களுரைகளோடு நியாயசூத்திரவுரையும், நீலகண்டீயமும் மாறுபடும். ஆயினும் இவைகளுள்ளே நம்மறிவிற்குப் புலப்பட்டவைகளையே பெரும்பாலும் அநுசரித்துத் தோல்வித்தானங்கள் இருபத்திரண்டும் இங்கே எழுதப்படுகின்றன.

க. பிரதிஞ்ஞாஹானி
உ. பிரதிஞ்ஞாந்தரம்
௩. பிரதிஞ்ஞாவிரோதம்
௪. பிரதிஞ்ஞாசந்நியாசம்
௫. ஏத்துவந்தரம்
௬. அர்த்தாந்தரம்
௭. நிரர்த்தகம்
௮. அவிஞ்ஞாதார்த்தம்
௯. அபார்த்தகம்
க0. அப்பிராத்தகாலம்
கக. நியூநம்.
கஉ. அதிகம்
க௩. புநருத்தம்
க௪. அநுபாஷணம்
க௫. அஞ்ஞானம்
க௬. அப்பிரதிபை
க௭. விக்ஷேபம்
க௮. மதாநுஞ்ஞை
க௯. பரியநுயோச்சியோபேக்ஷணம்
௨0. நிரநுயோச்சியாநுயோகம்
௨க. அபசித்தாந்தம்
௨௨. ஏத்துவாபாசம்.

க. பிரதிஞ்ஞாஹானி:—

பிரதிஞ்ஞாஹானியாவது பிரமாணம் முதலியவைகளாலே சாதிக்கத்தக்கதென்று தன்னால் விரும்பிச்சொல்லப்பட்ட பொருளைச் சாதித்து முடியாது அப்பொருட்குக் கேடுறுமாறு பேசுதல். பிரதிஞ்ஞாஹானி என்பதற்குப் பிரதிவாதி கூற்றுக்களை அங்கீகரித்துக் கொண்டு தன்கொள்கையை விடுதலென்பாருமுளர். பிரதிஞ்ஞா -

உடன்பட்டுக் கூறப்பட்ட பொருளையுடைய வாக்கியம், மேற்கோள். ஹாநி - கேடு, அழிவு, விடுதல்.

உ. பிரதிஞ்ஞாந்தரம்:—

பிரதிஞ்ஞாந்தரமாவது தன்னாலே முன்னர்க்கூறப்பட்ட பிரதிஞ்ஞை பிரதிவாதியாலே மறுத்துரைக்கப்பட்டுழி அதனைச் சாதிக்காமல் வேறொரு பிரதிஞ்ஞையைக்கூறுதல். பிரதிஞ்ஞை - மேற்கோள். அந்தரம் - வேறு.

ங. பிரதிஞ்ஞாவிரோதம்:—

பிரதிஞ்ஞாவிரோதமாவது தன்னாலே சொல்லப்பட்ட மேற்கோளுக்குச் சம்பந்தமில்லாத வேறோரேதுவினைக் கூறுதல். பிரதிஞ்ஞா - மேற்கோள். விரோதம் - மாறுபாடு.

ச. பிரதிஞ்ஞாசந்நியாசம்:—

பிரதிஞ்ஞாசந்நியாசமாவது தன்னாலே கூறப்பட்ட மேற்கோள் பிரதிவாதியாலே மறுக்கப்பட்டுழி அதனை முற்றும் விட்டுவிடுதல். பிரதிஞ்ஞா - மேற்கோள். சந்நியாசம் - முற்றவிடுதல்.

ரு. ஏத்துவந்தரம்:—

ஏத்துவந்தரமாவது தன்னாற்சொல்லப்பட்ட பிரதிஞ்ஞையின் ஏது பிரதிவாதியாலே மறுக்கப்பட்டுழி வேறோரேதுவினைக்கூறுதல். ஏது - காரணம். அந்தரம் - வேறு. இதனை ஏத்துவபரம் எனவும் கூறுவர்.

சு. அர்த்தாந்தரம்:—

அர்த்தாந்தரமாவது தன்பால்வருந் தோல்வியை மறைக்கக்கருதி முன்னர்சொன்ன பொருட்கு உபயோகமில்லாத வேறுபொருள்களைக் கூறுதல். அர்த்தம் - பொருள். அந்தரம் - வேறு.

எ. நிரர்த்தகம்:—

நிரர்த்தகம் பிரதிவாதி யாதும் பேசானாகவுந் தான் வீண்வார்த்தைகளைப்பேசுதல். நிரர்த்தகம் - பயனில்வார்த்தை. நிர் - இன்மை. அர்த்தகம் - பொருளுடையது.

அ. அவிஞ்ஞாதார்த்தம்:—

அவிஞ்ஞாதார்த்தமாவது சபையாரும், பிரதிவாதியும் அறிந்து கொள்ளற்கரிய பொருளுடைய சொற்களை எடுத்துக்கொண்டு பேசுதல். அவிஞ்ஞாத - அறியப்படாத. அர்த்தம் - பொருள்.

கூ. அபார்த்தகம்:—

அபார்த்தகமாவது யாதேனும் ஒருபொருளும் இல்லதாக ஒன்றோடொன்று அவாவிப் பொருந்துதலில்லாத சொற்களைத் தொடுத்துக்கூறுதல். அவாய்நிலை முதலியன இல்லனவாகப் பேசுதல் என்பாருமுளர். அப - நீங்கிய. ஆர்த்தகம் - பொருளுடையது. அபார்த்தகம் என்பதனைப் பொருட்போலி என்று மொழிபெயர்ப்பாருமுளர்.

கo. அப்பிராத்தகாலம்:—

அப்பிராத்தகாலமாவது மேற்கோள், ஏது முதலியனவெல்லாம் முறைதவறி முன்பின்னாக நிற்குமாறு பேசுதல். அப்பிராப்த - அடையப்படாத: காலம்.

கக. நியூநம்:—

நியூநமாவது தன்னாற்சொல்லப்பட்ட பிரதிஞ்ஞையை நிலைபெறுத்தும் உறுப்புக்களை முற்றக்கூறாது சிலவுறுப்புக்கள் குறைவுபடக் கூறுதல். நியூநம் - குறைவு, குன்றக்கூறல்.

கஉ. அதிகம்:—

அதிகமாவது இயைபும் உபயோகமும்பற்றி ஏது முதலிய உறுப்புக்களை அதிகமாகக் கூறுதல். அதிகம் - மிகை, மிகைபடக்கூறுதல்.

கரு. புநருத்தம்:—

புநருத்தமாவது அநுவாதமின்றி முன்சொன்ன சொல்லினையாவது பொருளினையாவது பின்னுங்கூறுதல். புநருத்தம் - கூறியது கூறல். புந:—பின்னர். உக்தம் - சொல்லுதல். அநுவாதமாயின், புநருத்தம் குற்றமாகாது.

கச. அநநுபாடணம்;—

அநநுபாடணமாவது வாதியினாலுஞ் சபையாராலுஞ் சொல்லப்பட்ட வாக்கியத்தை மறுக்கும்போது பின்னர் எடுத்துக்கூறுதலா

கிய அநுவதித்தலைச் செய்ய இயலாமை. அநநுபாடணம் - வழி மொழியமாட்டாமை. அந் - இன்மை. அநுபாடணம் - வழிமொழிதல். அநு - பின். பாடணம் - சொல்லுதல்.

கரு. அஞ்ஞானம்:—

அஞ்ஞானமாவது சொல்லப்படும் வாக்கியம் மூன்றுமுறை சொல்லப்பட்டுச் சபையாராலே பொருளறியப்பட்டும் அதன்பொருளை அறியமாட்டாமை. அஞ்ஞானம் - அறியாமை. அ - இன்மை. ஞானம் - அறிதல்.

கசூ. அப்பிரதிபை:—

அப்பிரதிபையாவது வாதியாலே சொல்லப்பட்டது உத்தரங் கூறுதற் கேற்றதென்றறிந்தும் உத்தரங்கூறாது கடவுளைத்தியானித்தல், வேறொன்றுபடித்தல், மேலேபார்த்தல் முதலியன செய்து புத்தியின்மையைக்காட்டுதல். அப்பிரதிபை - புத்தியின்மை. அ - இன்மை. பிரதிபை - புத்தி, காலத்துக்கேற்ற அறிவு. அப்பிரதிபை என்பதனை அப்பிரதீரூபகதை என்பாருமுளர்.

கஎ. விக்ஷேபம்.

விக்ஷேபமாவது நியாயசபையிலே வாதமாரம்பித்த பின்னும் வாதியாவது பிரதிவாதியாவது மத்தியஸ்தர் முதலினோரில்லை என்று சொல்லி எடுத்த விஷயத்தைத் தூரவிடுத்துக் காலங்கழித்தல். விக்ஷேபம் - தூரவிடுத்தல்.

கஅ. மதாநுஞ்ஞை:—

மதாநுஞ்ஞையாவது தான் கூறியவைகளிலே பிரதிவாதி ஏற்றிய குற்றங்களை மறுத்துரையாது உடம்பட்டு, பிரதிவாதிக்கு வெறுப்புண்டாக்க எண்ணி இட்டமுள்ளவைகளைக்கூறுதல். மத - அறியப்பட்ட. அநுஞ்ஞை - சம்மதி.

கசூ. பரியநுயோச்சியோபேக்ஷணம்:—

பரியநுயோச்சியோபேக்ஷணமாவது மறுத்துரைத்தற்குத் தக்கதாகப் பிரதிவாதி கூறிய வாக்கியந் தோன்றுதலை அறிந்தாவது அறியாமலாவது மறுத்துரையாதுவிடுதல். பரியநுயோச்சியம் - உடன்படற்குரியது. உபேக்ஷணம் - விருப்பின்மை.

உ௦. நிரநுயோச்சியாநுயோகம் :—

நிரநுயோச்சியாநுயோகமாவது தோல்வித்தானமடையாதவனை அடைந்தனையென்று தோல்வித்தானங் கூறுதல். நிரநுயோச்சியம் - உடன்படாமைக்குரியது. அநுயோகம் - சொல்லற்கியைந்தது.

உக. அபசித்தாந்தம்.

அபசித்தாந்தமாவது யாதேனும் ஒரு சாத்திரசித்தாந்தத்தை அநுசரித்துப் பேசத்தொடங்கி அதனை மறந்து அந்தச் சித்தாந்தத்திற்குமாறுயுள்ள வேறொரு சித்தாந்தத்தினைப் பின் அநுசரித்துப்பேசிமுடித்தல். அப - விபரீதம். சித்தாந்தம் - முடிந்தமுடிபு. அபசித்தாந்தம் என்பதனைப் போலிச்சித்தாந்தம் என்பாருமுளர்.

ஏத்துவாபர்சம்.

ஏத்துவாபாசமாவது எடுத்துக்கொண்ட பிரதிஞ்ஞைக்கு இயையில்லாத ஏதுக்களைக்கூறுதல். ஏது - காரணம். ஆபாசம்-போலி.

சொன்னசொல்லுத் தவறுதல், சொன்னதைச் சொல்லவில்லையெனல் முதலியனவாகச் சில தோல்வித்தானங்கள் சொல்வாருமுளர். நிற்க. தமிழ்ப்பாஷையிலும் சமயவாதம், இலக்கணவாதம், இலக்கியார்த்தவாதம், காலவாதம் முதலிய பலவகை வாதங்கள் நிகழ்கின்றன. அவ்வாதங்களை நிகழ்த்தும் வாதிப்பிரதிவாதிகள் யாவரும் இந்தத் தோல்வித்தானங்களையெல்லாம் நன்கறிந்துகொண்டு வாதத்திற் பிரவேசித்தல் அவர்க்குப்பெரிதும் வெற்றிபயப்பதாகும்.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம். } இங்ஙனம்,
குரோதி௵ கார்த்திகை மீ } அ. குமாரசுவாமிப்பிள்ளை.

ஓரடித்தமிழ்ச்சொற்கள்.

பேண்—விருப்பமுணர்த்துமோருரிச்சொல்.

- பிணை—ஆசை. குதிரைமுதலியவற்றின் பெண். "பிணையும்பேணும்பெட்பின்பொருள"—தொல்காப்பியம், உரிச்சொல்லியல், ௩௦.
- பிணவு—நாய்முதலியவற்றின் பெண்.
- பிணா—பெண்பொது.
- பிணி—கட்டுதல்—நோய்.
- பிணையல்—மாலை.
- பிணைத்தல்—கட்டுதல்.

அற—நீக்கு, நீங்கு, வரம்புசெய் என்னும் பொருள்தரும் வினையடி.

- அறம்—பாவத்தினீக்கப்பட்டது—தருமம், ஒழுக்கம்.
- அறல்—கருமணல்—கொழிக்கப்பட்டமணல். புனற்றிரை-நீங்குவது என்பது அதன்பொருள்: சிறுதூறு-பெருந்தூற்றினீங்கியது.
- அறன்கடை—பாவம்—அறத்தினீங்கியது.
- அறுத்தல்—பிரித்தல்.
- அறுப்பு—பிரித்தல்.
- அறுகு—அறுக்குந்தோறும் வளர்வது—அறுகம்புல்.
- அறவர்—பாவத்துக்கு வரம்புசெய்து கொண்டவர்—முனிவர்.
- அறவு—அறம்—"அறவாழி" என்பதிற் காண்க.
- அறுவை—நெடும்பாவாக நெய்து அறுக்கப்படுவது-சீலை, துணி என்பது மது.
- அறை—வீட்டினுள் வகுக்கப்படுமிடம்; சிற்றில், அறுத்து—"மூக்கறை" "செவியறை"
- அற்றம்—தனிமை. சமயம், பிறர்நீங்கிய சமயம்.
- அறவி—அறத்தினையுடையது.
- அறவன்—யாவற்றையு நீங்கினோன்—கடவுள், பாவத்தி னீங்கினோன்.
- அற்றார்—நீங்கினார்.
- அறவை—இனமில்லான்.

அறவையேன்—தமியேன்.
ஆறு—அறுத்தொழுகுதலையுடையது—நதி. ஒழுக்கம்.
ஆறல்—தணிதல்—நீங்குதல்.
ஆற்றுதல்—தணித்தல்—துயர்தீர்த்தல்.
ஆனல்—நீங்குதல்.

ஆள்—ஆளுதற் பொருள் தரும் வினையடி.

ஆடூஉ—ஆள்பவன்—ஆண்மகன்.
ஆடவன்—ஷை.
ஆட்டி—ஆளப்படுபவள்—பெண்.
ஆடல்—ஆளுதல்.
ஆளி—ஆள்பவன்.
ஆள்—ஆளப்படுபவன்—அடிமை.
ஆண்—ஆண்பால்.

குறு—சிறுமைப்பொருளுணர்த்தும் உரிச்சொல்.

குறுமை—சிறுமை.
குறை—சிறுமை.
குற்றம்—பிழை—சிறுமை.
குற்றல்—பறித்தல்—குறைத்தல்.
குற்றி—குறியது.
குறுகல்—குறைதல்.
குறத்தி—சிறுவாழ்வுடைய சாதிப்பெண்.
குறம்—சிறுவாழ்வுடைய சாதி
குறவன்—ஷை சாதி ஆண்.
குன்றம்—சிறுமலை.
குன்று—ஷை.
குறில்—குறுமையுடையது.
குறிச்சி—சிற்றூர்.
குறடு—சிறுதிண்ணை.
குறள்—சிறுமையுடையது.
குறளை—சிறுசொல்—குற்றச்சொல்.
குறி—அடையாளம்—சிறியபுள்ளி—அமிசம்.
குறுகுறு—சிற்றொலி.
குறும்பர்—குறுநிலமன்னர்.
குறும்பு—சிறுமை—சிற்றூர்.

குறும்பூழ்—சிறுபறவை—காடை.
குன்றல்—மெலிதல்.
கூறு—சிறுமைசெய்யப்பட்டது. பங்கு.
கூறை—பாவினின்றுங் குறைக்கப்பட்டது—சீலை.
கூற்று—நமன்—பிரிப்பவன், வாழ்நாளைக்குறைப்பவன்.
கூற்றுவன்—நமன்.
கூற்றன்—நமன்.
கூன்—சிறுமை.
குறளி—குறள்வடிவினதாகிய பேய், வசவி.
கூளி—குறளி என்பதன் மரூஉப்போலும்.
கோள்—குறள்—குற்றச்சொல். குறள் என்பதன்மரூஉப்போலும்
குறிஞ்சி—மலைசார்ந்த நிலம்—சிறுமையுடைய நிலம்.

கூ-கூ என்னும்மொலிக்குறிப்பு. இதனடியாற்பிறந்த சொற்களாவன.
கூகை—கோட்டான்—கூகூசப்தமுடையது.
கூவல்—அழைத்தல்.
கூறு—சொல்லு—தூ தூறுஎன வந்தாற் போல் வந்தது.
கூற்றம்—சொல்.
கூறுதல்—விற்றல்—கூவிவிற்றல். இக்கருத்துப்பற்றியே பகர்தல் என்பதும் விற்றலுக்கு வந்ததாம்.
கூத்து—கூவி ஆடல்.
கூத்தன்—நாடகன்.
கூதை—கூகூவென வூதுங் குளிர்காற்று.
கூதிர்—குளிர்காலம்.
கூப்பீடு—கூப்பிடல்—கூப்பீடுதூரம்.
கூப்பிடல்—கூவல்.
கூம்பல்—கூவென்னுஞ் சத்தமிடும்போது குவியும் இதழ்போலக் குவிதல்.

ஆ—ஆ என்னும் சத்தம்அடியாகப்பிறந்தசொற்கள்.
ஆகுலம்—ஆவென்னுஞ் சத்தகணம்—அது துன்பத்துக்கண்வருதலின் துன்பத்துக்குப் பெயராயிற்று.
ஆகுளி—ஒருபறை.
ஆரவாரம்—பேரொலி.
ஆர்த்தல்—ஒலித்தல்.
ஆர்ப்பு—பேரொலி.
ஆலல்—மயிற்குரல்—ஒலித்தல்.

கா—கா வென்னுஞ்சத்தம் அடியாகப்பிறந்தசொற்களாவன.

காகம்—காவென்னுஞ் சத்தமிடுவது—காக்கை.
காகளம்—எக்காளம்.
காகுளி—மிடற்றெழு மிசை.
காக்கை—காகம்.

விழு—சீர்மை, சிறப்பு, இடும்பை என்னுங் குறிப்புணர்த்தும் உரி. இவ்வடியாகப் பிறந்த சொற்களாவன.

விழுமம்—சிறப்பு.
விழி—சிறப்பினையுடையது—கண்.
விழா—சிறப்பு.
விழவு—விழா.
விழுதல்—இடும்பையடைதல்—விழுகை.
விழுகை—விழுதல்.
விழைவு—விருப்பம். ஆசைப்பெருக்கம். ஒன்றன்மாட்டுள்ளசிறப்பும்சீர்மையுங் காரணமாகவுண்டாகும் ஆசைப்பெருக்கம்.
வீழ்ச்சி—விழுகை.
வீழ்தல்—ஆசைப்பெருக்கம். விழுகை.
வீழி—வீழிச்செடி.
வீழ்—மரவீழ்.

யாழ்ப்பாணம்
நாவலர்கோட்டம்.
4—11—04.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

உ

சிவமயம்.

இராமாவதாரச்செய்யுட் பாடாந்தரம்.

(சஙு௪-ம் பக்கத் தொடர்ச்சி)

கார்முகப்படலம்.

பெண்ணிவ னுற்ற தென்னும் பெருமையா லருமை யான
வண்ணமு மிலைக ளாலே காட்டலால் வாட்டந் தீர்ந்தேன்
தண்ணறுங் கமலங் காளென் றளிர்நிற முண்ட கண்ணி
னுண்ணிறங் காட்டி னீரென் னுயிர்தர வுலோவி னீரோ.

என்னும் ௪௬ ம் செய்யுளில், 'பெண்ணிவனுற்றதென்னும் பெருமை யாலருமையான'. என்பது பெண்ணிவனுற்றவாறு பேணியே கருமை யான'எனக்காணப்படுகின்றது. உற்றதென்னும் பெருமையாலென்ப தற்கு, உற்றாளென்று கருதும் (உமது) பெருமையினால் எனப்பொ ருள் கொள்ளுமிடத்து வலிந்துகோடலாய் முடிதலானும், பொருள் சிறவாமையானும் 'பெண்ணிவ னுற்றவாறு பேணியே' என்பதே சிறப்புடைத்து. 'அருமையானவண்ணமும்' என்பதிலும்'கருமையா னவண்ணமும்' என்பதும் பொருத்தமுடைத்தாதல் காண்க.

எழுச்சிப்படலம்.

கடுகிய தூதருங் காலிற் காலிற்சென்
றிடிகுரன் முரசதி ரயோத்தி யெய்தினா
ரடியிணை தொழுமிட மன்றி மன்னர்தம்
முடியொடு முடிபொரு வாயின் முன்னினார்.

என்னும் க-ம் செய்யுளில் 'அடியிணை தொழுமிடமன்றி' என்பது 'அடியிணைதொழவிடமின்றி'எனக்காணப்படுகின்றது. அன்றிஎன்ப தற்கு முடிபின்மையானும், வருவித்துப்பொருள்கொள்ளுமிடத்தும் பொருள் சிறவாமையானும் 'தொழவிடமின்றி' எனக்கோடலே சிற ப்புடைத்து.

ஷை

கால்விரிந் தெழுகுடை கணக்கி லோதிமம்
பால்விரிந் ததுவெனப் பறப்ப போன்றன
மேல்விரிந் தெழுகொடிப் படலை விண்ணெலாந்
தோலுரிந் துகுவன போன்று தோன்றுமால்.

என்னும் க௨-ம் செய்யுளில் 'பால்விரிந்ததுவெனப் பறப்பபோன் றன' என்பது 'பால்சிறை விரித்துவின் பறப்ப போன்றன' எனக் காணப்படுகின்றது. கால்விரிந்தெழுதல், சிறையை விரித்துவின் பறப்பது போன்றிருத்தலின் 'பால்சிறை விரித்துவின் பறப்ப போ ன்றன' என்பதே பொருத்தமுடைத்து. 'பால்விரிந்ததுவென' என் பது பண்பு பற்றியும் உவமைகோடற்கியைந்து நிற்றலின் உவமைக் குவமையாய் வழுவுறுதல் காண்க. பால்-பக்கலில்.

ஷை.

மண்க ளிப்ப நடப்பவர் வானுத
லுண்க ளிக்கம லங்களி னுள்ளுறை
திண்க ளிச்சிறு தும்பி யெனச்சிலர்
கண்க ளித்தன காமன் களிக்கவே.

என்னும் சகூ-ம் செய்யுளில், 'மண்களிப்பு நடப்பவர் வாணுதல்' என்பது 'மண்களிப்ப நடப்ப்வர் வாண்முக' எனக்காணப்படுகின்றது. 'வாணுதல்' கமலங்களோடியைந்து நில்லாமையானும், வாண்முகம் என்பது இயைந்து நிற்றலானும் 'வாண்முக' என்பதே பொருத்தமுடைத்து.

ஷ

எண்ண மாத்திர மும்மரி தாமிடை
வண்ண மாத்துவர் வாய்க்கனி வாய்ச்சியர்
திண்ண மாத்தொளிர் செவ்விள நீரிழி
அண்ண மார்த்தன தூளியு மார்த்தவே.

என்னும் ருய-ம்செய்யுளில், 'வண்ணமாத்துவர்வாய்க்கனிவாய்ச்சியர்' என்பது 'வண்ண மாத்த துவர்க்கனி வாய்ச்சியர்' எனக்காணப்படுகின்றது. 'வண்ணமாத்துவர் வாய்க்கனிவாய்ச்சியர்' என்பதில் வாய் என்பது பின்னும் வந்துவழூவுறுத்தலின் 'வண்ணமாத்த துவர்க்கனி வாய்ச்சியர்' என்பதே பொருத்த முடைத்து.

ஷ

அருவிபெய் வரையிற் பொங்கி யங்குச நிமிர வெங்கு
மிரியலிற் சனங்கள் சிந்த விளங்களிச் செங்கண் யானை
விரிசிறைத் தும்பி வேறோர் வீழ்மதந் தோய்ந்து மாதர்
சுரிகுழற் படிய வேற்றின் பிடியொடுந் தொடர்ந்து செல்வ.

என்னும் சுஉ-ம் செய்யுளில், 'விரிசிறைத்தும்பிவேறோர் வீழ்மதந் தோய்ந்து மாதர்—சுரிகுழற்படிய வேற்றின் பிடியொடுந் தொடர்ந்து செல்வ' என்பது 'வரிசிறைத்தும்பி யிட்டம் வார்மதந்தோய்ந்து மாதர், சுரிகுழற்படிய வெற்றிப் பிடியொடுந் தொடர்ந்து செல்வ' எனக் காணப்படுகின்றது. 'வேறோர் வீழ்மதந் தோய்ந்து' என்பதுபொருளைச்சிறப்பியாமையின் 'தும்பியிட்டம் வார்மதந் தோய்ந்து' என்பதே பொருத்தமுடைத்து. 'வேற்றின்பிடி' என்பதினும் வெற்றிப்பிடி என்பதும் சிறப்புடைத்தாதல் காண்க.

ஷ

துப்பினின் மணியிற் பொன்னிற் சுடர்மர கதத்தின் முத்தி
னொப்பற வமைத்த பைம்பூ ணோவியம் புகழ வேறி
முப்பதிற் றிரட்டி கொண்ட வாயிர முகிழ்மென் கொங்கைச்
செப்பருந் திருவி னல்லார் தேர்மிசை சூழப் போனார்.

என்னும் எ0-ம்செய்யுளில், 'ஒப்பறவமைத்த பைம்பூணோவியம்புகழவேறி' என்பது 'ஒப்பறவமைத்த தேரிலோவியம் போல வேறி'

எனக்காணப்படுகின்றது. துப்புமுதலியவற்றாற் செய்த தேரில் அத்தேரிலமைத்த ஓர் ஓவியம்போல் இவர்ந்து எனப்பொருள்கொள்ளுமிடத்து முன்னையதினும் பின்னையதே பொருத்தமுடைத்து. இன்னும் இச்செய்யுளில் 'தேர்மிசைசூழப்போனார்' என்பது 'தெரிவையர் சூழப்போனார்' எனக்காணப்படுகின்றது. 'ஒப்பறவளைத்ததேரில்' என்னும் பாடத்திற்கு அஃது இயைபுடைத்தாதல் காண்க.

வரைக்காட்சிப்படலம்.

வெள்ளநெடு வாரியற வீசியுள வேனுங்
கிள்ளவெழு கின்றபுனல் கேளிரின் விரும்பித்
தெள்ளுபுன லாறுசிறி தேயுதவு கின்ற
வுள்ளது மருதுதவும் வள்ளலையு மொத்த.

என்னும் உ௩-ம் செய்யுளில், 'வெள்ளநெடு வாரிபற வீசியுளவேனும்' என்பது 'வெள்ளநெடுவாரிபுறவீசியிலதேனும்' எனக்காணப்படுகின்றது. வெள்ளமாகியவதிகநீரைக் கொடாதொழிந்ததாயினுந் தோண்டுதலினாலே சுரக்கின்ற நீரையாகுதல் கொடுக்குந்தன்மை எனப் பொருள்கொள்ளுமிடத்து; அது கொடையைச் சிறப்பித்தலின், 'வெள்ளநெடுவாரியுற வீசியிலதேனும்' என்பதே சிறப்புடைத்து. 'உள்ளதுமருதுதவும்' என்பதற்கும் அதுவே பொருத்தமுடைத்தாதல் காண்க.

௵

பேணுதற் கரிய சியக் குருளையம் பிடிக ளீன்ற
காணுதற் கினிய வேழக் கன்றொடு களிக்கு முன்றிற்
கோணுதற் குரிய திங்கட் குழவியுங் குறவர் தங்கள்
வாணுதற் கொடிச்சி மாதர் மகவொடு தவழு மாதோ.

என்னும் ௩ள-ம் செய்யுளில், 'பேணுதற் கரிய சியக்குருளை' என்பது 'பேணுதற்குரிய மேகக்குருளை' எனக்காணப்படுகின்றது. சியக்குருளை வேழக்கன்றொடுகளிக்குமென்பதிற் பொருள்சிறவாமையானும் ஒன்றோடொன்று இகலுடைத்தாகலானும் 'மேகக்குருளை' யெனக் கோடலே பொருத்தமுடைத்து. வேழக்கன்றுக்கு மேகக்குருளை உவமையாய்ப் பொருளைச்சிறப்பித்தல் காண்க. பின்னடிகளிலும் திங்கட்குழவியுங் கொடிச்சியர்மகவொடு தவழுமென வுவமைதோன்றவே புணர்த்தல் காண்க.

௸

படிகத்தின் றலமென் றெண்ணிப் படர்சுனை முழுகிப் புக்க
கடிகைப்பூங் கமல மன்ன சுடர்மதி முகத்தி னார்தம்
வடகத்தோ டுடுத்த தூசை மாசினீர் நனைப்ப நோக்கிக்
கடகத்தை யெறிந்து தம்மிற் கருங்கழல் வீரர் நக்கார்.

என்னும் சஅ-ம் செய்யுளில், 'கடகத்தை யெறிந்து' என்பது 'கடக க்கையெறிந்து' எனக்காணப்படுகின்றது. 'சுனை' என்பது நனைத்த லாற்றெரிதலின், கடகத்தையெறிந்து அறிந்தார் எனப்பொருள்கோ டல் பொருந்தாமையானும், களிப்பாலெறிந்தாரெனினும் ஆண்டுப் பொருள்சிறவாமையானும் 'கடகக்கையெறிந்து' என்பதே பொருத் தமுடைத்து. நகுதற்குக் கையெறிதலியைபுடைத்தாதல் காண்க.

பூக்கோய்படலம்.

உலந்தரு வயிரத் திண்டோ ளொழுகிவா ரொளிகொண் மேனி
மலர்ந்தபூந் தொடையன் மாலை மைந்தர்பான் மயிலி னன்னார்
கலந்தவர் போல வொல்கி யொசிந்தன சிலகை வாராப்
புலந்தவர் போல நின்ற வுளசில பூத்த கொம்பர்.

என்னும் கo-ம் செய்யுளில், 'உலந்தருவயிரத்திண்டோளொழுகி வா ரொளிகொண்மேனி' என்பது 'உலந்தருவயிரத்தோண் மேலொழுக வார்நறையின் மல்கும்' எனக்காணப்படுகின்றது. பூந்தொடையற் கு இயைபுடைத்தாகலின், 'தோண்மேலொழுகவார்நறையின்மல்கும்' என்பதே சிறப்புடைத்து.

௸

சந்திக் கலாவெண் மதிவாணுத லாட னக்கும்
வந்திக்க லாகு மடவாட்கும் வகுத்து நல்கி
நிந்திக்க லாகா வுருவத்தின னின்ற போழ்துஞ்
சிந்திக் கலாப மயிற்கண்கள் சிவந்து போனார்.

என்னும் உஉ-ம் செய்யுளில், 'சிந்திக்கலாப மயிற்கண்கள்' என்பது 'சிந்திப்புதுப் பூவயிற்கண்கள்' எனக்காணப்படுகின்றது. வகுத்து நல்கியது பூவாதலின், 'சிந்திப்புதுப்பூ' என்பதே சிறப்புடைத்தா தல் காண்க. சிந்திக்கலாபமெனக்கொள்ளின், வகுத்துநல்கியது இன்னதென்று தெரியாது மயங்கவைத்தலாய் முடியுமென்க.

(இன்னும்வரும்.)

சி. கணேசையர்.

ஸ்ரீ:

புகழேந்தி யொட்டக்கூத்தர்.

(செந்தமிழ் உ-ந்தொகுதி, ௩௰௬-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனிப் பாண்டிமண்டலசதகத்து—

நளனைப் புகழ்கின்ற வெண்பாவைப் பாடிநன் ஞட்கவிதை
கழகத்தின் மிக்க புகழேந்தி யாங்கவி ராசன்றன்னைத்
தளவப் பெருநகை மாதொடு தென்னவன் மன்மணஞ்செய்
வளவற்குச் சீதன மீந்தது பாண்டியன் மண்டலமே.

என ஓர் செய்யுள் காணப்படுகின்றது. இதனுற் புகழேந்தியார் முதற்கட் பாண்டியன் அவையத்துத் தலைமைப்புலவராயமர்ந்து அவ்வரசனை நாட்கவிபாடினுரெனவும், பின்னர்ப் பாண்டியன் தன்மகளைச் சோழன் மணஞ்செய்துகொண்டபோது அவனுக்குச் சீதனமாகப் பலவரிசைகளுடன் புகழேந்தியாரையும் அளித்தனன் எனவும் தெரியலாகும். தொண்டைமண்டல சதகத்து,

நூலார் கலைவல்ல செம்பியன் கேட்க ஒட்டக்கூத்தன்
கோலா கலனெட்டக் கூத்தனை யேன்றுதற் கோலியென்று
மேலார் கவிசொல்லி நெய்த்தானத் தேசென்று வென்றுகொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தி யுந்தொண்டை மண்டலமே.

எனவருதலாற் புகழேந்தியார் சோழனேடு நெய்த்தானம் என்னுந் திருப்பதிசென்று ஒட்டக்கூத்தரை எதிர்த்துத் 'தற்கோலி' என்னுங்கவிதையைப் பாடிச் சோழனுற் பெருமதிப்புப் பெற்றனரென அறியப்படுகின்றது. இங்கு ஒட்டக்கூத்தர் பாடியது 'விக்காவுக்கு' என்னுங்கவிதையாகும். சோழமண்டலசதகத்து:

*"கோலாகல..............................மண்டலமே"

[ஷை மேற்கோள்.]

†"புதுவைச்சடையன்..........................கொண்டோன்"

ஆரவார விலக்கண நூலைந்துமுழங்க வதற்கெதிர்நூல்
பாரின்மீது தமிழ்க்கூத்தன் பாடியமைத்தான் பயனேர்ந்தே
வீரசோழ னுடனிருந்து வியந்தேவீர சோழியநூல்
வாரமேற வரங்கேற்றி வைத்தார்சோழ மண்டலமே.

---

* † இவ்விரண்டும் இப்பகுதி ௬-ம்பக்கத்துக் காட்டப்பட்டன.

பூணிலாவுங் கம்பனலம் பொலியுந்தமிழாற் பொலிவெய்திக்
காணுமாறு காண்டமுறுங் கதையிற்பெரிய கதையென்னுந்
தாணிலாவுங் கழலபயன் சபையிற்பயிலுத் தரகாண்டம்
வாணிதாச னரங்கேற்ற வைத்தார்சோழ மண்டலமே.

ஒத்ததுணர்ந்த நாடனைத்து மொருங்கேகூடி யுயர்கூத்தன்
கத்தியலையத் துரத்துதலுங் கசிந்துகாழிக் கவுணியர்கோன்
பத்தியுடனே தக்கமகப் பரணிபாடிப் பணியமுத்தின்
வைத்தசிவிகை மகிழ்ந்தேற வைத்தார்சோழ மண்டலமே.

எனவருவனவற்றால் ஒட்டக்கூத்தர் புதுவைக்கணிருந்த சடையன்றந்தையாகிய சங்கரனுக்கு முதற்கண் உதவித்தொழில் புரிந்து கொண்டு வந்தனர் எனவும், இவரை ஆண்டுவதிந்த காங்கேயன் என்னும் உபகாரி யொருவன் ஆதரித்துப்போற்றிக் கல்வி பயிலுவித்துக் கவுடப்புலவன், கவிராக்ஷதன் எனப்பெயர் சிறப்பித்தனன் எனவும், அந்நன்றிபாராட்டிக் கூத்தர் அவ்வுபகாரிமேல் 'நாலாயிரக்கோவை' என ஓர் நூலியற்றின ரெனவும், ஐந்திலக்கணங்கட்கும் ஓர் 'எதிர் நூல்' செய்தமைத்தனரெனவும், இராமாயணத்து உத்தரகாண்டத்தைப்பாடிச்சோழனவையில் அரங்கேற்றினுரெனவும், ஒருகாலத்து நாட்டார் பலரும் ஒருங்குகூடிக் கூத்தனை அலைத்துத் துரத்திய வளவில், ஓரிடத்துப்புக்கொளித்துத் தக்கயாகப்பரணிபாடி அதனை நாட்டாருக்கு அறிவிக்க, அவர்கள் கேட்டு மகிழ்ந்து கூத்தர்பாற் செற்றந்தீர்ந்து அவர்க்கு முத்துச்சிவிகை யளித்தனரெனவும் தெரிகின்றன. இக்கூத்தனை நாட்டார்அலைத்துத்துரத்தற்குக்காரணம்-இவர் கவிகளைத்தலையறுத்தமையேயாம்போலும். கூத்தர் நாட்டாரா ற்றுரத்தப்பட்டபோது திருக்குடந்தையில் வீரசிங்காதன மடத்து ஒளித்திருந்தன ரெனவும், அவ்வமயத்து அம்மடத்தார் தமக்குப் புரிந்த நன்றியைப்பாராட்டி வீரசிங்காதனபுராணம் என ஓர் நூலியற்றின ரெனவும் சொல்லுப. இவரது நாலாயிரக்கோவையிலோர் செய்யுள்வருமாறு;

பதிநோக்கி யன்னையைத் தண்டனிட் டேனெனும் பாங்கியனை
யெதிர்நோக்கி நின்று தழுவுகின் றேனெனு மென்றும்பொன்னி
நதிநோக்கி வாழு நலபுதுச் சேரிநன் ஞட்டிலென்றன்
விதிநோக்கிக் காளைபின் மேவுகின் றேனெனும் வேதியரே.

இது சோழமண்டலசதகத்து மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

ரா. இராகவையங்கார்.

செல்வம்.

(செந்தமிழ், உ-ம் தொகுதி, ௩௪௧-ம் பக்கத் தொடர்ச்சி.)

எறும்பானது கிடையாதகாலத்துக்கு உதவுமாறு கிடைத்த காலத்தில் உணவிற்கு உரியவற்றைச் சேர்த்துவைத்துக்கொள்கின்றது. வெய்யிற்காலத்திற் பயிர்பச்சைகளுக்கு ஆகும்படி மாரிக்காலத்தில் ஏரி குளங்களை நீர்நிரப்பிவைத்துக்கொள்ளுகிறோம். ஓடுகிற ஆறு ஓடிக்கொண்டே இராது. ஓடம்விட்ட ஆற்றிலும் அடிசுடும். வந்தாற்சும்மா வரும்; வராமற்போனால் ஒன்றும் வராதிருப்பதுமுண்டு. ஆபத்தும் சம்பத்தும் ஆருக்குமுண்டு. ஆகவே, மனிதனானவன் கார்காலத்தில் இன்புற்று வாழ்வதற்கு ஆவனவற்றைக் கோடைக்காலத்தில்தானே தேடிவைத்துக்கொள்ளவும், இரவில் சுகமாக உண்டுறங்குவதற்கின்றியமையாதனவற்றைப் பகற்காலத்தில்தானே சம்பாதித்துவைத்துக்கொள்ளவும், முதுமைப்பருவத்தில் முட்டுப்பாடு... ,் உண்டு உயிர்வாழ்வதற்கு வேண்டுமவைகளை இளமைப்பருவத்தில்தானே ஈட்டிவைத்துக்கொள்ளவும் முயற்சிசெய்யக்கடவன். பொருடனைப்போற்றிவாழ்.

> வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
> வைத்தூறு போலக் கெடும்.

வருமுன்காப்பவன் புத்திமை வந்தபின்காப்பவன் தள்ளினதுபோல் சிலர் என்னசொன்னாலும் கேட்காமல், முன்பின்பாராமல் "ஊதாரிக்குப் பொன் துரும்பு" என்றபடி கையிற்கிடைத்த பொருளையெல்லாம் செலவழித்துவிட்டு, எய்ப்பில்வைப்பின்றி இடர்ப்படுவர். பிணியினாலேனும் முதுமையினாலேனும் வேறு இடையூறுகளாலேனும் பொருள்தேடும் வழியில்லாதபொழுது, ஒருகாசு கிடைப்பது குதிரைக்கொம்பாகிப் பெண்டிர் பிள்ளைகளோடு இடருறுவர்.

அழுக்கிட்டால் ஆபத்துக்குதவும் என்றபடி சில பூஷணங்களைத் தேடிவைத்தாலும், ஆபத்துக்கு அவை உதவியாயிருக்கும். வீடுவாயில் தோட்டந்துரவு நிலம்நீர் முதலியவைகளைத் தேடிவைத்தாலும், அவைகளால்வரும் வருமானம் அவ்வாபத்துக்காலத்துக்கு ஆதாரமாகஇருக்கும். செல்வுகளும் தானதருமங்களும் போக வரு

வாயில் எஞ்சியதை இறுகப்பிடித்துச்சேர்த்துவைத்தால்மாத்திரமே இவைகளைத்தேடுதல் முடியும். வரவுக்குமிஞ்சின செலவுசெய்யாமலும் வரவத்தனையுஞ் செலவழிக்காமலும் இருப்பவர்களே ஏதாவது சேர்க்கக்கூடும். வரவத்தனையுஞ் செலவழிப்பதே பெரும்பாலார்க்கு இயல்பாக இருக்கின்றது. கொஞ்சமாயினும் இறுகப்பிடித்துச் சேர்மானஞ்செய்கிற வழக்கத்தைக் கஷ்டப்பட்டாயினுஞ் செய்துகொள்ளவேண்டும். வரவுக்குமேற் செலவிடுதலான துர்வழக்கத்தை ஒழிப்பதற்கு இதுவே உபாயம். செலவுகாரனாகிய ஓர் உத்தியோகஸ்தன் ஒரு செல்வனைக் கடன்கேட்டான். "திரும்ப நீ எப்படிக் கடன் தீர்ப்பாய்?" என்று கேட்க, "என் சம்பளத்தில் பாதந்தோறும் சேர்த்துத்தருவேன்" என்றான். அதன்மேல் அந்தச்செல்வன் "இதற்குமுன்னேதானே ஏன் அப்படிச்செய்துகொள்ளவில்லை?" என்ன, உத்தியோகஸ்தன் "தெரியாமல் இருந்துவிட்டேன்" என்றான். அதுகேட்டுச்செல்வன் 'ஆனால் நான் தெரிவிக்கிறேன் அப்படியெனில் கடன்தரமாட்டேன் போ' என்றான். அப்போது உத்தியோகஸ்தன் பணஞ்சேர்க்கத் தொடங்கினான். இப்படிப்பட்ட செல்வர்களே வரவுக்கு அதிகமாக ஓடும் உத்தியோகஸ்தர்களுக்கும் ஏழைகளுக்கும் பரமோபகாரிகள். வயதேறவேற சமுசாரபாரம் வெகுவாய்ப் பலத்துவரும். சமுசாரம் பெருகும்போது அதற்கேற்ப வருமானமும் பெருகாவிட்டால், சமுசாரபாரத்தை நிர்வகிப்பது மிகவுங்கஷ்டமாகும். பிள்ளைகளுக்குக் கல்வியாவது வேறு வித்தையாவது கற்பிக்கவேண்டும். பெண்களுக்குக் கல்விகற்பிப்பதோடு பூஷணம் ஸ்ரீதனம் முதலியவைகளைத் தேடவேண்டும். மரம்வைத்தவன் தண்ணீர் வார்ப்பானென்று நம்பிப் பொருள் ஊறுகாளிற் குருட்டுத்தனமாய் அதை வீணில் வாரியிறைத்துவிட்டால், பொருள்வரும் வழி தூர்ந்துபோகும்போது சமுசாரம் வாடிவதங்கிப்போகுமே. யாதொரு தொழிலாகிற வயலிலே சோம்பலென்னுங் களையைப்பிடுங்கி ஊக்கமாகிய எருவிட்டு உழைப்பென்னு நீர்பாய்ச்சி குடி கூது முதலிய பட்டிமாடுகள் மேயாமல் தனமாகிய தானியத்தை விளைத்தவர்கள் தருமமான கடமைகளை யிறுத்து உண்டதுபோக எஞ்சியதைப் பாங்கியாகிய குதிரிற் சேர்த்துவைக்காவிட்டால், வைசுவரட்சியா்ன் கருப்புக்காலத்தில் புதல்வர்களுக்குக் கொத்தடிமை குலைபடி

மையாகிப் பஞ்சுபடாத பாடும் படலாகுமே. வருவாயிற்சிறிது தொகையும் இறுகப்பிடியாமல் விடுபவர் இந்த இன்னல்களை எண்ணிப்பார்க்கவேண்டும். தங்கள் எதிரிலே காணப்படும் புதுப்பாடங்களையும் இறந்தகாலத்திற்கண்ட பழம்பாடங்களையும் பலமுறையும் சிந்தித்து அறிவு தெளியவேண்டும்.

கையில் ஒருகாசு மிகுந்திருக்கும்போது, இந்த ஒருகாசு எதற்காகும், இதனால் என்னபிரயோசனம் உண்டாகப்போகிறது என்று அலக்ஷியமாக எண்ணி அதை வீணிலே செலவழித்தலாகாது. ஒருகாசு பேணின் ஒருகாசு தேறும். தம்படி தம்படியாச் சேர்ந்துதானே ரூபா ஆகும். பலதுள்ளிபெருவெள்ளமல்லவா? அன்றன்று இரண்டணா சம்பாதிப்பவன் தம்படிதம்படியாகச் சேர்த்துவந்தால் ஒருவருஷத்தில் அந்தச்சேர்மானம் ஒருரூபா பதினலணா ஐந்துபையாகும். தினந்தோறும் நாலணா சம்பாதிப்பவன் கால்காலணாவாகச் சேர்ப்பானுல், அவன் ஒருவருஷத்தில் ஐந்துரூபா பதிஞரணா மூன்றுபை சேர்க்கலாமே. தினந்தினம் அரைரூபா சம்பாதிப்பவன் ஓர்அணா வீதமாகச் சேர்த்தால் ஒருவருஷத்தில் இருபத்திரண்டுரூபா பதின்மூன்றணா சேர்க்கலாம். ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை என்கிற கணக்கின்படி, அதாவது ஆயிரநாளில் அதாவது சுமார் இரண்டு வருஷம் ஒன்பதுமாதத்தில், அவன் அறுபத்திரண்டரை ரூபா சேர்க்கலாம். இங்ஙனம் சேர்மானமாகிற தொகை வட்டி முதலியவற்றால் விருத்தியாகிறபக்ஷத்தில், அவன் பத்துவருஷகாலத்தில் முந்நூறு ரூபாவுக்குக் குறையாத முதற்பொருளுள்ளவனுகலாம். தினமானம் அரைரூபா சம்பாதிப்பவனுக்கு இது எவ்வளவுசிறந்தமுதற்பொருள். தபாற்சாலைகளிற் பணஞ்சேர்க்கிற பாங்கி ஏற்படுத்தியிருக்கிறது. அதில் இரண்டணாமுதல் எவ்வளவுவேண்டுமானாலும் கட்டிக்கொண்டுவரலாம். மாதம் ஒன்றுக்கு ஐந்தரூபாவுக்குக் காலணாவீதமாக வட்டி கட்டிக்கொடுக்கின்றனர். இருநூறுரூபா வரையில் அங்கே சேர்மானம் பண்ணலாம். இது ஏழைகளுக்கென்றே ஏற்பட்டிருக்கிறது. அவசரமான செலவுநேரிட்டாலும் அவசியமான தொகையை வாரத்துக்கொருமுறை வாங்கிக்கொள்ளலாம். வாரத்துக்கொருமுறை நாலணாகட்டிக்கொண்டுவந்தால் சுவல்பவருமானமுள்ளவர்களும் ஒருவருஷகாலத்தில் வட்டிநீங்கலாகப் பதின்மூன்றுரூபா சேர்க்கலா

மே. மெய்கான்: இவ்விதம் காலணா அரையணாவாகச் சில்லறை சில்லறையாகச் சேர்த்து எக்காலத்திற் செல்வராகிறது என்று நினைக்கலாகாது, கொஞ்சம் வருகிறபோதே பொருள் சேர்க்கிற வழக்கம் இல்லாவிட்டால், அதிகம் வருகிறபோது அவ்வழக்கம் உண்டாகமாட்டாது.

சிருஞ்செட்டுமாக வரவு செலவுகளை வரையறைசெய்யும் குடித்தனப்பாங்கறியாது திடும்பிரவேசமாகச் செல்வம்பெற்ற வறிஞர்களுக்கு அதை வைத்துப்படைக்க வழிதெரிகிறதில்லை. குமணனிடத்திற் பெரும்பரிசில் பெற்றுவந்த பெருஞ்சித்திரனார் என்பவர் தமது மனையாட்டியை நோக்கி,

> [illegible]
> [illegible]
> [illegible]
> [illegible] யெதிர்ப்பை நல்கி யோர்க்கு
> மின்னோர்க் [illegible] குழாஅ
> வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
> எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
> பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
> திருந்துவேற் குமண னல்கிய வளனே.

என்றுரைத்தனராம். இளஞ்சேட்சென்னியை நோக்கி ஊன்பொதி பசுங்குடையார்,

> அரிக்கூடு மாக்கிணை யிரிய வொற்றி
> எஞ்சா மரபின் வஞ்சி பாட
> எமக்கென வகுத்த வல்ல மிகப்பல
> மேம்படு சிறப்பி னருங்கல வெறுக்கை
> தாங்காது பொழிதந் தோனே அதுகண்
> டிலம்பா டுழந்தவென் னிரும்பே ரொக்கல்
> விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
> செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
> அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்
> மிடற்றமை மரபின வரைக்கியாக் குநரும்
> கடுந்தே ரிராம னுடன்புணர் சீதையை
> வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை

சிலஞ்சேர் மதாணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்
கறாஅ வருநகை யினிதுபெற் றிகுமே.

எனக்கூறியதுபோல, நிதியைக்கண்ட நித்திய தரித்திரர்கள் செய்கை நகைபிழை நாடகமாகவேமுடியும். ஆகையால், சிறிதுசிறிதாகச் சேர்த்து வழக்கப்பட்டவர்களுக்கே பணத்தின் அருமை தெரியும். அவர்களிடம் திடும்பிரவேசமாகவந்த செல்வமும் சிரழியாது நல்வழிப்படும்.

பிள்ளையார்பிடிக்கப்போய்க் குரங்காக முடிந்ததுபோல, சிலர் பணஞ்சேர்க்கத்தொடங்கிப் பணப்பேய்களாக முடிகின்றனர். அங்கத்தைக் கட்டியுந் தங்கத்தைச் [illegible] கூஷணியம் [illegible] பணமேபெண் [illegible] பணமேமற்றும் [illegible] தாமும் அனுபவியாமல் [illegible] அனுபவிக்கவொட்டாமல் [illegible]லோபிகளாகின்றனர். இவர்களிடத்திற் சேர்ந்தபணம் சமணசந்நியாசி கையில் அகப்பட்ட சீலைப்பேனும் நாய்பெற்ற தெங்கம்பழமுமாகும். அப்பொருள் அவரிடம் இருப்பினென்: இராவிடினென் ?

எனதென தென்றிருக்கு மேதை பொருளை
எனதென தென்றிருப்பன் யானும்—தனதாயின்
தானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனை யது.

இவன்

• * * வைத்த
பொருளு மவனை நகுமே உலகத்
தருளு மவனை நகும்.

பொருளைச் சேர்த்துவைத்தும்

உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்.

இதற்கு 'உய்த்தீட்டுந்தேனீக்கரி'. அவன் இறுதியில் ஐயோ 'உண்ணுமல் தின்னுமல் 'ஊரம்பலமானேனே' என்றேங்கும்படி நேரும். 'உண்ணுச்சொத்து மண்ணுய்ப்போகும்.'

மூவகையாசையில் ஒன்ருன பணவாசையாகிய பேயைப்பரிஷ்காரமாக ஓட்டிவிடவேண்டும். அப்பேய் கோட்பட்டார்க்கு உய்வில்லை. பணமென்ன பாஷாணம். எவருமில்லாத காட்டிற் பணம் பசிக்காகுமா? அதை உரைத்துக்குடித்தால் தாகந்தீருமா? அது போகிற பிராணனை மீட்டுக்கொடுக்குமா?

சோடிபொன் அளிப்பனின்றேகோடிரோர்மாத்திரைக்குள்
ஊடியகிளைக்கோர்வார்த்தைஉரைத்தடைகுவனென்ருலும்
தேடியகாலதூதர்சிமிழ்த்தல்விட்டொழிவரேகொல்?

செலவிடுதலொழியப் பணத்தாலாகும் பயனென்ன? செலவிட்டாலொழிய அதனுலாகும் நன்மையைப்பெறுதலில்லையே. பணத்தைச் சேர்ப்பதெல்லாம் எய்ப்பினில் வைப்பாகும்பொருட்டன்றி வேறில்லை. ஆபத்து ரக்ஷகமாகுமென்று சேர்த்த நிக்ஷேபதனத்தை அதற்காக்காமற் பூசிப்பவர் தங்கள் பணத்துக்குத் தாங்களே அடிமைகளாகி விடுகின்றனர். இவர் செல்வம் எவர்க்கும் நன்றியில் செல்வமே. அது 'நடுவூருள் நச்சுமரம்பழுத்தற்று'.

பொருளைச்சேர்த்துப் பெட்டியில் நிறையவைத்துப் பார்க்கவேண்டும் என்கிற அவாவுடன் அதனைச் சேர்த்தலாகாது. ஏதாவது ஒரு தகுந்த நோக்கத்துடன் மாத்திரமே பொருளைச் சேர்க்கவேண்டும். எதிர்பாராத சில செலவுகள் அப்போதைக்கப்போது நேரிடுவதுண்டு. அவைகளின்பொருட்டு அவரவர்களுடைய வரவிற்கும் நிலைமைக்கும் ஏற்ப இயன்றவளவு சேர்த்துவைக்கவேண்டும். கட்டோடே போனல் கனத்தோடு வரலாமென்கிற விதமாகச் செல்வர்கள் வீட்டிற் பிள்ளைகளுக்குப் பெண்கொள்ளுநிமித்தம் வேண்டிய அளவு சேர்ப்பது ஒன்று. முதுமைப்பருவத்தில் வேண்டிய சௌகரியங்களுக்கு முட்டுப்படாமலிருப்பதற்கு அவசியமான அளவு சேர்ப்பது ஒன்று. மக்களுக்குக் கல்வி கற்பிக்கவும் மணம்புரிவிக்கவும் அவர்களுக்கு வீடு வாயல்முதலிய சௌகரியங்களை ஏற்படுத்தவும் கொள்ளலான தொகையைச்சேர்ப்பது ஒன்று. வர்த்தகமுதலியன செய்து

மக்கள் உய்தற்குதவியாகும் மூலதனத்தைத் தேடிவைப்பது ஒன்று. தான்குடியிருக்கும் ஊரிற் குறையான ஒரு காரியத்தைச்செய்துமுடிப்பது உபகாரமாக இருக்குமென்று தோன்றினால், அதனை நிறைவேற்றுதற்கான முதற்பொருளைச் சேர்ப்பது ஒன்று. ஆயினும் அவ்வக்காலத்தில் தனக்கும் தன்குடும்பத்துக்கும் அத்தியாவசியமான சௌகரியங்களைத்தேடிக்கொள்ளாமல் உலோபஞ்செய்து இதையெல்லாம் நிறைவேற்றவேண்டுமென்றெண்ணிப் பணம்சேர்ப்பது குற்றம். பிள்ளைகளுக்குக் கல்வி நல்லொழுக்கம் ஜீவிக்குமுபாயம் முதலியவைகளைக் கற்பிக்காமற் செல்வத்தைமாத்திரம் சேர்த்துவைப்பது சீக்கிரத்திற் சீரழிந்துபோகும் நெறியை அவர்களுக்குக் கற்பித்தலேயாம். நாறல்வாயன்தேடவும் ஊத்தைவாயன் உண்ணவுமா? இங்ஙனம் நாறல்வாயன் தேடிவைத்தால் நாளைக்கு எவனாவது கற்பூரவாயன் கைக்கொள்வான்.

(இன்னும் வரும்.)

தி. செல்வக்கேசவராயமுதலியார்.

பிராசீனதர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்.

முதல் உபந்நியாசம்.

(செந்தமிழ், உ-ந்தொகுதி, ௩௬௯-ம் பக்கத்தொடர்ச்சி.)

இன்று நாம்படிக்கப்புகும் விஷயம் இலகுவானது. கேட்கிறவர்களுக்கு அதிக விபரீதமான ஆக்ஷேபணைகளில்லை. அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருகிறவிஷயத்தில் சிரமசாத்தியமானதொன்று இதிலிருக்கிறது. நான்கு ஆசிரம தர்மங்களினுயர்வைப்பற்றிச்சொல்லுகிறது பொதுவாய்சிரமமானதன்று.

நான்கு ஆசிரமங்களென்பது உயிர்வாழ்க்கையை ஜனனம்முதல் மரணமந்தம் நேர்மையாய் நடைபெறும்படி செய்வதுதான்.

இவைளில் முதலிரண்டான பிர்ஹ்மசரியமும் கிரகஸ்தமும் ஜீவன் பிரவிருத்தி மார்க்கம் பற்றிக்கொள்வன். இது உலகவிகாசம். ஒவ்வொருவனும் தனக்குள்ளே யெம்மாத்திரமாவது இதுபற்றியொழுகுவான். இந்த இரண்டு ஆசிரமங்களும் ஒவ்வொருவனுங் கைக்கொண்டு நடப்பான். மற்றைய இரண்டான வானப்பிரஸ்தம் சந்நியாசம் ஜீவனின் நிவிர்த்திமார்க்கங்களாம். உலகத்தைவிட்டு விலகுதற்குற்ற முறைகளாம். உயிர்வாழ்வின் நேர்மையை அறியவேண்டின் இந்த வேற்றுமை அறியத்தக்கது. ஒவ்வொரு மனிதனும் ஒழுகவேண்டிய நெறியை முன்னோர்கள் இவ்விதம் நான்கு ஆசிரமமாக அழகாய் வகுத்திருக்கின்றார்கள். ஒருவன் அதை அனுஷ்டித்து நடைபெறுவானாகிற் பிரவிர்த்தி தர்மங்கள் இன்னவென்று உணர்வான். முதன்மையில் பிரமசரியநிலைமை சரியானபடிபற்றிச் சீராய்ப்பழகத் தக்கது. பின்னர் கிரகஸ்தநிலைமையில் உலகவிஷயங்களிற் சுறுசுறுப்பாய்ப் பலவாறு தொழில்புரிதல். இதின்பின்னர்ச் சிறுகச்சி[illegible] உலகப்பற்றினின்று ஒழிதல், உள்நோக்குதல், ஏகாந்த[illegible] உபாசனை, தியானம், உலகவிஷயங்களிலிருக்கின்றவர்களுக்குப் புத்தி மதி கற்பித்தல் முதலியன—வானப்பிரஸ்த நிலையின் தர்மங்களாம்.

இதன்பின்னர்ச் சிறுபான்மையாவது அனுஷ்டிக்கக்கூடியதான முற்றும் துறந்தநிலை. இந்தமுறையை அனுஷ்டிக்கிறவன் இதைவிடச்சிறந்ததும் அறிவுக்கு ஒத்ததுமான வேறுமுறை ஜனனமுதல் மரணமீறாக உண்டென்று கருதான். இந்தமுறை ஒருதேசம்பற்றி மாத்திரம் ஏற்பட்ட தர்மமன்று. இது எல்லா ஜாதியாருக்கும் எக்காலத்தும் பொருந்தும். வாழ்நாளில் ஒருபாதி சுறுசுறுப்புள்ள உலகவியாபாரம் பற்றியது. மற்றொருபாதி உபசாந்தியும் ஒழிவும்பற்றியது. கீழ்நாட்டிலும் மேல்நாட்டிலும், நேர்மை அமைந்த இந்த உயர்வாழ்க்கை நெறி திரும்பவும் அனுஷ்டிக்கத்தக்கது. இப்படியாமாகில் தங்களுக்குரிய காலத்திற்குமுன்னரே கிரகஸ்தர்களாகும்பாலர்கள் இரார். ஒழிவு அமையாமல் இயமன் உயிர்நீக்கும்வரை மனத்திலும் கவுரவத்திலும் பற்றுள்ளவர்களான விருத்தர்களும் இனி இரார்.

மேற்கண்ட நான்கு ஆசிரமங்களை ஒன்றன்பின்ஒன்றாய் எடுத்துப்பேசுவோம். முதன்மையில் பிர்ஹ்மசரியத்தின் பிராசீனமுறை

என்ன? அதை உங்களுடைய சாஸ்திரங்களில் விரிவாயறிந்துகொள்ளுங்கள். அதை இங்குநான் சுருக்கிச் சொல்லுவேன். ஒவ்வொரு உபயனும் அவனுடைய எல்லாசுபாவங்களும் நன்றாய்ப்பயிற்சியடையும் வண்ணம் ஒரு குருவின் சுவாதீனத்தில் ஒப்புவிக்கப்படுவான். மனிதரியல்புக்குரிய நான்கு முக்கியமான சுபாவங்கள், விகாசிக்குமாறு அவர்களுடைய படிப்பு நடைபெறவேண்டும்.

(1) பாலர்கள் வேதஅத்தியயனம் செய்துவந்தார்கள். சமயநெறிகளைக் கற்றுணர்ந்தார்கள். சமய சாஸ்திரங்களைப் படித்தார்கள். தினந்தோறும் செய்யவேண்டிய கர்மானுஷ்டானங்களிற் பயின்றார்கள். இவ்விதமாக ஸ்ரீ இராமசந்திரரும் வேதசாஸ்திரங்களைக் கற்றும் காலைமாலை சந்தியாவந்தனம் செய்தும் வந்தார். ஞானம் உதயமாகுதற்குரிய சாஸ்திரப்படிப்பும் கர்மானுஷ்டானமுஞ் செய்து வந்தார். அவருடைய குருவினிடத்தில் எவ்வண்ணம் சாந்தத்திற்கு காரணமான ஆத்மதத்வ சாஸ்திரத்தை உணர்ந்தாரென்றும் கர்மசம்ஸ்காரங்களில் எப்படிப்பயின்று அபிவிர்த்தியடைந்தாரென்றும் நீங்களே தெளிந்துகொள்ளலாம். இப்படிப்பு அவருக்கு வேண்டுவதில்லை ஆயினும் பாலர்கள் அனுஷ்டானத்திற்குத்தாம் திருஷ்டாந்தமாக இருக்கும்படி ஒழுகலாயினர். இது பிராசீனப்படிப்பில் முதன்மையில் கவனிக்கவேண்டிய விஷயம்.

(2) பின்பு பாலர்கள் நீதிமுறைகற்று அதன்படி பயின்றார்கள். ஆத்மார்த்த முறையிலும் நீதிமுறையிலும் பயின்றார்கள். வணக்கம் மரியாதை சத்தியம் தைரியம் வினயம் இம்முறைகளைக்கற்றார்கள். மாதா பிதா குரு இவர்களை வணங்கி பன்புபாராட்டவும் தன்னைப்பேணாது ஜீவகாருண்ணியத்தைக் கைக்கொள்ளவும் அவர்கள் அறிவுறுத்தப்பெற்றார்கள். அவன் பிறர் க்ஷேமத்தைக்கருதுவான் என்றது பாலனுடைய நீதிஅப்பியாசமுறையின் மகுடமாகப் பாவிக்கப்பட்டது.

(3) புலனறிவு அபிவிர்த்திசெய்யப்பட்டது. பலசாஸ்திரங்களைப் பாலர்கள் கற்றார்கள். அவைகளின் தத்துவங்களிலும் அவைகளின் அனுஷ்டானக்கிரமங்களிலும் பயின்றார்கள். மனிதப்பிறப்பின் மூன்றாவதான புலனறிவும் நீதி ஆத்மதத்வஞானம்போன்று அபிவிர்த்தியானது.

(4) பாலர்கள் சரீரப்பயிற்சி செய்தார்கள். விளையாட்டுக்களையும் சரீரப்பயிற்சிக்குரிய கசரத்துக்களும் குதிரை முதலியன ஏறி நடத்தவும் சாரத்தியஞ் செய்யவும் தங்கள் சரீரங்களைப் பேணவும் மனுஷவுதவி நாடும் மிருகங்களைப் போஷிக்கவும் கற்றுப்பயின்றார்கள். இவ்விதமாகப் படிப்பு எல்லாபாவங்களும் விகாசிக்கும்படியாய் அமைந்திருந்தது. ஆகப்பாலர்கள் உலகவியாபாரத்திற் பிரவேசித்தால் ராஜாங்கத்திற்குத் தகுதியானவர்களாகி தெய்வபக்தி நீதிமுறை கல்வி சரீரபலம் இவைகள் நிறைந்தவர்களாக ஆகிவந்தார்கள். இந்த நான்கு முறைகள்பற்றியே பூர்விகத்தில் இந்தியாவிற் கல்விப் பயிற்சி நடைபெற்றுவந்தது.

இக்காலத்திய ஸ்திதியைப் பார்ப்போம். ஒருபாவம் மாத்திரம் விருத்தியடைகிறது. அதாவது புலனறிவை அபிவிர்த்திசெய்யக் கூடிய படிப்புக்கற்பிக்கப்படுகிறது; ஏனையமூன்றும் கவனிக்கப்படாமல் விடப்படுகின்றன. தத்துவஞானம் நீதிமுறை சரீரப்பயிற்சி இவைகளை முற்றும் விட்டுவிட்டார்கள். புலனறிவை விருத்திசெய்கிறதும் சரியானபடியாகவில்லை. இம்மாதிரியாய படிப்பினால் உலககாரியத்திற்குத்தகுந்த மனிதன் எப்படி ஏற்படுவான்? ஒரு மனிதனின் நாலிலொருபாகம் மாத்திரம் கல்வியினால் விருத்தியடையப் பெறுகிறது. நீதிமுறையை அசட்டைபண்ணிவிட்டார்கள். தத்வஞானத்தை முற்றுங் கைவிட்டார்கள். சரீரமோ உயர்ச்சியின்றி துர்ப்பலமாகவும் அதிகவேலைகொண்டு தளர்ச்சியடைந்திருக்கிறது. இவ்வண்ணமாகக் கால்பாகம்மட்டும் அதுவும்பூர்ணமாகவில்லாமல் அறைகுறையான விருத்தியம்சம் பெற்றதாயிருக்கின்ற ஜாதியாருக்கு என்னவித யோக்கியதை இருக்கக்கூடுமென்று நினைக்கிறீர்கள்? இம்மாதிரியான கல்வியின்பயன் என்னை? புத்திநுட்பமுள்ள மனிதர்கள் உண்டாகலாம். ஆனால் அவர்கள் சுயநயவிருப்பமுள்ளவர்களாயும் பிறர் க்ஷேமத்தைக் கருதாதவர்களாயும், தேசத்தின் க்ஷேமத்தைக் கொஞ்சமேனும்நினைக்காதவர்களாயும், தாமுண்டு தம்குடும்பமுண்டு: தாம் சௌக்கியமாயனுபவித்தாற்போதும்: பிறர்கஷ்டம் துக்கம் முதலியன சற்றேனும் கவனியாமல் ஈரமில்லாத நெஞ்சினராயுமிருப்பார்கள். புத்திநுட்பமாத்திரம் பெற்றுச் சீலம் மரியாதை பொது நன்மை பாராட்டுதல் உள்ளபடிவாய்மைபேசுதல் வார்த்தைநேர்மை

ஒழுக்கம்நேர்மை இவைகளின்றி ஒழுகுவார்கள். இந்த ஸ்திதியைத் தான் பார்க்கிறோம். இது, சமயமுறை, நீதிமுறை, இவைகளைக் கற்பிக்காமலிருந்ததின் தோஷப் பயனும். தம் லாபத்தைக்கருதாமல் பிறர் க்ஷேமத்திலேயே கண்ணுகவுள்ளவர்கள் எத்தனைபெயர்கள் இக்காலத்தில் இருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? பிறர் மேம்பாட்டை அடையாமல் தாம் மேன்மையை யடையவொண்ணுது: என்றுணர்கின்றவர்கள் எத்தனைபுண்டென்று நினைக்கிறீர்கள்? எங்கும் வியாபகமாய் எங்கும் நிறைந்ததாயுள்ள பிராணன் ஒன்றேஎன்றும் அதினின்று தம்மை வேறுபடுத்திச் சொந்தலாபத்தைக் கருதிப் பிறர்க்ஷேமத்தில் அலக்ஷியமுள்ளவர்களாய் நடைபெறுவது தமக்கே பிராணஹானி என்றும் பிறருக்கு ஈசுவரப்பிரசாதம் வாராமல் தடுப்போமாகில் அக்கதியே தமக்குமென்றும் தாம்வேறு பிறர்வேறு என்ற சுவரையேற்படுத்தினுல் தமக்கு ஈசுவரன்அருள்இன்றி முடிகிறதென்றும் உண்மைஉணர்கிறவர்கள் எத்தனைபெயர்கள் இக்காலத்திலிருக்கின்றார்கள் என்று உங்களுக்குத் தோன்றுகிறது?

இனி நாம் செய்யவேண்டியதென்னவெனில் சங்கல்பமாத்திரம் போதாது; இன்றுசெய்யவேண்டிய வேலையை இனிச்செய்யலாம் என்று இராமல் இன்றேசெய்துமுடிக்கவேண்டும். பண்டைக்காலத்து முறையை இக்காலத்திலும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டிய முயற்சி உங்களுடைய பிரயோஜனுர்த்தமாகச் செய்யப்பட்டு வருகின்றது. நான்பேசுகின்ற அறைஅமையப்பெற்ற இந்தக்கலாசாலை பிராசீனக் கல்விமுறையைத் திரும்ப நிலைநாட்டுவதற்காக ஏற்பட்டுள்ளது. அந்த நான்குமடங்கான முறையாற்றான் இந்தியாவுக்கு க்ஷேமகாலமுண்டாகும். ஆனுல் முன்முறைகள் எல்லாவற்றையும் திரும்ப நடைபெறும்வண்ணம் செய்வதென்று எங்கள் கருத்தன்று. அப்படிச்செய்வதில் ஆதிமுறையின்கருத்துப் பயன்படும்படி தற்காலகதிக்குக்கூறிப்படி அதை அமைக்கப்பெறலாகும். ஆங்கிலநாட்டிலும் அதன்பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் மேற்கண்ட நான்குமடங்கான கல்விப்பயிற்சி நாட்டப்பெற்றுவருகின்றதைக் கேட்க நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்போலும். ஆங்கில நாட்டில் மந்தப்பாடசாலைக்குப் போனுலும் தொடக்கத்தில் கடவுள்

வணக்கமும் சமயகிரந்தங்களின்படனமும் நடக்கும். ஒவ்வொருபால னும் ஈசுவர வுபாசனை செய்புமுறை கற்றுக்கொள்ளுகிறான். நீதி முறைகளில் தெளிவாய்ப் போதனை பெறுகிறான். சமயம் நீதி இவ் விரண்டுடன் சரீரப்பயிற்சியும் பழகுகிறார்கள். இது கட்டாயமாய்ப் பழகவேண்டியது. ஒவ்வொரு பையனும் தன்னவயவங்கள் பெலப் படவும் சரீரம் உறுதிப்படவும் விளையாடவேண்டும். கஸரத்துச்செய் யவேண்டும். ஹாரோ, ஈடன், ரக்பி, வின்செஸ்டர் முதலான விடங் களிலுள்ள பள்ளிக்கூடங்களைப் போய்ப்பார்ப்பீர்களாகில் நான் குறிப்பிட்டதான கல்விப்பயிற்சி கிறிஸ்துமார்க்க நெறியில் நடைபெறு வதைக் காணலாகும். ஆதிமுறையின் உயர்வான பாவம் ஆசரிக்கப் படுகின்றது. அந்தக்கல்விமுறை நேர்மையுள்ளதாக விருக்கிறது. இதனால் சகலவிதமாகவும் பயின்ற தேசாபிமானமுள்ள மனிதர்கள் உண்டாவதற்கு ஆஸ்பதமாகவிருக்கின்றது. மதாபிமானமும் தே சாபிமானமுமுண்டாகிவருகின்றன. ஹாரோ பாடசாலையைச் சார் ந்த உபாசனைமண்டபத்திற்குட்போய்ப் பார்ப்பீர்களாகில் அதன் சுவ ர்களில் தேசத்திற்கனுகூலமானகிருத்தியங்கள்செய்து மேன்மைபெற் று ஆதியில் அப்பள்ளிக்கூடத்திற்கல்விபயின்றோர்பெயர்கள்பதிந்த தா ம்பிரசாசனங்கள்அமைக்கப்பட்டிருக்கும். அம்மண்டபத்தில் அப்பெ யர்வரைந்த தாம்பிரசாசனங்களைப், பையன்கள் ஈசுவரவுபாசனைசெய் கையிற் பார்க்கும்போது, தாம் இப்போது இருக்குமிடத்தில் முன் னிருந்தவர்களான ஹாரோப்பையன்கள் மனிதர்கள் ஆனமேல்தேச த்திற்கும் இராஜாவுக்குமாக ஆபத்துக்காலத்தில் தங்களுடைய உயி ரையே தியாகஞ்செய்து தேசத்தின்மேம்பாட்டை விருத்திசெய்தவ ர்கள் இவர்களன்றோவென்று தங்கள் மனதிற்பதிய, இனி அம்மா திரியே நாமும் நடக்கமுயலுவோம் என்னும்எண்ணங்கள் உண்டாகம லிருக்கக்கூடுமா? அம்மண்டபத்தில் ஈசுவர வுபாசனை செய்கிற ஒவ் வொரு பையனுடைய மனசிலும் கௌரவமான ஒழுக்கபாவமும் தே சாபிமான பாவமும் தானேயுண்டாகும். இவ்வுயர்வான பாவங்கள் இம்மாதிரியாகப் பையன்கள் மனசிற்பதிய, தேசாபிமானிகளாகவும் தேசத்தின் க்ஷேமத்தைக் கருதினவர்களாகவும் தம் தேசத்திற்கு கௌரவம் பயக்கக்கூடிய சிலர்களாகவும் ஆகிறார்கள்.

இம்முறையை இத்தேசத்திலும் நாட்டவேண்டும்:— இதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும்விதம் எப்படி? நாங்கள், 40, 50, பெயர்களா பிறர் உதவியில்லாமல் இப்பெருங்காரியத்தைச் செய்யவல்லவர்? அது சரியல்ல. இது உங்களுடைய விஷயமுமல்லவா? எங்களுடையது மாத்திரமா? உங்களுடைய பிள்ளைகள்தாம் இனி இந்தியாவின் மனிதர்கள் ஆவார்கள். அந்த யோக்யதைக்குத்தக்க கல்வியைக் கற்பித்துப் பிராசீனதர்மநெறிகளைப் புகட்டவேண்டிய முயற்சி செய்கின்றீர்களா? நான் வசனிக்கிறதை சிலாகித்து ஆரவாரஞ் செய்தால் மாத்திரம் போதாது. இந்தவிதமான படிப்பினை நடைபெறுமாறு வேலை செய்வீர்களா? உங்களுடைய சொந்தக் காரியம்போல், உங்களுடைய காலம் பொருள் முதலியனவற்றை இந்த விஷயத்திற்கு அர்ப்பணஞ் செய்வீர்களா? அப்படிச்செய்யாவிடிற் பிறர்செய்கிற வேலையை வீணாகமெச்சுவதில்மாத்திரம் என்ன? அப்படிச்செய்ய நீங்கள் அநர்கர்களாவீர்கள்.

(இன்னும் வரும்.)

புத்தகக் குறிப்பு.

வேனிஸ்வர்த்தகன்.— ஆங்கில மகாகவியாகிய வில்லியம் ஷேக்ஸ்பியரால் இயற்றப்பட்ட அற்புதநாடகங்களுட் சிறந்துவிளங்கும் இதனை, உரையும்பாட்டுமாக, முன்னூலிலுள்ளவாறே மொழிபெயர்த்தவர்.—நம் சங்கத்து வித்துவான்களிலொருவரும், சைதாபேட்டை சப்மாஜிஸ்ட்ரேடுமாகிய ஸ்ரீமத்—எஸ். வீ. கள்ளபிரான்பிள்ளையவர்கள், பி. ஏ. ஆவர். தமிழராயினோர், மேற்றிசைக்கவிகளின் உயர்ந்த மனோபாவங்களை நன்குணர்ந்து மகிழ்தற்கு வாய்ப்புடைய கருவிகளுள் இம்மொழிபெயர்ப்புநூலும் ஒன்றென்னத்தட்டில்லை. பிள்ளையவர்கள், கவியின் ஆழ்ந்த கருத்துக்களை ஏற்ற சொற்கொண்டு யாவருக்கும் இனிது விளங்கமொழிபெயர்த்திருத்தல் சாலவியத்தக்கதேயாம். இன்னும், பொருள் செவ்விதின் விளங்கவும், விசேடக் கருத்துக்கள் புலப்படவும், பிள்ளைவர்கள் இறுதியில் எழுதிச் சேர்த்துள்ள அநுபந்தம் பெரிதும் பயன்படத்தக்கது. இவ்வாறே, பின்னும்பல அரிய நூல்களையும் மொழிபெயர்த்துத் தமிழ்வளர்ச்சிபுரிதற்கண் பிள்ளையவர்களை ஊக்கியுதவுமாறு திருவருளைச் சிந்திக்கின்றேம்.—பத்திராசிரியர்.

மதங்கியார்-கலித்தாழிசை.

குலைகுலுங்கு வாழையின் கோழிலைப் பசுங்கொடைக்
குளிர்நிழற்கண் ணிரவிதேர்க் குரகதங்க ளருவிபா
யலைகுலுங்கு நறவமுண் டயர்வுயிர்த்த காவுசூ
ழுங்கணெந்தை செந்தில்பாடி யாடுமா மதங்கியார்
முலைகுலுங்கு மாகின்மாரன் முடிகுலுங்கு மமுதவாய்
மொழிகுலுங்கு மாகிலாவி பழிகுலுங்கு மல்குலங்
கலைகுலுங்கு மாகினுடி நிலைகுலுங்கு மாமுகக்
கஞ்சமுங் குலுங்குமாகி னெஞ்சமுங் குலுங்குமே. (உகூ)

இரங்கல். இன்னிசைவெண்பா.

குலுங்கு முலைமேற் குளிர்பசலை கண்ணீ
ரலங்கு மருநாணு மாய்வளையு நீங்கு
மிலங்கிலைவே லோனை யெறிகடற்செந் தூர்வாய்
வலங்கொளமுன் போமடவார் மாட்டு. (௩௰)

சித்து. ஆசிரியவிருத்தம்.

மாட்டே மல்லேஞ் சித்தவித்தை மகனே செந்திற் குகன்பாணுங்
கேட்டே யறிந்த தனக்குழைப்பக் கேளா யிதுபொ யல்லமெய்யே
வேட்டேம் பசியா லுண்ணவின்று விளங்குங் கஞ்சந் தனிலேபொன்
காட்டே மாகி னீபடைத்த கறியுஞ் சோறும் வேண்டாவே. (௩௧)

இரங்கல். கலித்துறை.

வேண்டின ராணு லூனகு வேலர் வியன்செந்தி
லாண்டகை யானுர் மானனை யாளை யகல்வாரோ
கூண்டடல் வில்லிட் டம்பு சொரிந்தே கொலைவேடம்
பூண்டு நெருங்கிக் கொண்டன் முழங்கிப் பொழிநாளே. (௩௨)

பனிக்காலம்-வஞ்சித்தாழிசை.

நாள்வனச முகங்கூம்ப, நீள்குளிர்செய் பனிக்காலம்,
வேண்மருவு செந்திலினெங், கேள்வர்தமை நினையாவே.
மகன்றிலொடும் பெடைசேவல், புகன்றணையும் பனிக்காலங்,
குகன்றனது செந்திலினெம், மகன்றவரை நினையாவே.
தொலைபவர்மெய் குனியமதன், சிலைகுனியும் பனிக்கால,
மலைமகள்சேய் செந்திலினெந், தலைவர்தமை நினையாவே. (௩௩)

வெண்டாழிசை.

நினைவு மொன்றே யுரையு மொன்றே
பன்னின் செந்தில் பணியர் தொன்றே
வினையில் வீழ்ந்தவர் பால். (௩௪)

கலிப்பா.

பால்வெள்ளை நீற்றானும் பல்லுயிரும் படைத்தானுஞ்
சூல்வெள்ளை மணிப்பணிலஞ் சுமந்ததிருக் கரத்தானுஞ்
சால்பெள்ள மில்லாத தனிநெடுவேற் படையானுஞ்
சேல்வெள்ளம் பரந்துலவுந் திருச்செந்தி லிடத்தானே. (௩௫)

கலித்துறை.

இடத்தான மாமெற்றுழ்த் தெண்ணக்கண் ணூர்நின் னிணையடிக்கும்
பிடத்தான மாறும் பிரியா திருக்கப் பெருங்கருணைக்
கடற்று னெனக்கருள் வாய்செந்தில் வாய்த்தென் கலைமுழுதுங்
குடத்தான மாதவற் கோதிய ஞானக் குருபரனே. (௩௬)

மடக்கீதுஆசிரியவிருத்தம்.

பரவுவாரிவளையீரே பரவுவாரிவளையீரே
படருநாகவரும்பீரே படருநாகவரும்பீரோ
யரவப்புணரிமகரமே யரவப்புணரிமகரமே
யவலங்கழியநந்தனமே யவலங்கழியநந்தனமே
பிரமாத்தண்டலைப்புடைத்தான் பிரமாத்தண்டலைப்புடைத்தான்
பிறவானுழைசெந்தினகரனே, பிறவானுழைசெந்தினகரனே
யுரவராலேநாவாயே, யுரவராலேநாவாயே
யோதக்கடனீர்க்குருகீரே யோதக்கடனீர்க்குருகீரே. (௩௭)

தலைவியைவியத்தல். கலிப்பா.

ஈரமவை யோரிரண்டுங் கிளவிதனக் கிணையாகு
மாரமவை யோரிரண்டு மலர்முலைமே லணியாமாற்
றூரமவை யோரிரண்டுந் தாமுடையான் செந்திலன்ன
கூரமவை யோரிரண்டுங் கொண்டமதர் விழியார்க்கே. (௩௮)

ஊசல்.

ஆர்க்குமது கரமர்ட மாலை யாட வணிகலையு மேகலையு மிடையு மாட,வார்க்குவிமென் முலையுமணி வடமு மாட மதிமுகமு நுதல்வெயர்வு நகையு மாடத், தார்க்கமல வடிச்சிலம்பு புலம்பி யாடத் தாழ்குழையு நீள்விழியுந் தழுவி யாடக், கூர்க்கதிர்வேற் குகன்செந்தில் பாடி யாடிக் கோதனகத் திருவனையீ ராடி ரூசல். (௩௯)

ஆசிரியவிருத்தம்.

ஊச லாட்டெனப் பேரய்வரு பிறப்பெனு முடற்பொறைச் சிறுவீட்டிற்
றேசி லாதபுல் லறிவுடை வாழ்க்கையின் றிறந்திறந் தொழிவேனோ
காசி லாநெடுங் கடலலை வாய்த்தடங் கரைவரி வளையீன்ற
மாசி லாமணி யேய்செந்தின் மேவிய வானவர் பெருமானே. (சும)

களி. தாழிசை.

பெருமை மானிலம் வலம தாய்வரு பீலி மாமயி லூர்தியார்
பிள்ளை யார்வளர் செந்தி லம்பதி யுள்ள மேதகு களியரேம்
பரைம ஞேன்மனி புவனி நாரணி பால லோசனி சூலிசாம்
பவிசு காசனி கௌரி பூசனை பண்ணு முண்மகிழ் வெளியதோ
மருவு கேழலு மீனு மாமையு மாய னுக்கு விருப்பமர்
மானி னைக்கை விடானு ருத்திரன் மதியு நாடொறு முயலுனு
மரிய வேள்வியி லந்த ணாளர்கள் சுராபி கண்டிடின் முந்துவா
ரைய னேசுர ராயி னார்சுரை யருந்த வானவ ரியாருமே.

வேற்றெலிவேண்டுறை.

யாருமிணை யடிவணங்கு மெம்பெருமான் றும்பிமுகற் கிளையோன் செந்திற்
சூருடைய சுடர்வடிவேற் றுணர்க்கடம்பந் தொடைக்குமரற் றொழுகி லாதார்
விரிநீர் புடைசூழ் வியன்மே தினிமேற்
பரிவா லுறுநோய் பசியா லொசியா
வரைசீ ரயரா வருநாள் கழியா
வுரியா ரிகழா வுணர்வோ டயிர்போ
யெரிவாய் நிரையத் தினுமூழ் குவரே. (சஉ)

கலித்துறை.

மூழ்கா நிலைப்புது நீர்வேட்டு மீனமுன் னீந்துபழந்
தாழ்கான யாறு துறந்திறந் தாங்குநின் றன்னையன்றி
வீழ்கா தலிற்றெய்வம் வேறெண்ணி யான்மெலி யாதுசெந்தில்
யாழ்நா முறுமொழி வள்ளிபங் காவுள் ளிரங்குவையே. (சங)

இரங்கல். இதுவுமது.

இரங்கி மெய்கரிந் திருஞ்சிறை யடைந்திட ரிடைமூழ்கி
வருங்க ணீரொடு நாடொறு மறுகிய வரிவண்டீர்
கருங்கண் வார்முலைக் கௌரிசேய் செந்திலிற் கார்கால
மொருங்கு நும்மையு மொழிந்தன் ரோவெம்மை யொழிந்தாரோ. ()

சிந்தியல் வெண்பா.

ஒழிந்தன துன்ப முவந்தன வுள்ள
மிழிந்தன நம்வினை யெல்லாஞ்—செழும்புனற்
சேந்தன் றிருச்செந்தில் சேர்ந்து. (௪௫)

இரங்கல். ஆசிரியவிருத்தம்.

சேர்ந்த போது குளிர்ந்து மன்பினர் தீர்ந்த போது கனன்றும்வா
னூர்ந்து கந்த னுகந்த செந்தி லொதுங்கு வெண்பணி லங்கள்போ
லீர்ந்து பொங்கிரு ணுங்கி யெங்கணு மெங்க ளங்க நடுங்குமா
ரூர்ந்த வெம்பனி சிந்தி மூந்துற வந்தி வந்தெழு மிந்துவே. (௪௬)

இதுவுமது.

இந்துவு மிரவியு நின்றென வுலவிய விம்பரி னெழுவகையா
வந்துறு பிறவியி னொந்துழ லுடனொரு மங்குத லொழிவேனோ
செந்திலு மெனதிரு கண்களு மடியவர் சிந்தையு மருமறைநூ
லர்தமு மகிழ்வொடு சந்தத முலவிய வம்பிகை திருமகனே. (௪௭)

கலித்துறை.

மகவா னரசு மழிவற்ற யாக்கையு மன்பதையுஞ்
செகவாழ்வு மற்றவை யாவும்பொய் யேதமிழ்ச் செந்தில்புகுந்
தகவா ரிசமலர்ந் தங்கைகள் கூப்பிநின் றூறுதிரு
முகவா னவனைப் பணிவதொன் றேமெய் முயல்பவர்க்கே. (௪௮)

கலித்தாழிசை.

முயல்பவர் முயற்சியின் முன்னம் யாவையு
நயனுணர் செந்திலா னல்குமே
நயனுணர் செந்திலா னல்கா னயி
னயலொரு வானவர்க ளாக்குதற்கு வல்லவரு மல்ல ரன்றே. (௪௯)

துறட்டாழிசை.

அன்றல வின்று மனுரெய் துவர்வேண்
மன்றலஞ் செந்தூர் வாழ்த்தா தாரோ. (௫௦)

இரங்கல். அடிமறிமண்டிலவாசிரியப்பா.

தாரார் கொல்லோ தங்குளிர் தாரோ
வாரா ராயின் மானனை யீரோ
பாரா ராலோ பனிபடு நாளே
சீரார் செவ்வேள் செந்தூ ரவரோ. (௫௧)

பாங்கிகூற்று. வஞ்சிவிருத்தம்.

அவரு மங்குள ரன்பினு
லிவரு நெஞ்ச மிரங்கினர்
சிவன்ம கன்பயில் செந்தில்வா
யெவரு மென்செய்வ ரின்பமே. (ருஉ)

ஆசிரியவண்ண விருத்தம்.

இன்பமுந் துன்பமுஞ் சங்கடங் கொண்டயர்ந் தங்குமிங் குஞ்சுழன் றிடுமாயத், துன்பவெங் கும்பியங் கந்தவிர்ந் துன்பெருந் தொண்டனென் றுய்ந்துளங் கழிவேனோ, புன்குருந் துந்திநன் சந்தனஞ் சிந்திமுன் பொங்கி வெண் சங்கெறிந் தலைவீசித், தண்பொருந் தம்பசும் பொன்சொரிந் தெங்கணுந் தந்ததென் செந்திலெம் பெருமானே. (ருங)

கார்கண்டுபாகனோடுகழறல். இதுவுமது.

பெருமான் மதிபொதி சடையா னுடனுறை பிணைமா னுதவிய செந்தூரன், கருமா மயிலென வுறைவாய் சிதறிய கணமா மழைமுகில் கண்டாலே, யொருமான் விழிவழி புனலோ வுடல்வழி யுயிரோ விடுகுவ ளங்தோயான், வருமா றறிகில னினிநீ விரைவுடன் வலவா கடவுதி வன்றேரோ. (ருச)

சிந்தடிவஞ்சிப்பா.

தேராதவன் வழிமறுகிய திரள்சோலை
வாரார்மல ரிடையொழுகிய மதுமாரி
நீரார்வயற் செந்தூரனை நினையாதார், யாரேனு
மெழுவகைப் பிறப்பினு மியங்கி
யழிகுவர் கறங்கென வலைகனி யுழந்தே. (ருரு)

வண்டு. கலித்துறை.

உழவாத மம்மரு முன்னுத நெஞ்சு முருப்பசப்பு
மிழவாத நாணுமெங் குண்டுவண் டூரியல் சேர்குறிஞ்சிக்
கிழவா னவனை யிளையோ னெனனுந்தன்மை கேட்கிலராய்த்
தொழவா தரத்தொடு செந்தில்சென் றேகண்ட தோகையர்க்கே. ()

வெண்பா.

தோகைபுற மாக்குந் துணைத்தா ளருவினையே
னோகை யகமாக்க வொண்ணுதோ—பூகமலி
தேங்கடம்பாய் செந்திற் றிருநகரில் வீற்றிருக்கும்
பூங்கடம்பா நீதான் புகல். (ருஎ)

இடைச்சியார். கலிமுரி.

புகலும் வாய்மொழிப் பால்விலை கூறுவார் போனி லாநகை பூத்த செவ் வாய்மலர்ந், தகலும் வாண்மறு கெல்லா மறுகச்சென் ருவின் பால் விலை யாக்கு மிடைச்சியார், தகலு மாகுங் குடமுலைப் பால்விலை தனைய லர்ச்சிவன் சந்ததி செந்தில்வா, யிகலும் வாளெடுங் கண்ணொடு நெஞ்சையு மிவர்விற் ருலினி யார்விலை கொள்வரோ. (ருஅ)

தலைவிகூற்று-ஆசிரியவிருத்தம்.

கொள்வா ரன்றே செவிப்புலத்தெங் குலத்தார் வலித்த கொடுங் கடிப்பின், வள்வார் முரசங் கறங்கோதை மணம்வேட் டயரு மனைமுன்றிற், கள்வார் கடப்பந் தொடைச்செந்திற் கந்தன் வேல்போற் காய்கணைபாய், புள்வார் பொருவெங் களத்தோதை கேட்டே யகன்ற போரோரே. (ருகூ)

ஆசிரியவிருத்தம்.

எறிரும் பசலைக் கலைமான் மதச்சே றெழுதிய வழிமதக் கலுழி [ப்பூ
யிரைத்தெறி காடத் திரடிணி புழைக்கை யிகற்கரி மருப்புறழ் முலை
ஞறிருங் கூந்த லேந்திழை யவர்பா னலந்தனக் கலந்துழன் றவ்மே
நாள்கழித் தவலப் படுகுழி கிடக்கு நான்கதி காணுமா றுளதோ
ஆறெழுத் துளங்கொண் டைம்புல னடக்கி யவாவறுத் தொருநெறி துருவி
யகங்குழைந் துருகிப் பருகுமன் பினருக் காலாந்த ஞானவா ரிதியே
பாறெழுந் திரைக்குந் திரைப்பசுங் குருதிப் பருதியஞ் சுடரிலை நெடுவேற்
பண்ணவா விரைப்பூந் தண்ணறு வயல்பாய் பைந்தமிழ்ச் செந்தில்வா
[னவனே. (சு0)

இதுவுமது.

வானமும் புவியு மாய மாறிலம் பூத மோதி
லூனுடம் பாத லுயே னூழ்வினைப் பகுதி யன்றே
கூனிளம் பிறைதோய் நெற்றிக் கொடிமணி மதில்சூழ் செந்திற்
றேனினந் தொகுதார் மல்கு செஞ்சுடர் வேலி னுனே. (சுக)

கார்கண்டுபாகனேடுகழறல். இணைக்குறளாசிரியப்பா.

வேலிற் கிளரொளி மின்னொடுந் துவன்றிச், சூலிற் கடலென்ன முழங்கி மாலிற் கருகிக், காலிற் கடுவிசைத் தெறிந்து, மேலிற்பரந்து, பாலிற்பஃ றுளிசிதறிக், கோலிற்பொழிந்து, குனிசிலைவளைத்தனவாலோ, வாலிற்சிறந் தோன்மைந்தன்,சேலிற் றிகழ்வயற் செந்திலிற் கொண்மூ, வுயங்குதேரினு முந்துறுமாலோ, சால்பிற்கேள்விப்பாக, தகவினியென்னுமாலோ, நூலிற் சிறந்த நுண்ணிடை தனக்கே. (சுஉ)

இரங்கல்-ஆசிரியவிருத்தம்.

தனக்கோ ருவமை யில்லாத தந்திக் கிளையான் செந்திலுமென்
மனக்கோ யிலுங்கொண் டவனிணைத்தாள் வணங்கா தவரி னிணங்காரா
யெனக்கோ ருறுதி யியம்பாம லிதண்கா ளேனல் காள்கிளிகாள்
புனக்கோ கிலங்கா ளெங்கொளித்துப் போனு ரிருந்த மானுரே. (சுங)

தழை-கலித்துறை.

மானுர் விழிமான் மகள்கா தலனுர் வாழ்செந்து
ரூனுர் வடிவே லுரவோ யினிவே றுரையுண்டோ
வானுர் விழையுந் தழையோ தந்தா யம்மாநங்
கானுர் குழலா ளுயிர்தந் தனைநீ கண்டாயே. (சுச)

மறம்-ஆசிரியவிருத்தம்.

கண்டாலு மனம்பதைக்குங் கடுங்கூற்று நடுங்கியெமைக் கடல்சூழ்
செந்தில், வண்டாலுந் துணர்க்கடம்பன் மலர்ச்சரண மறவாத மறவ ரேயாம்
பெண்டாலின் றுளமயங்கி யுயிரைவிடத் தூதுவிடும் பெருமான் றன்பாற்
றெண்டாலெங் களுக்குரைக்க வருந்துத வவற்கியம தூத னீயே. (சுரு)

தலைவனைவேண்டல். வெண்பா.

தூதுசொல வேண்டிச் சுரும்பினையு மானினையு
மாதுசெல விட்டாலு மாட்டாவா—லோதுசெந்திற்
காங்கையா வாறிரண்டு கைத்தலத்தாய் நின்றன்னை
வேங்கையா மென்றே வெறுத்து. (சுசு)

இரங்கல்-கலித்துறை.

வெறுப்பா ரவரென்னை மின்னனை யாரெனில் வெம்பிழையும்
பொறுப்பார் மறந்தும் புறங்கணி யார்புணர்ந் தாவிதந்துண்
ணிறுப்பார் புலவியி னீடல்செய் யார்நினை வார்வினைக
ளறுப்பார் திருச்செந்தில் வாயிவ ரார்வந் தலைப்பவரே. (சுஎ)

எழுதரிதென்னவேந்தலை விலக்கல்-கலித்தாழிசை.

அலைவாய்வள ரந்தூரிள நிலவாய்விரி செந்தூ
ரடனுட்டிய கதிர்வேலவர் குடநாட்டன மனையாண்
எல முலைதாமெழு துவையேலவை குழையாமுழு மதிபோன்
ஊ— முகநேரெழு துவையேனகை புரியாதிரு புருவஞ்
சிலைபோலெழு துவையேலவை குனியாவடி தளிர்போற்
றிடமாயெழு துவையேலவை நடவாங்கிளி துவர்வா
யிலவாயெழு துவையேலது கல்வாநிறை யமுத
மெங்கேயெழு துவைநீகிழி செங்கேழயி லவனே. (சுஅ)

தலைவியை யாற்றுதல். வெண்பா.

அயில்வேற்க ணல்லா யஞர்கூர்ந் தலமந்
துயிர்வேட்கை வாட்ட மொழிவாய்—பயிலுமதன்
பூங்கைக் கடம்புண்டு போனுற் றரச்செந்தில்
வேங்கைக் கடம்புண்டு மேல். (சுக)

விலக்கல். ஆசிரியத்துறை.

மேல்வா னவர்தஞ் சிறையறுத் துயர்ந்த விளங்கிலை நெடுவேற் றுளங்கெழிற் குமரன் வியன்செந்திற், சூல்வாய்ப் பணிலங் கறங்கு மலைவாய்த் துறைவா வினியெம் பிறைவா ணுதலின் றுணர்த்தா ரகலம் புணர்ப்போ டேகின், பால்வாய்க் குழவி மறிமான் மறுகும் பகுவாய்ப் புலியின் ெ ..கவால் புடைப்பப் பணைக்கோட்டு, நால்வா யிரையாய் வேட்டைபா யரவ நவிலும் பாலைத் தெனலாற் கவலை நளிர்நீர்ப் பொருநைத் தெளிநீள் பழன நன்னாட் டகமன் [றே. (எ0)

வெண்பா.

அகமன் றலங்கமலத் தாள்வினையே னன்பாற்
புகமன் றகமகிழ்ச்சி பூத்தான்—றகவென்றூ
ழுந்தினக ரம்போ லொளிகொண்ட வேற்படையோன்
செந்தினக ரம்போற் சிறந்து. (எக)

பிரியேனென்றல்-கலித்துறை.

சிறந்தார் பரவுந் திருச்செந்தி லார்சிவன் றீநுதற்கட்
பிறந்தா ரிணையடி பேணலர் போலப் பிணியவிழ்தார்
புறந்தாழ் குழலி புலம்பே லுனையைம் பொறிகலங்கி
யிறந்தாவி யான்படி னும்பிரி யேன்பிறப் பேழினுமே. (எஉ)

ஆசிரியவிருத்தம்.

எழுயர் கடாயானை மேல்வெண் குடைக்கீ ழிணைக்கவரி யெறிய விருபா
லின்னிய முழங்கமட வன்னங் குழீஇயனைய வேழையர் மருங்கு சூட
காழகி னறுங்குற டிரிஞ்சுபூந் தேய்வைகடி கமழ்தடவும் வலையரிமிர்
கண்ணிக் கடம்பசைய வேல்கொண்டு நீவரக் கண்கொண் டளங்குள்
வாழிமுரி திரைமுகடு கிழியவெழு மெழுபுரவி யருணமிலை கொடிநெடுந்தே
ராயிரங் கதிரிரவி பாயிரும் பகலுமிரு ளடையமிடை சினைவிடுதட
கோழிலை நறும்புன்னை துன்னுறுண் டாதுபடு குவிமுகை மருட்டு ..வுக்
குடவளை மணித்தொகுதி நிலவுகாய் செந்தில்வரு குலவமரர் தம்பி ரானே.

விடுபட்டநாடுகள் முதலான இடங்களிலே கோதுமை சாகுபடியானு லும், வடஇந்தியாலில்தான் இந்தப் பயிர் விசேஷம். கோதுமைப் பயிர் சாகுபடி செய்கிறவர்கள் இதைக்கவனிக்கவேண்டும். இந்த ஸமட் என்னும் பூஞ்சகாளம் அல்லது பூஞ்சணம் கோதுமைத்தானி யங்களைத்தான் முக்கியமாகப்பிடித்து ஆட்டுகிறது. தண்டு, இலை, வேர்களைப் பாதிக்கிறதில்லை. ஊன்றிப்பார்க்கில் கதிரிலுள்ள தானிய ங்கள் பெருத்திருக்கிறதுபோற் காணும். கோதுமைத் தானியம் மு தலிற் கொஞ்சம் பசுமை நிறமாயிருக்கும்; பிறகு வெண்ணிறம் அல் லது ஊதா நிறமாயிருக்கும். இப்படிப் பெருத்திருக்கிற பூஞ்சகாள தானியங்களை நெறித்தாற் சூர்ணமாய்விடும். இந்தச் சூர்ணம் மகா துர்க்கந்தமுடையது. இந்த வியாதிக்கு முக்கியகுறி இந்த துர்க் கந்தந்தான். இந்தப்பூஞ்சண வியாதி, மாம்சவளர்ச்சியே (Fungus) தவிர வேறு ஒன்றுமில்லை. கோதுமை சாகுபடி செய்கிறவர் களுக்கு இது மகாபயம் கொடுக்கக்கூடிய வியாதி. ஒரு தடவை கண்டுவிட்டால், வருஷாவருஷம் விருத்தியாய்க்கொண்டே வரும். இப்படி வியாதி அதிகரித்துப் படிக்குப்பாதிமேல் நஷ்டம் வரும். வியாதி பிடித்த வயல்களில் வியாதியற்ற தானியங்களுக்கும் தகுந்த விலை கொடுக்கமாட்டார்கள். அந்த தானியங்கள் விதைக்கும் பிர யோஜனப்படா. இத்தொற்றுவியாதியின் முக்கியகுறி மகா துர்க் கந்தம்; இக்குறியால் இவ்வியாதியை அறிந்தபின்னர் இதை நிவர்த்தி க்க, கோதுமை விதையைப் பக்குவப்படுத்துவதைவிட (Treating or dressing the seed) வேறு குணமானவழி ஒன்றுமில்லைப்போல் தெரியவருகிறது. இவ்வியாதியின் விஷநீர் விதையில் இருக்கலாம்; அல்லது விதைதெளித்து முளைகாணும்போதுஇந்த விஷசம்பந்தம் உண்டாவதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வியாதியின் விதையை (Spores) ஹதம்பண்ணிவிட்டால், கோதுமைப்பயிருக்கு ஏதோ ந்தவியாதி அணுகும்? விதையைப்பக்குவப்படுத்தி ஸமட் டை ப்படித் தொலைப்பதென்பதைச் சற்றுக் கவனிப்போம். வயல் களில் தெளிக்குமுன்பு விதைகளைப் பக்குவப்படுத்த வேண்டும். அதாவது வெந்நீரில் விதைகளைக் கொஞ்சக்காலம் போட்டிருக்கவே ண்டும். அப்படிப்போட்டால் வியாதியின் விதை (Spore) கொட்ட

மடங்கும். கொட்டமடங்குகிறதற்கு சலத்தின் உஷ்ணம் தகுந்த படி ஏற்பட்ட அளவில் இருக்கவேண்டியது. $132\frac{1}{2}$ o F டிகிரிக்குக் குறையக்கூடாது; 135 டிகிரிக்கு அதிகப்படக்கூடாது. அதிக உஷ்ணமாயிருந்தால் விரையின் வீரியம் போய்விடும். உஷ்ணம் குறைவாயிருந்தால் வியாதி விதை (Spore) சாகாது. ஆகையால் வியாதி விதை தொலையும் சரியான டிகிரி அளவு கண்டுபிடிக்கப்பட்டிருப்பதைச் சீதோஷ்ணக்கருவியால் (Thermometer) கண்டறிந்துகொள்ளலாம். $132\frac{1}{2}$ டிகிரி உஷ்ணமுள்ள ஜலத்தில் கோதுமைவிதையை பதினைந்துநிமிஷகாலத்துக்குமேல் வைக்கக்கூடாது. பதினைந்து நிமிஷம் வைத்திருப்பதில் பூஞ்சகாளவிதைசெத்துப்போகிறது. கோதுமைவிதை வீரியமும் கெடுகிறதில்லை. 15 நிமிஷத்துக்கு மேற்பட்டால் கோதுமைவிரை வீரியம் போய்விடுகிறதாம்; முதலில் விதையை வெதுவெது என்றிருக்கும் நீரில் வைத்துப் பிறகு மேற்கூறிய டிகிரி அளவு ஜலத்தில் பதினைந்து நிமிஷம் வைத்திருப்பது நலம். ஒரு சாக்குப்பை எடுத்துக்கொண்டு அதிற்பாதிஅளவு விதை போட்டு நுனியிற்கட்டி. இந்த அளவுக்கு 7, 8 பங்கு அதிகமுள்ள உஷ்ண ஜலத்தில் இந்த சாக்குப் பை விதையைப் போட்டுப்போட்டு எடுத்தும்,சுழற்றிச்சுழற்றி எடுத்தும்;இப்படி 15 நிமிஷகாலம்செய்தால், பூஞ்சகாளவிதை தொலைந்துவிடும். இவ்விதமாக உஷ்ணசலத்தின் செய்கைக்கு பூஞ்சகாளம் பிடித்த கோதுமைவிதையை உள்ளாக்கினால் பூஞ்சகாளம் அணுகாதென்கிறார்கள். உஷ்ணஜலத்திலிருந்து விதையை எடுத்தவுடன்; அதைக் குளிர்ஜலத்தில் அமிழ்த்தி, பிறகு உடனே காயப்பரப்பிவிடவேண்டியது. இப்படிக் காயும்போது அடிக்கடி கிளரக்கூடாது. முழுதிலும் காயுமுந்தி, விதையைத் தெளித்துவிடலாம். இல்லாவிடில் நன்றாய்க் காயப்போட்டு, சேகரித்துவைத்துத்தெளிக்கிறவரையில் பாதுகாத்துக்கொள்ளலாம். இந்தவழி எல்லா சிகிச்சைகளையும்விட சிலாக்கியமென்று தெரியவருகிறது. இதில் செலவுமதிகமில்லை. பக்குவப்படுத்தப்பட்ட விதையைச் சுத்தமான ஆயுதத்தினால் கையாடவேண்டும். சுத்தமாக்கப்பட்ட சாக்கு அல்லது கோட்டையில் விதையைச்சேகரித்து வைக்கவேண்டியது.

இன்னொரு பக்குவப்படுத்தும்வழி பின்வருமாறு:—24 காலன் (Gallon) ஜலத்தில் 1பவுண்டு(துரிசியை)மைல்துத்தத்தைக்(Copper Sulpoate) கரைத்து அப்படி துரிசிகரைந்திருக்கப்பட்ட சலத்தில் கோதுமை விதையைப் பன்னிரண்டுமணி நேரம் போட்டுவைத்திருந்து;பிறகு சுண்ணாம்புநீரில் (Lime water) 10 நிமிஷம்வைத்து விதையையிறுத்து, வயலில் தெளித்துவிட்டால் இந்தப்பூஞ்சகாளம் என்கிற வியாதி கோதுமைக்கு வராதாம். பக்குவப்படுத்தப்பட்டவுடனே தெளிக்காவிட்டால் முன் சொல்லியிருக்கப்பட்டதுபோல் சேகரித்து வைத்து வேண்டும்போது தெளிக்கலாம்.

சுண்ணாம்புநீராவது; 10 காலன் ஜலத்தில், 1பவுண்டு நல்ல சுண்ணாம்பைநீருக்கினல் கொஞ்சகாலமானபிறகு மேல்தெளிந்திருப்பது தான் சுண்ணாம்புநீர். இதுவரையிற் சொல்லிவந்தபடி கோதுமை விதையை எந்தவழியிலாவது ஒரு வழிப்பிரகாரம் பக்குவப்படுத்தி விதை தெளிக்கப்படின்,அந்தப்பயிருக்கு ஸமட் என்னும் பூஞ்சகாளம் அணுகாது என்பது நிச்சயம். இந்த பூஞ்சகாள நோய்க்கு துர்க்கந்த பூஞ்சகாளம் (Stinking Sweet) என்று பெயர். இன்னுமொரு பூஞ்சகாளத்துக்கு இளக்கமானபூஞ்சகாளம் (Loose Sweet) என்று பெயர். இதில் துர்க்கந்தமிராது. கோதுமைப்பயிரெல்லாம் ஒரே மொட்டையாயிருக்கும். தானியங்கள் எல்லாம் கறுத்து நெரித்தாற் பொடியாய்விடும். இதைத்தடுக்க இன்னும் வழி கண்டுபிடிக்கப்படவில்லை.

நெற்பயிர், சோளம், முத்துச்சோளம், கம்பு, கேழ்வரகு, வரகு, தினை முதலிய தானியவர்க்கங்களும் மேற்கூறிய வியாதிகளினுற் பிடிக்கப்படலாம். ஆகையால் இந்த வியாதி எங்கே கண்டிருக்கிறதோ அங்கே விதையை மேற்சொல்லியிருக்கப்பட்டபடி பக்குவப்படுத்தினுல், இவ்வியாதியால் உண்டாகும் நஷ்டத்துக்கு நாம் உள்ளாகவேண்டியதில்லை. "குணமாதாகவிடேல்" என்றபிரகாரம் கோதுமைச் சாகுபடி செய்கிறவர்கள் குணத்தைக்கிரகிப்பார்களாக.

கோதுமைக்குத்தகுந்த எரு.

எல்லாஎருவைப்பார்க்கிலும் இந்தத்தானியவர்க்கங்களுக்குஅதிகஉப்புச்சத்தான நைட்ரஜன் உப்புச்சத்துள்ளஉரந்தான்திறமென்று

கான்பூர் (Cawnpur) நாக்பூர்(Nagpur) முதலிய உத்தியானங்களில் கோதுமைப்பயிருக்கு அனேக எருக்கள் இட்டு பரீட்சை செய்ததில் தெரியவருகிறது. ஆகையால் மாடு, ஆடு, அதிக சிரேஷ்டமான பிராணியின் மலஜலங்கள் உரங்களென்று கோதுமைக்குச் சொல்லலாம். இவைகளில் நைட்ரசன் (Nitrogen) உப்புச்சத்து மிகுதியாகவிருக்கிறது. ஓர் ஏகரா கோதுமைப்பயிருக்கு நிலத்தை உழுவதற்கு முன்னால் 18 மணங்கு ஆட்டுப்புழுக்கை அடிக்கலாம். இதற்கே அதிகக் கண்டுமுதல்கொடுக்கும். இதைவிட அதிகக் கண்டுமுதல் வேண்டியிருந்தால், 180 மணங்கு ஆட்டுப்புழுக்கையும் $4\frac{1}{2}$ மணங்கு எலும்புத்தூளையும் கலந்து அடிக்கவேண்டும். நன்றாய் மடித்த சாணமாயிருந்தால் அதை ஏகரா ஒன்றுக்கு 180மணங்கு அடித்து லாபத்தைப்பார்க்கலாம்.

இதுவரையில் தெரிவித்த நெல், கோதுமை, சோளம், கம்பு, முதலிய புல்வகைத்தானியங்கள் மனிதருக்கு ஆகாரவஸ்துக்களாக இருப்பினும், அவைகள் மாப்பதார்த்தங்கள்; அப்பதார்த்தங்களை எரித்து உஷ்ணமுண்டாக்க மாமிசம்வேண்டும். மாமிசத்தை அதிகமாக உண்டாக்கும் சக்தி மேலேசொன்ன புல்வகைத்தானியங்களில் இல்லாமையால்,அக்குறைவை நிறைவாக்கமாமிசத்தைத்தரும்பதார்த்தங்கள் இன்றியமையாதவை. மாமிசத்தை அதிகமாக உண்டாக்கும் சக்தி, அவரை, துவரை, கடலை, பச்சைப்பயறு, கொள் முதலானவைகளுக்குண்டு; ஆகவே கோதுக்காய் பருப்புகளான அவைகளில் சிலவற்றைப்பற்றி இதனடியில் சொல்லுவோம்.

கோதுள்ள காய்ப்பயிர்கள்.

கோதுக்காய்ப்பயிரான அவரை, கடலை, உழுந்து கொள்ளு, பச்சைப்பயறு முதலானவைகளைத் தனியாகப் பயிர்செய்யாமல் கம்பு, சோளம், பருத்திக்கொட்டையுடன் கலந்து பயிரிடுவது சாதாரணவழக்கம். அதாவது நரிப்பயறு, பச்சைப்பயறு முதலானவைகளைக்கம்போடு கலந்து விதைத்தும், மொச்சையை ஆடிமாதத்தில் சால்விட்டுவிதைத்து, மார்கழி தைமாதங்களில் அறுத்துவிடுவார்கள். கார்மழைக்காலத்தில் துவரையை எள்ளோடும்,சாமையைப்பருத்திக்

கொட்டையோடும், சேர்த்தாகிலும் அல்லது சால்விட்டாகிலும் விதைத்து, தைமாதத்தில் அறுத்துவிடுவார்கள். பல்லாரியில் 12 மாடுகள்கட்டி உழும் கரிசல்மண்ணில் துவரைச்செடிகள் மரங்களைப் போலப் பெரிதாக விளைகின்றன.

கடலை.

கடலை கரிசல் அல்லது கருமண்ணிற்றான் விசேஷமாக விளையும். இதைப்பருத்திக்கொட்டையோடாகிலும், கொத்துமல்லியோடாகிலும் கலந்து விதைப்பதுமுண்டு; அல்லது தனியாகவும், நன்ருக உழுது எருவிட்ட நிலத்தில் அடிக்கு ஒரு விதையாகவு நடுவதுண்டு. மூன்றுநான்கு வாரங்களானபிறகு களை எடுத்துவிட்டால் நல்லது. இதற்கு சொற்பமழையே போதும்; பனியினலேயே பெரும்பாலும் விளைந்துவிடும். இந்தக்கடலைப்பயிரை ஏழுவருஷத்துக்கு ஒருதரம்மாத்திரம் அதே நிலத்திற் பயிர்செய்தாலன்றி, [illegible] அதேநிலத்திற் பயிர்செய்தால், நிலத்தின் சாரத்தைக்[illegible]. ஓர் ஏகருக்கு 1300 இராத்தல் விளைவுதரும். செடி[illegible]து மப்பு மந்தாரம் கட்டினல் காய்ப்புழு, வேர்ப்புழு நோய்விழுந்து பயிரைக்கெடுக்கும்.

கொள்ளு.

கொள்ளானது சாதாரணமானகல்லாங்காட்டில் சொற்ப பிரயாசையால் விளையும். இதைப்பற்றியே "எள்ளுவிதைக்க இரங்காடும், கொள்ளுவிதைக்கக் கல்லாங்காடு" என்றும், "கல்லைப்புரட்டிக்கொள்ளுவிதை" என்றும் சொல்லப்பட்டது. இதற்கு சொற்பமழை பெய்தாற் போதும். கோடைமழை மோசஞ்செய்துவிட்டால், கம்புக்குப்பிரதியாக, ஆவணி புரட்டாசிமாதங்களிலும், கொங்குமழைக்காலத்தில் ஐப்பசி மாதத்திலும் கொள்ளை விதைப்பதுண்டு. கார்த்திகைக்குப்பிறகு விதைத்தாற் பிரயோஜனமில்லை. ஆனதுபற்றியே "கார்த்திகைமாதத்தில் கலக்கொள்ளு விதைத்தாலும் முறக்கொள்ளும் விளையாது" என்று சொல்லப்பட்டது. இதை வேரோடு பிடுங்கிக் குத்தாரிபோட்டபிறகு, மாடுகளால்மிதிக்கவைத்து அறுவடை செய்யலாம். இது ஓர் ஏகருக்கு 320 படி அல்லது 1,200 ராத்தல் கொள்ளைத்தரும். இந்தக்கொள்ளுப்பயிர் சாதாரணப்பயிராக இருக்கி

னும், சோளமுதலான தானியங்களை அறுத்துக்கொண்டநிலத்தில், உடனே உழுது கொள் விதைக்கச் செடிமுளைத்து முதிர்ந்து பூவெடுக்கும் தருணத்தில் மேலே உழுது பூமியிற் படியும்படி செய்தால், உப்புவாயுவைப் பூமியில் இருத்திக்காத்து எருவாகிஅந்நிலத்திற் பயிரும் மற்றப்பயிரைக் கொழுக்கச்செய்யும்.

உழுந்து.

இது நன்றாக உழுது ஆட்டெருக் காக்கப்பட்ட தோட்ட நிலத்திலும், புன்செய்க்காடுகளிலும், ஆடி ஆவணி மாதங்களில் விதைத்து, தை மாசி மாதங்களில் அறுவடைசெய்யப்படுவது. விதைத்து ஆறுவாரங்களானபிறகு களைகளைக் கையால் பிடுங்கிவிடவேண்டும். ஓர் ஏகருக்கு 3 சலகை அல்லது 180 பெரியபடி அல்லது 700 இராத்தல் உழுந்தைத்தரும். இதர மொச்சை பச்சைப்பயறு முதலானவைகள் பயிர்களோடுகலந்து பயிரிடுவதுமுண்டு. இந்தக் கோதுப்பயிருக்கும் போதுமானமழையும் அல்லது மப்புமந்தாரமுமிருக்கிற் காய்ப்புழு, வேர்ப்புழு முதலான நோய்கள் சம்பவிக்கும். துவரை பூவெடுத்தபிறகு மழைபெய்தாற் கெட்டுப்போம். அவரையும் அப்படியே. இனி இந்தக் கோதுக்காய்ப்பயிரான தட்டப்பயறு, பனிப்பயறு, நரிப்பயறு மேற்கண்டபடியே பயிரிடலாம். பீனிஸ் பட்டாணி, வேர்க்கடலை, தம்பட்டன், அவிரி, கொத்தவரை, வெந்தயம், அகத்தி, முதலான பயிர்களுக்கு ஆழ்ந்தஉழவும் சுண்ணம்புஎருவும், பச்சிலைஎருவும் முக்கியமாகவேண்டும். மேலும் இந்தப்பயிர்கள் ஆகாயத்திலிருக்கும் உப்புவாயுவை கிரகித்துக்கொழுத்து வளர்வதுடன், தாங்கிரகிக்கும் உப்புவாயுவை வேர்களின்மூலமாக நிலத்துக்கும் கொடுத்து நிலத்தைச் செழிக்கச்செய்கின்றன.

இதுவரையில் இந்நாட்டின் குடிகளுடைய உணவுக்கு வேண்டிய சிலவிசேஷ தானியப்பயறுகளைப்பற்றிச்சொன்னோம். இனிச்சில சாதாரணமான காய்கறி கிழங்கு வகைகளைப்பற்றிச் சொல்லுவோம்.

பூசணிக்காய்.

பூசணிக்காய் நமதுநாட்டாருக்கு (முக்கியமாகத் தென்னாட்டாருக்கு) சாதாரணமான காய். இதில் மஞ்சட்பூசணி, வெள்ளைப்பூ

சணி, செம்பூசணி, சாம்பற் பூசணி, சீமைப்பூசணி, குடப்பூசணி, எனப் பலவகைகள் உண்டு. இவ்விதவிதைகளைத் தோட்டநிலத்தின் நீரோடும், கால்வாய் ஓரங்களிலும், கிணற்றின் சுற்றுப்பக்கத்து மேடுகளிலும், மற்றும் வேறு பயிர்வைக்காத விஸ்தாரமான இடங்களிலும் அரையடி குழிகளைத்தோண்டி ஆடிமாதத்தில் விதையைநட்டுத் தண்ணீர் விட்டுக்கொண்டுவந்தால், ஆறுமாதத்திற் பூவிட்டுக் காய்கள் காய்க்கும். நல்லநிலமும், எருவும், ஜலமுமுள்ள இடத்தில் நல்ல விதையை நட்டால் செடியொன்றுக்கு ௯௦, ௭௦, ௧௦௦, ௧௦௫, காய்கள் வரையிற்காய்க்கும். பூசணிப்பூவும் காயும் பழமும் நல்லகறியாகும்.

வெள்ளரிக்காய்.

இதிற் காட்டுவெள்ளரி, தோட்டவெள்ளரி, குளவெள்ளரி என்றுதிவகைகளுண்டு. இது பூசணிக்காய் இனத்தைச்சார்ந்ததாகும். இந்தத் தோட்டத்திலாகிலும், குளத்திலாகிலும் ... தண்ணீர் கட்டி விளைவித்தால் நல்ல லாபத்தை யடையலாம்.

சுரைக்காய்.

சுரைக்காயில் குண்டுச்சுரைக்காய், நீளச்சுரக்காய், பாம்புச்சுரக்காய் என்றுதி பலவிதங்களுண்டு. இதைத்தோட்டத்தில் வேறுபயிர்கள் வைக்காத மேட்டாங்கரை யோரமாகவும், வேலியோரமாகவும், அரையடிக்குழிகளில் ஆடிமாதம் விதையை நட்டுத் தண்ணீர்விட்டுக் கொண்டுவந்தால் நல்ல காய்களை அறுக்கலாம். இதற்கு அதிக விஸ்தீரணமான இடம்வேண்டும். இதன் காய்கள் தேகத்துக்கு அவ்வளவாகச் சுகந்தருவதல்ல.

பெண்டைக்காய்.

பெண்டைக்காயை தனிப்பயிராகவும், அல்லது மிளகாய், மஞ்சள், கத்தரி, வாழைமுதலானவைகளுடனும், ஆடிமாதம் விதைகளை இரண்டடிதூரத்துக்கு ஒன்றாக நட்டி நல்ல தண்ணீரைக்கட்டினால் நல்ல லாபம் கிடைக்கும்.

கொத்து அவரைக்காய்.

இந்தக் கொத்து அவரைக்காயைத்தனிப்பயிராகவும், அல்லது மிளகாய், மஞ்சள், கத்தரி, வாழைமுதலானபயிர்களோடு சேர்த்தும்

பயிரிடலாம். இதை ஆடிமாதத்தில் விதைப்பதைப்பார்க்கிலும் பனிஅதிகமான மார்கழி, தை, மாசி மாதங்களில் ௪-அடிக்கு ஒன்ருகநட்டால் அவை யிரண்டு மூன்றுஅடி உயர்ந்து கொத்துக் கொத்தாகக் காய்பிடிக்கும்.

சுண்டைக்காய்.

சுண்டைக்காய்விசேஷமாகக் காடுகள்நிறைந்த கல்லாங்காட்டில் தானுகவிளையும் பயிர். இதைத் தோட்ட நிலத்தில் வேறுபயிருக்குக் கெடுதலை யுண்டாகாத மேட்டுத்தரையிற் பயிர் செய்யலாம்.

கத்தரிக்காய்.

கத்தரிக்காய்ப் பயிரைத் தனியாகவும், மஞ்சள் மிளகாயோடும், வேறுசில பயிர்களோடும் எக்காலத்திலும் பயிர் செய்யலாம். இதற்குச் செஞ்சல்லி நிலமும், நல்ல எருவும், தண்ணீரும் இருந்தால் பல வருஷங்களாக வைத்து பலனையடையலாம். கோதாவரி, ஈரோடு இலங்கை, அமெரிக்கா, பிராஞ்சுதேசங்களிலமுதற்றரமான காய்கள், காய்க்கி ... இதில் வெள்ளைக்கத்தரி, செங்கத்தரி, கருங்கத்தரி, பூனைத்தலை, தேங்காய்க் கத்தரி, ஆனைத்தலைக்கத்தரி என்ருதிப் பலவகைகள்உண்டு. இதற்குத் தண்ணீரதிகம் கிடைத்தால் கொத்துவிடுந்தோறும் காய்களைப்பறிக்கலாம். ஆனது பற்றியே, 'வாழைக்குக் கொத்து, வழுதுக்கு (கத்தரிக்கு) தண்ணீர்' என்று பழமொழி வழங்குகிறது.

தம்பட்டன் காய்.

தம்பட்டன்காயிற் குத்துச்செடி என்றும், கொடிச்செடி என்றும் இரண்டு வகுப்புகளுண்டு. இவைகளிற் குத்துத் தம்பட்டன்செடியைத் தனிப்பயிராகவும், மிளகாய் முதலான பயிர்களோடு கலந்துபயிரிட்டாலும் பலனைத்தரும். கொடிச்செடிக்குக் காலமறிந்து ஒரு சிறு பந்தலைக்கட்டிவிட்டால் நன்ருகப் படர்ந்து பூரணபலனைத் தரும்.

அவரைக்காய்.

அவரைக்காயிற் காட்டவரை, வீட்டவரை, கொடியவரை, வெள்ளை அவரை, சிவப்புஅவரை, கருப்பு அவரை, ஆட்டுக்கொம்புஅவரை என்று பலவிதங்களுண்டு. இதைத்தோட்டத்தில் வளமான இடத்தில் ஆடிமாதத்தில்நட்டுப் பந்தல்போட்டுச் சரியானதண்ணீர்கட்டி

ஆரும் அதிகாரம்.

உ ண வு.

CHAPTER VI—FOOD.

நாம் நமதுதேகத்தைச் சரியான நிலையில் வைத்துக்கொள்ளற்கு உணவு என்பது பிரதானம். "உணவு" என்பதில், நமது தேகத்திலுண்டாகும் அழிவை அப்போதைக்கப்போது ஈடுசெய்து நமது தேகத்தை வளரச்செய்து நமக்கு வலிமையும் சக்தியும் கொடுக்கின்ற வஸ்துக்கள் யாவும் அடங்கியிருக்கின்றன. இவ்வாறு நாம் சொல்லுவதால் உணவு என்பதில் நாம் உட்கொள்ளும் தின்பண்டங்களும் நாம் அருந்தும் நீர்த்தமுமட்டுமல்ல; நாம் சுவாசிக்கும் காற்றுங்கூடச் சேர்ந்திருக்கின்றது. தண்ணீரில்லாமற் பிராணன் வெகு நாள் உணவால் மட்டும் நிற்காது. நாம் சுவாசிக்கும் காற்றால் நமது தேகத்துட் புகும் பிராணவாயுத்தான் நமது உணவுடன் கலந்து நமது தேகத்துக்கு வலிமையையும் சக்தியையும் அளிக்கின்றது. இவ்வண்ணம் நமது ஜீவனுக்கு நீரும் காற்றும் முக்கிய சாதன[illegible]வாக விருந்தபோதிலும், உணவு என்பதால் நாம் குறிப்பது நாம் [illegible]ர்த்தங்களேயன்றி மற்றவைகளல்ல. நாம் தினந்தோறும் நமக்கு வேண்டிய நல்லுணவைச்சரியாகப்புசித்து அதைச்செரிப்பித்துக்கொள்ளாமலிருப்போமானால் நாம் நமது நித்தியக்கடன் என்று ஏற்பட்டிருக்கும் தொழில்களை ஒருபொழுதும் சரிவரச்செய்யமுடியாது.

நமது சரீரம் நிமிஷந்தோறும் அழிந்துகொண்டே யிருக்கின்றது, அல்லது, மாரிக்கொண்டேயிருக்கின்றது என்றுசொல்லவேண்டும். இன்றைக்கு நமது கைகளிலும் கால்களிலும் நாம் காணும் தசை (சதை) நேற்று நாம் கண்டதசையல்ல. நேற்றிருந்ததசையி லொருபாகம் எப்படியோ உபயோகப்படுத்தப்பட்டு அழிந்தோ மாறிப்போயோயிருக்கலாம்: அல்லது புத்தசையின் ஒரு பாகத்தை நாம் மலப்பைவழியாகவோ அல்லது ஜலப்பை வழியாகவோ கரைத்து வெளியே விட்டிருக்கலாம். அவ்வாறு நேற்றுத்தசை அழிந்தவிடத்தில் இன்று வேறுதசை உண்டாயிருக்கலாம். இவ்வாறு நேற்றுத்தசைவேறு இன்றைத்தசைவேறு என்ற விந்தையை நமது தேகத்தில் உண்டாக்கிவைப்பது, நமது உணவால் நமதுதேகத்தில் நாம் உண்டாக்கிக்கொள்ளும் இரத்தமும் அவ்விரத்தத்தின் ஓட்டமுமேயாம்.

ஆகையால் நமது உணவால் நாம் சரியான இரத்தம் நமது தேகத்தில் உண்டாக்கிக்கொள்ளாவிடில் நமது தசைஅழிந்து நாம் சோர்ந்து மெலிந்து அழிந்துவிடுவோம். நாம் எந்தத்தொழில் செய்தபோதிலும் அதனால் நமது

தேகம் ஒருவிதசக்தியை எப்பொழுதும் இழந்துகொண்டேயிருக்கின்றது. நாம் பேசுவது, படிப்பது, எழுதுவது, ஓடுவது, நடப்பது, பார்ப்பது, நுகருவது இவையெல்லாம் நமது தேகத்திலிருக்கும் சக்தியினாலேயேயன்றி வேறல்ல. இவ்வகைக்கருமங்கள் என்ன செய்தபோதிலும் அவற்றிற்குத்தக்கபடி ஒருவிதமாக நமது சக்தி குறைந்துகொண்டேயிருக்கிறது. இக்குறையை நாம் ஈடுசெய்யாவிடில் நாம் மெலிந்து நாசமாய் விடுவோம். இவ்வாறில்லாமலிருக்க உணவு என்பது கடவுளால் நமக்குச் சாதகமாக ஏற்பட்டிருக்கின்றது. அவ்வுணவு இருவகை :—

யவக்ஷாரமயம் (Nitrogenous)

அயவக்ஷாரமயம் (Non-Nitrogenous)

யவக்ஷாரமயம் என்றால் துவரம்பருப்பு, உழுந்து இவைகளைப்போன்ற பருப்பினங்களிலும் மாம்சம் முட்டை இவைகளைப்போன்ற ஆகாரங்களிலுமிருக்கும் ஓர்வகை புஷ்டியை தேகத்துக்குக் கொடுக்கும் உணவாகும். (Tissue-formers).

அயவக்ஷாரமயம் என்ற உணவில் நெய், உப்பு, ஜலம் இவைகளைச்சேர்க்கலாம். இவைகளால், தானியம் மாமிசம் முதலியவைகள் தேகத்துக்கு புஷ்டியை உண்டுபண்ணுவதுபோல், ஒருவித புஷ்டியையும் உண்டுபண்ண முடியாது. ஆனால் ஓர்வித உஷ்ணத்தை நமதுதேகத்தில் உண்டாக்கி நாம் உட்கொள்ளும் ஆகாரத்தை இவைகள் செரிக்கச்செய்து நமது உணவாக ஆகின்றன. அயவக்ஷாரமயமான ஆகாரத்தை இக்காரணத்தால் அக்கினிதம் (Heat producer) என்று சொல்லுவார்கள்.

யவக்ஷாரமயமான உணவு.

இவ்வுணவையும் நமதுஇரத்தத்தின்கலவையையும் சாஸ்திரப்பிரகாரம் ஒப்பிட்டுப்பார்த்தவர்கள் இவ்விரண்டுக்கும் எவ்வளவோ ஒற்றுமையிருக்கின்றதென்றும், இவ்வுணவை நாம் உட்கொண்டு செரித்துக்கொள்வதால் நாம் நமது தேகத்தைவிட்டுத் தினந்தோறுமிழக்கும் வல்லமையையும் சக்தியையும் திரும்ப அடைகின்றோம் என்றும் சொல்லுகின்றார்கள். இவ்வுணவின் அம்சங்கள் நாம் சுவாசிக்கும் காற்றிற் கலந்து நமதுதேகத்திற்குட் புகும். பிராணவாயுசம்பந்தத்தால் இரத்தமாகமாறி நமது அவயவங்களுக்குப் புஷ்டியையும் வளர்ச்சியையும் கொடுக்கின்றன. நாம் எவ்வெவ்வவயவங்களால் நமது சக்தியைக்காட்டுகின்றோமோ அவ்வவ்வவயவங்கள் யாவற்றையும் நாம் பரிசோதித்துப்பார்க்கும்பொழுது அவைகளிலெல்லாம் யவக்ஷாரமயமான பதார்த்தமே (Nitrogen) அதிகமாகவிருக்க நாம் காண்போம். அன்றியும்

யவக்ஷாரமயமான ஆகாரம் புசிப்பதை நாம் நிறுத்துவோமானால் எல்லாவித சக்திகளும் நமது தேகத்தில் உடனே குன்றும். இவ்வித பரீக்ஷைகளால் யவக்ஷாரமயமான ஆகாரமும் அவ்வாகாரத்தைப் பிராணவாயுபற்றி ரத்தமாசப்பண்ணுதலும் இல்லாமற்போனால் நாம் பிழைத்திருக்கமுடியாதென்று பிரஸித்தவைத்தியர்கள் நிர்த்தாரணம் செய்திருக்கின்றார்கள்.

நீர், உப்பு, கொழுப்புகள் இவைகளெல்லாம் யவக்ஷாரமயமான ஆகாரமல்ல. இவைகள் தேகத்தைவளர்க்கப்பட்டவைகளல்ல, என்றாலும் இவைகளும் நாம் நமது உணவுகளுடன் முக்கியமாக உட்கொள்ளவேண்டியவைகளாகவேயிருப்பதுடன் நமது தேகத்திலிருக்கும் எலும்பு முதலிய சிலபாகங்களிலிவைகள் அதிகமாகக்காணப்படுகின்றபடியால் நமது தேகவளர்ச்சிக்கு அவசியமான ஆகாரங்கள் என்றேநாம்ஒருவாறுசொல்லவும்வேண்டும்.

நமது உணவை யவக்ஷாரமயம் (Nitrogenous) என்றும் அயவக்ஷாரமயம் (Non-Nitrogenous) என்றும் பிரிப்பதுதான் பிரதானமான பிரிவு. இப்பிரிவுகளில் அடங்கியிருக்கும் விசேஷமான ஆகாரங்களை இவ்விடத்தில் எடுத்துச்சொல்லுவோம்.

1. யவக்ஷாரமயத்தில் பருப்புக்கள், அரிசி, கோதுமைமுதலிய வருக்கங்களும் மாம்சம் முட்டை முதலியவைகளும் அடங்கியிருக்கின்றன.

2. அயவக்ஷாரமயத்தில் நெய், வெண்ணெய், எண்ணெய் முதலிய கொழுப்புகள், சர்க்கரை, உப்புமுதலிய பதார்த்தங்கள், நீர், தேயிலைப்பானம் காப்பிப்பானம் முதலிய சிற்றுணவுகள் இவைகள் அடங்கியிருக்கின்றன.

இவ்வாறு இருவகைஉணவுகளுக்குள் ஒவ்வொருவனுடைய போஜனத்திலும் பின்சொல்லப்படும் நான்குவிதச் சேர்க்கை தப்பாமல் இருக்கவேண்டுமென்பது சுகசந்தர்சன சாஸ்திரிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அவை யாவையெனில்;—

(1) யவக்ஷாரங்கலந்த தானியம் அல்லது மாம்சத்தாலாகிய உண்டி. (Nitrogenous food. Albuminoid.)

(2) கஞ்சியாவது அல்லது சர்க்கரையாவது கலந்திருத்தல் (Carbohydrates)

(3) கொழுப்பு. (Fats)

(4) உப்பு (Salts)

மேற்கூறிய நான்குவிதச் சேர்க்கைகளும் நமது ஆகாரத்தில் இருக்கவேண்டும் என்றும் இவைகளில் ஏதாவது ஒருசேர்க்கையில்லாவிடினும் அல்

லிது சேர்ந்திருக்கவேண்டிய முறைக்கு வித்தியாசமாகச் சேர்ந்திருப்பினும் நமது சரீரசுகம் குறைவதுடன் வியாதிகள்சம்பவிக்கும் என்றும் வைத்தியர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஆகையால் நாம் இந்நான்குவிதப் பதார்த்தங்களும்எந்தமுறையிற்சேர்ந்திருக்கவேண்டுமோ அந்தமுறையைவிசாரிக்கவேண்டியவர்களாகின்றோம்.

ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொருதினமும் வேண்டிய உணவில்,

யவக்ஷாரம் (Albuminoid)		12	அவுன்ஸ்.
கொழுப்பு (Fat)		4	,,
கஞ்சி அல்லது சர்க்கரை கலந்த உண்டி (Carbo-hydrates)		30	,,
உப்பு	2 அல்லது	3	,,
	ஆக ...	48	,,

இந்தபிரமாணமானது பிரசித்தவைத்தியர்களாற் சோதிக்கப்பட்டுச் சாதாரணமான ஒவ்வொரு மனிதனுக்கும் வேண்டிய பிரமாணம் என்பதாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

சிலர் அதிக உழைப்பாலும், பலசாலிகளாக விருப்பதாலும், குளிர்ந்த தேசம் அல்லது உஷ்ணதேசம் இம்மாதிரியான விடங்களிலிருப்பதாலும் இந்தப்பிரமாணத்துக்கு அதிகமாகவும் குறைவாகவும் புசிக்கவேண்டியவர்களாக விருக்கலாம். அவ்வாறு வெவ்வேறு நிலைமைக்குத் தக்கபடி அட்டவணைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளை நாமிங்கு எடுத்துக்காட்டவேண்டியது அவ்வளவு அவசியமாகப் புலப்படவில்லை. இப்பிரமாணத்தை அறிய விரும்புகின்றவர்கள் பெரிய கிரந்தங்களிற் பார்த்துக்கொள்ளலாம்.

நாம், மேற்கூறிய பிரமாணமானது தண்ணீரை நீக்கிக் கூறிய பிரமாணம். இத்துடன் ஒவ்வொரு மனிதனும் அவனுடைய தேகநிறைஎவ்வளவு பவுண்டுகளோ அவற்றுக்குத்தக்கபடி, ஒருபவுண்டுக்கு ½ அவுன்ஸ் வீதமாவது தண்ணீர் குடிப்பான், அல்லது தண்ணீர் கலந்த சிற்றுகாரங்களான காப்பி தேயிலைப் பானங்கள் செய்வான் என்பது சாஸ்திரம்.

இவ்வளவு தூரம் நாம் கணக்காக இவ்வளவுஅவுன்ஸ் இன்னின்ன பதார்த்தங்கள் நமக்கு உணவில் அவசியமாக வேண்டும் என்பதை ஏற்படுத்தினோம். ஒவ்வொருவேளையும் நாம் போஜனம் செய்ய உட்காரும் பொழுது

ஒரு தராசைக்கூடவைத்துக்கொண்டு இவ்வாறு நிறுக்க முடியுமா? அல்லது அவ்வாறே செய்வதாக விருந்தபோதிலும் இப்பதார்த்தங்களை அவ்வண்ணம் நாம் பிரித்தெடுக்க முடியுமா? இதென்ன வீண் எட்டுக்கணக்கு: என்று நமது நாட்டார்கள் எண்ணக்கூடாது. பதார்த்தகுணசிந்தாமணிகள் என்று எவ்வளவோ கிரந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இக்கிரந்தங்களில் ஒவ்வொருபதார்த்தங்களிலும் நாம் முற்கூறிய குணங்களில் எவ்வெவை எம்முறையிற் கலந்திருக்கின்றன என்பது கண்டெடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. அக்கணக்கை ஒருவாறு அறிந்துகொண்டு ஒவ்வொருவனும் தனது புத்தியாலும் யுக்தியாலும் தான் உட்கொள்ளவேண்டிய ஆகாரத்தின் பதார்த்தங்களையும் அவைகளின் பிரமாணத்தையும் தனக்குத்தானகவே ஏற்படுத்திக்கொள்ளலாம்.

உதாரணமாக:—சாதாரணமாக ஒவ்வொரு மனிதனுக்கும் 48 அவுன்ஸ்ஆகாரம் பிரதிதினம் வேண்டுமென்று நாம் சொல்லி அதன்பிரமாணத்தை ஏற்படுத்தினேமல்லவா? இந்த 48 அவுன்ஸ் ஆகாரத்தை ¾பவுன் பால் 2பவுன்ரொட்டி இரண்டோர் அவுன்ஸ் வெண்ணெய் அல்லது நெய், இரண்டோர் அவுன்ஸ் உப்பு இவைகளைப் புசித்து இப்பிரமாணத்தை அடையலாம். பால்கிடைக்காதவன் அதற்குப்பிரதியாக மாம்சம் அல்லது மத்ஸயம் இவைகளைப் புசிக்கலாம். கோதுமை ரொட்டி கிடைக்காமற் போனல் அதன் பிரமாணமான 2 பவுன்அளவை, மற்ற தானியத்தாலாகிய ரொட்டி அல்லது ஆகாரம் சொற்பஉருளைக்கிழங்கு இவ்வகைச் சேர்க்கையாலடையலாம். நல்ல காய்கறிப் பதார்த்தங்கள், பழங்களிவைகளும் ரொட்டியின் ஸ்தானத்தில் உபயோகிக்கப்படலாம்.

நமக்கு வேண்டிய ஆகாரம் 48 அவுன்ஸ் ஒவ்வொருதினமுமென்று சொன்னேமல்லவா? இதைச்சுலபமாகச் செரித்துக்கொள்ளக் காலை எழுந்ததும் 10அவுன்ஸ், காலை போஜனத்தில் 20 அவுன்ஸ்,பகல் மூன்ரும் யாமத்தில் 7 அல்லது 8 அவுன்ஸ், இரவில் 10 அவுன்ஸ் இவ்வாறு உட்கொள்ளவேண்டும்.

நாம் நமது ஆகாரத்தைச் சுகமாகச் சேரித்துக்கொள்ளுவதெப்படி? நாம் நமது ஆகாரத்தைச் சுகமாகசெரித்துக்கொள்ள இரண்டு நியமங்கள் அவசியமாகவிருக்கவேண்டும். முதலாவது நாம் உட்கொள்ளும் ஆகாரம் நியாயமாக ஜீர்ணிக்கப்படும் நிலைமையிலிருக்கவேண்டும். இரண்டாவது நமது தேகத்திற்குட் சில நிலைமைகள் அவ்வாகாரத்தைச் சீராகப்பற்றிக்கொண்டு அதைச்செரிக்கச் செய்யவேண்டும்.

முதற்சொன்ன ஆகாரத்தின் நிலைமை யாதெனின், சில உணவுகள் கடினமாகவும் சில உணவுகள் மிருதுவாகவும் சில உணவுகள் எளிதிற்

கரையக்கூடியவையாகவும் சில கரைவது கஷ்டமாகவுமிருக்கும். உதாரணமாக—நெல்லரிசி அன்னம், செவ்வரிசி, வாற்கோதுமை, உருளைக்கிழங்கு இவைகளெல்லாம் வெகு எளிதில், அதாவது நாம் அவைகளைப் புசித்த 1 அல்லது 1½ மணிக்குள் நமது தேகத்தில் ஜீர்ணிக்கப்பட்டு உருமாறி விடும். வெண்ணெய், நெய், ரொட்டி இவைகள் செரிப்பது சொற்ப கஷ்டம். இவைகள் உருமாற 3 அல்லது 4 மணிகள் செல்லும். ஆனால் எளிதிற் கரையும் ஆகாரங்களையும் அவ்வாறு கரையாத மற்றவித ஆகாரங்களையும் கலந்து புசிப்பதனால் பொதுவாக ஜீர்ணகுணம் நமது உணவில் விருத்தியாகின்றதென்பது வைத்தியர்களின் கொள்கை. அதற்காகவே நாம் புசிக்கும் அன்னத்தை அன்னமாகவே புசிக்காமல் நெய் பருப்பு முதலியவைகளைக் கலந்தும் அவ்வாறே மற்ற உணவுகளையும் மிசிரம் பண்ணியும் உட்கொள்ளுகின்றோம். மாம்சம் கலந்த ஆகாரங்கள் இலேசாகவும் மிருதுவாகவுமிருக்கும் பட்சத்தில் மற்ற ஆகாரங்களைவிட எளிதிற் செரிக்கப்படும் என்று வைத்தியர்கள் சொல்லுகின்றார்கள்.

ஒரேவிதமான ஆகாரம் எப்பொழுதும் உட்கொள்ளுவதைவிட அடிக்கடி நமது ஆகாரத்தை நாம் மாற்றுவதனால் நாம் உட்கொள்ளும் ஆகாரத்தை நாம் எளிதில் ஜீர்ணித்துக்கொள்ளும் நிலைமை அவ்வாகாரத்தினாலேயே நமக்கு உண்டாகின்றது. ஒரே ஆகாரத்தைப் புசித்துக்கொண்டு தேகசௌக்கியத்திற்கு ஒருவிதக்குறைவுமில்லாமலிருந்த மனிதர்களை நாம் பார்த்திருக்கின்றோம். மிருகங்கள் பெரும்பாலும் ஒரேவித உணவிலிருக்கின்றன. அப்படியிருக்க ஆகாரத்தை மாற்றுவதால் குணமுண்டு என்று நாம் சொல்லுவதைக்கேட்கச் சிலர் இதன் உண்மையைச் சந்தேகிப்பார்கள். இச்சித்தாந்தம் உண்மையென்று பல பிரசித்த வைத்தியர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒரேவித ஆகாரத்தால் நாவிலைத்து உருசியும் மழுங்கிவிடலாம். இக்காரணங்களால் வேண்டிய ஆகாரத்தை நாம் புசிக்காமல் நிறுத்திவிடும்படி எண்ணமுண்டாகலாம். 'ஒரே வாழைக்காய்ப் பொறியலும் பருப்புக்குழம்புந்தானா? இவ்வண்ணம் புசித்துப்புசித்து எனக்கு ருசியே அற்றுவிட்டது' என்று சிலர் சிலசமயங்களிற் சொல்லியிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஆகாரத்தை மாற்றுவதால் அவர்கள் அவ்வாறு மாற்றப்பட்ட ஆகாரங்களை அதிக உருசியுடன் புசிக்கின்றார்கள். அதே காரணத்தாற் சொற்பம் அதிகமாகவும் அல்லது தங்களுக்கு எவ்வளவு வேண்டுமோ அதற்குக் குறையாமற் புசித்து அதிக புஷ்டியையும் சக்தியையு மடைகின்றார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். குழந்தைகளுக்கு ருசியின்பேரில் ஆகாரத்தைப்புசிக்கும் குணம் அதிகமாகையால் அவர்களுக்கு ஒரேவித ஆகாரத்தைக் கொடுக்காமல் அடிக்கடி யாற்றி மாற்றிக் கொடுத்து வந்தால் அவர்கள் தேக சௌக்கி

யம் அதிகமாகக் காணப்படுகின்றதென்று பெயர்பெற்றவைத்தியர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

இரண்டாவது நமது ஆகாரத்தைச் சுகமாகச் செரித்துக்கொள்ள நமது தேகத்திற்குட் சில நிலைமைகள் சீராகவிருக்கவேண்டும் என்று சொன்னோமல்லவா? அவைகள் யாவையெனில், நமது நாவினின்றும் வாயினின்றும் ஊறும் உமிழ்நீர் (Saliva), நமது தேகத்திலிருக்கும் உணவுசெல்- குழாய் (Alimentary canal) க்குள் சில திரவபதார்த்தங்கள் (Bile, gastric juice &c.), நமது ஆகாரத்தோடு கலந்து அவ்வாகாரத்தை மாற்றுவது. அவ்வாறு அவ்விரஸங்கள் கலக்க நமது தேகத்தின் ரத்தஓட்டம் சீரான நிலைமையிலிருப்பது இவைகளாலேயாம்.

உணவென்பது நமது தேகசௌக்கியத்துடன் விசேஷமாய்ச் சம்பந்தப்பட்டிருக்கின்றபடியால் சுகசந்தர்சனசாஸ்திரத்தில் உணவைப்பற்றி எழுதுகின்றவர்கள் ஒவ்வொரு சமையத்திற் பாகசாஸ்திரத்தையே எடுத்தெழுதுவார்கள். நமக்கு இன்பம் என்பது தேகசௌக்கியத்தால் உண்டாகின்றபடியாலும் அவ்விதசௌக்கியத்திற்கு உணவேமுக்கியகாரணமாகையாலும் இவர்கள் இவ்வளவுதூரம் உணவைப்பற்றி எழுதுவது ஒருவாறு நியாயமென்றே சொல்லவேண்டும். நாமும் அவ்வாறு செய்ய நமது சிறுபுஸ்தகம் அவ்வளவு இடங்கொடுக்கமாட்டாது. நல்லுணவில்லாத காரணத்தால் விளைகின்ற நோய்களுக்குக் கணக்கேயில்லை யாகையால் அந்நோய்களைப்பற்றி எழுதவேண்டுமானால் வைத்தியநூலை முற்றிலும் எழுதவேண்டியதுமாகும். ஆனால் இவ்வாறு செய்யமுயலாமல் நாம் முக்கியமாய் அதிக ஆகாரத்தாலும் குறைந்த ஆகாரத்தாலும் மாறுபடும் தேகசௌக்கியத்தையும் முக்கிய ஆகாரங்களின் குணங்களையும் இங்குச் சுருக்கமாய்ச் சொல்லித்துக்காட்டுவோம்.

அதிக ஆகாரம்;—அதிக ஆகாரத்தை நாம் புசிப்பதால் அவ்வாறு புசிக்கும் அதிகமான ஆகாரத்தை நாம் ஒருபொழுதும் செரித்துக்கொள்ளமாட்டோம். நாம் குழந்தைகளாகவிருந்தபொழுது எதாவது ஒரு சமயத்தில் நமது கலத்தில் அதிக ஆகாரம் இருந்தபொழுது "அன்னம் அதிகமாயிருக்கின்றதே" என்று கேட்டிருப்பதுண்டு. அதற்கு நம்மைப்பெற்றவர்களோ அல்லது பந்துக்களோ 'பாதகமில்லை, அதிகஅன்னத்தை முதன்முதற் புசித்துவிடு' என்று வெகுயுக்தியாகவும் நம்மிடம் அதிக அன்பாகவிருப்பதைக் காட்ட எண்ணியும் சொல்லியிருப்பார்கள். அந்த யுக்தியும் அன்பும் சுகசந்தர்சன விதிக்கொவ்வா. அதிக போஜனம் நமது ஆகாரப்பையில் முற்றிலும் மாறுபடாமல் அழுகி அபானவாயுவை வயிற்றிலுண்டாக்கி அஜீர்ணம், மலபந்தம், பேதி, வயிற்றுப்போக்கு முதலிய நோய்களை விளைவிக்கும். சிலவேளை ஒருவித ஆகாரம் அதாவது நெய்முதலியவைகள் மட்டும்அதிகமாகலாம்.

சர்க்கரை, உப்பு, முதலியவைகள் அதிகமாகலாம். இவ்வாறு எப்பொழுதும் அதிகப்படுதலால் வயிற்றிற் கட்டி, சந்துவாதம், நீர்ரோகம் முதலிய நோய்கள் விளையக்காரணமுண்டாகும். அதிக ஆகாரம் புசிப்பதுடன் தேகவியாயாமமுமில்லாதிருக்குமேயானுல், தீயுடன்காற்றுச்சேர்ந்தவாறு, இந்நோய்கள் சடுதியிற்ரோன்றவிடமுண்டாகும். எளிதில் தேகத்திற் கலக்காத பானங்கள் உட்கொள்ளுவதாலும் எளிதில் ஜரிக்கக்கூடாத ஆகாரங்களை போஜனம் பண்ணுவதாலும் சந்துவாத ரோகங்கள் உண்டாகின்றனவென்பது சித்தாந்தம். கஞ்சி அதிகமாக நிற்கும் ஆகாரங்களை எப்பொழுதும் அதிகமாகப்புசிப்பதால் மூத்திரரோகம் உண்டாகின்றதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

குறைந்த ஆகாரம்:—நமக்குவேண்டுவதான ஆகாரத்தை நாம்அடையாமற் குறைந்து போஜனம் செய்வதால் விளையும் தேகஅசௌக்கியங்களையும் நோய்களையும் ஒருவன் தெரிந்து கொள்ள விரும்புவானேயாயின், அவன், பஞ்சகாலங்களில் ஏற்படுத்தப்படும் கஞ்சித்தொட்டிகளில் ஒன்றைப்போய்ப் பார்க்கலாம். யவக்ஷாரமுள்ள ஆகாரம் கிட்டாமற் போனுல் ஒரே வாரத்தில் ஒருவன் பாதி பாரம் குறைந்து காய்ச்சல், பித்தபாண்டு இவ்வித ரோகங்களால் வருந்துவான். அதன் பிறகு அவனுக்குக் காலோய்தல் கையோய்தல் உண்டாகும்.

கொழுப்பு, சர்க்கரை யிவைகளொன்றுமின்றி யவக்ஷார ஆகாரமே ஒருவன் 5-6 நாட் புசிக்கும்படி வந்தால் அவன் விஷஜ்வரம் முதலிய நோயில் விழுவான். கஞ்சிமட்டும் புசிப்பதால் அவ்வளவு சீக்கிரத்தில் நோய்கள் உண்டாவதாக ஏற்படவில்லை. உப்புக்குறைவதால் உண்டாகும் நோய்கள் பல.

பல நோய்கள் பலவாறுவிளைய முக்கியகாரணங்கள் ஆகாரத்திலும் நமது தேகத்திலும் இருக்கும் குறைகளே. இக்குறைவுகளால் அஜீர்ணம் உண்டாகின்றது. மப்புவயிற்றிற்ரோன்றியதும் அம்மப்பு வெப்பத்தாலும் சீதத்தாலும் காற்றுலும் அதிகரித்து பேதி, வயிற்றுக்கடுப்பு முதலிய ரோகங்களை உண்டாக்குகின்றது.

ஆகையால் நாம் உணவின் குணகுணங்களைப்பற்றி விசாரிக்கும் பொழுது அவ்வுணவில் நாம் முற்கூறிய நான்குவிதச் சேர்க்கைகள் சரியாகவிருக்கின்றனவா, அவ்வுணவு சரியாகச் செரிக்கப்படும் நிலைமையிலிருக்கின்றதா, அவ்வுணவைப்புசிக்கின்றவன் அதைச்செரித்துக்கொள்ளும் சக்தியைச்சரிவர அடைந்திருக்கின்றுன, அவ்வுணவின்குணம் அது சமைக்கப்பட்டதற்கு முந்தியும் பிந்தியும் ஏதாவது மாறுபாட்டை அடைந்திருக்கின்றதா?

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩.] குரோதி ஸு மார்கழிமீ [பகுதி-௨.

கம்பர்.

(௯௨-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவர் இராமாயணம்பாடி அரங்கேற்றியது.

அரும்பெறன் மணியும் பெரும்பெயரமிழ்துமே நிறையப்பெற்ற பாற்கடல்போலப் பரந்துவிளங்குகின்ற இராமாயணமென்னுந் தெய்வவான்பனுவலை இவர் பாடியருளியதற்குக் காரணம், இவரது சிராமபத்தியேயன்றி வேறில்லை யென்பது, இவர், "ஆசைபற்றி யறையலுற் றேன்மற் றிவ், வேசில் கொற்றத் திராமன் கதையரோ" எனவும், "ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனு நறவ மாந்தி, மூங்கையான் பேச லுற்று னென்னயான் மொழிய லுற்றேன்" எனவும் இராமாவதாரத்துரைத்துப் புகுந்தவாற்றால் நன்கறியத்தகுந்து. இவர் "பத்தர் சொன்ன ...ம் பன்னப்பெறுபவோ" என்றதூஉம் இக்கருத்தையே வலியுறுத்தும். இவர் வளர்ந்துசிறத்தற்குக் காரணமான சடையவள்ளல்குடிக்கும் இச்சிராமபத்தி உண்டென்பது, அவ்வள்ளற்குச் சராாமன் எனப்பெயரிட்டு வழங்கியவாற்றால் ஊகிக்கப்படும். அக்குடிப்பரிசயம் இவரது பத்திக்கு ஓர்காரணமாயினும் ஆம். அன்றியும் வான்மீகி முனிவர் திருவாய்மலர்ந்தருளிய சிராமாயணத்தின் திட்பநுட்பஒட்பங்களே இவர்காலத்து யாண்டும் பரந்து விளங்கிமேம்பட்டன என்பதும், அக்காலத்தறிஞரெல்லாம் சிராமகதையை அமிழ்தினும் அதிகமாக மதித்துவந்தனரென்பதும்,

> "வை... மன்னை யிகழ்வு மாசெனக்
> செ... வும்மி தியம்புவ தியாதெனிற்
> பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகழ்
> தெய்வ மாக்கதை மாட்சி தெரிக்கவே." (பாயிரம்.)

"நொய்தி னுய்யசொன் னூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமர மேழ்துளை
யெய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே." (ஷை)

"வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி யென்பான்
றீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்."
(நாட்டுப்படலம்.)

*"எறிகட லுலகந் தன்னு ளின்றமிழ்ப் புலவர்க் கெல்லா
முறுவலுக் குரியதாக மொழிந்தனன் மொழிந்த வென்சொற்
சிறுமையுஞ் சிலையி ராமன் கதைவழிச் செறித றன்னு
லறிவுடை மாந்தர்க் கெல்லா மமிழ்தமொத் திருக்கு மன்றே."
(பாயிரம்.)

என இவர் இராமாவதாரத்து வழங்கியவாற்றால் உய்த்துணரப்படும். இவ்வாறு அறிஞரெல்லாம் ஒருங்குபாராட்டும் சீராமகதையின் தெய்வமாட்சி, இப்பெரும்புலவரது அறிவுடைநெஞ்சினையும் நன்கு கவர்ந்ததாதலின், அதனையே தமது 'செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய' தமிழ்ப்பாக்களாற்பாடிப் புகழ்நிறுத்துதற்கு ஆசைப்பட்டனர் எனினும் அமையும். இவர் இராமாயணத்தைப் பெரும்பான்மை வெண்ணெய்நல்லூரிலும், சிறுபான்மை ஒற்றியூரிலும் இருந்துபாடினரெனவும், ஒற்றியூரில் இவரிருந்தபோது இந்நூலை இரவிலே பாடினரெனவும், அக்காலத்து மாணாக்கர்பலர் பிந்தாமலெழுதுவதற்கு அவ்வூர்க்காளியைத் தீப்பந்தம் பிடிக்கப்பாடினரெனவும்,

'தொடை ஙிரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே.'
(இராமாவதாரப்பாயிரம்.)

கம்பர் காளியைப் பந்தம்பிடியென்று பாடியது.

ஒற்றியூர் காக்க வுறைகின்ற காளியே
வெற்றியூர்க் காகுத்தன் மெய்ச்சரிதை—பற்றியே
நந்தா தெழுதுதற்கு நல்லிரவின் மாணாக்கர்
பிந்தாமற் பந்தம் பிடி. (தமிழ்நாவலர் சரிதை.)

---

* இச்செய்யுள் பழைய ஏடுகளிலுள்ளது.

எனவருவனவற்றால் அறியப்படுகின்றன. இவர் தாம்பாடிய சிராம கதைக்கு இட்ட பெயர் இராமாவதாரம் என்பது,

" நடையி னின்றுயர் நாயகன் றோற்றத்தி
னிடைநி கழ்ந்த விராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை."

(இராமாவதாரப்பாயிரம்.)

*" இத்த லத்து மிராமாவ தாரமே
பத்தி செய்து பரிவுடன் கேட்பவர்
புத்தி மிக்கரும் புண்ணிய முந்தரு
மெத்த லத்து மவனடி யெய்துவார்." (ஷை)

எனவருவனவற்றாலும், புறத்திரட்டுடையார் இந்நூலை, இராமாவதாரம் என்னும் பெயரே கொண்டாளுதலாலும் தெரிகின்றது. இவர் பாடியது பாலகாண்டமுதல் யுத்தகாண்டமீறாகவுள்ள ஆறுகாண்டங்களே என்பதும், பின் உத்தரகாண்டத்தை ஒட்டக்கூத்தர் பாடினாரென்பதும், அவ்வுத்தரகாண்டம் சோழனதவைக்களத்தே அரங்கேற்றப்பட்டதென்பதும்,

" பூணிலாவுங் கம்பனலம் பொலியுந்தமிழாற் புகழெய்திக்
காணுமாறு காண்டமுறுங் கதையிற்பெரிய கதையென்னுந்
தாணில்லாவுங் கழலபயன் சபையிற்பயிலுத் தரகாண்டம்
வாணிதாச னரங்கேற்ற வைத்தார்சோழ மண்டலமே."

(சோழமண்டலசதகம்)

என்னும் படலாற் றெரிகின்றன. ஈண்டு அபயன் என்பது சோழன் என்னும் பொருளில் வந்தது. ஒட்டக்கூத்தர் சரசுவதி தம்பலங் கொடுக்க, அதனாற் கவித்திறம் எய்தினவராதலால் அவரை 'வாணிதாசன்' எனப் பெயர் சிறப்பித்து வழங்குவரெனத் தெரியலாகும். இங்ஙனம் கம்பர் பாடியன ஆறுகாண்டங்களேயாம் என்பதற்குப் பெரிதும் இயையவே, அரசகேசரியார் தாமியற்றிய இரகுவம்மிசம் என்னுஞ் செந்தமிழ்நூலிற் சிராமமூர்த்தியின் திருவவதாரமே யுரைத்து " மற்றிவ்விராமகதையின் பூருவபாகம் முழுதையுங் கடலிற்பெ

* பழைய ஏடுகளிலுள்ளது.

ரிய தமிழ்க்கல்வியினையுடைய கம்பநாடர் நிகழ்ந்தவாறு உரைத்தா ராதலால் அதனை யீண்டுஓதினேனில்லை; அவருரையாத அக்கதையின் உத்தரபாகமே யானினியோதப்புக்கேன்" என்னுங்கருத்தினை வெளிப்படுப்பாராய்,

பொற்றா மரைமா னொழியாது பொலியு மார்ப
வெற்றுங்கு மேனி ரகுராம சரிதை யாவுங்
கற்றார் கலியிற் பெரிதாந் தமிழ்க் கம்பநாட
னுற்றுங் குரைத்தா னுரையாத வோது கிற்பாம்.

என ஓர் பாடலைக்கூறி அதன்பின்னே சீதை வனம்புகுதல், இலவணன்வதை, சம்புகன்வதை, இராமரவதாரநீங்குதல் முதலாகிய உத்தரகாண்டக் கதைகளையே பல படலங்களாற் பாடியதனையும் ஈண்டைக்கு ஆராய்ந்து கொள்க. இவ்விரகுவம்மிசச் செய்யுளாற் கம்பர் உத்தரகாண்டம் பாடினாரில்லையென்பது நன்குதெளியப்படும். இனிச்சில இராமாயண ஏடுகளில்;

கரைபொரு காண்டமேழு *கதைகளா யிரத்தெண்ணூறு
பரவிய பாடைபத்து படலநூற் றைம்பத்தாறு
லுரைதரு விருத்தம்பன்னீ ராயிரத் தொருபத்தாறு
வரமிகு கம்பன்சொன்ன வண்ணமு மெண்பத்தேழே.

என ஓர் செய்யுள் உள்ளது, மேற்காட்டிய பிரபலமான பிரமாணங்களோடு பகைத்தலால் பண்டைவழக்கறியாதார் ஒருவர் பிற்காலத்து இயற்றியதாகுமெனக் கொள்ளத்தகும். 'கரைபொருகாண்டமாறு' என்னும் முதலோடு, அதற்குப் பொருந்திய படலமுதலியவற்றின் வரையறையையுமுடைய பழையபாட்டொன்றைப் பிற்காலத்தார் ஏழுகாண்டங்கட்கும் ஒருவாறுஇயைத்திரித்து இவ்வாறுவழங்கினரென ஊகித்தலுமாம். இச்செய்யுளிற் கணக்கிட்ட ஏழுகாண்டச் செய்யுட்டொகையினின்று உத்தரகாண்டச் செய்யுட்டொகையாகிய கரு00-ம் கழித்து நோக்கின் மற்றை ஆறுகாண்டங்கட்கும் உரிய செய்யுட்டொகை கo0ருகசு ஆகும். இக்காலத்து முதல் ஆறுகாண்டங்கட்கும் உள்ள செய்யுட்டொகை அச்சுப்பிரதிகளில் கo0ருஅஎ-ம்

* 'கதைகளாயிரத் தைஞ்ஞூறு, பரவமர் பத்துநாலு படலநூற்றிருபத்தெட்டு' எனவும் பிரதிபேதமுண்டு.

எட்டுப்பிரதிகளில் கo௪௬௫-ம், கoசு௪௫-ம் ஆகப் பல வேறுவகைப் படுவது. ஆறுகாண்டங்கட்கும் உள்ள படலத்தொகையும் இங்ஙன மே ககங, ககசு, க௨௭, கஙஎ எனப்பலவாருக் காணப்படுகின்றது. உத்தரகாண்டச் செய்யுட்டொகை கரு௦௦ என்பதிற் பெரும்பான்மை வேறுபாடு காணுவிடினும் அதன் படலத்தொகை க௮, ௨ங, என வேறு வேறு காணப்படுகின்றது. இவ்வளவு மாறுபாடுற்ற இக்கா லத்துப் பிரதிகளைக்கொண்டு இச்செய்புளிற்கண்ட வரையறைகட் குப் பொருந்த வுரைப்பது அரிதாமென்க. அன்றியும் புறத்திரட் டுடையார் இராமாவதாரமெனப் பெயரிட்டாண்ட,

எய்தவின்னல் வந்த போழ்தி யார்வரேனும் யாவையுஞ்
செய்ய வல்ல வென்ப தோர்க சென்னெறிக்க ணேகிட
மைய கண்ணி செய்ய பாதம் வல்ல வாய மற்றிவன்
கைக ளின்று பன்ன சாலை கட்ட வல்ல வாயவே.

(இடுக்கணழியாமை-கரு)

என்னுஞ் செய்யுளுக்கு வேருக இக்காலத்து,

மேவு கான மிதிலையர் கோன்மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன
தாவி லெம்பிகை சாலை சமைத்தன
யாவை யாது மிலார்க்கியை யாதவே.

(அயோத்தியாகாண்டம். சித்திரகூடப்படலம்)

என ஓர் செய்புள் காணப்படுதலாற் கம்பர் பாடிய பாடல்கள் சில பிற்காலத்து விடப்பட்டும் பிறர்பாடியன சில இடையிடையே மடுக் கப்பட்டும் இப்போதைப் பிரதிகளுள்ளனவென்று தெளியப்படும். * பரிபாடலிலும் சிந்தாமணியிலும் பிற்காலத்துக் கந்தியார் என்பா ரொருவர் தஞ்சொற்களையுஞ் செய்புள்களையும் இடைமடுத்தாற்போல இவ்விராமாவதாரத்திலும் பிற்காலத்து வெள்ளியம்பலத்தம்பிரான் என்பாரொருவர் தஞ்செய்யுட்கள் சிலவற்றை இடைமடுத்துப் போ யினரென்பர். இவற்றை வெள்ளிபாடல் என்னும் பெயரான் வழங் குவர். இப்பிறழ்ச்சியேயன்றி எழுதினர் பிழைப்பாலும் பாடகர் பிழைப்பாலும் இவ்வேடுகளெய்திய மாறுபாட்டிற்கும் அளவே

* 'செந்தமிழ்' தொகுதி க., பகுதி ங. பக்கம் கஙஅ.

யில்லை. ஆதலால் இங்ஙிலையிற் கம்பர் ஆறுகாண்டங்கட்கும் வகுத்த படலங்கள் இத்துணையெனவும், பாடிய பாடல்கள் இத்துணையென வும், அப்படலங்களும் பாடல்களும் இவைஇவை எனவும் வரையறுத் துணர்த்தல் இயலாதென்றுணர்க. மேற்குறித்த மாறுபாடுகளொ ன்றும் எய்தாதனவும், புறத்திரட்டில் இராமாவதாரம் என்று பெய ரிட்டு எடுத்தாளப்பட்ட செய்யுட்களெல்லாம் தம்பாலுள்ளனவும் ஆகிய மிகப்பழைய ஏடுகள் சில கிடைத்தனவாயின் இவ்வரையறை களின் உண்மை நன்கு புலனாகும் என்று கொள்க.

இனிக் கம்பர் தாம்பாடியருளிய இராமாவதாரத்துள் சடைய வள்ளலது பெருநன்றிபாராட்டி அவ்வள்ளலை ஆங்காங்கு ஒருபது கவிகளாற் புகழ்ந்துள்ளனரென்பது,

எண்ணத்தகும்பா ருள்ளளவு மிரவிமதிய மெழுமளவுங்
கண்ணற்கினிய சயராம கதையிலொருபான் கவிமுழுதும்
வெண்ணைச்சடையன் சடையனென விறலார்கம்பன் விளங்கவைத்த
வண்ணத்துரைவே ளாண்பெருமான் வளஞ்சேர்சோழ மண்டலமே.

(சோழமண்டலசதகம்.)

என்னுஞ்செய்யுளாற் றெரிகின்றது. அப்பத்துப்பாடல்களாவன;—

நடையி னின்றுயர் நாயகன் றோற்றத்தி
னிடைநி கழ்ந்த விராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய் நல்லூர்வயிற் றந்ததே. (பாயிரம்.)

விண்ணவர் போயபின்றை விரிந்தபூ மழையினாலே
தண்ணெனுங் கானநீங்கித் தாங்கருந் தவத்தின்மிக்கோன்
மண்ணவர் வறுமைநோய்க்கு மருந்தன சடையன்வெண்ணை
யண்ணறன் சொல்லேயன்ன படைக்கல மருளினானே.

(பாலகாண்டம், வேள்விப்படலம்.)

அரம டந்தையர் கற்பக நவநிதி யமிழ்தஞ்
சுரபி வாம்பரி மதமலை முதலிய தொடக்கற்
றொருபெ ரும்பொரு ளின்றியே யுவரிபுக் கொளிப்ப
வெருவி யோடின வெண்ணைவாழ் கண்ணன் மேவாரின்.

(ஷை அகலிகைப்படலம்-கஅ)

வண்ண மாலைக் கைபரப்பி யுலகை வளைந்த விருளெல்லா
முண்ண வெண்ணித் தண்மதியத் துதயத்தெழுந்த நிலாக் கற்றை
விண்ணு மண்ணுந் திசையனைத்தும் விழுங்கிக்கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணைச் சடையன்றன் புகழ்போ லெங்கும் பரந்துளதால்.

(ஷை மிதிலைகாண்படலம். எசு.)

மஞ்செனத் திகழ்தரு மலையை மாருதி
யெஞ்சலிற் கடிதெடுத் தெறிய வோளன்
விஞ்சையிற் றங்கினன் சடையன் வெண்ணெயிற்
றஞ்சமென் றூர்களைத் தாங்குந் தன்மைபோல்.

(யுத்தகாண்டம், சேதுபந்தனப்படலம்.)

வாசங்கலந்த மரைநாளநூலின் வகையென்பதென்னை மழையென்
றூசங்கைகொண்ட கொடைமீளியண்ணல் சரராமன்வெண்ணை யணுகுந்
தேசங்கலந்த மறைவாணர்செஞ்சொ லறிவாளரென்றிம் முதலோர்
பாசங்கலந்த பசிபோலகன்ற பதகன்றுரந்த வுரகம்.

(ஷை நாகபாசப்படலம். உ௲)

வன்னிநாட் டியபொன் மௌலி வானவன் மலரின் மேலான்
கன்னிநாட் டிருவைச் சேர்ந்த கண்ணனுமாளுங் காணிச்
சென்னிநாட் டெரியல் வீரன் றியாகமா விநோதன் றெய்வப்
பொன்னிநாட் டெவமைவைப்பைப் புலன்கொள நோக்கிப்போனான்.

(ஷை மருந்துமலைப்படலம். ௫அ)

* அந்தணர் வணிகர் வேளாண் மரபின ராலி நாட்டுச்
சந்தணி புயத்து வள்ளற் சடையனே யனைய சான்றோ
ருய்ந்தன மடிய மென்னு மூவகைய ருவரி நாண
வந்தன ரிராமன் கோயின் மங்கலத் துரிமை மாக்கள்.
'சங்கரனனையசான்றோர்' எனவும் பிரதிபேதமுண்டு

(ஷை திருவபிடேகப்படலம். ௲௲.)

அரியணை யநுமன் றாங்க வங்கத னுடைவாள் வாங்கப்
பரதன்வெண் கவிகை யேந்த விருவருங் கவரி பற்ற
விரைசெறி குழலி யோங்க வெண்ணைமன் சடையன் வண்மை
மரபுளோர் கொடுப்ப வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

(ஷை ஷை. ௩அ,)

* இச்செய்யுள் ஏட்டுப்பிரதிகளிலுள்ளது.

'விரதமா தவர்களேத்த வெண்ணையூர்ச் சடையன் மூந்தை' எனவும், 'விரிகடலுலகங்காக்கும் வெண்ணைமன்சடையன் வண்மை' எனவும், 'உரிமையி னயோத்தியுள்ளா ருரைசெய்வெண்காடன் வந்த மரபினோர்' எனவும் பிரதிபேதங்களுள்ளன.

* மறையவர் வாழி வேத மனுநெறி வாழி நன்னூன்
முறைசெயு மரசர் திங்கண் மும்மழை வாழி மெய்ம்மை
யிறையவ னிராமன் வாழி யிக்கதை கேட்போர் வாழி
யறைபுகழ்ச் சடையன் வாழி யரும்புக ழநுமன் வாழி.

(ஷை விடைகொடுத்தபடலம் வாழ்த்து.)

இவற்றுள் 'வெண்ணைவாழ் கண்ணன்' எனவும் 'கன்னிநாட்டிருவைசேர்ந்த கண்ணன்' எனவும்வருவனவற்றுற்சடையற்குக் கண்ணன் என்பதும் †புலவர் கொடுத்த குணப்பெயராமெனத் தெரிகின்றது. பலர்க்குக் கண்போன்றவன் ஆதலால் அவ்வாறு வழங்கினராவர். இக்கருத்துக்கியையவே ‡'தண்ணார் கமலச்சதுமுகத்தோனை' என்னும் பாட்டில் "பாரிலுள்ளோர் கண்ணுகவாழும் வெண்ணைத் திரிகர்த்தன்" என வந்ததுங் காண்க. இராமகதையில் ஒரு பான்கவியாற் புகழப்பட்டவன் சடையனே என்பது "சயராமகதையிலொரு பான்கவிமுழுதும், வெண்ணைச்சடையன் சடையனென விறலார் கம்பன் விளங்கவைத்த, வண்ணத்துறைவேளாண் பெருமான்" என்று கூறுதலானும் அறியப்படும். இதற்குப் பொருந்தவே பாண்டிமண்டல சதகமுடையாரும்

தேனேறு மின்சொலி ராமாயணத்துத் திருவழுந்தூ
ரானே றனைய தமிழ்க்கம்ப நாட னமைத்துவைத்த
தானேரில் கீர்த்திசெய் வெண்ணெய்நல் லூரிற் சடையனைப்போல்
வானேறு சீர்த்திகொள் வேளாளர் பாண்டியன் மண்டலமே.

எனக்கூறினர். இனி 'அந்தணர் வணிகர்' என்னுஞ் செய்யுளிற் 'சங்கரனனையசான்றோர்' எனவும் 'அரியணையநுமன்' என்னுஞ்செய்யுளில் 'உரிமையி னயோத்தி யுள்ளாருரைசெய்வெண் காடன்வந்த

---

* இச்செய்யுள் ஏட்டுப்பிரதிகளிலுள்ளது.

† "குணப்பெய ரேனைப் புலவோர் கொடுப்பத், தணப்பில வாகித் தழுவும் பெயரே." என்றார் பன்னிருபாட்டியலாரும். (கசஎ.)

‡ 'செந்தமிழ்' தொகுதி ௩. பக்கம் ௫.

மரபினோர்' எனவும் வந்த பாடங்களையே கொண்டுநோக்கிற் கம்பர் சடையனையல்லாமல் அவன் குலத்தவரையும் பாடினாரென எண்ண லாகும். சங்கரன் என்பான் சடையன் தந்தை என்பது முன்னரே கூறப்பட்டது. வெண்காடன் என்பவன் சடையனுக்கு இன்ன வுற வினன் என்பது தெளியப்படவில்லையாயினும் நெருங்கிய சுற்றத்த வன் என்பதுமட்டிலூகித்தலாகும். இச்சடையவள்ளலது குலத் துப் பெண்வழியினரென்று சொல்லப்படுகின்ற மெய்கண்டதேவர்க் குச் சுவேதவனப்பெருமாள் என ஓர் பெயருளதாதல்பற்றி, ஈண்டை வெண்காடன் என்பது அவர் பெயராகவைத்து அவர்க்குப் பிற்கால த்து ஒருவர் இப்பாடத்தை இடைமடுத்தனரோ என ஐயுறுதற்கு மிடனுண்டாதலால் இப்பாடபேதங்களி னுண்மை இப்போது அறி தலரிதாகின்றது. ஒருசாரார் கண்ணன், சரராமன் என்னுமிருவ ரும் சடையனுக்குத் தம்பியர் எனவும் அவரையுங் கம்பர் இராமாவ தாரத்துட் புகழ்ந்துளார் எனவும் கூறுவர். இவ்வாறு பகுத்தறித ற்கு ஏற்ற மேற்கோளொன்றும் யான் காண்கிலேன். அன்றியும் கம்பர், பாண்டியன்முன்னே இளையாரமார்பன்என்பானொருவனை இன்னவன் என்றுரைத்தவிடத்துச் சரராமனுக்கிளையான் எனவே கூறியுள்ளார். சரராமன் சடையனின் வேறாய் அவனுக்கு இளைய னேயாயின் இயல்பாகவே மூத்தோனும் எல்லாரினுஞ் சிறந்து புகழ் பெற்றோனும் பல்லோரானும் நன்கறியப்பட்டோனும் ஆகிய சடை யனுக்கிளையான் எனக்கூறுவரல்லது அவ்வாறு கூறார்; பின்னர்ச் சரராமனை இன்னவன் எனத் தெரிவித்தற்குச் சடையன்றம்பி என வே கூறவேண்டும். இவையல்லாமற் கம்பர் தெய்வவரத்தினாற் கவி சொல்லிய நாளில் முதன்முதற் பாடிய 'மோட்டெருமைவாவிபுக' என்னும் வெண்பாவில் வெண்ணெய்நல்லூரைச்சரராமனூர் எனப்பா டுதலால் சடையனினும் முற்படச் சரராமனது நன்றியே பாராட்டி னார் எனக் கருதற்கும் இடனாகும். சோழமண்டல சதகமுடையார், ஒருபான் கவிமுழுதும் வெண்ணைச்சடையன் புகழப்பட்டுளான் எனக் கருதியதும் தவறாகும். கம்பர் தம்மால் நன்றிபாராட்டிப்புக ழப்பட்டார் பலராகவும், நூல் இறுதியிற் சடையன் ஒருவனையே வாழ்த்தலும் தாம் சாகும்போதும் அச்சடையனது நன்றியே நினைந்

துருகுதலும் * பொருந்தாவாம். இவற்றால் அவ்வொருசாரார்கூற்றுப் பெரிதும் ஐயப்படுதலுடைத்து. மழையென்றுசங்கைகொண்டகொடைமீளியண்ணலும், மன்னவர் வறுமைநோய்க்கு மருந்தானவனும், பாரிலுள்ளோர் பலர்க்குக் கண்போன்றவனும், திரிகர்த்தன் எனப் பட்டம்பெற்றவனுமாகிய வெண்ணைச்சடையனொருவனே சராமன், கண்ணன் என்னும் பெயர்களானும் விளங்கினோன் எனக் கருதுதற்கண் மேற்காட்டிய இடையீடொன்றும் எய்தாமையும் பலவற்றுக்கும் பொருந்தியதாதலும் ஆராய்ந்துகொள்க. இவர்,

"புவிபுகழ் சென்னிபோ ரமலன் றோள்புகழ்
கவிகடம் மனையெனக் கனக ராசியுஞ்
சவியுடைத் தூசுமென் சாந்தும் மாலையு
மவிரிழைக் குப்பையு மளவி லாதது."

(கிட்கிந்தாகாண்டம், பிலநீங்குபடலம்.)

"சென்னிநாட் டெரியல் வீரன்றியாகமா விநோதன் றெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப் புலன்கொள நோக்கிப்போனான்."

(யுத்தகாண்டம், மருத்துமலைப்படலம்.)

எனப்பாடுதலான் இவரைச்சிறப்பித்துயர்த்திய சோழனும் இவரால் நன்றி பாராட்டப்பட்டுளான் என்பது அறியலாகும். இனி யிவர் இராமாவதாரம் அரங்கேற்றியது திருவரங்கப் பெரியகோயிற்கண்ணே யென்பதும் அந்நாள் பங்குனி உத்தரமாம் என்பதும்,

திண்மையேறுங் கம்பனிடஞ் செய்யத்தகும்பல் சிறப்பயர்ந்து
நண்மையேறு மிராமகதை நற்பேர்புவியிற் றழைத்தேற
வுண்மையேறுந் திருவரங்கத் தொருவன்சபையி லுத்தரநாள்
வண்மையேற வரங்கேற்றி வைத்தார்சோழ மண்டலமே.

[மேற்கோள்.]

"பண்ணிய விராமகாதை பங்குனி யுத்தரத்திற்
கண்ணிய வரங்கர்முன்னே கவியரங் கேற்றினானே."

என்பனவற்றானறியப்படும். பங்குனியுத்தரநாள் சீராமமூர்த்தியின் திருக்கல்யாண தினமாதலால் அதனையே தாம்பாடிய இராமாவதாரம் அரங்கேற்றுதற்கு உரிய மங்கலநாளாகக் கொண்டனராவர்;

---

* இது மேலுணர்த்தப்படும்.

பங்குனி யுத்தர மான பகற்போ
தங்க ணிருக்கினி லாயிர நாமச்
சிங்க மணத்தொழில் செய்த திறத்தான்
மங்கல வங்கி வசிட்டன் வகுத்தான். (கடிமணப்படலம்.)

எனக்கூறியதனையும் நோக்கிக்கொள்ளுக. 'பங்குனி யத்த நாளில்' என்னும் பிரதிபேதமுமுண்டு. அது சோழமண்டலசதகத்துக் கூறப்பட்டதனோடுமாறுபடுதலேயும் பங்குனியுத்தரம்போலச் சிறவாமையையும் தேர்ந்துகொள்க. இவர் சோழனது அவையிலரங்கேற்றாமற் பெரியகோயிலேயே அதற்கேற்ற நல்லவையாகக் கருதியதனுனே, இவர் அரசவையினும் அறிவுடையந்தணரது நல்லவையையே பெரிதும் மதித்தனரென்பதும், ஒருவரான் வேண்டப்படாமற் றாமே தமது சீராமபத்திமுதிர்ச்சியாற் பாடிய பெருநூலாகலின் அதனை அப்பெரியகோயிற் கடைத்தலைபற்றிவாழும் பரமபத்தர்களான அரியபெரியார்கள் திருச்செவிகளில் ஏற்பிக்கவே உள்ளமுவந்தனரென்பதும் நன்குணரலாகும். இவர் இராமாவதாரம் அரங்கேற்றுதற்காகத் திருவரங்கப்பெரியகோயிலையெய்தி ஆண்டைப் பிரணவாகாரவிமானத்து அறிதுயிலமர்ந்த கருணைமாமுகிலைச் சேவித்து நின்றபோது அவ்விறைவன், இவரது பத்திக்குவந்து இவரைத் தன்னடியார்க்கு ஆட்படுத்தக்கருதி *'நஞ்சட கோபனைப் பாடினையோ' என்று அருச்சகர் முகனுய்த் திருவுளம்பற்றித் தமிழ்மகளின் தவப்பேறனைய சடகோபரது பரமஞானபத்தியதிசயத்தை இவர்நெஞ்சிற் றேற்றுவித் தருளினுன். அப்போதே இவர் அவ்வாழ்வாரது திருக்கோயின்முன்றிலிற் புக்குப் பணிந்துகிடந்தார்க்கு ஆழ்வாரதுதிருவருணேக்கம் உண்டாயிற்று. அங்கிலேபிலெழுந்து ஆழ்வாரைப்போற்றி 'வேதத்தின் முன் செல்க' என்றெடுத்துத் தேனெனப்பாலெனச் சில்லமிழ் தூற்றென ஒருநூறு செய்யுள் அந்தாதியாகப்பாடி ஆழ்வார்க்கடியராய்ச் சிறந்தனர். இதன்பின்னேதா னிராமாவதாரவரங்கேற்றம் சிறப்பாக நிறைவேறியதென்ப. இவர் சடகோபரந்தாதிக்கண்,

"பாவைத் திருவாய்மொழிப்பழத் தைப்பசுங் கற்பகத்தின்
பூவைப் பொருகடற் போதா வமுதைப் பொருள்சுரக்குங்

---

* சடகோபரந்தாதி, பாயிரம்.

கோவைப் பணித்தவெங் கோவையல் லாவென்னைக் குற்றங்கண்டென்
ஞவைப் பறிப்பினு நல்லோரன் ரேமற்றை நாவலரே."

எனப்பாடுதலால் இவர் இராமாவதாரம் அரங்கேற்றப் புக்கபோது திருவரங்கத்துள்ள பெருநாவலர்கள் இவர்க்கு ஆழ்வார் சம்பந்தமில்லாமைபற்றி இவர்பாற் பலகுற்றங்காணத் தலைப்பட்டனரெனவும் ஆழ்வாரைப்பாடி யடியராயபின்னே தான் இவர் அவர்களால் அபிமானிக்கப்பட்டனரெனவும் கொள்ளத்தகும். இவர் ஆழ்வாரால் அருளப்பட்டனரென்பது,

இழைத்தா ரொருவரு மில்லா மறைகளை யின்றமிழாற்
குழைத்தார் குருகையிற் கூட்டங்கொண் டார்கும ரித்துறைவர்
மழைத்தார் தடக்கைக ளாலென்னை வானின்வரம் பிடைநின்
றழைத்தா ரறிவுந்தந் தாரங்கும் போயவர்க் காட்செய்வனே.

நாய்போற் பிறர்கடை தோறு நுழைந்தவ ரெச்சினச்சிப்
பேய்போற் றிரியும் பிறவியி னேனைப் பிறவியென்னு
நோய்போ மருந்தென்னு நன்றிருவாய்மொழி நோக்குவித்துத்
தாய்போ லுதவிசெய் தாய்க்கடி யேன்பண்டென் சாதித்ததே.

என இவர் பாடுதலான் நன்கறியலாகும். இவர் ஆழ்வாரது திருவாய்மொழியினை எவ்வளவாக மதித்தனரென்பது

பண்ணுந் தமிழுந் தவஞ்செய் தனபழ நான்மறையு
மண்ணும் விசும்புந் தவஞ்செய் தனமகிழ் மாறன்செய்யு
ளெண்ணுந் தகைமைக் குரியமெய் யோகியர் ஞானமென்னுங்
கண்ணும் மனமுஞ் செவியுந் தவஞ்செய்த காலத்திலே.

* உரிக்கின்ற கோடலி னுந்துகந் தம்மென வொன்றுமின்றி
விரிக்குந் தொறும்வெறும் பாழாய் விடும்பிறர் புன்கவிமெய்
தெரிக்கின்ற கோச்சட கோபன்றன் றெய்வக் கவிபுவியிற்
சுரிக்கின்ற நுண்மணை லூற்றெருக்குந் தோண்டச் சுரத்தலினே.

என்னும் இவர்பாடல்களான் உணரப்படும்.

---

* 'கோடலுரிபோ லாராயினேதுமிலையாதி' (நாகபாசப்படலம்-உசுக) என இவ்வுவமை இராமாவதாரத்தும் வந்தது கண்டுகொள்க.

தேவிற் சிறந்த திருமாற்குத் தக்கதெய் வக்கவிஞன்
பாவிற் சிறந்த திருவாய் மொழிபகர் பண்டிதனே
நாவிற் சிறந்தநம் மாறற்குத் தக்கநந் நாவலவன்
பூவிற் சிறந்தவாழ் வான்கம்ப நாட்டுப் புலமையனே.

என்னுஞ் சடகோபரந்தாதிப் பாயிரத்தான் அத்திருவரங்கத்துள்ள பெரியாரெல்லாம் இவரை நம்பெருமாளுக்கு உரியராகிய நம்மாழ்வார்போல, நம்மாழ்வார்க்குரியராகிய நந்நாவலரென்று * உரிமையினுயர்த்தி அன்புபாராட்டினரென்பது தேறப்படும். நன்னாவலவன் என்றும் பாடமோதுவாருமுளர்.

இனிச்சில இராமாயண ஏடுகளில் விடைகொடுத்த படலத்தின் பின் சில அரிய செய்யுட்கள் வரையப்பட்டுள்ளன. அவையாவன,

நாராயணாய நமவென்னு நன்னெஞ்சர்
பாராளும் பாதம் பணிந்தேத்து மாறறியேன்
காராரு மேனிக் கருணா கரமூர்த்திக்
காரா தனையென் னறியாமை யொன்றுமே.

பராவரு மிராமன் மாதோ டிளவல்பின் படரக் கான்போய்
விராதனைக் கரனை மானைக் கவந்தனை வென்றி கொண்டு
மராமரம் வாலி மார்பு துளைத்தனை வகுத்துப் பின்ன
ரிராவணன் குலனும் பொன்ற வெய்துட னயோத்தி வந்தான்.

வான்வளஞ் சுரக்க நீதி மநுநெறி முறையெந் நாளுந்
தான்வளர்ந் திடுக நல்லோர் தங்கிளை தழைத்து வாழ்க
தேன்வளர்ந் தருந்த மாலைத் தெசரத ராமன் செய்கை
யானளந் தறிந்த பாட லிடையறா தொளிர்க வெங்கும்.

ஆவின் கொடைச்சகர ராயிரத்து நூறொழித்துத்
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு—மூவலூர்ச்
சீரார் குணாதித்தன் சேயமையப் பாடினான்
காரார்கா குத்தன் கதை.

தராதலத்தி னுள்ள தமிழ்க்குற்ற மெல்லா
மராவு மரமாயிற் றன்றே—யிராவணனை
யம்பினால் வீழ்த்தா னடிபணியு மாதீந்தன்
கம்பனா டாள்வான் கவி.

---

* "நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை, யென்ப ரவரவர்தம் மேற்றத்தால்" (உபதேசரத்தினமாலை) என்ப.

ஆதவன் புதல்வன் முத்தி யறிவினை யளிக்கு மண்ணல்
போதவ னிராம காதை புகன்றருள் புனிதன் மண்மேற்
கோதவஞ் சிறிது மில்லான் கொண்டன்மா றன்னை யொப்பான்
மாதவன் கம்பன் செம்பொன் மலரடி தொழுது வாழ்வாம்.

இம்பரு மும்பர் தாமு மேத்திய விராம காதை
தம்பமா முத்தி சேர்தல் சத்தியஞ் சத்தியம்மே
யம்பரந் தன்னின் மேவு மாதித்தன் புதல்வன் ஞானக்
கம்பன்செங் கமல பாதங் கருத்துற விருத்துவாமே.

இவற்றுள்; முதன்மூன்றுங் கம்பர் பாடியனவாமெனத் தோற்றுகின்றது. மற்றைநான்கும் பிறர்பிறர் கூறியனவாகும். இறுதிச்செய்யுளில் 'ஆதித்தன்புதல்வன்' எனவருதலானும், அவ்வாதித்தன் என்னும்பெயரே மற்றையிரண்டு வெண்பாக்களிலும் பயிறலானும் கம்பர் தந்தையார்க்கு ஆதித்தன் என்பது பெயராமெனத் தெரிகின்றது. இதுபற்றியே "தராதலத்தினுள்ள" என்னும்பாட்டில் 'ஆதித்தன் கம்பன்' என வழங்கினர் என்று அறியப்படுகின்றது. இது சங்கரன் புதல்வனை சடையனைச் 'சங்கரன் சடையன்' என வழங்கியதுபோல்வது. ஆதவன் என்பது ஆதித்தனென்பதற்குப் பிரதிநாமமாதலால், இவரை, "ஆதவன்புதல்வன்" எனவும் வழங்கினராவர்.* 'ஆவின் கொடை' என்னுஞ் செய்யுளில் "திருவழுந்தூர் நன்னாட்டு மூவலூர்ச் சீரார் குணாதித்தன்சேய்" எனவருதலால், இவருடைய தந்தையார் திருவழுந்தூர்நாட்டு மூவலூரில் வசித்தவரெனத் தோன்றுவது. கம்பர்பிறந்தவூர் திருவழுந்தூர் என்பது நன்கு தெளியப்பட்டதாதலின் அவ்விரண்டூர்களிலும் இவர்தந்தையார் இருந்தனராவரெனக் கருதப்படுகின்றது. திருவழுந்தூரும், மூவலூரும் மிகவும் சமீபமான ஊர்களென்பதும் உணர்க. மேற்காட்டிய வெண்பாக்களிரண்டும், இவர் இராமாவதார மரங்கேற்றிய காலத்து ஆண்டிருந்து கேட்டோர் பாடியனவாமெனக் கொள்ளத்தகும். (இன்னும் வரும்)

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

---

* மதுரையிற் செல்லத்தம்மை கோவிற் பூசகர்கள் கம்பர் வழியினரென்று கொண்டு தங்களைச் சூரியகுலத்தவரெனக் கூறுகின்றனர், அஃது இவ்வாதித்தன் என்னும் பெயர்பற்றி யாகுமெனத் தோன்றுவது.

"வீரகல், மாஸ்திகல்"

மைசூரைச்சேர்ந்த சிவமுகி, ஹாஸநம் ஜில்லாக்களிலும், சேலம் வடஆற்காடு ஜில்லாக்களின் சிற்சிலபாகங்களிலும் இருதிறமான சிற்பக்கற்கள் சாதாரணமாகக் காணப்படுகின்றன. அவைகளை அவ்விடத்தார் முறையே வீரகல், மாஸ்திகல்களென்றுபேர்கூறுகிறார்கள். இவற்றுள் (1)வீரகல்லென்பது ஒழுங்குசெய்தேனும், அப்படிச்செய்யாயலேனும் இருக்கும் ஓர் பலகைக்கல். இக்கல்லில் சாதாரணமாக ஒரு வீரனைப்போன்ற பிம்பமொன்று சிற்பித்திருக்கும். வெகு புராதன வீரகல்லில் ஒரேபடிமம் காணப்படுகின்றது. இதன் தலைப்பில் ஓர்சிறு சாஸனம் எழுதப்பட்டிருக்கும் (இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கும் படத்தில் 1-வது கல்லை, மேல்விவரத்துடன் ஒத்திட்டுப்பார்க்க)

பிற்காலத்திற்செய்யப்பட்ட வீரகல்கள் வெகுவிவரமாய்ச் சிற்பித்திருப்பதுடன் எழுத்துக்களும் சமனாகச்செய்தபாகத்தில் அடித்திருக்கும் (படத்தில் 2-வது கல்லைப்பார்க்க). ஒவ்வோர் அறையின் இடைவெளிகளிலும் இவ்வெழுத்துக்களைக் காணலாம். இக்கல்லின் கீழறையில் இடதுபக்கத்தில் மூன்றுபசுக்கள் காட்டப்பட்டிருக்கின்றன. அவை, பெரி நாய்காட்டியிருக்கும் வீரன்பக்கத்திலிருப்பதுடன் அவன் பின்னோக்கியுஞ்செல்கின்றன. இப்பெருவீரனே அவ்வறையிற் காட்டியிருக்கும் சண்டையில் வெற்றியடைந்ததற்பின் மடிந்தவன். இவன்பொருட்டே, இக்கல், இவனை ஆவாஹனஞ்செய்து நாட்டப்பட்டது.


மேலறையில், இவன் அப்ஸரஸ்ஸ்திரீ ஸ்திரியிருவரால் தாங்கப்பட்டு சுவர்க்கலோகத்துக்கு அழைத்துக்கொண்டு போகப்படுகிறான். இப்பெண்களிருமருங்கும் வெண்சாமரம் வீசுகிறார்கள்.

முதலறையில் இவனே, வீரசுவர்க்கத்தில் பகவத்சன்னிதானத்தில் அவரை தியானித்துக்கொண்டு நிற்கிறான். இடதுபக்கத்துக் காமதேனுவும், சூரியனும், வலப்பக்கத்துநந்தியும் காட்டப்பட்டுள்ளன.

---

(1) இவ்வார்த்தைகள் அவ்விடத்தார் வழங்குவதுபோலவே உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

'வீரகல்'



இடைவெளிகளில் வெட்டியிருக்கும் எழுத்துக்கள், இவ்வீரன் மடிந்தகாரணத்தை கூறுகின்றது. இவ்வீரகல்கள் பூசலிலாயினும், நிரைமீட்சிகளிலாயினும், வேட்டையிலாயினும் மடிந்த வீரர்களுக்காக நடப்பட்டுவந்தன. மடிந்தகாரணமுதலியவற்றைக் குறிக்கும் சாஸனங்களின் சுவரூபத்தை விளக்குதற்பொருட்டு அடியிற்சில உதாரணங்கள் காண்பிப்போம்; அவைவருமாறு;—

(1) ஸ்ரீ மதிரைகொண்ட கோப்பரகேசரிவன்மற்கு யாண்டிருபத்தொன்பதாவது பெருமானடிகளான் முக்குட்டூர்கொள்ள மீட்டுப்பட்டான் வதுனவாரன் வரதன்தாண்டன். (1)

(2) ஸ்ரீ கோவிசைய நிருபதொங்க விக்கிரம பன்மற்கு யாண்டிருபத்தாருவது படுவூர்கோட்டத்து மேலடையாறுநாட்டு ஆமையூர் மேல்நளம்பன்படைய வந்துதொறுக்கொள பிருதிகங்கரையர் சேவகர் பெருநகரகரக்கொண்டக்காவிதி அகளங்கத்துவரர்யர் மகன் சனன் தளராவிழுந்துபட்டான்.

(3) ஸ்வஸ்தி ஸ்ரீமத் புஜபலசக்ரவர்த்தி பிஜ்ஜண தேவ
ரஸ்ய ஸுகஸங்கதா விநோதேந ராஜ்யம் குர்வதி |
வநவாஸி நாடதண்டநாயக பத்மரஸ தேவேஷு தக்ஷிணகேதார
தேவர பாதாராதகரா வாமசக்தி தேவர பந்திய, ஹிடிதலி
தொணவத்தி மெமெறகாற பாபெய நாயகாதிஸமரதொ ஸ்வர்க்க
கஸிய மதுகெய பாபெயகல்லு நிலிஸி வீரஸாலெய மாடி
ஸிதா | ஸ்ரீ.

---

(1) இச்சாஸனமுங் கீழ்வருவதும் எபிகிராபியா இண்டிகாவிலிருந்து எடுக்கப்பட்டன.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீமது புஜபலசக்கரவர்த்தி (யாகிய) பிஜ்ஜணதேவரசர் சுகமாயும் புத்தியோடும் ராஜரீகம்செய்து (கொண்டு) இருக்க, வனவாசி நாட்டுத்தண்டநாயகனாகிய பத்மரசன் ஏவலால் தக்ஷிணகேதாரத்துத் தேவர் பாதாராதகராகிய வாமசக்கிதேவரைக்கட்டிப்பிடித்ததில், தொணவத்தியிலிருக்கும்மெமெறகாறனாகிய பாபெயநாயகன் செருச்செய்து ஸ்வர்க்கஸ்தனானதற்கு, மருமகன் மதுகெயபாபெயன் கல்லைநட்டு வீரசாலையை எடுப்பித்தான்.

இனிமடிந்த வீரர்களுக்குக் கன்னடுப்விஷயத்தைக்குறித்து தமிழிலக்கியங்களில் நாம் பலவிடங்களிற் கண்டவற்றை அடியில் எம்மாலியன்றமட்டும் எடுத்துக்காட்டி இப்புராதனமான தமிழ்நாட்டுவழக்கத்தை விளக்குவோம்.

தமிழிலக்கணங்களுள்ளெல்லாம் மிகப்பழையதான தொல்காப்பியத்தில், பொருளதிகாரம், புறத்திணையியல் 60-வது சூத்திரத்திறுதியில், போர்முதலியவற்றுட்பட்டு வீழ்ந்தோர்க்குக்கன்னடுதலைக் குறித்து,

"காட்சி கால்கோ ணீர்ப்படை நடுகல்
சீர்த்த மரபிற் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட வெழுமூன்று துறைத்தே"

என்று வர்ணித்திருத்தலை உரையாசிரியர் பற்பலஉதாரணங்களாலும் தெளிவுறுத்தியதைக்கொண்டு கன்னடுதல் முதலியவற்றின் இலக்கணத்தைக் கூறுவோம்.

போரில் மடிந்த வீரனைக்குறித்து, இவன் உற்ருர் நண்பர் பலர் கூடி "கல்கெழுசுரத்திற் சென்று கற்கண்டு" அதுகொணர்ந்தபின் அக்கல்லினை நீரிற்படுத்துத் தூய்மைசெய்து, பின்னர்ப்பேரும் பீடும் எழுதிநாட்டி,

"காப்புநூல் யாத்துக் கடிகமழ் நீ ராட்டிப்
பூப்பலி பெய்து புகைகொளீஇ—மீப்படர்ந்த
காளை நடுகற் சிறப்பயர்ந்து"
"நெய்ந் நறை கொளீஇ"

பிறகு அக்கல்லைத் தெய்வமாகப் பாவித்து அதற்குப் பெருஞ்சிறப்புக்களைப்படைத்து வாழ்த்திக்கோயில் கொடுபுகுவது வழக்கம். இவ்விடத்திலிதனை நட்டு இதைச்சூழ வீரசாலை என்று ஒரு கட்டிடமெடுத்து, பின் பாணர்களைக்கொண்டு மடிந்தவீரன் சீர்த்தியைப்பாடுவிப்பதும் வழக்கமாயிருந்தது. இவ்விஷயங்களைச்சுருங்கச் சூத்திரரூபத்தில் அடியில்வருமாறு எழுதினர் ஐயனரிதனர் தம் புறப்பொருள் வெண்பாமாலையிலும்;—

"ஆஞ வென்றி அமரில்வீழ்ந் தோற்குக்
சானநீளிடைக் கற்கண் டன்று.

"மண்மருளத் துடிகறங்க
விண்மேயாற்குக் கற்கொண்டன்று.

"வண்டுசூழ் தாமம் புடையன வாகக்
கண்டு கொண்ட கன்னீர்ப் படுத்தன்று.

"அவன்பெயர் கன்மிசைப்பொறித்துக்
சவின்பெறக் கன்ஞட்டின்று.

"நிழலவி ரெழின் மணிப்பூட்
கழல்வெய்யோன் கல்வாழ்த்தின்று.

"வேத்தமருள் விளிந்தோன் கல்லென
வேத்தினர்துவன்றி யிற்கொண்டுபுக்கன்று."

இவ்வாறு கன்னடுதல் என்னும் பொருளையே உள்ளடக்கித் திருக்குறளாசிரியர் "என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை, முன்னின்று கன்னின் றவர்" என்று எழுதியிருக்கிருர். இதற்குப் பரிமேலழகர், "பகைவரே! என்னுடையதலைவனெதிர் (போரேற்று) நின்று (அவன் வேல்பட்டு வீழ்ந்து) கல்லினிடத்தே நின்ற வீரர் பலராவார்; (நீர் அதனிடத்து நில்லாமல் உம்முடலிலே நிற்கைவேண்டின்) என்னுடைய தலைவனெதிர்(போரேற்று)நில்லாதேயுங்கள்" என்று பதவுரையாலும், "கல்-போரில் வீரர் இறந்தவிடத்து அவருருவஞ்செய்து நடப்படுதல்; ஒரு வீரன் தன்மறம் அரசன்மேல் வைத்துச் சொல்லியபடி" என்னும் குறிப்பாலும் தெரிவித்தார்.

பத்துப்பாட்டு மலைபடுகடாத்துள் "நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர், செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட, கல்லேசு கவலையெண்ணுமிகப் பலவே" என்றிருப்பதனுக்கு, ஆசிரியர் நச்சினர்க்கினியர் "கெடாதநல்ல புகழினையுடைய பெயர்களை எழுதி நட்டகற்கள் முதுகிட்டுப்போனவர்களை யிகழும் பலவழிகள் எண்ணுதல் மிகும்படி பலவாயிருக்கும்" எனப்பொருள்செய்திருத்தலும் காண்க.

வீரகல் நடுவதைக்குறித்து அகப்பாட்டிலும் (131) "ஆடவர், பெயரும் பீடு மெழுதி யதர்தொறும், பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்" எனவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

கோப்பெருஞ் சோழனிறந்து கன்னடப்பட்டானென்று கேள்வியுற்று, அது நட்டவிடத்திற்போய் உறையூர்கண்ட பொத்தியார் பாடிய 221-ம் புறச்செய்யுளில்,

"கெடுவி னில்லிசை சூடி
நடுக லாயினன் புரவல னெனவே"

என்பதற்கு "கேடில்லாத நல்ல புகழ்ச்சிமாலையைச் சூடிநடப்பட்ட கல்லாயினன், எம்மைப் பாதுகாப்போனெனச் சொல்லி" என்று உரைகாரர் பொருள் கூறியுள்ளார்.

கி-பி. 11-ம் நூற்றுண்டின் கடைக்காலில் அரசாண்ட சோழ சக்கரவர்த்தியாகிய வீரசோழன் என்று மறு பெயர் பூண்ட வீரராஜேந்திரன் காலத்தெழுதிய வீரசோழியத்தில், புத்தமித்திரனர்,

"துகளறு கற்றேடாப் பொறித்தல் கரந்தைத்திறம்"

என்றிவ்விஷயத்தைக்குறிப்பாகக் காட்டியிருத்தற்கு, உரையாசிரியர் பெருந்தேவனர், "துகளறுகற்றேடுதலும், பொறித்தகல்லு நீருட்குளிப்பித்தலும், கன்னடுதலுமாம்" என்று விரித்துரை எழுதினர்.

சுரம்போக்கலுக்குதாரணமாய் நாயகிக்கு நாயகன், நட்டகல்லின் பெருமையைக்குறித்துச் சொல்லுவதைக்கல்லாடத்திலும் காணலாம்.

இற்றைக்குச் சற்றேறக்குறைய 200 வருஷங்களுக்குமுன் எழுதிய இலக்கணவிளக்கத்துள்ளும் வைத்தியநாததேசிகர் இவ்வழக்கத்தை எடுத்துக்காட்டியிருக்கிறர். அதாவது,

"களத்திடை வீழ்ந்தோர்க்குக் கற்கண் டிடுதலுங்
கற்கோ ணிலையுங் கன்னீர்ப் படுத்தலு
மற்றவை நிரைத்த வத்துறைப் பகுதியுங்
கன்னாட் டுதலுங் கன்முறை பழிச்சலும்,
பொன்னா ரிற்கொடு புகுதலும்" (சூத்திரம்-619).

ஆயின் இவ்வழக்கம் இவர்காலத்திருந்திலது; பழைய வழக்கத்தை இவர் விளக்கி எழுதினரோ ழிய வேறில்லை.

இவ்வாறு இன்னம் பற்பலவிடங்களிலும் இவ்வழக்கத்தைக் குறித்தமேற்கோள்கள் பலவாகக் காணலாம். இவ்வழக்கம் கொடுந் தமிழாகிய கன்னடம் வழங்கிய தேசத்திலும், அதை அடுத்தவிடங்க ளிலுமே காணப்படுதலின் தமிழரசர்க்கும் குந்தளர் முதலிய கன்ன ட ராஜர்களுக்கும் பொதுவானயுத்தகளங்கள் அவ்விடங்களேஎனத் தெரியவருகின்றது. வடதேசங்களில் இக்கல்லிருப்பதாகக் காணோ ம். ஆகவே இது தமிழர்க்கே உரித்தானது என்பதற்கையமில்லை.

(இன்னும் வரும்.)

து. அ. கோபிநாதராவ்.

செல்வம்.

(செந்தமிழ் ருமு-ம் பகுதி. ருசு-ம் பக்கத்தொடர்ச்சி,)

பிறரிடத்திற் கூலிவேலை செய்து இடர்ப்பட்டுப் பிழைப்பவர் கள் தங்கள் வருமானத்திற் சிறிது நிலுவைபிடித்துச் சேர்த்துவந் தால், அச்சேர்மானத்தைக்கொண்டு தாங்கள் சில்காலத்தில் சுவதந் தரராகித் தங்கள்மட்டிலே ஏதாவது ஒருதொழின்முயற்சி செய்து சிறக்கலாம். ஊதாரிகளான எசமானரிடத்தில் உத்தியோகஞ்செய்ப வர் எத்தனைபேர். இங்ஙனம் சுவதந்தரர்களாக, அவ்வெசமானர் பரத ந்த்ரராவதை நாம் காண்கிறோம். ' என்வர்த்தகசாலையில் வேண்டுமள வுக்கு அதிகமாகவே இலக்கர்களும் மற்ற ஆள்களும் இருத்தலால் உன்னைவைத்துக்கொள்ள அவசியமில்லை' என்ற சாவகாரியின் வார் த்தையைக்கேட்டு மனம்புழுங்கித் தலைகுனிந்து திரும்பிச்செல்கையி ல், கீழே விழுந்துகிடந்த ஒருகுண்டூசியைக்கண்டு, சிறுதுரும்பும் பல் லுக்குத்தவுதவுமாகையால் இந்த ஊசியும் ஓர் ஆபத்துக்கு உதவுமெ ன்று அதையெடுத்துத் தனது உடையில் செருகிக்கொண்ட லப்பீட் என்பவன், அதுவே வியாஜமாக அந்தச்சாவகாரியிடம் வேலையிலமர் ந்து, தனதுஉழைப்பினாலும் யோக்கியதையாலும் அவ்வர்த்தகசாலை

யில் மேன்மேலுயர்ந்து தலைமையுத்தியோகஸ்தனாகி, கடைசியில்தான் சேர்த்துவந்த சேர்மானத்தின் உதவியால் வர்த்தகத்தில் பாகஸ்தனாய் அப்பால் தனியே ஒரு வர்த்தகசாலையு மேற்படுத்திக்கொண்டு, இறந்துபோன சாவகாரியின் மைந்தனுக்கு நன்றியறிவுடனே பொருளுதவியும் செய்துவந்தான்.

தானமது விரும்பு. தருமத்துக்குத் தாழ்ச்சிவராது. தருமத்துக்கு அழிவு சற்றும் வராது. தருமமே தலைகாக்கும். ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர். ஈயாதார்வாழ்ந்தென்ன இண்டஞ்செடி தழைத்தென்ன?

> அற்றாரழிபசிதீர்த்தலஃதொருவன்
> பெற்றான்பொருள்வைப்புழி.

தொழில்செய்து சீவனம்பண்ணச் சக்திஇருக்கவும் அது செய்யாத சோம்பேறிகளுக்கு யாதோருதவியும் செய்யலாகாது. குருடர் முடவர் முதலான அங்கவீனமுள்ளவர்களுக்கு அவசியமான உதவிகளை இயன்றமட்டில் செய்யவேண்டும். பாத்திரமறிந்து பிச்சையிடு (கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு). ஒருவர் நமக்குச்செய்த நன்மைக்குப் பிரதியாக ஒருநன்மை செய்வது உபகாரமன்று. 'மாறீவார்க்கீதல் பொலிகடனென்னும் பெயர்த்து'

> வறியார்க்கொன் றீவதேயீகை மற்றெல்லாம்
> குறியெதிர்ப்பை நீர துடைத்து.

தன்னளவிலே முட்டுப்பாடுடையவன் தருமஞ்செய்வதியலாது. தனக்குக்கண்டு தானம் வழங்கவேண்டும். தாய்தந்தையர் பொருளின்றி வருந்தாநிற்கத் தநயர்கள் ஏனையர்க்குத்தானஞ்செய்வது கிரமமாகாது. ஆத்தாள் அம்மணமாக இருக்கக் கும்பகோணத்தில் கோதானமா? நம்முடைய உறவினரில் நொந்திருப்பார்க்கு உதவி செய்யாமல் மற்றவர்க்கு உபகாரஞ்செய்வதும் பேதைமையே. "செல்வர்க்கழகு செழுங்கிளைதாங்குதல்"

> ஏதிலாராரத்தமர் பசிப்பர்பேதை
> பெருஞ்செல்வ முற்றக்கடை.

குடும்பச்செலவிற்குரியதுபோக இங்ஙனம் உறவினர் முதலியோர்க்

ருச் செயக்கடவ கடப்பாடுகளைச்செய்து எஞ்சிய பொருளை வறி யார்க்கு ஈதற்குரியது.

இடனில்பருவத்துமொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

பாழாய்ப்போகிறது பசுவின்வாயிலே போவதுநன்றே. பாழா ய்ப்போகிறதைப் பசுவின்வாயி லிடுவது மாத்திரமே தருமமாகாது. தனது பதவிக்குரிய செலவுகளிலும் தனக்குரிய சௌகரியங்களிலும் அநாவசியமான சிலவற்றைக் குறைத்தாயினும் தான் கருதிய நன் மையை மனப்பூர்வமாய்ச் செய்வதே தருமசிந்தையோடு செய்வத ற்கு அறிகுறி.

இல்லா விடத்து மியைந்த வளவினல்
உள்ள விடம்போற் பெரிதுவந்து—மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவா மாண்டைக் கதவு.

இத்தகைச் சிந்தையுடையவனுக்குத் தரித்திரமாவது—

நயனுடையானல்கூர்ந்தானுதல்செயுநீர
செய்யாதமைகலாவாறு.

ஆயினும்,

உரைப்பாருரைப்பவையெல்லாமிரப்பார்க்கொன்
றீவார்மேனிற்கும்புகழ்.

ஆதலின், தானே பிரதிஷ்டையை விரும்பித் தானஞ்செய்ய வேண்டா.

மனத்துக்கண் மாசிலனுதலனைத்தறன்
ஆகுலநீரபிற.

நமது நூல்கள் வரையறுத்திருக்கும் தானவகை முப்பத்திரண் டில் சிலவற்றை இக்காலத்தவர் ஏற்புடையனவாகக்கொள்ளார். அங் ஙனந்தள்ளுபடியாயின போக ஏனையவற்றிற்பல, வெகு ஜனநன்மை க்குரியனவே. ஏழைகள் தங்களளவில் தனித்தனியாகவும் பலர்கூடி ஒருமிக்கவும் தேடிக்கொள்ளமுடியாத நன்மைகளைத்தேடுவதே செல் வர்கள் செய்தற்குரிய சிறந்ததானம். செல்வர்களும் தங்களளவில் தனித்தனியாக இப்படிப்பட்ட தானங்களைச்செய்து முடிக்க இயலா

விட்டால், பலசெல்வர்கள் ஒருங்குகூடி அவற்றை நிறைவேற்றுவது உசிதம். கல்விச்சாலை ஸ்தாபித்தல், தருமவைத்தியசாலை ஏற்படுத்தல், அநாதபிள்ளைகளைக் கல்வியுங் கைத்தொழிலுங் கற்பித்து வளர்த்துவிடுதல், திக்கற்ற விதவைகளுக்கு அன்னவஸ்திரங் கொடுத்தல், ஏழைகள் தீயொழுக்கத்தை விட்டு நல்வழியில் நடப்பதற்கான உபாயங்களைத் தேடுதல் என்றாற் போன்றனவே, இலக்ஷாதிகாரிகளும் கோடீசுவரர்களும் மேற்கொண்டு செய்யத்தக்க தருமங்கள்.

பம்பாயில் வசிக்கும் பாரசீகர்களில் மிகவும் எளிய குடியிற் பிறந்த ஜம்ஸெட்ஜீஜிஜிபாய் என்பவர், தமக்குக்கிடைத்த இரண்டு வெறுமையான குப்பிகளையே முதற்பொருளாகக்கொண்டு, குப்பி வியாபாரஞ்செய்து குபேரசம்பத்துடையவராயினர். மூன்றுபிள்ளைகளும் ஒரு பெண்ணும் பெற்றவராயினும், இவர் வெளிப்படையாகச் செய்த தானதருமங்கள்மாத்திரம் கோடிரூபாவுக்கு மேற்பட்டனவென்று கணக்கிட்டிருக்கிறது. ஏழைபேழைகளுக்கு இவர் நேரிற் செய்த சாதாரண தருமங்களுக்கு இவ்வளவென்று கணக்கில்லை. கல்விச்சாலைகளைக் கட்டுவதும், அவை நன்குநடத்தற்கான மூலதனத்தைக்கொடுப்பதும், தேவாலயங்களைப் பிரதிஷ்டைசெய்து திரவிய சகாயஞ் செய்வதும், தருமவைத்தியசாலை தருமசத்திரமுதலியவற்றைக்கட்டிப் பரிபாலித்தலும், புதிய பாதைகளை ஏற்படுத்தலும், பாலங்கட்டுவிப்பதும், ஏரிகுளங்களை வெட்டுவிப்பதும் ஆகியபலவித தருமங்களைச் செய்தனர். இந்தியாவின்மாத்திரமேயன்றி இதரமான தேசதேசாந்தரங்களிலும் தீவு தீவாந்தரங்களிலும் குடிகளின் கஷ்டநஷ்டங்களைத் தீர்க்கவும் அமிதமான திரவியசகாயஞ்செய்துவந்தனர். இவருடைய மனைவியாரும் இவற்றுக்கெல்லாம் இணங்கியிருந்ததுமன்றித் தம்முடைய செலவிலே சில பொதுநன்மையான தருமங்களைச் செய்தனராம். காஞ்சீபுரம் பச்சையப்பவள்ளலும் பி. டி. வி. செங்கல்வராய நாயகரும் தேவாலயம் தருமசத்திரம் கல்விச்சாலை அநாதபிள்ளைகள் பாடசாலை முதலியவைகளுக்கான சாசனங்களை எழுதிவைத்து என்றுமழியாது நின்று நிலவுதலான புகழுடம்பை எய்தினர். எங்கிலாந்திலும் அமெரிகாவிலும் சில தர்மிஷ்டர்கள் செய்துள்ள தானங்கள் புகழிலடங்குவனவல்ல.

தானங்கொடுப்பவ ரில்லையாயின் தானம் ஏற்பவருமிலராவர். தானம் ஏற்பவரில்லாராயின் தானங்கொடுப்பவரும் இலராவர். ஆயினும் உலகியல் அங்ஙனம் நடத்தலில்லை. அச்சையிலும் உண்டு பிச்சைக்காரன் அளகாபுரியிலும் விறகுதலையன் உண்டு.

"யாதும், கொள்வாரிலாமைக்கொடுப்பார்களுமில்லைமாதோ" என்றும், "எல்லாருமெல்லாப்பெருஞ்செல்வமுமெய்தலாலே, இல்லாருமில்லையுடையார்களுமில்லைமாதோ" என்றும், "என்றுமில்லா தனவுமிரவே" என்றுங்கூறுவனவெல்லாம் உயர்வுநவிற்சியணியே. கடப்பாடான ஒப்புரவுகளை ஏற்றுக்கொள்வது இகழ்ச்சியாகாது. வறுமையால் ஏற்பதிகழ்ச்சியே ஆயினும் எவரும் கசக்கிமோத்தலாகாது. புண்ணியத்துக்குழுதமாட்டைப் பல்லைப்பிடித்துப் பதம்பார்த்தலாகாது. கொடுப்பவர் திருப்தியாகக் கொடுத்ததை ஏற்றுக் கொள்பவரும் அகமலர்ச்சி முகமலர்ச்சியோடு வந்தனபூர்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லையேயென்று வருந்தலும் அருவருத்தலும் மடமை.

இரவலர் கன்றாக ஈவாரா வாக
விரகிற் சுரப்பதாம் வண்மை—விரகின்றி
வல்லவ ரூன்ற வடியாபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாங் கீழ்.

விசேஷ செல்வத்தால் இன்பமும் அஃதில்லாமையால் துன்பமும் உண்டாகுமென்பதில்லை. எவ்வளவு இருந்தும் அவாவடங்காதவர்கள் எளியரே. வருந்தித்தேடியது சிறிது பொருளேயாயினும் அதனாலாகக்கூடிய சௌகரியங்களைத் தேடிக்கொண்டு திருப்தியாக அமைந்திருப்பவர்களே அஷ்டைசுவரியம் பெற்றவர்கள். போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து.

தி. செல்வக்கேசவராயமுதலியார்.

செந்தமிழ்க்குத்தொண்டுசெய்தவர்.

ஆசிரியவிருத்தம்.

சீரிலகுமான்மணிப்பாய்சுமந்தான்கம்பர்சிவிகைபாண்டியனேந்தினன்
செல்வமிகுகச்சியப்பன்னுதைபொறுத்தனன்றிகழ்சுட்டிசோமனீந்தான்
ருருலவுகுமணனுந்தலைகொடுத்தான்சிவன்றானுமொருதூதுசென்றான்
சர்க்கரையுமெச்சில்வாய்கழுவினன்காளத்திதனதிருகைபுற்றிலிட்டான்
பேரிலகுகம்பையனும்விரலாழியீந்தனன்பெரியவன்பெண்கொடுத்தான்
பிணிமுகத்தோன்கிரனைப்புரந்தான்பேதைமுதிகிலனமொருவனிட்டான்
பாருலகிலித்தமிழ்க்குத்தொண்டுசெய்தபேர்பார்க்கிற்கணக்கில்லையே
பராசர்பணிகின்றவண்ணாமலைக்குரிசில்பாதத்தைவருடினானே.

இச்செய்புள், இராமநாதபுரஞ் சமஸ்தானத்தில் ஓர்காலத்தில் மந்திரியாயிருந்த அண்ணாமலைப்பிள்ளை, இரகுநாதசேதுபதியவர்கள் மீது ஒரு துறைக்கோவை பாடியஅமுதகவிராயர் நித்திரைசெய்யும் போது அவர் பாதத்தைவருடக்கண்டு உணர்ந்தவுடன் அக்கவிராயர் கூறிய தென்பர்.

இச்செய்புளிற்கூறிய ஏனைப்பன்னிருவர்க்குங் கதை வருமாறு.

க. திருமான்மணிப்பாய்சுமந்தல்.

கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீயிங் கிராதே—துணிவுடனே.
செந்நாப் புலவன்யான் செல்கின்றே னீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.

ஓர் காலத்திலே காஞ்சீபுரத்திலரசாண்டிருந்த பல்லவராயன் என்னுமரசன்கணிகண்ணன் என்னுமோரடியாரைமதியாதுநாட்டை விட்டுப்போகச்சொன்ன காரணத்தால் அவர் தமது ஆசாரியராகிய திருமழிசையாழ்வார்பால் விண்ணப்பஞ்செய்து அடியேனிவ்விடம்வி ட்டுப்போகின்றேனென்றுகூற, அவ்வாறாயில்நாமும்பெருமாளும்இங் கிருக்கப் போகின்றோமோவென்று பெருமாளைநோக்கி அத்திருமழி சையாழ்வார் இத்திருவெண்பாவைக்கூறியருளினார் ; உடனே பெரு மாள் அவர் பின்னெழுந்தருள இதையறிந்து அரசனும் வருத்த

முற்று ஓரிரவிருக்கை என்கின்றவூரிலே இவர்களைக்கண்டு வணங்கிக் கணிகண்ணரை வேண்டிக்கொள்ள அவரும் ஆழ்வாரை வேண்டிக் கொள்ள ஆழ்வாரும் பெருமாளை வேண்டியெழுந்தருளும்படி "கணி கண்ணன் போக்சொழிந்தான் காமருபூங் கச்சி, மணிவண்ணா நீ கிடக்க வேண்டுந்-துணிவுடையசெந்நாப்புலவனும்போக்கெழுந்தேனீ யுமுன்றன், பைந்நாகப் பாய்படுத்துக்கொள்" என்று கூற அப்படி யே அங்குச்சயனித்தருளினர்; எனவோர் சரிதமுண்டு. இக்கவியிற் சில சொன்மாற்றிக் கூறுவாருமுளர். மீனாட்சியம்மை பிள்ளைத்தமி ழிற் காப்புப்பருவத்தில் "பழமறைகண்முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப்பசுங்கொண்டலே" எனக்கூறியதனுனுமுணர்க.

உ. கம்பர்சிவிகை பாண்டியனேந்தல்.

கம்பர் மதுரைச்சொக்கலிங்கசுவாமியைத்தெரிசித்துவரல்வேண் டுமென்று சோழராஜனிடம் கேட்டபோது அவ்வரசன் பாண்டியனைப் பாடாது போய்வரல்வேண்டுமென்று கூறினன். கம்பருடன்பட்டு மதுரைக்குச்சமீபத்தில் வருகையிற் பாண்டியராஜன்றெரிந்து கம்பரி டத்திலெவ்வாறுயினுங்கவிகேட்டல் வேண்டுமென்றுகருதித்தன் மனை வியுடன் சென்று அவளருகிலேவரத் தான் கம்பர் சிவிகையைத்தாங் கினவளவிற் சிவிகை நிலைதளர்ந்தது. அதனைக்கம்பர் தெரிந்து மகிழ் ச்சிமிக்கூர்ந்து,

வெண்பா.

வாங்கு திரைகடலேழ் மஞ்சனநீர் வான்வரையி
னேங்கு மகாமேரு வுண்டியற்கல்—வீங்குபுக
ழிந்திரன்சம் பந்தி யிறையவனும் பண்டாரி
சந்த்ரகுல வங்கிசநீ தான்.

எனக்கூறிப்பின்னர் அவ்வரசன் மனைவியைப்பார்த்தபோது,

வெண்பா.

உமையாளு நீயு மொருங்கொப்பே யொப்பி
லுமையாளுக் குண்டங்கோ ரூன—முமையாடன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியனுன்
ளுகந்தோய்ந் தாண்டா னரசு.

எனக்கூறினர். பின்னர்ப் பாண்டியராசனுற் பெருஞ்சிறப்பெய் திச் சுவாமியைத்தெரிசித்துச்சென்றனர்; என்பர்.

௩. கச்சியப்பனுதைபொறுத்தல்.

வீரவநல்லூரிற்கச்சியப்பபிள்ளையென்னும் ஓர்பிரபுவினிடத்திலே சென்று ஓர்கவிஞர் பிரசங்கஞ்செய்தார். அதனை அப்பிரபு ப்ராமுகமாகக்கேட்டனர். உடனே கவிஞர்சினந்து மார்பிலுதைத்தனர். அதற்குப் பிரபு கோபமுறாது நல்லறிவுவருமாறு செய்ததன்றிவேறில்லையெனமகிழ்ந்து பிரசங்கங்கேட்டுச்சிவிகைமுதலிய சிறப்பளித்தனர். அப்போது கவிஞர் மகிழ்ந்து,

வெண்பா.

மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு
கண்படுமோ லோபர்கடை காணுமா—விண்கடந்து
மெச்சியப்பா லும்புகழ்சேர் வீரைவல்லைக் காராளக்
கச்சியப்ப னையுதைத்த கால்.

௪. சோமன் சுட்டியீதல்.

தினகரராசாவின் புத்திரனாகிய சோமன் விளையாடிக்கொண்டிருக்குங்காலத்தில் வந்த ஓர் கவிஞர் அரசன் புத்திரனைக்கண்டு கையை விரித்தருமைபாராட்டியழைக்க அவன் றன்னிடத்திலே யாசிக்கிரதாகக்கருதித் தன் றலையிலணிந்திருந்த சுட்டியை எடுத்து அக்கவிஞர் கையிற் கொடுத்தான்; இதனைத் தினகரவெண்பா என்னுமோர் நூலிலே,

வெண்பா.

கையை விரித்தழைக்கக் கண்டுகுழந் தைச்சோமன்
செய்யசுட்டி யீந்தான் றினகரா—பையவே
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

எனக் கூறியிருத்தலாற் காண்க.

௫. குமணன்றலை கொடுத்தல்.

தம்பியாலே நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றி யிருந்த குமணராசனைக் கண்டு பெருந்தலைச்சாத்தனார் என்னும் ஓர் பெரிய புலவர்,

ஆசிரியப்பா.

ஆடு நனிமறந்த கோடுயர் அடுப்பி
னாம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்

பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
யில்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
வென்னிலை யறிந்தனை யாயினிந் நிலை
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரிய
ரின்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே.

என இச்செய்யுளைக்கூறினர். இதனரும் பதவுரை—ஆடு-அடுதல்; நீட்டல் விகாரமாயிற்று. கோடுயர்-புடையோங்கிய. ஆப்பி-சாளான். தேம்புதல்-மெலிதல். உழவா-வருந்தி. திரங்கி-திரைந்து. இல்லி-துளை. மகத்துமுகம்-பிள்ளையின் முகம்; அத்து-சாரியை. ஈரிதழ்-ஈரியவிமை. எவ்வம்-வருத்தம். நிற்படர்ந்திசின்-நின்பால்வந்தேன். இந்நிலை தொடுத்துங்கொள்ளாதமையலென் - இவ்வாறு வறுமையுற்று நின்ற நிலைமைக்கண் வளைத்தாயினும் பரிசில்கொள்ளாது விடேன். பண் - பண்ணுதல். பச்சை நல்யாழ் - தோலாற் போர்க்கப்பட்ட நல்லயாழ். மண்ணார்முழவு-மார்ச்சனையமைந்த மத்தளம். வயிரியர் - கூத்தர். இன்மை - தரித்திரம். பின்னும்,

"ஆறு பெருக்கற் றருந்திடர்தான் பட்டாலு
மூறலமை யாதோ வுலகாற்றத்—தேற
வறியையே யானலு மென்கலியை மாற்றச்
சிறியையோ சிர்க்குமணா செப்பு".

என இவ்வெண்பாவினையுங் கூறினதாகக் கூறுவர். பின்ன ரப்புலவரை நோக்கி என்றம்பி இளங்குமணனென்பான் என்றலை கொண்டு வந்தவர்க்குக் கோடிபொன் றருவதாகக் கூறியிருக்கின்றனதலால் என்றலையை யறுத்துக்கொண்டு போயவன்பாற்கொடுத்துப் பொன் பெற்று வறுமை களைந்து வாழுமினெனப் பின்வரும் இரண்டு செய்யுளுங் கூறித் தன் கையிலிருந்த வாளாயுதத்தை அப்புலவர் கையிற் கொடுத்தான்.

கலி விருத்தம்.

வெம்புங் காலை வெதும்பி விழுஞ்சிரஞ்
செம்பொன் கோடி விலையெனச் சிந்தித்தா
னும்பர் நாடு முலகினுந் தேடினு
மெம்பி போலெனக் கியாரினி நல்லரே.

ஆசிரியப்பா.

அந்தநாள் வந்திலை யருந்தமிழ்ப் புலவோ
யிந்தநாள் வந்துநீ நொந்தெனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுன் வெறுமைநோய் களையே.

பின்னர்ப் புலவர் ஈதென்னை பாவமென்று வருந்தி அவ்வாளை மாத்திரம் வாங்கிக்கொண்டுவந்து இளங்குமணற்குக் காட்டிப் பின்வருமாசிரியப் பாவினைக் கூறினர்.

ஆசிரியப்பா.

மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வ
ரின்மையி னிரப்போர்க் கீஇ யாமையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே
தாடாழ் படுமணி யிரட்டும் பூநுத
லாடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றன னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
னாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையி
னாடுமலி யுவகையொடு வருவ
லோடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே.

இதனரும்பதவுரை; இன்மையின் - வறுமையால். மாக்களில் - மாக்கள் போல. தொடர்பறியலர் - தம் பெயரை நிறுத்தி உலகொடு தொடர்ந்து போதலையறியார். படுமணி யிரட்டும்பூநுத லாடியல்

யானே - ஓசையையுடைய மணி ஒன்றற்கொன்று மாறியொலிக்கும் புகர் நுகர் நுதலையுடைய வென்றி மியன்ற யானையை. பாடுநர்க்கரு காக் கேடினல் லிசை வயமான்றோன்றலை - பாவலர்க்கு மிகக் கொடுக்கும் அழிவில்லாத நல்ல புகழையுடைய வலிய குதிரையையுடைய தலைவனாகிய குமணனை. கொன்னே - பயனின்றியே. ஆடுமலி - வென்றிமிக்க. வருவல் - வந்தேன். ஓடாப்பூட்கையின் கிழமையோற் கண்டு - புறங்கொடாத மேற்கோளையுடைய நினக்குரியவனாகிய தலையனைக்கண்டு. வருவல் - என்பது காலமயக்கம்.

இச்செய்யுளைக்கேட்ட இளங்குமணன் புலவர்க்கு வேண்டிய சிறப்பளித்துத் தன்றமையனைப் பணிந்தழைத்து வந்து அவன் கட்டளையின்படி இளவரசுபுரிந்து வாழ்ந்திருந்தான்; என்பர்.

சூ—சிவபிரான்றூதுசெல்லல்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாரூரிற் பரவையார்பாற் றூது செல்லும்படி புற்றிடங்கொண்ட பிரானை வேண்டினர். அவருமவ்வாறே சென்றருளினர். பெரியபுராணத்திற் பின்வருஞ் செய்யுளிற் காண்க.

ஆசிரியவிருத்தம்.

நாயனீரேநானுமக்கிங்கடியேனாகினீரெனக்குத்
தாயினல்லதோழருமாந்தம்பிரானாரேயாகி
லாயவறிவுமிழந்தழிவேனயர்வுநோக்கியவ்வளவும்
போயிவ்விரவேபரவையுறுபுலவிதீர்த்துத்தாருமென.

அன்புவேண்டுந்தம்பெருமானடியார்வேண்டிற்றேவேண்டி
முன்புநின்றுவிண்ணப்பஞ்செய்தநம்பிமுகநோக்கித்
துன்பமொழிநீயாமுனக்கோர்தூதனாகியிப்பொழுதே
பொன்செய்மணிப்பூண்பரவைபாற்போகின்றோமென்றருள்செய்
[தார்.

எ—சர்க்கரை யெச்சில்வாய்கழுவுதல்.

காரைப்பதியென்னும் ஊரிலே சர்க்கரைப்பிள்ளை யென்னுமொரு பிரபுவினிடத்தில் ஓர் கவிஞர் வந்து நம்மை நீர் தூஷித்ததாக்கேள்வியாயினேமே யென்றுகேட்க அப்பிரபுவானவர் இல்லை யென்றுகூறி நெய்யைக் காயவைத்து அதிலே கையையிட்டுச் சுடாதி

ருத்தலைக் காட்டினர். அதுகண்ட கவிஞர் வியந்து பின்வருங் கவியைக் கூறினர்.

மகிழ்ந்துகா லைப்பதியில் வாழ்சர்க் கரைதான்
புகழ்ந்து திரிபுல வோரை—யிகழ்ந்துநான்
வையவில்லை யென்றுசொல்லி மண்டலமெல் லாந்துதிக்க
நெய்யிலே கையையிட்டா னேர்ந்து.

இச்செய்யுளைக் கேட்டு வந்த பின்னர்ப்பிரபுவானவர் தம்முடனி ருந்து போசனஞ்செய்யும்படி கவிஞரை வேண்ட அவருமவ்வாறே போசனஞ்செய்து கரசுத்தி செய்யும்போது கவிஞர் பிரபுவைநோக் கி நீர் நம்பாலன்புடையீராயின் நமது எச்சில்வாயைச் சுத்திசெய்து விடும் என்று கூறினர்; பிரபுமனமகிழ்ந் திப்பணி கிடைத்ததே யென்று அவ்வாறு செய்தனர்; என்பர்.

அ—காளத்தி கைபுற்றிலிடுதல்.

நின்றையென்னு மூரிலேயிருந்த காளத்திப்பிள்ளை யென்னும் பிரபுவானவர் பெருந்தியாகியாகவிருந்து கொடுத்து வறுமையடைந்த தனாலே இனியிங்குவந்து இல்லையென்றிரப்போர்க்கு நாமுமில்லை யென்றுரைத்தல் கூடாது,இவ்வூரைவிட்டுப்போதலே நலம்என்றுகரு திப் புறப்பட்டு ஓர் மடத்திலிரவிற் சயனித்திருந்தனர். அவரைத்தே டியோர்கவிஞர் அம்மடத்திற்றங்கியிருந்தவர் பின்வரும் வெண்பா வை யியற்றிக்கொண்டிருந்தனர்.

நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழற்போல
நாளைக் கிருப்பாயோ நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கா னீயெங்கே நானெங்கே
யின்றைக்கே யென்பா லிரு.

அதனைக் கேட்ட அப்பிரபுவானவர், 'இனிக்காலையிலக்கவி ஞர் நமது மனைக்குச்சென்று நம்மைக்காணாவிடின் வருந்துவரே' யென்று அவர்க்கு முன்னெழுந்து சென்று தமது மனையிலிருந்தனர். கவிஞருங் காலையிற்சென்று பிரபுவைக்கண்டு சிலகவிகளைச்சொல்லிப் பிரசங்கித்தனர்; உடனே பிரபு இம்மகாகவிஞர்க்குக் கொடுப்பதற் கில்லாமலிருப்பதினும் இறந்துவிடுதலே நலமென்று தமது மனைக்

கொல்லையிலிருந்த புற்றிலிருக்கிற துவாரத்திலே கையை நீட்டினர். அப்போது அதிலிருந்த நாகமானது கடியாமலே தன்னிடமிருந்த இரத்தினமொன்றினை அவர்கையிற் கக்கிவிட்டது. உடனே மகிழ்ந்து வந்து கவிஞருக்குபசரித்துதவியனுப்பினர்; பின்னர் இனிவருங் கவிஞருக்கென்செய்வோமென்றுகருதி நாகமேயினியாயினுங் கடிக்க வேண்டுமென்று அப்புற்றின்றுவாரத்திற் கையைநீட்டினர். அப்போது அந்த நாகமுன்போலவே பிறிதொரு இரத்தினத்தைக் கையிலுதவியது. அதனாற்பெரும்பொருளெய்தி வாழ்ந்திருந்தனர் என்பர். இவர் நின்றையென்பதைத் திருநின்றவூர் என்றும், இவர் கொடையினைத்தெரிந்து பொறாமையால் அந்நாட்டரசன் இவர் பொருளையெல்லாங் கவர்ந்து கொண்டான்; அதனால் அவ்வூரைவிட்டுப்போதலே நலமென்று போய் வழியிலொருமடத்திலிரவினிற் சயனத்திருந்தன ரென்றுங் கூறுவர்.

௯—கம்பையன் விரலாழியீதல்.

வாடிமிட்டாஜமீந்தார்மரக்கம்பைநாயுடு என்பவரிடத்தில் ஓர் கவிஞர் பிரசங்கஞ்செய்திருக்கின்றபோது ஜமீந்தார்பராமுகமாக விருத்தல்கண்டு கவிஞர் கோபமுற்று முகத்திலறைந்து விட்டனர். ஜமீந்தார் சினங்கொள்ளாமல் நல்லபுத்திவரச்செய்ததாக நினைத்து தமது கையிலிருந்த மோதிரத்தைக் கவிஞர் கையிலிட்டார். அப்போது கவிஞர் பின்வருங் கவியைக் கூறினர்.

> வையம்புகழுஞ்சந்திரகிரிவளங்கொள்பதியைப்புரக்குமெங்க
> ளையன்குமரக்கம்பையவேளறிவுக்கினிமேனிகருண்டோ
> வைதேன்வைதேன்சினந்தீரவாயிலடித்தேனெனுகுமென்று
> கையைப்பிடித்துமோதிரமுங்கனகமுடிப்புந்தந்தானே.

௧௦—பெரியவன் பெண்கொடுத்தல்.

திருநெல்வேலிக்குச் சமீபமாயிருக்கிற தேவநல்லூரிற் பெரியவன்பிள்ளையென்னுமோர்மகாப்பிரபுவானவர் கவிவாணர்கள்கேட்டன வெல்லாங்கொடுத்துவந்தனர். அக்காலத்திலே அவர்பாற் பரிசுபெற்ற ஓர்கவிஞர் மற்றொருகவிஞரிடத்திற் பெரியவன்பிள்ளை கேட்டனவெல்லாங் கொடுக்கின்றாரென்றார்; அவர் மனையாளைக் கேட்

கினுங் கொடுப்பரோ வென்றார்; பரிசுபெற்ற கவிஞர் அதற்குச்சந் தேகமில்லையென்றார்; அப்படியாயினறிவோமென்ன, இருவருஞ் சென்று பிரபுவைக்கண்டு பிரசங்கித்துக் கொண்டிருந்தனர். அதிக நாழிகையாயினதால் அப்பிரவுவின் மனைவிவந்து போசனகாலமாயிற்றே யென்றாள். முன்பரிசுபெற்ற கவிஞர் தம்மிரண்டுகைகளையும் நீட்டித்தம்மை நோக்கிக்குறுக்கினார். உடனே பிரபுவானவர்வாயாற் கேளாது குறிப்பாற்கேட்கிறார், குறிப்பறிந்தீதலே கொடையென வுட்கொண்டு தம்மனையாளைநோக்கி நீயின்றுமுதலாக இக்கவிஞர் வசமாகவிருந்து பணிசெய்வாயென்றனர்; அக்கவிஞர் ஈதென்னபுதுமையாகவிருக்கின்றது; இவ்வம்மையார் நம்மைப் போசனத்துக் கழைக்கின்றதனால் அதனையங்கீகரிக்கவேண்டுமென்று குறிப்பாற்றெரிவித்தேனேயன்றி வேறில்லை, அதைக்கவனிக்காது இலேசாக இப்படிக் கூறலாமாவென்று பின்வருங்கவியைக்கூறி, மனைவியை அப்பிரபுவே யேற்றுக்கொள்ளும்படி செய்தனர்; என்பர்.

கலித்துறை.

கண்ணா யிரம்படைத் தான்மக வானவர் காடுறைந்தா
ரெண்ணான நூற்றொரு பேர்மடிந் தாரிலங் காபுரியு
மண்ணாய் மடிந்தது வாலியும் பட்டனன் மாநிலத்திற்
பெண்ணா லுனக்கெளி தாமோநந் தேவைப் பெரியவனே.

கக—பிணிமுகத்தோன் கீரனைப்புரத்தல்.

இதன்பொருள், மயில்வாகனத்தையுடையவராகிய குமரக்கடவுள் (கடைச்சங்கப்புலவராகிய) நக்கீரரைக்காத்தல் என்பதாம்.

ஒருமலைக்குகையின் கண்ணே அடைக்கப்பட்டிருந்த தொளாயிரத்துத்தொண்ணூற்றொன்பதின்மரோடு ஆயிரவராகச்சேர்த்துண்ணக்கருதி ஓர்பூதமானது நக்கீரரையும் பிடித்து அக்குகையிலடைத்துவிட்டு உண்ணுதற்காக நீராடப்போயினது. அப்பொழுதங்கிருந்தவரெல்லாம் நக்கீரரை நோக்கி இன்றுவரையும் பூதத்தாலுணவு கொண்டு வந்து கொடுக்கப்பிழைத்திருந்தோம், இப்பொழுதும்மாலே அப்பூதத்திற்கிரையாவோமென்றுரைத்தனர். உடனே நக்கீரர் முருகக்கடவுளைக்குறித்து "உலகமுவப்ப" என்னுமுதற் குறிப்பையுடை

வகைவகைப்பாடினர் (அதற்குத் திருமுருகாற்றுப்படை யென்று பெயர்கூறுவர்) அப்பொழுது முருகக்கடவுளெழுந்தருளிப் பூதத்தை வேலாற்கொன்று நக்கீரரைச் சிறைமீட்டருளினர். ஏனையருஞ்சிறை நீங்கியுய்ந்தனர்.

கஉ—ஒருவன்பேதை முதுகிலன்னமிடல்.

ஒருவேளாளப்பிரபுவானவர் கவிஞர்கட்குபசரித்து அவர்கள் சொன்னபடியெல்லாஞ்செய்பவராயிருந்தனர். அதனைப் பரீக்ஷை செய்யப்புகுந்த வோர்கவிஞர் அப்பிரபுவைக்கண்டு பிரசங்கித்தனர். அப்புலவரைத் தம்முடனிருந்து போசனஞ்செய்யுமாறு பிரபு வேண்டினர். அப்பொழுது கவிஞர்உம்மனைவி முதுகிலே அன்னம் படைத்தாற் புசிப்போமென்றார். பிரபு மகிழ்ந்து இஃது எனக்குரியதன்றேயெனக் கூறிச் சூலியாயிருந்த தம்மனைவி முதுகிலே அன்னம் படைத்துபசரித்தனர்; இதனைத் திருக்கைவழக்கத்திற் கம்பர் "சூலி முதுகிற் சுடச்சுடவப் போதமைத்த, பாலடிசிறன்னைப்படைக்குங்கை" எனக் கூறியிருக்கின்றனர்.

இத்துணையரோ செந்தமிழ்க்குத் தொண்டுசெய்தவர்? புறநானூறுமுதலாயநூல்களை நோக்குங்காற் கணக்கிடப்படாதவருள்ளார். இங்கேயெடுத்துக்கூறிய "சிரிலகு" என்னுஞ் செய்யுளிற் கண்டவர்களின் றொண்டினைமாத்திரம் பரம்பரையிற் கேள்வியாயினவாறே சேற்றூர்ச் சமஸ்தானவித்துவானும் என்பிதாவுமாகிய இராமசாமிக்கவிராயரவர்களும் என்றம்பி சுப்பிரமணியக்கவிராயருங் கூறியவாறு வெளியிடலாயினேன்.

இங்ஙனம்
சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான்,
அருணாசலக்கவிராயர்.

சங்கத்து வித்துவான்கள் செலுத்தற்குரிய சந்தா ரூ 6-யும் அன்புற்றனுப்பியோர்.

1. ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்கள், அக்கிராசனாதிபதி, மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.
2. K. சுந்தரராமையரவர்கள் M. A. கும்பகோணம்.
3. வே. சாமிநாதையரவர்கள், சென்னை.
4. T. A. இராமலிங்கஞ் செட்டியாரவர்கள், B. A. திருவல்லிக்கேணி.
5. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள், M. A., M. R. A. S. பங்களூர்.
6. ரே. அப்புவையங்காரவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர்.
7. வி. சதாசிவச் செட்டியாரவர்கள், திருச்சிராப்பள்ளி.
8. எஸ். வீ. கள்ளபிரான்பிள்ளை யவர்கள், B. A. செங்கற்பட்டு.
9. பி. குருராவ் அவர்கள் M. A. L. T. திருச்சிராப்பள்ளி.
10. ஆ. கா. பிச்சையிபுராகிம்புலவரவர்கள், திருச்சிராப்பள்ளி.
11. M. S. சுப்பிரமணியக் கவிராயரவர்கள், திருநெல்வேலி.
12. V. குப்புசாமிராஜு அவர்கள், தஞ்சாவூர்.
13. பூவை. அஷ்டாவதானம்-கல்யாணசுந்தரமுதலியாரவர்கள் சென்னை.
14. T. T. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள், B. A. சென்னை.
15. ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள், தரங்கம்பாடி
16. திரு. நாராயணையங்காரவர்கள், மதுரை.
17. ஸ்ரீமத். எம். கே. எம். அப்துல்காதுறு சாகிப் அவர்கள். இளையான்குடி.
18. ஐ. சாமிநாதமுதலியாரவர்கள், தஞ்சை.
19. வா. குலாம்காதிறு நாவலரவர்கள், நாகூர்.
20. V. J. தம்பிப்பிள்ளையவர்கள், M. R. R. S. கொழும்பு.
21. K. G. சேஷையரவர்கள், B. A. B. L. திருவனந்தபுரம்.
22. சிற். கைலாசபிள்ளையவர்கள், கொழும்பு.
23. காரை, சிவசிதம்பர ஐயரவர்கள், கோலாலம்பூர்.

——:o:——

உ

கணபதி துணை.

திருவாவடுதுறையாதீனத்துச்

சுவாமிநாததேசிகர்

இயற்றிய

திருச்செந்திற்கலம்பகம்.

இது

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகரும்

திருவாவடுதுறையாதீன வித்துவானுமாகிய

சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரால்

பரிசோதிக்கப்பட்டது.

"செந்தமிழ்"ப்பிரசுரம்—கரு.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1905

(விலை அணா-3)

கணபதிதுணை.

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறைஆதீனத்து

சுவாமிநாததேசிகர் சரித்திர சங்கிரகம்.

இந்நூல் செய்தருளிய சுவாமிநாததேசிகர் செந்தமிழ்ப்பாண்டித் திருவளநாட்டிலே சற்றேறக்குறைய நூற்றைம்பது வருடத்திற்குமுன்னர்ப் பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே திருவவதாரஞ்செய்து, நற்குணங்களுடன்வளர வளர்ந்து, இளமைப்பருவத்திலே திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தையடைந்து, அக்காலத்திலே எழுந்தருளியிருந்த ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிகமூர்த்திகளை வணங்கிச், சமய விசேட தீக்ஷைகளைப் பெற்றுத், துறவறத்தையடைந்து, நித்தியநியம கன்மங்களிலே வழுவாதொழுகி, அத்துறவறநூல்களைக் கற்றுணர்ந்து, தவத்தான் மனந்தூய்மையுடையராகித், தம்முடைய ஞானதேசிகரை நீங்காது, அவரருட்பணிசெய்து திருவணுக்கத் தொண்டராய் அமர்ந்திருந்தனர்.

அக்காலத்திலே முற்கூறிய பாண்டித்திருவள நாட்டிலே திருநெல்வேலியெனுஞ் சிவபுரத்திலே பரம்பரைச் சைவவேளாளர்குலத்திலே தாண்டவமூர்த்திப்பிள்ளை செய்ததவத்தால் வந்துதித்த † மயிலேறும்பெருமாள்பிள்ளை யென்பவர் கல்வி அறிவொழுக்கஞ் செல்வமுதலிய நன்மைகளிற் குறைவில்லாதவராய் மேற்கூறிய ஆதீனத்துக்குரிய சிஷ்யவர்க்கங்களிற் சிறந்தவராயிருந்தனர். இவர் ஆதீனத்துக்கு வழக்கப்படிவந்து ஞானதேசிகரைத் தரிசித்துச் செல்லுங்காலங்களில் ஓர்காலத்தில் இந்நூலாசிரியருடைய அறிவின் மிகுதியையும் ஒழுக்கமன்புமுதலிய நற்குணங்களையுங்கண்டுவியந்து, இளமைப்பருவத்திலே இக்குணங்களையுடையராயிருத்தல் அருமையாமெனவியந்து, நாங்கற்றகல்விப்பொருளை இந்த முனிவருக்குக் கற்பித்தால் உலகத்திற்கு மிகப் பயன்படுவதன்றி நமக்கும் இம்மை மறுமைப் பயனெய்துமெனக் கருதித், தங்கருத்தினை ஞானதேசிகர்பால் விண்ணப்பஞ்செய்து, அவர்கட்டளையிட் டருளியபடியே இந்நூலாசிரியரை அழைத்துக்கொண்டு சென்று, தமதுவீட்டில் வைத்து மிகுந்த உபசாரத்துடன் கற்பிப்பாராயினர்.

---

† இவர் கல்லாடத்திற் குரை செய்தவர்.

அகத்தியமகாமுனிவருடைய முதன்மாணாக்கராகிய தொல்காப்பிய முனிவர் அருளிச்செய்த இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தினுரையாகிய இளம்பூரணமும், பேராசிரியமும் சேனாவரையமும், நச்சினார்க்கினியமும் எனப்படு நான்குரைகளையும், மற்றை யிலக்கண நூல்களையும் திருவள்ளுவர் குறளுரையையும், திருக்கோவையாருரையையும், சிந்தாமணிமுதலியபஞ்சகாவியங்களையும், கலித்தொகை முதலிய சங்கச் செய்யுட்களையும், ஐயந்திரிபின்றி விளங்குமாறு கற்பித்தனர்.

அன்றியும் வடமொழியினும் வல்லவராகக் கருதித் திருநெல்வேலிக்குக் கீழ்பாலுள்ள செப்பறைப்பதியில் வடமொழி வல்லராயிருந்த சிவப்பிராமணராகிய கனகசபாபதி சிவாசாரியரைக்கொண்டு, வியாகரணமுதலிய நூல்களைக்கற்பித்தனர். அக்கனகசபாபதிசிவாசாரியர் வடமொழி கற்பித்தவர் என்பதனை இந்நூலாசிரியர் தாஞ் செய்தருளிய இலக்கணக்கொத்துப்பாயிரத்துள் "செப்பறைப் பதியில் வாழ்சிவத் துவிசன்-கனக சபாபதி கருதுவட நூற்கடற்-றபோதனர் புகழுஞ் சைவாதி ராச-னுபய பதங்களை யுண்மையொடு பணிவாம்" எனக்கூறியதனாலறிக.

மயிலேறும்பெருமாள்பிள்ளை, தம்மை நீங்காது உடனிருந்து கற்றுத்தேறிய இந்நூலாசிரியரை ஆதீனத்துக்கு அழைத்துக்கொண்டுவந்து, ஞானதேசிகரைத்தரிசித்து, இந்நூலாசிரியருடைய கல்வித்திறமை யாவும் பரீக்ஷைசெய்து காட்டினார். ஞானதேசிகர் மிக மகிழ்ச்சியடைவதை அறிந்து, தாமும் பேரானந்தமுற்றவராகி இந்த முனிவரை ஞானாசாரியமூர்த்தியாகச் செய்தால் உலகிற்குப் பேருபகாரமாமென்று, பெருங்காதலோடு விண்ணப்பஞ்செய்தனர். அதற்கு ஞானதேசிகர் "அவ்வாறே செய்வோம்" என்று திருவாய்மலர்ந்தருள, மனமகிழ்ந்து, வணங்கி விடைபெற்றுத், தமதிடத்திற்கு மீண்டு வந்திருந்தனர்.

பின்பு இந்நூலாசிரியர் நிருவாணதீக்ஷைபெற்று, வீடுபேற்றிற்குரிய ஞானநூல்களாகிய சிவஞானபோதமுதலிய நூல்களையெல்லாங்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தனர்.

அதன்பின்பு தாங்கற்ற இலக்கணவிலக்கியங்களிலே இலைமறைகாய்போற் கிடந்த அரியவிதிகளையெல்லாந்திரட்டிக், கற்றோர்கட்குப்

பயனாகும்படி இலக்கணக்கொத்து எனவொருநூலையும், தசகாரிய முதலிய ஞானநூல்களையுஞ் செய்தருளினர்.

இவ்வாசிரியர் தமது ஆச்சிரமமும், தம்முடைய ஆசிரியராயிருந்த மயிலேறும்பெருமாள்பிள்ளை ஆச்சிரமமும் பேதமாயிருப்பினும் அப்பேதங்கருதாது, தாஞ்செய்த இலக்கணக்கொத்துப் பாயிரத்திலே "திருநெல் வேலி யெனுஞ்சிவ புரத்தன்-றாண்டவ மூர்த்தி தந்த செந் தமிழ்க்கடல்-வாழ்மயி லேறும் பெருமான் மகிபதி-யிருபத கமல மென்றலை மேற்கொண்-டிலக்கணக் கொத்தெனு நூலியம்புவனே" என வணக்கங்கூறினர். இவ்வாசிரியர் கல்வித்திறமையையும் நல்லொழுக்கங் குருபத்திமுதலிய நற்குணங்களையும் புகழ்ந்து பாராட்டாத கற்றோர்களில்லை.

இவ்வாறிருக்குங்காலத்திலே திருவாரூரென்னுஞ் சிவநகரத்திலே சைவாசாரியராயிருந்து, இலக்கணவிளக்கமுதலிய நூல்களைச் செய்து, புலவர் திலகராயிருந்த வைத்தியநாதநாவலர், ஆதீனத்துக்குவந்து ஞானதேசிகரைக்கண்டு கலந்து உரையாடியிருந்து பந்தியிற்போசனஞ்செய்து, கரசுத்திசெய்துவந்து, பின்பு ஞானதேசிகரைக் காணுங்காலையில் ஞானதேசிகர் வைத்தியநாத நாவலரைநோக்கி "வந்தவிளைப்பாற்போசனஞ் செவ்வையாகச் செய்தற்கிசையவில்லையோ" என வினவ, அவர் "வந்தவிளைப்பு" என்னுந்தொடர்மொழிக்கு இலக்கணம் விசாரிக்கத்தொடங்கினார். அப்பொழுது ஞானதேசிகர் தமதருகிருந்த இந்நூலாசிரியர்மீது திருக்கண்சாத்தியருள, உடனே இந்நூலாசிரியர் அச்சொற்குள்ள இலக்கணமெல்லாம் விரித்துரைத்தனர். அதைக்கேட்ட வைத்தியநாதநாவலர் மிக மகிழ்ச்சியடைந்து, "தொல்காப்பிய முதலிய நூல்களை எழுத்தெண்ணிப்படித்த சுவாமிநாதமூர்த்தியா? தேவரீர் இங்ஙனங்கற்றுத் தெளிந்திருப்பதை யானறிந்திலேன்" என்று மிக்க விநயமொழிகூறி மிக வியந்தனர்.

பின்பு வைத்தியநாதநாவலர் இந்நூலாசிரியருடன் சிலநாள் அளவளாவியிருந்து, தொல்காப்பியமுதலிய நூல்களைப் பாராட்டியிருந்ததுமன்றி, இலக்கணக்கொத்து முதலிய நூல்களையுங்கேட்டு "இங்ஙனஞ் செய்வது கற்றோர் யாவருக்கும் அரிது அரிது" என்று வியந்துகூறித்தமதிடத்திற்குச் சென்றனர்.

ஞானதேசிகர் மயிலேறும் பெருமாள்பிள்ளை விண்ணப்பஞ்செய்துகொண்டபடியே இந்நூலாசிரியருக்கு ஆசாரிய அபிஷேகஞ்செய்யத் திருவுளங்கொண்டு; அப்பொழுது இரண்டாவது சந்நிதானம் இருந்தமையால் இவ்வாசிரியருக்குச் சங்காபிஷேகஞ்செய்து, ஈசான தேசிகர் என்று அபிஷேகச்சிறப்புப்பெயருங் கட்டளையிட்டருளித், திருநெல்வேலியில் ஆதீனத்தைச்சார்ந்த மடாலயத்திலிருக்கும்படி கட்டளையிட்டருளினர். அம்மடாலயத்திற்கு ஈசானமடாலயமென இன்றும் பெயராயிருக்கின்றது.

அவ்வாறே இந்நூலாசிரியர் ஈசானமடாலயத்தில் எழுந்தருளியிருந்து நன்னூற்கு விருத்தியுரைசெய்த சங்கரநமச்சிவாயப் புலவர் முதலாயினர்க்குக் கற்பித்து இத்தேசத்திற்கு ஓர் தமிழ்த்தெய்வமாய் விளங்கியிருந்தனர்.

இச்சரித்திரத்தின் விரிவெல்லாம் ஸ்ரீ-ஆறுமுகநாவலரவர்கள் அச்சிட்டு வெளிப்படுத்திய இலக்கணக்கொத்தினால் இனிதுவிளங்கும்

ஈசானதேசிகர் அவ்வாறு விளங்கியிருக்குங்காலத்தில் திருச்செந்தூர்க்குச் சென்று விசேடபுண்ணியகாலங்கடோறும் முருகக்கடவுளைத் தரிசித்துவருவாராதலால், அம்முருகக்கடவுளின்மீது வைத்த பேரன்பினால், பலவிதமான செய்யுட்களுங் கலந்திருத்தலிற் கலம்பகமென்றுரைக்கும் இந்நூலை இயற்றிக், கற்றோருள்ளங் கனிந்து வாழ்த்த, முருகக்கடவுள் சந்நிதியில் அரங்கேற்றுவித்தனர். அன்று முதலாக இக்கலம்பகத்திலே முப்பது தோத்திரச்செய்யுள் வேறெடுத்து முருகக்கடவுள் பள்ளியறைக்கு எழுந்தருளுங்காலத்தில் ஓதுவாமூர்த்திகள் தோத்திரஞ்செய்வது வழக்கமாயிருக்கின்றது. அவ்வாறே மற்றையருந் தோத்திரஞ்செய்வர்.

இவ்வாறு பலநூல்களைச் செய்து, பலர்க்குங் கற்பித்திருந்து, நெடுங்காலஞ் சென்றபின்னர் அத்திருநெல்வேலி யென்னுஞ் சிவபுரத்திலே பரிபூரணதசையையடைந்தனர்.

யான் திருநெல்வேலித் தெற்குப் புதுத்தெருவிலிருக்குஞ் சைவசமயவிருத்திப் பிரியராகிய ஸ்ரீ பால்வண்ணமுதலியார் எனப் பெயர்பெற்ற நண்பருடன் திருச்செந்தூருக்குச் சென்று, முருகக்கடவுளைத்தெரிசித்துப் பேரானந்தமுற்று, இத்தேசத்தில் அதிகாரஞ்

செய்திருந்து, காசிமுதற் கன்னியாகுமரிவரை தொண்ணூற்றாறு சத்திரங் கட்டிவைத்து முருகக்கடவுளின் திருவருளைப்பெற்று வாழ்ந்த மாவைக் குமாரசாமிமுதலியார் எனப்பெயர்பெற்ற மகாப்பிரபுவின் சத்திரத்தில் வசித்திருக்கும் நாளில் ஒருநாள், அம்முருகக்கடவுளின் சந்நிதியிலேதேவாரம் ஓதும்பணிசெய்யுந் திருப்புகழோதுவாமூர்த்தியெனப் பெயர்பெற்ற மிகுந்த விருத்தாப்பியர் ஒருவர் அங்குவந்து உரையாடியிருக்குஞ் சமையத்தில் இக்கலம்பகத்தில் "எனதேகுகன் செந்தில்" என்னுங்கவியைக்கூறினர். யான் இக்கவி யாவராற்செய்யப்பட்டதென்று பிரியமுற்று வினவினேன்; அவர் இலக்கணக்கொத்தியற்றிய சுவாமிநாததேசிக மூர்த்தியாற் செய்யப்பட்ட திருச்செந்திற் கலம்பகத்திலுள்ளது என்று கூறி, உடனே என்னுடைய நண்பரையும் என்னையும் அழைத்துக்கொண்டு போய்த், தமது மனையிலிருந்த ஏடுகளைச்சோதித்துப், பழைய ஏட்டுப்பிரதி ஒன்றையெடுத்து இதனை உலகிற்குபகாரமாக வெளியிடவேண்டுமென உதவினர். அதிலே முப்பது தோத்திரச் செய்யுண்மாத்திரம் வேறெடுத்தெழுதி அத்தலத்துள்ளார் பலருஞ் சிந்தித்திருக்கின்றனர்.

பின்பு அப்பழைய பிரதியை உற்றுநோக்கி வாசிக்கும்பொழுதில் எழுதுவோரால் இயன்ற பிழைகள் பற்பல இருந்தன. அவற்றையெல்லாம் என் சிற்றறிவிற்கு எட்டியவாறு சீர்திருத்திச் சுத்தப்பிரதியாகச்செய்து வெளியிடலாயினேன்.

அதிமதுரமாகியுள்ள இக்கலம்பகத்திலே பின்னர்க் குறிக்கப்படுகின்ற முப்பது தோத்திரச் செய்யுட்களையுந் தினந்தோறும் பேரன்புடனே தோத்திரஞ் செய்பவர்களுக்குத் திருச்செந்தில்ம்பதியில் எழுந்தருளிய முருகக்கடவுள் வேண்டும் வரங்களை அருள்செய்வார். ஆதலாற் சைவசமயிகள் அவ்வாறு தோத்திரஞ் செய்து, இம்மை மறுமைப் பயன்களைப் பெற்று வாழ்வாராகுக!

சுவாமிநாததேசிகர் சரித்திரசங்கிரக முற்றிற்று.

இங்ஙனம்,

சேற்றூர்ச்சுப்பிரமணியக்கவிராயர்,

சைவநூற்பரிசோதகர், மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பாயிரம்.

மதிக்கும்பருதிக்கடவுளுக்கும்வழங்கும்விழியானருண்மதலைக்
கிதக்கும்படக்குங்கலம்பகப்பாவிசைக்குந்தமிழாலினிதிசைத்தான்
புதுக்குந்தமிழ்த்தென்கடல்கடக்கப்பொருத்துந்தோணிபோலியல்
துதிக்குந் தமிழார் துறைசைநகர்ச் சுவாமிநாததேசிகனே. [செய்

☞ இச்செய்யுள் செந்திற்கலம்பகஏட்டுப்பிரதியின் முதற்கண் எழுதப்பட்டுள்ளது.

—:o:—

ஆசிரியத்தாழிசை.

தம்பிரான் செந்திலிற் சரவணத் துதித்தோ
னம்பொனுர் கழலிணை யன்புறப் பணிந்தோ
ரும்பராய் மன்னுவ ருயர்நிலை யடைந்தே. (எ௫)

மாலையிரத்தல்.கலித்துறை.

அடைக்கலந் தானிவ ளானுலு மார்பத் தணிகடப்பந்
தொடைக்கலந் தாருயிர் சோர்தனன் ருெதொல் லவுணர்வெம்போ
ரிடைக்கலந் தாவிப் பலியூ னுடனுண் டெழுங்கதிர்வேற்
படைக்கலந் தாங்கிய கையாய்தென் செந்திற் பதிக்கந்தனே. (எ௬)

இரங்கல்.வெண்பா.

கந்தமல ராலக் கமழ்கூந்த லேந்திழைமார்
தந்தமல ரால்த் தளருமோ—வந்தவினை
போக்குமரன் சேயொலிக்கும் பூம்புனற்செந் தூரமர்ந்த
கோக்குமரன் பூந்தார் குறித்து. (எ௬)

இதுவுமது.ஆசிரியத்துறை.

குறுமுனிவற் கறமுரைத்த குமரன்மா செந்திலினெங் கொலைவில் வேடர்
சிறுமியைம ணம்புணர்ந்து தீர்ந்திடினு மன்பகத்திற் றீரா தன்றே
சிறுமியைம ணம்புணர்ந் தன்பிற்றீர்ந் தாராயிற்
கறிவளர் வலைநாடற் கென்ன மென்ன முணர்ந்த கல்வி யாறே. (எஎ)

வெண்பா.

ஆறுமுக மேன்கண்க ளாறிரண்டு மேனடியேற்
கேறுவினை யொழிப்ப தெல்லாமோ—நீறணிவான்
கன்றே திருச்செந்திற் கற்பகமே நின்னருட்கண்
ணொன்றே யமையாதோ வோது. (எஅ)

இரங்கல். ஆசிரியவிருத்தம்.

ஓது வார்கொலோ வுயிருடற் பொறைமறித் துதவுமா றுயர்ந்தோங்கி
மோது வாரிள முகிழ்முலை வனிதையர் முடிந்திறந் திடுங்காலைக்
காது வார்மணிக் கனங்குழை யுழைமகள் காதலர் திருச்செந்திற்
போது வார்குழ லாய்கல்வி வேட்டெடைப் புல்லுவிட் டகன்றாரே. (எகூ)

இதுவுமது.கலிவிருத்தம்.

அகலுறார் கனவெலா நனவெ லாந்தொடப்
புகலுறா ருளங்குடி புகுந்த காதல
ரிகலுறா வேள்செந்தி லிணங்க லாரின்யா
னுகலுறா தாவிநின் றூச லாடவே. (அ0)

சுனையாடல்கூறித்தோழிநகுதல். இதுவுமது.

ஆடு பூஞ்சுனை சந்தணிந் தாய்மலர்
சூடி வாய்விளர்ப் புந்தரிற் றேகையாய்
சேடன் வேற்படைச் சேவகன் செந்திலி
னாடி யானுஞ்சென் றாடுவ னனமே. (அக)

தலைவன்கூற்று; இரங்கல். இதுவுமது.

நானிலமு மெண்டிசையு நன்கிசையு நாளார்
தேனகு கடம்பருயர் செந்திநகர் போல்வார்
மானகு கருங்கணிணை வஞ்சமிட மாஞல்
யானுமுயி ரும்புவியு மென்கொலுயு மாறே. (அஉ)

தோழிகூற்று இரங்கல். ஆசிரியவிருத்தம்.

மாறு படுஞ்சூ ரோட முனிந்தார் வானுயர் செந்தூர்வா
யூறு படும்பே ராசையி னம்பா லூர ரிரங்காரே
னீறு படும்பூ ணாரமு மொன்றோ நேரிழை கண்சோர்நீ
ராறு படுங்கால் யாவ ரறிந்தா ராவி படும்பாடே. (அங)

கலித்துறை.

பாடாத நாவும் பணியாத சென்னியும் பாவித்தன்பாய்
நாடாத வுள்ளமு நான்படைத் தானர கேழுஞ்சென்று
கூடா துயர்கதி கூடுவ னேகுன் றெறிந்தவைவேற்
சேடார் மதிற்செந்தி லாயென்கொ லோநின் றிருவருளே. (அச)

தலைவிகூற்று. வெண்பா.

அருட்கடல்வாழ் செந்திநக ராய்வளைக்கை நல்லாய்
பொருட்கடல்வேன் மன்னரேன் போனார்—மருட்குவளைக்
கண்பொழிய முத்தங் கனக முலைபொழிய
நண்பொழிய நாமெலியு நாள். (அரு)

பாங்கிகூற்று. கலிப்பா.

நாணளினந் தளையவிழ்ந்த நறுமலர்ப்பொற் பொகுட்டகட்டுக்
கோணளினந் துறங்குவயற் குமரன்மா செந்திலின்வாய்ப்
பாணளினந் தலராளக பாரமுகில் சோரமணிப்
பூணளினந் தனித்தாவி புல்லாது நில்லாதே. (அசு)

வெண்பா.

நில்லாத நீயு நிலைநின்ற வென்றனக்குப்
பொல்லா தனவாம் புலனடக்கிப்—பல்பகலுங்
கார்த்திகையான் செந்திற் கடிநகலைக் கண்ணாரப்
பார்த்திகையா னெஞ்சே பணி. (அஎ)

கலித்துறை.

பணிப்பகை மயிலுஞ் சேவற் பதாகையும் பன்னி ரண்டு
மணிக்குழை களுமோ ராறு வதனமும் வாகை வேலுந்
தணிப்பசுங் கடப்பந் தாருந் தண்டையந் தாளு நாளுங்
கணிப்பருஞ் செந்தி லாயென் கருத்தைவிட் டகன்றி டாவே. (அஅ)

இரங்கல். இதுவுமது.

அகன்று லகலும் புணர்ந்தாற் புணருமென் னுவியம்மா
குகன்று தவிழ்பொழிற் செந்திலின் வாய்க்குளிர் மாமதிபோன்
முகன்றுழ் கனங்குழை முத்தணி மூரன் முகிழ்முலைமான்
மகன்று னெழுதிய வோவியம் போலு மயிலினையே. (அகூ)

தலைவியையியத்தல். ஆசிரியவண்ணவிருத்தம்.

மயில்கடவி யண்டகோள முகடதிர வம்பொன்மேரு வரைபிதிர வங் கைநீடு, ரயில்சுழல வும்பர்வாழ வுலகைவலம் வந்தசோதி யருள்குமரர் செந்தில்போலியார், குயின்மொழிக ளிந்தபாகு மடமயில்வி ளங்குசாயல் கொடியிடைது வண்டுவாடு னு, லியலுநுத லிந்த்ரசாப மிணைவிழிக ளிந்த்ரநீல மிலவிதழு மிந்த்ரகோபமே. (கூ0)

கார்கண்டிரங்கல். ஆசிரியவிருத்தம்.

கோப மெழுந்தன மேக முழங்கின கோட னிரம்பினநீள்
சாபம் வளைந்தது தோகை பரந்தன தாரவர் வந்திலரா
னீப மணங்கமழ் மார்பினர் செந்திலி னேரிழை நெஞ்சிடையே
சோப மலிந்தது வாவி தளர்ந்தது சோர்வன கண்ணுளியே. (கூக)

கலித்துறை.

துளியாது கண்புனல் சோராது மெய்துதி யாதுசொன்னுங்
களியாது நெஞ்சகங் கைகுவி யாதொருக் காலுமறை
தெளியாத வானவர் சேனு பதியைத்தென் செந்திலின்வாய்
வெளியா யெதிர்ந்து தொழார்நா கேழினும் வீழ்பவர்க்கே. (கூஉ)

பாங்கியாற்றுதல். குறள்வெண்பா.

வீழ்வா ரெழார்பொருட்கு விட்டுநமை வெற்பயிலாற்
போழ்வார்செந் தூரடையார் போல். (கச)

பிச்சியார். ஆசிரியவிருத்தம்.

போலிதனக் கென்றுமிலாப் புண்ணியன்கண் ணுதற்கடவுள் புதல்வன்
கோலப், பீலிமயி லியற்செந்தி லுலவேற்கைக் கொலைவேற்கட் பிச்சி யாரே
நூலிடையைக் குறைத்துமணிப் பணைமுலையைப் பெருக்கியென்று நோயே
செய்தீர்,நீலமுகி லோதிகுறைத் துயிர்குறைப்ப தோவுமக்கு நீதி தானே.()

தலைவிபாங்கிக்குரைத்தல். கலிவெண்பா.

தானக் குனிகோட்டுத் தந்தியினை யும்விலக்கிக்
கானக் குடிலைக் கலுழியினிற் காத்தளித்துத்
தேனக்க செச்சையந்தார்ச் செந்திலார்க் கன்பரினென்
னூனக் குருக வுயிரிற் கலந்தார்க்கு
நானக் கமழ்கூந்த னன்னுதலே வரலையென்
றியானுற் றுரைப்பதெவ்வா றின்று. (கரு)

கலிவெண்பா.

இன்றுலகி னல்குரவா லீடுபடுந் தன்மையிற்
லன்று மருவினையே னன்றவறஞ் செய்யகிலே
னென்றும் பிறப்பினுமிப் பெற்றியேமுற்றுமெனைக்
கன்று மனத்தாற் கவலுழந்து நில்லாது
குன்றெறிந்த செந்திற் குழகாநின் பூங்கழற்கால்
சென்றுதொழ மாறன்பு செய். (கசு)

தாய்கூற்று. கலித்துறை.

செய்யவ னேயெனுஞ் செந்திலெந் தாயெனுஞ் செவ்வடிவேற்
கையவ னேயெனுங் கங்கைமைந் தாவெனுங் கண்டுளிநீர்
பெய்யவ நேகந் தரமெழும் போய்விழும் பிள்ளைமதி
வெய்யவ னேயெனும் வேறறி யாளென் விளங்கிழையே. (கஎ)

தலைவிகூற்று. ஆசிரியவிருத்தம்.

இழைக்குங் கூடலு மென்னிரு கண்களி னிமைகளு மிரவெல்லா
முழைக்குங் கூடல மந்துமெதன் செந்திலா யொருகணங் கூடாவான்
மழைக்க ணம்பினை மலர்க்கரங் கோட்டியே வார்முலை மீரோட
வழைக்க நின்றுகூத் தாடிய மணிச்சிலம் பலம்புசே வடியானே. (கஅ)

கலிப்பா.

அடியாரி லுளமுருகன் பறியாத வென்புன்சொன்
முடியாத நக்கீரர் முருகாற்றுப் படையாமோ
தொடியார்பன் னிரண்டுதடந் தோளார்க்குத் திருச்செந்தில்
வடிவாய்வள் ளுகிர்ச்சேவல் வலனுயர்த்த கொடியார்க்கே. (கூக)

வெண்பா.

ஆர்க்குங் களிவண் டறையும் பொழிற்றிருச்செந்
தூர்க்கன் புடனிசென் றுள்ளமே—கூர்க்கு
மெழுமையினு நீபிறப்பி லெய்தாமற் சேயைத்
தொழுமயிலும் வேலுமெனச் சொல். (ாா)

திருச்செந்திற்கலம்பகம்

முற்றிற்று.

பலரும் பாராயணஞ் செய்யும்

திருச்செந்தில்

முருகக்கடவுள் தோத்திரப்பா

முப்பதின் முதற் குறிப்பு.

எனதேதுகன்செ	௨.	பகவானரசுமழி	௪௮.
கொள்ளார்பவ	௩.	முயல்பவர்முய	௪௯.
கற்றூலு நீடுழிக	௪.	இன்பமுந்துன்பமு	௫௩.
மலர்தலைஞால	௭.	தோகைபுறமாக்கு	௫௭.
புயமாறிரண்டு	௮.	எறிரும்பசலைக்க	௬௰.
படைக்கணார்மை	௯.	வானமும்புவியுமா	௬௧.
நெறிக்குஞ்சித்த	௰௧.	எழுயர்கடாயானை	௬௩.
அளியாலுஞ்சோ	௰௪.	தம்பிரான்செந்தி	௭௪.
வரங்கொண்டவு	௨௰.	ஆறுமுகமேன்க	௭௮.
பிழையாததொண்	௨௨.	பாடாதநாவுர்ப	௮௪.
பால்வெள்ளைநீற்று	௩௫.	நில்லாதநீபுநிலை	௮௭.
இடத்தானமாறெழு	௩௬.	பணிப்பகைமயிலு	௮௮.
ஊசலாட்டெனப்	௪௰.	இன்றுலகினல்கு	௯௪.
மூழ்காநிலைப்புதரீ	௪௩.	அடியாரிலுளமு	௯௬.
இந்துவுமிரவியு	௪௭.	ஆர்க்குங்களி	௱.

இ-ள். வஞ்சியடி இருசீரானன்றிச் சிறுபான்மை முச்சீரானும் வரப் பெறும். எ-று.

'உடைத்து' என்றதனான் இது கட்டளையன்மையும் சான்றோர் செய்யுளுட் பயிலாமையும் பெறும். இரண்டனையும் வஞ்சியடி எனவரையாது கூறவே இரண்டடியும் மயங்கிவந்த பாட்டை மயக்கடிவஞ்சியெனவும் வேறு வேறுவந்தனவற்றைக் குறளடிவஞ்சி, *சிந்தடிவஞ்சியெனவுங்கூறிக்கொள்க.

உ-ம். "தோ, றுவைத்தம்பிற் றளைதோன்றுவ" (புறம், ௪) எனவும் "நிலைக்கொராஅ விலக்கம்போன்றன" (ஷை, ஷை) எனவும் குறளடியும் சிந்தடியும் வந்தமையான் † இப்பாட்டு மயக்கடிவஞ்சியாம். (௩௭)

௪அ. அசைகூ னுகு மவ்வயி னை.

இதுவும் அதற்கெய்தியதோர் விதி.

இ-ள். அவ்விரண்டடியின் கண்ணும் நான்கசையும் கூனாய்வரப்பெறும். எ-று.

உ-ம். 'வாள், வலந்தர மறுப்பட்டன' (புறம், ௪) இதனை வாள்வலந்தர என ஒருசீர் 'யாத்தசீர்' (செய், க) என்றதனான் வலந்தருதல் வாள்மேற்சென்று மறுப்பட்டன என்னும் பயனிலை நின்றுவற்றுதலின் வாள்என நேரசை கூனாயிற்று. 'அடி, யதர்சேறலி னகஞ்சிவந்தன' 'வண்டு, மலர்தேர்ந்து வரிபாடின' 'களிறே, கதவெறியாச் சிவந்துரைஇ' (புறம்-௪) என நான்கசை கூனாயிற்று: களிறே என்ற ஏகாரம் அசையாதலிற் பொருளின்றி நின்றது.

இனி இச்சூத்திரம் பொதுவாய்நிற்றலிற் றூக்கிரண்டுபட இடையினுங் கடையினுங் கூனாய்நிற்பனவுங் கொள்க. உ-ம். ‡ 'கலங்கழா அலிற், றுறை, கலக்கானாதே' எனத் துறையென இடைக்கண் நிரையசை கூனாயிற்று. §'மாவழங்கலின் மயக்குற்றன, வழி' இதனுள் வழியென இறுதிக்கண் நிரையசை கூனாயிற்று. 'தேரோடத் துகள்கெழுமின, தெருவு' என இறுதிக்கண் நிரைபசை கூனாயிற்று. ஒழிந்தன வந்துழிக்காண்க. (௩௮)

---

* சிந்தடியான்வருதல் சிறுபான்மையெனக் கொள்க என்பர் பேராசிரியர்.

† 'வாள், வலந்தர மறுப்பட்டன' என்னும் புறப்பாட்டு.

‡ § இவையிரண்டும் யாப்பருங்கலவிருத்திகாரர் காட்டியன (ஒழிபியல் - க.)

௪௯. சீர்கூ றுத னேரடிக் குரித்தே.

இது மூன்று பாவிற்கும் உரிய அளவடிக்கு எய்தாததெய்துவிக்கின்றது.

இ-ள். அளவடிக்குச் சீர் கூறுதல் உரித்து. எ-று.

இஃது இருவகையடிக்கும் உரித்து: உ-ம். *'அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை, வாடா வள்ளியங் காடிறந் தோரே' (குறுந்தொகை-உகசு) †'உதுக்காண், சுரந்தானு வண்கைச் சுவணமாப் பூதன்' ‡'உலகினுட், பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினும்' என்று மூன்றுபாவினும் வந்தன. எற்புழிக்கோடல் என்பதனால் அடிமுதற்கட் கோடும். தன்னினமுடித்தல் என்பதனான் வஞ்சிக்குங்கொள்க; §'உலகே, முற்கொடுத்தார் பிற்கொளவும்' எனவரும். (௪௯)

௫௦. ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்த
வெழுபது வகையின் வழுவில வாகி
யறுநூற் றிருபத் தைந்தா கும்மே.

---

* 'அவரே' என்பது ஆசிரியம்.

† 'உதுக்காண், சுரந்தானு வண்கைச் சுவணமாப் பூதன்
பரந்தானுப் பல்புகழ் பாடி—யிரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருணீங்க
மின்னு மளித்தேர் மழை. இது வெண்பா. சுரவான் மாப்பூதன், சுமானமரப்பூதன் எனவும் பாடம்.

‡ 'உலகினுட், பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினு
மிருந்தகைய விருவரைமே லெரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார்சிறுதகைமைசிறப்பென்னும்பிறழ்வின்றி
யுறுதகைமையுலகிற்கோர்பிழைப்பாகித்தோன்றுவே'
இது கலி.

§ 'உலகே, முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவு
முறுதிவழி யொழுகுமே
யதனு, னற்றிற நாடுக நன்மை
பற்றற யாவையும் பரிவறத் துறந்தே' இது வஞ்சி. இவ்வைந்து மேற்கோளும் யாப்பருங்கலவிருத்திகாரர் காட்டியன. (ஒழிபியல்-க)

மேல் நாற்சீரடியினை * ஐவகையாகக்கூறி இதனானே அறுநூற்றிருபத்தைந்தாகுமென அவற்றின் விகற்பமுங் கூறினார்.

இ—ள். ஐவகை.........காலே எ—து மேற்கூறிய ஐவகையடியும் விரிக்குமிடத்து. மெய்.........நிலத்த எ-து பொருள்வகையமைந்த பதினேழ் நிலத்தவாய். எழுபது.........வாகி எ-து எழுபதுவகைக் குற்றம் நீங்கி. அறு...மே எ-து அறுநூற்றிருபத்தைந்தாம். எ-று.

எனவே, பதினேழ்நிலத்தேறினும் எழுபதுவகைக்குற்றம் விரவினும் அறுநூற்றிருபத்தைந்து என்ற கட்டளை யாகாவாயிற்று. அகவற்கு இயற்சீர் பத்தொன்பதும் உரிச்சீர் நான்கும் அசைச்சீர் நான்கும் ஆக இருபத்தேழும், வெள்ளைக்கு இயற்சீர் பத்தொன்பதும் வெண்சீர் நான்கும் அசைச்சீர் நான்கும் ஆக இருபத்தேழும், கலிக்கு நேரீற்றியற்சீர் மூன்றொழிந்த இயற்சீர் பதினாறும் உரிச்சீர் நான்கும் வெண்சீர் நான்கும் ஆக இருபத்துநான்கும், ஆக எழுபத்தெட்டுச் சீர்களுள் அகவற்கும் வெள்ளைக்கும் அசைச்சீர் எட்டும் இயற்சீர்ப்பாற்படுத்துத் தளைகோடலின் அவற்றை இயற்சீர்க்கண் அடக்க எழுபதாம். சீர்கள் ஒன்று ஒன்றனோடு தட்குங்கால் அவை பொருளானன்றி ஓசையைக்கடக்குமாறின்மையின் அவ்வோசை கெடாது வருதற்கு எழுபதுதளை வழுவின்றிவரல்வேண்டும் என்பார் ‘எழுபது வகையின் வழுவில’ என்றார். இவ்வண்ணந் தளைகொண்டாரேனுந் தளைக்குக் கழித்த அசைச்சீரெட்டும் சீராய்நின்று அடியுறழுமெனவுணர்க. அகவற்கு ஆசிரியத்தளையும், வெள்ளைக்கு இயற்சீர்வெண்டளையும், இயற்சீரொடுதட்ட வெண்சீர்வெண்டளையும், துள்ளற்குக் கலித்தளையும் ஆக அறுநூற்றிருபத்தைந்து தளையும் மூன்று பாவிற்கும் பகுக்குங்கால் அகவற்கு முந்நூற்றிருபத்துநான்கும், வெள்ளைக்கு நூற்றெண்பத்தொன்றும், கலிக்கு நூற்றிருபதுமாம்.†

‘மெய்வகை யமைந்த’ என்றதனான் நான்கு சீரினும் உறழ்கின்ற சீரினை அடிமுதற்கண்ணே வெளிப்படவைத்து அவ்வச்சீரினடியாக்கிப் பெ

---

* குறளடி, சிந்தடி, நேரடி, நெடிலடி, கழிநெடிலடி: (செய். ௩௬, ௩௭, ௩௮, ௩௯, ௪0.)

† “எள்ளற்ற முந்நூற் றிருபத்து நான்ககவல்
வெள்ளைக்கு நூற்றெண்பத் தொன்றாகுந்—துள்ள
னவையறு நூற்றிருப தாமடி நாடி
னவையறு நூற்றிருபத் தைந்து.”

யருங்கொடுத்து அகவற்கு ஒரோவொன்று பன்னீரடியாகவும் ஒழிந்த இரண்டற்கும் பிறவாறாகவும் உறழப்படும்.

இனி அகவற்கு உறழுமாறு:—'இயற்சீ ருரிச்சீ ரசைச்சீர் கூடி, யிரண்டு தலையிட்ட வையைந்து சீரா, யகவற் கோரோவொன் றுறழு மடித்தொகை, யீரா றென்ப வியல்புணர்ந் தோரே' 'அகவற்குரியசீ ரிருபத்தேழனுள், நுந்தையும் வண்டும் முதல்வரு மடிக்க, ணந்நான் கெழுத்து முதலாய்க் கொண்டு, பதினேந் தளவு மேறிப் பெறுந்தொகை, யீரா றீரா றுகுமென்ப' ௨௪. ௨-ம். நுந்தை வண்டு வண்டு வண்டெனவும் நுந்தை காருருமு நளிமுழவு நளிமுழவு எனவும் ஒரெழுத்துத் தேமாவடி நான்குமுதற் பன்னிரண்டளவும் உயர்வனவற்றிற்கு முதலடியும் முடிவிலடியுங் காட்டினும். இதற்கு மேல் வருவனவற்றிற்கும் இடைநின்றனவற்றையு மிவ்வாறே சீர்தளைப்பெய்து ஒட்டிக்கொள்க. வண்டு வண்டு வண்டு வண்டு எனவும் வண்டு காருருமு நளிமுழவு நளிமுழவுஎனவும்: வண்டு என்னும் ஒரெழுத்துச் சீரடி பன்னிரண்டற்கும் முதலும் முடிவுங்காட்டினும். 'தேமா மின்னு வரகுமுதல் வருமடி,யைந்துமுத லீரெட் டளவு முயர்ந்து, வந்த தொகைமூ வொருபத் தாறே' ௩௬. தேமா வண்டு வண்டு வண்டு எனவும் தேமா காருருமு நளிமுழவு நளிமுழவு எனவும்: தேமாஅடி பன்னிரண்டற்கும் முதலும் முடிவும் காட்டினும்; மின்னுவரகு என்னும் இரண்டற்கும் இஃதொக்கும். 'ஞாயிறு போதுபூப் போரேறு புளிமா, அரவு முதலா வந்தவைந் தடியு, மாறு தொட்டுப் பதினே ழளவு, முயர்ந்த தொகையா றொருபஃ தாகும்' ௬௦. 'ஞாயிறு வரகு வண்டு வண்டு எனவும் ஞாயிறு நளிமுழவு நளிமுழவு நளிமுழவு எனவும் ஞாயிற்றடி பன்னிரண்டற்கும் முதலும் முடிவுங்காட்டினும். போதுபூ போரேறு என்னும் இரண்டற்கும் ஈதொக்கும். புளிமா வண்டு வண்டு வண்டு எனவும் புளிமாக் காருருமு நளிமுழவு நளிமுழவு எனவும் ஒட்டுக. அரவுக்கும் இவ்வாறே யொட்டுக; என்றைந்தடிக்கும் முதலும் முடிவும் காண்க. 'பாதிரி வலியது மேவுசீர் நன்னுணுப், பூமருது கடியாறு விறகுதீ நீடுகொடி, யாதி யாகிய வடிக டாமே, யேழுமுதன் மூவா றளவு முயர்ந்த, தொகையாறு முடிவிட்ட தொண்ணூ றுகும்' ௬௬. பாதிரி வரகு வண்டு வண்டு எனவும் பாதிரி நளிமுழவு நளிமுழவு நளிமுழவு எனவும் பாதிரியடி பன்னிரண்டற்கும் முதலும் முடிவுங்காட்டினும். ஒழிந்த எழற்கும் இவ்வாறே யொட்டிக்காண்க. 'கணவிரி யுரறுபுலி காருருமு பெருநாணு, உருமுத்தீ மழகளிறு நாணுத்தளை முதலா, வந்த வடிக ளிருநான்கு தொட்டுப், பத்தொன் பானள வும்முயர்ந்த தொகை, நான்குமுடி விட்ட வெண்ணொருபஃதாம்' அ௪. கணவிரி வரகு வண்டு வண்டு எனவும் கணவிரி நரையுருமு நரையுருமு நரையுருமு எனவும் கணவிரியடி பன்னிரண்டற்கும் முத

லும் முடிவுங்காட்டினும். ஒழிந்தவற்றிற்கும் இவ்வாறே யொட்டிக்கொள்க. 'விரவுகொடி நரையுருமு முதல்வரு மடிக, ளொன்று தலையிட்ட விருநான் குதொட்டே, யைந்நான் களவு முயர்ந்த தொகைதா, மூவெட் டாக மொழிந் தனர் புலவர்' உ௯. விரவுகொடி வரகு வண்டு வண்டு எனவும் விரவுகொடி நளிமுழவு நளிமுழவு நளிமுழவு எனவும் விரவுகொடியடி பன்னிரண்டற்கும் முதலும் முடிவுங்காட்டினும். ஒழிந்ததற்கும் இவ்வாறே யொட்டிக்காண்க. "அகவற் குறழ்ந்த வடித்தொகை கூறி, ளுன்குதலை யிட்ட நாலைந் தனோடு, மூவொரு நூறு மொழிந்தனர் புலவர்' ஆக. அடி முந்நூற்றிருபத்து நான்கு; ௩௨௪.

இனி வெள்ளைக்கு உறழுங்கால் வழும் எட்டும் ஒன்பதும் பத்தும் ஆகிய எழுத்தானுய வடிகள் முதலா வந்தவை பதினொன்கெழுத்தளவும் உயருங்கால் ஓர் சீர் எட்டடியும் எழடியும் ஆறடியும் ஐந்தடியும் பெற்று நூற்றெண்பத்தொன்றும். 'இயற்சீ ரசைச்சீர் வெண்சீர் கூடி, யிரண்டு தலையிட்ட வையைந்து சீராய், வெள்ளை யுறழு மாறு கூறி, னெட்டு மேழு மாறு மைந்துமென், றெட்டு மடிகளைப் பெறுமவை தாமே' 'வெள்ளைக் குரியச் சிருபத்தேழனுள், நுந்தை வண்டு ஞாயிறு போதுபூப், போரேறு முதலா வந்த வடிக, ளேழு தொட்டே யீரே ழளவு, முயர்ந்த தொகைநா லொருபஃ தாகும்' ௪0. உ-ம். நுந்தை நளிமுழவு வரகு வரகு எனவும் நுந்தை மழகளிறு காருருமு காருருமு எனவும் நுந்தையடிக்கு முதலும் முடிவுங்காட்டினும். வண்டிற்கும் இஃதொக்கும். ஞாயிறு வண்டு வரகு வரகு எனவும் ஞாயிறு காருருமு மாவருவாய் காருருமு எனவும் ஞாயிற்றடிக்கு முதலும் முடிவுங் காட்டினும். போதுபூ, போரேறு என்னும் இரண்டற்கும் இஃதொக்கும். 'தேமா மின்னு வரகு வலியது, பாதிரி மேவுசீர் நன்ஞணுப் பூமருது, கடியாறு விறகுதீ மாசெல் வாய்முதல், வந்த வடிக ளிருநான்கு தொட்டே, யீரே ழளவு முயர்ந்து பெறுந்தொகை, யேழுமூடி விட்டவே யொருபஃ தாகும்' எஎ. தேமா வரகு வரகு வரகு எனவும் தேமா நளிமுழவு காருருமு பாதிரி எனவும் தேமாவடிக்கு முதலும் முடிவுங்காட்டினும். மின்னு வரகு என்னுமிரண்டற்கும் இஃதொக்கும். வலியது வண்டு வரகுவரகு எனவும் வலியது காருருமு காருருமு பாதிரி எனவும் ஒட்டுக. ஒழிந்தவற்றையும் இவ்வாறே யொட்டுக. 'கணவிரி பெருவேணுக் காருருமு புலிசெல்வாய், மழகளிறுருமுத்தீ மாவருவாய்புளிமா, வரவுத் தீமுதலாக வந்த, வடிக ளொன்பது மீரே ழளவு, முயர்ந்து பெறுந்தொகை யுணரக் கூறி, ளுன்குதலை யிட்ட வையொரு பஃதாம்' ௫௪. கணவிரி வண்டு வரகு வரகு எனவும் கணவிரி காருருமு காருருமு தேமா*எனவும்கணவிரியடிக்குமுதலும்முடிவுங்காட்டினும். காருருமு வண்டு வரகு வரகுஎனவும் காருருமு காருருமு காருருமு ஞாயிறு

எனவும்ஒட்டுக. புளிமா வரகு வரகு வரகுஎனவும் புளிமா புலிவருவாய் காரு ருமு தேமா எனவும் ஒட்டுக. ஒழிந்தவற்றிற்கும் எற்குமாறறிந் தொட்டுக. 'நரையுருமு புலிவருவாய் முதலா மடிக, ளீரைந்து தொட்டே யீரே ழளவு, முயர்ந்து பெறுந்தொகை யீரைந் தாகும்' ௧௦. நரையுருமு வண்டு வரகு வரகு எனவும் நரையுருமு காருருமு பாதிரி தேமா எனவும் நரையுருமு அடிக்கு முதலும் முடிவுங்காட்டினும். புலிவருவாய்க்கும் இஃதொக்கும். பதினென்கெழுத்தினேறியக்காற் செப்பலோசை திரிபுடைய கட்டளைக்கென்பது இசையொடுசேர்த்தியுணர்க. 'வெள்ளைக் குறழ்ந்த வடித் தொகை கூறி, னொன்று முடிவிட்டவெண் ணொருபது நூறும்' ௧அக.

இனிக்கலிக்கு உறழுமாறு;—'நேரீ ரொழிந்த வியற்சீ ரெட்டும், வெண்சீ ரிருசீர் தம்மொடு கூட்டி, நான்குதலை யிட்ட நாலைந் தாதி, யொரோவொன்றைந்தடி யுறழப் பெறுமே' 'கலிக்குற ழுஞ்சீ ரிருபத்து நான்கனுண், ஞாயிறு போதுபூப் போரேறு முதலா, வந்த வடிகள் பதின்மூன்று தொட்டே, யொன்றுதலை யிட்ட வீரெட் டளவு, முயர்ந்து பெறுந்தொகை மூவைந்தாகும்' ௧௫. ஞாயிறு புலிசெல்வாய் புலிசெல்வாய் மாசெல்வாய் எனவும் ஞாயிறு புலிவருவாய் புலிவருவாய் மாசெல்வாய் எனவும் ஞாயிற்றடிக்கு முதலும் முடிவுங்காட்டினும். ஒழிந்தவற்றிற்கும் இஃதொக்கும். இவற்றிற்கு முதலே ஆசிரியத்தளையும் ஈற்றிலே வெண்சீர் வெண்டளையுந் தட்குமாலெனின், 'நிரைமுதல் வெண்சீர்' (செய்-௬௦) என்னுஞ் சூத்திரத்தானும் 'வெண்சீர்ற் றசை' (ஷை, ௨௧) என்னும் சூத்திரத்தானும் அவை கலித்தளையாமாறு காண்க. 'பாதிரி வலியது மேவுசீர் நன்ஞணுப், பூமருது கடியாறு விறகுதீ மாசெல்வாய், நீடுகொடி முதலா வந்த வடிக, ளீரேழ் தொட்டே மூவா றளவும், வந்து பெறுந்தொகை யுரைப்பி னதுவென, வைந்துமுடி விட்டநா லொருபஃ தாகும்' ௬௫. பாதிரி புலிசெல்வாய் புலிசெல்வாய் மாசெல்வாய்எனவும் பாதிரி புலிவருவாய் புலிவருவாய் மாவருவாய்என வும்பாதிரியடிக்கு முதலும் முடிவுங்காட்டினும். ஒழிந்தவற்றிற்கும் இஃதொக்கும். 'கணவிரி யுரறுபுலி காருருமு பெருநா, ணுருமுத்தீ மழகளிறு நாணுத்தளை புலிசெல்வாய், மாவருவாய் முதலா வந்த வடிகள், மூவைந்துதொட்டுப் பத்தொன்பா னளவு, முயர்ந்து பெறுந்தொகை முன்ன ரஃதே' ௬௫. கணவிரி புலிசெல்வாய் புலிசெல்வாய் மாசெல்வாய் எனவும், கணவிரி புலிவருவாய் புலிவருவாய் மாவருவாய் எனவும் கணவிரியடிக்குமுதலும் முடிவுங்காட்டினும். ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும். 'விரவுகொடி நரையுருமு புலிவருவாய் முதலா, வந்த வடிக ளீரெட்டுத் தொட்டே, யைந்நான் களவு முயர்ந்து பெறுந்தொகை, மூவைந் தாகமொழிந்தனர் புலவர்' ௧௫. விரவுகொடி புலிசெல்வாய் புலிசெல்வாய் மாசெல்வாய் எனவும் விரவுகொடி

புலிவருவாய் புலிவருவாய் புலிவருவாய் எனவும் விரவு கொடியடிக்கு முதலும் முடிவுங் காட்டினும். ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும். 'கலிக்குரித்தாக வுறழ்ந்த வடித்தொகை, யீரைம் பதனொடு நாலைந் தாகும்' கஉ0.

'மூவகைப்பா விற்குமுறழ்ந்த தொகை, யறுநூற் றிருபத் தைந்தாகும்மே' ஆக அடி சூஉரு*. இவற்றுள் அகவற்கு நாற்பத்தொன்றும் வெள்ளைக்குப் பதினெட்டும் ஆக ஐம்பத்தொன்பதடிக்குத் தளைவழுப்படுதலின் அவைகளைந்து தொடைகொள்ளுமாறு 'மெய்பெறு மரபின்' (செய். ௬0௧) என்னுஞ் சூத்திரத்துட் காட்டுதும். (ரு0)

ருக. ஆங்ஙனம் விரிப்பி னளவிறந் தனவே
பாங்குற வுணர்ந்தோர் பன்னுங் காலை.

இஃது ஒழிந்த நான்கடியையும் நாற்சீரடிபோல வுறழ்க என்பார்க்கு அவையுறழாமைக்குக் காரணங்கூறுகின்றது.

இ-ள். ஆங்ஙனம்.........தனவே எ-து அந்நாற்சீரடிபோல மற்றை நான்கடியினையும் விரிப்பின் அவை இலக்கணங்கூறுதற்கு வரையறைப்படாது எண்ணிறந்தனவாம். பாங்கு.........காலை எ-து பகுதியுற வறிந்தோர் விரிக்குங்காலத்து. † எ-று.

முதனூலாசிரியர் சிறப்புடையனவற்றிற்கும் சிறப்பில்லனவற்றிற்கும் ஒருங்கிலக்கணங்கூறின் அவையொத்த விலக்கணத்தவாமென்று கருதி வரையறைப்படுவனவற்றிற்கே இலக்கணங்கூறி வரையறையின்றிப் பரந்தனவற்றிற்கு இலக்கணங்கூறிற்றிலர். அவர்கருத்துநோக்கி இவ்வாசிரியரும் யானும் அவ்வாறே கூறினேமென்று கூறியதாயிற்றிதன் கருத்து: ஆயிற் சிறப்புடைய கட்டளையடி சான்றோர் செய்யுளுட் பயின்றுவரல்வேண்டும் பிறவெனின்; இந்நூல் செய்த காலத்திற் றலைச்சங்கத்தாரும் இடைச்சங்

---

* 'இனி அடி அறுநூற்றிருபத்தைந்தாமாறு;—அசைச்சீர், இயற்சீர், ஆசிரியவுரிச்சீர், வெண்சீர், வஞ்சியுரிச்சீர் என்னும் ஐந்தினையும் நிறுத்தி இவ்வைந்தினையும் வஞ்சியுரிச்சீராக வுறழும்வழி இருபத்தைந்து விகற்பமாம். அவ்விருபத்தைந்தின்கண்ணும் மூன்றாவதைந்து சீரையு முறழ நூற்றிருபத்தைந்து விகற்பமாம். அந்நூற்றிருபத்தைந்தின்கண்ணும் நான்காவது ஐந்துசீரையுமுறழ அறுநூற்றிருபத்தைந்தாம்.' என்பது உரையாசிரியருரை.

† 'ஈண்டுறழ்ந்த முறையானே அஞ்சடிமுதலாக மேன்மேலும் உறழ வரம்பிலவாம் எ-று. அஃதாவது அறுநூற்றிருபத்தைந்தினொடும் ஐந்தாவது வரும் ஐந்துசீரையும் உறழ மூவாயிரத்தொருநூற்றிருபத்தைந்து விகற்பமாம்; அதன்கண் ஆறாவது இவ்வகை யைந்துசீரையு முறழப் பதினையாயிரத்தறுநூற்றிருபத்தைந்து விகற்பமாம். அதன்கண் எழாவது வரும் சீரைந்தினையும் உறழ எழுபத்தெண்ணாயிரத் தொருநூற்றிருபத்தைந்து விகற்பமாம். இவ்வகையிலுறழ வரம்பிலவாம். அன்றியும் இச்சொல்லப்பட்ட அடியினை அசையானும் எழுத்தானும் விரிக்க வரம்பிலவாம்' என்பர் உரையாசிரியர்,

கத்தாநுங் கட்டளையடி பயின்றுவரச் செய்யுள்செய்தார் என்பது இச்சூத்திரங்களாற் பெறுதும். பின்பு கடைச்சங்கத்தார்க்கு அஃதரிதாதலிற் சீர்வகையடிபயிலச் செய்யுள் செய்தாரென்றுணர்க. இக்காலத்தார் அளவடியாற் செய்யுள் செய்திலரென்று கடைச்சங்கத்தார் செய்த அளவடி சிறப்பின்றாகாததுபோல அதுவும் கொள்க. வஞ்சிக்கு வரையறைப்படும்படி 'குறளடி முதலா' (செய்-௫௭) என்பதனுட்கூறுதும்.

௫௨. ஐவகை யடியு *மாசிரியக் குரிய.

இது முன்னர்க் கூறிய கட்டளையடி இன்னபாவிற்கு உரியஎன்கிறது.

இ-ள். †நாலெழுத்துமுதல் இருபதெழுத்தின்காறும் உயர்ந்த பதினேழ் நிலனும் ஆசிரியப்பாவிற்குரித்து. எ-று.

---

*"மற்று ஆசிரியம் என்பது மகரவீறுதலின் 'மஃகான் புள்ளிமுனத்தே சாரியை' (எழுத்-௨௫-௩௩) என்பதனான் அத்துச்சாரியை பெறல் வேண்டுமெனின், அது செய்யுள் விகாரமென்பாருமுளர்; அற்றன்று, ஆண்டு நின்றது நான்காமுருபாயினன்றே அது கடாவாவது: அதனை ஏழாவதன் பொருண்மைக்கண் அக்குச்சாரியை ஈறுதிரியாது வந்ததென்று கொள்ளப்படும்'' என்றார் பேராசிரியர்.

† "நாற்சீரடிக்கண் வகுக்கப்பட்ட ஐவகையடியும் ஆசிரியப்பாவிற்குரிய எ-று. ஐவகையடியும் உரியவெனவே அவற்றிற்கு முதலாகிய நாற்சீரடியுமுரித்தாயிற்று. உ-ம்.—'தேர்ந்து தேர்ந்து சார்ந்து சார்ந்து, நேர்ந்து நேர்ந்து வாமனை நினையிற், சேர்தரு வல்வினை சேர்ந்தக லும்மே' இதன்கண் முதலடி நாலெழுத்தான் வந்தவாறு காண்க. 'குன்று கொண்டு நின்ற மாடு, பொன்ற வந்த மாரி, சென்று காத்த திறலடி தொழுமே' இதன்கண் முதலடி ஐந்தெழுத்தான் வந்தது. 'ஆறு சூடி நீறு பூசி, யேறு மேறு மிறைவனைக், கூறு நெஞ்சே குறையிலை நமக்கே' இதன்கண் முதலடி ஆறெழுத்தான் வந்தது. 'போது சாந்தம் பொற்ப வேந்தி' இது முதலடி எழெழுத்தான்வந்தது. 'தன்றோ ளன்கி ஞென்றுகைம் மிகூஉங், களிறுவளர் பெருங்கா டாயினு, மொளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே' இது முதலடி யெட்டெழுத்தான் வந்தது. 'சொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி' இஃது ஒன்பதெழுத்தான் வந்தது. 'காமஞ் செப்பாது கண்டன மொழிமோ' இது பத்தெழுத்தான் வந்தது. 'தாமரை புரையுங் காமர் சேவடி' இது பதினோரெழுத்தான் வந்தது. 'நாயுடை முதுநீர்க் கலித்த தாமரை' இது பன்னிரண்டெழுத்தான் வந்தது. 'அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி' இது பதின்மூன்றெழுத்தான் வந்தது. 'யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனை' இது பதினாலெழுத்தான் வந்தது. 'எற்றுவலை னுயரிய வெரிமரு ளவிர்சடை' இது பதினைந்தெழுத்தான் வந்தது. 'விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமும்' இது பதினாறெழுத்தான் வந்தது. 'தேன்றூங் குயர்சிமைய மலைநாறிய வியன்ஞாலம்' இது பதினேழெழுத்தான்வந்தது. 'கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும்' இது பதினெட்டெழுத்தான் வந்தது. 'நெடுங்கொடிய நிமிர்தேரு நெஞ்சுடைய புகன்மறவரும்' இது பத்தொன்பதெழுத்தான் வந்தது. 'அமர்காணி னமர்க டந்தவர் படைவிலங்கி யெதிர்நிற்கலின்' இஃது இருபதெழுத்தான் முதலடியொன்று வந்தவாறு காண்க." என்பது உரையாசிரியருரை.

வந்தால் ஐந்தாறு வருஷங்களுக்கு நல்ல பலனையடையலாம். வருஷத்துக்கு ஒரு தரம் பழைய கொடிகளை அறுத்துக்கொண்டு வரவேண்டும். இந்த அவரைவகையைச்சார்ந்த பிரன்சு பீனிஸ்கொட்டைகளையும் அவரைச்செடியைப்போலவே பயிரிடலாம்.

பட்டாணி, பீனிசு, புடோலங்காய்.

இவற்றுக்குக் கரிசல் அல்லது செம்மண்ஜல்லி பூமி நல்லது. ஆடிமாதத்தில் தோட்டத்தின் நீரோடிநிலத்தில் சிறு பாத்திகள் கட்டிப் பாத்தி ஒன்றுக்கு நான்கு விதைகளாக நட்டு பிரதிதினமும் தவறாமல் தண்ணீர்விட்டுக்கொண்டு வந்தும், கொடிகள் வளர்ந்தபின் ஐந்தடி உயரத்துக்கு ஒரு பந்தலிட்டுப் பிரதிதினமும் தப்பாமல் பாத்திகளில் தண்ணீர் தங்கும்படி விட்டுக்கொண்டும் வந்தால் செடி ஒன்றுக்கு ௪00-அல்லது ௪௨0 காய்கள் ஐந்தடி நீளமாகிற வரையில் விளையும்.

பீர்க்கங்காய்.

பீர்க்கஞ் செடியைத் தனியாகவாகிலும், அல்லது ராகி மிளகாய்முதலான பயிர்களோடு வரப்புகளில் ஆடிமாதத்தில் நட்டுச் சாலையடித்தாலும், அதாவது மரக்கொம்புகிளைகளைப் பக்கத்தில் நட்டாலும் அவற்றின்மேற் செடிகள்படர்ந்து வெகுசீக்கிரத்தில் காய் காய்க்கும். இதற்கும் அதிகத் தண்ணீர் வேண்டும்.

பாகற்காய்.

பாகற்காயில் குத்துப்பாகல் என்றும், கொடிப்பாகல், கொரிப்பாகல் என்றும், பின்னும் பல வகைகளுண்டு. கொடிப்பாகலுக்கு அதிகத் தண்ணீர் கட்டிக்கொண்டு வந்தால் காய்கள் இரண்டடிநீளம் வரையில் நீளும். இவைகள் யாவும் அற்பப்பயிர்கள்.

கோவைக்காய்.

இது சாதாரணமாக வேலியோரங்களில் தானாகப் படர்ந்து காய்காய்க்கும். இதன் காய்களையும் இலைகளையும் உணவுக்கு உபயோகப்படுத்தலாம்.

ஆதுண்டங்காய்.

இது ஒரு முட்கொடி. சாதாரணமாக மனுஷிய பிரயத்தனமில்லாமல் வேலியோரங்களில் முளைத்து வேலிகளிற் படரும். இதன் காய்கள் ஊறுகாய்க்கு உதவும்.

முருங்கைக்கீரை.

முருங்கை மெத்த உபயோகமானது. தோட்ட நிலத்தில் தண்ணீரோடும் கால்வாய்களின் வழியோரங்களிலும் கிணறுகளைச் சுற்றிலும் விதைகளைநட்டாலும் அல்லது பழைய மரத்திலிருந்து கிளைகளை வெட்டி மழைக்காலத்தில் நட்டுவிட்டாலும் ஒருவாரத்துக்குள் வேர்பிடித்துப் பிறகு மரமாகிவிடும். முருங்கையின் இலை, பூ, காய் முதலானவை உபயோகமாகும். பட்டை வேர் மருந்துக்கு உதவியாகும்.

அகத்திக்கீரை.

இதைக் கொடிக்கால்களில் வெற்றிலைக்கு உதவியாக நட்டுப் பயிர் செய்யலாம். அல்லது தோட்டத்தின் நீரோடிக் கால்வாய் வழியோரங்களில் ஆடி மாதம் விதை நட்டுப் பயிர்செய்தால் இலை, பூ, காய் உணவுகளாவதுடன் அதன் மரம் விறகுக்கும் ஆகும்.

பப்பளிக்காய்.

பப்பளிச்செடியைத் தோட்ட நிலத்தில் மற்றப்பயிர்களுக்குக் கேட்டையுண்டாக்காத கிணற்றின் ஓரங்களிலும் சாலைகளின் ஓரங்களிலும் விதை நட்டுப்பயிர்செய்யலாம். இதன் காய் கறிக்காகும்; பழத்தையும் சாப்பிடலாம்.

அத்திக்காய்.

அத்தி மரங்களை விஸ்தீர்ணமான காடுகளில் மாத்திரம் பயிரிடலாம். மற்றப்பயிர்களுக்குக்கேட்டைஉண்டாக்காதபடி வேலியோரங்களில் தானாகவளர்ந்தால் வெட்டாமல் வளர்க்கலாம். இதன் காய் கறிக்கும் பழம் உண்பதற்கும் உதவும். இதன் கள் மேகவெட்டைக்கு நல்ல மருந்தாம்.

மாங்காய்.

மாமரத்தைப்பற்றித் தனியாகச்சொல்லப் பட்டிருக்கிறது. நிலத்தில் மற்றப் பயிர்களுக்குக் கேட்டை யுண்டாக்காத கிணற்றின்கரையோரம் வேலியோரங்களில் தானாகவிளையும். மாமரத்தை வெட்டாதுவிட்டு வளர்த்தால் காய்கள்கறிக்காகும்; பழங்களும், உபயோகமாகும்.

நுணுக்காய்.

இது தானாக வேலியோரங்களில் விளையும். இதன் காய்கள் ஊறுகாய்க்கு ஆகும். மரம் சாயத்துக்கும் நுகத்தடிக்கும் உபயோகமாகும்.

மரிமாங்காய்.

மரிமாங்காயின் இலைகள் துவையலுக்கும், காய் ஊறுகாய்க்குமாகும்.

இலந்தைக்காய்.

இலந்தைச் செடிகள் தானாக வேலியோரங்களில் முளைத்தால், அதன் கொம்புகள் வேலியடைப்பதற்கு உதவும். காயும்பழமும் துவையலுக்கும் உதவும்.

விளாங்காய்.

விளாங்காயும் பெரியமரஜாதியைச்சார்ந்தது. இது வேலியோரங்களில் தானாக முளைக்கில், வெட்டாமல் பாதுகாத்தால், இதன் காய் துவையலுக்கும் பழம்உண்பதற்குமாம். பித்தகாரி. புத்தியை கூர்மைப்படுத்தும்.

எலுமிச்சங்காய்.

எலுமிச்சங்காய்ச் சாதியில் பலவகைகளுண்டு. இது முள்உள்ள செடி. இதையும் கடாநாரத்தை, கிச்சிலி முதலானவற்றை வேலிக்கருகிலும், கிணற்றின் மேட்டுக்கருகிலும் விதைகளை நட்டாகிலும் கட்டுச்செடிகளாகவாகிலும் வைத்துப் பயிரிட்டால், இதன் காய்கள் ஊறுகாய்க்கு உதவும். விலைக்கும் விற்கலாம். இதை அதிகமாகப் பயிரிட்டால் நல்ல லாபம் கிடைக்கும்.

தக்காளி.

தக்காளிச்செடிகள் சாதாரணமாகத்தோட்டநிலங்களில் தானாக விளைவதுண்டு. இதற்குத் தக்க நிலத்தைப் பதப்படுத்தி விதைகளை விதைத்துத் தண்ணீர்கட்டிக்கொண்டுவந்தால் காய்களும் பழங்களும் அதிகமாக விளையும். பழங்கள் துவையலுக்கு ஆகும். வெள்ளைக்காரர் இந்தப்பழத்தைப் பிரியத்தோடு பலவகையாகஉபயோகப்படுத்துகிறார்கள்.

மணத்தக்காளி.

மணத்தக்காளியில், கருப்பு சிவப்பு என்றுதி வகைகளுண்டு. இதைக் கிரைப்பாத்திகளில் விதைத்துப் பாத்திகட்டித் தண்ணீர்கட்டிக்கொண்டு வந்தால், செடிகள் பெருத்துக் காய்த்துப் பழந்தரும். இதன் இலை வயிற்றின் இரணங்களை யாற்றும் மேன்மையானகீரையாகும். காய்கள் குழம்பு செய்யவும், பழங்கள் வற்றல்போடவும் உதவும். இது சில இடங்களில் தானுகவும் விளைவதுண்டு.

நாயுருவி.

நாயுருவியைத்தேடிப் பயிரிடவேண்டியதில்லை. இது தானுக வேலியோரங்களிலும் வரப்புகளிலும் முளைக்கும். இதன் இலை மூலவியாதிக்காரருக்கு நல்ல கீரையாகும். இலையும் வேரும் தேட்கொட்டு விஷத்தை நீக்கும். ஆனுல் இந்தப்பூண்டு அதிக விதைகளுள்ளதாகையாற் காற்றில் பரக்க விழுந்து பூமியைக்கெடுக்கும்.

பொன்னுங்கண்ணிக்கீரை.

பொன்னுங்கண்ணிக் கீரை விசேஷமாகத் தண்ணீர் நிற்கும் சதுப்பு நிலங்களில் தானுகவிளையும். தோட்டநிலத்திற் சிறு பாத்திகளைக் கட்டி அதில் விதைகள் விதைத்தாலும் அல்லது கொழுந்துகளை நட்டாலும் பயிராகும். இது நேத்திர ரோகங்களை நீக்கும் நல்ல கீரை.

காட்டுச்சிறுகீரை.

இது சாதாரணமாக நீரோடும் நிலங்களில் தானுகவிளையும். விதைகளைச் சம்பாதித்துச்சிறுபாத்திகளைக்கட்டி விதைத்தால் செழிப்பாக விளையும். இது தேகத்திலிருக்கும் துர் நீரையும் விக்கத்தையும், நீக்கும்படியான நல்ல கீரை.

முள்ளுக்கிரை.

இது தானுகவே நிலத்தின் பயிராகாத இடங்களிலும், கிணற்றின் கரையோரங்களிலும், குப்பைமண் விழும் இடங்களிலும் அதிகமாக விளையும். இதன் இலை நல்ல கீரையாவதன்றியும், இரத்தக்கட்டிகளுக்கு வதக்கிக்கட்டலாம்.

குண்டைக்கீரை.

இது சாதாரணமாகக் குளக்கரை யோரங்களில் மிகுதியாக விளையும் கீரை. இது வயிற்றிலிருக்கும் துர்நீரை நீக்கும்.

தோட்டச்சிறுகீரை.

இதைத் தோட்ட நிலத்திற் சிறுபாத்திகளைக் கட்டி விதைகளை விதைத்துத் தண்ணீர்கட்டிக்கொண்டுவந்தாற் செழிப்பாக விளையும். வாரத்துக்கு ஒருதரம் இரண்டோர் அங்குல நீளத்துக்கு அறுத்து உபயோகப்படுத்தலாம். உடம்பின் துர்நீரைப்போக்கும். பத்தியத்துக்கு உதவும்.

துப்பைக்கீரை.

இதையும் சிறுகீரையைப்போலவே பயிர்செய்து வாரத்துக்கொருதரம் அறுத்துக்கொள்ளலாம்.

புன்கங்கீரை.

இந்தப்புன்கங்கீரையைத் தோட்ட நிலத்திற் பாத்திகள் கட்டி விதைத்துத் தண்ணீர் கட்டினால் தண்டு ௪ முதல் ௫ அடி உயரமாக வளர்ந்து அகன்ற இலைகளுடன் விருத்தியாகும். இதன் விதைகள் மலைவாசிகளுக்கு ஒரு விசேஷ போஜனப்பொருளாகும்.

முளைக்கீரை.

முளைக்கீரையிற் பலவகைகளுண்டு. இதைத் தோட்ட நிலத்தில் பாத்திகள் கட்டி விதைத்துத் தண்ணீர் கட்டிக்கொண்டு வந்தால் வெகுசீக்கிரத்தில் விளையும். இரண்டடி உயரமானவுடனே பிடுங்கி உபயோகப்படுத்தலாம். இதன் இலை, தண்டு, கிழங்கு, யாவவும் உபயோகப்படுத்தலாம். அதிகமாக உண்டால் சீதபித்தத்தை உண்டாக்கும்.

கூழைத்தண்டுக்கீரை.

இந்தக்கூழைத்தண்டுக் கீரையிலும் இரண்டு மூன்று வகைகளுண்டு. இவைகளை முன்சொன்னபடியே தோட்டங்களிற் பயிர்செய்தால் நல்லலாபத்தைத் தரும். இதை வெள்ளைக்காரரும் உண்பதுண்டு. இந்த வகையில் ஒன்று ஆறுமாதத் தண்டு என்று சொல்லப்படும். அது ஆறுமாதகால வரையில் ஒரு சிறிய மரம்போல விளையும். தண்டும்கீரையும் கிழங்கும் உணவுக்கு உதவும்.

சிவப்புத்தண்டுக்கீரை.

சிவப்புக்கீரைத்தண்டையும் தோட்டங்களில் வைத்துப்பயிர்செய்வதுண்டு. இதன் கீரையும் தண்டும் அவ்வளவாக ருசியானவைகளல்ல. இதன் விதைகள் காற்றிற் பரந்து போய்த் தோட்டத்தின் பலபக்கங்களில் விழுந்து முளைத்து மற்றப்பயிர்களைக்கெடுக்கும்.

மின்னைக்கீரை.

இதை வேலியோரங்களிற் பயிர்செய்தால் நல்ல அடைப்பாவதுடன் கீரையும் உபயோகமாகும்.

தொய்யிற்கீரை.

இது தானாகவே இராகி முதலான தோட்டப்பயிர்களோடு விளையும். விதைகளைச் சேகரித்துப் பாத்திகளிற்போட்டும் பயிர்செய்யலாம்.

மூக்கறுத்தான்கீரை.

இந்தக்கீரையும் தோட்டங்களிற் செம்பூக்களோடு செழிப்பாக விளையும். இதை மற்றக்கலவைக்கீரைகளோடு கலந்து சமைக்கலாம்.

அரைக்கீரை.

இதைத் தோட்டங்களிற் பாத்திகள்கட்டி விதைத்துத் தண்ணீர்கட்டி இரண்டு மூன்று அங்குலம் உயரவளர்ந்த பிறகு வாரத்துக்கொருதரம் அறுத்துக்கொள்ளலாம். இதன் இலைக்கு உஷ்ணகாரி குணமுண்டு. பத்தியத்துக்கு உதவும். விதைகள் எடுத்து தைலம் காய்ச்சி ஸ்நானம் செய்தால் கண்களின் சூட்டை நீக்கும்.

சாணைக்கீரை.

இதிற் பல வகைகளுண்டு. ஆறு, ஓடை, கால்வாய்களின் ஓரங்களில் விளையும். சேப்பந்தண்டும் இந்த வகுப்பை சேர்ந்ததன்று; ஆயினும் இந்தச்சேப்பந்தண்டு, இலை, கிழங்குகளை அதிகப் புளியைச்சேர்த்து சாப்பிடலாம். அதிக உஷ்ணகாரி; பத்தியத்துக்கு உதவும்.

முல்லைமுந்தைக்கீரை.

இது ஆஸ்டிரேலியா தேசத்திலிருந்து கொண்டு வந்த பயிர், மலைநாடுகளில் விசேஷமாக விளையும். உணவுக்கு ருசியாக இருக்கும்.

வள்ளைக்கீரை.

இந்த வள்ளைக்கீரை சாதாரணமாகத் தோட்டங்களில் விளையும். சிலர் நந்தவனங்களிலும்பயிர்செய்வதுண்டு. இதன்கீரையைச் சமைத்துச்சாப்பிடலாம்.

கன்னுங்கீரை.

நீலவர்ண புஷ்பங்களோடு துலங்கும். இந்தக் கீரைச்செடிகள் பயிர் நிலங்களில் தானாக ஆங்காங்கு முளைப்ப துண்டு. இதன் கீரை தேகத்துக்குக் குளிர்ச்சியைத்தரும்.

புளியாரைக்கீரை.

இது தோப்பு முதலான நிழலுள்ள நிலங்களிலும், தண்ணீரதிகமாகப்பாயும் தோட்ட நிலங்களிலும், தானாகவிளையும். வேர்களைத்தூவிப்பயிர்செய்யலாம். இதன்கீரைக்குப் புளிப்பு அதிகம். தனியாகவுஞ் சமைக்கலாம்; அல்லது காய்கறிகளோடு கலந்துஞ்சமைக்கலாம். தேக வுஷ்ணத்தையும் மேகநீரையும் போக்கும்.

பருப்புக்கீரை.

இதைத்தோட்டநிலங்களில் சிரமம்அதிகமில்லாமற்பயிர்செய்யலாம்; தனியாகவுஞ்சமைக்கலாம். வேறுகாய்கறிகளோடு சேர்த்துஞ் சமைக்கலாம்.

பசலைக்கீரை.

பசலைக்கீரையிற் பலவகைகளும், பலவர்ணங்களும், பேதங்களுமுண்டு. இதில் இரண்டொருஜாதிகள் கொடிகளாகப்படரும். இதன் இலைகளைப்பறித்து பருப்போடு சமைக்கலாம். சிலசதையோடுகூடிய சிறிய இலைகளுடன் பூமியிற் செம்மரமறுத்துத்தூவியதுள்களைப்போலப்படரும். இதைப் பச்சைப்பயறுடன்கலந்து சமைக்கலாம். இது தானாகவிளையும்பயிர்.

பூதிக்கீரை.

இது ஒரு நல்ல வாசனையுள்ள வெள்ளைப்பூக்களுள்ளகீரை. இது சில நிலங்களின் வேலியோரங்களில் தானாக விளையும்; உஷ்ணகாரி. பத்தியத்துக்குதவும்.

சுக்கான்கீரை.

இதைத்தோட்டங்களிலும் தண்ணீர்அதிகம் கிடைக்கும்படியா

ன மற்ற நிலங்களிலும் பயிரிடலாம். இதன்கீரையை மற்றப்பதார்த்தங்களோடு சேர்த்துச் சமைக்கலாம்.

முள்ளங்கிக்கீரை.

இதிற் பலவகைகளுண்டு. இதற்கு பூமியைத்தக்கபடி உழுது புழுதியாக்கி ஆட்டுஎருவிட்டு வரப்புப் பாத்திகளைக்கட்டி விதைகளையாவது நாற்றுக்களையாவது நட்டு அடிக்கடி தண்ணீர் விட்டுக்கொண்டு வந்தாற் செழித்து வளரும். இதன்கீரையும் கிழங்கும் சமையலுக்குதவும். வயிற்றிற் கூடுங் கட்டிகளைக் கண்டிக்கும் நல்லபதார்த்தம்.

நெரிஞ்சிற்கீரை.

இது தோட்டங்களில் தானாகவிளையும் முள்நிறைந்த பூண்டுக்கீரை; நல்லது; உஷ்ணகாரி; பித்தவீக்கங்களை நீக்கும்.

வெந்தயக்கீரை.

இதைப்பற்றி முன்னே சொல்லியிருக்கிறோம். இது தேகத்துக்குக் குளிர்ச்சியானது.

காரைக்கீரை.

இதுவும் ஒரு முள்நிறைந்தகீரை. தானாகச் சில தோட்ட நிலங்களில் விளையும். இதன் கீரையுமுபயோகப்படும். இதன் சிறுபழங்களும் உருசியாக விருக்கும்.

இலச்சுக்கோட்டைக் கீரை.

இது ஓர் அழகான செடி அல்லது சிறு விருட்சமாக விளையும். வெயிற்காலத்தில் இலைகள் முழுதும் வெளுத்துவிடும். இதை வீடுகளுக்கு முன் அழகாகப் பயிர்செய்யலாம். கிளைகளை வெட்டி நட்டுத் தண்ணீர் விட்டால் வெகு சீக்கிரத்தில் முளைத்துவிடும். இதன் இலைகளைப் பலவிதமாகச் சமைத்துச் சாப்பிடலாம். வாயுவை நீக்கும்.

துளசி.

துளசியைத் தோட்டங்களிலும், வீட்டிற்குமுன்னும் பின்னும், நடுவாயில்களிலும், வைத்துப்பயிர் செய்தால் துர்நாற்றத்தையும், கெட்ட காற்றையும் போக்கும். இலைகள் பூஜைக்கு உதவும். சிலர் துவையல் செய்து சாப்பிடுவதுமுண்டு. குழந்தைகளுக்குக் காணும் ஜலதோஷ முதலானவைகளுக்கு எடுத்தமருந்து. கொதுகு முதலான விடப்பூச்சிகளைத் தடுக்கும் சக்தியுடையது.

என்று இவவிதமாக விசாரித்துக்கொள்ளவேண்டும். இவைகளையெல்லாம் ஒத்து நாம் விசேஷமாகப்புசிக்கும் பலவித உணவுகளைப் பரிசோதிப்போம்.

பால்:—இது ஆகாரத்திற்கு வேண்டிய நான்கு சேர்க்கைகளும் கலந்த உத்தமமான ஆகாரம் என்றும் ஆனால் சிறுவயதிற்றான் இது விசேஷமாக தேகத்தைவளர்க்கும் குணமுள்ளதென்றும் தெரியவருகிறது. வயதுஏறஏற இதுவே போதுமான ஆகாரமாக உபயோகப்படமாட்டாது: மற்றை உணவுகளும் சேரவேண்டும். பாலை அதிகநேரம் வைத்துப் புசிப்பதால் அதில் ஒருவிதப் புளிப்பு உண்டாகி நமது தேகசௌக்கியத்தைக் கெடுக்கும். உரோகம் அசுத்தமிவைகளில்லாத மாட்டின் ப:லாக அப்பாலிருப்பது மன்றி அப்பாலைக்கறந்து நமக்குக் கொடுக்கின்றவனுக்கும் உரோகமில்லாமலிருக்கவேண்டும். மாட்டுக்கு உரோகமிருந்தால் அதன் பாலை என்னசெய்கிறதென்று சந்தேகமுண்டாகலாம்; அப்பாலை வேறுபாலுடன் கலக்காமற் றனியாக வைத்து நன்றாகக் காய்ச்சி, நாய், பூனை, முதலிய பிராணிகளுக்கு உணவாகக் கொடுப்பதிற் குற்றமில்லை.

முத்கங்கள்:—முத்கங்கள் என்ற பொதுப்பெயர் துவரை, மொச்சை, கடலை, உழுந்து முதலிய இரட்டைப்பருப்புக்களாகப்பிரியும் தான்யங்களைக்குறிக்கின்றது. இவைகளின் இரசமானது சற்றேறக்குறையப் பாலின் சாரம்போற் புஷ்டியானது. தேகத்தை வளர்க்கும்சக்தி இவ்விரசங்களுக்கு அதிகமாகவுண்டு; சில வைத்தியர்கள் ஒருசேர் முத்கத்தில் ௧௦— சேர் உருளைக்கிழங்கின் புஷ்டியிருப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் நெல்லன்னத்தைப் புசிப்பது போல ஏன் ஜனங்கள் இம்முத்கத்தைப் புசிப்பதில்லை என்ற சந்தேக முண்டாகலாம்; அதற்குப் பலகாரணங்களுள. அவைகள் எளிதிற் செரித்துக்கொள்ளக் கூடாத வாயு ஆகாரங்கள். கோதுமை, மாமிசம், இவைகளைவிட முத்கங்கள் புஷ்டிகரமான உணவு என்றுசாஸ்திரப்படி ஏற்பட்டிருந்தபோதிலும் இவைகள் எளிதில் ஜீரணமாவதுபோல முத்கங்கள் செரிக்கா. முத்கங்களைக் கொஞ்சமாகப் புசித்தாற்றான் பிரயோஜனம்; அதிகமாக வுட்கொண்டால் வாயுவையும் வயிற்றுவலியையு முண்டாக்கும். ஆகையாற்றான் ஒருகுடும்பத்துக்கு ஒருபானையன்னம் சமையற்செய்து ஒருசிறுகற்பானை துவரம்பருப்பு அவ்வன்னத்துடன் கலந்துபுசிக்க ஒவ்வொருவருக்கும் ஓர் எலுமிச்சம்பழ மவ்வளவு உபயோகப்படும்படி சமையற்செய்கின்றார்கள். இவ்வண்ணம் பருப்பைக் கொஞ்சமாக அன்னத்துடன் கலந்து புசிப்பது தேகத்துக்கு மிகவும் ஆரோக்கியம். பருப்பையே அன்னம்போல் ஒருவன் புசிப்பானேயானால் அது தேக சௌக்கியத்தைக் கெடுத்துவிடும். முத்கங்களை நன்றாகச் சமைத்தே புசிக்கவேண்டும். நமது தேசத்தார்கள் பருப்பைப் புளியிற்கலந்து குழம்பு செய்து புசித்துவருகின்றார்கள்.

முத்தங்கள் புளிசம்பந்தத்தாற் கொஞ்சம் குணம் மாறி இயல்பாகவே செரிக்கக்கடினமான அவைகளின் குணத்தை இன்னுமதிகமாகப் பண்ணிக்கொள்ளுகின்றபடியாற் புளிகலவாமல் முத்தங்களைப்புசிப்பது ஆரோக்கியமென்றும் இது சிலர்உருசிக்கு ஏலாவிடில் சிறுபுளி வெகுசுவல்பமாகச் சேர்த்து புசிக்கவேண்டும் என்றும் சுகசந்தர்சன வாதிகள் சொல்லியிருக்கின்றார்கள்.

ஸஸ்யங்கள் :— (cereals) இவ்வினத்தில் அரிசி, கோதுமை, ராகி, கம்பு, சோளம், வரகு, இவைகளைச் சேர்க்கலாம்.

அரிசி என்பது புஷ்டியைக்கொடுக்கும் விஷயத்தில் எல்லா ஸஸ்யங்களுக்குள்ளும் தாழ்மையான குணமுள்ளதென்று பரிசோதித்தறியப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தபோதிலும் நமது தேசத்து ஜனங்களுக்கு நமது தேச முண்டான காலந் தொடங்கி இவ் வரிசியே பிரதானமான ஆகாரமாம். இவ்வரிசியைச்சமைத்து அன்னமாக்கி அதை அப்படியே சாப்பிடாமல் எவ்வளவோ முத்தங்கள், சாகங்கள், மாமிசங்கள், எடு, வெண்ணெய், நெய், தயிர், பால், உப்பு, சர்க்கரை இவைகளுடன் கலந்து நாம் சாப்பிடுகிறபடியால் அரிசி போஜனத்தால் நமது தேக சௌக்கியத்துக்கு ஒருவிதக்குறைவுமில்லாமலிருக்கிறது. ஆனால் அதிக பலம், ஊக்கம் இவைகள் கோதுமை, மாமிசம் இவைகளைப் புசிப்பதால் நமக்குண்டாவது போல அரிசியால் உண்டாகின்றதில்லை என்பது பிரசித்த வைத்தியர்களுடைய கொள்கை. அரிசியைப் புசிப்பவர்களுக்குள்ளும் பல பெயர்கள் வெகு பலசாலிகளாகவே இருக்கின்றார்கள். நமது தேக சௌக்கியத்திற்குக் குறைவில்லாத வரையில் அரிசியைப் புசிப்பதால் ஒரு குற்றமுமில்லை. அதிக பலம் விரும்பிகின்றவர்கள் அரிசியின் ஸ்தானத்திற் கோதுமையைப் புசிக்கின்றார்கள். அரிசி புதிதாயிருந்தால் அது உடம்பிற்கு ஒத்துக் கொள்ளாமல் வயிற்றுப்போக்கை உண்டாக்கும். குறைந்தபட்சம் ஆறுமாத காலமாவது பழமையான நெல்லிலிருந்து குற்றி எடுக்கப்பட்ட அரிசி உடம்பிற்கு ஒருவிதத் தீங்கும் செய்யாது. பச்சை அரிசி புழுக்கப்பட்ட நெல்லினரிசியை விடப் புஷ்டிகரம். ஆனாற் புழுங்கலரிசி எளிதில் சீரணமாகின்றது. அதனாலேயே வியாதிக்காரர்களுக்கும் பிரஸவித்த பெண்பிள்ளைகளுக்கும் புழுங்கலரிசிஅன்னம் கொடுப்பார்கள்.

கோதுமை:—ஸஸ்யங்களுக்குள் வெகு உயர்ந்த தானியம் கோதுமை. இதைத்தென்தேசமல்லாத மற்றைத்தேசங்களில் ஜனங்கள் ஏகமாக உபயோகிக்கின்றார்கள். கோதுமை உணவு வெகு புஷ்டிகரமானதுடன் இதில் தசையை வளர்க்கும் சக்தி மிக அதிகம். யவக்ஷாரம், கஞ்சி, சிலவிதக்கல்லுப்பின்குணம் இத்தானியத்தில் அமைந்திருப்பதால் இது மிக உத்தமமான

ஆகாரமாகின்றது. இதிற் கொழுப்பு அதிகமாகவில்லையாகையால் அதிக நெய் அல்லது வெண்ணெய்சேர்த்து இவ்வுணவை நாம்புசிக்கவேண்டும். ஸ்வீடன் தேசத்துச் சக்கரவர்த்தியாகிய 12-ம் சார்லஸ் என்பவர் கோதுமையால் செய்யப்பட்ட ரொட்டியையும் தண்ணீரையும் மட்டும் தனது உணவாக ஏற்படுத்திக்கொண்டு திக்விஜயம் செய்து எல்லா அரசர்களையும் வென்றார் என்றால் இவ்வாகாரத்தால் உண்டாகும் சக்தியை நாம் அதிகமாகச் சொல்லவும் வேண்டுமா?

கம்பு கேழ்வரகு ராகி முதலிய தானியங்கள்:—பெரும்பாலும் நமது தேசத்து ஜனங்களுடைய முக்கிய ஆகாரமிவைகளாதலால் நாமிவைகளைப் பற்றிச் சிறிது அதிகமாக எழுதுவோம். இவைகள் புன்செய் நிலத்திலேயே விசேஷமாகப் பயிரிடப்படுகின்றபடியால், புன்செய்த்தானியங்கள் என்னப்படும். இவைகள் அரிசி கோதுமை இவைகளைவிட அதிக புஷ்டிகரமான ஆகாரம். வருஷக்கணக்காக வைத்திருப்பதால் இத்தானிய்ங்கள் கெட்டுப்போகாமற் பழமை அதிகரிக்க அதிகரிக்க எளிதிற் செரிக்கப்படும் தன்மையை அடைகின்றது. இவைகளை உடைத்து மாவாகப்பண்ணிக் களிகிண்டி ரொட்டியாகச்செய்தே ஜனங்கள் பெரும்பாலும் புசிக்கின்றார்கள். இச்சிறுதானியங்களில் உமி அதிகமாகையால் அதிகமாகக் குற்றக் குற்ற அவ்வுமி அகலும் என்றாலும் என்னதான் குற்றி எடுத்தபோதிலும் அவ்வுமி முற்றிலும்போகிறதேயில்லை. இக்காரணத்தால் நமதுஜனங்கள் சில சமயங்களில் இந்த உணவு பிடிக்காமல் வயிற்றுப்போக்கால் வருந்துவார்கள். இதற்கு அவர்கள் செய்யவேண்டிய முக்கிய ஏற்பாடு ஒன்றுண்டு. மாவை ஒருமென்மையான துணியிற்போட்டு வஸ்திரகாயம்பண்ணிப் பொடியாக எடுத்துக்கொள்வார்களேயானால் உமி முழுவதும் அகன்றுவிடும். அப்புறம் அப்பொடிமாவையெடுத்து உபயோகிப்பார்களேயானால் ஒருவித நோயுமுண்டாகாது. சேலம், மைஸூர் முதலிய இடங்களிற் புன்செய்த் தானியங்களை அதிகமாகப்புசிக்கும் ஜனங்கள் அன்னம் புசிக்கின்றவர்களைக் காட்டிலும் அதிக கம்பீரமான வளர்ச்சியுள்ளவர்களாகவும் பலசாலிகளாகவும் லட்சணமுள்ளவர்களாகவுமிருக்கின்றார்கள்.

மாம்சம்:—மாம்சத்தில் கொழுப்பு, சிலவித உப்பு, யவக்ஷாரம் இவையெல்லாம் சேர்ந்திருப்பதாலும் மிக எளிதில் ஜீர்ணம்செய்து கொள்ளப்படுவதாலும் மாம்சம் அருந்துவோர்கள் இவ்வுணவை மிக உத்தமமான உணவாக ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். மாம்சத்தைச் சடுதியிற் சமையற்பண்ணலாம். சாகபதார்த்தங்கள் இரத்தத்திற் கலப்பதைவிட மிகச்சடுதியில் மாம்சம் நமது ஆகாரப்பையில் விழுந்த ரத்தத்திற் கலக்கின்றது. ஆனால் அதிக மாம்சம் புசிப்பதால் தேக வலிமை அதிகரிக்கின்றது என்று

வது, புத்தி அதிகக்கூர்மையாகின்றது என்றுவ்து, நிச்சயமாகச் சொல்ல முடியாது. மாம்சத்திலிருக்கும் குறைவுயாதெனில் அதிற் கஞ்சிஎன்ற சாரம் சிறிதும் இல்லாததேயாம். மாமிசபோஜனத்தில் நாம் பல விஷயங்களைப்பற்றிக் கவனிக்கவேண்டும்.

நாம் புசிக்கும் மாமிசம் வளர்ந்து நன்றுகப்போஷிக்கப்பட்ட மிருகத்தின் மாம்சமாக இருப்பதுடன் அம்மிருகம் அதிக வயது சென்றதாகவுமிருக்கக்கூடாது. அதிக இளவயதானதாகவுமிருக்கக்கூடாது. கன்றுகளின் மாம்சத்திற் சில கொழுப்புக்களில்லை என்பது சித்தாந்தம். இளங்கன்றுமாமிசம் இளம்பறங்கிக்கொட்டைபோலச் சீக்கிரம் செரிக்கின்றதுமில்லை.

பெண்மிருகத்தின் மாமிசம் எளிதிற் செறிக்கப்படுவதுடன் வெகுருசியாகவிருக்கும். பெண்பட்சிகளின் மாமிசம் ஆண்பக்ஷிகளின் மாமிசத்தைக் காட்டிலும் எவ்வளவோ அதிகருசியுள்ளதென்று எல்லாமாம்சபுக்குக்களும் ஒப்புக்கொள்ளுகிறுர்கள்.

கொல்லப்படும் முன்னர் அதிகமாக ஓடி ஆடித்திரிந்த மிருகத்தின் மாமிசம் எப்பொழுதும் படுத்திருந்த அவ்வின மிருகத்தின் மாமிசத்தைக் காட்டிலும் அதிக ருசியுள்ளது என்றும் நமது தேகத்திற்கு அதிக சுகத்தைக்கொடுக்கின்றது என்றும் அக்காரணத்தினுற்றுன் வேட்டையாடிக்கொன்று கொண்டு வரப்பட்ட மாமிசம் இனிப்பு அதிகமாகவுள்ளதென்றும் சில சுகசந்தர்சனவாதிகள் சொல்லுகிறுர்கள்.

மாடு ஆடு முதலிய மிருகங்களுக்குப் பலவித நோய்களுண்டு; நோயால் வருந்திக்கொண்டிருந்த மிருகத்தின் மாமிசம் புசிப்புக்கு விஷமாகும்; பலவித நோயகளை நமக்கு விளைவிக்கும்.

மாமிசங்களைச் சுத்தமான மாமிசமா இல்லையாவென்று பரிசோதிக்கப் பலவித முறைகளுள. அம்முறைகளைக்கொண்டு சோதித்தே அங்கீகரிக்க வேண்டும்.

(1) மாமிசம் பாடல வருணமாகவிருந்தால் (pale pink colour) அது வியாதிகொண்ட மிருகத்தின் மாமிசம் என்பதற்கு அடையாளம். (2) மாமிசம் நீலலோகித வர்ணமாயிருந்தால் அது அடிக்கப்பட்ட மிருகத்தின் மாமிசமில்லை யென்பதும் ஏதோ மாரியால் மரித்த மிருகத்தின் மாமிசம் என்பதும் திண்ணம். (3) மாமிசத்தை ஒரு வெண்மையான தட்டில் வைத்தால் அதிலிருந்து கொஞ்ச நாழிகைக்கெல்லாம் ஓர்வித சிவப்புவர்ணமான நீர் ஒட ஆரம்பிக்கும். அதுதான் புதியவானவும் பரி

சுத்தமானவுமான மாமிசத்தின் முக்கியமான அடையாளம். (4) மாமிசத்தை நாம் கைவிரலால் தொட்டால் ஜலம் நமது விரலில் தோன்றக்கூடாது. (5) மாமிசத்தின்மேல் கத்தியை நாட்டினுல் அது ஒரே மாதிரி உள்ளே யிறங்கவேண்டும். அப்படியில்லாமல் திடுக்கென்று சிலவிடங்களிலிறங்கினுல் அழுகின மாமிசமாக அஃதிருக்கக்கூடும். இவைகளால் ஒரு மாம்சகண்டம் புதியது அல்லது பழையது, பரிசுத்தமானது அல்லது கெட்டது என்றும் அறிந்துகொள்ளலாம். நமது நாட்டின் சிறைச்சாலைகளிலும் ராணுவஸ்தானங்களிலும் மாமிசத்தைப் பரிசோதித்துப்பார்க்க நியமிக்கப்பட்டிருக்கின்ற உத்தியோகஸ்தர்கள் இவ்விஷயங்களை நன்ருகத்தெரிந்து கொள்ளவேண்டும்.

சாகங்கள்:—(1) எண்ணெய் அடங்கிய பருப்புக்கள், தேங்காய், எள், நிலக்கடலை, வாதாம்பருப்பு, முந்திரிப்பருப்பு, காட்டுமாம்பழப்பருப்பு, (காரப்பருப்பு) இவைகள் போன்ற எண்ணெய் அதாவது கொழுப்படங்கிய பருப்பு வர்க்கங்கள் மிக உயர்ந்த ஆகாரதிரவியங்கள். இவைகளில் ஏதாவது ஒன்றை ஆகாரத்துடன் சேர்த்தே மாம்சபுக்குக்களாகவில்லாத சாகபுக்குக்கள் அவசியம் சாப்பிடவேண்டும். நமதுநாட்டார்கள் இவைகள்எல்லாம் பித்தத்தை உண்டாக்குகின்றனவென்று இவைகளைத் தள்ளுகின்ருர்கள். அதிகமாகச் சாப்பிடுவதால் இவைகள் பித்தத்தையுண்டாக்கலாம். அவ்வாறு ஏராளமாகப்புசிப்பது நியாயமன்று. அப்படியே யிவைகள்பித்தத்தை உண்டாக்குகின்றன வென்பதாயின் இவைகளுடன் சர்க்கரை அல்லது வெல்லம் கலந்துபுசிப்பதால் ஒருவிதப்பித்தமும் உண்டாகின்றதில்லை என்பது வைத்தியர்களுடைய கொள்கை.

(2) மசால்:—மிளகு, மிளகாய், கடுகு, பெருங்காயம் இவைகளெல்லாம் இவ்வினத்தின்கீழ்ச் சொல்லலாம். சாகபுக்குக்களுக்கு இவை அதிகமாகவேண்டியிருப்பதால் இவைகளாலுண்டாகும் அழலை எண்ணெய்கலந்த பருப்புக்களாகிய தேங்காய்முதலியவைகள் ஒருவாறு தணிக்கின்றனவென்றும் ஆகையாற்ருன் சாகபுக்குக்களுக்குத் தேங்காய், நிலக்கடலை முதலிய எண்ணெய் சேர்ந்த பதார்த்தங்கள் அவசியம் உணவாகவேண்டும் என்றும் சொல்லப்படுகின்றன. மாம்சபுக்குக்களும் மாம்சத்துடன் தேங்காய் மசால் முதலியவைகளைச் சேர்த்துப்புசிக்கின்ருர்கள்: என்ருலும் அவர்களுக்கு அம்மாம்சத்திலேயே கொழுப்பிருக்கின்றபடியால், தேங்காய், சாகபுக்குகளாகிய சிலருக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவர்களுக்கு அவசியமன்று. வெண்காயம் உள்ளி இவைகளில் ஓர்வித எண்ணெயிருக்கின்றபடியால் இவைகளைக் கொழுப்புள்ள தேங்காய் வர்க்கத்திற் சேர்ந்தவைகளாகவே எடுத்துச்சொல்லவேண்டும். அழலைத்தணிப்பதில் வெண்காயம் மிகப்பிரயோஜனமானது.

உள்ளிப்பூண்டு வயிற்றிலுள்ள அஜீர்ணத்தைப் போக்கிவைப்பதில் வெகு உபயோகமான திரவியமாம். ஆனால் இவ்விரண்டிற்கும் சிறிது பித்தம் பண்ணும் குணமுண்டு என்பார்கள்.

(3) கறிவநுக்கம்;—உருளைக்கிழங்கு, சேமைக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, வெள்ளிக்கிழங்கு, வாழைக்காய், வெண்டைக்காய் இவைகளெல்லாம் தேகத்துக்குப் புஷ்டியைக்கொடுக்கும் சாகங்களாகின்றன. கொத்தவரை அவரை, பயற்றங்காய், அகத்திக்காய், முருங்கைக்காய், தம்பட்டங்காய் இவ் வினங்களைச்சேர்ந்த மற்றைக்காய்கள், மூத்கங்கள் நமது தேகத்துக்கு எவ்வளவு புஷ்டியை உண்டாக்குகின்றனவோ, அவ்வளவு புஷ்டியைத் தருகின்றன.

புடலங்காய், பீர்க்கங்காய், பூசனி, பறங்கி, கக்கரி, வெள்ளரி, சுரை இவைகளும் இவ்வினத்தைச்சேர்ந்தவைகளும் ஓர்விதப்புஷ்டியையும் கொடுக்கமாட்டா. இவைகளெல்லாம் நீர் அதிகமாக நிற்கும் சாகங்கள். நாவுக்கு ருசியைமட்டும் கொடுக்கும். அக்காரணத்தால் நமது உணவை நமக்கு ருசியாகப்பண்ணும் புஷ்டி என்பது இவைகளில் வெகு ஸ்வல்பமாகவிருக்கின்றது.

சுண்டை பாகல் கத்தரிக்காய் சுக்சாங்காய் இவைகள் ஓர்வித சீரணத்தை உண்டாக்கி உடம்பிற்கு ஓர்வித ஔஷதமாக உபயோகப் படுகின்றன.

(4) கீரை வநுக்கம் :— முட்டை கோஸ், முள்ளங்கி, இவைகள் சாதாரணக் கீரை வர்க்கங்களைப்போல ஒருவித மண்ணுப்பைத் தேகத்திற்குக் கொடுத்து ஒருவித சௌக்கியத்தை உண்டாக்கி நமது தேகத்தில் மலக்கட்டு உண்டாகாதவண்ணம் பாதுகாக்கின்றன. எல்லாக் கீரைவர்க்கங்களும் இதேவித குணமுள்ளவைகள். தூதுவளை வல்லாரை, புளியாரை, புதினு இவ்விதப் பச்சை இலைகளை ஆகாரத்துடன் சேர்த்துப் புசிக்கின்றவர்கள் அவைகளிடம் நமதுதேசத்து வைத்தியர்கள் சொல்லியிருக்கும் உயர்ந்த குணங்களைக் கொண்டே உபயோகப்படுத்திவருகின்றார்கள். தூதுவளைக்குக் கபத்தை அறுக்கும் குணத்துடன் புத்தியைக் கூர்மையாகப் பண்ணும் குணமுமுண்டென்றும் வல்லாரைக்குப்புத்தியைக்கூர்மைபண்ணும் குணத்துடன் குஷ்டம் முதலாகிய பெருநோய்களையும் தீர்க்கும் குணமுண்டென்றும் சொல்லியிருக்கின்றார்கள். வடமொழியில் தூதுவளைக்கு ஞானபிரதம் என்றும் வல்லாரைக்கு ஸரஸ்வதி யென்றும் பெயர். புளியாரை, புதினு பித்த சமனம் பண்ணும் மூலிகைகள்.

(5) மலர் வநுக்கங்கள் :— அகத்திப்பூ, ஆவாரம்பூ, சோற்றுக்கத்தாழைப்பூ, வாழைப்பூ, புளியம்பூ, காலிப்பூ, (cauli flower) முருக்கம்பூ, வேப்பம்பூ இவைகளெல்லாம் மிக ருசியுள்ளனவும் புஷ்டிகரமுமான ஆகாரங்கள்.

தண்டுகள் :— வாழைத்தண்டு, சேமைத்தண்டு, கீரைத்தண்டு, இவைகளை இவ்வினத்தின்கீழ் நாம் கொண்டுவரலாம். இவைகளெல்லாம் வேறு இனங்களின் உறுப்புக்களாக விருந்தபோதிலும் இம்மூன்றையும் மூன்று தண்டுகளாக நாம் எடுத்தே எழுதவேண்டும். இம்மூன்றுக்கும் சில குணங்கள் உள. வாழைத்தண்டு, நாம் நம்மையறியாமல் நமது ஆகாரத்துடன் கலந்து புசிக்கும் சிறுமணல்களைக் கரைக்கின்றதென்றும், சேமைத் தண்டு சிறிய உரோமங்கள் நமது வயிற்றிற் சென்றிருந்தால் அவைகளை அகற்றுகின்றதென்றும், கீரைத்தண்டு ஓர்வித உத்தம ருசியை நாவுக் களித்து உமிழ்நீரைப் பெருக்கி ஜீரணசக்தியை அதிகமாக உண்டாக்குகின்றதென்றும் நமது நாட்டிலுள்ள பெரிய வைத்தியர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது

கீரை யினம் ஒருவாரத்துக்கு ஒரு தடவையாவது நாம் அவசியம் புசிக்கவேண்டும் என்றும் தண்டு இனம் மாதமிருமுறையாவது நாம் புசித்தே தீரவேண்டும் என்றும் சாகபுக்குக்களின் கொள்கை.

இவ்வளவு தூரம் பல சாகங்களைப்பற்றிச் சொல்லிவிட்டுச் சுருக்கமாக அச்சாகங்களைப்புசிக்கும் வகையைச் சொல்லுவோம். எல்லாவித சாகங்களையும் உப்புப் போட்டு நன்றாக வேகவைத்தெடுத்துக்கொண்டு தேங்காய் முதலிய எண்ணெய் சேர்ந்த பருப்புக்கள் கலந்தும், முக்தவினத்தை சேர்ந்த வெந்த பருப்புக்களைக்கலந்தும் நன்றாகமறுபடியும்அடுப்பிலேற்றிய சட்டியிற் சுண்டவைத்துத் துவட்டி எவ்வளவு குன்றச்செய்யவேண்டுமோ அவ்வளவும் குன்றச் செய்து புசிப்பது உத்தம போஜனம்.

அப்படியன்றிக் கூட்டாகப்பண்ணிப் புசிப்பது மத்தியமம். இவ்வாறு செய்வதிற் சிலர் சுகாதார சாஸ்திர ஞானமின்றிப் பலவாறு கலப்பார்கள். புடல், அவரை, மொச்சை, கொத்தவரை, வெள்ளரி, கக்கரி இவ்வினத்தைச் சேர்ந்த சாகங்களுக்குப் புளியிடவேகூடாது. புளிகலந்தால் அந்தச் சாகங்கள் எளிதிற் செரிக்கா. புளியில்லாமற் பொரித்த கூட்டாகச்செய்து புசித்தால் வெகு சடுதியிற் சீரணமாகின்றன.

உலர்ந்த மாம்சங்கள், காய்கறி வற்றல்கள், வடகம், அப்பளம் முதலியவைகள்:—இவைகள் ஒவ்வொருசமயத்தில் நமக்கு எவ்வளவோ உபயோகமாகவிருந்தபோதிலும் உத்தமான ஆகாரமாக இவைகளைச்சொல்லமுடியாது. ஏனெனில் மாம்சம், சாகம், இவைகள் புதியவாயிருக்கும்பொழுது சில உத்தமகுணங்களிவைகளிடமிருப்பதாக நாம் ஒப்புக்கொண்டிருக்கின்றோம். உலரவைப்பதாலும் அநேகநாளாக வைத்துக்கொண்டிருப்பதாலும் இக்குணங்கள் குன்றும்,

பானங்கள் :—உயர்ந்த சாராயம், தணிந்த சாராயம், கள் இவைக ளெல்லாம் இவ்வினத்தைச்சேர்ந்தவைகள். சாராயம் பிராந்தி இவைகளில் மத்திய சாரம் (alcohl) என்ற ஒரு மதமிருக்கிறது. இப்பானங்களை வெகு நுட்பமாக ஏதாவது ஒரு வியாதியை அகற்றுங்காரணமாக உட் கொள்ளுவோமேயானால் இவைகளிலிருக்கும் மத்யசாரம் ஒருவாறு நமது ஜீரணசக்தியை அதிகமாகப்பண்ணலாம். ஆனாலிதிற்பழகப்பழக அந்தப்பா னம் நம்மைச் சிறிது சிறிதாகக் கவர்ந்து கொள்ளுகின்றதென்றும் அதிபானம் பண்ணும்கெட்டவழக்கம்வந்து விடுமேயாயின், பசியின்று பல வித நோய்கள் உண்டாகி மரணம் சம்பவிக்கின்றதென்றும் சொல்லுகிறார் கள். கள்ளில் மத்யசாரம் அவ்வளவு பலமாக இல்லை என்றாலும் இப்பான மும் உணவைத்தள்ளி நோயை விளைவிக்கும். மத்யசாரம் நிரம்பிய சாராயங் களை அருந்த அருந்த நமது நரம்புகளெல்லாம் சிறிதுசிறிதாக்ச் செத்து நமது தேகம் வளரும்சக்தியையிழந்து மூத்திரரோகம் சந்திவாதநோய் பாரிசவாயு முதலிய தீராதநோய்கள் சம்பவிக்கினறன. அப்படியிருக்க இவ் விதச் சாராயங்களை உண்டாக்குவதேன்? என்றால் அவைகள் குளிர்ந்ததேசங் களிற் கொஞ்சமாகப்பானம் பண்ணினால் தேகசௌக்கியத்தை உண்டாக்கு கின்றதென்றும் அப்படியில்லாதபடி உஷ்ணதேசத்தில் ஒரு சொட்டு அருந்தினாலும் தீமையையே விளைவிக்கின்றதென்றும் பிரசித்தவைத்தியர் கள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அன்றியும் அதே பிரசித்த வைத்தியர்கள் சில கொடிய நோய்களுக்குச் சிற்சில முறைப்படி இப்பானங்களை மருந்தாக வும் கூறுகின்றார்கள். நமது தேசம் உஷ்ணதேசமாகையால் இம்மத்தியங் கள் நமக்கு ஒருபொழுதும் உணவே ஆகவேண்டாம் என்பது நமதுகருத்து.

புகையிலை :—என்பது உணவுக்கு ஒருபொழுதும் வேண்டவே வேண் டாத வஸ்துவாகவிருக்கின்றது. உணவு என்ற இந்த அத்தியாயத்தில் நா மிதைப்பற்றிப்பேச நியாயமேயில்லை. அது உணவுமன்று; தேகசௌக்கியத் திற்கு ஒருவிதப் பிரயோஜனத்தை விளைவிக்கின்றதுமன்று. ஏதோ புத்தி யைக் கூர்மைப்படுத்துகின்றது: நரம்பின் பலத்தைச் சீர்திருத்துகின்றது என்று சிலர் சொல்லுகின்றார்கள்; அது உண்மையாகவிருக்கலாம் எனி னும் முடிபாகப் புகையிலையின் உபயோகத்தால் விளைவது தீமையே. சிலர் ஏதோ இரண்டொரு சுருட்டுக்குடித்தால் பாதகமில்லை என்பார்கள். இவ்வாறுதான் துர்வழக்கங்கள் ஆரம்பிக்கின்றன. அதிகமாய்ச்சுருட்டுக்குடி க்கக் குடிக்க கண்பார்வை கொஞ்சங்கொஞ்சமாய்ப் பலவீனப்படும். தாதுவி ன்வலிமை குறையும், நரம்புகள் தளர்ச்சியடையும் சீர்ணசக்தி அகலும், தேகத்தி ன்வலிமை மனத்தின்திடம் இவைகளெல்லாம்போய்ப் புத்திதடுமாறும். பு கையிலையை வெற்றிலையுடன் சேர்த்துமெல்லுகிறவர்க்கு உண்டாகும் சுகக்

முக்கிய அறிவிப்பு.

"செந்தமிழ்" இரண்டாந்தொகுதி 'பைன்ட்' செய்யப் பெற்று இப்போது விலைக்குத் தயாராகவுள்ளது. கையிருப்பிற் சில பிரதிகளேயிருத்தலால், வேண்டியோர் உரியபோதே எழுதி வி. பி. தபால் வாயிலாகப் பெற்றுக்கொள்ளக்கடவர். இதன் விலை ரூ 5.

மற்றும் விற்றற்குரிய நூல்கள்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	ஐந்திணையைம்பதுரை	0	3	0
4.	இனியது நாற்பதுரை, களநூல்	0	3	0
5.	புலவராற்றுப்படை (பழையது)	0	3	0
6.	நேமிநாதம் உரையுடன்	0	10	0
7.	திருநூற்றந்தாதி உரையுடன்	0	4	0
8.	பன்னிருபாட்டியல்	0	4	0
9.	அநுமானவிளக்கம்	0	4	0
10.	சங்கப்புலவராற்றுப்படையுரை	0	4	0
11.	விவசாயரசாயனசாஸ்திரச்சுருக்கம்	0	6	0
12.	திணைமாலைநூற்றைம்பது உரை	0	4	0
13.	அட்டாங்கயோகக்குறள்	0	1	0
14.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	3	0
15.	யாப்பு அணியிலக்கணங்கள் [விசாகப்பெருமாளையரது பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தது. சங்கப் பதிப்பு.]	0	8	0
16.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
17.	தர்க்காமிர்தம் (பழைய பதிப்பு)	0	8	0

இங்ஙனம்,

எம். வி. சுப்பிரமணிய ஐயர்,

மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை.

தமிழ்ச்சொல் அகராதி.

ஸ்ரீ. கதிரைவேற்பிள்ளை, நீதிபதியவர்கள்,

புதிதாக இயற்றிய

தமிழ்ப்பெரும் விரிவகாராதி,

ஆறு பாகங்களில் முதற்பாகம்

அச்சிற் பதிந்து முடிந்தது.

அதற்கு விலை ரூபா ஐந்து.

ஆறு பாகங்களுக்கும் விலை

ரூபா முப்பது.

எஞ்சிய பாகங்கள் ஐந்தும்

ஒன்றரை வருஷத்தினுள்ளே முடிவுபெறும்.

உயர்வொப்பின்றி விளங்கும்

இவ்அரும்பெருஞ் சொற்பொருட்

களஞ்சியமானது,

சொற்களின் பொருள்களையும் பிரயோகங்களையும் நன்கு விளக்கிய, தமிழ்ப்பெருந் தொல்லாசிரிய வசனப் பிரமாணங்களோடு சொற்பிரகிருதி முதலியன சிறப்பக்காட்டுவது;

வேதாந்த பரிபாஷைகளும், சைவசித்தாந்த பரிபாஷைகளும், மற்றை வைதிகசாஸ்திர பரிபாஷைகளும், ஸ்தாவர வைத்திய நியாய ஸாகித்திய ஜ்யோதிஷ கணித ரசாயனாதி சாஸ்திர பரிபாஷா சமஸ்த சமூகமும், பதநிருத்திகள் பரக்கப் பெற்றுத் தன்னகத்தே தேங்கி நிற்பத், துலங்குவது.

பிரதிகள் வேண்டுவோர் இதன்கீழ்க் காணும் விலாசத்தாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

S. RAGUNATH & Co.,

Book Sellers, Main Street,

JAFFNA.

திருச்சிற்றம்பலம்.

நமது சங்காபிமானம்.

சென்ற ஐப்பசி மீ° நமது மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வித்வக் கழகத்தின் அங்கத்தினரொருவராக, கோலாலம்பூரில் வசிக்கும் வித்வான் காரை-ஸ்ரீமத்-சிவசிதம்பரையரவர்கள் சேர்ந்துள்ளார்கள். இவ்வையரவர்கள் நமது சங்கசம்பந்தம் பெற்றகாலம் சிறிதேயெனினும் நம் சங்கத்திற்கு இன்றியமையாத வேண்டப்படுவனவாய ஏடுகள் அனுப்பியும், நம் 'செந்தமிழ்'க்கு இதுவரை பத்துச் சந்தாதார்கள் சேர்த்தனுப்பியும், நம் இந்துமதப் பிரசங்கமாகிய சத்கருமத்தையே தம் கருமமாக மேற்கொண்ட ஐயரவர்கள் அதுபற்றித் தாம் செல்லும் பலவிடங்களிலும் நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழியை ஆதரித்தல் நம் தமிழ்மக்கள்கடமை யென்பதைப் பல்லோருக்கும் அறிவுறுத்தியும் நம் சங்காபிமானமே பெரிதும் மேற்கொண்டு செய்துவரும் காரியங்கள் பல.

இவ்வையரவர்களே போன்று நம்சங்கத்தின் அங்கத்தினராய ஒவ்வொருவரும் கல்விவகையானும் பொருள்வகையானும் தம்மானும் பிறரானும் இயன்றவரை நம் சங்கத்திற்குச் செய்தும் செய்வித்தும் வருவரேல், புறவிருள் நீக்க வொளிக்கற்றை பரப்பி அத்தமிக்கும் செஞ்ஞாயிறு போன்றல்லாது நம் சங்கம் அகவிருள்நீக்கும் தமிழ்க் கற்றை பரப்பி என்றுமழியா ஞானபானுவாய் விளங்குமென்பது உண்மையே.

நம் சிவசிதம்பரையரவர்களது நம்சங்காபிமானம் இம்மட்டோ! அன்று அன்று: இன்னும் பலவுள. அவற்றுள் ஒன்று கீழே காட்டுதும்.

ஸ்ரீ ஐயரவர்கள் தம் நற்றாய் சிவபதமடைந்த ஞான்று நிகழ்த்திய தான தருமங்களில் ஒரு பகுதியாக வைத்த ரூ. 7—8—0 நம் தமிழ்ச் சங்கத்தின் உபயோகத்திற்காக நம்பால் வரவிடுத்

தினார்கள். அந் நன்கொடையை, நம் தமிழ் நாட்டுச் சுபாசுபங் களில் எவ்வெவ்வோர் பொருள்கள் விரயஞ்செய்யப்படுவனவற்றுள் தருமம் என்ற முறையில் செலவாகும் சிலபகுதிகளில் இவ்வித்தியா தருமத்தையும் ஒரு பகுதியாக வைத்து உபகரித்து வரவேண்டுவது நம தமிழ் மக்கள் அனைவர்க்கும் உரிய அரும்பெருங் கடமையென் பதனை அறிவுறுத்தற்பொருட்டே நமது ஐயரவர்கள் முன்னர்த் தாமே செய்து காட்டியதாக எண்ணுவதே இயைபுடைத்து.

இவ்வையரவர்கள் இவ்வாறு காட்டிய அரிய பெரிய தமிழபிமானம் அறிவுடையார் எல்லாராலும் பெரிதும் பாராட்டத்தக்கது. இந்நெறியினைப் பின்பற்றி நம் தமிழ்மக்களனைவரும் தங்கள் தங்கள் கிரகங்களில் செல்வாகும் சுபாசுப கருமங்களிலெல்லாம் பலவாறாக வியற்றற்குரிய தான தருமங்களில் இம்மதுரைத் தமிழ்ச் சங்க வித்தியா தானத்தையும் ஒன்றாக வைத்து அவரவர்கள் சக்திக்குத் தக்கவாறு சிறிது சிறிது பொருளுதவி வரினும், அஃது இச் சங்க வளர்ச்சிக் குரியதோர் பெரிய மூலதனமாக விளங்கு மென்பதில் யாதும் ஐயமின்று. இம்முறையே கொண்டு அரும் பெருங் காரியங்களை மேலைநாட்டு ஐரோப்பியர் பலர் கூடி எளிதில் முடிக்கின்றாரென்பது பலரும் நன்கறிந்த விஷயமே. அவ்வாறே நமது இந்து தேச வாசிகளும் பொது நன்மையான இத்தகைய காரியங்களில் முயன்றுவரின் பலவகையாலும் நமது தேசம் செழித்து யாவரும் ஒருகுறையுமின்றி வாழ்வாரென்பது சரதமே.

இங்ஙனம்,

சங்காபிமானிகட்குத் தொண்டுபூண்டொழுகும்

பொ. பாண்டித்துரை,

அக்கிராசனாதிபதி,

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

15—2—05.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-ங.] குரோதி ஹு தைமீ [பகுதி-ங.

கம்பர்.

(ருச-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவர் சோழனுடன் கோபித்துக்கொண்டது.

கம்பர் சோழனுடன் கோபித்துக்கொண்டு மதுரைக்குப்போம்போது சொல்லியது.

காத மிருபத்து நான்கொழியக் காசினியை
யோதக் கடல்கொண் டொளித்ததோ—மாதவா
கொல்லி மலையுடைய கொற்றவா நீமுனிந்தா
லில்லையோ வெங்கட் கிடம். (தமிழ்நாவலர் சரிதை)

இச்செய்யுளானும் இதன்றலைக்குறிப்பானும் கம்பர் சோழனுடன் கோபித்துக்கொண்டமை உணரப்படும். இதன்கட் கம்பர் சோழனை நோக்கி "நீமுனிந்தால்" எனக்கூறுதலால், அவன் இவரை முதற்கண் முனிந்தனனென்பது அறியப்படுகின்றது. இவரைச் சோழன் முனிதற்குக்காரணம், இவர், பெருஞ்செல்வத்தினும், பெருங்கொடையினும், புலவரெல்லாம் ஒருங்கு பாராட்டுஞ்சிறப்பினும் சோழனாற் பெரிதும் அழுக்காறுகொள்ளப்பட்ட வெண்ணைச் சடையவள்ளலையே மீப்படமதித்து இராமாவதாரத்துப் புகழ்ந்துபாடியதேயாகும். சடையன், முடியுடையரசரும் அழுக்காறுகொள்ளும் வளப்பமும் வண்மையும் புகழும் உடையனாயினன் என்பதற்குப் பல கதைகள் வழங்குவன. அவற்றுட் சிலவற்றை ஈண்டைக்கேற்றவாறு சுருக்கியுணர்த்துவேன்.

ஒருநாள் சடையவள்ளல் சோழனதவைக்களத்தே போந்து சிறக்கவீற்றிருந்தபோது, பெருங்குடி வணிகனொருவன், கடலிற்ப

ட்ட அருவிலையுடைய பெருகொளிப் பருமுத்துக்கள் பலவற்றைக் கொணர்ந்து சோழன் திருமுன்னர்வைத்து, 'இவை முடியுடை வேந்தர்க்குத் தக்கன' என்று கூறுநிற்ப, அரசன் அவற்றைக்கண்டு மகிழ்ந்து கடல்படுவளத்தையே மற்றெல்லாவற்றினும் சிறப்பித்துப் புகழ்ந்தானாக, அதுகண்ட சடையவள்ளல் கழனிபடுவளத்தையே மேம்படுத்தேத்தி, 'அக்கழனிபடுமுத்தைப்போல இவை பெரியனவும் ஒள்ளியனவுமாகா' என்று சோழற்கு மாறுரைத்தனன். அதுகேட்ட சோழன் கழனியில் முத்துப்படுவது கேட்டறிவதன்றி யாம் கண்டறிவதில்லை என்ன, சடையவள்ளல் அது நுமக்கரிதாவதன்றி எமக்கன்று: நுமக்கு யான் அதுகாட்டுவேன் என்று, தமது கழனியிற் கமுகுபோலப் பருத்துவளர்ந்துள்ள கரும்புகளில் ஒரு சிலவற்றைக் கொணருவித்து, அவற்றுட் கோணிக் குறுகியதொரு கரும்பினை எடுத்து அதனொருகண்ணை முறித்தனன். அதினின்று பல முத்துக்கள் தெறித்துவிழ்ந்து, அரசனது முடிமணியொளியினும் பேரொளிபரப்பின. அப்போது சடையவள்ளல் தன் கழனிகளிலொன்றில் ஆயிரக்கணக்கான கரும்புகளில் ஒருசிலவற்றுளுபதோர் சிறுகட்டின்கணிருந்தவற்றில் ஓர் கோணற் சிறுகரும்பின் ஓர்கண்ணிலிருந்தன இவை என்றும், இங்ஙனமே தன்கழனிதோறும் உள்ளனவற்றை யெண்ணிற் கணக்கிலவாமென்றும் அரசற்கு எடுத்துக்கூறினன். அதுகேட்டு, அரசவையிலிருந்த சான்றோரெல்லாம் 'சடையன் கழனிபடுவ கடல்படா' என்று புகழ்ந்தனர். கரும்பினின்று தெறித்த முத்துக்களெல்லாம் ஒளியானும் பருமையானும், வணிகன்கொணர்ந்த கடல்படுமுத்துக்களையும் வென்றுசிறத்தலை அரசன் கண்ணுரக்கண்டு, முகத்தான்வியந்து, அகத்தாற் சடையனது செல்வத்தில் அழுக்காறுகொண்டனன் என்ப. இவ்வரியகதையே மேல் இணையாரமார்பனைப் பாண்டியன் இவன் ஆரென்னும்போது கம்பர் பாடும் வெண்பாவிற் " கன்னன்மதயானைக் கண்டன்மகன்-முன்னங், கணையாழி முத்துதிர்க்கும்" என்பதனாற் குறிக்கப்படுவதாகும். மதயானைக்கண்டன்மகன் முன்னங் கன்னலினின்று கணையாழிமுத்தினை உதிர்க்கும் என உரைக்க. கணையாழிமுத்து - திரட்சியையுடைய கடன்முத்து.

பின், ஒருநாள் வடநாட்டுவணிகன் மற்றொருவன், முடிவேந்தர்க்கேற்ற நுண்ணியதொழில்பலவியற்றிய பெருவிலைப்பட்டொன்று கொண்டு சோழன்பால் எய்தியபோது, சோழன் அவ்வழகிய பட்டாடையைக்கண்டு அதனைப்பெறுதற்குமனமுவந்து அதற்குரியவிலையை அவ்வணிகன்பால் வினவினன், அதற்கு வணிகன் கூறியவிலைப் பொன்னளவு, தனது பெருநிதியறைக்கணுள்ள பொன்னளவினும் பன்மடங்கு அதிகமானதுகண்டு, அரசன் அவ்வழகியபட்டினைக் கொள்ளவியலாமல் மனம்வாடி, அவ்வணிகனைச் செலவிடுத்தனன். பின்பு, அவ்வணிகன், அரசனினும் சடையவள்ளலையேபெருஞ்செல்வனாக நாடுமுழுதும் புகழ்தலைக்கேட்டு வெண்ணெய்நல்லூரெய்தி அவ்வள்ளல்பால் அப்பெருவிலைப்பட்டைக் காட்டி நிகழ்ந்ததுரைக்க, அவ்வள்ளல் மகிழ்ந்து அதனைக்கொள்ளுதல் கருதி விலையினைச் சொல்லக்கேட்டு, இப்பட்டின் மென்மையையும் நுண்டொழிலையும் கருதுமிடத்து இவ்விலை மிகவுஞ் சிறியதேயாமென்று நினைந்து, தனது பெருநிதியறைக்கணின்று அதன்பெருவிலையை எளிதினல்கி அப்பட்டினை வாங்கிக்கொண்டு வணிகனைச் செலவிடுத்தனன். இதன்மேற், சோழன், ஓர்நாள் சடையவள்ளலைக்கண்டு அளவளாவவேண்டித் தூதரை விடுத்தானுக்கு, அவ்வள்ளல் தனக்குத் தொடையிற் புண்ணுண்டாயிருத்தலால் இவ்வமயம் அரசவை யெய்தற்கு இயலாதென்றும், அதுதீர்ந்து சிறிது குணப்பட்டவாறே ஆண்டுத்தான் எய்தலாகுமென்றும் ஓலைபோக்கிச், சின்னாளில் அப்புண் சிறிதுதீர்ந்தவாறே, முன் வணிகன்பால் வாங்கிய பெருவிலைப்பட்டினை உடுத்துக்கொண்டு சோழன்பால் எய்தினன். சோழன், தன்னாலுங் கொள்ளற்கியலாத அப்பட்டைச் சடையனதரையிற்கண்டு வியப்பும் அழுக்காறும் மிக்கு முகத்தான் அளவளாவுதற்கிடையே 'தொடையிற் புண் தீர்ந்து முழுதும் குணப்பட்டதில்லையே; இப்போது எவ்வளவிலுள்ளது; அதனையான் காணவிரும்புவல்' என அன்புபட மொழிந்தனனாக, அப்போது சடையன், உடுத்த ஆடையைத் திரைத்து நீக்கித் தொடையைக்காட்டுதல் அரசர் மரியாதைக்குப் பொருந்தாதென்று கருதிக், தான் பெருவிலைகொடுத்துப்பெற்ற அப்பட்டாடையை அத்தொடைப்புண்ணுள்ள இடத்துக்குநேரே கையாற் கிழித்து

அப்புன்னைவிற் காட்டினன். அதுகண்டு அரசன், எமக்கரியதாய்த் தன்செல்வமிகுதி தோன்றற்குக் காரணமான இப்பட்டாடையையும் இவன் ஓர் பொருளாகக் கருதினனில்லை; இவன் செல்வநிலையும் மனநிலையும் இருந்தவாறென்னே! என்று முன்னினும் அதிகமாக இவன்பால் அழுக்காறுகொண்டனன் என்பர். இவ்வரிய கதையே,

> " ... ... ஆருந்
> துடையி லெழுசிலந்தி தோற்றுவிக்கப் பட்டின்
> புடவை கிழித்த பெருங்கை "

எனத் திருக்கை வழக்கத்தினும்,

> " விளவாஞ் சிலந்தியை யாடையைக் கீறி வெளியிலிட்டும்
> வளமான கீர்த்திகொள் வேளாளர் "

எனப் பாண்டிமண்டல சதகத்தினும் பாராட்டப்பட்டிருத்தல் காண்க. தன்னால் விலைகொடுத்துக் கொள்ளற்கியலாததொன்றை இவன் கொண்டதனைத் தனக்கறிவிக்கவே, இவன் இப்பட்டுடுத்திப் போந்தானென்றும், தான் அதிகமாக மதித்துள்ள இவ்வரிய பட்டாடையையும் இவன் ஒருபொருளாக மதியாமையைத் தனக்குணர்த்தவே இவ்வாறு கிழித்தனன் என்றும் சோழன் கருதிச் சடையன்பாற் செற்றங்கொண்டனனவன். அன்றியும்,

> " மரபுதங்கிய முறைமைபேணிய மன்னர்போகிலே னகிலென்
> * * • * *
> சங்கரன்றரு சடையனென்றொரு தருமதேவதை வாழவே "

எனச் சடையன் பாடல்பெறுதலாலும் இவன்பால் அரசன் அழுக்காறு கொண்டனனவன். இது முற்காலத்துப் பாரியென்னும் வள்ளற்றலைவன்பால் தமிழ்மூவேந்தரும் அழுக்காறு கொண்டதனோடொக்கும்.

இனி, வேறொருவணிகன், பெரும்பொருள் செலவுசெய்து நெடுங்காலஞ்சென்றாலும் தனது தூய்மையினும் நறுமணத்தினும் குறைவுறாத மேலான கலவைச்சாந்தை மிகுதியாக இயற்றி அதனை ஓர் பண்டியிலேற்றிச் சோழன்பாலெய்தினனுக்கு, தக்க பொருள்கொடுத்து அச்சாந்தினைப் பெறுதற்கியலாமல் அவ்வணிகனை அர

சன் செலவிடுக்க, அவன் சடையன்பாற்சென்று நிகழ்ந்தது தெரிவிக்க, இவ்வாறு முடியுடையரசரும் பெறுதற்கியலாத இத்தகைப்பொருள்களெல்லாம் தன்பாலெய்தற்கு இவ்வளம்பெறு கழனியே காரணமென்றும், அஃதே இவற்றை அநுபவித்தற்குரியதென்றுங்கருதி, அச்சாந்து முழுதையும் சிலகழனிகளில் உழுதொளியுடன் கலக்கி அச்சாந்துக்குரிய விலைப்பொருளை அதுகொணர்ந்த வணிகற்கு ஈந்துவிடுத்தனன் எனவும், அதுகேட்டுச் சோழன் சடையன்பால் அழுக்காறுஞ் செற்றமுங் கொண்டனனெனவுஞ் சொல்லுப. *

பின்னோர் காலத்து, புலவர்பலர் பரிசில்பெறுதற்கு வெண்ணெய்நல்லூரை யெய்திச் சடையனது வளமனைக்கண் வீற்றிருந்தாராக, அவ்வமயம் கழனிவெளியிற் சென்றிருந்த சடையவள்ளல் தம் மனைமுற்றத்தைச் சார்ந்தவளவில் ஆண்டு நெல் மிகுதியாகச் சிதறுண்டுகிடத்தலைக் கண்டு, மக்கட்கு உயிர்போலச் சிறந்த இந்நல்லுணவு இவ்வாறு பலர் காலிற்பட்டுப்போவதாகாதே என்னுங் கருத்துக்கொண்டு அவற்றைப்பொறுக்கி ஒருங்குசேர்க்கத் தலைப்பட்டனன். ஆண்டுக் குழீஇய புலவரெல்லாம் அவ்வள்ளலது திருவுளத்தினைத்தேறாமல், இவ்வாறு ஒவ்வொருநெல்லையும் விடாமற்பொறுக்கிச் சேர்ப்போன் நமக்கெவ்வாறு பொருள்வழங்க வல்லான்! என்று தம்முள்ளே கூறியிருந்தனர். அதனைக் குறிப்பானுணர்ந்த சடையவள்ளல் சிதறிய நென்முழுதையும் பொறுக்கிச் சேர்த்துவிட்டுக் கூடிய புலவர்க்கெல்லாம் நல்வரவு கூறி அவர்கட்குணவளித்தற்கு விரைந்து அவர்களனைவரையும் வரிசைப்படவைத்து உண்கலனமைத்து, அதன்கண்ணே, பொன்னையே அமுதும் பொரிக்கறியுமாகப் படைத்து அவற்றை உண்டு பசிதீருமாறு வேண்ட அவரெல்லாம் ஒன்றும் அறியாராய்த் திகைத்திருந்தவளவில், பொற்கறியும் பொன்னமுதும் உண்டற்காகாவாதலால் இவற்றையெடுத்து வெளியே எறிந்துவிட்டு வேறுண்கலம்பரப்பி நெற்சோறளிக்க என ஏவினன். உடனேதொழிற்குரியார் அவ்வாறேபுரியப், புலவர்கள், வயிறாரவுண்டு கைகழுவிவாய்பூசிவெளியிற் குப்பையிலெறியப்பட்டபொன்களைந் தாம்தாம் விரைந்து பொறுக்கிக்கொள்ளப் புக்குழி, அவர்கள் ஒரு

* இக்கதையினை வேறுடாகோவுக்கேற்றிக் கூறுவாருமுளர்.

வரோடொருவர் கலகம்பட்டுப் பூசன்மிகுத்து நின்றார்கள். அப்போது சடையவள்ளல் அங்கேபோந்து எச்சிற்கலத்துக்குப் பெரும்புலவர்கள் இவ்வாறு கலகமிடலாகாதே' என்றுகூறி அவர்கட்குவேண்டுவநல்கி விடுத்தனன் என்ப. இவ்வரிய கதையினொருபகுதியே,

"பொன்னா லமுதும் பொரிக்கறியுந் தான்கொணர்ந்து
நன்னா வலர்க்களித்த நாணயக்கை"

எனத் திருக்கைவழக்கத்திற் பாராட்டப்பட்டிருப்பதாகும்.

இவ்வாறு முடியுடைவேந்தரும் அழுக்காறுகொள்ளும் வளப்பமும் வண்மையும் சடையவள்ளல் உடையனாய்ச் சிறந்தனனென்பதற்கு இயையக் கேட்கப்படுங் கதைகள் பலவாம். இத்துணையுங் கூறியவாற்றாற், சோழன் சடையன்பால் அழுக்காறுகொண்டிருந்தனனென்பது ஒருதலையாம். அவ்வழுக்காறடியாகச் சடையற்குயிர்த்துணையாய்ச் சிறந்த கம்பர்பாலும் சோழற்கு வெறுப்புண்டாயிற்றென்பது பொருந்திற்றேயாம். பல்லாற்றானும் தன்னால் அழுக்காறு கொள்ளப்பட்ட சடையனுக்கே கம்பர் உயிர்த்துணையாய்ச்சிறந்து அவனையே மீப்படப்பாராட்டியதும், தமக்கு அரசர்க்கொத்த வரிசைபலவளித்துத் தம்மை மிகவுமுயர்த்திய தன்னை அவ்வாறு பாராட்டாமையுமே சோழன் இவரை முனிதற்குக் காரணமென்பது உணர்ந்துகொள்க. இஃதன்றி வேறுவேறு கூறுவாருமுளர்.

இவர் பாண்டியனிடம்போய் மீண்டது.

இவர் சோழனுடன் கோபித்துக்கொண்டு பாண்டிநாடுபோய் மதுரையிற் புகும்போது, இப்பெரியாரது அரியவரவினைப் பாண்டியன் தெரிந்து, தானுந் தன் தேவியுமாக எதிர்கொண்டுபோந்து நல்வரவுகூறி இவரது சிவிகையைத் தாங்கினராக, அப்போது இவர் அவர்களைப் புகழ்ந்து பாடினரென்பது,

"பாண்டியனுந் தேவியும் பல்லக்குச்சுமக்க அப்போது
கம்பர் பாடிய வெண்பா"

"உமையவளு நீயு மொருங்கொப்பே யொப்பி
லிமையவருக் கங்குண்டோ ரூன—முமையவடன்

பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்முன் பாண்டியனுன்
* ஞகந்தோய்ந் தாண்டா னரசு" †

எனத் தமிழ்நாவலர் சரிதைக்கண் வருதலான் அறியப்படுவது. இங்ஙனம் பாண்டியனால் உபசரிக்கப்பட்டுப்போய் அவன் அரண்மனைக்கண்ணே இனிது வாழ்கின்றகாலத்து, சோழன் தனது பேரவை கம்பரில்லாமையால் மதியிழந்த வானம்போலவும், தாமரையிழந்த பொய்கைபோலவும் ஒளிமழுங்கி அழகுகெட்டிருத்தலைப் பன்னாளுங் கண்டு, தான் அறியாது முனிந்ததற்குப் பெரிதும்நொந்து, சடையவள்ளற்கு அருமைத்தம்பியாகிய இணையார்மார்பன் என்பானை யழைத்துக் கம்பரைக் கூட்டிக்கொண்டுவருமாறு மதுரைக்குச் செலவிடுத்தனன். அவனும் அங்ஙனமே மதுரைபோய்க் கல்வியிற்பெரிய கம்பரைக்கண்டு, நெடுநாட்பிரிந்த பரிவுதீர அளவளாவி மகிழ்ந்து தான்வந்த காரணமுரைப்ப, கம்பரும் இணையாரமார்பனைப் பாண்டியற்கு நண்பினனாக்கவிழைந்து அவனுடன் அரசவையிற் புகுந்தவளவில், பாண்டியன் இருவரையும் வரவேற்றுத் தனது சிங்காதனத்திருத்திக் கம்பரை நோக்கி 'நம்முடன் அழகுபெற வீற்றிருக்கும் இத்திருவுடையான் யார்?' என்ன, கம்பரும், இவன் ‡ தமக்கும் சரராமனுக்கும் தம்பியென்றும், இணையாரமார்பன் என்னும் பெயரினன் என்றும் கூறக்கேட்டுப் பாண்டியன் மகிழ்ந்தனன். இது,

சீரம்பெரிய தென்னர்பிரான் சிங்காதனத்திற் சேர்த்தியிவ
னாரென்றுரைப்ப நம்பியிணை யாரமார்ப னடியேற்குஞ்
சாருஞ்சரரா மனுக்குமொரு தம்பியெனக்கம் பன்புகழும்
வாரும்பெருவெண் ணையர்பெருமான் வளஞ்சேர்சோழ மண்டலமே.

[மேற்கோள்.]

என்னுடைய தம்பி சரராம னுக்கிளையான்
கன்னன் மதயானைக் கண்டன்மகன்—முன்னங்

---

* "பாதந்தோய்ந் தாண்டான் பதி" எனவும் பாடம்.

† "பலர்புகழ் கம்ப ருமையுட னீயுமொப் பாயென்றதும்" எனப் பாண்டிமண்டலசதகத்து வருதலானும் இது கம்பர்பாட்டாதல் தெள்ளிது.

‡ கம்பர் இணையாரமார்பனைத் தமக்குத் தம்பி என்று கூறியது சடையற்குந் தமக்குமுள்ள ஒற்றுமைபற்றி யாகும்.

கணையாழி முத்துதிர்க்குங் காவிரிசூழ் சோணாட்
டிணையார மார்ப னிவன்.*

எனச் சோழமண்டல சதகத்து வருதலானும், தமிழ்நாவலர் சரிதைக்கண், 'என்னுடைய தம்பி' என்னுஞ் செய்யுண்முகத்து, 'கூட்டிக் கொண்டுவரச் சோழனனுப்பிய இணையாரமார்பனைப் பாண்டியன் 'இவன் யார்' என்னக் கம்பர் பாடிய வெண்பா' என்னுந் தலைக்குறிப்புக் காணப்படுதலானும் உணரப்படும். தமிழ்நாவலர்சரிதையிலுள்ள 'என்னுடைய தம்பி' என்னுஞ் செய்யுள் சோழமண்டல சதகமேற்கோளில் உள்ளவாறன்றிக் 'கன்னி மதயானைக் கம்பன்மகன்—றுன்னும், பனையார்நீர் வேலிப் பழனஞ்சூழ் சோணாட், டிணையார மார்ப னிவன்' என வேறுபாடுங் கொண்டுள்ளது. இது சோழமண்டலசதக மேற்கோளிலுள்ளதுபோலப் பொருள் சிறவாமை காண்க.

பின், கம்பர், இணையாரமார்பன் அழைத்தவாறு சோழன்பாற் செல்லக்கருதியிருக்கு நாளில் ஒருநாள், பாண்டியன், தனது மதுரைப்பதியே எல்லா நகரங்களினும் அழகுடைத்தென்பதைக் கம்பர்க்குத் தோற்றுவித்தற்பொருட்டு அதனைப் பல்வகையான் அலங்கரித்து வியந்து மகிழ்கின்றவளவில், கம்பர், 'இது திருவெண்ணெய்நல்லூரிலுள்ள இடுகாட்டளவே சிறப்பது' எனவுரைக்க, பாண்டியன் அத்தகைச் சிறப்புவாய்ந்த நகரைத் தான் கண்ணிற்கண்டு தெளிய வேண்டுமென்று ஆசைமிகுந்தனனாக, உடனே கம்பர் பாண்டியனை அழைத்துக்கொண்டு இணையாரமார்பனுடன் வெண்ணெய்நல்லூர் சென்றனரென்ப. (இது, கம்பர் சோழனுக்குத் தம்பெருமையினையும், முடியுடையரசரும் தம்வயப்பட்டொழுகுதலையும் உணர்த்தவேண்டிப் புரிந்ததோர் சூழ்ச்சியாகுமெனத் தோற்றுகின்றது.) ஆங்குத் திருவெண்ணெய்நல்லூரிற் சடையவள்ளல் பாண்டியன் முதலி

---

* உடன்பிறப்பொற்றுமையால் முன்னோன்சிறப்பைப் பின்னோனுக்கேற்றிக் கன்னற் கணையாழி முத்துதிர்க்கும் இணையாரமார்பன் என்றார்; மேல் 'யாமார்புகழ' என்னுஞ் செய்யுளிற் றிரிகர்த்தனை சடையனைக் 'கோமாற னிட்டபொற் சிங்கா தனம்பெற்ற கொற்றவன்' என்றதுபோலக்கொள்க. (செந்தமிழ்த் தொகுதி-ந., பகுதி-க. பக்கம்-ரு.)

யோர் வரவை முன்னரேயறிந்து, கம்பர் பாண்டியற்குரைத்ததினும் பதின்மடங்கதிகமாக மணிகளாலும் பொன்னாலும் அமரர்பதிபோலத் தன்னூரை அலங்கரித்துவைத்திருந்தன னெனவும், வழுதியும் ஆண்டுப்புகுந்து அந்நகர்ச் சிறப்பைக் கண்டாக்கண்டு பெருவியப்பெய்தித் தன்னகர்க்கு மீண்டனனெனவும் கூறுப. இவற்றை,

விள்ளுமதுரை யலங்கரித்த வீம்புநோக்கி வெண்ணெய்நல்லூ
ருள்ளுறிடகா டொக்குமென வுரைத்தான்கம்ப னுரைத்தமுறை
யள்ளுமணியாற் பசும்பொன்னா லமரர்பதிபோ லலங்கரித்தே
வள்ளல்வழுதி யதிசயிப்ப வாழ்ந்தோன்சோழ மண்டலமே.

(சோழமண்டலசதகம்)

என்னும்பாட்டான் அறிந்துகொள்க. பாண்டியன் மதுரைக்குமீண்டபின்பு கம்பர் சோழன்பால் எய்தி அவனால் முன்போலவே போற்றப்பட்டு இனிது வாழ்ந்திருந்தனர்.

இவர் பின்னரும் சோழனுடன் கோபித்துக்கொண்டது.

இது தமிழ்நாவலர்சரிதைக்கண்,

கம்பர் பின்னொருகாற் சோழனுடனே கோபித்துக்கொண்டபோது சொன்ன வெண்பா.

மன்னவனு நீயேயோ மண்ணுலகு மிவ்வளவோ
வுன்னையோ யான்புகழ்ந்திங் கோதுவ—தென்னை
விருந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ சோழா
குரங்கேற்றுக் கொள்ளாதோ கொம்பு.

எனவருதலானறியப்படுகின்றது. இவர் சோழனுடன் திரும்பவும் இவ்வாறு கோபித்துக்கொள்ளுதற்குக் காரணம் என்னையெனிற்கூறுவேன் : கம்பருக்கு அம்பிகாபதி என்னும் பெயரினோர் திருமகனாரிருந்தனர். அவரும் புலமையாற் சிறந்து அரசவையேத்தவாழ்கின்ற காலத்துச் சோழன்றிருமகள் அவரைக் காமிக்க அவரும் அவளை விழைந்து களவினொழுகுதலைச் சோழன் றெரிந்துகொண்டு அவரை ஒறுத்தற்கு அற்றம்பார்த்திருந்தனன். அக்காலத்து அம்பிகாபதியார் பாடுவனவெல்லாம் சிற்றின்பச்சுவையே வருதலை அரசன்றேர்ந்து ஒருநாள் அவன் அவரை நோக்கி நீவிர் இப்போதே ஒருநூறு

*

செய்யுள் சிற்றின்பம்பற்றாது பேரின்பமேபற்றிப் பாட வல்லீரோ
என வினவ அவரும் அங்ஙனம் பாட வல்லென் என்ன, அரசன் அந்
நூறிலொன்றேனுஞ் சிற்றின்பங் கலந்ததாயின் நுந்தலையை வெட்டி
விடுவேனென அவரும் ஒட்டிய முறைதவறின் அவ்வாறே புரிக என்
றுடன்பட்டுப் பாடிக்கொண்டிருந்தனர். இச்செய்தியைக் கேள்வி
யுற்ற சோழன்மகள் தன் ஆசைநாயகர்க்கு ஏதேனும் பிரமாதம் நே
ருமோ என்று கவன்றிருந்தவள் சில்போது கழிந்தவாறே அம்பிகா
பதியாரைக்காண்டல் வேட்கை மீதூர்ந்து மாளிகையின் மேனிலையி
னோர்புறத்தே மறைந்துநின்று தலையைமட்டும் வெளிக்கொண்டு அவ
ரிருந்த அரசவையை நோக்குவாளாயினள். அந்நிலையில் அம்பிகாப
தியார் தொண்ணூற்றொன்பது கவியும் பேரின்பமாகப் பாடியவர்
ஊழ்வினை சூழ்தலான் அம்மறைந்துநோக்கிய சோழன்மகள் தலையி
னைத் தாம் முற்படக்கண்டு மயங்கி நூறாஞ் செய்யுளொன்றைச் 'சுற்
றே பருத்ததனமே குலுங்க' என்றெடுத்துச் சிற்றின்பமாகப் பாடி
முடித்தனர். அப்போதே சோழன் ஒட்டியநெறி பிழைத்தீரென்று
அம்பிகாபதியார்க் குரைத்து அவர்தலையினை வாளாலெறிந்தனன்.
இந்நிகழ்ந்தவெலாம் கம்பர்கேட்டு விரைந்துபோந்து வெட்டுண்டுகிட
க்கும் மகனுடலைக்கண்டு ஆறாத்துயருடையராய்,

மட்டுப் படாக்கொங்கை மானார் கலவி மயக்கத்திலே
கட்டுப்பட் டாயென்ன காதல்பெற் றாய்மதன் கையம்பினாற்
பட்டுப்பட் டாயினுந் தேறுவை யோவென்று பார்த்திருந்தேன்
வெட்டுப்பட் டாய்மக னேதலை நாளின் விதிப்படியே.

என்னுஞ் செய்யுளைக் கூறித் தம்மகனார்க்குச் செய்வன செய்திருந்த
னர் என்ப. இங்ஙனந் தம்மருமை மகனாரை அரசன் கொன்றதே கம்
பர் திரும்பவும் அவனுடன் கோபித்தற்குத் தலையானகாரணமாகும்.

இனி, கம்பர்வம்மிசத்தினர்க்குள் ஓர் அரியகதை வழங்குகின்
றது. அஃதாவது;—கம்பருக்குக் காவேரி என்னும் பெயரில் ஓர்
அழகுடைத் திருமகள் இருந்தனள். அவளைச் சோழன்மகன் முறை
தவறி விரும்பி அவளைத் தானெய்தற்குப் பல்லாற்றானும் முயன்ற
னன். இது தெரிந்த அத்திருமகள் உயிரினும் பன்மடங்கு சிறந்த

கற்பினையழித்துப் பழிமலைந்து வாழ்தலினும், அவ்வுயிரையிழந்து புகழெய்தலே சிறிதாமெனத் தேர்ந்து, கம்பர் திருமனையின்முற்றத் தொருபுறத்துக் கம்புநிறையப் பெய்திட்ட மிகவும் ஆழமான பெரிய தோர் கம்பங்குழி நடுவில் ஒருநள்ளிரவில் தனியே இறங்கி மூழ்கிமா ய்ந்தனள். [கம்பு என்னுந்தானியத்தை ஓர் பெருங்குழிநிறையப் பெ ய்து அதன்மேல் ஓர் திண்ணியபொருளையிட்டால் அக்கம்பு எளிதி லிடம்விட்டுக்கொடுத்தலால், அப்பொருள் விரைந்து உள்ளே புக்கு மூழ்கலுறும்] இங்ஙனம் தம்மருமைமகள் மாய்ந்தவகையினைக் கம் பர் ஆராய்ந்தறிந்து ஆற்றொணுஇடரில் மூழ்கினவராகி, 'இஃது அர சன் முறைதவறியதனுனே எய்தியது' என்று தெளிந்துபோய் அர சனை முனிந்தனர் என்பதேயாம். இப்போதும் இவர் வம்மிசத்தினர் மேற்காட்டிய காவேரி என்னுங் கற்புடையாட்டியைத் தங்கள்வீட்டு த் தெய்வமாகக்கொண்டு அவளது திருவுருவத்தை வழிபட்டுவருகி ன்றனர். இதுவும் கம்பர் சோழனை முனிதற்குத் தக்க பெருங்கார ணமாம்.

(இன்னும் வரும்)

இங்ஙனம்,
ரா. இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

"வீரகல், மாஸ்திகல்"

(சுகூ-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி மாஸ்திகல் லின்னதென்பதையும் அதைக்குறித்த இலக்க ணமும் கூறுவோம். 'கொண்டானிற் றுன்னிய கேளிர் பிறரில்லை' என்னும்படியான ஆப்தபந்துவாகிய புருஷனிறந்தபின் றற்றுளாய் 'தெய்வந் தொழாஅள் கொழுனற் றொழுதெழுவாள்' ஆகிய நன்மனை வி தானும் தன் னின்கணவனுடன் சுவர்க்கம்புகுதல் கருதி அவனுக் காக வளர்த்த தீப்புகுதல் முன்காலத்துச் சாதாரணமானதோர் வழ க்கா. இவ்வாறு மாய்த்துக்கொண்ட பத்தினி ஸதி யென்று கூறப்ப டுவாள். இவள்நிமித்தமாய் நட்டகல் மகாஸதிகல் லென்று பெயர்.

இதுவே வழக்கில் மாஸ்திகல் லாயிற்று. இம்மாஸ்திகல்லின் படம் இதனடியில் வரைந்துள்ளது.

'மாஸ்திகல்'



இக்கல்லின் நடுவில் ஒருகம்பமும் அதினின்றும் ஒருகையும் காட்டியிருக்கிறது. இக்கையினடியில் சாதாரணமாய் தீப்பாய்ந்த ஸதியைத் தனியாயாகிலும், அல்லது அவள் கணவனுடனாகிலும் சித்திரித்திருக்கும். எழுத்துக்கள் காணப்படின் அவை கைக்குமேலேயே இருப்பது வழக்கம். இக்கல்லை அந்நாட்டார் 'வியாஸநதோளுகல்லு' என்கிறார்கள். தவிரவும் இக்கல்லின் விஷயமாய் ஒரு கதை சொல்லுவதுமுண்டு. ஒருக்கால் கைலாசத்தெழுந்தருளியிருந்த பரமசிவன் சன்னிதானத்து வியாசர் விஜயஞ்செய்து சாஸ்திர சர்ச்சை செய்து கொண்டிருக்க நடுவில் விஷ்ணுவே ஸர்வோத்தமன் என்றுசாதிக்க,

மற்றவர்கள் மறுக்க, இவர் தான்சொல்லியதை வற்புறுத்திக் கூறுங்கால் தூக்கிய கையைத் தோளோடுந் துணிக்கப்பட்டது. இத்தோளுங் கையும் அடித்துவைத்த கற்களே அவ்வியாஸர்தோள் கற்களென்று லிங்காயதர்கள் இன்னமும் காட்டுகிறார்கள்.

இவ்வாறு தீப்புகுதலை தோள்கொடுத்தலென்று கன்னடத்தார் வழங்குகிறார்கள்.

மாஸ்திகற்களில் அநேகமாய் எழுத்துக்கள் காணப்படுவதில்லை. வெகுதுர்லபமாய் சிலசில கற்களிலிருக்கின்றன. அடியில் உதாரணங் காட்டியிருக்கிறேன். அதாவது,

"வீரவ்ரதாபஶ்ரீ........ராயமஹாராயரு ப்ருத்வீராஜ்யம்மெயு திரெஶகவருஷ 1339 னே ஹெமெலும்பிஸம்வத்ஸரத பாத்ரபத ஶு. 5,—ஶ்ரீ ஸகாட்புரத.........மகனுக்க ரஸ்வர்க்கஸ்துவாதநு அவந பெண்டதியரு மூவருதோளுகயிகொட்டகல்லு (1)

தீப்பாய்தலைக்குறித்து தமிழிலக்கண இலக்கியங்களில் பலவிடத்திலும் காணலாம்.

தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் எகூ-ம் சூத்திரத்தில் "நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச், சொல்லிடை யிட்ட பாலை நிலையும்" என்பதனை விளக்கி, நச்சினார்க்கினியார், "கற்புடை மனைவி தன் கணவனிறந்துழி அவனோடு எரிபுகுதல்வேண்டி எரியை விலக்கினாரோடு உறழ்ந்துகூறிய புறங்காட்டுநிலையானும்: எல்லாநிலத்தும் உளதாகி வேறு தனக்கு நிலனின்றி வருதலானும் நண்பகல் போல வெங்கனலான் வெதுப்புதலானும் புறங்காட்டைப் பாலையென்றார்" என்று எழுதியுள்ளார்.

---

(1) வீரபிரதாபஸ்ரீ........ராயமகாராயர் பிருதுவிராச்சியம் செய்திருக்க சகவருஷம் 1339-வது ஹேவிளம்பி ஸம்வத்சரத்து பாத்திரபதசுத்த பஞ்சமி ஸ்ரீ ஸகாட்புரத்தும் ரொ........மகன்புக்கான்ஸ்வர்க்கஸ்தன் ஆனதில் அவன் பெண்டாட்டியர் மூவர்தோளும் கையும் கொடுத்தகம்பம்.

மைசூர்ஜில்லா மண்டயம் தாலூக்காவிலுள்ள சாஸனம்.

சிலப்பதிகார கதாநாயகியாகிய கண்ணகி ஓர் ஸதி. வெள்ளிவீதியார் மற்றொருத்தி. ஸதிகளைக்குறித்து மணிமேகலையில் "ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்" என்றும், புறப்பொருள்வெண்பாமாலையில் "காதற் கணவனொடு கனைபெரி மூழ்கு, மாதர்மெல் லியலின் மலிபுரைத்தன்று"; "தாங்கிய கேளொடு தானு மெரிபுகப், பூங்குழை யாயம் புலர்கென்னும்" என்றும் கூறியிருத்தல் காண்க.

இவ்வாறு எரிபுக்குஉயிர்மாய்த்துக்கொண்ட ஸதிகளைக்குறிக்குமிடங்கள் இலக்கியத்துள் பலவாகலின் ஆங்காங்கு நேர்ந்தவிடத்துக் கண்டுகொள்க.

து. அ. கோபிநாதருவ்.

௨

நிருத்தம்.

—:o:—

இந்தச் 'செந்தமிழ்' ப்பத்திரிகையிலே சென்ற தொகுதி ஒன்றிலே வேதாங்கவித்தைகளுள் ஒன்றாகிய நிருத்தத்திலே சொல்லப்பட்ட நீரின் பெயர்களும் அவற்றின் பொருள்களும் எழுதப்பட்டன. இப்போதும் நிருத்தத்தினின்றும் பிருதுவி முதலிய சிலவற்றின் நாமதேயங்கள் 'செந்தமிழ்' வாசிப்பவர்கட்குப் பிரயோசனப்படும் எனக் கருதி ஈண்டெழுதப்படுகின்றன.

பிருதுவி.

௧.	கௌ	௮.	க்ஷிதி	௧௫.	இளை
௨.	ஞமை	௯.	அவனி	௧௬.	நிருதி
௩.	சமை	௧௦.	உருவி	௧௭.	பூ
௪.	கமை	௧௧.	பிருதுவி	௧௮.	பூமி
௫.	ஞகை	௧௨.	மகி	௧௯.	பூடை
௬.	க்ஷமை	௧௩.	இரிபம்	௨௦.	காது
௭.	கோணி	௧௪.	அதிதி	௨௧.	கோத்திரை.

இந்த இருபத்தொன்றும் பிருதுவிக்குச் சொல்லப்பட்ட நாமதேயங்கள். இவற்றுள்ளே அவனி, பிருதுவி, மகி, பூ, பூமி, கோத்திரை என்னும் ஆறுசொற்களும் பிங்கலநிகண்டிலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆகாசம்.

௧. அம்பரம்	௯. பிருதுவி
௨. வியத்து	௧௦. பூ
௩. வியோமம்	௧௧. சுயம்பூ
௪. வகி	௧௨. அத்துவா
௫. தன்வம்	௧௩. புட்கரம்
௬. அந்தரிட்சம்	௧௪. சகரம்
௭. ஆகாசம்	௧௫. சமுத்திரம்
௮. ஆபம்	௧௬. அத்துவரம்.

இந்தப் பதினாறும் ஆகாசத்திற்குச் சொல்லப்பட்ட பெயர்கள். இவற்றுள்ளே அம்பரம், வியோமம், புட்கரம் என்னும் மூன்று சொற்களும் பிங்கலநிகண்டிலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

பொன்.

௧. ஏமம்	௬. பேசம்	௧௧. பருமம்
௨. சந்திரம்	௭. கிருசநம்	௧௨. அமிர்தம்
௩. உருக்குமம்	௮. உலோகம்	௧௩. மருத்து
௪. அரியம்	௯. கநகம்	௧௪. தத்திரம்
௫. இரணியம்	௧௦. காஞ்சநம்	௧௫. சாதரூபம்.

இந்தப் பதினைந்தும் பொன்னுக்குச் சொல்லப்பட்ட நாமதேயங்கள். இவற்றுள்ளே ஏமம், சந்திரம், இரணியம், கநகம், காஞ்சநம், சாதரூபம் என்னும் ஆறு சொற்களுஞ் சூடாமணி நிகண்டிலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன.

திக்கு.

௧. ஆதை	௪. ஆட்டை	௭. ககுபம்
௨. ஆசை	௫. காட்டை	௮. அரிதம்.
௩. உபரை	௬. வியோமம்	

இந்த எட்டும் திக்கிற்குச் சொல்லப்பட்ட நாமதேயங்கள். ஆசை, காட்டை, ககுபம், அரிதம் என்னும் நான்கு சொற்களுஞ் சூடாமணிநிகண்டினுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன.

பகல்.

க.	வத்தோசு	எ.	கருமம்
உ.	தியௌ	அ.	கிருணம்
ங.	பானு	கூ.	திநம்
ச.	வாசரம்	க0.	திவா
ரு.	சுவசராலி	கக.	திவேதிவே
சு.	கிரஞ்சம்	கஉ.	தியவித்தியவி.

இந்தப் பன்னிரண்டும் பகலுக்குச்சொல்லப்பட்ட நாமதேயங்கள். வாசரம், திநம், திவா என்னுஞ்சொற்கள் தமிழ்மொழியிலும் வழங்கப்பட்டிருக்கின்றன.

வாக்கு.

க.	சுலோகம்	கங.	வாணிசி	உரு.	வக்கிநு
உ.	தாரை	கச.	வாணம்	உசு.	உபத்தி
ங.	இளை	கரு.	பவி	உஎ.	மாயு
ச.	கௌ	கசு.	பாரதி	உஅ.	காகுத்து
ரு.	கௌரி	கஎ.	தமனி	உகூ.	சிகுவை
சு.	காந்தருவி	கஅ.	நாளி	ங0.	கோடம்
எ.	கபிரை	ககூ.	மேலை	ஙக.	சுவரம்
அ.	கம்பிரை	உ0.	மேளி	ஙஉ.	சப்தம்
கூ.	மந்திரை	உக.	சூரியை	ஙங.	சுவநம்
க0.	மந்திராசனி	உஉ.	சரசுவதி	ஙச.	இருக்கு
கக.	வாசி	உங.	நிவித்து	ஙரு.	சீ
கஉ.	வாணி	உச.	சுவாகை	ஙசு.	காதை
				ஙஎ.	மகி.

என்னும் இவைகளும் பிறவும் வாக்கிற்குச் சொல்லப்பட்ட நாமதேயங்கள்.

யாகம்.

க.	யஞ்ஞம்	சு.	நாரியம்	கக.	மகம்
உ.	வேநம்	எ.	சவநம்	கஉ.	விட்டுணு
௩.	அத்துவரம்	அ.	ஔத்திரை	க௩.	இந்து
௪.	மேதம்	கூ.	இட்டி	க௪.	பிரசாபதி
௫.	வித்தம்	க0.	தேவதாதை	க௫.	கர்மம்.

இந்தப் பதினைந்தும் யாகத்திற்குச் சொல்லப்பட்ட நாமதேயங்களாகும்.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்
குரோதிஹூ வைகாசிமீ

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை.

உ

சிவமயம்.

இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்.

(உ௫-ம் பக்கத்தொடர்ச்சி.)

நீர்விளையாட்டுப்படலம்.

குண்டலந் திருவில் வீசக் குலமணி யார மின்ன
விண்டொடர் வரையின் வைகு மென்மயிற் கணங்கள் போல
வண்டளர் கோதை மாதர் மைந்தர்தம் வயிரத் திண்டோட்
டண்டுக டழுவு மாசை புனற்கரை சார்கின் றாரும்.

என்னும் கூ-ம் செய்யுளில், 'தண்டுக டழுவு மாசை புனற்கரை சார்கின்றாரும்' என்பது 'தண்டுக டழுவு மாசை யாற்கரை சார்கிலாரும்' எனக்காணப்படுகின்றது. வரையின்வைகும் மயிற்கணங்கள் போல (நீரின்கண்ணே தம்மைத்தாங்கி நிற்கும்) நாயகர்களுடைய புயங்களைத்தழுவிக்கொண்டிருக்கு மாசையாற் கரையை அடைகிலாரும் எனப்பொருடருதலின் 'தண்டுக டழுவு மாசை யாற்கரை சார்கிலாரும்' என்பதே பொருத்தமுடைத்து. சுகரசாரின் தழுவுதல் நீங்குமாதலின் 'கரைசார்கின்றாரும்' என்பது பொருத்தமின்றென்க. வரையின் வைகு மயிற்கணங்கள்போலத் திண்டோட்டண்டுகள் தழுவு மாசையால் எனக்கூட்டி முடிக்க.

உண்டாட்டுப்படலம்.

வெண்ணிற நறைநிறை வெள்ள மென்னவும்
பண்ணிறஞ் செறிந்திடை பரந்த தென்னவு
மூண்ணிறை காமமிக் கொழுகிற் றென்னவுந்
தண்ணிறை நெடுநிலாத் தழைத்த தெங்குமே.

என்னும் ௯-ம்செய்யுளில், 'பண்ணிறஞ் செறிந்திடை பரந்ததென்னவும்' என்பது 'பண்ணிறம் பொலிந்தபால் பரந்த தென்னவும்' எனக் காணப்படுகின்றது. கட்புலப்படும் பொருளன்றாகிய பண்ணினும், கட்புலப்படும் பொருளாகிய பாலை உவமை கூறுதல் சிறப்பாதலின், 'பண்ணிறம் பொலிந்தபால் பரந்த தென்னவும்' என்பதே பொருத்த முடைத்து.

௪௰.

தயங்குதா ரகைபுரை தரள நீழலும்
இயங்குதார் மிடைந்தகா ரெழினிச் சூழலும்
கயங்கள்போன் றொளிர்பளிங் கடுத்த கானமும்
வயங்குபூம் பந்தரு மகளி ரெய்தினர்.

என்னும் ௩-ம் செய்யுளில், 'தரளநீழலும்' என்பது 'தரளப்பந்தரும்' எனவும், 'இயங்குதார் மிடைந்தகா ரெழினிச் சூழலும்' என்பது, 'இயங்குகான் மிடைந்ததா ழெழினிச் சூழலும்' எனவும் காணப்படுகின்றன. முன்னையவற்றினும் பின்னைய பொருள்கொள்ளுமிடத்துச் சிறப்புடையனவாதல் காண்க. 'காரெழினி' என்பது மேகத்தை யொத்ததிரைகளென்று பொருள்கொள்ளுமிடத்துச் சிறிதும்பொருந்தாமைகாண்க.

௪௰.

விடனுக்கு நெடிய நோக்கி னமுதொக்கு மின்சொ லார்த
மடனுக்கு மடனு முண்டோ வாணுத லொருத்தி காணத்
தடனுக்கு நிழலைப் பொன்செய் தண்ணறுந் தேறல் வள்ளத்
துடனுக்க வவந்து நீயே யுண்ணுதி தோழி யென்றாள்.

என்னும் ௧௦-ம்செய்யுளில், 'வாணுத லொருத்தி காணத், தடனுக்கு நிழலைப் பொன்செய் தண்ணறுந் தேறல் வள்ளத், துடனுக்க வவந்து நீயு முண்ணுதி தோழி யென்றாள்' என்பது 'வாணுத லொருத்திதான்றன், சடமொக்கு நிழலைக் கண்டே தண்ணறுந் தேறல் வள்ளத், துடனுக்க வந்தாய் நீயு முண்ணுதி தோழி யென்றாள்' எனக் காணப்படுகின்றது. 'தடனுக்குநிழல்' என்பதிற் பொருள்பொருந்தாமையின் 'சடமொக்கு நிழல்' என்பதே பொருத்தமுடைத்து. சடம் -

தேகம். 'காண' என்பதும் பொருத்தமின்றாதல் காண்க. 'உவந்து' என்பதிலும் 'வந்தாய்' என்பதும் சிறப்பாதல்காண்க. வள்ளத்துக் கண்டு எனமுடிக்க.

௳ஷ

கனைகடற் கள்வனாற் கலக்க முற்றதை
அனகனுக் கறிவியென் றறியப் போக்குமோர்
இனமணிக் கலையினை டோழி நீயுமென்
மனமெனத் தாழ்தியோ வருதி யோவென்றான்.

என்னும் உ௰-ம் செய்யுளில், 'கனைகடற்கள்வனால்' என்பது 'கனைக முற்காமனால்' எனக்காணப்படுகின்றது. காமனே கலக்கமுறுவித்தற் குரியவனாதலின் 'கனைகடற்கள்வனால்' என்பதிலும் 'கனைகழற்காம னால்' என்பதே சிறப்புடைத்து.

௳ஷ

செற்றமுன் புரிந்ததோர் செம்மல் வெம்மையாற்
பற்றறு மல்குலிற் பரந்த மேகலை
அற்றுகு முத்தின்முன் னவனி சேர்ந்தன
பொற்றொடி யொருத்திகண் பொருத முத்தமே.

என்னும் கூ௰-ம்செய்யுளில், 'செற்றமுன் புரிந்ததோர் செம்மல்' என்பது 'செற்றன ளேகவோர் செம்மல்' எனக்காணப்படுகின்றது. வெறுத்தவளாய்ச் செல்லும்பொழுதே செம்மல் பற்ற அற்று எனப் பொருள்தந்து இயைந்துநிற்றலின் 'செற்றனளேக' என்பதே பொரு த்தமுடைத்து. வாளா பற்ற அறுதல் கூடாதென்க.

௳ஷ

துனிவரு நலத்தொடு சோர்கின் றாளொரு
குனிவரு நுதலிக்குக் கொழுந னின்றியே
தனிவரு தோழியுந் தாயை யொத்தன
ளினிவரு தென்றலு மிரவு மென்னவே.

என்னும் ௫௰-ம் செய்யுளில், 'தனிவரு தோழியுந் தாயை யொத்த னள்' என்பது 'தனிவருந் தோழியுந் தானு மொத்தனள்' எனக் காணப்படுகின்றது. நுதலிக்கு தோழியும் தென்றலும் இரவுமென்னத் தானுமொத்தனள் எனப் பொருள்கொள்ளுமிடத்து மிகவுஞ் சிற ந்து காட்டலின் 'தானுமொத்தனள்' என்பதே சிறப்புடைத்தாதல் காண்க. தோழியும் என்பதில் உம்மை ஆக்கம். தானும் என்பதிலும் மை எச்சம். தாயைக் கூறுதல் ஈண்டுச் சிறப்பின்று.

எதிர்கோட்படலம்.

அடாநெறி யறைதல் செல்லா வருமறை யறைந்த நீதி
விடாநெறிப் புலமைச் செங்கோல் வெண்குடை வேந்தர் வேந்தன்
படாமுக முகிலிற் றேன்றும் பருவமொத் தருவி பல்குங்
கடாநிறை யாறுபாயுங் கடலொடு கங்கை சேர்ந்தான்.

என்னும் க-ம்செய்யுளில், 'படாமுக முகிலிற் றேன்றும் பருவமொத் தருவி பல்குங், கடாநிறை யாறுபாயுங் கடலொடு கங்கை சேர்ந்தான்' என்பது 'படாமுகப் பணைக்கை நால்வாய்ப் பாகடுஞ் சீற்றத் துப் பிற், கடாமதயானைச் சேனைக் கடலொடுங் கங்கை சேர்ந்தான்' எனக்காணப்படுகின்றது. முன்னையதிற் பொருட்பொருத்தஞ் சிறிது மின்றாதலின், பின்னையதே பொருத்த முடைத்து.

இவைகளேயன்றி இன்னும், எழுச்சிப்படலம் எஎ-ம்செய்யுளில் *'ஆர்த்தது விசும்பை முட்டி மீண்டகன் றிசைக ளெங்கும்' என்பது 'ஆர்த்தது விசும்பை முட்டி யகன்பெருந் திசைக ளெங்கும்' எனவும், 'சீர்த்தது' என்பது 'நிர்த்தது' எனவும், வரைக்காட்சிப்படலம் கஉ-ம் செய்யுளில் 'பிடிப்புக்காவிடை' என்பது 'பிடிபுக்காயிடை' எனவும் ஷை உச-ம்செய்யுளில் 'அழலோடும்' என்பது 'எழிலோடும்' எனவும், ஷை சச-ம் செய்யுளில் 'கண்ணுளராடற்றேறும்' என்பது 'கண்ணுளராடலோதை' எனவும், உண்டாட்டுப்படலம் கூ-ம் செய்யுளில் *'சேக்கையின்பச்செரு' என்பது 'சேக்கையின் விளைசெரு' எனவும், ஷை உஉ-ம் செய்யுளில் 'கடித்த' என்பது 'கடுத்த' எனவும், ஷை சஅ-ம் செய்யுளில் *'சொல்லுவானுறுமுற நாணுஞ் சொல்லலள்' என்பது 'சொல்லுதற்கிசைந்துபி ணைவிச் சொல்லிடாள்' எனவும், எதிர்கோட்படலம் கஉ-ம்செய்யுளில் 'முரட்சனகன்' என்பது 'முடிச்சனகன்' எனவுங் காணப்படுகின்றன. இவற்றுள், முன்னையவற்றினும் பின்னையவே இசைப்பொருத்தமும், சொற்பொருத்தமும், பொருட்பொருத்தமுமுடையவாதல் காண்க.

(இன்னும் வரும்.)

சி. கணேசையர்.

---

* இக்குறிகள் இடப்பட்டன இசைப்பொருத்தமில்லாதன.

எனவே தளைவழுவின்றி இருபத்தேழ் சீரான்வந்த மூந்நூற்றிருபத்து நான்கடியும் ஆசிரியத்திற்கு உரித்து எ-று. முன்னர்ப் பொதுவாகவோதி யதனை யீண்டுப்பகுத்தார். உ-ம். 'பேர்ந்து பேர்ந்து சென்று சென்று' என்பது. இவ்வாறு ஓராசிரியத்துக்கண் ஐந்தடியுங் கூறினமுறையே நிற்க வேண்டுமெனவோதினமையின் எவ்வாற்றானும் அவ்வைந்தும் ஆசிரியத்துக் கண் வருதற்குரியவென்பதே ஆசிரியர்க்குக் கருத்தாயிற்று. இக்கருத்தா னன்றே 'பேர்ந்து சென்று' என்ற உதாரணத்து ஈரடிக்கூட்டத்துத்தளை வழுப்பலவும் வருவதாயிற்று. (ருஉ)

ருங. விராஅய் வரினு மொரூஉநிலை யிலவே.

இஃது எய்தியது இகந்துபடாமைக்காத்தது, தளைவழுவியதியாது மாகாதோவென்று கருதி யதனைச் சீர்வகையடியாமென்றலின்.

இ-ள். ஆசிரியம் இருபத்துமூன்றுதளையிற் சில வழுவினும் முற்கூறிய பதினேழ் நிலத்தினொன்று குறைந்து பதினறுநிலத்தினீங்கிவாரா. எ-று

உம்மை இறந்ததுதழீஇயிற்றாகலான் ஓரடிக்கட்டளை வழுப்படவரினும் அவை கட்டளையாகாமற் சீர்வகையடியாய் ஐந்தெழுத்துமுதல் இருபதெழுத் தளவும் வரும் எ-று. அது சான்றோர் செய்யுளுள் வந்துழிக்காண்க. (ருங)

ருச. தன்சீர் வகையினுந் தளைநிலை வகையினு
மின்சீர் வகையி னைந்தடிக்கு முரிய.

இஃது எய்தாததெய்துவித்தது; உரிச்சீராற் சீர்வகையடியும் உரிச்சீ ராற் றளைவகையடியும் உள, அவையும் முற்கூறிய ஐவகைநிலனும் பெறுமெ ன்றலின். தன்சீரெனவே அதிகாரத்தான் ஆசிரியவுரிச்சீராயிற்று.

இ-ள். தன்சீர்வகையினும் எ-து ஆசிரியவுரிச்சீரின் கூற்றானும். தளை நிலைவகையினும் எ-து அச்சீரானாய தளைநிலைக்கூற்றானும். இன்:.....முரிய எ-து இன்சீர்ப்பகுதியோடே அவ்வாசிரியம் முற்கூறிய ஐவகையடியான்வந் து பதினேழ்நிலத்தினிகந்து வாரா. எ-று.

தன்சீரென்னுது வகையென்றது முன்னிரையீற்ற விரண்டினையுந்தளை கொள்ளுமென்றற்கும், எனை நான்குரிச்சீருந் தளைகொள்ளாவென்றற்கும். தளைநிலைவகையென்றது உரிச்சீராற் றளைவருங்கால் ஓரடியின் இரண்டுவரி ன் ஓசையுண்ணுதென்றற்கு. இன்சீர்வகையின் என்றது ஆசிரியவுரிச்சீர் நா ன்குநிரலே நின்றுழித் தூங்கலோசை பிறத்தலின் இயற்சீர்கள் ஒன்றிடை யிட்டுவரவேண்டும் சீர்வகைக்கென்பதூஉம், அதற்கும் இன்னோசைமிக

வுமின்றென்பதூஉம், முன்னிரையீற்ற விரண்டும் இடையில் வாராது அடி முதற்கண்ணே வந்து இயற்சீரோடு தட்டு இன்னோசைத்தாமென்பதூஉம், அசை யோரடிக்கிரண்டுவந்து தட்டாலும் இன்னோசைத்தாமென்பதூஉம் அறிவித்தற்கு.

உ-ம். 'ஒங்குகோட்டுத் தொடுத்த பாம்புபுரை யருவி, நிவந்துதோன்று களிற்றி னிலங்குகோடு புரைய' இவை இயற்சீரொன்றிடையிட்டு உரிச்சீரான் வந்தன. 'பாம்புமணி யுமிழும் பானு ளீங்குவரல்' இஃது இரண்டிடையிட்டது. 'ஒங்குமலைப் பெருவிற் பாம்புநாண் கொளீஇ' (புறம்-டுரு) 'உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை' (புறம்-ந) இவை தளைநிலைவகையான் வருதலாற் கட்டளையாய் இன்னோசைபெற்றன.

இனி, ஐந்தெழுத்துமுதலாத் தன்சீர்வகை வருதலும் தளைவகை யேழெழுத்துமுதலாக வருதலும் உரையிற்கொள்க. அவை 'ஒங்குகோட்டு மீது பாய்ந்து பாய்ந்து, முசுக்கலை யாடு நாடற், குரைப்பதை யெவன்கொனந் தோளே தோழீ' இஃது ஐந்தெழுத்தாற் றன்சீரடிவந்தது. 'ஆடுகொடி நுடங்கு காடு போந்து, விளங்கிழை நகர்வயிற் சேர்ந்தன, முழங்குக வானந் தழங்குகுரல் சிறந்தே' இஃது எழெழுத்தாற் றளைநிலையடி வந்தது. வகையென்றதனன் இயற்சீர்ப்பாற் படுத்திய அசைச்சீர் இன்சீராய்த் தன்சீர்வகையினுந் தளைநிலைவகையினும் வரும். இஃது இருவகையடிக்கு மிலக்கணங்கூறிற்று. (௫௪)

௫௫. தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா.

*இது முன்ஆசிரியத்திற்குச் சீர்வகையுந் தளைவகையுங் கூறியமுறையே வெண்பாவிற்கும் அவ்விரண்டுங் கூறுகின்றது.

இ-ள். வெண்சீர்சிறப்ப வெண்சீர்வந்தொன்றிய வெண்டளை கட்டளை வெண்பாவிற்கு வேண்டா. எ-று.

---

* 'இத்துணையும் அடியும் அடிக்குரிய எழுத்தும் ஒதினர்; இவ்வடிக்கண் ஒசைவேறுபாடுணர்த்துந் தளையிலக்கணம் உணர்த்துவார் அத்தளைக்கண் வருவதோர் மரபுணர்.........ற்று. தத்தஞ்சீர்நிலைவகையானுந் தளைநிலைவகையானும் இனியவோசை வேறுபாட்டினையுடைய ஐந்தடிக்குமுரிய தன்சீருள்வழித் தளைகள் வேறுபாடுகோடல்வேண்டா எ-று. எனவே சீர்தானோசையைத் தருமென்றவாறும். உரியதன்சீரென்று ஐந்தடியினும் எற்றவழிநிலைபெறூஉந் தன்சீரென்றுகொள்க; அஃதாவது குறளடியாக ஐந்தெழுத்தினும் ஆறெழுத்தினும் ஒரசைச்சீரும் வருதலன்றி மூவசைச்சீரான் வாராமை பிறவாசிரியர்கொண்ட நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்

எனவே வெண்சீர் நிற்ப வெண்சீர்வந்தொன்றிய வெண்டளை கட்டளைக்கலிக்கு ஈரடிக்கூட்டத்துத் தொடைகொள்வழி வேண்டும் என்றுகொள்க. இது தொடைகொள்வழிக்காண்க. தன்சீரென்றது வெண்சீரை; உள்வழியென்றது அவ்வெண்சீரே வருஞ்சீராயவழி யென்றவாறு; எனவே வெண்சீர்நிற்ப இயற்சீர்வந்தொன்றிய வெண்டளை வேண்டும் என்றவாறாயிற்று: இது †நுதலியதறிதற்பாற்படும். 'வெண்சீரொன்றின் வெண்டளை கொளாஅல்' 'வெண்சீ ரொன்றினும் வெண்டளை யாகு, மின்சீர் விரவிய காலை யான' என்றார் காக்கைபாடினியார்: இது தளைகொள்ளாமைக்குக் காரணம் "அளவுஞ் சிந்தும்" (செய்-ருஅ) என்னுஞ்சூத்திரத்துட் கூறுதும். (ருரு)

ருசா. சீரியை மருங்கி னோரசை யொப்பி
ஆசிரியத் தளையென் றறியல் வேண்டும்.

இது கட்டளையடிக்கட் பத்தியற்சீருந் தட்குமாறு கூறுகின்றது.

இ-ள். இயற்சீர்பத்தும் பிறசீரோ டியையுங்காற் றத்தமீற்றசை வருஞ்சீரின் முதலசையோடொன்றின் அஃது ஆசிரியவடிக்குத் தட்கு முறைமை யென்றறியல்வேண்டும். எ-று.

தளை, இயற்சீர்வெண்டளை, வெண்சீர்வெண்டளை, கலித்தளை, ஒன்றியவஞ்சித்தளை, ஒன்றாதவஞ்சித்தளை என ஏழுவகையினும் வஞ்சித்தளை நிலைமொழி வஞ்சியுரிச்சீராய் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றினது ஒன்றிய வஞ்சித்தளையெனவும் ஒன்றாதது ஒன்றாதவஞ்சித்தளையெனவும் வழங்குபவாகலின் அவ்விருபாற்றானும் தளையாற் பயனின்றென, நிலைமொழியாகிய வஞ்சியுரிச்சீர்தானே ஓசையுணர்த்துதலின் வஞ்சித்தளைகோடல் வேண்டாராயினர். இனி வெண்சீர்வெண்டளையும் வெண்சீர்நிற்ப வருஞ்சீர்வெள்ளையும் வெண்சீராதல் இயற்சீராதல்வந்து வெண்டளையாக வேண்டுதலின் நிலைமொழியாகிய வெண்சீரை 'வெண்சீரீற்றசை நிரையசையியற்றே' (செய்-உக) என ஓதுதலின் இதனை நிரையீற்றியற்சீராக்கினால் வருஞ்சீர் நேரசை முதலியற்சீரானதும் இயற்சீர் வெண்டளையாம். அவ்வாறன்றி வருமொழியும் வெண்சீராயின் தன்சீருள்வழித்தளைவகைவேண்டா என்பதனாலடங்கும். அதனானேயிருபாற்றானும் வெண்சீர்வெண்டளை கொள்ளாராயினர். இனி ஒழிந்த நான்குதளையுங்கூறவேண்டாவாம் இயற்சீரான் வருதலின் எனின்; அதன்கண்ணே இயற்சீர்வெண்டளை கூறவேண்டுதலின் ஆசிரியத்தளையுங் கூறவேண்டுமென்க' என்பது உரையாசிரியநரை.

† உத்தி. (மரபியல்-கக0)

ஒப்பினெனவே ஒவ்வாதது இயற்சீர்வெண்டளை யென்றெதிர்மறுத் துக்கொள்ளப்படும். உ-ம். 'அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி' (பெரும்பாண்) என்றவழி நேரும் நிரையும் ஒன்றி நேரொன்றாசிரியத்தளை நிரையொன்றாசிரியத்தளையாயிற்று. 'கற்க கசடறக் கற்பவை கற்றபி-னிற்க வதற்குத் தக' (திருக்குறள்-ருகக) என நேரும் நிரையும் ஒன்றாது இயற்சீர் வெண்டளையாயிற்று. 'நீத்துநீர்ப் பரப்பி னிவந்துசென் மான்றேர்' என்புழி நீத்துநீர் என்பது நேர்புநேர் பாதிரிபோல நின்று பரப்பின் என்பதனோடு நிரையொன்றாசிரியத்தளையாயிற்று. 'சேற்றுக்கானிலம்' இது நேர்புநேர் பாதிரிபோல நின்று ஒன்றாது இயற்சீர் வெண்டளையாயிற்று. இனிக் 'காரேறுபொருத சண்ணகன்செறுவின்' என்புழிக் காரேறு என்னும் நேர் நேர்பு பாதிரிபோல நின்று பொருத என்பதனோடு நிரையொன்றாசிரியத் தளையாயிற்று. 'வானூடுபோய' என நேர் நேர்பு ஒன்றாது இயற்சீர் வெண்டளையாயிற்று. 'வானிரைத்து மணந்து' என நேர் நிரைபு பாதிரிபோல நின்று மணந்து என்பதனோடு நிரையொன்றாசிரியத்தளையாயிற்று. 'யானிருந்துதூங்கும்' என நேர்நிரைபு ஒன்றாது இயற்சீர்வெண்டளையாயிற்று. 'வெயிலாடுமுசுவின்' என நிரைநேர்பு கணவிரிபோல நின்று முசு என்பதனோடு நிரையொன்றாசிரியத்தளையாயிற்று. 'வரையாடுவன்பறழ்' என நிரை நேர்பு ஒன்றாமையின் இயற்சீர் வெண்டளையாயிற்று. 'கடலுடுத்து விசும்புசூடி' என நிரைநிரைபு ஒன்றி நிரையொன்றாசிரியத்தளையாயிற்று. 'சிலைவிலங்கு நீள்புருவம்' என நிரைநிரைபு ஒன்றாமையின் இயற்சீர் வெண்டளையாயிற்று; என உரியசைமயங்கிய இயற்சீராறும் ஒன்றியும் ஒன்றாதும் வந்தன. ஓரசைச் சீர்இரண்டும் இயற்சீருமாய்த் தட்குமாறு முற்கூறினாம். (ருசு)

ருஎ. குறளடி முதலா வளவடி காறு
முறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப.

இது வஞ்சியடி யுறழுமாறும் அது பெறுநிலனு முணர்த்திற்று.

இ-ள். நாலெழுத்து முதலாகப் பதினன்கெழுத்தளவும் உறழுநிலையில, வஞ்சியடிக்கு. எ-று.

முற்கூறிய அறுபது வஞ்சியுரிச்சீருள்ளும் இருபத்துநான்குசீர் ஒரோவொன்று இருநிலைமையவாகவும் இருபத்தெட்டுச்சீர் ஒரோவொன்று நான்கு நிலைமையவாகவும் எட்டுச்சீர் ஒரோவொன்று எட்டு நிலைமையவாகவும் கொள்ளப்படும். அங்ஙனம் கொள்ளவே இருநூற்றிருபத்துநான்காம்.

அவற்றுள் இருநிலைமைப்படும் இருபத்துநான்கும் நேர்நிரைட்டும், நிரையீறெட்டும், நேர்பீறு நான்கும், நிரைபீறு நான்குமாம். அவை மாபோகுவாய், மாவழங்குவாய், புலிபோகுவாய், புலிவழங்குவாய், பாம்புசேர்வாய், பாம்புவருவாய், களிறுசேர்வாய், களிறுவருவாய் எனவும் மாசேர்சுரம், மாவருசுரம், மாபோகுசுரம், மாவழங்குசுரம், புலிசேர்சுரம், புலிவருசுரம், புலிபோகுசுரம், புலிவழங்குசுரம் எனவும் மாசேர்காடு, மாவருகாடு, புலிசேர்காடு, புலிவருகாடு எனவும் மாசேர்கடறு, மாவருகடறு, புலிசேர்கடறு, புலிவருகடறு எனவும் வரும். மாபோகுவாய் என்றதற்கு மாமேவுவாய் எனமுற்றுகரங்கொடுத்து இருநிலைமையாக்குக. ஒழிந்தனவற்றுட் குற்றுகரங்கட்கு மிவ்வாறே முற்றுகரம் பெய்தொட்டுக. இவற்றுள் மாசேர்சுரத்திற்கு ஞாண் ஞாயிறு எனவும் மாவருசுரத்திற்கு மாவலியதெனவும் புலிசேர் சுரத்திற்கு வருஞாயிறு எனவும் புலிவருசுரத்திற்குத் திருவலியது எனவும் எழுத்துக்குறையுஞ்சொற்பெய்து இருநிலைமைசெய்க. இங்ஙனம் இருநிலைமையான் நாற்பத்தெட்டாயிற்று. இவற்றுள் வெழுத்துச்சீர் இரண்டாம்.

இனி நான்கு நிலைமைப்படும் சீரிருபத்தெட்டும் நேரீறுநான்கும், நிரையீறெட்டும், நேர்பீறெட்டும், நிரைபீறெட்டுமாம்; அவை பாம்புபோகுவாய், பாம்புவழங்குவாய், களிறுபோகுவாய், களிறுவழங்குவாய் எனவும் பாம்புசேர்சுரம், பாம்புவருசுரம், பாம்புபோகுசுரம், பாம்புவழங்குசுரம், களிறுசேர்சுரம், களிறுவருசுரம், களிறுபோகுசுரம், களிறுவழங்குசுரம் எனவும் மாபோகுகாடு, மாவழங்குகாடு, புலிபோகுகாடு, புலிவழங்குகாடு, பாம்புசேர்காடு, பாம்புவருகாடு, களிறுசேர்காடு, களிறுவருகாடு எனவும் மாபோகுகடறு, மாவழங்குகடறு, புலிபோகுகடறு, புலிவழங்குகடறு, பாம்புசேர்கடறு, பாம்புவருகடறு, களிறுசேர்கடறு, களிறுவருகடறு எனவும் இவற்றைப் பாம்புபோகுவாய், மின்னுப்போகுவாய், பாம்புமேவுவாய், மின்னுமன்னுவாய் என ஒன்று நான்காக வாய்பாடுபடுத் தெல்லாவற்றோடு மொட்டுக. இவ்விருபத்தெட்டனுட் பாம்புசேர்சுரத்திற்குப் பாம்புசேர்வது, மின்னுச்சேர்சுரத்திற்கு மின்னுச்சேர்வது எனவும் பாம்புவருசுரத்திற்குப் பாம்புவலியது, மின்னுவருசுரத்திற்கு மின்னுவலியது எனவும் களிறுசேர்சுரத்திற்கு ஒளிறுஞாயிறு, அரவுசேர்சுரத்திற்குப் பரவுஞாயிறு எனவும் களிறுவருசுரத்திற்குக் களிறுவலியது, அரவுவருசுரத்திற்கு அரவுவலியது எனவுங் கொள்க. இங்ஙனம் நான்குநிலைமைகொள்ளவே நூற்றிருபத்திரண்டாயிற்று. இவ்விருபத்தெட்டனுள் முற்றுகரம் பெய்தால் வெழுத்தாகு சீர் பதினாறும் எட்டெழுத்தாகுசீர் மூன்றுமாம்.

இனி எட்டுநிலைமைப்படுஞ் சீரெட்டும் நேர்பீறுநான்கும் நிரைபீறு நான்குமாம். அவை பாம்புபோகுகாடு, பாம்புவழங்குகாடு, களிறுபோகுகாடு, களிறுவழங்குகாடு எனவும் பாம்புபோகுகடறு, பாம்புவழங்குகடறு, களிறுபோகுகடறு, களிறுவழங்குகடறு எனவும் வரும். இவற்றுள் ஒன்றற்கு மூன்றுரியசை யுண்மையின் முதற்கணின்றவற்றை யுரியசை யிரண்டற்குந் தனித்தனி முற்றுகரம்பெய்து பின்னிரண்டற்கும் முற்றுகரம்பெய்து நான்கு நிலைமை யெய்துவித்துப் பின்னரீற்றினிரையுரியசையொன்றனையும் முற்றுகரமாக்கி யதனோடு முன்னர்நின்றவற்றை வேறுவேறு முற்றுகரம்பெய்து நான்குநிலைமை யெய்துவிக்க எட்டாயிற்று. இவற்றுள் எழெழுத்தாஞ் சீர் பதினைந்தும் எட்டெழுத்தாஞ் சீர் ஆறும் ஒன்பதெழுத்தாஞ் சீர் ஒன்றுமாம்; ஆக இருநூற்றிருபத்துநான்காயிற்று. "அறுபஃ தாக வகுத்த வஞ்சியுண், மூவெண் சீர்க ளிருநிலைமை யெய்தி, நாலேழ் சீராக நான்குநிலை யெய்தி, யிருநான் கிருசீ ரிருநான்கு நிலையெய்தி, யிருநூற் றிருபத்து நான்காய் விரியும்" "அவற்றுளொன் பதெழுத் தாஞ்சீ ரொன்று, மிருநான் கெழுத்தா குஞ்சீ ரொன்பது, மேழெழுத் தெய்துவ முப்பத்து மூன்று, மாகநாற் பத்து மூன்று மாக, நூற்றெண் பத்தொன் றடியுற ழும்மே"

இனி யடியுறழாத *நாற்பத்துமூன்று முறழுமாறு:—எட்டுநிலைமையெய்துவனவற்றில் அரவு விரவு குரவு என ஒன்பதெழுத்துச் சீரொன்று: நான்குநிலை யெய்துவனவற்றில் அரவுவிரவுசுரம், புலிவிரவுகுரவு, அரவுவருகுரவு என எட்டெழுத்துச்சீர்மூன்று:எட்டுநிலைமை யெய்துவனவற்றில் அரவு விரவு குரவு, மின்னுவிரவுகுரவு, அரவுமேவுகுரவு, அரவுவிரவுகடறு, அரவு வழங்குகுரவு, களிறுவிரவுகுரவு என எட்டெழுத்துச் சீராறு:ஆக எட்டெழுத்துச் சீரொன்பது; இரண்டுநிலைமை யெய்துவனவற்றில் புலிவிரவுசுரம், புலிவருகுரவு என எழெழுத்துச்சீ ரிரண்டு: நான்குநிலைமை யெய்துவனவற்றில் அரவு விரவுவாய், மின்னுவிரவுசுரம், அரவுவருசுரம், அரவுமேவுசுரம், அரவு வழங்குசுரம், களிறுவிரவுசுரம், புலிவிரவுகாவு, அரவுவருகாவு, மாவிரவுகுரவு, புலிமேவுகுரவு, புலிவிரவுகடறு, புலிவழங்குகுரவு, மின்னுவருகுரவு, அரவு மேவுகுரவு, அரவுவருகடறு, களிறுவருகுரவு என எழெழுத்துச்சீர் பதினாறு: எட்டுநிலைமை யெய்துவனவற்றில் மின்னுவிரவுகாவு, அரவுமேவுகாவு, அரவு விரவுகாடு, அரவுவழங்குகாவு, களிறுவிரவுகாவு, மின்னுமேவுகாவு, மின்னு விரவுகடறு, மின்னுவழங்குகுரவு, பாம்புவிரவுகுரவு, அரவுமேவுகடறு, அரவுபோகுகுரவு, களிறுமேவுகுரவு, அரவுவழங்குகடறு, களிறுவிரவுகடறு,

---

* ஒன்பதெழுத்துச்சீர்-௧. எட்டெழுத்துச்சீர்-௯. எழெழுத்துச்சீர்-௩௩ ஆக-௪௩.

களிறுவழங்குகுரவு என எழெழுத்துச்சீர் பதினைந்து: ஆக எழெழுத்துச்சீர் முப்பத்துமூன்று.

இனி ஒழிந்த நூற்றிரண்பத்தொன்றும் அடியுறழுமாறு:—"மூவெழுத் துச்சீ ராறுதி யொன்பானு, நாலெழுத் துச்சீ ரேழாதி பத்து, மையெழுத் துச்சீ ரெட்டாதி பதினொன்று, மாறெழுத் துச்சீ ரொன்பது முதலீ, ராறு முயருங் காலை மேல்வருஞ், சீர்களு மூன்று நான்கு மைந்து, மாறு மெழுத் தா ளுகுஞ் சீர்வந், தாங்கவ் வெண்களை யுறழ்ந்த வடித்தொகை, யெழுநூற் றிருபத்து நான்கென மொழிப." இங்ஙனங் கூறியவாற்றான் இயற்சீர் கட்டளையடிக்குறழாவென்றுணர்க. உ-ம். 'கால்காய்ந்தது காம்புநீடி' என்பது ஆறெழுத்தடி. 'நல்கூர்ந்தது வில்லோர்சுரம்' என்பது எழெழுத்தடி. 'வான்பெய்தது மண்குளிர்ப்புற' என்பது எட்டெழுத்தடி. 'தேன்பெய்த து செழுநகர்தொறும்' என்பது ஒன்பதெழுத்தடி: இவை மூவெழுத்துச் சீர் மாசேர்காடு நான்கடியும் வந்தவாறு; ஒழிந்தனவுமன்ன. 'மண்மாய்ந் தென வுள்வீழ்ந்தது' என்பது எழெழுத்தடி. 'விண்மாய்ந்தென மேற்றொ டுத்தது' என்பது எட்டெழுத்தடி. 'காடோங்கிய கல்கெழுசுரம்' என்பது ஒன்பதெழுத்தடி. 'கோடோங்கிய குறும்பொறைமருங்கு' என்பது பத் தெழுத்தடி. இவைநான்கடி நாலெழுத்து மாசேர்சுரம் நின்றுறழ்ந்தவடி: ஒழிந்தனவும் அன்ன. 'மழைபெய்தென வான்வெள்ளென்று' என்பது எட்டெழுத்தடி. 'தழைபச்சென்த் தண்ணென்காவு' என்பது ஒன்பதெ ழுத்தடி. 'கமழ்பூந்துணர் கள்ளவிழ்தொறும்' என்பது பத்தெழுத்தடி. 'இ மிழ்தூங்கிசை யினச்சுரும்புவர' என்பது பதினோரெழுத்தடி. இவை நான்கும் ஐயெழுத்துப்புலிசேர்சுரம் நின்றுறழ்ந்தவடி. இனி ஆறெழுத்துச்சீர் வரு மாறு. 'அமைவிடுநொடி யஞ்சியோர்த்து' என்பது ஒன்பதெழுத்தடி. 'கனை குரலன கானத்தளகு' என்பது பத்தெழுத்தடி. 'தினைப்புனத்தித ணய ற்பிரியாது' என்பது பதினோரெழுத்தடி. 'மனைக்குறமகள் கடைப்புறந்த ரும்' என்பது பன்னீரெழுத்தடி. இவ்வாறே யொழிந்தனவு முறழ்ந்துகொ ள்க. வஞ்சி மூன்றுபாவும்போலச் சிறப்பின்மையின் ஈண்டுப்போதந்து கூறினர். ஒழிந்த முச்சீரடி சிறுவரவிற்றாகலின் அதற்குக் கட்டளையடிக்குக் கூறிற்றிலர். (ரு௭)

ரு௮. அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய
தளைவகை யொன்றாத் தன்மை யான.

இஃது ஆசிரியவடிக்கும் அதனடைத்தாகிய வஞ்சியடிக்கும் உரிய நில ங்கூறி வெண்பாவிற்குரிய நிலங்கூறுகின்றது.

இ-ள். அளவடியைந்தும் சிந்தடிமூன்றும் என்ற எட்டுநிலனும் வெண்பாவிற்குரிய, தளைவகையொன்றாத தன்மையான். எ-று.

'ஒன்றாத்தன்மையான்' என்றதனானே ஒன்றியவாகாவாயிற்று. அஃது இயற்சீரொன்றிய வாசிரியத்தளை வாராமையும் வெண்சீர்நிற்ப வெண்சீர்வந் தொன்றிய வெண்டளை செப்பலோசைக்குந் துள்ளலோசைக்கு மொப்பவுரியவாகலின் அதுவாராவென்றலும் கூறிற்றாம். ஒன்றாதென்றதனானே கலித்தளை யொன்றுமென்று பொருடருமேனும் அஃதிலக்கணமன்மையுணர்க. எனவே முற்கூறிய இயற்சீர்வெண்டளையையும் வெண்சீரியற்சீரோடு தட்ட வெண்சீர்வெண்டளையையும் விலக்காமையுணர்க. உ-ம். 'நின்று நினைந்து நெடிது பெயர்ந்து' என்பது எழெழுத்தடியா யிசைநிலை நிறையநின்ற அசைச்சீரியற்சீராய்த்தட்டது. [,].'கற்றவரைச் சேர்வர் கலைநிறையுங் காட்சியார், பெற்றன மென்றே பெயர்ந்து' இது பதினொன்கெழுத்தடி. 'அறிவறிந்தார்த் தேற்றியக்கா லஞ்சுவ தில்லை' இது பதினொன்கெழுத்தென்னுஞ் சீர்வகையொன்றலிற் கட்டளையாகா. இதனும்பர் நெடிலடியான் வந்தன சீர்வகையடியாம். 'வானவரு நான்முகனும் வாசவனு மாமுனிவ, ரானவருங் காணு வரன்' எனப்பதினொறெழுத்தான்வந்த வெண்சீரொன்றிய சீர்வகையடி. 'வானவரு நான்முகனும் வாசவனுங் காணாரே' என்பது துள்ளலோசைக்குணர்க; இவ்வெண்பாவை எந்திசைச்செப்பலெனப் பின்னுள்ளோர் கூறுவர். அவர் கூறும் ஒழுகிசையுந் தூங்கிசையும் பெரும்பான்மை பதினொன்கெழுத்தினிகந்து வாராவென்றுணர்க. முச்சீரான்வரும் ஈற்றடியு முதலிய மூன்றுநிலத்தி னிகந்து வாராமை யுரையிற்கொள்க. 'மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய், மாவருவாய் தேமா வரகு' இது 'மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாற்றினரோ'. என இரண்டற்கும் ஒப்ப நின்றவாறுங் காண்க. இதனானே மேலீரடிக்கூட்டத்துத் தொடைகொள்ளுங்காற் கலிக்கு வெண்சீரோடு தட்ட வெண்சீர்வெண்டளை கொள்ளுமாறுணர்க. (ருஅ)

ருகூ. அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
இருநெடி லடியுங் கலியிற் குரிய.

இது முறையானே கலிக்குரிய நிலங்கூறுகின்றது.

இ-ள். இருநெடிலடியும் எ-து நெடிலடியுங் கழிநெடிலடியும். அளவடி .... தோன்றி எ-து அளவடிக்குரித்தென ஐவகையடியின் மிகுதியாகிய பதின்மூன்றும் பதினான்குமாகிய எழுத்துக்களோடு தோற்றப்பட்டு. கலியிற்குரிய எ-து கலிப்பாவிற் குரியவாம். எ-று.

திருநீற்றுப்பத்திரி.

திருநீற்றுப்பத்திரியும் துளசிவகையைச் சார்ந்தது. துளசியின் குணங்களெல்லாம் இதற்குமுண்டு. இதன் இலைகள் பூஜைக்கு உபயோகமாகும். இதன் இலையை நல்ல துவையல் செய்யலாம். மற்றப்பதார்த்தங்களுக்கும் வாசனையுண்டாகக் கலக்கலாம். விதைகளைக் குளிர்ந்த தண்ணீரிற் போட்டு ஊறவைத்துக் குடித்தால் குளிர்ச்சியைத்தரும்.

தும்பைக்கீரை.

இது மழைக்காலத்தில் தானாகக் காடுகளிலுந் தோட்டங்களிலும் விளையும். இதன் வெள்ளைப்புஷ்பங்கள் பூஜைக்கும் மருந்துக்கும் உதவும். கீரை உஷ்ணகாரி; பத்தியத்துக்கு உதவும். இதன் இலையை நசுக்கி நாலைந்து துளிகள் மனிதருடைய மூக்கில்விட்டால் பாம்புகளின் விஷமும் நீங்குமென்பது சிலர் கருத்து.

சீமைக் கலலிக்கீரை.

இதைப் புஷ்பத்தோட்டங்களில் சாதாரணமாகப் பயிர்செய்வதுண்டு. இதன் புஷ்பங்கள் அழகாகவும், கீரை ருசியாகவும் இருக்கும்; இதன் விதைகளை நீக்கிய தோல்கள் துவையலுக்கு உதவும்.

கலலிக்கீரை.

இதில் பலவகைகளுண்டு. சிலவற்றிற்கு முள்ளுகளும், மஞ்சள் நிறமானபூவுமுண்டு. இலைகள் புளிக்கும். கீரையாக உபயோகப்படுத்தலாம்.

குறிஞ்சிக்கீரை.

இது தானாகவிளைந்து கொடிகளாகப் படரும். பச்சைப்புஷ்பங்களையுடையது. இதன் இலையை மற்றப்பதார்த்தங்களோடு போட்டுச் சமைக்கலாம்.

அம்மாம்பச்சரிசிக் கீரை.

இது சாதாரணமாகத் தோட்டநிலத்தில் தானாகவிளையும். இதன் கீரைக்கு வயிற்றுக்கடுப்பைக் கண்டிக்கும் குணமுண்டு.

சோயிகீரை.

இதைத் தோட்டங்களில் கஷ்டமில்லாமல் பயிர்செய்யலாம். அதிகத் தண்ணீர்வேண்டும். இலையை மற்றப்பதார்த்தங்களுடன் கலந்து சமைக்கலாம்.

மணலிக்கீரை.

இது தானாக விளைவது. பருப்பிற்போட்டுச் சமைக்கலாம்.

புதீனா.

இது அதிகதண்ணீரோடும் நிலத்தில் நிழலில் விளையும்படியான வாசனையுள்ளபயிர். இதன் காம்புகளைக் கிள்ளி ஈரமும் நிழலுமுள்ள இடத்தில் நட்டால் செழித்தோங்கும்; இது உஷ்ணகாரி. துவையல்செய்தால் அரோசகத்தையும், அசீரணத்தையும்போக்கும்.

முட்டகோஸ்.

இது ஒருகாலத்தில் ஐரோப்பாதேசத்தில் நதிக்கரையோரங்களில் கேவலம் கடுகுச் செடிகளைப்போல விளைந்துகொண்டிருந்த காட்டுத்தன்மையான பயிர். இது குளிர்நாட்டுப்பயிராக இருந்தாலும், மித உஷ்ணமுள்ள கீழ்நாடுகளில் நல்ல பூமியைப் பலதரம் ஆழமாக உழுது புழுதியாக்கி நல்லகாரமான எருவைப்போட்டுக்கலக்கித் தண்ணீர்கட்டி, அதில் முட்டகோஸின் விதைகளை நவம்பர்மாதத்தில் நாற்றங்காலில் நட்டு இரண்டு மூன்று இலைகள் உண்டானவுடனே டிசம்பர்மாதத்தில் பதியம்போட்டு, ஜனவரி மாதத்தில் அதற்கேற்க முன்னடியாகத் தயார்செய்திருக்கும் நிலத்தில் ஒன்று அல்லது ஒன்றரையடி தூரத்திற்குக் கிற்றுப்பாத்திகளைக்கட்டி, அந்தவரப்புகளில் பிடுங்கி நட்டு எதேஷ்டமாகத் தண்ணீர்விட்டுக்கொண்டும், பயிரைச் சுற்றி அடிக்கடி கொத்தி களைகளை எடுத்து காற்று உலாவச்செய்துகொண்டும்வந்தால், கூடியவரையில் பெருத்து வளர்ந்து நல்ல லாபத்தைக்கொடுக்கும். இதன்விதைகளை கோடைமழை ஆரம்பிப்பதற்கு முந்தியாவது, அல்லது தை, மாசிமாதங்களிலாவது நாற்றங்காலில் நடுவது நலம். இதில் யார்க்கு, வானக்கு, நான்பிரேல், கார்ட்டர்ஸ், குளோபுசாவே, நூல்கோல், பிரஷல்ஸ், பிரவுடஸ் செகப்பு முதலான ஜாதிகளுண்டு. இந்தப் பயிரைப்பற்றிப் பிறகு விஸ்தாரமாகச் சொல்வோம்.

காளிப்ளவர் என்ற பூ.

இது மழைக்காலத்தில் விளையும்படியான பயிர். இதையும் முட்டகோஸைப்போலவே நாற்றைவிட்டுப்பதியம்போட்டுக் கீற்றுப்பாத்திகளில்நட்டுப் பயிரிட்டு பலனடையலாம்.

பட்டாணிக்கடலை.

பட்டாணிக்கடலையும் மலைநாடுகளிலும், பெங்களூரைப்போன்ற குளிர்ச்சி அதிகமான நிலங்களிலும் விசேஷமாக விளையும் பயிராக இருப்பினும்; மிதஉஷ்ணமான கீழ்நாட்டுத்தோட்டங்களிலும் சாதாரணமாகப் பயிரிடலாம். அதிகமழைபெய்து நின்றவுடனே, பூமியைக் கொத்தி, உழுது கால்வாய்பாத்திகளைக்கட்டி வீதியிற்கூட்டியகுப்பை எருவையும், மரஞ்சுட்டெரித்த சாம்பலையும் கலக்கி எருவிட்டுத் தண்ணீர்கட்டி ஊறவைத்து, தை மாசி மாதங்களில் விதைகளை நட்டால் முளைத்துக் கொடிகள் படர்ந்து பலனைத்தரும்.

பீன்ஸ்கோட்டை.

பீன்ஸ்கொட்டைகளில் பலவகுப்புகளுண்டு. இதுவும் நீலகிரி, பெங்களூரைப்போன்ற குளிர்நிறைந்த தேசங்களில் விளைவதாக இருப்பினும், மித சீதோஷ்ணமான கீழ்நாட்டின் தோட்டநிலங்களிலும், நிலத்தைத்தக்கபடி கொத்தியாவது உழுதாவது இலகுகாரமான எருவையிட்டு பாத்திகள்கட்டி அ-அங்குலத்துக்கு ஒரு விதையாக பார்கழி தை மாதங்களில் நட்டுத் தண்ணீர்விட்டுக்கொண்டு வந்தால் நல்ல லாபத்தைத் தரும்.

மிளகாய்.

மிளகாய் கிருஷ்ணா, கோதாவரி, கர்னூல், கடப்பை முதலான ஜில்லாக்களிலும், கோயமுத்தூரையடுத்த ஒரெட்டிசெட்டிபாளயத்திலும், சவுரிப்பாளையம், காளப்பட்டி, பாலத்துறை, மதுக்கரை, குமாரபாளையம் முதலான விடங்களிலும் விசேஷமாக விளைந்தாலும், ஈரோடு, தாராபுரம், பொள்ளாச்சி முதலான விடங்களிலும், முக்கியமாகப் பொள்ளாச்சி தாலூகாவிலும் முதல்தரமான மிளகாய் விளைவாகிறது. இதற்குப் பூமியை நன்றாக உழுது, முக்கியமாக சாம்பல் உப்புமண் எருவிட்டு வைத்துக்கொண்டு, நல்ல ஜாதிவிதைகளாக எடுத்து வைகாசி ஆனி மாதத்தில் நாற்றுவிட்டு ஆறுவாரமானபிறகு நாற்றுக்களைப்பிடுங்கி பக்குவமாக பாத்திகளில் இரண்டடிக்கொரு நாற்றாக நடலாம். அல்லது பக்குவப்படுத்திய நிலத்தில் முதலிலே பாத்திகள் கட்டாமல் சால் ஓட்டத்தில் நட்டு வேர் பிடித்தவுடன் தண்ணீர்கட்டும்போது பாத்திகளாகக் கட்டிவிடலாம். பிறகு நாலைந்து நாளுக்கு ஒரு தண்ணீராகக் கட்டிக்கொண்டுவந்து, பூக்கும்

வரையில் பதினைந்து நாளைக்கு ஒருதரம்கொத்திக் களையெடுக்கவேண்டும். பிறகு காய்பிடித்தவுடன் ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை பழங்களைப்பறித்துவிடவேண்டும். பழுத்த பழங்களைப் பக்குவமறிந்து பறிக்காவிட்டால், செடிக்குக்கட்டுந் தண்ணீர் அந்தச் செடியிலிருக்கும் மற்றக் காய்களுக்கு அதிகமாக ஏறாமல் பழங்களுக்கு ஏறிக்கெடுத்துவிடும். இது சற்றேறக்குறைய ஒரு வருஷத்துப் பயிராகையினால், எவ்வளவுக்கெவ்வளவு கொத்தித்தண்ணீர்கட்டுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு ஆதாயங்கிடைக்கும். இப்பயிருக்குப் போதுமான தண்ணீர் அல்லது மழை இல்லாவிட்டால் முரளி வியாதி சம்பவித்து, செடியின் இலைகள் வாட்டங்கொள்ள, அவைகள் சுருண்டு செகப்புக்கலந்த பஞ்சட்புள்ளிகள் படர்ந்து பயிரைக்கெடுக்கும். அல்லது அசுகனி என்ற கரும்பூச்சிகள் விழுந்து பயிரைக்கெடுக்கும். இந்த வியாதிகள் கண்டவுடனே குயவன் சூளைச் சாம்பலையாவது, அல்லது அடுப்புச்சாம்பலையாவது சேர்த்துவைத்து, விடியற்காலத்தில் பனியடங்குவதற்குமுன் எழுந்து, மேற்படிசாம்பலையெடுத்து நோய்பட்ட செடிகளின்மேல் இரண்டு மூன்றுதினங்கள்தூவி, தக்கபடி தண்ணீர்கட்டினால் நோய்நீங்கி, பயிர்கள் மறுபடியும்தழைத்தோங்கும். தோட்டப்பயிராகிய இந்தமிளகாயில் பலவிதங்களும், பலபெயர்களும், குணபேதங்களும் உண்டு. தஞ்சாவூரில் காபிரி யென்ற பெரியகாயும், கள்ளிக்கோட்டையில் சிறியஜாதியான சீமைமிளகாயும், பின்னும் கருப்பு வெள்ளைமிளகாய், மானம்பார்த்த மிளகாய் முதலிய பலவகைகளுமுண்டு. புனவில் பக்குவப்படுத்திய பூமியில் கஜதூரத்திற்கு ஒன்றாக ஒரு குச்சியால் துளைசெய்து அதில் ஒரு மீனைப்போட்டு அதில் மிளகாய் நாற்றை நடுவதுண்டு. மிளகாயிலை இளமையாகவிருக்கும்போது பறித்துப்பருப்பில்போட்டு சமைப்பார்கள். தஞ்சாவூர் காபிரிகாயில் காரமதிகமில்லை. ஆகவே அதைச் சாதாரண காய்கறிகளைப்போல சமைத்துண்பார்கள். நல்ல தோட்டநிலத்தில் ஒருவகரில் கரு-முதல் ௨௦-பொதி அல்லது ௩,000 முதல் ௪,000-பெரியபடி மிளகாய் காய்க்கும். இந்த மிளகாய்ப்பயிரைப் பொள்ளாச்சிமுதலான சிலவிடங்களில் சோனைமழைக்காலத்தில் நடுவதுண்டு. அதனால் அதிகத்தண்ணீர் இறைக்கவேண்டியதில்லை. அங்கு-ஏகர் ஒன்றுக்கு கரு-முதல் ௨௦-பொதி அல்லது ௨,௮௮0-மு

தல் ௩,அ௪௦-பெரிய படிவரையில் ஆதாயங்காண்கின்றது. ஈரோட்டி லிருந்து அதிக மிளகாய் ஏற்றுமதியாகின்றது. மிளகாயின்மார், தட்டுப்படல் பின்னுவதற்கும், அடுப்புவிறகுக்கும் உபயோகமாகும்.

கறிவேப்பிலை.

இதைவீட்டின் புழைக்கடைகளிலும், தோட்டங்களில் நீரோடு மிடங்களிலும்,விதைகளைப்போட்டுச் சிறு மரங்களாக வளர்த்துப் பிறகு இலைகளை அறுக்கலாம். இலைகளைத் துவையலுக்கும், மற்றப் பதார்த்தங்களுக்கு வாசனையும், குணமும் கொடுக்கவும் உபயோகப்படுத்தலாம். நல்ல பயிர். நல்ல லாபத்தைத் தரும். இதன் இலைப்பொடியை அநேகர் ஐரோப்பா தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

பிரண்டை.

இதில் பலவகையுண்டு. இது தானாக வேலியோரங்களில் முளைக்கும். இதன் துவையல் அரோசகத்தையும், மூலநோயையும் கண்டிக்கும். தண்ணீர் குடியாத மாடுகளின் நாக்கில் பிரண்டையை அரைத்துத் தேய்த்தால் தண்ணீர் அதிகமாகக் குடிக்கும். நல்ல மூலிகை.

புளியங்கொழுந்து.

புளியமரங்களைக் காடுகளிலும், தோட்டநிலத்தில் பயிராகாத இடங்களிலும், வேலியோரங்களிலும் பயிரிட்டால் கந்தாயப்பணத்தைக் கட்டுவதற்கும், அதன் கொழுந்து, பூ, காய், கனி முதலானவைகள் உணவுக்கும்உதவும். இதன் வேர்கள் நீண்டதாகையால் தக்கவிடத்தில்மாத்திரம் பயிரிடலாம்.

வேம்பு.

இதை நிலத்தின் வேலியோரங்களில் பயிர்செய்தால், மரம் விறகுக்கு உதவும். கொழுந்து பூ முதலானவைகள் உணவுக்கு உதவும். விதையிலிருந்து எடுக்கும் எண்ணெய் மருந்துக்காகும். இலைகளும் பிண்ணாக்கும் களர்நிலத்துக்கு முதல்தரமான எருவாகும். இதன் காற்றுத் தேகத்திற்கு சுகரமாயிருக்கும்.

கிழங்கு வகைகள்.

இனி நமக்கு உபயோகப்படும் சில விசேஷமான கிழங்குகள் பூண்டு வகைகளாவன.

தாமரைக்கிழங்கு.

இத்தாமரையில் பலவகைகளுண்டு. விஸ்தீர்ணமுள்ள நிலமுள்ளவர்கள் மழைநீர்தங்கும் குளம் குட்டைகளில் தாமரையைப் பயிரிடலாம். அதன் கிழங்கை அறுத்து வற்றலாகப்போட்டு உணவுக்கு உபயோகப்படுத்தலாம்.

கருணைக்கிழங்கு.

இது மணற்பாங்கான மலையாளம், சித்தூர், சேலம், கரூர் முதலான விடங்களில் சித்திரை வைகாசிமாதங்களில், கிழங்குகளின்நாற்றுக்களைப்பிடுங்கி நட்டுத்தண்ணீர்விட்டால் கிழங்குகள் பெருத்து பக்குவமாகும். இதன் கிழங்கு உஷ்ணகாரி. மூலநோயுள்ளவர்களுக்கு நல்ல கறியாகும்.

சேனைக்கிழங்கு.

இது மலையாளநாட்டிலும், சித்தூரிலும் முக்கியமாக அதிகமணலும், மழையுமுள்ள இடங்களில் செழிப்பாக வளரும். இந்தச் சேனைக்கிழங்கை மூன்று வருஷம் வளரும்படிவிட்டால், கிழங்கொன்றுக்கு 2-அல்லது 3-மணங்கு கிடைக்கும். தாய்க்கிழங்கைவிட்டுப் பக்கத்துக்கிழங்குகளைமாத்திரம் எடுத்துக்கொண்டால் மறுபடியும் கிளைகளுண்டாகும். இது அமெரிக்காவில் ஏராளமாக விளைவிக்கப் படுகின்றது. இது பத்தியக்கறி.

சேமைக்கிழங்கு.

நீர் எப்பொழுதுந்தங்கும் பள்ளத்தாக்கான இடங்களில் நான்கு சதுரகஜத்துக்கு ஒருவிசைக்கிழங்காக வைகாசிமாதத்தில் நட்டால் அதன் இலை, தண்டு கிழங்குகள் உணவுக்கு உதவும். எருக்கொடுத்தால் கம்பீரமாக வளரும்.

முள்ளங்கிக் கிழங்கு.

இது சிறுமணற்பாங்கான தோட்டங்களில் சிற்றுப்பாத்திக ளைக்கட்டி, ஒரு அடிக்கு ஒரு விதையாக ஆடிமாதத்தில் நட்டுப் பழையசாணி எருவும் தண்ணீரும் கொடுத்தால் கிழங்குகள் விருத் தியாகும். முதிர்ந்த கிழங்குகளுக்கு இடையில் குறுக்காகக் குச்சி களைக்குத்திவிட்டால் செடிகளின் விதைகளை எடுக்கலாம்.

காரெட்டுக்கிழங்கு.

காரெட்டுக்கிழங்கை சாதாரணமாகக்கீழ்நாடுகளில் பயிர் செய்ய லாம். இதற்கும் நிலத்தைத்தக்கபடிபுழுதியாக்கி, எருவிட்டு தண்ணீர் கட்டிக்கொண்டு வந்து கொஞ்சம் பெரிதான உடனே சு-அங்குல தூரத்துக்கு ஒருபயிராகவிட்டு மற்றக்களைகளை நீக்கிவிடவேண்டும். மலைநாடுகளில் நவம்பர் டிசம்பர்மாதங்களில் விதைத்து, மார்ச்சு எப் ரல் மாதங்களில் அறுத்துவிடுவார்கள்.

பீட்டுக்கிழங்கு.

பீட்டு ரூட்டு என்னும் கிழங்குஜாதியில் பலவகைகளுண்டு. இதுவும் குளிர்நாட்டுப்பயிரானபோதிலும், சமசீதோஷ்ணமுள்ளகீழ் நாடுகளில் பூமியை ஆழமாகத்தோண்டி புழுதியாக்கி இலகுகார எரு விட்டுக்கலக்கி, வரப்புப் பாத்திகளைக்கட்டி, நவம்பர் டிசம்பர் மாதங் களில் விதைகளை விதைத்துத் தண்ணீர்கட்டிக்கொண்டுவந்தால் சீக் கிரம் முளைக்கும். இரண்டு மூன்று இலைகள் கண்டவுடனே சு-அங் குலத்துக்கு ஒரு பயிராகவிட்டு மற்றப்பயிர்களைப் பிடுங்கிவிடவேண் டும். இதன் கிழங்குகள் கறிசெய்வதற்கும், ஊறுகாய்க்கும், சர்க் கரை செய்வதற்கும் உதவும்.

உருளைக்கிழங்கு.

இது சாதாரணமாக மலைநாடுகளிலும் குளிருள்ள பெங்களூரை ப்போன்ற நாடுகளிலும் விசேஷமாக விளையும். உஷ்ணம் குறைந்த கீழ் நாடுகளிலும், நல்ல நிலங்களில் ஆழமாகக்கொத்தியெடுத்து எரு விட்டுக் கிழங்கின் வேர்களைக் கத்தரித்துக்கொண்டு தக்க நிழலில்வள ர்த்தால்கூடியவரையில் கிழங்குகள் பருத்து உணவுக்குதவும். இ ந்தக்கிழங்கை ஒரேஇடத்தில் அடிக்கடி பயிர்செய்யாமல் வேறு வே றுபுது இடங்களில்பயிர்செய்தால் பலனதிகங்கிடைக்கும். இது மண

ற் பாங்கான நிலத்தில் அதிகமாக விருத்தியாகும். நிலமானது சிவப்பு அல்லது செவ்வல்மண் கலந்திருக்குமானால், மரச்சாம்பல், பொட்டிலுப்பு எருவைப்போட்டு, 2 அல்லது 3அடி தூரத்திற்கு 10 அங்குல ஆழத்தில் பெரிய கிழங்குகளை இரண்டு துண்டுகளாக அறுத்து, மார்ச்சு அல்லது செப்டம்பர்மாதத்தில் நட்டு, முதல் மாதத்தில் வாரத்துக்கு 2 தடவை நீரும், பிறகு மூன்றுதினங்களுக்கு ஒரு நீருமாகக் கட்டிக் களைகளைக்கொத்திவந்தால், மூன்றும்மாதம் ஒரு ஏகர் நிலத்தில் 300-மணங்கு கிழங்குக ளடையலாம். இது சில இடங்களில் 15-நாள்களில் குத்துச் செடிகளாக முளைத்து கத்திரிச்செடியைப்போலப் பூத்து, 120-நாள்களில் செடிகள் காய்ந்துபோவதற்கு முன் இடையில் களையெடுத்தால் செடி ஒன்றுக்கு 15 அல்லது 20 கிழங்குகளைத்தோண்டி எடுக்கலாம். இக்கிழங்கு பசையுள்ள போசன பதார்த்தம்.

சர்க்கரை வள்ளிக்கிழங்கு.

இது தோட்டப்பயிர். இதற்குப் பூமியை முதலில் நன்றாக உழுதும், எருவிட்டும், வரப்புகளைக் கட்டிவைத்துக்கொண்டிருந்து, முன் கிழங்குக் கொடிகளிலிருந்து கத்தரித்து நாற்றங்காலில் நட்டு ஓரடி நீளம் வளர்ந்திருந்த நாற்றுக்களைக் கொண்டுவந்து நட்டு,மூன்று நான்கு தினங்களுக்கு ஒரு தட்வை தண்ணீரைக்கட்டி, இரண்டொரு தட்வை களைகளை எடுத்துவிட்டால் போதுமானதே. சிலர் இதற்கு அதிகமான எருவிடுகிறதில்லை. ஏனெனில் இந்தக் கிழங்குப்பயிர் பெரும்பாலும் புரட்டாசி முதல் கார்த்திகை மார்கழி மாதங்களில் இராகிப் பயிரை அறுத்துக்கொண்ட பிறகு, பயிரிடுவதால் இராகிக்குப் போட்ட எருவே போதுமென்று எண்ணம். தை மாசி மாதங்களில் கிழங்குகளை வெட்டி எடுத்துவிடுகிறார்கள். இதை ஒரு ஏகர் நிலத்தில் பயிர் செய்ய முப்பது முதல் ௪௦-ரூபாய் வரையில் செல்லும். அதற்கு வரும்படி ௭௦-முதல் ௧௦௦-ரூபாய் வரையில் கிடைக்கும். இதில் செகப்புச் சர்க்கரைவள்ளி, வெள்ளைச் சர்க்கரைவள்ளி என்ற இரண்டு வகைகளுண்டு.

வெள்ளைப்பூண்டு.

வெள்ளைப்பூடானது கோயமுத்தூர், பல்லடம், பல்லாரி, கர்நூல், கடப்பை, திருசிராப்பள்ளி முதலான விடங்களில் விசேஷமாக

குறைவை வெற்றிலையின் கீழ் எடுத்தெழுதுவோம். புகையிலையைப்பற்றி நாமிங்குப் பேசும்படிநேரிட்டதால்பொடியைப்பற்றியும் இவ்விடத்திலேயே சொல்லுவோம். சுருட்டுக்குடிப்பதால் எவ்வளவுதீமைகள் உண்டாகின்றனவோ அவ்வளவு தீமைகளும் பொடியால் உண்டாகின்றதில்லையென்று நாம் முதன்முதற் சொல்லுவதால் ஏதோ பொடியைப்பற்றி அநுகூலமாகப் பேச வந்ததாகக் கருதவேண்டாம். பொடியும், சுருட்டைப்போல், உணவு என்பதிற் கொஞ்சமேனும் சம்பந்தமேயில்லாதது. பொடி போடுவதும் வெகு கெட்டவழக்கம். பொடியில்லாமலே எவ்வளவோ ஜனங்கள் சுகமாகத் தங்கள் வாழ்நாட்களைக் கழிக்கின்றார்கள். பொடி நமது துணிமணிகளை மலினமாக்குவதுடன் நாமிருக்குமிடங்களில் மூக்குச்சிந்துதல் துப்புதல் இவைகளால் அசுத்தமுண்டாக்கும். அவ்விடங்களை நாம் அடிக்கடிசுத்தமாக வைக்காவிடில் சில துர்நாற்றத்தையுமுண்டாக்கும். சுருட்டைப்போல் பொடி கொடியநோய்களை உண்டாக்குகின்றதில்லை: என்றாலும் பொடியால்ஒருவிதக்குணமுமில்லை. தூக்கம் போகவேண்டும் என்று பொடியைப்பழக்கஞ் செய்தவர்கள் அப்பழக்கம் வந்தபிறகு தூக்கம் வரவேண்டியே பொடி போடும்படி நேரிடுகின்றது. ஜலதோஷம் பொடி போடுகின்றவர்களுக்கு வருகின்றதில்லை என்பதையுங்காணோமே. ஆகையால் பொடியில் ஒருவித நற்குணமுமில்லை. நமது துணிமணிகள் வீடுவாசல்கள் இவைகளைக்கெடுக்கும் கொடிய குணம் ஒன்றே தான் பிரதானம்.

வெற்றிலை:— இதை நமது நாட்டார்கள் வெகு சிலாக்கியமான மருந்தாக வெகுநாளாக உபயோகப்படுத்திக்கொண்டுவருகின்றார்கள். சிறுகுழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் கொடுக்கப்படும் மருந்துகளை வெற்றிலைச்சாற்றிற் கலந்துகொடுப்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். கருப்பிணிகள் பிரஸவித்த பிறகு அவர்களுக்கு ஜீரணசக்திக்குறைவைச் சீர்திருத்த வெற்றிலையை அடிக்கடி கொடுக்கின்றார்கள். சாஸ்திரப்படி வெற்றிலையானது மிளகினத்தைச்சேர்ந்த ஒருஇலை என்றும் மிளகின் குணமதற்குக் கொஞ்சம் உண்டென்றும் எல்லாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். வெற்றிலை உணவு என்று நாம் சொல்லவரவில்லை. எத்தனையோ பெயர்கள் வெற்றிலையேபோட்டுக்கொள்ளாமல் தங்கள் வாழ்நாட்களைக்கழிக்கின்றார்கள். நமது மதாசாரப்படி ஒவ்வொரு கிரகஸ்தனும் தான்புசித்தபிறகு வெற்றிலைபோட்டுக்கொள்ளலாம் என்று ஏற்பட்டிருக்கின்றபடியால், வெற்றிலையில் புகையிலையைப்போல ஒருவித தோஷமுமில்லை என்றும் ஜீர்ணசக்தியை அதிகரிக்கும் வல்லமை உண்டு என்றும் அவ்வாறு நாம் சொல்லுவது அபிமானத்தாற்சொல்லும் சொல்லல்ல; வெற்றிலையும் மிளகினத்தைச் சேர்ந்த

இலையாகையால் அதற்கும் அக்குணமிருந்தே தீரவேண்டும் என்று நிச்சயித்துச் சொல்லும் சொல்.

இவ்வெற்றிலையை நாம் சாப்பிட்டபிறகு கொஞ்சமாகப் போட்டுக் கொண்டாற்பிசகேயில்லை; 1-நாளைக்கிரண்டு தடவை, தடவைக்கு 5-6-வெற்றிலை போட்டுக்கொள்ளுவது தேகத்துக்குச் சௌக்கியமே. ஜீர்ணசக்தி அதிகரிக்கும். இதற்குமேல் அதிகமாகப்போட்டுக்கொள்ளப் பழகினால் இயற்கையான ஜீர்ணசக்தியைக் குறைக்குமாகையால் தேகசௌக்கியத்திற்குக் கெடுதல். வெற்றிலையில் பலவகைகளுண்டு. கம்மபுஇலைதான் உத்தமம். இதில் உறைப்பு அதிகம். கற்பூரஇலை அதிகமாக உறைக்காது. வெற்றிலையுடன் சுண்ணாம்பு பாக்கு சேர்த்துப்போட்டுக் கொள்ளவேண்டுமாகையால் இவைகளைச்சேர்ப்பதில் வெகு குறைவாகச்சேர்த்துப் போட்டுக்கொள்ள வேண்டும். நல்ல பாக்கா, நல்ல சுண்ணாம்பா என்று பரிசோதிக்கவேண்டும். சுண்ணாம்பு அதிகமானால் பற்களின் தசைகளில் ஒரு கொடிய புண் (Lime-Cancer) உண்டாகி அதிக அசௌக்கியத்தைக்கொடுக்கும்.

வெற்றிலையிற் புகையிலையைச்சேர்த்துச் சிலர் போட்டுக்கொள்ளுகின்றார்கள். இது சாஸ்திரத்தில் ஏற்பட்ட தாம்பூலமல்ல; சுருட்டுக்குச்சமானமாக ஏற்படுத்தப்பட்ட தாம்பூலம். பெரும்பாலும் மலையாளதேசத்திலுண்டாகி இப்பொழுது நமது நாடெங்கும் பரவியிருக்கின்றது. இதுதேகத்துக்கு முற்றிலும் அசௌக்கியம். புகையிலைபோட ஆரம்பித்தால் வெற்றிலைநீரை நாம் உட்கொள்ளமுடியாது. வெளியிற் றுப்பவேவேண்டும். இவ்வாறு ஒவ்வொருவனும் துப்பும் நீர் சராசரி அரைபைன்ட் நீரிருக்கலாம். இந்தநீர்வெளியே போகப் போகப் புகையிலை போடுகின்றவன் மேனிவெளுத்து இரத்த பாண்டுரோகம், பசிக்குறைவு, கண்பார்வைக்குறைவு, புத்திமயக்கம், பைத்தியம் இவ்வகையான ரோகங்கள் உண்டாகின்றன.

காபிப்பானம் :— (Coffee) இக்காபி என்றபதார்த்தம் மத்யசாரம் என்பதில்லாத பானத்துக்குஉதவியாகும் விதை. இதைவறுக்கும்பொழுது ஒவ்வொரு விதையும் நன்றாக உப்பி இலேசாய் அதிலடங்கியிருக்கும் வாசனை கம்மென்று வீசும். அவ்விதையில் காபின் (Caffein), காபின்புளிப்பு (Caffeo tannic acid) என்ற இரண்டு சாரங்களிருக்கின்றன. விதை வறுக்கப்படும் பொழுது விதை உப்புவதால் இச்சாரங்கள் அதிகமாக உண்டாக்கப்பட்டு ஓர்வகை வாயுவும் அவ்விதத்தில் உண்டாகின்றது. வறுத்துடைத்தகாபிக்கொட்டையை நாம்கஷாயம்போட்டு சாப்பிடுக்கும் பொழுது அக்கஷாயத்தில் காபின் என்ற மருந்துசாரம் அப்படியே குறைவுபடாமல் வந்துவிடுகின்

றதென்று சிலவைத்தியர்களும், கொஞ்சம் குறைவுபட்டு எற்குறைய அப்படியே வந்துவிடுகின்றது என்று வேறுசிலரும் சொல்லுகின்றார்கள். இப்பானம் மிதமாகப்பண்ணுவதால் உடம்புக்குச்சௌக்கியம். காபிபானம் நமது நரம்புகளின் சக்தியைக்கொஞ்சம் அதிகமாகப்பண்ணி நமக்கு ஓர்வித உற்சாகத்தைக்கொடுக்கின்றது. நாம்செய்யும் தொழிலில் நமக்குச்சோர்வில்லாமலிருக்கும்படி ஒருவித சக்தியைக் கொடுக்கின்றது. விஷஜ்வரங்கள் உண்டாகும் மலை நாடுகளிலும் உஷ்ணப் பிரதேசங்களிலும் காபிபானம் இஜ்வரத்துக்கு ஓர் விதவிலக்காகின்றதென்கின்றார்கள். இதுபெரும்பாலும்உண்மையே. இவ்வாறு பலநற்குணங்களைக்கொடுக்கும் காபிபானம்அதிகமாகஉபயோகிக்கப்பட்டால் நமக்குப் பலவிதநோய்களை விளைவிக்கும். அதிகமாக நாடிதை அருந்தும்பொழுது நமது நரம்பின்சக்தியைஅது அதிகமாகவிளங்கச்செய்கின்றபடியாற் பாரிசவாயு, சந்துப்பிடிப்புவாயு முதலியரோகங்கள் நமக்குண்டாகும். நீர்ரோகமும் அதிகமாக விளையும். சில தேகங்களைக் காபிபானம் அதிகமாகப்பெருக்கச் செய்கின்றபடியால், இரட்டைநாடியாக விருக்கின்றவர்கள் காபிபானம் அதிகமாகச்செய்யக் கூடாதென்று சிலவைத்தியர்கள் சொல்லுகின்றார்கள்.

தேயிலைப்பானம் (Tea):-- காபிபானத்தில் காபின்என்ற சாரமிருப்பதுபோல தேயிலைப் பானத்தில் தேயின்(Thein) என்றசாரம் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். இச்சாரத்தின்குணம் நமது நரம்புகள் பலஹீனமாகப்போயிருந்தால் அப்பலத்தை மறுபடி திருப்பிக்கொடுப்பதாகையால் இப்பானம் காபிபானத்தைவிட உத்தமமான பானம். காபிபானத்தைப் போல இப்பானமும்உற்சாகசக்தியையும் வேலைசெய்ய அதிக ஊக்கத்தையும் காபி செய்வதைவிட அதிகமாகவே கொடுக்கின்றது. தேயிலைப்பானம் சித்தஞ்செய்வது காபிபானம்சித்தப்படுத்துவதுபோல அவ்வளவுசிரமமல்ல. தேயிலைகள் அதிகமாக உடைக்கப்பட்டும் பொடியாகச்செய்யப்பட்டுமிருந்தால் அவ்விதத்தேயிலைகள் பானத்திற்குச் சிலாக்கியமில்லை. தேயிலை முழுமையாக விருப்பதுதான் உத்தமம். இக்கஷாயம் நாமிறக்கிக்கொள்ளும் பொழுது ஓர்வித நல்வாசனை இக்கஷாயத்திலிருக்கும்படியும் கசப்பென்பது இல்லாதபடியுமாக வெகு ஜாக்கிரதையாக இறக்கிக்கொள்ளவேண்டும். காபி பானம் அதிகமாகச் செய்வதால் எவ்வளவு கெடுதல் தேகத்துக்குண்டாகின்றதோ அதுபோல தேயிலைப்பானம் அதிகமாகபண்ணுவதால் உண்டாகின்றதில்லை என்று ஒருவாறு வைத்தியர்கள் சொல்லுகின்றார்கள். என்றாலும் தேயிலைப்பானம் தூக்கத்தை முற்றிலும் அகற்றுமாகையால் அக்காரணத்தால் விளையும் நோய்கள் பல. காபி, தேயிலை இவைகளுடைய பானங்களைப் பகலில் மூன்றாம் யாமத்துக்குமேல் அருந்தக்கூடாது. அவ்வாறு செய்தால் இரவில் நமது தூக்கம் கெட்டுப்போம்.

கோகோபானம்:— கோகோவில் ஒருவித உணவுக்குரிய பதார்த்தம் (Theobromin) இருக்கின்றபடியால் இது தேகத்திற்குப் புஷ்டிகாம். காபி தேயிலை யிவைகளைப்போல கோகோவைக் கேவலம் பானமாகவே நாம் கருதாமல் ஒருவித உணவாகவே எண்ணவேண்டும்.

எலுமிச்சை நாரத்தை புளி கடலைப் புளிப்பு:— இவைகளிலெல்லாம் ஜம்பீரஸாரம் (Citric acid) என்ெருரு புளிப்பு, கொஞ்சம் சுகமான தித்திப்பு இவ்விரண்டும் கலந்திருப்பதால் ஜீரணசக்தியை இவைகள் ஒருவாறு கொடுக்கும்.

எந்த ஆகாரம் நலம்:— பலவித ஆகாரங்களைப்பற்றி நாமிதுவரையிற் சொன்னோம். மாமிசங்கலந்த உணவு மேலான உணவா, அல்லது மாமிசமற்ற சாகபோஜனம் மேலானதா என்ற சர்ச்சை பலதடவைகளில் நடந்திருக்கின்றது. இவ்விஷயமாகச் சற்று விசாரிப்போம். இவ்வுலகம் உண்டானது முதல் எந்தெந்தவிடங்களில் ஜனங்கள் வசிக்க ஆரம்பித்தார்களோ அந்தந்த விடங்களிற் கிடைத்த ஆகாரங்களை அவர்கள் புசிக்கவுமாரம்பித்து அதையே வழக்கமாகக்கொண்டார்கள். அவ்வழக்கத்தை விடுவது சிரமமாயிருப்பதுடன் தேகசௌக்கியத்திற்கும் குறைவு. கடற்கரையில் வசித்தவர்களும் பெரியநதிக்கரையில் வசித்தவர்களும் மீன்களையும், மிருகங்கள் அதிகமாகவிருந்த காடுகளில் வசித்தவர்கள் மிருகங்களையும், கந்தமூலங்கள் பழங்கள் அடர்ந்திருந்த வனங்களில் வாசஞ்செய்தவர்கள் அவ்வனங்களிற் கிடைத்த பழங்களையும், உணவுகளையும் தங்கள் தங்கள் உணவாக அங்கீகரித்தார்கள்.

மாமிச ஆகாரம் எளிதிற் செரிக்கின்றது என்று ஏற்பட்டிருக்கின்றதேயன்றிச் சாகபோஜனத்தைவிட அதிக வலிமையைக்கொடுக்கின்றது என்று நிரூபிக்கமுடியவில்லை. எல்லா விடங்களிலும் இவ்விரண்டுவித போஜனங்கள் செய்கின்றவர்களுமிருக்கின்ருர்கள். ஆகையால் அவரவர்கள் அவரவர்களுடைய இயற்கைப்படி போஜனம் செய்வதில் ஒருவிதக் குறைவும் வரமாட்டாது. இவ்விஷயமாக ஒருவன் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது மட்டும் ஒன்றுண்டு. எந்தவிடத்தில் நாம் இருக்கின்றோமோ அந்த விடத்தில் அதிகமாக உண்டாகும் பதார்த்தங்களையே நாம் முக்கியமாகப் புசிப்பது தேகத்திற்குச்சுகம். நீலகிரியில் வசிக்கும்பொழுது அந்நாட்டிலுண்டாகும் காய்கறிகளை அதிகமாகப்புசிப்பது நலம்.

களிம்பு; கலாய்:—போஜனங்களையும் போஜன திரவியங்களையும்பற்றி இதுவரையிற் சொன்னோம். அப்போஜனங்கள் செய்யப்படும் சமையற்கட்டிடங்களையும் அவைகள் சமையல் செய்யப்படும் பாத்திரங்களையும்பற்றி நாம்

சொல்லவேண்டியது சுகசந்தர்சனத்திற்கு வெகு அவசியம். ஏனெனில் நமது தேசத்தார்கள் இவ்விஷயமாய்த்தங்கள் வழக்கங்களைச் சீர்திருத்திக் கொள்ளாது அநேகம்பிழைகளிருக்கின்றன.

சமையற்கட்டு:— சமையற்கட்டுச் சில வீடுகளில் ஒரு ஒதுக்குப் பக்கத்தில் அதிகக்காற்றோட்ட மில்லாத விடத்திலும் அதிக வெளிச்ச மில்லாத விடத்திலும் இருக்கக்காண்கிறோம். ஆனால் அது அவ்வாறு ஒருபொழுதுமிருக்கவேகூடாது. நல்ல வெளிச்சமும் நல்ல காற்றும் நமது உணவு சித்தமாகும்பொழுதே அவ்வுணவுக்கு வேண்டும். சமையற்கட்டைச் சுற்றி ஒருவிதநாற்றமுமிருக்கக்கூடாது. சமையற்கட்டிலுண்டாகும் புகை அவ்விடத்திலேயே சூழ்ந்து நின்று நமது உணவிற்குச் சித்தப்படுத்தும் உண்டிகளைப் புகைநாற்றமேறும்படிசெய்யாம லவ்விடத்தைவிட்டு உடனுக்குடனே அகன்றுபோகப் புகைப்போக்கி யொன்று விதிப்படி கட்டப்பட்டிருக்கவேண்டும்.

சமையற் பாத்திரங்கள் :— எல்லாவித சௌக்கியமும் மட்பாண்டங்களில் நமது உணவைச் சித்தப் படுத்துவதால் உண்டாகின்றது என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சித்தாந்தம். இக்குணத்தை உத்தேசித்தே மட்பாண்டங்களுக்கு சுவர்ண பாத்திரம் என்ற பெயரும் மரியாதையாகக் கொடுக்கப் பட்டிருக்கின்றது. ஆனா லவ்வாறு மட்பாண்டங்களை உபயோகிப்பது நாகரீகத்திற்கும் சம்பத்திற்கும் குறைவென்று பலவாறு கருதிப் பெரும்பாலும் இப் பாண்டங்களை யிப்பொழுது நமது நாட்டார்கள் நீக்கி விட்டார்கள். இக்காலத்தில் எல்லோரும் பித்தளை, வெண்கலம், ஈயம், இரும்பு, இனாமல் இவ்வகைப் பாத்திரங்களை உபயோகிக்கின்றார்கள். வெண்கலம், பித்தளை, செம்பு இப்பாத்திரங்களை உபயோகப்படுத்தும்பொழுது களிம்பூறாதபடி வெகு ஜாக்கிரதையாக விருக்கவேண்டும். புளிப்பு சம்பந்தப்பட்டாலும் எண்ணெய் முதலியவைகள் சில சமயங்களிற் சம்பந்தப்பட்டாலும் இப்பாண்டங்களிற் களிம்பு தோன்றும். அக்களிம்பு பலவித நோய்களையும் சிலசமயங்களில் மரணத்தையும் உண்டாக்கும். பித்தளைபாத்திரங்களிற் களிம்பூறாதபடி கலாய் பூசுவார்கள். இதில் காரீயம் சம்பந்தப்படுவதாற் பலவித வியாதிகளுண்டாகலாம். அவ்வாறுண்டாகாதபடி வெள்ளீயம் கலாயில் உபயோகப்படும்படி நாம் கவனமாகப் பார்க்கவேண்டும். ஒருதின்பண்டத்தையும் கையாற்றொட்டு இலைகளிற் பரிமாறாதபடி எல்லாம் அகப்பைகளாற் பரிமாற முற்றிலும் வழக்கஞ்செய்யவேண்டும்.

உணவை உட்கொள்ளும் விதம் :— ஒவ்வொருவனும் சாப்பிட உட்காரும் முன் நன்றாக ஸ்நானம் செய்துவிட்டுப் பரிசுத்தமான வஸ்திரம் தரி

துக் கொண்டு சாப்பிட வுட்காருவானே யானல் அதனல் உணவு சீரணமாதல் அதிகரிக்கிறது. இதை உத்தேசித்தே நமது நாட்டிற் சில ஆசாரங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைகள் மதவிஷயமாக மட்டுமுண்டானதல்ல. தேக சௌக்கியத்தைக் குறித்தும் உண்டானவைகள். குறைந்த பக்ஷம் 5 பிரதேசங்களையாவது பரிசுத்தமாகப் பண்ணிக்கொண்டு ஒருவன் போசனம் செய்ய உட்காரவேண்டும் என்று வைத்தியநாததீக்ஷிதீயம் என்ற கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்வைந்து பிரதேசங்கள் இரண்டு கால்கள், இரண்டு கைகள், வாய் இவ்வைந்துமே யாம். நாம் சாப்பிட உட்காருமிடம் நல்ல காற்றோட்டம், வெளிச்சம் இவைகளமைந்த விடமாகவிருக்கவேண்டும். நாம் போசனம் பண்ணும்பொழுது சந்தோஷத் துடனும் உற்சாகத்துடனும் சிரித்துப் பேசிக்கொண்டும் போஜனம் பண்ணவேண்டும். உற்சாகம், களிப்பு இவைகளெல்லாம் நமது தேகத்துக்கு சில ரஸங்கள் (gastric juice) ஏராளமாகப் பெருகச்செய்து நமது ஜீரணசக்தியை அதிகரிக்கச் செய்கின்றன. நாம் புசிக்கும்பொழுது நமதுஆகாரத்தின் ஒவ்வொரு பிடியையும் கொஞ்சங்கொஞ்சமாகப் போட்டுக் கொண்டு நன்ருக மென்று உட்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் நமது எச்சில் நன்ருக உணவுடன் கலந்து சீரணத்தை சுலபப் படுத்தும். வாயில் உணவைப் போட்டு மென்றுகொண்டிருக்கும்பொழுது பேசக் கூடாது. பிடிக்குப் பிடி தீர்த்தம் குடிப்பவன் வெகு சீக்கிரத்தில் அஜீர்ணம் என்ற வியாதிக்குள்ளாவான். மனேவியாகுலம், வேலைகள், தேக சிரமமுள்ள தொழில் இவைகள் ஒன்றும் நாம் புசிக்கும் காலத்திற்கு அரை மணி முன்னும் அரை மணி பின்னும் கொஞ்சமேனும் நமக்கு இருக்கவே கூடாது. ஹன்டர் என்ற ஒரு பிரஸித்தடாக்டர் இரண்டுநாய்களுக்கு ஒரேவித உணவைக் கொடுத்து ஒரு நாயை வீட்டிற் கட்டி மற்றொரு நாயை ஒரு முயலைத் தொடர்ந்து ஓடச் செய்து ஒரு மணிக்கப்பால் அவ்விரு நாய்களையும் கொன்று அவைகளுடைய குடல்களைப் பரிசோதித்துப் பார்த்து வீட்டிற் கட்டப்பட்ட நாய் தனது உணவைச் சீரணித்துக் கொண்டிருப்பதையும் முயலைத் தொடர்ந்த நாய் தனது ஆகாரத்தை உட்கொண்டபடியே தனது குடலில் வைத்திருந்ததையும் பார்த்து போஜனத்திற்குப் பின் அரைமணியாவது ஒருவித தேகசிரமமு மில்லாமலிருந்தாற்ருன் நமது ஆகாரம் சீரணமாகின்றது என்ற நியாயத்தை ஏற்படுத்தினர். இவ்விஷயமாகப் பல வைத்தியர்கள் பல பிராணிகளிடம் பரிசோதித்துப் பார்த்து ஒரு மனிதன் சுகமாகத் தனது ஆகாரத்தைச் சீரணித்துக்கொள்ளத்தான் சாப்பிட்ட பிறகு 20 நிமிஷங்களுக்காவது குறையாமல் சுகமாக உட்கார்ந்திருக்க வேண்டும்; ஒரு வேலையும் அந்தக் காலத்தில் அவன் செய்யக் கூடாது என்று சொல்லியிருக்கின்ருர்கள். அந்த 20 நிமிஷங்களுக்குள் நமது ஆகாரப்பை நமது ஆகா

ரத்தை அழகாக ஸ்வாதீனப் படுத்திக்கொண்டு அவ்வாகாரத்தை ஜீர்ணிக்கச் செய்யத் தான்செய்யவேண்டியமுயற்சியைச் செய்யத் தொடங்கிவிடுகின்றது. ஆகையால் அவ்வளவு அவகாசமாவது நாம் அதற்குக்கொடுத்தே தீரவேண்டும் என்பது சித்தாந்தம். ஒருவன் என்னதான் தனவானாக விருந்தாலும் உயர்ந்த பதவியிலிருப்பவனாக விருந்தாலும் அவனுக்கு மல பந்தம் என்ற வியாதியிருக்கும் பட்சத்தில் அவன் ஒருபொழுதும் ஒருவிதச் சுகத்தையுமடைய மாட்டான். ஆகையால் அவ்வியாதியால் வருந்துகின்றவன் ஒரு நாளைக்கு ஒரு முறையாவது தனது தேகசௌக்கிய முண்டாகும்படியாகத் தனது ஆகாரத்திலேயே எதாவது மலத்தை இளகச் செய்யும் உணவைக் கலந்து உட்கொள்ளவேண்டும். கொஞ்சம் கனிவர்க்கங்கள், கீரைகள் இவைகளை ஆகாரத்துடன் புசிப்பதால் இந்த வியாதியை நீக்கிக்கொள்ளலாம். இதில் சரிப்படாமற் போனால் சாதாரணமான மருந்தால் தினந்தோறும் காலை ஒரு தட்வையிலாவது இவன் மலசோதனை செய்து கொள்ளவேண்டும். ஒவ்வொருவனும் இரண்டொரு கவளம் புசித்துவிட்டால் நமது பசி முற்றிலும் அடங்கலாம் என்றிருக்கும்பொழுதே அவ்விரண்டொரு கவளத்தை நிறுத்தியே புசிப்பை விட்டு எழுந்திருக்கவேண்டும். மிதமாகப் புசிக்காமல் அதுகமாகப் புசிப்பதால் ஜனங்கள் பலவித நோய்களை வரவழைத்துக்கொள்கிறார்களேயன்றிக் குறைவாகப் புசிப்பதால் ஒருவரும் இறந்து போகவில்லை என்பது சித்தாந்தம். அதிகமாகப் புசிக்கின்றவர்கள் பருத்த தேகமுள்ளவர்களாய்ப் பலவித நோயால் வருந்தி பாரிச வாயு, சந்தி வாயு முதலியரோகங்களுக்கு இரையாவார்கள்.

இயற்கையாகவே யிரட்டைநாடிச்சரீரமுள்ளவர்கள் அதிக போஜனம் உட்கொள்ள வெகு ஆவலுள்ளவர்களாகவிருப்பார்கள். உப்பு, உறைப்பு இவைகள் அதிகமாகக் கலந்த உணவுகள் இவர்களுக்கு அதிகமாக உட்கொள்ள விருப்பமிருக்கும். அதற்குத்தக்கபடி இவர்கள் செம்பு செம்பாய் நீர் அருந்துவார்கள். இவ்விதமான ருசிகளவ்வளவுமிவர்களுடைய ஜீவனுக்கு அழிவைக்கொஞ்சங் கொஞ்சமாக உண்டாக்கி வைக்கின்றதென்பதை யிவர்கள் அறிகின்றார்களில்லை. ஸ்தூல சரீரத்தையுடையவன் அதிக உறைப்பும் உப்பும் ஒருபொழுதும் சாப்பிடவேகூடாது. இவற்றை முதலில் நிறுத்துவானேயானால் அதிகத்தண்ணீர் குடிப்பதையும் நிறுத்துவான். தண்ணீர் குடிப்பதை நிறுத்தினால் பாதிஸ்தூலம் நின்றுவிடும். பூமிக்குள் விளையும் சாகங்களாகிய கிழங்குகளை ஸ்தூலகாயன் ஒருபொழுதும் புசிக்கவேகூடாது. சர்க்கரை வெகு மிதமாகப்புசிக்கவேண்டும். இவன் குடிக்கும் நீரை போஜனம் முடிந்த பிறகு ஒரு சிறு அளவாகக்குடிக்கவேண்டும். வெந்நீராகவிருந்தால் வெகுநல்லது. அவ்வெந்நீருடன் கொஞ்சம் எலுமிச்சம்பழரஸங்கலந்து

சர்க்கரை கலக்காமல் அருந்திவர ஏற்பாடு செய்வானேயானல் அதுவே இவன் ஸ்தூலத்தைக் குறைக்கும் ஔஷதமாகும்.

ஒவ்வொருவனும் தான் புசிக்கும் முன்னும் புசித்தபின்னும் தனது பற்களைப் பரிசுத்தமாகக் கழுவிக்கொள்ளவேண்டும். அப்படிச்செய்யாதவர்களுக்குத்தான் வாய்நாற்றம், பல்சொத்தை, பல்வலி என்ற ரோகங்கள் உண்டாகின்றன. நமது உணவில் நாம் புசிக்கும் திரவியங்களும் அத் திரவியங்களின் சாயங்களும் பல்லிற்படிந்து தங்கியிருந்து நாற்றத்தையுண்டாக்குவதுடன் பல்லின் கட்டிடத்தையே பலமற்றதாகச்செய்து மாற்றிவிடுகின்றது. இதற்காகத்தான் நமது மதாசார கிரந்தங்களில் இவ்வளவு தடவை வாய் கொப்புளிக்கவேண்டும் என்றும், சிலவைதிககிரந்தங்களில் மாவிலையாற் சாப்பிட்டபிறகும் நமதுபல்லைச் சுத்தஞ்செய்யவேண்டும் என்றும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். நமது பற்களைமட்டும்நாம் சீராகச்சுத்தம்செய்து வைத்துக்கொள்ளத்தவறிப்போனல் வெகு சடுதியில் பற்களையிழந்து நமது உணவை மென்று புசிக்கும் பாக்கியத்தை யிழந்து சிறுவயதிலேயே கிழவர்களாவோம். கொதிக்கும் பானங்கள், ரஸங்கள், கஷாயங்கள் இவைகள் பற்களிற் படும்படி சாப்பிடுவதாலும் பற்கள் கெட்டுப்போகின்றன வாகையால் அவ்வாறு சம்பவிக்காமலும் நமது பற்களை நாம் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

ஒரு நாளைக்கு எத்தனை தடவை சாப்பிடவேண்டும் என்று சர்ச்சை:—இது எல்லாத்தேசங்களிலும் உண்டாயிருக்கின்றது. குழந்தைகள் கிழவர்கள் நோயாளிகளிவர்களைவிட்டுச் சாதாரணமான வயதிலிருக்கும் திடகாத்திர புருஷனும் ஸ்திரீயும் ஒருநாளைக்குச் சிற்றுண்டியில் இரண்டு தடவையும் பேருண்டியில் இரண்டு தடவையும் புசிக்கவேண்டும் என்றும் அவ்வுணவின் பிரமாணத்தையும் நாம் முன்னமேயே சொல்லியிருக்கின்றோம். காலையிற் படுக்கைவிட்டெழுந்ததும் அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சிற்றுணவு பாலோ, கஞ்சியோ, பழைய அமுதோ, காபியோ, ஏதோ ஒன்று கால் வயிறு சாப்பிடவேண்டும். 10-அல்லது 11-மணிக்குக் காலைபோஜனம், 3-மணிக்கு சுலபமான உணவு, இரவில் 7-மணிக்கு இராப்போஜனம் ஆக நான்கு போஜனங்கள். இவைகளை அவரவர்கள் பலாபலத்திற்குத்தக்கபடி குறைத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு போஜனத்திற்கும் இடையில் 4-5-மணி அவகாசமிருந்தே தீரவேண்டும். அப்பொழுதுதான் நமது ஆகாரப்பையும் சலிக்காது. வயிறுநிரம்பச் சாப்பிட்டுவிட்டு உடனே தூங்குவதும் வயிற்றிலொன்றுமில்லாமற் பசிக்கப் பசிக்கத் தூங்குவதுமாகிய இவ்விரண்டு வழக்கங்களையும் நாம் அகற்றவேண்டும். இவைகளிரண்டும்

ஸ்ரீ:

கடவுள் துணை.

முத்தொள்ளாயிரச் செய்யுண் முகவுரை.

முத்தொள்ளாயிரம் என்பது, சேரர் பாண்டியர் சோழர் என்னும் முடியுடைத் தமிழரசர் மூவரையும் அறம்பொருளின்பம் பற்றிப் புகழ்ந்துள்ள ஈராயிரத் தெழுநூறு வெண்பாக்களான் ஆயதோரரிய பெரிய பண்டைத்தண்டமிழ்நூல். இது மூவேந்தரையும் தனித்தனியே சிறப்பித்து வரும் தொள்ளாயிரம் தொள்ளாயிரம் பாடல்களாக மூன்று தொள்ளாயிர முடைமையின், முத்தொள்ளாயிரம் எனப்பெயர் சிறந்ததென்ப. இது முடியுடைவேந்தர்க்கு ஏற்றபெற்றியான் நாடு, நகர், திறை, தானை, யானை, குதிரை, அமர்க்களம், வென்றி, கொடை, புகழ், இன்பம் என்பன முதலிய பலபல வகைகளாகப் படைத்துக்கொண்டு புகழ்ந்ததாமெனத் தோற்றுகின்றது. "விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (செய்யுளியல்-௨௪0) என்பதனுரையிற், பேராசிரியரும், நச்சினார்க்கினியரும்; புதிதாகத் தொடுக்கப்படுந் தொடர்நிலை மேற்றாகிய விருந்து என்பதற்கு இம் முத்தொள்ளாயிரநூலை எடுத்துக் காட்டுதலான், இது பழையதும் புதியதுமாகிய கதை மேற்றன்றி ஒருவர் புதிதாகத்தாம் வேண்டியவாற்றாற் படைத்துச் செய்த தொடர்நிலைச் செய்யுளென்பதும், "நெடுவெண் பாட்டே முந்நா லடித்தே, குறுவெண் பாட்டி னளவெழு சீரே" (செய்யுளியல்-௧௱௫௯) என்பதனுரையில், அவ்வுரையாளரிருவரும், முறையே, "பதினெண் கீழ்க்கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத்தும் ஆறடியினேறுமற் செய்யுள் செய்தார் பிறசான்றோருமெனக்கொள்க" எனவும், "இக்கருத்தானே கீழ்க்கணக்கினுள் நான்கடியும் ஈரடியுமே மிக வந்தவாறும், முத்தொள்ளாயிரத்து நான்கடியே மிகவந்தவாறுங் காண்க" எனவும் கூறியவாற்றான், இந்நூல் வெண்பாக்கள் பெரும்பான்மை நான்கடியானும் சிறுபான்மை ஐந்தாறு அடிகளானும் வந்தன என்பதும், பேராசிரியர் "அங்கதப் பாட்டவற் றளவோ டொக்கும்" (௸-௧௪0) என்பதனுரையில் 'கைக்கிளைச் செய்யுள் முத்தொள்ளாயிரத்துட் பலவாயினும்'

எனக்கூறுதலான், இதன்கட்சுட்டி யொருவர் பெயர்கொண்ட பாடாண்டிணைப் புறப்புறக் கைக்கிளைச்செய்யுட்கள் பலவா மென்பதும் அறியப்படுவன. வச்சத் தொள்ளாயிரமும், ஒட்டக்கூத்தர் செய்த அரும்பைத் தொள்ளாயிரமும் இம் முத்தொள்ளாயிர நெறியே தழுவி யுரைக்கப்பட்டனவா மென ஊகிக்கப்படுகின்றன. இந்நூல் இந்நாட்டுத் தமிழ்க்குடிகளும் தமிழரசர்களுமே நிலவிய மிகப்பழைய காலத்தே இயற்றப்பட்டதாதலின், இதனால் அத்தொன்மைக் காலவியல்புகள் பல நன்கறிய லாகுமெனத் தெரிகின்றது. இத்தகைப் பெரிய பழைய நூலின் ஒருசில செய்யுட்களே புறத்திரட்டென்னும் இனிய செய்யுட்டொகை நூலில் ஆங்காங்குச் சோக்கப்பட்டிருத்தவிற் காணப்படுதலல்லது இந்நூன் முழுதும் ஒருசேரக் காண்பது இக்காலத்தரிதாயிற்று. நல்லாசிரியர் தொல்லுரைகளில் தமிழ் மூவேந்தரி லொருவரைச் சிறப்பித்து இனிய வெண்பா யாப்பின் வரும் பாடல்கள் சில இம்முத்தொள்ளாயிரமா மென்று கருதப்படுகின்றன. அவை, புறத்திரட்டிற் காணப்பட்டனபோல, முத்தொள்ளாயிரமெனப்பெயர் குறிக்கப்படாமையின் ஒருதலையாகத் துணியப்படவில்லை. புறத்திரட்டின்கண்ணுள்ள அவ்வொருசில முத்தொள்ளாயிரச் செய்யுட்களும், தேனும் பாலுங் கன்னலும் அமுதுமாகித் தித்திப்பன வாதலின், அவற்றைப் பலரும் அறிந்து கூட்டுண்டு களிக்குமாறு, இச்'செந்தமிழ்' வாயிலாக வெளியிடற் கவாவினேன். இந்நூலாசிரியர் பெயர் முதலியன ஒன்றும் இப்போது அறியலாவதில்லை. இந்நூற் கடவுள்வாழ்த்து வெண்பாவாலும் புகழின்கணுள்ள 'மடங்கா மயிலூர்தி' 'செங்கணெடியான்' என்னும் வெண்பாக்களாலும் இவர் சமயக் கோட்பாட்டிற் சைவராவர் எனக்கருதுகின்றேன்: ஈண்டு வெளிப்படும் இம்முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் இச்சங்கத்துக்குக் கிடைத்த புறத்திரட்டுப் பிரதிகளினின்று திரட்டப்பட்டன. இவற்றுள் இன்பப்பகுதிபற்றிய இன்பொருட்பாடல்கள் சென்னையிலிருக்கும் தமிழ்ப்பண்டிதர் ப்ரஹ்மஸ்ரீ தி-வேங்கடராமையங்காரவர்களுடைய புறத்திரட்டுக்காமத்துப்பால் ஏட்டிலும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகர் ஸ்ரீமத் ரா-சுப்பிரமணியக் கவிராயரவர்களுடைய புறத்திரட்டேட்டிலும்இருந்தன.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

செந்தமிழ்ப் பத்திராசிரியர்.

உ

கடவுள்துணை.

முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்.

கடவுள் வாழ்த்து.

க மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரு
மாதிரையா னாதிரையா னென்றென் றயர்வுறுமீ
யூர்திரைநீர் வேலி யுலகு.*

நாடு.

உ அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினந்தங்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு.

௩ நந்தி னிளஞ்சினையும் புன்னைக் †குவிமொட்டும்
பந்த ரிளங்கமுகின் பாளையுஞ்—சிந்தித்
திகழ்முத்தம் போற்றோன்றுஞ் செம்மற்றே தென்ன
னகைமுத்த வெண்குடையா னாடு.

௪ காவ லுழவர் களத்தகத்துப் போரேறி
‡நாவலோஒ வென்றழைக்கு நாளோதை—காவலன்றன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு.

---

* இதன் பின்னடி யிரண்டையும் நீலகேசித்தெருட்டுக் கடவுள் வாழ்த்துரையிற் சமயதிவாகர முனிவர் மேற்கோள் காட்டியுள்ளார். 'என்றென்ற யருமால்' எனவும் பாடமுண்டு.

† 'கருவிமொட்டும்' எனவும் பாடம்.

‡ "இதனுள் 'நாவலோஒ' என்புழி உயிரளபெடை செப்பலோசை கெடாதே வந்தவாறு கண்டு கொள்க" என்பது யாப்பருங்கலவிருத்தி. (௪)

பகைப்புலம் பழித்தல்.

௫ கரிபரந் தெங்குங் கடுமுள்ளி பம்பி
நரிபரந்து நாற்றிசையுங் கூடி—யெரிபரந்த
பைங்கண்மால் யானைப் பகையடுதோட் கோதையைச்
செங்கண் சிவப்பித்தார் நாடு.

௬ வேரறுகை பம்பிச் சுரைபடர்ந்து வேளைபூத்
தூரறிய லாகா கிடந்தனவே—போரின்
முகையவிழ்தார்க் கோதை * முசிறியார் கோமா
னகையிலைவேல் காய்த்தினார் நாடு.

௭ † இரியன் மகளிர் ‡ இலைஞெமலு ளீன்ற
வரியிளஞ் செங்காற் குழவி—யரையிரவில்
§ ஊமன்பா ராட்ட வுறங்கிற்றே செம்பியன்ற
னுமம்பா ராட்டாதார் நாடு.

---

* முசிறி - இது சேரநாட்டுச் சுள்ளியாறு கடலுடன் கலக்கு மிடத்திருந்த பெரிய துறைமுகப்பட்டினம். முற்காலத்து மேற்றேயத்து யவனர்மரக்கலங்கள் மிளகு முதலியன கொள்ளற்கு மிகுதியாகத் தங்கிய பெருந் துறைமுகம் இதுவே; இதனைச் "சேரலர், சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க, யவனர் தந்த வினைமா ணன்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும், வளங்கெழுமுசிறி" (கசக) என அகப்பாட்டின்கண் வருதலான் அறிக. தாலமி, பிளினி முதலிய மேற்றிசை யாத்திரைக்காரரும் இவ்வூர்த்துறை முகத்தைப் பற்றியும் இதன்கண் மிளகேற்றுதலைப் பற்றியும் மிகுதியாகக் கூறியுள்ளாரென்ப. வராகமிரர் பிரகற்சங்கிதைக்கண் மரிசிபட்டனம் என்னும் ஊர் தென்பாகத்துள்ளதாகக் கூறியுள்ளார். அஃது இம்முசிறியேயா மென்பது பலவிவேகிகளுடைய கொள்கை: (மரிசி-மிளகு.) இவ்வூரினை முன்னையோர் பாண்டியன் வளைந்து பெரும்போர் புரிந்து இதன்கணிருந்த சேரர்க்குரிய படிமம் ஒன்றைக் கவர்ந்து சென்றான் என்பது கசக-ஆம் அகப்பாட்டான் அறியப்படுகின்றது.

† இரியன் மகளிர்-கெடுதலுற்ற மகளிர்.

‡ இலைஞெமல்-இலைச்சருகு "ஒலிகழை பிசைந்த ஞெலிசொரி யொண்பொறி, படுஞெமல் புதையப் பொத்தி" என்பது அகம் (நக).

§ ஊமன்-கூகை.

அ வாகை வனமாலை சூடி யரசுறையு
மோகை யுயர்மாடத் துள்ளிருந்து—கூகை
படுபேய்க்குப் பாட்டயரும் பல்பிற்றே தென்னன்
விடுமாற்றங் கொள்ளாதார் நாடு.

கூ * பறைநிறை கொல்யானைப் பஞ்சவர்க்குப் பாங்காய்த்
திறைமுறையி னுய்யாதார் தேய—முறைமுறையி
ஞன்போ யரிவையர்போ யாடவர்போ யாயின்ற
வீன்போ யுறையு மிடம்.

திறை.

க0 பல்யானை மன்னர் படுதிறை தந்துய்ம்மின்
மல்ல னெடுமதில் வாங்குவிற் பூட்டுமின்
வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்
வில்லெழுதி வாழ்வர் விசும்பு.

கக நேமி நிமிர்தோ ளிலவுதார்த் தென்னவன்
காமர் நெடுங்குடைக் காவல னாணையா
லேம மணிப்பூ ணிமையார் திருந்தடி
பூமி மிதியாப் பொருள்.

கஉ நிறைமதிபோல் யானைமே னீலத்தார் மாறன்
குடைதோன்ற ஞாலத் தரசர்—திறைகொ
ளிறையோ வெனவந் திடம்பெறுத லின்றி
முறையோ வெனநின்றார் மொய்த்து.

கங நின்றீமின் மன்னீர் நெருநற் றிறைகொணர்ந்து
முன்றந்த மன்னர் முடிதாக்க—வின்றுந்
திருந்தடி புண்ணாகிச் செவ்வி யிலனே
பெருந்தண் ணுறந்தையார் கோ.

---

* பறை நிறைந்த கொல்யானை:— கொல்யானையை நீர்க்குவிட்டாற் பறை சாற்றிச் செல்லுதல் முன்னை வழக்கு. "நிறையழி கொல்யானை நீர்க் குவிட் டாங்குப், பறையறைந் தல்லது செல்லற்க" என்பது குறிஞ்சிக்கலி (உ0). 'அறைபறையானை' என்பர்முன்னும். "மத்தகஜமானது முன்னே தலைப்பறைகொட்ட வருமாபோலே வாடையை முன்னடக்கவிட்டுக்கொண் டாய்த்து மாலைவருவது" (கU-ரு-ரு) எனத் திருவாய்மொழி யீட்டினும் வருதல் காண்க.

எயில் கோடல்.

கச செருவெங் கதிர்வேற் சினவெம்போர் மாற
னுருமி னிடிமுர சார்ப்ப—* வரவுறழ்ந்
தாமா வுகளு மணிவரையி னப்புறம்போய்
வேமால் வயிறெரிய வேந்து.

குதிரை மறம்.

கரு நிரைகதிர்வேன் மாறனை நேர்நின்றார் யானைப்
புரைசை யறநிமிர்ந்து பொங்கா—வரசர்த
முன்முன்னு †வீழ்ந்த முடிக ளுதைத்தமாப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு.

யானைமறம்.

கசு வீறுசான் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற வெறிந்த பரிசயத்தாற்—றேறாது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கண்மே னீட்டுந்தன் கை.

கஎ ‡அயிற்கதவம் பாய்ந்துழக்கி யாற்றல்சான் மன்ன
ரெயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற்—பனிக்கடலுட்
பாய்தோய்ந்த நாவாய்போற் றோன்றுமே யெங்கோமான்
காய்சினவேற் ʂகிள்ளி களிறு.

கஅ மருப்பூசி யாக மறங்கனல்வேன் § மன்ன
ருருத்தகு மார்போலை யாகத்—திருத்தக்க
வையக மெல்லா மெமதென் றெழுதுமே
மொய்யிலைவேன் மாறன் களிறு.

---

* வேந்து போய் அரவுறழ்ந்து வயிறெரியவேம் என்க. "புற்றிழந்த, நாகக் குழாம்போ னடுங்கின வென்னுங்கொல், வேகக் குழாக்களிற்று வேந்து" என வரும்.

† 'வீழ்ந்தார்' எனவும் பாடம்.

‡ தொல்காப்பியம், பொருளதிகாரம், ககக, சுகூ-ஆம் பக்கங்கள்.

ʂ 'கோதைகளிறு' எனவும் பாடம். (தொல், பொரு, பக்-சுகூ.)

§ 'மன்னர் திருத்தகு' எனவும் பாடம்.

கக உருவக்தார்த் தென்னவ னோங்கெழில் வேழத்
திருகோடுஞ் செய்தொழி லெண்ணி—லொருகோடு
வேற்றா ரகல முழுமே யொருகோடு
மாற்றார் மதிற்றிறக்கு மால்.

உ0 கொடிமதில் பாய்ந்திற்ற கோடு மரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு.

உக கச்சி யொருகான் மிதியா வொருகாலாற்
றத்துநீர்த் தண்ணுஞ்சை *தான்மிதியாப்—பிற்றையு
மீழ மொருகான் மிதியா வருமேநங்
† கோழியர்கோன் கிள்ளி களிறு.

உஉ பாற்றின மார்ப்பப் பருந்து வழிப்படர
நாற்றிசையு மோடி நரிகதிப்ப—வாற்ற
வலங்கலம் பேய்மகளி ராட வருமே
யிலங்கிலைவேற் கிள்ளி களிறு.

உ௩ தோற்ற மலைகட லோசை புயல்கடாஅங்
காற்றி னிமிர்ந்த செலவிற்றாய்க்—‡கூற்றுங்
குறியெதிர்ப்பை கொள்ளுந் தகைமைத்தே பெங்கோ
னெறிகதிர்வேன் மாறன் களிறு.

உச அடுமதில் பாய வழிந்தன கோட்டைப்
பிடிமுன் பழகழித்த ஞணி—முடியுடை
மன்னர் குடையான் மறைக்குமே செங்கனல் வேற்
றென்னவர் கோமான் களிறு.

---

* உஞ்சை-உச்சயினி நகரம்.

† கோழி-உறையூர்; "முற்காலத்து ஓர் கோழி யானையைப் போர் தொலைத்தலான் அந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழி யென்பது பெயராயிற்று" என்றார் அடியார்க்கு நல்லார். (சிலப்-நாடுகாண்-உசஅ)

‡ யமனும் கொலையைக் கடன்வாங்கும் ஆற்றலுடையது. 'குறியெதிர்ப்பையாவது அளவுகொடுத்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது.' என்றார் பரிமேலழகர் (திருக்குறள்-உஉக).

களம்.

உரு வெருவரு வெஞ்சமத்து வேலிலங்க வீழ்ந்தார்
புருவ முரிவுகண் டஞ்சி—நரிவெரீஇச்
சேட்கணித்தாய் நின்றழைக்குஞ் செம்மற்றே தென்னவன்
வாட்கணித்தாய் வீழ்ந்தார் களம்.

உசு மரகதப்பூண் மன்னவர் தோள்வளை *கீழா
வயிரக் கடகக்கை வாங்கித்—துயருழந்து
புண்ணுற் றழைக்குங் குறுநரித்தே †பூழியனைக்
கண்ணுற்று வீழ்ந்தார் களம்.

உஎ முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய் யாகக்
கடித்த குடர்திரியா மாட்டி—பெடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎப் பொருத களம்.

உஅ ஏனைய பெண்டி ரெரிமூழ்கக் கண்டுதன்
றானையாற் கண்புதைத்தான் றேர்வழுதி—யானையெலாம்
புல்லார் பிடிபுலம்பத் தாங்கண் புதைத்தவே
பல்வாயார் பட்ட களத்து.

வென்றி.

உகூ கொடித்தலைத்தார்த் தென்னவன் றேற்றான்போ னின்றான்
மடித்தவாய் சுட்டிய கையாற்—பிடித்தவேற்
கண்ணோரா வோச்சிக் களிறணையாக் கண்படுத்த
மண்ணோரா மன்னரைக் கண்டு.

௩௦ தொழிலேற்றுப் பாலகனை முன்னிறீஇப் பின்னின்
றழலிலைவேல் காய்த்தினர் பெண்டீர்—கழலடைந்து
மண்ணீத்த லென்ப வயங்குதார் மாமாறன்
கண்ணீத்தர் தீர்க்கு மருந்து.

---

* 'கிளா' எனவும் பாடம்.

† பூழியன்-சேரன்: பூழிநாட்டையுடையான் என்பது பொருள்; "பூழியர்கோக்கோதை" என்பர் முன்னும் (கூஎ).

புகழ்.

நுக மடங்கா மயிலூர்தி மைந்தனை நாளுங்
கடம்பம்பூக் கொண்டேத்தி யற்றாற்—றொடங்கமரு
ணின்றிலங்கு வென்றி நிறைகதிர்வேன் மாறனை
யின்றமிழால் யாம்பாடும் பாட்டு.

நுஉ செங்கணெடியான்மேற் றேர்விசய னேற்றியபூப்
பைங்கண்வெள் ளேற்றான்பாற் கண்டற்றா—லெங்கு
முடிமன்னர் சூடியபூ மொய்ம்மலர்த்தார் மாற
னடிமிசையே காணப் படும்.*

நுநு கூந்தன்மா கொன்று குடமாடிக் கோவலனாய்ப் [தாய்
பூந்தொடியைப் புல்லிய ஞான்றுண்டால்—யாங்கொளித்
தென்னவனே தேர்வேந்தே தேறுநீர்க் கூடலார்
மன்னவனே மார்பின் மறு.†

நுச வானிற்கு வையகம் போன்றது வானத்து
மீனிற் கனையார் மறமன்னர்—வானத்து
மீன்சேர் மதியனையன் விண்ணுயர் கொல்லியர்
கோன்சேரன் கோதைவேன் பான்.

நுரு மந்தரங் காம்பா மணிவிசும் போலையாத்
திங்க ளதற்கோர் திலகமா—வெங்கணு
முற்றுநீர் வைய முழுது நிழற்றுமே
கொற்றப்போர்க் கிள்ளி குடை.‡

---

* தீர்த்த னுலகளந்த சேவடிமேற் பூந்தாமம்
சேர்த்தி யதுவே சிவன்முடிமேற் றான்கண்டு
பார்த்தன் றெளிந்தெழுந்த பைந்துழா யான்பெருமை
பேர்த்து மொருவராற் பேசக் கிடந்ததே. என்பது திருவாய்மொழி (உ-அ-கூ).

† குருந்த மொசித்தஞான் றுண்டா லதனைக்
கரந்த வடிவெமக்குக் காட்டாய்—மரம்பெரு
போரிற் குருகுறங்கும் பூம்புன னீர்நாட
மாற்பிற் கிடந்த மறு. என்பதும் இக்கருத்தேபற்றிவந்தது. (தொல்காப்பியம், புறத்திணையியல்-ரு. நச்சினார்க்கினியருரை மேற்கோள்).

‡ தொல்காப்பியம், பொருளதிகாரம், உகரு-ஆம் பக்கம்.

௩௫ பார்படுப செம்பொன் பதிபடுப முத்தமிழ்நா
னீர்படுப வெண்சங்கு நித்திலமுஞ்—சாரன்
மலைபடுப யானை வயமாறன் கூர்வேற்
றலைபடுப தார்வேந்தர் மார்பு.

௩௭ அருமணி யைந்தலை யாடரவம் வானத்
துருமேற்றை யஞ்சி யொளிக்குஞ்—செருமிகுதோட்
செங்கண்மா மாறன் சினவேல்.* கனவுமே
யங்கண்மா ஞாலத் தரசு.

௩௮ அரும்பவிழ்தார்க் கோதை யரசெறிந்த வெள்வேல்
பெரும்புலவுஞ் செஞ்சாந்து நாறிச்—சுரும்பொடு
வண்டாடு பக்கமு முண்டு குறுநரி
கொண்டாடும் பக்கமு முண்டு.

௩௯ கண்ணார் கதவந் திறமின் களிறொடுதேர் †
பண்ணார் நடைப்புரவி பண்விடுமின்—நண்ணார்தந்
தேர்வேந்தன் றென்னன் றிருவுத் திராடநாட்
போர்வேந்தன் பூச லிலன்.‡

௪௦ அந்தண ராவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தா—ரெந்தை
யிலங்கிலைவேற் கிள்ளி யிரேவதிநா ளென்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு.§

கைக்கிளை.

௪௧ செய்யா ரெனினுந் தமர்செய்வ ரென்னுஞ்சொன்
மெய்யாதல் கண்டேன் விளங்கிழாய்—கையார்
வரிவளை நின்றன வையையார் கோமான்
புரிவளை போந்தியர்பக் கேட்டு.

---

* கனவும்-அச்சத்தாற் கனவினுங் காணும்.

† 'தார்' எனவும் பாடம்.

‡ § தொல்காப்பியம், பொருளதிகாரம், ௨௧௪-ஆம் பக்கம்.

௪௨ திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாத
ரிறந்து படிற்பெரிதா மேத—முறந்தையர்கோன்
றண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.*

௪௩ தாய ரடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே—யாய்மலர்
வண்டுலாஅங் கண்ணி வயமான்றேர்க் கோதையைக்
கண்டுலாஅம் வீதிக் கதவு.

௪௪ காப்படங்கென் றன்னை கடிமனை யிற்செறித்
தியாப்படங்க வோடி யடைத்தபின்—மாக்கடுங்கோ
னன்னலங் காணக் கதவந் துளைதொட்டார்க்
கென்னைகொல் கைம்மா றினி.

௪௫ துடியடித் தோற்செவித் தூங்குகை நால்வாய்ப்
பிடியேயா னின்னை யிரப்பல்—கடிகமழ்தார்ச்
† சேலேக வண்ணனொடு சேரி புகுதலுமெஞ்
‡ சாலேகஞ் சார நட.

௪௬ எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்
புலாஅ னெடுநல்வேன் மாற—னுலாஅங்காற்
§ பைய நடக்கவுந் தேற்றியா னின்பெண்மை
யையப் படுவ துடைத்து.

௪௭ நீணீலத் தார்வளவ னின்மேலா னாகவு
நாணின்மை யின்றி நடத்தியா—னீணிலங்
கண்டன்ன கொண்டல் வருங்கா விரிநாட்டுப்
பெண்டன்மை யில்லை பிடி.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், ௭௯௨-ஆம் பக்கம்.

† சேலேகம். சந்தனம். ‡ சாலேகம்-சாளரம்.

§ மடநடை பெண்மை வனப்பென வோராய், கடுநடை கற்றாய் கணவனிழப்பாய், பிடியை பாவியெனப் பூண் பிறழ்ந்து, புடைமுலை விம்மப் புலந்தனர் நிற்பார் என்பது சிந்தாமணி-(மண்மகள்-௨௪).

௪௮ சுடரிலைவேற் சோழன்றன் பாடல மேறிப்
படர்தந்தான் பைந்தொடியார் காணத்—தொடர்புடைய
நீல வலையிற் கயல்போற் பிறழுமே
சாலேக வாயிறொறுங் கண்.

௪௯ போரகத்துப் பாயுமா பாயா துபாயமா
வூரகத்து மெல்ல நடவாயோ—கூர்வேன்
மதிவெங் களியானை மாறன்றன் மார்பங்
கதவங்கொண் டியாமுந் தொழ.

௫0 ஆடுகோ சூடுகோ வைதாக் கலந்துகொண்
டேடுகோ டாக வெழுதுகோ—நீடு
புனவட்டப் பூந்தெரியற் பொற்றேர் வழுதி
கனவட்டங் கால்குடைந்த நீறு.

௫௧ குடத்து விளக்கேபோற் கொம்பன்னார் காமம்
புறப்படா பூந்தார் வழுதி—புறப்படி
னாபுகு மாலை யணிமலையிற் றீயேபோ
னாடறி கௌவை தரும்.

௫௨ வரைபொரு நீண்மார்பின் வட்கார் வணக்கு
நிரைபொரு வேன்மாந்தைக் கோவே—நிரைவளையார்
தங்கோலம் வவ்வுத லாமோ வவர்தாய்மார்
செங்கோல னல்லனென.

௫௩ வாமான்றேர்க் கோதையை மான்றேர்மேற் கண்டவர்
மாமையே யன்றோ விழப்பது—மாமையிற்
பன்னூறு கோடி பழுதோவென் மேனியிற்
பொன்னூறி யன்ன பசப்பு.

௫௪ வழுவிலெம் வீதியுண் மாறன் வருங்காற்
றொழுதேனைத் தோணலமுங் கொண்டா—னிமிழ்திரைக்
கார்க்கடற் கொற்கையார் காவலனுந் தானேயால்
யார்க்கிடுகோ பூச லினி.

௫௫ கண்டன வுண்கண் கலந்தன நன்னெஞ்சந்
தண்டப் படுவ தடமென்றோள்—கண்டா
யுலாஅ மறுகி லுறையூர் வளவற்
கெலாஅ முறைகிடந்த வாறு.

௫௬ மன்னுயிர் காவல் தனதான வவ்வுயிரு
ளென்னுயிரு மெண்ணப் படுமாயி—னென்னுயிர்க்கே
சீரொழுகு செங்கோற் செழியற்கே தக்கதோ
*நீரொழுகப் பாலொழுகா வாறு.

௫௭ என்னெஞ்சு நாணு நலனு மிவையெல்லா
மன்னன் புனனாடன் வௌவினான்—என்னே
யரவக லல்குலா யாறிலொன் றன்றோ
புரவலர் கொள்ளும் பொருள்.

௫௮ தானேற் றனிக்குடைக் காவலனாற் காப்பதுவும்
வானேற்ற வையக மெல்லாமால்—யானோ
வெளியேனோர் பெண்பாலே னீர்ந்தண்டார் மாற
னளியானே லன்றென்பா ரார்.

௫௯ †கனவினுட் காண்கொடா கண்ணுங் கலந்த
நனவினுண் முன்விலக்கு நாணு—மினவங்கம்
பொங்கோதம் போழும் புகாஅர்ப் பெருமானார்
செங்கோல் வடுப்படுப்பச் சென்று.

௬0 தானைகொண் டோடுவ தாயிற்றன் செங்கோன்மை
சேனை யறியக் கிளவேனோ—யானை
பிடிவீசும் வண்டடக்கைப் பெய்தண்டார்க் கிள்ளி
நெடுவீதி நேர்பட்ட போது.

---

* முறைதெரிந்து செல்வர்க்கு நல்கூர்ந்த வர்க்கு
மிறைதிரியா னேரொக்கல் வேண்டு—முறைதிரிந்து
நேரொழுகா னாயி னதுவா மொருபக்க
நீரொழுகப் பாலொழுகு மாறு. (பழமொழி-உ௰௬.)

† தொல், பொரு, எ௯௫-ஆம் பக்கம்.

சுக தெண்ணீர் நறுமலர்த்தார்ச் சென்னி யிளவளவன்
மண்ணகங் காவலனே யென்பரான்—மண்ணகங்
காவலனே யானக்காற் காவானோ மாலைவாய்க்
கோவலர்வாய் வைத்த குழல்.

சுஉ அறைபறை யானை யலங்குதார்க் கிள்ளி
முறைசெயு மென்பராற் றோழி—யிறையிறந்த
வங்கோ லணிவளையே சொல்லாதோ மற்றவன்
செங்கோன்மை செந்நின்ற வாறு.

சுந * களியானைத் தென்னன் கனவின்வந் தென்னை
யளியா னளிப்பானே போன்றான்—றெளியாதே
செங்காந்தண் மெல்விரலாற் சேக்கை தடவந்தே
னென்காண்பே னென்னலால் யான்.

சுச கார்நறு நீலங் கடியகத்து வைகலு
நீர்நிலை நின்ற தவங்கொலோ—கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியாற்
கொண்டிருக்கப் பெற்ற குணம்.

சுரு அறிவாரார்............பெண்டிரோ மாகச்
செறிவார் தலைமேல் நடந்து—மறிதிரை
பாட முரிஞ்சு மதுரையார் கோமானைக்
கூட வொருநாள் பெற.

சுசு அன்னையுங் கோல்கொண் டலைக்கு மயலாரு
மென்னை யழியுஞ்சொற் சொல்லுவர்—நுண்ணிலைய
† தெங்குண்ட தேரை படுவழிப் பட்டேன்யான்
றிண்டேர் வளவன் றிறத்து.

சுஎ நீரு நிழலும்போ னீண்ட வருளுடைய
வூரிரோ யென்னை யுயக்கொண்மின்—போரிற்
புகலுங் களியானைப் பூழியர்கோக் கோதைக்
கழலுமென் னெஞ்சங் கிடந்து.

---

* தொல், பொரு, ககக-ம் பக்கம்.

† "தேரையார் செவ்விளநீ ருண்ணப் பழிசுமப்பர்" என்ப.

சுஅ புலவி புறக்கொடுப்பன் புல்லிடினு ணிற்பன்
கலவி களிமயங்கிக் காணே—னிலவியசீர்
மண்ணாளுஞ் செங்கோன் வளவனை யானிதன்றே
கண்ணாரக் கண்டறியா வாறு.

சுகூ கைய தவன்கடலுட் சங்கமாற் பூண்டதுவுஞ்
செய்யசங் கின்ற செழுமுத்தான்—மெய்யதுவு
மன்பொரு வேன்மாறன் வார்பொதியிற் சந்தனமா
லென்பெறு வாடுமென் றோள்.

எ0 நாணுக்காற் பெண்மை நலனழியு முன்னின்று
காணுக்காற் கைவளையுஞ் சோருமாற்—காணேனன்
வண்டெவ்வந் தீர்தார் வயமான் வழுதியைக்
கண்டெவ்வந் தீர்வதோ ராறு.

எக * வாருயர் பெண்ணை வருகுரும்பை வாய்ந்தனபோ
லேரிய வாயினு மென்செய்யுங்—கூரிய
கோட்டானைத் தென்னன் குளிர்சாந் தணியகலங்
கோட்டுமண் கொள்ளா முலை.

எஉ ஏற்பக் குடைந்தாடி லேசுவ ரல்லாக்கான்
மாற்றி யிருந்தா ளெனவுரைப்பர்—வேற்கண்ணாய்
கொல்யானை மாறன் குளிர்புனல் வையைநீ
ரெல்லா மெனக்கோ ரிடர்.

எங கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவேனேற் கூடென்று—கூட †
லிழைப்பாள்போற் காட்டி யிழையா திருக்கும்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து.

---

* சிலப்பதிகாரம், நாடுகாண்காதை, கஉகூ. அடி, அடியார்க்கு நல்லாருரை. தொல், பொருள், சுஙங-ஆம் பக்கம்.

† இதனைக் "கூடலாவது வட்டமாகக் கோட்டைக்கீறி அதுக்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ்சுழித்து இவ்விரண்டுசுழியாகக் கூட்டினால், இரட்டைப்பட்டாற் கூடுகை : ஒற்றைப்பட்டாற் கூடாமை என்று ஸங்கேதம்" என நாச்சியார்திருமொழியுரையினும், "மணற்குன்றி னீத்தகன்றார் வருகென், றுழிதிருத்திச் சுழிக்கணக்கோதி" எனத் திருச்சிற்றம்பலக்கோவையினும் (கஅசு) "வளைத்துக்கிடந்த வரிமணற் கூடலும்" என அம்பிகாபதிகோவையினும் (நஉஉ) வருவனவற்றான் உணர்க.

எச செங்கான் மடநாராய் தென்னுறந்தை சேறியே
னின்கான்மேல் வைப்பனென் கையிரண்டும்—நன்பாற்
கரையுரிஞ்சி மீன்பிறழுங் காவிரிநீர் நாடற்
குரையாயோ யானுற்ற நோய்.

எரு என்னை யுரையலென் பேருரைய லூருரைய
லன்னையு மின்ன ளெனவுரையல்—பின்னையுந்
தண்படா யானைத் தமிழ்நர் பெருமாற்கென்
கண்படா வாறே யுரை.

எசு கடற்றானைக் கோதையைக் காண்கொடாள் வீணி
லடைத்தா டனிக்கதவ மன்னை—யடைக்குமே
லாயிழையா யென்னை யவன்மே லெடுத்துரைப்பார்
வாயு மடைக்குமோ தான்.

எஎ வளையவாய் நீண்டதோள் வாட்கணா யன்னை
யிளையளாய் மூத்திலள் கொல்லோ—தளையவிழ்தார்
மன்கொண்ட தானை மறங்கனல்வேன் மாறனைக்
கண்கொண்டு நோக்கலென் பாள்.

எஅ கொடிபாடித் தேர்பாடிக் கொய்சுவண்டார் மாறன்
முடிபாடி முத்தாரம் பாடித்—தொடியுலக்கை
கைம்மனையி லோச்சப் பெறுவெனோ யானுமோ
ரம்மனைக் காவ லுளேன்.

எகூ குதலைப் பருவத்தே கோழிக்கோ மானை
வதுவை பெறுகென்றா ளன்னை—யதுபோய்
விளைந்தவா வின்று வியன்கானல் வெண்டேர்த்*
துளங்குநீர் மாமருட்டி யற்று.

அ0 அலங்குதார்ச் செம்பிய னாடெழிற்றோ ணோக்கி
விலங்கியான் வேண்டா வெனினு—நலந்தொலைந்து
பீர்மேற் கொளலுற்ற பேதையர்க் கென்வாய்ச்சொ
னீர்மே லெழுந்த நெருப்பு.

---

* வெண்டேர் - பேய்த்தேர்.

௮௧ கோட்டெங்கு சூழ்*கூடற் கோமானைக் கூடவென
வேட்டாங்குச் சென்றவென் னெஞ்சறியாள்—கூட்டே
குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போ லன்னை
வெறுங்கூடு காவல்கொண் டாள்.

௮௨ புன்னாகச் சோலை புனற்றெங்கு சூழ்மாந்தை
நன்னாக நின்றலரு நன்னாடன்—னென்னாகங்
கங்கு லொருநாட் கனவினுட் டைவந்தா
னென்கொ லிவரறிந்த வாறு.

௮௩ களியானைத் தென்ன னிளங்கோவென் றெள்ளிப்
பணியாரே தம்பா ரிழக்க—வணியாகங்
கைதொழு தேனு மிழக்கோ நறுமாவின்
கொய்தளி ரன்ன நிறம்.†

௮௪ கனவை நனவென் றெதிர்விழிக்குங் காணு
நனவி லெதிர்விழிக்க நாணும்—புனையிழா
யென்க ணிவையானா லெவ்வாறோ மாமாறன்
றன்க ணருள்பெறுமா தான்.

௮௫ தளையவிழும் பூங்கோதைத் தாயரே யாவி
களையினுமென் கைதிறந்து காட்டேன்—வளைகொடுபோம்
வன்கண்ணன் வான்மாறன் மால்யானை தன்னுடன்வந்
தென்கண் புகுந்தா னிரா.

௮௬ ஓராற்றா னென்க ணிமைபொருந்த வந்திலையே
கூரார்வேன் மாறனென் கைப்பற்ற—வாரா
நனவென் றெழுந்திருந்தே னல்வினையொன் றில்லேன்
கனவு மிழந்திருந்த வாறு.

௮௭ ஊட லெனவொன்று தோன்றி யலருறாவுங்
கூட லிழந்தேன் கொடியன்னாய்—நீடெங்கின்
பாளையிற் றேன்றொடுக்கும் பாய்புன னீர்நாட்டுக்
காளையைக் கண்படையுட் பெற்று.

---

* மாந்தை எனவும் பாடம்.

† தொல், பொருள், பக்கம். ககக.

௮௮ ஆய்மணிப் பைம்பூ ணலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தே—னாணிப்
பெருஞ்செல்வ ரில்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் னெஞ்சு.

௮௯ நாணொருபால் வாங்க நலனொருபா லுண்ணெகிழ்ப்பக்
காமருதோட் கிள்ளிக்கென் கண்கவற்ற—யாமத்
திருதலைக் கொள்ளியி னுள்ளெறும்பு போலத்
திரிதரும் பேருமென் னெஞ்சு.

௯௦ வரக்கண்டு நாணாதே வல்லைபா னெஞ்சே
*மரக்கண்ணோ மண்ணாள்வார் கண்ணென்—றிரக்கண்டாய்
வாளுழவை வெல்கொடியான் வண்புனனீர் நாடற்கென்
றோளுழவத் தோன்றத் தொழுது.

௯௧ உகுவாய் நிலத்த துயர்மணன்மே லேறி
நகுவாய்முத் தின்றசைந்த சங்கம்—புகுவான்
றிரைவரவு பார்த்திருக்குந் தென்கொற்கைக் கோமா
னுரைவரவு பார்த்திருக்கு நெஞ்சு.

௯௨ கடும்பனித் திங்கட்டன் கைபோர்வை யாக
நெடுங்கடை நின்றதுகொ றோழி—நெடுஞ்சினவே
லாய்மணிப் பைம்பூ ணலங்குதார்க் கோதையைக்
காணிய சென்றவென் னெஞ்சு.

௯௩ மாறடுபோர் மன்னர் மதிக்குடையுஞ் செங்கோலுங்
கூறிடுவாய் நீயோ குளிர்வாடாய்—சோறடுவா
ராரத்தாற் றீமூட்டு மம்பொதியிற் கோமாற்கென்
வாரத்தாற் றோற்றேன் வளை.

௯௪ புகுவார்க் கிடங்கொடா போதுவார்க் கொல்கா
நகுவாரை நாணி மறையா—விருகரையி
னேமான் பிணைபோல நின்றதே கூடலார்
கோமான்பின் சென்றவென் னெஞ்சு.

---

* ௫௭௬-ஆம் திருக்குறட் பரிமேலழகருரை.

௯௫ பிணிகிடந் தார்க்குப் *பிறந்தநாட் போல
வணியிழை யஞ்ச வருமான்—மணியானை
மாறன் வழுதி மணவா மருண்மாலைச்
சிறியோர் வாடை சினந்து.

௯௬ பேயோ பெருந்தண் பனிவாடாய் பெண்பிறந்தா
ரேயோ வுனக்கிங் கிறைக்குடிக—ணீயோ
களிபடுமால் யானைக் கடுமான்றேர்க் கிள்ளி
யளியிடை யற்றம்பார்ப் பாய்.

௯௭ நாம நெடுவேல் நலங்கிள்ளி சோணாட்டுத்
தாமரையு நீலமுந் தைவந்—தியாமத்து
†வண்டொன்று வந்தது வாரல் பனிவாடாய்
பண்டன்று பட்டினங் காப்பு.

௯௮ மாணார்க் கடந்த மறவெய்போர் மாறனைக்
காணக்கா லாயிரமுஞ் சொல்லுவேன் கண்டக்காற்
பூணாகந் தாவென்று புல்லப் பெறுவேனோ
நாணோ டுடன்பிறந்த நான்.

௯௯ வருக குடநாடன் வஞ்சிக்கோ மானென்
றருகல ரெல்லா மறிய—வொருகலா
முண்டா யிருக்கவவ் வொண்டொடியா ளம்மறவனைக்
கண்டா ளொழிந்தாள் கலாம்.

௪00 புல்லாதார் வல்லே புலர்கென்பர் புல்லினார்
நில்லா யிரவே நெடிதென்பர்—நல்ல
விராஅமலர்த் தார்மாறன் வெஞ்சாந் தகல
மிராவளிப் பட்ட திது.

---

* பிணியுற்றார்க்குப் பிறந்தநாளிற் பிணிமிகும் என்று சோதிடநூல்வல்லார் கூறுவர்.

† தொல், பொருளுரை, பக்கம்-௬௩௩.

௧௦௧ இப்பியீன் றிட்ட வெறிகதிர் நித்திலங்
கொற்கையே யல்ல படுவது—கொற்கைக்
குருதிவேன் மாறன் குளிர்சாந் தகலங்
கருதியார் கண்ணும் படும்.

௧௦௨ இவனென் னலங்கவர்ந்த கள்வ னிவனென்று
நெஞ்ச நிறையழித்த கள்வனென்—றஞ்சொலாய்
செல்லு நெறியெலாஞ் சேரலர்கோக் கோதைக்குச்
சொல்லும் பழியோ பெரிது.

௧௦௩ காராட் டுதிரந்தூஉ யன்னை களனிழைத்து
நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ—போராட்டு
வென்று களங்கொண்ட வெஞ்சினவேற் கோதைக்கெ
னெஞ்சங் களங்கொண்ட நோய்.

௧௦௪ யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின்
றானூட யானுணர்த்தத் தானுணரான்—றேனூறு
கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகல
மெய்தா திராக்கழிந்த வாறு.*

௧௦௫ மல்லனீர் மாந்தையார் மாக்கடுங்கோக் காயினுஞ்
சொல்லவே வேண்டு நமதுறை—நல்ல
திலகங் கிடந்த திருநுதலா யஃதா
லுலகங் கிடந்த வியல்பு.

முற்றிற்று.

---

* தொல், பொருளுரை, ௧௬௮-ம் பக்கம்.

திருச்சிற்றம்பலம்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

இச்சங்கத்தார் 1904-ஹு நவம்பர்மீ 19-ம் தேதியில் நடாத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப் பரீட்சையிலும் 1905-ஹு 23, 24, 25-ம் தேதிகளில் நடாத்திய தனித்தமிழ்ப் பரீட்சையிலும் தேறிப் பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணுக்கர்களின் விவரம்.

பி. ஏ. பரீட்சை.

I. வகுப்பு.

1. P. பொன்னுரங்கமுதலியார், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை } (I) 50ரூ பெறத்தக்க தங்கப்பதக்கப்பரிசு.

II. வகுப்பு.

2. S. அப்பாவுப்பிள்ளை, செயிண்டு ஜோஸப் காலேஜ், திருச்சி.
3. K. ராஜாராவ், ௸
4. A. நடேசன், யஸ்-பி-ஜி-காலேஜ், திருச்சி.
5. N. S. ரத்தினசபாபதி, கிறிஸ்டியன் காலேஜ், சென்னை.
6. T. B. தாஸராவ், பிரஸிடென்ஸி காலேஜ், சென்னை.
7. S. S. கிருஷ்ணசாமி, கவர்ன்மெண்டுகாலேஜ், கும்பகோணம்.
8. J. R. வல்சலம், மஹாராஜாஸ் காலேஜ், திருவனந்தபுரம்.

யப் ஏ. பரீட்சை.

I. வகுப்பு.

1. V. முத்துசாமி அய்யர், யஸ்-பி-ஜி-காலேஜ், திருச்சி. } (I) 10ரூ பெறத்தக்க தங்கப்பதக்கப்பரிசு.

II. வகுப்பு.

2. A. S. வெங்கிடசுப்பிரமணியன், செயிண்டுஜோஸப் காலேஜ், கூடலூர்.

3. W. P. மார்க்கபந்துவையர், முனிசிபல் காலேஜ், சேலம்.
4. M. D. தங்கஸாமி, மஹாராஜாஸ் காலேஜ், திருவனந்தபுரம்.
5. G. விஸ்வநாதன், ஸ்காட்கிறிஸ்டியன் காலேஜ், நாகர்கோயில்.
6. N. நஞ்சப்பன், செண்டுமைக்கேல் காலேஜ், கோயம்புத்தூர்.
7. A. பெரியநாயகம், அர்ச்மைக்கேல் காலேஜ், கோயம்புத்தூர்.
8. E. S. சிதம்பரம், செண்டு ஜோஸப் காலேஜ், திருச்சி.
9. M. சின்னய்யா, யஸ்-பி-ஜி-காலேஜ், திருச்சி.
10. P. S. கிருஷ்ணசாமி, ஷை
11. R. ராகவன், ஷை
12. R. S. கிருஷ்ணசாமி, கவர்ன்மெண்டு காலேஜ், கும்பகோணம்.
13. S. சம்பந்தமூர்த்தி, ஷை
14. R. சுப்பிரமணியன், ஷை
15. K. நாராயணசாமி, ஷை
16. S. கணபதிசுப்பிரமணியன், ஷை
17. N. பஞ்சாபகேசன், ஷை
18. A. சொக்கலிங்கம், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
19. V. K. வீரராகவாசாரி, ஷை
20. C. K. லட்சுமணன், ஷை
21. A. பட்சிராஜய்யங்கார், ஷை
22. A. R. நடராஜன், ஷை
23. V. கிருஷ்ணன், சி. யம். எஸ். காலேஜ், திருநெல்வேலி.
24. V. S. சுப்பிரமணியன், ஷை சென்னை.
25. M. R. சிவராமகிருஷ்ணன், ஷை
26. S. தோத்தாத்திரி, கிறிஸ்டியன் காலேஜ், சென்னை.
27. P. K. கிருஷ்ணமாசாரியார், வெஸ்லியன்மிஷன்காலேஜ், சென்னை

மெட்றிகுலேஷன். (I) வகுப்பு.

1. எலிசபெத்சாமுடல் (பெண்) மஹாராஜாஸ் கேர்ல்ஸ் காலேஜ், திருவனந்தபுரம். } (I). (30ரூ.) வெள்ளிப்பதக்கமும் மீத ரூ-ம் கூடிய பரிசு.
2. P. தேவுத்ஸா, நேட்டிவ் ஹைஸ்கூல், கும்பகோணம். } (II) 25ரூ. பரிசு.
3. T. N. சீதாராமராவ், முனிசிபல் காலேஜ், சேலம். } (III) 20ரூ. பரிசு.

(II) வகுப்பு.

4. T. M. B. நரசிம்மன், நேட்டிவ் காலேஜ், மதுரை.
5. A. மீனாக்ஷிசுந்தரம், ௸
6. B. தேவவரம், பசுமலை காலேஜ், பசுமலை.
7. S. அருள்சாமுவேல், ௸
8. V. சங்கரலிங்கம், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.
9. R. சண்முகசுந்தரம், ௸
10. P. K. சங்கரன், ௸
11. M. R. சேஷன், அமெரிக்கன் மிஷன் ஹைஸ்கூல், மதுரை.
12. D. S. ராமசுப்பு, முனிசிபல் ஹைஸ்கூல், திண்டுக்கல்.
13. V. அங்கமுத்து, ௸
14. T. P. நாகசுப்பிரமணியன், விக்டோரியா மெமோரியல் ஹைஸ்கூல், பெரியகுளம்.
15. P. K. விஸ்வநாதன், சி.யம்.யஸ். ஹைஸ்கூல், பாளையங்கோட்டை.
16. G. சவுரிநாயக்கன், ௸
17. K. A. ஹரிமுத்துசாமிஅய்யர், ஹைஸ்கூல், பத்தமடை.
18. P. மோசே, ஸ்காட் கிறிஸ்டியன் காலேஜ், நாகர்கோயில்.
19. S. ராமச்சந்திரன் சேர்வை, மஹாராஜாஸ்காலேஜ், திருவனந்தபுரம்.
20. S. ஜான், ௸
21. G. P. கிருஷ்ணமூர்த்தி, சென்டுஜோஸப் காலேஜ், திருச்சி.
22. G. G. நாராயணசாமி, ௸
23. T. V. ராமச்சந்திரன், ௸
24. N. K. சுந்தரேசன், போர்ட் ஹைஸ்கூல், லால்குடி.
25. A. R. நாராயணன், ௸
26. A. S. கிருஷ்ணமூர்த்தி, மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
27. M. N. ராமய்யா; ௸
28. P. S. சங்கரய்யர், நாஷனல் ஹைஸ்கூல், திருச்சி.
29. S. ஆத்மநாதன், ௸
30. K. சரவணபவன், ௸
31. G. கிருஷ்ணசாமி, யஸ்-பி-ஜி-ஹைஸ்கூல், திருச்சி.
32. சேஷாத்திரி, நேடிவ்ஹைஸ்கூல், கும்பகோணம்.

33. K. நரசிங்கராவ், ஷை
34. R. பாலசுப்பிரமணியன், ஷை
35. S. வெங்கடசாமி, முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
36. B. ருத்திரசாமி அய்யர், செண்டு ஜோஸப் காலேஜ், கூடலூர்.
37. வேதாந்தராமானுஜாசாரியார், கால்வே காலேஜ், புதுச்சேரி.
38. K. நாராயணசாமி, பச்சையப்பாஸ் காலேஜ், சென்னை.
39. T. V. பத்மனுதராவ், சி-யஸ்-யர்-காலேஜ், சென்னை.
40. K. துரைசாமிமுதலியார், மிஷன்காலேஜ், ஆற்காடு.
41. G. ரகுநாதசிங், ஷை
42. C. K. பிச்சையபிள்ளை, ஷை
43. K. V. கிருஷ்ணசாமி, லண்டன் மிஷன் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.
44. K. ஜெகநாதசாஸ்திரி, முனிசிபல் காலேஜ், சேலம்.
45. J. N. ராமனுதன், ஷை
46. K. அர்த்தனரி அய்யர், ஷை
47. M. விஸ்வநாதசெட்டி, ஷை
48. G. அநுமந்தநாயடு, ஷை
49. S. K. கிருஷ்ணசாமி, மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.

தனித் தமிழ்ப் பரீக்ஷை.

பிரவேச பண்டித பரீக்ஷை.

I. வகுப்பு.

1. A. கோபாலையர், மதுரை. (I) 50ரூ பெறத்தக்க தங்கப்பதக்கப் பரிசு.
2. M. வெங்கடசாமிநாடார், திருச்சி. (II) 30ரூ பரிசு.

II. வகுப்பு.

3. T. S. அப்பாவுபிள்ளை, திருச்சி.
4. முருகப்பக்கவிராயர், திருச்சி.

குறிப்பு:— (1) பரீக்ஷைக்கு வந்தவர்களின் தொகை.—பி. ஏ.—10. யப். ஏ—57. மெட்றிகுலேஷன்—235. பிரவேசபண்டிதபரீக்ஷை—8.

(2) 1905-ம் வருஷத்திற்குப் பாடங்கள்.—ஆங்கிலகலாசாலை மாணக்கர்களுக்கு—சர்வகலாசாலைச் சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட அவ்வவ்வகுப்புக்குரிய தமிழ்ப்பாடங்களே; பிரவேசபண்டிதபரீக்ஷைக்கு சென்ற வருஷத்தைப்போலவேயாம்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩.] குரோதி ௵ மாசி ௴ [பகுதி-௪.

கம்பர்.

(௮௭-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவர் பிரதாபருத்திரனிடம்போய்ச்சிறந்துவந்தது.

கம்பர் தம்மகனையும் மகளையும் இழந்ததுயரம் ஆற்றாதவராய்ச் சோழனையும் சோணாட்டையும் வெறுத்து அக்காலத்துச் சோழனினும் அமைச்சு நாடு அரண் பொருள் படை நட்பு என்னும் அங்கங்களால் பெரிதும் மேம்பட்டு விளங்கிய *ஓரங்கல் நாட்டுப் பிரதாபருத்திரன் என்னும் வேந்தனிடம் செல்லற்குநினைந்து நென்மலி (நெல்வேலி எனவுஞ்சொல்லுவர்) என்னும் ஊர்க்குப்போய் அங்குள்ள தச்சனொருவனைப்பாட அவன் ஆயிரக்கலநெல்லுக் கொடுக்கப்பெற்று அதனைத்தம் குடும்பசீவனத்திற்கு இட்டுவைத்துத் தாம் தொண்டைநாடு போயினர். இவர் சோழனைக் கோபித்தபோதே இவர் அவன்பாலெய்திய பேருரிமையெல்லாம் இழந்து வறியராய்ப்போயினராவர். இவர் தொண்டைநாடு போம்போது ஒரு வேளாளன் களத்திற் குறுணிநெல் வாங்கி அதனை வேலிக்காலிலிறைத்துப் பாடினர் என அறியப்படுதலானும் இவர் வறுமை யுணரப்படும். இவர் தொண்டைநாட்டுள்ள ஓர் ஏழைமனைக்கட் புக்கபோது அவன் நல்லுணவில்லாமல் மாவையே நீரிற்கரைத்து அதனை இவர் திருமுன்பு வைத்து இவரை நோக்கி யானும் என்னுரிமையும் நுமக்கேயடிமை யென்றுகூறி அதனை யமுதுசெய்தருளுமாறு வேண்ட அச்சில்லுணவை அவனதன்புடைமைக்கு மகிழ்ந்து பருகிப்போய் அந்நாட்டுள்ள சான்றோர் பிறரைப்பாடி அவர்களாற் பசுநிரையும் எருமைக்கூட்டமும்

---

* ஓரங்கல். ஐதராபாத்துக்கு வடகிழக்கேயுள்ளது. காகதீயர் கணபதிகள் எனப்பட்ட ஆந்திரராஜாக்களுடைய தலைநகராகச்சிறந்தது.

ஆடையாபரணங்களும் பிறவரிசைகளும் அளிக்கப்பெற்று ஆங்குப் பல வூரார்களைத் தமக்கடியராக்கி வாழ்ந்திருந்தனர். சின்னாட்கழித் தபின் அந்நாட்டுநின்று மிக்க சிறப்புடன் புறப்பட்டு நெடுந்தூரங் கடந்துசென்று ஓரங்கல் புக்கு ஆண்டுள்ள அருங்கலை விநோதனான பிரதாபருத்திரனது அறிவுடைப் பேரவைக்களைத்துத் தமது கடவிற்பெரிய கல்விமாட்சியால் அவ்வேந்தனையும் அவனது நல்லவையையும் தம் வயப்படுத்தி அவ்வரசனால் நன்றுபோற்றப்பட்டு இனிதொழுகுவாராயினர். இவர் அவ்வேந்தன்பால் நாளும் தம்மிராமாவதாரத்துள்ள அலங்கார நயங்களை அமிழ்தெனப்பொழிந்து அவனைத் தமது பெரிய கல்விவலையிற் பிணித்துக்கொண்டு தமக்குச்சோழனாலியற்றப்பட்ட கொடுந்துன்பமெல்லாம் எடுத்தோதி அவ்வேந்தற்குச் சோழன்பாற் பெருஞ்சினமூளச்செய்து தமதளவில்போராற்றலைச் சோழனுணருமாறு அவ்வுருத்திரனைத் தமக்கடைப்பை கட்டிக்கொண்டு தம்முடன் சோணாடுபோதவேண்டினர். இங்ஙனம் சோழனிற் பெரியனாகிய வேந்தனொருவனை இவர் தமக் கடைப்பை கட்டிவரவேண்டியதற்குக் காரணமாக வேறோர் கதை கூறுதலுமுண்டு. ஒருநாட் சோழன் கம்பருடன் தன்றிருமனையி னுயர்நிலையிற் சென்றுதன் பெருநகரையும் அதனைச்சூழ்ந்த பெருநாட்டையுங்கண்டு மகிழ்ந்து கம்பரைநோக்கி இவையெல்லாமெனக்கடங்கியனவே யென்றுதருக்கினானுக்குக்கம்பர் இவையெல்லாம் நமக்கடங்கியனவேயாம்;இவ்வாறு சிறந்த நீவிர் எனக்கடங்கினீர் என்று சோழனது அரசவலியினும் தமது கல்விவலியையே மேம்படுத்தேத்திநின்றார். இது கேட்டுப் பொறாது சோழன் கம்பரை முனிந்தனனெனவும் அதுகண்டு கம்பர் அரசவலியினும் கல்விவலி சிறந்ததாதலை நமக்குணர்த்துவல் என்று சோழற்குரைத்து அவனினுஞ்சிறந்த வேந்தனிடம்போய் அவனைத் தம் வயப்படுத்தி அவனை அடைப்பைகட்டிவர வேண்டினரெனவும் கூறுவர். பிரதாபருத்திரன் கம்பரது கல்வித்திறத்திற்கு அடிமைப்பட்டவனாகி அவர் வேண்டியவாறே புரிதற்குடன்பட்டு அவருக்கு முடியுடையரசருக் கொத்த பெரிய வரிசையெல்லாஞ் செய்து பலருங்காணத் தானும் அவருக்கடைப்பைகட்டிக்கொண்டுபோந்து அவரைச் சோணாட்டே முன்னரினும் சிறக்கவிற்றிருக்க வைத்துத் தன்னூர்க்கு மீண்டனன். இவற்றுக்கு மேற்கோள்:—

நெற்பயிர் விளைகழனி நென்மலி வாழ்தச்சன்
கற்படு திண்டோளன் கங்கண கணகணவன்
விற்புரை திருநுதலாண் மின்மினு மினுமினுவை*
சொற்படி வேலை செய்வா டுந்துமி துருதுருவை.†

இதுவும் ஒருபாட்டு. இதுக்குத்தியாகம் ஆயிரக்கல நெல்லு.

(தமிழ்நாவலர் சரிதை.)

நிச்ச முறவே நெற்பயிராய் நீளுந் தமிழ்க்கு நென்மலிவாழ்
தச்சன் பொலியா யிரக்கலநெற் றந்தா னுலகிற் றாதாவாய்
மெச்சு மவன தாண்மையினால் வென்றே கொடியின் விருதுகட்டி
வைச்ச கொடையின் றாமெளிதோ வளஞ்சேர் சோழ மண்டலமே.

(சோழமண்டலசதகம்)

கம்பர் ஒரு வேளாளன் களத்திற் குறுணிநெல் வாங்கி வேலிக் காலிலிறைத்துப் பாடிய வெண்பா.

செட்டிமக்கள் வாயில்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாயில்வழிப் போகோமே—யிட்டாரிலாப்
பார்ப்பா ரகரத்தைப் பாடோம் பரிசறிந்து
காப்பா ருழவாளர் காண்.

(தமிழ்நாவலர் சரிதை)

....சேமருவு
நாவிற் புகழ்கம்ப நாடற் கடிமையென்றே
மாவைக் கரைத்துமுன்னே வைக்குங்கை.

(திருக்கை வழக்கம்)

எத்தளித் தாயிரம் பாடல்கொண் டேநிரை யீந்தெருமைப்
போத்தளித் தாடையும் பூணா முஞ்சந்து போதுறவாய்க்
காத்தளித் தாதரித் திட்டதல் லாமலுங் கம்பருக்கு
மாத்தளித் தாட்பட்டு வாழ்வதன் றேதொண்டை மண்டலமே.

(தொண்டைமண்டல சதகம்)

---

* மினுமி எனவும் பாடம்.

† துந்துரு துருதுருமி எனவும் பாடம்.

கம்பர் பிரதாபருத்திரனிடத்துப்போய் அவன் அடைப்பை கட்டிவரப் பாடிய வெண்பா.

அவனிமுழு துண்டு மயிரா வதத்துன்
பவனி தொழுவார் படுத்தும்—புவனி
யுருத்திரா வுன்னுடைய வோரங்க னாட்டிற்
குருத்திரா வாழைக் குழாம்.

(தமிழ்நாவலர் சரிதை)

அவனியிலுள்ளார் எல்லாரும் போர் துண்டலாலும் அயிராவதம் போன்றயானைமேல் நீ உலாவரும்போது நின்னைத்தொழும் பருவ மாதர்கள் காமவெப்பம் ஆற்றாமற் குளிர்ச்சி எய்தல் வேண்டிப் பரப்பிப் படுத்தலாலும் வாழைக்குழாங்கள் குருத்திராவாயின என்க. அவனிமுழுதும் போர்துண்டலால் இலைபற்றாமற் குருத்தையும் அறுத்துப்பரப்ப வேண்டிற்று என்பது. வெப்புற்றார் குளிர்ச்சி யெய்தற்கு வாழைக்குருத்தைப் பரப்பிப்படுப்பதுண்டு. உருத்திரன் என்பான் காகதீயர் கணபதிகள் எனப்பெயரிய ஆந்திர ராஜாக்களுட் சிறந்தவன். இவனைத் திரிபுவனமல்லன் என்னுங் கண பதி ராஜன் பேரன் எனவும் புரோலிராசன், மப்பம்மதேவி இவர்க ளருமைமகன் எனவுஞ் சொல்லுப: இவன் மேற்குறித்த இராசவமிச த்து மூன்றும் பட்டமெய்தினேன் எனக்கூறுப. இவனை முதலாம் பிரதாபருத்திரன் என்றலுமுண்டு. இவனுடைய சாஸநங்கள் கி. பி. *1162, *1179, *1197 இவ்வாண்டுகளிற்றோன்றியன சிலவுள. இதைப்பற்றிக் கம்பர்காலம் கூறும்வழி விரித்துக் கூறுவேன். இவ் வுருத்திரன் ஆந்திரராசன் எனத் தெரியப்படுதலாலும் கம்பர் இவ் வரசனாற் புலமைபற்றிப் பேரன்பு பாராட்டப்பட்டா ரென்பதனா லும் கல்வியிற் பெரியாருக்கு ஆந்திருடன் நன்று பயிலுதற்கேற்ற தெலுங்குமொழி யுணர்ச்சியும் உண்டென்று கொள்ளப்படும். இவர் பாடியருளிய இராமாவதாரத்துச் சில தெலுங்குமொழிகள் சிறுபா ன்மை ஆங்காங்குப் பயின்றிருத்த லுணரப்படுதலாலும் இக்கருத்து வலியுறுதலாகும். இராமாவதாரம் எழுச்சிப்படலத்து,

---

* Dr. Sewell's List of Antiquities, Madras, Vol II, Page 173.
* „ „ Vol I „ 31.
* „ „ „ „ 71.

தோண் மிடைந்தன தூண மிடைந்தென
வாண் மிடைந்தன வான்மின் மிடைந்தெனத்
தாண் மிடைந்தன தம்மி மிடைந்தென
வாண் மிடைந்தன வாளி மிடைந்தென.

என்ற செய்யுட்கண் தம்மி என்பது தெலுங்குமொழி; தாமரை என்னும் பொருட்டு. மற்றை மூன்றடிகளிலும் தோளுக்குத் தூணமும் வாளுக்கு வான்மின்னும், ஆளுக்கு ஆளியும் உவமையாக வந்தனபோல இவ்வடிக்கண்ணும் தாளுக்குத்தம்மி உவமையாக வந்தது. இம்மொழியுணர்ச்சி யெய்தப்பெறார் தம்மின் எனப்பாடமோதிப் பொருளிடர்ப்படுவர். மந்திரப்படலத்து,

திக்கயம் வலியில தேவர் மெல்லியர்
முக்கணன் கயிலையு மூரணின் றுயது
மக்களுங் குரங்குமே வலிய வாமெனி
னக்கட விராவணற் கமைந்த வாற்றலே.

என்ற செய்யுட்கண், அக்கட என்னுந் தெலுங்கு மொழி வந்தது. இராவணன்வதைப் படலத்து

அந்துசெய் குவெனென வறிந்த மாதலி
யுந்தினன் றேரொனு மூழிக் காற்றினை
யிந்துமண் டிலத்திடை மே லிரவி மண்டிலம்
வந்தென வந்ததம் மானத் தேரரோ.

என்ற செய்யுட்கண் அந்து என்பதும் அது. இவற்றுள் தெலுங்கு மொழிப் பெருநூல்களிலெல்லாம் நன்றாவழங்கப்பட்ட தம்மி என்னும் அரும்பதத்தையும் எடுத்தாண்ட சிறப்பாற் கம்பருக்கு அம்மொழி நூலுணர்ச்சியுமுண்டு என்றும் ஊகித்தலாகும்.

இவர் சோழனாற் கொலையுண்டது.

கம்பர் மிக்க சிறப்புடன் சோணாடெய்தி வாழ்கின்றபோது சோழன் அவருடைய பேராற்றலுக்கு அஞ்சி வஞ்சமாக இவர்பாற் பெருநண்பினன்போல ஒழுகத்தலைப்பட்டான். கம்பரும் தம்முடைய பெருவலி சோழற்கு நன்குணர்த்தப்பட்டதாகலின் இனி அவனாற் றமக்கொரு தீங்கும் இழைத்தலாகாதென்று அவனது நண்பினை

நம்பி ஒழுகுவாராயினர். இவ்வாறொழுகுகின்ற காலத்துச்சோழன் தன்னினும் பெருவலியுடைய ஓரங்கலுருத்திரனைத் தமக்கு அடைப்பைகட்டிவரப் புரிந்த கம்பர் ஒருகாற்றன்மேல் அவனைப்படையெடுத்து வரவும் புரிவரோ என்று ஐயமேமிகுத்து இவரைப்பிறரறியாமற் கொன்றுவிடுதலே நலமென்றுகருதி ஒருநாள் தன்னரண்மனைக்கவர் வரும்போதறிந்து அவர்வரும்வாயிலிற் கூட்டிலடைக்கப்பட்டதோர் புலியைத்திறந்துவிட்டிருந்தனன். அப்போது கம்பர் அவ்வழியே வரப் புலி கண்சிவந்து வான்முறுக்கி வெகுண்டெழுந்து அவரைக் கொல்ல நெருங்கிற்று. அதுகண்டு கம்பர் தம்மைக்கொல்லவந்த புலியினுயிருண்ணுமாறு

(கம்பர்மேலே சோழன் புலியைக் கொல்லவிட்டபோது பாடியது)

வெங்கண் சிவந்து வெடிவான் முறுக்கி வெகுண்டெழுந்தென்
னங்கம் பிளக்க வரும்புலி யேயன் றிரணியனைப்
பங்கம் படப்பட வள்ளுகி ராலுரம் பற்றி யுண்ட
சிங்க மிருப்பது காண்கெடு வாயென்றன் சிந்தையுள்ளே.

(தமிழ்நாவலர் சரிதை)

என்னும் பாடலைப்பாடி நரசிங்கப்பெருமானைத் தியானித்து நின்றார்; அவ்வளவிற் புலியுயிர்மாய்ந்து வீழ்ந்தது. இதனைக்கண்ணுற்று ஒளித்துநின்ற சோழன் இவரைக் கொல்லவந்த புலியும் உயிர் மாய்ந்ததற்கு நொந்து தன்கையிலிருந்த வில்லில் அம்பினைக்கோத்து இவர் திருமார்பு குறித்துவிடுக்க அது கல்வியிற்பெரியாரது அறிவு வீற்றிருந்த செறிவுடை நெஞ்சிற் பட்டுருவிப்போயிற்று. அங்கிலையே அறிவொருவடிவாந் திருவுருத்தளர்வார் இவையெல்லாம் சோழன் செய்த வஞ்சமென்று குறித்துணர்ந்து அம்புபோந்தவழியேநோக்கி அவனைக்கண்டு,

(சோழனெய்தபோது கம்பர் பாடியது.)

வில்லம்பு சொல்லம்பு மேதகவே யானாலும்
வில்லம்பிற் சொல்லம்பு வீறுடைத்து-வில்லம்பு
பட்டுருவிற் றென்னையென் பாட்டம்பு நின்குலத்தைச்
சுட்டெரிக்கு மென்றே துணி.

(தமிழ்நாவலர் சரிதை)

என்னும் பாடலைக்கூறிச் சபித்துவிட்டுத் தம்முருப்பிர்த்துணைவனை சடையவள்ளலது அரியபெரிய நன்றியையே நினைந்து நினைந்து நெடிதுருகி,

(கம்பர் மரணகாலத்திற் பாடிய கவி.)

ஆன்பாலுந் தேனு மரம்பைமுதன் முக்கனியுந்
தேம்பாய வுண்டு தெவிட்டுமனந்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணை வருசடையா கம்ப
னிறக்கும்போ தேனு மினி.

(தமிழ்நாவலர் சரிதை)

என்னும் செய்யுளால் அன்புபாராட்டி இக்கொடிய உலகத்தை நீத்து அந்தமிலின்பத் தழிவில்வீடெய்தினர். இவ்வினிய செய்யுள்,

ஆன்பா னறுந்தேன் முக்கனிநீ டமுதிற் சுவையா றுடனருந்தித்
தான்பா லணைய மறப்பதில்லைச் சடையா வென்று தமிழோதுந்
தேன்பா யலங்கற் கம்பனுக்குச் செழும்பா ரிடத்திற் செய்தநன்றி
வான்பா லிருக்கச் செய்துநலம் வைத்தார் சோழமண்டலமே

என்பதனுற் சோழமண்டல சதகத்திலும் பாராட்டப்பட்டிருத்தல் காண்க. இக்கல்வியிற்பெரியர் தெய்வவரம்பெற்றுக் கவிசொல்லப் புக்கபோது பாடிய முதற்பாட்டு "மோட்டெருமை வாவிபுக" என்பது; அதன்கண்ணும் சடையனே பாராட்டப்பட்டுளான் என்பது முன்னரோ யறியப்பட்டதாகலின் இவர் வாழ்நாள்களிற் பாடிய பாடல்களில் முதலும் ஈறும் சடையனைப்பற்றியனவாதல் ஈண்டைக்கு நினைக்கத்தக்கது. கம்பர் இறந்ததுகேட்டுச் சோழனவைக்குரிய பலவர் பெருமக்களெல்லாம்,

(கம்பர்பேரிலே பாடிய கையறம்.)

இன்றோநங் கம்ப னிறந்தநா ளிப்புவியி
லின்றோநம் புன்கவிகட் கேற்றநா-ளின்றோதான்
பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருப்ப
நாமடந்தை நூல்வாங்கு நாள்.

(தமிழ்நாவலர் சரிதை)

எனப்பாடி யிரங்குவாராயினர். தமிழ்நாவலர் சரிதைக்கண் கம்பனைக்கொன்றனென்று பழிகூறிய பாண்டியனிடத்திற் சோழன் விட்ட புலவன் முடிசூட்டு மங்கலநாட் பாடிய வசை.

பாண்டியரிற் பாண்டியரிற் பாழான பாண்டியரி
லீண்டிவென விட்ட வெழுத்தல்ல-பூண்டதிருப்
போகவென்றும் வேற்றூர் புகுதவென்று நீயிவண்விட்
டேகவென்றும் விட்ட வெழுத்து.

இதுகேட்டு நன்றாகவே பொருள்கூறிப் பரிசில்கொடுக்க மறுத்தான்; நீ வந்த காரியம் வேண்டிற் சோழன்பாற் போகென்றன்.

எனத் தலைக்குறிப்பும், கீழ்க்குறிப்பும் பெற்ற ஓர் செய்யுள் காணப் படுகின்றது. இதனாற்சோழன் கம்பனைக்கொன்ற கொடும்பழி எங்கும் பரவியதென்றும் பாண்டியன் தன்னைப் பழித்துரைத்ததற்கு வெட்கி அவனைப்பழித்துப்பாடுதற்காக அவனது முடிசூட்டு மங்கல நாளிற் சோழன்றன் புலவனைவிடுத்துவசைபாடச்செய்தனனெனவும், போந்த சோழன் புலவன் தான்பாடிய வசைப்பாட்டிற்கு நன்றாகவே பொருள்கூறினான் எனவும், அதுகேட்டுப்பாண்டியன் அவனுக்குப் பரிசில்நல்கினான் எனவும், புலவன் பழிகூறவந்தானன்றிப்பரிசில்பெற வந்தானில்லையாதலால் மறுத்தான் எனவும், பாண்டியன் அதுகேட்டு நீ பழிகூறவந்தனையாயின் அதற்கென்பாற் காரியமில்லை கம்பரைக் கொன்ற கொடும்பழியையுடைய சோழன்பாலே அது கூறற்குச் செல்க என்றுகூறி அப்புலவனைச் செலவிடுத்தனன் எனவும் அறியப்படும். கம்பர் இறந்தபின்னர் சோணாடு ஓரங்கற்கணபதியரசர்களாற் படையெடுத்து வெல்லப்பட்டு சோழரது பெருமையெல்லாமபோய் அவ்வரசர் வமிசமும் அருகித்தொலையத் தலைப்பட்டதாகும். கம்பரை அம்பாலெய்துகொன்றவன் விக்கிரமனுக்குப்பின்னாண்ட குலோத்துங்கனுக்குப்பின் அரசெய்திய இராசராசன் என்பவனாவன். இச்சோழனுக்குப்பிற்பட்டு அப்பரம்பரைப்பழைய சாஸநங்கள் காணப்படாமையும் ஓரங்கலரசர் இக்காலத்துச் சோணாடுவென்றாண்டனர் எனச் சாஸநங்களாலறியப்படுதலுமே இச்சோழராச்சியம் கெட்டு வங்கிசமும் கம்பர் தெய்வவாக்குப்படி அருகித் தொலைந்ததென்பதற்குத்தக்க சான்றாகும். இச்சோழற்குப்பின்னே சங்கமன், நல்லமன், சங்கரன், குமாரகுலோத்துங்கன் எனச்சில சோழவரசர்கள் அரசாண்டது குமாரகுலோத்துங்கன் கோவையாலும், சங்கரசோழனுலாவாலும் அறியப்படுமாலெனின் அவரெல்லாம் இராசராசன் வரை யரசாண்ட சோழரைப்போலச்சோணாட்டின் ஏகாதிபத்தியம் உடையராய்ச் சிறந்தனரெனக் கூறுதற்காகாதென்க: இவருடைய சிற்றரசாட்சியும் சின்னாளிற் சிதைந்ததென்று கொள்ளத்தகும்.

(இன்னும் வரும்)

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

ஓர் தமிழ்ச் சாஸநம்.

இதனடியில் எழுதியுள்ள சாஸநம் திருப்பதித் திருமலையில் வேங்கடேசப்பெருமாள் கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் வடவண்டைச்சுவரில் வெட்டியிருக்கிறது. இது உத்தேசம் 20-அடி நீளமும் 3-அடி அகலமுமுள்ள இடத்தை அடைக்கிறது. சில கோயில்களிற்போலில்லாமல், சுண்ணும்பு செம்மண் இன்றிச் சுத்தமாயிருத்தலோடுங்கூட, இச்சாஸநம் செவ்வையாய் வெட்டப்பட்டிருக்கிற எழுத்துக்களை யுடைத்தாயது. இஃது, இக்கோயிலை நாரசிங்க தேவ யாதவராயன் காலத்துப் புதுப்பித்தபோது, பழங்கோயிலிருந்த சிலாலிகிதங்களை ஏட்டிலெழுதிக்கொண்டு, பின் புதுக்கோயிலில், இப்பொழுது காணப்படுமிடத்தில் வெட்டுவிக்கப்பட்டதென்று இச்சாஸநத்தால் தெரியவருகிறது. இவ்வாறு புராதனவெழுத்துக்களை யெடுத்தெழுதிய அக்காலத்தேயே சரிவர வாசிக்க வாராததனுல் தப்புத் தப்பாய் எழுதப்பட்டிருக்கிறது. பழைய சாஸநத்திற் கூறியிருக்கும் அரசர்கள் பெயர்களே சிற்சிலவிடங்களில் வழுக்கள் பொதிந்துள்ளன. ஆயின், இவ்வரசர் மெய்க்கீர்த்திகளைக்கொண்டு ஐயந்திரிபற இப்பெயர்களைத் திட்டலாம். இச்சாசனத்திற்காணப்படும் வழுக்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டுவோம்.

இச்சாஸநம் திரும்ப எழுதிய காலத்திருந்த நாரசிம்மதேவன் யாதவவம்சத்தான்; இத்தலைமுறையார் சோழசக்கரவர்த்திகளைச் சார்ந்தாண்ட சிற்றரசர்கள். 2-ம் வரியிற் குறித்திருக்கும் அரசன் பெயர் கோஇராசகேசரி வர்ம்மன் ராஜராஜதேவன் என்றிருக்கவேண்டும். இம்முதற் சாஸநத்துக் கூறியிருக்கும் பொன்மாளிகைத்துஞ்சின தேவர் என்பது ராஜராஜன் தந்தையாகிய இரண்டாம் பராந்தகன் என்று இவன் மனைவியின் பெயராகிய 'பராந்தகன் தேவியேன்' என்பதனுற் கொள்ளவேண்டும். இப்பராந்தகன் மனைவி சேரமானுர் மகளார் என்றும் ஏற்படுகிறது. இவ்வம்மைக்கு, ராஜராஜன், மகனே அல்லனே என்பதைக்குறித்து ஒருவாறும் கூற இடமில்லை.

*

இருப்பின், தன்தாயாகிய சேரமானூர் மகளார் பொன்மாளிகைத் துஞ்சிய பராந்தகனூர் தேவியார் என்று சொல்லியிருக்கலாமே. இப் படி இல்லாததினாலேயே சொந்தத்தாய் அல்லள் என நினைக்க இட முண்டாகிறது.

இரண்டாம் சாஸநத்திற் சொல்லியிருக்கும் அரசன் சோழசக் கரவர்த்தியாகிய ராஜமஹேந்திரன் என்றிருக்கலாம்போல் தோன்று கின்றது. காடவன், காடபட்டிகள், நளம்பன், பல்லவன் என்பன ஒருபொருட் பன்மொழிகள். இதிற் கூறியிருக்கும் காடவனும் சோ ழர்கள் கீழிருந்தாண்ட சிற்றரசனாயிருத்தல் வேண்டும். பெற்கடை யார் என்பது, அரசன் பெருந்தனத்தாரில் ஒருசாரார் பெறும் பட் டப்பெயர். இப்பெயரையமைத்து உண்டாக்கப்பட்டிருக்கும் ஹெ க்கடதேவன்கோட்டை தாலூக்காவின் பெயரையும் காண்க. இச் சாஸநங்களில் கோப்பாஅரு கேசரி என்றிருக்கும் தொடர், கோ பர கேசரி என்பதின் வழு. மூன்றும் சாஸநத்து கோபரகேசரிவர்ம்ம ரான இராஜேந்திர சோழதேவர் மேற்கண்ட ராஜராஜதேவர் புதல் வர். பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட ராஜேந்திரனெ ன்று புகழ்படைத்தவர். அதிகாரிகள் கொற்றமங்கலமுடையான் என்பவன் பெயர் பெரிய லெய்டன் சாஸநத்திலும் வருகிறது.

இச்சாஸநத்தில்வரும் ஊர் பெயர்களில் திருச்சுகனூர் என் பது, பழைய சாஸநங்களில் திருச்சோகினூர் என்றும், இப்பொ ழுது யோகிமல்லவரமென்றும் பெயர்படும். இது திருப்பதிக்கு அடு த்த திருச்சானூ*ரின் ஒரு வீதி யென்னலாம்படியான அவ்வளவு சமீபத்துள்ளது. இதிலொரு சிவாலயமுண்டு.

சிலமாதங்கட்குமுன் சாஸநபரீக்ஷகரான ஸ்ரீமாந்-வி. வெங்க ய்யரவர்கள், யோகிமல்லவரத்துக்கோயிலின் சாஸநங்களையும், திரு மலையின் சாஸநங்களையும் பரிசோதித்து, யோகிமல்லவரத்துக் கோ யிலுக்குத் துணைக்கோயிலாய் சுப்பிரமணியக்கடவுட்கு திருமலைக் கோயில் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், அறியாச்சனங்கள்

---

* இப்பெயரும் திருச்சுகனூரின் மரூஉ வென்பதைச் சொல்லவேண் டுவதில்லை.

கூறும் கூற்றுச் சரியாயிருக்கலாமென்றும் சாதித்தார். அக்கனவானின் முக்கிய ஆதாரம், திருமலைக்கோயிற் சாஸநத்தில் அக்கோயிலை இளங்கோயில் என்று கூறியிருத்தலும், வடதேசத்தார் வேங்கடேசப்பெருமாளை 'பாளாஜி' யென்று கூவுவதுமே. மீயச்சூர் இளங்கோயில் என்பனபோன்ற தொடர்களில் இளையபிள்ளையாகிய சுப்பிரமணியக்கடவுள் கோயிலென்று விளங்குதலால், இதுவும் அவ்வாறே இருத்தல்வேண்டும் என்பது ஐயரவர்கள் கொள்கை.

அதற்கு, யான், இச்சுப்பிரமணியர் கோயில் தேவாரம்பாடிய காலத்திருந்திருப்பின், காளத்தியைப் பாடச்சென்ற நாயன்மார்கள் இதையும் பாடாது விடார்களென்று மறுத்தேன். அன்றியும், அக்காலமேயன்றிப் பிற்காலமாகிய இரண்டாம் பராந்தகன் காலத்தும் இக்கோயில் சைவமாயிருக்கக்காணோம். இராஜராஜன் காலந்தொடங்கி வைஷ்ணவக்கோயிலேயா யிருந்ததென்பதற்கு ஐயமேயில்லை என்று யான் கூறிய கூற்றிற்கு, ஐயரவர்கள், ராஜராஜன் காலத்திய சாஸநமே தமக்குத்தெரிந்தவரையில் அவ்விடத்திலில்லையென்றும், அப்படியிருப்பினும் வைஷ்ணவமென்று கூறியிராதென்றும் மறுத்தார்கள். சாஸநபரீக்ஷகர்கள் ஒவ்வொரு கோயிலின் சாஸநங்களையும் முற்ற ஆராய்தல் வழக்கம் என்று யான் இதுகாறும் எண்ணியிருந்தேன். இவர்கள் இச்சாஸநம் இருப்பதாக அறியாததினால், முற்றும் ஒரே தடவையாய்ப் பரிசோதிக்கிறது இவ்வுத்தியோகத்தின் வழக்கமன்று என்று தோன்றுகின்றது. இப்பொழுதாயினும் ஐயரவர்கள் இச்சாஸநத்தில் ஆங்காங்குக் காணப்படும் "ஸ்ரீவைஷ்ணவரிரக்ஷை" என்றிருத்தலானும், "பன்மாஹேஸ்வரரக்ஷை" என்றில்லாதிருத்தலினாலும் இக்கோயில் வைஷ்ணவமாயே யிருந்திருத்தல் வேண்டும் என்று கொள்வாராக. இராஜராஜன் சாஸநம் அவ்விடத்துக்கிடையாது என்று வாயடித்துவிட்டவர், இப்பொழுதாவது அதன் பிரதியொன்று தருவித்துக்கொள்வாரென்று நம்புகிறேன். மேலும் ஐயரவர்கள் தாமே இச்சாஸநத்தைக்குறித்து எழுதியிருக்க (Christian College Magazine Vol. 8 Page 103) அவருக்கு இப்பொழுது சமயோசிதமாக மறதி ஏற்பட்டது வியக்கத்தக்கதே. சாஸந சமாசாரங்கள் இவ்வாறு நிற்க;

ஒரு விஷயத்தைக் குறித்து ஒன்றைச்சாதிக்கப் புகுவானொருவன், தன் கூற்றிற்குப் பலாபலங்களை யாராயவேண்டாவோ? இக்கோயிற்பெருமாளின் ஹரிஹராகாரத்தைக்குறித்துப் பேயாழ்வார்-

"தாழ்சடையும் நீண்முடியு மொண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து"

எனவும்,

"பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல்—வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை
இளங்குமரன் றன்விண் ணகர்"

எனவும்,

"குன்றொன்றி னாய குறமகளிர் கோல்வளைக்கை
சென்று விளையாடுந் தீங்கழைபோய்—வென்று
விளங்குமதி கோல்விடுக்கும் வேங்கடமே மேலை
இளங்குமரர் கோமா னிடம்"

எனவும் வர்ணித்ததன்பொருளை யோரார்போலும்! பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை பின் னிருபாட்டுகளுக்கும், "முன்பெல்லாம் ஸ்ரீவைகுண்டத்தைக் கோயிலாகக்கொண்டு அங்கு நித்யவாஸம் செய்கிற ஸர்வேஸ்வரனுக்கு (இப்பொழுது) திருமலை, திருப்பாற்கடல், வண்டுகள் கும்பல் கும்பலாய்க் கிளம்புகிற விசாலமான தோப்புக்களையும் அழகிய புஷ்பங்களையுமுடைய திருக்கடிகை, நித்யயௌவனமுடைய ஸ்ரீய:பதிக் கிருப்பிடமான திருவிண்ணகர் (ஆகிய இவைகள்) கோயில்போலே இருக்கின்றன" என்றும், "திருமலையொன்றையே வ்யாவ்ருமாகவுடைய குறப்பெண்கள்போய் அழகிய வளைகளையுடைய கைகளால் (பிடித்து) விளையாடாநின்ற அழகிய மூங்கில்கள் மேற்புறம் வளர்ந்து, (ராஹுவை) ஜயித்து (அதினால்) வ்யாகாசியாநின்ற சந்திரனுடைய ஆபத்தைப்போக்காநின்ற திருமலையே, அண்டத்துக்கு பேறுள்ள பரமபதத்தில் வாஸம் செய்கிற யௌவனாரம்பத்தையுடைய நித்யஸூரிகளுக்கு ஸ்வாமியான ஸர்வேஸ்வரனெழுந்தருளியிருக்கும் தேசம்" என்றும் பொருள் செய்திருத்தலாலும் இளங்கோயில் என்னும் தொடர்மொழிக்குக் கார்த்திகேயன் கோயிலன்று என்று தெளியலாமே. பின்னும் சிலப்பதிகாரம் காடுகாண் காதையில்

"விங்குநீ ரருவி வேங்கட மென்னு
மோங்குநீர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
யிருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமுந்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ரார மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்"

என்று இளங்கோவடிகளார் வெட்டெனக் கூறியிருத்தல் கண்டும் சைவமென்றிக்கோயிலை எவ்வாறு கூறுதல் கூடும்? ஐயரவர்கள் மேற்கோள் எடுத்தாளுவதெல்லாம் நாலாயிரப்பிரபந்த முதலாக நான்கு, அல்லது அதிகமாயின், ஐந்து நூல்களே. அவைகளினின்று கிலும் நன்றாய் ஆராய்ச்சிசெய்து எழுதினாரில்லையே யென்று விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. சிலப்பதிகாரத்திற்கண்ட வரிகள் அவர்கள் ஆராய்ச்சி மட்டும் எட்டவில்லைப் போலும்? இவைகிடக்க;

அஷ்டாதசபுராணங்களையும் மேற்கொண்டு எழுதிய வேங்கடேசமஹாத்மியத்தில் இளங்கோயில் என்னும் பெயர்வருவதற்கு ஒருவாறு காரணங் கூறப்பட்டுள்ளது. *ஆதியில் இக்குன்றிலிருந்தவர் ஆதிவராக நாயினர்; இவரிடத்து வந்து வேங்கடேசர் தாமிருத்தற்குக் கொஞ்சம் இடம்வேண்டி இரக்கத் திருப்பன்றியாழ்வார் வேங்கடேசரை நோக்கி, உமக்கு இடம் கொடின் நம்மை மதிப்பாராரென்று வினவ, கோலவராகர்க்கு, அவரைப்பணியாது தம்மைத் தரிசிக்கவருமவர்களுக்குப் பலன்யாதுமில்லாது போகக்கடவதென்று வேங்கடேசர்வாக்களித்துப் பின்தன்கோயிலை ஏற்படுத்திக்கொண்டாரென்பது பிரசித்தம். புராணங்களிலெல்லாம் ஒரே வண்ணமாய்ச்சொல்லியிருத்தலின், கடுகளவேனும் மெய்ம்மையைக் கொண்டேபலவேறுகதை

* இதனையே பேயாரும் "புரிந்து மதவேழம் மாப்பிடியோ டுடித், திரிந்து சினத்தாற் பொருது—விரிந்தசீர், வெண்கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே மேலொருநாள், மண்கோட்டுக் கொண்டான் மலை" என எடுத்துக்காட்டியிருக்கிறார்.

ளைக்கட்டியிருத்தல் வேண்டுமென்று கொள்ளல் தகாதோ? முது கோயில் திருப்பன்றியாழ்வாரதாயின் இளங்கோயில் வேங்கடேசர தாயிருக்கலாமே. இப்படியின்றி எட்டுமைலுக்கப்பாலுள்ள ஒரு சிறுசிவாலயத்திற்குத் துணைக்கோயிலாகக் கொள்வானேன்? அதுவுமன்றி, வீரராஜேந்திரன் காலத்துக்கு முந்திய சாஸநங்களே காணப்படாத சிவன்கோயிலுக்குத் துணைக்கோயில், ராஜராஜன் தந்தை காலத்திய சாஸநங்கூடவிருக்கும் திருமலைக்கோயிலென்று சொல்வது சாஸநவாராய்ச்சியின் வழிபோலும்!

நமக்குப் பேயாழ்வார் சாதித்தருளினபடி, ஹரிஹராகாரமாய் நின்றருளுகின்றார் வேங்கடேசர் என்பதே துணிவு. இவ்விருருவுமிருத்தல் பற்றியே இப்பொழுதும் திருத்துழாயும் வில்வமுங் கலந்தே இக்கோயிலிற் கடவுளை அருச்சிக்கின்றார்கள். சாஸநங்களில் ஒன்றுங் கிடைக்காதிருப்பின், பண்டையிலக்கியத்தின் கூற்றுக்களைக் கொள்ளலாமே; நீக்கவேண்டுவதில்லையே. இனியாகிலும் ஐயரவர்கள் சாஸநவாராய்ச்சியோடு ஆங்காங்கு இலக்கிய ஞானத்தைச் சேர்த்துப் பிணித்துக்கதைகட்டுவார்களாமாறு சைவம்வைஷ்ணவமென்னும் எல்லாம்உணரவல்ல இறைவனைப்பிரார்த்திக்கிறேன்.

எம். நாராயணசாமி அய்யர்,
திருவல்லிக்கேணி.

சாஸநம்.

[1] ஸ்வஸ்திஸ்ரீ நாயனார் வீரநாரசிங்கதெவயாதவராயற்கு யாண்டு நாற்பதாவது ஐப்பசிமாதம் இருபதாந்தியதி கொயிலாழ்வார்க்கு கொயிலுக்குகொயில்செய்ய-தெசாந்திரிகளில் திருப்புல்லாணி ஊஸர் ஆரம்பிக்கையில் முன்பத்தை கொயில்ஆழ்வாரில் கல்வெட்டுப்படி எடுத்து முதல் ப்ராகாரத்திலெ வடக்குவிசையில் புறவாயிலெ கல்வெட்டுவிப்பதென்று தானத்தார்க்கு நாயனார் திருமுகம் வருகையில் திருமுகப்படி கல்வெட்டுவதென்று தானமாக நியமிக்க இவ்வாண்டை சித்திரைமாதம் ௨௰௨ ந்தியதி வெள்ளிக்கிழமை உத்திராடத்து நாள் கல்லுவெட்டினபடி ஸ்வஸ்தி.—

[2] ஸ்ரீ திருமகள்போலப் பெருநிலச் செல்வியும் தன்கொனுரிமை1 பூண்ட மனக்கொள காந்தளூர்ச்சகல2 கலையறுத்தருளி வெங்கை நாசமும்3 துளப்பாடியும்4 கங்கபாடியும் கடிகைவிழியும்5 குடமலைநாடும் கொல்லாபுரமும்6 கலிங்கமும் திண்டிறல் வென்றிதண்டால்வளை கொண்ட 7 தன்னெழில்வரைவாழியுள் 8 ளெல்லாம் ஆண்டு சொழுதக9 பிவைகும்ஆண்டெ செழியன்10 தெசுகொள் கொவீர 11 ராஜராஜெஸ்ரீ பன்மற்கு யாண்டு யசு வது செரமானூர் மகளாா் பொன்மாளிகையில் துஞ்சிநான் 12தெவியார் தெவி அம்மனூர் திரு13வெங்கடதெவற்கு இட்டபட்ட—

[3] ம் குடிஞைக்கல்லால் பொன் றும........தில் முத்தின் மாணிக்கம் உ ம் தடவிக்கட்டின மாணிக்கம் ஆறும் வயிரம்நாலும் முத்து இருபத்தெட்டும் இப்பட்டம் [இ*]ட்டார் பராந்தகதெவி அம்மன்வ [II*]ஸஸ்ஸ்ரீ வத கொப்பாகேஸரிவர்ம பன்மற்கு யாண்டு யச வது சத்திவிடங்கநாகிய ஸ்ரீகாடபட்டிகள்14 தெவியார் மகள்சாமவையாகியகாடவன்பெருந்15தெவியென் ஸ்ரீ16வெங்கட

---

1 தனக்கேயுரிமை.

2 சாலைகலமறுத்தருளி என்க.

3 நாடும்.

4 நுளம்பபாடியும்.

5 தடிகைவழியும்.

6 கொல்லமும்.

7 வளை என்னுஞ்சொல் அதிகமாய் இவ்விடத் தெழுதியுள்ளது. மற்றைச் சாஸநங்களில் கிடையா.

8 வளர் ஊழியுள்ளெல்லாயாண்டு.

9 தொழுதக விளங்கும்.

10 செழியரை.

11 கோவிராஜராஜபன்மற்கு.

12 தேவியார் தேவி அம்மன்.

13 திருவேங்கடதேவற்கு.

14 தேவியார்.

15 தேவியேன்.

16 வேங்கடத்து.

[*] வரிபிளந்து எழுதப்பட்டன.

த்து எழுந்தருளிநின்றபெரும[ானடிக*]ளுக்கு கஉ௩-ாவது கொண்டருள திருவிள்ளங்கொயிலில் எழுந்தருளுவித்த வெள்ளி திரு1மெனிதிருமுடி—

[4] யி[ல் கட்டி*]ன வயிரம் உ௰ரு ம் பருமுத்து ௰. [௩டு*] நாயகமான மாணிக்கம் உம் தடவிக்கட்டின ரு ம் ஆக மாணிக்கம் ருனல் திருமுடி ஒன்றும் திருக்காதில் பொன்னின் மகரம் இ[ர*]ண்டும் பவழத்தின் கொப்பு ஒன்றும் திருக்கழுத்தின் மாலையி 2லெறின வயிரம் கச ம் மாணிக்கம் ரு ம் பருமுத்து கச ம் நெர் 3முத்து பலவும் இட்டுக்கட்டின மாலை க ம் பொன்னீன் 4உதரபெந்த(ள†)ம் க ம் திருவரைப்பட்டிகை க...பட்டுக்கட்டின மாணிக்கம் க னல் பட்டிகை க ம் வாஹுவலையம் உ க்குத்தடவிக்கட்டின மாணிக்—

[5] கம் உ ம் தடவிக்கட்டின மாணிக்கம் உ கட்டின திருச்சந்தம் க ம் திருக்கைக்கழுத்தின் வ[லை*]யில் ச ம் திருக்காலு5க்கழுத்தின் காறை உ ம் இடையிட்டபொன்னின் மணியும் பவழமும் முத்தும் ஆக உரு ரு௰உ பாதசாயலம் உ ம் வெள்ளி வ்ய ஹெயில் 6எறின நாயகமான மாணிக்கம் க ம் இத்தனை ஆபரணங்களும் இட்டுசெய்த பொன் சயெ ௳7 ம் இத்தனையும் கொண்டு அஹி 8ஷெகமும் செய்வித்து எழுந்தருளுவித்த மணவாளப்பெருமாளுக்கு ஸ்ரீவெ 9ங்கடகொட்டத்து திருக்குடவூர் நாட்டுத் திருச்சுகனூர் ஸஹெயார் பக்கலும் மடமுடை—

---

1 திருமேனி.

2 மாலையிலேறின.

3 நேர்முத்து.

4 பொன்னின் உதரபந்தம்.

5 லி என்பதைத்திருத்தி லு என்று எழுதப்பட்டுள்ளது.

6 ஏறின.

7 'கழஞ்சு' என்னும் வார்த்தையைக் குறிக்கும் அடையாளம்.

8 அஹிஷேகமும்.

9 வேங்கடக்கோட்டத்து.

[*] வரிபிளந்து எழுதப்பட்டன.

(†) இவ்வெழுத்து அதிகம்.

[6] ய இலக்ஷ்மண நம்பி பக்கலும் பொன்குடுத்து விலைகொண்டு திருவிளங்1கொயில் பெருமாளுக்கும் பொன்குடுத்து இறை இழித்திக்கொண்ட நிலமும் சபையார் பக்கல் கொண்ட நிலமும் நந்தி ஏரிப்பட்டியும் மடுப்பூட்டையும் இலக்ஷ்மணநம்பி 2அடை கொண்ட 3நீலமும் மதுசூதன் ஆவியவரையும் 4புருஷொத்தமன் பட்டியும் ஆக 5முன்றுபட்டி நிலமும் கடிகைக்6கொலால் அளந்து பதினாறு சாண்கொலால் 7முவாயிரம் குழிவிலை கொண்டு சபையார்க்கும் 8தெவற்கும் விலைபொன் குடுத்து இறை இழித்தி மணவாளப்பெருமாளுக்கு நிமந்த—

[7] த்துக்கு வைத்தபடியாவது நிமந்தம் நானாழியாக திருவமுதும் [தின*]நந்தாவிளக்கு ஒன்றும் இர[ண்*]டு அயன9ஸங்க்ராந்தியும் இ[ர*]ண்டு விஷு9ஸங்க்ராந்தியும் திருமஞ்சனம் புகுவிப்பதற்கும் புரட்டாதி திருநாள் எழுந்தருளிப் 10பொதுகைக்கு விழாவெழுந்தருளுவிப்பத[ா*] (த†) கவும் சித்திரை முதலாக திருமுளை(ய்†)படி ஒன்பதுநாள் திருவிழாவெழுந்த[ரு*]ளிவிக்கவும்இதனையுஞ் செ[ய்*] விப்பார் திருவெங்கடத்து மாடாபத்தியஞ் செய்வா(ர்†) ரெயாகவும் இந்நிலம் இறைகாத்துவிட சபையார் இரக்ஷிப்பாராகவும் இப்பரிசு ஸந்த்ராதித்தவரை நிற்பதாக

[8] செய்தென் சத்திவிடங்கனாகிய காடவன் பெருந்தெவியார் பல்லவப்பெற்கடையார் மகள் சாமவையாகிய காடவன் பெருந்

---

1 திருவிளங்கோயில்.
2 இடை.
3 நிலமும்.
4 புருஷோத்தமன் பட்டியும்.
5 மூன்று.
6 கோலால்.
7 மூவாயிரம்.
8 தேவற்கும்.
9 ஸங்க்ராந்தியும்.
10 போதுகைக்கு.
[*] வரிபிளந்து எழுதப்பட்டன.
(†) இவ்வெழுத்துகள் அதிகப்படி.

*

தெவியென் இத்தன்மம் இரக்ஷிப்பார் ஸ்ரீபாதம் என்தலைமெ லது ஸ்ரீவைஷ்ணவர்கள் இரக்ஷை இவை சாத்தந்தைஎழுத்துவ
[III*] ஸ்வஸ்திஸ்ரீ 1கொப்பாதரபன்மற்கு யாண்டு ௰௪ வது வ தி சத்திவிடங்காகிய ஸ்ரீ காடபட்டிகள் பெற்கடையார் மகள் சாமவையாகிய காடவன் பெருந்தெவி ஸ்ரீ வெங்கடத்து எழுந்தருளிநின்ற பெருமானடிகளுக்கு ௯௨௨-ரா வுவை கொண்டருள வெள் வ ளியால் எழுந்தருளிவித்த மண—

[9] வாளப்பெருமாளுக்கு மார்கழித்திருத்துவாதெசிக்கு முன்பு திருக்கொடி 2 எற்றத்து திருமு [ளை*] அட்டி 3எழுநா [ள*] திருவிழா இரண்டு பொழுதும் எழுந்தருளுவிப்பதற்கு வைத்தபூமி வெங்கடக் 4 கொட்டத்து திருக்குடவூர் நாட்டு திருச்சுகனூர்சபையார்க்கும் 5 தெவர்க்கு [ம்*] பொன் குடுத்து இறை இழித்தி கொண்டநிலம் வடக்கு 6 ஞெக்கிப்பொன வதியில் 7மெறகில் ஆயப்பட்டியில் குழி தடிகைக்களத்தில் பதினறுசாண்கொலால் குழி உ௱௯௰எவ௰ ம் குழிப்பட்டிகுழி—

[10] ௩௱௯௰எ ம் பெரும்பாண எதிர்வாயில் குழி ௩௱௪௰௫ம் நாவிசப்பட்டி குழி சது உ௱உ௰௯ ம் குசப்பட்டி குழி ௱௪௰௪௰ ம்புரு 8ஷொத்தமபட்டி குழி ௱உ௰௯ ம் புரு8ஷொத்தமன்பள்ளம் குழி ௱௰ ம்பஞ்சவன்மாதெவி 9எரிகிழ் ௩௨† து ம் காலிப்பெருமானும் தம்பியட்டனும் ப[க்*]கல்கொண்டநாதர்செறு ௩௨† உ௱௰ ம் சாலெ[பெ*]ருமாள் திருமலை பக்கல் கொண்ட கொட்டுக்

---

1 ௧௦௯-ம் பக்கம் ௰௪-ம் வரியில்காண்க.

2 கொடி ஏற்றத்து.

3 எழுநாள்.

4 வேங்கடக்கோட்டத்து.

5 தேவர்க்கும்.

6 நோக்கிப்போன.

7 மேற்கில்.

8 புருஷோத்தம

9 எரிகீழ்.

[*] வரிபிளந்து எழுதப்பட்டுள்ளன.

† நிலம் என்பதின்குறி.

கீழ்பட்டி ௱சா ம்ஆக ௱சதுளாஎய௬௲ஞல குழியும் திரு[1]வெங் கடத்து மாடாபத்தியம் செய்வார்கள் கைக்கொ—

[11] ண்டு சந்த்ராதித்தவரை செல்வதாககுடுத்தொம் சாமவையாகிய காடவன்பெருந்தெவியென்வ[IV*]ஸ்வஸ்திஸ்ரீ [2]கொப்பாதூகெச ரிபன்மரான ஸ்ரீராஜெந்த்ரசொழ[3]தெவற்கு யாண்டுஏழாவதுநாள் அதிகாரி கொற்றமங்கலமுடையான் செயங்கொண்ட[4]சொழ மண்டலத்து பெரும்பாணப்பாடி திரு[5]வெங்கடகொட்டத்து குடவூர்நாட்டு தெவர் தெவதானம் திருச்சுகனூரில் நாம்விட்ட விட்டிலில் முன்புக்கொட்டிலிலெ இருந்து கொ[6]யிற்காரிய மாரா [ய்*]ந்த இடத்து குடவூர் நாட்டு வகை செய்கிற சிறிதனத்து பணிமகன் கட—

[12] [ம்*] பங்குடையானையும் திருவெங்கட [7] தெவர்கன்மிகளையும் அழைத்து திருவெ[7]ங்கடதெவர் நிமந்தப்படி உள்ளனசொல்லுங் [8] கொள்ளென்று வினவின இடத்து இத்தெவர் [9] தெவதானம் திருமுண்டியத்து ஸபையார் பலகல் வெட்டினபடி பொன் கைக்கொண்டு கற்பூரவிளக்கு ஒன்று உட்படக(ட்†)டவ திரு நுந்தா விளக்கு ௨௧ இவையிற்றுள் இவர்கள் எரித்து வரும் திருவிளக்கு ௨ நிக்கி[10] இத்திருமுண்டியம் குடிபற்றுமையில் திருச்சுகனூரில் அகப்ப—

---

1 திருவேங்கடத்து.

2 கோப்பரகேசரிபன்மரான.

3 தேவற்கு.

4 சோழ.

5 திருவேங்கடக்கோட்டத்து.

6 கோயிற்.

7 திருவேங்கடதேவர்.

8 சொல்லுங்கோள்.

9 இத்தேவர் தேவ தானம்.

10 நீக்கி.

[*] வரிபிளந்து எழுதப்பட்டுள்ளன.

(†) இவ்வெழுத்து அதிகப்படி.

[13] ட்ட முதலுக்கு உடைய பொன் உய -ம் இவர்கள் இத்தெவர்
க்கு பரிசாறகம் செய்து தெவர் பண்டாரத்தில் உடை[ய*]
பொன் ரு -ம் ஆக பொன் உயரு -ம்இவர்கள் கடவர்கள் கன்
மிகளுக்கு முட்டாமல் நித்தப்படி1 யொமெ கூட எண்ணை சட்டி
திருமலைக்கு 2எற்றி எரிப்பிக [க*] கடவர்களாக நிமந்தம் செய்
களென்று அதிகாரி கொற்றமங்கல முடையான் சொல்ல இப்பரிசு
திருமுண்டியத்து ஸபையோம் கடவ திருனந்தா விளக்குக்கும்
இவர்கள் உடைய பொன்—

[14] உயரு -ம் இத்3தெவர்பண்டாரத்துக்கு முதலாக்கிக்கொண்டு
இத்தெ3[வர்பண்டார*] த்து [க்கு*] திருமலைக்கு 4எற்றி திரு
னந்தா விளக்கும் கற்பூர விளக்கு ஒன்று உள்பட திருவிளக்கு
திருவெங்கட5 தெவர்க்கு ஸ்ரீகாரியம் செய்வாரும் தெவ6 கன்மி
களுமெ சந்த்ராதித்தவரை எரிப்பதாக நிவந்தம் செய்தது ஸ்ரீ
7வெஷ்ணவர்கமொமெ.

1 நித்தப்படியோமே.

2 ஏற்றி.

3 இத்தேவர்.

4 ஏற்றி.

5 திருவேங்கடதேவர்க்கு.

6 தேவகன்மிகளுமே.

7 ஸ்ரீவைஷ்ணவர்களோம்.

[*] வரிப்பிளந்து எழுதப்பட்டன

பிராசீனதர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்.

முதல் உபந்நியாசம்.

(சுடு-ம் பக்கத்தொடர்ச்சி.)

இந்தக் கல்விவிஷயத்தில் இன்னும் சில சமாசாரங்கள் நான் சொல்லவேண்டியிருக்கின்றன. அவைகளைச்சிரத்தையாயுங் கவனமாயுங் கேளுங்கள். பழைய சாஸ்திரங்களைப் படிக்கிறதினால் நான் தெரிந்தவிஷயம் யாதெனில் முற்காலத்தில் படிக்கின்ற சிறுவர்கள் எப்போதும் பிரஹ்மசாரிய விரதத்தைக் கைக்கொண்டுவந்தார்கள். ஒவ்வொரு மாணாக்கரும் விவாகமின்றிப் படிப்புமுடியும்வரை கிரகஸ்த ஆசிரமத்தையடையாமலிருந்திருக்கிறார்கள். 36, 18, 9 வருஷங்கள் மாணாக்கராகக் கல்வி கற்றுக்கொண்டு வரவேண்டியகாலம். இக்காலம் முடியும்வரை விவாகமில்லாத நோன்பையே கைக்கொண்டு மாணாக்கரொழுகக்கடவர். கிரகஸ்தனாகு முன்னரே, முற்காலத்தில் போர்வீரராவார்கள். அந்த ஆதி உயர்வான ஆசாரணை யிக்காலத்தில் என்னமாகவாயிற்று? இக்காலத்திய பாடசாலையிற் கற்கும் மாணாக்கர்கள் குழந்தைகளைப்பெற்றிருக்கிறார்கள். கலாசாலை புகுமுன்னமேயே மாணாக்கர்கள் மக்கட்பேறு பெற்றிருக்கிறார்கள்; அதாவது, அவர்களே குழந்தைகள்! அவர்களுக்குக் குழந்தைகளுண்டாயிருக்கின்றன. இத்தன்மையானது, ஆதி உயர்வான தர்மங்களுக்கு முற்றும் விருத்தமானது. இது இந்தியாவிற்கு க்ஷீணத்தைப் பயக்கத்தக்கது. இதனால் கிடைக்கிறதென்னவென்றால், கலாசாலைப் படிப்புமுடிய பூர்ணசக்தியும் வீரியமுமுள்ளவராக விருக்கவேண்டிய மாணாக்கர், சரீரபலம் குன்றி நாடி நரம்புகள் தளர்ந்து மூளை நைந்துபோய் நடைப்பிணம்போலிருக்கிறார். இக்காலத்துப் படிப்போ சரீரவறட்சியையுண்டுபண்ணத்தக்கது. கிரகஸ்தாசிரம தர்மத்தையும், மக்கட்பேறு முதலிய உத்தரவாதத்தையும் வகிக்கிறதினால் இன்னுமதிக க்ஷீணகதி யேற்படுகின்றது. என் சகோதரர்காள்! இது

சரியன்று. இது இந்தியாவின் நாசத்திற்குரிய வழி. யௌவனதிசையிலிருக்கவேண்டியவர்கள் வார்த்திகத்தையடைகிறார்கள். இருக்கவேண்டியபடி நீங்களில்லையென்று அறியவில்லையா? அளவுக்குமீறிய பாரத்தை மூளை வகிக்கமாட்டாதென்று நீங்களறியவில்லையா? இந்தியர்கள் ஆகிருதி வரவரக்குறைவுபடுகிறதை நீங்கள் கவனிக்கவில்லையா? பால்லிய விவாகத்தினால் ஆகிருதி வரவர க்ஷீணமாகிக்கொண்டுவருகிறது. இந்தியாவின் சிலநாடுகளில், தொட்டிற் குழந்தைகளுக்கு விவாகஞ்செய்கின்றார்களாம். இதனால் பால்லியத்திலேயே மக்கட்பேறு ஏற்படுகிறது. பிராசீனதர்மசாஸ்திரிகள் மூலமாய், தேவர்கள் இந்தியாவுக்கு வுபதேசித்த தர்மங்களின் முறைப்படியாகவா இப்போது இந்தியர் ஒழுகுவாராகின்றார்கள்?

இவ்வினாவுக்கு மறுமொழியுங்களாற்றான் முடியவேணும்; இது விஷயத்தில் சிரமமிருக்கிறதென்று நன்றாய் நாமறிவோம். முன்தர்மப்படி யனுஷ்டிக்க ஒருவன் தைரியமாய் முயன்றால், தம்முடைய மனசிலப்படிச்செய்ய விரும்புகிறவர்களுங்கூட தைரியமின்றி வெளியிலே கோபித்துக் குற்றஞ்சொல்ல அனேகர்கள் கிளம்புகிறார்கள். "தாங்கள் சொல்லுகிறபடிசெய்தல் நலம், அவசியம்" என்று என்னிடமெத்தனை பிதாக்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலதையனுஷ்டிக்கவும், அதனாலுண்டாகும் நிந்தையை லக்ஷியம் பண்ணாமலிருக்கவும் எத்தனைபேருக்குத்தைரியமுண்டு. இவ்விதமான தைரியத்தினாற்றான்பெரியகாரியங்களை நடத்தமுடியும். தேசம் விமோசனம் பெறும். கோழைத்தனத்தினால் கிழானஸ்திதிக்குவந்துவிட்டோம். இனி, மேலானஸ்திதிக் கேறவேண்டுமானால் தைரியத்தினாற்றானமையும். அறிவின்மையாலிழிவான நிலைமையிலிருக்கின்றோம். கல்விப்பயிற்சியினாலும், பிராசீனவுயர்வான தர்மங்களைத்திரும்பக்கைக்கொள்வதினாலும், நாம் மேம்பாட்டைப்பெறவேண்டும். பிராசீனதர்மமுறைகளுக்கே விரோதமாக நடக்கமாட்டோம், மனசுக்குவிரோதமுஞ் சரீரதர்மத்திற்குத் தீங்குவிளைவிக்கிறதுமான வழக்கத்தை யனுஷ்டிக்க மாட்டோம் என்று, உங்களிற்சிலரேனுஞ் சொல்லத் தைரியமுள்ளவர்களாகி, எவர் ஆக்ஷேபணையுங் கவனியாமல் விவாககாலத்தைக் கொஞ்சந் தாமதிக்கச் செய்வீர்களேயாமாகில்,

வீரியமுள்ளவும், பலமுள்ளவுமான ஜாதியா ருற்பவிக்க ஹேதுவான அங்குரார்ப்பணஞ் செய்தவர்களாவீர்கள். ஏனையர் போதிக்கிறபடி பிராசீன வழக்கங்களை விட்டுவிடுங்களென்றும், நவீன வழக்கங்களை யனுஷ்டியுங்களென்றும் நான்சொல்லவரவில்லை. பிராசீன வழக்கங்களைத் திரும்பவனுஷ்டியுங்களென்று சொல்லுகிறேன். அதற்கப்படியாக, பெண்களுக்கு விவாகம் 14-வது வயதிலும், சிறுவர்களுக்கு விவாகம் 18-வது வயதிலுஞ் செய்யவேண்டுமென்றும், ருதுசாந்தியதற்கு 2-வரு கிரமித்ததின்மேலிருக்கலாமென்றுஞ் சொல்லுவேன். இந்தவிதி யனுஷ்டானம்பெறின் ஜாதிவீரியத்ததாகவாகுமென்று நீங்களே சீக்கிரத்திலுணர்வீர்கள். எந்தப்பாடசாலையிலுங் கலாசாலையிலு மிந்தவிதி யனுஷ்டானத்திற்கு வருமென்று நம்புகிறேன். உடனேயே பிராசீன வொழுக்கத்தைக் கைக்கொள்ளமுடியுமென்று நானெண்ணவில்லை. ஆனாலதை நோக்கியே வரவர மேன்மேலும் முயற்சித்துக்கொண்டுவரக் கூடுமென்று நம்புகிறேன். இதை உதாரணமாக மற்றவர்களும் பார்த்து அனுஷ்டிக்கத்துணிவார்கள். இவ்விதமாக இந்தியர்களுக்குச் சரீரதாருட்டியமேற்பட்டு வீரியமுள்ள தீரர்களுண்டாகலாமென்று நினைக்கிறோம்.

பிரஹ்மசரியமானதின்மே லென்னபருவத்தை யடைந்தவனாய்க் கிரகஸ்த ஆசிரமத்திற்பிரவேசிக்க வேண்டியவனாக விருக்கிறான்? இந்த வாசிரமமானது சீலத்தை விருத்திபண்ணுகிறதி லதிக முக்கியமானதென்று நீங்கள்தெரிந்துகொள்ளலாம். இந்த ஆசிரமத்தின்கண் பிறர் க்ஷேமம் கருதல், மிதமாகவிருத்தல், தம்மின்மெலியாரிடமன்பு பாராட்டி யுதவிபுரிதல், இலகுவாய்த் தியாகஞ் செய்யப் பயிலுதல் அதாவது, அன்புபாராட்ட அதின் பிரயோஜனமாக அன்பு பயத்தல் முதலிய கற்பனைகளையடைய இவை சாதகமாகவிருக்கின்றன. உலகத்தின்கண் பரிசுத்தமானமனோபாவங்களின்முதன்மையானதும் ஆத்மா ஈசுவரனிடம் வைக்குமன்புக்கடுத்தபடியானதுமான ஸ்திரீ புமான்களின் பரஸ்பர அன்புநிகழ்ச்சியும், பிதா தன்மக்களிடமும் மக்கள் பிதாவினிடமும் பாராட்டுமன்பும், முன்னதிலாதரவும் பின்னதில் நன்றியும் மரியாதையு மிவைகளெல்லாஞ் சீவன்கிரகஸ்தாசிரமமடையாநிலையிற் படிப்பினைகளாம். இந்த ஆசிரமம் மற்றைய ஆசி

ரமங்களுக்குற்ற துணையாம். "இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும், நல்லாற்றின் நின்ற துணை." மேலும் பற்றுள்ளவிடத்தில் பற்றற்று இருக்கப்பழகவும், எல்லாப்போக சம்பத்துக்களும்உள்ளவிடத்து ஜிதேந்திரியனாகவிருக்கவும்இல்லறமனுகூலமானது. பிராசீன உயர்வான வொழுக்கமிருக்கலாம்; அது நடைபெற்றுப் பிரகாசிக்கவேண்டுமானலெவ்வளவு மாறுத லிக்காலத்திய வழுக்கத்திற் செய்யற்பாலதாகவிருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றி விஸ்தாரமாயினி இந்திய ஸ்திரீகளைப்பற்றிப் பேசும்போது வசனிப்பேன். இந்தியாவின் விவாகதர்மத்தி னுயர்வுக்குச் சமானமானது எங்குமில்லை. ஆனால் அந்த வுயர்வான தர்மம் இக்காலத்தி லனுஷ்டானத்தில் துர்லபமாகவிருக்கிறது.

பிதா, மக்கள் இவர்களுடைய பரஸ்பர வொழுக்கங்களைக் கவனியுங்கள். அவைகளிருக்கவேண்டிய முறைப்படி யிக்காலத்தி லிந்தியாவிலிருக்கின்றனவா? பிதா சௌஜன்னியமின்றியும் மக்கள் கூச்சமும், அச்சமுமுள்ளவர்களாகவுமிருக்கின்றார்களல்லவா? இருவருடைய வொழுக்கத்தினும் மகன் பிதாவிடம் அந்தரங்கமில்லாதவனாக விருக்கின்றானல்லவா? மகன் சந்தோஷமாகவு முல்லாசமாகவுமிருக்கவேண்டி, கிரகம்சுகமாகவும், பிரீதிகரமாகவு மிருக்கும்படி பிதா செய்விக்கிறானா? மகனின் வேண்டுகோள்களைக் கருதாமலும், பாலியனாயிருக்கின்றமையால் அவனுற்சாகங்களைக் கவனியாமலும், தகப்பன்மார் தங்கள் காரியங்களைப்பார்த்துக்கொண்டு உள்ளடங்கினவர்களாகவும் ஆலஸ்யமுள்ளவர்களாகவும் இருக்கின்றார்களல்லவா? என்னபரிதாபம்! அந்தோ! மகன், தகப்பனிடஞ்சொல்ல அச்சமுள்ளவனாக தீயவைபற்றிய வுல்லாசங்களில் காலங்கழிக்கச்செல்லுகின்றான். தகப்பன்மார் அன்பும் ஆதரவுமுள்ளவர்களாகில் நல்லவைபற்றிய வுல்லாசங்களில் மகன் நேர்மையாக வொழுகுவானன்றோ? அந்தோ என்ன பாவம்! தகப்பன்மார் மக்களிடத்தில் அன்பும் சிநேகமும்பாராட்டாமலும், பக்ஷம்வெளிப்படப்பாராட்டாமல் அதிகாரம் பாராட்டிக்கொண்டும் இருக்கிறதினால், இந்திய வாலிபர்கள் நீதிமுறைதப்பி பகட்டமுள்ள துன்மார்க்கர்களாகின்றார்கள். வாலிபகாலத்தில் மக்களிடம் பக்ஷமும் இன்சொல்லும் ஆதரவான வொழுக்க

மும், தகப்பன்மார் அமைந்து நடைபெறவேண்டும். தங்களுக்குத் தங்கள்கிரகஞ் சுகமில்லையென்றும், அருவருப்புற்றதாக இருக்கிறதென்றும், அதைவிட்டு விலகவேண்டுமென்றும் சிறுவர்கள் சிலவேளைகளில் என்னிடஞ்சொல்லிக்கொள்ளுவார்கள். அதனாற்றான் நான் இவ்வண்ணஞ்சொல்லுகிறேன். இரக்கமின்றி அதிகக்குரூரமாக அதிகாரஞ்செலுத்துவதினால் இந்தியகிரகத்தில் அதை யெதிர்க்க இடமுண்டாகிறது. எப்போது மகனெதிர்க்க வெத்தனித்தானோ அப்போது அநேகமாகக் குற்றவாளி தகப்பனே. பாலியாவஸ்தைக்குரிய மகனுடைய மனோபாவங்களையும் மனோரதங்களையும் உதறித்தள்ளி அன்பின்றித் தகப்பன் நடைபெறுகின்றதினால், சிறுவனும் எதிர்க்க ஆரம்பிக்கின்றான். இந்த எதிர்க்கும் சுபாவமானது அனேகமாக வெளியாகாமல் பொருமிக்கொண்டேயிருக்கும். அதுவும் அபாயகரமானதுதான். மகனுக்குத் தகப்பன் உற்ற அந்தரங்க சிநேகனாக இருத்தல்வேண்டும். அன்பும் ஆதரவுமுள்ளவனாக இருத்தல் வேண்டும். பிரியமுள்ள ஆலோசனை சொல்லுகிறவனாக இருத்தல் வேண்டும். இப்படித் தகப்பன்மார் இருப்பார்களாகில் மகன் எதிர்பேசாமல் வணக்கமும் மரியாதையுமுள்ளவனாகவிருப்பான். கிரகத்தில் ஏதேனுஞ்சங்கடம்நேரிடுமாகில் அதற்குக்காரணம் மூத்தோரே; வாலிபரன்று. சம்பந்தநேர்மையில் பங்கமுண்டானால் குற்றம் மேலாயினோரிடமிருக்கும், கீழாயினோரிடமிராது. மேலோர் அவர் கடமையில் வழுவ மேவியோரும் அவ்விதம் ஆரம்பிக்கின்றார்கள்.

இது ஒவ்வொருவருந் தமக்குத்தாமே யோசித்து நடத்திக்கொள்ளவேண்டியவிஷயம். உயர்வான தர்மமென்னவென்றால் தந்தை, மகனுக்குற்ற நண்பனாகியும் மகன் தந்தைக்குற்ற அன்புள்ள தோழனாகியும் இருத்தல்வேண்டும். ஒவ்வொருவரும் இந்தத்தர்மம் எவ்விதமிக்காலத்தில் அவரவர் கிரகத்தில் நடைபெறுகிறதென்று கவனித்துப்பார்க்கவேண்டும். அறிவீனமான நடத்தை அல்லது தவறானவொழுக்கம் மகனிடம்நேர்ந்தால் தகப்பன் அன்பாகவும் ஆதரவாகவுமொழுகுவானாகில், அவைகள் நீங்கி மகன் நேர்மைபற்றி யொழுகுவான். இல்வாழ்க்கைநேர்மையாய் அமையும். உலகத்திலெல்லாக்கிருத்தியங்களுமொழுங்காய் நடைபெறும். பிராசீன கிரகஸ்ததர்மங்கள் எங்கு

மனுஷ்டானத்திற்கு வரும். அவை நடைபெறவே இந்த ஆசிரம முடிவில் அடுத்த ஆசிரமமாகிய உலகவியாபாரங்குறைந்து தியானபரனுகவிருக்கிறநிலையையனுஷ்டிக்கிறது இலகுவாயிருக்கும். இத்தகையதான வானப்பிரஸ்தவாசிரமத்தை இக்காலத்திற்குத் தங்கபடி யெவ்வாறு மாற்றிக் கைக்கொள்ளலாம். பிற்காலத்தில் ஏகாந்த காலக்ஷேபஞ் செய்யவேண்டிக் காட்டகத்தே செல்லுதலும் குகையில்வாசஞ்செய்தலும் இக்காலத்திற்குப் பொருந்தாதவிஷயம். இந்த ஆசிரம தர்மத்தை உள்ளபடியாதரிப்பது இக்காலத்திய நாகரீகத்தின்நெறிக்கு முற்றும்புறம்பாகவிருக்கிறது. இக்காலத்தில் ஜனங்கள் தங்களுடைய தேவைகளைப் பலவாருக விருத்திசெய்துகொண்டிருக்கின்ருர்கள். மூத்தோர்கள்திரவியஆர்ஜிதவியாபாரத்தைவிடவும், கிரககிருத்தியவிசாரணையைவிடவும், உலககாரியங்களில் நேரில்தலையிடாமல்விடவும், இளைஞர்களிவைகளில் பிரவர்த்திக்கும்படி செய்யவுங்கூடுமல்லவா? நிவிர்த்திமார்க்கத்தில் பிரவேசிக்கக்கூடாதா? கௌரவமான ஏகாந்தநிலையை ஒருவாறு அனுஷ்டித்து, உபாசனை தியானம் ஆத்மவிசாரணை முதலியன செய்துகொண்டும் உலக அனுபவங்கள் நிறைந்தவர்களாகையாலும் உலகப்பற்று இல்லாமையாலும் நிற்பக்ஷபாதமாய் நடுநிலைமையாய் வேண்டுங் காலங்களில் இளைஞர்களுக்குப் புத்திமதிபோதித்தும், அவர்கள் காலங்கழித்தல் சாதகமாகவிருக்கும். விருத்தர்கள் இவ்வண்ணம் உலகவியாபாரங்களினின்றொழிவடைந்தும் இளைஞர்களுக்கு ஆலோசனை சொல்லிக்கொண்டும் அவர்களை நல்லவழியில் நடப்பிவித்தும், அனுபவங்கள் நிறைந்தவர்களாயும், ஞானவான்களாயுமிருக்கின்றமையால், பூஜ்ஜிதர்களாகவும் நம்பிக்கைக்குப்பாத்திரவான்களாகவும் அமைந்தொழுகவேண்டும். இம்மாதிரியாக இந்தஆசிரமமானது திரும்பவும்நடைபெறுமாகில் வெகு அனுகூலமாகவிருக்குமல்லவா?

கடைசி ஆசிரமமான சந்நியாசம், உயர்வான ஞானப்பயிற்சியுள்ளதாக இருக்கவேண்டியதாகையால், சொற்பப்பெயர்கள்தான் அந்த ஆசிரமத்தை யனுஷ்டிக்கக்கூடும். இக்காலத்தில் அது துர்லபமாக இருப்பினுஞ் சிலதலைமுறைகளானபின்னர் ஏனைய ஆசிரமங்கள்சீர்திருத்தப்பெற்று ஜனங்கள் சீலமும் ஞானபாவமும் மேன்மையாக அடையும்போது இந்த ஆசிரமமும்பேற்பட இடமுண்டாகும்.

சந்நியாசி என்றசொல் இக்காலத்தில் வெகு சாதாரணமாய் வழங்குகிறது. ஞானமார்க்கம்பயில கிரகஸ்தாசிரமம் அதிக முக்கியமான சாதனம். அதைவிட்டு விலக ஆனேகமாக அருகர்கள் ஒருவருமில்லை என்று சொல்லலாகும், இந்திய ஞானிகள் கிரகஸ்தாசிரமம்எல்லோரும் பற்றி யொழுகக்கடவர்களென்று ஆலோசனையின்மேல் விதித்திருக்கின்றார்கள். விருத்தர்களுக்குங்கூட சந்நியாசத்தை யுள்ளபடி அனுஷ்டிக்கமுடியாதாம். பால்யத்தில் அதை யனுஷ்டிப்பது மிகத்துர்லபமாம்.

பாலயோகியாய், மாசற்ற ஞானியான சனத்குமாரர்போன்று நடைபெற்றால், சிரேயஸ்கரந்தான். அந்த ஆசிரம வுயர்வும் நன்கு விளங்கும். உலகரக்ஷணார்த்தம் ஒருமஹான் அவதரிப்பாராகில், அவர் குழந்தைப் பருவமுதற்கொண்டே சந்நியாச மார்க்கத்தைப்பற்றி யொழுகக்கூடும். ஆனால் இக்காலத்திலோ, அனேக இளைஞர்களும் யௌவனர்களும் இந்தஆசிரமத்தின்கண் வெளிப்படையாய்த் தன்னிஷ்டமும், உலகநிர்ப்பந்தங்களுத்திரவாதங்களின்மையும், அமைவுற்றிருக்கிறதைக்கண்டு, இந்த ஆசிரமத்தின் அதிக சிரமமான வுத்திரவாத பாரங்களைத்தாங்கி நடத்த எண்ணமில்லாதவர்களாய் இலகுவாயும் பகட்டமாயும் காஷாயந்தரிக்கின்றார்கள். தேகக்கொழுப்புந் தேகதாருட்டியமுமுள்ளவர்களான சோம்பேறிகள் பிறர் ஆர்ஜிதங்களைப்பக்ஷித்துக்கொண்டும் யாருக்குமெவ்விதபிரயோசனமுமின்றியும் இத்தேசத்தில் ஆயிரக்கணக்காய்த் திரிகின்றார்கள். அனேகர் காஷாயத்தின் கௌரவத்தைக்கொண்டு வேஷதாரிகளாய், காமிகளாய் துர்மார்க்கத்தில் பிறர்களை நடத்தி, பேரின்பநெறி முற்றுந்துறந்து சிற்றின்பத்தில் முழுமையும் மூழ்கி ஜிதேந்திரியர்களாக இருக்கவேண்டிய முறைதவறி இந்திரியாதிபர்களாக அலைகின்றார்கள். உண்மையான சந்நியாசி அருமை பெருமை தங்கியவரே. எளியவன்கூட தன்பாலுள்ளசிற்றுண்டியையும்அவருக்கிட்டுத்தான்சந்தோஷிப்பான். அவருடைய ஞானசிரேயஸானது, அவருக்குவேண்டிய அற்பவிஷயத்தைக் காட்டிலும் எவ்வளவோ கோடிபங்கு அதிகமானது. அவர் தூய்மையும் பக்தியும், அவர்போகுமிடமெல்லாஞ் சுத்தப்படுத்தும்; சிரேயஸ்கரத்தைக்கொடுத்து சீலங்கெட்டுப்போகாமல் பாதுகாக்கும். துர்நட

த்தையுந் தியவொழுக்கங்களுமுள்ள போலி சந்நியாசிகள், ஈசுவரனு க்கும் மனுஷனுக்கும் சம்மதமல்லாதவர்களாய், இந்தவுயர்வான ஆசிர மத்திற்குப்பழிப்பும் ஹானியுமுண்டுபண்ணி, சந்நியாசியென்ற பெய ருக்கே அகௌரவத்தையுண்டாக்குகிறார்கள். பாலியர்களுக்கு உத் திரவாதங்கள் கடமைகள் நிறைந்த கிரகஸ்த ஆசிரமமே தகுந்தது. இவ்வுத்திரவாதங்களால் தம்மையடக்கப்பயின்று, தம்முடைய கீழா ன நடைப்போக்குகளைக் கட்டுப்படுத்தி நிக்கிரகஞ்செய்து, பின்னர் தனக்கும் உலகத்திற்கும் யாதொரு தீங்குஞ்செய்ய விடாமில்லாமல் நிகழுவான்.

பிராசீன உயர்வானதர்மங்கள் இக்காலகதிக்குரியவாறு அமை க்கப்பெற்று, இந்தியாவில்இக்காலத்திலனுஷ்டானத்திற்கு வருமேயா கில், அதைப்பார்த்து ஏனையதேசத்தார்களு மனுஷ்டிக்கத்தலைப்படு வார்கள். பின்பு உலகமுழுதும் மாறி இவ்வொழுக்கங்களையனுசரி த்து ஒழுகாநிற்கும். மேல்நாடுகளில் வாலிபர்கள் வரவரப் பரிசுத்தர் களாக விருக்கும்படிசெய்ய முயல்வோம். தற்கால நாகரிகத்தின் லக்ஷணமான தனக்குத்தனக்கு என்ற போட்டித்தன்மையைத்தவி ர்த்துக் கிரகஸ்தர்கள் பிறர் க்ஷேமத்தைக்கருதுபவராயும், செந்தண் மைபூண்டவர்களாயும் ஒழுகும்படி வரவரச்செய்யவேண்டும். விரு த்தர்கள் திரவிய ஆர்ஜிதத்தொழிலை யொழித்துக் குடும்பங்களுக்கு அறிவு போதிப்பவர்களாக நடைபெறுவதையும், அவர்களில் சிறு பான்மையரேனு முலகவாழ்க்கை முற்றுந்துறந்தவராயிருப்பதையும் நாம் பார்க்கவேண்டும். இந்த உயர்வான தர்மநெறிகள் வேரூன்றப் பெற்றதும், அவைகளின் வாசனை கெடாமலிருப்பதும், அவைகளை இன்னுஞ் சிரத்தையுடனே சிந்தனைசெய்கிற ஜனங்களையுடையதுமான இந்தத் தேசத்திலேயே மறுபடியும் ஸ்தாபிப்பது உலகத்திற்கு நன் மையைப் பயக்குமன்றோ? மனிதனின் ஒவ்வோரியல்பும் நேர்மையாய் விகாசித்து, ஜனங்களின் யோகக்ஷேமார்த்தமாக யாவரும் பார்த்துக் கற்று அவ்வழியில் நிற்க, இந்தியாவானது பிரத்தியக்ஷ அனுபவசித் தமான உதாரணமாகவிருக்குமல்லவா?

சாயங்காலங்களில் கொடுக்கிறதாக வுத்தேசித்திருக்கிற இவ் வுபந்நியாசங்களில் இதுதான்முதன்மையானது. நான்சொன்ன விஷ

யத்தை மனதிற்பதியச்செய்புங்கள். தாங்கள் தினந்தோறும் நடத்தும் ஒழுக்கங்களை நன்றாய்க்கவனியுங்கள். அவைகளில்குற்றங்குறையுள்ளவைகளைப்பாருங்கள். அதன்மேல்அவைகளுக்குரியபிராசீன தர்மங்களைத் திரும்பவும்நாட்டிச் சாவதானமாய் அம்முறையில் நடைபெறுங்கள். மனதில் தோன்றியவுடனேயே அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டாம். நன்றாய்ப்பலவாறாக யோஜியுங்கள். அதன்பிறகு அநுஷ்டியுங்கள். எண்ணியெண்ணிக் கணக்காணவேண்டாம். இந்தியா க்ஷேமத்திற்கும்வரும்; அப்படி நம்பிக்கை எனக்கிருக்கிறது' என்று வார்த்தைமாத்திரத்தில் நிற்கவேண்டாம். அடியிற்கண்டவாறு செய்யக்கடவீர்கள். ஈசுவர அநுக்கிரகங்களினால் நாமே இந்தியாவின் க்ஷேமகரமான இந்நெறிகளை யவலம்பித்து இம்முறைகளை அநுஷ்டிப்போம். இந்த வாலிபர்களே இனி இந்தியர்களாகிறவர்கள். இவர்களுக்குஉரித்தான முறைப்படி கல்விகற்பிக்கக்கடவோம். பிராசீன வுயர்வான மனோபாவங்களை இவர்களுக்குப் புகட்டுவோம். அவர்கள் நேர்மையுள்ள கிரகஸ்தஆசிரமிகளாக ஆவார்கள். நேர்மையுள்ள கணர்களாகவும், தந்தையாராகவுமிருக்கவேண்டிய முறைகளையுடையராய்ப் பிறருக்கு உதாரணமாகவு மிருப்பார்கள். எது சொன்னாலும் வாங்கக்கூடிய இளமைப்பிராயத்திலேயே, விருத்தர்கள் எல்லாராலும் நன்குமதிக்கப்பட்டவர்களாய்ப் பூஜ்ஜியதையடையக்கூடிய நெறியை, பாலியர்களுக்கு எடுத்துக்காட்டுவோம். கூடியவரை நாங்களே அந்நெறியை அநுஷ்டித்துக் காட்டுவோம். அது அவ்வளவு முற்றும் நேர்மையாகவில்லாவிடினும், இனி அவர்கள்காலத்தில் அதைச் சீர்திருத்திக்கொள்ளுவார்கள். அதிக செளகரியங்களேற்பட எங்களைவிட மேன்மையாய் நடைபெறுவார்கள். அவர்களுக்கடுத்த தலைமுறையில் வருகிறவர்கள் இன்னுமதிக மேம்பாட்டைப்பெற்று ஒழுகுவார்கள். இவ்விதமாக வரவர சிரேயஸ்கரம் விருத்தியடைய சந்ததிக்கிரமமாய் மென்மேலுமுயர்வான தர்மங்கிரீடித்துக்கொண்டுவரும். இந்தியா புதியஸ்வரூபம்பெறுவதாகும் ஆனால் இதற்கெல்லாம் அஸ்திவாரம் அன்றுசெய்வாம் என்று எண்ணாது, இன்றே தாமசியாமற்போடக்கடவோம். இதனால் எவ்வளவு செலவு நேர்ந்தாலும அதைக்கவனியாது செய்துமுடிப்பிப்போம். நாம் அஸ்திவாரம் போடுவோம். இனி வருபவர்களான பாலர்கள்

அதிற் சுவரெழுப்புவார்கள். அவர்கள் பிள்ளைகள் அதன்மேற் கட்டிடங்கட்டுவார்கள். இப்படியே மேன்மேலும் விர்த்தியடையும். இந்தியா சுத்தமாயும், மேன்மையாயும் ஞானமுறையுள்ளதாயும் அமைந்தொழுகுவதாகும்.

இத்தன்மையான இந்தியாதேசந்தான், உலகமெல்லாவற்றிற்கும் ஞானகுருவாகவமையும். ஜனசமூகத்திற்கே இந்தியர்கள் பிராஹ்மணராவார்கள். அவர்கள் வாக்குந் தேவவாக்காக விளங்கும். அனுக்கிரகம் அமைந்ததாக நிகழும். அப்படிப்பட்ட வுயர்வான ஸ்திதிபெறுமாறு, அஸ்திவாரப்போட உங்களை வேண்டுகிறேன். உயர்வான கட்டிடங்கள் ஸ்தாயியாக நிலைபெறுமாறு பலமான அஸ்திவாரம் போடுங்கள். இனிப் பின்வருமவர் அதன்மேல் ஆலயங் கட்டுவார்கள்.

பௌத்தமத விசாரணை.*

ஐரோப்பிய அறிஞர்களின் நன்முயற்சியாலே, பௌத்தமதத்தைப்பற்றிய நூல்கள் எந்த (ஓரியண்டல்) கீழ்நாட்டைப்பற்றிய புஸ்தகசாலையிலும் பெருமிதம் நிறைந்திருக்கின்றன. தற்காலம், ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களிலும் இந்தியாவிலும், இந்த பௌத்தமதம்போல் எந்தமதமும் எழுதப்படிக்கப்பட்டதில்லை. ஐரோப்பியர்களில் சுத்தலோகாயதத்தினின்று மீண்டும், மேலொரு வாழ்வுண்டு, கடவுளுண்டு என்றும் உறுதிபிறக்காதவர்களாயும் ஏதோ ஒரு அழகிய சொப்பனத்தில் விழைவுற்றவர்களாகவுமுள்ள அநேகர் இதனை அவலம்பித்துப் பாராட்டி வருகிறார்கள். "நாம் ஆன்மாபரமான்மாவில் நம்பமாட்டோம். முற்றறிவுடைய மனிதனில் நம்புவோம். நாம் அடையும் பேறு முற்றறிவுடைமையே." இம்மதம் ஐரோப்பியதேசத்தில் ஓர் வேறுபாடுடைத்து: ஏனெனில், கௌதமருடையவும், ஐரோப்பியருடையவும் புருஷார்த்தம் அல்

---

* ஸ்ரீ சிவஞானசித்தியார் ஆங்கிலேய மொழிபெயர்ப்பு உரையினின்றும் மொழிபெயர்த்தது.

லது பெறும் பேறுகளில் வேற்றுமையுடைமையால். என்னெனில், கௌதமருடைய தேசத்தினர் என்றும் உயிரைப் பளுவாகவும், "எல்லாம் துன்பம் துன்பம்" என்று எண்ணி, எந்நாள் இந்தப் பிறப்பிறப்பைத் துடைத்துவிடலாமோ என்று ஏங்கிநிற்பவர்கள். ஐரோப்பியரோவென்றால், எவ்விதத்திலும் திளையளவேனும் இன்பம் கிடைக்கப்பெறாதாயின் அவ்வாழ்வு வாழத்தக்கதில்லையென்று கொள்வர். மேல் அவன் முழுமுயற்சியும் இவ்வுலகஇன்பத்தை முற்றும் தேடிச் சேகரிப்பதில்தான். ஆகையால்தான், மாக்ஸ்நார்டோ பண்டிதர், உலகம், பொய்யைத்துறந்து சுத்தமான ஊண் உடை, பாடல் ஆடல் முதலியவைகளினால் எவ்வளவு சுகம் பெறலாமோ அவ்வளவும் பெறவேண்டும், என்னும் மானிடசுவிசேஷத்தைப்பிரசங்கிக்கக்காண்கிறோம். இம்மதம், நம்பூர்விக சார்வாகப் பௌத்தத்தின் நவீனத்திரிபென்றே சொல்லவேண்டும். இதனால் நம்மாசிரியர்களால் சாருவாகத்துக்குப்பின் பௌத்தத்தைவைத்த முறைமையும் பெறப்படும். இம்முறை காலத்தானன்று. மனிதனின் குணதத்வாதியபிவிருத்தியின்பாற்று. இங்கே ஒன்றுஅவசியம் கவனிக்கவேண்டும். பழையனபுதியனவுமாகிய நம்நூல்கள், சென்றகால நிகழ்கால வர்த்தமானங்களை நிர்ணயமாகக் குறிக்காமற்போனபோதிலும் மற்றெந்த சாதியாரின் சரித்திரங்களும் குறிக்காதொழிந்த தனித்தும் பலவுமாகிய உயிரின் தத்துவ சரித்திரத்தை விளக்கிக்காட்டுகின்றன. ஆறுமதங்களையும் நம்மவர்கள் வகுத்த முறைபினானே, அவைகளின்காலம் ஒன்றின்பின் ஒன்றானது எனச் சிலர் மருள்கிறார்கள். நாம் நம்வயதைக்கணக்கிடுவதுபோலல்லாமல், மாறுகக்கணக்கிடுவோமானால், முன்கூறப்பட்ட மதங்கள் பழையனவாம். அறிவு முதிர்ச்சி விருத்தாப்பியமன்று. அது என்றும் இளமையுடைத்து. உண்மை விருத்தாப்பியதிசையையே இரண்டாவது பால்யமென்று சொல்வது. சாருவாகன் என்று சொல்லப்பட்ட லோகாயதன் பெருந்திண்டியும் சுவேச்சையும் கொண்ட பாலனவன்; பௌத்தன் நற்சிந்தையும் நற்குணமும் பொருந்தியவாலிபனவன். உலகத்துன்பங்களும் மாயைகளும் அவனைச் சூழ்ந்துவருத்த, அதற்குட்பட்டு அமிழ்வானோ; அல்லது, மீண்டும் நற்குணநற்செய்கை கெடாது புருஷனாவானோ; அதைப்பின்னன்றோபார்க்க

வேணும். பாவச்செய்கைகளின்பலமும் அதன்பிடிப்பும் அறியாத இளம்பருவத்திலே, நான் மெய்யும் ஒழுக்கமுங்குன்றேனென அறியாமல் உறுதிகூறினன். ஆயின் அவ்விளம்பருவத்திலேயே, நல்ல விதைகளை விதைத்து நல்லபூமியில் வேரூன்றச்செய்யாவிடில் அவன் உறுதியெல்லாம் வீணாகும். மேல், பௌத்தரின் குணாதிவிஷயங்களைப்பற்றி பேசப்புகவும் அவருடைய பரிசுத்த சரணங்களில் நம் எளிய வந்தனத்தைச் செலுத்தப்பெறுவோமாகவும். அவருடைய பரிசுத்தத்தையும் பரோபகாரத்தையும் பெருந்தன்மையையும் நோக்க நமக்கு உண்டாகும் வணக்கமோ அளவின்று. அவர் இந்தியர், இந்தியர்களிலும் இந்தியர், என்பதை யாரும் மறந்துவிடுகிறார்கள். டாக்டர் ரைஸ்டேவிட்ஸ் பண்டிதர், அவர் இந்தியர்கள் யாவர்களினும் மேம்பட்ட மேன்மையையும் ஞானத்தையும் உத்தமகுணத்தையும் பொருந்தியவரென்று புகல்கின்றார். அவர்காலத்திலேயே ராஜராஜாக்களினாலும் மற்றவர்களினாலும் அவர் கனப்படுத்தப்பட்டார். அவர்கள் அவர் என்ன மதத்தைப் பிரசங்கித்தாரென்று கவனிக்கவில்லை. அவருடைய செய்கையும் குணமும் பரிசுத்தமாயிருந்ததே போதுமானதாயிற்று. நிரீசுவரசாங்கிய பிரவர்த்தகராகிய கபிலமுனிவரை முனிசிரேஷ்டராக ஸ்ரீகிருஷ்ணர் கீதையில் அங்கீகரித்தார். அது அவர் மதத்தை அங்கீகரித்ததினாலோ ? அன்று. அநேகமாக அவர் மதத்தைக் கண்டிக்கப்பிரயாசைப்பட்டிருக்கிறார். ஜைமினிமுனிவர் கொடியநாஸ்திகர். இருந்தும், அவர் பெரிய மகாரிஷியாகக்கொள்ளப்பட்டார். இன்னும் நம்மவர்களில் இத்தன்மைய குணநிரயம் காணக்கூடும். அவன் மகம்மதியனோ, கிரிஸ்தவனோ, அவன் ஞானநிலையில் நிற்பானாகில் அவனை எல்லாருஞ்சூழ்ந்து வணங்குவார்கள். இதனாலல்லவோ கல்வாளிகள் காஷாயத்தையும் சாம்பலையும் அணிந்து சாம்பலில் இருந்து ஒரு எழுத்து வாசனையும் தெரியாது மௌனம் சாதித்து மோசஞ்செய்வதற்கு இடமாகிறது. ஆகையால் பௌத்தரும் ஒருவிததர்மத்தை விளக்கவந்த பரமரிஷி யென்று கொண்டாடப்பட்டது ஆச்சரியமன்று. ஆகவும், திரிபுர அசுரர்களைத் திருப்பவேண்டி விஷ்ணுபகவானே பௌத்தபாக அவதரித்தாரெனவும் கூறப்பட்டது. எப்படிகிரிஸ்துநாதர் காலத்தில அவர் யூதர்களில் முன்றுன்னவரென்று வேறுக்கொள்ளப்படவில்லை

யோ அப்படியே பௌத்தர்காலத்திலும் அவர் ஹிந்துக்களினின்றும் வேறுபட்டவரென்று தாமும் மற்றவர்களும் எண்ணவில்லை. அவருக்குப் பின்காலத்திலும் அநேகசங்கங்கள் கூடிய பின்னருமே பௌத்தம் வேறுமதமாக மாறுபட்டது. புத்தருக்கோ ஏது உடுத்து ஏதமது செய்திடினும் குற்றமில்லை. ஆசையைக்களைந்து, வேண்டுதல் வேண்டாமையற்று, இருவினை யொப்படைய வேண்டுவதே முக்கியம். அடைந்தபின் பெறும் பேறு ஏதேனும் உண்டோவென்று விசாரிக்கவும் வேண்டுவதில்லை. ஆயின் இந்த ஆழமெடுக்காத அழகிய சிற்றிலைக்கட்டியவர் பின்வரும் விளைவை கவனிக்கவில்லை. என்றும் மழியாச்சுடர்பொற் குன்றின்பேரில் கட்டப்படாததும் அதனால் பெறும் பேற்றையும் எதிர்நோக்காததுமாகிய எந்தமதமும் நிலையுள்ளதாயிருக்குமோ? எப்படி முடிந்தது: அருமையாக வளர்க்கப் பெற்ற சாதுசங்கங்களில் அவர் காலத்திலேயே கலகம் விளைந்து, ஊண், உடை, காலம், இடம் முதலியவைகளைப்பற்றி தர்க்கித்து ஒருவரையொருவர் பாஷண்டிகளென்றும், மாரன் ஏவலாளர்களும் நிந்தித்தும் தூஷித்தும் வந்தார்கள். பூசாரிகளையும் அவர்கள் ஆசாரங்களையும் புத்தர் எவ்வளவோ இகழ்ந்திருந்தும், கூடிய சீக்கிரத்தில் மிகவும் கட்டுப்பாடுகள் அமைந்து ஆசாரங்களுடன் ஆசாரியர்களையும், ஏனைய மதங்களில்லாத அநேக கீழ்மேல் உலகங்களையும் தேவர்களையும் ஏற்படுத்திக்கொண்டார்கள். கடைசியில் அந்த மதம் அதிகம் கெட்டுப்போனபடியால் பிறந்த விடத்தினின்றும் வேருடன் பிடுங்கி எறிய நேரிட்டது. "புத்தமதம் அதிகம்கெட்டது அசோகர்காலத்துக்குப்பின்னரே. அதுவரை இந்தமதத்தை நிர்ப்பந்தம் செய்யக்கேட்டிலோம்." என்று ரைஸ் டேவிட்ஸ்பண்டிதர் சொல்லுகிறார். இவ்வித நிர்ப்பந்தங்கள் ஏற்படவில்லையென்று சொல்லவரவில்லை. ஆனால் இது ஐரோப்பிய கண்டங்களில் நாம் கேட்டிருக்கும் போல்வதொன்றென்று நாம்நினைக்கக்கூடாது. அது மிகவும்கொடூரமற்றது. குடிகள் கட்டன்றி ராஜாங்கதண்டனையன்று. இக்காலத்தைவிட அக்காலத்து ஒரு மதத்தினின்றும் மற்றொரு மதம் திரும்புவது மிகவும் எளிது. பெரிய புராண சரிதங்களினால் புத்தர்களும் நம்மவர்களும் முக்கியம் அரசனைத் தங்கள் பக்கம் திருப்பச்செய்ய முயற்சித்ததாகத் தெரிய வருகிறது. இவ்விதம் திருப்பியபின் குடிகளெல்லாம் அவ்விதமாயி

ளூராகச் சொல்லப்படுகிறது. அக்குடிகளின் திருத்தம் இருவகை யிலும் நாமகார்த்தமாத்தான் தோற்றுகிறது. மடங்களில் இருக்கக் கூடிய சந்நியாசிகளைத்தவிர பெரும்பாலும் குடிகள் புத்தமதஸ்த ர்களாகவில்லை யென்பதே நமது துணிவு: அரசன் புத்தனானால் யாவ ரும் புத்தர்களானதாகப்பாவனை. இதன்மாதிரிதான் அசோகர்காலத் தில் இந்தியாமுழுதும் புத்தமதம் பரவியதெனச் சொல்வது. எனி னும் கடைசியில் மதமாற்சரியம் உண்டாகியது. அது தென்னிந்தி யாவில் கி. பி. முதலாவது நூற்றாண்டு முதல் ஏற்பட்டதாகவும் நற்சாட்சியங்களிருக்கின்றன. ஐரோப்பிய வித்வான்களுக்கு அது விஷயம் தெரிந்தவையல்ல. அக்காலம் தென்னிந்தியாவில் பிரபலமா ன அரசர்களிருந்து வடக்கிலும் தெற்கிலும் அவர்கள் ஆளுகையை விசாரித்து வந்ததாகத் தெரிகிறது. சாசனங்களினால், பம்பாய் ராஜ தானியிலுள்ள வாதாபி (இப்பொழுது—பாதாமி) என்ற பட்டண த்தை தென்னிந்தியர்கள் பிடித்ததாகக் காணப்படுகிறது. (அந்தச் சண்டையில் சேனைத்தலைவராகப்போயிருந்தவர் சிறுத்தொண்டர்.) இலங்கையை ஒரு முறைக்குமேலாகப்பிடித்ததாகவும் தெரிகிறது. புத்தமதமும் இலங்கையினின்றும் தென்னிந்தியாவுக்கு வந்ததாக த்தெரிகிறது. ஸ்ரீமான் மாணிக்கவாசகர் காலம் கி. பி. முதல்நூற் றாண்டாகக் கொள்ளின் அவர்காலத்திலேயே இவ்வித மதப்போர் விளைந்ததாகின்றது: இலங்கையரசன் ஊமைப் பெண்ணைப் பேசுவி த்துநம்மவர்கள் செயமடைந்தார்கள். திருவாதவூர்ப் புராணத்தில் இச்சரிதம் விஸ்தாரமாகக் காணப்படுகிறது.

இப்பவும் சிங்களர்களுக்குள் ஊமைப்பெண்ணைப்பேசுவித்த ஐதிகம் நன்றாய்த்தெரிந்ததாகக் காணப்படுகிறது. பிறகு ஜைன மதம் வளர்ந்து ஓங்கினதாகத்தெரிகிறது. அப்பமூர்த்திகளும் சைனராயிருந்தகாலத்தில் தர்மசேனரென்ற பட்டம் வகித்து, சைவ த்தில் திரும்பியபின் சைனர்களால் ஏவப்பட்ட பாடலிபுரத்து அர சனால் துன்புறுத்தப்பட்டதாகவும் தெரிகிறது: அவர்காலத்தியவர், சிறந்துவிளங்கிய ஸ்ரீஞானசம்பந்தராகவும் அவர்செய்த அற்புதங்க ளால் கூன்பாண்டியன் திருந்தினவனாகி, புத்தமதம் வேருடன் அறு பட்டதாக வெளியாகின்றது. இது கி - பி - 6-ம் நூற்றாண்டின்

முகலில் நடந்தது. இக்காலவரையறை ஏற்படுத்திய பண்டிதர் சுந்தரம்பிள்ளையவர்களாலும் வெங்கய்யர் அவர்களாலும் காட்டிய ஏதுக்களுடன், சீனர்களுக்குள் விளங்கும் சரித்திரமுறைப்படி ஏற்படும் தென்னிந்தியாவில் அநேககாலம் உழைத்த போதிதர்மன் என்பவன், கி. பி. 526 ஆண்டு பிராமணர்கள் செய்த துன்பம் பொறுது சீனதேசம் போயினன் என்ற சங்கதியும் ஓர் ஏதுவாகும். போதிதர்மனும் புத்தமதத்தைவிட சைனமதத்திலேயே பிரவர்த்தித்தவனாகவும் இதனினும் பகுக்கப்பட்ட ஓர்விக மதத்தையே சீனர்களுக்குப் போதித்தான் என்றும் காணப்படுகின்றது. இத்துடன் சைனமும் புத்தமும் தலையெடுக்காமற் போயிற்றாயினும் பின்னும் தங்கியிருந்தவர்களை நம்மவர்கள் துன்புறுத்தாதிருப்பதுடன் நம்மரசர்களும் பிற்காலத்தில் அவர்களுக்கு நன்கொடை கொடுத்து ஆதரித்துவந்தார்களெனவும் காணப்படுகிறது. ஸ்ரீசங்கரரும், ஸ்ரீராமானுஜரும் பௌத்தமதத்தை முற்றிலும் ஒட்டினதாகக்கூறும் கூற்று உண்மையாகக் காணப்படவில்லை. அவைகள் சாஸ்திர சாம்பிரதாய வாதக்கூற்றுகுமேயொழிய வேறன்று. ஆயினும் ஸ்ரீசங்கரர் சம்பந்தப்பட்டவனாயில், வடஇந்தியாவிலுள்ள சில புத்த மடங்களை யொழித்து அம்மாதிரியான தம்மடங்களை ஸ்தாபித்திருக்கலாமென யூகிக்கவிடமுண்டாகின்றது: ஸ்ரீசங்கரர் காலத்துக்குமுன் புத்த ஜைன மடங்களைத்தவிர மற்ற மடங்கள் இருந்ததாக வெளியாகவில்லை.

புத்தமதத்தில்கூறலாயின அறத்தைப்பற்றி சிறந்தோர் பலராலும் நன்கு புகழப்பட்டிருக்கிறது. மாக்ஸ்மூலர் பண்டிதரும், புத்தர் கூறிய அறம் உலகினர் அறிந்த யாவற்றிலும் நிறைந்து சிறந்ததெனக்கூறினர். எனினும் இவ்வறத்தைச்சீனர்களுக்குள் விளங்கும் கன்பூசியன் மதத்தோடு ஒப்பிடில் மிகவும் தோற்றதாகக் காணப்படுகின்றது. அதன் (புத்தமதத்தின்)நிதானங்கள் பலங்குறைந்துள்ளது. அநேகசாதியர்களை மேம்படுத்தியதாகவும் காணக்கூடவில்லை. பர்மாவில் அன்றி மற்ற சாதியர்களால் நன்மார்க்கத்திற் புகுத்தியதின்று. எட்கின்ஸ் பண்டிதர் சொல்வது 'சீனரில் என்ன நல்லொழுக்கம் இருக்கின்றதோ அது கன்பூசியன் மதபோதனையினால் ஏற்பட்

டது'கர்னல் ஆல்காட் அவர்கள் எடுத்துக்காட்டிய கணக்கின்படியே, இந்துக்களிலும் சிங்களர்கள் தீயர்களென்றாகின்றது. இதன்உண்மை அத்தேயத்தை ஒரு முறைபோய்ப்பார்த்ததனுனே நன்குவிளங்கும். 'பர்மாவிலும் சனங்களைநல்லொழுக்கம் பெறச்செய்த புத்தமதத்தின் பலம் இந்துசின நாட்டிலிருக்கும் குறிஞ்சி நாடர்களிலும் இந்திய ஜாதியார் சிறந்தமையே காரணமாகவும் சொல்லலாம். இந்தியரின் கைத்தொழிற் றேர்ச்சியும் நாகரிகமுமே, புத்தமதம் சிறந்ததற்கு காரணமாகும்' என எட்கின்ஸ்பண்டிதர் பின்னும் வரைகின்றனர். 'புத்தமத தத்துவ உண்மைகளை அறிய*பர்மர்கள் இயலாதவர்கள். இவ்வறிவின் விசேஷமில்லாமல் புத்ததர்மத்தினுனே பர்மர்கள் பக்தியும் நல்லொழுக்கமும் கொண்டார்களெனின் அதற்குள தாகிய ருசுக்களைக்காண்கிலோம்'என, பிகான்டெட்பிஷப்புச்சொல்லுகின்றார். முடிவில் புத்தமும் இந்து மதத்தில் பிறந்த சிறுமதலேயேயன்றி வேறோ? 'இந்து மதம் எவ்வளவுகெட்டதென்றும் நிர்ப்பந்தமுள்ளதென்றும் காட்டாது, இதன் எதிர்மறையே, புத்தமதம் சித்தாந்தப்படுத்துகின்றது. ஏனெனின்,புத்தமதத்தில் சிறந்தும் அழகியும் பொலிவதுமானவை உளதென யாரும் மறுக்கார்.' எனக்கூறுகிறார் ரைஸ் டேவிட்ஸ்பண்டிதர்.

புத்தநிர்வாணம்.

புத்தமத தத்துவவிஷயம், இந்நூலில் வேண்டுமட்டும் பூர்வபக்ஷம் பண்ணியிருத்தலின், அதனைப்பற்றி ஈண்டு விஸ்தரிக்கவேண்டியதின்று. ஆயினும், புத்தமதஸ்தரின் பெரும்பேறாகிய நிர்வாணத்தைப்பற்றி இரண்டொருமொழி கூறுவோம். பண்டிதர் பலரும் பலவாய் இதைப்பற்றிப் பகர்ந்திருக்கின்றனர். ஒருவரோடொருவர் மாறுபட்டு மாக்ஸ்மூலரும் ரைஸ் டேவிட்ஸ் பண்டிதர் இருவரும் நிர்வாணம் என்பது ஆன்மாவின் கேட்டை உணர்த்துவதின்று என்றும், பரமரகசியமான கர்ம விதிப்படி பிறப்புக்குக் காரணமாகிய உள்ளம் உணர்வின்கண்ணுள்ள கொடிய அவாவின்பற்றை யறக்

---

* Burmese.

திருவாரூருலா.

காப்பு.

வாதாவிவிநாயகர்துதி.

கமலைக் கருள்செய் கமலேத்யா கேசர்
கமலைத் திருவுலாக் காப்பாங்—கமலைவயன்
மீதாவி வேழமுக மீன்குதிக்கு மப்பதியில்
வாதாவி வேழமுக வன்.

மாற்றுரைத்தவிநாயகர்துதி.

பாந்த ளணியணிந்த பாலொத்த மென்மொழியாள்
காந்தர்தியா கேசருலாக் காப்பாகும்—பூந்தாளிற்
போற்றுரைத்த வாரணமே பொற்சிலம்பாங் கைச்சிலம்பு
மாற்றுரைத்த வாரணமே வந்து.

அவையடக்கம்.

ஆதியுலா வாரூருகு மாரூ ரனைத்தமியே
னோதியுலா வாரூருக்க வுன்னினேன்—சோதிகையு
மாநாக முங்குழைக்கு மாமேரு வெற்பையொரு
பூநாக முங்குழைத்தல் போன்ம்.

நூல்.

க. நீர்பூத்த தாமரையி னிற்குந்தே வாதியா
வேர்பூத்த வொன்பா னெனும்பேறுய்ச்—சீர்பூத்த

(பாடபேதம்) வாதாவிவிநாயகர் துதி.

'அமலைக் கொருபாக ராரூர்த் தியாகர்
கமலைத் திருவுலாக் காப்பாந்—திமிலவயன்'
'கமல வயன்'

அவையடக்கம்.

'ஆதியுலா வாரூருக்கும்'
'பூநாக முங்குழைத்தல் போல்'.

உ. வேதாந்த மேதெளிந்த சைவ விழுப்பொருளாய்
நாதாந்த மேயாய் நடிக்கின்றோன்—வேத

ங. முறைமையா லோது முதுபரா சத்திக்
கிறைமையா மெல்லைக் கிறையோ—னிறைவி

ச. லொருதலையி னுணு மொருதலையிற் சாய்ந்த
வரிதலையுஞ் சேதிப்ப தாகக்—கருதிய

ரு. வானோர் சிதலாய் வரும்புற்றில் வந்தந்த
வானோ ருளத்துளக்க மாற்றினோன்—போனநான்

சு. வில்லை மகபதிக்கு வில்லாம் படிதந்து
முல்லை யரிக்கு முடிதந்தோன்—றெல்லைச்

எ. சனகர் முதன்முனிவர் சாரக் கலிதீர்த்
தனக வொளியு மளித்தோன்—விலைகழிப்ப

அ. வார்த்த முடிக்கங்கை யாழ்ந்தே யெழுந்தேவ
தீர்த்த மலம்புகுனை தீரத்தோ—னீர்த்த

கூ. வொருசங்க மாமுனிவ னெண்கை யிரண்டும்
வருசங்க தீர்த்த மருங்கோன்—பொருசங்க

கய. வேலைக் கமலை புகுந்திறைஞ்ச வேட்டதிரு
மாலைப் புணர்த்த வரத்தினோன்—காலை

கக. வருங்கம லாலயப்பெண் வந்திப்பத் தன்னூர்க்
கிருங்கம லாலயப்பே ரிட்டோன்—பெருங்கண்ணன்

கஉ. செய்யுங் கருத்து முடித்த திருவுருவா
யுய்யுஞ் சுரரரசுக் கோரரசா—வெய்தியவன்

கங. பண்டு பணிப்பப் பணிந்து முசுகுந்தன்
கொண்டு வரக்கமலை கோயிலா—வொண்டொடிக்கை

கச. மானுமொரு செவ்வேளு மானுமழு வுந்தரித்த
தானுமொரு சிங்கா தனத்திருந்தோன்—மாநகரை

கரு. மேய்ந்து வலம்புரிந்த மெய்க்கோவு மக்கோனை
யாய்ந்து வலம்புரிந்த வாடவனும்—போந்து

கசு. பதியி னமைச்சனு மன்னுமெனச் செய்து
கதியும் வழங்கு கழலோன்—முதுவன்

(பா-ம்) உ. 'வேதாந்தத் திற்றெளிந்த சைவ விழுப்பொருளின்'
ரு. 'உளத்துக்கம்'
கஉ. 'சுரவரசுக்கு'
கஉ-கங. 'எய்திடவர், பண்டு பணியப்'
கசு. 'பதியு மமைச்சனும்'

௧௭. றிரிசங்கு கோடிபடு தேவநீர்த் தத்தாற்
றிரிசங்கு மெய்சேரச் சேர்த்தோன்—சுருதியன்வாய்க்

௧௮. கள்வினையு முள்ளாவி காரி விருத்திரனைக்
கொள்வினையு மந்நீரிற் கோலித்தோ—னள்வினைப்பேய்க்

௧௯. கந்தக் கயையா லருநன்றி கொன்றமையு
மிந்தக் கயையா லினிதறுத்தோன்—செந்திருத்தா

௨௦. டேடிப்பண் டோடி வருமறையோர் செய்வணக்கங்
கோடிக்குங் கோடியாங் கோலத்தோ—னெடுந்தேர்ப்

௨௧. பத்தன் மகப்பேறு கூறினேன் பண்டொரு
சித்தன் மகப்பேறு சிந்தித்தோன்—முத்தி

௨௨. பொருகோபக் கூற்றுலகிற் போயாவி மீண்ட
விருகோ கரணர்க்கு மீந்தோன்—முருகு

௨௩. பொலிசித் திரகாயப் பொற்காய வேந்தாற்
குலிசித் திரநாமங் கொண்டோன்—கலிபயந்து

௨௪. முத்தீர்த்த சீகரத்து மூன்றரைக் கோடியா
மத்தீர்த்தம் புக்க வபயத்தோ—னித்தகைய

௨௫. வூரெல்லை கொண்டநா ளும்பர்க்கு மிம்பர்க்கும்
பேரெல்லை தோன்றுப் பெரும்பெருமா—னேரேழுஞ்

௨௬. சோதி விடங்கமே யாயினுந் தொன்மையாம்
வீதி விடங்கமே மேவினேன்—போதமே

௨௭. யன்னமணித் தண்டி லசைந்த டியபெருமா
டன்னமணிச் சிங்கா தனப்பெருமாள்—விண்ணோர்

௨௮. திருமாளா தாட்கொண்ட தேவ ரகண்டப்
பெருமா டியாகப் பெருமாள்—விரிபுவன

௨௯. முற்றத் தழைப்ப முதியவிதிக் காமிகத்திற்
கொற்றத் தியாகக் கொடியேற்றிச்—சுற்றெங்கும்

௩௦. வம்மின் றியாகர் மலர்ச்சே வடிவணக்கஞ்
செய்ம்மி னெனவனந்தர் தேவர்க்குந்—தம்முறையின்

(பா-ம்) ௨௧. 'மகப்பேறுங் கூறினேன்'
,, 'மகப்பேறுஞ் சிந்தித்தோன்'
௨௩. 'குலிசித் திருநாமம்'
,, 'கலியாய்ந்து'
௨௪. 'அவயத்தோன்'
௨௫. 'ஊரெல்லை கண்டநாள்'
௩௦. 'வம்மின்றியா கேசர்'

௩௧. மிக்குத் திருத்தூதே விட்ட திருமுகமே
திக்குத் தொறும்போந் திருநாளிற்—புக்கிறைஞ்சுந்

௩௨. தேவரைவாழ் வித்துத் தெரிசிக்கப் பிந்திவருந்
தேவரைவா திக்குந் திருநாளிற்—றேவர்த

௩௩. மம்பொன் மகுட மடர்ந்துதிருக் காவணத்துச்
செம்பொ னிரம்புந் திருநாளி—லம்பரத்துச்

௩௪. சோனைக் கெதிராச் சொரிபொற் படிதெய்வச்
சேனைக் களக்குந் திருநாளின்—ஞானத்துப்

௩௫. பாவித்தோர் கிண்கிணிக்கால் பங்குனி யுத்தரத்தே
சேவித்தோர் முத்தித் திருநாளிற்—பூவிற்

௩௬. கலித்தகட லேழுங் கமலையிற்புக் கென்ன
வொலித்ததிரு நாளி லொருநாட்—கொலைக்கடுவை

௩௭. யீந்துந் தனதுமகட் கின்ப மணம்புணர்த்த
தாய்ந்த திருமருக னாகத்தே—தோய்ந்த

௩௮. கனமணி வாங்கிக் கடல்கொடுப்ப தென்னத்
தினமணி வந்துதயஞ் செய்ய—முனையி

௩௯. னடன்மேய சேயரிக்க னல்லியங் கோதை
யுடன்மேய பள்ளி யுணர்ந்து—படியின்

௪௦. முழுப்புணரி யுள்ளிரண்டு முற்றுமற மற்றை
விழுப்புணரி யைந்தும்போய் வீழ—மொழுக்கென்ன

௪௧. நெய்யுந் ததியு நிறைபாலுந் தேனுநறை
பெய்யும் புனலும் பெரிதாடிப்—பொய்யா

௪௨. மறையாதி சைவர் வகுத்த வகையிற்
குறையாது செய்பூசை கொண்டு—பொறைவில்லுங்

௪௩. கோட்டிக் கணைக்கணையாய்க் கோடாத தோர்சுமந்து
காட்டித் திருந்துதிருக் காப்பணிந்து—கோட்டுமையா

௪௪. ளையு மருங்கொத்த நண்பாற் பெருமாற்குச்
செய்யு மிதுவே சிறப்பென்னாப்—பையக்

௪௫. கனைய மறைநூலிற் கஞ்ச னிழைத்த
தனைய திருத்தூ சணிந்து—கனகவுடை

௪௬. வாளு மராக்கச்சும் வாளரவும் போய்வளைத்த
கோளு மருளிக் கொளவிக்கி—வாளிரவி

(பா-ம்) ௩௧. 'மிக்குத் திரிதூது'
௩௪. 'பொற்பொடி'
௪௧. 'ததிபாலுந் தேனு நிறைநறையிற்'
௪௬. 'வாளராப் போய்மறைத்த, கோளுமருவிக்'

சஎ. வன்னச் சடில மதியோடு பங்குபிடித்
தென்னக் கிரீட மினிதேற்றித்—தன்னுமையு

சஅ. மேற்றிய காப்பு மெதிர மதியிரண்டு
தோற்றியெனச் செவ்வந்தித் தோடேந்தி—யாற்றிய

சகூ. வாலமணிக் கண்டத் துமையமைத்த வங்கையெனச்
சாலமணிக் கண்ட சரம்பூண்டு—மேலுரகன்

ருO. ருங்கு மொருமடந்தை தந்தைகாந் தன்பிறப்புத்
தாங்கு முறுப்பைத் தழீஇயென்னத்—தாங்கு

ருக. மிலயப் புயங்கத் தசையுமிணைத் தோளில்
வலயப் புயங்கம் வயக்கிப்—பொலன்மிடற்று

ருஉ. மஞ்சி னிழிந்த மழைக்கொழுந் தாரையென
விஞ்சு புரிநூலை மேலமைத்துக்—கஞ்சக்

ருரு. குருகங்கை நாயகி கொங்கைத் தழும்புக்
கொருகங்கை நாயகி யூடித்—திருமார்பிற்

ருச. பார்த்தமையு நக்கமையும் பாய்ந்தென்னச் செங்கழுநீர்
சேர்த்தமையு முத்துஞ் சிலபூண்டு—மார்த்தாண்டன்

ருரு. முன்னந் தனைமறைத்த முன்னோற் கொருதிகிரி
யின்னங் கொடாமைக் கிருகரமுந்—துன்னிப்

ருசு. பிடித்து வணங்கியெனப் பேருலகம் விற்குந்
தடித்து மணிக்கடகந் தாங்கி—நொடித்தமிழி

ருஎ. லுந்தி யெனும்பெயரா லுந்தியுந்தன் பூதக்காற்
சிந்தி நுரைதிரைக்குஞ் செய்கைபோற்—பந்தி

ருஅ. மருவுதர முத்தின் வருக்க நிரைத்த
திருவுதர பந்தனமுஞ் சேர்த்தி—யொருபொதுவின்

ருகூ. மீது குனிப்ப வியந்து பதஞ்சலிதான்
போது மெனச்சரணம் பூண்டென்னப்—பாதத்தி

(பா-ம்). சஅ. 'தோடணிந்தே, யாற்றரிய'
சகூ. 'மணிகண்டத்து'
,, 'மணிகண்ட சரம்பூட்டி'
ருO. 'பிறப்பைத்'
ருக. 'புயங்கத்திசையும்'
,, 'புயங்கந் தசையும்'
ருச. 'சிலசூடி'
ருஎ. 'சிந்து நுரைதிரைக்குஞ் சீர்போலப்'
ருஅ. 'பந்த வருக்க நெருக்கும்'

சு0. லாடிய பாம்பு மரிபெறுத் தன்பேறு
பாடிய கிண்கிணியும் பந்தித்து—நீடிய

சுக. நீலத் தரிவணங்க நின்றநாட் பாற்கடலின்
கோலத் துளிபொ துளிக் கொண்டதோ—மாலுக்

சுஉ. கடியை யறிய வரியதிரு மேனி
நெடிய தழல்பூக்க நீறோ—கடவுளுக்கு

சுந. வண்ணந் திருவந்தி வண்ண மெனும்படிக்குத்
தண்ணம் பெருநிலவு தந்ததோ—வண்ணலைப்

சுச. போய்முத் தரணி பணியும் பொழுதெவர்க்கும்
வேய்முத் தெனக்காட்டு மெய்க்காட்டோ—மாமலையின்

சுரு. மங்கை யொருபாற் கலந்தமைக்கு மாறேற்ற
கங்கை முழுதுங் கலந்ததோ—வங்கெதிரே

சுசு. சார்ந்த திகம்பரத்தாற் றுரு வனமடவார்
கூர்ந்த நகைவெள்ளங் கோத்ததோ—காந்தி

சுஎ. திவளப் பொலிவதெனச் செந்திருமெய் பெங்குந்
தவளக் கருப்பூரஞ் சாத்திப்—பவளநிறம்

சுஅ. போர்த்த பளிதப் புதுமதியூர் கொண்டென்னச்
சேர்த்த திருவா சிகைசாத்தி—யேத்தி

சுகூ. யெனைத்தவஞ் செய்த விடப்பா லுமைக்கு
நனைத்தன் மகுட நதிக்கு—மூனைத்தகண்

எ0. ணேறு சுடர்க்கும்பே றென்னலு மென்னதவப்
பேறு முழுதமிது பெற்றதென—நீறணிவா

எக. னேங்கலு மீது மூலோக குலமதனாற்
றுங்கலு முண்டுகொலோ தாயமென—வாங்குச்

எஉ. சுருதிநிலைக் கண்ணாடித் தோன்றரியான் றேன்றப்
பருதிநிலைக் கண்ணாடி பார்த்துச்—சுருதியும்

[illegible] வேத வனமடைத்தோன் மேனு ளதுதிறந்தோன்
றாத னெனவிடுத்தோன் சொற்பாட்டுங்—கர்தலித்து

(பா-ம்) சுரு. 'கலந்தமைக்கு மாறாக'
சுஎ. 'தவளத் திருச்சாந்து'
சுஅ. 'கோத்த திருவா சிகைகோட்டி'
சுகூ. 'எனைத்தவஞ் செய்தும்'
எக. 'தாயமெனப்—பாங்கின்'
எஉ. 'சுருதியுடன், மூவர்தே வார முதலாக வோரைந்து, தேவ வருண் மாலை செவிச்சார்த்தி—யாவர்களுங், கல்லென்னும்'
எந. 'சொற்பாட்டு—நாதற்கு'

எச. நாறூறு காரிகையை நல்கினேன் வாசகமுந்
தேனூறு மாறு செவிச்சார்த்தி—வானுடர்

எரு. கல்லென்னும் வெள்ளக் கதிவிலக்குங் கைப்பிரம்பிற்
கல்லென்னு முண்டியான் கான்முளையும்—வில்விசயன்

எசு. செம்மலுக்குத் தோள்கொடுத்த செம்மலையி னுங்கழித்த
செம்மலுக்குத் தோள்கொடுத்த செம்மலு—நம்மயிலைப்

எஎ. பெண்ணையே யென்பினுற் பெற்றுப் பெருதவாண்
பெண்ணையே பெண்ணுகப் பெற்ருேனு—முண்ணப்போ

எஅ. யப்பூதி யந்துறந்த வாருயிரைத் திங்களூ
ரப்பூதி மைந்தற் களித்தோனு—மெப்போது

எகூ. மப்பரவை யிட்ட வகிர்சடையோன் ருதினு
லப்பரவை யிட்ட மடுத்தோனுஞ்—செப்புரிய

அ0. வஞ்சம்பு வாசி யகற்றினேன் மூன்கொணர
வஞ்சம்பு வாசி யழைத்தோனுந்—துஞ்சமளி

அக. யம்பற்குப் போதற் கருமைப் பெருமாளை
யம்பற்குப் போதற் கழைத்தோனு—நம்பற்குக்

அஉ. காற்சிலம்பின் சந்தணிந்து கண்ணி யணிந்துதினங்
காற்சிலம்பு கேட்டதிருக் காதோனு—நூற்சிலம்பக்

அங. கற்ருவிக் காவிக் கமலைவாய்த் தன்மகவைக்
கற்ருவிக் காவி களைந்தோனுஞ்—சற்றேனு

அச. மெள்வா யலைநீ யிறைக்கடிமை யாக்குமெனி
னெள்வா யுமிழெனக்கு மென்றேனு—முள்வாய்ப்

அரு. பிறங்குதிருத் தொண்டைப் பெருக்குந் தொழிற்குக்
கறங்குதிருத் தொண்டக் கடலுந்—திறங்கொள்

(பா-ம்) எஎ. 'பெண்ணைப்பெண் ணுக்கு பெருந்தகையும்'
எஅ. 'அப்பூதி யார்க்களித்த வண்ணலும்'
எகூ. 'அப்பரவை யிட்டஞ்சே ராண்டகையுஞ்'
அ0. 'அஞ்சம்பு வாசியழை யாளரியுந்'
அக. 'அம்பர்க்கு'
,, 'அழைமுதலும்'
அஉ. 'காதிறையும்'
அங. 'சற்ருவுக் காவிக் கமலைவாய்'
,, 'கற்ருவுக் காவி களைமனுவுஞ்'
அச. 'எனக்கே னேந்தலும்'
அரு. 'திருத் தொண்டப் பெருக்குந்'

அசு. பசுபாச நீக்கிப் பதியாக்கு ஞான
விசைவார்சந் தான ரெவரு—மிசைதேன்

அள. மிசையுஞ்செவ் வந்தியின் வெண்ணிலா வெண்டோ
ட்சையுங்கம் பிக்காதி ஞானை—முசுகுந்தன்

அஅ. பொன்னாட்டி னுங்கொணர்நாட் பொற்கோயிற் காணிக்கு
முன்னாட்டுந் தான முதன்மையருஞ்—சொன்னாட்டுஞ்

அகூ. சைவச் சுருதித் தலைவரும் பல்கோடி
தெய்வப் பரிகரத்துச் சேயோரும்—பெய்வானு

கூ0. நந்தெறியு மேழ்கடலு நக்கி யெழுகுவடும்
பந்தெறியும் பூத பதாதியு—மெந்தைதிரு

கூக. நீற்றோடு மஞ்செழுத்தி னெஞ்சோடு நெக்குருகும்
போற்றோடு மீண்டிப் புறம்போர்ப்பக்—கூற்றை

கூஉ. யழலு முளரி யகக்கோளர் பந்தர்
நிழலு மருகு நிழற்ற—முழவியம்ப

கூங. முட்ட வமரர் முடிபணியத் தண்டேறி
விட்டதிரு வாயில் வெளிப்பட்டு—நெட்டகிலந்

கூச. தேரா யெடுப்பளவோ சேமப் படைதொடுப்பக்
காராய வண்ணக் கணைகோடி—மேருவிற்

கூரு. கோடி யுரக குணங்கோடி கூடிடினுஞ்
சூடி யொருநொடியிற் சூழ்போதும்—பீடுகெழீஇ

கூசு. யன்றைத்தே ராழிக் கடும்பகைமைச் சேடனை
யின்றைத்தே ராழி யிரித்தென்னத்—துன்றி

கூள. யெரிகின்ற வோரா யிரஞ்சுடிகை சோரத்
திரிகின்ற நேமி திகழ்ந்து—சுரநதியு

கூஅ. மாய மதியு மரன்முடிக்கோ பங்கென்றுஞ்
சேய பெரிய திருத்தேரி—னேயர்

(பா-ம்) அசு. 'இசைவாஞ்சந் தானர்'
அகூ. 'சுருதித் தவரும் பலகோடி'
கூக. 'அஞ்செழுத்து நெஞ்சோடும்'
,, 'புறம்பொற்ப'
கூஉ. 'நிழலூ மருங்கும்'
கூங. 'முடிபடிய'
கூச. 'சேமப் படைகொடுப்ப'
கூரு. 'குடித் திருவீதி'
கூஅ. 'அரன் முடித்தற் கொக்குமெனுஞ்'
,, 'சேயபேராழித் திருத்தேரின்'

அளவடி யைந்தனுண் மிகுதியெனவே பதின்மூன்றும் பதினான்குமெ ன்பது பெறுதும். இனிச்சீர்வகையடியாய் இந்நிலங்களைத் தப்பி வருவன வுங் கொள்க. உ-ம். "ஐயிரு தலையி னரக்கர் கோமான்" "சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர்" (பாலைக்கலி-௩) எனப் பதினொன்றும் பன் னிரண்டும் எழுத்தான் வந்தன. (௫௯)

௬0. நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை தட்பினும்
வரைநிலை யின்றே யவ்வடிக் கென்ப.

இதுவும் அவ்வடிக்கெய்தியதோர் தளைவிகற்பங்கூறுகின்றது.

இ-ள். நிரை.........தட்பினும் எ-து நிரையீற்றியற் சீரும் நிரையீற் றாசிரிய வுரிச்சீரும் நிற்ப நிரைமுதல் வெண்சீர்வந்து நிரையாயொன்றியக் காலும். வரைநிலை.........கென்ப எ-து கட்டளையடிக்கு நீக்குநிலையின்று; எனவே கலித்தளையாம். எ-று.

உ-ம். "மணிபுரை திருமார்பின் மறுத்தயங்கத் தோன்றுங்கால்" என் புழித் திருமார்பின் என்னு நிரைமுதல் வெண்சீர்வந்து மணிபுரை யென்னு நிரையீற்றியற்சீரோடு தட்டுக் கலித்தளையாயிற்று. "ஒங்குநிலை யகன்மார்பி னொளிதிகழு மாமேனி" இது நிரையீற் றாசிரியவுரிச்சீரோடு அவ்வாறு தட்டது; எனவே நிரைமுதலியற்சீர்வந்து நிரைதட்பினும் அதனோடு நேர் முதல் வெண்சீர் வந்து ஒன்றுதொழியினுந் துள்ளலோசை பிறவாமையிற் கட்டளையடியாகா என்றவாறு. அவ்வடிக்கெனவே இவ்விதி கட்டளையடிக் குக் கூறியது. இதனானே நிரையீற்றியற் சீர்ப் பின்னர் நிரைமுதல் வெண் சீரும் நேர்முதல் வெண்சீரு முதல்வந்து பின்னர் வெண்சீர் அடுக்கிய வெ ண்டளை வரினுஞ் சிறிது துள்ளலோசை பிறத்தலின் அதனைச் சீர்வகையடி யென்றுணர்க. உ-ம்.'அணிமுக மதியேய்ப்ப வம்மதியை நனியேய்க்கு, மணி திகழ் மாமழைநின் பின்னொப்பப் பின்னின்கண்' (குறிஞ்சிக்கலி-உ௮) என வருவனவும் பிறவுமாம். (௬0)

௬௧. விராஅய தளையு மொரூஉநிலை யின்றே.

இதுவும் அவ்வடி சீர்வகையான் வருதற்கோர் விதி.

இ-ள். சீர்வகையான் வருங்கலியடி தளைவிரவினுங் கடியப்படா. எ-று.

என்றது வெண்சீரோடும் ஒழிந்த சீரோடும்விராஅய்த் தட்பினும். எ-று. உ-ம். 'மடியிலான் செல்வம்போன் மரனந்த வச்செல்வம்' (பாலைக்கலி-

௩௪) எனவும் ' வயக்குறுமண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற' (ஷை ௨௪) எனவும் பிறவாறும் வரும். (௬௧)

௬௨. இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கி
னிலைக்குரி மரபி னிற்கவும் பெறுமே.

இது வெள்ளடி ஆசிரியத்துள் வருமாறு கூறுகின்றது.

இ-ள். இயற்சீர் வெள்ளடி எ-து இயற்சீர்வெண்டளை யாசிரியச் சீரான்வரும் வெள்ளடி. ஆசிரிய........பெறுமே எ-து ஆசிரியப்பாவின்கண் நிற்றற்குரிய மரபிலே நிற்கப்பெறும். எ-று.

உம்மை எதிர்மறை. ஆசிரியவடியோடு மயங்கி அதற்குரிமைபூண்டு நிற்குமென்பார் நிலைக்குரிமரபினென்றார். இதனானே மயங்காமல் இயற்சீர் வெள்ளடி முழுதும் வரவும் பெறுமென்றுங் கொள்வாருமுளர். உ-ம். ' எறும்பி யளையிற் குறும்பல் சுனைய, வுலைக்கல் லன்ன பாறை யேறிக், கொடுவி லெயினர் பகழி மாய்க்கும் ' (குறுந்தொகை-௧௨) என இயற்சீர் வெள்ளடி பின்வருகின்ற ஆசிரியவடியோடு மயங்கிவந்தது. இனி 'கொலை நவில் வேட்டுவன் கோள்வேட் டெழுந்த, புகர்முக யானை நுதன்மீ தழுத்திய, செங்கோற் கடுங்கணை போலு மெனஅது, நெஞ்சங் கவர்ந்தோ ணிரையிதழ்க்கண்ணே ' இது வெள்ளடிமுழுதும் வந்ததென்று பேராசிரியர் காட்டினார்;* இதனை அகவலோசை பிறக்குமென்றுகொள்ளின் இயர்சீர் வெண்டளையான்வருமென்ற கட்டளைவெண்பா வின்றாமென மறுக்க. இனி ஆசிரியத்துள் இங்ஙனம் வருமெனவே வெண்பாவினுள் ஆசிரியவடி முழுவதாஉந் தன்றளையோடு வாரா சிறிது வருமென்றுகொள்க. அது கலிக்கும் பரிபாடற்கும் உறுப்பாய்வரும்.வெண்பாக்களில் ஆசிரியத்தளை வருமேனும் அவை வெள்ளைக்கொச்சகமாமாறுமுணர்க. (௬௨)

௬௩. வெண்டளை விரவியு மாசிரியம் விரவியு
மைஞ்சீ ரடியு முளவென மொழிப.

இது மூன்றுபாவிற்கும் ஐஞ்சீரடியும் வருமாறு கூறுகின்றது.

இ-ள். வெண்பாவோடுங் கலிப்பாவோடும் விராஅயும் ஆசிரியப்பாவோடு விராஅயும் வரும் ஐஞ்சீரடிகளும் உளவென்று கூறுவர் புலவர். எ-று.

---

* ' கொலைநவில்........கண்ணே என்பது செய்யுண்முழுதும் இயற்சீர் வெள்ளடியான் வந்தது ' என்பது பேராசிரியநுரை. (செய்-௬௨)

ஈண்டுத் தளையென்றது அப்பாக்களை. வெண்டளையெனவே இரண்டு வெண்டளையும் அடங்கலின் அவற்றுள் வெண்சீர்வெண்டளையான்வருஞ் சீர்வகைவெண்பாவுஞ் சீர்வகைக்கலியும் அடங்கிற்று. இனி 'நிரைமுதல் வெண்சீர்' (கூ0) என்னுஞ் சூத்திரம் இதற்கதிகாரமாதலின் கட்டளைக்கலிக்கும் ஐஞ்சீரடி கொள்க. தளையென்றதனாற் கட்டளைவெண்பாவிற்குங் கொள்க. அடியும் என்ற உம்மையான் வெண்பாவினுண் மிகவுஞ் சிறுபான்மை வருதல்கொள்க. உளவென்றதனாற் கலிப்பாவினுள்ளும் அதற்குறுப்பாய்வரும் பாக்களுள்ளும் பெரும்பான்மை வருதலும் ஆசிரியத்துள் அடுக்கிவருதலுங் கொள்க. உ-ம். 'கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க, வொண்செங் குருதியுளோஒ கிடப்பதே கெண்டிக், கெழுதகை யில்லேன் கிடந் தூடப் பன்னு, ளழுதகண் ணீர்துடைத்த கை.' எனவும் 'கிடங்கிற் கிடங்கிற் கிடந்த கயலைத், தடங்கட் டடங்கட் டளிரியல் கொள்ளாள் கிடங்கில், வளையாற் பொலிந்தகை வையெயிற்றுச் செவ்வா, யிளையாடன் கண்ணொக்கு மென்று.' எனவும் இவற்றுள் இரண்டாமடி ஐஞ்சீரடி வந்தவாறுகாண்க. 'அரவணிந்த கொடிவெய்யோ னகம்புக்கா னரசவையன் றகற்றியே' எனவும் 'அணிகிள ரவிர்பொறித் துத்திமா நாகத் தெருத்தேறித், துணியிரும் பனிமுந்நீர்த் தொட்டுழந்து மலைந்தனையே' எனவும் இவை கலியுள் ஐஞ்சீரடி வந்தன. 'தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக' (குறிஞ்சிக்கலி-ங.) என்று கலிக்குறுப்பாகிய ஆசிரியத்துள் ஐஞ்சீரடிவந்தது. பிறவுறுப்புக்களிலுங் கலித்தொகையுள் ஐஞ்சீரடி வருமாறு காண்க. 'சிறுசோற்றானு நனிபல கலத்தன் மன்னே' (புறம்-உருகு) என்பது முதலாக நான்கடி ஆசிரியத்துள் ஐஞ்சீரடுக்கி வந்தன. தன்னினமுடித்தல் என்பதனாற் கட்டளை யாசிரியத்திற்குவருமேனு முணர்க. இன்னும் ஐஞ்சீரடியும் என்ற உம்மையாற் கொச்சகக்கலிக்கு ஐஞ்சீரடியும் வருமாறுகொள்க; 'மன்றுபார்த்து நின்றுதாயைக் கன்றுபார்க்கு மின்னும் வாரார்' எனவரும்; இதனை இனமென்பாருமுளர் பின்னுள்ளோர். (கூங)

கூச. அறுசீரடியே யாசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉ நேரடி முன்னே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி; கலிக்கு ஐஞ்சீரடி யெய்தியதன் மேலே அறுசீரடியும் எய்துவித்தலின்.

இ-ள். நேரடி முன்னே எ-து நாற்சீரடிக்கு முன்னும் பின்னும். அறுசீர்...வரூஉம் எ-து அறுசீரடி தனக்குரிய வெண்டளையோடன்றி ஆசிரியத் தளையோடு வழங்கப்பெற்று நடக்குங் கலியினுள். எ-று.

மூன் என்றதனை இடமுன்னாகவுங் காலமுன்னாகவுங் கொள்க. தளை யொடும் என்ற உம்மையாற் றனக்குரிய வெண்சீர்வெண்டளையான் வருத லும் மயங்கிவருதலும்பெற்றாம். உ-ம். *'முன்னைத்தஞ்சிற்றின்......புகாரே யெம்மூர்'†'கனைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்முள்ளி......வாராலையோ' இவை மூன்றாமடி. நேரடியாக முன்னும் பின்னும் அறுசீரடி வந்தன. இவற் றுக்கு ஆறுஞ்சீர்க்கு ஆசிரியத்தளையான் வந்தன. நெறிபெற்று என்றதனாற் பாக் கட்டளை விட்டன்றி யொருசெய்யுள் முழுவதூஉந் தானே வருதலுங் கொள்க. ‡"தொக்குத் துறைபடியுந் தொண்டை யஞ்செவ் வாய்மகளிர் தோண்மேற் பெய்வான், கைக்கொண்ட நீருட் கருங்கண் பிறழ்வ கயலென் றெண்ணி, மெய்க்கண்ணும் பெய்கல்லார் மீண்டுங் கனைக்கே சொரிந்து மிளிர்வ காணா, ரெக்கர் மணற்கிளைக்கு மேழை மகளிர்க்கே யெறிநீர்க் கொற்கை'. எனவரும்: இவை கொச்சகக்கலி. "வரைபுரை திரைபோழ்ந்து மணநாறு நறுநுதல் பொருட்டு வந்தோய்" என ஆசிரியத்தளையானும் அறுசீரடி வந்தது. கட்டளையன்றேற் றளையென்றதனை நாற்சீரடிக்குத் தளை கோட லின்றென்றார்; இவற்றிற்குத் தளை வரையறை யின்று. இவற்றைப் பின்னுள்ளோர் இனமென்பர். (௬௪)

௬௫. எழுசி ரடியே முடுகிய னடக்கும்.

இது முறையானே கலிக்கு எழுசீரடியாமாறு கூறுகின்றது.

---

* முன்னைத்தஞ் சிற்றின் முழங்கு கடலோத மூழ்கிப் பெயர
வன்னைக் குரைப்ப லறிவாய் கடலேயென் றலறிப் பெயருந்
தன்மை மடவார் தணைந்துகுத்த வெண்முத்தம் (மூர்.
புன்னைபரும் பேயென்னப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே யெம்

இது மூன்றாமடிகுறைந்து முன்னும் பின்னும் அறுசீர் வந்ததுக்குப் பேராசிரியர் காட்டியது.

† கனைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்முள்ளி வருதி ராயி
னனையிருள் யாமத் தடுபுலியோ நும்மஞ்சி யகன்று போக
நனையுருமே றுங்கைவே லஞ்சுக நும்மை
வனையர மங்கையர் வவ்வுத லஞ்சுதும் வாராலையோ.

இஃது ஈற்றயலடி குறைந்து இயற்சீர்ச் சிறப்புடை வெண்டளையா னும் சிறப்பில் வெண்டளையானும் வந்த ஆசிரியநேர்த்துறைக்கு யாப்பாருங் கலவிருத்திகாரர் காட்டியது (எக.)

‡ இது பேராசிரியர் காட்டியதே. (செய்-௬௪.)

இ-ள். எழு சீரான் வரும் அடியே முடுகியற்கண்ணே பயின்று நடக்கும். எ-று.

ஏகாரம் பிரிநிலை. உ-ம். "கவிரிதழ் கதுவிய துவரித ழரிவையர்கலிமயிற் கணத்தொடு விளையாட" என எழுசீரடி முடுகிவந்தது. இவை கலிக்கும் பரிபாடற்கும் உரிய. முடுகாத எழுசீரடி வந்துழிக் காண்க. (௬௫)

௬௬. முடுகியல் வரையார் முதலீ ரடிக்கும்.

இஃது எய்தாத செய்துவித்தது; எழுசீரடியே யன்றி அறுசீரடியும் ஐஞ்சீரடியும் முடுகு மென்றலின்.

இ-ள். எழுசீரடிக்கும் ஐஞ்சீரடிக்கு முன்னின்ற அறுசீரடிக்கும் ஐஞ்சீரடிக்கும் இம்முடுகியல் நீக்கார். எ-று.

முதலீரடிக்கும் என்ற வும்மை எச்சவும்மை யாதலின் நாற்சீரடியும் இத்துணைப்பயிலாது முடுகுமென்க. உதாரணம் மேலைச்சூத்திரத்துட் காட்டுதும். (௬௬)

௬௭. ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினு
மூவகை யடியு முன்னுத லிலவே.

இது முடுகியல் இன்னபாவிற்கு உரித்தென்கின்றது.

இ-ள். தனியேவரும் ஆசிரியப்பாவினும் வெண்பாவினும் முடுகியலடி மூன்றும் வரப்பெறா. எ-று.

மூன்றென்றது நாற்சீரடியும் ஐஞ்சீரடியும் அறுசீரடியுமான அடிகளை. எழுசீரடி முன்னுதலின்று என்றதனால் முற்கூறிய மூன்றடியானும் வரும் முடுகியலோடு விராஅய்த்தொடர்ந்து ஒன்றாய்க் கலிக்குறுப்பாய்வரும் ஆசிரியமும் வெண்பாவுமுள என்று கொள்க. உ-ம். "நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத், தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக, வேய்புரை மென்றோட் பசலையு மம்பலு, மாயப் புணர்ச்சியு மெல்லா முடனீங்கச், சேயுயர் வெற்பனும் வந்தனன், பூவெழி லுண்கணும் பொலிகமா வினியே" (கலி, குறிஞ்சி-ந) இஃது அறுசீரடியும் ஐஞ்சீரடியும் முடுகி ஒரு தொடராய்வந்த ஆசிரியம். "தகைவகை மிசைமிசைப் பாய்மா ரார்த்துட, னெதிரெதிர் சென்றார் பலர்" (கலி, முல்லை-உ) எனவும், "இரிபெழு பதிர்பதிர் பிகந்துடன் பலர்நீங்க, வரிபரி பிறுபிறு புகுடர்சோரக் குத்தித்தன், கோடழியக் கொண்டானை யாட்டித் திரிபுழக்கும், வாடில்

வெகுளி யெழிலேறு கண்டை யிஃதொன்று, வெருவரு தூம மெடுப்ப வெகுண்டு, திரிதருங் கொல்களிறும் போன்ம்' (ஷை முல்லை-ந) எனவும் இவை நாற்சீரடி முடுகியலோடொன்றாய் வந்த வெண்பா. இதனுள் ஐஞ்சீரடியும் வந்தது. "மேனிலை மிகலிகலின் மிடைகழி பிழிபுமேற் சென்று, வேனுதி புரைவிறற் றிறனுதி மருப்பின் மாறஞ்சான், பானிற வெள்ளை யெருத்தத்துப்பாய்ந்தானைக், கோணுது குத்து மிளங்காரித் தோற்றங்காண், பான்மதி சேர்ந்த வரவினைக் கோள்விடுக்கு, நீனிற வண்ணனும் போன்ம்" (ஷை ஷை ஷை) என ஐஞ்சீரடி முடுகியலோ டொன்றாய் வந்த வெண்பா. "மலர்மலி புகலெழ வலர்மலிர் மணிபுரை நிமிர்தோள் பிணைஇ, யெருத்தோடிமிலிடைத் தோன்றினன் றோன்றி, வருத்தினான் மன்றவவ் வேறு" (ஷை ஷை உ) இஃது அறுசீரடி முடுகியலோ டொன்றாய் வந்த வெண்பா. இவற்றை அராகமென்னுமோ வெனின்:—என்னும்; அராகமாவது பிறிதொன்றனோடு கூட்டி ஆற்றுவியாமற் றானேபோய் அற்று நிற்பதாம். அது பரிபாடற்செய்யுளுறுப்பென்பர்; இது பிறிதொன்றனோடு கூட்டி ஆற்றுவித்துக்கோடற் குரித்தாம் இவ்வேறுபாடு அறிக. (சுஎ)

சுஅ. ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற்
றோற்ற முச்சீர்த் தாகு மென்ப.

சுகூ. இடையும் வரையார் தொடையுணர் வோரே.

இரண்டு சூத்திரமும் உரையியைபு நோக்கி உடன்கூறிற்று. இவை ஆசிரியத்துட் சிந்தடிவருமென எய்தாததெய்துவித்தது.

இ-ள். ஆசிரிய மருங்கி னீற்றயலடியே தன் தோற்றரவு முச்சீரையுடைத்தாய் வரத்தோன்றும்; தொடையுணர்வோர் இடையிலும் வருதலும் நீக்கார். எ-று.

ஏகாரம் பிரிநிலை. முச்சீர்த்து என ஒருமை கூறியவதனால் ஈற்றயலடிக்கண் ஒன்றே வருதல் பெரும்பான்மையென்றும், தொடையுணர்வோர் என்றதனால் இடை இரண்டிணைந்து வருதலும், தோற்றம் என்றதனால் இடையொன்று வருதலும் கொள்க. உ-ம். "நிலத்தினும் பெரிதே வானினுமுயர்ந்தன்று, நீரினு மாரள வின்றே சாரற், கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு, பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே" (குறுந்தொகை-ந) இஃது ஈற்றயலடி முச்சீர்த்தாயிற்று. "நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ், சாரச் சார்ந்து தீரத் தீருஞ், சார னாடன் கேண்மை, சாரச் சாரச் சார்ந்து, தீரத் தீரத் தீர்பொல் லாவே" இஃது இடையிரண்டிணைந்து வந்தது.

* "சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணுமன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ் சோற் றானு நனிபல கலத்தன் மன்னே
யென்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயு மன்னே
யம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே
யருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
யிரப்போர் கையுளும் போகிப் புரப்போர்
புன்கண் பாவை சோர வஞ்சொனுண் டேர்ச்சிப்
புலவர் நாவிற் சென்றுவீழ்ந் தன்றவ
னருநிறத் தியங்கிய வேலே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வினிப், பாடுநரு மில்லைப் பாடுநர்க்கொன் றீகுநரு மில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே" (புறம்-உஙரு)

இதனுள் 'நரந்த நாறுந் தன்கையால்' எனவும், 'அருநிறத்தியங்கிய வேலே' எனவும் தனித்துவந்தன. 'பெரியகட் பெறினே' என்பது சொற்சீரடி. இதனைக் குறளடியாக்கிக் குறளடியும் வருமென்பர் பின்பு நூல்செய்தவாசிரியர் †. 'உப்பிலாஅ வவிப்புழுக்கல்' (புறம்-நகுங) முதலிய வஞ்சியடி. (சுக)

---

* உரையாசிரியர், இதனைப் பதினேழடி யாசிரிய மெனக்கொண்டு, இதனுள் "ஏழாமடியும் பன்னிரண்டாமடியும் மூச்சீரான் வந்தன; மூன்றாமடி முதலாக ஆறாமடியீறாகிய நான்கடியும் பதினாலாமடியும் ஐஞ்சீரான் வந்தன; இரண்டாமடியும் பதினொன்றாமடியும் அறுசீரான் வந்தன; ஏனைய நான்குசீரான் வந்தன; இவ்வாறு வருதலின் அடிமயங்காசிரியமாயிற்று" என்றார். (தொல், செய்யுளியல், 'வெண்டளைவிரவியும்' என்பதனுரை.)

† யாப்பருங்கலவிருத்திகாரர் 'இணைக்குற ளிடைபல குறைந்திறி னியல்பே' என்பதனுரையிற் 'சிறியகட்பெறினே' என்னும் புறப்பாட்டை எடுத்தோதி 'இஃது இருசீரடியும் முச்சீரடியும் இடையிடை வந்த இணைக்குறளாசிரியப்பா பிறவுமன்ன. என்னை? "அளவடி யந்தமு மாதியு மாகிக், குறளடி சிந்தடி யென்றா யிரண்டு, மிடைவா நிற்ப திணைக்குற ளாகும்" என்றார் காக்கைபாடினியார்' எனக்கூறினர்.

எ0. முச்சீர் முரற்கையு ணிறையவு நிற்கும்.

இது கலிக்குச் சிந்தடியும் வருமென எய்தாததெய்துவித்தது.

இ-ள். முரற்கையுள் எ-து கலிப்பாவினுள். முச்சீர்.........நிற்கும் எ-து முச்சீரடி ஒருசெய்யுண்முழுதும் நிறையவு நிற்கும். எ-று.

உம்மையான் முதலிடைகடை என்னும் மூன்றிடத்தும் ஒரோவடியாயும் இரண்டும் பலவுமாய வடியாயும் நிற்கும் என்றவாறு. உ-ம். 'நீர்வரக் கண்கலுழ்ந் தாங்குக், கார்வரக் கண்டனங் காதலர், தேர்வரக் கண்டில மன்னே, பீர்வரக் கண்டனந் தோளே' முச்சீரடி முழுதும் வந்தது. 'அரிபரி பறுப்பன சுற்றி, யெரிதிகழ் கணிச்சியோன் சூடிய பிறைக்க, ணுருவ மாலை போலக், குருதிக் கோட்டொடு குடர்வ லந்தன' (முல்லைக்கலி-ந) இது முடுகியலான் முதலடியும் மூன்றாமடியும் முச்சீராய் வந்தது. 'நின்கண்ணாற் காண்பென்மன் யான்' (குறிஞ்சிக்கலி-ந) இதுவும்இடையில்வந்தது. 'செய்தானக் கள்வன் மகன்' (ஷை-கரு) இஃது ஈற்றில் வந்தது. பலவும் வந்தன வந்துழிக்காண்க. (எ0)

எக. வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே.

இது வஞ்சிக்குஞ் சிந்தடி வரும் என்கின்றது.

இ-ள். வஞ்சிப்பாவினிறுதி ஆசிரியப்பாவினிறுதிபோன்று இறுக. எ-று.

'செந்தூக்கியற்று' என்ற மாட்டேற்றானே, ஆசிரியத்திற் கோதிய சீரானுந் தளையானும் ஈற்றயலடி முச்சீரடியாய்வருதலும், இடைக்கண் முச்சீரடி வருதலும் பெறப்பட்டது.

உ-ம். "வாள், வலந்தர மறுப்பட்டன
செவ்வா னத்து வனப்புப் போன்றன
தாள், களங்கொளக் கழல்பறைந்தன
கொல்லே லேற்றின் மருப்புப் போன்றன
தோல், துவைத்தம்பிற் றுளைதோன்றுவ
நிலைக்கொரா விலக்கம் போன்றன
மாவே, யெறிபதத்தா னிடங்காட்டக்
கறுழ்பொருத செவ்வாயா
னெருத்துவவ்விய புலிபோன்றன
களிறே, கதவெறியாச் சிவந்துராஅய்
நுதிமழுங்கிய வெண்கோட்டா

ப்பயிரிடப்படுகிறது. இதற்கு முதலில் பூமியைப் பகுவமாக உழுது, ஆட்டெருவும் மாட்டெருவும் சாம்பல் இலை சரகு குப்பை எருக்களும் ஏராளமாகப் போட்டு, வரப்புகளைக்கட்டி, அதில் வெள்ளைப்பூண்டின் பற்களை நட்டு முதலில் இரண்டு நாளுக்கு ஒரு தண்ணீராகவும், பிறகு வாரத்திற்கு ஒரு தண்ணீராகவும், நாலு மாதங்கள் வரையில் கட்டிக்கொண்டு வரவேண்டும். இதை விசேஷமாக உடுமலைப்பேட்டைத் தாலூகாவில் ஆனி ஆடிமாதங்களில் பயிரிட்டு புரட்டாசிமாதத்தில் அறுவடை செய்து, அந்தநிலத்தில் புகையிலையைப்பயிர்செய்கிறார்கள். மார்கழிமாதத்தில்பயிர்செய்தால், பங்குனி மாதக்கடைசியில் அறுவடைசெய்து அந்த நிலத்தில் சோளத்தைப் பயிரிடுகிறார்கள். இதை ஒரு ஏகருக்கு ௧௨௦-படிவிதை நட்டால், அதற்கு ௧௫-மடங்கு லாபம் அதாவது ௧,௬௨௦-படி லாபம் கிடைக்கும். சென்னையில் ஒற்றைப்பல்பூண்டு என்ற பெயரால் ஒருவகைப் பூண்டைப்பயிரிட்டு வீசை ஒன்றுக்கு ஒரு ரூபாய்விதமாக விற்பனை செய்து வருகிறார்கள். அந்த விதைகளைத் தருவித்துப் பயிர்செய்தால் நல்லலாபம் கிடைக்கும். வெள்ளைப்பூண்டானது, காசம்,க்ஷயம், சீதபேதி முதலான வியாதிகளைக் கண்டிக்கும் சிறந்த வஸ்து.

ஈரவெங்காயம்.

இது தோட்டப்பயிர். முதலில் நிலத்தைப் பக்குவமாக உழுது எருவிட்டு காப்பாற்றியும், பிறகு வரப்புகள்கட்டியும் வெங்காயநாற்றுகளை நட்டு வாரம் ஒன்றுக்கு இரண்டுதரம் தண்ணீர்கட்டி முதல் மாதத்தில் இரண்டு களை எடுத்தால் போதும். இதைத் தனியாகவாகிலும், அல்லது மிளகாய், மஞ்சள், வெள்ளைப்பூண்டு முதலானவைகளுடன் கலந்தாகிலும் பயிரிடுவது உண்டு. இதை ஆடி, ஆவணி மாதங்களிலாகிலும்; கார்த்திகை, மார்கழி, தைமாதங்களிலாகிலும் பயிரிட்டால், மூன்றுநான்கு மாதங்களில் பலனையடையலாம். பல்லாரிக்கு 20-மைல் தூரத்திலுள்ள வஜ்ரகரூர் கிராமத்தில் சீமை வெங்காயம் என்ற பெயரால் ஒருஜாதி பெரிய வெங்காயத்தைப் பயிர் செய்து ஒருஏக்கர் நிலத்தில் 400-ரூபாய் மாகூலடைகிறார்கள். அது இரங்கூனுக்கு ஏராளமாக ஏற்றுமதியாகிறது. அந்தஜாதி வெங்காயம் கோயமுத்தூர் முதலானவிடங்களில் பயிர்செய்யக்கூடியதாக இருப்பதால், அந்த விதைகளைத் தருவித்துப் பயிரிட்டால் நலம்.

இந்த வெங்காயத்தில் கந்தக சத்து அதிகமாக இருப்பதால், அதிக நாற்றமுள்ள பதார்த்தமாகக் கொண்டு பிராமணர்முதலான சில உயர்குலத்தார் அதை உணவாக உபயோகிப்பதில்லை. ஆனால் இந்தப்பூண்டிலிருக்கும் அருமையான சத்துக்களைக் கண்ட ஐரோப்பியர், அமெரிக்கர்முதலானவர்கள் அதிகமாக உபயோகப்படுத்திவருகிறார்கள். இந்தப்பூண்டு மானுஷதேகத்தில் கலந்திருக்கும் பயங்கரமான கிருமிகீடகவிஷங்களைக்கொன்று, இரத்தத்தைச் சுத்தியாக்கி ஜீரணஉறுப்புகளுக்குத் தாருட்டியத்தையும், எலும்புகளுக்குத் திடனையும் தருவதோடு; இப்பூண்டில் விசேஷமாகக் கலந்திருக்கும் பாஸ்பரஸ் என்னும் பிரகாசித சத்தானது மனிதருடைய மூளையைச் சுத்தப்படுத்தித் தெளிந்த ஞானத்தையும் விருத்திசெய்கிறது. கிருமிநாசகாரியாகிய இந்தப்பூண்டை சிறு துண்டுகளாக்கி, கயிற்றில் கோத்து வீடுகளின் வாசல்களில் கட்டிவந்தால், சுரம், காய்ச்சல், அம்மை, வாந்திபேதி, பிளேகு முதலானவியாதிகள் வந்து நுழையாதபடி தடுக்குமென்று மேல்நாட்டார் செய்துவருகிறார்கள். சிலதீவுகளில் இறந்துபோன பிணங்கள் வைத்திருக்கும் அறைகளிலும், இந்தப் பூண்டை துண்டாக்கிவைக்கிறார்கள். அப்படிவைக்கும் பூண்டின் துண்டுகள் கொஞ்சகாலத்துக்குள் கறுத்துப்போகின்றன. அப்படி கறுத்துப்போவதற்குக் காரணம் அணுரூபமான புழுக்கள் அத்துண்டுகளில் வந்து படிவதேயாம். நமது நாட்டில் அம்மைவார்த்த வீடுகளில் வைத்துவருவது பிரத்தியக்ஷம். இந்த நல்லவஸ்துவைச் சமைத்துச் சாப்பிட்டால் அதன் சத்து பாகங்கள் குறைந்துவிடுவதால் பச்சையாகவே துவையல், பச்சடிகளில்உபயோகப்படுத்துதல் நலம்.

ஆரநட்கிழங்கு.

இதை மஞ்சள் பயிரிடுவதைப்போலவே சால்களைவிட்டு நவச்சாராதி உப்புஎருவைத்தூவி செப்டம்பர்மாதத்தில் நட்டால்; ஜனவரிமாதத்தில் கிழங்குகளை வெட்டியெடுத்து மரவள்ளிக்கிழங்குகளைப் போலவே மாவையெடுத்து உபயோகிக்கலாம். இது பத்தியபோஜன பதார்த்தம். இதை ஆங்கில கிருஷிசாஸ்திரப்படி பயிரிடும்முறை அடியில் காணலாம்.

அரோருட்மாக் கிழங்கு:—இதில் கீழ்இந்தியாக் கிழங்கு (East Indian) என்றும், மேல் இந்தியாக்கிழங்கு (West Indian) என்றும் இரண்டு வகையுண்டு. கீழ் இந்தியாமாதிரியில் கிழங்கு பெரிதாயும், அதிகநார் உடையதாயு மிருக்கும். மத்திய இந்தியாவிலும், பம்பாய், சென்னை, பங்காளத்திலும் முக்கியமாக மலைப்பக்கங்களிலும் வனாந்தரமாகவிளையும். மத்திய மாகாணங்களிலும், தென்கன்னடத்திலும், மலையாளத்திலும், கோதாவரிஜில்லாவின் மேல்பாகத்திலும்ஏராளமாய் சாகுபடிபண்ணப்படுகின்றது. மலையாளப் பக்கங்களிலும், தென்கன்னடத்திலும் பாசனமன்றியில் சாகுபடி பண்ணலாம். நன்றாய் சாகுபடி செய்தால் கிழங்கில் அரிசிமா (starch) யதேஷ்டமாயிருக்கும்; விஷவஸ்துக்கள் ஒன்றுமிராது. இதற்கு பணற் சாரி பூமிதான் சிலாக்கியம். 1879-ஆம் வருஷம் சைதாப்பேட்டை பண்ணையின் பூந்தோட்டத்தில் $\frac{1}{4}$ வகர் நிலம் பொறுக்கி பெடுக்கப்பட்டும் நன்றாய் உழப்பட்டும் உரமிடப்பட்டும் முகடுகள் இரண்டடிக்கு ஒருதரம் உண்டாக்கப்பட்டும் ஆகஸ்டு மாதத்தில் விதைக்கிழங்குகள் முகடுகளில் 1 அடி $1\frac{1}{2}$ அடி வித்தியாசத்தில் புதைக்கப்பட்டும் பயிர் செய்யப்பட்டன; ஜனவரி மாதத்தில் அறுவடை ஆகியது; ஆகையால் இது 6 மாதப்பயிர் என்று சொல்லலாம். இந்தக்கால் ஏகர் நிலத்தில் 986 பவுண்டு கிழங்கு கிடைத்ததாம். அதாவது ஏகர் 1-க்கு 3944 பவுண்டு ஆகிறது. இன்னுமொரு சமயத்தில் ஒரு துண்டு நிலம் ஏகர் 1-க்கு 7500பவுண்டு கிழங்கு கொடுத்ததாம். 100 பவுண்டு கிழங்கு $12\frac{1}{2}$ பவுண்டு அரோருட்மா கொடுத்ததாம். முதல் துண்டில் ஏகர் 1-க்கு 493 பவுண்டுமாவும், இரண்டாவது துண்டில் 937 பவுண்டு மாவுமாகிறது. கிழங்குகளை வெட்டி யெடுக்கத்தான் வேண்டும். அரோருட்மா பவுண்டு ஒன்றுக்கு நாலணு விலை ஆகிறது.

மா உண்டாக்குதல்;—கிழங்கைக் கழுவி, துருவி தூள்களோடு சலத்தைச்சேர்த்துக் கலக்கி ஒரு துணியினால் வடிகட்டினால் வடிகட்டின சலத்தில் மாவும் நீருமா யிருக்கும்; மாநீரைத் தங்கவைத்தால் மா அடியில் பதிந்துவிடும்; இந்த மாவை நன்றாய் சலத்தில் சுத்தப்படுத்திக் காயவைத்தால் விலைக்குத் தயாராய்விடும்.

மரவள்ளிக்கிழங்கு.

மரவள்ளிக்கிழங்கு, ஆள்வள்ளிக்கிழங்கு ஜாதிகள், ஆமணக்கு, நேர்வாளம் முதலான விஷத்தன்மையான பயிர்வகையைச் சேர்ந்தது. இதற்கு பூமியை ஒன்றரை முழ ஆழம் வரையில் தோண்டி நடுவது வழக்கம். மஞ்சக்குப்பத்தில் மேட்டுக் காடுகளில் ஆடி மாதத்திலாகிலும், மார்கழிமாதத்திலாகிலும் ஒன்றரை முழ ஆழத்துக்கு குழியை வெட்டி ஒவ்வொருமுழ தூரத்துக்கு ஒரு செடியாக நடுவதன்றி. இந்தச் செடிக்கும் ஒருவித விதை உண்டு என்று சொல்லுகிறார்கள்; அதை நாம் பார்த்ததில்லை. பழைய செடிகளில் செழிப்பான பாகத்தில், ஒரு சாண் துண்டுகளாக வெட்டியும், வெட்டிய துண்டுகளை ஒரு கட்டாகக்கட்டியும், யாதாவது ஒருமரத்தடியில் கொஞ்சம் பள்ளம் தோண்டியும், கணுக்களை நிமிர நட்டும், சுற்றிலும் மண்ணைக்கட்டித் தண்ணீர் விட்டுக்கொண்டும் வந்தால், அவைகள் சீக்கிரம் தழைத்து குருத்துகளை விடும். அந்த நாற்றுகளைப் பிடுங்கிக்கொண்டுபோய் முன் தயார் செய்திருக்கும் குழிகளில் நட்டுத் தண்ணீர் விட்டும், பிறகு எட்டுநாளைக்கு ஒருதண்ணீராகவன் பது தண்ணீர் கட்டிக்கொண்டும்வந்து, ஆறுமாதகாலமான பிறகு, அவுரித்தழை, சாம்பல், மாட்டுச்சாணம் கலந்து வேர்களுக்குப் போடவேண்டும். இந்தப்பயிரை மணல் கலந்த பூமியை அ-தரம் உழுது எருவிட்டு ஆடிமாதத்தில் நட்டு, வைகாசி மாதத்தில் கிழங்குகளை வெட்டி எடுத்தால் நல்ல லாபங்கிடைக்கும். இதை அமெரிக்காவில் நான்கு அடி சதுரத்துக்கு ஒரு விதையாக ஒரு ஏகருக்கு கணக்குப்படி நட்டு க,ச00-மணங்கு கிழங்கை எடுப்பார்கள். இதன் கிழங்குகள் மனிதருக்கு நல்ல உணவும், இலைகள் மாட்டுக்குத் தீவனமுமாகும். அமெரிக்காவில் இக்கிழங்குகளைக் கழுவி கல்லுரலில் போட்டு இடித்து மேலிருக்கும் நாரையும், உள்ளிருக்கும் நாரையும் எடுத்துவிட்டு, அடியிலிருக்கும் மாவை எடுத்து ஊறவைத்து தண்ணீர் தெளித்து வறுத்துப் பொடிமாவாக்கி, வியாதிஸ்தர்களுக்கு நல்ல உணவாக உபயோகப் படுத்துகிறார்கள். இந்தமாவைத்தான் (டோபியாகா) என்னும் பெயரால் நமது நாட்டுக்கு அனுப்பி ஏராளமாக விற்று வருகிறார்கள்.

தேகசௌக்கியத்திற்கு ஏலாத வழக்கங்கள். 4-வேளை புசிக்கவேண்டும்; சிற்றுண்டி பேருண்டி என்று நாம் ஏற்படுத்தியபடி ஒவ்வொருவனுக்கும் புசிப்பதற்கு அவன் வேலையிடங்கொடுக்கமாட்டாது. அவனவன் தொழிலுக்குத் தகுந்தபடி இவ்வுணவுகளை உட்கொள்ள ஏற்பாடுசெய்துகொள்ளவேண்டும். வயிறு பசிக்கப் பசிக்கப்படுத்துக்கொண்டால் தூக்கமே பிடிக்காது. இரவில் அதிகமாக உழைத்து எழுதுகின்றவன், சாயந்திரம் 7-மணிக்குச் சாப்பிட்டுவிட்டு அப்புறம் 5-6-மணி வேலைசெய்து 1-அல்லது 2-மணிக்கு உறங்கச் செல்லுகையிற்றனது வயிற்றில் ஒன்றுமில்லாமற் பசியுண்டாயிருக்கக்காண்பான். அவனப்படியே பசியுடன் உறங்க முயன்ருல் முதன் முதற்றூக்கம் பிடிக்காமலிருந்து கடைசியாகக் களைப்புமேலிட்டுத் தூங்கி விடுவான். இது தேகத்திற்குச் சுகமேயல்ல. இதற்குப் பதிலாக அவன் தூங்கச் செல்லும் முன் ஏதாவது கொஞ்சம் சிற்றுண்டி அங்கீகரித்துக் கொண்டு நித்திரை செய்ய ஆரம்பிப்பானேயாளுல் நித்திரையும் எளிதிற் பிடிக்கும். தூக்கமும் சுகமாக இருக்கும். சரீரசௌக்கியத்திற்கும் குறைவென்பதிருக்கமாட்டாது.

குழந்தைகள் :— குழந்தைகளுக்குத் தாயின் பாலே 10-மாதம் வரையில் ஆகாரமாகையால் அது வரையில் அதற்கு வேருருவித உணவும் கொடுக்கக்கூடாது. பசிக்கும்பொழுது சிசுக்கள் அழுகின்றபடியால் அதே அவைகளுக்குப் பால்குடிக்கும் காலம். தாய்ப்பாலில்லாத குழந்தைகளுக்குத் தாதிபால்; அதுவு மில்லாமற் போனுல் ஆவின்பால். ஆகாரத்திஞலேயே குழந்தைகள் வளர வேண்டுமாகையாற் குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் 3-மணிக்கு ஒரு தடவை 4—வயது வரையில் ஆகாரம் செலுத்த வேண்டும். அதன் பிறகு 14-15-வயது வரையில் நான்கு மணிகளுக்கு ஒருதடவை உணவளிக்கவேண்டும்.

கிழவர்கள் :— குழந்தைகளைப்போலவே கிழவர்களுக்கும் போஷணை அதிகமாக வேண்டும். ஆனல் வயது சென்ற காரணத்தால் அவர்களுடைய ஆகாரப்பை சீர்ணசக்தியை யிழந்துவிடுகின்றபடியால் அவர்களுடைய ஆகாரம் பத்தியமாகவும் ஆகாரப்பைக்கு சக்தியைக் கொடுக்க மிளகு சம்பந்தமுள்ள வைகள் கொஞ்சம் கலந்தவைகளாகவு மிருக்கவேண்டும்.

மருந்தே வேண்டாம் :— உணவு என்பதில் சுகாதாரத்திற்கு முக்கியமான சித்தாந்தம் பசி என்பதேயாம். 'பசித்தபொழுது பனங்காயைத்தின்ருலும் பித்தம்பறக்கும்' என்றபழமொழிக்கும் இதே அருத்தமாகும். பசித்தபொழுது பசிக்குத்தக்கபடி புசிப்பதாலும், பசி கொஞ்சமிருக்கும்பொழுதே புசிப்பை விட்டு எழுந்திருப்பதாலும் நமது தேகசௌக்கியம் எப்பொ

ழுதும் குறைவுபடாமலிருக்கும். ஆனல் அப்படிப்பெரும்பாலும் ஒருவரும் செய்கிறதில்லை. அதிகமாகஎப்பொழுதும் புசித்து நோயால் வருந்துகின்ருர்கள். நாயனர் சொல்லுகின்றபடி நோயையே வருந்தி அழைக்கின்ருர்கள் :—

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணில்
நோயள வின்றிப்படும்.

நாம் சுகத்துட னிருக்கவேண்டும். அச் சுகத்திற்கு முதற் காரணம் உணவே என்று தனது பகுத்தறிவைக் கொஞ்சம்உபயோகிக்கின்றவன் ஒரு நாளும் வருத்தமடைய மாட்டான். இதே பொருளை நாயனர் பின் வரும் குறளிற் சொல்லியிருக்கின்ருர் :—

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

ஏழாம் அதிகாரம்.

தேகவியாயாமம்.

CHAPTER VII—EXERCISE.

மாமிசபேசிகள்:—சுகசந்தர்சனமுறையில் வியாயாமம் என்பது வெகு முக்கியமான ஓர் அமிசம். வியாயாமம் என்ற பதத்திற்கு நமது தேகத்தின் ஒவ்வொரு அவயவமும் அதனதன் தொழிலைச்செய்வதென்று அருத்தஞ்சொல்லலாம். நமது குடலின் வியாயாமம் என்னவெனில் நாம் உட்கொள்ளும் ஆகாரத்தைச்செரித்துக்கொள்ளுவதேயாம். அவ்வாறேநாம் ஒவ்வொரு உறுப்பையும்பற்றிக் கவனித்தால் அதது ஓர்வித வியாயாமம் செய்வதை நாம் காண்போம். நாம் மனதில் ஏதாவதொன்றைப்பற்றி யோசித்துக்கொண்டிருப்போமேயானல், அது மனதிற்கு ஒருவித வியாயாமமாகவிருப்பினும் அதைச்சாதாரணமாக சுகாதாரத்துக்குரிய தேகவியாயாமத்தில் ஒன்ருகச் சேர்த்துப் பேசுவது வழக்கமல்ல. நமது தேகத்துக்குள் மாமிசபேசிகள் (Muscles) என்று சொல்லப்படுகின்ற சில அமிசங்கள் உண்டு. தேகத்தின் நிறை 100-பவுண்டுகள் என்ருல், அதில் 40-பவுண்டுகள் மாமிசபேசிகளேயாம். அம்மாமிசபேசிகளினுற்ருன் நாம் நடப்பது முதலான எல்லாவித பிரதானமான காரியங்களையும் செய்கிருேம். நாம் கண்களை இமைப்பதும், கைகளை நொடிப்பதும், புன்னகை செய்வதுங்கூட அம்மாமிசபேசிகளின் உதவியினுற்ருன்.

இச்சாபூர்வமாமிசபேசிகள்:—இவ்வாறு தேகத்தின் நிறையில் 100-ல் 40-பாகமாய் அமைக்கப்பட்டிருக்கும் மாமிசபேசிகள் இச்சாபூர்வ மாமிசபேசிகள் என்றும், ஸ்வேச்சாமாமிசபேசிகள் என்றும் இருவகைப்படும். நாம்செய்யவேண்டுமென்று நினைக்கிற ஒவ்வொரு காரியத்தையும் (அதாவது பேசுதல், நடத்தல், கையசைத்தல் முதலியன) எண்ணினவுடன் அவ்வெண்ணத்துக்குத் தக்கபடி அமைத்திருக்கும் மாமிசபேசிகள் அத்தொழிலைச்செய்து நம்முடைய நினைவைப் பூர்த்திசெய்துவைக்கும். இவைகளைத்தான் இச்சாபூர்வமாமிசபேசிகள் (Voluntary muscles) அதாவது நமதுகருத்துக்கிசைந்தபடி செய்யவேண்டியதை முடித்துக்கொடுக்கப்பட்ட மாமிசபேசிகள் என்று சொல்லுகிறார்கள்.

சுவேச்சாமாமிசபேசிகள்:—நாம் கண்ணால் காணும் தொழில்களின்றி வேறுசில தொழில்கள் நம்முடைய சரீரத்துக்குள்ளேயே வியாபித்துக்கொண்டிருக்கின்றன. நாம் உணவை நாள்தோறும் புசிக்கின்றோம். அப்போஜனம் நமதுகழுத்துக்குக்கீழே யிறங்கியபிறகு அது எவ்விதமாகின்றதென்பதை நாம் சாஸ்திரமூலமாக அறிந்துகொண்டிருக்கிறோமேயல்லாமல் நாம் கண்களாலதைப் பார்க்கின்றதில்லை. இவ்வாறு நம்முடைய குடலிலும், இருதயத்திலும், சுவாசாசயத்திலும் பலவித கருவிகள் விநாடி தோறும் அததின்தொழில்களை நடத்திக்கொண்டேவருகின்றன. அவ்வாறு அவைகள் நடத்துவதெல்லாம் மாமிசபேசிகளின் உதவியாற்றான். அவைகள்செய்யும் தொழில்களை நாம் எவ்விதத்தாலும் நிறுத்தவேண்டும் என்று எவ்வளவு காலம் முயன்றாலும் அவைகள் அதற்குடன்படா. இவ்விதமாமிசபேசிகளைத்தான் ஸ்வேச்சாமாமிசபேசிகள் (In-voluntary muscles) என்பார்கள். அவைகள் நம்முடைய உயிருக்கு ஆதாரமான பலகாரியங்களை வெகுஜாக்கிரதையாக இடைவிடாது செய்துகொண்டிருப்பதால் அவைகளை நம்முடைய அதிகாரத்திற்குள்ளாக்காமல் ஈசுவரன் அவைகளுக்கு சுவயாதிகாரம் கொடுத்திருக்கிறார். இவ்வண்ணம் அவைகளுக்கு சுவயாதிகாரம் கொடுக்காமல் நாம் ஏவியே அவைகள் தங்கள் தங்கள் தொழில்களைச் செய்வதாகவிருந்தால் நாம்தூங்கும்பொழுதும், மயங்கிவிழுந்திருக்கும் பொழுதும், சில நோயால் வருந்தும்பொழுதும் பிராணனைப் பாதுகாத்துக் கொள்ளத்தவறிவிடுவோமல்லவா? தூக்கம் சத்துரு என்று சொல்லுவதுபோல நாமே நமது பிராணனை மாய்த்துக்கொள்ளாமலிருக்கக் கடவுள் நமது இருதயத்தினும், சுவாசாசயத்தினும், போஜனப்பையினும் இந்த சுவேச்சாமாமிசபேசிகளை நிர்மாணம்செய்து வைத்திருக்கின்றார்.

வியாயாமத்தையும், அதின் சுகாசுகத்தையும் இந்நூலில் அறிந்துகொள்ள இந்த வியாயாமத்திற்கு முக்கிய ஆதாரமான மாமிசபேசிகளின் ஞானம்

வெகு அவசியமாகையால் நாமவைகளைப்பற்றி இங்கு இவ்வளவுதூரம் பேச வேண்டியதாக விருக்கின்றது. இம்மாமிசபேசிகள் இருவகை யென்று நாம் சொன்னோம். இச்சாபூர்வகமாமிசபேசிகளைத்தான் வியாயாமம் சார்ந்திருக்கின்றது. அம்மாமிசபேசிகள் செய்யும் தொழில்கள்தான் வியாயாம மாம்.

நாம் ஒவ்வொரு மாமிசபேசியையும் பரிசோதித்துப் பார்ப்போமேயானால் அது அநேகம் கட்டுகளால் அமைக்கப்பட்டு ஒவ்வொரு கட்டிலும் நூற்றுக்கணக்காகச் சிறு தசை, நார்கள்போன்ற நரம்புகள் பொருந்தியதாய்க் காணப்படும். அத்தசை நார்க்கட்டுகளைக் கொஞ்சம் மாமிசம் ஒரு பை மூடியிருப்பதுபோல மூடியிருக்கும். அப் பை சில அவயவங்களின்மேல் அமைக்கப்பட்டதாகக் காணப்படும். அவ்வவயவம் வேலைசெய்வதெல்லாம் அப் பையாலேயேதான். அப் பையைத்தான் மாமிச பேசிகள் என்பார்கள்.

அது தன் றொழிலை எவ்வாறு செய்கின்றது என்றால் அப்பேசிகளில் ஒவ்வொன்றிலும் நரம்புகளிருக்கின்றன ; அந்நரம்பின் சக்தியால் அப்பேசிகள் தங்கள் உருவத்தைச் சிலசமயம் குறுக்கிக்கொண்டும் சிலசமயம் நீட்டிக்கொண்டும் தங்கள் தொழில்களைச் சரியாகச்செய்கின்றன. இப்பேசிகள் ஒவ்வொன்றுக்கும் இரத்தவோட்டம் முதலிய முறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தேகவியாயாமத்தால் அதிக பிரயோஜனமடைவது முதன்முதல் நமது இரத்தாசயம். தேகவியாயாமத்திற்காக நாம் வெகு வேகமாக நடக்க வேண்டும். நாம் வேகமாக நடக்க ஆரம்பித்ததும் நம்முடைய இரத்தாசயமாகியஇருதயம் அதிகமாகஅடிக்க ஆரம்பித்து இரத்தவோட்டத்தை அதிகரிக்கச் செய்கின்றது. இரத்த வோட்ட மதிகரிக்கவே நல்ல இரத்தம் தேகமெங்கும் வெகு வேகமாய்ப்பரவி கெட்டஇரத்தத்தை அகற்றுவதுடன் நற்காற்றோடு சுவாசாசயத்தில் சம்பந்தப்பட்டு பரிசுத்தமாகுமிடத்தில் வந்தடைகிறது. ஓர் பிரசித்தவைத்தியர் ஒருமனிதன் ஒருமணிக்கு 5-மைல் வீதம் வெகுவேகமாக நடந்தால் ஒருமணி நேரத்துக்குள் அவனுடைய தேகத்திலுள்ள எல்லா இரத்தத்தையும் ஒரு திவலைகூடவிடாமல் நல்ல காற்றுடன் சம்பந்தப்படச்செய்து அவனுடைய சுவாசாசயத்தால் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளலாமென்று சொல்லியிருக்கின்றார்.

அவ்வாறு ஒருமணிக்கு ஐந்து மைல்விதம் நடக்கும்பொழுது 130-காலன் இரத்தம் ஒருமனிதனுடைய சுவாசாசயத்தை சம்பந்தித்துச்செல்லுகிறதென்றும், அவ்விரத்தத்தைப் பரிசுத்தம்பண்ணிவைக்க அவன் 170-காலன் காற்று உட்கொள்ளுகிறானென்றும், அவ்வாறு உண்டாவதால் இரத்

தம் பரிசுத்தமாக்கப்பட்டு உயர்ந்ததாதுக்களின் அம்சங்களைப்பெற்று நமது பிராணனையும் சக்தியையும் வலிமையுடன் சேர்த்துவைக்கின்றதென்றும் சொல்லுகின்றார்கள்.

தேகவியாயாமம் என்பது நடப்பதால் மட்டுமல்ல; பலவகையால் செய்துகொள்ளலாம். இதனால் நம்முடைய சுவாசாசயத்தின் உதவியால் இரத்தத்தைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுகிறோம் என்றுசொன்னோமல்லவா? அவ்வாறு இரத்தத்தைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்வதினால் அதற்கேற்றபடி அவ்வளவு கரிமலவாயுவை (Carbonic oxide) இரத்தத்தினின்று மகற்றிக்கொள்ளுகின்றோம்.

நாம் வியாயாமம் செய்யும்பொழுது நமது மார்பு பூரித்து எழும்பியும் இறங்கியும் மாறுபட்டுக்கொண்டு அதிகக்காற்றை உட்கொள்ளும்பொருட்டு சுவாசாசயம் நாடிநிற்குமாகையால் நம்முடைய மார்பைச் சட்டைமுதலிய சாதகங்களால் இழுத்துக்கட்டிக்கொள்ளாமல்சுவாசாசயம் சுகமாகவறியிறங்கத்தக்க அவகாசமிருக்கும்படி உடுத்திக்கொள்ளவேண்டும். தேகவியாயாமம் அதிகரிக்க அதிகரிக்க நமது சுவாசாசயத்தின் வழியாய் இரத்தத்தினின்று கரிமலவாயு வெளிக்கிளம்பி அகன்றுவிடுகின்றது. அக்காரணத்தால் நம்முடைய வலிமை குறைவுபடாமலிருக்கும்படி நாம் யவக்ஷாரமயமான உண்டியை அதிகமாக உட்கொள்ளவேண்டும். தேகவியாயாமம் செய்கிறவன் அதிகமாகக் குடிக்கவேண்டியது தண்ணீர் ஒன்றேதான். அவன் மத்தியரசமிருக்கும் பானங்களைச் செய்வானேயாகில் அவனுடைய தேகவலிமையை இழப்பான். தேகவியாயாமத்தில் நாம் மறுபடியும் கவனிக்கவேண்டியதொன்று முக்கியமாகவிருக்கின்றது. அது யாதெனில், வெளியில் உலாவி வியாயாமம் செய்யாமல் கிரடிக்கூடம் போன்ற கட்டிடங்களில் வியாயாமம் செய்வதாகவிருந்தால் அவ்விடங்களில் நற்காற்று ஏராளமாகவிருக்கிறதாவென்பதை முதலில் நன்றாகச் சோதித்தறிந்துகொள்ளவேண்டும். அப்படிக்கில்லாதவிடங்களில் வியாயாமம் செய்யக்கூடாது. செய்வதினால் தீமை விளையும்.

வியாயாமத்தால் இருதயம் அடித்துக்கொள்வது அதிகரித்து சரீரத்தில் இரத்தம் நன்றாக ஓடிப் பரவிப் பொதுவாகச் சரீரம்முழுமைக்கும் சுவாசாசயத்திற்கும் சௌக்கியம் விளைவிப்பதுடன் இருதயத்துக்குமுதன்முதல் முக்கிய சௌக்கியத்தைக்கொடுக்கின்றது.

இவ்வண்ணம் சௌக்கியத்தைக்கொடுக்கக்கூடிய வியாயாமம் எவ்வளவு மிதமோ அவ்வளவுதான் செய்யவேண்டும். அதிகமாயாவது அல்லது

சாவதானமின்றி படபடவென்ருவது வியாயாமம் செய்தால் பலவித தீங்குகளுண்டாகும். அளவுக்குமிஞ்சினுல் அமிர்தமும் விஷம் என்று சொல்லப்படுகின்றது; அதுபோல் வியாயாமம் அதிகம் செய்வதால் ஒரு சமயம் இருதயம் உடைந்துபோகக்கூடும். குறைவாக வியாயாமம் செய்தால் அதினுலும் கெடுதல் சம்பவிக்கும். அதாவது இருதயத்தைச்சுற்றி தசை அதிகரித்து இருதயத்தின் வலுவையும் குன்றச்செய்யும்.

சருமம்:—வியாயாமம் செய்யும்பொழுது நம்முடைய சரீரத்தை மூடியிருக்குந்தோல் எங்கும் இரத்தம் நன்ருகப்பாய்ந்து வேர்வை வெகு ஏராளமாக வழிந்தோடச்செய்து மேதஸ்—அதாவது தேகத்தில் அதிகமாக வளர்ந்திருக்கும் கொழுப்பு தசையைக் கரையப்பண்ணும். சருமத்தின் மயிற்கால்களின் வழியாய் தேகத்தினின்று அதிகத் தண்ணீரும், சிலவித உப்புக்காரமும் வியாயாமம் செய்யும்பொழுது வெளியே அகலுகின்றன. வியாயாமம் செய்யும்பொழுது சருமவிஷயமாய்க் கவனிக்கவேண்டிய சுகாதார முறைகளாவன:— (1) வியாயாமகாலத்தில் சருமத்தை வெகு பரிசுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். (2) வியாயாமம் முடிந்தவுடன் தேகத்தை நன்ருக மூடிக்கொள்ளவேண்டும். அதற்கு மெல்லிய கம்பளித்துணியாலாகிய உடுப்புகள்தான் நல்லது. அப்படி மூடிக்கொள்ளாவிடில் உஷ்ணமதிகரித்த தேகம் வெளிக்காற்றுப்பட்டவுடன் சடேலென்று சீதமடைந்து சீதோஷ்ணவாதங்களால் ஓர்வித நோய்க்கிடமாகும்.

இச்சாபூர்வமாமிசபேசிகளைச் சார்ந்தது வியாயாமமென்று நாம் முன்னமேயே சொல்லியிருக்கிருேம். வியாயாமம் செய்யச்செய்ய மாமிசபேசிகள் கெட்டிப்பட்டு வலிமையடைந்து எவினகாரியத்தை உடனே செய்யும் திறத்தைப் பெற்றவைகளாகின்றன. ஆகையால் நாம் வியாயாமம் செய்யும்பொழுதெல்லாம் தேகத்துக்குள்ளிருக்கும் நானுவித இச்சாபூர்வக மாமிசபேசிகள் எல்லாவற்றிற்கும் அவ்வியாயாமத்தின் நன்மை கிடைக்கும்படியாக முயலவேண்டும். இல்லாவிடில் அவைகளில் சில அதிக வலிமையடைந்து மற்றவைகள் அவ்வாறு அடையாமற் பலமற்று தளர்ந்துநிற்கும்.

வியாயாமத்தால் தேகத்திலுள்ள நரம்புகளும் கெட்டிப்படுகின்றன. வியாயாமத்தால் ஒருவனுடையபுத்தி அதிகக்கூர்மையாகிறதா இல்லையாஎன்னும் சங்கையைப்பற்றி பல வைத்தியர்கள் பலதடவைகளில் தகுந்த முயற்சி செய்தும் ஒன்றும்சொல்ல சாத்தியப்படாமல் விட்டிருக்கிருர்கள். ஆனுல்தேகம் சுருசுருப்பாகவிருந்தாற்ருன் புத்தியும் சுருசுருப்பாக இருக்கமுடியும் என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளக்கூடியது. அவ்வாறு தேகம் சுருசுருப்பாகவிருக்க வியாயாமம் கொஞ்சமாவது அவசியமாகையால் நம்மு

டைய புத்தியைக்கொண்டு வியாயாமம் புத்திக்கு அனுகூலமாவதென்றும் அவசியமாகவேண்டும் என்றும் சொல்லலாம். ஆனால் ஒருவன் தன்னுடைய மனதைச்சீர்திருத்திக்கொள்ள ஒருநிமிஷமாவது செலவிடாமல் எப்பொழுதும் தேகவியாயாமத்திலேயே யிருப்பானாகில் அவன் ஒருவேளை புத்தியீனனாய்விடுவான்.

வியாயாமமும் பசியும்:—வியாயாமத்தால் நமக்குப்பசி அதிகமாவதுடன் பால், நெய் இவைகள்போன்ற உண்டிகளை அதிகமாகப் புசிக்கும் ஆசையை அதிகப்படுத்துகின்றது. ஜீரணசக்தி என்பது வியாயாமத்தின் காரணத்தால் அதிகமாக உண்டாகிறதென்றும், நாம் உட்கொள்ளும் உணவு வெகு விரைவில் நமது இரத்தத்தில் சம்பந்தப்படுகிறதென்றும் எல்லாரும் ஒப்புக்கொண்ட விஷயங்கள்; நாம் வியாயாமம் அதிகமாகச் செய்யச்செய்ய யவக்ஷாரம் அதிகமாகப்பெற்ற பதார்த்தங்களை அதிகமாக போஜனம் பண்ண வேண்டும். நல்ல சுத்தாகாயம் நிரம்பிய இடத்தில் தேகவியாயாமம் செய்வதால் நமது ஜீரணசக்தி அதிகப்படுகின்றது என்று சில பிரசித்த வைத்தியர்கள் தீர்மானித்திருக்கின்றார்கள். அஜீர்ணம் (Dyspepsia) முதலிய சில நோய்களுக்கு வியாயாமமே பெரும் அவுஷதம்போலும் அவ்வளவு அவசியமாக வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது வியாயாமம் இல்லாவிடில் பசியும்குறையும், ஜீரணசக்தியும் குன்றும் என்பது நிச்சயம்.

வியாயாமத்தினால் ஜநநேந்திரியத்துக்கு விளைவது நன்மையா தீமையா என்ற சங்கையைப்பற்றி பலதடவைகளில் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வியாயாமத்தால் விளைவது எப்பொழுதும் நன்மையே என்றும் வியாயாமத்தாலேயே ஒருவனுடைய காமவிகாரங்கள் குறைவுபடுகிறதென்றும் காதல் முதலிய விகாரங்களுக்கும் வியாயாமத்தால் நன்மையே உண்டாகிறதென்றும் தீர்மானமாகியிருக்கிறது.

விருக்காவும் வியாயாமமும்:—நம்முடைய அடிக்குடலுக்குச் சமீபத்தில் 'கிட்னீஸ்' (Kidneys) என்றொரு கருவியிருக்கிறது. அதற்கு வடமொழியில் 'விருக்கா' என்று பெயர். தேகத்தில் இக்கருவியின் வழியாக இரத்தம் பாய்ந்து போகும் பொழுதுதான் இரத்தத்திலிருந்து ஜலபாகம் கொஞ்சமும் இன்னும் சிலவேறுபாகங்களும் பிரிந்து மூத்திரரூபமாகமாறுகின்றன. பொதுவாய் நாம் இவ்விடத்தில் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம் என்னவெனில் விருக்கையின்வழியாகச் சில உப்புவாயு பிரிந்து மூத்திரத்தில் சம்பந்தப்படுகிறது; அதை வியாயாமத்தினால் பிரித்துவிடலாம் என்பதேயாம். இத்துடன் அதிக தேகமுயற்சி அல்லது வியாயாமம் செய்கின்

றவர்கள் இவ்வாறு அதிக உப்புவாயுவை (Nitrogen) மூத்திரத்தில்போக்கு வார்கள் ஆகையால் அக்குறைவால் ஒருவித தேக அசௌக்கியமுமுண்டா காமலிருக்க யவசாரமான ஆகாரத்தை அதிகமாய்ப் புசிக்கவேண்டும்.

வியாயாமத்தின் பயன்:—வியாயாமத்தின் உத்தமகுணங்கள் யாவை, அவைகள் தேகசௌக்கியத்தை எம்மட்டும் சம்பந்தித்திருக்கின்றன வென் பதை நாம் விசாரிப்போம். தேகத்திலுண்டாகும் சிலவித கரிமலவாயு, உப்புவாயு, ஜலவாயு இவைகளையெல்லாம் வியாயாமத்தால் பிரித்து அகற் றி நற்காற்று அதாவது பிராணவாயுவை இரத்தத்தில் கலந்து அதைப்பரிசு த்தம்செய்யும்படி ஏற்படுத்துகின்றோம். இரத்தத்தின் ஜலபாகத்தை ஜல ரூபமாக அகற்றுகிறோம். இரத்தவோட்டத்தை அதிகரித்துக்கொள்ளுகி றோம். இக்காரணத்தால் நமது தேகமெங்கும் சுத்த இரத்தம் பரவி தேக த்தின் ஒவ்வொரு பாகத்துக்கும் அதிக வலிமையுண்டாகின்றது. சிலர் வியாயாமம் செய்கிறவர்கள் அதைச்செய்தவுடனே அதிக ஜலம் குடிக்க க்கூடாதென்று சொல்லுகிறார்கள். வியாயாமத்தில் தேகத்தைவிட்டு ஜலம் அதிகமாகக் கழிந்துபோகின்றமையால் வியாயாமம் முடிந்ததும் நீரருந்த வெகு ஆவலுண்டாகும். ஒரேகாலத்தில் எல்லா நீரையுமருந்தாமல் கொஞ் சங் கொஞ்சமாக விட்டுவிட்டு அருந்துவதில் யாதொரு பிசகுமில்லை என்று பிரசித்தமான வைத்தியர்கள் சொல்லியிருக்கிறார்கள். வியாயாமம்செய்கின் றவர்கள் தங்கள் உணவில் அதிக ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும். இரட் டைநாடிச் சரீரங்களாகவிருந்தால் அதிக ஆகாரம் உட்கொள்ள அதிக அவா எப்பொழுதுமவர்களுக்கு இருக்கும். அவ்விச்சையால் ஏராளமாக போஜனம் செய்வார்களேயானால் மிகவும் சரீரம் ஸ்தூலமாகி பலவித நோய்களால் வருந்துவார்கள்.

வியாயாமம் செய்யும்பொழுதெல்லாம் இரத்தாசயமாகின்ற இருதயத் திற்கும் அவ்வாசயத்திலிருந்து புறப்பட்டுத்தேகமெங்கும் வலைபோலப்பாவி விளங்கும் இரத்தவாகினிகளாகின்ற தமனிகளுக்கும் (Blood vessels) ஓர் அழகான சம்பந்தம் ஏற்பட்டு தமனிகளில் பழைய இரத்தம் நிற்காமல் ஓட் டப்பட்டு சுவாசாசயத்தின் உதவியால் பிராணவாயுபெற்று சுத்தமாகி தேக த்துக்கு எப்பொழுதும் சௌக்கியத்தை விளைவிக்கின்றது. இவ்வியாயாம த்தை ஏற்றத்தாழ்வு என்பதின்றி சரிவரச் செய்துவந்தால் அதைவிட நமது தேகத்தை வளர்க்கும் மருந்து வேறொன்றுமில்லை. ஒவ்வொரு மனி தனும் தினந்தோறும் எவ்வளவு அளவு வியாயாமம் செய்யவேண்டும் என்று நாம் தீர்மானிக்கவேண்டுமல்லவா? புரோபஸர் பார்கீஸ் (Prof. Parkes) என்ற ஓர் பிரசித்த சுகசந்தர்சன சாஸ்திரி அதிகபுஷ்டியும் வலிமையுமுள்ள

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩.] குரோதி ௵ பங்குனி௴ [பகுதி-௫.

பொய்யாமை.

இந்நாவலந் தீவிலுள்ள நம்பெரியோரெல்லாம் உலகிற் பெரும்பாவங்கள் ஐந்தாம் எனவும், அவை பொய் கொலை களவு கள் காமம் என்பனவாம் எனவும் உரைப்பர். "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையும், உள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை" என்றார் மணிமேகலையினும். இதன்கண் செய்யுணோக்கிக் 'கள்ளும் பொய்யும்' என எண்ணினாரேனும், பொய்முதலாக எண்ணுதலே வழக்காம் என்க. இவற்றுட் பொய்யொன்றே மற்றைக் கொலை முதலிய நான்கிலும் வியாபிக்கும் வலியுடையதாதலின், இதனையே தலையாய பாவம் என்பர். அது பொய்யுணர்வு, பொய்யுரை, பொய்யொழுக்கம் என மூன்றாகவைத்துக் கடியப்படும். இவ்வாறு பெரும்பாவங்கள் என்னும் வரிசையிற் பொய்முதலிய ஐந்தனையும்வைத்து, அவை எல்லாவற்றுள்ளும் பொய்யைத் தலைமையான பாவமாகக்கொண்டு அதனைத்திரிகரணத்தாலும் பற்றாமற் கடிந்தொழுகுவது நமக்குச் சிறந்த அறமாம். பிறநாட்டார், இப்பெரும்பாவங்களுட் பலவற்றைச் சிறுகுற்றமாகவுங் கருதார். பிறநாடுகள் பலவற்றிற் கொலையுங் கள்ளும் பாவவுணர்ச்சியில்லாமலே பயிலப்படும். இனிப்பொய்யை நம்மவர் தலைமையான பாவமாகக் கருதியதற்குக் காரணம் என்னவெனிற் கூறுவேன்;—பொய்யுணர்வு காரணமாகவே கொலை முதலிய பாவங்களெல்லாம் பிறக்கும். மெய்யுணர்ந்தவழி அப்பாவங்கள் பிறவாவாம். கொலைமுதலியன மனப்பரிசுத்தம் இல்லாதாராற் புரியப்படும். மனப்பரிசுத்தம் சத்தியத்துடனிகழுமென்பர். "அகந் தூய்மை, வாய்மையாற் காணப் படும்" என்பது திருக்குறள். கொலை

கள் களவு காமம் நான்கும், மனவுணர்ச்சி நன்கமையாத மூடர்களாலும் விலங்குகளாலும் "இது கொலை, இது கள்ளுண்டல், இது களவு, இது காமம்" என்னும் பாவவுணர்ச்சியின்றி இயல்பாகவே செய்யப்படும். பொய்யோ விலங்குகளால் ஆகாமல், மானுடப்பிறவியினரால், தந்நெஞ்சால் நன்கு அறியப்பட்டு, இது பொய் என்னும் உணர்ச்சியோடே நிகழ்த்தப்படும். கொலை முதலிய நான்கும் பிறபொருள்கள் உண்டாயவழி உண்டாம்; பொய் பிறபொருளை வேண்டாமல் ஒருவன்தன்னானே எளிதினுக்கப்படும். ஒரு பொய்யைக்கூறிக் கொலை முதலியவற்றை இயற்றுவித்தல் கூடும்; கொலை முதலியன பெரும்பாலும் பிறவுடலையும் பொருளையும் அழிக்கும். பொய் பிறருணர்வைக்கெடுத்து, அவரைக் கொலைமுதலிய பாதகங்கட்கு உள்ளாக்குவதற்கும் வாயிலாக நிகழும். கொலை முதலிய நான்கும் ஒருவன் காயத்தின் வலியளவே செய்யப்படும். பொய் அவ்வாறளவுபடாமற் பரக்கும். கொலைமுதலியன இப்பொய்யின்கண்ணே மறைந்துகொள்ளும்; பொய் இருண்டபெருங்காடுபோல்வது. கொலை முதலியன அக்காட்டுத்திரிந்து இடரிழைக்கும் கொடிய விலங்குகள்போலும். கொலைமுதலிய வினைகள், அவ்வவ்வினையுண்ட பொருள்கண்மட்டில் நிற்கும்; பொய்யை ஒருவன் கூறியொழிந்தால் அது பெருவிரைவிற் பரந்தோடி உலகை மூடிக்கொள்ளும். நரகம் என்னும் கொடிய அரக்கனது வலியகையிலுள்ள ஐந்துவிரல்களாகும், இவ்வைந்து பாவங்களும். பொய்என்பது அவ்வைந்துவிரல்களுள்ளும் அங்குஷ்டமாகும். கொலை முதலிய நான்கும் மற்றை விரல்களாம். எங்ஙனம் நான்குவிரல்களும் அங்குஷ்டத்தைத்தொட்டுக்கொண்டே ஒருவினை புரியப்படுமோ, அங்ஙனமே, கொலைமுதலியன நான்கும் பொய்யைத்தொட்டுக்கொண்டே இயற்றப்படும். (அவ்வரக்கன் இவ்வைந்து பாவங்களாம் ஐந்துவிரல்களாலும் தீய உயிர்த்தொகைகளைப் பற்றித் தன்வாயிலிட்டு வருத்துகிறுன்) இவற்றுற் பொய்ப்பாவத்தின் தலைமையுணர்ந்துகொள்க. எல்லாத்தீயொழுக்கங்களும் பொய்யறிவடியாகவே பிறப்பன என்னுங் கருத்துப்பற்றியே, ஞானபூரணரான ஸ்ரீசடகோபர், "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும், இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை உயிரளிப்பான்" என முற்படப்பணித்தருளினர். 'மெய்யுணர்ந்தான் விடு

பெறும்' என்பதனுல், மெய்யுணர்வு வீட்டிற்கு ஏது ஆகவும், பொய் யுணர்வு அதற்கு விரோதியாகவும் அறியப்படுதலின், பொய்ப்பாவத் தலைமை எளிதினுணரப்படும்.

இனித், திருவள்ளுவர் "ஒன்ருக நல்லது கொல்லாமை மற்ற தன், பின்சாரப் பொய்யாமை நன்று" என்பதனுல், தன்னேடு இணையொப்பதின்றித் தானேயாக நல்லது கொல்லாமை யென்றும், பொய்யாமை அதன் பின்னேநிற்க நல்லது என்றும் உரைத்தமையி ன், கொலேயினையே தலேயாய பாவம் என்றலும், பொய்யை அதன் பின்னேவைத்துப் பாவம் என்றலும் அவர்க்குக் கருத்தாமெனத் து ணியலாகும். அவர், பொய்யென்பது சிறிதுந் தீமைபயவாமல் நன் மையே பயக்கும்வழி மெய்போலவுங் கொள்ளப்படுதலால் திரியும் இயல்புடையதென்றும், கொலே அங்ஙனம் ஆகாது வேள்விமுதலாக யாண்டுச்செய்யப்படினும் ஒன்றனுயிர் நீத்தலாகிய இன்னுமையை யே பயந்துவிடுதலால் திரியா இயல்புடையதென்றுங் கருதிப், பொ ய்க்கு முன்னே கொலேயினே வைத்தனராவர். வேள்வியிற் செய்யப் படும் கொலேக்கும் பிராயச்சித்தம் இயற்றப்படுதலின் அது பாவமா தல் கண்டுகொள்க. அன்றியும், பொய் பாவமென்று கருதப்படுவது அதனுல் விளேயும் பலதீங்குகள்பற்றியேயாம். அத்தீங்குகளிலெல் லாம் 'சாதலின் இன்னுத தில்லே' என்பதனுற் கொலேயே தலேயாய தீங்கு என்னலாகும். இத்தலேயாய தீங்குபுரியாமல் ஒழுகுதலே தலேயாய அறம் எனக்கொண்டாரெனினும் ஆம். அங்ஙனம் கொண் டாரேனும், அவர், "பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று" என்பதனுற் பொய்யாமையையே இடைவிடாமற் செய்க எனவும், அங்ஙனம் செய்தாற் பிறவறமொன் றும் செய்யாமை ஒருதலேயாக நன்ரும் எனவும் கூறியவாற்ருற், கொ ல்லாமை முதலாகிய எல்லாவறத்தின் பயனேயும் இப்பொய்யாமை யொன்றே தரவல்லதென்று அவர் கருதியுள்ளாரென்று தேறலாகும். பொய்யாமை எல்லாவறத்தின் பயனேயும் தரவல்லதென்று கருதினு ர்க்கு, பொய் எல்லாப்பாவத்தின் பயனேயும் தரவல்லதென்பதும் கரு த்தாமென்பது எளிதினுய்த்துணரப்படும். இதனுல் அவரும் பொய் யே எல்லாத்தீங்குகட்குங் காரணமாமெனக் கருதினுராதல் காண்க.

இன்றி, 'யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும், வாய்மையி னல்ல பிற' என்பதனால், 'யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள், யாதொரு தன்மையாலும் வாய்மையின் மிக்கன வாகச் சொல்லப்பட்ட பிறஅறங்களில்லை' என்று இப்பொய்யா மையின் சிறப்புணர்த்தற்குத், தாமே முன்வந்து கரிகூறிநின்றதுங் காண்க. திருவள்ளுவர், பொய்யுணர்வு பொய்யுரை பொய்யொழுக் கம் இலராகிப் பொய்யாமையினைத் திரிகரணத்தானும் பேரறமாகக் கொண்டொழுகிய சிறப்பால் 'போய்யில் புலவர்' எனப் பெயர்சிறந் தாராதலால் அவர் பொய்யாமைக்குக் கரிகூறிநின்றாராவர். இவற் றாற் பொய்யாமையின் மிக்கனவாகப் பிறவறங்களில்லையென்பதும் எல்லாப் பாவங்களையும் அப்பொய்யொன்றே தரவல்லதென்பதும் அவர்க்கும் உடன்பாடாதலுணர்க. சீத்தலைச்சாத்தனார் 'கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையுங், தள்ளா தாகுங் காமந் தம்பா, லாங் கது கடிந்தோ ரல்லவை கடிந்தோர்' (சிறைசெய்காதை)என்பதனால், இடம்பற்றிக் காமத்தையே தலையாய பாவமாகவைத்து, அதனைக்கடி ந்தோரே மற்றை நான்கையுங் கடிந்தவராவர் எனவுரைத்தார். இக் கருத்தேகொண்டு 'காமமே கொலைகட் கெல்லாங் காரணம்' எனக் கூறினாருமுளர். இவ்வாறு ஓரோர் பாபபுண்ணியத்தை எடுத்துக் கூறுமிடத்து, முறையே விடுதற்கும் பற்றுதற்கும் ஏற்றபெற்றியால் மிக இழித்தும் மிகவுயர்த்துங்கூறுவது நூல்வழக்கேயாம். இங்ஙனம் காமம், கொலைமுதலியவற்றிற்குப் பாதகத்தலைமைகூறும் ஆசிரியர்க் கெல்லாம் இத்தீங்குகள் மயக்கவுணர்வடியாகப் பிறப்பன என்பதும், அம்மயக்கவுணர்வு பொய்யுணர்வேயென்பதும் உடன்பாடாம். ஆத லாற் கொலைமுதலிய தீங்குகளெல்லாம் பொய்யுணர்வைத் தள்ளா என்பது தெளிந்துகொள்க. இவையெல்லாம் நன்றாய்ந்த பெரியார் 'பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும்' எனப்பணித்த மையினையும் நோக்குக.

பொய்யுணர்வாவது, வஞ்சவுணர்ச்சி. இதனை விபர்யயம் என் பர். அது கடவுளும் இருவினைப்பயனுமுதலாகப் பெரியோர் கண் டு உண்டென்றவற்றை இலவென்றுகொண்டு, நூலானும் உலகத்தோ ரானும் கடியப்பட்டனவற்றைப்புரிதற்கும், புரிந்தும் நல்லோனாகத்

தோற்றுதற்கும், எற்றவஞ்சவுரை வஞ்சவொழுக்கங்களைத் தன்னுள்ளே தேர்தல். இது பல்வகைத் தீங்குகளுக்கும் மூலமாதலின் மாபாவமாதல் கண்டுகொள்க. வஞ்சவுரை, வஞ்சவொழுக்கங்களை நிகழ்த்தற்குச் சமயம் வாயாவிடினும் ஒருவன் தேர்ந்த வஞ்சவுணர்ச்சிமட்டில் அவனைப் பெரும்பாவி யாக்கிவிடுமென்றுணர்க.

பொய்யுரையாவது 'அஃதன்று' எனத் தன் நெஞ்சு அறிந்திருப்பவும் பிறனுக்கு அது தோன்றுதவாறு மறைத்துச் சொல்லும் வஞ்சவுரை.—இதனை,

"அற்றன் றுத லதுதான் மனஞ்செய்தல்
சொற்றன் மாட்டு நிகழ்த்தல் பிறனேர்த்தன்
மற்றித் தன்மை படுமாயின் மாண்பிலாக்
குற்றப் பொய்யென் றுரைப்பர் குணமிக்கார்."

(நீலகேசித்தெருட்டுரை மேற்கோள்.)

எனவருதலால் உணர்க. "ஒருவன் சொல்லல்வேண்டும், அவன்சொல்லியவாறு அன்றுதல் வேண்டும், அங்ஙனம் அன்றுதலை அவன் உணர்ந்தவனுதல் வேண்டும், அச்சொல்லைப் பிறன் கேட்டல் வேண்டும்—இந்நான்குங் கூடியவழியே பொய்யுரையாம்" என்பதுஇதனலறியப்படும். இப்பொய்யுரை சொற்குற்றநான்கனுட் டலையாயதெனப்படும்; இதனைப் "பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில், சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்" என மணிமேகலைக்கண் வருதலானுணர்க. குறளை, மெய்பற்றியதாயினும், அதனுற் பிறனுக்குவிளையுந் தீங்குபற்றியே பாவமெனவிலக்கப்பட்டது. தீமை பயப்பனவன்றி நன்மைபயவாதனவும் பாவமாம் என நம்பெரியோர் கருதியுள்ளாரென்பதற்கு, அவர், வாக்கினாலாகும் பாவங்களுட் பயனில் சொல்லையும் ஒன்றாக எண்ணியதே சான்றாம். இதனல், அவர் தீமை பயக்கும் பொய்யுரையை எத்துணைப்பாதகமாக வைத்துக் கடிந்தனரென்பது தேறப்படும். இப்பொய்யுரையாமையின் மிக்க பேரறம் வேறில்லையென்பதனையும், எல்லா நல்லறங்களும் இப்பொய்யுரையாமை யொன்றுண்டாக வுண்டாம் என்பதனையும் நன்குணர்த்தற்கன்றே, நந்தெய்வப்பழமறையும் 'தர்மஞ்சர' என்பதற்கு முற்படவைத்து 'ஸத்யம்வத' என முழங்குவதூஉமாயிற்று என்க. சத்திய

ங்கூறுதலும் பிற்கூறப்பட்ட தருமத்திறைன்றாயிருப்பவும், அதனைத் தனியே பிரித்து முற்படவைத்து ஓதியதே அவ்வாய்மையின்றலைமை விளக்குமன்றே?

இனி, நன்மையே பயவாது சிறிதுதீமை பயக்கும்வழியும் இப்பொய்யுரை பாவமாகுமெனவும், சிறிதுந் தீமைபயவாது நன்மையே பயக்கும்வழிப்புண்ணியமாகும் எனவும் கூறுதலுமுண்டு. பொய்க்கு மறுதலையாகிய வாய்மையும் சிறிதுதீமைபயக்கும்வழியும் பாவமாம் என்பர். "வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந், தீமை யிலாத சொலல்" என்றார். இதனால் நம்பெரியார் கருத்தெல்லாம், எவ்வாற்றானும் உயிர்கட்குத் தீங்குபயவாமல் நன்மையேபயக்க வொழுகுதலையே நோக்கியன என்பது உணரத்தகும். இவற்றையெல்லாம் நோக்கின் தீமைபயப்பனவும் நன்மைபயவாதனவும் பாவமாமெனவும், தீமைபயவாதனவும் நன்மை பயப்பனவுமே புண்ணியமாமெனவும் நம்மவர் பகுத்துள்ளமை வெளியாம். "பிராணி பீடாநிவர்த்தியர்த்தமாகப் பொய்யுரைத்தலும் ஆம் என்பதுபற்றி, நன்மை வேண்டிக் கொலையும் ஆமோ எனின், நன்மையாவது ஜீவன்கட்குப் பீடைபுகுதாமல் வர்த்தித்தலாதலின், கொலை, ஜீவன்கட்குப் பீடாநிமித்தமாதலின் ஆகாதென்று கொள்க."

பொய்யொழுக்கமாவது வஞ்சவொழுக்கம். அது, நூல்களிற் கூறப்பட்ட நன்னெறிகளில் உள்ளத்தால்ஒழுகாதாகி, அவ்வந்நெறிகட்குரிய வேடங்களையும் ஆசாரங்களையும் உலகத்தை மோகித்தற் பொருட்டுப்புனைந்துநடித்தலாம். இது கூடாவொழுக்கினன் ஒருவன் மோனசந்நியாசிபோல ஒழுகுதல் முதலியனவாம். பொய், ஒழுக்கத்தினும் உண்டென்பதனைப் "பொய்யாற் றொழுக்கம்" 'பொய்தீரொழுக்கம்' 'பொய்யடிமை' எனவருவனவற்றானுணர்க. 'வேடநெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்' என்னுந் திருமந்திரமும் இப்பொய்யொழுக்கத்தினையே நிந்தித்ததாம். 'நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து, வாழ்வாரின் வன்கணா ரில்' என்வுரைத்தருளிய தெய்வப்புலவர்கருத்தால் நோக்கின், இவ்வஞ்சவொழுக்கத்தின் பெரும்பாதகத்தலைமை நன்கறியலாகும்.

இவ்வாறு, உள்ளம் உரை செயல் என்னும் மூன்றுனும் பொய்த்தலில்லாமையையே நம்மவர் பொய்யாமை என்பர். சைநபௌத்தரும், இப்பொய்யாமையினை, முறையே பஞ்சமஹாவிரதத்துளொன்றாகவும் பஞ்சசீலத்துளொன்றாகவும் வைத்து இனிது போற்றுவர் எனவறிக. இவ்வாறு திரிகரணத்தானும் பொய்யாம்பெரும்பாவம் எய்தாமலொழுகுதலே ஒருவனுயிர்க்குச் சிறந்த பேரறமாம் என்பதற்குப்பொருந்த, நம் பெருநூல்களுட் கேட்கப்படும் இதிகாசங்கள் மிகப்பலவாம். அரிச்சந்திரன் என்னும் அரசர்பெருந்தகை ஒரு பொய்கூறமாட்டாமல், தன்னரசிழந்து மனையிழந்து மகனிழந்து, தானும் புலையற்கடியனாய்ப் புக்குப் படாதனபட்டதும்; தசரதன் என்னும் சக்கரவர்த்தி ஒருபொய் கூறவறியாது, தன் அன்புடைத்திருமகனைக் காடுபோக்கித் தன்னாருயிர் துறந்ததும் நம்புண்ணிய சரிதங்களேயாம். நல்லோர்பாலன்றித், தன் னுயிரைப் போக்கவல்ல கொடியோர்பாலும் பொய்கூறலாகாதென்பதற்குத், தன்னைக் கொல்லப் புகுந்த கொடியபுலியிடத்தும் ஒருபொய்கூறவறியாதொழுகிய சுமதி கதை சேஷதர்மத்துப் பிரசித்தி பெற்றதன்றோ. அறங்களுக்கெல்லாம் பெருநிலயமாகச் சிறந்த தருமனும், தன்கருத்தால் மெய்யேயாயினும் வேறோர் பொருள்படுதலால் துரோணருக்குத் தீங்கிழைப்பதொன்றைச் சொல்லியதனானே பொய்யனெனக்கொள்ளப்பட்டு, அப்பாதகத்தின் பயனாகக் கொடுநரகங்கண்டு நடுங்கினான் என்பது, நாம் பொய்யாமைக்கு எடுத்துக்காட்டும் மெய்ச்சரிதையாகும். இனித்தந் நெஞ்சறிவது பொய்யாமைக்கு, நக்கீரனார் ஓர் பேரிலக்கியமாவர். இவர் 'கொங்குதேர்வாழ்க்கை' என்னுஞ்செய்யுட்குத் தந்நெஞ்சறிந்த குற்றத்தைக் கூறியதும், அச்செய்யுளை அருளிச்செய்த இறையனார் இவர்முற்போந்து தம் நெற்றிக்கண்ணைக் காட்டித் தாந்தெய்வமாதலை இவர்க்குணர்த்திய காலத்தும் அவ்விறையனாரை நோக்கி, நக்கீரர், 'நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' எனவுரைத்துத் தந்நெஞ்சறிந்ததைப் பொய்யாது நின்றதும் தமிழுலகம் நன்றறிந்தனவேயாம். வாய்மையினை முன்னிட்டுப் 'பொய்யில்புலவன்' 'பொய்யாமொழி' எனப் புலவர்க்கும், 'திருவாய்மொழி' 'பொய்யாமொழி' 'வாயுறைவாழ்த்து' என நூல்கட்குஞ் செய்யுட்கும் பெயர்வைத்தாளுதலும் நமக்குச் சிறந்ததாம். அறிவிலிக்கு மதிழ்

ச்சியே பயக்குமாயினும், அவன் செய்யாதனவற்றைக் கூறி அவனைப் பொய்யேபுகழ்தலை, நம்பெரியாரது செவ்வியநா ஒருபோதும் அறியா என்பர். இதனைச் 'செய்யா கூறிப் புகழ்தலெய்யா தாகுமென் சிறுசெந் நாவே' (புறம்) எனக் கல்விவீறுடையார் கூறுதலான் அறிக. ஒருவற்கில்லாதனவற்றைக் கூறிப் புகழ்தலினும், அவனை வைதலையே இவர் நன்றென்று கொள்வர்; 'இல்ல புகழ்தலின் வைதலே நன்று' என்பது மேற்கோள். சிலபுல்லறிவோர், ஒருகால் ஔவையாரை எதிர்ப்பட்டுத் தம்மைப்பாடும்படி வேண்டியபோது, அவர்பால் ஒருகுணமுங்காணாமையால் 'நும்மை யான் எங்ஙனம் பாடுவேன்' என்று அவர் மறுத்ததும் ஈண்டு நினைக்கத்தகும். இவ்வாறு பொய்யை விலக்கியும் பொய்யாமையைப் போற்றியும் நம்மவர் ஒழுகியதற்குப் பலபல மெய்க்கதைகள் எடுத்துக்காட்டலாகும். அவற்றையெல்லாம் இங்கு விரிப்பின் வரம்பின்றிப் பெருகுமென்க.

இனிப் பொய்யாமைக்கண் நம்மவர்க்குள்ள பெருமதிப்பை நன்கு தெளிதற்கு, எழுதாமறையினும் எழுதும் மறையினும் முறையே ஸத்யம், வாய்மை என்ற பெயர்களாற் பரம்பொருளை வழங்கியதே தக்ககருவியாகும். 'ஸத்யம் ஞானமநந்தம்' என்பதுவேதம். 'தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது, வாஅய்மை வேண்ட வரும்.' என்பது திருக்குறள். இவ்விடங்களில் ஸத்யம், வாய்மை யென்பன பரம்பொருளையே குறித்தன. இவ்வரிய பெரிய வழக்கம் நமக்கேயுரியது. எழுதாமறைக்கண் 'ஞானம்' என்ற சிறந்த பெயர்க்கும் முன்னுக 'ஸத்யம்' என்ற பெயரை வைத்தமையானே இதன்றலைமை ஆராயப்படும். இத்துணையும் கூறியவாற்றாற் பொய்யைப் பெரும்பாவங்களுட் டலையாகவைத்து, அதனைத் திரிகரணத்தானும் எய்தாமல் விலக்குவதூஉம், பொய்யாமையாகிய வாய்மையே எல்லா அறங்களுள்ளுந் தலையாயதெனக்கொண்டு அதனையே தெய்வத்தின் திருப்பெயராகவைத்துப் போற்றுவதூஉம் நமக்கே அடிப்பட்டு வந்த வழக்கென்பது நன்கு தேறப்படும். வேற்றுநாடுகளிற் சிறுகுற்றமாகவுங் கருதப்படாத புலாலுண்ணல், கள்ளுண்ணல் இவற்றை விலக்கியொழுகுதற்கண் இந்நாவலந் தீவு எங்ஙனம் எல்லாரானும் புகழப்பட்டதோ, அங்ஙனமே, பொய்யாமையைத் தலையாய அறமாகக்கருதி

யொழுகுதற்கண்ணும், இத்தீவமே தொன்றுதொட்டுப் புகழ்பெறு வதென்க. கிறிஸ்துபிறந்த உக-ஆம் ஆண்டில் (அஃதாவது இற் றைக்கு 1884 வருஷங்கட்குமுன்) இருந்தவரும், மேற்றேபத்துப் பழைய பூகோளசாஸ்திரிகளுட் பெருந்தலைமை வாய்ந்தவருமாகிய ஸ்ட்ரேபோ (Strabo) என்னும் யவனசிரியர், தம்முடைய பூகோள நூற்கண் இந்தியரைப்பற்றிக் கூறுமிடத்து, * "அவர்கள் (இந்தியர் கள்) சத்தியத்தை அறத்தோடொப்பப்போற்றுகின்றார்கள்......பொய்க்கரி கூறினவனாகக் குற்றப்பட்டவன் தன் உறுப்பறையுண்பவனா வன்" என உரைத்தவாற்றானே நம்மவர் பொய்யாமையை எவ்வள வாக மதித்துப் போற்றினரென்பதும், பொய்யினை எவ்வளவாகக் கடிந்தனரென்பதும் நன்குதெளியலாகும். இந்நாவலந்தீவினர் சத் தியத்தினை அறத்தோடொப்பப் போற்றுதலை, மேற்றிசைத்தொல் லாசிரியர் ஓர் புதுமையாகக் கருதியதனையும் நோக்கிக்கொள்க. ஸ்ட் ரேபோ ஆசிரியர் இவ்வாறு நம்முன்னோரைப் புகழ்கின்றகாலத்துப் வேற்றுநாட்டார் பலர், அநாகரீக வடிவினராயிருந்தனரென்பது பலரும் அறிவர். நம்மவர் பெரும்பாவமாகக் கருதியன பலவற்றுள் ஒருசிலவற்றை, மேனாட்டார் சிறுகுற்றங்களாகக்கொண்டு அவற் றை விலக்கக்கருதி, இக்காலத்தேதான் சிறுகூட்டங்கள் கூட்டுகின் றனர். இதனால், அவரது நவீனசாரமுயற்சியும், நமதுதொன்மை ப்பட்ட ஆசாரமுதிர்ச்சியும் நன்கறியத்தகும். இங்ஙனமாகவும், பொய்யினை ஓர்பாவமாகவேகருதாமல் அதனைச்சொல்வன்மையினால் மெய்போலக்காட்டிக் கேட்டாரை மயக்குதலே தமக்குச் சிறந்த சா துரியமாகக்கொண்டு இறுமாக்கும் வேற்றுநாட்டாரொருவர், மேலெ டுத்துக்காட்டியவாறு, பல்லாற்றானும் நமக்கே சிறந்தபேரறமாகிய பொய்யாமையினைப் புதிதாக உபதேசிப்பது, விழிகண் குருடாயிரு ப்பவுங் கண்ணுடையான்போல நடிப்பான் ஒருவன், இருகண்ணும் இயல்பாகவே நன்குடையான் ஒருவனுக்கு வழிகாட்டுதலோடொக் கும் என்று துணியலாகும்.

---

* "They respect alike Truth and Virtue............... A person convicted of bearing false witness suffers a mutilation of his extremities." - (Strabo. Page 57. Ancient India by J. W. M. CRINDLE, M. A., L. L. D.,)

இதுகாறும் உரைத்துப் போந்தவாற்றாற், பொய்யாமையென்னும் பேரறத்தினியல்பும், அப்பேரறம் நமக்கே தொன்றுதொட்டுச் சிறந்ததாதலும், அதனை நம்மினுஞ் சிறப்பித்துப் போற்றுவார் வேறில்லையாதலும், அவ்வறம் நமக்குப்புதிதாக ஒருவராற் 'பேர்த்தும் பேசக்கிடந்த' தில்லையாதலும் உணர்ந்துகொள்க.

இங்ஙனம்,
ரா. இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

௨

திருப்பதியைப்பற்றிய சிலஆசங்கை.

சென்ற மாசத்துச் செந்தமிழில் ஸ்ரீமாந். எம். நாராயணசாமி ஐயரவர்கள் "ஓர் தமிழ்ச்சாஸனம்" என்னும் மகுடத்தின் கீழ் எழுதிவிடுத்த விஷயத்தில், திருமலை (திருப்பதி)க்கோயில் வைஷ்ணவமே என்பதற்கு எடுத்துக்காட்டிய பல ஆதாரங்கள், வெகு நன்றாயும் ஒப்புக்கொள்ளத்தக்கனவாயுமிருக்கின்றனவென்பதற்குச் சிறிதும் ஐயமேயில்லை. அவற்றிலும் முக்கியமாகச் சிலப்பதிகாரமேற்கோள், அக்கோயில் வைஷ்ணவமாகவே இருத்தல் வேண்டுமென்பதை வெட்டென விளக்குகிறது. ஐயரவர்கள் "ஸ்ரீவைஷ்ணவரிரக்ஷை" என்றிருப்பதையும், "பன்மாஹேஸ்வரரிரக்ஷை" என்றில்லாதிருப்பதையும் எடுத்துக்காட்டியது, இவர்கக்ஷியை வற்புறுத்த வெகுபலமான சான்றாகும். இவைபோன்ற மற்றை ஏதுக்களும், இவர் எடுத்துக்கொண்ட விஷயத்தைக் கேட்போர்மனம் திருப்தியடையச்செய்கின்றன என்பதற்குச் சந்தேகமேயில்லை.

ஆயினும், இவர் கூறியகூற்றுக்களில் ஆங்காங்குச்சிற்சில,ஆப்தவாக்கியப்பிராமாண்ணியத்தால் நிலைநிறுத்தப்பட்டிருத்தலின், அவைகளினுண்மையையும், இவையன்றி, இவர்திருப்திகரமாய்த் தெளியவைக்காத சிலவிஷயங்களையும் எடுத்து ஆராய்வோம். முதன் முதல் ஸ்ரீமாந். நாராயணசாமி ஐயரவர்கள், "பாளாஜி" என்னும்

பதம், வடநாட்டில் வேங்கடேசர்க்கு ஏன் உபயோகிக்கப்படுகிறது என்பதை விளக்காமல் மற்றைவிஷயங்களைத் தாக்கப்புகுந்தார். 'பிள்ளையார்' என்று பொருள்படும் இப்பதம் 'இளையபிள்ளையார்' 'இளங்குமரன்' என்னும் பொருள்படும் வடசொற்றிரிபு; விஷ்ணுவை எவ்வாற்றானும் குறிக்காதது. தொன்றுதொட்டுப் 'பாளாஜி' என்று கூவும் வடதேசத்தார் முதன்முதல் 'சுப்பிரமணியன்' என்னும் அர்த்தத்திலேயே கொண்டார்களென்பதற்கு ஐயமேயில்லை. இதுநிற்க.

ஐயரவர்கள், காளஹஸ்தியைப் பாடச்சென்ற நாயன்மார்கள் திருப்பதியைப்பாடவில்லையே, என்றுகூறின், தனிக்கார்த்திகேயன் கோயிலை இவர்கள் பாடுவது வழக்கமில்லை. நக்கீரரால் திருமுருகாற்றுப்படையிற் பாடப்பட்டிருக்கும் தலங்களில் பரங்குன்று தவிர்த்து மற்றொன்றும் பாடல் பெறவில்லை. திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், கதிர்காமம் முதலிய தனிச்சுப்பிரமணிய ஸ்தலங்களை மூவர்கள் பாடவில்லை. '[1]பரங்குன்றத்தைமாத்திரம் பாடியிருக்கும் பதிகத்திலும் சுப்பிரமணியக்கடவுளைப் பற்றி ஒருவார்த்தையுங் காணோம்: பரமசிவனைப்பற்றியே பாடியுள்ளது. இவ்வாறு தனிக்கோயிலைப்பாடுவது வழக்கமில்லையெனின், திருப்பதி சுப்பிரமணியன்கோயிலாயிருந்திருப்பின், நாயன்மார்கள் அதனைப் பாடாது விட்டதில் ஆச்சரியமுறத்தக்கதொன்றுமில்லை.

பேயாழ்வார் பாட்டுக்களிலிரண்டை மேற்கோளாக எடுத்துக்காட்டிப் 'பரமகாருகணிகரான' பெரியவாச்சான் பிள்ளைகளுடைய வியாக்கியானத்தை, அவைகளின் சரியான தாற்பரியத்தைத் தெரிவிப்பதென்று ஒப்புக்கொண்டுவிட்டார். இளங்குமரன் என்னும் தொடர் விஷ்ணுவென்னும் பொருளில் தமிழிலக்கியத் தெவ்விடத்தும் வழங்கப்படவில்லை. 'சுப்பிரமணியன்' என்னும் அர்த்தத்தைத்தவிர வேறோரர்த்தமும் அதற்கில்லை. 'குமரன்' என்னும் பதம்

---

(1) அன்றிக்கே; இக்கோயில்கள் தனித்திருப்பது நாயன்மார்கள் காலத்தில் வழக்கமில்லை: நக்கீரர்காலத்தில் சாதாரணமாயிருந்தது என்னலாம். அப்படியாயின் நக்கீரர்காலம் நாயன்மார்கள் காலத்திற்கு பிற்பட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

சுப்பிரமண்ணியனுக்கே யுரித்தானது. அதிலும் 'இளங்குமரன்' 'இளையபிள்ளையார்' என்னும் விசேஷணஞ் சேர்த்த பதங்களுக்கு கார்த்திகேயனே பொருள் என்பதற்கு ஐயமேயில்லை. ஆழ்வார் கூறும் மாதிரியை உற்றுநோக்கின், அவர் சுப்பிரமணியன் கோயிலென்றே குறிக்கிறார் என்பது விளங்கும். வேங்கடத்தை 'மேலை (மேனாள்) இளங்குமரர் கோமனுக்கிடம்' என்று கூறியிருக்க, நித்தியயுவாவாயிருக்கும் ஸ்ரீய:பதியினிருப்பிடம் என்பதாக எவ்வாறு கொள்வது? ஆழ்வார் சொல்லுவதைக்கொண்டு, அஃது அவர்காலத்துக்கு முந்திச் சுப்பிரமணியன் கோயிலாகவும், அவர்காலத்திலே ஹரிஹரன்கோயிலாகவு மிருந்ததென்றுமாத்திரங் கொள்ளவிடமுள்ளதேயொழியப் பெரியவாச்சான்பிள்ளைகள் வியாக்கியானம் பொருந்தவேயில்லை (1).

இவையன்றிக்கே, வைஷ்ணவர்களாலியற்றப்பட்ட (2)நவீனமானவேங்கடேசமஹாத்மியத்திற் குறித்திருக்கும் வாமன புராணத்திலுங்கூடச் சுப்பிரமணியன் தாரகாசுரனைக்கொன்ற தோஷம் போகு நிமித்தம் வேங்கடேசனைக்குறித்துத் தவஞ்செய்தானென்று கூறியிருக்கிறது. இதற்கேற்ப 'குறமகளிராடும்வேங்கட' மென்று பேயார் வர்ணித்திருப்பதில் 'குமரன்வேட்டவம்சத்தினர்க்கு இருப்பிடம்' என்பது தொனிப்பதையும் காண்க. இஃதன்றிக்கே திருமலையிலுள்ள சுவாமிபுஷ்கரணியிலேயே, குமாரதீர்த்தம் என்பதும் உள்ளது என்பார்கள். ஆகவே சுப்பிரமணியன் பெயர்திருமலையுடன் ஏதோஒருவாறு சம்பந்தப்பட்டிருக்கவேண்டுமென்பது யார்க்கும் தோன்றுதிராது.

---

(1) ஆழ்வார்காலத்துக்கு முந்திச் சுப்பிரமணியன்கோயிலாகவும், அவர்காலத்தில் ஹரிஹரன் கோயிலாகவுமிருந்து, சிலப்பதிகாரத்தின் காலத்து, சுத்தவைஷ்ணவமாயிருந்திருப்பின், சிலப்பதிகாரம் ஆழ்வார்காலத்திற்குப்பிற்பட்டதென்னலாம் என்பது வெட்டென விளங்கும். ஆதலால் முதலாழ்வார்கள் காலம் நிர்ணயிக்கப்படின் இக்காவியத்தின் காலம் ஒருவாற்றால் துணியப்படும். இவ்வழியாய்ச் சிலப்பதிகாரத்தின் காலத்தைக்கண்டுபிடிப்பின்,இது முதல்கஜபாஹுகாலத்ததா அன்றி இரண்டாவன்காலத்ததாவென்னும் சங்கை மாறுமென்பதற்கு ஐயமில்லை.

(2) இது மாத்திரமே யன்றி, எல்லா ஸ்தலபுராணங்களும் பிற்காலத்துண்டானவை யென்பதற்குச் சிறிதேனுந்தடையில்லை.

சிறிதேனும் இடமின்றியிருப்பின் சைவர்கள் தம்கோயிலென்று இராமாநுஜர்காலத்தே வாதித்திரார்கள். இவைகளை யெல்லாம் ஐயரவர்கள் ஒருவாற்றானும் மறுக்காது விடுத்ததற்கு யாது காரணமோ விளங்கவில்லை. இவைகளுக்கும் சமாதானஞ் சொல்லிவிடின், அவர்களுடைய சித்தாந்தம் முற்றமுழுதும் நிலைபெறுமென்பதை யுத்தேசித்து, அவர்கள், தம் நுண்ணறிவைச்செலுத்துவாராக.

து. அ. கோபிநாதராவ்,

சென்னை.

உ

சிவமயம்.

இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்.

எதிர்கோட்படலம்.

கங்கைநீர் நாடன் சேனை மற்றுள கடல்களெல்லாஞ்
சங்கின மார்ப்ப வந்து சார்வன போலச் சாரப்
பங்கயத் தணங்கைத் தந்த பாற்கட லெதிர்வ தேபோன்
மங்கையைப் பயந்த மன்னன் வளநகர் வந்த தன்றே

என்னும் ூ-ம் செய்யுளில், 'மங்கையைப் பயந்த மன்னன் வளநகர் வந்ததன்றே' என்பது 'மங்கையைப் பயந்தமன்னன் சேனைவந்தெதிர்ந்த தன்றே' எனக்காணப்படுகின்றது. ஏனைய கடல்களைப் பாற்கடல் எதிர்வதுபோலத், தசரதன்சேனையைச் சனகன்சேனை எதிர்ந்ததெனக் கூறுதலே சிறப்புடைத்தாதலின் 'மங்கையைப்பயந்தமன்னன் சேனைவந்தெதிர்ந்ததன்றே' என்பதேபொருத்தமுடைத்து. முன்னும், 'கந்தடு களிறுந் தேருங் கலினமாக் கடலுஞ்சூழ' (ச - ம் செய்யுள்) எனவும், பின்னும், 'மாறிலாமதுகையான் வருபெருந்தானைமே-லூறுபேருவகையானனிகம் வந்துற்றபோது' (கூ-ம் செய்யுள்) எனவும் அனிகத்தையே கூறுதல் காண்க.

ஷ

காதலோ வறிகிலேங் கரிகளைப் பொருவினர்
தீதிலா வுவகையுஞ் சிறிதரோ பெரிதரோ
கோதைசூழ் குஞ்சியங் குமரர்வந் தெய்தலுந்
தாதையா தொத்ததத் தானையின் றன்மையே.

என்னும் ௩௦-ம் செய்யுளில், 'தாதையாதொத்ததத்தானையின் றன்மையே' என்பது 'தாதையோடொத்ததத்தானையின்றன்மையே' எனக்காணப்படுகின்றது. 'தாதையாதொத்தது' என்பதற்குப் பொருள் கொள்ளுமிடத்து இடர்ப்பட்டுக்கொள்ள வேண்டியிருத்தலினாலும், அங்ஙனங்கொள்ளுமிடத்துப்பொருள்சிறவாமையாலும் 'தாதையோடொத்தது' என்பதே பொருத்தமுடைத்து. குமரர்வந்தெய்தலும் தாதைக்கு எத்துணைக்காதலும் மகிழ்ச்சியுமிருந்தவோ, அத்துணைக்காதலும் மகிழ்ச்சியுமிருந்தன சேனைக்குமென்பதாம்.

உலாவியற்படலம்.

களிப்பன மதர்ப்ப நீண்டு கதுப்பினை யளப்ப கள்ள
மொளிப்பன வெளிப்பட் டோடப் பார்ப்பன சிவப்புள்ளூற
வெளுப்பன கறுப்ப வான வேற்கணா ளொருத்தி யுள்ளங்
குளிர்ப்பொடு காண வந்தாள் வெறுப்பொடு கோயில் புக்காள்.

என்னும் ௧௬-ம் செய்யுளில் 'கள்ள—மொளிப்பன' என்பது 'கன்ன—மொளிப்பன' எனக்காணப்படுகின்றது. 'வெளிப்பட்டோடப்பார்ப்பன' எனப்பின்வருதலின் முன்ஒளித்திருந்ததென்பது பெறப்படுதலின் 'கன்னமொளிப்பன' என்பதே பொருத்த முடைத்து. 'வெளிப்பட்டோடப்பார்ப்பன' என்பதற்கு, அப்புறப்பட்டு ஓட அல்லது உருவப்பார்ப்பன எனப்பொருள் கோடல் இத்துணைச்சிறப்பின்று. கன்னம் என்பது ஈண்டுப் புருவக்கடையை.

ஷ

அருப்பு மென்முலை யாளங்கொ ராயிழை
இருப்பு நெஞ்சினை யேனுமொ ரேழைக்காப்
பொருப்பு வில்லைப் பொடிசெய்த புண்ணியா
கருப்பு வில்லிறுத் தாட்கொண்டு காவென்றாள்.

எனனும் ௩௨ - ம் செய்யுளில், 'இருப்புநெஞ்சினை யேனுமொரேழைக்காப்-பொருப்புவில்லைப்பொடிசெய்தபுண்ணியா — கருப்புவில்லிறுத்தாட்கொண்டு காவென்றாள்' என்பது 'இருப்புநெஞ்சினராயுமொரோழைக்காப் - பொரு

ப்புவில்லைப் பொடிசெய்த புண்ணியர் - கருப்புவில்லிறக் கற்றிலரோவென்றாள்' எனக்காணப்படுகின்றது. முன்னும் பின்னும் இராமபிரானைப்பட ர்க்கையாகவே வைத்துக்கூறுதலானும், அத்துணைப்பெருமையும் வன்மையும் படைத்தபொருப்புவில்லை முரித்தவர் இத்துணைச்சிறுமையும் மென்மையும் படைத்த கருப்புவில்லை முரிக்கப்படித்திலரோ என்னும் ஓர் அலங்காரப்பொருடருதலானும் பின்னையதே பொருத்தமுடைத்து. இருப்புநெஞ்சையுடையராயிருந்தும் ஒருபெண்ணுக்காக (இரக்கமுற்று) பொருப்புவில்லைப் பொடிசெய்த புண்ணியர் (என்னையெய்துதொலைக்கு மாரனுடைய) கருப்பு வில்லை இறுவிக்கப் படித்திலரோ என்றாள்என்பதுபொருள். இறஎன்பதில் விவ்விகுதி தொக்குநின்றது. இருப்புநெஞ்சினராயும் என்றது தன்னையன்பு செய்யாமை பற்றி.

ஷ

தொய்யில் வெய்ய முலைத்துடி போலிடை
நையு நொய்ய மருங்குலொர் நங்கைதான்
கையு மெய்யு மறிந்திலள் கண்டவ
ருய்யு முய்யு மெனத்தளர்ந் தோய்வுற்றாள்.

என்னும் நகூ - ம் செய்யுளில், 'நையுநொய்யமருங்குலொர்நங்கைதான்' என்பது 'நையநொய்தின்வருந்தியொர்நங்கைதான்' எனக்காணப்படுகின்றது. 'துடிபோலிடை'எனமுன்வந்தமையின் பின்னும் இடையைக் கூறுதல் வழுவாய்முடியுமாதலின் 'நையநொய்தின் வருந்தி' என்பதே பொருத்தமுடைத்து.

கோலங்காண்படலம்.

பரந்தமே கலையுங் கோத்த பாதசா லகமு நாகச்
சிரஞ்செய்நூ புரமும் வண்டுஞ் சிலம்பொடு சிலம்பி யார்ப்பப்
புரந்தரன் கோற்கீ ழானே ரரம்பையர் புடைசூழ்ந் தென்ன
வரம்பறு சும்மைத் தீஞ்சொன் மடந்தையர் தொடர்ந்து சூழ்ந்தார்.

என்னும் உக-ம் செய்யுளில் 'புரந்தரன் கோற்கீ ழானே ரரம்பையர்புடைசூழ்ந்தென்ன' என்பது 'புரந்தரன்றனக்குற்றாளை யரம்பையர் புடைசூழ்ந்தென்ன' எனக்காணப்படுகின்றது. 'புரந்தரன் கோற்கீழானே ரரம்பையர்' என்பதிற் சிறிதும் பொருட்சிறப்பின்மையின் 'புரந்தரன்றனக்குற்றாளை' என்பதே பொருத்தமுடைத்து. புரந்தரன்றனக்குற்றாள்— இந்திராணி. இந்திராணியை அரம்பையர் புடைசூழ்ந்தாற் போலச் சீதாபிராட்டியை மடந்தையர் புடைசூழ்ந்தார் என்பது கருத்து. இன்னும் 'வரம்புறுசும்மைத்தீஞ்சொன்மடந்தையர்' என்பது 'வரம்பறுமழலைத்தீஞ்சொன்

மடந்தையர்' எனக்காணப்படுகின்றது. (சும்மை) என்பதிலும் 'மழலை' என்பதே பொருத்தமுடைத்தாதல் காண்க. வரம்பறு மடந்தையர் என ஒட்டுக.

௵

துன்றுபுரி கோதையெழில் கண்டுலகு சூழ்வந்
தொன்றுபுரி கோலொடு தனித்திகிரி யுய்ப்பா
னென்றுமுல கேழுமர செய்தியுள னேனு
மின்றுதிரு வெய்தியது வென்னவய மென்றான்.

என்னும் ௩௩-ம் செய்யுளில், 'இன்றுதிரு வெய்தியது வென்னவய மென்றான்' என்பது 'இன்றுதிருவெய்தியதெமக்கெனநினைத்தான்' எனக்காணப்படுகின்றது. 'என்னவயமென்றான்' என்பதிற் பொருள்சிறவாமையின் 'எமக்கெனநினைத்தான்' என்பதே பொருத்தமுடைத்து. பின்னையதில் இசைச்சிறப்புண்மையுங் காண்க.

௵

அச்சென நினைத்தமுத லந்தண னிருந்தான்
பச்சைமலை யொத்தபடி வத்தட லிராமன்
நச்சுடை வடிக்கண்மலர் நங்கையிவ ளென்றா
லிச்சிலை கிடக்கமலை யேழையு மிறுனே.

என்னும் ௩௪-ம் செய்யுளில், 'அச்செனநினைத்தமுதலந்தணனிருந்தான்—பச்சைமலையொத்தபடிவத்தடலிராமன்—நச்சுடைவடிக்கண்மலர்நங்கையிவளென்றால்' என்பது 'அச்சிலையுணர்ந்தமுதலந்தணனினைத்தான்-பச்சிலையையொத்தபடிவத்தடலிராம-னச்சிலையயிற்கண்மலர்நங்கையிவளென்றால்' எனக்காணப்படுகின்றது. வசிட்டனே, முன்னரேயே பிராட்டியைக் கண்டு வியந்ததாகக் கூறியிருத்தலின், இச்செய்யுட்கருத்தை விசுவாமித்திரன் கூறியதாகக்கோடலே சிறப்புடைத்தாதலின், அதற்கியைய 'அச்சிலையுணர்ந்தமுதலந்தணனினைத்தான்' எனக்கோடலே பொருத்தமுடைத்து. அச்சிலையுணர்ந்தமுதலந்தணனென்றது விசுவாமித்திரனை. அச்சிலையைப்பற்றி முன்னறிந்திருந்த முனிவன்என்பது பொருள். இப்பொருட்கு முதலென்பதை உணர்ந்தவென்பதனுடனியைக்க. இச்செய்யுட்குப் பொருளுரைக்குமிடத்து இராமன் மலர்மங்கை என்றறிந்தால் இறுனே (என) விசுவாமித்திரன் நினைத்தான் எனக்கூட்டி யுரைக்க. இஃதன்றி இன்னும் இச்செய்யுள் ௩௩-ம் செய்யுளின்பின்னே காணப்படுகின்றது. இதன் முதற்செய்யுளில் 'தாதையருகிட்டதவிசிற்றனியிருந்தாள்' என்பது இதனுடனியையாமை

யானும், இதன் பிற்செய்யுளுடனியைதலானும், இதுவும் மூன்னும் இயை யாமையானும் அதன்பின் வருதலே பொருத்தமுடைத்து.

கடிமணப்படலம்.

கனையேழ் கடல்போற் கருநா ழிகைதான்
வினையேன் வினையால் விடியா விடனீ
தனியே பறவாய் தகவே துயிலாய்
பனைமே லுறைவாய் பழிபூ ணுதியோ.

என்னும் ௫-ம் செய்யுளில் 'கனையேழ்கடல்போற்கருநாழிகைதான்' என்பது 'நனியேழ்கடல்போல்வருநாழிகைதான்' எனக் காணப்படுகின்றது. எழ்கடல்போன்ற இராக்காலம் என்னுமிடத்துக் கருதிய பொருள் இனிது புலப்படாமையால் 'நனியேழ்கடல்போல்வருநாழிகை' என்பதே பொருத்தமுடைத்தென்க. எழ்கடல்போல் (ஒன்றன்பின்னொன்றாக) மிகவருகின்ற நாழிகை என்பது பொருள். நனிவரு என்க. விரகிகளுக்கு ஓர் நாழிகை ஒருழிபோலிருத்தலி னிங்ஙனங் கூறினர்.

(இன்னும் வரும்.)

சி. கணேசையர்.

உ

தமிழிலக்கவரலாறு.

ஸ்ரீகுரோதிஞு ஐப்பசிமாசத்துச் "செந்தமிழ்"ப் பத்திரிகையிலே ஸ்ரீமத்: து. அ. கோபிநாதராவ் M. A. அவர்கள் "தமிழிலக்கவரலாறு" என வொருவிஷயம் வெளியிட்டார்கள். அதிலே சோப கிருதுஞு மாசிமாசத்துச் செந்தமிழ்ப்பத்திரிகையில் தமிழிலக்கத்தைக்குறித்தெழுதப்பட்ட விஷயம் முழுதும் ஆதாரமில்லாக்கூற்றென்றும், சாசனவாராய்ச்சியாற் றமக்குள்ள துணிவைக்கொண்டு தமிழிலக்கங்களின் சரித்திரத்தைச்சுருங்கக்கூறுதும் என்றும் ராயரவர்கள் றுதலிப்புகுந்தார்கள். அங்ஙனம் புகுந்தவர்கள் தமிழிலக்கங்களின் சரித்திரத்தை ஒருசிறிதுங்கூறுறு, தாங்கண்ட இந்திய சாசனங்களுள்ளே அசோகன்சிலாலிகிதமே பழைய தெனவும்,

அதற்குப்பிற்பட்டது கற்கோயிற்சிலாலிகித மெனவும், அதற்குப் பிற்பட்டது திருநாதர்குன்றுச் சிலாலிகித மெனவும், அதற்குப் பிற்பட்டது பல்லவசாசன மெனவும், அதற்குப்பிற்பட்டது சோழர்காலமென்றும், அதற்குப் பிற்பட்டது பாண்டியர்கால மென்றும் அது, கி. பி. 13-ம் நூற்றாண்டென்றும், அதற்குப் பிற்பட்டது வித்தியாநகர ராஜாக்கள் காலமென்றும், "இவ்வெவ்வேறுகாலங்கள் தோறும் இலக்கங்கள் எவ்வாறு மாறிவந்தனவென்பதை முறை முறையே அடுத்தபக்கத்திற் காட்டிய படத்தால் தெள்ளிதாயறியலாம்" என்றுங்கூறி அப்படத்தையுந்தந்து முடித்தார்கள்.

இதுவே ராயரவர்கள் தமிழிலக்கங்களின் சரித்திரத்தைச்சுருங்கக்கூறியவாறும்.

இவ்வளவோடமையாது "இந்தியாவில் வழங்கும் எல்லா அக்ஷரங்களும் அசோக ராஜாவின் காலத்து வழங்கிய அக்ஷரங்களின் திரிபு" எனவும் வரைந்துவிட்டார்கள்.

தமிழிலக்கவரலாறு என்ற விஷய நாமத்தைக் கண்டலும் அதன்வரலாறெல்லாம் சாங்கோபாங்கமாக வரப்போகின்றதெனக் கழிபேருவகைபூத்த யாம் அவ்விஷயத்துட் புகுந்தபோது இலவு காத்த கிள்ளையாயினேம்.

சிலாசாசனமின்றிக் கூறப்படுவதெல்லாம் ஆதாரமில்லாக்கூற்றென்பது ராயரவர்கள் மதமாயின் யாம் மேற்கூறக்கிடப்பது யாதுமில்லை. அசோகன் காலத்து இலக்கங்களும் அக்ஷரங்களும் அவனுக்கு முன்னரில்லாது அவன் காலத்திலேயே ஆக்கிக்கொள்ளப்பட்டனவென்பதற்குச் சிலாசாசனமுளதோ? அசோகன் காலத்திற்கு முன்னர் வழங்கிய இலக்கங்களும் அக்ஷரங்களுமே அவன் காலத்தில் வழங்கப்பட்டனவாகாவோ? அவன் காலத்தில் தமிழிலக்கங்களும் அக்ஷரங்களும் இல்லாதன வென்பதற்கு ராயரவர்கள் காட்டுஞ் சிலாசாசனம் யாது? ராயரவர்கள் மதப்படி முதன் முதல் அசோகனே சிலாசாசனம் செய்வித்தானாக. அவன் தனக்கு முன்னரில்லாத இலக்கங்களையும் அக்ஷரங்களையுந் தானே சிருஷ்டித்தான் என்பது எதனாற்றுணியப்பட்டது? அசோகன் கலிங்கதேசத்தை

வெற்றிகொண்ட காலத்தில் அங்குச்சென்று வழங்கிய தமிழிலக்கங்களைக் கவர்ந்தானென்னல் சாலாதோ?

இதுகாறுங் கண்ட இந்திய சிலாசாசனங்களுள்ளே பழையது அசோகன் சிலாசாசனமென்பது ராயரவர்கள் கூற்று. அசோகன் இற்றைக்கு இரண்டாயிரத்து நூற்றிருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னே விளங்கிய அரசன் என்பது யாவருமறிவர். இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முற்பட்ட அஃதாவது அசோகனுக்கு இருநூறுவருஷங்களுக்கு முற்பட்ட சிலாசாசனமொன்று நேபாளத்தருகேஅகப்பட்டதும்அதன் 'போட்டோகிராவ்' படத்தைக்கொண்டியற்றிய பிரதிலிபி யொன்று 'Encyclopædia Britanica' புதியபதிப்பில் வெளியிடப் பட்டிருப்பதும் ராயரவர்கள் அறிந்திலர்போலும். இதனால் ராயரவர்கள் அசோகன் காலத்துச் சிலாசாசனமே பழையதென மேற்கொண்டது பொருந்தாமை காண்க.

பல்லவராஜாக்கள் காலத்துக்குப் பிற்பட்டது சோழர்காலமென்பதும் அதற்குப்பிற்பட்டது பாண்டியர் காலமென்பதும் ராயரவர்கள் கொள்கை. இவ்விஷயத்தில் ராயரவர்கள் தாங்கற்ற இந்துதேச சரித்திரத்தை அடியோடுமறந்தாராவர். அசோகன்காலத்துக்கு முற்றொட்டு வருகின்ற சேரசோழபாண்டியர் காலத்தை நோக்காது சேரசோழபாண்டியராச்சியங்களுண்டாய பின்னர்ப் பன்னெடுங்காலஞ்சென்றுண்டாய பல்லவராச்சியத்தைச் சோழராசாக்களுக்கு முற்பட்டதென்பதும் சோழருக்குப்பிற்பட்டபாண்டியர்காலமென்பதும் பிரபௌத்திரன் பிரபிதாமகன் கல்யாணத்திற் றும்பூலம்வழங்கின கதையின் வேறுகாவன்றோ!

தமிழ் நூல்களுள்ளே தொல்காப்பியம் முதற்சங்கத் திறுதிக் காலத்ததன்றோ. இடைச்சங்கத்திற்கும் கடைச்சங்கத்திற்கும் நூலாயிருந்ததும் அதுவே யன்றோ. எப்படிக் குறைக்கினும் தொல்காப்பியந் தோன்றிய காலம் ஐயாயிரம் வருஷங்களுக்கு முற்படுமேயன்றி உட்படாது. அதிலே தமிழ் எழுத்திற்கு வரி வடிவு கூறப்பட்டுக் கிடத்தல் யாவருமறிவர். அது ராயரவர்கள் மேற்கொள்ளும் சிலாலிகிதத்தினுஞ் சிறந்த வச்சிர லிகிதமன்றோ. அங்ஙனமாகவும்

தமிழெழுத்துக்கள் இற்றைக்கிரண்டாயிரத்து நூற்றிருபத்தைந்து வருஷங்களுக்கு முற்பட்ட அசோகன் காலத்து அக்ஷரங்களினது திரிபு என்பது ராயரவர்களுக்குச் சாத்தியமாவது எங்ஙனம்? எவ் விஷயத்தையும் சிலாலிகிதங் கொண்டே சாதித்தல் வேண்டுமென் பது ராயரவர்கள் அபிமதமாயின் தொல்காப்பியஞ் செலாலிகிதமாக.

தமிழிலக்கங்கள் தமிழுக்கே உரியவென்பதை இன்னும்வற்புறுத்துவாம். தமிழ் என்னும் பெயர்ச்சொற்களெல்லாம் தமிழ்ச் சொற்களே யன்றிப் பிற பாஷைச் சொற்களல்ல. அதுபற்றியே அச்சொற்களெல்லாம் தொல்காப்பியத்தில் ஒவ்வொன்றாக வெடுத்து விதந்து இலக்கணங் கூறப்பட்டனவாம். தொல்காப்பியத்துள் விதந்தெடுத்துக் கூறப்பட்ட சொற்களுள் பிறபாஷை மொழி ஒன்றேனு மில்லாமையே போந்த சான்றாம். அவ்வெண்களுள்ளே ஒன்பது தொண்ணூறு தொளாயிரமென்பனவற்றின் பொருள்படப் பிற பாஷைகளில் அவ்வெண்களை விளக்கி வருஞ் சொற்கள் இல்லையன்றோ. ஒன்பது என்பது ஒன்றொழிபத்து. தொண்ணூறு என்பது பத்தொழிநூறு. தொளாயிரமென்பது நூறொழி ஆயிரம். அவற்றுள் ஒன்பதன் குறியாகிய இலக்கம் வலப்பக்கத்தே ஒன்றன் குறியையுடைய் பத்தின் குறியாகிய 'புள்ளியாமன்றோ. பத்தின் குறி பத்தை விளக்க வலப்பக்கத்தேயுள்ள ஒன்றன்குறி ஒன்றை யொழிக்க இரண்டுங்கூடி ஒன்றொழிபத்தென ஒன்பதன் குறியாய் நின்று அச்சொல்லை இனிது விளக்கல் பிரத்தியக்ஷமன்றோ. ஆதலின் அவ் விலக்கம் தமிழுக்கே உரியதென்பதற்கு வேறு சான்று வேண்டா.

ஒன்பது தொண்ணூறு தொள்ளாயிரம் என்பனவற்றின் பொருளுக்கு ஒத்துள்ளன, நம்மறிவுக் கெட்டிய வரையில், ரோமன் இலக்கங்கள் மாத்திரமேயாம். அவை IX., XC., CM., என்பன. அவை முறையே ஒன்றொழிபத்து, பத்தொழிநூறு, நூறொழி ஆயிரம் எனப்பொருள் தரும். ஆயினும் அவற்றை யுணர்த்துஞ் சொற்களுக்கோ அப்பொருளில்லை.

தமிழிலே ஒன்று முதலிய எண்களுக்கு மாத்திரமன்று கால், அரை, முக்கால், அரைக்கால், காணி, அரைக்காணி, பாகாணி, மா, இருமா, முந்திரி முதலிய கீழ்வாய் எண்களுக்கு மிலக்கமுள்வன்றோ.

அக்கீழ்வாயெண்ணுப்பெயர்களுந் தமிழ்ச்சொற்களேயன்றோ. அவைகளை வடமொழியிற்றானும் இத்தனையிலொரு அமிசமென்று வழங்குவதன்றி தனித்தனிச் சொல்லாற் குறித்து வழங்குமாறில்லை. தமிழிலக்கங்கள் அசோகன் காலத்து எண்களின்றிரிபெனக் கூறும் ராயரவர்கள் தமிழ்க் கீழ்வாயிலக்கங்களுக்கும் அசோக இலக்கங்களையே மூலஸ்தான மாக்குவார்கள் போலும். தமிழ்க் கீழ்வாயிலக்கங்களுக்கிணையான இலக்கங்கள் இந்திய பாஷைகளுள் மற்றைப் பாஷையிலும் இதர தேச பாஷைகளிலும் இல்லையன்றோ. தமிழர் மேல்வாயிலக்கங்களைப் பிறபாஷைபாற் பிச்சையேற்றவராயின் கீழ்வாயிலக்கங்களையும் அப்பாஷையினிடத்தேயே ஏற்றாராகற்பாலர். அங்ஙனம் பிச்சையீந்த பாஷை ஒன்றின்மையான் மேல்வாயிலக்கங்களும் அக்கீழ்வாயிலக்கங்களைப் போலவே தமிழுக்கேயுரியவாதல் நன்கு துணியப்படும்.

தமிழிலக்கங்களும் கீழ்வாயெண்களும் தமிழுக்கேயுரியவென்பது அவை பண்டைத்தமிழ்ச்செய்யுட்கண்ணும் எடுத்தாளப்பட்டு வருதலானும் இனிது நாட்டப்படும். அச்செய்யுட்கள் வருமாறு:—

திருமூலர்.

"எட்டுமிரண்டு மினிதறிகின்றிலர்."

திருவாசகம்.

"எட்டினோ டிரண்டு மறியேனையே"

ஒளவையார்.

"எட்டேகால் லக்ஷணமே யேமைந்து மைப்பரியே"

காளமேகம்.

"எட்டொருமா வெண்காணி மீதே யிருந்ததலை
பட்டொருமா நான்மாவிற் பாய்ந்ததே"

"முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
யிருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
யொருமாவின் கீழரையின் றோது"

இன்னும் தமிழுக்கிலக்கணஞ்செய்த தொல்லாசிரியர் தாமே எழுத்தை ஒலியெழுத்தென்றும் வரியெழுத்தென்றும் இருவகைப் படுத்தி வரியெழுத்திற்கும்,

" கட்புல னில்லாக் கடவுளைக் காட்டுஞ்
சட்டகம் போலச் செவிப்புல வொலியை
யுட்கொளற் கிடுமுரு பாம்வரி யெழுத்தே "

என இலக்கணங்கூறிப் போந்தாரன்றோ. இலக்கியங்கண்டதற்கிலக்கணமியம்பலே முறையாமாதலின் அவ்விலக்கணஞ்செய்யு முன்னரே தமிழ்எழுதப்பட்டு வந்ததென்பது மறுக்கொணுவுண்மையாம். அப்பண்டைக்காலத்தேதானே தமிழ் எழுத்துக்களுக்கு வரிவடிவமைத்துக்கொண்ட தமிழர், தமிழெண்களுக்கு இலக்கம் பிறர்பாற் பிச்சையேற்றுரென்பது திருமகள் இரந்துண்டாள் என்பதோடொக்கும்.

இனி ராயரவர்கள் தந்த படத்தின்மாட்டுஞ் சிறிதாராய்வாம். அப்படத்தைப் பலவீடுகளாக வகுத்து முதல்வீட்டை அசோக எண்களுக்காக்கி ஆங்கிருத்தியஎண்கள் ஒன்றும் ஆறுமேயாம். இவ்விரண்டுமே தமிழிலக்கங்கள் பத்துக்கும் வித்தாமென்பது ராயரவர்கள் கொள்கையாம். அவ்விரண்டுஞ் சர்வவல்லமையுடையனவோ அன்றி ஆணும்பெண்ணுமோ அன்றிச்சக்தியுஞ் சிவமுந்தாமோ அறிகிலம். அவற்றின் சரித்திரத்தைக் கூறப்புகுந்த ராயரவர்கள் அவ்விரண்டிலக்கங்கள் இவ்வியல்புடையன இன்னஇன்னகாலத் தின்ன இன்ன இலக்கங்களை ஈன்றனவெனக் கூறுதொழிந்தது சுருங்கக் கூறல் என்னும் வனப்புப்பற்றியேபோலும்.

இத்துணையுஞ்செய்த சங்கோத்தரங்களுக்கு ராயரவர்கள் எம்மை முனியார்களாக.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

ஸ்ரீ:

வானசாஸ்திரம்.

காப்பு வெண்பா.

சோதிமலி மண்டலச்சீர் துன்னியொளிர் சாத்திரத்தை
யோதுதமிழ் வாசகத்தா லோதுவிக்கும்—வேதவகை
செந்தமிழிற் பாடியவன் செஞ்சரணம்: மாதமொளிர்
'செந்தமி'ழ் ஞேங்குமது தேர்.

சூரியன் முதலிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் ஆகாயமண்டலத்தில் சோதிவடிவமாய் விளங்குகின்றன. இச்சோதிமயமான கிரகங்கள் முதலியவைகளைப்பற்றிக்கூறும் சாத்திரத்தை வடநெறியார் சோதிச்சாஸ்திரம் அல்லது சோதிடம் என்று வழங்கிவருகின்றார்கள். எனவே ஒளிவடிவமான கிரக நக்ஷத்திரங்களைப்பற்றிய சாஸ்திரம் சோதிடமெனப்படுகின்றது. இச்சாத்திரம் வேதாங்கங்களிலொன்றாய் வைதிகநெறியிலுள்ளார்க்கு இன்றியமையாததொன்றாகின்றது. இதில் சூரியனைப்பற்றிய மார்க்கத்தைச் சவுரமானமென்றும் சந்திரனைப்பற்றிய மார்க்கத்தைச் சாந்திரமானமென்றும் வழங்கிவருகின்றார்கள். சூரியனது மேடாதிலக்கினப் பிரவேசகாலத்தை மாதமெனக்கொளல் ஸவுரமான மாதம். சந்திரன் அமாவாசைக்கப்புரம் கலைகளை ஏற்கும் காலம்முதல் மாதமெனக்கொளல் சாந்திரமானம். வைதிகநெறியில் இரண்டுமார்க்கங்களும் நடைபெறினும் திதி நக்ஷத்திரங்களைப் பகுத்துணர நம்மவர்க்கு விசேஷமாய்ப் பிரத்தியக்ஷ ஏதுவாய் விளங்குவது சாந்திரமான நெறியேயாம். இராக்காலங்களில் நாம் நமதுகண்களால் நேரிற்பார்த்துணரலாம். ஸவுரமானவிதி இப்படிப் பகுத்துணரத்தக்கதன்று. யந்திரசாதனையின்றி முடியாது.

2. இச்சோதிட சாத்திரத்துள் மூன்று பிரிவுகள் உண்டு. ஸம்ஹிதையென்பது அவைகளுக்குப் பொதுப்பெயர். கிரகங்களின் கமனகமனங்களை விளக்குமதைத் தந்திரசாஸ்திரமென்று வழங்கி வருகின்றார்கள். இதற்குத்தான் வானசாஸ்திரமெனப்பெயர். மற்றொரு பிரிவிற்கு ஹோரா சாஸ்திர மெனப்பெயர். இப்பெயர் அகோராத்திர மெனும் தொடர்மொழியில் முதலிலும் கடையிலு

முள்ள எழுத்துக்களை நீக்கி நடுநின்ற ஹோரா வெனு மக்ஷரங்களைக் கொண்டு உண்டாக்கிய அபிதானமாகின்றது. இதுவும் ஓர்வகைப் பிரத்தியாகாரம் போலும். இராத்திரிப் பகல்களைப்பற்றிய சாத்திர மென்பதே இதன் பொருள். பகல் அல்லது இராவில் ஒரு குழந்தை பிறந்தால் அது முன் ஜன்மத்திற் செய்த புண்ணிய பாபங்களைப் பிறந்தது முதல் அனுபவிக்கவேண்டியதாகின்றதென்றும் அந்த நல்வினை தீவினைகளின் பலனைக்காட்டுவதுதான் ஹோராசாஸ்திர மென்றும் வராகமிகிரர் விளக்கியுள்ளார். மூன்றுவதுபாகத்திற்கு அங்கவிநிச்சய சாஸ்திரமெனப் பெயர். ஜாதகம் எழுதிக் கிரக நிலையைக் காட்டல் விவாகம் யாத்திரை முதலியவைகளுக்குக் கால நிர்ணயஞ் செய்தல் முதலியன மூன்றும் பாகத்தின் விஷயங்களாம்.

3. இவ் வானசாஸ்திரத்தில் முதல் நூல் செய்தவர் ஐவர். 1 புலிசர், 2 ரோமகர், 3 வஸிஷ்டர், 4 சூரியன், 5 பிதாமகன் என்பவர்களே. இந்நூல்கள் கூறும் விதிகளின்படி கிரகங்களின் கதிகளைக் கணக்கிடும்போது வித்தியாசங்கள் நேரிடில், கிரகச்சாயையையும் தண்ணீர் மட்டத்தையும் பார்த்துக்கொண்டு கருவிகளைக்கொண்டு அயனங்களின் முடிவுக்காலத்தையும் கிரகங்கள், பரிசோதிப்பவருக்கு நேர்கிழக்காகவா, அல்லது உச்சமாகவா, நிற்கின்றனவென்பதையும் பார்த்துக்கொண்டு அந்த வித்தியாசங்களை நீக்கிச் சரிபார்த்துக் கொள்ளலும் வேண்டும். ககோள சாஸ்திர மென்பது வான சாஸ்திரத்திற்கு மற்றொரு பெயர். ஆகாச மண்டல மென்பது அதன் பொருள். நாம் வாழு மிவ்வுலகத்தைப் படைக்கும் பிரமதேவனே இச்சாத்திரத்தைப் படைத்துள்ளானென்றால் இச்சாத்திரத்தின்பழமையை நாம் நிரூபித்தல் மிகையாம். சூரியனும் பிதாமகனைப் போற் பழமையானவனேயாம். மற்றைய மூவராம் வஸிஷ்டர், புலிசர், ரோமகர்களும் பண்டைக்காலத்து முனிவர்களேயாம். இதனால் ககோளமெனும் இந்த வானசாஸ்திரம் இந்துக்களின் புராதனமாய் நடைபெற்ற தென்பது நிர்விவாதமானதேயாம். இந்த ஐவர்களன்றி வேறு பிறரும் நூல்கள் செய்துள்ளார். அந்நூல்களாவன :—

க. சோம சித்தாந்தம்.

உ. வியாஸ சித்தாந்தம்.

௩. போஜ சித்தாந்தம்.
௪. வராக சித்தாந்தம்.
௫. சுந்தரர் சித்தாந்தம்.
௬. ஆரிய சித்தாந்தம்.
௭. சித்தாந்த சிரோமணி.

இவைகளுந் தலைமைபெற்ற நூல்களே. சித்தாந்த சிரோமணி பாஸ்கராசாரியார் செய்த நூல். செய்த காலம் கி. பி. 1150-ஆம் (சாலிவாகன சகம் 1072.) சாலிவாகன சகம் 1036-ல் அவர் பிறந்துள்ளார். தமது 36-வது வயதில் இச்சிரோமணிநூலைச் செய்தனர்.

4. வான சாஸ்திர விஷயங்கள் புராணங்களிலும் காணப்படுகின்றன. ஜனங்கள் வழங்கி வந்த கருத்துக்களை நம்பிப் புராணஞ் செய்தோர் கூறியுள்ளாராதலின் அவர்கள் சொல்லும் பௌராணிகமதம் பிழையுள்ளதேயாம். ஏனெனில் அவர்கள் பூமி அசைவற்றிருக்கச் சூரியன் பூமியைச் சுற்றி ஓடலால் இராப்பகல்கள் உண்டாகின்றன என்பதும் சந்திரனைப் பார்க்கிலும் சூரியன் பூமிக்குச் சமீபத்திலிருக்கிறான் என்பதும் அவர்கள் கொள்கைகளாம். வான சாஸ்திர ஆராய்ச்சியும் காட்சிப் பிரமாண அனுபவமும் இல்லாமல் இக்கருத்துக்களுண்டாகி நடைபெறுவதாற் பிழையேயாம். இவை நமது நாட்டு வான சாஸ்திரிகளின் கொள்கைகளுக்கே மாறுபாடு உடையனவாம்.

5. வான சாஸ்திரம் வெகு பூர்வீக காலந்தொடங்கி இந்தியாவில் வழங்கி வருகின்றது. மேற்றிசைத் தேசங்களில் இச்சரித்திரம் கண்டுபிடிக்கப்படும் முன்பே இந்தியாவில் வழங்கி வந்தது. நம்மவர் சுயராஜரீகத்தை இழந்துவிட்டபடியாலும் பராக்கிரமபாண்டியன் காலத்தில் மகம்மதியரும் வேறு புறநாட்டார்களும் நமது நாட்டிற் படையெடுத்து ஏராளமான பொருள்களைக் கவர்ந்து சென்றதுமன்றிக் கலைஞானபுஸ்தகங்களையும் நிர்மூலமாக்கி விட்டபடியாலும் வானசாஸ்திர சம்பந்தமாயுள்ள நமது புராதன நூல்கள் அழிந்து போயின. ராஜரீகம் ஒழியவே அவ்வகை சாஸ்திர ஆராய்ச்சியும் விருத்தியும் உண்டாக வழியில்லாது அம்மார்க்கம் ஓய்ந்து நின்று

*

விட்டது. எகிப்து, கல்தேயா, சீனு முதலிய நாட்டிலுள்ளார் முற்காலத்தில் அநேக மெய்ச்சம்பவங்களையும் காட்சிப்பிரமாண அறிவையும் கணித விதிகளையும் முறைகளையும் அறிந்திருந்தார்கள். அறுபது வருடச்சக்கரத்தைக் கிறிஸ்து பிறக்க 2900-வருஷங்களுக்கு நெடுநாளைக்கு முன்பே சீனர்கள் ஏற்படுத்தியுள்ளார். இஃதன்றி அவர்கள் கி. மு. 2128-வருஷங்களில் கல்தேயர் 19-வருஷ சக்கரத்தைக் கொண்டு ஏற்படுத்தும் கிரகணங்களைக் கணிக்கும் விதத்திலும் வல்லவராயிருந்தார்கள்.

6. சித்தாந்த சிரோமணியில் பாஸ்கராசாரியார் சந்திரனும் புதனும் சுக்கிரனும் சூரியனும் செவ்வாயும் வியாழனும் சனியும் பூமியைச் சுற்றி ஓடுகின்றன வென்று சொல்லியிருப்பதால் கிரகவரிசையின்படி சந்திரனே கிட்ட இருக்கின்றானென்பது விளங்குகின்றது. பூமி சூரியன்களின் இடம்மட்டும் மாறியிருக்கின்றதேயன்றி மற்றைக் கிரகங்களின் நிலை ஐரோப்பியர்களின் சாஸ்திரத்தோடுசரியாகவே இருக்கின்றது. ஐரோப்பியர் சாஸ்திரப்படி சூரியனைச் சுற்றிப் பூமியோடுங்காலம் 365 நாள்களும் 5 மணியும் 48 நிமிஷமும் 48 நொடியுமாகிய ஒரு வருஷகாலமென்று சொல்லப்படுகின்றது. நமது சாஸ்திரத்தின்படி சூரியன் 12 இராசிகளிலும் செல்லும் காலம் 365 நாள்களும் 6 மணியும் 12 நிமிஷமும் 29 நொடியுமாகிய ஒரு வருஷகாலமெனப்படுகின்றது. நியாய சோதனைவகை வெவ்வேறாயினும் வருஷமெனுங் காலக்கணக்கை இருதிறத்தாரும் சற்றேறக்குறையச் சரியாகவே கணிதம் செய்துள்ளார். வித்தியாசமோ 24 நிமிஷங்களே யாம்.

7. கிரேக்க தேசத்துக் கலாநிபுணர்களான பைதாகோரஸ், பிளேற்றோ,முதலினோர் பூமி கோளவடிவுள்ளதாய்த்தனது நாராசத்தில் நாள்வீதச் சுற்றுள்ள தென்றும் சூரியனைச் சுற்றி வருஷாந்திரச் சுற்றோட்டமுடைய தென்றும் சந்திரக்கிரகணம் பூமிச் சாயையாலுண்டாகின்ற தென்றும் எண்ணிய கொள்கையார். இவர்களிற் சிலர் பூமி கோளவடிவமுள்ளதாயினும் யாதோராசைவுமின்றிப் பிரமாண்டத்தில் நிலையாய் நிற்கின்ற தெனவும் வேறு சிலர் பூமி தட்டை வடிவெனவுஞ் சாதித்தனர். பைதாகொரஸ் என்பவரின் கோட்

பாடு கட்புலக்காட்சிக்குமாறுகொண்டிருப்பதால் எகிப்தியகலாவல்லவராம் "தொலிமி" என்பவர் அதை நிராகரித்துப் பூமி அண்டத்தின் நடுவே இருக்கின்றதென்றும் சூரியன் முதலிய வானச்சோதிகள் அதைச் சுற்றி ஓடுகின்றனவென்றும் நிரூபித்தனர். இதைப் புருஷிய தேயத்து கொப்பணிகஸ் என்பவர் சுமார் 1400-வதில் மாற்றிக் கூறினர். அவர் 30-வருஷகாலம் மகாஜாக்கிரதையாய் வானசாஸ்திரத்தைக் கற்றுணர்ந்து மண்டல வரிசையை யதார்த்தமாய்க் கண்டு பிடித்தாராம். பிரமாண்டத்தின் நடுவிலே சூரியன் நிற்கப் பூமி யதைச்சுற்றி யோடுகின்றதெனவும் பூமி தனது நாராசத்திற் சுழல்வதால் இராப்பகலுண்டாகின்றவெனவும் நிச்சயித்தார். இதுவே யதார்த்த சாஸ்திரமென அங்கிலேயரும் மற்றைய ஐரோப்பியரும் அங்கிகரித்திருக்கிறார்கள். இராகு கேதுக்கள் சாயாக்கிரகங்கள். மற்றைய ஏழு கிரகங்களும் சூரியன் முதல் சனி வரையிலுமுள்ளவைகளே யாம். இவைகளே வாரத்தின் ஏழு நாளுக்குரிய கிரகங்கள். எந்நாட்டிலும் இந்த வாரக் கணக்கு நடைபெறுவதால் ஆதியில் உலகம் படைக்கப்பட்ட காலம் தொடங்கி மனிதர்கள் எத்தேசத்திலும் சோதிமண்டலங்களையே தெய்வமென வணங்கி வழிபட்டு வந்தனரெனத் தோற்றுகின்றது. கிரகங்களின் ஓட்டத்தையும் அவைகளின் அயனாகாரத்தையும் ஐரோப்பியவானசாஸ்திரிகள் நிதானித்தறிந்தும் கிரகங்களை இயக்கும் காரணமும் சத்தும் என்னவென்பதை அக்காலத்திலறிய வில்லையென்றும் அக்காரண சத்துக்களை ஸ்ரீ. "ஐஸாக்கு நியூற்றன்" என்பவர் முதலிற் கண்டு பிடித்தாரென்றும் கூறுவது ஐரோப்பியர்களின் துணிபு.

8. கிரகங்களின் ஓட்டத்திற்கு மூலாதாரகாரணம்திண்மைக்கவர்ச்சியேயாம். ஐஸாக்குநியூற்றன் பிறப்பதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே இதனை நம்மவர் அறிந்துள்ளாரென்பதற்குச் சித்தாந்த சிரோமணியேஆதாரம். "பூமிக்குதிண்மைக்கவர்ச்சி சகஜமாயுள்ளது. இக்கவர்ச்சியால் அந்தரத்திலுள்ள வஸ்துக்களைப் பூமி தன்வசமிழுக்கின்றது. வஸ்துக்கள் விழுவதாய்த் தோற்றுவது பூமியாலிழுக்கப் படுந் தன்மையையே. ஆகாயம் எங்கும் விரிந்திருக்கையில் பூமிவிழுவதெங்ஙனம்?" இது 3-ம் அத்தியாம் 6-ம் சுலோகத்தின் கருத்து.

9. இத்தகைய சிறப்புவாய்ந்த வானசாஸ்திரத்தின் மகிமையை நம்மவர் பார்த்துக் களிப்பது இகபரசுகத்திற்குக் காரணமாம். மாசில்லாத இரவில் சந்திரன் பூரணகலைகளுடன் உதித்து விளங்குகையில் நட்சத்திரசோதியையும் ஆகாயமண்டலத்தின் காட்சி மகிமையையும் பார்த்துக் களிக்காத மானிடர்கள் யாருமில்லை. கம்பன், காளிதாசன் முதலிய கவிகளின் சந்திரசூரியோதய வருணனைகளைக் கேட்டுக் களிப்பவர்களுக்கு அவ்வானச் சோதிகள் உதயாத்தமன காலத்தில் விளங்கும் தோற்றம் ஆன்மஞானிகளையும் மயக்குமென்றால் உலகிலுள்ள சாதாரண மனிதர்கள் கண்டு தினந்தோறுங் களிப்பதைக் கூறலும் வேண்டுமோ! தெய்வவல்லமைகள் அப்போது மனதை உருக்கும். இக்காலத்து நம்மையாளும் அங்கிலேயர்கள் இச்சரித்திரத்தை நன்காராய்ந்து தக்க கருவிகளைக் கொண்டு பரிசோதித்து விருத்தி செய்திருக்கின்றார்கள். ஆராய்ச்சிவகையாலவர்கள் கண்டுணர்ந்த உண்மைகளைக் காலநிலைகருதி நம்பவர்கள் பார்த்துக் களிக்க இச்சரித்திர சம்பந்தமான விஷயங்களை இனி மாதந்தோறும் மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையின் வாயிலாக நம்மால் எழுதி வெளியிடப்படும். இங்ஙனம்,

தி. வேங்கடராம ஐயங்கார்,
தலைமைத் தமிழ் பண்டிதர்.
சென் தோம் காலேஜ், சென்னை.

திருவெள்ளறைச்சாஸநங்கள்.

திருவெள்ளறைக்கிராமம், திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே 8 மைலில் இருக்கிறது. இது, ஆழ்வார்களிற், பெரியாழ்வார் திருமங்கையார் இவ்விருவராற் பாடப்பெற்ற விஷ்ணு க்ஷேத்திரம். பூர்வசிகைப் பிராமணர்களுக்குப் பிரதான இருப்பிடம். இவ்வினத்தாருட் பலர் இராமானுஜாசாரியர்காலத்து வெகுபிரபல வித்துவான்களாயிருந்ததோடுங்கூட, விசிஷ்டாத்துவைத மதத்துப்பூர்வாசாரியர்களுமானார்கள். இப்பொழுது இவ்வூர்வித்தைவிஷயத்தில் அவ்வளவு

சிறப்புற்றதாயில்லை. இச்சிறு கிராமம் கரடுகளின் இடைகளிற் கட்டப்பட்டிருப்பதைக் காணின், இவ்வாறே இருக்கும் பலஜைன க்ஷேத்திரங்களின் ஞாபகம்வராதிராது. இவ்விடத்தில், ஒரு பிரபல விஷ்ணு கோயிலும், அசிரத்தையாய்க்கிடக்கும் ஒரு சிவாலயமும், இதற்குத் தெற்கில் இடிந்துபாழாய்க்கிடக்கும் மற்றொரு கோயிலும் இருக்கின்றன. இவற்றுள், விஷ்ணுகோயிற்பெருமாளுக்கு புண்டரீகாக்ஷர் அல்லது செந்தாமரைக்கண்ணர் என்றும், நாச்சியாருக்குப்பங்கயச்செல்வி யென்றும் பெயர். இக்கோயில் ஒரு சிறு பாறையின் மேல் கட்டப்பட்டிருக்கிறது. இப்பாறையில், புண்டரீகாக்ஷர் கோயிலினடியில், ஒரு பெரிய குடைவரைக்கோயிலொன்றிருக்கிறது. அதில் சுவாமிகள் ஒன்றும் இல்லை. ஆகையால் பூஜையுமில்லை. இக்குடைவரையைக்குறித்து:— "கல்லறைமேல் வெள்ளறையாய்" என்று திருமங்கையார் புண்டரீகாக்ஷர் கோயிலைப் புகழ்ந்திருப்பதும் காண்க. காஞ்சிபுரத்து அருளாளப்பெருமாள் கோயிலின் கர்ப்பக்கிரஹத்துக்கு ஒரு பிரதியென்னலாம்படியாயிருக்கிறது, திருவெள்ளறை விஷ்ணு கோயிற் கர்ப்பக்கிரகம். அவ்விடத்தைப்போலவே இவ்விடத்திலும் ஒரு 'மலை' மேற் கோயில்கட்டப்பட்டிருக்கிறது. அவ்விடத்து மலைக்கு அஸ்திகிரியென்று பெயர் என்பது எல்லாருக்கும் தெரிந்ததே; இவ்விடத்துமலைக்கு 'ஸ்வேதாத்திரி' என்று பெயர். இதில் மூன்றுபிராகாரமிருக்கின்றன. முதலிரண்டின் சுவர்களின்மேற் பல கல்வெட்டுக்களுள. இவைகளில் அநேகம் வேண்டுமென்றே பொத்தி அழிக்கப்பட்டிருக்கின்றன; ஆகையால் வாசிக்கக்கூடாமலிருக்கின்றன. இவைகளைத்தவிர்ந்துள்ள சில படிக்கக்கூடிய சாஸநங்கள் அவ்வளவு புராதனமானவைகளல்ல. கீழ்க்கல்லறையிலிருக்குந்தூண்களிற் சில, ராஜகேசரிவர்மனுடையவும் மதுரைகொண்ட கோப்பரகேசரிவர்மனுடையவும் சாஸநங்களாய்; இவைவெகுவாய்அழிந்துகிடக்கின்றன. இங்குமங்குஞ் சிலஎழுத்துக்கள் காணப்படுகின்றனவேயொழிய சாஸனம் முழுவதும் வாசிக்கமுடியாமலழிந்துபோயின.

இவ்விரண்டு கோயில்களைப்பார்க்கிலும், சாஸனபரீக்ஷகர்களுக்கு முக்கியமானது சிவன் கோயிலே. இதில் அநேக புராதன சாஸனங்களிருப்பதுந்தவிர இவையெல்லாம் வெகு நல்லநிலையிற் கெடா

பலிருக்கின்றன. இவைகளிற் பதினறு சாஸனங்கள் அடியிற் பதிப்பிக்கின்றோம்.

மேற்கூறிய சிவன்கோயிற்குத் தெற்கில் ஒரு பாழ்ங்கோயிலிருக்கிறது என்று முன்னமே சொன்னோம். அதன் சுவரிலும் சில சாஸனங்களிருக்கின்றன. இக்கோயிலைச்சுற்றி நாகதாளி காடாய்முளைத்திருப்பதால் பரீக்ஷிக்கக்கூடவில்லை. சாஸந பரீக்ஷக உத்தியோகஸ்தர்கள் இவ்விடங்கட்குப்போய்ச் சாஸநங்களை ஆராயவில்லை. சிவன் கோயில் ஒன்றிவ்விடமுண்டென்பதும், அதிற் புராதன சாஸனங்களிருக்கின்றனவென்பதும் இவர்களுக்கு இனிமேற்றான் தெரியவேண்டுவதுபோலக்காணப்படுகிறது. இக்கோயிலுக்கு இதன் சாஸநங்களால் 'திருவானைக்கல்' என்று பெயரிருந்ததாக விளங்குகிறது. இப்பெயரையொட்டி இப்பொழுது இதிலிருக்கும் ஈசுவரனுக்கு ஜம்புநாதனென்றும், கோயிலுக்கு ஜம்புகேசுவரமென்றும் பெயர்வழங்குகின்றன, (திருவானைக்காவென்பதைப்போல).

இச்சாஸநங்களிற் கூறியிருக்கும் மதுரைகொண்ட கோப்பரகேசரியென்னுமரசன் திருவிசைப்பாவில்,

"வெங்கோல் வேந்தன் றென்னனாடு மீழங்கொண்டதிறற்
செங்கோற்சோழன் கோழிவேந்தன் செம்பியன் பொன்னணிந்த
வங்கோல் வளையார் பாடியாடு மணிதில்லை யம்பலத்து
ளெங்கோ னீச னெம்மிறையை யென்றுகொ லெய்துவதே."

என்று கண்டராதித்தராற் புகழப்பட்டவனும்,

"ஈழமுந்தமிழ்க்கூடலுஞ்சிதைத் திகல்கடந்தேதோரிசைபரந்ததும்"

என்று கலிங்கத்துப்பரணியிற் பாடப்பெற்றோனுமேயாவன். இவனையே சாஸநங்களிற் பலகாலும் "மதுரையும் ஈழமும் வீரபாண்டியன் முடித்தலையும் கொண்டருளியே கோப்பரகேசரி" யென்றுகூறியிருத்தல் காணலாம். (1)

பத்தாவது சாஸநம் ஒரு பல்லவ சாஸநம். இச்சந்ததியரசர்கள் பாரத்துவாஜகோத்திரத்தாரொன்று சொல்லிக்கொள்ளுவதைத்

(1) சோழவம்சசரித்திரம் சீக்கிரமே என்னண்பர் ஒருவரால் தமிழில் வெளிவரும். அதில் இவ்வரசர்கள்விஷயமாய்ப் பரக்கக்காணலாம்.

"தென்னிந்தியா சாஸனங்கள்" என்னும் பத்திரத்தில் சொல்லியிருக்கிறது. இரண்டாவது வரியால் இதிற் கூறியிருக்கும் அரசன் பல்லவ வம்சத்தான் என்றுதெரிகிறது. இவ்வரசன் தந்திவர்ம்மனோ நந்திவர்ம்மனோ சொல்லமுடியவில்லை. இச்சாஸனத்தினிடப்பாதி, அம்மன்கோயில் அஸ்திவாரம்போட உத்தேசித்து வெட்டித்தள்ளிவிடப்பட்டிருப்பதால் கெட்டுவிட்டது.

இச்சாஸங்களிற் சிற்சில எழுத்து வேறுபாடுகளுள. அவற்றில் முக்கியமானது றை. இவ்வெழுத்து இரண்டு கொம்புகளுள்ள குறியையடையாமல், னை, ளை, லை, ணை—களிற் போன்ற குறியையுடைத்தாயிருக்கிறது.

சில வார்த்தைகளும் கவனிக்கத்தக்கவையே. "காத்தியாயினன்" என்னும் வடமொழி இச்சாஸநத்துள்ளொன்றில் "காச்சாணன்" என்றும், மற்றொன்றில் "காஸிபன்" என்பது "காச்சுவன்" என்றும் வந்திருக்கின்றன. அச்சாசனங்களாவன:—

(i)

திருவெள்ளறை அகிலாண்டநாயகி கோவிலுக்குத் தெற்கில் ஓர்கல்லின்மேற் காணப்படும் சாசனம்.

1 ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்ட கோப்பரகேசரிப—
2 ன்மற்கியாண்டு பதிநஞ்ஜந்தா [வ]-து இவ்—
3 வாண்டு திருவெள்ள [றை] திருவா [னை]க்கல்மா—
4 யிட்டியாயின நக்கன் மல்லன்
5 திருவானைக்கல் பெருமானடி—
6 களுக்கு திருநொந்த [ா] விளக்கு
7 இரவும் பகலும் எரிப்பதற்—
8 கு வைத்த பொன் முப்பதி[ன்] கழ—
9 ஞ்சு சந்த்ராதித [வல்] பன்மூலப
10 மூலபருடையாரமெக்ஷ

(இன்னும்வரும்.)

ச. ம. நடேசசாஸ்திரி.

ஸ்ரீ:

ஆ ரா ய் ச் சி.

கூத்தரும் குலோத்துங்கன்கோவையும்.

குலோத்துங்கன்கோவை ஒட்டக்கூத்தராற் பாடப்பட்ட தென்பது பலருங்கொண்ட கருத்தாகும். இவ்வாராய்ச்சிக்கு முன்னெல்லாம் யானும் அவ்வாறே கருதியதுண்டு. அங்ஙனங் கருதியதற்குக் காரணம் இக்கோவைப்பாட்டுப் பெற்றவனும் கூத்தர்பாடிய மூன்றுலாக்களுள் ஒன்று பெற்றவனும் குலோத்துங்கன் என்னும் பெயரேகொண்டிருத்தலும், "கோவையுலாவந்தாதிக்கோட்டக்கூத்தன்" என வழங்குதற்குப் பொருந்தக்காட்டுதற்குக் கூத்தர் பாடிய கோவை வேறறியப்படாமையுமேயாகும். சங்கரசோழனுலா என்னும் பழையநூற்கண்,

"கூடிய சீர்தந்த வென்றெடுத்த கூத்தனுலாச்
சூடிய விக்கிரம சோழனும்—பாடிய
வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனுந்—தெள்ளித்தன்
முன்னையகரிலவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன்னையிரஞ் சொரிந்த பூபதியு—மென்னுமிவர்."

எனவருதலாற் கூத்தரால் உலாப்பாடப்பட்டவர் விக்கிரம சோழன் முதலாக மூவர் என்பதும் அவருள் விக்கிரமற்குப்பின்னுண்ட சோழன் அக்கூத்தர்பாற் பிள்ளைத்தமிழ் மாலையும் பெற்றான் என்பதும் அறியப்பட்டன. கூத்தர் பாடிய மூன்றுலாவும் விக்கிரமசோழ தேவருலா, குலோத்துங்கசோழ தேவருலா, இராசராசசோழதேவருலா எனப் பெயர்பெற்றுலாவும். விக்கிரமசோழ தேவருலாவின் கண்,

"மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி—யறத்திகிரி
வாரித் திகிரி வலமாக வந்தளிக்கு
மாரிற் பொலிதோ ளபயற்குப்—பார்விளங்கத்
தோன்றிய சோன் விக்கிரமசோழன்"

எனவருதலான் விக்கிரமன் என்பான் அபயற்கு மகன் என்பது அறியலாகும். குலோத்துங்கசோழதேவருலாவில்,

"தவிராத சுங்கந் தவிர்த்தோன்—கவிராசர்
போற்றும் பெரியோ ரிவர்பின்பு பூதலங்க
ளாற்றுந் திருத்தோ ளகளங்கன்—வேற்றோர்
விரும்பரணில் வெங்களத்தி வேட்டுக் கலிங்கப்
பெரும்பரணி கொண்ட பெருமாள்—தரும்புதல்வன்
கொற்றக் குலோத்துங்கசோழன்"

எனவருதலாற் குலோத்துங்கசோழன் சுங்கந்தவிர்த்த சோழனாகிய அபயனுக்குமகனாகிய விக்கிரமனுக்குமகனாவன் என்று துணியலாகும். இதன்கண் விக்கிரமனைப் பரணிகொண்டபெருமாள் எனவும் அகளங்கன் எனவும் கூறினார். தந்தை சிறப்பை மகனுக்கேற்றிப் பரணிகொண்டபெருமாள் என விக்கிரமனையே புகழ்ந்ததாம். இதனை விக்கிரமசோழ தேவருலாவில்,

" ....போர்த்தொழிலா
லேனைக் கலிங்கங்க ளேழினையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே"

எனக் கலிங்கம்வென்ற சிறப்பை இவ்விக்கிரமனுக்கே யேற்றிக் கூறியதுபோலக் கொள்க. சோழர் குலமுதல்வனான சூரியன் களங்கமிலனாதல்பற்றி அக்குலத்துச் சோழர்க்கெல்லாம் அகளங்கன் என்பது பொதுவாக வழங்கப்படும். இப்பெயர் வழக்கம் விக்கிரமனைப்பற்றிய பாடல்களில் அதிகமாகக்காணப்படும். சுங்கந்தவிர்த்தவன் அபயனே என்பது "மறக்கலியுஞ்சுங்கமுமாற்றி" என்பதனால் நன்கறியப்பட்டதாகும். கலிங்கப்பெரும்பரணி கொண்டவன் சுங்கந்தவிர்த்த அபயனேயானாலும் ஈண்டுப் 'பெரும்பரணி கொண்ட பெருமாள்' என்றது அவ்வபயன் மகனையேயா மென்பது 'கவிராசர் போற்றும் சுங்கந்தவிர்த்தோன் இறுதியாகக்கூறப்பட்ட பெரியோர், இவர் பின்பு பரணிகொண்ட பெருமாள்' எனக்கூறியவாற்றானே தெளியப்படும். இராசராசசோழதேவருலாவின்கண்,

"கலகமுஞ் சுங்கமுங் காய்கலியு மாற்றி
யுலகைமுன் காத்த வுரவோன்—பலவுந்
தரணி யொருகவிகை தங்கக் கலிங்கப்
பரணி புனைந்த பரிதி—முரணில்

புரந்தர னேமி பொருவு மகில
துரந்தரன் விக்கிரம சோழன்—பரந்தபனென்
றுஎய் பெயர்கொண் டகிலாண்ட மும்புரந்த
சேஎய் பெரிய திருக்குலத்து—நாயகன்
சிற்றம் பலமுந் திருப்பெரும்பே ரம்பலமு
மற்றும் பலபல மண்டபமுஞ்—சுற்றிய
மாளிகையும் பீடிகையு மாடமுஞ் கோபுரமுஞ்
சூளிகையு மத்தெருவுந் தோரணமு—மாளுடையான்
கோயிற் றிருக்காமக் கோட்டமு மக்கோயில்
வாயிற் றிருச்சுற்று மாளிகையுந்—தூயசெம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைத்து
முன்னிற் கடல்களின் மூழ்குவித்த—சென்னி
திருமகன் சீராசராசன்"

எனவருதலான் இராசராசன் என்பான் சுங்கந்தவிர்த்த அபயன் மகனுனவிக்கிரமன் மகனும், சிற்றம்பலம் பேரம்பலம் காமக்கோட்டமுதலிய பெரிய திருப்பணியெல்லாம் இயற்றியோனு மாகிய குலோத்துங்கனுக்குத் திருமகன் ஆவன் என்பது தெளியப்படும். சிற்றம்பலமுதலிய பெரும்பணியெல்லாம் சிறக்க இயற்று வித்தோன் குலோத்துங்கனே யென்பதும் அவனியற்றுவித்த அப்பணிகள் இன்ன என்பதும்,

"தாதைக்குந் தங்கள் தபனற்குந் தோலாத
போதைத் திமிரப் பொறைநீக்கி—மாதரி
லோக்கவபிடேகஞ் செய்யு முரிமைக்கட்
டக்க நிலைமைத் தனித்தேவி—மிக்க
புவனி முழுதுடைய பொற்றொடியுந் தானு
மவனி சுரர்சுருதி யார்ப்ப—நவநிதிதோய்ந்
தேத்தற் கருங்கடவு ளேல்லையி லானந்தக்
கூத்தைக் களிகூரக் கும்பிட்டுப்—போற்றினமேற்
றில்லைத் திருமன்றின் முன்றிற் சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தொகுத்தெடுத்து—மல்லற்
றசும்பு வராகனிற் றண்பெரு நாவ
லசும்பு பசும்பொன் னடுக்கி—விசும்போ
ரலகை யிகந்த வகலகுல வச்ரப்
பலகை ததும்பப் பதித்து—மலர்கவிகை

காக்குங் கடலேழின் முத்தும் வரகங்கை
தூக்கு மருவியிற் சூழ்போக்கி—நோக்குந்
தொடுக்குஞ் சிரச்சேடன் சூளா மணிகொண்
டெடுக்குந் திருத்தீப மேற்றி—யடுக்கிய
தூய வயிரத்தால் வாவியாய்ச் சூழ்கிடந்த
பாய மாதகத்தாற் பாசடையாய்ப்—போய
பருமுத்தா லாலியாய்ப் பத்மரா கத்தாற்
றிருமிக்க செந்தா மரையாய்ப்—பெருவர்க்க
நீலத்தால் வண்டி னிரையா யுரையிகந்த
கோலத்தாற் கோயிற் பணிகுயிற்றிச்—சூலத்தா
னூடுந் திருப்பெரும்பே ரம்பலமுங் கோபுரமு
மாடம் பரந்தோங்கு மாளிகையுங்—கூடிப்
பொலங்கோட் டொைமேருப் பூதரமும் போல
வலங்கோட் டிகிரியு மானத்—தலங்கொ
ணிலையேழ கோபுரமும் விண்மே னெருங்கு
மலையேழு மென்ன வகுத்துத்—தலையின்
மகரங்கொள் கோபுரமு மானவி மானச்
சிகரங்க ளாகித் திகழ—நிகரி
லெரிபொற் படர்பாறை யென்னலா யெங்கும்
விரிபொற் றிருமுற்ற மின்னச்—சொரிபொற்
கடாரம்பன் னீர கவினிக் கனபொற்
றடாகங்க ளாகித் ததும்ப—விடாதுநின்
றற்பக லாக வனந்த சதகோடி
கற்பக சாதி கதிர்த்துவரப்—பொற்பூண்
வாமகளிர் தத்தம் பணிமுறைக்கு வந்து
சுரர்மகளி ராகத் துவள—வொருதான்
பிறக்கு மிமையப் பெருங்கடவுள் வெற்பை
மறைக்கும் படிசெல்வ மல்கச்—சிறக்கும்
இருக்காதி யெம்மறையு மெவ்வுலகு மீன்றாள்
திருக்காமக் கோட்டந் திகழ்த்தி—வருக்கப்
புனையா மணியாலும் பொன்னாலு மின்ன
மனையா வொருதேர் வகுத்து—முனைவன்
றிருவீதி யீரிரண்டுந் தேவர்கோன் மூதூர்ப்
பெருவீதி நாணப் பெருக்கி—வருநாளில்"

எனக் குலோத்துங்கசோழ தேவருலாவின்கண் விரித்துரைத்தவாற்ருல் அறிந்துகொள்க. இதனையே கூத்தர் தக்கயாகப்பரணிக்கண்,

'கூட மெடுத்த குளத்தொடு கோபுர
மாட மெடுத்த பிரான்மகன் வாழியே'

'கோயின்முன் னேழ்நிலை கொண்டதோர் கோபுர
வாயில் வகுத்த பிரான்மகன் வாழியே'

'எண்டரு திக்கினிற் றில்லையி னேர்பெறு
மண்டபம் வைத்த பிரான்மகன் வாழியே.'

என எடுத்துக்கூறியுள்ளாரென்பதும் உணரப்படும். கோயில் முன் ஏழ்நிலைக்கோபுரம் வகுத்த பிரான் மகன் என இதன்கண் வருதலானே கூத்தர் தக்கயாகப்பரணி பாடிய காலத்தவன் இராசராசன் என்பதும் தெளியலாகும். "நிலையேழு கோபுரமும் விண்மே னெருங்கு, மலையேழு மென்ன வகுத்து" எனக் குலோத்துங்கசோழதேவருலாக்கண் வந்தவாற்ருனே இதனைத் தெளிக.

இத்துணையுங்கூறியவாற்ருற் கூத்தராற் பாடப்பட்ட குலோத்துங்கன் சுங்கந்தவிர்த்த அபயன் பேரனும் விக்கிரமன் மகனும் இராசராசன் றந்தையும் ஆவன் என்பதும், அவனே சிற்றம்பலம் காமக்கோட்ட முதலிய கோயிற் பெரும்பணியெல்லாம் இயற்றுவித்தோன் என்பதும் கூத்தர்பாற் பிள்ளைத்தமிழும் உலாமாலையும் பெற்றனன் என்பதும் அறியலாகும்.

இனிக் குலோத்துங்கன் கோவைக்கட் கூறப்பட்ட குலோத்துங்கன் இன்னவன் என ஆராயுமிடத்து அக்கோவை நூற்கண்ணே,

[உ. துறை - ஐயம்]

சங்கமராச குலோத்துங்கசோழன் றமிழுறந்தைத்
துங்கன் வழிமுத லோனிட மோவவன் சூழிடமோ
வங்கவ னுக்கிரு ணீங்கிட மோவன்றி நண்பிடமோ
கொங்கவி ழுங்குழ லாட்கிட மேதெனக் கூறுவமே.

[சுங. துறை - கலவியின்மகிழ்தல்]

தேனுர் கடலுந் திருப்பாற் கடலுந் திரைபுரண்டொன்
ருனுலத் தன்மையத் தன்மைய தாமகி லாண்டமெலாங்
கோனுதுஞ் சங்கரன்றன்னேன் குலோத்துங்கன் கோழிவெற்பின்
மானுரும் யானு மணந்தவிப் பேரின்ப மாக்கடலே.

[௩.அ. துறை - மயங்கல்]

தேனுந் துவர்க்கும் பசுங்பாகுங் கைக்குமத் தீங்கரும்பு
தானும் புளிக்குங் கனிகளுங் காருந் தசைமுகன்முற்
கூனுஞ் சிலைக்கைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
லீனுந் தளிர்நிறத் தாளிதழ்த் தேனுண்ட வென்னிதழ்க்கே.

எனவருதலான் அவன் சங்கமராசசோழன் மகன் எனவும் சங்கரசோழன் அண்ணன் எனவும் குமாரகுலோத்துங்கன் எனப் பெயர்பெற்றவன் எனவும் தெளியலாகும். சங்கரன் என்பான் சங்கரசோழனுலாப் பாட்டுடைத்தலைவன். அவ்வுலாவிலே—

"சங்கமன் ஷுல்லைத் தவம்போல......
வல்லமனுதி மனுவினு மேதக்க
நல்லம னென்கின்ற நாயகற்கும்......
பைத்த பொருபுலியை பல்கோடி வேந்தணிய
வைத்த குமார மகீதரற்கு—மெய்த்துணையாத்
தோற்றிய சங்கர ராசன் சுரராசன்"

எனவருதலாற் சங்கமன் என்பானுக்கு நல்லமன் குமாரமகீதரன் சங்கரன் என மூவரும் புதல்வராவர் என்பது தெளியப்படுதலின் கோவைக்கட் குமாரகுலோத்துங்கன்எனப்பட்டானும்சங்கரசோழனுலாவிற் குமாரமகீதரன் எனப்பட்டானும் ஒருவனே யென்று நன்கு துணியப்படும். 'சங்கரன்சடையன்' 'ஆதித்தன் கம்பன்' என்றாற் போலச் சங்கமராசன் மகனான குலோத்துங்கனைச் சங்கமராச குலோத்துங்கன் என வழங்கினாரெனத் தெரிந்துகொள்க. இவற்றாற் கூத்தருலாப்பெற்ற குலோத்துங்கனும் கோவைப்பாட்டுடைத் தலைவனான குலோத்துங்கனும் வேறு வேறாதல் நன்குதெளிக. சங்கரசோழனுலாவுடையார்,

"முன்னு யகரிலவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன்னுயிரஞ்சொரிந்த பூபதியு—மென்னுமிவர்
மாசக்ர மேரு வலஞ்சென் மகாசல
பூசக்ர மேழும் புரந்ததற்பின்...... ..
சங்கமன் ஷுல்லைத் தவம்போல"

என கூத்தர் பாடிய மூன்றுலாப்பெற்ற இராசராசன் முதலாகிய பலர்க்குப் பின்னே சங்கமராசனைக்கூறி அவனுக்குப்புதல்

வர்கள் குமாரகுலோத்துங்கன் முதலியோர் என்று தெளிவித்தலாற் கோவைப் பாட்டுடைத்தலைவனான குமார குலோத்துங்கன் கூத்தருலாப்பெற்ற குலோத்துங்கனுக்கு மிகவும் பிற்பட்டவனாவனென்பது உணரப்படும். கூத்தர் விக்கிரமன் காலத்தவர்; அவ்விக்கிரமன் பேரனான இராசராசன் காலத்துக்குப் பிற்பட்டுமிருந்தாரென்றல் சிறிதும் பொருந்தாதாதலின் இராசராசன்காலத்துக்கு மிகப்பிற்பட்டிருந்த சங்கரராசன் மகனான குமாரகுலோத்துங்கனை அவர் கோவையாற் பாடினரெனக் கொள்ளுதலும் இயையாமை காணப்படும். மற்றுக் "கோவையுலா வந்தாதிக் கொட்டக்கூத்தன்" எனக் கூத்தரைக்கோவையாற் சிறப்பித்தலுண்டேயெனின், அஃது அவர் புதுவைக்காங்கேயன் மேற்பாடிய *நாலாயிரக்கோவை பற்றியாமெனவுணர்க. இது 'சோலாகல மன்னரில்' என்னுஞ் சோழமண்டல சதகச்செய்யுளானும் அதன் மேற்கோள்களானும் நன்குணரப்பட்டது.

இனி இக்குலோத்துங்கன்கோவைக்கட் பலவிடத்தும் குமார குலோத்துங்கன் எனக்கூறுதலாலும் சங்கர சோழனுலாவிற் குமார மகீதரன் எனவே வழங்குதலாலும் இவனது கோவைப்பாட்டை "குமாரகுலோத்துங்கன் கோவை" என ஆளுதலே இயையுடைத்தாமெனத் தோற்றுகின்றது. இக்கோவைக் காலமுஞ் சங்கரசோழனுலாக்காலமும் ஒன்றேயாமென்பது அவ்விருநாற்றலைவரும் உடன்பிறந்தவராதல் பற்றிக் கொள்ளப்படும். இவ்வாராய்ச்சியாற் கூத்தருக்கும் குலோத்துங்கன்கோவைக்கும் யாதோரியையும் இன்மை தேறப்படும்.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

---

* "செந்தமிழ்"த் தொகுதி-ந., பகுதி-க, பக்கம்-ஈ, கூ, உஎ.

கூகூ. விசைய மனக்கமலம் விண்டசைய வெண்டிக்
கசைய வசையவசைந் தாடித்—திசைகவிந்த

க00. விண்புதையத் தூபத்தால் விண்ணோர் மலர்மழையான்
மண்புதையத் தேவியொடும் வந்தேறி—யொண்புணரிப்

க0க. பூசை யுவந்திங்குப் போந்தோனுக் கங்குதித்த
வாசை மதிநிழற்று மாறென்ன—வீசு

க0உ. மவிகை தொடநின்று ரண்டத் தளவுங்
கவிகை நிலவு கதிப்ப—வவியா

க0ஈ. விரிவிழித்தீக் கொண்டெய்யும் வேளிறப்ப வின்ன
மெரிவிழித்தீ மூட்டுமா றென்னக்—கருவிழிகள்

க0ச. வேலால மொத்தார்கள் வெண்கவரி வீசவிரு
பாலால வட்டம் பணிமாற—வேலை

க0ரு. தருகொடியை மார்பகத்துத் தண்புயத்து ஞாலத்
தொருகொடியை வைத்தகொடி யோங்க—விருமருங்குஞ்

க0சா. சேயோ ரிருவர் திருவா குவுமயிலு
மேயோ ரிருவ ரிருபுள்ளுங்—காயு

க0எ. மருக்க ரிரதமீ ராறு முடிவெள்
ளெருக்கர் பதினோ ரெருது—மருத்துவராய்

க0அ. நீடிருவ ரெண்மர் நிலாவொருவ ரைம்முனிவ
ரோடிருவர் மானமீ ரொன்பதும்—பாடுமிரு

க0கூ. காரிப் பெயரோர் கருணா ளியுங்களிறும்
வாரிப் பணையோன் மலைக்காலு—மோரெட்டு

கக0. வேந்தர் கரிவருடை மேதி நரர்மகரம்
பாய்ந்த கலைபுட் பகமேறு—மூர்ந்துவர

ககக. நாகர் கருடர் நவசித்தர் கிம்புருடர்
போக ரியக்கர் பொறியுரக—ராகநறுந்

ககஉ. தாமப்பூந் தேனூற் றலங்குழையக் கீழ்வீழ்ந்த
வேமப்பூண் கொள்ளரிய தென்றேக—வாமத்

ககஈ. தருவி வரைப்பிறந்த வன்னத்தின் முன்னு
மருவிய கங்கை மருங்குற்—திருமகளு

ககச. மண்மகளு நாமகளும் வான்மகளு மூன்றுதிருக்
கண்மகளும் பொற்றிகிரிக் கைமகளுந்—திண்மை

(பா - ம்) கூகூ. 'திசைகவித்த' க0ச. 'ஒத்தார்கை'
க00. 'வந்தேறிப்—பெண்புரியும்' கக0. 'நரமகரம்'
க0க. 'வாசிமதி'

௧௧௫. யெழுமா தருந்நீர்த் தெண்ணின்மின் ஞரும்
தொழுமா தரவினராய்ச் சூழக்—குழையின்

௧௧௬. மிசைத்தேன்செவ் வந்தியின் வெண்டோட்டு வண்டோ
டிசைத்தே னிருவ ரிறைப்ப—விசித்த

௧௧௭. குடமுழவு துந்துமி கொக்கரை தக்கை
தடமுழவு பேரி தடாரி—நடமுருடு

௧௧௮. கல்ல வடமொந்தை கல்லலகு சல்லரி
வல்ல படகம் வளை தாள—நல்யா

௧௧௯. ழுகடு சிறியதுடி யாதிய வான
முகடு மதிர முழங்க—பகுடத்

௧௨௦. தலையன் கொணரத் தருநாட்டி னும்பூ
வலையந் தனில்வந்தான் வந்தான்—கலியி

௧௨௧. னுகத்துக் கரிய வொருமறையோ னம்பர்
மகத்துக்கு முன்வந்தான் வந்தான்—சகத்தோர்

௧௨௨. தனையளவு காணாத தாளாற் பரவை
மனையளவு போய்வந்தான் வந்தான்—முனைவர்

௧௨௩. தெரிசனசிங் காதனத்தே செம்பொற் றியாகம்
வரிசை தரவந்தான் வந்தான்—சிரமிழந்த

௧௨௪. மாய னுயிர்திருப்ப வந்தான்வந் தானெனமுன்
சேய திருச்சின்னஞ் சேவிப்ப—வாயிற்

௧௨௫. சிறுகு மெழுகடலித் தேர்ப்பவனிக் கென்ன
மறுகு புரள வரலும்—குறுகித்

௧௨௬. திருமாலை முன்சேரச் சேர்த்தமைக்குச் செல்வி
வருமால யத்துமட வாரு—மரிமகனை

௧௨௭. நிந்தித் துமையா ளிடுஞ்சாப நீக்கியது
சிந்தித் தவனூர்த் தெரிவையரும்—வந்தொருவன்

௧௨௮. மேனகையை முன்சபித்த வெண்ணரையின் போக்கறிந்து
மானகரிற் பொன்னாட்டு மங்கையரு—நான்முகற்கி

௧௨௯. யாக முடிய விடையிலொரு பெண்புணர்த்த
போக மகிழ்ந்தவனூர்ப் பூவையரு—மேக

௧௩௦. வொருவிஞ் சையன்விடத்தூ தோதினே னென்ன
வருவிஞ் சையர்மாத ராரும்—புரிசைவட

(பா : ம்) ௧௧௭. 'நடைமுருடு' ௧௨௮. 'மேனகையைச் சாபித்த'
௧௨௨. 'முனிவர்' ௧௩௦. 'ஓதினேனென்றென்று'

கஙக. வாயிலா னீலகண்டப் பாணர் வரவழைத்த
சாயலார் கந்தருவத் தையலரும்—போயிறைஞ்ச

கஙஉ. வேதர் துலைத்தலையின் மேற்படியென் றிப்படியின்
மாதர் தொகையின் வகையோரு—நாதன்

கஙங. களத்திருளை வெல்லக் கணங்கூடு கின்ற
வளத்திருளைப் போலளகம் வாய்ப்ப—முளைத்திங்கட்

கஙச. கோடி யெனவெமையுங் கொள்ளுமென்று சென்றவெனக்
கோடிய நெற்றிக் குலமிலங்க—வோடி

கஙரு. யிடமா னெனத்தமையு மேந்துமெனப் போந்த
மடமா னெனக்கண் மதர்ப்ப—வுடனே

கஙசு. நறையமுத மிங்கிருக்க நஞ்சுண்ட தென்னென்
றறைவ தெனக்கனிவா யாடப்—பெறுவேயும்

கஙஎ. வேய்முத்துந் தத்தமக்கு மெய்யுறவா வெய்தியென
வாய்முத்துந் தோள்வேயும் வந்தெறிப்பக்—காமித்து

கஙஅ. வைத்த தலைவி வருமரபி யாமென்று
மொய்த்த மலைபோன் முலைபணைப்பக்—கைத்தலத்தே

கஙகூ. மன்னுந் துடிபோன் மகிழ்ந்துதொடு மெங்களையு
மென்னுந் துடிபோ லிடைநுடங்கத்—தென்னாரு

கசO. ரானந்தர்க் கெம்மை யணிந்துய்ந்தா ருண்டென்று
தேனந்தக் கஞ்சந் தெளிர்ப்பதெனப்—பானு

கசக. நிழற்றும் பருவ நிறத்தா மரைக்கை
மிழற்றுங் குருகுவாய் விம்ம—வெழிற்றெருவு

கசஉ. மன்று மணிமதிலு மாடமு மாடகச்செய்
குன்று முழுகக் குழாமீண்டி—நின்றிருபாற்

கசங. பொங்கும் பகிரதியும் பூத்தலைய திங்களுந்
தங்கும் பவளச் சடைக்காடு—மெங்குஞ்

கசச. சிவந்த திருநுதலுந் திக்கிருளை நக்கி
நிவந்ததிரு நீற்று நிலாவும்—பவந்தொலைய

கசரு. வவ்வந்திப் போது மதிமுகமு முக்கண்ணுஞ்
செவ்வந்தித் தோடுந் திருக்காதுஞ்—சைவமுடன்

கசசு. வேத மணக்குர் விழச்செங் கனிவாயுஞ்
சீத முறுவற் சிறுமுகிழ்ப்பூ—மூதண்டர்

(பா - ம்) கஙஉ. 'மெய்ப்படியென் றிப்படியின்' [யென' கசO. 'கஞ்சந்தெளித்தென்ன' கசக. 'நிழற்றெருவும்'
கஙஎ. 'மெய்யுறவேயெய்தி கசங. 'பகிரதியிற்பூத்தலைய'
கசO. 'கஞ்சந்தெழிப்பதென'

கசஎ. தீராது காத்த திருநீல கண்டமுஞ்
சோராத நாகத் தொடித்தோளு—மார்பாரச்

கசஅ. சார்த்திய செவ்வந்தித் தாருங் கழுநீருஞ்
சேர்த்திய வெண்பளிதச் சேதகமும்—பூத்த

கசகூ. வனசக் கரனமைத்த மானு மழுவுங்
கனசக் கரனமளிக் கச்சு—நனிசிறப்ப

கருO. மேலைத் தியாக வினோதப் பெயர்வரைந்த
சேலைத் திருவரையுஞ் சீராவுஞ்—சூலத்தான்

கருக. பாதத்தோ டாடும் பசும்பொற் பரிபுரமுங்
கீதத்தோ டாடரவக் கிண்கிணியு—மாதிரத்தை

கருஉ. வவ்விய கோடி வயங்குமிள ஞாயிற்றுச்
செவ்வியுந் தோற்குந் திருவழகு—நவ்வியங்

கருங. கண்ணார நோக்கிக் கசிந்து வியந்துவந்து
பண்ணாரப் பல்காற் பணிந்தேத்தி—மண்ணாட்டு

கருச. வைவச் சுதகற்பம் வந்துமுசு குந்தமன்னன்
செய்விப்பக் கொண்டதிருத் தேர்பாரீர்—கவ்வைப்

கருரு. புடைவீரை யாடைப் புவனாதி காக்கும்
படைவீர கண்டையத்தைப் பாரீர்—மடவீர்கா

கருசு. ணீடிய வம்பலத்தே நின்றாடி யிங்குமிருந்
தாடிய பொற்சே வடிபாரீ—ரூடெறிக்குஞ்

கருஎ. செவ்வந்தி மாலை நிலாவாந் திருமார்பிற்
செவ்வந்தி மாலை தெரிசியீ—ரவ்விருவர்

கருஅ. பாட்டுக் கடலமுதின் பாற்பிறந்த திங்களெனுந்
தோட்டுச் செவந்தித் துணைகாணீ—ரோட்டிய

கருகூ. தேரழகோ வீதித் திருவழகோ வாரூரர்
பேரழகோ யாது பெரிதென்பார்—தேரழகுந்

கசுO. தோற்றழகு நிற்கத் தொழுதேத்தப் பெற்றநம்
பேற்றழகு தானே பெரிதென்பார்—கோற்றொடியீ

கசுக. ரெண்படைக்குங் கங்கைபோ லீரா யிரநாமுங்
கண்படைக்கி னன்றோ களிப்பென்பார்—பெண்புடையா

கசுஉ. ரொள்விழா நோக்கி யுவக்குங் குழாத்தினு
லெள்விழா வீதி யிடத்தென்பா—ருள்ளரக்காப்

(பா - ம்) கசஅ. 'செவ் வந்திமணித் தாருங்' கருகூ. 'வீதித்தெருவழகோ'
கருஉ. 'ஞாயிற்றுச்' கசுக. 'பண்புடையார்'
கருஎ. 'மாலைநிவந்ததிரு'

கசுரு. பையப் புகுந்துருக்கும் பண்பாற் றியாகர்க்கு
மெய்யைத் தழலென்கை மெய்யென்பார்—செய்யதீ

கசுச. வண்ணம் பெறுமிறைவர் வந்தணையி னம்முடைய
கண்ணம் பொழியாதோ காய்ந்தென்பார்—மண்ணெகிழக்

கசுரு. கண்ணீர் சொரிவிப்பீர் கால்புதையுந் தேர்க்கென்ப
தெண்ணீ ருமதுமதி யேதென்பார்—புண்ணியர்தஞ்

கசுசு. செம்பொன் றியாகஞ்சிறப்பித்தார் சேவித்தார்க்
கம்பொன் குடத்தோ டளித்தென்பார்—கொம்பனையீர்

கசுஎ. தென்னாட் டமணைச் சிதைத்தார்நங் கூறைபறித்
திந்நாட் டமண்வளர்த்தா ரின்றென்பார்—முன்னாளே

கசுஅ. யக்கன்று போக்குதிரு வாரூர்த் தெருவென்னு
திக்கன்று போக்கவந்தோம் யாமென்பார்—தக்கபசு

கசுகூ. வன்றிழுந்த கன்றுக் கசைத்த மணியரிதோ
வின்றிழுந்த கன்றுக் கெமக்கென்பார்—சென்றெதிரே

கஎ0. யான்றதொரு புற்றி னகத்தே மறையரவங்
கான்றதொரு மாணிக்கக் கட்டியே—வான்றிரையின்

கஎக. வாங்கும் பலபூ மலரல்லி யங்கோதை
தாங்கு மணநுகர்ந்த தண்ணளியே—யோங்கிய

கஎஉ. மன்றற் றிருச்சா லகத்து வழிநுழைந்து
தென்றற் றவழுஞ் செழுங்காவே—முன்றிற்

கஎங. கடைகொளுங்கொள் ளாதென்னக் காத்திருந்து தேவர்
விடைகொளுஞ்சிங் காதனத்து வேந்தே—யடியொன்றுக்

கஎச. குய்யும் படிபசும்பொ னோரா யிரமுகந்து
பெய்யுந் தியாகப் பெருமாளே—வைகுமது

கஎரு. மாலா னவர்தனுநாண் மாற்றியவூ ரென்பதோ
மாலா னவர்தனுநாண் மாற்றினீர்—மாலேத்த

கஎசு. வோதம் புகுநா ளுமையுடன்புக் கீர்பிரிந்தா
லேதம் படாநீரு மென்பவர்—வேதிய

கஎஎ. னேமத்திக் கம்பர்வா யுற்றதென வெவ்வினையேங்
காமத்தீ வந்துதிருக் கண்சாத்தீர்—தோமிலாத்

கஎஅ. தம்மை யறிவோர் தனிஞான மோபவனி
யெம்மை யறிவோ டிழக்கின்றே—மும்மைக்

(பா - ம்) கசுச. 'வண்ணம் பெறினிறைவர் வந்தடையு நம்'
கஎக. 'தாங்கிமண'
கஎச. 'ஓராயிரமுவந்து'
கஎரு. 'என்பதுவோ'
கஎசு. 'என்செயீர்'
கஎஎ. 'அம்பலவ்வாயுற்ற தெனவினையேங்'

களகூ. கமலா லயத்தரெனுங் காரணமெம் முள்ளக்
கமலா லயம்புகவுங் கண்டோர்—தமியே

கஅ0. முளத்து மயன்மொழிய வோர்மொழியு மாருக்
கிளத்த திருவாயிற் கேளோ—மளித்துலகம்

கஅக. வாழும் பரிசுதிரு வாய்க்கேள்வி செய்தகதை
தாழுஞ் சிலர்க்குத் தவிர்ந்தீரோ—வாழி

கஅஉ. விடம்போல் விழியார்க்கு மேவத்தந் தாலோ
விடம்போல் வலப்புறமு மென்பா—ருடம்பெல்லாம்

கஅங. போந்தணிந்த வெண்பளிதப் போர்வையைப் பார்வையாற்
சாந்தணிந்த தென்னத் தயக்குவார்—நாந்தரும

கஅச. ஞாலையைக் கண்டிறவா துய்வித்தோன் செவ்வந்தி
மாலையைக் கண்டு மதிகாணார்—நூலை

கஅரு. விளக்கமல னந்திநிற மேவவே ருகி
யுளக்கமலஞ் சால வுலப்பார்—களக்காமன்

கஅசு. வாதிப்பார் தத்த மனமு மினையதிறம்
பேதிப்பா ராகப் பிறிதொருத்தி—யாதிப்

பேதை.

கஅஎ. பருவச் சிறுபேதை பல்கலையு நட்பு
மருவப் படாத மடமா—னுருவ

கஅஅ. மிகத்தா ரணியில் விளங்கு மிளைஞ
ரகத்தா மரைவிரவா வன்னம்—பகைப்போர்

கஅகூ. பெறுதேர் விடுமுன் பிறந்தணிய நாள்வேள்
சிறுதேர் விடுங்குழவித் தென்றன்—மறமே

ககூ0. மடியாத தக்கன் மகம்போலக் கூட்டி
முடியாத கூந்தன் முடியாள்—படியொடுக்குங்

ககூக. காலை விளையு மளவுங் கரைபுரளா
வேலை யனைய விழியினாண்—ஞாலத்துத்

ககூஉ. தீராப் பயமென்று நாணொன்றுஞ் செங்கனிவாய்ச்
சோராப் பசுங்குதலைச் சொல்லினா—டேரூர்ந்த

ககூங. சேயுமொரு செங்காட்டிற் சேயுங் கராவுண்ட
சேயுமெனப் போய்மீளுஞ் சிற்றெயிற்றாள்—சேயுமுடன்

ககூச. கூடுந் துணையு பமணைக் குலச்சிறையா
ராடும் பகையடக்கு மாறென்னக்—கூடி

(பா - ம்) கஅக. 'செய்கதையைத்' ககூங. 'மீண்டசிறெயிற்றாள்'
கஅங. 'தயங்குவார்' ககூச. 'ஆடும்படி'

ககூரு. யிளையோரைக் கண்ணுமடு மென்பளவுந் தாமு
முளையா தடங்கு முலையா—ளளியோர்

ககூசு. திருத்திய வுள்ளத் திறம்போற் பிறரை
வருத்தி யறியா வடிவா—டருக்கிலாள்

ககூஎ. விண்ணு டியமதியை வேட்டழுவாள் சேடியர்கள்
கண்ணாடி காட்டுழிக் கண்டொழிவா—ணண்ணுத

ககூஅ. வாடி நிழல்பிடிப்ப வப்புறத்தோ வென்றுமறித்
தோடிய தந்தோ வொளித்தென்பா—ளாடக

ககூகூ. வள்ளக் கெடுதியின் மாதர் முலையதென்று
மெள்ளக் கலையை விடுத்தலைப்பா—ணள்ளாயஞ்

உ௦௦. சென்று மரப்பாவைக் கின்னஞ் செவிவளரு
மென்று குதம்பை யிடப்போவா—ளொன்றுமிப்

உ௦க. பூவை கிளிபோற் புகலாது மூங்கையோ
பாவை யிதுவெனலும் பாவைமார்—காவலன்

உ௦உ மூங்கைபோந் தீர்த்த முழுகுவியுன் பாவைக்கு
மூங்கைபோ மென்று முறுவலிப்ப—வாங்கதற்குப்

உ௦ங. போமா றெழுங்காற் புவியாதி நாதாந்த
மாமா றிடங்கொண் டமர்ந்தாலும்—யாமத்தே

உ௦ச. தில்லையா ரூருந் திருவந்திக் காப்புக்கே
தொல்லையா ரூருந் தொழுகின்றே—னெல்லை

உ௦ரு. பரந்த வகிலம் பலகோடி கோடி
புரந்தசமற் கார புரத்தோ—னரந்தைப்

உ௦சு. பிறப்பா லடையாத பேரின்பந் தன்னூர்ப்
பிறப்பா லடைவிக்கும் பெம்மான்—பிறப்பன

உ௦எ. முற்று நிமலமே மூதூர்க் கிலைபுலையென்
றுற்றுநமி நந்தியார்க் கோதினேன்—பொற்றாளுக்

உ௦அ. கன்போதுந் தேவ ரணிகக் கடற்பவனி
முன்போதும் பேரி முழங்குதலு—மின்போல

உ௦கூ. மொய்த்தாய முன்செல்லச் சென்றுண் முலைத்தாயர்
கைத்தாயர் கைமுகிழ்ப்பக் கைமுகிழ்த்தாள்—சித்தங்

உக௦. கருதியது விட்டாள் கனகத்யா கேசன்
பருதி வெருவுருவம் பார்த்தா—ளருகுபோய்

(பா - ம்) ககூஎ. 'காட்டுழியிற்' உ௦ரு. 'அகிலபலகோடி'
ககூஅ. 'என்றுமதித்து' உ௦அ. 'அணிகக்கடன்முழக்கு'
ககூகூ. 'ஈதென்று' ,, 'அணிகக்கடன்முழங்க'

உகக. வேதச் சிரத்திருந்து விண்டுவுங் கண்டறியாப்
பாதத் தழகெனவும் பாராதே—மாதவர்க்குந்

உகஉ. தேவர்க்கு மாட்டைக் கிருதினஞ் சேவிப்போர்
யாவர்க்கு நாட்டமதி லென்ணுதே—பூவைமீர்

உகங. பந்தித்த வாடரவக் கிண்கிணியென் பாவைக்காம்
வந்தித்து வாங்க வருகென்ருள்—சிந்தையா

உகச. லெண்ணவரும் வேட்கையோ வெண்ணிறந்த நான்முகரும்
விண்ணவருந் தேர்ந்து விதிப்பதோ—மண்ணளந்தோ

உகரு. னேதப் பிறவிதொறு மீன்றே ரலங்கரிக்குங்
கீதச் சிறுமருங்குற் கிண்கிணியோ—நாதாந்த

உகசு. மானுர்க்கு நாதமொரு கிண்கிணியா யாடுதோறுந்
தானுர்க்க வந்த தகைமைகாண்—டேனேகே

உகஎ. ளாடரவ மீச னசைந்தா டலேநோக்கும்
பாடரவ வேதப் பதஞ்சலிகா—ணீடிரண்டு

உகஅ. நீங்கா தணிவதுகா ணின்பாவை யிப்பாம்புக்
கேங்கா தழாதே யிராதுகாண்—வாங்கினு

உகக. மன்ன மனேயாயிவ் வாட்டறிவார் வேண்டாவோ
வின்ன மரிபா யிழக்குமோ—தன்னுணராப்

உஉ0. பேதா யெவர்க்கும் பெறற்கரும்பே றென்ணுதே
யோதா யிதுவு முரைத்துமோ—போதாயென்

உஉக. ருய்முதலோ ராற்றுதலு மாரூரா னுழியான்
சேய்முதலோ ரோடுந் தெருக்கடந்தான்—றாய

பேதும்பை.

உஉஉ. பெதும்பை பிறிதொருத்தி பெட்குமதென் ருலும்
பொதும்பை விடநடவாப் பூந்தே—னெதிர்ந்து

உஉங. குழைக்கு முவகைக் குணம்புணர்ந்த தேனு
மழைக்கு நடம்புரியா மஞ்ஞை—கழைக்காமன்

உஉச. மேவ விளவேனில் வேட்பறிந்த தானுலுங்
கூவ வறியாக் குயிற்பேடை—யாவருந்

உஉரு. தோற்றுமு னேடுமி னேடுமின் றேற்றினுற்
கூற்றமி தென்று குலத்தாயர்—நாற்றிசைக்கு

(பா - ம்) உகக. 'கண் கண்டறியாப்' உஉச. 'மேவவிள'
உகசு. 'கா—ணுத' ,, 'வேட்பதறிந்தாலுங்'
உஉஉ. 'பொதும்பர்விட' ,, 'கூவலறியாக்'
உஉங. 'குணம்புரிந்ததேனுங்' உஉரு. 'கூற்ருகுமென்று'

னுயிருண் ணுங் கூற்றுப்போன் றன
நீயே, யலங்குளைப் பரீஇயிவுளிப்
பொலந்தேர்மிசைப் பொலிவுதோன்றி
மாக்கட னிவந்தெழுதருஞ்
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ
யனையை யாகன் மாறே
தாயி றூவாக் குழவி போல
வோவாது கூஉநின் னுடற்றியோர் நாடே" (புறம்-ங)

என முச்சீரடியிடைவந்து மண்டலவாசிரியத்தானிற்றது. "அரிமயிர்த் திரண்முன்கை" என்னும்பாட்டினுள் 'இழைபெற்ற பாடினிக்குக், குரல்புணர்சீர்க் கொளைவல்பாண் மகனும்மே எனவாங், கொள்ளழற் புரந்த தாமரை, வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே' (புறம்-கக) இஃது ஈற்றயலடி முச்சீர்த்தாகிச் செந்தூக்கியற்று யிற்ற வஞ்சிப்பா: தனிச்சொற் பெறுமென்று பின்னுள்ளோர் கூறிய நூல்கள் சான்றோர் செய்யுட்காகாவென்று கொள்க. ஈற்றடி வரைந்தோதவே, இடையினெல்லாவடியும் வரப்பெறுமாயிற்று. 'நேரிழை மகளி ருணங்குணாக் கவருங், கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை' (பட்டினப்பாலை) என ஆசிரியவடியும் வெள்ளடியும் இடைவந்தன. (எக)

எஉ. வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும்.

இது வெண்பாவிற்கு முச்சீர் வருமாறு கூறுகின்றது.

இ-ள். வெண்பாவினிறுதியடி முச்சீரான்வருதலை உடைத்தாகும்.எ-று.

உதாரணம் மேற்காட்டுதும். சீர்த்தென்னாது 'ஆகும்' என ஆக்கங்கொடுத்தமையான், அத்துணையாக்கமின்றி நாற்சீரான் மண்டலித்து வருதலும், இடையினும் முதலினுஞ் சிறுபான்மை முச்சீரான் வருதலுங் கொள்க. உ-ம்.—

"அறையருவி யாடா டினைப்புனமுங் காவாள்
பொறையுயர் தண்சிலம்பிற் பூந்தழையுங் கொய்யா
ளுறைகவுள் வேழமொன் றுண்டென்றா ளன்னை
மறையறநீர் வாழிய மையிருங் குன்று" என மண்டலித்து

வந்தது.

"அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்"

இது மூதுரை.

" நாளுமொன் றீயாப் பகலும்
பகாஅஅ நண்புடைக் கேளிர்ப் பிரிவுந்
தகாஅ னிவனென்னுஞ் சொல்லுமிந் நான்கும்
வகாஅ தொழிக வெமக்கு."

இது சான்றோரெல்லாரும் பிறைதொழுததேனும், பாட்டாய் வருத லின் மந்திரமாகாது. இனி,

" வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவ
னுன்மாடக் கூடலிற் கல்வலிது
சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான்
கச்சியுட் காக்கை கரிது "

" கறைப்பற் பெருமோட்டுக் காடு கிழவோட்
கரைத்திருந்த சாந்துதொட் டப்பே
*மறைக்குமா மாட்டாது மற்றுந்தன் கையைக்
குறைக்குமாங் கூர்ங்கத்தி கொண்டு "

இவை ஔவையுங் காரைக்காலம்மையுங் கூறியன.

" உலகு பசிப்பப் பசிக்கு முலகு
துயர்தீரத் தீரு நிலவு
நிறுத்திவாழ் வஞ்சி யுடையாழ்வி யென்னு
மொருத்தியா லுண்டிவ் வுலகு."

அங்ஙனம் செய்யுள்செய்த முன்னோரைக்கண்டு பின்னுள்ளோர் இத னைச் செய்யுளாகச்செய்தலின் இவற்றை †ஆரிடமென்பார் இவ்விதி யறியா தார். (எ௨)

---

* " மறைக்க வறியாது மற்றதன் கையை " எனவும் பாடம்.

† " வரிசை பெரிதுடையர் கட்கலமுந் தூயர்
புரிசை யொருசாரா ராமலமுந் தண்ணீருந்
தன்னிலத்து வல்ல புரிசைக்குத்
தெற்கொத்தித் தோன்றுந் திருநென் மலியேநம்
பொற்கொற்றி புக்கிருக்கு மூர் "

" வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவ
னுன்மாடக் கூடலிற் கல்வலிது
சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான்
கச்சியிற் காக்கை கரிது "

௭௩. அசைச்சீர்த் தாகு * மவ்வயி னான.

* 'அசைச்சீராகும்' எனவும் பிரதிபேதமுண்டு.

"கிடங்கிற் கிடங்கிற் கிடந்த கயலைத்
தடங்கட் டடங்கட் டளிரியலார் கொல்லார்—கிடங்கில்
வளையாற் பொலிந்ததோள் வையெயிற்றுச் செவ்வா
யிளையாட்டி கண்ணொக்கு மென்று" இத்தொடக்கத்துப் போய்
கையார்வாக்தும், துடமூக்கிற்பகவர் செய்த வாசுதேவனார் சிந்தமு முதலாகிய ஒருசார்செய்யுட்களும் எப்பாற்படுமோவெனின்:—ஆரிடச்செய்யுள் எனப்படும்; ஆரிடமென்பது உலகியற் செய்யுள்கட்கெய்திய உறுப்புக்களின் மிக்குங் குறைந்துங் கிடப்பனவெனக்கொள்க. 'வரிசைபெரிதுடையர்' என்பது மிக்கது; அல்லன மிக்குங் குறைந்தும் வந்தன. அவ்வாரிடச்செய்யுள் பாடுதற்குரியார், ஆக்குதற்குங் கெடுத்தற்கும் ஆற்றலுடையோராயினார்: அவர், இம்மைமறுமை முக்காலமுமுணர்ந்த இருடிகளெனக்கொள்க; என்னை?

"உலகியற் செய்யுட் கோதிய வளவையிற்
குறையவும் விதப்பவுங் குறையா வாற்ற
லிருடிகண் மொழிதலி னாரிட மென்ப" எனவும்,

"ஆரிடச் செய்யுட் பாடுதற் குரியோர்
கற்றோ ரறியா வறிவுமிக் குடையோர்
மூவகைக் காலப் பண்புமுறை யுணரு
மாற்றல் சான்ற வருந்தவத் தோரே" எனவும் சொன்னார் பாட்டியன்மரபுடையார். வடநூலுடையாரும் பிங்கலமுதலாகிய சந்தோபிசிதிகளுள் விருத்தச்சாதி முதலாகிய விகற்பங்களாற் கிடந்த உலகியற் சுலோகங்களை மிக்குங் குறைந்துங் கிடப்ப இருடிகளாற் சொல்லப்பட்டனவற்றை ஆரிடமென்று வழங்குவரெனக் கொள்க; அஃதேயெனின்:—

"வரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிறுக்
காருடைய பீலி கடிகாவாச்—சீரிய
வத்தியூர் வாயா வணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு"

"உடையராச் சென்றக்கா லூரெல்லாஞ் சுற்ற
முடைவராக் கோலூன்றிச் சென்றக்காற் சுற்ற
முடையவரும் வேறு படும்"

"கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
வொண்செங் குருதியி லோஒ கிடந்ததே—கெண்டிக்

இது மேலதற்கு எய்தியதோர் விதி.

கெழுதகை யில்லேன் கிடந்தூடப் பன்ஞ
எழுதகண் ணீர்துடைத்த கை" என்றித்தொடக்கத்தன பேரு ஞ்சித்திரனுர் செய்யுளும், ஔவையார் செய்யுளும், பத்தினிச் செய்யுளு முத லாகவுடையனவெல்லாம் எப்பாற்படுமெனின்:— ஆரிடப்போலியென்றும் ஆரிடவாசகமென்றும் வழங்கப்படுமெஃக. இவையெல்லாம் இருடிகளல்லா வினையோராகி, மனத்ததுபாடவும், சாவவுங்கெடவும் பாடவும்வல்ல கபில பரணர் கல்லாடர் மாமூலர் பெருந்தலைச்சாத்தர் பெருஞ்சித்திரர்—இத்தொ டக்கத்தோரும் மிக்குங்குறைந்தும் பாடப்பெறுவரெனக் கொள்க; என்னை ?

"மனத்தது பாடு மாண்பி னோருஞ்
சினத்திற் கெடப்பாடுஞ் செவ்வி யோரு
முனிக்கணச் செய்யுண் மொழியவும் பெறுப" என்ருர் பாட்டி யன்மரபுடையார். வரலாறு:—

"இலைநல வாயினு மெட்டி பழுத்தாற்
குலைநல வாங்கனி கொண்டுணு லாகா
விளையாண் முலைநலங் கொண்டு முறுவலிக் கின்ற
வினையுடை நெஞ்சினை வேதுகொ ளீரோ"

(திருமூலம், மகளிரிழிவு, க)

இம்மூலர்வாக்கு மிக்குவந்தது; "வச்சிரம் வாவி நிறைமதி முக்கோண, நெற் றிநேர் வாங்கல் விலங்கறுத்த, லுட்சக் கரவட்டத் துட்புள்ளி யென்பதே, புட்கானுர் கண்ட புணர்ப்பு" இது மந்திர நூலிற் புட்கரனுர் கண்ட எழுத் துக்குறிவெண்பா; இஃது இரண்டாமடி குறைந்துவந்தது. 'கிடங்கிற் கிடங்கில்' என்பது போய்கைவாக்கு மிக்குவந்தது. "கறைப்பற் பெரு மோட்டுக் காடு கிழவோட், கரைத்திருந்த சாந்தைத்தொட் டப்பேய், மறை க்க வறியாது மற்றதன் கையைக், குறைக்குமாங் கூர்ங்கத்தி கொண்டு" இது பூதத்தாருங் காரைக்காற்பேயாரும் பாடியது; இஃது இரண்டாமடி குறைந்துவந்தது. அறிவுடை நம்பியார் செய்த சிந்தம் எப்பாற்படுமோவெ னின்:—தூங்கலோசைத்தாய்ச் சுரிதகத்தருகு தனிச்சொலின்றித் "தாழி ரும்பிணர்த்தடக்கை" என்னும் வஞ்சிப்பாவேபோல வந்தமையால், தனிச் சொலில்லா வஞ்சிப்பாவென வழங்காமோவெனின்:—வழங்காம்; செவியறி வுறூஉவாய் வஞ்சியடியால் வந்து பொருளுறுப்பழிந்தமையாஃ உறுப்பழி செய்யுளெனப்படும். தூடமுக்கிப்பகவர் செய்த வாசுதேவனுர் சிந்தமும் வெ ள்ளோசைகொண்டும், கொள்ளாது மிக்குங்குறைந்தும் வரலானும், இருடி களாற்பாடப்படுதலானும் ஆரிடச்செய்யுளேயாம்." (யாப்பருங்கலவிருத்தி.)

இ-ள். அவ்வெண்பாவின் ஈற்றில்வரும் முச்சீரடியின் இறுதிச்சீர் அசைச்சீராய் நிற்கும். எ-று.

'இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினர் கொளலே' (செய்-உஅ) என்பதனுள் வெண்பாவின் முதலுமிடையும் இயலசைச்சீரிரண்டும் வாரா: உரியசைச்சீரிரண்டும் வரும்: என்றதனை, ஈண்டு இறுதிக்கண் இயலசைச்சீரும் உரியசைச்சீரும் வருமென்றவாறு. (எங.)

எச. நேரீற் றியற்சீர் நிரையு நிரைபுஞ்
சீரோற் றிறாஉ மியற்கைய வென்ப.

இஃது அவ்வசைச்சீர் நான்கனுள் நிரையும் நிரைபும் இன்னுழி நின்று இன்னவாறு தட்கும் என்கின்றது.

இ-ள். நிரையும் நிரைபும் நேரீற்றியற்சீர்ப்பின்னே தளைகொண்டிறும் இயல்பின. எ-று.

'இயற்சீர்ப்பாற்படுத்தியற்றுக' (செய்-உஅ) என்றவைதாம் வருஞ்சீரோடு தட்குமாறுகூறி, ஈண்டு அவை முன்னின்ற சீரோடு தட்குமாறு கூறுகின்றது. உ-ம். "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்பாய்மற் றாங்கே, யெடுப்பதூஉ மெல்லா மழை" (திருக்குறள்-கரு) "நன்றறி வாரிற் கயவர் திருவுடையர், நெஞ்சத் தவல மிலர்" (ஷை-க0எஉ) தனக்குவமை யில்லா தான் றாள்சேர்ந்தார்க் கல்லான், மனக்கவலை மாற்ற லரிது (ஷை-எ) "அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு" (ஷை-க) இவை தேமா புளிமா என்னும் நேரீற்றியற்சீர் நிரையசைச்சீரோடும் நிரைபசைச்சீரோடுந் தட்டன. (எச)

எரு. நிரையவ ணிற்பி னேரு நேர்பும்
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்.

இஃது ஒழிந்த நேருநேர்பும் இன்னுழிநின்று இன்னவாறு தட்குமென்கின்றது.

இ-ள். நேரீற்றியற்சீர் நின்ற விரண்டாஞ் சீரிடத்து நிரையீற்றியற்சீர்நின்றபின் அதன்பின்னொரு நேர்பும் வந்து தட்டனீக்கப்படா வென்பர் மெய்ம்மொழிப்புலவர். எ-று.

உ-ம். "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி, வாலெயி றூறிய நீர்" (திருக்குறள்-ககஉக,) 'அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள், சிறுகை யளாவிய கூழ்' (ஷை-சுச) 'இனிய வுளவாக வின்னாத கூறல், கனியிருப்பக்

காய்கவர்ந் தற்று' (ஷை-க௦௦) 'படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு, முடை யா னரசரு ளேறு' (ஷை-௩அக) எனப் பாதிரி கணவிரி நிரையீற்றியற்சீ ரோடும் நேரசைச் சீரோடும் நேர்பசைச்சீரோடுந் தட்டன. இனி, ஒன் றெனமுடித்தலான் வெண்பாவுரிச்சீர் நின்று நேரசைச் சீரோடும் நேர்பசை ச்சீரோடும் தட்டலும், ஒழிந்தன விரண்டொடும் தளையாமையுங் கொள்க. உ-ம் 'பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா, ரிறைவ னடிசேரா தார்' (திருக் குறள்-க௦) 'இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன், பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு' (ஷை-௫) எனத் தட்டன. (எ௫)

எசு. எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே

எஎ. வெண்பா வியலினும் பண்புற முடியும்.

இரண்டும் உரையியைபுநோக்கி ஒன்றாகக் கூறிற்று. இது கலிக்குஞ் சிந்தடிகூறி ஈறுவருமாறு கூறுகின்றது.

இ-ள். கலிப்பா எழுசீரிறுதியாகி ஆசிரியத்தாலும் வெண்பாவினிறு தியாலும் முடியும். எ-று.

'எழுசீரிறுதி யாசிரியம்' எனவே, ஆசிரியவடி பலவும் வந்து ஈற்றடி முச்சீராகவே வருமென்பதூஉம், 'வெண்பாவியல்' எனவே, கட்டளைவெண் பாவானும் சீர்வகைவெண்பாவானும் வந்து ஈற்றடி முச்சீரான் வருமென்ப தூஉம் பெற்றாம். உ-ம் "அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்" (பாலைக்கலி—க௦) என்னுங்கலியிறுதியின் 'இனைநலமுடைய' என்னும் ஆசிரி யம் ஈற்றடி நாற்சீரும் அயலடி முச்சீருமாக எழுசீரானிற்றது. 'மணிநிற மலர்ப்பொய்கை'(மருதக்கலி-௫)என்னுங் கலியினிறுதி 'மெல்லியான் செவி முதன் மேல்வந்தான் காலைபோ, லெல்லாந் துயிலோ வெடுப்புக நின்பெண் டி, ரில்லி னெழீஇய யாழ்தழீஇக் கல்லாவாய்ப், பாணன் புகுதராக் கால்' என வெண்பாவியலானிற்றது. இது கலிக்குறுப்பாய் வருதலின் ஆசிரியத் தளையும் வந்தது. இஃது ஒத்தாழிசைக்கும் பெரும்பான்மைவிதி. 'பண்புற' என்றது விசேடமிக முடியுமென்றவாறு; எனவே, இருசீரும் நாற்சீரும் ஐஞ்சீருமாயவடிகளான் முடிவனவெல்லாங் கொச்சகம்: அவை இத்துணை விசேடமின்று என்றவாறு. 'இயல்' என்றதனான் மூன்றடியிற் குறைந்த வெள்ளைச் சுரிதகம்வரிற் பண்புறமுடியாவாம். (எசு,எஎ)

எஅ. எழுத்து முதலா வீண்டிய வடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்.

இது * நிறுத்தமுறையானே யாப்புணர்த்துகின்றது.

இ-ள். எழுத்து...வடியின் எ-து எழுத்துமுதலாக அசையுஞ் சீரு மொன்றாகத் தொடர்ந்தீண்டிய வடியிலே. குறித்த...நாட்டல் எ-து தான் வைப்பக்கருதிய பொருளைப் பிறிதோரடியுங் கொண்டு கூட்டாதமைந்து மாறச்செய்தல். யாப்பென......புலவர் எ-து யாப்பென்று சொல்லுவர் அவ் வாறி யாத்தலை வல்ல புலவர். எ-று.

உ-ம். "நீரின் றண்மையுந் தீயின் வெம்மையும்" எனவும், "துகளர் பெருஞ்செல்வந்தோன்றியக்காற்றொட்டு' (நாலடி-உ)எனவும், "அரிதாயவற னெய்தி யருளியோர்க் களித்தலும்" (பாலைக்கலி-கo) எனவும், "வசையில் புகழ்வயங்குவெண்மீன்" (பட்டினப்பாலை) எனவும் இந்நால்வகைச் செய்யுட் கண் முடியுந்துணையும் அடிதோறுங் குறித்த பொருளை முடிய நாட்டிய வாறு காண்க. 'யாப்பறிபுலவர்' என்றதனான் இருசீரானும் முச்சீரானும் குறித்த பொருளை முடிப்பனவும், அங்ஙனமுடித் தொழிந்து அச்சீரை மேல்வருகின்றவடியோடு பொருண்முடியச் செய்வனவும் சிறுபான்மை யாப்பென்று கொள்க. உ-ம். "மண்டிலு மழுங்க மலைநிறங் கிளர, வண்டின மலர்பாய்ந் தூத மீமிசைக், கண்டற் கானற் குருகின மொலிப்ப" என முச்சீரானட்டுவன வெண்பாவிற் பயின்றுவருமாறு உரையிற்கொள்க. (எஅ)

எகூ. பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
யங்கத முதுசொல் லவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பி
னாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்.

இது முற்கூறிய யாப்பிற்கோர் வேறுபாடு கூறுகின்றது.

இ-ள். பாட்டுரை... நிலத்தும் எ-து பாட்டுக்களும் உரைகளும் நூல்க ளும் மந்திரங்களும் பிசிகளும் அங்கதமும் முதுசொல்லும் எனப்பட்ட அவ்வேழுபொருளிடத்தும். வண்...மூவர் எ-து கொடையாற் பெற்ற புகழி னையுடைய சேரசோழபாண்டியருடைய. தண்......வரைப்பின் எ-து குளிர்ச் சியையுடைய நாவலம் பொழிலுட் டமக்கு வரைந்து கொண்ட வடவேங் கடந் தென்குமரி யிடத்து. நாற்பெய......வழங்கும் எ-து மலைமண்டலம் சோழமண்டலம் பாண்டியமண்டலம் தொண்டைமண்டல மென்னும் நான்கு பெயரையுடைய தமிழ்நாட்டார் நடாத்தும். யாப்பின்......புலவர்

* முதற்கண் 'யாத்தசீரேயடியாப்பெனாஅ' என நிறுத்த முறை.

எ-து செய்யுளின்பெயர் தனக்குப் பெயராகவுமுடைத்து மேற்கூறிய யாப்பு. எ-று *.

என்றது, குறித்த பொருளை அடிக்கண் முடிய நாட்டுதலே யன்றி இப்பகுதிப்படச் செய்தலும் யாப்புறுப்பென்றதாம். பாட்டுச்செய்யுள் உரைச்செய்யுள் நூற்செய்யுள் எனத்தமிழ்நாட்டார் வழங்கியவாறே பெயர் பெறுமென்றவாறு. எனவே, அந்நாட்டார் வழங்கும் யாப்புப்பகுதி கூறி னாராயிற்று. (எக)

அ/0. மரபே தானு,
நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன.

இது † நிறுத்தமுறையானே மரபென்னு முறுப்பு யாப்பின்கண் வருமாறு கூறுகின்றது,

இ-ள். மரபேதானும் - மரபென்ற வுறுப்புத்தானும்; நாற்சொல்லிய லான் - நான்கு சொல்லையும் உலகத்தோர் வழுவகைவழுவும்படாமல் வழங் குகின்ற வழக்கு வழுவாதன. யாப்புவழிப்பட்டன - முற்கூறியயாப்பிலக்க ணத்தின் வழியிலே பொருத்தமுடையவாய்க்கிடப்பன. எ-று.

இந்நூலிடத்து இதற்கு முன்னும் பின்னும் கூறப்படும் மரபுளதாக லின், இந்நூலுட் கூறிய இலக்கணங்களினின்றும் இதனைப்பிரித்துப் பிரி நிலையேகாரத்தாற் கூறினர். நாற்சொல்லாவன:—இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல். பெயர் வினை யிடை யுரி என்பன இயற்சொல் லின் பாகுபாடாகலின், இயற்சொல் அந்நான்குபாகுபாட்டானும் செய்யுட் குரித்தாயிற்று. இந்நான்கு சொல்லானுங் காலந்தோறும் இடந்தோறும் வழ ங்குகின்ற வழக்குஞ் செய்யுளுமிடைதெரியாமற் றொடர்வு படுத்தி முறை மைபிறழாமற் செய்யுட்செய்க என்றவாறு. உ-ம்.

'ஓதியு மோதா ருணர்விலா ரோதாது
மோதி யனைய ருணர்வுடையார்—தூய்தாக
நல்கூர்ந்துஞ் செல்வ ரிரவாதார் செல்வரு
நல்கூர்ந்தா ரீயா ரெனின்' (நாலடி.-உ௭௦)

---

* "பாட்டு முதலாக முதுசொல்லீறாகச் சொல்லப்பட்ட ஏழு நிலத்தி னும் வளவிய புகழையுடைய சேரன் பாண்டியன் சோழன் என்னு மூவரது தமிழ் நாட்டகத்து அவர் வழங்கும் தொடர்வழிக்கண் வரும் மொழி யாப் பாம் என்றவாறு" என்பது உரையாசிரியருரை.

† முதற்கண் 'யாப்பெனஅ, மரபே தூக்கே தொடைவகை யெனஅ' என நிறுத்தமுறை.

இதை ஆங்கில கிருஷிசாஸ்திரப்படி பயிரிடும்வகை பின்வருமாறு.

"மரவள்ளிக்கிழங்கு (Tapioca):—இதற்கு ஆள்வள்ளிக்கிழங்கு என்றும் பெயருண்டு. இது தென்அமெரிகா தேசத்துக்குச் சொந்தமான பயிர். 1794-ம்வரு இந்தியா தேசத்துக்குக் கொண்டுவரப்பட்டது. நமது இராஜதானியில் மிகுதியாக எங்கும் பயிரிடப்படுகிறது; ஆனால், மலையாளப் பிராந்தியங்களில்தான் விசேஷம். மலையாளப் பிராந்தியங்களில் உண்டாகிற மரவள்ளிக்கிழங்கு மற்றவிடங்களில் உண்டாகிற கிழங்குகளைப்பார்க்கிலும் சிலாக்கியமாகக் கொள்ளப்படுகிறது. ஏனெனில், கிழங்கு நாரற்ற சரக்காயிருப்பதனாலேயாம்.

இதை எந்தப்பூமியிலும் பயிர்பண்ணலாம்; ஆனாற் பாதிமணல் பாதிகளிப்புள்ள பசலைமண்தான் சிலாக்கியம். பூமியை உழுது முகடு முகடுகளாகப் பிரித்துவிடவேண்டியது. இந்த முகடுகளிற் பதியங்களை (Cuttings) 1½ அடிக்கு ஒன்றாகச் சாய்வாய் நடவேண்டும். முகடுகள் 2½ அடி வித்தியாசத்தில் வரிசை வரிசையாய் இருக்கவேண்டும். சில விடங்களில் எருவே யிடுகிறதில்லை. சிலவிடங்களிற் சாம்பலையும், காய்ந்த சருகையும், சாணத்தையும் உரமிடுகிறார்கள். 4 அங்குலமுதல் 6 அங்குல நீளமுள்ள பதியங்களைப் பிரயோகிக்கலாம். சீக்கிரம் பயிர் வளரவேண்டியிருந்தால் 2, 3 அடி நீளமுள்ள பதியங்களை உபயோகிப்பது சிலாக்கியம். மலையாளப்பக்கங்களிற் பதியங்கள் மார்ச்சு, ஏப்பிரல் மாதங்களில் நடப்படுகின்றன. இவ்விதமாகப் பதியம் நட்டபிற்பாடு, அதன் உச்சியிற் சாணத்தை உருட்டிக் கிரீடம் சாத்துவார்கள். வேண்டியபோது களையெடுத்துப் பயிரை மண்ணால் அணைப்பார்கள். 9, 10 மாதத்தில் பயிர் முதிர்ந்துவிடுகிறது. சிலோனில் (இலங்கையில்) ஏகர் 1-க்கு 10-டன் பச்சைக்கிழங்குகள் உண்டாகின்றன. இந்த 10-டன்கிழங்குகள் காய்ந்த பிறகு, 2½ டன் கிழங்குகளாய்விடுகின்றனவாம். இந்த 2½ டன் காய்ந்த கிழங்குகள் 2800 பவுண்டு அரிசிமா (Tapioca Starch) கொடுக்கின்றனவாம். சைதாப்பேட்டை கவர்ன்மெண்டு பண்ணையில் ஒருகாலத்தில், ஏகர் 1-க்கு 10,900பவுண்டும் பின்னுமொருகாலத்தில் 6500 பவுண்டும் பச்சைக்கிழங்கு கிடைத்ததாகத் தெரியவருகிறது.

பச்சைக்கிழங்கில் ஒருவித மகா விஷவஸ்து (Hydrocyanic acid) இருக்கின்றது.

எத்தனையோபெயர்கள் பச்சைக்கிழங்கைத் தின்று இறந்திருப்பது பிரத்தியக்ஷம். இந்த விஷவஸ்து சலத்திற் கரைந்துவிடும். ஆகையால், பச்சையில் தின்னவேண்டியிருந்தால் கிழங்கைச்சுறண்டி, சலத்தில் நன்ருய்ச் சுத்தப்படுத்தியானபிற்பாடு உட்கொள்ளவேண்டும். எல்லாவற்றிற்கும் சலத்தில் சுத்தப்படுத்தியானபிற்பாடு உட்கொள்வதே நலம். எல்லாவற்றிற்கும் சலத்தில் சுத்தப்படுத்தி வேகவைத்து உண்பது திறப்.

மரவள்ளிக்கிழங்கிலிருந்து மாவைச்செய்யும் விதம்:—மோரிஸில் (Mauritius) ஒருவிதமாக, "மாவை" ப்பண்ணுகிருர்கள். அதுதான் திறமென்று சொல்லுகிருர்கள். அந்த மா திரியைக்கீழ் விவரிப்போம்.

கிழங்கைவெட்டிச் சலத்தில் நன்ருய்க்கழுவி, 6 மணிசாவகாசம் சலத்திற் போட்டுவைத்திருந்தால், மேற்றேலைக் கையாற் சாதாரணமாய்ச் சுறண்டிவிடலாம். பிறகு கிழங்கைத்துருவி, தூள்களைத் துணியிற்போட்டுக் கசக்கினுற் பால் உண்டாகும். இந்தப்பாலை ஒரு சமமான பாத்திரத்தில் 8 மணி நேரம் போட்டுவைத்திருந்தால், "மா" கீழேபடிந்துவிடும். மேற்சலத்தை ஊற்றிவிட்டு, ஈரமாவை எடுத்து ஒருதட்டிற் பரப்பிவைத்து இரண்டுமூன்று மணிநேரம் வெயிலிற் காயவைக்கவேண்டும். இப்படிக்காய்ந்தவுடன் சூடானதட்டுக்களில் மாவைப்போட்டு எரிந்துபோகாமலிருக்கும்படி கிளறிக்கொண்டிருக்க வேண்டும். இச்சூட்டால் 'மா' கட்டியாகிச் சிறுசிறு உண்டைகளாய்விடும். பிற்பாடு மரவள்ளிக்கிழங்குமாவைப் பிரயோசனப் படுத்திக்கொள்ளலாம்.

மஞ்சட் கிழங்கு.

இது கோயம்புத்தூர் ஜில்லாவைச்சார்ந்த ஈரோடு, கரூர், தாராபுரம்முதலான இடங்களிலும், சேலம்ஜில்லாவைச்சார்ந்த இராசிபுரம் நாமகிரிபேட்டை முதலானவிடங்களிலும், கூடலூரைச்சார்ந்த கல்லக்குறிச்சி தாலூகாவிலும், சித்தூர்ஜில்லாவைச்சார்ந்த பலமனேரி முதலான இடங்களிலும், கடப்பைஜில்லாவைச்சார்ந்த மதனபல்லி,

கண்டிகோட்டை, சித்தவட்டமுதலான விடங்களிலும், கர்நூலைச் சார்ந்த கால்வா, நந்தியால், கோல்குண்டலா தாலுக்காக்களிலும், கோதாவரி, கிருஷ்ணாமுதலான நீராதாரமுள்ள விடங்களிலும் மிகுதியாக விளையும் விலையுயர்ந்த பயிர். இது கடப்பையைச் சார்ந்த கண்டிகோட்டைமுதலான விடங்களிலிருந்து பம்பாய் முதலானவிடங்களுக்கு மிகுதியாக ஏற்றுமதியாகின்றது. இது முக்கியமாக மேட்டுப்பாங்கான தோட்ட நிலத்திலும், அடிநீர் தங்காத விசேஷகளிப்பற்ற மணல் மிசிரமானபூமிகளிலும், நெல்விளையும் நன்செய்ப்பூமிகளிலும், மக்காச்சோளம், கொட்டைமுத்து, கத்திரி, வெண்டைக்காய், அகத்தி, வெங்காயம், புளிமஞ்சி முதலானவைகளுடன் சேர்த்துப் பயிர்செய்வதுமுண்டு. இதற்குப்பூமியைப்பலதரம் உழுதுபுரட்டிநன்றாகக்காயவைத்தும் ஊர்க்குப்பை சாம்பல் வண்டல்மண் முதலான எருக்களால் வளமாக்கியும் ஆனி ஆடி மாதங்களில் இரண்டடிதூரத்துக்கு ஒன்றாகப்பாத்திகள்கட்டி, இரண்டடிதூரத்துக்குஒருவிதையாக நட்டுமார்கழிமாதம்வரையில் மூன்று நான்கு நாளைக்கு ஒருதரம் தண்ணீர் கட்டிக்கொண்டுவந்து, பிறகு பங்குனி சித்திரை மாதம்வரையில் சமயோசிதமாகத் தண்ணீர்கட்டிக் கிழங்குகளைவெட்டியெடுத்துவிடலாம். மஞ்சட்பயிர் பாத்திகளுக்கு 15 அடிகளுக்கு 2 அடி ஆழமுள்ள கிழங்குகளை வெட்டிக் கழிநீரைநீக்குவது அவசியம். இதற்கு முதல்நான்கு மாதங்களுக்குள்ளாக அடிக்கடிகொத்துப்போட்டு களைகளை நீக்கவேண்டும். மற்றப்பயிர்களை மஞ்சளுக்கு மறைவும், நிழலும் கொடுக்கும்படி தக்க இடங்களில் நட்டும், வெங்காயத்தைப் பக்கத்தில் நட்டுவிடலாம். நல்லபூமியும், எருவும், எதேஷ்டமாகத்தண்ணீரும் இருந்தால், சாதாரணமாக 8-அடி உயரும் புளிமஞ்சிச்செடியே, இந்தமஞ்சள்நிலத்தில் 16-முதல் 17அடி உயர்ந்துவளர அதில்ஓர் அவுன்ஸ் சுத்தமான நாரை எடுக்கலாம். இந்தமஞ்சளோடு பயிரிட்ட காய்கறிகளைக் கார்த்திகை மார்கழி மாதங்களில் அறுத்துவிட்டு; அகத்தியையும் கொட்டைமுத்துச் செடிகளையும் மஞ்சளுக்கு நிழல்தர விட்டுவைப்பது வழக்கம். பக்குவகாலம் வந்தபிறகு, மஞ்சட் கிழங்குகளைத்தோண்டி எடுத்து அதனிலைகளை அறுத்துவிட்டுச் சாணி நீரோடு காய்ச்சியபின், துடைப்பங்குச்சியாற் குத்திப்பார்த்து, நல்ல வெயிலில் உலர்த்தி விற்பனை செய்யலாம். இதன் இலைகளை பூமிக்கு

எருவாகப்போட்டால் நிலம் கெட்டுவிடுமென்று சிலர் எண்ணுகிறார்கள். இந்த இலைகளை ஒரேயிடத்தில் அதிகமாகப்போட்டாற் கெடுதி உண்டாகலாம். ஆனாற் பூமிமுழுதும் பரக்கப்போட்டு மட்கவைத்தால் நல்லஎருவாகும். இதுதான் ஈரோட்டுக் குடியானவர்கள்செய்யும் வழக்கம். கரூர் உடுமலைப்பேட்டைகளில் இதைப் பயிர்செய்வதிற் சிறிது வித்தியாசமுண்டு. அதாவது அங்கு இந்தப்பயிருக்கு ஒரு வாரத்துக்கு ஒருதரந்தான் தண்ணீர் கட்டுகிறார்கள். மேலும் ஒரு நிலத்தில் ஒருவருஷம் மஞ்சள்வைத்தால், அடுத்த மூன்றுவருஷங்களுக்கு அந்தப்பூமியில் மஞ்சள்பயிரிடாமல் இராகி அல்லது நெல்லைப் பயிரிடுகிறார்கள். ஓர் ஏகர் நிலத்துக்கு ௫00-முதல் ௬00 படி விதை பிடிக்கும். அதற்கு ௩000-முதல் ௫,000 வரையிற் கிழங்கு கிடைக்கும் என்றால் ௧௨0-முதல் ௨00 ரூபா லாபமாகும். இத்தோடுகூட இந்த மஞ்சளோடு பயிரிடில் சேப்பங்கிழங்கு ௨௫0 மணங்கு கிடைக்கும். இதை மணங்கு ௧-க்கு ௩௨ அணா விதம் விற்கலாம். மற்றக் காய்களிலும் லாபம் கிடைக்கக்கூடும். ஆனால் இந்த இரண்டும் ஒரே பயிரிற் சேர்த்து பயிரிட்டால் அதிக லாபம் கிடையாதென்று சிலர் சொல்லுகிறார்கள். ஓர் ஏகர் நிலத்தில் மஞ்சள் பயிரிடுவதற்கு உண்டாகும் செலவைப்பற்றி இதனடியிற் காணலாம்.

	ரூபா.	அ.	ப.
எருவுக்கு	10	0	0
6-உழவுக்கு	3	0	0
வரப்புகளைக்கட்டி நடுவதற்கு	3	0	0
கொத்துக்கும், களைக்கும்	14	0	0
50 தண்ணீர்கட்ட (மழைநீர் உள்பட) ...	40	0	0
கிழங்குகளை வெட்டியெடுக்க	6	0	0
பிடுங்கிச் சாணிநீரிற் காய்ச்ச விறகு உட்பட ...	14	0	0
கிழங்குகளை சுத்தரிக்க	25	0	0
சர்க்கார்க் கந்தாயம்...	1	8	0
ஆக மொத்தம் செலவு ரூ	116	8	0

ஒரு வேலைக்காரன் ஒருநாள் முழுமையும் செய்யும் வேலையானது 300 டன்களடங்கிய ஒரு பளுவான வஸ்துவை 1 அடி உயரம் தூக்குவதற்குச்சமானம் என்று ஏற்படுத்தியிருக்கின்றார். நமது நண்பர்களுக்கெல்லாம் இவ்வாறு வியாயாமத்தைக்கணக்கிடுவது தெரியவேண்டுமாகையால் இதைச்சற்று விவரித்துச்சொல்லுவோம். 300 டன்களின் பாரத்தை ஓர் அடி உயரம் தூக்குவதும், 1 டன் பாரத்தை 300 அடி தூக்குவதும், சரியாகின்றது. ஆகையால் திடகாத்திரமுள்ள ஓர் வேலைக்காரன் ஒருநாள்முடியச்செய்யும்வேலை 1 டன் பளுவை 300 அடி உயரம் தூக்கும் வேலையாகவிருக்கின்றது. திடகாத்திரனான வேலைக்காரனுக்கு இவ்வளவு பிரமாணம் என்று நாம் எடுத்துக்கொண்டால், ஒரு சாதாரண புருஷன் சாதாரணமாய்த்தன்னுடைய தேகசௌக்கியத்தைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டியதற்கு வியாயாமம் இதிற்பாதியாகக் கணக்கிட்டு 150 டன் பாரமுள்ள ஒரு மூட்டையை 1 அடி உயரம் தூக்குவதற்குச் சமானம் என்று நிச்சயித்திருக்கின்றார்கள். இவ்விதமாய்ச் செய்யும் வேலையை வியாயாமமாகவே எண்ணிக் கணக்கிட்டுப்பார்க்கும்பொழுது இவ்வாறு 150 டன் பாரத்தை ஓர் அடி உயரம் ஒருமனிதன் தூக்குவதால் அவன் தேகத்தினின்று செலவாகும் சக்தி அதேமனிதன் சமதரையில் உத்தேசமாக 8 அல்லது $8\frac{1}{2}$ மைல் நடப்பதாற் செலவாகும் சக்திக்குச்சமமென்று பிரசித்த வைத்தியர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வண்ணம் ஏற்படுத்திய கணக்கின் சித்தாந்தம் ஒவ்வொருமனிதனும் சாதாரணமாய்த் தனது தேகத்தை சௌக்யமாக வைத்துக்கொள்ள ஒருநாளைக்கு 8 அல்லது 9 மைலுக்குக் குறையாமல் நடக்கவேண்டும் என்பதாம். அல்லது இவ்வளவுக்குத்தக்கபடி வேறுவித வியாயாமம் செய்யவேண்டுமென்பதாம். பிரசித்த வைத்தியர்கள் குடும்பநிலைமையிலிருக்கும் கிரகஸ்தனுக்கு பரிசுத்தமான ஆகாயமுள்ள வெட்டவெளியில் ஒருநாளைக்கு 6 மைலுக்குக்குறையாமல் உலாவுவதே போதுமென்று நிச்சயித்திருக்கிறார்கள். சாதாரணமாக ஒவ்வொரு மனிதனும் 8 அல்லது 9 மைல் உலாவவேண்டும் என்று மேலே சொன்னோமல்லவா? அதில் ஒவ்வொருவனும் வியாயாமம் என்று அறியாமலே ஒருநாளைக்கு சராசரி 2 அல்லது $2\frac{1}{2}$ மைல் சுற்றிவிடுகிறான் என்றும் ஆகையால் அதுபோக எஞ்சியிற்கும் 6 மைல் தூரத்தை உலாவியே தீரவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

வியாயாமம் அவசியம்:—தேகசௌக்கியத்திற்கு வியாயாமம் அவசியம். அப்படியில்லாவிடில் பலங்குறைவதுடன் சுவாசாசயம் இரத்தாசயம் இவைகளிற் பலவித நோய்களுண்டாய்த்தேகம் பருத்து உற்சாகமும் குறையும். இரண்டொருதலைமுறை ஒரு குடும்பத்தில் வியாயாமமில்லாமற்போ

ளுல் அக்குடும்பத்தில் ஜனிப்பவர்களுக்குப்புத்திக்குறைவு தவருமல் உண்டாகிறது என்றும் ஏற்படுத்தியிருக்கிறுர்கள்.

வெட்டவெளியில் ஒருநாளைக்கு 6 மைலாவது நடப்பது ஒவ்வொரு சாதாரண மனிதனுக்கும் அவசியம் என்று சொன்னேம். இதே வியாயாம முறை எல்லாரும் நடந்தேதீரவேண்டுமென்பதல்ல. சிலர் குதிரை சவாரி செய்யலாம், சிலர் கழிசுற்றலாம், சிலர் நீந்தலாம், சிலர் வெட்டலாம், சிலர் பூமியைச்சீர்திருத்தலாம்: இம்மாதிரி பலவழியாக ஒவ்வொருவனும் 6 மைல் வெளியே நடப்பதால் உண்டாகும் சிரமத்துக்குத்தக்கபடி வியாயாமம் செய்துவந்தால் அதுவே போதும். ஒவ்வொருவனும் ஒரேவித திடகாத்திரம் பெற்றவனுயிருக்கமாட்டான். சிலர் ஏதோ நோயால் 6 மைல் நடக்க சக்தியில்லாதவர்களாகவிருப்பார்கள். சிலர் அங்கஈனத்தாலோ அல்லது வேறுவித காரணத்தாலோ அவ்வாறு செய்யச்சக்தியில்லாதவர்களாக விருப்பார்கள். இவ்வகைப்பட்டவர்கள் தங்கள் தங்கள் தேக ஊனத்துக்கும் பலாபலத்துக்கும் தகுந்தபடி தங்கள் வியாயாமங்களை ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும்.

குழந்தைகளின் வியாயாமம்:—குழந்தைகளுக்கு வியாயாமம் வேறு. இவைகளை நாம் ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டும். குழந்தைகள் எப்பொழுதும் குறுகுறுவென்று அவைகளின் கால்களையும் கைகளையும் அசைத்துக்கொண்டேயிருப்பதை நாம் பார்க்கும்பொழுது வியாயாமம் என்பதை அவைகளுக்கு ஈசன் இயல்பாகவே கொடுத்திருக்கிறுர் என்று நாம் சொல்லலாம். ஆகையாற் குழந்தைகளின் விளையாட்டை நாம் கண்டிக்கக்கூடாது. அவர்கள் மிதமிஞ்சி வியாயாமம் செய்ய இடங்கொடுக்கவுங்கூடாது. குழந்தைகளுக்கு வியாயாமம் அவசியம் என்பதை அறிந்தே குழந்தைகள்பள்ளிக்கூடங்களில் வியாயாமமும் ஒரு முக்கிய பாடமாகவைத்து சொல்லிக்கொடுத்துவர ஏற்பாடும் செய்கின்றுர்கள். 15-வயது வரையில் நமது எலும்புகளும், மாமிசபேசிகளும், தமனிகளும் அதிகமாக கெட்டிப்படாமலிருக்கின்றபடியால் இதற்குள் பேய்ப்பந்து, பச்சைக்குதிரை, பலீஞ்சடார், முதலிய ராக்ஷஸ விளையாட்டில் நாம் பழகலாம். அதன்பிறகு நமது தேகத்துக்கு அதிக அபாயத்தைக் கொடுக்காத வியாயாமத்தில் நாம் சேரவேண்டும். பலீஞ்சடார் முதலிய விளையாட்டில் 15,16 வயதுக்கு மேற்பட்டுச்சேர்பவர் ஒரு சமயம் கீழேவிழுந்து ஏதாவது ஒருதமனி அல்லது மாமிசபேசி இவைகளைப்போன்ற தமது உறுப்புக்களுக்கு அபாயம் நேரிட்டால் அவ்வுறுப்பை மறுபடி சரியான நிலைமைக்குக்கொண்டுவருவது வெகு கஷ்டம்.

பெண்களுடைய வியாயாமம்:—ஆண்களுக்கும் பெண்களுக்கும் வியாயாமம் என்பது வெகுஅவசியம். நமது நாட்டிற் பெண்கள் வியாயாமம்

என்று தனியாகச்செய்யாவிடினும் அவர்கள் தங்களுக்கு என்று ஏற்பட்டிருக்கும் கிரகத்தொழிலைச்சரியாகச் செய்வார்களேயானல் அதுவே அவர்களுக்குப் போதுமான வியாயாமமாம்.

வியாயாமத்தின் குணம்:—வியாயாமத்தில் நாம் முக்கியமாய்க்கவனிக்க வேண்டியதொன்றுண்டு. நாம் செய்யும் வியாயாமம் நமது தேகத்திலுள்ள வெல்லா மாம்சபேசிகளுக்கும் சரியான தொழிலை ஒரேரீதியாகக் கொடுக்க வேண்டும். பச்சைக்குதிரை தாண்டுவது ஓடுவது இவ்வகையான வியாயாமத்தில் முதுகிலும் காலிலுமிருக்கும் மாம்சபேசிகள் அதிகமாக வேலைசெய்யும். கைகளிலும் தோள்களிலுமிருக்கும் மாம்சபேசிகளுக்கு வேலை அதிகமாகவில்லை. ஓடம் ஓட்டும்பொழுது துடுப்புப்போடுவதிற்கைகளிலிருக்கும் மாம்சபேசிகளுக்கு அதிக உழைப்பு. இவ்வாறு சிலதொழில்களிற் சில மாம்சபேசிகள் மட்டும் அதிகலாபமடையும். அவ்வாறில்லாமல் நாம் செய்யும் வியாயாமம் நமது தேகமெங்குமிருக்கும் மாம்சபேசிகளெல்லாம் ஒரேவிதமான உழைப்பையடையும்படி நாம் பார்க்கவேண்டும். அவ்வாறு எல்லாக் குணங்களுமமைந்த வியாயாமங்கள் குதிரைசவாரி, நீந்துதல், மரமேறுவது, உலாவுவது இவைகளேயாம்.

வியாயாமம் என்பது நித்தியமாயும் நிதானமாயுமிருக்கவேண்டும். பல நாள் விட்டு ஒருநாட் செய்வதில் ஒருவிதப் பிரயோஜனமுமில்லை.

நமக்கு வயதுசெல்லச் செல்ல நாம் தேகசிரமப்பட்டு உழைப்பதும் வியாயாமம் செய்வதும் நமக்கு வெறுப்பாகத்தோன்றும். இவ்வண்ணம்தோன்ற ஒருபொழுதும் நாமிடங்கொடுக்கக்கூடாது. அவ்வாறு இடங்கொடாமல் நாம் தேகவியாயாமம் செய்துவருவோமேயானல் தேகசௌக்கியத்திற்கு ஒருவிதக்குறைவுமின்றி சுகமாக வாழ்வோம்.

இவ்வளவு தூரம் பொதுவாக வியாயாமத்தைப்பற்றிச் சொன்னேம். இனி நமது தேசத்துப் பள்ளிக்கூடங்களில் நடத்திவரும் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் எப்பொழுதும் அவசியமான சில வியாயாமங்களை எடுத்து எழுதுவோம்.

பள்ளிக்கூடத்தில் நடத்திவரும் வியாயாமம்:—முதன்முதல் ஸமார்களம் (Parallel Bars) என்று சொல்லப்படும் கழிகளில் தேகத்தை நிலைநிறுத்துதல் அதாவது கட்டைவிரல் உள்ளேயிருக்கும்படியாக இருகரங்களாலும் சமார்களத்தின் இருகழிகளையும்பற்றித்தேகத்தை மேல் எழுப்பித்தலையைநிமிர்த்தி நேர்நோக்கி மார்பை முற்படுத்திக்கொண்டு தேகத்தை நிலை

கிறுத்தவேண்டும். இம்மாதிரி, பலவித்தியாசங்களுடன் சமார்களத்தில் (Parallel bars) அப்பியசிக்கவேண்டிய வியாயாமங்கள் பல. அவைகளை வருணிப்பதைக்காட்டிலும் நேரில் ஒவ்வொருபள்ளிக்கூடத்திலும் பார்த்த றிந்துகொள்ளலாம். வியாயாமத்திற்கு என்று ஏற்பட்டிருக்கும் 6 சாஸ் திரங்களில் அவைகள் வருணிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளால் நமக்கு ண்டாகும் பிரயோஜனம் நமது மார்பை விசாலமாக்கி நமது சுவாசாசயத் தைப்பலப்படுத்திக் கைகளுக்கு அதிக வலியை அளிப்பதேயாம்.

(2) அதுல்யலம்பகம் (Trapezium).—இது ஊஞ்சல்போற் கயிறுகட் டித்தொங்கும் ஓர் வியாயாம சாதனம். இதில் வியாயாமம் பலவிதமாகச் செய்வார்கள். தேகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு இதில் வியாயாமஞ் செய்யவேண்டுமாகையால் இவ்வகையான வியாயாமங்கள் நமது தேகத் தின் விஸ்தீரணத்தை அதிகரித்துவைக்கிறதென்றும் கைகளுக்கு அதிக பலத்தைக்கொடுக்கிறதென்றும் சுகசந்தர்சன சாஸ்திரிகள் சொல்லுகின்றார் கள்.

(3) தொங்கும் வளையங்கள்; (Rings)—இதிற் செய்யப்படும் பலவித வியாயாமங்கள் அதுல்யலம்பகத்திற் செய்யப்படும் வியாயாமங்களைப்போல நமது களேபரத்திற்கும் கைகளுக்குமே அதிக வலிமையும் கொடுக்கும். ஆனால் இவ்வளையங்களிற் செய்யப்படும் வியாயாமங்கள் தேகத்தின் மேற் பாகத்துக்கு அதிக வலிமையைக்கொடுக்கும்.

(4) தாண்டு குதிரை (Vaulting Horse) இதிற்செய்யப்படும் வியாயா மங்கள் நமது தேகத்தின் ஒவ்வொருபாகத்திற்கும் வலிமையை ஒரேருபமா கக் கொடுப்பதுடன் அபாயமில்லாமல் நிதானமாய் உறுதியுடன் ஒவ்வொரு வியாயாமத்தையும் செய்யவேண்டுமாகையால் இது எல்லாவித வியாயாமங் களுக்கும் மூலகாரணமான வியாயாமமாகச் சொல்லலாம்.

(5) ஏணி

(6) சநுக்குகம்பம். அல்லது பல்கை.

இவைகளில் நடத்தப்படும் பலவித வியாயாமங்கள் நமது கைக்கு வலி மையைக்கொடுக்கின்றன. இவைகள்தாம் பள்ளிக்கூடத்தில் விசேஷமாக நடத்தப்படும் வியாயாமங்களாம்.

நாம் சிறுகுழந்தைகளாக விருக்கும்பொழுது ஆற்றங்கரை மணலில் உப்புக்கோடு(உப்புக்கந்தம்) பலிஞ்சடார், பச்சைக்குதிரை, கிளிக்காதம் முத லிய விளையாட்டுக்கள் விளையாடியிருப்போம். இவைகளெல்லாம் நம்மையறி யாமல் நாம் செய்துவந்த வியாயாமங்களேயாம்.

இவைகளையெல்லாம்விட அதிகமாகத் தற்காலத்தில் வந்திருக்கும் (Sando's System of Physical Training) ஸாண்டோவின் வியாயாமமுறையை எல்லாரும் சிலாக்கியமாக ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். இதில் டம்பெல்ஸ் என்று சொல்லப்படும் கரேலாவினால் 19 முறை வியாயாமங்கள் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை அதற்காக எழுதப்பட்டிருக்கும் புஸ்தகத்திற் காண்க.

லான்டெனிஸ் (Lawn Tennis), பாட்மின்டென் (Badminton) புட்பால், (Foot ball) கிரிகெட் (Cricket), பேப்பந்து, பிள்ளையார்பந்து, என்று சொல்லப்படும் பலவித பந்துவிளையாட்டுக்களுண்டு. அவைகளால் நமது தேகத்தின் எல்லா அவயவங்களுக்கும் நல்வித வியாயாமம் உண்டாகின்றபடியால் இவ்விளையாட்டுக்கள் வெகு உத்தமமானவைகளாம். (Foot ball) புட்பால்,(Cricket)கிரிகெட்டு, பேய்ப்பந்து இவைகளில் அதிக வயதுசென்றவர்கள் அதிகமாகச் சேரமாட்டார்கள். இவர்களுக்கு லான்டெனிஸ் பாட்மின்டன் இவைகள் வெகு நலம்.

எட்டாம் அதிகாரம் வாயு.

Chapter VIII—Air.

ஆகாயம் முக்கியம்:—தேக அமைப்பின் சாஸ்திரத்தைக்கொண்டு நாம் யோசித்துப்பார்க்கும்பொழுது ஆகாரம் முதலியவைகள் ஜீவனுக்குஎவ்வளவு தேவையோ அதுபோலவே சுவாசிக்க நல்லஆகாயமும்தேவை என்பது ஏற்படுகின்றது. நமது தேகத்துக்குள் எப்பொழுதும் ஓடும் இரத்தமானது அடிக்கடி நமதுசுவாசாதாரக்கருவியால் சுத்த ஆகாயத்தை வெளியிலிருந்து பெற்றுபரிசுத்தமாய்க்கொண்டேவருகின்றது. மரணக்கணக்கைப் பரிசோதித்த சுககந்தர்சனவாதிகள் பரிசுத்தமான ஆகாயமில்லாத காரணத்தால் மரணம் சம்பவிப்பதைப்பற்றி விசேஷமாகச் சொல்லியிருக்கின்றார்கள். நாம் இவ்வுலகத்திற் பிறக்கும்பொழுதே முதன்முதல் உட்கொள்வதுஆகாயந்தான். இவ்வுலகத்தைவிட்டு இறந்துபோகும்பொழுதும் நமக்குப்பின் கடைசியாக நாம் விட்டுப்போவது ஆகாயந்தான். ஒவ்வொருவனுடைய தேகசௌக்கியத்திற்கும் பரிசுத்தமான ஆகாயம் வெகு முக்கியம். அப்பரிசுத்தம் குறையக் குறைய தேகசௌக்கியமும் குன்றும். மனிதர்களாகிய நமக்குமட்டும் இப்பரிசுத்தமான ஆகாயம் வேண்டும் என்பதல்ல. மாடுகள் முதலாகிய கால்நடைகளுக்கும் இது வெகுமுக்கியம் ஆகையால், ஆகாயம், நமது தேக

சௌக்யத்தையும், நமக்கு உபயோகமாக நமது வீட்டுக்கருகில் நாம் கட்டிவைத்துக்கொள்ளும் மாடுகள் குதிரைகள் இவைகளுடைய சௌக்யத்தையும் எவ்வாறு விளைவிக்கின்றது? எவ்விதமாக வாசஸ்தானங்கள் லாயங்கள் கொட்டில்கள் இவை அமைக்கப்பட்டிருக்கவேண்டும்? என்ற விஷயங்களைப்பற்றி விசாரிப்போம்.

ஆகாயமானது தேக சௌக்யத்தை மூன்று விதத்தால் மாற்றலாம்:—(1) சாதாரணமான ஆகாயத்தின் அமைப்பு எதுவோ அவ்வாறின்றி வேறுபட்டிருத்தல். (2) ஆகாயத்திலேயே அவ்வமைப்பு இல்லாதிருத்தல். (3) அசுத்தமான ஆகாயம்.

அசுத்தமான ஆகாயம் நமது சரீரசுகத்தைக்குறைக்கின்றது என்பது மட்டும் சித்தாந்தமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதேயன்றி இன்ன அசுத்தம் இவ்வளவுதூரம் குறைக்கின்றதென்பதாக அவ்வளவு சரியான கணக்குடன் ஏற்படவில்லை. இவ்விஷயத்தைப்பற்றி விவரமாகக் காற்றேட்டத்தின் கீழ், இக்காலம்வரையிற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற தத்துவங்களைக் கொண்டு எழுதுவோம். இங்கு நாம் ஆகாயத்தின் அமைப்பைப்பற்றியும் அவ்வமைப்பின் இயற்கை தவறியிருத்தலாற் சாதாரணமாக உண்டாகக்கூடிய நோய்களைப்பற்றியும் எழுதுவோம்.

நல்ல ஆகாயம் அதாவது பரிசுத்தமான வாயு:—இதை நாம் ஒருகணக்காக ஒருவித நிறை எடுத்துக்கொண்டு பரிசோதித்து பார்ப்போமானல் இதில் ஓர் ஆயிரத்திற் சற்றேறக்குறைய 209½ பங்கு பிராணவாயுவாகவும் 790 பங்கு உப்புவாயுவாகவும் ½ பங்கு கரிமலவாயுவாகவு மிருக்க நாம் காண்போம்.* இதனடியிற் காலநிலைமைக்குத்தக்கபடி ஜலவாயுவும் இன்னும் மற்ற அணுக்களும் இவ்வாயுவுடன் கலந்திருக்கலாம். மலை நாடுகளில் உன்னத சிகரங்களிற் பரிசுத்தமாக அடிக்கும் காற்றிற் பிராணவாயு 209½ பங்கிருக்கும். நகரங்களில் அதே பிராணவாயுவின் பிரமாணம் 208¾ முதல் 209 வரையிலிருக்கும். நீராவிகள் ஆகாயத்திற் கலந்திருப்பது அந்தந்தத் தேசநிலைமையால் வேறுபடும்.

ஆகாயத்தின் அசுத்தங்கள்:—தூமம், ஆவி, கனபதார்த்தங்களின் தூசுகள் இவை போன்ற எவ்வளவோ வஸ்துக்கள் அடிக்கடி ஆகாயத்திற் சம்பந்தித்துக்கொண்டேயிருக்கின்றன. அவ்வாகாயத்தை நாம் சுவாசிக்கும் பொழுது ஒருவாறு அதிலின்னவஸ்துக்கலந்திருக்கின்றதென்பதைத் தெரிந்துகொள்ளுகின்ரும். சிற்சில வேளைகளிற் றெரிந்து கொள்ளாமலே அவ்

---

* Oxygen 209·6. Nitrogen 790·0. carbonic acid 0·4.

வாகாயத்தை நாம் சுவாசிக்கின்றோம். சில ஆகாயத்தை நுகருவதால் முதன் முதல் அதிலிருக்கும் பேதம் நமக்கு விளங்கும். அதன் பிறகு அதே ஆகாயத்தை நாம் கொஞ்சநேரம் நுகரும் பொழுது அதின் பேதமே நமக்குத் தெரியாமல் அதே ஆகாயம் சரியான ஆகாயமாகத்தோன்றும். உலகத்தின் மேற் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் ஆகாயத்தைப் பரிசுத்தமாக எப்பொழுதும் பண்ண அநேக ஏற்பாடுகள் மண்ணிலும், விண்ணிலும் நடந்து கொண்டேயிருக்கின்றன.

ஆகாயம்பரிசுத்தமாவது எப்படி?—தூமங்களும் ஆவிகளும், விண்ணில் ஏறவே உடைபட்டுக் காற்றாற் சிதறிவிடப்பட்டு தேகசௌக்யத்துக்குக் குறைவை விளைவிக்காதவண்ணம் பிரசாரணம் செய்யப்படுகின்றன. மழை பொழிவதாலும் இவைகள் சில வேளைகளில் அகலும். காற்றால் விண்ணிற் கிளப்பப்படும் கனபதார்த்தங்கள் தங்கள் கனத்தின் காரணத்தாலேயே பூமியில் மறுபடி இறங்கிப்படிகின்றன. இக்கனபதார்த்தங்கள் பஞ்சபூத சம்பந்தமாக விருந்தால் அவைகள் பிரிந்து தங்கள் தங்கள் வகையைச் சேருகின்றன. ஆகையால் ஆகாயத்தைப் பரிசுத்தம்பண்ணிவைக்க முக்கியசாதனங்களாகிய மழை, காற்று, பிரசாரணம் அதாவது காற்றாற் பரப்பப்படுதல் இவைகளால் நமக்கு வேண்டிய ஆகாயம் எப்பொழுதும் பரிசுத்தமாகப் பண்ணப்படுகின்றது என்று சொல்லவேண்டும். இவைகளன்றியும் ஆகாயத்தை ஓஷதிவர்க்கங்கள் ஒருவாறு கரிமலவாயுவை வாங்கிக்கொண்டு வளருவதால் எப்பொழுதும் பரிசுத்தமாகப்பண்ணிக்கொண்டேயிருக்கின்றன. இவ்விதமாக இயல்பாகவே ஆகாயத்தைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டிருக்க இச்சாதனங்கள் ஏற்படாவிடில் மனிதர்களாகிய நாம் சுகமாக உயிருடன் வாழ ஒருபொழுதும் பரிசுத்தமான ஆகாயம் இருக்கவே மாட்டாது. இயல்பாக இவ்வாறு ஏற்பட்டிருக்கும் பலசாதனங்களை நமது துர்ப்புத்தியால் நாம் தடை செய்வதாற்றான் நமக்குக் கடவுள் கொடுத்திருக்கும் பரிசுத்தமான ஆகாயத்தை நாம் கெடுக்கின்றோம்.

நாம் சுவாசிக்கும் ஆகாயத்தை நமது வாயாலும், மூக்காலும் தொண்டையிலும் மார்பிலும் அமைக்கப் பட்டிருக்கும் சுவாசக்குழல்களாலும், சுவாசக்கருவியாலும் உட்கொள்ளுகின்றோம். அவ்வாறு நாம் சுவாசிக்கும் ஆகாயத்தில் நமது நிலைக்குத்தக்கபடி காஸ் என்னும் வாயுக்கள், தாதுக்களையும் பூண்டுகளையும் சேர்ந்த கனபதார்த்தங்கள் கலந்திருக்கலாம். மண்தூசி, கந்தகசம்பந்தமானதூசி இவைகளைப்போன்றவற்றை நாம் சுவாசிக்கும்பொழுது தாதுக்களைச்சேர்ந்த கனபதார்த்தங்களையும் சுவாசிக்கின்றோம். நெல்போரடிக்கப்படுமிடத்தில் உண்டாகும் தூசிகள் மலர்களி

லிருக்கும் பூந்தாதுக்கள் இவைகளைப்போன்றவற்றை நாம் நுகரும்பொழுது பூண்டுசம்பந்தமான கனபதார்த்தங்களை நாம் உட்கொள்ளுகின்றோம். காஸ் என்னும் வாயுவை நாம் சுவாசிக்கும் ஆகாயத்தில் உட்கொள்ளுவதாகச்சொன்னோமே? அவ்வாயு நமது இரத்தத்துடன் வெகுவேகமாகக் கலக்கின்றது. நமது சுவாசக்கருவி நமது தேகத்துக்குள் முடியுமிடத்தில் அதின்சுவரில் சுமார் 50 அல்லது 60 லக்ஷம் சிறுதுவாரங்கள் அமைந்த பலகணிவாய் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இத்துவாரங்களுக்கு (Aircells) காற்றுக்கண்கள் என்று பெயர். இக்கண்கள் வழியாக நாம் சுவாசிக்கும் வாயுவிலிருக்கும் காஸ் என்ற வாயு நமது இரத்தத்திற் கலந்து விடுகின்றது.

நாம் சுவாசிக்கும் ஆகாயத்திலிருக்கும் கனபதார்த்தங்கள் பெரும்பாலும் உட்செல்லாமலே மூக்கின் துவாரங்களிலும், வாயிலும் படிந்து சுவாசப்பைக்கு வெளியிலேயே நின்றுவிடும். சிலசமயங்களிற் சுவாசப்பையிலிறங்கினால் அவைகள் அழிந்துபோகும் குணமுள்ளவைகளாகவிருந்தால் அழியும், மாறுபடும். எடுத்துத்தான் தீரவேண்டியவைகளாகவிருந்தால் எடுபடுகின்றவரையில் உபத்திரவத்தை விளைவிக்கும். அல்லது சுவாசாசயத்தினுட் சதையால் மூடப்பட்டு உடலுக்குள்ளேயே நிற்கும். வாயிலும், மூக்கிலும் நின்றுவிடும் பதார்த்தங்கள் சிலவேளைகளில் விழுங்கப்பட்டு தேகத்திற் செரித்துவிடும். சில சமயங்களில் நீக்கப்படும். ஆகையால் நாம் நமது வாயையும் நாசிகாதுவாரங்களையும் அடிக்கடி அலம்பி வெகு பரிசுத்தமாகவைத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு நாம் எச்சரிக்க முக்கியமானகாரணம் என்னவெனில், விஷஜ்வரம் விஷபேதி இவைகளின்மேற்பட்ட காற்றை நாம் சுவாசிக்க நேரிட்டால் அது சுவாசாசயத்திற் புகுமுன் அதிலிருக்கும் சிறு கனபதார்த்தங்கள் வாயிலும் மூக்கிலும் படிகின்றனவென்பதும் அவ்வாறு படிந்த கனபதார்த்தங்களை நாம் விழுங்கிவிடுவோமேயானால் நம்மை இந்நோய்கள் பற்றிக்கொள்ளும் என்பதும் சுகசந்தர்சன வாதிகளின் கொள்கை. ஆகையால் இந்நோய்கள் நாம் சுவாசிக்கும் காற்றால் விளைவதல்ல, நாம் விழுங்கும் அக்காற்றைச்சேர்ந்த கனபதார்த்தத்தால் என்று பிரசித்தவைத்தியர்கள் ஒருவாறு கண்டுபிடித்திருக்கின்றார்கள். ஆகவே நாம் நமது வாயையும் மூக்கையும் அடிக்கடி அலம்பிப் பரிசுத்தமாக வைத்துக்கொள்வதிற் பலவித நன்மைகளுள.

ஆகாயத்தில் அவலம்பித்துத் தொங்கும் பதார்த்தங்கள்:—ஆகாயத்தில் தாதுவர்க்கத்தையும் ஓஷதிவர்க்கத்தையும் சேர்ந்த பலவித கனபதார்த்தங்கள் தொங்கிக்கொண்டிருக்கலாம். வண்டியோடும்பொழுது பாதைகளில் தூசிகள் கிளம்பிக்கொண்டேயிருக்கின்றன. எரிமலைகளின் உச்சிவெடித்

செந்தமிழ்.

தொகுதி-௩.] விசுவாவசுஷூ சித்திரைமீ [பகுதி-சு.

கம்பர் காலம்.

மேலுரைத்த கம்பரது வரலாற்றால் அவரது காலம் இஃதாகுமென ஒருவாறு ஆராய்ந்துகொள்ளலாகும். ஆயினும் அதனைப் பலருந் தெளியுமாறு வெளிப்படவைத்து விளக்கி ஈண்டுச் சில கூறுவேன். கம்பர் வரலாற்றால், அவர் சடையற் குயிர்த்துணைவர் எனவும் ஓரங்கலுருத்திரனாற் சிறப்பிக்கப்பட்டனரெனவும் தெரிதலோடு சடையவள்ளலுக்குச் சங்கரன் தந்தையெனவும் * ஒட்டக்கூத்தர் அச்சங்கரனுக்கு முதலில் உதவித்தொழில் புரிந்துகொண்டிருந்தனரெனவும் தெளிதலுமாயிற்று. சங்கரசோழனுலா வுடையார்,

> "கூடிய சீர்தந்த வென்றெடுத்த கூத்தனுலாச்
> சூடிய விக்கிரம சோழனும்—பாடிய
> வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன்
> பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனுந்—தெள்ளித்தன்
> முன்னாய் சரினவன் மூதுலாக் கண்ணிதொறும்
> பொன்னாயிரஞ் சொரிந்த பூபதியும்"

என வுரைத்ததனாற், கூத்தர், விக்கிரமசோழன் முதலாக மூவர்சோழரைப்பாடினாரென் றறியப்படுதலின், அவர் அச்சோழர் மூவர் காலத்தவ ரென்பது நன்கறிந்தது. அச்சோழர்மூவரும், விக்கிரமனும் அவன்மகன் குலோத்துங்கனும், அக்குலோத்துங்கன் மகன் இராசராசனும் ஆவரென்பது அக்கூத்தர் பாடிய மூன்றுலாக்களாலுந் தெளிந்தது. இவ்வுண்மை 'கூத்தருங் குலோத்துங்கன்கோவையும்' என்னும் ஆராய்ச்சியினும் நன்குதெளிவிக்கப்பட்டதாம் (செந்தமிழ்,

* செந்தமிழ், தொகுதி-௩, பக்கம்-சு.

தொகுதி ௩. பக்கம் ௧௬௪) புராதனசாசன ஆராய்ச்சியுடையார் பலரும் விக்கிரமன் கி. பி. ஆண்டு 1118 முதல் 1132 வரைக்கும், குலோத்துங்கன் கி. பி. 1132 முதல் 1162 வரைக்கும்,இராசராசன் கி. பி. 1162 முதல் 1200க்கு மேற் சிலவாண்டுகள் வரைக்கும் அரசாண்டார்களெனக்கூறுவர். இதனுற் கம்பருக் குயிர்த்துணைவனுன சடையவள்ளலுடைய தந்தையாகியசங்கரனுக்கு உதவித்தொழில் புரிந்து கொண்டிருந்த ஒட்டக்கூத்தர், கி. பி. 1118-க்கும் கி. பி. 1200 க்கும் இடைப்பட்ட காலத்தே பெயர்சிறந்திருந்தவரென்று கொள்ளலாகும். விக்கிரமன் அரசாட்சிக்காலம் 14 ஆண்டேயாகக், கூத்தர் அக்காலத்தே புலமை நிரம்பினராகி அவனை உலாவாற் பாடினரென்பதனுல், அவர் அவ்விக்கிரமன் ஆட்சி யெய்தற்கு முன்னே பிறந்தவராதல் தெள்ளிதாம். கூத்தர், விக்கிரமன் முதலாக மூன்றுதலைமுறையரசர் காலத்தவராதலால் அவர் விக்கிரமன் அரசாட்சியினிறுதிக்காலத்தேதான் புலமைநிரம்பினராகி, அவனை உலாவாற் பாடினராவர் எனக் கூறுதலாகும். விக்கிரமனுட்சி 1132-க்கு மேற் படாமையால், கூத்தர் உலாப்பாடிய அவனுட்சியின் இறுதிக்காலம் 1130-க்கும் பிற்பட்டிருத்தல் பொருந்தாதாம். கூத்தர் விக்கிரமனை உலாப்பாடும்போது அவருக்கு வயது இருபதிற் குறைந்திரா தென வைத்துக்கொள்ளலாகும். விக்கிரமசோழன் கூத்தருக்கு முதன் முதல் பரிசில்பல நல்கிச் சிறப்புச் செய்தபோது அவர் ‘இடுக்கட் புண்படு நிரப்புக் கொண்டுழன் றிரக்கச் சென்றவின் றெனக்குச் சிங்களந், திடுக்குற் றஞ்சும்வெஞ் சினத்துச் செம்பியன் றிருக்கைப் பங்கயஞ் சிறக்கத் தந்தன” என்பதனுற் றம்வறுமைப்பட்ட நிலையை எடுத்துரைத்தலின், அக்காலம், குடும்பவருத்தம் நெஞ்சிற் றேற்றி அதனைத்தீர்த்தற்கு அவர் உழன்றதோர் பெரும்பிராயகாலமாகுமென்றும் ஊகித்தல் கூடும். தமிழ் நாவலர். சரிதைக்கண் *‘நடித்தது நச்சரவு’ என்னுஞ் செய்யுட்டலைப்பில் “சரசுவதி தம்பலங்கொடுக்கக் கவிதையுண்டாகிய கூத்தமுதலியார் அரும்பைத் தொள்ளாயிரம் பாடும்போது விக்கிரமசோழன் கேட்டு ஒரு கவியை ஒட்டச்சொல்லென்று சொன்னபோது பாடியது” எனவமைந்திருத்தலால், கூத்தருக்குக் கவிதையுண்டாகிய காலம் விக்கிரம

* செந்தமிழ், தொகுதி-௨, பக்கம்-௩௧௮.

சோழன் ஆட்சிக்காலமே யென்பது அறியப்படும். கூத்தர் குலோத்துங்கன் ஆட்சிக்காலமாகிய முப்பதியாண்டையும் கடந்து இராசராசனது நெடிதாட்சிக்காலத்தின் முற்பகுதியின் பெரும்பாகத்தும் இருந்தாராவரென்று அறியப்படுதலால், அவர் விக்கிரமன் காலத்திற் கவிதையுண்டானவராகி அவனை உலாவாற்பாடியபோது, அதிகவயதாயினராகக் கொள்ளுதற்கும் இயையாதாம். இவற்றாற் கூத்தர் விக்கிரமனுலாப்பாடியபோது இருபது பிராயத்தின ரெனவும் அது விக்கிரமன் இறுதியாட்சிக்காலமாகிய கி. பி. 1130-க்கு அடுத்ததாமெனவும் கொள்ளின், கூத்தர் பிறந்த காலம் கி. பி. 1110 எனக் கூறலாம்.

சடையவள்ளலுடைய தந்தையாகிய சங்கரனுக்கு உதவித்தொழில் புரிந்து கொண்டிருந்த கூத்தர் கி. பி. 1110-ஆம் ஆண்டினை அடுத்துப் பிறந்தவரானல், கூத்தனை அத்தொழிற்கு அமைத்துக் கொண்ட சங்கரன் கூத்தரின் மிகமூத்தோனுவ னென்று ஊகித்தலாகும். கூத்தர் சங்கரனுக்கு உதவித்தொழில் புரிந்தது அவருக்குக் கவிதையுண்டாதற்கு முன்னேயாம். அக்காலம் கூத்தருடைய இளமைக்காலமாகத்துணியப்படும். அன்றியும் கூத்தர் விக்கிரமனுலாவின்கண் அச்சோழனிருமருங்கும் 'மந்திரிகள் படைத்தலைவர், சிற்றரசர், பெருங்காணியாளர் எனப்பலர் மொய்த்தீண்ட உலாப்போந்தான்' எனக் கூறுமிடத்து விக்கிரமன் தந்தையாகிய அபயன் காலத்தே கலிங்கம் வென்று கொண்ட கருணாகரத்தொண்டைமான் முதலிய பலருடன்,

> " ... ... மோட்டரணக்
> கொங்கைக் குலைத்துக் குடகக் குவடொடித்த
> செங்கைக் களிற்றுத் திரிகர்த்தனும்"

என்பதனல் திரிகர்த்தனைக் கூறுதலின், விக்கிரமசோழன் காலத்தே திரிகர்த்தனுகிய சடையன் சிறந்திருந்தனன் என்பது தெளியப்படும். சங்கரன் மகனை வெண்ணைச்சடையனையே திரிகர்த்தன் என்பர் என்பது * 'இராமரொடும் பாமாலை சூடும் குலமுடையானை ....வெண்ணைத்திரி கர்த்தனையே' எனவும் †"பாரிலுள்ளோர்

* † 'செந்தமிழ்' தொகுதி-டு, பக்கம்-ௐ.

கண்ணாக வாழும் வெண்ணைத்திரிகர்த்தன்' எனவும் மேல்வரலாற்று ளெடுத்துக்காட்டிய மேற்கோள்களால் நன்கறிந்தது. விக்கிரம சோழனதிருமருங்கும் மொய்த்தீண்டிய இப்பலர் வரிசையில்,

" ... ... மட்டையெழக்
காதித் திருநாடர் கட்டரணங் கட்டழித்த
சேதித் திருநாடர் செல்வனும்"

என்பதனாற் சேதிராயனும் கூறப்பட்டுளான். சேதிராயன் என்பான் சடையனுடனிருந்து கம்பருடைய ஏரெழுபதினைக் கேட்டவன் என்பதும் அவன் அவ்வரங்கேற்றத்திடையே பாம்பாற் கடிபுண்டு, பின்னர்க் கம்பருடையதெய்வவாக்கால் உயிர்ப்பிக்கப்பட்டான் என் பதும் முன்னை வரலாற்றாற் றெரிந்தனவாம். (செந்தமிழ்த் தொகுதி ரு, பக்கம்-எ) இச்சேதிராயன் காலத்தே திரிகர்த்தன் எனப்பட்டான் சடையனல்லாமல் வேறில்லாமையால் விக்கிரமசோழ னுலாவிற் கூற ப்பட்ட திரிகர்த்தன் சடையனே யாவனெனத் தெளிந்துகொள்க. இதனாற் கம்பர்பால் ஏரெழுபது கேட்ட சடையனும் சேதிராய னும், கூத்தர் விக்கிரமனைபுலாவாற்பாடும்போதே சிறப்புற்றிருந்தன ராதல் அறியலாகும். இவ்விக்கிரமனுலாவிற் கூத்தர் சங்கரனைக் கூறுமற் சடையனையே கூறுதலால், அவர் விக்கிரமன்மே லுலாப்பா டும்போது சங்கரன் இறந்தனன் எனவும் சடையனே அக்குடியிற் றலை சிறந்தனன் எனவும் கொள்ளலாம். கூத்தருடைய இளமைக்காலத் தேஅவரை உதவித்தொழிற்கு அமைத்துக்கொண்ட சங்கரன், அவர் புலமை யெய்தி விக்கிரமனைப்பாடியபோது இல்லையாயினன் என்பத னல், அச்சங்கரன் இறந்தகாலம் கூத்தருடைய 16 பிராயத்திற்கும் 20 பிராயத்திற்கும் இடைப்பட்டதாகு மென்று உய்த்துணரலர்கும். கூத்தர் பிறந்த காலம் கி. பி. 1110 எனக்கொள்ளப்படுதலாற் சங்கர னிறந்த காலம் கி. பி. 1127 ஆம் ஆண்டினை அடுத்ததாகுமென்று ஊகிக்கப்படும்.

கம்பர், சங்கரனுடைய இளையமகனும், சரராமனாகியசடைய னுக்குத் தம்பியும் ஆகிய இளையாரமார்பன் என்பானை * "என்னு டைய தம்பி சரராம னுக்கிளையான். ....இளையாரமார்பனி

* 'செந்தமிழ்' தொகுதி-ரு, பக்கம்-அரு.

வன்" என்று பாண்டியனுக்கு அறியவுரைத்தலாற் கம்பராற் றம்பியென்று சிறப்பிக்கப்பட்ட இணையாரமார்பன் பிறத்தற்குமுன்னே கம்பர் பிறந்தவராதல் தெளியப்படும். இதனாற் கம்பர் பிறந்த காலம் சங்கரன் இணையாரமார்பனைப் பிறப்பித்தற்குமுன்னேயாமெனத்தேறலாம். கம்பர் தெய்வவரத்தினாற் கவிசொல்லிய நாளில் முதன் முதற் பாடிய 'மோட்டெருமை வாவிபுக' என்னும் வெண்பாவின்கண்ணே வெண்ணைநல்லூரைச் சங்கரனூர் என்று கூறாமல் "நாட்டில், அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லு, முடையான் சரராமனூர்" எனவே கூறுதலாற் கம்பர் கவித்திறம் எய்தற்குமுன்னே சடையன் கொடைத்திறம்பயின்று சிறந்தனன் எனவும் அக்காலத்துச்சங்கரன் இல்லையாயினன் எனவும்துணியலாகும். கம்பர் கவித்திறமெய்தற்குமுன்னே சடையன் கொடையாற் சிறந்தனன் என்பதனாலும் கூத்தர் புலமை நிரம்பி விக்கிரமனைப்பாடும்போதே சடையனாகிய திரிகர்த்தன் சிறந்து விளங்கினன் என்பதனாலும் சடையன் கம்பருக்கு மூத்தோனாகக்கருதப்படுகின்றான்*. அங்ஙனமாயின் கம்பர் பிறந்தது, சங்கரன்காலத்தே சடையன்பிறந்ததற்குப்பின்னும் இணையாரமார்பன் பிறத்தற்குமுன்னும் ஆம் எனத் தெளியப்படும். கம்பர் கவித்திறம் எய்தற்குமுன்னே சங்கரன் இறந்துவிட்டனன் என்பதனாலும் கூத்தர் இளமைக்காலமெல்லாம் சங்கரனுக்கு உதவித்தொழில் புரிந்துகொண்டிருந்தனர் என்பதனாலும் கூத்தர்விளங்கிய விக்கிரமன்காலத்தே கம்பரும் புலமையாற் சிறந்தது புலப்படாமையாலும் கம்பர் கூத்தருக்கும் இளையராகவே துணியப்படுவர். கூத்தர் பிறந்தது கி. பி. 1110-ஆம் ஆண்டினை அடுத்தும், சங்கரன் இறந்தது கி. பி. 1127ஆம் ஆண்டினை அடுத்தும் ஆதலின், கம்பர் பிறந்தகாலமும் அந்தக் கிபி 1110 க்கும் கிபி 1127க்கும் இடைபட்டதாகுமென்று தெளிந்துகொள்க. இந் நிலையிற் சடையனையும் கூத்தரையும் ஒத்த பிராயத்தினராகக் கொள்ளுதலும்

* 'என்னுடைய தம்பி சரராமனுக்கிளையான்' என்புழிச் சரராமனுக்கிளையனாதலால் எனக்குந் தம்பியாவான் என்பதே கருத்தன்றி, என்னுடைய தம்பியாகிய சரராமனுக்கிளையான் என்பது கருத்தில்லையாதல், 'அடியேற்குஞ் சாருஞ்சரராமனுக்குமொரு தம்பியெனக்கம்பன் புகழும்' எனச்சோழமண்டலசதகமுடையார் கூறியதனானே தெளிந்துகொள்க.

அவ்விருவருக்கும் கம்பர் 10 வருடம் இளையராகக்கருதுதலும் இழுக்காவாம். அவ்வாறு கொண்டு கருதிற் கம்பர் பிறந்தது கிபி 1120-ஆம் ஆண்டினை அடுத்ததாமென உய்த்துணரப்படும். இதனாற்கம்பர் காலத்துக்கு முதலெல்லை சங்கரனது இறுதிக்காலத்தை யடுத்ததென் பதும், அதுவே விக்கிரமனது இடையாட்சிக்காலமென்பதும் உணர்ந்து கொள்க.

இனிக்கம்பருக்கு அடைப்பைகட்டிச் சிறப்புச்செய்த ஓரங்கல் உருத்திரன் காலத்தை யாராயுமிடத்து, ஓரங்கற் கணபதியரசர்களுள் இவ்வுருத்திரன் என்னும் பெயரினர் இருவரிருந்தமை காணப்படும், அவருள் ஒருவன் கிபி 1162க்குச் சிறிதுமுன் முதல் கிபி 1197க்குச் சிறிதுபின்வரை அரசாட்சிபுரிந்தனன் எனவும் மற்றொருவன் *கிபி 1288முதல் கிபி 1323 வரை அரசாண்டனன் எனவும் புராதனசாசன ஆராய்ச்சி செய்தார் கூறுவர். இவருள் பின்னோனாகிய உருத்திரன்காலந்தொட்டே,தான் பிரதாபருத்திராப்தம் வழங்கியது. இச்சங்கத்துள்ள சில பழையதமிழ் ஏடுகளில் அவ்வவ்வேடு எழுதப்புக்க (அல்லது எழுதிமுடித்த) அப்தம் ஆண்டு திங்கள் நாள் முதலியவற்றை வரைந்த பிரதிகளும் உள்ளன. அவற்றுள் இற்றைக்கு நூற்றுறு வருடங்கட்கு முற்பட்டதெனத் தெளியப்படுகின்றதோர் திருக்குறட் பரிமேலழகருரையேட்டில் அவ்வேடு எழுதப்புக்ககாலம் "கலிபிறந்து சென்றது ௪௲௯௱௵; அதில் விக்கிரமாதித்தன் சென்றது ௲௮௱௪௰௯௵.போசராசன் சென்றது ௲௭௱௯௰௯௵.சாலிவாகன சகாப்தம் ௲௭௱௨௰௧௵. ராமதேவாப்தம் ௫௱௰௯௵.பிரதாபருத்திராப்தம் ௫௱௰௧௵.கிட்டிணதேவராயராப்தம் ௨௱௭௰௵. கொல்லம் ௯௱௨௰௫௵........இதன்மேற் செல்லாநின்ற சித்தார்த்தி௵ மார்கழிமீ ௨௧௨ குருவாரம்" என வரைந்துள்ளது. இதன்கட் கூறப்பட்ட மற்றை அப்தங்களெல்லாம் இப்போது வழங்குவனவற்றோடு கணக்கிடுமளவிற் பொருந்தியனவேயாதலால் இதன் பிரதாபருத்திராப்தமும் உண்மையுடையதேயாமென நம்புதலாகும். இதன்கட்கண்ட சகாப்தம் முதலியவற்றாலிவ்வேடு நூற்றுறு வருடங்களுக்கு முற்பட்டதாமெனத்துணியலாம்.

---

* கி-பி. 295 என்றலுமுண்டு.

அந்நூற்றுறியையும் ருககு-வருடத்துடன் கூட்டிநோக்கின் இப்போது பிரதாபருத்திராப்தம் சுகஎ எனத்துணியப்படும். இந்த சுகஎ-வருடங்களையும் நிகழும் கிபி 1905ஸுல் கழித்தால் பிரதாபருத்திரன் காலம் கிபி 1288 என்னலாகும். இதுவே, பின்னோனாகிய உருத்திரன் ஆட்சி யெய்திய காலமாம். கம்பருக்கு அடைப்பை கட்டிய உருத்திரன் இப்பின்னோனாயின், கூத்தர் விக்கிரமனுலாப்பாடுதற்கு முன்னேஇறந்த சங்கரன்காலத்தே இணையார்மார்பனுக்குமுன்னே பிறந்த கம்பர் (அது கிபி. 1120 அடுத்தது) கிபி. 1288க்குப் பிற்பட்டும் இருந்தாரெனப்பட்டுக் கம்பர்வாழ்நாள் 160 வருடங்களுக்கு அதிகமாகி இயற்கையிற்றிரிந்து பொய்யாதலொருதலையாம். முன்னோனாகிய உருத்திரனைப் பற்றி ஆராயுமிடத்து, அவன் பெயரிட்ட சாசனங்கள் கோதாவரிஜில்லா திராக்ஷாராமா என்ற ஊரில் கி. பி. 1179-இல் அமைந்தது ஒன்றும் (Sewells List of Antiquities Madras, Vol I, p. 31) கிருஷ்ணாஜில்லா குங்குலகுண்டா என்ற ஊரில் கி. பி. 1197-இல் அமைந்தது ஒன்றும் (Do. Do. p. 71) 1162-இல் அமைந்தது மற்றொன்றும் (Do. Vol, II, p 173) காணப்படுதலால் இவன் கி. பி. 1162 க்குச் சிறிது முன்னும் கி. பி. 1197-க்குச்சிறிது பின்னும் ஆட்சிபுரிந்தவனாகக் கருதப்படுகின்றான். கி. பி. 1120-ஆம் ஆண்டினை அடுத்துப்பிறந்த கம்பர் கி. பி. 1200 க்குமேற் சில்லாண்டிருந்தாலும், அது மக்கள் யாக்கைக்கு இயல்பாகிய ஆயுளைக் கடவாதாதலின் முதலாம் பிரதாபருத்திரனுடைய ஆட்சியின்இறுதிக்காலமாகிய கி, பி, 1197-இலும் கம்பர்இருந்து அவனால் அடைப்பை கட்டுஞ் சிறப்பைப் பெற்றன ரென்பதில் விரோதமில்லையாம். இதனாற் கம்பருக்கு அடைப்பைக்கட்டினவன் முதலாம் உருத்திரன் எனவும் அவன் அவருக்கு அது புரிந்த காலம் கி. பி. 1162-க்கு 1197-க்கும் இடைப்பட்டதாகுமெனவும் கொள்ளத்தகும். இவற்றாற் கம்பருடைய காலத்திற்கு இறுதியெல்லை முதலாம் உருத்திரனுடைய அரசாட்சியின் இறுதிக்காலமே யாமென்பதுணர்ந்து கொள்க.

கி. பி. 1162-க்குப் பிற்பட்டகாலம் இராசராசன் காலமாதலால் கம்பர் ஓரங்கல் உருத்திரன்பாற்சென்று சிறப்பெய்தியதும், அவன் காலத்தேயாதல் ஒருதலையாம். இதனாற் கம்பரை முனிந்த

வனும் கொன்றவனும் ஆகிய சோழன் இராசராசனே என்பதும் உய்த்துணரப்படும். இவன் காலத்தோடு சோழருடைய பேரரசாட்சி சின்னந்தந்ததுஎனவும் பின் சிற்சில சிற்றரசர்களால் நாடு ஆளப்பட்ட போது ஓரங்கல்வேந்தர் படையெடுத்துச் சோணாட்டைக் கைப் பற்றிக்கொண்டு அதனை 14-ஆம் நூற்றாண்டுவரை ஆண்டனரெனவும் புராதனசாசன ஆராய்ச்சியாற் றெரிகிறது (Sewells List of Autiquities, Madras. Vol. II. p.p. 159) இதனாலே "என்பாட்டம்பு நின்குலத்தைச் சுட்டெரிக்கு மென்றே துணி' என்று கல்வியிற் பெரியரால் முனியப்பட்டவன் இவ்விராசராசனே யாவனென்று கொள்க. கம்பர் இராமாயணம்பாடி அரங்கேற்றியதும் இவ்விராச ராசன் காலமேயாகும். கூத்தர் தக்கயாகப்பரணிபாடியகாலமும்இவன் காலமேயாம். இவ்விராசராசன்காலம் கம்பருடைய 42-வயதுக்கு மேற்பட்டதாகலின் அதுவே இவரதுஉளத்தூய்மைக்கும் பத்தியொழுக்கங்கட்கும் உலகியலுணர்ச்சிக்கும் வீட்டுநெறி விழைவுக்கும் ஏற்ற தாகும். கி. பி. 1162-க்கு முன்னெல்லாம் இவரது யௌவனகால மாம். அக்காலங் குலோத்துங்கன் காலமே. அக்காலத்தே தான் இவர் வல்லியை விழைந்ததும் ஏரெழுபது பாடியதும் மும்மணிக் கோவை பாடியதும் ஆம். இவரது கவித்திறத்துக்கு உவந்து இவருக் குப்பெருஞ்சிறப்பெல்லாஞ் செய்தவன் குலோத்துங்கன் ஆவன். அவன் இவருடைய 42-ஆம் பிராயத்தோடு இறந்தனன். இதன் பின்னேதான் 'இராமாயணமெனும்பத்தி வெள்ளம்' கம்பருடைய அறிவுடை நெஞ்சிற் குடிகொண்டதாகும்.

இனி, "எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன்வாழ்வு, நண்ணிய வெண்ணெ நல்லூர் தன்னிலே கம்பநாடன், பண்ணிய விராம காதை" என்பதனாற் கம்பர் இராமாயணம் பாடியரங்கேற்றிய காலம் சகாப்தம் 807—என்றுகூறுதலாற் கம்பர் காலமே மேற்காட்டிய காலத்துக்கு 200-வருடம் முற்பட்டதன்றோ வெனிற் கூறுவேன். சகாப்தம் ௮0எ - என்பது கி. பி. 885 ஆகும். அது விக்கிரமன் காலத்துக்கு நெடுந்தூரமானது. அங்ஙன மாயின் அஃது ஒட்டக்கூத்தர் காலமும் அன்று. கூத்தர்காலமன்றாயிற் சங்கரன்காலமுமன்று. சங்கரன்காலமன்றாயிற் சடையன், சேதி

ராயன் காலமுமன்று. சடையன் சேதிராயன் காலமன்றாயிற் கம்பர் காலமுமன்றாம். ஓரங்கலுருத்திரன் காலமும் இஃதன்றாதல் கூற வேண்டா. இங்ஙனம் கம்பர் காலத்தவராகத் தெளியப்பட்ட வேறுபலர் காலங்கட்கும் இக் கி பி. 885-பொருந்தாதாதலின் அது கம்பருக்கும் பொருந்தா தென்பது ஒருதலை. மேற்காட்டிய பிரபல பிரமாணங்களாற் றெளியப்பட்ட கம்பர் காலத்தோடு பொருந்த வைத்து நோக்கின், இந்த'எண்ணியசகாத்தம்'என்ற செய்யுள் சிறிது பாடம்பிழைத்ததென்றேனும் வேறோர் பொருளுடைய தென்றே னும் கருதப்படும். பாடம் பிழைத்தலாவது 'எண்ணிய சகாத்தம் என்னூற்றேழின்மேல் எனவிருந்ததை "எண்ணிய சகாத்தம் எண் ணூற்றேழின்மேல்' எனக்கொண்டதாம். அஃதாவது 'எண்ணிய சகாத்தம் என்கின்ற நூற்றேழின்மேல்' என்றவாறாம். ஆயிரம் என்ற பேரெண்ணையொழித்துக் கொல்லமாண்டு முதலியவற்றை 80-ஆம் ஆண்டு என்பது முதலாகச்சிற்றெண்ணையே வழங்கல் இக் கால வழக்காதல்போலப் பண்டும் சகாப்தம் ஆயிரத்து நூற்றே ழினைச் சகாப்தம் நூற்றேழென வழங்கியதென்க. இனிவேறோர் பொருள்பெறுதலாவது "எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழின் மேல்'' என்ற பாடமே 'கருதிய சகாத்தம் எண்ணப்பட்டநூற் றேழின்மேல்'' என்றபொருள் படுதல். இவ்விருவகையினும் ஆயிரமாகிய பேரெண்ணை யொழித்து உலகவழக்குநெறியே தழு விச் சிற்றெண்ணினை கூறியதாமெனக்கொண்டால், சகாப்தம் 1107 என்பது கி பி. 1185 ஆம்ஆண்டாம். இந்தக்கிபி 1185 ஆம் ஆண்டு கம்பருக்கு 65 ஆம் பிராயமாமெனக் கொள்ளப்படுமாதலின் அது கம்பர்காலமேயாதல் தேறப்படும். இந்த 'எண்ணிய சகாத்தம்' என்ற செய்யுளை இவ்வாறு இணக்கிக்கொள்வது, மேற்காட்டிய உண்மைப் பிரமாணங்களோடு பொருந்த நோக்குமிடத்து உசிதமே யாகும். அன்றியும் இஃது * "இராமாயணமெனும் பத்தி வெள்ளங் குடிகொண்ட கோயி" லாகிய இராமாநுஜமுனிவரர் நிலைநாட்டிய வை ணவம் தழைத்தோங்குகின்ற காலமுமாகும். அக்காலத்தே தான் ஞானபூரணரான ஸ்ரீசடகோபரது குணநுபவம் செய்யும் அடியா ரும் பகவரும் மிக்கனராவர். கம்பர் சடகோபரந்தாதிக் கல்லனே

* இராமாநுச நூற்றந்தாதி. செய்யுள்—கூஎ.

*

"கூட்டங்க டோறுங் குருகைப் பிரான்குணங் கூறு மன்ப, ரீட்டங்க டோறு மிருக்கப்பெற் றேமிருந் தெம்முடைய, நாட்டங்க டோறும் புனல்வந்து நாலப்பெற்றேம்" எனப்பாடுதலால் இவர்காலத்தே பெரிய கோயிற்கண்ணே கூட்டம் கூட்டமாகக் குருகைப்பிரான் குணநுபவம்பண்ணும் பரமபத்தர்கள் மிக்கிருந்தனரெனவும், அத்திருக்கூட்டத்தோடெல்லாம் தாமும் உடன் இருக்கப்பெற்றார் எனவும் இருந்து ஆநந்தக்கண்ணீர் பெருக்கினரெனவும் அறியப்படும். இங்ஙனம் கம்பர் குருகைப்பிரானர் திருவடிகளில் ஈடுபடுதற் கேற்ற காலம் அதுவேயாமென நோக்கிக்கொள்க. ஈண்டுக்காட்டிய கி. பி. 1185-ஆம் ஆண்டு இராசராசன் ஆட்சியின் இடைக்காலமாதல் ஆராய்ந்துகொள்க.

இனி இவர் இராமாவதாரத்து "சென்னிநாட்டெரியல் வீரன் றியாகமாவிநோதன் றெய்வப், பொன்னிநாட்டுவமைவைப்பை"*எனக்கூறிய விடத்துச் சென்னியாகிய சோழனொருவனை 'வீரன்' என்னும் பெயரால் வழங்கியுள்ளார். கூத்தர் இராசராசனுலா விறுதியிற் பாடிய,

"அன்று தொழுத வரிவை துளவணிவ
தென்று துயில்பெறுவ தெக்காலங்—தென்றிசையி
னீரதிரா வண்ண நெடுஞ்சிலையை நாணெறிந்த
வீரதரா வீரோத யா."

என்னும் வெண்பாவிலும் இராசராசனுக்கு வீரசப்தமே பெயராகப் பயின்றுள்ளது. இவனை வீரராசராசன், வீரராசேந்திரன் எனவும் வழங்குவரெனத் தெரிகின்றது. இதனாலும் கம்பர் இராமாயணம் பாடிய காலத்தவன் இராசராசனென ஊகித்தலாகும். கம்பர் இராமாவதார இறுதியில் "அறைபுகழ்ச் சடையன்வாழி அனுமனெப்போதும்வாழி" என வாழ்த்துக் கூறுதலாற் சடையன் அவர் இராமாயணம்பாடி முடித்தகாலத்தும் இருந்தனன் என்று கொள்ளப்படும். கூத்தர் உத்தரராமாயணம்பாடிய காலமும் அதுவாம். அக்காலத்துச் சடையற்கும் கூத்தருக்கும் எ௰ரு-வயதாமெனக் கொள்ளலாகும்.

இனி "ஆவின் கொடைச்சகர ராயிரத்து நூற்றொழித்து" என்னும் வெண்பாவினை வைத்து நோக்கின் கம்பர் இராமாயணம்பாடி

* யுத்தகாண்டம், மருத்துமலைப்படலம்.

யது சகாப்தம்-ககoo (அஃதாவது கி. பி. 1178) எனத் தெரிய லாகும். *அஃது 'எண்ணிய சகாத்தம்' என்றசெய்யுளாற் கொள்ளப் பட்ட சகாப்தம் 1107-க்கு (அஃதாவது கி. பி. 1185-க்கு) ஏழுவருடம் முற்பட்டதாமெனக்கருதப்படும். 'எண்ணிய சகாப்தம்' என்ற செய்யுள் அரங்கேற்றக் காலமாக வைத்துக்கொண்டால் கம்பர் இராமாயணம் பாடிமுடித்தகாலம் அவ்வரங்கேற்றத்திற்கு 7-வருடம்முற் பட்டதாமெனத் தேறலாம்.

இங்ஙனம் பல்லாற்ருனேக்கினும் கம்பர் காலம் 1120-க்கும் 1200-க்கும் இடைப்பட்டதாதல் கண்டுகொள்க.

இங்ஙனம்
ரா. இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

உ

சிவமயம்.

இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

ஷை

கணிகையர் தொகுவாருங் கலைபல பயில்வாரும்
பணியணி யினமுத்தம் பலவித நிலமன்ன
ரணிநெடு முடியொன்ருென் றறைதலி னுகுமம்பொன்
மணிமலை தொகுமன்னன் வாயிலின் மிடைவாரும்.

என்னும் கஉ-ம் செய்யுளில் 'மணிமலைதொகு' மென்பது 'மணிமலைதொக' எனக்காணப்படுகின்றது. (உடம்பின்நெருக்கினுலே) பணியணிமுத்மும், முடியறைதலினுலே பொற்பொடியும் மணிமலையுந்தொக, மன்னர் வாயினின் மிடைவாரும் எனப்பொருள் கொள்ளுமிடத்து 'தொக' என்பதே பொருத்தமுடைத்தாதல் காண்க. தொகமிடைவாரும் என்க. 'தொகும்' எனக்கொளின் அது வாயிலுடன்முடிந்து இயைபின்றி முரணுமென்க.

---

* சகாப்தத்தினைச் "சகரராண்டு" என வழங்குதலுமுண்டு என்பர்.

ஷை

மன்னரு முனிவரும் வானு ளோர்களு
மன்னமென் னடையனாங் கனைய மாதருந்
துன்னினர் துவன்றினர் சுடர்கள் சூழ்வரும்
பொன்மலை யொத்ததப் பொருவில் கூடமே.

என்னும் சச-ம்செய்யுளில் 'துன்னினர்துவன்றினர்சுடர்கள்சூழ்வரும்' என்பது, 'துன்னினர்துவன்றலிற்சுடர்கள்சூழ்வரும்' எனக்காணப்படுகின்றது. துவன்றினர் எனக்கொளின், அது முற்றாய்நிற்குமேயன்றிப் பொன்மலை யொத்ததற்குக் காரணமாய்நில்லாமையின் துவன்றலின் என்பதே பொருத்தமுடைத்து. காரணம் வருவித்தல் காரணமில்வழி என்க.

பங்குனி யுத்தர மான பகற்போ
தங்க ணிருக்கினி லாயிர நாமச்
சிங்க மணத்தொழில் செய்த திறத்தான்
மங்கல வங்கி வதிட்டன் வளர்த்தான்.

என்னும் எக-ம் செய்யுளில் 'அங்கணிருக்கினிலாயிரநாமச்—சிங்கமணத் தொழில் செய்ததிறத்தால்' என்பது 'அங்கமுதத்தினையாயிரநாமச் சிங்க மணத்தொழில் செய்தபினிளையோர்' எனக் காணப்படுகின்றது, இராமனுக்கு அக்கினியை வசிட்டன்முன் வளர்த்ததாகக் கூறப்படுதலின், ஈண்டு இளையோர்க்குக்கூறலே சிறப்பாதலினாலும், இதன்முதற்செய்யுளில் இராமனை "பாயலணைந்தான்" எனக்கூறப்படுதலின் அவனுக்குப்பின் "அங்கி வளர்த்தான்" என்றல் மாறுபடக் கூறலாய் முடியுமாதலானும், 'செய்த பி னிளையோர்' என்பதே பொருத்தமுடைத்து. 'அங்கணிருக்கினில்' என்பதிலும் 'அங்கமுதத்தினை'என்பதும் பொருத்தமுடைத்தாதல்காண்க.

இவைகளேயன்றி இன்னும், கோலங்காண்படலம் ரு-ம் செய்புளில் "மதியினைத்தந்த" என்பது "மதியினைநக்க" எனவும், அ-ம் செய்யுளில் "வளர்பிறை வகிர்ந்ததென்கோ" என்பது 'வளர்பிறை வதிந்தகென்கோ' எனவும், பரசுராமப்படலம் ௩௩-ம் செய்யுளில் 'வேரறக்களை கட்டு' என்பது "வேரறக்களைந்திட்டு' எனவும் காணப்படுகின்றன. இவற்றுள்ளும், முன்னையவற்றுள்ளும் பின்னையவே பொருத்தமுடையவாதல் காண்க.

அயோத்தியாகாண்டம்

மந்[illegible]படலம்.

வெய்யவன் கு[illegible]வந்தர் மேலவர்
செய்கையி னொராயிரத்[illegible]றெம்ப லின்றியே
வையம்யா னுண்ட[illegible]டுங்கண் மாட்சியா
லையமி லறுபதி னுபி[illegible]மரோ.

என்னும் கசு-ம் செய்யுளில், 'வையம்யானுண்டவாண்டெங்கண்மாட்சியா—லையமிலறுபதினுயிரம்மரோ' என்பது 'வையமென்புயத்திடைநங்கண்மாட்சியா—லையிரண்டாயிரத் தாறு தாங்கினேன்' எனக் காணப்படுகின்றது. முன்னையது இசைச்சிறப்பின்மையின், பின்னையதே சிறப்புடைத்து. ஐயிரண்டாயிரத்தாறு - அறுபதினுயிரம்.

ஷ

கண்டு கைதொழு தையவிக் கடலிடைக் கிழவோ
னுண்டோர் காரியம் வருகென வுரைத்தன னெனலும்
புண்ட ரீகக்கட் புரவலன் பொருக்கென வெழுந்தோர்
கொண்டல்போலவக்கொடிநெடுந்தேர்மிசைக்கொண்டான்.

என்னும் ருக-ம் செய்யுளில், 'கடலிடைக்கிழவோன்' என்பது 'கடற்புவிக்கிழவோன்' எனக் காணப்படுகின்றது. பூமியை யுணர்த்துமிடத்து 'இடை' என்பதினும் 'புவி' என்பதே சிறப்புடைத்து. ஏழாம்வேற்றுமையுருபு முதலியனபோலவுங் கொள்ளும்படி நிற்றலின், இடைஎன்பது சிறப்பின்றென்க.

ஷ

தானமுந் தருமமுந் தகவுந் தன்மைசேர்
ஞானமு நல்லவர்ப் பேணு நன்மையு
மானவ வையநின் மகற்கு வைகலு
மீனமில் செல்வம்வந் தியைக வென்னவே.

என்னும் அக-ம் செய்யுளில், 'மானவவையநின்மகற்குவைகலு—மீனமில்செல்வம்வந்தியைகவென்னவே' என்பது, 'மானமுமையநின்மகற்குவைகுமா, லீனமில்செல்வம்வந்திசைவதென்னவே' எனக்காணப்படுகின்றது. 'குற்றமில்லாத செல்வம்வந்திசைவதாகத் தானமுதலியன நின்மகற்கு வைகும் எனப் பொருள்கொள்ளுமிடத்து வாய்ந்துமிளிர்தலானும், பிற்செய்யுட்கருத்துக்கும் இதுவேயியைபுடைத்தாகலானும், அன்பினை யினிதுகேளெனக்கூறியவரைப் பின்வாழ்த்தியதாகக்கூறல் பொருந்தாதாகலானும், என்னஎன்பதற்கு முடிபின்மையாலும், இராமனுக்குச்செல்வம்வந்திசைகவென்று தானமுதலியன செய்கின்றார்களென்று பொருள்கொள்வதற்கும் தகவுமுதலியன தகுதியன்றாதலோடு பிற்செய்யுட் கருத்தும் மாறாய்நிற்றலானும் பின்னையதே பொருத்தமுடைத்து. இராமனுக்குச் செல்வம்வரின் தானம்முதலியன வைகும்: அதனாற் பிறர்க்குப் பயன்படும் என்பது கருத்து. இதுபற்றித்தான் 'ஊருணி நிறையவும்' என்பது முதலாகப் பின்வியந்துகூறினர். முன்

னும் இக்குணங்கள் அவனுக்கு இருப்பினும் செல்வம்வந்தாற் சிறந்துகாட்டு மென்பார் இங்ஙனங் கூறினர். வைகல் - நிலையுறல்.

ஷை

செம்மையிற் றருமத்திற் செயலிற் றீங்கின்பால்
வெம்மையி னொழுக்கத்தின் மெய்மை மேவினீ
ரென்மக னென்பதென் னெறியி னீங்கிவன்
நம்மகன் கையடை நோக்கு மூங்கென்றான்.

என்னும் அகூ-ம் செய்யுளில், 'நம்மகன்கையடைநோக்குமூங்கென்றான்' என்பது 'நம்மகன்கையடைநமக்கென்றேதினன்' எனக்காணப்படுகின்றது. கையடை என்பதற்கு நமக்கு என்னும்சொல் இயைந்துநிற்றலானும் இசைச்சிறப்புண்மையானும் 'நமக்கென்றேதினன்' என்பதே சிறப்புடைத்து.

மந்தரை சூழ்ச்சிப்படலம்.

அரசரிற் பிறந்துபின் னரச ரில்வளர்ந்
தரசரிற் புகுந்துபே ரரசி யானநீ
கரைசெயற் கருந்துயர்க் கடலின் வீழ்கின்று
யுரைசெயக் கேட்கிலை யுணர்தியோ வென்றாள்.

என்னும் சுக-ம் செய்யுளில், 'உரைசெயக்கேட்கிலையுணர்தியோவென்றாள்' என்பது, 'உரைசெயக்கேட்கிலையுணர்வில்லோயென்றாள்' எனக்காணப்படுகின்றது. கேளாமைக்கு உணர்வில்லாமை ஏதுவாகலானும், கழறும் மொழியாகலானும் 'உணர்வில்லோய்' என்பதே பொருத்தமுடைத்து. அறிகுதி என்றலும், நீயாதல் அறிந்து விலகுகின்றாயோ என்றலும் இத்துணைச் சிறப்பின்மை காண்க.

ஷை

தீய மந்தரை யவ்வுரை செப்பலுந் தேவி
தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
மாயை யும்மவர் பெற்றநல் வரவுண்மை யாலு
மாய வந்தண ரியற்றிய வருந்தவத் தாலும்.

என்னும் எஎ-ம் செய்யுளில், 'மாயையும்மவர்பெற்றநல்வரவுண்மையாலும்' என்பது, 'மாயையுந்தவம்வரம்பெற்றவரன்முறையாலும்' எனக்காணப்படுகின்றது. முன்னையது பொருட்பொருத்தமும் இசைச்சிறப்புமின்மையின், பின்னையதே பொருத்தமுடைத்து. அமரருடைய மாயையுந்தலா

லும் அவர் (விஷ்ணுவினிடத்துப்) பெற்ற வரத்தாலும் முனிவர் தவத்தாலும் திரிந்தது என்க. பெற்றவரம் - இராவணசங்காரம்.

கைகேசி சூழ்வினைப்படலம்.

வரங்கொள வித்துணை மன்னு மல்ல லெய்தி
யிரங்கிட வேண்டுவ தீவ னேகொ ளென்பாற்
பரங்கெட விப்பொழு தேப கர்ந்தி டென்றா
ளுரங்கொள் மனத்தவள் வஞ்ச மோர்கி லாதான்.

என்னும் கூ-ம் செய்யுளில், 'இரங்கிடவேண்டுவதீவனே கொளென்பால்' என்பது, 'இரங்கிடவேண்டுவதில்லையீவனென்பால்' எனக்காணப்படுகின்றது. வரங்கொள்ளுதற்கு இத்துணை அல்லலெய்தி இரங்கவேண்டுவதில்லை எனப் பொருள்கொள்ளுமிடத்து இல்லையென்பதில்லையாயின், இரங்கிடவேண்டுவதுஎன்பதற்கு முடிபின்மையின், 'வேண்டுவதில்லையென்பதே பொருத்தமுடைத்து. பிறவாறு வலிந்துபொருள்கோடல் இத்துணைச் சிறப்பின்றென்க.

(இன்னும் வரும்)

சி. கணேசையர்.

தமிழ் வினைச்சொல்லில் எதிர்காலம்.

தொல்காப்பியமுதற் றமிழிலக்கணங்கள் எல்லாவற்றிலும் வினைச்சொற்களில் இறந்த, நிகழ், எதிர் என்னும் முக்காலம் வழங்குமென்று தேறப்பட்டது. அவற்றிற்குக் குறிப்புகள் இறந்ததுக்கு த், இன் என்றும் நிகழ்கின்றதுக்கு ஆநின்று, கின்று, கிறு என்றும் எதிர்வதுக்கு ப், வ் என்றும் வரைகின்றார் ஆசிரியர்கள்.

ஆனால் நிகழ்காலக் குறிப்புகள் மூன்றில் முதல் ஆநின்று விட்டுவிட வேண்டும்: அது ஆ வென்னும் வினையெச்சத்தானும் நின்று என்னும் வினையெச்சத்தானும் சேர்க்கப்பட்டதாவதால். கின்று, கிறு இரண்டும் சோதித்துப்பார்க்குமளவில் கின்று பழையது, கிறு புதிது ஆக இருத்தல் நிச்சயித்துக் கொள்வதாகும்.

எதிர்காலமோ வென்றால் ப், வ் முடிவுகளொழிய வேறேவிதமாய்த் தெரிவிக்கக்கூடும். பலபழைய காப்பியங்களிலும் நூற்களி

லும்* செய்கேன், என்கோயான், உரைக்கோ, உண்கும் யாம், கொடுக்குதும், செய்குவம், படர்குவை, நயக்குநர், காண்கம், அயர்கம், எழுகம், வாழ்கலேம் முதலியவை காணப்படுவன. அவைக ளெல்லாவற்றிலுங் கு என்னுங் குறிப்பு அகப்பட்டது. அதுவும் கின்று, கிறு என்னும் நிகழ்கா(ல)க் குறிப்புகளிற்றோன்றும். அந்தச்செய்தியை யெண்ணிக்கொண்டு கிறு என்பது கின்றிற் சுருக்கமாமென்று நினைத்து, கின்று என்பது குவும் இன்றும் சேர்க்கப்பட்டமையால் வந்ததென்று நிச்சயப்படுத்துகின்றேம். இன்று என்பது இக்காலம் இந்நாள் என அர்த்தங்கொண்டு வழங்கும்.

அது நிற்க. கு எதிர்காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் குறிப்பாகுமென்று சாதித்துச் சொல்லலாம். அதுக்கு, நிகழ்கின்றதுக்கு இன்றும், எதிர்வதுக்கு பவும், வவும் சேர்த்துக்கொள்ளலாவது. ஆகையாற் றமிழ்ச்சொல் முதனூள்களில் வினைச்சொற்கு இரண்டு காலமாத்திரம் இருந்தனவென்று வைத்துக்கொண்டால் நியாயமாம். அக்காலங்களில் ஒன்று இறந்தகாலம் மற்றொன்று இன்னமிறந்தில்லாதகாலமாய் நின்றனவாகும். பின்னூள்களில் இன்றும் நாளையும் பிரித்துக்குறித்துச் சொல்லவேண்டியதால் கு-இன்று கின்று ஒருபாலும் குவ், குப் ஒருபாலும் சொல்லிப் பின்பு குவ், குப் என்னுமல்ப் வ் மாத்திரம் குறித்து வந்தார்கள்.

மலர்தலையுலகில் வழங்கும் பலமொழிகட்கும் அத்தன்மையே. முன்னோர்கள் எதிர்காலம் தெளிவாய் உணர்ந்து வந்தார்களென்று ஆராய்ந்துகொள்ளப்பட்டது.

Prof. JULIEN VINSON, PARIS.

---

* குறள், சிந்தாமணி, மணிமேகலை, கலித்தொகை, ஐங்குறுநூறு முதலவற்றிற் காண்க.

சேக்கிழார்காலம்.

சேக்கிழார் காலத்தை வரையறுக்கும் விஷயத்தில் இவராற்செய்யப்பட்ட பெரியபுராணம் வெகு உபயோகமாயிருக்கிறது. இதுவே தேவாரம்பாடிய மூவருள் முதலிருவர் காலங்களை நிர்ணயிக்கவும் ஏதுவாயிருந்தது. தம் திருத்தொண்டர்புராணவரலாற்றில், உமாபதிசிவாசாரியர், சேக்கிழாரை ஆதரித்த சோழசக்கரவர்த்தியை "கங்கைகுலதிலகர்" "தளவமாலையபயன்" "நரேந்திரபதி" என்னும் பலபெயராற் குறிக்கிறார். பெரியபுராணத்திலும் இவ்வரசன் "அபயன்" "அநபாயன்" "குலோத்துங்கன்" என்னப்படுவதல்லாமல்,

"மேய விவ்வுரை கொண்டு விரும்புமாஞ்
சேய வன்றிருப் பேரம் பலஞ்செய்ய
தூய பொன்னணி சோழனீ டூழிபார்
ஆய சீரன பாய னரசவை"

என்பதில் "பேரம்பலம் பொன்வேய்ந்தவன்" என்றும், சூரியவம்சத்திற் சேர்ந்தவன் என்பது தோன்ற "துன்னுசெங்கதிரோன் வழித்தோன்றல்" எனவும் புகழப்பெற்றுள்ளான்.

இவைகளையெல்லாம் உற்றுநோக்கின், இவ்வரசன் ராசகேசரிவன்மனாகிய குலோத்துங்கன் (அவனுவான் முதற்குலோத்துங்கன்) ஆகவிருக்கவேண்டும் என்பது புலப்படும். ஏனெனில், இவன் கங்கைகொண்ட சோழன் மகள் வயிற்றுப்பேரன் என்பது எல்லாருமறிந்ததே. இதனாற்றான் இவனை உமாபதியார் 'கங்கைகுலதிலகர்' என்றார். அபயன் என்னும்பெயர் இவ்வரசனுக்கு உண்டு என்பது கலிங்கத்துப்பரணி படித்த ஒவ்வொருவருக்குப் தெரியவரும். திருவாரூரிலிருக்கும் ஒருபெரிய சாஸனத்தில் இவ்வரசன் அநபாயன் என்னப்படுவான் என்று கூறியிருத்தலால், சேக்கிழார்காலத் தரசன் குலோத்துங்கன் I என்பதிலையமேயில்லை. இவ்வரசன் தன்னரசாட்சியின் இடையில் சிதம்பரத்திலிருக்கும் பேரம்பலத்தைப் "பொன்

வேய்ந்தான்" என்று திருப்பராய்த்துறையில் ஒருசாஸநமும், திருமாணிகுழியில் இரண்டு சாஸநங்களும் கூறுகின்றன. இவ்வரசன் கி. பி. 1070-1117 வரையிலாண்டவன் என்பதும் தெரிந்ததே. ஆகையால் இவ்வரசன்காலத்தவரே சேக்கிழார் என்பதனால் இவர் கி. பி. 11-வது நூற்றாண்டின் கடைக்காலிலிருந்தவர் என்பதற்குத் தடையில்லை. மேற்கூறியவைகளை வற்புறுத்த அடியிற் சிற்சில மேற்கோள்கள் கொடுக்கப்படுகின்றன.

"வென்றி வெண்குடை யநபாயன்
செய்யகோ லபயன் திருமனத் தோங்குந் திருக்கயிலாய நீள்சிலம்பு"
(திருமலைச்சிறப்பு. 12, பெரியபுராணம்.)

"அன்னதொன்னகருக்கரசாயினான்
றுன்னுசெங்கதிரோன்வழித்தோன்றினான்
மன்னுசீரநபாயன்வழிமுதன்
மின்னுமாமணிப்பூண்மனுவேந்தனே":—
(திருவாரூர்ச்சிறப்பு 13. பெரியபுராணம்.)

"சென்னி வெண்குடை நீடநபாயன் றிருக்குலம்புகழ்..."
(இயற்பகைநாயனார் பு. 1. பெரியபுராணம்.)

"அந்நெறி வழியே யாக வயல்வழி யடைத்த சோழன்
மன்னிய வநபாயன்சீர் மரபின்மா நகருமாகுந்
தொன்னெடுங் கருவூரென்னுஞ் சுடர்மணி வீதிமூதூர்"
(எறிபத்தர் பு. 2. பெ. பு.)

"சென்னி யபயன் குலோத்துங்கச் சோழன்றில்லைத் திருவெல்லை
பொன்னின்மயமாக் கியவளவர் போரேறென்றும் புவிகாக்கு
மன்னர்பெருமா னநபாயன் வருந்தொன்மரபின் முடிசூட்டுந்
தன்மைநிலவு பதியைந்தி னொன்றாய்விளங்குந் தகைத்தவ்வூர்"
(சண்டேசுரர் பு. 8. பெ. பு.)

"மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி யணிவிளக்குஞ்
சென்னிநீ டநபாயன் றிருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனார் புகழ்ச்சோழ ரெனப்பொலிவார்"
(புகழ்ச்சோழர் பு. 8. பெ. பு.)

"வள்ளல் கொடைய நபாயன்."
(கோச்செங்கணான் பு. 14. பெ. பு.)

மெய்கண்டதேவர் காலம்.

மெய்கண்டதேவர் சந்ததியில் (சிஷ்யபரம்பரையில்) நான்காமவரான உமாபதிசிவாசாரியார் தங் "சங்கற்பநிராகரண" த்தில்

"எழுஞ் சிருநூ றெடுத்த வாயிரம்
வாழுநற் சகன மருவா நிற்பப்
பொற்பொது மலிந்த வற்புத ஞானி
ஆரும் விழவிற் பொற்றே ராலயத்து"

என்று கூறியிருத்தலினால் தாம் கி. பி. 1313-ல் இருந்தவர் என்று தெரிவித்துக்கொள்ளுகிறார். இவரினின்றும் நான்காமவராகிய மெய்கண்டார்காலம் சற்றேறக்குறைய கி. பி. 13-வது நூற்றாண்டின் முதற்பாதியா யிருக்கலாமென்று ஊகிக்கலாம். இஃது இப்படியிருக்க,

திருவண்ணாமலையிற் கண்ட ஒருசாஸநத்தில் "திருவெண்ணெய் நல்லூருடையான் மெய்கண்டதேவன் ஊருடைய பெருமாளாகிய எடுத்ததுவலியவேளர்" என்பவனொருவன் திருவண்ணாமலையில் தான் எழுந்தருளுவித்த ஒரு விக்கிரகத்துக்குச் சிலதானங்கள் செய்ததாகக் கூறியிருக்கிறது.

இச்சாஸநம் திரிபுவன சக்கரவர்த்திகள் ராஜராஜதேவர் (III) ஆட்சியில் 16-வது வருஷத்தில் இக்கோயிலிற் பதிப்பிக்கப்பட்டது. இவ்வரசன் கி. பி. 1216-ல் பட்டம்பெற்றான். ஆகவே இச்சாஸநத்தின் காலம் 1232 கி. பி. என்பது பெறப்படும். இச்சாஸநத்திற் கண்ட மெய்கண்டதேவனே சந்தானகுரவருள் முதல்வரான மெய்கண்டதேவர் என்பார் என்பது எந்துணிபு. ஆயின், இவனோ் இச்சைவாசாரியர் பெயர்பூண்ட வேறொருவராயிருக்கக்கூடாது என்னும் சங்கையுண்டாகலாம். அதற்குச்சமாதானம் கூறுவோம். கி-பி. 1232-ல் சைவாசாரியராகிய மெய்கண்டதேவர்பெயர் பிரபலப்பட்டிருந்ததென்றுகொண்டு அப்பெயர்படைத்தவன் இச்சாஸனத்திற்கூறியவன்எனில் இவன் விக்கிரகஸ்தாபனப் பண்ணவும், அதற்கு தானங்கள்செய்யவும் உத்தேசம் 30 வயதுள்ளவனாயிருக்கவேண்டும். இவனுக்கு முந்தியிருந்தவர் பிரபலமடைந்திருந்தார் எனின் அவர்ஏதேனும் இவனுக்கு 50-60 வருஷங்களுக்கு முன்னாகிலும் இருந்திருக்க

வேண்டும். ஆகலால் இவர்காலம் சற்றேறக்குறைய கி-பி. 1150 ஆகவேண்டும். அப்பொழுதுஇவருக்கும் உமாபதியார்க்கும் இடையில் சுமார் 165-வருஷங்களாயிருக்கவேண்டுமென்று பெறப்படும். தகப்பன் பிள்ளைமுறையில்வரும் பரம்பரையிலே சாதாரணமாக ஒவ்வொருவருக்கு 30வருஷக்கொடுக்கில் போதுமென்றிருக்க, ஆசாரியசிஷ்ய பரம்பரையில் அவ்வாறு 30-வருஷம் கொடுப்பினும் இவ்விருவர்க்குமிடையில் 120-வருஷங்களுக்கு மேற்படாது. ஆயின் மேற்கண்டபடி இவ்விருவருக்கும் இடையில் 165-வருஷம் சென்றிருக்கவேண்டுமென்று பெற்றது ஏற்காது. இவ்வாபாசம் நேர்ந்ததற்கு காரணம் சாஸநத்திற் கூறியவனும் சைவாசாரியரும் தனித்தனி யென்று கொண்டதனால் என்பது தெள்ளிதினுணரப்படும். அப்படிக்கொள்ளாது இருவரும் ஒரே மனிதர் என்றுகொள்ளின் இது நேராது. இருவரும் ஒருவரே என்று துணிய, இருவரும் திருவெண்ணெய்நல்லூருடையார் என்பது ஒருவாறு பயன்கொடுக்கிறது. ஆதலால் இவ்விருவரும் ஒருவரே என்று கொள்ளின் மெய்கண்டதேவர்க்கு ஊருடையபெருமாள் என்றும் எடுத்ததுவலியவேனர் என்றும் இருமறு பெயர்களிருந்திருக்கவேண்டும் என்பது பெறப்படுகிறது. மேற்கூறியவற்றாலும், உமாபதிசிவாசாரியாரின் கூற்றாலும் மெய்கண்டதேவர் உத்தேசம் கி-பி. 1232 யிலிருந்தார் என்பதாகக்கொள்ளலாம்.

இங்ஙனம்
து. அ. கோபிநாதராவு.
திருவல்லிக்கேணி.

ஸ்ரீ:

வானசாஸ்திரம்.

10. கடல்சூழ்ந்த இப்புவியில் நிலைத்துள்ள ஜீவஜடபதார்த்தங்கள் சோமசூரியர்களில்லையாயின் நிலைகொண்டோங்கா. சீத உஷ்ணங்கள் இவ்வுலகில் வாழ்வதற்கு இன்றியமையாதன அவையாம். அவைகளுக்குப்பிறப்பிடம் சந்திரசூரிய கோளங்களேயாம். நீரினம் சம் கொள்ளாச்சீவராசிகளும் புற்பூண்டுகளும், அவையிலவேல், இவ்

வுலகிலில்லே. அந்நீரோடு கலந்து நின்று உள்ளூயிராக விளங்குவது சோதியேயாம். அஃது ஐம்பூதங்களுக்கும் நடுநாயகமாய் நின்று, பஞ்சபூதமயமாகிய தேகங்களைக் காக்கின்றது. நீரின்றி மாந்தர்க்கு உயிர்வாழ்க்கை யமையாவாறுபோலச் சோதியின்றேல் நீரும் நிலை பெறாது. இதுபற்றியே மாந்தரின் வலப்புறம் சோதியல்லது சூரியன்பாகமென்றும் இடப்புறம் ஜலம் அல்லது சந்திரன்பாக மென்றும் வழங்கப்படுகின்றன. ஆண் பெண்ணிருவகையாரிடத்தும் சோமசூரிய பாகம் தனித்தனியே கூடியிருப்பினும் ஆண்மக்களிடத்துச் சோதியின் பாகம்மிக்கும், பெண்மக்களிடத்து நீரின் பாகம் மிக்கும், நிலைத்துளது. சூரிய உதய காலத்தில் கடனீரில் சூரியகிரணத்தாக்கிப் பற்பல சோதிவடிவம் காணப்படுவதுபோல ஆண் பெண்ணிருதிறத்தாரிடத்தும் சோதியின் தோற்றமுண்டு. இத்தோற்றம் ஆடவர்களின் முகமண்டலங்களில் முகவொளியாய தேஜோமயமாகவும், பெண்வர்க்கத்தாரின் முகசந்திரனிடத்துச் சந்திர கலைகளின் கிளர்ச்சியாகவும், விளங்குகின்றன. ஆண் பெண்ணினத்தாரில் இச்சந்திர சூரியகலைகளின் மிகுதியுள்ளவர்கள் தாம் நரஜீவிகளிற் சிரேட்டரெனப்படுகின்றார்கள். இருவகைக்காந்திகளின் மிகுதிபற்றியே அவரவர்களின் போக போக்கியமும் வாழ்நாளும் ஆன்மஞானமும் அவ்வழியால்நேரும் ஆநந்தமும் விசித்திரகர்மங்களும் நிலைபெறுவனவாம். கல்வியுஞ் செல்வமும் அக்காந்திகள் வழியாலே நேர்வனவாம். பிண்டத்திலில்லாதது அண்டத்திலில்லை யெனும் ஞாயத்தால் மண்ணுலக விண்ணுலகங்களுக்கும் இந்த நியாயம் ஒருபடியேயாம். இந்தக்காரணத்தால் அர்ச்சுனனெனும் வியாஜத்தாலே உலகுள்ளோர் நற்கதிபெறக் கீதோபதேசம்செய்தருளிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமாவும், செல்வம் கல்வி முதலிய நற்குணங்கள் நிறைந்த இடங்களி லெல்லாம் தன்னுடைய சத்துவம் நிலைத்துள்ளதென்று கூறியிருத்தல் காண்க.

11. பரம்பொருளின்தன்மையை நம்மாழ்வாரும் "சுடரொளியாய் நின்றதன்னுடைச்சோதி" என்றும் "துயரில் சுடரொளித்தன்னுடைச்சோதி" யென்றும் 'பரஞ்சோதி நீ பரமாய்' என்றும்கூறியிருத்தலாலும் 'உயிர் வேறின்றி ஒன்றாக உன்னோ டென்னைக்கொண்டாய்' என்றும் கூறியிருத்தலாலும் பிரகிருதி சம்பந்த மில்லாத சோதியிற்

கலப்பதே பரமபத நிலையாதலுங் காண்க நாதமுங் கடந்து சோதியிற் கலப்பதுதான் பலசமயத்தாருள்ளும் ஒப்பமுடிந்த உண்மையாம். சோம சூரிய அக்கினிகளின் மர்மமுணர்ந்தோர், மும்மூர்த்திகளையும் அம்மூர்த்திகளின் உபாஸனைநெறிகளையும் அவர்களின்தேவியார்களின் உபாசனை நெறிகளையும் நன்குணர்ந்து அனுட்டிக்கும் வஸிஸ்டர் வாமதேவர்முதலிய மகான்களுமாவர். சிவபிரான் சந்திரசேகரனாய் விளங்குவதும் நாராயணமூர்த்தி சூரிய மண்டலத்தின் நடுவில் விளங்குவதும் சோதிமண்டலங்களின் உண்மையுணர்ந்த மகான்களுக்கு விளங்கும் உண்மைகளாம். இஃதன்றித் துறவுபூண்டு நற்பதம் பெறுமவர்களும் சோதிவடிவாய் பிர்மரந்திரத்தைப் பேதித்துக்கொண்டு மேலே சோதிமண்டலத்திற் கலப்பரென்பதை யாருமறிவர். இராமாயணத்துள் இராமனை எதிரிற் கண்ட சுயம்பிரபையும் இராமனருள் பெற்றுச் சோதிவடிவாய் வெளிப்பட்டுப் பரஞ்சோதியிற் கலந்தது முண்டன்றே. இதனால் பிரமநிஷ்டர்களின் பெருமையும் சுயம்பிரபை முதலிய பெண்மணிகளின் பெருமையும் சோதிசம்பந்தமாய் விளக்கப்பட்டன. விரிக்கிற் பெருகும். அர்ச்சிராதிமார்க்கமும் சோதிவழியேயாம். மும்மூர்த்திகளும் மூன்று சத்திமாருடன் தோன்றித் தொழில் புரிவது நாத சோதிகளின் சிறப்பாலேயாம். இந்த நாத சோதிகள் சோம சூரிய அக்கினிமயமாகிய மும்மூலங்களாம். ஸப்தரிஷிகளும் நக்ஷத்திரவடிவமாய் விளங்குவதுடன் அருந்ததி, துருவன் முதலினோரும் சோதிவடிவாகவே விளங்குகின்றார்கள். சூரியனையுபாசிப்பவர்கள் சூரியனை யடைவது போலச் சந்திரனைஉபாசிப்பவர்களும் சந்திரனையே அடைகின்றார்கள். சோதிமண்டலங்களாய் ஆகாயத்தில் விளங்குதலும் உபாசனை வழியால் நேர்ந்ததாம். உலகமாயையாம் பற்றுநீங்கி நாமரூபங்களுமொழிந்து சுயஞ்சோதிமேலோங்கிப் பரவொளியிற் கலப்பதுவே பற்றற்ற பரமநிலையாம். தேவர்களை உபாசிப்பவர்கள் அத்தேவர்களையடைந்து, இன்பானுபவம் பெற்று அவர்களழியும் போது அழிகின்றார்க ளென்றும் தன்னையுபாசிப்பவர்கள் ஈறிலின்பமான தன்னையடைந்து மீண்டு உலகிற்பிறவாத அழியாப்பெரும்பதத்திலிருக்கிறார்களென்றும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கீதை ஒன்பதாவது அத்தியாயத்தில் உபாசனபேதங்களைச் சுட்டியிருத்தல் காண்க.

12. ஏழுவாரங்களுக்கும் மூர்த்தியாக விளங்கும் ஏழுகிரகங்களே மாதபக்ஷம் அயனம் வருஷம் முதலியவைகளுண்டாதற்கு காரணர்களாம். ஒரு குழந்தை இம்மண்ணுலகிற் பிறக்கும்போது இவ்வேழுகிரகங்களின் சோதிப்பிழம்பின் அளவைக் கொண்டே நம்மவர் அக்குழந்தையின் ஆயுள், கல்வி, செல்வம், முதலிய போக போக்கியங்களை நிர்ணயம் செய்கின்றார்கள். இம்மார்க்கம் மேற்கு நாடுகளில் அவ்வளவாய்த் தலையெடுக்கவில்லையாயினும் அமெரிக்கா ஜர்மனிமுதலிய நாடுகளில் சோதிட சாஸ்திரத்தை வானசாஸ்திரத்தோடு சேர்ந்ததெனக்கொண்டு நம்மவரைப்போல ஜாதகங்களை எழுதிப்பலஞ்சொல்ல ஆரம்பித்திருக்கின்றார்கள். இதை நாடெங்கும் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தியு மிருக்கிறார்கள்.

ஆதித்தியமண்டலம்.

13. சோதிமண்டலத்திலுள்ள கிரகங்களின் சலனத்தையும் பரிமாணத்தையும் தூரத்தையும் விளக்கும் நூல் வான சாஸ்திரமாம். இவ்வுலகந்தோன்றிய காலந்தொட்டு மாந்தர்கள் நக்ஷத்திர மண்டல கதியைப்பார்த்துக் களித்துவருகின்றார்கள்: மலைச்சார்புகளில் ஆட்டுமந்தைகளை இரவிற்பாதுகாத்து வந்த இடையர்களும், வீட்டின் மேற்றளத்திலிருந்து கொண்டு ஆகாயமண்டலத்தைப்பார்த்துக்களித்து வந்த தத்துவவிசாரணைக்கர்த்தர்களும், இந்நக்ஷத்திரங்களின் ஓட்டத்தையும் சங்கியையையும் பார்த்து நிச்சயித்துள்ளார்கள். இனம் இனமாய்ப்பிரித்து நக்ஷத்திர வரிசையெனப் பெயரிட்டுமிருக்கின்றார்கள்.

14. கி. பி. 435-வது வருஷங்களின்போது மேற்கு நாட்டில் 'டாலமி' (Ptolemy) என்பவர் கண்டுணர்ந்த வானசாஸ்திரம் நடைபெற்றது. பூமிமத்தியில்நிற்க சூரியனும் நக்ஷத்திரங்களும் பூமியைச்சுற்றி ஓடுகின்றதென்பது இவர்கண்டுணர்ந்த மார்க்கம். இவர் கிருஸ்துநாதர் பிறந்த 100 வருஷங்களுக்குப்பின் பிறந்தவர். இப்பொழுது நடைபெறும் மார்க்கம் கோபர் நிகஸ் என்பவர் கண்டு பிடித்தது. இதைக்கண்டுபிடித்தவர் 400 வருஷங்களுக்கு முன்னிருந்தவர். இவர் மார்க்கமோ சூரியன் மத்தியிலிருக்கப் பூமியும் மற்றக்கிரகங்களும் அதைச்சுற்றி ஓடுகின்றனவென்பதுதான். இஃதன்றி நிலையான நக்ஷ

த்திரங்களென்பது சூரியர்களுக்கும் மற்றக்கிரகங்கள் சுற்றியோடுகின்ற மத்திய நிலைக்கும் நிலையான நக்ஷத்திரங்களென்று பெயரென்பதும் இவர் கோட்பாடு.

15. ஆதித்திய மண்டலமென்பது சூரியனுக்கும் அவனைச் சுற்றிவரும் கிரகங்களுக்கும் பெயர். சூரியனைச் சுற்றியோடும் கிரகங்கள் சுயஒளியாற் பிரகாசிப்பதில்லை. பிரதிபிம்பமாகிய ஒளியாலே பிரகாசிக்கின்றன. இவைகளுக்குப் பிரதிபிம்பக்கிரகங்களென்று பெயர். ஆகாய மண்டலத்தில் மின்னிக்கொண்டும் அசைவற்றுமிருக்கின்ற பல உருக்கள் தங்கள்தங்கள் ஒளியாலே பிரகாசிக்கின்றன. இவைகளுக்கு நிலைபாயுள்ளநக்ஷத்திரங்களென்று பெயர். நிலையான நக்ஷத்திரங்களைக்காட்டிலும் கிரகங்களுக்குப் பிரகாசம் இவ்வாறு அதிகமேயாம். ஆனால் மற்றைய சாதாரண நக்ஷத்திரங்கள் நிலையான நக்ஷத்திரங்களைக்காட்டிலும் அதிகப் பிரகாசமுள்ளவைகள். நாம் வாழும் இந்த மண்ணுலகத்தைப் போலவே கிரகங்களெல்லாம் வெவ்வேறுலகங்களாம். நிலையான நக்ஷத்திரங்களெல்லாம் சூரியர்களென்று எண்ணப்படுகின்றன. இவைகள் ஆதித்தியமண்டலத்தோடு சம்பந்தமுடையனவாம். பெரியவடிவமுள்ள வால்நக்ஷத்திரங்கள் ஆகாயமண்டலத்திருப்பினும் அவைகளின்விவரம் ஒன்றும் இன்னும் நமக்குப்புலப்படவில்லை.

16. ஆதித்தியமண்டலங்களின் நிலைமை நாம் ஒரு படிகத்தின் மூலமாய்ப்பார்த்தால் ஒன்றும் விளங்காது. வானமண்டலத்திலுள்ள உருக்களின் வடிவத்தையும்தூரத்தையும் நிதானித்தறிய 'எர்ஷல்' என்பவர் ஒருபாயவழி காட்டியிருக்கின்றனர். அஃதாவது:—

சூரியனை 2-அடி சுற்றளவுள்ள ஒரு கோளமாக வைத்துக்கொள்வோம்; அக்கோளத்திலிருந்து 164 அடிதூரத்தில் ஒருகடுகை வைத்தால் புதனுடைய வடிவமும் தூரமும் தெரியும். சூரியகோளத்திலிருந்து 214 அடி தூரத்தில் ஒரு பட்டாணிக்கடலையை வைத்தால் வெள்ளி அல்லது சுக்கிரனுடைய வடிவமும் தூரமும் புலப்படும். இப்படியே சூரியனிலிருந்து 430 அடி தூரத்தில் மற்றொருபட்டாணிக்கடலையை வைத்தால் பூமியினுடைய வடிவமும் தூரமும் தோன்றும். இப்படியே மத்தியிலிருந்து 654 அடிதூரத்தில் ஒருகுண்டூசியின் அடி

யளவுள்ளதொன்றை வைத்தால் செவ்வாயின் வடிவமும் தூரமும் காணப்படும். சூரியனிலிருந்து 1100-அடிதூரத்தில் 80 சிறியமணல்களை வைத்தால் வேறு பல சிறிய கிரகங்களின் வடிவமும் தூரமும் வெளியாகும். சூரியனிலிருந்து அரைமைல் தூரத்தில் நடுத்தரமான ஒரு கிச்சிலிப்பழத்தை வைத்தால் வியாழன் அல்லது குருவின் வடிவமும் தூரமும் அறியப்படும். கொஞ்சம் சிறியதொரு கிச்சிலிப்பழத்தை ஒருமைல் தூரத்தை 5-பாகம்செய்து 4-வது பாகத்தில் வைத்தால் சனிக்கிரகத்தின் தூரமும் வடிவும் பிரகாசமாம். சூரியனுக்கு ஒன்றரைமைல் தூரத்தில் ஒரு கொட்டைப்பாக்கை வைத்தால் 'யூரானிஸ்' எனுங்கிரகத்தின் வடிவமும் தூரமும் காணலாகும். கொஞ்சம் பெரிய ஒரு கொட்டைப்பாக்கை மத்தியிலிருந்து $2\frac{1}{2}$-மைல்தூரத்தில் வைத்தால் 'நேப்தியூன்' எனும் கிரகத்தின் வடிவத்தையும் தூரத்தையும் நிதானித்தறியலாம். குண்டூசியின் அடியென்பதை ஒரு கடுகென வைத்துக்கொள்க. இவ்வாறாக இராகு கேதுக்களொழிந்த மற்றக்கிரகங்களின் வடிவமும் தூரமும் புலப்படுவதன்றிப் பூமிக்குத் தூரத்திலும் சமீபத்திலும் இருக்கும் கிரகங்களிவையென்பதும் புலப்பட்டது காண்க.

(இன்னும் வரும்:)

தி. வேங்கடராம ஐயங்கார்,
தமிழ்த் தலைமைப்பண்டிதர்,
சென்தோம் காலேஜ், சென்னை

௨

திருவெள்ளறைச்சாசனங்கள்.

(கஙுரு-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

[No. II].—(மேற்கூறிய சாசனத்திற்கு வடக்கில்)

1. ஸ்வஸ்திஸ்ரீகொவிராசகெசரிபன்மற்கு யா -
2. ண்டு ௩ ன்றாவது திருவெள் ளறைதிருவானைக்-

*

3. கற்பேரு [மார] டிகளுச்ச[ம்] பொது அமுது செய்-
4. யும் பொது வெதம [வ*] ல்லா'னொருபிராஹ்மண-
5. ன் உத்தமக்ஷ்ரமத்துளட்டுவிதாகஇவூர்
6. ச்சாத்துவ[ா]ய் காஞ்சந்தாமொதிரன் இவூர்-
7. க்கல்லால் வச்சபொன் எழுபதின் கழஞ்-
8. சு இப்பொன்னின் பலிசையால் ஊட்டுவதா-
9. னபடி தாலமொன்று வட்டிலொன்று பத்தெட்-
10. டுகுத்தல் பழவரிசி நாடுரி கும்மாயமு[ள்]-
11. நெய் ஆழாக்கும் பழமிரண்டும் காய்க்க-
12. [றி]புளிங்கறி தயிர்நாழி பொரிக்கறி காமி[லை]-
13. பாக்கிரண்டு இப்பரிசு சந்திராதித்தவற் ஊ-
14. ட்டுவொம[ா] னொமுலபறி டையொமி ர-
15. க்ஷை

[No. III.]—(2வது சாதனத்திற்கு வடக்கில்).

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரை[ரகொ]ண்ட கொப்பரகெ-
2. சரிபன்மற்கு யாண்[டி]ருபத்தொன்றாவது இவ்-
3. வாண்டு திருவெள்ளறைத் திருவானைக்கல் பெரு-
4. மா(ன்)னடிக(ள்)ளுக்கு திருவெள்ளறை அங்கெ
5. வாதித[கி]கன் திருவடி க[ா or ள்] வன்திருநொன்தா-
6. விளக்கு இரவும் பகலும் எரிபதாககுடுத்-
7. த பொன் இருபத்திருகழஞ்சு ச(ந்)த்ராதித்த்
8. வர் மூல பருடையார் ரக்ஷை||

[No. IV.]—(மூன்றுவது சாசனத்தின் கீழ் அதே கல்லில்.)

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கொப்பர கெசரிப-
2. ன்மக்கு யாண்டு பதினாலாவது இவ்வாண்டு
3. திருவெள்ளறைத்திருவானைக்கல்ப் பெருமாநடி-
4. களுக்கு நாங்கூர் நாட்டு தெவதாநம் நாங்கூர் காச்-
5. சாணன் தத்தன் சந்திரசெகரந் வைச்சநொ-

6. ந்தாவிளக்கு இரவும் பகலும் எரிவதாக குடுத்-
7. த பொன் முப்பதிங் கழஞ்சு ச(ந்)த்ராதித்தவத்ஸ
8. ஹைபார்ரக்ஷை

[No. V.]—(அகிலாண்டநாயகி கோவிலின் வடபாகத்தில்.)

1. [ஸ்வஸ்தி]ஸ்ரீ மதிரைகொண்ட கொப்பர
2. [கெசரி] வன்மக்கு யாண்டு ௩௰ தாவது திரு-
3. [வெள்ள] றை திருவானைக்கல் பெருமானடி-
4. [களுக்கு இ]வ்வூர் சாத்துவாய் குமரவஞ்செ[ச]ந்-
5. [தன்...அ]முதுக்கு வைச்ச பொன் ௩௰-
6. ....கழஞ்சு பொன்னிட்டால் வந்-
7. [த]......... ரநாரண [முவெ]-
8. ....

Beginning of each line built in.

[No. VI.] (4-வது சாசனத்தின் கீழ்.)

1. ஸ்வஸ்திஸ்ரீமதிரை கொண்ட கொபர கெசரிப-
2. ந்மற்க்கு யாண்டு முப்ப[த்*]து ஆறுவது திருவெ-
3. ள்ளறை திருவானைக்கல்ப் பெருமானடிகளுக்கு இ-
4. வ்வூர் ஐயஞ்ஞஸங்கரணத்தான் திருத்தெயம் வைத்-
5. த திருநொந்தா விளக்கு சந்த்ராதித்யவசெரியவைத்[த்*] திருநொ-
6. ந்தாவிளக்கு [இ]தற்க[கு*] குடுத்த பொன் திருவெள்ள றைக்கல் [லால்]
7. கழஞ்சு பொத்த[ன்] முப்பதின் கழஞ்சுபொன் குடுத்தநி-
8. லை விளக்கு ஒன்றும் இப்பொன்னில் பொகம் கொண்டு
9. திருநொந்த விளக்கெரிப்பொம் ஆநொம் திருவெள்ளறை மூலபரி-
10. டையொம் ரக்ஷை

[No. VII.]—(2-வது சாசனத்தின் கீழ்.)

1. ஸஸ்ரீ மதிரை கொண்ட கொபர கெசரி
   வ த
2. பருமர்க்கு யாண்டு ௰௩ ஆவது திருவா-
3. [னே]ய்கல் பெரும[ா*]னடிகளுக்கு திரு[வெ]வ-
4. ள்ளறைய் ச்சாதுவாய் காடன்காரிதி-
5. ருநொந்தா விளக்கிரவும் பகலும் எரிப-
6. தற்க்கு வைத்த பொன் முப்பதின் கழஞ்சுசாந்-
7. திரா[தி*] த்தவரை மூலபரிடையாரிரக்ஷை [பி]ராகடம்

[No. VIII.]—(மூன்றும் சாசனத்துக்கு வடக்கில்.)

1. ஸஸ்ரீ மதிரை கெ[ா]......‡
   வ த
2. ண்டு உ௰௩ ஆவது இவ்வூர்.........
3. த்திருமால் கொவன் மன்.........
4. வெள்ளறைத் திருவா[னே].........
5. ஜீதூவத் ஒருநொந்தாவி.........
6. தொண்ணூறு இது மூலப[ரு].........

[No. IX.]—(8-வது சாசனத்தின் கீழ்.)

1. ஸஸ்ரீகொவிராச கெசரி பன்மற்க்கு [யாண்]-
   வ த
2. டு ௰௩ ஆவது திருவெள்ளறை திருவானே [க்கல்]
3. பெருமாநடி[க*]ள் உச[ச*]ம் பொது அமுதுசெயும் [பொது*]
4. வெதம் வல்லா[ன்*] ஒருபிராஹ்மணனே [ஊட்*]-
5. டுவிதாக உறையூர் மணிகிராமத்து நாரா[யணன்*]-
6. நாச்சன் இவ்வூர் கல்லா[ல்*] வ[ச*]சபொன் அஞ்[பதி*]
7. ன் கழஞ்சு பொன்நின் பலிசையினால் தி.........
8. மாககிரமத்து ஊட்டுவதானபடி பழவரிசிநா [டுரி*]-
9. யும் பருப்பு உ[ழ*]க்கரையும் வாழைப்பழ[ம்*] இர [ண்*]டு[ம்] [நெ]-
10. ய் ஒருபிடியும் காய்கறிப்புளிங்கறியும்ப்பெ[ாரிக்*]-

‡ ஒவ்வொரு வரியின் முடிவிலும் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது.

11. கறியும் தயிர்நாழி அடைக்காய் நாலும் [இ] [ப்ப*]-
12. டிசந்திராதித்தவற் ஊட்டுவோமா[னோம்*]-
13. திருவானைக்கல் வாரியரோம் தாலநிறை......
14. பது வ[ட்*]டில் பதிங்பலம் முலபரி[டை*]-
15. யார் இரக்ஷை

Ends of each line built in.

[No. X.]—(9-வது சாசனத்தின் கீழ்.)

1. ஸ்வஸ்தி ஸ்ரீராஜ....................
2. ஆ்யவஹோராஜ....................
3. ந்திவர்க்கூ[யா]...............
4. ரிஷபயாரவ்யூ[ஷ்]
5. வன் வெங்தன்...........
6. ன சாத்தன்செ.........
7. திருமருமான் பெருே.........
8. வா[ழு]தொண்மறவ........
9. வெளாளரை யார்தங்.........
10. க்கான ட்றதியான [ட or ற]......
11. வ்யூநதெயத்†துக.........
12. ததன்† ம[ற்ற]வனை.........
13. பெருங்காவிதிச்செ......

X-வது சாசனத்தின்கீழ் பரகேசரி காலத்துச் சாசனம் ஒன்றிருக்கிறது.

[No. XI.]—(1-வது சாசனத்தின் கீழ்.)

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொ[ண்டகோப]பரகெசரிபன்-
2. மற்கு யாண்டு முப்பதாவது திருவெள்ளறை திருவா-
3. னைகற் பெருமா நடிகளுக்குச் சம்பொாதை திருவமி-
4. துக்கு இவூர்ச்சாத்துவாய் செந்தன் மாதெவன்ம-
5. ணவாட்டி குவாவன் செந்திவச்ச பொந்திரு [வெ]வள்ள[றை]ற

† புள்ளிகள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

6. கல்லாற் முப்பது பழியு...ள இரவும் பகலும் எ-
7. ரியதிருனொந்தா விளக்கினுக்கு குடுத்தபொ-
8. ன்முப்பது [ெ]தபகுளத்துக்கு குடுத்தபொ-
9. ங்பத்து எற்றி (?) எழுபதின்கழஞ்சுபொன் [க?]-
10. [ண்?]டு இப்படி செய்விப் பொமாநொம்ச-
11. ந்திராதித்தவரை முலபருடை யாரிரக்ஷ

[No. XII.]—(அர்த்தமண்டபத்தின் மேற்சுவரில்.)

1. ஸஹிஸ்ரீமதிரை கொண்ட கொப்பா கெஸரிவர்மற்கு யாவ த
ண்டு நஙகூ ஆவது திருவெள்ளறைத் திருவாஙை-
2. க்கல்லில் ஊட்டாரகர் உச்சம்பொது அமு[து*] செயும் பொது வெதுவேல்லாரிருவர் ப்ராஹ்மணரை ஊட்டுவதற்கு இவூர்
3. காச்சுவன் கெசுவந்துர்ககன் இவூர்க்கல்லால் கழஞ்சுபொத்தது(?) ஈசமி௵ னூற்று றற்பதின் கழஞ்சு பொன்னின்
4. பலிசையால் கரணத்தால் மூன்னாழி பழவரிசியு முழக்குப்பருப்பும் காய்க்கறியும், புளிங்கறியும் பொரிக்கறியும் இவிரண்டு வாழை-
5. ப்பழமும் தயிர் இருநாழியும் நெயாழாக்குமாக இப்படியூட்டுவொமானொழ் தெவர்க[ந்] மிகளொமிது முலபரிடையார் ரக்ஷ காமிலே எட்டு
6. எழுனாழிபால்
7. தாலமிரண்டு[வ]
8. ட்டிலிரண்டுமா[ய்]-
9. னாழி-

[No. XIII.]—(12-வது சாஸனத்தின் கீழ்.)

1. ஸஹிஸ்ரீ கொராச கேசரிவற்கூக்கு யாண்டு உ ரண்டாவ த
ஆவது திருவெள்ளறை சங்கரபாடி பருதந் ஆச்சந் திருவாஙைக்கல்லில் ஊடடார்கற்க்குவை [த*] தநொ

[ந்*] தாவிளக்கு ஒ—க—ந்று இதுக்கு வைத்த
2. பொன் உயடு இருபத்து ஐங்கழைஞ்சு இதுமுதல் நிற்க்க ப்பலிசையால்வந்தூஜி[கூ] வற் ஈரிப்பொம்மா நெ
[மி*] வவூர் முலபரு [டையொம்*]
End built in.

ச. ம. நடேச சாஸ்திரி.

உ

பௌத்தமத விசாரணை.

புத்தநிர்வாணம்.

புத்தமததத்துவ விஷயம், இந்நூலில் வேண்டுமட்டும் பூர்வ பட்சம் பண்ணியிருத்தலின், அதனைப்பற்றி ஈண்டு விஸ்தரிக்கவேண்டியதின்று. ஆயினும் புத்தமதஸ்தரின் பெரும்பேறாகிய நிர்வாணத்தைப்பற்றி இரண்டொருமொழி கூறுவோம். பண்டிதர் பலரும் பலவாய் இதைப்பற்றிப் பகர்ந்திருக்கின்றனர். ஒருவரோடொருவர் மாறுபட்டு மாக்ஸ்மூலர் ரைஸ்டேவிட்ஸ் பண்டிதர் இருவரும் நிர்வாணம் என்பது ஆன்மாவின்கேட்டை உணர்த்துவதின்று என்றும், பரமரகசியமான கர்மவிடுப்பின்படி பிறப்புக்குக்காரணமாகிய உள்ளம் உணர்வின்கண்ணுள்ள கொடிய அவாவின்பற்றை யறக்கெடுத்தல் என்பதே அதன் உண்மை என்றும் பகராநிற்றார்கள். இவ்வாறு உரைத்தது உண்மையேயாகுமாயினும் புத்தமதக் கோட்பாட்டின்படி, ஆன்மா உண்டென்பதும், வீடடைந்தபின்னர் அது நிலைபெறுமாறும் உண்மையாகுமோவென்று யாம் கேட்கவிடந்தரவேண்டும். சினர்களுக்குள் பின் விளங்கியவாறு இந்த உண்மையைச் சுத்த பௌதீகமாக்கி இப்பொன்னுலகங்களைப்பற்றிப்போற்றியது உண்டு. எனினும், புத்தமதக் கோட்பாட்டின்படி ஆன்மா உண்டோ இல்லையோ என்னும்வினவுக்கு விடையெழுந்தில. புத்தர் ஆன்மா உண்டென்றும் இல்லையென்றும் உறுதிகூறவில்லை;

அவர் பின்றொடர்ந்தாரும் ஆன்மாவில்லை ஆண்டவனில்லை எனக்கூறி னோர்களென்பதும் எமது துணிவு.

புத்தரின்கருத்து அவாவையும் பிறப்பிறப்பின் துன்பங்களையும் அறுத்தலுமே போதும், மற்றயவிஷயங்களை விசாரிக்கவேண்டுவதில்லை யென்பன. இந்துமதத்திற்கூறிய முன்னின்ற விஷயம் கவனிக்கவேயில்லை. முன்னர் யாம் காட்டுமாறு ஹிந்துமதத்திற் கூறிய ஒருபக்கத்தையே எடுத்துக்காட்டி அதிலுள்ள மறுபக்கத்தையும் மறந்தொழிந்தனர். நிர்வாணம் என்னும் மொழிக்கு மேலே யெழுதியபொருள் இந்துமதத்துள்ள பொருளே. இம்மொழி கீதையில் ஐந்தாம் அதிகாரம் 24-முதல் 26 சுலோகங்களில் வருகிறது. சைவசம்ஸ்காரங்களில் நிர்வாணதீக்ஷை பரமரகசியமாகும். இம்மொழிக்கு ஓடலற்ற என்பது பதப்பொருள். வாயு, வாகினி என்னும் மொழிகள்போல ஓடலற்றதே அசலம், ஸ்திரம் சிந்தைதெளிதல் என்னும் பொருள்களில் விளங்கும். இச்சிந்தைதெளிதலும் அவாவினையகற்றுவதால் உண்டாவதால் நிர்வாணம் என்பது கெடுதல் அழிதல் என்னும் பொருளைத்தர்கது. (நிர்வாணம். நிர்வாணி உடையின்மை, யில்லாதவன். அருகனை நிர்வாணியாக்கியதும் இதன்கருத்தே) ஆகவும் நிர்வாணம், மோக்ஷம், முக்தி, வீடு என்னும் மொழிகளெல்லாம், ஏதோ ஒன்றினைவிடுத்தல், கெடுத்தல் எனப்பொருள் கொள்ளும். ஆயின் எதனை அழித்தல் கெடுத்தல்வேண்டும்? அதுவே, நம்மின் அகங்காரமும், யானெதென்னும் அகப்பற்று புறப்பற்றும் விருப்பும் வெறுப்புமாகிய அவா. அதுவே பிறப்பின்வித்தும் துன்பத்தின்காரணமுமாகும். இந்தஆணவமாகியமலம்நசிக்கும்வரை பிறப்பிறப்பும் துன்பமும்துயரமும் நீங்கா; ஆயின் இவ்வாணவமோ உயிரின் உள்ளுறை ஆன்மா அன்று. இவ்வான்மாவும் என்றும் அழியவும் படாதது, என்றும் அழியவுமில்லை. இஃது என்றும் அருட்பெருஞ்சோதியின் மூழ்கி ஆநந்தத்தழுந்தி, மேல் நிலையத்தில் அமர்ந்தும், தன்னையுணராதும் உள்ளதே. ஞானிகளும் முக்தர்களும் தேகத்துடன் நிற்கினும் உலகைத்துறந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் ஆநந்தத்தை அனுபவிப்பினும், அனுபவஞானம் கிடையாது. உணர்வுக்கும், உணர்கின்றேன் என்ற உணர்வுக்கும், உள்ளவேற்றுமையை உற்றுப்பார்க்கில் அதனுண்மை புலப்படும். பரமான்மா

வுடன் ஒன்றானபோது துவைதம் அன்று, முக்தியில் ஆன்மா அறிவு மாகில், துவைதம் விளங்கும். கேவலநிலையில் அறிவானும் பொரு ளும் ஒன்றாகி, பொருள் உண்மையாயினும், அது, தனித்துத்தான் உளதென்ற ஞானம் தலைப்படாது. புத்தர் இப்பரமரகசியங்களிற் புகவில்லை. அல்லது சிலர் கூறுவதுபோல், இம்முத்துக்களைப்பன் றிகளுக்கு முன்போகட இயலவில்லை. என்றும் நியதி விளையவே விளைந்தது. அவர் வெளியாகச் சொல்லிய ஒரு பக்கம் மட்டே ஓர் மதமாகி அநேக கோடி ஜனங்களை மயக்கிக் கொண்டிருக்கிறது. அவ்வப்பொழுது நன்மை பயப்பதாயிருந்தபோதிலும் ஒரு பட்சமா கிய உண்மையை உறுதி கூறுவதில் எப்போதும் இழுக்குண்டு. நிர்வா ணம் முக்தி வீடென்ற மொழிப்பிரயோகங்களால் உய்தற்கேது, முக் தியானது அவா அறுப்பதேயென, ஹிந்து நம்புகின்றான். புத் தன் போல் அத்துடன் நிற்காமல், பாசங் கழன்ற ஆன்மா பதியிற் கலந்து நித்யானந்தத்தை யனுபவிப்பதையும் பகர்கின்றான். பாச நஷ்டமும் பதிஞானமும் காரண காரிய நிகழ்ச்சிபோ லொன்றாயினும் இவ்விரண்டும் வேறு வேறு நிலைமையுடையன. பதிஞானம் சிற்ற றிவுடைய மனிதன் முயற்சியினாலன்றி பரமேசுவரனது பேரருளி னால் கிடைக்கற்பாலது. இதுவும் அரன் பணிநின்று சுயமாக அன்பு பூண்டு ஒழுகலானன்றி கிடைக்கற்பாலதன்று. இவ்விரண்டு அநு பவங்களின் தாரதம்மியங்களை குருடன் திருஷ்டாந்தத்தால் வேறிட ங்களில் விளக்கிக்காட்டியிருக்கின்றோம். குருடன், மருத்துவன் சிகிற்சையால் கண்ணை மறைத்த படலம் நீங்கிய பின் அக்குற்றத்தி னின்றும் நீங்குகின்றான். ஆயின் படலம் நீங்குவது மாத்திரம் அவன் கோரிக்கையாகுமோ; புத்தர் பேறும் அம்மட்டே நிற்கும். படலம் நீங்கிக் கண்ணைப்பெறுவன் ஆனால், இருளிலேயே இருக்க வேண்டும். இது நன்மையாகாது. என்றும்படலநீக்கம் ஒருவித திருப்தியுண்டு பண்ணவுங்கூடும். ஆனால் இவ்வித பலனை முன்னிட் டொருவன் அதிக தூரம் செல்லமாட்டான். படலம் நீங்கியபின், ஒளியைப்பார்க்கக்கூடாது, இருட்டறையில் என்று மிருக்கவேணு மென மருத்துவன் பகருவானானால், நல்ல மருத்துவனை யடையவும் அவனுக்கு பெரும்பொருள் கொடுக்கவும் சிகிற்சையால் துன்புறவும் எவன் சம்மதிப்பான். ஏன், படலத்துடனிருப்பது இதற்குமே

லான தாகுமே. பௌத்தத்திலும் பேர்விளங்கிய நம்மதங்களுள் சிலவற்றினும், இவ்வித அசந்தர்ப்பத்திலேயே விழ்த்துகின்றது. இவர்களிற் சிலர் முக்தியில் ஒன்றாகும் சமயம், ஆன்மா அறக்கெடுகின்றதென்றும், இன்னும் சிலர் முக்தியில் அநுபவமில்லையெனவும் கூறுகின்றனர். மெய்கண்டதேவரால், சிவஞானபோதப்பதினொன்றாம் சூத்திரவார்த்திகத்தில் இக்கூற்றுகளை பூர்வபட்சப்படுத்தி யிருத்தலுங்காண்க. இதனாலே 11-ம் சூத்திரத்துக்கும், மேற்கூறிய 10ம்-சூக்திரத்துக்கும் உள்ளமுறையும் ஏற்படும். 10-ம் சூத்திரத்தில் "இறைபணி நிற்க, மலமாயை தன்னோடும் வல்வினையின்றே" எனப்பாசக்ஷயம், பந்த நிவர்த்தி, பற்றுக்கேட்டைப் பற்றிப் பிரசங்கித்தது. 11-ம் சூத்திரத்தில், "அயரா அன்பின் அரன் கழல் செலுமே" எனப் பதிஞானம், பராநுபவத்தை குறித்தது. மகாபாரத ஆராய்ச்சியில் பிரசித்திபெற்ற டால்மன்பண்டிதரும் தம், 'நிர்வாணம்' என்னும் நூலில், நிர்வாணம் என்னும் பொருள் உண்மை, புத்தருக்கு முற்பட்டதென்றும், பழைய வேதாந்தத்தினின்றுவது சாங்கியத்தினின்றுவது பிறந்ததல்ல வென்றும், இவைகளுக்கும் பழைமையான இந்துமதத்திற் கிடப்பவை யென்றும், அதன் கருத்து பிரம்ம நிர்வாணம் பரமான்மாவிற் கலத்தல் என்றும், இந்த உண்மை மகாபாரதத்திலும் கீதையிலும் பரக்கக் காணலா மென்றும் பகர்கின்றனர். இது சித்தாந்திக்குப் புதிதன்று.

"ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என்னுள்ளமும்போய்
நான்கெட்டவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ."

"நாமொழிந்து சிவமானவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ."

என்றுமன்றோ அவன்பாடிப் பரவசப்படுகின்றான். இப்பிரமாணங்கள் ஸ்ரீமன் மணிவாசகப்பிரபுவின் திருவாசகத்திலுள்ளன. இன்னுமொரு பிரமாணத்தையும் ஈங்கு வரைவோம்.

இன்றெனக்கருளி இருள்கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறேபோன்று
நின்றநின்றன்மை நினைப்பறநினைந்தே
நீயலாற்பிறிது மற்றின்மை
சென்றுசென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றும்
திருப்பெருந்துறையுறை சிவனே

யொன்றுநீயல்லை யன்றியொன்றில்லை
யாருன்னையறியகிற்பாரே.

இதிலடங்கிய உபமான உபமேயங்களைப் பின்வருமாறு விரிக்கலாம். ஞாயிறு கீழ்த்திசையின் கோடியில் உதித்து உச்சியில், அதன்பூர்ண ப்பிரகாசம் பெறுகின்றது. ஒருவனை அவனுடைய நிழலுடன் காலைமுதல் மதியம்வரை பார்ப்போம். உதயகாலத்தில் அவன்நிழல் மிகவும் நீடித்திருக்கின்றது. சூரியன் உயர எழஎழ அவன்நிழல் குறுகிக்குறுகி, உச்சியில் முற்றும் கெடுகின்றது. நாம் நினைப்பது சூரியன் நம்மைநோக்கி வருவதாக. உண்மையில் நாமே அவனை எதிர்கொண்டு செல்கின்றோம். ஆயின் அவன் நம்மைநோக்கிச் செல்வதும் உண்மையே. ஏனெனின் அச்சூரியன் வலியினாலன்றி, பூமியும் அவனைச்சுற்றிச் செல்லா. இதில், சூரியன் பதியும், மனிதன் பசுவும், அவன்நிழல் ஆணவம், அகங்காரம், அஞ்ஞானம், பாவம் எனக்கொள்ளவேண்டும். ஆன்மா கடவுளைநோக்கி "நீயல்லாற்பிறிது மற்றின்மை நினைப்பறநினைந்து சென்றுநெருங்கவும் ('சென்றுசென்று') அவன் பாசமாகிய நிழல்வரவரத் 'தேய்ந்து தேய்ந்து'' கடையில் அப்பாலொளிதன்னை முற்றிலும் கவர்ந்து விழுங்குதலால் நான் என்பதும் கெட்டு மீண்டுநிற்பது திருப்பெருந்துறைச் சிவன் ஒருவனேயாவன்.

"ஆனை வமுதே யயில்வே லரசே
ஞான கரனே நவிலத் தகுமோ
யானகிய என்னைவிழுங்கிவெறுந்
தானகின்றது தற்பரமே."

அதன்பெருக்கியைந்த கந்தர்அநுபூதி என்னும்அற்புத ஆனந்தநூலில் ஸ்ரீ அருணகிரியார் இந்த உண்மைகளை இன்னும் பலவிதமாய்க் காட்டியிருக்கின்றனர்.

"எல்லாமற என்னை இழந்த நலம்"

"குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற்றுலை வோடுறை சிந்தையுமற்று
அறிவற்று அறியாமையு மற்றதுவே"

"அறிவொன்றறநின்றறிவாரறிவில்
பிறிவொன்றறநின்றபிரானலையோ
செறிவொன்றறவந்திருளேசிதைய
வெறிவென்றவரோடுறும்வேலவனே"

"ஆசாறிகளம்துகளாயினபின்
பேசா அநுபூதிபிறந்ததுவே"

கடைஇவ்விரண்டடிகளும் பூர்வபட்சசித்தாந்தங்களின் பாகுபாடுகளை செவ்வனே விளக்குகின்றன. புத்தன் "ஆசாறிகளம்துகள் ஆக்கு" என்று மட்டுஞ்சொல்லிநிற்பன். சித்தாந்தி, அதன்மட்டுமில்லாது "பேசா அநுபூதி பிறந்ததென்றும்" பகர்வன். இத்துடன், தேவர் குறளினின்று சில மேற்கோள்களை சொற்பொருள்களிலும் ஒத்துப்பார்க்கலாம், அவரைச்சிலர் புத்தராகவும் சைனராகவும் என்னுகின்றாராகலின். எனினும் அவர் ஜீவன் ஈசுவரன் விட்டுலகம் உண்டென்று மதித்தார் என்பதற்கு ஐயம் கிடையாது. அதனை ரகசியமாகவும் மூடிவைக்கவில்லை. கௌதமருடன், "அவாவென்ப எல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும், தவாஅப்பிறப்பீனும்வித்து" எனஅருளிசெய்து "பற்றற்றேகண்ணே பிறப்பறுக்கும்" என்று பின்னுங்காட்டி, அப்பற்றறுவதற்கு முக்கியசாதனம் பரமேசுவரனது பாதாரவிந்தங்களிற் பத்திபண்ணுதலே என்று சித்தாந்தஞ்செய்தார்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றை
பற்றுக பற்று விடற்கு."

இருள் ஒளி என்னும் உபமான வாயிலாக, பாசநீக்கத்தையும் பதிப்பிற்கலத்தலையும் பின்வரும் குறளாலருளிச்செய்கின்றார்.

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறுகாட்சியவர்க்கு."

இருள்நீக்கம், மருள்நீக்கம், ஒருபக்கமாகவும், மாசறுகாட்சி இன்பம்பயத்தல் மறுபக்கமாகவும் கூர்ந்துகவனிக்கற்பாலது. இக்கருத்தினையே,

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்ற திருகுறள்களும், முதலதிகாரத்திலுள்ள மற்றைக்குறள்களும் விளக்குகின்றன.

இனி கீதையினை எடுத்து, 4, 5 அதிகாரங்களைப்படிப்போமானால், இவ்வுண்மைகளே சொற்சொல்லாய் மீண்டும் காணப்படுகின்றன. நம்பிரபுக்களில் ஒருவர் கூறியபடி, கீதையைக்கடைமுதலாகக்கொண்டு மாறிப்படிக்கவேண்டும். அப்பொழுது 4, 5 அதிகாரங்களுக்குள்ள சம்பந்தம் விளங்கும். 5-ம் அதிகாரம் கர்மசந்நியாச யோகத்தைப்பற்றியும் 4-ம் அதிகாரம் ஞானயோகத்தைப்பற்றியும், தமிழ்மேற்கோள்களிலுள்ள அதேசொற்களாலும் உவமானங்களாலும் பாசசூப பதிஞானவுண்மைகள் விளக்கப்பட்டிருக்கின்றன.

"பற்றைவிட்டு, என்னிடம் எல்லாக் கர்மங்களையும் அர்ப்பணஞ்செய்து (பணியாக்கி) நிற்கின்றானை அவனைப்பாவம்பற்று, தாமரையிற்றுளிபோல்." (V. 10).

"வினைப்பயனைவிட்டு, இருவினையொப்பு (சாந்தம்) அடைந்தவன் பரமசாந்தத்தையடைகிறான். அவ்வொப்பு அடையாதவர்கள், அவா எழுப்ப வினைப்பயன் நுகர்ந்து கட்டுப்படுகிறார்கள்." கடவுள் அசேதனப்பிரபஞ்சத்துக்கு உபாதானகர்த்தாவென்றும், இருவினைக்குக் காரணம் அவனேயென்றும் மயங்கிக்கூறும் அவலமார்க்கத்தை 14, 15-வது செய்யுட்களால் நிராகரிக்கிறார். இதைவிடப்பெருந்தப்புக் கிடையாது. பிரகிருதி பிரதானம் மாயை என்று சொல்லப்பட்டது, தனுகரணபுவன போகமாகிய சடப்பிரபஞ்சத்தின் முதற்காரணமாகும். உண்மையில் பிரகாசமுள்ள ஆன்மாவை ஆசை அஞ்ஞானம் ஆணவமலமென்னும் அழுக்குமூடிநிற்கின்றது. எப்படியெனில் பளிங்கை அழுக்குப்போலவும், நெருப்பைப் புகைபோலவும் கருவைப் பைபோலவும் உண்மையில்பதிஞானத்தால் எவனுக்கு அஞ்ஞானம் அடிபட்டுப்போகிறதோ, அவனுக்கு பரமேசுவரன் சோதிபிரகாசமாயெழுகின்ற ஞாயிறுபோன்று விளங்குகின்றான். "தன்னை (கடவுளை) நம்பித் தன்னைநினைந்து தன்னில் ஈடு

பட்டு தன்னில் எவர்கள் அழுந்துகின்றார்களோ, அவர்கள் பாபம் ஞானத்தால் பட்டுப்போய், என்றும் மீளா இன்பத்தைப் பெறுகிறார்கள்." (V. 16, 17) "வெளிப்பற்றுகளில் எவன் பற்றறநின்றானோ, அவன் பரமானந்தத்தையடைகிறான்." (V. 61)

"பாவம் கழன்று, பேதமற்று, சிந்தைதெளிந்து எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும், ரிஷிகள் பிரம்மநிர்வாணத்தையடைகிறார்கள்" (V. 25) "என்னையே யக்யம் தபசுகளின் பலனை நுகர்வானும் கொடுப்பானுமாகவும், எல்லாவுலகங்களுக்கும் மகேசுவரனாகவும் எல்லாவுயிர்களுக்கும் மங்களம்செய்பவனாகவும் எவர்கள் அறிகிறார்களோ அவர்கள் சாந்திநிர்வாணத்தையடைகிறார்கள்."(V. 29) கீதைக்கு விருத்தி செய்தோர்களும், பிர்ம்ம நிர்வாணத்துக்கு, பிர்ம்மலயம், பிர்ம்மானந்தம், மோக்ஷமென பொருள்காட்டியிருக்கின்றனர். ஆக பௌத்ததந்திரநிர்வாணம் இவ்விருபக்கமாய் யாம்மேல் விளக்கியுள்ள அத்துவித சித்தாந்தம் ஆகுமோ? இவ்விரண்டும் ஒன்றுசேருவதெப்படி? ஆனால் இருவரும் ஒரு நெறியிற்சென்று கேடயந்தாங்கிய வீரக்கல்லினிடம் சேர்ந்ததுண்டு. ஆனால் ஒருவன் ஒளிக்குப்புறம்பாய் இருள்மூடப்பட்ட கேடயத்தின் பின்பக்கத்தையே பார்த்துக் கருமையென்றேசாதிக்கின்றான். முன்புறம்போய் அருணன் கிரணம்படத் தகதகவென்று விளங்கும் மற்றப்பக்கத்தையும் பார்க்கமாட்டேனென்றும் சொல்லுகின்றான். அப்படிப்பார்க்கினன்றோ, அப்பேசரும் பிரகாசம் காணப்பெற்று, பெற்றும் மீண்டு கண்ணிழந்து, மீண்டும் பிறப்பின் விழைவுறுவண்ணம் மாளவும், சாலும். ஆகவும், நாம் உண்மையின்வழியே ஈடுபட்டு, எளிமையுடனும் தாழ்மையுடனும், புத்தமதம் ஒருபக்கமாகையையும் இந்தமதம் அறிவிற் சிறியாராகிய சனங்களிடம் பரவவும் சரியான உணர்ச்சியின்மையால் அவர்கள் ஒழுக்கம் குணம் முதலியவைகளைக்கெடுக்க நேரிடுவதும் காரணமான அதன் குறைவை எடுத்துக்காட்டுவ்யோ யாரும்மறுக்காத புத்ததர்மத்தின் அழகைப்பற்றி வர்ணிப்பதெற்றுக்கு? நிர்வாணமென்னும் பதத்துக்கு நாம் முன்னர் உள்ளமுணைவின் பற்றின்கேடு என எழுதியது உண்மையென்போம். உள்ளமும் உணர்வுமே சாந்திஆனந்தத்தில் அழுந்துவது, உண்மையோ? உள்ளம் உணர்வைவிட மேலொருதத்துவங்களில்லையோ? ஆன்மா

பரமான்மா வென்பதொன்றில்லையோ? அல்லது இந்த மதப்படி ஆன்மா கடவுள் என்னும் பதார்த்தங்களுமே பிரமையோ? பகவான் சொல்லியமொழியே இன்னும் சான்றாகும். "உயர்ந்தோர் செய்ததைத் தாழ்ந்தோரும் செய்யலுற்றார் உயர்ந்தோர் குறிப்பின்படி தாழ்ந்தோரும் பற்றலாயினர்" (கீதை) உடை காலந்தோறும் மாறுபடுவதுபோல் அபிப்பிராயங்களும் மாறுபடும். புத்தமதம் தற்காலத்துக்கு ஏற்றதாகும். அதற்குமாறாக நடப்போனும், கோபாளியும், பயித்தியக்காரனுமாக எண்ணப்படுவன்.

ஜே. யெம். நல்லசாமி.

உ

புத்தகக் குறிப்பு.

அரிசமயதீபம்:—வைணவசமயாசிரியர்களாகிய ஆழ்வாராதிகள் சரித்திரத்தை, மணிப்பிரவாளநடையிற் பெரியோர்கள் எழுதிவைத்த நூல்கள் உலகில் வழங்குதலைப் பலர் அறிவாராயினும், சிறந்த தமிழ்க்கவிகளால் தமிழ்ப்பாக்களில் அத்திவ்விய சரித்திரங்கள் பலவாண்டுகட்குமுன்னர்ப் பாடப்பெற்றிருத்தல் பலரறியார்கள். இதன் காரணம் மறைந்துகிடந்த அதனை வெளியிட்டுமுயன்றவர் இல்லாமையே. ஆழ்வாராதிகள் சரித்திரங்களைப் பிரபலவித்வான்கள் சிலர் வெவ்வேறு நூல்களாகப் பாடியிருக்கின்றனர். இவற்றுள்ளே சுருக்கமும் பொருட்பொலிவு சொற்செறிவுங்கொண்டு விளங்குவது 'அரிசமயதீபம்' என்பது. இதனை இயற்றிய வித்வசிகாமணி கீழைச்சடகோபதாசரென வழைக்கப்படுவர். இதனையியற்றியோர், தக்ககவியென்னற்குரிய இலக்கணமுழுதும் அமையப்பெற்றவரென அறியப்படுவதோடு, பரமபக்தியுடையவரென்பதையும், அவரது அழகிய நூல் விளக்குகின்றது. 'சிறந்தகவிவாணரும், பரமபாகவதருமான தாஸரவர்களுடைய பெருமையை ஈண்டெடுத்துரைப்பின் விரியுமாதலால், அதனை நிறுத்திக்கொண்டு, இந்நூற்பதிப்பைப்பற்றிச் சிறிது சொல்

வோம். இந்நூலை அச்சிட்டவர், ஆழ்வார்கள் சரித்திரங்களைத் தமிழ்ப்பாக்களிற்பாடிப் பலரியற்றியநூல்களை ஆராய்ந்து இனிய முகவுரையொன் றெழுதியுள்ளார். அன்றியும் நூன்முழுதுக்கும் பொழிப்புரையொன்றும் எழுதப்பட்டுள்ளது. இஃது அந்நூலைப் பலரும் ஒருவாறு எளிதிற் படித்தறிதற்குப் பெருங்கருவியென்னத் தட்டில்லை. காகிதமும், அச்சும் நன்கமைந்துள்ளன. சுருங்கச் சொல்லின் நூற்பெருமைக்குத் தக்கவாறு அந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளதென்பதில் ஐயமில்லை. இந்நூலைப் பரிசோதித்தும் பொழிப்புரையிட்டும், தமிழுலகத்திற்குபகரித்தோர் ஸ்ரீமாந்-முத்துகிருஷ்ண நாயுடுகாரு, 19. சாமிபிள்ளைத் தெரு, சூளை, சென்னை. இவர்கட்குத் தமிழகமும், வைஷ்ணவாபிமானிகளும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளார்கள்.

விதானமாலை மூலமும் உரையும்:—இத்தலைப்பெயரிய சோதிட கிரந்தமொன்று வரப்பெற்றேம். கடுவைகாவலன் நாராயணசுவாமிகளால் இயற்றப்பட்ட பழையதோர் சிறந்தகிரந்தமாக விளங்குகின்றது. கணிதஸ்கந்தம், சங்கிதாஸ்கந்தம், சாதகஸ்கந்தம் எனமூன்று பகுப்புடையது இந்நூல். அவற்றுள், இக்கிரந்தம் சாதகஸ்கந்தம் சங்கிதாஸ்கந்தம் என்னும் இரண்டையும் தொகுத்தும் விரித்துங் கூறுவது. சோதிடவிருப்புள்ள யாவரும் எளிதிலுணரும்வண்ணம் செய்யப்பட்டிருக்கின்றது. இக்கிரந்தம் இற்றைக்கு இருபது வருடங்களுக்குமுன் யாழ்ப்பாணம், காரை, இயற்றமிழாசிரியர் பிரம்மஸ்ரீ கார்த்திகேய ஐயரவர்களாலே வெளியிடப்பட்டது. இப்பொழுது சிலதிருத்தங்களுடன் அவர்புத்திரருளொருவரும், நம்சங்கவித்வான்களுள் ஒருவருமான, காரை. கா. சிவசிதம்பர ஐயரவர்களால் வெளியிடப்பட்டது. இக்கிரந்தம் சோதிடவிருப்புடையார்க்கு வேண்டப்படுமென்பது திண்ணம். நம் சங்கத்துக்கு ஷை ஐயரவர்கள் பத்துப்பிரதி யனுப்பி யுதவியமைக்கு நன்றி கூறுகின்றேம்.

பத்திராசிரியர்.

உஉசு. மேற்கின்ற வெம்பறை யிட்டதிர வந்தெட்டிப்
பார்க்கின்ற தன்ன பணைமுலையாள்—மேற்கொன்ற

உஉஎ. வேளைவா வென்றேன் விடைபோலக் கொல்கைக்கு
நாளைவா வென்று நயனத்தா—ளிளமரர்

உஉஅ. தேடுங் கமலையெனச் செங்கமல மாலையே
கூடும் படிகூட்டுங் கொண்டையா—ளாடும்

உஉகூ. வினைபுகுந்து வேகடஞ் செய்யாதாய் மீண்டு
மனைபுகுந்து செய்ம்மணியாய் வாய்ப்பா—டனிபுகுந்து

உகூ0. தன்மண வேட்கை சிறிதுள்ளித் தன்கிளியின்
மென்மண நோக்கி மிகநகைப்பா—டன்னருகு

உகூக. பாவைவிளை யாடிப் பணிக்கொல்லி யொத்தமைபோய்ப்
பூவைவிளை யாடிப் பொழிலொத்தாள்—பாவையருந்

உகூஉ. தானு மலர்க்காத் தலைப்பட் டுலாவுதலு
மானு மயிலும்போல் வந்தொருத்தி—தேனனையா

உகூகூ. யாதி யவனி புவனிதிரு நீலநகர்
வீதி யழக விடங்கென்னுஞ்—சோதிதிருப்

உகூச. பேரேழு மிட்டுப் பெருமகவாய் நீவளர்த்த
வோரேழு செவ்வந்திக் குள்ளோங்கி—யாரூர

உகூரு. ணமைத்த தொன்று மலர்ந்ததெனை நண்ணியதைத்
தாமத்த தோளாற் றழீஇக்கொண்டு—தேமலரைக்

உகூசு. கொய்து தொடலை குறுந்தொடிக் கைசிவப்பச்
செய்து மிலைந்து செவிலியரை—யெய்தித்

உகூஎ. திருப்பே ரவனதே யீதுதியா கேசன்
விருப்பே கொடுத்துமென வேட்ப—வுரித்தெனினுஞ்

உகூஅ. சூடியபி ணுதாந்தச் சோதித் திருவுருவா
யாடியவன் வேணிக் கடுக்குமோ—சூடிய

உகூகூ. கட்டார் கமழ்போது கண்ணுக்குக் கண்ணையிடந்
திட்டார்க் கொழிய விடப்போமோ—முட்டாது

உச0. கண்மலருஞ் சாத்தக் கருத்தொருமித் தார்க்கலது
தண்மலருஞ் சாத்தத் தகுங்கொலோ—பெண்மயிலே

(பா-ம்.) உஉசு. 'ஏர்க்கின்றவெம்பறை யிட்டதிடாதென்றெட் டிப்' ,, 'சேர்க்கவெரி' உஉகூ. 'மீட்டும்' ,, 'செம்மணியாய்' உகூ0. 'தன்மனவேட்கை' ,, 'மென்மனநோக்கி' ,, 'தன்மறுகு' உகூச. 'பெருமகவாய்' உகூஅ. 'மோ - நாடியே' உச0. 'தண்மலரைச்'

உசக. கங்கை பிறர்கொணர்ந் திட்ட கடிமலரைச்
செங்கை யலைத்தெறிந்த சீருளோ—பங்குடையா

உசஉ. டன்மாலை யிட்டுத் தழுவுந் திருக்கழுத்தி
லுன்மாலை யிட்டக்கா லூடாளோ—புன்மையிது

உசங. புந்தியுஞ் சிந்தியே லென்றவர் போற்றுதலு
மந்தியுஞ் சந்தியு மாடுவான்—வந்துதிரு

உசச. வாரூர்ப் பிறந்தாரெல் லார்க்கு மடியேனென்
றாரூரர் சொன்னதிரு வாரூரன்—சோரா

உசரு. வருணையத் தொண்ட ரனைவருந்தா னென்னுங்
கருணையைப் பார்முழுதுங் காணத்—திருவடிக்கீழ்

உசசு. மன்னுங் கருணா கரத்தொண்டை மான்வந்தா
னென்னுந் திருச்சின்னத் தெம்பிரான்—மின்னுகரத்

உசஎ. துங்கத் திகிரி சுடர்த்திகிரி வெற்பளவும்
பொங்கத் திருத்தேரிற் போதுதலு—மங்கெழுந்து

உசஅ. போந்தளவி லாய மகளிர் பொதுளப்போய்க்
காந்தளஞ் செவ்விக் கரமுகிழ்த்தா—ளேந்திழையுந்

உசகூ. தக்க தகாத வறியாத் தரத்தறிவோ
வொக்க வுமையமைபு மூடலோ—மிக்கோன்

உரு0. விருப்பத் தரியணையின் மேலுமையைப் போல
விருப்பத் தருங்கொலெனக் கென்று—டிருத்தாய

உருக. ரெவ்வகைத் தேவர்க்கு மித்தேவே வேந்தென்று
மவ்வகைக் கிட்டவடை யாளங்காண்—கைவணங்கிப்

உருஉ. பாரமாம் போதனையும் பாப்பணையும் பண்டளந்த
வாரமா ணிக்கத் தமைந்ததுகா—ணாரணா

உருங. மத்தகைய சிங்கத்துக் கீச னடிசுமப்ப
தித்தகைய சிங்கம்போ லெய்துமோ—நித்தனுக்

உருச. கொள்ளியசிங் காதனம் பொன்னென்னு மொண்கயிலை
வெள்ளி யெனலுமலால் வேறுண்டோ—கொள்பவுரி

உருரு. வல்லான் மவுலி மதியத்தும் வாமத்து
மெல்லா வனமறியு மேறுமோ—வல்லாய

(பா-ம்.) உசஉ. 'உன்மாலையுமிட்டால்' உசகூ. 'தக்கதகாதவழியறி யாத்தகவோ'
உசங. 'அஞ்சாவோன்'
உசரு. 'அருணையத்தொண்டர்' உருஉ. 'பண்டளித்த'
உசசு. 'மின்னிகரத்' ,, 'அமைத்தது'
உசஅ. 'போந்தளவில்லா' உருங. 'சுமப்பவித்தகைய'

உருசு. கற்றைக் குழற்கவரி கைக்கே யுலகத்து
மற்றைக் கிளியும்போய் வைகுமோ—நற்றவ

உருஎ. மேற்புரியா தாருக்கு வீதிவிடங் கப்பெருமான்
பாற்பிரி யாமை பலிக்குமோ—வேற்குமிடங்

உருஅ. கொள்ளை விடத்தைக் கொழுநர்க் கமுதாக்குங்
கிள்ளை மொழிக்கொழியக் கிட்டுமோ—வெள்ளிழாய்

உருகூ. சேய்மையி னின்று பணிநீங்குந் தீங்கெனலும்
வாய்மையி னின்ற மடமயிலுந்—தாமணுக

உசுO. நல்கா விடத்தார்க்குத் தம்மிடமு நல்காரின்
மல்காது வைக்கு மனமீட்டாள்—வில்வாயிற்

உசுக. பூவர விட்ட தொடைமடக்கிப் போர்மதனுந்
தேவர கண்டன் செலச்சென்று—ேனவிய

மங்கை.

உசுஉ. மொத்த வுருவத் தொருத்தி யுலகருத்தி
வைத்த கடவுண் மடமங்கை—மெய்த்தவத்தி

உசுங. னெய்துந் திருவினர் காணிக் கெனப்பிறிது
செய்து வளர்த்த திருப்பாவை—பொய்கையின்

உசுச. மீதெடுத்த பொன்மாற்று வேழ முகனறியும்
போதெடுத்த வாணிப் புதுக்கனகம்—பேதைமுதன்

உசுரு. மூசு மளக விருளை முகமதியர்
தேசு வரவரச் சிறுதலுங்—கூசிப்போ

உசுசு. யுச்சியி னின்றது பின்னும்பின் னோடியென
முச்சி விடுத்த முடிக்குழலா—ணச்சுதய

உசுஎ. மின்று மெதிர்ந்த தெனமா லயன்கோயி
னின்று நடுங்கு நெடுங்கணு—ளின்றளவே

உசுஅ. தான்புதிது கற்ற சகோடயாழ்க் கல்வியெனைத்
தேன்புதிது கற்ற செழுமொழியா—ளீன்புதிய

உசுகூ. தாலக்காச் சேய்க்குத் தரும்பைங் குரும்பையுங்
கோலக்காத் தாளமுமாங் கொங்கையாள்—மாலைக்கும்

உஎO. பூட்டக் கொடுவந்த பூணுக்குஞ் சேடியர்க்குஞ்
சூட்டப் பழியைத் தொடங்கிடையாள்—கோட்டு

(பா-ம்.) உருஎ. 'மோ - சீர்ப்பீடங்' உசுசு. 'விடுத்து முடிகுழலாள்'
உருகூ. 'பணியலுந்தீங்கு' உசுஎ. 'இன்றுமுதித்தது'
உசுங. 'செய்துவகுத்த'

௨௭௧. முலைவரவு நெஞ்ச முளரியிரண் டொத்த
கலைவரவு முற்றுங்கை கண்டா—ளுலக

௨௭௨. மிகவிறக்கு மின்றொடிவண் மென்முலைகண் டென்றான்
மு:கமிறக்கி யூரன் முகிழ்ப்பான்—மிகமதனூன்

௨௭௩. முன்மொழி வார்க்கு மொழிவன்றித் தானேமுன்
பன்மொழி செய்யாப் பருவத்தான்—மென்மலர்த்

௨௭௪. தண்டலை வீதித் தலைத்தலை நாட்செய்த
வண்டலை விட்டு மனைவிடா—டண்டாச்

௨௭௫. செழுந்துணைவி பாகர் தியாகேசர் தேரிற்
கெழுந்துணையு மாடுது மென்று—கொழுந்துழாய்த்

௨௭௬. தொங்கலை வேய்ந்தார் தொழநின்ற பாற்கடலிற்
பொங்கலை யூடாடும் பொன்போன்றுஞ்—செங்கம்பிக்

௨௭௭. காதழகர் சென்னி மதியாடக் கன்னிமான்
மீதழகி னோடாடு மெய்போன்று—மாதுமையாள்

௨௭௮. பாகத்தி னும்போ யசைந்தாடி பாற்பளித
வாகத்தி னூடு மதுபோன்றுந்—தோகையு

௨௭௯. மாடினா ணித்திலப்பே ரூசலா ரூராரைப்
பாடினா டேனொழுகப் பல்காலு—மாடத்

௨௮௦. துடனின்ற மாத ருருகி யகில
மடநின்ற கொங்கை யணங்கே—புடைநின்ற

௨௮௧. பௌவ முளரிமலர்த் தெய்வமும் பான்மலர்த்
தெய்வமும் வாழ்த்தெடுக்குந் தெய்வமே—யிவ்வகையே

௨௮௨. தாய்முத்தே யூசலா நீவிரும்பிற் சோதியாம்
வேய்முத்தே சேர விரும்பாதோ—தூய்முத்தே

௨௮௩. வேறு முதவ மதன்கரும்பை மேவியா
மீறு படுத்திலே மென்னாதோ—மாறழிய

௨௮௪. வன்று கருமா வெயிறுகடிந் தட்டமையி
னின்று கடியநெடி தென்னாதோ—கன்றியே

௨௮௫. முன்னா ளுரித்த மதகரியை மொய்ம்பினா
லின்னா ளுரிப்ப விரங்காதோ—நன்னிலவை

(பா-ம்.) ௨௭௪. 'தண்டார்ச்'
௨௭௫. 'துணைவர் த்யாகேசர் தேரிற் பவனிக்கு'
௨௭௬. 'தொழநின்று பாற் கடலப் பொங்கலையோடு'
,, 'பாற்கடற்'
௨௮௦. 'இடநின்ற மாத ரெவரு முலகம்'
௨௮௩. 'கரும்பை வெம்மதத்தான்மீறுகதக்கல் லானைமெல்லாதோ'
,, 'மேலியாம்'

உஅசு. யப்போது தேய்த்த வரிக்கரிய தாமரையி
னிப்போது தேய்ப்ப வெதிராதோ—தப்பாத

உஅஎ. வைந்தா யுதத்தை யளித்தமைபோய் நாலளித்து
நந்தா யுதம்பறித்து நல்காதோ—மைந்தர்கட

உஅஅ. முள்ளூச லாட்டுவதும் போதாமே யொண்முத்தின்
வெள்ளூச லாட்டுவதும் வேண்டுமோ—கிள்ளாய்

உஅகூ. பனிப்போதின் வாட்டம் படும்படுமுன் மேனி
யினிப்போதும் போது மெனலு—நினைப்பி

உகூ0. னருமைப் பெருமான்றென் னூரூர்ப் பெருமான்
பெருமைத் தியாகப் பெருமா—னொருதெருவிற்

உகூக. சேவிக்கு மெல்லேச் சிவலோகத் தெல்லைக்க
ணேவிப் பணிப்ப னெனவந்தான்—பாவை

உகூஉ. யிழையூச லாடா திருபொன் மகரக்
குழையூச லாடக் குதித்தா—டழைகளின்

உகூங. சேக்கையிற் றேன்றிச் சிறைநிறைந்த வோதிம
மாக்கயத் தேகாது வைகுமோ—காக்குந்தாய்

உகூச. காப்புப் பிரிந்த சகோரங் கலைமதியப்
பூப்புக் கெதிராது போதுமோ—தேர்ப்பவனி

உகூரு. சேர்ந்த குலரத்ந சிங்கா தனப்பெருமாள்
போந்த திருமறுகு போய்ப்பணிந்தான்—மாந்தளிர்

உகூசா. வண்ணந் திரிந்து மனந்திரிந்து விழ்தலுமுக்
கண்ணன் திருத்தேர் கடாவினு—னெண்ணுதலே

உகூஎ. யிற்கொண்டு புக்கா ரிடுமலர்ப் பாய்ப்படுத்தார் [டியும்
சொற்கொண்டுதெள்ளமுதைச்சோர்வித்தார்—பொற்கொ

உகூஅ. வேணுமுத் தொன்றுமே மெய்த்தழலா மல்லதுநாம்
பூணுமுத் துந்தழலாய்ப் பொங்குமோ—வானகமே

உகூகூ. பேர்த்த நிசாசர னல்லாதிப் பெண்சிறையைச்
சீர்த்த நிசாசரனுஞ் செய்யுமோ—கூர்த்திறைவ

ங00. ராடு மிராவே யுயிரோடுக்கு மன்றிவெயிற்
கோடு மிராவு மொடுக்குமோ—வாடலரன்

ங0க. பூசையிற் கூடு மணிதவிரப் போந்தாவி
னோசை மணியுமுயி ருண்ணுமோ—விசர்க்குப்

(பா-ம்.) உஅசு. 'தேய்ப்பவிரங்காதோ' உகூக. 'செய்வனே'
உஅஎ. 'போனலளித்து' ,, 'கூத்திறைவர்'
,, 'நந்தாயது' ங0க. 'பூசைத்ரிகூடமணி'
உகூச. 'கலாமதியப்'

௩௦௨. பாற்கடல் வாயொழியப் பாவி செவிதீயக்
கார்க்கடல் வாயாலங் காலுமோ—மேற்கிடும்பூ

௩௦௩. ணுண்டுமிழுங் காற்றுவிடுத் தோங்கற் றமிழமுத
விண்டுமிழுங் காற்றும் விடமாமோ—பண்டறியே

௩௦௪. னின்று விளைந்த வினையென் றிளைத்திளைத்துக்
கன்று மடநாணுங் கைநெகிழ்ந்தாள்—சென்ற

மடந்தை.

௩௦௫. தெருவத் தொருத்தி திருமடந்தை மங்கைப்
பருவத் தடுத்த படிபோய்—வரவரக்

௩௦௬. காஞ்சிச் சுருக்கமுங் கச்சிற் பெருக்கமுமாம்
பூஞ்சித் திரமருங்காள் பூண்முலையாள்—வாஞ்சித்துக்

௩௦௭. கற்பன கேட்பன வக்கால மிக்கால
நிற்பன செய்த நிலைமையாண்—முற்பருவம்

௩௦௮. பூணுங் கலவி புலவிபோ தாமைக்கு
நாணுங் கருத்தி னகைமுகையாள்—சேணுய

௩௦௯. ரங்கையார் மாடத்தி னந்தி நிலாமுன்றின்
மங்கையர் பால்வைக வைகுதலு—மங்கொரு

௩௧௦. வீழி யிதழ்விறலி மின்னனை யாய்வாழி
வாழி யெனக்கைம் மலர்கூப்பி—யாழியான்

௩௧௧. வில்லான துன்புருவ விற்பொருது நாணற்ற
தல்லாது தேவ ரறுத்ததோ—நல்லாய்

௩௧௨. வளரு மொருமூ வகைப்புட் கரிணி
முளரி நறும்போது மூன்று—முளமருண்டு

௩௧௩. மென்முகங் கீழ்மருங்கு மேனைக் குவதலது
நின்முக நோக்கியு நேருமோ—முன்னெழுவர்

௩௧௪. சீத வனசக் கிழங்ககழ்ந்தார் தெவ்வெனநின்
பாத மிருகை பணித்தன்றோ—நாதன்போய்ப்

௩௧௫. புற்றிடங் கொண்டமையும் பாதாளப் பொற்புவனத்
துற்றிடங் கொண்டமையு மோதுகோ—மற்றுன்

௩௧௬. பணிக்குப் பணிமணி பல்காலும் வாங்கிப்
பணிக்கப் புகுந்த படிகாண்—டணிப்பரிய

(பா-ம்) ௩௦௮. 'முகையாண்-மாணிக் கத்து' ௩௧௩. 'முன்னெழுவர்'

௩௧௭. சிந்தை யுனதழகிற் சென்றசையா வாசிகா
ணெந்தை யசலநிழ லெய்தினு—னந்தலத்துக்
௩௧௮. காதை யினுமுனது காரணமே போதுமெனக்
கோதை யகமுருகக் கூறினாள்—காதலியுந்
௩௧௯. தண்ணிய வாறணிந்தார் தாமே தமியேனை
யெண்ணிய வாறணைவ தென்றென்றாள்—பண்மகளும்
௩௨௦. வார்தரு பூங்குழலாள் வாம ரினிநாளை
யூர்தரு தேர்ப்பவனி யுண்டென்றாள்—வார்சடையார்
௩௨௧. நன்று தரவருமுன் னைம மலயக்கா
லின்று பொடிபடுத்தி னென்செய்கேன்—றென்றலே
௩௨௨. வெங்கண் கொடுசுடினு மேனுட் படியின்ன
மங்கம்பெண் ணுக்க லருமையோ—பங்கயக்கண்
௩௨௩. மாட்டுப் பரிவலவர் வந்தா லிளமதியக்
கோட்டுத் தழலுங் குளிருமோ—கேட்டிலையோ
௩௨௪. வப்ப ருறைநீற் றறையலித்தார்க் கிப்பிறையின்
வெப்பமுந் தட்பம் விளையாதோ—வொப்பிலாச்
௩௨௫. செம்பொன்ற்யா கேசர் சிறியேன் முலைத்தலையிற்
பைம்பொன் மறித்தும் பறிப்பரோ—நம்பியா
௩௨௬. ரூரற் கருளி யுடன்பறித்தா ருன்னிறத்துப்
பாரப் பசும்பொன் பறியாரோ—காரொத்த
௩௨௭. மாகு வளைமிடற்றார் வல்வினையேன் கையைவிடுத்
தேகு வளைமீண் டிடுவரோ—மாகூடற்
௩௨௮. செட்டு மகளிர் திரளுக் களித்தாருன்
மட்டும் வளையளிக்க மாட்டாரோ—விட்டெறிக்குங்
௩௨௯. கோவத்தின் மேனிக் குழகர் வரின்மார
னாவத்தி னம்பு மறுங்கொலோ—கோவிசயன்
௩௩௦. வேண்டும் பகழி விளைவொழித்தார் வேடுணி
யீண்டு மலருக் கெளியரோ—காண்டி
௩௩௧. யினிக்காலை யென்றென் றிருவருமிவ் வாறு
பனிக்காலை முட்டப் பகர்ந்தார்—தனிக்காலை
௬௩௨. யோட்டுந்தேர் கண்டா ளுலாத்தேருங் காண்பலெனப்
பூட்டும்பூ ணோடும் புறப்பட்டாள்—கேட்டன

(பா-ம்.) ௩௧௮. 'அகமுருகிக்' ௩௨௬. 'நேரொத்த'
௩௧௯. 'தண்ணிலவாறு' ௩௨௭. 'வாகுமணிமிடற்றார்'
௩௨௦. 'உள்ளென்றாள்' ௩௨௮. 'செட்டிமகளிர்'
௩௨௫. 'மறித்துப்'

௩௩௩. ளத்த னசபை நடத்துக்கே யாஞ்சுத்த
மத்தளமு மாசிலாத் தாளமு—மொத்ததிருச்

௩௩௪. சின்னமுங் காகளமுந் தேவாரப் பண்ணிசையி
னன்னயமும் வேத நவின்முழக்கு—முன்னதிரக்

௩௩௫. கொட்டிய துந்துபியு மான்முடியைக் கோதண்டம்
வெட்டிய நாளெடுத்த வெண்சங்கு—மெட்டென்று

௩௩௬. மாசை யுடனுடு மாடரவக் கிண்கிணியு
மோசை புகத்தன் னுயிர்புக்கா—ளாசெடுத்துப்

௩௩௭. பொன்மாரி பாடினி மேற்பொழிந்தாள் போதினாற்
பன்மாரி காமாரி பாற்பொழிந்தாள்—முன்விழுந்

௩௩௮. தமலா சிவலோகா வாரூர்த் தியாகா
கமலா லயவல்லி காந்தா—வெமையாளுஞ்

௩௩௯. செவ்வந்தித் தாமா திருவந்திக் காப்பழகா
வெவ்வந்திப் பூசல் விலக்கென்று—ளவ்வந்தி

௩௪0. வண்ணத்தா னிவ்வண்ண மாதைமுனி யேலென்று [கும்
வெண்ணத்தான்சேய்க்குவிழி வைத்தான்—பெண்ணணங்

௩௪௧. வைத்த விழியுடனே மீண்டாண் மழுவலனு
முய்த்த திருத்தே ருடன்போந்தா—னத்தெருவி

அரிவை.

௩௪௨. லுற்ற வரிவை யொருத்தி தனதுநிழல்
பற்ற வுருகும் படிமத்தாள்—செற்றெழுப்புங்

௩௪௩. காலை மதனைக் கனலாற் றிளநீரு
மாலை முடிசூட்டு மாமுடியும்—போல

௩௪௪. நிரம்பித் தலைகுனிந்து நேரொத் தடிபிற்
பரம்பிப் பணையப் பணைத்துப்—பெரும்புவனத்

௩௪௫. தார்வம் பிறக்குமன்ப ராபத் தொளித்ததென
வார்வம் பிறக்கும் வனமுலையா—ளோர்பொழுதுந்

௩௪௬. தங்கேர் குறையாத தன்னிறைவாற் பானுபதப்
பங்கே ருகமாம் பருவத்தாள்—மங்கைமுத

௩௪௭. லைந்தி னடுப்பொலிவா யாரூரன் செய்கருமம்
மைந்தி னடுப்போ லடநிற்பா—ணந்தா

(பா-ம்.) ௩௩௫. 'வெட்டியவன்றெடுத்த' ௩௪௫. 'மார்வம்'
௩௪0. 'மானைமுனியேல்' ,, 'மார்பம்'
௩௪௫. 'ஒழித்ததென' ௩௪௭. 'பொலிய'

இது வழக்காகவுங் கூறப்படும். ஒருகாலத்து வழங்கிய சொற்களும் பொருள்களும் அணிகளும் கோலமுமுதலியன ஒருகாலத்து வழங்காதனவு முள. ஓரிடத்து நிகழும்பொருண் மற்றோரிடத்து நிகழாதனவுமுள. அக் காலமும் இடமும்பற்றி எற்றவாற்றாற் செய்யுள்செய்க என்றவாறு. அதோ ளி, இதோளி, உதோளி, குயின் என்றாற்போல்வன இடைச்சங்கத்திற்காகா வாயின. 'அட்டா னானே குட்டுவன்' (பதிற்றுப்பத்து-ரு, சஎ.) 'உச்சிக் கூப்பிய கையினர்' (திருமுருகாற்றுப்படை) என்றாற்போல்வன கடைச்சங் கத்திற்காயின சொற்கள், இக்காலத்திற்காகாவாயின. 'வரிமணன் *ஞெம லக் கற்பக நடக்கும், பெருமிதப் பகட்டிற்குத் துறையு முண்டோ' (புறம்-கூ0) 'கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன' (புறம்-௪0௨) என்றாற்போலும் உ.வ மப்பொருள்களும் இக்காலத்திற்காகாவாயின. இன்னும் அந்நான்குநிலத்தும் ஓரிடத்துப்பொருள் ஓரிடத்துவரக் கூறலும், உலகொடு மலைதலும், சமய நூல்களோடு மலைதலும், கலைகளோடு மலைதலும், பிறவும் இன்னோரன்ன வை பொருண்மரபிற் றப்பாம். இவை நாடகவழக்கிற்காமாறு அகத்திணை யியலுட் கூறிற்று. 'குண்டலமொருபுடை குலாவி வில்லிட, விண்டலர்ந் தொருபுடை தோடுமின்செய' (சிந். குண. கருக) 'வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர், நுண்பூ ணாகந் திளைப்ப' (திருமுருகாற்றுப்படை)

"அம்மல ரடியுங் கையு மணிகிளர் பவள வாயுஞ்
செம்மலர் நுதலு நாவுந் திருந்தொளி யுகிரோ டங்கேழ்
விம்மிதப் பட்டு வீழ வலத்தக மெழுதி யிட்டா
ளம்மலர்க் கண்ட முள்ளிட் டரிவையைத் தெரிவை தானே."

(சிந். இலக். கூகூ) என்றாற்போலும் அணியுங் கோலமும் இக்காலத்திற்காகா வாயின. 'புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி, யொலிக்குழைச் செயலை யுடைமா ணல்குல்' (அகம். எ) இது பருவத்துக்கேற்ற அணி. 'கொல் வினைப்பொலிந்த' (அகம். கூ) என்னும்பாட்டுச் குறிஞ்சிக்கும் முல்லைக்கும் எற்றபொருள் தத்தமரபிற்றாய் வந்தன. பிறவுமன்ன. மலையைப் பிறங்க லென்று பின்பு திரித்தாற்போல, இக்காலத்தார் உயர் என்று மலையைக் கூ றலாகாது. இனிக் குடவாயிலைக் 'கொற்றச் சோழர் குடந்தை வைத்த' (அகம்-கூ0) எனவும், 'பிறங்குநிலை மாடத் துறந்தை' (புறம்-கூகூ) எனவும் முன்னோர் திரித்தவகையானே, இக்காலத்துக் களத்தூரைக் களந்தையென் றாற்போலத் திரிப்பனவும் அறிக. இனித் தமிழ்நூற்கண் வழுவமைத்தவா றன்றி ஆரியரும் பிறபாடைமாக்களும் வேண்டுமாற்றாற் றமிழ்ச் செய்யுள் செய்தல் மரபன்றென்றுணர்க. (அ0)

---

* 'ஞெமிரப்பகல்பக' என்றும் பாடம்.

அக. அகவ லென்ப தாசிரி யம்மே.

இது *நிறுத்த முறையானே †தூக்குணர்த்துகின்றது; சிறுக்கப் படும் பொன் வெள்ளிமுதலிய பொருள்களைப் பெற்றுழியன்றிக் கழஞ்சு, தொடி, துலாம் எனத் துலைக்கோலாற்றூக்கி யளக்கு மாறில்லை; அதுபோல அடிவரையறை யுடையவாய்ப் பரந்த பாவினை யடிகளாற்றுணித்துத் தூக்கி ஓசைவேறுபாடுணர்த்துதலிற் றூக்கு எல்லாப் பாவிற்கும் பொதுவாயிற்று.

இ-ள். வழக்கினுள் அகவல் என்று வழங்கப்படும் ஓசையை ஆசிரியத்திற்குரிய என்ப. எ-று.

அகவிக் கூறலின் அகவலாயிற்று. அஃதாவது கூற்றும் மாற்றமும் ஆகி ஒருவன் கேட்ப அவற்கு ஒன்று செப்பிக்கூறாது தாங்கருதியவா றெல்லாம் வரையாது கூறுவது. அதனை வழக்கினுள் அழைத்தலென்ப. அங்ஙனம் கூறுமிடத்துத் தொடர்ந்து கிடந்தவோசை அகவலாம். அவை களம்பாடு பொருநர் கண்ணும், கட்டுங்கழங்கும் இட்டுரைப்பார்கண்ணும், தம்மின் உறழ்ந்துரைப்பார் கண்ணும், பூசலிசைப்பார்கண்ணும் கேட்கப் படும். வழக்கின்கணுள்ளதாய் அங்ஙனம் அழைத்துக் கூறும் ஓசை ஆசிரியப்பா. எ-று. (அச)

அஉ. §அதாஅன் றென்ப வெண்பா யாப்பே.

இது வெண்பாவிற்குரிய செப்பலோசை கூறுகின்றது.

இ-ள். மேற்கூறிய அகவிக் கூறு மோசையன்றிச் செப்பிக்கூறுமோசையெல்லாம் வெண்பா எனப்படும் என்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

---

* 'மரபே தூக்கே தொடைவகை யெனாஅ' என நிறுத்த முறை.

† தூக்கெனினும் ஓசையெனினும் ஒக்கும்.

‡ 'அகவல் என்பது ஆசிரியன் இட்டதோர்குறி' என்பர் உரையாசிரியர்.

§ 'அஃதன்றென்ப' என்பது உரையாசிரியர் கொண்டபாடம்; "வெண்பாயாக்கப்பட்டது அகவலோசை யன்றென்றவாறு. எனவே அகவலில்லாத வோசையாம். இதனைப் பிறநூலாசிரியர் செப்பலோசை யென்ப. அகவல் என்பது ஒரு தொழில்; அத்தொழில் அதன்கண் இல்லாமையின் அஃதன்றென்றார். உதாரணம். 'பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபோ, யென்னேயென் றாழுலக்கை பற்றினேற்—கன்னோ, மனனோடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப், புனலொடன் பேரே வரும்.' இது மேற் சொல்லப்பட்டது (அகவல்) போல இசைகுறித்துவருதலின்றிச் செப்புதலாகி வாச்சியம் போன்று அறிவோசைத்தாக்கி வந்தவாறு கண்டுகொள்க" என்பது உரையாசிரியருரை.

யாப்பு என்றதனன் அவ்வோசை செய்யுண் முழுவதூஉம் ஒருங்கு தழீஇக் கிடக்கும் எ-று. அழைத்துக்கூறு தொருவற் கொருவன் இயல்புவகையான் ஒருபொருண்மையைக் கட்டுரைக்குங்கால் எழுந்த வோசை செப்பலோசையெனப்படும். அவ்விரண்டு மல்லது வழக்கினு ளின்மையின் 'அதாஅன்றென்ப' என அவைகளினிலக்கணம் பெறலாயிற்று. (அஉ)

அங. * துள்ள லோசை கலியென மொழிப.

இது செய்யுட்கண் நிகழுதற்குரிய துள்ளலோசை கூறுகின்றது.

இ-ள். வழக்கியலாற் கூறுது மூர்க்கைப்படுமோற்றுற் றுள்ளச்சொல்லுமோசை கலிப்பா எனப்படும். எ-று (அங)

அச. † தூங்க லோசை வஞ்சி யாகும்.

இஃது அச்செய்யுட்கணிகழ்தற்குரிய தூங்கலோசை கூறுகின்றது.

---

* "துள்ளலோசை கலிப்பாவிற்காம் எ-று. துள்ளுதலாவது ஒழுகு நடைத்தின்றி இடையிடை யுயர்ந்து வருதல்; கன்று துள்ளிற்றென்றாற் போலக் கொள்க. உதாரணம்.

'அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி'

என்றவழி, 'அரிதாயவறன்' என்கின்றவழிச் செப்பலோசைத்தாகிய வெண்சீர்ப் பின்னும் வெண்டளைக்கேற்ற சொல்லொடு புணராது ஆண்டெழுந்தவோசை துள்ளித்துள்ளி வந்தமையாற் றுள்ளலோசையாயிற்று" என்பது உரையாசிரியருரை.

† 'தூங்கலாவது சீர்தொறும் ஒசையறுத வஞ்சி எ-று. உதாரணம்.

"சுறமறிவன துறையெல்லா
மிறவீன்பன வில்லெல்லா
மீன்றிரிவன கிடங்கெல்லாந்
தேன்றாழ்வன பொழிலெல்லாம்
எனத், தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின் மன்ன னூரே."

இதனுட் சீர்தோறும் ஓசையறுதவாறு கண்டுகொள்க.

இ-ள். அடியிறுதியிற் றூங்காது சீர்தொறுந்தூங்கப்படும் ஓசை வஞ்சிப்பாவாகும். எ-று.

துள்ளலுந் தூங்கலும் வழக்கின்கண் நிகழாவென்றுணர்க. (அச)

அரு. மருட்பா வேனை யிருசா ரல்லது
தானிது வென்னுந் தனிநிலை யின்றே.

இது மருட்பாவிற்கு வேறோசையின்றென்கின்றது.

இ-ள். மருட்பா எ-து மருட்பாவிற் கோசையாவது. ஏனை........ யின்றே எ-து ஒழிந்த இருகூறுமல்லது தானாக வேறுபடுத்து இதுவென்று காட்டுந் தனிநிலை யின்று. எ-று.

எனவே செப்பலும் அகவலுங் கூடியது மருட்பாவாயிற்று. அதிகாரப்பட்டுச் செய்யுட்குரியவாய் நின்ற துள்ளலுந் தூங்கலும் ஒழிந்தனவே வரும் என்றற்கு 'ஏனை' யென்றார். சூத்திரங்களை நிறுத்தமுறையாற் கொள்ளாது எதிர்சென்ற கோடலிற் செப்பல் முன்னும் அகவல் பின்னுமாம். ()

அசு. *அவ்வியல் பல்லது பாட்டாங்குக் கிளவார்†.

இது மேலனவற்றிற் கோர் வரையறை கூறுகின்றது.

இ-ள். மேற்கூறிய நான்கோசையானல்லது செய்யுளை முதனூற்கண் ஆசிரியர் கிளவார். எ-று.

---

* 'அவ்விய லல்லது' என்பது பேராசிரியர் கொண்ட பாடம்.

"இது பாக்களெல்லாவற்றிற்கு முரியதோர் மரபுணர்த்-று. மேற்சொல்லப்பட்ட ஓசைவகையா லல்லது பாட்டாங்குக் கூறார் என்றவாறாயிற்று. பாட்டாங்குக் கூறலாவது ஓசை யொழிந்து சீருந் தளையும் படக்கூறல். அவ்வாறுசொல்லுங்காற் பாட்டாங்காகாதென்பதூஉம் அடியுந் தொடையும் பெற்று வந்ததாயினும் நூலின்பாற் படுதல் உரையின்பாற் படுதல் என்பதூஉம் கூறியவாறாம். அதுவருமாறு.

"ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்து
மெழுபது வகையின் வழுவில வாகி
யறுநூற் றிருபத் தைந்தா கும்மே" (செய்-டு0) என்பது ஆசிரியப்பாவிற்குரிய இலக்கணமுடைத்தாயினும் ஓசையின்மையான் ஆசிரியம் எனப் படாது நூலெனப்படுமென்று கொள்க" என்பது உரையாசிரியநரை.

இது 11 மாதப்பயிராகையினால் இதற்குமுதலிற்போட்ட எருப் போதாது. மூன்றுமாதம் செடி ஒன்றுக்கு அரைப்பலம் பிண்ணாக்கு எருவைப்போட்டால் கிழங்குகள் நன்றாக ஊறும். இதை நன்செய்ப்பூமியிற் பயிரிட்டால் அப்போது சர்க்கார்க்கந்தாயம் 6-முதல் 8 ரூபா ஆகும். ஆனால் நன்செய்ப்பூமியைப்பார்க்கிலும், தோட்டப்பூமிகளில் மஞ்சள் முதற்றரமானதாகவும் அதிகமாகவும் விளைவதைக்கண்டதுண்டு. ஈரோடு முதலான சிலவிடங்களிற் கால்வாய்த் தண்ணீரை இறைத்துக்கட்டுவதால் அப்போது சர்க்கார்க்கந்தாயம் ரூபாய் 1-8ம், தண்ணீர்கூலி ரூபாய் 4-8 ஆகும். இது பத்துப்பதினொருமாதப் பயிராகையாற் போதுமான பணமும், பொறுமையும், புத்தியும், உழைப்பும் உள்ளவர்களுக்கே தக்க பயிராம்.

மஞ்சளை ஆங்கிலகிருஷிகர் பயிர்செய்யும் விதம்.

மஞ்சட் பயிர் செய்தல்:—ஐரோப்பிய விவசாய முறைமையில் கிழங்குப்பயிர்கள் எவ்வளவு விசேஷமாய்ப் பயிரிடப்படுகின்றனவோ, அவ்வளவு முக்கியமாக இந்தியா தேசத்து விவசாயத்தில் அவைகள் பயிரிடப்படவில்லை. நாம் ஆடுமாடுகளுக்குத்தீனிக்காகக் கிழங்குப்பயிர்கள் பயிர்செய்வதில்லை. ஆனால், ஐரோபாவில் கிழங்குப்பயிர்கள் ஆடுமாடுகளுக்காகவும், மனிதர்களுக்காகவும் பயிரிடப்படுகின்றன. சென்னை இராஜதானி தென்பாகம் ஜில்லாக்களில் அநேக மாதிரி கிழங்குப்பயிர்கள் உண்டாகின்றன. இவைகளெல்லாம் அநேகமாய் அதிகக்கண்டுமுதலைக் கொடுப்பதன்றியும், ஆடுமாடுகளுக்கும், மனிதனுக்கும் ஆகாராதி தேகசௌக்கியத்தைக் கொடுக்கக்கூடியவைகளுமாம். சர்க்கரைவள்ளிக்கிழங்கு, கருணைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, சேனைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, அரொட்டிமாக்கொடுக்கும் கிழங்கு,மஞ்சள், இஞ்சி முதலியவைகள் இங்கு விசேஷமாய்ப் பயிரிடப்படுகின்றன. மலையாளப்பக்கங்களில் கிழங்குப்பயிர்கள் விசேஷம்.

மஞ்சளும் ஒருகிழங்குப்பயிராதலால், அதன் சாகுபடியைப்பற்றித் தற்சமயம் கூறுவோம்.

மஞ்சளில் நாட்டுமஞ்சளென்றும்; கஸ்தூரிமஞ்சளென்றும் இரண்டுமாதிரிகளுண்டு. கஸ்தூரிமஞ்சள் நாட்டுப்பயிராய் வளர்கிறதே

யன்றி மனிதனாற் சாகுபடிபண்ணப்படுவதில்லை. கஸ்தூரிமஞ்ச பலவிருத்திபண்ணக்கூடிய ஔஷதமாயும், வாயுவைத் தணிக்கத்த மருந்தாயும் பிரயோசனப்படுத்தப்படுகிறது. சாம்பிராணியுடன் ்தை அரைத்துப் பற்றுப்போட்டால் தலைவலிக்குத் திறமான மரு தென்று சகலருக்கும் தெரிந்தவிஷயம்தானே.

நமது இராஜதானி தென்பாகம் ஜில்லாக்களிற் சிலபாகங்களில் 'மஞ்சள்' (நாட்டுமஞ்சள்) கால்வாய்ப் பாசனத்தினாலும், கிணற்ற றைவையாலும் விசேஷமாய்ப் பயிரிடப்படுகின்றது.

மஞ்சளுக்குத்தகுந்தபூமி பாதிமணலும், பாதிகளியும் சம்பந்த முள்ள பசலைமண்பூமியேயாகும். மேற்குக்கரைகளைப்போல அதிக மழையுள்ளவிடங்களில் பாசனமில்லாமலே மஞ்சளைப் பயிர்செய்ய லாம்; மஞ்சள் தனிமையிலும் பயிர்செய்யப்படுகிறது: வெங்காயம் இஞ்சி, சேனைக்கிழங்கு, கொட்டைமுத்து, அகத்தி முதலியவைக ளோடு கலப்பாயும் பயிர்பண்ணப்படுகிறது. கோயம்புத்தூரில் வெங் காயம், சேனைக்கிழங்கோடும், ஈரோடில் ஆமணக்குப்பயிரோடும், கரூ ருக்குச் சமீபமாயுள்ள நன்செய்களிற் கரும்போடும் மஞ்சள் சாகு படியாகிறதாம்.

பூமி நன்றாய் அடிக்கடிஉழப்பட்டு ஆட்டுக்கிடை மாட்டுக்கிடை, பறைத்தெருச் சாம்பல், குப்பைகள் முதலியவற்றால் உரப்படுத்தப் பட்டு, ஜுன் ஜுலையில் இரண்டடிக்கொருதரம் முகடுகள் (Ridges) உண்டாக்கப்படுகின்றன. இந்த முகடுகளில் ஒன்றரை அடிக்கொரு தடவை, மூன்று அங்குல ஆழத்தில் விதைமஞ்சள்கள் ஊன்றப்படு கின்றன. பூமிக்குத்தகுந்தவாறு, 5, 6மாதத்துக்கு வாரம்ஒருமுறைக் குக்குறையாமல் மஞ்சளுக்குப்பாசனம் பண்ணிவரவேண்டும். அதிக மழைநிரம்பக்கெடுதலுண்டுபண்ணும். ஒருமாதத்துக் கொருதடவை கொத்திவிட்டுக் களைபிடுங்கி, இப்படி மொத்தம் 4, 5 தடவை செய் யப்படுகின்றது. ஓர் விதைக்கிழங்குகள் ஏகராவுக்கு 500 அல்லது 600 பட்டணம்படி அல்லது சுமார் 1500 பவுண்டு செல்லுமாம். கண்டுமுதல் ஏகராவுக்கு சுமார் 40000 பவுண்டு பச்சைக்கிழங்கு கிடைக்குமாம். இந்த 40000 பவுண்டும் விற்பனைக்குத் தயார்செய்

பவேண்டிய பக்குவத்தை அடைந்தால் சுமார் 5,000 பவுண்டு மஞ்சளாகிவிடும்.

மஞ்சள் பத்துமாதப் பயிர்.

ஒருபொதி மஞ்சள் விலை சுமார் ரூ 25. அதாவது 1-மனு இரண்டரை ரூபா ஆகிறது.

சாகுபடிச்செலவு விவரம்.

	ரூ.	அ.	ப.
6 உழவு	3	0	0
எருக்கியயம்	10	0	0
முகடுகள் உண்டுபண்ணவும் விதைக்கவும் ...	3	0	0
4 தடவை கொத்திக்களைபிடுங்கல்	16	0	0
விதைமஞ்சள்	40	0	0
மஞ்சளைவெட்டியெடுக்க	6	0	0
மஞ்சட்கிழங்குகளை அறுத்து பலகாய் மஞ்சளாக்க	14	0	0
பாசனம் சர்க்கார்த்தீர்வை	40	0	0
ஆக ரூ	132	0	0

அதிகவரும்படி சுமார் ரூபா 500 ஆகவும், சராசரிவரும்படி சுமார் ரூபா 250 ஆகவும்தான் வைத்துக்கொள்ளலாம்.

செலவெல்லாம்போக ஓர் ஏகரா மஞ்சட்சாகுபடியில் குடித்தனக்காரனுக்குக்காலம் சரியாய்ஒத்துக்கொண்டால் ஒருநாளும் ரூபா நூறுக்குக் குறையாது.

பச்சைமஞ்சட்கிழங்கை விற்பனைக்குத் தயார்செய்யும்விதம்;—மஞ்சட்கிழங்கை வெட்டியானவுடன் வேர், நார், முதலிய கசடுகளை நீக்கிச் சுத்தப்படுத்தவேண்டும். பிறகு ஒருசட்டியில் சாணப்பாலோடு கலந்து வேகவிட்டு எடுத்து நிழலிற் காயவைக்கவேண்டும். பங்காளப்பிராந்தியங்களிற் சட்டியிற் கிழங்குகளைப் போட்டு அதின் வாயைமண்ணால் அடைத்து சாணத்தால் மெழுகியானவுடன் சட்டியைச்சூடு பண்ணுகிறார்களாம். பிறகு மஞ்சளை விற்பனைக்குத் தயார் செய்கிறார்களாம்:

சிங்காடைக்கோட்டை.

இது காச்மீரதேசத்தில் தண்ணீர்த்தடாகத்தில் தாமரைச்செடி

யைப்போல விளைகிறது. அத்தேசத்தார் இதன் காய்களைப்பறித்து உள்ளே இருக்கும் பாவை எடுத்து ரொட்டிசுட்டுச்சாப்பிடுவார்கள். வியாதியஸ்தர்களுக்குப் பத்தியமான உணவு. இக்கொட்டைகள் சென்னையில் விலக்கு அகப்படுகின்றன. அவைகளை வாங்கி ஒரு பிடி களிமண் உருண்டைக்குட் புதைத்து பாய்ச்சலற்றுத்தடாகமாக நிற்கும் தண்ணீரிலும் தெப்பக்குளங்களிலும் போட்டால் சீக்கிரத்தில் முளைத்துக்காய்பிடிக்கும். அக்காய்களைப்பறித்து உள்ளிருக்கும் மாவை எடுத்தால் அனேகருக்கு உணவாகும்.

கரும்பு.

கரும்புபுல்வகைப்பயிரைச்சார்ந்தது; இந்நாட்டிற் பலவிடங்களிலும் விளைவிக்கலாம். தோட்ட நிலங்களைப்பார்க்கிலும் நெல்விளையும் நன்செய் நிலத்தில் கம்பீரமாகத் தழைத்தோங்கும். இது களர்நிலத்திலும் விளைவதால் "களர்நிலத்திற் கரும்புவை" என்ற பழமொழி வழங்கி வருகிறது. இதற்கு மணல் கலந்த செவ்வல் கரிசல் களிமண் கலந்த நிலம் சிரேஷ்டமானது. எண்ணைதரும் பயிருக்கேற்ற பிராணவாயுவும், ஜலவாயுவும் எருவாகவேண்டியிருப்பதால், நிலத்தை 10 அல்லது 15 தரம் நன்றாக உழுது நல்லஎருவைப்போட்டு வளமாக்கவேண்டும். கோயம்புத்தூரைச்சுற்றிலும், உடுமலைப்பேட்டை, தாராபுரத்திலும்தோட்டக்கிணற்றுநீர்ச்சகாயத்தினூற்செம்மையாகவிளைகின்றது. இதில்வெள்ளை அல்லது இரஸ்தாளி, சிவப்பு, வெள்கட்டை நாணல் முதலான பல வகைகள் உண்டு. இதில் இரஸ்தாளிக்கரும்பு மோரீசு தீவிலிருந்து சுமார் ௬0 வருஷங்களுக்கு முன்பு இந்நாட்டிற்குக்கொண்டுவரப்பட்டதாகத் தோன்றுகிறது. இதைப்பெரும்பாலும் இராகிநெற் பயிர்களுக்கு மாற்றி நடுவது நலம். கோயம்புத்தூரில் வெற்றிலைக்கொடிக்காலில் வைத்தால் நல்ல ஈரமும் எருவும் ஏறி நல்ல லாபத்தைத்தரும்.

இதைஆடிமாதத்தில்நட்டால்,அதைத்தொடரும் ஒன்பதுமாதங்களில் மழைநீர் கிடைக்கும். இதற்குப்பூமியை முதலிற் பக்குவப்படுத்தி ஓர் ஏக்கருக்கு கரு-முதல் உ0-ரூபா விலையுள்ள,ஒரு ராத்திரிக்கு ௬,000 முதல் அ,000 ஆடுகளுள்ள ஆட்டு மந்தையைக்கிடத்தி, பிறகு 10 அல்லது 15 தரம் நன்றாக உழுதும், சிற்றுப் பாத்திகளை மூன்ற

புறக் கிளம்புவதால் உண்டாகும்புகை மணல் மண் முதலியவைகள் அநேக மைல்களளவாக ஆகாயத்திற் கலந்து கொண்டே ஓடும்.

ஆகாயத்திலும், மண்ணிலும் மடிந்து அழுகுகின்ற ஜீவஜெந்துக்களின் நாற்றத்திற் பல கனபதார்த்தங்களும் கிளம்பி ஆகாயத்திற் சம்பந்திக்கின்றன.

ஓஷதிவர்க்கங்களிலிருந்து வித்து, இலை புஷ்பம், இவைகளின் அணுக்கள் பூந்தாதுகள் இவை ஆகாயத்திற் சம்பந்திக்கின்றன.

சமுத்திரத்திலிருந்து எழும் அலைகள் சுருண்டு அடிக்கும் பொழுது பிறக்கும் சில உவர்ப்பதார்த்தங்கள் ஆகாயத்திற் கலக்கின்றன.

ரம்பக்காரன் அறுக்கும் மரத்தினின்று பறக்கும் ரம்பத்தூள், கல் தச்சன பொளியும் கற்களினின்று சிதறும் சிறு பாறைத்தூள் இவைகளையும் அத்தொழிலாளிகள் சுவாசிக்கின்றார்களல்லவா? ஆகையால் இப் பதார்த்தங்கள் தான் ஆகாயத்திற் கலந்திருக்கின்றனவென்று ஒரு கணக் கேற்படுத்துவது அசாத்தியம். அவரவர் தொழிலுக்கும் அவரவர் நிலைமைக்கும் தகுந்தவாறு ஒவ்வொருவரும் ஆகாயத்தைச் சுவாசிக்கிறார்கள்.

வியாதிக்காரன் படுத்திருக்கும் அறையில் தாது வர்க்கத்தைச் சேர்ந்த கனபதார்த்தங்கள் அதிகமாக்க் காற்றிற் கலந்திருக்கும்.

நாம் சுவாசிக்கும் ஆகாயம் கெடுவதெப்படி:—ஒவ்வொரு மனிதனும் தினந்தோறும் 15-கன அடி அளவு கரிமலவாயுவைத் தனது சுவாசாசயத்தால் வெளிவிடுகின்றான். பெண்களும் குழந்தைகளும் இந்தப்பரிமாணத்திற்குக் கொஞ்சம் குறைவாக விடுகின்றார்கள். இந்த அளவைக்கொண்டு ஒருமனிதன் இரவில் தூங்கும்பொழுது அவனைச் சுற்றி அவன் தூங்கும் அறையிலிருக்கும் ஆகாயம்கெடாமலிருக்க அவ்வறையின்விசாலம் இவ்வாறாகவிருக்கவேண்டும் என்று கணக்கிட்டு வைத்தியசாலை, ராணுவசாலை, இவைகளை அதிகாரிகள் கட்டுகின்றார்கள். சுவாசாசயத்திலிருந்து வெளியில் விடப்படும் மூச்சுக்காற்றால் ஓர் அறையிலுள்ள காற்றுக் கெட்டுப்போவதுடன் மற்றக்காரணங்களாலும் அது கெடுகின்றது. அவைகள் யாவையெனில், அவனுடைய தேகத்தோலிலிருந்து வெளிக்கிளம்பும் வெப்பம், வேர்வைமுதலியநாற்றங்கள். இத்துடன் கூட விளக்கும் அவ்வறையில் எரியுமாயின் அவ்வறையிலிருக்கும் பிராணவாயு வெகு சீக்கிரமாகக் குறையும். இவ்வாறு ஓர் அறையின் வாயு கெடாமலிருப்பதற்காகத்தான் திறப்புக்களை மிகுதியாக வைப்பார்கள். இச்சங்கதிகளைப்பற்றி அவைகளுக்குக்

குறித்த விடங்களில் விசேஷமாக எழுதுவோம். நாம் சுவாசிக்கும் காற்று, நாம் அச்சுவாசத்தையே வெளிவிடுவதாலுண்டாகும் கரிமலவாயுவாலும் நாம் வெளிவிடும் சுவேதம், வெப்பம் முதலிய நாற்றங்களாலும் கெட்டுப் போகின்றது.

வாயு கெட்டுப்போவதற்கு இன்னும் பலகாரணங்களுள. நெருப்புஎரிப்பதாலும், விளக்கெரிப்பதாலும் புகைச்சுருட்டுப் பிடித்து புகையை விடுவதாலும், ஊதுவத்தி கொளுத்திவைத்துப் புகையையுண்டாக்குவதாலும் சாக்கடை, கக்கூசு முதலிய ஸ்தலங்களிலிருந்து நாற்றங்கிளம்புவதாலும் சாமாதிக்குழிகள் சாமாதியிடங்களிவைகளிலிருந்து கிளம்பும் ஓர்வித விஷவாயுவாலும், தோற்கிடங்கு, சாயப்பாவே முதலிய ஸ்தலங்களிலிருந்து வெளிப்படும் விஷக்காற்றாலும் ஒருநகரத்தின் காற்று வெகு வேகமாகக் கெடலாம். சதுப்பு நிலங்கள், கனிகள் இவைகளிலிருந்து வெளிப்படும் ஆகாயம் சுத்தாகாயத்தைக் கெடுக்கும்.

சாக்கடைவிஷக்காற்று :— (Sulphurated Hydrogen) நகரங்களில் சாக்கடையிற் பல சிறுவிஷ செந்துக்கள் ஓஷதிவிசேஷங்கள் இவைகளழுகுவதால் ஒருகொடிய விஷக்காற்று உண்டாகின்றது. இதைச் சாக்கடை விஷக்காற்று என்று மொத்தமாகச் சொல்லுவார்கள். இவ்விஷக்காற்றால் விளையும் நோய்களுக்கு அளவேயில்லை. பலநாட்கள் சாக்கடைகழுவப்படாமலிருப்பதால் இக்காற்றுச் சிலசமயங்களில் அதிகமாகச் சிலசாக்கடைகளுக்குள் உண்டாகிறது. அச்சாக்கடைகள் கழுவப்படும் பொழுது அதனாற் பிராணனையிழந்தவர்கள் பலர். அவ்வாறு பிராணனை வாங்கிவிடுவதுடன் இவ்விஷக்காற்றால் மயக்கம் விஷபேதி வாந்தி, முதலான சிறுநோய்களும் ஏகமாய் இக்காற்றைச் சுவாசித்தவர்களுக்கு உண்டாகும். இவ்விஷவாயு சாக்கடையில் மட்டும் உண்டாகின்றதென்பதல்ல. நமது வீட்டைச்சுற்றிப் பல நாற்றப்பொருள்களை நாம் போடுவதாலும், இலைச்சருகுகள், வாழைமட்டைகள், எச்சிலிலைகள், மல மூத்திரங்கள், பழையஜோடு செருப்புக்கள், உடைந்தசட்டிகள், சாம்பல்கள், கந்தைகள், பழையபாய்கள் இவைகளாலும் உண்டாகும். மாட்டுக்கொட்டில்கள், குதிரைலாயங்கள் இவைகளை அசுத்தமாக வைப்பதாலும் உண்டாகும். காட்டில் வசித்துக்கொண்டு ஒருதடவை சுவாசித்த ஆகாயத்தை மறுபடி சுவாசிக்காமல் தடவைக்குத் தடவை புது ஆகாயத்தையே சுவாசித்துவந்த மேதுஸலா என்றொருவர் அக்காரணத்தால் 500-வருஷகாலம் உயிருடன் தனது அவயவங்களுக்கு ஒருவிதக்குறைவுமில்லாமல் வசித்துவந்தார் என்றால், இவ்வுயிருக்குப் பரிசுத்தமான ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்ததுவே வேறுண்டோ?

வாயு கேடுவதாலுண்டாகும்நோய்கள்;— சுவாசாசயத்திற்குப் போதுமான நற்காற்றில்லாதபட்சத்தில் நமதுஜாடராக்கினி அதாவது நமதுபோஜனத்தை ஜீரணம்செய்து கொள்ளும் ஜீர்ணசக்தி கொஞ்சங் கொஞ்சமாகத் தன்வலிமையை யிழக்கின்றதென்றும், முதன்முதல் அதிகமாகப்பலவீனப்படுவது சுவாசாசயமேஎன்றும், அவ்வாறு சுவாசாசயம் தனது வலிமையை யிழப்பதால் கபம், சுவாசக்குழல்களிற் புண், காசம், கபவாதஜ்வரம் முதலிய நோய்கள் உண்டாகின்றன வென்றும் சொல்லப்படுகின்றது. கனிகளில் வேலைசெய்கின்றவர்களுக்கு அங்கிருக்கும் விஷவாயுவைச் சுவாசிப்பதால் இவ்வியாதிகள் பெரும்பாலும் வருவதுண்டு.

பஞ்சு அடிப்பவர்கள், சணல்நார் திரிப்பவர்கள், போரடிப்பவர்கள் இவர்கள் எல்லாரும் தங்கள் தொழிலிற் பிறக்கும் சிறுதூசுகள் தங்கள்சுவாசக் காற்றில் சம்பந்திப்பதாற் பலதடவை சுவாசாசயம் கெட்டுப்போகும்நோயால் வருந்துவார்கள்.

பித்தளை, தாமிரம் முதலிய சில உலோகங்களை உருக்கும் பொழுது சில விஷக்காற்று அவ்வாறுருக்கும் புகையினின்று கிளம்பும். இவ்விஷவாயுவால் இத்தொழிலாளிகள் சுவாசாசயசம்பந்தமான பலவித நோய்களால் வருந்துவார்கள்.

வீட்டில் வர்ணவேலைசெய்கின்றவர்கள் வர்ணம் பூசுகின்றவர்கள் இவர்களெல்லாரும், அவ்வாறு பூசப்படும் வர்ணஎண்ணெயில் ஒரு வித பாஷாணம் கலந்திருப்பதால் அவ்வர்ணம் பூசப்படும் பொழுது உண்டாகும் பலமான நாற்றத்தின் வாயு மற்றவாயுவுடன் கலப்பதாலும், அவ்வாறு கலந்த வாயுவை அவர்கள் எப்பொழுதும் நுகருவதாலும் பெரும்பாலும் கண்நோய், பல்நோய், காசம் கபம், தாகம், அசீர்ணம் அதிசாரம் முதலான பல நோய்களால் வருந்துவார்கள்.

இவ்வாறு பலதொழில்களிலும் உண்டாகும் பலவித விஷவாயுக்களால் அத்தொழிலாளிகள் தேக சௌக்கியம் குறைவது வழக்கம். அவைகள் ஒவ்வொன்றையும் நாமிங்கு எடுத்துச் சொல்லுவது அசாத்தியம்.

அதிகமாகக் கெட்டுப்போகும் வாயுவை நாம் இடைவிடாமல் சுவாசிக்கும்படி நேர்ந்தால் அதனாற்பலவிதத்தீங்குகள் நமக்கு விளையும். முதன்முதற் றேகம்வெளுக்கும்; பிறகு பசிமந்திக்கும்; அதன் பிறகு தேகத்தின் பலம் குன்றும்; கடைசியாக மனதின் உற்சாகம் குறையும்; கண்டமாலை முதலிய ரோகங்களுக்கு உற்பத்தி ஸ்தானம் இவ்வாறு விஷவாயுவை சுவாசிப்பதே என்று பெரிய வைத்தியர்கள் சொல்லுகின்றார்கள்.

வியாதிக்காரனிருக்கும் அறையில் நாமிருக்கும்போது அதிற் போதுமான காற்றுச்சஞ்சாரமிருக்கின்றதா என்பதை நாம் வெகு ஜாக்கிரதையாக பார்க்கவேண்டும். இல்லாவிடில் சிற்சிலசமயங்களில் நமக்கு அதேவியாதி தொத்துவியாதியாக வரலாம்.

சாக்கடை கக்கூசு இவைகளைக் கழுவும் பொழுது அவ்விடங்களில் அதிக விஷவாயு உண்டாகலாம். ஒரு சாக்கடையைத்திறந்து அதைச்சுத்தம் பண்ண ஒருவனிறங்கும்பொழுது அவ்விடமிருந்து உண்டாகும் விஷக் காற்றால் சிலவேளைகளில் அவன் மயக்கம் போட்டு விழுந்து பிராணனையிழப்பதுண்டு. சிலவேளைகளில் 3, 4 நாள்வரையில் மயக்கத்திலிருந்து தெளியலாம். சில சமயங்களில் விஷபேதி விஷஜ்வரம் இவைகளுண்டாகலாம். இதே சாக்கடைக்காற்று ஏதாவது ஒரு சிறு ஓட்டை அல்லது திறப்பு வழியாக நாம் வசிக்கும் அறைக்குள் பிரவேசித்திருந்தால் அவ்விடமிருக்கும் ஜனங்களுக்குச் சிறுகச்சிறுகப் பெருநோய்களை விளைவிக்கின்றது. விஷபேதி, வயிற்றுக்கடுப்பு முதன் முதற் றோன்றும்.

ஸ்மசானம், கல்லறை, செத்த மிருகங்கள் அழுகிப்போனவிடம் இவைகளிலிருந்து உண்டாகும் விஷவாயுவாற் பலவித நோய்களுண்டாகின்றன. அவைகள் யாவை யெனிற் பலவிதமான காய்ச்சல்கள் மயக்கங்கள், விஷபேதி, வயிற்றுக்கடுப்பு முதலியன.

செங்கல் சுண்ணாம்பு இவைகளின் களவாய்கள்:—இவைகளிற் புகை எவ்வளவு சமீபத்தில் நமக்கிருக்கின்றதோ அவ்வளவும் விஷம். கொஞ்சம் தூரமாக தூரமாக அவ்வளவு மோசமில்லை. இதற்காகவே இவைகளை நகரங்களுக்குள் விசேஷமாக வைக்கின்றதில்லை.

சதுப்பு நிலங்களிலிருந்து உண்டாகும் காற்று:—இதனால் வயிற்றுக் கட்டி, விஷபேதி இவைகளுண்டாகின்றன.

வாயுப்பிரசாரம்:—நாம் சுவாசம்விடுவதாலும் நமது தேகத்திலிருந்து உண்டாகும் வியர்வை, வெப்பம் இவைகளாலும், விளக்கு, நெருப்பு, இவைகள் எரிவதாலும், மலம் மூத்திரம் சாக்கடை நாற்றம் இன்னும் மற்ற நாற்றங்கள் இவைகளாலுண்டாகும் விஷக்காற்றாலும், பூமியின் கீழிருந்து உண்டாகும் விஷக்காற்றாலும், பூமியின் மேலழுகும் பல ஜெந்துக்களாலும் ஓஷதிகளாலும் இன்னும் பலவிதக்காரணங்களாலும். சுத்தமான வாயுக்கெட்டுப்போம் என்று நாமிதுவரையிற் சொல்லிவந்தோம். இவ்வாறுண்டாகும் விஷம் எவ்வாறு அகற்றப்படுவது? இது வாயுப் பிரசாரத் தாற்றான். அங்கங்குள்ள மலம் மூத்திரம் குப்பை சாக்கடை

அடைப்பு முதலியவைகளை அகற்றுவதைப்பற்றி நாம் முன்னமேயே சொல்லியிருக்கின்றோம். அவைகளால் விஷமாகப்பண்ணப்பட்ட விஷக் காற்று எவ்வாறு அகலுகின்ற தென்பதைப்பற்றி நாமினி எழுதுவோம்.

ஒவ்வொரு மனிதனும் தினந்தோறும் 15-கனஅடி அளவு கரிமலவாயுவைத் தனது சுவாசாசயத்தால் வெளிவிடுகின்றான் என்று நாம் முன்னமேயே சொல்லியிருக்கின்றோம். ஒருவீசையெண்ணெய் முற்றிலும் எரிய 450 கனஅடி அளவு காற்று வேண்டும் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வளவுகாற்றுக் குறைவுடன் அவ்வெண்ணெய் எரிவதாற் பலவிதவிஷ ஆகாயமும் கரிமலவாயுவும் உண்டாகின்றன.

நாம் சுவாசிப்பதாலும் விளக்கு நெருப்பு முதலியவைகள் எரிவதாலும் இன்னும் மற்றக்காரணங்களாலும் உண்டாகும் அசுத்தவாயுக்கள் எப்பொழுதும் நாமிருக்குமிடங்களைவிட்டு அகல வாயுப்பிரசாரமும் எப்பொழுதுமிருந்து கொண்டேயிருக்கவேண்டும். சாதாரண நிலைமையிலிருக்கும் மனிதன், வியாதியால் வருந்துகின்றவன், குழந்தைகள், பெண்டுகள், சிப்பாய்கள், மாடுகள், குதிரைகள் இவர்களெல்லார்க்கும் ஒவ்வொன்றிற்கு இவ்வளவு நற்காற்றுள்ள விடம்வேண்டும் என்று தனித்தனியே வைத்தியர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் பொதுவாக நாமிப்போது சொல்லவேண்டிய தென்னவெனில், எப்பொழுதும் பரிசுத்தமான வாயுப்பிரசாரமிருக்கவேண்டும் என்பதேயாம்.

இவ்வாயுப்பிரசாரம் இயல்பாகவேகாற்றடிப்பதாலுண்டாகலாம். கதவுகள் வழியாகவும் சாளரங்கள் வழியாகவும், சிலசமயத்திற் கூரைகள் வழியாகவும், பொலபொல வென்றிருக்கும் செங்கல்கள், கல்கள் வழியாகவும் காற்றுப் பிரசாரம்பண்ணி அசுத்தங்களை அகற்றிக்கொண்டோடும். இவ்வாறு வாயுப்பிரசாரம் நமக்குச் சுகமாக உண்டாக நமது அறைகளில் எதிரும் எதிருமாக ஜன்னல்கள் வைக்கப்பட்டிருக்கவேண்டும். பலமானகாற்று வீசும் பக்கம் ஜன்னலிருந்தால் அவ்வலிமை குறையச் சல்லடைக்கண்கள் போன்ற இரும்புவலையை ஜன்னலிற் றைத்துவைக்கலாம். ஆனால் இவ்வலையை அடிக்கடி சுத்தம் பண்ணிவைக்கவேண்டும். உஷ்ணதேசங்களில் ஓலைகளாலும் மூங்கிற்பாயாலும் குடிசைகளைக் கட்டுகின்றார்களே ; அவைகள் எவ்வளவு சுலபமானவைகளாக விருப்பினும் அவைகளிற் பரிசுத்தமான வாயுப்பிரசாரத்துக்கு ஒருவிதக் குறைவுமிருக்காது.

அநேக ஜனங்கள் கூடியிருக்குமிடங்களாகிய யந்திரச் சாலைமுதலிய ஸ்தலங்களிற் பல பலகணிவாய்கள் வைப்பதுடன் கூரைகள் இரட்டைக்

கூரைகளாகக் கட்டப்பட்டு அவைகளின் இடைவெளி முழுமையும் பரிசுத்த மான காற்றுப்புகுந்தடிக்க வழிவிட்டிருந்தால், அது அவ்விடம் கூடுகின்ற வர்களுக்கு விஷக்காற்றால் உண்டாகும் நோயை விளைவிக்காமல் நல்ல வாயுவையே அவர்களுடைய சுவாசத்திற்கு அளிக்கும். ஒரு குளத்திற்குப் பாய்கால், வடிகால் இரண்டும் அவசியம் என்பது போல ஒவ்வொரு வாச ஸ்தலத்திற்கும் எதிரும் எதிருமாக ஜன்னல்களிருந்தாற்றான் பரிசுத்தக் காற்று உட்புகுவதும் விஷக்காற்று அகலுவதும்சாத்தியமாகும். இயல்பாகக் காற்று வீசுவது உஷ்ணதேசமாகிய நமது நாட்டில் எப்பொழுதும் உண்டா கையால் நமக்குக் கிருத்திருமமாகிய காற்று உண்டாக்கிக் கொள்ளவேண்டி யதில்லை.

குளிர் தேசங்களிற் காற்றுப் போக்கில்லாத அறைகளிற் பரிசுத்தமான காற்றுப்பிரசாரம்பண்ணக் குழல்களை ஏற்படுத்தி அக்குழல்கள் வழியாக நற் காற்று உட்புகுவதற்கும் விஷக்காற்று வெளியேபோவதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொள்ளுகின்றார்கள்.

ஒன்பதாம் அதிகாரம்.

ஸ்நாந முதலிய நித்தியகருமங்கள்.

Chapter IX.—Ablution.

உஷ்ணதேசமாகிய நமது தேசத்தில் ஸ்நாநத்தால் உண்டாகும் சௌ க்கியங்கள் பலவிதம். ஸ்நாநம் என்பது நமது தேசத்திலுள்ள ஒவ்வொரு ஜாதியார்களுடைய மதத்தைஅனுசரித்ததாயும், அவரவர்கள் தங்கள் மதா சாரப்படி செய்யவேண்டிய நித்திய கர்மானுஷ்டானங்கள் நோன்பு முதலிய சடங்குகளை ஸ்நானம் செய்தே ஆரம்பிக்க வேண்டியவர்களாகவிருப்ப தால் அவசியமானதாகவு மிருக்கின்றது. ஸ்நாநத்தால் விளையும் பலவித சௌக்கியங்களையும், ஸ்நாநங்களுடைய பலவிதங்களையும், ஒருவன் தனது படுக்கையை விட்டு எழுந்திருந்து ஸ்நாநம் செய்யும் சமயம்வரையில் அவன் செய்யவேண்டிய கருமங்களையும் இங்குவிவரித்து எழுதுவோம்.

ஒவ்வொருவரும் சூரியன் உதிக்க $1\frac{1}{2}$ மணி நேரமிருக்கும் பொழுது தனது படுக்கையை விட்டு எழுந்திருந்து சூரியோதய மாவதற்குள் தனது நித்திய கடனை அநேகமாய் முடித்துக்கொள்ள வேண்டுமென்று நமது மத கிரந்தங்களில் எழுதப்பட்டிருக்கின்றது. எல்லா மதஸ்தர்களும் அவ் வாறே விடியற்காலம் எழுந்திருப்பதில் எவ்வளவோ குணமிருக்கிற

தென்றும் சொல்லுகிறார்கள். அவைகளைப்பற்றி நாம் கொஞ்சம் விஸ்தாரமாக எழுதுவோம். "ஒவ்வொருவனும் இகத்திலும் பரத்திலும் தனது நன்மையை நாடுவானேயாகில் அவன் பிராம்ஹே முகூர்த்தத்தில் எழுந்திருக்கவேண்டும்" என்று மனு ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கின்றது:—

[illegible]

யாக்ஞவல்க்யர்ஸ்மிருதியிலும் அவ்வாறே சொல்லப்பட்டிருக்கின்றது.

[illegible]

இங்கிலீஷ் பாஷையிலும் ஒருகிரந்தகர்த்தர் 'யாவனொருவன் சீக்கிரத்தில் படுக்கப்போய்ச் சீக்கிரத்தில் அதாவது விடியு முன்னம் எழுந்திருக்கிறானோ அவன் தேக சௌக்கியத்தையும் லட்சுமீகடாக்ஷத்தையும் அதிக புத்தியையுமடைகின்றான்.' என்று சொல்லியிருக்கின்றார்.

"Early to bed and early to rise makes a man healthy wealthy and wise"

ஆகவே எல்லாரும் விடியற்காலம் எழுந்திருப்பது மிகவும் உத்தமம்; அதனாற் பலவித நன்மைகள் உண்டு என்றும் சொல்லியிருக்கிறார்கள். எல்லாமதஸ்தர்களு மிவ்விஷயத்தையும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். விடியற்காலம், பிராம்ஹேமுகூர்த்தம் என்று சொல்லுவதனால் சூரியன் உதிக்க 1½ மணியிருக்கும் வேளையானது மிகவும் உத்தமமான வேளையென்றும் எவனும் இவ்வேளையில் நல்ல விதமான எண்ணங்களையே எண்ணுவான் என்றும் திருடன், முடிச்சவிழ்க்கி, குடியன், வெறியன், இவர்கள் மனதுகூட இந்தசமயத்தில் கொடிய கருத்தை ஒருவாறு ஒழிந்து நல்ல வழியில் நிற்குமென்றும், பாம்பு புலி முதலிய துஷ்டஜெந்துக்களும் விலங்குகளும் கூட இச்சமயத்தில் ஒருவரையும் உபத்திரவம் செய்கிறதில்லை என்றும் பெரியவர்கள்பலர் பல விடங்களில் எழுதியிருக்கிறார்கள். இவ்வளவு உத்தம குணம் இந்த வேளைக்கு ஏற்பட்டிருக்கின்றபடியால் இந்த வேளையில் எழுந்திருந்து ஒவ்வொருவனும் தனக்கு இகத்துக்கும் பரத்துக்கும் சாதகமான எல்லா விஷயங்களையும் பற்றி யோசிக்கவேண்டியது. * அதாவது காலை சூரியன் உதயமாகும்முன் விடியற்காலத்தில் எழுந்து தனது முகத்தைக்கழுவி வாய்கொப்பளித்து படுக்கையில் உட்கார்ந்து கடவுளைத்துதித்து அன்று தான்செய்யவேண்டிய காரியங்கள் என்னவுண்டோ அவைகளைப்பற்றியோஜித்து ஒருவித அட்டவணை

---

* [illegible]

ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்றபடி. ஐரோப்பாக்கண்டத்தில் பிரஷியா என்ற நாட்டில் பிரடிரிக்-தி-கிரேட் (Frederick the great) என்ற மன்னவரொருவர் எப்பொழுதும் விடியற்காலத்திலெழுந்திருந்து தாம் ராஜ்ஜியபரிபாலனத்திற் செய்யவேண்டிய எல்லாக் காரியங்களைப்பற்றியும் யோசித்து அப்பொழுது எழுதவேண்டியவற்றையெழுதியும் மற்றவித ஏற்பாடுகள் செய்தும்வைப்பார். பொழுது விடியும்முன்னமே நாம்எழுந்து நமது தேகத்தின் பரிசுத்தத்தை ஸம்பந்தித்தவைகளான எல்லாவித காரியங்களையும் முடித்துக்கொண்டு பொழுதுவிடிந்ததும் லௌகிகமாயும் வைதீகமாயும் நாம் செய்யவேண்டிய மற்றக்காரியங்களுக்கு ஸித்தமாக விருக்கவேண்டும். மனிதனைப்போல் விவேகமுள்ளவைகள்என்று ஒப்புக்கொள்ளப்படாத பட்சிகள் பசுக்கள் இவைகளெல்லாம் பிராம்ஹமுகூர்த்தத்தில் அருணோதயங்கண்டதும் வெகு உற்சாகத்துடன் எழுந்து நின்று இனியகுரலால் சூரிய பகவானை உபசரித்தழைக்கின்றனவே. அப்படியிருக்க விவேகியாகிய மானிடன் அச்சமயத்தில் அயர்ந்து தூங்கினால் அவனைவிடப் பாவியுண்டோ!

இப்பொருளையேகருதி வால்மீகிராமாயணம் அயோத்தியாகாண்டத்தில் கௌசலையைப் பரதர் ஆறுதல் செய்யும்பொழுது "ஸ்ரீராமர் காடுசென்றவிஷயத்தில் தான் உடந்தையாக விருந்திருந்தேனேயாகில் தனக்கு பிராம்ஹமுகூர்த்தத்தில் தூங்கினவனுக்கு நேரிடும்பாவம் சம்பவிக்கக்கடவது" என்றுசொல்லுகின்றார். இதனால் பிராம்ஹமுகூர்த்தத்தில் நித்திரை செய்வது நமது பெரியோர்களாற் பெரும்பாவமாகக் கருதப்பட்டதாக ஏற்படுகின்றது. எல்லாமதஸ்தர்களும் விடியற்காலம் எழுந்திருக்கவேண்டும்: அவ்வாறு செய்வதாற் பலவித நன்மை உண்டு என்பதைஒரேவாக்காய் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். அன்றியும், நமது நாட்டில் மட்டுமல்ல, எவ்விடத்தைப்பற்றி நாம் பரிசோதித்துப்பார்த்தாலும் எத்தொழிலிலும் விடியற்காலம் எழுந்து தன்தொழிலை ஆரம்பித்தவன் எப்பொழுதும் அதிக க்ஷேமத்தையும், புகழையும் பாக்கியத்தையும் பெறுவதை நாம்காணலாம்.

நமது முன்னோர்கள் எல்லாரும் ஒப்புக்கொண்டு செய்துவந்த இந்த ஆசாரத்தை நமது நாட்டார்கள் இப்பொழுது பெரும்பாலும் கைவிட்டிருக்கின்றார்களாகையால் இதைப்பற்றி இவ்வளவு தூரம் நாமிங்கு எழுதுகின்றோம். வைத்யநாததீக்ஷிதீயம் என்ற ஒரு பிரசித்த ஆசார கிரந்தத்தில் பிராம்ஹமுகூர்த்தம் என்பது தேவதைகளும் மானிடர்களும் சந்திக்கும் உத்தமமான காலம் என்றும், அக்காலத்தில் எழுந்து தான் இகத்துக்கும் பரத்துக்கும் ஒவ்வொரு தினத்திலும் வேண்டியவைகளைப் பற்றி நாம் நன்றாக விசாரிக்கவேண்டும் என்றும், எவனொருவன் தான் எப்பொழுதும்

உ
கடவுள் துணை.
செந்தமிழ்.
தொகுதி-ந.] விசுவாவசுஹூ வைகாசிமீ [பகுதி-எ.

வேளிர் வரலாறு.

[இவ்வியாசம், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் நான்காம் வருஷோற்சவ தினங்களுளொன்றாகிய 1905ஹூ மேமீ 25உ காலை, சென்னைத் 'தபாலிலாகா' த்தலைவர் ஸ்ரீமத்-வி. கனகசபைப்பிள்ளையவர்களைச் சபாநாயகராகப்பெற்ற வித்துவசமூகத்தில், 'செந்தமிழ்' உதவிப்பத்திராசிரியர் ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்களால் எழுதிப் படிக்கப்பட்டதாகும்—பத்திராசிரியர்.]

செந்தமிழ் வளர்த்த பெருமையிற் சேரசோழபாண்டியர் எவ்வளவு பாகமுடையரோ, அதற்கு அதிகமாகக் கொள்ளாது போயினும், அவரளவு சமபாகம் பெற்றுவிளங்கிய ஒரு கூட்டத்தாருமுண்டெனின் அது சிலர்க்குப்புதுமையாக இருக்கலாம். ஆனால் அடிப்பட்ட செந்தமிழ் மக்களுக்கு அது புதுமையன்று. உள்ளவாறே ஆராய்ந்தால், அம்மூவேந்தர் படைத்த தமிழ்ப் பெருமையளவு சிறக்கப்படைத்த பெருமையாளர் இக்கூட்டத்தவரென்பது தெளிவாகும். இவர்கள் தாம் வேளிர் என்றழைக்கப்படுவார்கள். இரவாமலீந்த கடையேழுவள்ளல்களிற் பலர் இவர்களே. "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங்கொடுப் பாரிலை" என்னும் அருமைத்திருவாக்குப் பெற்றவன் இக்கூட்டத்தவருள் ஒருவனேயாவன். தமிழ் வளர்த்ததனால் தானடைந்த ஒப்பற்ற புகழைக் கண்டு மூவேந்தரும் அழுக்காறுகொள்ள நின்ற வள்ளல் யார்? இவ்வாறு பெருமைபெற்றவர்களைப்பற்றிப் பொதுவாகத் தெரிந்தவிஷயங்களையன்றிச் சிறப்பாக ஆய்ந்தறியப்பட்டவை மிகச் சிலவேயாகும்.

செந்தமிழ் வளர்த்தவரென்னும் அபிமானம்பற்றிச் சேர சோழ பாண்டியரது வரலாறுகளை ஆராய்வதிற் றமிழ்மக்களால் எத்துணை முயற்சி இப்போது எடுக்கப்படுகின்றதோ, அதிற் சிறுபகுதி யளவேனும் இவ்வேளிர் விஷயத்தினும் எடுத்தல் தமிழ்மக்கள் கடனன்றோ. ஆனல் அம்முயற்சியிலிறங்கத் தக்ககருவிகள் கிடைத்தனவல்ல. வேளிரது பரம்பரைவரலாறுகளை எழுதிவைத்த பழைய நூல்களேனும் சாதனங்களேனுங் கிடையா. இப்போது காணப்படுவதெல்லாம் புறநானூறு முதலிய சில பழந்தமிழ்நூல்களிற் புலவர்கள் அவ்வக்காலங்களில் அவர்களைப்பாடிய ஒருசில செய்யுட்களேயாம். இவ்வொரு சிலவற்றைக்கொண்டு வேளிர்வரலாறெல்லாந் தெரிதல் கூடாததேயாகும். ஆயினும், வேளிர்வரலாருகிய இருண்ட சரக்கறையிற் கையிலுள்ள இச்சிறுவெளிச்சங்களைத் துணைக்கொண்டு கூடியவளவு துருவுவோம். அங்ஙனந்துருவி நோக்குவதிற் றெரிகின்றவற்றை வெளியே வைக்க முயல்வோம்.

பழைய சங்கச் செய்யுள்களில் வேளிர் என்ற ஒரு கூட்டத்தார், தமிழ்ப்பேரரசர்களாகிய சேர சோழ பாண்டியரை யடுத்துப் பலவிடங்களிற் கூறப்படுகின்றனர். இதனைப் "பண்கெழு வேந்தரும் வேளிரும்" எனப் புறநானூற்றினும், "இருபெரு வேந்தரொடு வேளிர்" என மதுரைக்காஞ்சியினும், "வேந்தரும் வேளிரும்" எனப் பதிற்றுப்பத்திற் பலவிடங்களினும் வருதலால் அறியலாம். இதனல் தமிழகத்திற் பேரரசர்களாகிய மூவேந்தரையுமடுத்து மதிக்கப்பட்ட சிற்றரசருள் இவ்வேளிர்களே முற்பட்டவர்களென்பது தெரியவரும். அன்றியும் "தொன்முதுவேளிர்" "நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிர்" "இருங்கோவேண்மருங்கு" என நூல்களிற் காணப்படுவதால் இவர்கள் பண்டைக்காலமுதலே தமிழ்நாட்டில் விளங்கியவர்களென்பதும் தேறப்படும்.

இனி, இவ்வேளிர் யாவர்? இவர் குலம் யாது? இவர் தமிழ்ப்பழங் குடிகளைச் சார்ந்தவரா அன்றி வந்தேறியவரா? இவர் புராதனநாடியாது? இவரது காலமும் வரலாறும் என்னை? என்ற விஷயங்கள் ஆராயத்தக்கன.

வேளிர் வரலாற்றைப்பற்றித் தமிழ் நாட்டில் வழங்கிய கர்ண பரம்பரைச் செய்திகள் சிலவற்றை, ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியப்பாயிரவுரையில் அடியில் வரும் வாக்கியங்களிற் குறிப்பிக்கின்றார். அவையாவன:— "தேவரெல்லாங்கூடி யாஞ்சேர விருத்தலின், மேருத்தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது. அதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர் என்று அவரை வேண்டிக் கொள்ள, அவருந் தென்றிசைக்கட்போதுகின்றவர்......துவராபதிப் போந்து, நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதி னெண்மரையும் பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவா ளரையும் கொண்டு போந்து காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின் கணிருந்தனர்" என்பன. இவற்றுள்ளே 'துவராபதி நிலங்கடந்த நெடுமுடியண்ணல்' என்பது துவாரகையை உண்டாக்கி யாட்சி புரிந்தருளிய திருமாலவதாரமாகிய கண்ணபிரானையே குறிப்பதென் பது தெளிவாம். மேற்கூறிய செய்திகளுள், 'அகத்திய முனிவர் துவாரகை சென்று கண்ணபிரானது வழியினராகிய அரசரையும் வேளிரையும் தென்னாட்டிற் குடியேற்றினர்" என்பதே நாம் இங்கு எடுத்துக்கொள்ளுதற்கு உரியது. அகஸ்தியர் தென்னாடு வந்த வர லாற்றைப்பற்றிப் புராணங்களிற் சொல்லப்பட்டிருப்பதை யொத் தே பெரும்பான்மையும் மேற்செய்திகள் அமைந்துள்ளனவாயினும் கண்ணபிரான் வமிசத்தவர் பலரை அம்முனிவர் உடனழைத்து வந் தாரென்பது அப்புராணங்கட்குப் புறம்பானதாகத் தெரிகின்றது. தெரிகின்றதாயினும் அச்செய்தி அவ்வுரையாளரால் "வேந்து வினையியற்கை" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தின் அவதாரிகை யிலும் "இது மலயமாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்க் கும் வேந்தன்றொழில் உரித்தென்கின்றது." என மற்றும் ஒருமுறை எடுத்தோதிவற்புறுத்தப்பட்டுள்ளது.

இப்பிற்கூற்றில், முற்கூற்றிற் சேர்க்கப்பட்ட அருவாளரை யொழித்து, ஒழிந்த நரபதியரும் வேளிருமே கண்ணபிரான் வழியி னரெனவும், அவர் பதினெண்வகைக் குடியினரெனவும், அவரெல் லாம் அரசுரிமை யெய்தற்குரியவரெனவும் கூறப்படுகின்றன. இவ்

வாறு வேளிரைப்பற்றிய செய்திகளை, நச்சினார்க்கினியர் ஒருமுறைக்கு இருமுறை கூறுதலால், அவை, ஏதோஒரு தக்கஆதாரத்தைப் பற்றியே எழுந்திருத்தல் வேண்டுமென்று விளங்குகின்றது. ஆனால் அவ்வுரைகாரர் தாமெழுதுவனவற்றுக்குக் காரணமாயிருந்த மேற்கோள்களை எடுத்துக்காட்டினாரில்லை. இச்செய்திகள் மேற்கோள்களுடன் அறியப்பட்டாலன்றிப் பிற்காலத்தவரொருவர் கூற்றை மட்டும் நம்பி மேற்செல்லுதல் இயலாததாம். மேலும் துவாரகையை ஆண்ட கண்ணபிரான் வழியினர் இவ்வேளிர் என்றால் அது புதியதன்றோ! ஆதலால் நச்சினார்க்கினியர் எழுதிய இச்செய்திகளை அடிப்படையாகக்கொண்டு, அவற்றை உண்மையென்று காட்டவல்ல வேறுசாதனங்கள் உளவா என்பதை இனி ஆராய்ச்சி செய்வோம்.

நச்சினார்க்கினியர் கூற்றுப்படி, "வேளிர்" என்பவர் துவாரகையை யாண்ட கண்ணபிரான் வழியினராயின், அவர்களை நாம் யாதவர் என்றே அழைக்கலாம். ஏனெனில், கண்ணன்வழியினரெல்லாம் *யதுவம்சத்திற் பிறந்த சந்திரகுலத்தவரென்பது பிரசித்தமன்றோ. முற்காலத்திலேவேளிர்என்பவர் துவாரகையினின்று தென்னாட்டுக்கு வந்த யாதவர்களாயின், அவர்கள் வரலாறு பண்டைத் தண்டமிழ்நூல்களிற் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். நச்

---

* "யது வென்பான் பாண்டவரின்மூதாதைகளில் ஒருவனாகிய யயாதிக்கு தேவயானை வயிற்றிலுதித்த புத்திரன். இவன் வமிசம் பல்கிப் பலகிளைகளாகி, அனேக பிரசித்திபெற்ற ராஜர்களைத் தந்தது. யதுவினது மூத்தகுமாரனாகிய சகஸ்ரஜித்தினாலே ஹேஹயவமிசமாயிற்று. அவ்வமிசத்திலே கார்த்தவீரியார்ஜ்ஜுனன் என்னும் பிரசித்திபெற்ற அரசன் தோன்றினான். அவன் சந்ததியிலே தாளஜங்கர்கள் தோன்றி விளங்கினர். யதுவின் இரண்டாம் புத்திரனாகிய குரோஷ்டுவே வமிசத்திலே பிரசித்திபெற்றவர்கள் சசிபிந்து சியாமகன் விதர்ப்பன் என்பவர்கள். இவருள் விதர்ப்பனால் விதர்ப்பராஜ வமிசம் வந்தது. விதர்ப்பன் மூன்றாம் புத்திரனாலே சேதி வமிசம் வந்தது. இரண்டாம்புத்திரன் வமிசத்தவனாகிய சாத்துவதனால் போஜவமிசமும் அந்தகவமிசமும் விருஷ்ணிகவம்சமும் வந்தன. இவற்றுள் அந்தகவமிசத்திலேதான் கண்ணபிரான் அவதரித்தது" என்பர்.

சினார்க்கினியரெழுத்துப்படி, அவர்கள் கண்ணபிரான் காலத்தை யடுத்துத் தெற்கே வந்தேறினவராகத் தெரிதலால், அவர்கள் செய்தியை நன்றாக விளக்கக்கூடிய அக்காலத்து நூல்கள் இப்போது இறந்தன. ஆயினும், பிற்பட்ட கடைச்சங்கச்செய்யுளில் அவ்வேளிரது வரலாற்றைக் காட்டவல்ல இரண்டொரு செய்திகளும் இல்லாமற் போகவில்லை. புறநானூற்றிற் கபிலரென்னும் புலவர் இருங்கோவேள் என்பானைப் புகழுமிடத்து,

"நீயே, வடபான் முனிவன் றடவினுட் டோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே"

எனக் கூறியிருக்கும் பாடலொன்று காணப்படுகின்றது (உ0க). இதன் பொருள்:—"நீதான், வடதேசத்து முனிவரொருவரது யாகபாத்திரத்திற் றோன்றிச் செம்பாலழகாகச் செய்யப்பட்ட மிகப்பெரிய கோட்டையையுடைய வெறுத்தலில்லாத பொன்மயமாகிய துவாரகாபுரியை ஆண்டு நாற்பத்தொன்பது தலைமுறையாக வந்தவேளிர்க்குள்ளே சிறந்த வேளாயிருக்கின்றாய்" என்பதாம். இப்பழைய மேற்கோளால் வேளிர் என்பவர் துவாரகையினின்று வந்து தென்னாடாண்டவர் என்பதுமட்டில் இனிது விளங்கும். விளங்கவே, மேற்கூறிய நச்சினார்க்கினியர் செய்திகளிற் சிறந்தவொன்றற்கு பிரபலமான இலக்கியம் காணப்பட்டது.

இனி, வேளிர் துவாரகையினின்று வந்தேறியவரென்பதற்கு இலக்கியங்காணப்பட்டதாயினும், அவர் யாதவவகுப்பினரென்பதை விளக்கும்பிரமாணங்களைப் பழையதமிழ்நூல்களினின்று எடுத்தல் அரிதாகும். ஆயினும், யதுவமிசத்தவர் ஆதியில் கங்கைபாயும் நாடுகளிற் பல்கிப்பெருகியகாலத்தே, அவர்கள் குறைவின்றிச் செழித்துவாழ்தல்கருதி யாதவத்தலைவராகிய கண்ணபிரான் மேல் கடற்பக்கத்தே துவாரகையை நிருமித்து, அதனைச் சூழ்ந்திருந்த காட்டுப்பிரதேசங்களைத் திருத்தி எண்ணிறந்த யாதவர்களை அங்கே குடியேற்றித் தாம் அவர்களை ஆட்சிபுரிந்தருளினர் என்ற வரலாறு

புராணேதிகாசங்களிற் கேட்கப்படுகின்றது. கண்ணன் தன்னடிச் சோதிக்கெழுந்தருளுங்காலத்தில் இவ்யாதவர்கள் தமக்குட் பெரும் போர் புரிந்து மாண்டனரெனவும், அக்காலத்துப் பலர் வெளியேறி விட்டனரெனவும், அவ்யாதவர்கள் கோதாவிரிநதியின் தென்பிரதேசங்களினும் வியாபித்திருந்தனரெனவும் பாரதத்தால்அறியப்படுகின்றன. இவ்வரலாறுகளால், யாதவர்கள் குடியேற்றத்தில் விருப்புடையவர்களென்பதும், அவர்கள் கங்கை நாடுகளினின்றும் துவாரகையிற் குடியேறிப், பின்னர், இப்போது மகாராஷ்டிரம் என வழங்குந் தேசமுழுதும் வியாபித்தன ரென்பதும் விளக்கமாம். அவ்வாறாயின், அவ்யாதவர்கள் தாங்குடியேறிய நாட்டுக்குத் தெற்கே யிருந்த தமிழ்நாட்டுக்காடுகளை திருத்தி ஆண்டும் குடியேறினர் என்று கொள்வதில் அதிசயிக்கத்தக்கதொன்றுமில்லை. யாதவர் தெற்கேவந்த வரலாற்றைப்பற்றிய நச்சினார்க்கினியரதுசெய்திகளை முழுதும் ஆதரிக்கக்கூடிய வடநூன்மேற்கோளை நாம் காணாது போயினும், அவற்றைக்குறிப்பாகவேனும் உரைக்கும் பிரமாணங்களும்இல்லாமற்போகவில்லை யென்பது இதனால் விளங்கும். நாம் இங்கே கூறிவந்ததற்கு உலகமதிக்கும் சரித்திரவாசிரியரொருவர் சம்மதமளித்தலையுங் காட்டுவோம். ஸ்ரீ ராமேசசந்திரதத்தர் வெளியிட்ட "சிவிலிசேஷன் ஆவ் என்ஷியன்ட் இந்தியா" என்ற அரியபெரிய நூலின் முதற்றொகுதியில் யாதவர்களைப்பற்றி எழுதப்பட்டிருப்பதன்கருத்துவருமாறு:—"கண்ணனைத் தலைமையாகக்கொண்டயாதவர்கள் மதுரையைவிட்டுவிலகிக் கூர்ச்சரத்துள்ள துவாரகையிற் குடியேறினார்கள். அங்கே அவர்கள் அதிக காலம் தங்கவில்லை. அவர்கள் தங்கட்குள்ளே கலகம் விளைக்க, (அவருட்பலர்) துவாரகையை விட்டுக் கடல்வழியே பிரயாணித்தார்கள். அங்ஙனம் பிரயாணித்தவர்கள் தென்னிந்தியாவை அடைந்து ஆங்குப் புதுராஜ்யம் ஸ்தாபித்ததாக நம்பப்படுகின்றது"* என்பதே. இப்பண்டிதர்கூறுவது நச்சினார்க்கினியரதுவேளிர் வரலாற்றோடு சில அம்சங்களில் ஒத்துள்ளமைகாணலாம். வேளிர்கள் யாதவர்களே என அறிந்து தமிழ்மக்கள் ஆங்கிலத்தில் வியாசமெழுத அதனைநோக்கி 'யாதவர் தென்னிந்தியாவில் ராஜ்ஜியம் ஸ்தாபித்ததாக நம்பப்படுகின்றது' என்று தத்தர் எழுதினாரெனின், அவ்

* Dutt's Ancient India. pp. 219.

வாறு ஒரு வியாசமும் வரையப்பட்டதாகத் தெரியாமையால், அங்ஙனஞ் சொல்வதற்கில்லை. ஆதலால், அப்பண்டிதர், தென்னாட்டிற் போல, வடநாட்டில் வழங்கும் ஏதோ ஒரு கர்ணபரம்பரைச் செய்தியைப் பற்றிக்கொண்டு தமதாராய்ச்சியிற் றோன்றியதை எழுதினாரென்பதே கொள்ளத்தக்கதாம். ஆகவே, நச்சினார்க்கினியர் கூறிய செய்திக்கு வடநாட்டுப் பிரபலபண்டித ரொருவர் சம்மதமளித்தலால், கண்ணபிரான் வழியினர்பலர் தெற்கே வந்தவரலாறு குற்றமுடைத்தாகாதென்பது விளங்கும்.

இனி, வேளிர் என்பவர் வடக்கினின்று வந்த யாதவரென்பதைக் காட்ட மற்றொருசான்று முள்ளது. ஏறக்குறையத் தொள்ளாயிரம் வருஷங்கட்கு முன், மைசூர்நாட்டைக் கைப்படுத்தித் *துவாரசமுத்திருந்து ஆண்டவர்கள், ஒய்ஸளயாதவர்கள் என்பதைப் பலர் அறிந்திருக்கலாம். இவ்வரசர், கூர்ச்சரதேசத்துத் துவாரகையினின்றும் வந்தேறியவரென்பதும், யாதவவமிசத்தவ ரென்பதும் சரித்திர பூர்வகமாக அறியப்பட்டவையாகும். இவ்வாறு வந்தேறிய யாதவத் தலைவர்கள் 'பேலாலர்' என வழங்கப்படுகின்றனர். தமிழில்வழங்கும் வேளிர், வேளாளர் என்பனவற்றோடு இப்பேலாலபதம் ஒற்றுமை கொண்டிருத்தல் காணலாம். அன்றியும், இப்பேலாலயாதவர் காலத்தில் உண்டாக்கப்பட்ட ஒருநகரம் வேளூர் அல்லது வேளாபுரம் என அவர்பெயரால் வழங்கப்படுகின்றது. இதனால், கன்னடவடிவில் அவ்யாதவர்கள் பேலாலர் என வழங்கப்பட்டிருப்பினும், அச்சொல்லின் உண்மையுருவம் வேளாளர் எனத் தெரிதலோடு, வேள் என்னும் பெயர் வழக்கமும் அவ்யாதவர்க்கு உண்டென்பது தேறப்படும். ஸ்ரீமத். வி. கனகசபைப்பிள்ளையவர்களும், மைசூர்ப் பேலாலரையும் தமிழவேளாளரையும், யாதவர்களென்று கூறுதுபோயினும் ஒருகூட்டத்தவராகத் தமது "1800-வருஷத்துக்கு முந்தியதமிழர்" (Tamils 1800-years ago) என்னும் அரிய நூலில் விளக்குதல் காண்க. இனி, இப்பேலாலயாதவரும், பண்டைவேளிர் என்பாரும் ஒருவகுப்பினரே யென்பதை மற்றொருவழியாலுங் காட்டுவோம்.

---

* இஃது இப்போது "ஹாலீடு" என வழங்கப்படுகின்றது.

புறநானூறு என்னுஞ் சங்கச்செய்யுளிற் கபிலரென்னும் பழையபுலவர், வேளிருள் ஒருவனாகிய இருங்கோவேள் என்பானைப் புகழுமிடத்து, அவனைத் துவாரகையினின்றும் வந்து தென்னாடாண்ட வேளிர் வழியினனென்று கூறியிருப்பதாக முன்னொருமுறை சொல்லியுள்ளோம். அவ்வேளைக்,கபிலர் தாம்பாடிய இரண்டுபாடல்களிலும் 'புலிகடிமால்' என அழைக்கின்றனர். இவ்விடத்திற் புறநானூற்றுரைகாரர் "புலிகடிமால்-இவனுக்கொருபெயர்" என்றமட்டிற்காட்டி அப்பெயர் வழக்கத்தின் காரணத்தை எழுதாமற் போயினர். ஆனால் அவ்வேளிர்தலைவன் அவ்வாறு புலிகடிமாலென்று பெயர்பெற்ற காரணத்தைச் சங்கநூல்களினின்று தெரிதல் அரிதாம். ஆயினும், மிகப் பிற்காலத்தே துவாரகையினின்றுவந்து மைசூர்நாடாண்ட வேளாளர்,அப்பெயர்க்காரணத்தைத் தம் சரித்திரத்தால் விளக்கித் தாம் அவ்வேளிருடன் ஒற்றுமைபெற்ற வகுப்பினரென்று குறிப்பிக்கின்றமை வியக்கத்தக்கது. "கொங்குதேசராஜாக்கள்சரித்திரம்" என்ற நூலிலும், வேறு ஆங்கிலத்தில் வரையப்பட்ட சிலநூல்களிலும், துவாரசமுத்திரம்யாதவர் 'ஒய்சள' வமிசத்தினரென்றழைக்கப்படுதற்குப் பின்வருங் கதைகூறப்படுகின்றது:— "தபங்கர் என்னும் முனிவரொருவர் தவஞ்செய்து கொண்டிருக்கும்போது ஒரு புலி அவர்மேற் பாயவர அது கண்டு நடுங்கிய அம்முனிவர், அப்போது காட்டில் வேட்டையாடிவந்த 'சளன்' என்னும் யாதவ அரசனொருவனை நோக்கி 'இப்புலியைக் கொல்' என்றேவ, அவனும் அவ்வேங்கையைத் தன்னம்பால் எய்து வீழ்த்தினமையால் அவன் வமிசத்தார் 'ஒய்சளர்'* எனக்கன்னடத்தில் வழங்கப்பட்டார்" என்பதாம். இக்கதை அப்பேலாலரைப்போலவே துவாரகையினின்றும் வந்து, பழையகாலத்தே தமிழ்நாடாண்ட வேளிரைச்சார்ந்த இருங்கோவேள் என்பான் 'புலிகடிமால்' என்னும் பெயர்பெற்றதன் வரலாற்றையும் விளக்கவல்லதாம். புலியைக்கொன்று முனிவரைக்காத்த யாதவத்தலைவனொருவனைத் தங்கள் வழிக்கு ஆதிமுன்னோனைக் கொண்டமையினன்றோ, அவ்விருவரும் 'ஹொய்சளர்' எனவும் 'புலிகடிமால்' எனவும் ஒத்தசரித்திரம் பெற்றனராவர். இவ்வாறு

* "ஹொய்சள" என்பது "கொல் சளனே" என்னும் பொருளிற் கன்னடத்தில் வழங்கப்படுவதென்பர்.

1800-வருஷத்துக்கு முற்பட்டவேளிரும், 900-வருஷங்கட்கு முந்திய பேலாலரும் சாதியாலும் குலத்தாலும பெயராலும் பெரிதும் ஒற்றுமைபெற்றுத் தம்மை யாதவக்கூட்டத்தவரென்றுகாட்டிக்கொள்வதைக் காணலாம்.

இனி, முற்காலத்து வேளிராகிய யாதவரும், பிற்காலத்துத் துவாரசமுத்திரயாதவரும் முறையே 'வேள்' எனவும் 'வேளாளர்' எனவும் பெயர்பெற்றதன் காரணத்தையும் சிறிதாராய்வோம். விந்தியமலையின் தெற்கேயுள்ள பிரதேசத்தை ஆண்டுவந்த பழைய அரசருள் சளுக்கியர் என்னுமொருபிரிவினருமுண்டென்பதைப் பலர் அறிவர். இவர்களுடைய புராதனநாடு கூர்ச்சரமும் அதன் தென் பக்கத்துப் பிரதேசமுமாம். பிற்காலத்தில், இவருள் ஒருகூட்டத்தார் கீழ்க்கடனாடுகளைக் கைப்படுத்தித் தென்னாட்டிற் சிலபகுதிகளையும் ஆண்டமையால், இவ்வேறுபாடறிதற்கு, இவர்களைக் கீழைச்சளுக்கியரெனவும் மேலைச் சளுக்கியரெனவும் இருபகுதியினராக வழங்கினர். இவருள் தமிழ்நாட்டையாண்ட சளுக்கியரைப் பண்டைத் தமிழ்நிகண்டுகளில் 'வேள்புலவரசர்' எனக் கூறப்பட்டுள்ளது. இதனை 'வேள்புல வரசர் சளுக்கு வேந்தர்' எனத் திவாகரத்தினும் பிங்கலந்தையினும் வருதல் காண்க. இவற்றுள் திவாகரம் பாடுவித்த அம்பர்கிழான்சேந்தனார் கடைச்சங்ககாலத்தவரான ஔவையாரால் பாடப்பட்டவரென்பது, அந்நிகண்டானே விளங்குதலால், அத்திவாகரம் ஏறக்குறைய 1800-வருஷங்கட்கு முற்பட்டதென்பது தெளிவாம். கி-பி. 5-ஆம் நூற்றாண்டுக்கும் முந்திய சளுக்கியசாஸனங்கள் இப்போது காணப்படவில்லையாயினும், அச்சளுக்கர் பழமை பெற்ற குடியினரென்பதற்கு இரண்டாம்நூற்றாண்டினதாய திவாகரம் அவ்வரசர்பெயரை எடுத்தோதுதலே தக்கசான்றாம். இச்சளுக்கு வேந்தரை 'வேள்புலவரசர்' என அந்நிகண்டுடையார் கூறுவதில், 'வேள்புலம்' என்பது, அவர்கள் ஆண்டுவந்த கூர்ச்சரமுதலிய பிரதேசத்தையே குறிப்பதாகும். திவாகரம் செய்தார் காலத்தில், இப்போது மகாராஷ்டிரம் என்றழைக்கப்படும் வேள்புலத்தினின்றுவந்து தென்னாட்டிற் சில பகுதியை ஆண்டமைபற்றிச் சளுக்கியர் 'வேள்புலவரசர்' என அழைக்கப்பெற்றனராவர். ஆகவே, முற்

*

காலத்தே தமிழ்நாட்டிற் குடியேறிய யாதவரும், பிற்காலத்தே வந்த துவாரசமுத்திரஹொய்சளயாதவரும் 'வேள்' எனவும் 'வேளாளர்' எனவும் பெயர்பெற்றதற்குக் காரணம், அவ்விருவரும் வேள்புலத்தினின்றும் வந்தமையேயாகுமென்பது தெளிவாயிற்று. இது நிற்க.

மேற்கூறியவாறு, சளுக்கரசர்க்கு "வேள்புலவரசர்" என நிகண்டுகளிற் பெயர் வழங்கப்பட்டதன்றி "வேள்" என்ற சொல்லே அவர்க்குரியதாகவும் சொல்லப்படுகின்றது. இதனைத் "தாரகாரியுஞ் சளுக்கியர் வேந்தனும், வேனிலாளனும் வேளென லாகும்" என்னும் பிங்கலந்தையாற் றெரியலாம். வேள்புலத்தினின்றும் வந்தமைபற்றிச் சளுக்கர் 'வேளிர்' என வழங்கப்பட்டாரென்பது ஒருமுடிபாயினும், தமிழ் நாட்டு வேளிராகிய யாதவரைப்போல அவ்வரசரும் யாதவக் கூட்டத்தவருள் ஒரு பிரிவினர் என்பதற்குச் சில சான்றுகள் உள்ளன. அவ்யாதவரைப்போலவே, சளுக்கருடைய புராதன நாடு கங்காதீரமாகவும், வமிசம் சந்திரகுலமாகவும், கொடி கங்கையமுனைவரைந்ததாகவு மிருத்தலோடு, விஷ்ணுபுராணங்களில் யாதவர்க்கு அதிகமாக வழங்கப்படும் "வல்லபர்"* என்னும் பெயர் சளுக்கர்க்குரிய அடைமொழியாகவும் சாஸனங்களிற் காணப்படுகின்றது. இதனைப் புலிகேசிவல்லபன், கிருதவர்மவல்லபன் என்னும் பெயர்களால் தெரியலாம். இவற்றால் யாதவருண்டு சளுக்கியரும் ஒரு பிரிவினரென்பது விளக்கமாம். இனி இச்சளுக்கிய யாதவர், தமிழ்வேளிருடன் ஒற்றுமைபெற்ற வகுப்பினர் என்பதற்குச் சிறந்தசான்றொன்று, "பம்பாய்கஜட்டியர்" என்னும் பத்திரத்தின் முதற்றொகுதி, இரண்டாம்பகுதி, 339-ஆம்பக்கத்தே காணப்பட்டது. அதனுள், "வடதேசத்தில், ஆரீத பஞ்சசிகர் என்னும் முனிவரொருவர், தமது யாககுண்டத்தில் அவிசிடும்போது, அவரது தீர்த்தபாத்திரத்தினின்றும் ஓரரசன் உண்டானனென்றும், 'சுளுகம்' என வடமொழிப்பெயர்பெற்ற அப்பாத்திரத்தினின்று பிறந்த

---

* "வல்லபர்" என்பதற்குச் "சுற்றிக்கொண்டிருப்பர்" என்பது பொருளாம். வல-சம்வாரணம்; சுற்றுதல். யாதவர்க்கு இப்பெயர் வழங்கியதன் காரணம், அவர் தமது பசுக்கூட்டங்களோடும் பல நாடுகளினும் குடியேறி வந்தமையே என்று விளங்குகிறது.

மைபற்றி அவன்சுளுகனென அழைக்கப்பட்டானென்றும், பின்னர், அவன்வழியினர் 'சுளுகர்' எனப்பெயர்கொண்டார்களென்றும்" கூறப்பட்டுள்ளன இவரே சளுக்கர், சளுக்கியர், சாளுக்கியர்எனப்பிற்காலத்துத் திரித்து வழங்கப்பட்டனர்.

'வேளிர்' என்று பிங்கலந்தையில் வழங்கப்பட்ட சளுக்கியரது வரலாற்றை விளக்கும் இக்கதை, புறநானூற்றில் 'முற்காலத்தே வடதேசத்து முனிவரொருவரது பாத்திரத்திற் றோன்றியவர்' என்று கூறப்பட்ட வேளிர்வரலாற்றோடு ஒன்றியிருத்தல் ஈண்டுப் பெரிதும் அறிந்துமகிழத்தக்கது. இதனை "வடபால் முனிவன் தடவினுட் டோன்றி...யுவராவிகைத் துவரை யாண்டு, நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிர்" என முற்கூறிய கபிலர் பாட்டாற் கண்டுகொள்க. இப்பாட்டில்வரும் 'தடவு'என்பது ஈண்டுப்பாத்திரம் என்னும் பொருட்டு. இவ்வாறு, வடதேசத்து முனிவரொருவரது தீர்த்தபாத்திரத்திற்றோன்றிய வரலாறும், 'வேள்' என்னும்பெயர்வழக்கும் வேளிர் என்பார்க்கும், சளுக்கியருக்குமுரியனவாக வழங்குதலால், அவ்விருவரும் ஒருகுலத்தினுதித்த யாதவவகுப்பினராதல் நன்குதேறப்படும். ஆயின், யாதவர், முனிவரொருவரது தீர்த்தபாத்திரத்தினின்றுமுதித்தவரென்பதற்குப், புராணேதிகாசங்களினின்று மேற்கோள்காட்டுதல் இப்போதுகூடவில்லை; இதுவரை கூறிவந்தவற்றால் "வேளிர்' என்ற பெருங்கூட்டத்தவர், கண்ணபிரான் வமிசத்தவராய்த் துவாரகையினின்று தமிழ்நாட்டிற் குடியேறியவர்' என்று எழுதிய நச்சினார்க்கினியர்செய்தி பிரபல ஆதாரங்களால் வற்புறுத்தி நாட்டப்பட்டமை கண்டுகொள்க.

இனிச் செந்தமிழ்நிலத்தைச் சூழ்ந்துள்ளனவாகச் சொல்லப்படும் பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலங்களுள் "வேணாடு" என்பது தொன்றும். இஃது யாதவரது பழந்தேயமாகிய வேள்புலமென்று கருதப்படுகின்றது. வேள்புலமென்பது, இப்போது 'கொங்கணம்' என்றழைக்கப்படும்நாட்டுக்கு வடக்குள்ள பிரதேசமென முன்னர்க் குறிப்பிட்டோம். கொங்கணம் முற்காலத்தே தமிழ்வழங்கும் நாடா ... "கொண்கானங்கிழான்" என்

னும்வேளைப் பண்டைத் தமிழ்ப்புலவர் பாடியுள்ள பாடல்களால் இனிதுவிளங்கும். இனி இக்கொண்கானத்தையடுத்திருந்த வேணாட்டினுந் தமிழர் தங்கித் திரிசொற்களாலாகிய தமிழை வழங்கினமையால், அத்தன்மைநோக்கி அது கொடுந்தமிழ் எனப்பட்டது. யாதவர்க்குரிய அவ்வேணாடு முழுதும் தமிழ்நாடன்றாயினும், அதன் சிலபகுதியிற் றமிழுஞ்சென்று வழங்கினமைபற்றிச், செந்தமிழ்நாட்டார், அதனைக் கொடுந்தமிழ்நிலங்களுள் ஒன்றாகக்கொண்டு எண்ணினாரென உணர்க. வேளிரது நாடென்னும் பொருளுடைய வேணாடு என்னுந் தொடர்சொல்லை வேண் — நாடு எனப்பிரித்துத் "தென் பாண்டி குட்டங் குடங் கற்கா வேண்" என்னுமிடத்து 'வேண்' என்பதே பதமாக வழங்கியது பிற்காலத்துத் திரிபென வுணர்க.

இனி, இவ்வேளிரின் ஆதிமுதல்வர் எக்காலத்தில் தென்னாடு வந்து குடியேறியவராவர் என்பதை ஆராய்வோம். கண்ணபிரானுக்குச் சிறிதுபிற்காலத்தே வெளியேறியவராக நச்சினார்க்கினியரது கர்ணபரம்பரைச்செய்தி காட்டுதலால், பொதுவாக, இவர்கள்பாரதகாலத்துக்குப்பின தென்னாட்டுக் குடியேறினவரென அறியப்படினும்: சிறப்பாக, இன்னகாலத்தில் இவர்கள் வந்தவராதல்வேண்டுமென அறிதற்கு ஒருவழியும் உள்ளது. மேற்கூறியவாறு, இருங்கோ வேள் என்பானைக் கபிலர் புகழுமிடத்து, "நீயே.....துவரையா நாற்பத்தோன்பது வழிமுறைவந்த, வேளிருள்வேளே" எனக் குறி பிட்டுள்ளனர். இஃது இப்புலவர்காலத்தில் வேளிர்வமிசத்தைப் பற்றிப் பிரபலமாகவழங்கிவந்த செய்தியை அறிவித்ததன்றோ! இனி இந்நாற்பத்தொன்பது என்னும் எண்கொண்ட தலைமுறைகளின் ஆட்சிக்காலத்தைக் கணித்து, வேளிரின் ஆதிமுதல்வர் இன்ன காலத்தவராதல் வேண்டுமென ஒருவாறுமுடிவுபடுத்தல் அருமையன்று. பழங்காலத்தில் ஆரியாவர்த்தத்தையாண்ட பலிபுச்சகன்வழி யரசர்கள் முப்பத்துமூவர், 486-வருஷமும், மோரியவரசர் பதின்மர், 137 வருஷமும் ஆண்டதாக விஷ்ணுபுராணம் மத்ஸ்யபுராணம் முதலியவற்றிற் கூறப்படுகின்றது. இவற்றைநோக்கின் முதலிற்கூறிய பலிபுச்சகவழியரசர் தலைமுறையொன்றற்குச் 'சராசரி' 15-வருஷமும்

கணக்கு ஏற்படும். இவ்வாறே பழைமைப்பட்ட அந்நிய அரசுமுறையை ஆராயினும், நிகழ்காலத்தில் எல்லாத் தேசங்களுடைய கவனத்தையுங் கவர்ந்துவருகின்ற ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை இப்போது ஆட்சிபுரியும் "முற்சு ஹிடோ" சக்கரவர்த்தி, தமது பழைமைபெற்றதும் இடையூறுபடாததுமாகிய ஏகாதிபத்திய அரசரில் 123-வது தலைமுறையினராகச் சொல்லப்படுகின்றார். அவ்வேகாதிபத்தியத்தை நாட்டிய ஆதிசக்கரவர்த்தியாகிய 'ஜிம்மு-தின்னோ' இற்றைக்கு 2500-ஆண்டுகட்கு முன்விளங்கியவர் என்பது ஜப்பான் சரித்திரத்தால் தெரியவருகின்றது. இனி, இவ் 2500-வருஷங்களையும், அவ்-123 அரசர்க்கும் பகிர்ந்தால், ஜப்பான சக்கரவர்த்திகள் ஒவ்வொருவர்க்கும், 21-ஆண்டுக்கணக்கு ஏற்படும். இம்முறையே, ஆயுள்விர்த்திபெற்றகுளிர்தேசமாகிய ஐரோப்பியநாடுகளில் இங்கிலாந்தரசர்க்கு 23-ம, பிரான்ஸ்அரசர்க்கு 24-ம், ஜர்மானியஅரசர்க்கு 23-ம், இரஷியவரசர்க்கு 19-ம் தலைமுறையாட்சிக் காலமாக வரையறுக்கப்பட்டுள்ளன.* இவற்றுள்ளே, அதிகநிறைவும் அதிகக்குறைவுமில்லாது நம்மோடொற்றுமைப்பட்ட கண்டத்தினராய ஜப்பானியத் தலைமுறைக்கு விழுந்த 21-ஆண்டளவை, நாம், மேற்கூறிய நாற்பத்தொன்பது வேளிர்க்குங்கொண்டு கணிப்போமாயின் கபிலர் பாடிய இருங்கோவேளுக்கு 1029-வருஷங்கட்கு முற்பட்டதே, அவன்வழியின் ஆதிமுன்னோரது காலமென்பது பெறப்படும். படவே, கடைச்சங்கத்தவராகிய கபிலர்பாடிய அவ்விருங்கோவேள் காலம், ஏறக்குறைய 1800-வருஷங்கட்கு முற்பட்டதென்பது தெளிவாதலால், வேளிருடைய ஆதிமுன்னோர் தமிழ்நாட்டுக்கு வந்தேறிய காலம் கி. மு. 11-ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாம் என்பது வெளியாகும். இக்காலவரையறை பிரசித்தர்களாகிய ஸ்ரீ ரோமேசசந்திரதத்தர், ஸ்ரீ வேலந்தை-கோபாலையர் முதலியோர், பலபிரபலபிரமாணங்களால், கி. மு. 13†,12-ஆம்‡ நூற்றாண்டினதென்றுமுடிவுபடுத்துநாட்டிய பாரதகாலத்துக்குச் சிறிதுபிற்பட்டு நெருங்கி

* The Chronology of Ancient India. pp. 65.
† Dutt's Ancient India. pp. 10.
‡ Chronology of Ancient India. The Date of the Mahabharata War.

யுள்ளது. இவ்வாறு நெருங்குதல் கண்ணபிரானது வியோகத்தின் பின் வந்தவர் அவ்வேள்புலத்தலைவர் என்னும் வரலாற்றோடு ஒத்துள்ளமை கவனித்தற்குரியது. இக்காலவரையறையினும், சிறப்பாக அளந்தறிதற்குத் தக்க கருவி வேறுகாணப்படவில்லை.

இனி, மேற்கூறிய வேள்புலமாக்களும், அவரது தலைவரும் முற்காலத்தில் தென்னாட்டிற் குடியேறி வாழ்ந்து விளங்கிய சரித்திரத்தைச் சுருக்கமாக எடுத்துக்கூறுவோம். எண்ணிறந்த யாதவர்கள், தாம்ஆதியில்வசித்த கங்கைக்கரைநீங்கிக்குடியேறிய வேள்புலத்தைவிட்டு, அதற்குந் தெற்கேயிருந்த பெருங்காடுகளைத்திருத்தி ஆண்டுங் குடியேறத்தொடங்கினர். அவர்கள் நாகரிகமுடைய வகுப்பினராதலின், அரசுத்தொழில் படைத்தொழில் முதலியவற்றினும் தாமுயன்ற குடியேற்றத்திற்கு இன்றியமையாதிருந்த உழுதொழில், கொற்றொழில், மண்சுடுதற்றொழில், நெய்தற்றொழில் முதலிய பலவகை விருத்திகளினுங் கைதேர்ந்திருந்தனர். இவர்கள் தமிழ் நாட்டிற் புகுமுன், ஆங்கு, அக்காலத்திற் பல்கிப்பெருகிப்பருத்த நாகர் என்ற சாதியாரும், ஆரியாவர்த்தத்தின் வடகீழ்த்திசையினின்று இறங்கிய வேறு சில கூட்டத்தாரும் குடியேறித் தம் தலைவரின்கீழ் அமர்ந்திருந்தனர். பாரதகாலத்தில் மேற்கூறிய ஜாதியோர் தமிழ் நாட்டிற் றங்கியிருந்தவரலாறு பழையநூல்களாற் றெரியவருகின்றது. சேரர் வடகீழ்த்திசையினின்றும் வந்தேறியவர். இவ்வரலாற்றை ஸ்ரீமத். கனகசபைப்பிள்ளையவர்கள், தமது நூலிற்படிப்போர் மகிழ்ந்துவக்குமாறு எழுதியிருத்தலால், நாம் அவற்றைக் கூறுதல் மிகையாம். இனித் தமிழ்நாட்டுப் பழங்குடிகளாயிருந்த சாதியாரை, மேற்கூறிய நாகர்முதலிய வந்தேறிகள் அடக்கித் தாம் அவர்கள் நாட்டை ஆண்டுவந்தனர். இவ்வாறுஇவர்கள் தமிழ்நாட்டையடிப்படுத்து ஆண்டகாலத்திற்றான், யாதவர்கள் அந்நாட்டுக்கு வடக்கே மனிதசஞ்சாரமின்றிப் பெருங்காடாய்க்கிடந்த பிரதேசங்களைத் திருத்திக் குடியேறிக்கொண்டே, தென்னாடு புகுந்தது. அவ்வாறு அவர்கள் காடுகளைத் திருத்திவரும்போது, அங்ஙனம் திருத்திச் செழிப்பாக்கப்பட்ட நாடுகளை அவர்கள் தமக்குரியதானமாக்கித் தந்தலைவரின் கீழமர்ந்தனர். வேறுசிலர், அங்ஙனமன்றி, தாம் கொணர்ந்த

ஆடுமாடுகளுடன் காட்டிற் சரித்துவந்தனர். நாடுகளிற் றங்கியவர், பதிக்குடையோர் என்னும் பொருள்கொண்ட 'கிழார்' எனவும் தம் ஆதிநாட்டினடியாக 'வேளாளர்' எனவும் பெயர்பெற்றனர். இவர்கள் தாந்திருத்திவந்த நாடுகளிற் கூடிவாழ்ந்து, சமக்கின்றியமையாத பலவிதத்தொழில்களிலுந் தேர்ந்து நாகரிக முதிர்ச்சிபெற்றனர். ஆரியவகுப்பினருள் க்ஷத்திரியஜாதியைச்சேர்ந்த இவர்கள் தந்நாடு செழித்தல் கருதி வணங்கிய தெய்வம், ஆதியாரியர் மழைக்குரிய தேவதையாக வணங்கிவந்த இந்திரனேயாவன். இவர்கள் பண்டுதொட்டே இந்திரனை வணங்குதல் மரபென்பது, கோவர்த்தனத்தில் யாதவர் இந்திரவிழவெடுத்ததாகக் கேட்கப்படும் புராணகதைகளே சான்றாம். இவர்கள் ஆதியில் கங்கைக்கரைநாடுகளில் வசித்தவர்களாதலின், இவர்கள் தங்களை கங்காபுத்திரர், அல்லது கங்கை வழியினர் என்று கூறிவந்தனர். இவர்களையாண்ட சிற்றரசர் 'வேளிர்' 'வேண்மார்' என அழைக்கப்பட்டனர்.

இனித், தங்கள் பசுக்கூட்டங்களோடு காட்டிற் றிரிந்து வந்த மற்றொரு கூட்டத்தாராகிய யாதவர், அக்காரணங்கள் பற்றி ஆயர் கோவலர் எனவும், முல்லைநிலமாக்கள் எனவும் பெயர் பெற்றார்கள். இவர்களும், அவ்வேள்புலத்தினின்றே வந்தேறிகளாயினும், நாடுகளிற் கூடிவாழ்ந்தவரன்மையால், முன்னவர் போன்ற தொழிற்றேர்ச்சியும் நாகரீகமும் உடையவரல்லர். இவ் யாதவர், திருமாலவதாரமாகத் தங்குலத்திலவதரித்த கண்ணனையும் பலதேவரையும் தமது குலதெய்வங்களாகக்கொண்டு, அவர்கட்கு விழா, கூத்து முதலியன வெடுத்துப் போற்றி வந்தனர். பாண்டியர் ஆதியிற் றென்னாடு புகுந்து அரசுமுறை தாபித்த காலத்தில், இவ்வாயரும் வந்தவர்களென்ற செய்தி கலித்தொகையிற் கூறப்படுகின்றது. இதனை "வாடாச்சீர்த் தென்னவன், றொல்லிசை நட்ட குடியோடு தோன்றிய நல்லினத்தாயர்" எனவும், "வீவில் குடிப்பினிருங் குடியாயர்" எனவும் வருவனவற்றால் உணர்க. கி. மு. 4-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கிய நந்தசக்கரவர்த்தி காலத்தவரும், பாணினிக்கு "வார்த்திகை" எழுதினவருமாகிய காத்தியாயனர், பாண்டிய சோழர்களை எடுத்தோதுவதோடு, "பாண்டுவமிசத்தவன் ஒருவனிடமிருந்து

தோன்றியவர் யாவர், அவர் பாண்டியர்"* எனச் சொன்முடிபுகாட்டிப், பாண்டியர் வரலாற்றைக் குறிப்பிக்கின்றார் என்பர். இப்பாண்டியர் பாண்டுவின் வழியினராய்த் தென்னாடாண்டவராதல் வேண்டுமென்பதற்கு, அவர் வமிசம் சந்திரகுலமெனப் படுதலையும், வடநாட்டுச் சந்திரகுலத்தினரின் தலைநகருள் ஒன்றாகிய மதுரை போல, இவர் தலைநகரும் மதுரையென வழங்கப்படுதலையும், பாண்டுவின் புத்திரர்களுடைய வழியினரென்பது தோன்றப் 'பஞ்சவ' னெனப் பாண்டியவரசர் பெயர்பெறுதலையும் சிறந்தபிரமாணங்களாகவும் எடுத்துக்காட்டுவர்.† சோழரும், இவ்வாறே, சூரியகுலத்தவனாகிய முசுகுந்த சக்கரவர்த்தியை ஆதிமுதல்வனாகவுடையவரெனத் தமிழ் நூல்கள் கூறும். இம்முசுகுந்தன் கண்ணபிரானால் அநுக்கிரகிக்கப்பட்டவனென்று புராணங்களிற் சொல்லப்படுகின்றது. இது கிடக்க. காட்டில் வசித்த அவ்வாயராகிய யாதவர் தமக்குட் சிற்றரசுகள் உடையராயிருந்தன ரெனவும், அவற்றைப் பிற்காலத்திற் ‡சேரருஞ் §சோழரும் அழித்தனரெனவும் தெரிகின்றது.

இவ்வாறு, தமிழகத்துப்புகுந்து நாட்டிலுங்காட்டிலும் தங்கிய யாதவக்கிளைகள், ஆதியில் க்ஷத்திரிய வகுப்பினராயினும், பன்னெடுங் காலமாகக் குடியேற்ற முயற்சியிற் சென்றமையாலும், உடனொத்த ஆரியக்கூட்டரவின்றித் தமிழகத்திற் றத்தந் தொழில் வேறுபாட்டாற் பிரிந்தமையாலும் தமது புராதன ஆசாரணையைச் சிறுகச்சிறுக நெகிழவிட்டனர். ஆயினும் இவருடன்பிறந்த வீரத்தன்மையும், உறுதிப்பாடும் எக்காலமும் இவர்களைக் கைவிட்டில.

இங்ஙனம் தமது பெருத்த குடியேற்றத்தில், உழுதொழில், கொற்றொழில், மண்சுடுதற்றொழில் முதலிய செய்துவந்த வேளிர் வகுப்பார், தாம் வழிவழியாகப்பற்றிய அத்தொழில்களின் வேறுபாட்டால் தாமும் வெவ்வேறு கிளைகளாக எண்ணப்பட்டு மறைந்தனர். இவர்களுக்குள் எல்லாம் பெரிதும் பல்கிப் பெருகிய யாதவர் உழுதுண்டுவாழ்ந்த வேளிரேயாவர். ஆசிரியர் நச்சினார்க்

---

* Varthika on Ponini. IV 1—168.
† The Tamils 1800-years ago.
‡ பதிற்றுப்பத்து, எக, அஅ.
§ பட்டினப்பாலை. உஅக.

கினியர் தொல்காப்பியவுரையில் இவ்வேளிரைப்பற்றிப் பின்வரு மாறு எழுதுகின்றனர்.— "வேளாளர் இருவகையர்: உழுவித் "துண்போரும், உழுதுண்போருமெனை. அவருள் உழுவித்துண் "போர் மண்டிலமாக்களுந் தண்டத்தலைவருமாய்ச் சோழநாட்டுப் "பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், "பெருஞ்சிக்கலும், வல்லமுங், கிழாரும் முதலியபதியிற்றோன்றி "'வேள்' எனவும் 'அரசு' எனவும் உரிமையெய்தினோரும் பாண் "டியநாட்டுக் காவிதிப்பட்டமெய்தினோரும் குறுமுடிக்குடிப் பிறந் "தோர் முதலியோருமாய் முடியுடைவேந்தர்க்கு மகட் கொடைக் "குரிய வேளாளராம்" (தொல். அகத். ௩௦) எனவும், "வேளாளர் "பகைவர் மேலும், நாடுகாத்தன்மேலும், சந்துசெய்வித்தன் மே "லுஞ் செல்லுதற்குரியர்" எனவுங்கண்டுகொள்க. இன்னும், அவர் "அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில், 'இருமூன்று மரபி னேனோர் பக்கமும்' என்பதற்கு, "ஓதலும் ஈதலும் உழவும் நிரையோம்பலும் வாணிகமும் வழிபா டுமாகிய அறுவகையிலக்கணத்தையுடைய வேளாளர் பக்கமும்" எனவுரை கூறி, வேளாளர்க்கு அறுதொழில்கூறுவர். இவ்வறு தொ ழில்களுள் நிரையோம்பலும், வாணிகமுங் கலந்திருத்தல் கண்டுகொ ள்க. இவற்றால் வேளாளருட்பலரைத்தமிழ்ப்பெருவேந்தர்கள் தம் மிராசாங்கத்து உயர்நிலையில் வைத்து மதித்துவந்தமை அறியப்படு தலோடு, அவரினத்திற் சிற்றரசர்களாக விளங்கிய வேளிருடைய பெ ண்களை அப்பேரரசர் மணம்புரிந்து வந்தாரென்றும் தெரியவருகின்ற து. இவ்வாறு அவர் மணம் புரிந்து வந்தசெய்தி பதிற்றுப்பத்து மு தலிய பழைய நூல்களினும் பலவாகக் கேட்கப்படும். இவ்வேளிர் பழைய ஆரியவகுப்பினராய் அக்காலத்து நாகரிக முதிர்ச்சி பெரிதுங் கொண்டிருந்தமைபற்றி, உயர்குலத்தினராய அவ்வேந்தர் தம்மோ டொத்தவராகக்கருதி அவ்வேளிருடன் சம்பந்தம் செய்து வந்தாரெ னவுணர்க. தொல்காப்பியனாரும் 'நிகர்த்துமேல்வந்த வேந்தனொடு முதுகுடி, மகட்பாடு அஞ்சிய மகட்பாலானும்' (புறத்-௭௬.) என் புழி, இம்மணநிகழ்ச்சியே கூறினர்.

*

வேளிர்கள், ஆதியிற் றமிழகத்துச் சிற்றரசுகளைத் தாபித்து வந்தகாலங்களில், இவர்க்கும், சேரசோழபாண்டியர்க்கும் அடுத்தடுத்துப் போர்நிகழ்ந்துவந்ததாக அறியப்படுகின்றது. வேளிரது பழைமைப்பட்டுவரும் நாடுகள் கொண்கானம், முத்தூற்றுக்கூற்றம், பொதிகைநாடு, மிழலைக்கூற்றம் * முதலியனவாம். பிற்காலத்தில் அவ்வேளிர்பால் மகட்கொண்டு சம்பந்தம்பெற்ற பேரரசர்கள், அவரது சிற்றரசுகளை ஆதரித்து வந்ததோடு, அவரினத்தராய் நாகரிக முதிர்ச்சி பெற்ற வேளாளர் பலரைத் தம்மரசுமுறைக்கின்றியமையாதவராக மதித்து, அவர்கட்கு நாடுபலவற்றை அளித்தும், வரிசைகள் கொடுத்தும் அமைச்சர்களாகவும், தண்டத்தலைவர்களாகவும் வைத்துப் போற்றிவந்தனர். சிற்றரசருள் ஒருவனாகிய அழும்பில்வேள், சேரன் செங்குட்டுவனது அமைச்சருட் சிறந்தவனென்பது சிலப்பதிகாரத்தாற் றெரிகின்றது. பாண்டியரிடம் அமைச்சுத்தொழில் பூண்ட வேளாளர் "காவிதி" என்னும் பட்டத்துடனும், சோழரிடம் "ஏனாதி" என்னும் பட்டத்துடனும் விளங்கினர். "சோழிய வேனாதி தன் முகநோக்கி" என மணிமேகலையில் வருதல் காண்க. கரிகாற் சோழன் மற்றெல்லாரினும் சிறப்பாக, இவர்கட்கு 74-நாடுகளுடைய 24-கோட்டங்களைபுதவிப் பெரிதும் ஆதரித்த செய்தி சாசனங்களால் விளங்குகின்றது. ஆரியமொழியில் சூத்திர ரூபமான நூல்களெழுந்த காலமென்று சரித்திரவறிஞர் கண்டு வெளியிட்டுள்ள ஒரு கால விசேடத்தின் கடைப்பகுதியில் (ஸ்ரீ. கனகசபைப்பிள்ளையவர்கள் கி. மு. 2-ஆம் நூற்றாண்டென்பர்) செய்யப்பட்ட தொல்காப்பியத்தில், இவ்வேளாளரில் உழுதுண்போர் பலர் கொண்ட தொழிலாதல் பற்றி "வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது, இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" எனக் கூறப்பட்டதாயினும், இவருட் பலர் சிற்றரசராய்ச் சிறந்து விளங்கினமையாலும், தமிழ் மூவேந்தர் சார்பிற் பெரிதும் மதிக்கப்பட்டு வந்தமையாலும்

"வேந்துவினை யியற்கை வேந்தனி னொரீஇய
வேனோர் மருங்கினு மெய்திட னுடைத்தே"

---

* இது பாண்டிநாட்டின்கண்ணது. இதன் பிரிவொன்று 'துவராபதி நாடு' என இன்றும் வழங்குதல் ஈண்டுக் கவனிக்கற்குரியது.

......"வில்லும் வேலுங் கழலும் கண்ணியும்
தாரு மாலையுந் தேரும் வாளும்
மன்பெறு மரபினே னோர்க்கு முரிய" எனவும்,

"வேந்துவிடு தொழிலிற் கழலுங் கண்ணியும்
வாய்ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே"

எனவும், வேளிர்க்கு அரசர்க்குரிய வரிசைபலவும், வேளாளர்க்குக் கழலுங் கண்ணியுங்கூறப்படுதல் காண்க. தொல்காப்பியர், தங்காலத்தில் இவ்வேளிர்களுடைய ஒழுக்கம், வைசியர்க்குரியதுமன்றி, க்ஷத்திரியர்க்குரியதுமன்றி, அவ்விரண்டற்கும் பொதுநிலையிலமைந்திருந்தமையால், அவர்க்கு அவ்விரண்டையுங் கலந்தோதிப்போவர். உரையாசிரியரோ, வேளாளரதுயர்வு புலப்படுமிடனெல்லாம் அவர்க்கு உயர்குலப் பெருமையும், தாழ்வுபுலப்படுமாயின் அதனை அவருளிழிந்த உழுதுண்ணும் வேளாளர் மேலேற்றியும் கூறிப்போகின்றனர். இவை அக்காலத்திருந்த அவர்கள் நிலையாம். இனி, தமிழ்நாட்டிற் பண்டைக்காலத்தில்விளங்கிய சிற்றரசருட்பெரும்பாலார் இவ்வேளிர்வகுப்பினரே. இதுபற்றிப் பிற்காலத்தில் இவ் 'வேளிர்' என்னும்பதம், இடையிற்கிளம்பிய வேறுதலைவரையுஞ் சேர்த்து, குறுநிலமன்னரனைவர்க்குமுரிய பெயராக நிகண்டுகளிற் படிக்கப்பட்டது. ஆனால் இவ்வாறு பண்டைநூன்மேற்கோள் காணாமையின், அது பிற்காலத்திரிபு என்பது தெள்ளிது. அவ்வேளிர் இனத்தாராகிய வேளாளர், உழுதுண்டொழிலை ஏனையகுடிகளினும் சிறப்பாகவும் வழிவழியாகவும் கொண்டமையால், அச்சிறப்புப்பற்றி, அவர் பெயரடியாகப் பிறந்த "வேளாண்மை" என்பது உழுதுண்டொழிற்குரிய பெயராக வழங்குவதாயிற்று. அன்றியும், வழிவழியாகவந்த வேளிரது வள்ளன்மையையும், உறுதிதவறாமையும், சிற்றரசுரிமையையும் நோக்கி, 'வேள்' என்பது உபகாரியென்னும் பொருட்கும் மெய்மைக்கும் இளவரசென்னும்பொருட்கும் உரியசொல்லாகவும்வழங்கத்தலைப்பட்டது. பண்டைக்காலத்துப்பதமாகிய 'வேளிர்' என்பது, புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்துள்ள தேர்க்காட்டூரில் வேளாளவகுப்பார் பலர்க்கு உரியபெயராக இன்றும் வழங்குதல் அறியத்தக்கதாம்.

இதுகாறும் கூறிவந்தவற்றால், தமிழ் நாட்டிற் பண்டைக்கால முதலே வருகின்ற 'வேளிர்' என்ற வகுப்பினர், கண்ணன் வழியிராய்த் துவாரகையினின்று வந்தேறியவரென வழங்கும் செய்தி, அவர் யாதவகுலத்தினர் என்பதை விளக்குகின்றதென்பதும், இக்கொள்கைக்குப் பொருந்த வேளிர் துவாரகையினின்று வந்தவரெனப் புறநானூற்று மேற்கோள் உண்டென்பதும், பாரதகாலத்தையடுத்து யாதவர் தெற்கே வந்தேறியதைக் குறிப்பாக விளக்கும் செய்திகள் முன்னூல்களினின்று அறியப்படுதலோடு, அவர் அக்காலத்தே தென்னாட்டிற்கு வந்து அரசியனாட்டினரென்னும் கர்ணபரம்பரை வடநாட்டிலும் வழங்குவதொன்றென்பதும், வேளிர் யாதவக் கூட்டத்தவரேயென்பது, பிற்காலத்தில் துவாரகையினின்று வந்து தென்னாடாண்ட 'ஹொய்சளர்' இவருடன் பல்லாற்றானும் ஒத்திருத்தலால் விளங்குவதென்பதும், வேள்புலத்தினின்று வந்தமையே அவ்விருவரும் வேளிர் எனவும் பேலாலரெனவும் பெயர்பெற்றதற்குக் காரணமென்பதும், இவ்வேளிர் என்னும் பெயர்வழக்கம் சளுக்கரசர்க்கும் படிக்கப்படுகின்றதென்பதும், இச்சளுக்கரும் யாதவவகுப்பினரேயென்பதும், முனிவரொருவரது தீர்த்தபாத்திரத்திற் றோன்றிய வரலாறு சளுக்கர்க்கும் பண்டைவேளிர்க்கும் உரியதாகஅமைதலால், அவ்விருவரும் ஒருகுலத்துதித்தவரென்பதும், கொடுந்தமிழ் நாடுகளிலொன்றாகிய "வேணாடு" என்பது இவ்யாதவரது புராதன நாட்டையே குறிப்பதாமென்பதும், பண்டைவேளிர் தமிழ் நாட்டுக்கு வந்தேறிய காலம் பாரதகாலத்தையடுத்த கி. மு. 11-ம் நூற்றாண்டாகக் கொள்ளுதல் பொருந்துமென்பதும், வேளிர் பெருங்கூட்டம் தென்னாடடைந்து குடியேறி வாழ்ந்தவரலாறு இதுவென்பதும் விளங்கியவாறு கண்டுகொள்க.

இவ்வாறு, வேள்புலத்தினின்று தமிழ்நாடுவந்து ஆட்சிபுரிந்த "வேளிரும்" அவரினத்தராகிய வேளாளரும், தமது வரையாது வழங்கும் வள்ளன்மையாலும், அரசாற் பெற்ற வரிசைகளாலும், எளியவரைத் தாங்கிய அளியினாலும், நலிதற்காகா வலிமையாலும், பண்டு தொட்டே இத்தமிழ்நாட்டிற் பெரும்புகழ்பூண்டு விளங்கினர். முற்காலத்தினும், பிற்காலத்தினும் விளங்கிய தமிழ்ப்பெருங் கவி

களில் இவர்களைப் பாடிப் பயன்பெறாதவர் எவருமிரார். இவரது இரவாமலீயும் வள்ளன்மையை, இத்தமிழகத்திற் போற்றிப் புகழாத இடமுமில்லை. இத்தகைப் பெருமைபடைத்தவரின் வழியினராய் விளங்கியவர்களைப் பிற்காலக்கவிகள் வேண்டியவளவு வாயாரப் புகழ்ந்து பாடியுள்ளார். அவர்களுடைய முன்னோராய் ஏறக்குறைய 1800-வருஷங்கட்கு முற்பட்டுவிளங்கிய பெருவள்ளல்கள்;—வேள் ஆவி, வேள் ஆய், வேள் எவ்வி, வேள் பாரி, வேள்பேகன், முதலிய பலராவர். இவர்களது அழகிய சரித்திரங்களையெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகுமாதலின், அவை பின்னர் ஆராய்ச்சிசெய்யப் பெறும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

உ

பன்னிருமாசப்பெயர்கள்.

தமிழில்வழங்கும் தை மாசி பங்குனி சித்திரை வைகாசி ஆனி ஆடி ஆவணி புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மார்கழி என்னும் மாசப்பெயர்கள் பன்னிரண்டும் வடசொற்களோ தமிழ்ச்சொற்களோவென வாராயுமிடத்து, அவை வடசொற்களாகவே தோன்றுகின்றன. தை யென்பது தைஷ்ய என்பதன் திரிபு. திஷ்யசம்பந்தம் தைஷ்ய என்பது. திஷ்யஎன்பது பூசம். பூசமாசமென்பது தை. மாசி என்பது மாகி என்பதன் திரிபு. மகசம்பந்தமுடையது மாகி பங்குனி என்பது பல்குனி என்பதன் விகாரம். சித்திரை என்பது சித்திரா என்பதன் திரிபு. வைகாசி என்பது வைசாகி என்பதன் திரிபு. ஆனி என்பது ஆக்நேய என்பதன் சிதைவு. ஆடி என்பது ஆஷாடமென்பதன் சிதைவு. ஆவணி என்பது சிராவணம் என்பதன் சிதைவு. புரட்டாசி என்பது பூர்வபாத்திரபதம் என்பதன் சிதைவு. ஐப்பசி என்பது ஆஸ்வீஜ என்பதன் சிதைவு. கார்த்திகை என்பது கிருத்திகா என்பதன் திரிபு. மார்கழி என்பது மார்

க்கசிர்ஷம் என்பதன் சிதைவு. எனவே பன்னிருமாசப்பெயர்களும் வடசொற்களேயாம்.

இம்மாசப்பெயர்கள் தமிழில் வந்து வழங்குமுன்னே அவை தமிழிலே எப்பெயரால் வழங்கப்பட்டனவென வாராய்வாம். மாசமென்னும் பொதுப்பெயர் தமிழிலே திங்களென்னுஞ் சொல்லால் வழங்கிவருதலின் மாசச்சிறப்புப் பெயர்களுந் தமிழிலுள்ளனவாதல் வேண்டும். எந்தெந்த நக்ஷத்திரத்திற்குப்பூரணைவருமோ அந்தந்த நக்ஷத்திரப்பெயரையே மாசங்கள் தமக்குச் சிறப்புப்பெயராகக்கொண்டன. மாசம் என்பதன்பொருள் அளவு. அது காலஅளவுக்கு ஆகுபெயர். அதுவும் சௌரமாசம் சாந்திரமாசம் சாவன்மாசம் நாக்ஷத்திரமாசம் பார்ஹஸ்பத்தியமாசம் என ஐவகைப்படும். அவற்றுள் சந்திரனைக் கருவியாகக் கொண்டளக்கப்படுவதாகிய சாந்திரமாசமே இங்கே பேசப்படுவதாம்.

பூசநக்ஷத்திரத்திற்பூரணைவரும் மாசத்தைப் பூசமாசமென்பது வடமொழி வழக்கு. அம்மாசத்தைப் பூர்வத்திலே தமிழில் எவ்வாறு வழங்கினரென்பதே இங்காராய்ச்சி. பூசத்தின்பெயர் நான்கு. அவை குருவினள், கொடிறு, வண்டு, காற்குளம் என்பன. குருவினள் என்பது வடமொழிக் கலப்பாயிருத்தலின் அதனையொழித்து எஞ்சியமூன்றுந் தமிழ்ச்சொற்களாம். அவற்றுள் ஒன்றினாலேயே அம்மாசத்தைப் பண்டைக்காலத்துத் தமிழ்மக்கள் வழங்கினராகற்பாலர். அஃதாவது கொடிற்றுத்திங்கள் வண்டுத்திங்களென வழங்கினராகற்பாலர்.

அமரத்திலே பூசத்தின்பெயர்களாக வருவன சித்தியதிஷ்யநாமங்களிரண்டேயாம். சம்ஸ்கிருத அகராதிகளிலே குருவென்னும் பெயரும் அதற்குரியதாகச் சொல்லப்படுகின்றது. சித்தியம் சித்தியைத்தருவதெனவும் திஷ்யம் மகிழ்ச்சியைத் தருவதெனவும் பொருள்கருதலால் கொடிறு வண்டு காற்குளம் என்னும்பெயர்கள் அவற்றின் மொழிப்பெயர்ப்பாகாவாம். கொடிறு முதலிய மூன்றும் அந்நக்ஷத்திரம் தமக்குத்தோன்றிய வடிவம்பற்றித் தமிழ்நிலத்து நன்மக்களாலிடப்பட்ட பெயராகற்பாலன. கொடிறு என்பது கது

ப்புப்பல். அதுபோலும் வடிவினையுடைமையால் பூசம் கொடிறெனப்பட்டது. அது வண்டுபோலுதலின் வண்டெனவும் கால்வாயுடைய குளம்போலுதலின் காற்குளமெனவும்பட்டது. வரருசியார் வடமொழியிற் கூறியதைப் ‘பூசம் புடோலம்பூவதுபோலும்’ எனப்பிற்காலத்தார் மொழிபெயர்த்துக் கூறுதலைநோக்குமிடத்துக் கொடிற்றுப்பல் வண்டு காற்குளம் புடோலம்பூ என்பன சற்றேறக்குறைய தம்முள் ஒத்தவடிவினவென்பது நன்கு துணியப்படும். வடநாட்டிலிருந்துநோக்கிய வரருசியார்க்குப் பூசம் புடோலம்பூப்போலவும் தென்னாட்டிலிருந்து நோக்கிய தமிழ்மாந்தர்க்குக் கொடிறுபோலவும் வண்டுபோலவும் காற்குளம்போலவும் தோன்றிற்றாதலின் தாந்தாங் கொண்ட குறிப்பையே அதற்குக் குறியாக்கினார்கள். அதுபற்றியே இருவர் குறிவழக்கும் வேறாயின.

மகத்தோடுகூடிய பூரணைமாசம் மாசியெனப்பட்டது. மகத்தின் பெயர்கள் கொடுநுகம், வேள்வி, வாய்க்கால், வேட்டுவன், மாசி, முதல்வருஞ் சனி என்பன. அவற்றுள் கொடுநுகம், வாய்க்கால், வேட்டுவன் என்பன அதன் வடிவுபற்றியிட்ட தமிழ்ப் பெயர்கள். வேள்வி என்பது மகம் என்பதன் மொழிபெயர்ப்பு. மாசி என்பது மாகி என்பதன் திரிவு. முதல்வருஞ்சனி என்பது வடமொழி கலந்தபெயர். முடநுகம் வாய்க்கால் வேட்டுவன் என்னும்பொருள்படவரும் வடமொழிப்பெயர் அமரமுதலிய நூல்களிற் காண்கிலம். ஆதலின் அவை தமிழ்நிலத்துவழக்கெனவே துணியற்பாலன. அவற்றுள் ஒன்றினாலேயே அம்மாசம் பூர்வத்தில் வழங்கியதாகற்பாலது. வரருசியார் மகம் ஆந்தோளிகாரூபமுடையதென்பர். அஃதாவது தண்டிகைபோன்றதென்பர். தமிழ்நூலோர் மகத்தைக் கொடுநுகம்போன்றதென்பர். இருவர் நிலமும் வேறாதலின் தத்தம் நிலத்துள்ள ஒப்புடைப்பொருள்காட்டி அதற்கு வடிவுகூறினாராதலின் இருவழக்கும் ஒன்றற்கொன்று சம்பந்தமில்லா வழக்காம். ஆதலின், கொடுநுகமென்பது தமிழ்நிலத்திற் பிறந்தபொருளுஞ் சொல்லுமாம். வாய்க்கால் என்பது வடிவுபற்றி வந்த உவமப்பெயர். வேட்டுவன் என்பதூ வில்வடிவுபற்றிவந்த உவமப்பெயர்.

உத்தரத்தோடு கூடிய பூரணைமாசம் பங்குனியெனப்பட்டது. பல்குனமென்பது உத்தரத்தின் பெயராதலின் அதுசம்பந்த மாசம்

பங்குனியெனப்பட்டது. வசந்தகாலத்தையுடையதென்பது அதன் பொருள். பல்குனம் - வசந்தகாலம். தமிழ்நிகண்டிலே வரும் உத்தரத்தின் பெயர்கள், பங்குனி கடையெழுஞ்சனி செங்கதிர்நாள் என்னு மூன்றுமாம். அவற்றுட் பங்குனி வடசொல். கடையெழுஞ்சனி வடசொற்கலந்த பெயர்: செங்கதிர்நாளொன்றுமே தமிழ்ச்சொல். சூரியன் பிறந்த நாளாதலிற் செங்கதிர்நாளென்ப. ஆதலின், பூர்வத்திற் பங்குனி செங்கதிர்த்திங்களென்னும் பெயரினாலே வழங்கியதாகற்பாலது.

சித்திரையின் பெயர்கள் நெய், பயறு, மீன், அறுவை, ஆடை, தூசு, நடுநாள், தச்சன், துவட்டாநாள் என்பன. நெய் என்பது நெய்த்துளி; அதுபோலுதலின் சித்திரை நெய் எனப்பட்டது. பயறு போலுதலின் அது பயறென்னும் பெயர்பெற்றது. மீன்போலுதலின் மீனெனப்பட்டது. அறுவை என்பது வஸ்திரம்; அதன் துவாரம்போற் சிறிதாய் விளங்குதலின் சித்திரை அறுவையெனப்பட்டது. ஆடை தூசு என்பனவும் அப்பொருள்பற்றி வந்தபெயர்களாம். இருபத்தேழு நக்ஷத்திரங்களுக்குஞ் சித்திரை நடுநிற்றலின் நடுநாளெனப்பட்டது. தச்சனாகிய துவட்டா பிறந்தநாளாதலின் சித்திரை தச்சன் எனப்பட்டது. துவட்டாநாளென்பதின் பொருளுமதுவே. 'சித்திரையிருமீன் சிறுபுலிக்கண்போல்' என்பது நக்ஷத்திரமாலை. வராகமிகியார் சித்திரையை முத்துக்குவமிப்பர். வடமொழிப்பிரகுவமிசம் சித்திரைக்குஇமத்துளியை இணைகூறும். நெய்த்துளி, பயறு, மீன், வஸ்திர இழைத்துவாரம், முத்து, புலிக்கண், பனித்துளி இவையெல்லாம் சிறுமையும் பிரகாசமுங் குறித்து ஒத்தகருத்தினவாதல் காண்க. தச்சன் துவட்டாநாள் என்னுமிரண்டும் வடமொழிச்சம்பந்தமாக, எஞ்சிய ஏழும் தமிழ்ப்பெயர்களாம். பூர்வத்திலே சித்திரைக்குத் தமிழரிட்டு வழங்கியபெயர் இவற்றுளொன்றாயிருத்தல்வேண்டும்.

(இன்னும் வரும்)

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.

இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

(கஅரு-ஆம் பக்கத் தொடர்ச்சி).

ஷ

நலங்கிளர் பூமி யென்னு நங்கையை நறுந்து ழாயி
னலங்கலான் புணருஞ் செல்வங் காணவந் தடைந்தி லாதா
ரிலங்கையி னிருந்த ரேயிவ் வேழுல கத்து வாழும்
விலங்கலு மாசை நின்ற விடாமத விலங்க லேயால்.

என்னும் எக-ம் செய்யுளில், 'விலங்கலு மாசைநின்ற விடாமத விலங்கலே யால்' என்பது, 'விலங்கலுமரமுமாதி வேறுள பொருள்களெல்லாம்' எனக் காணப்படுகின்றது. விலங்கலும் திக்குயானைகளுமேயெனின் ஏனைய அஃறிணைப்பொருள்களொழிக்கப்படாமையின், பின்னையதே சிறப்புடைத்தென்க. வேறுள பொருள்—அஃறிணைப்பொருள்.

ஷ

ஆங்குவந் தடைந்த வண்ண லாசையின் கவரி வீசப்
பூங்குழன் மகளி ருள்ளம் புதுக்களி யாட நோக்கி
வீங்கிருங் காதல் காட்டி விரிமுகக் கமல பீடத்
தோங்கிய மகுடஞ் சூடி யுவகைவீற் றிருப்பக் காணான்.

என்னும் ௪00-ம் செய்யுளில், 'பூங்குழன்மகளிருள்ளம் புதுக்களியாடநோக்கி—வீங்கிருங்காதல்காட்டி விரிமுகக் கமலபீடத்—தோங்கிய மகுடஞ்சூடியுவகைவீற்றிருப்பக்காணான்' என்பது, 'பூங்குழல் மகளிராடும் புதுக்களியாட்டநோக்கி-வீங்கிருங்காதல் காட்டி வியனரிசுமந்த பீடத்-தோங்கிய வுவகை யோடுமேரசன் வீற்றிருப்பக்காணான்' எனக்காணப்படுகின்றது. முன்னையதில் 'உள்ளம்' என்பதும், 'விரிமுகக்கமலபீடம்' என்பதும், உவகையென்பதும் பொருள்கொள்ளுமிடத்துப் பொருத்தமின்மையின், பின்னையதே பொருத்த முடைத்து என்க.

ஷ

ஆயன நிகழும் வேலை யண்ண லு மயர்ந்து தேருந்
தூயவ னிருந்த சூழ லுருவினன் வருத னோக்கி
நாயக னுரையான் வாயா னனிது பகர்வெ னென்னுத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்.

என்னும் ௧௦௩-ம் செய்யுளில், 'ஆயன நிகழும்வேலை' என்பது, 'ஆயவர் நவிலும் வேலை' எனக்காணப்படுகின்றது. முற்செய்யுளில் 'விழுமிதென்றார்' எனக்கூறப்பட்டிருத்தலின், 'ஆயவர் நவிலும் வேலை' எனக்கூறலே பொருத்தமுடைத்து.

நகர் நீங்குபடலம்.

வஞ்ச மோமக னேயுனை மாநிலந்
தஞ்ச மாகநீ தாங்கென்ற வாசகம்
நஞ்ச மோவினி நானுயிர் வாழ்வெனோ
அஞ்சு மஞ்சுமென் னுருயி ரஞ்சுமால்.

என்னும் ௧௦-ம் செய்யுளில், 'அஞ்சுமஞ்சுமென்னுருயிரஞ்சுமால்' என்பது, 'எஞ்சுமெஞ்சு மென்னுருயி ரெஞ்சுமால்' எனக் காணப்படுகின்றது. 'உயிர் வாழ்வெனோ' என்றபின், இறந்துவிடுவேன் என்னும் பொருள்பட நிற்றலின் 'எஞ்சுமெஞ்சுமென்னுருயிரெஞ்சுமால்' என்பதே பொருத்தமுடைத்து. எஞ்சுதல்-குறைதல்; ஈண்டு நீங்கும் என்னும் பொருளைத் தாற்பரியமாயுணர்த்திற்று. அஞ்சும் என்பது பிரிவாற்றாமை பற்றிவரும் இரங்கலைச் சிறப்பியாமையின் ஈண்டுப்பொருத்தமின்றென்க.

ஷை

பொன்னார் தோளான் கானே புகுதப் புகுத றவிரான்
என்ன ருயிரோ வகலா தொழியா திதுகோ சலைகேள்
முன்ன ளொருமா முனிவன் மொழியுஞ் சாப முளதென்
றந்நா ளுற்ற தெல்லா மவளுக் கரச னறைவான்.

என்னும் ௩௩-ம் செய்யுளில், 'பொன்னார் தோளான் கானே புகுதப்புகுதறவிரான்' என்பது, 'பொன்னார் வலயத் தோளான் கானே புகுதறவிரான்' எனக்காணப்படுகின்றது. 'புகுதப்புகுதறவிரான்' என இருமுறை வருதல் பொருத்த மின்மையின், பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை

வந்த முனியை முகநோக்கி வாள்வேந்தர்
எந்தை புகுதற் கிடையூறுண் டாயதோ
அந்தமில் சோகத் தழுதகுரற் றனென்ன
சிந்தைதெளிந்தோய்தெரியெமக்கிவ்வென் றுரைத்தார்.

என்னும் ௬௩-ம் செய்யுளில், 'எந்தை புகுதற் கிடையூறுண் டாயதோ-அந்த மில் சோகத்தழுத குரற்றனென்ன-சிந்தை தெளிந்தோய் தெரியெமக்கிவ் வென்றுரைத்தார்' என்பது, 'எந்தை எதுவுமிடையூறுண்டாயதோ—அந்தமி லாச் சோகத் தழுதகுரலாங்கறியேம்-சிந்தை தெளிந்திட நீசெப்பீதெமக்கெ ன்றார்' எனக்காணப்படுகின்றது. 'புகுதற்கு' என்னுமிடத்துப் பொருட் பொருத்தமின்மையாலும், பின்னிரண்டடியு மிசைப்பொருத்தமின்மையா லும், பின்னையதே சிறப்புடைத்தென்க.

௬௪

வேந்தன் பணியினாற் கைகேசி மெய்ப்புதல்வன்
பாந்தண் மிசைக்கிடந்த பாரளிப்பா னாயினான்
ஏந்து தடந்தோ ளிராமன் றிருமடந்தை
காந்த னொருமுறையே காடுறைவா னாயினான்.

என்னும் ௬௪-ம் செய்யுள், 'வேந்தன் மதிமயங்கக்கைகேசி மெய்ப்புதல்வன் பாந்தண் மிசைக்கிடந்த பார்முழுதுந்தான் புரக்க-ஏந்துதடந்தோ ளிராமன் திருமடந்தை-காந்தனரசிழந்து காட்டகத்தனாயிடவே' எனக்காணப்படுகின் றது. முற்செய்யுளில் ஈதடுத்தவாறென்றானெனக் கூறிமுடிந்தபின் இத னைக்கூறல் பொருத்தமின்மையானும், 'புரக்க' 'ஆயிட' எனஎச்சமாய் நின் று, 'கொண்டாள் வரமிரண்டு' என்பதோடு முடிதலே பொருத்தமுடைத்தா தலினாலும் பின்னையதே பொருத்த முடைத்து. 'கொண்டாள்வரமிரண் டு' என்னும் செய்யுள், இதன் பிற்செய்யுளாகக் காணப்படுகின்றது. எச்ச மாய் நின்று முடிதற்கு அதுவே பொருத்தமுடைத்தாதலினாலும், 'என்றான்' என்னும் முற்றுப் பின்முடிதலானும் பின்வருதலே பொருத்தமுடைத் தென்க.

௬௫

மாறினி யென்னைநீ வனங்கொள் வாயென
ஏறின வெகுளியை யாது முற்றுற
வாறினை தவிர்கென வைய வானையிற்
கூறிய மொழியினுங் கொடியதா மென்றான்.

என்னும் ௬௮-ம் செய்யுள், 'மாறினை யென்னைநீ வனம்வரேலென—வேறி யவெகுளிமற் றியாதிப்பார்வள—னாறினைதவிர்கென வையனானையிற்—கூறி யமொழியினுங் கொடியதாமென்றான்' எனக்காணப்படுகின்றது. முன்னை யது பொருள்கொள்ளுமிடத்துச் சிறந்துகாட்டாமையின், பின்னையதே சிற ப்புடைத்து. பிரிந்து என்னைநீ வனம்வரேல் என்று சொல்லுதற்கு என்

மீது மிக்ககோபம் யாது ? அங்ஙனம் நீ சொல்லியது ஐயன் உன்னை பார் வளனை ஆறி நீங்குவாயென்றதினுங் கொடியதாயிருந்தது என்ருன் என்க. தான் ஸ்ரீராமனுடன் பிரியாது வனம்புகுதுங் கருத்துடையனாய் முயல அதற்குத் தடைநிகழ்ந்தமையின், அத்தடைமொழியினும் இத்தடைமொழி கொடிதென்ருன் என்க. இங்ஙனம் அன்றி முன்னையபாடத்தின்படி, என் மாட்டுண்டான கோபத்தை நீங்குதி என்றதினுங் கொடியதாயிருந்தது என்றல் இத்துணைச் சிறப்பின்றென்க.

ஷ

மறந்தா ளினைவு மூபிரும் மன்ன னென்னு மறுகா
விறந்தான் கொல்லோ வரச னென்னு விடருற் றழிவா
டுறந்தாய் மகனே யுலகோ டைமையு மென்னத் துணையா
மறந்தா ளிதுவோ வையா வரசர்க் கரசே யென்ருள்.

என்னும் ௬௬-ம் செய்யுளில், 'துறந்தாய் மகனே யுலகோ டைமையுமென்னத் துணையாம்' என்பது 'துறந்தான் மகன்முன் னெனையுந் துறந்தாய் நீயுந்துணைவா' எனக் காணப்படுகின்றது. முன்னையது பொருள்கொள்ளுமிடத்துச் சிறிதும் பொருத்தமின்மையின் பின்னையதே பொருத்தமுடைத்து. இறந்தான் கொல்லோவரசனென்று இடருற்று அழிபவள் 'துணைவா என்னைமகன் முன் துறந்தான் பின் நீயுந் துறந்தாய் இது அறமாகுமா என்ருள்'என்னுமிடத்துப் பொருட்பொருத்தமுஞ் சிறப்புமுண்மைகாண்க.

ஷ

தான்புனை சீரையைத் தம்பி சாத்திடத்
தேன்புனை தெரியலான் செய்கை நோக்கினன்
வான்புனை யிசையினாய் மறுக்கி லாதுநீ
யான்புகல் வினையதோ ருறுதி கேளெனு.

என்னும் கருௌ-ம் செய்யுளில், 'யான்புகல் வினையதோ ருறுதிகேளெனு' என்பது 'யான்புக லுறுதியைக் கேளென் றோதுவான்' எனக் காணப்படுகின்றது. 'புகல்வினையதோர்' என்பது பொருத்தமின்மையின் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷ

நீட்டில களிறுகை நீரின் வாய்புதல்
பூட்டில புரவிகள் புள்ளும் பார்ப்பினுக்
கூட்டில விரைபுனிற் றீன்ற கன்றையு
மூட்டில கறவைகன் றுருகிச் சோர்ந்தவே.

என்னும் உ௧௨-ம் செய்யுளில், 'ஊட்டிய கறவைகன் றுருகிச் சோர்ந்தவே' என்பது 'ஊட்டியகறவை நைந்துருகிச் சோர்ந்தவே' எனக் காணப்படுகின்றது. களிறு முதலியவற்றைத் தத்தம் தொழின்மறந்துநின்றனவெனக் கூறி, அவற்றோடு கன்றையும் உருகிச்சோர்ந்தவெதென வாளா உடன்கூறல் சிறப்பின்மையின் பின்னையதே சிறப்புடைத்து. களிறு முதலியன நீட்டன் முதலிய தொழில்களைச் செய்தில. பின் அவைகள் நைந்துருகிச் சோர்ந்தன என்க.

௯௯

அன்ன தன்மைய ளாயனு மன்னையுஞ்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே
யென்னை யென்னை யிருத்தியென் றானெனு
வன்ன வன்ன வயிருமி ழாநின்றாள்.

என்னும் உ௪௯-ம் செய்யுளில், 'என்னை யென்னை யிருத்தியென் றானெனு' என்பது 'என்னை யென்னை யிருத்தியென்றாயென்றாள்' எனக்காணப்படுகின்றது. இதன் பிற்செய்யுளில் இராமபிரான் விடைகூறுவதாகக் கூறலின், இதனிடத்தே சீதாபிராட்டி வினவியதாக 'என்னை யென்னை யிருத்தி யென்றா யென்றாள்' எனக்கூறலே பொருத்தமுடைத்து.

(இன்னும் வரும்.)

சி. கணேசையர்.

தமிழிலக்க வரலாற்றுச் சர்ச்சை.

சென்ற சோபகிருது வருஷம் மாசி மாதத்துச் 'செந்தமிழ்'ப் பத்திரிகையில், ஸ்ரீமாந்-அ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் "தமிழே அநேகபாஷைகளுக்கும் இலக்கம் கொடுத்தது" என்னும் வியாசம் ஒன்று எழுதி விடுத்தார். பின்னர்க் குரோதிவருஷம் ஐப்பசி மாதத்துச் சஞ்சிகையில், ஸ்ரீமாந்-கோபிநாதராயரவர்கள் அதேவிஷயத்தைப்பற்றிப்பிள்ளையவர்கள் கொண்ட கொள்கைக்கு மாறாகச் சில சங்கதிகளை வெளியிட்டனர். இராயரவர்கள் விஷயம் வெளிவருமுன் பிள்ளையவர்கள் கொள்கையே பெரும்பாலும் நம்பத்தக்கதாய்

இருந்திருக்கும்; ஆனால் இப்போதிரண்டையும் உற்றுநோக்கின், பிள்ளையவர்கள் கொள்கைக்கு அவரது யுக்திபுத்திமட்டுமே ஆதாரமாக நிற்கிறது; இராயரவர்களதோ மறுத்தற்கொண்ணாததும், சரித்திர உண்மைக்கு இன்றியமையாததுமான சாஸ்திரத்துணிவு என்பது விளங்கும். இதனைச் சிறிது ஆராய்வோம்.

உண்மையாராய்ச்சியில் சாஸனங்களாற் பெறப்படும் விஷயங்களையே தக்க சான்றெனக்கொள்ளலாமேயன்றி யுக்திவாதத்தினால் ஏற்படும் சித்தாந்தம் நிலைநிற்காது. இஃது எல்லாரும் ஒப்புக்கொள்ளக்கூடியது. நியாயசபைகளில் அநுஷ்டிப்பதுமிதுதான். இதுவரையிற் கிடைத்த சிலாசாசனங்களுள் அசோகன்காலத்துச் சாஸநங்களே மிகப்புராதனமென்றும் அவற்றுக்குப்பின்னர்க் கற்கோயிற் சாஸனமென்றும் அவற்றுக்குப்பிற்காலத்தன பல்லவசாஸநங்களென்றும், அவற்றுக்கும் பிற்பட்டன சோழபாண்டியர்கள் சாஸனங்களென்றும் சரித்திர ஆராய்ச்சியிற் பயின்ற யாவரும் ஒப்புக்கொண்ட விஷயம். காலக்கிரமமாக ஏற்பட்ட இத்தகைய சாஸநங்களிற் காணப்பட்ட எண்களின் வரிவடிவுத்திரிபைப் பிள்ளையவர்கள் எவ்வாறு மறுக்கிறார்கள் என்பது புலப்படவில்லை. இப்படிச்சொன்னால் ஏலாதோ அப்படிச்சொன்னால் சாலாதோ என்று சொல்லாளுதல் சாஸ்திரீயமாய்ச் செய்யப்படும் சரித்திரவாராய்ச்சிக்கு ஏலாது. கேவலயுக்திவாதமும் இங்கேசெல்லாது. பிள்ளையவர்கள் யுக்திவாதத்தையே அங்கீகரிப்போமெனின், எங்குங்காணப்படும் கல்வெட்டிலுள்ள எண்களின் பல்வகை வரிவடிவுகள் பிள்ளையவர்கள் கொள்கைக்கும் அவர் காட்டிய படத்திற்கும் பொருந்தாதிருக்கிறதற்கு என்ன சமாதானம் கூறக்கூடும்? இதற்கு இன்னம் ஒரு யுக்தி கற்பிப்பாரோ; அன்றேல் சாஸநங்களிற் காணும் வரிவடிவுகள் பொய்யெனச் சாதிப்பரோ? அசோகன்காலத்துச் சாஸநங்கள் புராதனமென்பது, சரித்திரவாராய்ச்சியில் வெகுசிரமப்பட்டுச் சிறிது சிறிதாக அடிப்பிடித்துச்சென்று கண்டுகொண்டவிஷயம். அக்காலத்துக்கு முற்பட்ட எண்ணெழுத்துக்களின் வரிவடிவுகள் இன்னவிதமாயிருந்தனவென்பது தெரியவிடமில்லை. இருந்தால், அதனைச் சாஸநதிருஷ்டாந்தங்கொண்டுவிளக்கிக்காட்டினாலன்றிவேறுஎவ்வாற்றானும்பயன்படாது

"Encyclopædia Britanica" வில் அசோகன் காலத்திற்கு முந்தியதோர் சாஸநம் கிடைத்தது என்று கூறியிருப்பதாகப்பிள்ளையவர்கள் சொல்லுகிறார்கள். இன்னதொகுதியில் இன்னபக்கத்திருக்கின்றது என்று அவர் கூறவில்லை. இவ்வாறாயின், அப்பெருந்தொகுதிப் புத்தகக்கடலுள் எங்கேயென்று தேடுவது. இது சாத்தியமன்றென்று தெரிந்திருந்தும் பக்கம் முதலியன கூறாது விடுத்ததினால் சரித்திர உண்மையாராய்ச்சியின் கௌரவத்தைப்பிள்ளையவர்கள் சிறிதேனும் கருதினரல்லரென்று ஐயுறுகின்றோம். அசோகன் 'கலிங்கம் வெற்றிகொண்ட காலத்து அங்கு வழங்கிய தமிழிலக்கங்கொண்டானெனிலோ' என்பதற்கு இவர் என்னவாதாரங்கொண்டு சங்கிப்பது? ஆதார முண்டென்று காட்டினால் எமக்குஞ் சம்மதந்தான். இதுவே யன்றி, கலிங்கத்தி லக்காலத்தில் வழங்கிவந்த பாஷையும் தமிழ்தான் என்று எவ்வாறு நிர்ணயிக்கிறார்? கொடுந்தமிழ் நாடாகிய மைசூரில் [1] அசோகமகாராஜாவின் சாஸநம் அவன் காலத்து அக்ஷரத்தில் காணப்படுவதேன்? இவனும், பிற்காலத்திய அரசர் செய்தவண்ணம், அவ்வத்தேசத்து அக்காலத்து வழங்கிய பாஷைக்குரிய எழுத்திலன்றோ எழுதுவித்திருக்கவேண்டும். பழைமைக்குப் பெயர்போன பாண்டியநாட்டின் நடுவில் [2] அசோகன் காலத்திய அக்ஷரத்தில் ஒரு சாஸநமிருப்பதற்கு என்ன சொல்லப்போகிறார் பிள்ளையவர்கள்? தென்னாட்டின்கண் அசோகன் சாஸநம் கண்டதுபோல வடநாட்டில் ஏதேனும் தமிழ்ச்சாஸநம் இதுகாறும் கண்டதுண்டா?

மேருவைச் செண்டுகொண்டுதிரித்தும் புலிக்கொடியை இமயத்தில் நாட்டியும் வரிக்கயல்களை இமயத்தில் விளையாடுவித்தும் போந்த சோழபாண்டியர்களது தமிழ்ச்சாஸநம் அப்பிரதேசங்களிலும் இருக்கலாமே? அத்தகைய சாஸநங்கள் அசோகன் காலத்திற்கு முந்தியதாகவும் தமிழ்ப்பாஷையில் வரைந்துள்ளதாகவும் காணுதவரையிலு

1. In Siddhâpur of the Chitaldrug Taluk.

2. மதுரை ஜில்லா மேலூருக்கு 5 மைல் தூரத்திலுள்ள கீழவளவு என்னும் கிராமத்துக்கடுத்த ஒரு பாறையில் வரையப்பட்டிருக்கிறது.

ம், அசோகன் காலத்திய எண்ணெழுத்துக்களுடைய வரிவடிவுகளுக கும், பின்னர் ஏற்பட்ட வரிவடிவுகளுக்குமுள்ள ஒற்றுமையையோ அல்லது திரிபுக்கிரமத்தையோ சற்றுற்று நோக்கின் அவை அசோகன் காலத்து வரிவடிவுகளினின்றும் பெறப்பட்டனவென்றே ஏற்படும். எண்ணெழுத்துக்களின் வரிவடிவுகள் அசோகன் காலத்துத் தான் சிருஷ்டிக்கப்பட்டனவென்றும், அதற்கு முன் ஒன்றுமிருந்திலது என்றும் யார்தான் சொல்லத்துணிவார்? ஆராய்ச்சி அதற்கு மேற்செல்லவில்லை யென்றுதான் இராயரவர்கள் கூறுவது. சாஸநங்களின் பழைமைக்கிரமத்தைக்காட்ட இவர் கூறியதைப்பிள்ளையவர்கள் சிறிதுங்கவனியாது சேரசோழ பாண்டியர்கள் பல்லவர்களுக்குப் பின்னிருந்தார்களென்று சொல்லிவிட்டார் என்று குதூகலிக்கின்றனர்! பல்லவ அரசர்கள் சாஸநங்களே சோழபாண்டியர்கள் சாஸநங்களுக்கு முற்பட்டு நிற்கின்றனவென்று காட்டக் கூறியதேயன்றி, மேற்கூறிய அரசர் வரிசைகளை முறை பிறழவைத்ததாகவெண்ணுதல் பிள்ளையவர்கள் பெருமைக்கேற்றதன்றாம். இராயரவர்கள் காட்டிய படத்தில் அசோக எண்கள் இரண்டினைத்தவிர மற்றவை இன்மைக்குக்காரணம் அவைகிடைத்திலவென்பதே. அதைத்தெரிந்துகொள்ளாது அவ்வெண்களை இல்லை என்று நிச்சயித்துக்கொண்ட பிள்ளையவர்கள் பொருட்டு இரங்குகின்றேன். இவர் தொல்காப்பியத்தின் காலம் 5000-வருஷங்களுக்கு முந்தியதென்று எங்ஙனம் உறுதிப்படுத்துவாரோ தெரியவில்லை. தம் சௌகரியத்திற்கேற்பத் தனிப்பாடற் செய்யுட்களையும் பழைமைக்கு மேற்கோளாய்க்கொள்ளும் பிள்ளையவர்களுக்குச் சரித்திரவிசாரம் ஒரு பொருட்டாகாது. அரை, கால், அரைக்கால் என்பன வடமொழி வழக்கைத் தென்மொழியிலும் வழங்கியிருக்கிறதேயொழிய இம்மொழிக்கே யுரியனவல்ல. தமிழுக்கேயுரித்தானவை ஒன்றொழிபத்து (ஒன்பது)என்பன போன்றவை யென்றார் பிள்ளையவர்கள். ஏகோனவிம்சதி, பாதோனகாதசம் முதலியவடமொழி வழக்கைப் பிள்ளையவர்கள் ஓரார் போலும்! இவை நிற்க.

ஒன்பது என்பது ஒன்றொழிபத்து என்று செவ்வனே விளக்கியவர் பத்தொழிநூறு, நூறொழி ஆயிரம் என்பன, பன்னூறு, நுவ்

வாயிரம் என்பனபோற்றிரியாது தொண்ணூறு, தொள்ளாயிரம் என்றெவ்வாறுயிற்று என்பதை விளக்காமல் வாளாவிடுத்தனர்.

இராயரவர்கள் தமிழிலக்க விஷயமாய்ச் சாஸநவாராய்ச்சியால் தமக்குத்தெரியவந்த சில உண்மைகளைச் செந்தமிழ்வாயிலாக வெளியிட்டாரேயன்றிப் பிள்ளையவர்களோடாயினும் மற்றெவர்களோடாயினும் வாதுசெய்து வெற்றிபெறவெண்ணி வந்தவரல்லரென்பது அவர் வியாசத்தால் நன்கு விளங்கும்: அப்படியேயிருப்பினும், பிள்ளையவர்கள் வாசாலகத்தின் முன் 'பண்டிதன்' வாய்மொழி பயன்படப் போகிறதா? இராயரவர்கள் சாஸ்திரவாராய்ச்சியால் தாம் கண்ட உண்மைகளை கண்டதுகண்டபடியே கூறுகின்றதுபோலவே பிள்ளையவர்களும் கண்டபடி யெழுதுவதாயின், அஃது, எவ்வாற்றானும் நல்லறிஞர் அங்கீகரிக்கற்பாலதாகும். தமிழுக்கு எவ்வாற்றானும் பெருமைதரவேண்டுமாதலால், இராயரவர்கள் சொல்லும்வழி அதற்கு நல்லதோ அன்றிப்பிள்ளையவர்கள் வழியே நல்லதோவென்பது செந்தமிழபிமானிகள் தெரிந்துகொள்வாராக. இனி இவ்விஷயத்தைக்குறித்து எழுதுவது எமக்கும் 'செந்தமிழ'க்கும் எவ்விதத்திலும் பெருமையயில்லையென்பது துணிந்து இதனேடு விடுக்கின்றேம்.

நீலகிரி,
25–5–1905.

கோ. வெங்கோபராவ்,
அஸிஸ்டேண்டு எபிகிராபிஸ்டு.

தருக்க சூத்திர முதற்பாடம்.

(உ-ம் தொகுதி, ௬௪௭-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

மேலும்,

(1) மேற்கோ டம்முண் மேவுறு பொருளின்
றன்மையா லொப்பறி தருவினை யுளதே. (த-சூ)

(2) அதுதான்
மூவகை யாக முயங்கிடு மென்ப (த-சூ)

(3) இன்றி யமையாத ததனெடு தற்செய
லென்றுமுடியா ததென்பவோர் மூன்றே (த-சூ)

யாதாமொரு கொடுத்த விஷயத்தைக்கொண்டு உகரமேற்கோள் வரையுங்கால் அதனது எழுவாய் உடன்பாடாக விடுக்க வேண்டியது மிக அவசியம். ஆதலினால் இஃது இன்றியமையாதது.

அவ்வாறே எகரமேற்கோளினது எழுவாய் உடன்பாடாய் இருத்தல் வேண்டுமென்பது என்றும் முடியாதது. ஏனெனில் அதன் எழுவாய் எப்பொழுதும் எதிர்மறையே. தற்செயலின்கண்ணுறும் விஷயம் நேரினும் நேரும். நேராதொழியினு மொழியும். எங்ஙனமெனில்.

"குளம்புடை மிருகங்கள் தீனியைக் கறித்துண்ணுமவைகளாம்"

இம்மேற்கோள் நிற்கும் நிலையில் பொதுவுடன்பாடாகவேனும், சிறப்புடன்பாடாகவேனும் யாம் மாற்றிக்கொள்ளலாம்.

பொது உடன்பாடாக்கில்,

(1) "எல்லாக்குளம்புடை மிருகங்களும் தீனியைக் கறித்து உண்ணுமவைகள்" என்றும்,

சிறப்புடன்பாடாக்கில்

(2) "சிலகுளம்புடை மிருகங்கள் தீனியைக் கறித்து உண்ணுமவைகள்" என்றும் இருவகையாய்த் திருப்பலுறும். ஆனால் சில்குளம்புடை மிருகங்கள் மாத்திரந் தீனியைக் கறித்துண்ணு மவைகளெனப் பிரத்தியக்ஷ அனுபவமாயிருத்தலால் "எல்லாக்குளம்புடை மிருகங்களும் தீனியைக்கறித்துண்ணுகின்றன" என்பது பிரத்தியக்ஷ விரோதமாயிருக்கின்றது. அப்படி விரோதமாயிருக்கின்றதென்பதை வேறு சரித்திர அறிவு கொண்டு அறியவேண்டியதாயிருக்கின்றது. ஈண்டுக்கறிக்குந்தன்மை சிலகுளம்புடை மிருகங்கள்பால்நேர்ந்தும், வேறு சில குளம்புடை மிருகங்கள்பால் நேராமையுங் காண்டலால் இதுதற்செயல். ஈண்டு யாம் ஒவ்வொரு சாத்திரத்தின் உண்மை யாது என்று கவனித்துத்தருக்கம் புரியச்செல்லுதல் அடாத காரியம். பின்னை மற்றென்னையெனில் நமக்குக்கொடுத்த மேற்கோள்களைவைத்து முடிவிர்த்துக்கொள்ளுதலே நமது கடமை. மேலியாம்,

ஈரிரண் டாக வியம்பு மேற் கோளு
ளொன்றினை யொன்றாய் மாற்றுத லுரைப்பாம் (த-சூ)

(2) இதுகாறுங் கூறியவாற்றால் நால்வகை மேற்கோள்களின் றன்மையை ஒருவாறுணர்ந்தாம். இனி அவைகளொவ்வொன்றும் பொருளில் வேறுபடாமனின்று பலவிதமாற்றங்கள் எய்துந்தன்மையையுரைப்பாம். மேற்கோள்கள் மாறுதலென்பது யாதெனின் அவைகளின் எழுவாய் பயனிலைகள் இடம் பெயர்ந்து நிற்குமாறு மாற்றுதலாம். எங்ஙனமெனிற் காட்டுதும்.

உதாரணம் (1) "சில உலோகங்கள் தெரிக்கும் பொருள்களாயிருக்கின்றன"

என்பதை (2) "சில தெரிக்கும் பொருள்கள் உலோகங்களாயிருக்கின்றன" என்று மாற்றலாம்.

இதில் முதலாவது மேற்கோள் மாற்றப்படு மேற்கோள். மற்றையது மாற்று மேற்கோள்.

63. மாற்றப்படு மேற்கோள் உண்மை மேற்கோளாக விருந்தால் மாற்று மேற்கோளும் அவ்வாறிருத்தல் வேண்டுமென்பது அத்தனை அவசியமின்று. சில சந்தர்ப்பத்தி லவ்வாறு நிகழினு நிகழலாம். மேலே கூறியாங்கு இரண்டு மேற்கோள்களையுங் கவனித்துப் பார்க்குங்கால் முதன் மேற்கோளின் அருத்தத்தையே இரண்டாவது மேற்கோளுங்கொண்டு நிற்றலைக்கண்டாம். இதைத்தான் "தனி மாற்றம்" என்று கூறுவர். ஏனெனில் ஈண்டுப் புதுமேற்கோள் ஒன்றுறுமாறு எழுவாய் பயனிலைகளைமாத்திரம் மாற்றப்பட்டதே தவிர வேறின்று. ஆதலினாலென்க.

ஆகையால் சிறப்புடன்பாட்டு மேற்கோளொன்றை(ப) மீண்டும் சிறப்புடன்பாட்டு மேற்கோளாக மாற்றும் மாற்றமே தனிமாற்றமானமை காண்க.

64. மாற்றுங்கால் மேற்கோள்களின் றன்மையையும் மாற்றப்படு மேற்கோளிற் பங்கிடு செய்தவைகளைத்தவிர வேறு உறுப்புகளை மாற்றுமேற்கோளில் பங்கிடு செய்தல் கூடாது என்பதையும் யாம் கவனித்தல் வேண்டும்.

65. பொது எதிர்மறை மேற்கோளையும் மீண்டும் பொது எதிர்மறை மேற்கோளாக மாற்றலாம். எங்ஙனமெனில்,

"எல்லா உலோகங்களும் செயற்கைப்பொருள்களுள் வாரா" என்பதை,

"செயற்கைப்பொருள்களுள் வாராதவைகள் உலோகங்களாயிருக்கின்றன" என்று மாற்றலாம்.

இதனை முற்காட்டிய வட்டங்களி னமைத்துணர்க.

66. பொது உடன்பாட்டு மேற்கோளினை (உ) மாற்றுதல் மிக கஷ்டதரமாகும். எங்ஙனமெனில் "எல்லா உலோகங்களும் இயற்கைப்பொருள்களாயிருக்கின்றன" என்பதை மாற்றுங்கால் "எல்லா இயற்கைப்பொருள்களும் உலோகங்களாயிருக்கின்றன" என்றுறும்.

இம்மாற்றத்தாலுற்ற பயன் ஆக்ஷேபிக்கத்தக்கதாயிருக்கின்றது. ஏனெனில் இயற்கைப்பொருள்கள் யாவும் உலோகங்களுள் வராமை பற்றியென்க. அன்றியும் யாம் முன்னர்க்கூறியவாற்றால் உகரத்தின் அதாவது பொது உடன்பாட்டு மேற்கோளின் பயனிலை சிறப்புத்தன்மையுற்றதெனக்கண்டாம். அதாவது காணப்படும் உலோகங்களெல்லாம் இயற்கைப்பொருள்களின் சிலபாகங்களேயன்றி வேறன்று என்றுணர்ந்தறிதலாம். ஆகையால் மேற்கூறிய இரண்டாவது மேற்கோள் "எல்லா உலோகங்களும் சில இயற்கைப்பொருள்களாயிருக்கின்றன" என்றிருத்தல்வேண்டும். இதை மாற்றுங்கால்,

"சில இயற்கைப்பொருள்கள் எல்லா உலோகங்களாயுமிருக்கின்றன" என்று மாற்றி யுணர்ந்து கொள்க.

இவ்வித மாற்றமுறுங்கால் பயனிலையோடு சேர்ந்துவரும் சில, எல்லா, என்ற வார்த்தைகளை விடுத்தல் மரபாம். அதுபற்றி "சில இயற்கைப்பொருள்கள் உலோகங்களாயிருக்கின்றன" என்றானமை காண்க. இதைத்தான் வரையறுமாற்றமென்று கூறுவர். இம்மாற்றத்தால் பொது உடன்பாட்டு மேற்கோள் சிறப்புடன்பாட்டு மேற்கோளானமை காண்க.

67. பங்கீடில்லா எழுவாயையுடைய சிறப்பெதிர்மறை மேற்கோளை (ம) மாற்றுதலும் மிகக்கஷ்டமேயாம். எங்ஙனமெனில்.

"சில இயற்கைப்பொருள்கள் உருவமில்லா வஸ்துக்களாயிருக்கின்றன" என்பது

"எல்லா உருவமில்லா வஸ்துக்களும் இயற்கைப்பொருள்களாயிருக்கின்றன" என்று மாற்றமுறும். இஃது ஆக்ஷேபிக்கத்தக்கதே. எங்ஙனமெனில் மாற்று மேற்கோளில் "இயற்கைப்பொருள்கள்" என்பது பங்கீடு செய்யப்பெற்றிருக்கின்றது. ஆனால் மாற்றப்படு மேற்கோளிலே அங்ஙனமில்லாமை கண்டுணர்க.

"சில உருவமில்லா வஸ்துக்கள் இயற்கைப் பொருள்களாயிருக்கின்றன" என்பதும் ஆக்ஷேபிக்கத்தக்கதே. ஆகையால் இந்த (ம)கர மேற்கோள் தனிமாற்றம் அல்லது வரையறுமாற்றத்தால் மாற்றப்படாததாகி புதுமுறையாகிய எதிர்மறைமாற்றத்தால் மாற்றப்பெறவேண்டியதாயிருக்கின்றது.

அது முன்பரிபாடைமொழிகளுட் கூறியாங்குச் சிறப்பெதிர்மறை மேற்கோளை முதலில் உடன்பாட்டுமேற்கோளாக மாற்றிப் பின்னதனைத் தனிமாற்றத்தால் மாற்றுதலாம்.

எதிர்மறையுருபை சநதமொழியோடு கூட்டிக்கூறுதற்குப்பிரதியாய் பயனிலையோடு கூட்டிக்கூறில் அ.சாவது உருவமில்லா வஸ்து என்பதை அருவவஸ்து எனக்கூறில் முற்கூறிய மேற்கோளானது

"சில இயற்கைப்பொருள்கள் அருவவஸ்துக்களாயிருக்கின்றன" என்றாகிப் பின் தனிமாற்றத்தால் மாற்றுங்கால்,

"சில அருவப்பொருள்கள் இயற்கைப்பொருள்களாயிருககின்றன" என்று ஆகும்.

இதனாற் சிறப்பெதிர்மறை மேற்கோள் எதிர்மறை மாற்றத்தால் மாற்றப்பெற்றமை காண்க.

(68) மேலும் உகரமேற்கோளை எதிர்நிலை மாற்றத்தால் மாற்றலாம். உதாரணமாக.

"எல்லா உலோகங்களு மியற்கைப் பொருள்களா யிருக்கின்றன"

"எல்லா உலோகங்க ளல்லாதவைகளும் இயற்கைப்பொருள்க ளில்லாதவைகளாயிருக்கின்றன."

என்று மாற்றப்பெற்றால் அங்கீகாரமில்லாப் பொருளைத் தருகின்றது. பின் எவ்விதத்தாற் பயன்பெறுமாறு செய்விக்கலாகுமெனில், அதுதான்,

"உகரப் பயனிலை யோடின்மை வைத்ததை
எழுவா யாக்கிமு னெழுவாய் மாற்றிப்
பொதுவுடன் பாடாய்ப் பொருத்தலிற் பெறுமே" த. சூ.

எங்ஙனமெனில்,

உலோகத்தைக் குறிக்கும் வட்டத்திற்கு வெளியிலுள்ள வஸ்துக்கள் வேறான இயற்கைப்பொருள்களாயிருப்பதால் அதனை அங்கீகரிக்கத்தக்கதன்றெனக் கூறப்பட்டது. கீழ் வட்டங்களாற் காண்க.



(69) இவ்வெதிர்நிலை மாற்றம்.—

சிறப்புடன்பாட்டு மேற்கோள், சிறப்பெதிர்மறை மேற்கோள், பொது எதிர்மறை மேற்கோள் இவைகளைமாற்ற உபகரித்தற்கேற்றதல்லாதவென்றறிக.

ஆனாற் பொதுஎதிர்மறை மேற்கோளினை, இன்மைமொழியைப் பயனிலையோடு சேர்த்தலால் பொதுவுடன்பாடாக்கி இவ்வெதிர்நிலை மாற்றத்தைப் பிரயோகித்து மாற்றலாம். எங்ஙனமெனில்,

"மனிதர்கள் முற்றறிவுடையவர்க ளல்லர்"

இதை உகரமாக்குங்கால் "எல்லா மனிதர்களும் முற்றறிவுடையவர்க ளல்லர்" என்றாக்கி,

எதிர்நிலை மாற்றம் மாற்றுங்கால்,

"எல்லாச் சிற்றறிவுடையவர்க ளெல்லாரும் மனிதர்களல்லர்"

ஈண்டுச் சிற்றறிவுடையவர்க ளல்லார்" என்பதை முற்றறிவு டையவர்க ளென்றாக்கி,

"எல்லா முற்றறிவுடையவர்களு மனிதர்களல்லர்"

அல்லது,

"முற்றறி வுடையவர்க ளில்லார் மனிதர்கள்" என்று ஆம். இது முன்னைய மேற்கோளின் தனிமாற்றமானமை கண்டுகொள்க.

மேற்கோளியல். முற்றிற்று.

S. பால்வண்ணமுதலியார்,
திருநெல்வேலி.

உ

தமிழ்ப்பெருமை.*

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

இங்ஙனம் ஒப்புயர்வு உரைத்தற்கு அரிதெனப் புகழப்பட்ட தமிழ் மடந்தை ஆங்கிலம் என்னும் பெருவெள்ளத்து வீழாமல் காக்கின்ற பெருமானாகிய பாண்டித்துரையவர்கள் முன்னிலையிலே, கல்விக்கடலின் கரைகண்ட புலவோர் வைகும் இக்கழகத்திலே யானுங் கற்றவன்போல நடித்துச் சிலமொழி கூறுவான் விரைந்து புகுந்தனன். "கற்றது கைம்மண்ணளவு கல்லாதுலகளவு" என்னும் மூது

---

* இது, மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் நான்காம் வருஷோற்சவ தினத்தன்று சென்னைத் தபாலிலாகாத் தலைவர் ஸ்ரீமது-வி. கனகசபைப்பிள்ளையவர்கள் செய்த உபந்நியாசமாகும்.—பத்திராசிரியர்.

மையை நினைந்து நாணினேன்: ஆயினும், தமிழ் அணங்கின்மீதுள்ள ஆராக்காதல் எனது நாணினை அகற்றி உள்ளத்தைக் கவர்ந்தெழுந்து ஓங்கியதால் இவ்வாறு துணிந்தனன் என்றறிக. இத்தமிழ் நங்கை எவ்விடத்திலே பிறந்தனள்? யாவராற் பாராட்டிச் சீராட்டி வளர்க்கப்பட்டனள்? இப்பொழுது என்னபருவம் அடைந்தனள்? என்னும் வினாக்களுக்கு உண்மையான விடை பகர்வதற்கு யான் பலநாளாக ஆராய்ந்து அறிந்தவற்றுள் "மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்ட" தொழிய், எஞ்சியவற்றுள் இச்சங்கத்திற்கு ஏற்பன சிலவற்றை இவ்விடம் இயம்புவேன்.

மேற்சொன்ன வெண்பாவிலே கூறிய பொருள் யாதெனின், ஓயாது ஒலிக்கும் கடலாற் சூழப்பட்ட இவ்வையத்திலே மூடியிருக்கும் இருளை நீக்குவன இரண்டு உள்ளன. மின்னலைப்போன்று ஒளி வீசும் ஒற்றையாழித்தேரின்மீது செல்லும் செஞ்ஞாயிறு ஒன்று. மற்றது இணையற்ற இனியதமிழ் என்றூர். இருள் ஒன்றை விலக்குவதற்கு இரண்டுபொருள் வேண்டுமோ? செங்கதிர் ஒன்று போதாதோ? எனின், இருள் புறவிருள் அகவிருள் என இருவகைத்து என வருவித்து, செங்கதிரோன் உலகத்துப் புறவிருளை நீக்குவதுபோலச் செந்தமிழும் மாந்தரது அகவிருளை அகற்றும் என்க.

இனி அகல உரைப்பின் "ஓங்கல்" என்னும்மொழி, ஓங்குதல் என்னும் தொழிலையும் ஓங்கியிருக்கும் பொருளையும் குறிக்கும். இச்செய்யுளிலே "ஓங்கலிடை வந்து" எனக் கூறியிருத்தலால் இவ்விடத்து "ஓங்கல்" என்னும் சொல் ஓங்கி வளர்ந்துள்ள ஒன்றைக் குறித்தது எனப் பொருள்கோடல் பொருத்தமாகும். உலகத்தின் கண்ணே ஓங்கி உயர்ந்துள்ளவற்றுள் மலைகளே மிகவும் உயர்ந்தனவாதலால் "ஓங்கல்" என்பது மலை எனப் பொருள்படப் பெரும்பான்மை வழங்கப்பட்டுள்ளது. ஆகவே "ஓங்கலிடைவந்து" என்னும் தொடர் மலையினிடத்தே தோன்றி எனப்பொருள்படும்.

ஞாயிறும் தமிழும் ஒரே மலையினிடத்தேதோன்றிற்றோ? எனின் அற்றன்று, உதயகிரியினிடத்தே சூரியன் தோன்றுவதுபோலப் பொதியமலையினிடத்தே தமிழ் தோன்றிற்றென்பர்.

"தேனார் கமழ்தொங்கல் மீனவன் கேட்பத்தெண் ணீரருவிக்
கானார் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்."

என்றார் அமிர்தசாகரனார். இவ்வாறே, வில்லிபுத்தூரர் விருத்தப் பாவிலே இயற்றிய பாரதத்திற்கு அவர் மகன் வரந்தருவார் பாடிய பாயிரத்திலும்,

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரோன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்.

என்றும்,

"அகத்தியன் பயந்த செஞ்சொ லாரணங்கு" என்றும் புகழ்ந்து தமிழ் அணங்கினுக்குப் பல்லாண்டு கூறினர். அருந்தவராகிய அகத்தியர் ஆரியவர்த்தம் என்னும் வடநாட்டைவிட்டுத் தெற்கு நோக்கி விந்தியமலையைக் கடந்துவந்து கடற்கோடியிலுள்ள பொதியப் பொருப்பிலே இருந்து தமிழிலே முதனூல் இயற்றினார் என்று கொளல்வேண்டும். பாண்டியவரசர் பலர் தமிழ்நங்கையைப் போற்றித் தேற்றி வளர்த்தனர் என்றும், புலவர் வீற்றிருந்த சங்கப்பலகையிலே இருந்து குழலினும் யாழினும் இனியமழலைச்சொல்பயின்று மதுரையிலே மற்றைஞானசம்பந்தர் சமணரோடு வாதுசெய்யுங்காலத்திலே வைகையாற்றிலே இடப்பட்ட ஏட்டிலே தவழக்கற்றனள் என்றும், அவ்வேடு ஆற்றுப்பெருக்கிற்கு எதிர்த்துச் சென்றதனாலும் பின்பு அச்சம்பந்தர் நெருப்பிலே இட்ட ஏடும் வாடாது கருகாது இருந்ததினாலும் தமிழ்நங்கை தனது தெய்வத்தன்மை தோற்றுவித்தாள் என்றும் கூறினர். மேலும் தமிழ் அணங்கு இன்னும் பேதைப் பருவம் கடவாது பூதேவியின்மருங்கிலே நாளொருவண்ணம் பொழுதொருமேனியாய் வளருகின்றாள் என்றார்.

அகத்தியர் இருக்குவேத சுலோகங்கள் இயற்றிய இருடிகளில் ஒருவர் ஆகையால் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்டு இருந்தனர் என வற்படும். வரந்தருவார் தமது புரவலனாகிய ஆட்கொண்டான் என்னும் கொங்கர்குலக் குரிசிலைச் சிறப்பித்து,

தென்னாட்டில் வடநாட்டிற் குணநாட்டிற் குடநாட்டிற் றெவ்வரோட
... ... கண்டன்வேங்கை
எந்நாட்டு மெழுதியிவன் திருமரபோர் பெற்றவிசை யாவர் பெற்றார்.

எனக்கூறியிருத்தலால், கண்டன் அல்லது கண்டகோபாலன் என்னுஞ் சோழமன்னன் அரசாட்சியிலே வரந்தருவார் வாழ்ந்ததாகச் சொல்லலாம். கண்டகோபாலன் ஏறக்குறைய அறுநூறு ஆண்டுக்கு முன்னே சோழமண்டலத்திலே அரசாண்டதாகத்தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுக்களால் தெரியவரும். ஆகவே வரந்தருவார் காலத்திலே தமிழ்தோன்றி இரண்டாயிரத்து நானூறு ஆண்டு சென்றது எனத் துணிந்து கூறலாம். இத்தனை ஆண்டு கடந்தும் தமிழ் அணங்கு இன்னும் பேதைப்பருவம் கடந்திலள் என்றது எங்ஙனமெனின் :— மக்களுக்கு ஓராண்டு தேவர்களுக்கு ஒரு நாள் என்பது புராணிகர் கூற்றாதலால் 2,400 ஆண்டும் 2,400 நாளாகவே கணக்கிட்டால் தமிழணங்கு வரந்தருவார் காலத்திலே பேதைப்பருவத்தாள் என ஒப்புக்கொள்ளலாகும்.

(இன்னும் வரும்.)

உ

ஸ்ரீரங்கம் தமிழ்ச்சாஸனம்.

இவ்வற்புதசாஸன* விஷயத்தை எனக்கறிவித்தவர் என் நண்பர் ஸ்ரீமத்-து. அ. கோபிநாத ராயரவர்கள், எம். ஏ., அதற்கு அவர்கள் ஒரு புகைப்படமும் எனக்குத் தந்துதவினர். ஸ்ரீரங்கம் உடையவர் (இராமாநுஜர்) சந்நிதிக்கு அடுத்தமுன்பக்கத்துள்ள நான்காம் பிராகாரத்துத் தென்சுவரின்கீழோரத்தில் இச்சாஸனம் வரையப்பட்டுள்ளது. இது நல்லநிலையில் இருக்கின்றது. இஃது எழுதப்பட்ட தமிழ் கி-பி 12-ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியைச் சார்ந்தது. எழுத்

* இச்சாஸனம் இதன் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளது. இதனிடத்துள்ள அற்புதமாவது, ஓர் பிரபுவினிடத்து அன்புள்ள வேலைக்காரர், அப்பிரபு இறந்தபின்னர்த் தாமும் உடனே உயிர்நீத்தலாம். இவ்விஷயம் பின்னால் வைத்து விளக்கப்பட்டுள்ளது.

துக்கள் சிறிது கவலைத்தாழ்வாக எழுதப்பட்டனவாகக் காணப்படுகின்றன. "மாராயநெந் சேமநாந கடவேநாகவும்" என்ற சொற்றொடரிற் காணப்படும்வண்ணம் நகர, னகரங்கள் குழம்பிக்கிடக்கின்றன. இதனை எழுதியவன் பெரும்பான்மை நகரப்பிரயோகத்திற் பிரியமுடையவனாகத் தோற்றுகின்றான். "எங்கள்ளம்மைக்கு, மிணாளங்நாவேன்" என்றவற்றிற் காணப்படும்வண்ணம், பலவெழுத்துக்கள் அநாவசியமாகவே உபயோகித்திருப்பது மற்றோர் விசேஷம். சிற்சில இடங்களிற் சில எழுத்துக்கள் விடப்பட்டுமுள்ளன. உ-ம்.—உடங்[வ*] பறையற்கு [கொ*] டுத்து. மிணாட்டி, மிணாளன் என்ற பதங்கள் பிழைப்பட்டன என்பது விளங்கும்.

தன் வேலைக்காரரிடம் இத்துணைஅற்புதபக்தியும் விசுவாசமும் உண்டுபண்ணின புருஷன், அவ்வூர் அதிபதியாகிய அகளங்கநாட்டாழ்வார்* என்பது இச்சாஸனத்திற் குறிக்கப்பட்டிருக்கின்றது. இவர் ஸ்ரீராமாநுஜருடைய சிஷ்யராகக் கருதப்படுகின்றார். இவருடைய ஊழியக்காரர்கொண்ட பிரதிக்ஞை வரையப்பட்டசாஸனம், அவரது ஆசாரியராகிய ஸ்ரீராமாநுஜரது கோயிலுக்கு நேரெதிரே அமைக்கப்பட்டிருத்தல், மேற்கருதியதற்குச் சிறிது ஆதாரமாகும். குருபரம்பரை, இராமாநுஜ திவ்யசரிதை என்ற இரு பிரபந்தங்களிலும் அகளங்கநாட்டாழ்வான் அவரதுசிஷ்யர்களில் ஒருவரென்றும், இச்சிஷ்யர்களின் கடமை பிரதிபக்ஷநிரஸனம் (குருபரம்பரை, pp. 16, 190; ராமாநுஜார்யதிவ்யசரிதை pp. 249, 251) என்றுங்கூறப்பட்டுள்ளன. அவ்வாறு ஒருவர் இருந்திருக்கும் பக்ஷத்தில், இச்சாஸனத்திற் கூறப்பட்டவரும், இராமாநுஜர் சிஷ்யரும் வெவ்வேறு மனுஷ்யராயிருக்கலாம். ஏனெனில், இச்சாஸனத்திற் கண்ட அகளங்கநாட்டாழ்வார் என்பவர், திருவானைக்கா என்ற ஜம்புகேசுவர க்ஷேத்திரத்தின் கீழ்ப் பக்கத்தின்கண்ணுள்ள 2-வது உட்கோபுரத்தின் தென்பக்கத்தில் வரையப்பட்டிருக்கும் ஓர் உடன்படிக்கையில் சம்பந்தப்பட்டவராகக் காணப்படுகிறார்.† இவ்வுடன்படிக்கை கி-பி. 1178-ஆம் வருஷம்

---

* "அகளங்கன்" என்பது விக்கிரமசோழனுக்குப் பிரதிநாமம்.

† கவர்ன்மெண்டு சிலாசாஸனபரிசோதகர் இச்சாஸனத்தை எடுக்கத் தவறினமையால், மூன்றுங்குலோத்துங்கன் ஆளுகையில் இன்னவருஷத்தில் இந்தஉடன்படிக்கைநடந்தேறியதென்று சொல்லக்கூடிய நிலையில் இல்லை.

சிங்காதனமேறிய மூன்றும் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்தது. இராமாநுஜர் சகம். 1059 அதாவது கி-பி. 1137-ஆம் ஆண்டில் பரமபதமடைந்தவர். ஆகையால் இராமாநுஜர் வியோகமான காலத்துக்கும் 3-ஆம் குலோத்துங்கன் சிங்காதனமேறிய காலத்துக்கும் இடையில் 41-வருஷம் ஆகின்றது. குருபரம்பரைக் கிரந்தத்தை நாம் நம்புமபக்ஷத்தில் இராமாநுஜர் ஜீவியகாலத்திலேயே மற்றமதங்களை மறுப்பதற்குத் தக்க யோக்கியதை உடையவரென மதிக்கப்பெறுதற்கு, அவர் வியோககாலத்தில் அகளங்கநாட்டாழ்வான் வயோதிகராய் இருந்திருத்தல்வேண்டும். 3-ஆம் குலோத்துங்கனது நீடித்த அரசாட்சியில், இவ்வுடன்படிக்கை முடிதற்குச் சிலவருஷங்கள் சென்றன என வைத்துக்கொண்டாலும், குருபரம்பரையில் பேசப்பட்ட அகளங்கநாட்டாழ்வானுக்கும், ஜம்புகேசுவரவுடன்படிக்கையிற்குறிக்கப்பட்டவர்க்கும் நீடித்தகாலம் இடைப்படுதலால், இவர்களை ஒரேமனுஷ்யரென்பது கூடாததாகும். இராமாநுஜர் சிஷ்யரொருவர் இருந்திருக்கும் பக்ஷத்தில், அவர் நம் சாஸனத்துக் குறிக்கப்பட்டவரைத் தவிர்த்து வேறொருவராக இருந்திருத்தல்கூடும். வைஷ்ணவ பிரபந்தங்களிற் காண்கிற காலநிர்ணயத்தைக் குறித்த இதரபிழைகளை உத்தேசிக்கும்போது, பற்பலகாலத்துக் கதைகளை ஒரேபெரிய மனுஷனுக்கேற்றிப் பொருத்துகிற இயற்கைவழக்கப்படி, குழப்பத்தால், பெரியமனுஷனொருவனுக்குத் தப்பானகாலத்தை ஏற்படுத்தியிருத்தல்கூடும் என்பது சகஜமான தர்மமேயாம். இராமாநுஜர்சரித்திர சம்பந்தமான ஓர் உதாரணத்தைக்கொண்டு இப்பிழையை விளக்கிக்காட்டலாம். அஃதாவது :—1009-சகவருஷத்தில் சென்னிகுலோத்துங்கன் என்பவனாற் சீர்குலைக்கப்பட்ட சித்திரகூடக்கோயிலிலிருந்து வெளியேற்றப்பட்ட கோவிந்தராஜப்பெருமாள் விக்கிரகத்துக்கு,கீழைத்திருப்பதியில் ஒருகோயில்கட்டும் வண்ணம் இராமாநுஜர் கத்தியதேவராயனைத் தூண்டுதல் செய்தனர் என்பதே. காலவழுவிஷயத்தில், இஃது ஒரு பெருந்தவறும் என்பது பின்கூறப்படும் விஷயங்களால் தெளிவாகும். 3-ஆம் இராஜராஜனுடைய ஆளுகையின் 5-வது, 6-வது வருஷங்களில் கத்தியதேவயாதவராயனுடைய சாஸனங்கள் காணப்படுகின்றன. அவ்விராஜராஜன் பட்டத்துக்குவந்தகாலம் கி-பி. 1216.

ஆகையால், 1009-சகவருஷத்தில் ஆட்சிபுரிந்த குலோத்துங்கன் காலத்தில் கத்தியதேவயாதவராயன் இருந்திருத்தல் முடியாதென்பது திண்ணம்.

இனி, ஓர் பிரபு இறக்குங்கால் அவர் வேலைக்காரர் தற்கொலைபுரிந்துகொள்ளும் விநோதவழக்கத்தின் கருத்தும் காரணமும் விளங்கவில்லை. ஆனால், இவ்வழக்கம் மிகச் சாதாரணமாகவே வழங்கிவந்திருக்கிறது என்பது மைசூர் சம்ஸ்தானத்துச் சாஸனங்கள் பலவற்றால் விளங்குகின்றது. திருச்சிராப்பள்ளியில் இன்றும் "நாட்டாழ்வார்" என்று கள்ளரில் ஒருவகுப்பினர் இருக்கிறார்கள். இப்பெயர் தற்காலம் "நாடாவார்" என மருவிநிற்கின்றது. அவர்களில் அநேகர் வைஷ்ணவப்பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சாஸனம்.

(i)

1. ஸ்வஸ்திஸ்ரீ [1]விற்றிருந்தாந் [2]செமனாந அகளங்கநாடாழ்வா(ர்)
2. ற்கு திருவரங்கத்து [3]கைகொளமுதலிகளில் நாயநான அழயம—
3. ணவாளமா [4]ராயநெந் இவற்கு உடன் [5]வெளியாகச்சாவக்—
4. [6]கடவெநாகவும் இவற்கு பிந்பு [7]சாவாதெ இரு[ந்தெ]நாகில் எந்—
5. மிணுட்டியைப் பறையற்குக் குடுத்து எங்கள்ளம்மைக்கு [8]நானெ—
6. [9]மிணாளந்நாவெந்—

(ii)

I. ஸ்வஸ்திஸ்ரீ விற்றிருந்தாந் செமநாந அகளங்கநாடாழ்வாற்கு திருவரங்—

---

1. வீற்றிருந்தான்.
2. சேமனான.
3. கைக்கோளமுதலிகளில்.
4. ராயனேன்
5. வேளை.
6. கடவேனாகவும்.
7. சாவாதே இருந்தேனாகில்
8. நானே
9. மணாளனவேன்

2. கத்துக் கைகொளரில்ரியானாந கிடாரத்தரையனெந் இவற்கு உட—

3. ந்லெ[வ*]ளையாகச்சாவக்கடவெனாகவும் இவற்குபிந்பு சாவாதெ இருந்—

4. தொகில் எந்மிணா.-டியை பற்றையற்து[கொ*]டுத்து எங்கள் ளம்மைக்குநா—

5. நெமிணளநாவெந்

(iii)

1. ஸ்வஸ்திஸ்ரீ விற்றிருந்தாந் செமநாந அகளங்கநாடாழ்வாற்கு

2. திருவரங்கத்துக் கைக்கொளரில் உலகநாந [1]அழகானைச்சொ—

3. மம (ர*) ராயநெந் இவற்கு உடந்வெளையாகச் சாவக்கடவெ நாகவு—

4. ம் இவற்கு பின்பு சாவாதெ இருந்தெநாகில் எந்மிணாட்டியை ய்ப—

5. றையற்குக் குடுத்து எங்கள்ளம்மைக்கு நாநெமிணளநா—

6. வெந்—

எம். நாராயணசாமி ஐயர்.

---

1. அழகானைச்சோமமாராயன்

புத்தகக் குறிப்பு.

ஸ்ரீவாணிவிலாஸினீ ;—இப்பெயர்கொண்ட மாதாந்த பத்திரத்தின் முதற்சஞ்சிகை கிடைக்கப்பெற்றேம். தமிழ்நாட்டினுலவும் பத்திரிகைகளிலெல்லாம், இஃது அதிக அளவும் வனப்புங்கொண்டு, பலபடங்களுடன் சிறந்தகாகிதத்தில் அமைந்து ஒளிர்கின்றது. இது ஸ்ரீரங்கம் என்னும் திவ்வியதேசத்தினின்று வெளியேறுவது. உருவழகில் உயர்தர ஆங்கிலபத்திரத்தையொப்ப விளங்கும் இது, நம் தமிழணங்கு மகிழ்ந்துவிளையாடற்குச் சிறந்தகளமாக இனிஅமைந்து பயனளிக்குமென்றே நம்புகின்றேம். இத்தகைய பத்திரமொன்று நடாத்தத்துணிந்தவர், தமிழணங்கை அலங்கரித்தற்கெழுந்தவரேயாவர். ஆயின், அதன் வெளிநலங்களைப்போலவே உள்ளுறைநலங்களையுங் குறைவின்றிப் போற்றுதல் அவர்தம் கடனும். பத்திரவுள்ளுறைகள் பெரும்பான்மையும் நன்கமைந்துள்ளன. பத்திரத்தொடக்கத்தில் ஆசாரியனையும், அரசனையும் வாழ்த்திப் புகுந்திருத்தல் புகழத்தக்கதேயாகும். இதனை அன்போடும் எமக்கனுப்பிய பத்திராதிபரவர்கட்கு நன்றிகூறுகின்றேம். 100-பக்கமுடைய இப்பத்திரிகையின் வருஷசந்தா ரூ 5-தான். இது பெறவிரும்புவோர் "மானேஜர், ஸ்ரீவாணிவிலாஸினீ, ஸ்ரீரங்கம்" என்றெழுதிப் பெறுதல்வேண்டும்.

நன்னூல் இலகுபோதம் ;—இப்பெயர்வாய்ந்த புத்தகமொன்று வெளியேறியிருத்தல், இலக்கணப்பயிற்சி விரும்பும் மாணவர்க்கு இன்பந்தரத்தக்கதாம். ஓராண்டிற்கு முன்பு, நன்னூல் எழுத்ததிகாரத்துக்கு மட்டும், இலகுபோதமொன்று யாழ்ப்பாணம் ஸ்ரீமத்-முத்துதம்பிப் பிள்ளையவர்களால் இயற்றி வெளியிடப்பெற்றது.

அப்பிள்ளையவர்களே, அந்நூற் சொல்லதிகாரத்துக்கும் அவ்வாறொன்றெழுதித் தனிப்புத்தகமாக இப்போது வெளியிட்டிருக்கிறார்கள். இப்புத்தகம், தான்பெற்ற பெயர்க்கேற்ப, இலக்கணத்துறைச் செல்வோர் நல்லவறிவை எளிதிற்பெறுமாறு அமைக்கப்பட்டுள்ளது. இது, மாணாக்கர்வருத்தமின்றிக் கற்குமாறு வினாவும் வினாவுக்கேற்ற விடையும் நிறுவி, அவற்றோடு ஏற்றவாறு சூத்திரங்களும் உரையும் உதாரணங்களுந்தந்து மயக்கந்தருமிடங்களை நன்குவிளக்கி எழுதப்பட்டுள்ளது. விலாசம்:—"ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள், நாவலர்கோட்டம், யாழ்ப்பாணம்."

பத்திராசிரியர்.

எனவே, யானும் அதுவே கருதினேன் என்றார். ஆங்கு என்றது அகத்தியத்தினை. இதன் பயன் முற்கூறிய பாக்களாற் பெயர் பெறாத பரிபாடல் முதலிய செய்யுள்கட்குமோசை இவையொழிய வேறின்றென்பதூஉம், மருட்பாப்போல வஞ்சியுங்கலியுந் தம்மிற்கலவா வென்பதூஉம், பிற்காலத்து நூல் செய்த ஆசிரியர் பாவுறுப்பினை மயக்கம்பட வேண்டுவாருளராயின் அவரை விலக்குவதூஉம், முதனூலாசிரியர் இசைக்குப் பண்ணுந்திறமும் பகுத்தாற்போல, இயற்குப் பாவும்இனமும் பகுத்தார்கொல் என்னும் ஐயம் நீக்குவதூஉம் ஆம். இவர் கருத்தாற் சான்றோரும் இனங் கொள்ளாராயினர். (அசு)

அஎ. தூக்கியல் வகையே யாங்கென மொழிப.

இது தூக்கிற்கு இலக்கணங் கூறுகின்றது.

இ-ள். தூக்கென்று சொல்லப்பட்ட உறுப்பு நடக்கும் இடவகை சொல்லப்பட்ட நான்கிடமும். எ-று.

தூக்கென்பது சொல்லின் முடியும் இலக்கணமாம். அது நிறுத்தலும் அறுத்தலும் பாடலும் என்றின்னோரன்னவற்றுமேனிற்கும். ஈண்டும் அவ்வாறே பாவென்னும் பொருளை இத்துணையடி யென நிறுத்துக் கூறுபாடறிதலும் அவ்வத்தூக்குள்வழிச்சொல்லுவார்: அஃது உறுப்பு விகாரப்பட்டு ஓடுவதுபோன்று அசையுமாறு காண்க. "பாவென மொழியினுந் தூக்கினது பெயரே" என்றார் பிறராதலிற் றூக்கினைப் பா என்றலுமாம். இருசீர்முதல் ஐஞ்சீர்காறும் பரந்துபட்ட அகவலோசையைப் 'பெரியகட்பெறினே" எனச் சொற்சீரடியாகவும் 'யாம்பா டத்தான் மகிழ்ந்துண்ணுமன்னே' என அளவடியாகவும் 'நரந்த நாறுந் தன்கையால்' எனச் சிந்தடியாகவும் 'சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே' என நெடிலடியாகவும் தூக்குத்துணித்தவாறு காண்க. இங்ஙனம் தூக்கின்றென 'நரந்த நாறுந் தன்கையாற் புலவு, நாறு மென்றலை தைவரு மன்னே' என்றதனை இரண்டு நாற்சீரடியாக அலகிட அகவலோசை பிறவாமையுணர்க. 'உள்ளார் கொல்லோ தோழி' என்பதற்கு முள்ளுடை என்பது அடியெதுகையாய்ச் சிந்தடியும் நெடிலடியுமாகக் கொள்ளநின்றதனையுந் தூக்குத்துணிந் திரண்டனையும் அளவடியாக்கியவாறுங் காண்க. தூக்கின்றென மயக்கடிவஞ்சியிடைதெரியாமையு முணர்க. (அஎ)

அஅ. மோனை யெதுகை முரணே யியைபென
நானெறி மரபின தொடைவகை யென்ப.

இது *நிறுத்தமுறையானே தொடை கூறுகின்றார்; அவற்றது பெய ரும் முறையுமுணர்த்திற் - று.

இ-ள். தொடைமோனையும் எதுகையும் முரணும் இயைபும் என நான்கு வழியாகிய முறைமையினையுடைய. எ-று.

நெறிமரபின எனவே அளபெடை வழுவமைத்துக்கொண்ட எழுத் தாகலின் அவ்வாறு சிறந்ததன்றாம். தொடைவகை யென்றதனான் அசை யந்தாதியுஞ் சீரந்தாதியுங் கொள்க. இவைதாம் அறுநூற்றிருபத்தைந்தடிக் கண்ணும் வந்தவடியேவரவும் பிறவடிவரவும் தொடுப்பனவும், ஓரடிக்கண் ணே தொடுப்பனவும், கட்டளையடியொடு தொடுப்பனவும், சீர்வகையடி தம்மொடுதாமுந் தம்மொடுபிறவும் வந்து தொடுப்பனவும் எனப்பலவா யிற்று. (அஅ)

அகூ. அளபெடை தலைப்பெய வைந்து மாகும்.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

இ-ள். அந்நான்குடனே உயிரளபெடையைக் கூட்டத் தொடை யைந் துமாம். எ-று.

உம்மை எச்சவும்மையாகலின் ஒற்றளபெடை கூட்ட ஆறுமாம் எ-று. உயிரின்பின்னது ஒற்றாகலின் உயிரளபெடையை யெடுத்தோதி ஒற்றள பெடையை உம்மையாற் கொண்டார். கலிக்கு ஒற்றளபெடை துள்ளலோ சையை நிகழ்த்தாதவாறு மேற்காண்க. (அகூ)

கூ0. பொழிப்பு மொரூஉவுஞ் செந்தொடை மரபு
மமைத்தனர் தெரியி னவையுமா ருளவே.

இதுவுமது.

இ-ள். பொழிப்......... தனர் எ-து பொழிப்புத்தொடையும் ஒரூஉத் தொடையுஞ் செந்தொடையிலக்கணமும் ஓரடிக்கண்ணே வருமென்றமை த்தனர் ஆசிரியர். தெரியி.........ளவே எ-து ஆராயின் அவையுந்தொடை யாதற்குள. எ-று.

தெரியின் என்றதனாற் செந்தொடை ஓரடிக்கண் வரினும் ஈரடியா னன்றி வாரா எனக்கொள்க. இக்கருத்தான் ஈண்டும் போதந்துவைத்தார்.

---

* 'தூக்கே தொடைவகை யெனாஅ' என்பது.

அவையும் என்ற உம்மையை எச்சப்படுத்திப் பிறவும் ஓரடிக்கண்ணே வருவனவும் உளவெனக்கொள்க. அவை முற்றெதுகையும், கிளைமுற்றெதுகையும், இரண்டந்தாதியும், இருவகை நிரனிறுத்தமைத்தவும் விட்டிசையுமாம். (கo)

கூக. * நிரனிறுத் தமைத்தலு மிரட்டை யாப்பு
மொழிந்தவற் றியலான் முற்று மென்ப. †

இது நிரனிறைத்தொடையும் இரட்டைத்தொடையுமென இரண்டு தொடை கூறி அவை முற்கூறிய தொடைப்பாற்பட்டு அடங்கக் கூறுகின்றது.

இ-ள். நிரனிறைப் பொருள்வகையால் தொடுக்குந்தொடையும் வந்த சீரோ நாற்காற் றொடுக்குந் தொடையும் முன்னைத் தொடைப்பாற்பட்டு அடங்கும். எ-று.

யாத்தவெனினுந் தொடுத்தவெனினும் ஒன்று. "அடல்வே லமர்நோக்கி நின்முகங் கண்டே, யுடலு மிரிந்தோடு மூழ்மலரும் பார்க்குங், கடலுங் கனையிருளு மாம்பலும் பாம்புந், தடமதிய மாமென்று தாம்." என்றவழி உடலுங் கடலுமென நிரனிறைத்தொடைமேற் கூறுமாற்றான் எதுகைத்தொடையாய் அடங்கும். "பரவை மாக்கடற் றொகுதிரைப் பரவும்-பண்டைச் செய்தி யின்றிவள் வரவும்" என இவ்வாறு நிரனிறுத்தலும் ஒன்று. அஃது இயைபின்பாற்படுமென்க. ஒழிந்தனவும் அன்ன.

இரட்டைத்தொடை யென்பது ஒருசொல்லே நான்கு சீருமாகி வருமென்பது. அது "ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்" என வரும். இது குறையீற்றிரட்டை யியைபுத்தொடையாய் அடங்கும். "பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ - நாவீற்றிருந்த புலவீர்காள் பாடுகோ"

* "நிரனிறுத்தமைத்துக் கோடலும் இரட்டைத்தொடையும் ஏற்பவும் பெறுமென்றவாறு. நிரனிறைத்தொடையாவது பொருளைச்சேரநிறுத்திப் பயனையுஞ்சேரநிறுத்தல். இரட்டைத்தொடையாவது ஓரடிமுழுதும் ஒருசொல்லேவருதல். இத்துணையுங் கூறப்பட்டது அடிதொறும் வருவன ஐந்து தொகை யெனவும் அடிக்கண்வருவன ஐந்துதொடை யெனவும் அவ்வைந்தும் மூன்றாகி அடங்குமெனவுங் கூறியவாறாம்" என்பது உரையாசிரியருரை.

† இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியருரை பிரதிகளிற் காணப்படவில்லை. பேராசிரியருரையே ஈண்டுப் பதிப்பிக்கப்பட்டது.

என்பது நிரையீற்றிரட்டை. இதுவும் இயைபாய் அடங்கிற்று. செந்தொடையாய் அடங்குவன உளவேற் கண்டுகொள்க. மற்று, இவை இவ்வாறு அடங்குவனவற்றை விதந்தோதுவதென்னையெனின், இவையுந் தொடைப் பாடுகண்டு ஐயுற்றானை ஐயமறுத்தானென்பது. எனவே, ஒழிந்தபொருள் கோள் தாமேநின்று தொடைப்பாடுகாட்டி ஐயஞ்செய்யாமையின் அவை கூறானாயினானென்பது. நிரனிறையாயின் இனைத்தெனநிறுத்தபொருட்கேற்ப எதிர்பொருளும் எண்ணி நிறுத்துச் செய்யப்படுதலின் அது வேறுதொடையாங்கொலென்று ஐயஞ்செல்லுமென்பது. மொழிந்தவற்றியலாவென்னவே, தனக்கு வேறியல்பில்லாத செந்தொடை நீக்கப்பட்டது. பொழிப்பும் ஒரூஉவும்போல ஓரடியுள் நின்றுந் தொடைமைசெய்யினும் அவை முற்றாய் அடங்கும். ஈரடிக்கூட்டத்துத் தத்தம் வகையாற் தொடைமை செய்யாவென்பது. (கூக)

கூ௨. அடிதொறுந் தலையெழுந் தொப்பது மோனை*

இது மோனையிலக்கணங் கூறுகின்றது.

இ-ள். அடிதோறும் முதற்கண் ஓரெழுத்துவரத் தொடுப்பது மோனைத்தொடையாம். எ-று.

முன்னர் "அடியுள் ளனவே தளையொடு தொடையே" (செய்-௩௩) என்பதனான் ஓரடிக்கண்ணே தளையுந்தொடையும் வருமென்பது பெறுதலானும், ஈண்டு அடிதொறும் எனப் பன்மைகூறுதலானும், ஈரடிக்கூட்டத்துந் தளையுந்தொடையும் வருமென்பது பெறுதலானும் ஓரடிக்கண்ணும் ஈரடிக்கண்ணும் தளையுந்தொடையுங் கோடல் வேண்டுமென்றுணர்க. 'தலையெழுத்தொப்பது' என்றற்கு, அடிகளின் முதலெழுத்தும் சீர்களின் முதலெழுத்தும் என்பது பொருளாம். அடிதொறுமென்பது ஈரடியையும் ஓரடியையும் உணர்த்தலின், அடிமோனையும் இணைமோனையும் பொழிப்புமோனை

* "அடிதோறும் தலையெழுத்தொன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடையாம். எ-று. அஃதேல், "அடியுள் ளனவே தளையொடு தொடையே" (செய்-௩௩.) எனவோதி, ஈண்டு மற்றையடியினும் வருதல் பொருந்தாதெனின், ஆண்டு மற்றையடியுள் வாராதென்றாரல்லர்: அடியல்லாத உரை முதலானவற்றுள் தளையொடு தொடையில்லையென்பார் "அடியுள் ளனவே தளையொடு தொடை" என்றாரென்க. உ-ம். 'மாவும் புள்ளும் வதிவயிற் படர, மாநீர் விரிந்த பூவுங் கூம்ப, மாலை தொடுத்த கோதையுங் கமழ, மாலை வந்த வாடையும், மாயோய் நின்வயிற் புறத்திறுத் தற்றே' எனவரும்." என்பது உரையாசிரியநரை.

ஸ்ரீ:

பூகோளம் படிப்பதற்கேற்ற

இயற்கைப்பொருட்பாடம்.

பூவென்பது பூமி; கோளமென்பது உருளை; ஆகையால் பூகோள சாத்திரமாவது உருண்டைவடிவமான இப்பூமியைப்பற்றிய சாத்திரமாம். பூமிக்குரிய எல்லாப்பொருள்களையும் கற்றுப், பூமியின் தன்மை இன்னதென்றும் அத்தன்மைக்கேற்றபடி அவ்வப்பொருள்கள் அமைந்திருக்கின்றனவென்றும் அறிவதுதான் பூகோளசாத்திரத்தின் முக்கிய கருத்து. ஆகையால் பூகோளம், அதன்கோளார்த்தங்கள் (அதாவது பூமியின்கிழக்குப்பாதியும் மேற்குப்பாதியும்), அவைகளின்பிரிவுகளாகிய கண்டங்கள், அவற்றுளடங்கிய தேசங்கள், பட்டணங்கள், அவ்வவ்விடத்திற்குரிய காலவிசேஷவர்த்தமானங்கள், ஏற்றுமதி இறக்குமதிகள் இவற்றைக் கற்குமுன் பூமியின் அமைப்பைப் பிழையின்றி அறியவேண்டுவது அவசியமாகையால் இயற்கையில் உண்டான இப்பூமிக்குரிய முக்கியப்பொருள்களைக் கூடியமட்டும் தனித்தனியாகப் பரிசோதித்துப் பார்த்துவரவேண்டியிருக்கிறது. அதுநிமித்தம் இனிச்சொல்லிவரும் இயற்கைப்பொருட்பாடங்களை நன்றாகக்கவனித்துத்தெளியவேண்டும்.

பொருள்களில் இயற்கைப்பொருளென்றும் செயற்கைப்பொருளென்றும் இரண்டுவிதமுண்டு. இயற்கைப்பொருளாவது மனிதருடைய புத்தி சம்பந்தம் சிறிதுமின்றி சுபாவத்தில் தானேஉண்டாகக்கூடிய வஸ்து. உதாரணம்;—மரம், காற்று, மலை, மழை, பனி முதலியன. செயற்கைப்பொருளாவது மனிதர் புத்தியினாலும் உபாயத்தினாலும் வேண்டியவாறு உண்டாக்கிக்கொள்ளும் வஸ்து. உதாரணம்:—வண்டி, பெட்டி, கட்டிடம் முதலியன. மேற்சொல்லிய இயற்கைப்பொருள்களில் பூகோளத்திற்குரிய முக்கிய இயற்கைப்பொருள்கள் மாத்திரம் இனி எடுத்துச்சொல்லப்படும்.


முதற்பாடம்.

பூமியும், பூமியைச்சுற்றி வெளியேயுள்ள முக்கிய பிரிவுகளும்.

சாதாரணமாக இப்பூமியின் மேல் கட்டிடங்களைக்கட்டும்போது, அவை உறுதியாய் நிற்கும்பொருட்டு, பூமியின்கீழ் உத்தேசம் மூன்றரை அல்லது நான்கு அடி ஆழத்திலிருந்து சுவர்களை எழுப்பக் கடைக்கால் வெட்டுவதைப்பார்த்து வருகிறோம். மேலும் கிணறு, வாய்க்கால், குளம், இரு

ப்புக்குழல்களின் பொருட்டு நீண்ட பள்ளங்கள்-ஆகிய இவற்றையும் வெட்டுவதைக்கண்டிருக்கிறோம். இக்காலங்களில், பள்ளங்களுக்கு வெளியேயுள்ள பூமியின் வெப்பத்தைவிட, பூமியின் அடிவாரங்களிலுள்ள வெப்பம் அதிகப்பட்டிருப்பதைச் சுலபமாக அறியலாம். ஆகையால் பூமியைத் தோண்டத் தோண்ட வெளிப்புறத்தினும் உட்புறம் வெப்பத்தால் அதிகப்படுகிறதென்பதைத் தொழிலாளிகள் கண்டிருக்கின்றனர். மனிதர்களுக்குச் சுரம்வந்தால் வைத்தியசாஸ்திரங்களில் தேகவெப்பத்தைப் பரிசோதிக்கும் வண்ணம் தேர்ந்த வைத்தியர்கள், கைக்கும் உடம்புக்கும் நடுவிலுள்ள பள்ளத்தில் ஓர் கண்ணாடிக்கோலை உத்தேசம் இரண்டு அல்லது மூன்று நிமிடம் வைத்துப் பார்ப்பது எல்லோருக்குந் தெரியும். அந்தக் கண்ணாடிக்கோலை பூமியைத்தோண்டிய பள்ளங்களிற் சிலநேரமிருக்கப் பார்த்தால், வெளிப்புறத்தினும் உட்புறம் அதிக வெப்பமாயிருப்பதுமன்றிப் பூமியைத் தோண்டத் தோண்ட வெப்பம் அதிகப்பட்டுவருவதும் தெளிவாய் அறியக்கூடியது. ஆகையால் பூமிக்குள் மிக்க தூரத்தில், கல்முதலிய கடினவஸ்துக்களையும் கரைக்கக்கூடிய வெப்பம் உண்டென்பதாக நாம் எளிதாக ஊகிக்கலாம்.

இப்பூமியானது, ஆதியில் முழுதும் நமது வீடுகளிற் சுட்டெடுக்கும் அப்பம்போன்று வெகு வெப்பமுடையதென்றும், நேரஞ்செல்லச் செல்ல அவ்வப்பத்தின் வெளிச்சூடுமட்டுப்பட்டு முழுதும்குளிர்ச்சியடைவதுபோல, இப்பூமியும் வெளிப்புறமெல்லாம் இப்போது குளிர்ச்சியடைந்து நாளடைவில் வெப்பத்தை முழுதும் இழந்து குளிர்ச்சியடையலாமென்றும் அனுமானிக்கத்தக்கதாயிருக்கின்றன. ஆகையாற்றான் இப்பூமியின் வெளிப்புறத்தை நமது வீட்டு அப்பம், ரொட்டி இவைகளின் வெளியேயுள்ள கறகறத்த பாகம்போலெண்ணி அதற்கு இங்கிலீஷில் க்ரஸ்டு (Crust of the Earth என்று கூறுவர். பூமியின் உட்புறத்து நிலைமை இவ்வாறிருக்க இன்னும் வருமாறு காண்போம்.



பூமியின் வெளியேயுள்ள முக்கிய பாகங்களை, மேலேயுள்ள சித்திரத்

திற் காட்டியபடி அறிந்துகொள்ளலாம். அச்சித்திரத்தில் 1-வதுக் குறிப்புப் பெற்ற பாகத்தைப் பூமியின் உட்புறமாகக்கொண்டால், 2-வது எண்ணைக் கொண்டபாகம் பூமியின் வெளிப்புறமாம். ஆனால், இப்பூமியின் வெளியே யுள்ள மலையடிவாரங்களும், மலையுச்சிகளும், வாய்க்கால், குளம், ஏரி, நதி, சமுத்திரம் ஆகிய இவைகளின் அடிவாரங்களும் ஒன்றுசேர்ந்து, மண்பாகம் அல்லது மணற்பாகம், அல்லது நிலப்பாகம் என்று கூறத்தக்கவையாதலால், 2-வது குறிப்புப்பெற்ற பாகத்தை முழுதும் நிலப்பாகமென்று கூறுவோம்.

பிறகு, மேற்கூறப்பட்ட வாய்க்கால், குளம், ஏரி, நதி, கடல் இவைகளின் நீர்ப்பாகங்களை ஒன்றுசேர்த்து அவை ஆங்காங்குத் தனித்தனியே பரவியிருந்தபோதிலும், முதற்கூறப்பட்ட மணற்பாகத்துக்கு வெளியே யுள்ள நீர்ப்பாகமாகக் கருதிச் சித்திரத்தில் 3-வது எண்ணைக்கொண்ட பகுதியை முழுதும் நீர்ப்பாகமென்று கூறுவோம். ஆனால் இதிலடங்கிய இடங்களெல்லாம் உண்மையில் நீரல்ல. எவ்விதமாய் ஓர் சல்லடையிலுள்ள மூங்கிற்பாகந்தவிர ஏனைய கண்களுள்ள பாகத்தை ஒன்றுசேர்த்துத் தனியாகக்கருதலாமோ, அவ்விதமே, நீர்ப்பாகத்தை வெற்றிடத்திற்கொப்பிட்டு நமது அறிவுக்குப்பொருந்தும்படி அறியக்கூடும்.

மேலும் நிலம் நீர் இவைகளின்மேலுள்ள இடங்களில் எங்கும் காற்றுப் பரவியிருப்பதால், சித்திரத்தில் அமைந்த 4-வது பாகத்திற்குக் காற்றுப் பாகமென்று பெயர் கொடுத்துக்கருதலாம். இவ்விதம் காற்றானது சமுத்திரமட்டத்திற்குமேல் 45-மைல் உயரம்வரை இப்பூமியைச்சுற்றி மூடியிருக்கிறது. அடிப்பாகத்திலிருந்து மேற்பாகத்திற்குப் போகப்போகக் காற்றானது வெகுமெலிவு அடைகின்றது. ஏழுமைல் உயரத்திலுள்ள காற்றின் மெலிவினால், மனிதன் அவ்விடத்தில் சுவாசம் விடக்கூடியதாயில்லை. ஆகையால் மனிதர் ஏறிச்செல்லும் புகைக்கூடுகள் உயரச்சென்றால் ஏழுமைலுக்குட்பட்டுத்தான் இருக்கமுடியும்.

இவ்விதம் பூமியைச்சுற்றியுள்ள முக்கியஇயற்கைப்பொருள்கள்யாவை?

1. நிலம்.
2. நீர்.
3. காற்று

இம்மூன்றையும் நீக்க, வெளியேயுள்ள இடமானது ஆகாயம்; அதாவது வெற்றிடமாம். இவ்வாகாயம் நமது உணர்ச்சிக்குப் புலப்படக்கூடிய இயற்கைப்பொருளன்று.

இரண்டாம் பாடம்.

பொருட்டன்மை. (States of Matter)

பூமியைக் கவர்ந்திருக்கும் நிலம், நீர், காற்று ஆகிய இயற்கைப்பொருள்களில், நிலமும் நிலத்தைச்சேர்ந்த கல், மண், உலோகங்கள் (பொன், வெள்ளி, இரும்பு முதலியன), மரம், காய் முதலியனவெல்லாம் உறுதியைக்கொண்ட கனபதார்த்தங்களாம். அவை வைத்த இடத்தில் தங்குவனவும், தாமாகவே இயற்கையில் நீளவும் அகலவும் கூடாதனவுமாம். இவ்வகைப்பொருள்களுக்குத் தெளிவான உருவமும், அளவும் அமைந்துள்ளன. ஓர் மரத்துண்டை எடுத்துப்பார்க்குங்கால், அதற்கு உருவமானது எந்நிலையில் வைத்தபோதிலும் ஒரே தன்மைத்தாயும் நீளம், அகலம், கனம் அல்லது ஆழம் ஆகிய அளவுகள் மாறாதனவாயும் புலப்படுகின்றது.

ஆனால் நீர், பால், எண்ணெய், வாதரஸம்போன்ற பொருள்கள், வைத்த இடத்திற் றங்காமல் ஓடத்தக்கனவாகவும், எவ்வெவ்விடத்தில் அவைகளை வைக்கின்றோமோ அவ்வவ்விடத்தின் தக்கஉருவத்தை மேற்கொண்டு புலப்படும் தன்மையை உடையனவாகவுங் காண்கின்றோம். உதாரணம் :— எண்ணெய்யை ஓர்கண்ணாடிப்புட்டியிற் கொட்டினால், அதனுள் தங்கி,நீண்ட உருளைவடிவம்போல் அவ்வெண்ணெய் காணப்படுகிறது. காலில் அணியப்பட்ட சிமைப்பாதரக்ஷை அதாவது பூட்ஸ் (Boots) வடிவம்போன்ற வெண்ணிறக்கண்ணாடிப் புட்டி ஒன்றில் யாதாயினும் ஜலபதார்த்தமொன்று தங்கினால், அஃது அந்த புட்டிவடிவத்தை மேற்கொண்டு புலப்படுகிறது. ஆகையால் ஜலபதார்த்தங்களுக்கு சுயஉருவமில்லையென்று தெளிவாய்விளங்குகின்றது. ஆனால் அவ்வகைப்பதார்த்தங்களுக்கு அளவுண்டு.

மேலும் வாயுபதார்த்தங்களோ உருவமும் அளவுமற்றன. அவை பரவுந்தன்மையுடையன. ஓர் சிறுபுட்டியிற் பரவியுள்ள வாயுபதார்த்தமொன்று பெரும்புட்டியிலும் அத்தன்மையாகவே பரவுமியல்புடையது.

ஆதலால் அடியிற் குறித்திருக்குமாறு பொருள்களின் இயல்பைக் கண்டறிகிறோம்.

(1) கனபதார்த்தம்.—சுயஉருவமும் அளவும்பெற்றது.

(2) ஜலபதார்த்தம். சுயஉருவமின்றி அளவுமாத்திரம் பெற்றது.

(3) வாயுபதார்த்தம். உருவமும் அளவுமற்றது.

பொருட்டன்மை வேறுபடுதற்குக் காரணம்.

சாதாரணமாக வஸ்துக்கள் அவைகளின் தூள்களைக்கொண்டு பருத்தவை. எவ்விதமெனில், ஓர் சுண்ணாம்புக்கட்டியை உடைத்தால் அது தூண்

சௌக்கியமாக விருக்க விரும்புகின்றானோ எவனொருவன் தனக்கு வியாதிவேண்டாம் என்று எண்ணியிருக்கின்றானோ அவன் அவசியம் பிராம்ஹமுகூர்த்தத்தில் கண்விழித்துக் கொள்ளவேண்டும் என்றும், எந்த வீட்டில் விடியற்காலையில் எழாமல் ஜனங்கள் தூங்குகின்றார்களோ அவ்வீடு மயானத்துக்கு ஒப்பானதென்றும், எவனொருவன் விடியற்காலத்தில் தூங்குகின்றானோ அவன் அசுத்தனும் அயோக்கியனு மாகின்றான் என்றும், விடியற்காலம் தூங்குவது எல்லாவிதபுண்ணியங்களையும் குறைத்து விடுகின்றபடியால் அதை நாம் ஒழிக்கவேண்டும் என்றும் எழுதியிருக்கின்றார்.* அன்றியும் விடியற்காலத்தில் தூங்குகின்றவர்களை எழுந்திருக்கச்செய்யச்சிலவேலைக்காரர்களை நியமித்து அவர்களுக்கு மானியம் முதலியவைகளை மகமதிய ராஜாக்கள் விட்டுமிருக்கின்றார்கள். "மூஅஸ்ஸின்" என்ற இவ்வேலைக்காரர்கள் தினந்தோறும் தெருக்களில்பிராம்ஹமுகூர்த்தத்தில் ஜனங்களை எழுப்புவதைத்துருஷ்கதேசங்களில் நாம் காணலாம். நம்முடையதேசத்தில் சிலகிராமங்களில் சங்கு ஊதும் வழக்கமிப்போதும் அநேகர்களுக்குத் தெரியவரும். இதன் முக்கிய தாற்பரியம் ஜனங்களுக்குப் பொழுதுவிடியும் காலம் வந்துவிட்டது என்னும் எச்சரிக்கை செய்தலாகும். இவ்வளவு தூரம் இங்கு நாம் சொன்னதானது எல்லாரும் எல்லாமதங்களுடைய சித்தாந்தப்படியும் அதிகாலையிற் பிராஹ்மே முகூர்த்தத்தில் எழுந்திருப்பதாற் பலவித நன்மைகளுண்டு என்பதாம். இதுதான் சுகாதாரத்தின் முக்கிய முறை.

---

* ப்ராஹ்மே முஹூர்த்தே உத்தாய ஸர்வம் ஹ்ருதி சிந்தயேத் |
ப்ராஹ்மே முஹூர்த்தே தேவாநாம் ருஷீணாஞ்ச ஸமாகம: ||
ஜாமஸ்து ஸ்யுஷ்த்வம் வித்யாஸ்ஸு நஸம்ஹிதத் |
யஜ்ஞேச த்யாஜ்யதாம் ஸம்ப்ராப்யேஷ்வா ராத்ரைந தயா ||
ஸுப்தஸ்ய நஜாக்ரதோ ப்ராஹ்மணே ப்ராதஸ்ம் |
ப்ராஹ்மே முஹூர்த்தே ஸேவேதாம் ஸ்மயநா யதாகாம்வதீ ||
ஸ்நாநதர்வ்யஞ்சதேய ஸூவித்யுஹீஸ்வரீயஜ்ஞேச |
ப்ருத்வீ ஷகாமெரிஷ்யாவக்கார்மேஸ்வர்ஷாதபம் ||
ஸர்வாவிஷா ஸவிஜ்ஞாநீயாத்ஸுநஸம் ஸர்வஸ்து ஸர்வ |
ப்ராஹ்மே முஹூர்த்தே யா நித்ரா ஸா புண்யக்ஷயகாரிணீ ||
தாம் கரோதி த்விஜோ மோஹாத் பாதக்ருச்ச்ரேண ஸுத்யதி ||

படுக்கையைவிட்டு எழுந்ததும் சுகசந்தரிசனமுறைப்படி கைகால்களைக்கழுவிக் கடவுளை தோத்திரங்களால் துதிசெய்யவேண்டும்; அதன் பிறகு வீட்டுக்கு வெளியேசென்று மலமூத்திரங்களை விசர்ஜனம்பண்ணவேண்டும் என்பது பொதுவிதி. நாட்டுப்புறத்தில் இது சரியாகவிருக்கும். பட்டணங்களில் அவரவர்கள் வீடுகளில் ஏற்பட்டிருக்கிற கக்கூசுகளிற்றான் விசர்ஜிக்க வேண்டும். வெளியூர்களில் சில ஜனங்கள் நதியோரங்களை இவ்விஷயமாய் வெத அசுத்தம் பண்ணுகிறார்கள். இது நமது தேசாசாரத்தையாவது மதாசாரத்தையாவது சௌக்யத்தையாவது ஒத்தவழக்கமன்று. இதை நமதுதேசத்தார்கள் எவ்வளவு சடுதியில் விடுவார்களோ அவ்வளவும் நலம். இன்னின்னவிடங்களில் மலமூத்திரங்களை விடக்கூடாதென்றும் இன்ன விடங்களில் விடலாம் என்றும் மனு முதலிய ஸ்மிருதிகர்த்தர்கள் சொல்லியிருக்கின்றார்கள். நதீதீரம் தோட்டம் தேவாலயம் இவைகளையெல்லாம் தள்ளியிருக்கின்றார்கள். நமது கிராமங்களில் நல்ல ஜலம் ஓடும் நதிகளில் ஜனங்கள் பெரும்பாலும் சௌசம் செய்துகொள்ளுகின்றார்கள். பலஸ்மிருதிகளிலும் இவ்வழக்கம் நிந்திக்கப்பட்டிருக்கின்றது. வைத்திநாததீக்ஷீயத்தில் சௌசவிதியைப்பற்றிப் பேசும்பொழுது நிர்த்தம் ஓடும் அல்லது நிற்கும் நீர்த்தாசயத்திலிறங்கி சௌசம்செய்துகொள்ளக்கூடாது; ஜலத்தை வெளியிலெடுத்து வந்தே சுத்தம்செய்துகொள்ள வேண்டும் என்று தக்ஷமகரிஷி முதலிய ரிஷிகள் பலர் சொல்லியிருப்பதாக எழுதியிருக்கின்றார்.*

சௌசம் முதலியவை செய்தபிறகு நமதுகைகளையும் கால்களையும் மண்ணால் சுத்திபண்ணிக்கொள்ளவேண்டும் என்றும், மண்ணால் சுத்திசெய்துகொள்ளச் சிலருக்கு மனமில்லாதபட்சத்திலும், மண் நகரங்களிற்கிட்டாதபட்சத்திலும் சோப்பால்சுத்திசெய்துகொள்ளலாமென்றும் சுகசந்தரிசனவிதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வாறு மலமூத்திரவிஸர்ஜனம்செய்துவிட்டுப் பல்துலக்கவேண்டும்.

பல்துலக்கும் விதிகள்:—சிலர் சாம்பலாலும் மணலாலும், மண்ணாலும்; சிலர் பலகுச்சிகளாலும் பொடிகளாலும் கண்டபடி பற்றேய்ப்பார்கள். வைத்திநாததீக்ஷீய கிரந்தத்தில் பலவிதக் குச்சிகளும் அவைகளின் குணங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இக்காலத்திய சுகசந்தர்சன விதிகளைக்கொண்டும் நமக்கிப்பொழுது உண்டாயிருக்கும் சௌக்கியங்களைக்கொண்டும் யோசித்துப்பார்க்கும்பொழுது இவ்வண்ணமாகப் பல் துலக்குவதெதுவும் இக்காலத்தில் நமக்கொவ்வாது. பல்லின் கட்டிடத்தைக் குச்சிகள் அசக்கி பலஹீனப்படுத்தி ரத்தம் பெருகிடும்படி செய்கின்றன.

---

* [illegible]

மணல், மண், செங்கற்பொடி இவைகள் பல்லின் பதார்த்தையே தேய்த்து விடுகின்றன. ஆகையாலிவைகளிலொன்றும் கூடாது. சாதாரணமாக நமக்குக்கிடைக்கும் மரக்கரி (அடுப்புக்கரி) யை யெடுத்து அம்மியில்வைத்துப் பொடியாக்கி அதிற்கொஞ்சம் உப்புக்கலந்து அப்பொடியைக்கொண்டு நிர்பயமாகப் பல்துலக்கலாம். இன்னும் கொஞ்சம் நாகரீகமாகப் பற்பொடி வேண்டுகின்றவர்கள் சீமைச்சாக்கு 5-பலம், படிக்காரம் 1-பலம் கிராம்பு மிளகு இலவங்கப்பட்டை இம்மூன்றும் வகைக்கொரு பலம் ஆக 9-பலம் சரக்குவாங்கி முதல் இரண்டையும் வெயிலில்வைத்து நன்ருகப்பொடித்து மற்றமூன்று வஸ்துக்களையும் தனியே பொடித்து எல்லாவற்றையும் கலந்து ஒன்றுசேர்த்து ஒரு ஸீஸாவிற் போட்டு ஒருதடவைக்கு இரண்டு குன்றியளவு பொடியைப் பல்துலக்கும் வேளையிற் பற்களில்வைத்தவுடன் பல் வெகு சுத்தமாய்ப்போவதுடன் வாய்க்கு வெகு மனோகரமாயும் உடம்புக்கு ஒருவிதக்கெடுதலுண்டாகாமலுமிருக்கும். இப்பொடியின் சௌக்கியத்தை அடைய ஒருவனுக்கு வருஷத்திற்கு இரண்டணச்செலவாகும். செய்துகொள்வதும் சுலபம். இப்பொடியில் படிக்காரமிருக்கின்றபடியால் இது பற்களுக்கு ஒருவித பலத்தைத்தருகின்றது. இப்பொடியை எல்லாரும் உபயோகிப்பதால் பல்லின் அழகு அதிகரிக்கும்.

இவ்வாறு தந்ததாவனம் செய்துகொண்டு ஸ்நாநம்செய்யவேண்டும். ஸ்நாநம் என்பது நமதுதேகத்தின் மேற்பாகமாகிய தோலைப் பரிசுத்தமாகவைத்துக்கொள்ளும் முறையாம். நமது தோலின் அமைப்பைப்பற்றி நாம் கொஞ்சம் விஸ்தாரமாயிங்குச் சொல்லவேண்டும். அப்பொழுதுதான் ஸ்நாநத்தால் நமக்குண்டாகும் நன்மை நன்ருக விளங்கும்.

நமது தேகத்தின்மேற் காணும் தோலை தேகஅமைப்பு சாஸ்திரரீதியாய் நாம் இரண்டுபாகமாகப் பிரிக்கலாம். முதன்முதல் நாம்பார்க்கின்ற வெளித்தோல் பொய்த்தோல்(Epidermis). இத்தோலில் நரம்பு ஒட்டமில்லையாகையால் இதற்கு உணர்ச்சியென்பது கிடையாது. நாம் மண்வெட்டியைப் பிடித்து முதன்முதல் வெட்டும்பொழுது நமக்குத்தெரியாமல் நமதுகை கொப்பளிக்கின்றதை நாம் பார்த்திருப்போம். இது பொய்த்தோலாலுண்டாகும் கொப்பளம். இப்பொய்த்தோலின்கீழ்க் கிரமமானதோல் (Dermis) இருக்கின்றது. இதை நாம் சருமமென்று விவகரித்துப்பேசுவோம். இச்சருமம் வெகுஉறுதியும் பலமுமான உறுப்பு. இதில் நரம்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இரத்தோட்டம் சருமத்திலும் உண்டு.

இச்சருமத்திற்ருன் நமது தேகத்திலிருந்து வேர்வை வெளியிலே கிளம்பும். வேர்வைக்குழல்கள் அதேமாதிரி சிலவிததைலத்தை வெளியிற்க

க்கும். தைலக்குழல்கள், மயிர், நகம், இவைகளுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேர்வைக்குழல்கள் அநேகசிறுகுழல்கள் ஒன்ருகச்சேர்த்துச் சுற்றப்பட்டு சிறுதுவாரங்கள் வழியாய்ப் பொய்த்தோலின்மேல் வாயைத்திறந்துகொண்டிருக்கும். இவ்வாய்களை ஸ்தூலக்கண்களால் நாம் காண்பதரிது. பூதக்கண்ணுடியால் நாம் பார்க்கும்பொழுது நமது தேகத்தின்மேல் ஒவ்வொரு சதுரஅங்குலத்திலும் 400-முதல் 3000-வரையில் இச்சிறுதுவாரங்கள் காணப்படும். இத்துவாரங்கள் நமது உள்ளங்காலிலும் உள்ளங்கையிலும் அதிகம். நமது முதுகிற் கொஞ்சம். இம்மாதிரியிருக்கும் வேர்வைத்துவாரங்கள் நமது தேகத்தில் நாம் காணும் மயிர்களைவிடச்சிறியவைகளாயிருக்கின்றன. இக்குழல்கள் எல்லாவற்றையும் சேர்த்துக்கணக்கிட்டுப்பார்த்துச் சற்றேறக்குறைய $2\frac{1}{2}$-மைல் நீளம் இக்குழல்களிருக்கின்றதாக பிரசித்தவைத்தியர்கள் சொல்லியிருக்கிருர்கள்.

நாம் தூங்கும்பொழுதும் விழித்துக்கொண்டிருக்கும்பொழுதும் வேலைசெய்யும்பொழுதும் வேலைசெய்யாமலிருக்கும் பொழுதும் நம்மையறியாமல் வேர்வை உண்டாகிக்கொண்டே யிருக்கின்றது. கொஞ்சமாக உண்டாகும் வேர்வை நமது தேகத்தின் சருமத்தை எப்பொழுதும் மிருதுவாக வைத்துக்கொண்டேயிருக்கின்றது. கொஞ்சமான வேர்வை உண்டாகும்பொழுது அது நம்மையறியாமலே உஷ்ணத்தால் சுவறி மாறிக்கொண்டேயிருக்கும். ஏதாவது ஒரு வியாயாமத்தால் அல்லது உஷ்ணத்தால் வேர்வை அதிகமாகக்காணும்பொழுதுதான் நாம் அதை ஜலரூபமாகக்காண்கிருேம். ஆகையால் நமது தோலின்மேல் நாம்காணும் வேர்வைக்குழல்களும் தைலக்குழல்களும் நமது தேகத்திலிருந்து ஏதோ ஒருவித அசுத்தத்தை எப்பொழுதும் இடைவிடாது வெளியிலகற்றிக்கொண்டிருப்பதுடன் நமது தோலையும் பதப்படுத்திவைத்துக்கொண்டே யிருக்கின்றன. நமது தேகத்தை எப்பொழுதும்சுத்தம்பண்ணப்பலவழிகள் ஏற்பட்டிருக்கின்றன அவைகளில் நமது தோலின்மேல் ஏற்பட்டிருக்கும் இச்சிறுகுழல்கள் வெகு பிரதானமான வழி. இத்தோலின்மேல் ஏற்பட்டிருக்கும் வழி முற்றிலும் அடைபடுமேயாளுல் உடனே மரணம் சம்பவிக்கும். ஏதாவது ஒருபாகம் தகையப்படுவதாலும் அல்லது வேறு ஏதாவது ஒருவிதக்காரணத்தால் தனது தொழிலைச் சரியாக நடத்தாமற்போவதாலும் பலவிதநோய்களுண்டாகும். ஆகையால் ஆணும் பெண்ணும் இவ்விதநோய்களுக்குத் தங்களையுள்ளாக்காமலிருக்க விரும்புவார்களேயாளுல் அவர்கள் எப்பொழுதும் தங்கள் தோலை நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ளவேண்டும். அது எப்படி என்ருற் பலவித ஸ்நாநத்தாற்ருன்.

சிலர் எப்பொழுதும் வேர்வை வடிந்து கொண்டேயிருக்கும் சரீர அமைப்புள்ளவர்களாகவிருப்பார்கள். இவர்கள் நமக்கருகிலேவந்தால் துர்க்கந்தம் உண்டாகும். அதுவல்லாமல் இவர்கள் தோலின் மேலுண்டாகும் அந்நாற்றம் அடிக்கடி அகற்றப்படாமற்போனுல் அக்காரணத்தால் அவர்களுக்குப்பலவிதசருமரோகங்களும் மற்றரோகங்களுமுண்டாகும். இவைகள் இவ்வாறு சம்பவிக்காமலிருக்க நாம் அடிக்கடி ஸ்நாநம் பண்ணி இவ்வசுத்தங்களை நீக்கிக்கொள்ளவேண்டும். இவ்வாறு நாம் ஸ்நாநம் பண்ணவேண்டியது அவசியம் என்பதைச் சொல்லிவிட்டு இனி ஸ்நாநத்தின் வகைகளையும்அவைகளை நாம் செய்யவேண்டிய காலங்களையும் பற்றிச் சொல்லுவோம்.

நமது தேகசௌக்கியம் இடங்கொடுக்குமாயின் அதிகாலையில் சூரிய உதயத்துக்கு முன்பாகக் குளிர்ந்த ஜலத்தில்ஸ்நாநம் செய்வதேஉத்தமமென்றுசுகஸந்தர்சனசாஸ்திரிகள் ஒப்புக்கொள்ளுகின்றுர்கள். இரவில் நாம் தூங்கும்பொழுது நமது தேகத்திலிருந்து வேர்வை நம்மை யறியாமற் கழிந்துகொண்டே யிருக்கின்றது. அப்படியே கோட்டுவாய்நீர், கண்ணீர் இவைகளும் சிற்சிலசமயங்களில் அகன்றுகொண்டேயிருக்கின்றன. நாம் தூங்கும்பொழுது இவ்வளவுவித அசுத்தங்கள் தேகத்திற் சேர்ந்துகொண்டேயிருக்கின்றபடியால் இவைகளை எல்லாம் ஸ்நானத்தாற் போக்கக் காலை ஸ்நானமே உத்தமம் என்று எல்லாரும் எடுத்திருக்கின்றுர்கள்.

வைத்திநாததீக்ஷிதீயம் என்ற ஸ்மிருதியில் ஸ்நாநவிதியைச்சொல்லுமிடத்தில் சௌனகர், வியாசர், ஜாபாலி, யாக்ஞவல்க்யர், ஸத்தியவிரதர், தக்ஷர், வியாக்கிரபாதர் முதற் பலபெரிய மாமுனிவர்கள் பிராதகால ஸ்நாநத்தைப்புகழ்ந்திருப்பதை நாம்காணலாம். அவர்களும் நாம் தூங்கும்பொழுது பலவித அசுத்தங்கள் பலவித்காரணங்களால் நமது தேகத்திலுண்டாகின்றன வென்றும் அவைகளை நாம் பிராதஸ்நாநத்தாற்றுன் போக்கிக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லியிருக்கின்றுர்கள். * அதிகாலையிற் செய்யப்படும் இந்த ஸ்நாநத்தைப்பற்றி நமது நாட்டுக்கிரந்தங்களில் மிகுதியாக எழுதப் பட்டிருக்கின்றது. அவ்வாறு பிராதஸ்நாநம் பண்ணுவதால் ஒருவனுக்கு அழகு, காந்தி, பலம், ஆயுள், ஆரோக்கியம் முதலியவைகள் உண்டாகின்றன

---

* [illegible] |
[illegible] ||
அத்யந்தமலிந:காயம் நவச்சித்ரஸமந்விதம்
ஸ்ரவத்யேவ திவாராத்ரம் ப்ராத:ஸ்நானம் விசோதனம் |

வென்றும் அவனுக்குத் தூக்கத்தில் கெட்ட கனவுகளுண்டாகிக்கொண்டிருந் தால் அவைகள் பிராதஸ்நாநத்தால் அவனைவிட்டு அகன்றுவிடுகின்றன. வென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. *அதிகாலையில் ஸ்நாநம்செய்கிறவனு க்கு நல்ல புத்தியும் தைரியமும் உண்டாகுமாம். நாம் ஸ்நாநம் செய்வதால் நமது தோலின்மேலிருக்கும் அசுத்தம் நீங்கும். வேர்வைக்குழல்களும் மற்ற க்குழல்களும் அசுத்தங்களால் அடையப்பட்டு எதிர்த்து நிற்காமல் சுத்திசெய் யப்பட்டுத் தத்தம்தொழிலைச் சரிவரச்செய்யும் பாக்கியம்பெறும்; தேகமே ஒருவித உற்சாகத்தையும் ஊக்கத்தையு மடையும். நமது தேகத்தின்மேற் சொறிசிரங்கு முதலிய அழுக்குரோகங்கள் வராமலிருக்கும். குளிர்ந்த நீரில் நாம் ஆற்றிலும் குளத்திலும் கிணற்றிலும் இன்னும் மற்ற இடங்களிலும் ஸ்நாநம்செய்கின்றோம். குளிர்ந்த ஜலத்தில் ஸ்நாநம் செய்வது, தேகத்தை பரிசுத்தப்படுத்துவதுடன் நாம் நமதுதேகசௌக்கியத்துக்கு உட்கொள் ளும் ஓர் மருந்து போலாகும். குளிர்ந்த ஜலத்தில் தலைமூழ்கினதும் நமது தேகத்தின் மேற்பாகங்களிலிருக்கும் இரத்தமெல்லாம் குளிர்ச்சியின் கார ணத்தால் உள்நோக்கி ஓடி இருதயத்தை நாடிச்செல்லும். அப்பொழுது இரத்த ஓட்டம் அதிகரிப்பதால், ஏதாவது ஒரு காரணத்தால் அதிக சலன மில்லாமல் மெதுவாக நின்றுவந்த ரத்தமும் வேகமாய் ஓடிப் பரிசுத்தமடை யும். ஜலத்தில் மூழ்கினபிறகு ஒரு சவுக்கத்தால் தேகத்தை தேய்த்துக்கொ ள்ளும்பொழுது கொஞ்சம்சூடுண்டாகி அக்காரணத்தால் இரத்தமந்தவிடத் துக்கு ஓடிவரும்பொழுது நமக்குண்டாகும் சந்தோஷம் அதிகம். குளிர்ந்த நீரில் ஸ்நாநம்செய்வதால் நமது ரத்தம் பரிசுத்தமாகின்றது. இருதயத்தின் படபடப்பு நன்றாக உறுதிப்பட்டு நமக்கு ஆரோக்கியத்தை விளைவிக்கின் றது. அதிக பலமில்லாதவர்களும் காசம் கபம் முதலிய நோயால் வருந்து கின்றவர்களும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யக்கூடாது. எப்பொ ழுதாவது செய்வதால் அவர்களுடைய இருதயத்தில் ரத்தத்தின் உதைப்பு அதிகமாக உண்டாகி, ரத்தாசயமே விண்டு அவர்களுக்கு மரணம் சம்பவிக் கலாம். ஆகையால் நாமிந்த விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாக விருக்க வேண்டும்.

---

* 𑌗𑍁𑌣𑌾𑌦𑌶𑌸𑍍𑌨𑌾𑌨𑌪𑌰𑌸𑍍𑌯𑌸𑌾𑌧𑍋𑌃
𑌰𑍂𑌪𑌂𑌚𑌤𑍇𑌜𑌶𑍍𑌚𑌬𑌲𑌂𑌚𑌶𑍌𑌚𑌮𑍍 ॥
𑌆𑌯𑍁𑌷𑍍𑌯𑌮𑌾𑌰𑍋𑌗𑍍𑌯𑌮𑌲𑍋𑌲𑍁𑌪𑌤𑍍𑌵𑌂
𑌦𑍁𑌃𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌨𑌾𑌶𑌶𑍍𑌚𑌤𑌪𑌶𑍍𑌚𑌮𑍇𑌧𑌾𑌃 ॥

வெந்நீர் ஸ்நாநம்;—இச்செய்கை நமது தேகத்தைவிட்டு அசுத்தங்களை அகற்றுவதில் குளிர்ந்தஜலஸ்நாநத்தைவிடக் குணமுள்ளதென்றாலும் குளிர்ந்தஜலஸ்நாநத்தைப்போல அவ்வளவு ஆரோக்கியத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கப்பட்டதன்று. எவ்வாறு அசுத்தத்தை அதிகமாக அகற்றுகின்றதென்றால் வெந்நீர் நமது தேகத்தின்மேல் விழுந்ததும் அவ்வுஷ்ணத்தால் அதிக ரத்தம் அவ்விடம் வந்துசேர்ந்து, வேர்வைக்குழலாலும் தைலக்குழலாலும் அதிக அசுத்தத்தை நமது தேகத்தைவிட்டுக் கக்குகின்றது. வெந்நீர் ஸ்நாநம் முடிந்தபிறகு நமதுதேகம் அதிகமாய் வேர்ப்பதை நாம் பார்த்திருக்கின்றோமல்லவா? இவ்வித ஸந்தர்ப்பங்களில் குளிர்காற்று நமது தேகத்தின்மேலே அடித்தால் சீதளம்பற்றிப் பலவிதநோய்களுண்டாகுமாகையால் அவ்வாறு சீதக்காற்று நமது தேகத்தில் சம்பந்திக்காதவண்ணம் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

குழந்தைகளுக்கும் கிழவர்களுக்கும் அதிக உஷ்ணமும் அதிக சீதளமுமில்லாத மத்தியநிலைமையிலிருக்கும்ஜனங்களுக்கும் வெந்நீரில் ஸ்நாநம்செய்விப்பது ஆரோக்கியம். இதை அறியாமல் அதிகவெப்பமான வெந்நீர்விட்டுக் குளிக்கச்செய்தால் குழந்தைகள் மேனி சிவக்கும் என்று தப்பான அபிப்பிராயங்கொண்டு நமதுநாட்டிற் சிலகுழந்தைகளைக் கொதிக்கும் நீரால் அச்சிசு கதறக்கதறக் குளிப்பாட்டுவார்கள். சிலசமயத்தில் அச்சிசு மாய்வதுமுண்டு இது கொடியவழக்கம். அதிக உஷ்ணமில்லாத சுகோஷ்ணமான ஜலத்தில் குழந்தைகளை ஸ்நானம்செய்து வைக்கும்பொழுது அவ்வெந்நீர் குழந்தைகளுடைய நரம்புகளுக்கு ஓர்வித சாந்தத்தைக் கொடுத்துத் தூக்கத்தையும் உண்டாக்கும்.

எவ்வித ஸ்நாநம் செய்யும்பொழுதும் நன்றாக தேகத்தைச் சவுக்கத்தாலும் பயற்றம்பொடி, சீயக்காய், சோப்பு முதலியவைகளாலும் நாம்நன்றாகத்தேய்த்துக் குளித்து அழுக்கை நமதுதேகத்தைவிட்டு அகற்ற வழிபார்க்கவேண்டும். நமது தேகத்தின்மேலிருக்கும் வேர்வைத் துவாரங்கள் 3½-கோடி. இவைகளின் நீளம் 2½-மைல் என்று முன்னமே சொன்னோமல்லவா. 2½-மைல் சாக்கடை அடைபட்டுஅசுத்தம் அகற்றப்படாமலிருந்தால் எவ்வளவு சுகநாசம் சம்பவிக்குமோ அவ்வளவு சௌக்யக்குறைவு, நன்றாகக்குளித்து நமது தேகத்தின் அழுக்கை நீக்கிக்கொள்ளாவிடில் நமக்குச் சம்பவிக்கும். காலில் நன்றாக அழுக்குத்தேய்க்கத்தவறினால் பித்தவெடி, உடம்பில் சாக்கிரதைதப்பினால் அழுக்கு தேமல் சிரங்கு சொறி கடி கறிப்பான் முதலிய பலநோய்களுண்டாகின்றன. தலையில் பேன்புழுப்பதும் நன்றாய் ஸ்நாநம்செய்து நமது தலைமயிரைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளாத காரணத்தினாற்றான்.

போசனம்பண்ணின உடனே ஒருபொழுதும் நாம் ஸ்நாநம் செய்யக்கூடாது. ஏனெனில் நமது உணவைச் சரியாகச் செரிப்பிக்கும் இரத்தமெல்லாம் ஸ்நாநத்தால் மாறுபாடடையுமாகையால் உணவுக்கு வேண்டிய தொழிலை அப்பொழுது செய்யமாட்டாது. அக்காரணத்தால் நமக்கு விளைவது அசௌக்கியமே. நாம் அதிகமாகக் களைப்படைந்திருக்கும்பொழுதும் காய்ச்சல் முதலிய நோயால் வருந்தும்பொழுதும் நாம் ஸ்நானம் செய்யக்கூடாது. வீட்டை விட்டு விலகியிருக்கும் பெண்டுகள் அவ்வாறு விலகியிருக்கும் காலத்தில் ஸ்நாநமே செய்யக்கூடாது. கர்ப்பிணிகள் வெகுஜாக்கிரதையாக ஸ்நாநம் செய்யவேண்டும்.

சமுத்திரஸ்நாநம்:—ஸமுத்திரஸ்நாநம் தேகத்துக்கு மிகவும்ஆரோக்கியகரம். ஆனால் அதிகபலசாலிகள்தாம் இவ்வித ஸ்நாநத்தை செய்யத்துணியலாம். சமுத்திரக்காற்று சமுத்திரஜலத்திலிருக்கும் ஓஜோன்என்ற (Ozone) ஓர்விதஉப்பு இவைகள் எல்லாம் தேகத்துக்கு சௌக்கியத்தை விளைவிக்கின்றன. ஆறுகளிலும்சமுத்திரத்திலும் ஸ்நாநம்பண்ணும் பொழுது நீந்தத்தெரிந்தவர்கள் நீந்தியும் ஆரோக்கியத்தை அடைவார்கள். பலமற்றவர்கள் சமுத்திர ஸ்நாநம்பண்ண ஆரம்பித்தால் குளிர்ச்சியாற் பலவிதநோயையடைவார்கள். அலைமுதலிய பாதையால் அவர்கள் சுவாசாசயம் ரத்தாசயம் இவைகள் எல்லாம் வருந்தும். திடகாத்திர முள்ளவர்கள் எல்லாவித ஸ்நாநமும் செய்யலாம். பித்ததேகமுள்ளவர்கள் குளிர்ந்தஜல ஸ்நாநம் அதிகமாகப்பண்ணலாம்.

எண்ணெய் ஸ்நாநம்:—எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நாநம்செய்வது தேகத்துக்கு ஆரோக்கியமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. காலையில் இம்மாதிரி ஸ்நாநம் செய்வதுதான் உத்தமம். “காலைக்குளிமாதக்குளி பகற்குளிபட்சக்குளி அந்திக்குளிஅன்றுக்குளி” என்ற பழையமொழியும் ஏற்பட்டிருக்கிறது. அதாவது அதிகாலையில் எண்ணெய் தேய்த்து முழுகினால் ஒருமாதகாலம் தாங்குமென்றும் பகற்காலத்திற் செய்தால் பதினைந்து தினம் தாங்குமென்றும் சாயங்காலவேளையிற் செய்தால் அந்தத்தினத்துடன் சரியென்றுமாம். மேலும் வெந்நீரிலேயே ஸ்நாநம் செய்யவேண்டும். எண்ணெய்ஸ்நாநம் நமது தேகத்திலிருக்கும் அழுக்கை நன்றாக எடுத்துவிடுன்றபடியால் இதற்கு வடமொழியில் மலாபகர்ஷண ஸ்நாநம் என்று பெயர். பனிக்காலத்தில் தேகம்வறண்டுபோகும்பொழுது எண்ணெய்இட்டு ஸ்நாநம் செய்தவர்களுக்கு எண்ணெய்இட்டுக்கொண்டதின் சுகம் வெளியாகும். இந்த ஸ்நாநம் நமது சருமத்தைப் பதப்படுத்திவைக்கின்றது. இந்த ஸ்நாநத்தால் உஷ்ணம் சமனமாகிறதென்றும், உஷ்ணதேசத்திலுள்ளவர்கள் வாரமிருமுறை தவறாமற் செய்வது நலமென்றும் பெரியோரால் ஏற்படுத்தப்பட்டி

கடவுள்துணை

மதுரைத் தமிழ்ச்சங்கத்து

நான்காம் வருஷோற்சவக் கூட்டம்.

தென்றிசை யதற்கோர் திலதம் போன்றதும் செந்தமிழ் நல்வளம் சிறக்கப்பெற்றதுமான இம்மதுரைமா நகரில் தாபிக்கப்பெற்ற இத்தமிழ்ச்சங்கம், தனது பலவகைப்பட்ட துறைகளினுஞ் செழிப்புற்று 1905-ளு மேமீ 24ௗ அன்று, தன் நான்காவதாண்டு நிறைவுபெற்று விளங்கியது. இவ்வப்தபூர்த்தி மகோற்சவத்தைக் கொண்டாடிக் களித்தற்பொருட்டு, தமிழகத்திற் பலவிடங்களினின்றும் வந்திருந்த சங்கத்தினங்கத்தினராய வித்வான்களும் ஏனைத் தமிழபிமானிகளும், சங்கத்தலைவர் ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத் தேவரவர்களால் நல்வரவுகூறி உபசரிக்கப்பெற்றனர். இவ்வுற்சவம் நடாத்தற்கென்று குறிக்கப்பட்டு, பல அலங்காரங்கள் செய்யப்பெற்று விளங்கிய சேதுபதி ஹைஸ்கூல் விக்டோரியா மண்டபத்தில் 24ௗ மாலை 4-மணிக்கு ஒன்றுகூடியவர்க்கெல்லாம் முதலிற் சிற்றுண்டி, பானக முதலியன வழங்கப்பெற்றன. அதன்பின், அனைவரும் அம்மகா சபையிற் கூடியளித்த அழகியகாட்சி சங்கத்திற் கினியுண்டாகும் அளவற்ற பெருமைக்கு முன்னறிகுறியாக விருந்தது.

அம்மகாசபையில், சங்கத்தலைவராகிய தேவரவர்கள் எழுந்து அச்சபைக்கு அக்கிராசனம் வகித்தற்பொருட்டு முன்னரே வேண்டப்பெற்றவாறு, அங்கு விஜயஞ்செய்திருந்த "தபாலிலாகா சூப்பரின்டென்டெண்டு" ஸ்ரீமத்-வி. கனகசபைப்பிள்ளையவர்களது தமிழாராய்ச்சியின் அருமை பெருமைகளைப் புகழ்ந்துபேசி, அவர்களைச் சபாநாயகம் வகிக்கவேண்டினார்கள். பிள்ளையவர்கள் அங்ஙனமே சபாநாயகம் வகிக்க, முதலில் சங்ககலாசாலை மாணவரால் கடவுள் வாழ்த்தாகத் தேவாரந் திருவாய்மொழிப் பாசுரங்கள் இனிய குரலுடன் ஓதப்பெற்றன. அதன்பின் சங்கத்திற்குப் பேருதவி புரிந்தருளிக்கும் மாட்சிதங்கிய புதுக்கோட்டைமகாராஜா அவர்கட்குச்

சங்கத்தலைவர் தமது முழுநன்றியுங்கூறி வாழ்த்தியதோடு, அவ்வேந்தரது படம் அச்சபையோர்முன் திறக்கப்பட்டு சபாநாயகரால் மாலையணிந்து உபசரிக்கப்பெற்றது. பின் சபாநாயகரவர்களது ஆரம்ப பிரசங்கம், சிறிதாயினும் சபையோர்க்கு மகிழ்ச்சிபெரிதளித்தது. அது முடிந்ததும் சங்ககாரியதரிசி, அவ்வுற்சவத்துக்கு வரமுடியாமைபற்றி எழுதியன்புகாட்டிய அடிபிற்கண்ட கனவான்களது தந்திகளையும் கடிதங்களையும் குறிப்பித்தார்கள்.

தந்திகளடித்தோர்.

1. ஸ்ரீமத் பி. வேங்கடசாமிப்பிள்ளையவர்கள், உசூர் சிரேஷ்டதார், திருநெல்வேலி.
2. „ இராஜமையங்காரவர்கள், தமிழ்ச்சங்கம், தஞ்சை.
3. „ வெங்கடரெங்கய்யர் அவர்கள், மைலாப்பூர்.
4. „ பூவை. கல்லியாணசுந்தர முதலியாரவர்கள், சாவுகார்பேட்டை, சென்னை.

கடிதங்கள் எழுதியோர்.

5. „ வே. சாமிநாத ஐயரவர்கள், சென்னை.
6. „ வை. மு. சட்கோபராமானுஜாசாரியாரவர்கள், திருவல்லிக்கேணி.
7. „ கெ. குப்புசாமி முதலியாரவர்கள், சென்னை.
8. „ வி. குப்புசாமிராஜு அவர்கள், தஞ்சை.
9. „ எம். வி. சுப்பிரமணியக் கவிராசர் அவர்கள், திருநெல்வேலி.
10. „ ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள், தரங்கப்பாடி.
11. „ சே. ப. நரசிம்மலுநாயுடுகாரு, கோயம்புத்தூர்.
12. „ சி. திருச்சிற்றம்பலம்பிள்ளை யவர்கள், ஷை.
13. „ எஸ். பால்வண்ணமுதலியாரவர்கள், திருநெல்வேலி.

14. ,, ஜே. நல்லசாமிப்பிள்ளையவர்கள், கோடைக்கானல்.
15. ,, டி. பொன்னம்பலம்பிள்ளையவர்கள், கொல்லம்.
16. ,, சிற். கைலாசபிள்ளையவர்கள், கொழும்பு.
17. ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள், யாழ்ப்பாணம்.
18. ,, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள், யாழ்ப்பாணம்.
19. ,, காரை. கா. சிவசிதம்பர ஐயரவர்கள், கோலாலம்பூர்.
20. ,, தி. கோ. நாராயணசாமிப்பிள்ளையவர்கள், பங்களூர்.

பின் சங்கத்தின் நாலாவதாண்டறிக்கை காரியதரிசியாற் படிக்கப்பெற்றது. அவ்வறிக்கையின்மேல், ஸ்ரீமத்-பி. குருராயரவர்களும், ஸ்ரீமத்-நா. வேதாசலம்பிள்ளையவர்களும் உசிதமான சிற்சில விஷயங்களை எடுத்து மொழிந்தார்கள். இதனையடுத்துச் சென்ற ஆண்டினடந்த சங்கத்துத்தனித்தமிழ்ப்பரீக்ஷையிற் றேறிய மாணாக்க ரிருவர்க்கும், சபாநாயகராற் பரிசுகள் நேரில் அளிக்கப்பெற்றன. ஆங்கிலகலாசாலைச் சங்க பரீக்ஷைகளிற் றேறிய மாணவரெவரும் ஆங்கு வாராதிருந்ததனால், அவரது பரிசுகள் முறையே அவர்களுக்கு அனுப்ப எடுத்துவைக்கப்பெற்றன. இது முடிந்ததும் சபாநாயகர் எழுந்து, செந்தமிழணங்கின் வரலாற்றைப்பற்றித் தாம் அரிதிற்கண்ட அரும்பெரும் விஷயங்களை, சபையோர் மகிழ்ந்து கேட்க எடுத்து மொழிந்து, அத்தகைத்தமிழை அலங்கரித்தற்கெழுந்த இச்சங்கத்தின் பெருமையையும், அதனை வளர்த்துவரும் சேவரவர்களது அரிய செய்கைகளையும் புகழ்ந்து, அப்போது பொழிந்த மழைக்கொப்பாகவே, தமது பிரசங்கமாரியைப் பொழிந்தனர். இவ்வாறு தம் வேண்டுகோட்கு இணங்கி சபாநாயகம் வகித்து மகிழ்வித்த பிள்ளையவர்கட்குச் சங்கத்தலைவரால் நன்றிகூறப்பட்டு, பூமாலைசூட்டப்பெற்றதோடு, ஸ்ரீமத்-கந்தசாமிக் கவிராயராலும், ஸ்ரீமத்-ஸ்ரீநிவாஸையங்காரவர்களாலும், பாமாலையுஞ் சூட்டப்பெற்றன. திருப்பாதிரிப்புலியூர்ப் பண்டிதை-அசலாம்பிகைஅம்மை அவர்கள் அன்போடும் அன்று எழுதிவிடுத்த அழகிய வாழ்த்துக்கவிகளும் அப்போது படிக்கப்பெற்றன. அவை வருமாறு:—

வரந்தருவார் தமிழ்ப்பாவை வளர்ந்தாளே ளுதவளர் கின்று ளென்றே
கரந்தருவாண் மழுவாளர் உடனமர்ந்த கடைச்சங்கங் கடந்த பின்னும்
நிரந்தரமா யிசைத்தமைபின் வருங்கால நிகழ்ச்சியிது நினைந்தோ வென்னத்
தரந்தருநற் புலவரெலர்ந் தனித்தனியுள் வியந்தேத்தித் தழைக்கின்றாரால்.

முன்பாண்டித் துரைமகராற் றமிழ்ச்சங்கம் வளர்ந்ததெனு மொழிமா றுதிம்
மன்பாண்டித் துரையளியால் வளர்கின்ற தெனவுலகோர் மகிழ்ச்சி கூர
நன்பாண்டித் தலைங்கரா மாமதுரா புரிவளரிந் நான்காஞ் சங்கத்
தின்பாண்ட வொருநான்காம் வருடவிழ வினுக்கியைந்த வேற்றமென்னே.

சீர்க்கனக சபைக்குரிசில் பாண்டியர்முன் கடைச்சங்கஞ் சிறந்துற் றுனிப்
பேர்க்கனக சபைக்குரிசில் பிறங்கினு னிப்பாண்டிப் பெரியோன் றன்முன்
பார்க்கிலிது போற்புதுமை யாதோவித் தகையபெரும் பண்பார் சங்கம்
வார்க்கனக மலைவில்லோற் கினியர்செயுந் தவமேபோல் வளர்க மாதோ.

பணஞ்சேர்கங் கணன்றிருத்தாள் மறவாது பணிபாண்டித் துரையும் பாரில்
மணஞ்சேர்பொன் மலராதுதான் மன்னர்திரு முடியேறு மாபோற் கற்றோர்
கணஞ்சேரித் தமிழ்ச்சபைக்கோர் நாயகமா யமர்ந்தோனுங் கல்வி யோடு
குணஞ்சேர்நல் லறிஞர்களுந் தெய்வீகத் தீந்தமிழ்மென் கொடியும் வாழ்க.

அதன்பின், சங்கத்தலைவர் ஸ்ரீமாந்-பாண்டித்துரைத் தேவரவர் களால் இயற்றப்பெற்று ஸ்ரீமாந்-முறையூர்ச் சண்முகஞ் செட்டியார வர்களால் வெளியிடப்பெற்ற "சிவஞானசுவாமிகள் இரட்டைமணி மாலைப்" பிரதிகள் சபையிலுள்ளோரெல்லார்க்கும், செட்டியாரவர்க ளால் அளிக்கப்பட்டன. பின்னர் 'போனகிராப்' என்னும் யந்திரத் தாலெழுப்பப்பெற்ற இனியசங்கீதமும், 'மாஜிக்லான்டெர்ன்' என் னும் யந்திரத்தாலாகிய அரியகாட்சிகளும் சபையோரை மகிழ்வூட் டின. முடிவில் தார் பூலம்சந்தனமுதலியன அளிக்கப்பெற்று அன்று சபை இரவு 8-மணிக்குக் கலைந்தது.

25—5—05—(காலை)

சங்கத்தின் நான்காம் வருஷோற்சவம் நடந்த தினத்துக்கு மறு தினமாகிய 1905-ஆு மேமீ 25உ காலை 9-மணிக்கு அடியிற்குறி த்த சங்கத்தினங்கத்தினர் ஷை மண்டபத்திற் கூடினார்கள். அவர்க ளாவார்:—

1. ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள், (தமிழ்ச்சங்கம் அக்கிராசனாதிபதி.)
2. ஸ்ரீமத்-வி. கனகசபைப்பிள்ளையவர்கள், B. A. B. L. சென்னை.
3. ,, கா. கோபாலாசாரியாரவர்கள், சென்னை.
4. ,, நா. வேதாசலம்பிள்ளையவர்கள், சென்னை.
5. ,, ஐ. சாமிநாதமுதலியாரவர்கள், தஞ்சாவூர்.
6. ,, பி. குருராயரவர்கள், M, A. L. T. திருசிரபுரம்.
7. ,, டி. சவரிராயபிள்ளையவர்கள், M. R. A. S. ஷை.
8. ,, கருப்பையாப்பாவலரவர்கள், கொட்டாம்பட்டி.
9. ,, எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தரவர்கள், சோழகுடி.
10. ,, எஸ். அரங்கசாமி ஐயங்காரவர்கள், இராமநாதபுரம்.
11. ,, சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரவர்கள், மதுரை.
12. ,, மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள், மதுரை.
13. ,, ரா. இராகவையங்காரவர்கள், மதுரை.
14. ,, திரு. நாராயணையங்காரவர்கள், மதுரை.
15. ,, டி.வி. ஸ்ரீநிவாசையங்காரவர்கள், B. A. B. L. மதுரை.
16. ,, S. சாமிநாதையரவர்கள், மதுரை.
17. ,, மு. ரா. அருணாசலக் கவிராயரவர்கள், சிவகாசி.
18. ,, ரே. அப்புவையங்காரவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர்.
19. ,, எம். ஆர். ஸ்ரீநிவாசையங்காரவர்கள், ஷை.
20. ,, வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள், தூத்துக்குடி.
21. ,, முத்தையபிள்ளையவர்கள், ஷை.
22. ,, டி. எஸ். சுப்பிரமணியபிள்ளையவர்கள், ஷை.
23. ,, நல்லகுற்றாலம்பிள்ளையவர்கள், மதுரை.

இச்சபையில், ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்களது அக்கிராசனத்தின்கீழ், சேலம் டிஸ்ட்ரிக்ட் முனிசிப் ஸ்ரீமத்-ஜெ. எம்.

நல்லசாமிப்பிள்ளையவர்கள் எழுதி, சபையில் வாசித்தற்பொருட்டு அனுப்பிய "திருக்குறள் வீட்டின்பால்" (The Theosophy of the Kural) என்னும் வியாசம் இனிது படிக்கப்பட்டது.

அதன்பின், ஸ்ரீமத்-வி. கனகசபைப்பிள்ளையவர்கள் அக்கிராசனம் வகிக்க, அச்சபையில், "செந்தமிழ்" உதவிப்பத்திராசிரியர் ஸ்ரீமத்-மு. இராகவையங்காரவர்கள், தாமெழுதிய 'வேளிர்வரலாறு' என்னும் வியாசத்தைப் படித்தனர். அதனையடுத்துச் சென்னை ஸ்ரீமத்-நா. வேதாசலம்பிள்ளையவர்களால் "தமிழ்மொழி" என்னும் விஷயம் உபந்நியாசஞ் செய்யப்பெற்றுமுடிய, அதனோடு அன்று பகற்கூட்டங் கலைந்தது.

25—5—05 (மாலை.)

அன்று மாலை 4-மணிக்குச் சங்கத்தினங்கத்தினரில் வருஷோற்சவத்துக்கு வந்திருந்தமேற்குறித்தவர்களில், ஸ்ரீமத்-வி. கனகசபைப்பிள்ளையவர்கள் தவிர ஏனையரோடு, அன்று புதியராய்வந்த பங்களூர் சென்ட்ரல் காலேஜ் ப்ரொபஸர் ஸ்ரீமத்-எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் M. A., அவர்களும் அக்கூட்டத்திற் சேர, சங்கத்தின் அபிவிருத்திக்குற்ற விஷயங்கள் சங்கத்தலைவரின்கீழ் சபையாரால் ஆலோசித்து முடிவுசெய்யப்பெற்றன.

முடிபுகள்.

1. பரீக்ஷை நிர்வாகசபை அங்கத்தினர் இருபிரிவினராயிருத்தல்வேண்டுமெனவும், ஒருபிரிவினர் தனித்தமிழ்ப் பரீக்ஷைகட்கும், ஏனையர் ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகட்கும் ஆக அமைதல்வேண்டுமெனவும், ஸ்ரீமத்-எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் பிரேரிக்க, ஸ்ரீமத்-சாமிநாதையர் ஆமோதிக்க, சபையோரால் அங்கீகரிக்கப்பெற்றது.

2. ஷை சபையார்கட்கு வேலைகளைப் பகுத்துக்கொடுப்பதில், அக்கிராசனாதிபதியவர்களே ஏற்றவாறு செய்யலாமென்றும், அவசியமானால், உபபரீக்ஷகர் சிலரையும் அக்கிராசனாதிபதியவர்கள் தெரிந்துகொள்ளலாமென்றும் சபையோரால் முடிவுசெய்யப்பட்டன.

3. ஷை பரீக்ஷைநிர்வாகசபையாருள் இவ்வாண்டு, ஸ்ரீமத்-எஸ். கிருஷ்ணசாமிஐயங்காரையும், ஸ்ரீமத்-சாமிநாதையரையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று ஸ்ரீமத்-ரா. இராகவையங்கார் பிரேரிக்க ஸ்ரீமத்-டி. சவரிராயபிள்ளை ஆமோதிக்கச் சபையோரால் அங்கீக ரிக்கலாயிற்று.

4. ஷை பரீக்ஷை நிர்வாகசபையார் இரண்டு வருஷங்கள்வரை தங்கள் காரியங்களை நடத்தற்குரியவராதல் வேண்டுமென, ஸ்ரீமத்-பி. குருராயரவர்கள் பிரேரிக்க, ஸ்ரீமத்—க. கோபாலாசாரியார் ஆமோ திக்கச் சபையோரால் அங்கீகாரம் செய்யலாயிற்று.

5. அக்கிராசனாதிபதியவர்கள், சென்றவாண்டிற் றெரிந்துகொ ள்ளப்பெற்ற பரீக்ஷை மேற்பார்ப்போர்களே, இவ்வாண்டிலுமிருத் தல்வேண்டுமென்று பிரேரிக்க எல்லாராலும் அங்கீகரித்துக்கொள்ள லாயிற்று.

6. ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷை நடக்குமிடங்களுடன், தஞ்சாவூரையும், ஸ்ரீவில்லிபுத்தூரையும் இவ்வாண்டிற் சேர்த்தல் வேண்டுமென்று ஸ்ரீமத்-ஐ. சாமிநாதமுதலியார் பிரேரிக்க ஸ்ரீமத்-நா. வேதாசலம் பிள்ளையால் ஆமோதிக்கப்பெற்று அங்கீகரிக்கலாயி ற்று.

7. பரீக்ஷகரால்அனுப்பப்படும் வினாப்பத்திரங்களை, தக்கவாறு சீர்திருத்திக்கொள்ள, உள்ளூர் அங்கத்தினர் நால்வருடன், அக்கிரா சனாதிபதியவர்கள் கலந்து, தாமே முடிவுபடுத்தல் சௌகரியமாமெ ன்று ஸ்ரீமத்-டி. சவரிராயபிள்ளையால் பிரேரிக்கப்பட்டு, ஸ்ரீமத்-நா. வேதாசலம்பிள்ளையால் ஆமோதிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பெற்றது.

8. 1905-ம௵ தனித்தமிழ்ப் பரீக்ஷைகட்கு விதித்துள்ள பரீக்ஷாபாடங்கள் 1906—1907-கட்கும் அமைதல்வேண்டுமென்று ஸ்ரீமத்-ஐ. சாமிநாதமுதலியார் பிரேரிக்க, ஸ்ரீமத்-ரெ. அப்புவையங் கார் ஆமோதிக்கச் சபையோரால் அங்கீகரிக்கலாயிற்று.

9. தனித்தமிழ்ப்பரீக்ஷைகட்கு வரும் மாணாக்கர் இலக்கியம், இலக்கணம், வியாசம் என்னும் மூன்றுவிஷயங்களில் ஒவ்வொன்றி

னும் மூன்றிலொருபங்கிற்குறையாத சிற்றம்சம் (Minimum mark) பெறல்வேண்டுமென்று ஸ்ரீமத்-டி. சவரிராயபிள்ளை பிரேரிக்க ஸ்ரீமத்-குருராயர் ஆமோதிக்கச் சபையாரால் அங்கீகரித்துக்கொள்ளப் பெற்றது.

10. ஒவ்வொரு பரீக்ஷாநகரங்கட்கும் ஒவ்வொரு தொடர்ந்த எண்ணைக்குறிக்காமல், மாணாக்கர் விண்ணப்பங்கள் வருகின்ற முறைப்படியே தொடர்ந்த எண்ணிட்டுப், பரீக்ஷைக்குவருவோர் குறிப்பொன்றெடுத்துச் சங்கத்தில் வைத்துக்கொண்டு, அவ்வெண்களையே மாணாக்கரது பெயரோடு பிரதியாகவழங்கல் நன்றென்றும்: பரீக்ஷைகளிற்றேறுதவர்களது குறிப்பொன்றும் வெளியிடல்வேண்டுமென்றும் ஸ்ரீமத்-ஐ. சாமிநாதமுதலியார் கூறிய யோசனைகள் குறித்துக்கொள்ளப்பெற்றன.

11. சங்கத்தின் அங்கத்தினராக விரும்புவோர், அதனங்கத்தினராயுள்ளவரொருவரால் நேரில் தகுதியுள்ளவரென்றறிந்து பிரேரிக்கப்பட்டும், வேறோர் அங்கத்தினரால் அஃது ஆமோதிக்கப்பட்டும் உள்ளதாகத் தங்கள் விண்ணப்பங்களைச் சங்க அக்கிராசனாதிபதியவர்கட்கு அனுப்பல்வேண்டுமெனவும், அவ்விண்ணப்பங்கட்கு அக்கிராசனாதிபதியவர்கள் யுக்தம்போலமுடிவுசெய்யலாமென்றும், ஸ்ரீமத்-எம். ஆர். கந்தசாமிக்கவிராயர் பிரேரிக்க, ஸ்ரீமத்-வ. உ. சிதம்பரம்பிள்ளையாமோதிக்க, சபையோரால் அங்கீகரிக்கலாயிற்று.

12. சங்கவருஷோற்சவநாள்களில், எழுத்தில் அமைந்த வியாசங்கள் மூன்றுக்கு அதிகமின்றிப் படிக்கப்படல் வேண்டுமெனவும், தமதாராய்ச்சிக்கேற்றதொன்றை இன்னின்னர் இக்காலங்களிற் படித்தற்குரியரென்பதை அக்கிராசனாதிபதியவர்கள் மூன்றுமாதங்கட்கு முன்னரே உரியவர்க்கு அறிவித்தல் சௌகரியமாகுமெனவும்: ஸ்ரீமத் குருராயர் பிரேரிக்க, ஸ்ரீமத்-சௌரிராயபிள்ளை ஆமோதிக்க சபையாரால் அங்கிகரித்துக்கொள்ளப்பெற்றது.

13. சங்கத்தின் அபிவிர்த்தி கருதித் தம்மாலியன்றவரை பொருள் சேகரிக்க முயலும் அங்கத்தினர்க்கு அநுகூலமாக, "ட்யூப்ளிக்கேட்' ரசிதுப் புத்தகங்கள் சங்கத்தினின்று அச்சிட்டு அவர்கள் கையிற்கொடுத்துவைத்தல்வேண்டுமென, ஸ்ரீமத்-மு. ரா. கந்தசாமிக்

கவிராயர் பிரேரிக்க, ஸ்ரீமத்-எம். கருப்பையாப்பாவலரால் ஆமோதிக்கப்பெற்று அங்கீகரிக்கலாயிற்று.

26—5—05. (காலை.)

முந்திய கூட்டத்திலிருந்த அங்கத்தினரும் ஏனையோரும் நிறைந்த வித்துவசமூகத்தில், ஸ்ரீமத்-பி. குருராயரவர்கள் M. A., நம் சங்கத்தின் பொருட்டு மொழிபெயர்த்துச் சீர்திருத்தஞ்செய்து கொணர்ந்த "சாகுந்தள நாடகம்" பங்களூர் ஸ்ரீமத்-எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் M. A. அவர்கள் சபாநாயகம் வகிக்க அரங்கேற்றப்பட்டது. ராயரவர்கள் வடநூற்போக்கைத் தழுவி எல்லாநலங்களும் வாய்ப்ப இயற்றியிருந்தமை சபையோர்க்கு மகிழ்ச்சி விளைத்தது. அதன்பின் ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீமத்-ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் சங்கத்தின்பொருட்டுத், தாம் முன்னரே தெலுங்கினின்று வெண்பாவில் மொழிபெயர்த்திருந்த "சுமதிசதக"த்திற் சிலபாக்களைச் சபையோர்க்குக்கூறி மகிழ்வித்தனர். சபாநாயகராயிருந்தஐயங்காரவர்கள், அவ்விருவரியற்றிய நூற்பெருமையைப்புகழ்ந்து, இவ்வாறேபலநூல்கள் மொழிபெயர்க்கப்படுதல் இன்றியமையாதென்பதை விளக்கிச் சபையை முடித்தனர்.

பின்னர், சங்கத்தலைவர் ஸ்ரீமாந்—பாண்டித்துரைத் தேவரவர்கள் சபையோரைப் பார்த்து, வித்வான்கள் பலவிடங்களினின்று வந்து மகிழ்வித்தமைக்குத்தாம் முழுநன்றி கூறுவதாகவும், ஒவ்வொருவரும் தமது தேசாபிமானத்தோடு, பாஷாபிமானமுமுடையராய்த் தம்மால் ஆமுதவிகளைச் செய்ய முந்தவேண்டுமென்றும், அவ்விருவகை அபிமானத்தாற் செய்யப்படும் காரியங்களே நம்தேசத்தின் அபிவிருத்திக்கு முக்கியகாரணமாமென்றும், இதற்குச் சான்றுவேறு வேண்டா: ஜப்பானேபோதுமென்றும், நமக்குள் உள்ள சிறுகலகங்களைப் பொருட்படுத்தாது உரியகாரியங்களில் ஒன்றுகூடிக்கலத்தல் அவசியமென்றும், இப்போதைய நாகரீகத்திற்கேற்பத் தமிழ்வித்வான்களும், இச்சங்கம்போன்ற கூட்டங்களில் ஒன்றுகூடிப் பாஷைக்குற்ற விஷயங்களை ஆராய்ந்து சகோதரபாவங்காட்டியுழைத்தல் இன்றியமையாது வேண்டப்படுவதென்றும், இன்னும்பல சிறந்தவிஷயங்களை ஒவ்வொருவரும் ஊக்கமுறுமாறு எடுத்துமொழிந்தார்கள். இதனோடு மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் நான்காம்வருஷோற்சவம் பரிபூர்த்திபெற்றது.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில்

விற்கப்பெறும் புத்தகங்கள்.

"செந்தமிழ் இரண்டாந்தொகுதி 'பைண்ட்' செய்யப்பெற்று இப்போது விலைக்குத்தயாராகவுள்ளது. கையிருப்பிற் சிலபிரதிகளேயிருத்தலால், வேண்டியோர் உரியபோதே எழுதி வி. பி. தபால் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக்கடவர். இதன் விலை ரூ. 5. 'பைண்ட்' இல்லாதது விலை ரூ. 4—8—0.

சங்கப்பதிப்பு.

		ரூ	அ	பை
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	ஐந்திணையைம்பதுரை	0	3	0
4.	இனியது நாற்பதுரை, களுநூல்	0	3	0
5.	புலவராற்றுப்படை (பழையது)	0	3	0
6.	நேமிநாதம் உரையுடன்	0	10	0
7.	திருநூற்றந்தாதி உரையுடன்	0	4	0
8.	பன்னிருபாட்டியல்	0	4	0
9.	அநுமான விளக்கம்	0	4	0
10.	சங்கப்புலவராற்றுப்படையுரை	0	4	0
11.	விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்	0	6	0
12.	திணைமாலை நூற்றைம்பது உரை	0	4	0
13.	அட்டாங்கயோகக்குறள்	0	1	0
14.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	3	0
15.	யாப்பு அணியிலக்கணங்கள் [விசாகப்பெருமாளையரது பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தது.]	0	8	0
16.	வில்லிபுத்தூரார் பாரதம்—(ஆதிபர்வம், சபாபர்வம் பலபிரதிகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்யப்பட்டது)	1	0	0
17.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0

மற்றப்பதிப்பு

		ரூ	அ	பை
18.	தருக்காமிர்தம்	0	8	0
19.	அத்துவித வாக்கியத் தெளிவுரை (ஸ்ரீசிவஞானசுவாமிகள் செய்தது)	0	4	0
20.	ஜோதிமாலை	0	8	0
21.	விதானமாலை [சோதிடம்]	0	8	0

☞ விலாசம்:—மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜ்மெண்டு ஆபீஸ், மதுரை.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩.] விசுவாவசு௵ ஆனி௴ [பகுதி-௮.

தமிழ்ப்பெருமை.

தமிழ்நாட்டிலே மூன்றுசங்கம் இருந்தனவெனவும் முதற்சங்கத்தின்கண்ணே அகத்தியர் தமிழ் ஆராய்ந்தாரெனவும் முதலிலே முசிறி ஆசிரியர் நீலகண்டனார் தாம் இயற்றிய இறையனார் அகப்பொருள் உரையிற்கூறினார். இதனையே பின்னிட்ட புலவரும் உரையாசிரியரும் கைக்கொண்டனர். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் தமது தொல்காப்பிய உரையிலே அகத்தியத்திலிருந்து சூத்திரம் மேற்கோளாக எடுத்துக்காட்டினர். சங்கரநமச்சிவாயர் தமது நன்னூற்காண்டிகை உரையிலும், மயிலேறும்பெருமாள்பிள்ளை தாம் எழுதிய கல்லாட உரையிலும் அகத்திய சூத்திரங்கள்சில தமது உரைக்கு வேண்டியவிடத்துப் பொருந்தக்காட்டினர். ஆயினும் இவ்வுரையாசிரியர்களுக்கு முற்பட்ட பேராசிரியர் இளம்பூரணர் முதலியோராவது சங்கப்புலவராவது அகத்தியத்திலிருந்து சூத்திரங்கள் மேற்கோளாகக் காட்டவுமில்லை: தமது காலத்தில் அகத்தியம் வழங்கிவந்ததாகச் சொல்லவுமில்லை. மேலும் தொல்காப்பியர் இட்ட சாபத்தினாலே அகத்தியம் வழங்காமற்போயிற்றென்றும் பல உரையாசிரியரும் கூறிப்போந்தனர்.

தொல்காப்பியர் அகத்தியருடைய மாணாக்கர் என்பதற்குப் போந்தசான்று தொல்காப்பியத்திலாவது வேறு சங்கநூல்களிலாவது புலப்படவில்லை. தொல்காப்பியப்பாயிரத்திலே "ஐந்திரநிறைந்த தொல்காப்பியன்" என்றும், "அதங்கோட்டாசான் அரிறப" என்றும் "முந்துநூல்கண்டு முறைப்பட எண்ணி" என்றும் வெ

ளிப்படையாக விளம்பியிருத்தலால், ஆரியத்திலுள்ள இந்திரவியாகரணம் கற்றுத்தெளிந்து அதற்கிணங்கத் தமிழிலே இலக்கணஞ் செய்தார் என்றும், அந்நூலிலுள்ள குற்றங்குறைகளை அதங்கோட்டாசான் களைந்தனர் என்றும், முன்னோர் எழுதிய நூல்களிற்கண்டவற்றை முறைப்பட வகுத்தனர் என்றும் பலரும் தெளியப் பகர்ந்திருத்தலால், அக்காலத்திலே அகத்தியம் என்று ஓர் நூல் உண்டோ இல்லையோ என யாம் ஐயுறும்படி நேரிடுகின்றது.

கல்வியிற் பெரியாராய கம்பரும் தாம் மொழிபெயர்த்த ராமகதையில் " தமிழெனுமளப்பருஞ் சலதிதந்தவன் " "சுடர்க்கடவுள் தந்ததமிழ்தந்தான் " என அகத்தியனைத் தமிழுக்கு முதலாசிரியர் எனப்புகழ்ந்திருந்தும், " என்றுமுளதென்றமிழியம்பியிசைகொண்டான் " என்று அவ்வகத்தியரையே குறித்துள்ளாராதலால், அகத்தியருக்குமுந்தித் தமிழ்மொழியும் தமிழ்நூலும் இருந்ததாகக் கம்பர் கருதினரென்று நாம் உணரலாகும். இலக்கியம் இருந்தன்றோ இலக்கணம் எழுதலாகும். அகத்தியம் தமிழ் இலக்கணமாயின் அதற்கு முந்திய தமிழ்நூல்களும் இன்றிமையாது இருத்தல்வேண்டும்.

பரம்பரையாய் வந்த வரலாறு இன்னதென்றும் அது முதலிலே இறையனார் அகப்பொருள் உரையிலே வெளிவந்ததென்றும் பகர்ந்தோம். இனித் தமிழின் பழமையை நாமே ஆராய்ந்து நோக்குவோமெனின், ஆங்கிலத்தில் (Philology) பாஷாசாஸ்திரம் அல்லது மொழியியல் என்னும் ஓர் புதிய நூல் நமக்கு வழிகாட்டுங் கருவியாகும். ஒருதேசத்தார் தாய், தகப்பன், மாடு, மக்கள், நீ, நான் என்னும் பொருள்பட வழங்குஞ் சொற்கள் மற்றொரு தேசத்திலும் அதே பொருள்பட வழங்குமாயின் அவ்விருதேசத்தாரும் முற்காலத்திலே, ஒன்றாய் ஓரிடத்திருந்தவரென்று துணியப்படும். மேற்சொல்லிய வார்த்தைகளாற் குறிக்கும்பொருள்கள் இன்னொருதேசத்திலே முழுவதும் மாறான ஒலியுள்ள மொழிகளாற் பெயர்கூறப்படுமாயின் பின்னிட்ட தேசத்தவர் முழுவதும் வேறு குலத்தவர் என்றும் வேற்றிடத்தவர் என்றும் ஏற்படும். ஆங்கிலத்தில் (mother) மதர் என்னும் மொழிக்கு ஆரியத்தில் மாதுரு எனவும், (father)

பாதர் என்பதற்கு பிதுர் எனவும், (brother) ப்ரதர் என்பதற்கு ப்ராதா எனவும், (cow) கௌ என்பதற்கு கோ எனவும், (you) யு என்பதற்கு யுவம் எனவும், (I) ஐ என்பதற்கு அகம் எனவும், வழங்கி வருதலால், இப்பொழுது இந்தியாவிலிருந்து எண்ணுயிரம்மைல் தூரத்திலே ஆங்கிலேயர் குடியிருந்தபோதிலும், பல நூற்றுண்டுகளுக்கு முன்பாக ஆரியரும் ஆங்கிலேயரும் ஒரே குலத்தவர் என்றும் ஒரே நாட்டவர் என்றும் பாஷாசாஸ்திரம் துணிந்து கூறும். இவ்வாறே தமிழ்மொழிகளையும் ஆரியமொழிகளையும் ஒத்துநோக்கின் ஒன்றும் ஒவ்வாதிருத்தல் காணலாம். ஆரியமும் ஆங்கிலமும் எம்மட்டில் ஒத்திருக்கின்றனவோ அங்ஙனம் தமிழும் சீனமும் ஒத்திருக்கின்றன. தமிழில் நீ என்னும் மொழிக்கு சீனத்தில் 'நீ' என்றே வழங்குகிறுர். நான் என்பதற்கு 'ஞான்' என்றும், யாம் என்பதற்கு 'யாம்' என்றும், பெண் என்பதற்குப் 'பெண்' என்றும், எஃகு என்பதற்கு 'எஃ' என்றும், கண் (அல்லது இடம்) என்பதற்குக் 'கண்' என்றும், ஈர் (அல்லது இரண்டு) என்பதற்கு 'ஈர்' என்றும், மை என்பதற்கு 'மை' என்றும் வழங்குதலால் தமிழரும் சீனரும் பண்டைக்காலத்திலே ஒரே குலத்தவர் என்றும், ஒரே நாட்டிலிருந்தவர் என்றும் புலப்படும். இதற்கேற்கவே தமிழ் மூவேந்தருள் ஒருவனுகிய சேரன் வானவன், வானவரம்பன், இமையவரம்பன் எனப் பெயர் பூண்டான். இந்நாளிலும் சீனதேசத்தார் தங்களை வானவர் என்றும் மற்றையோரினும் குலத்தில் உயர்ந்தவராகவுங் கொண்டாடுவார்கள். இமயமலையின் வடபாலில் உள்ள மிகவும் உயர்ந்த மேட்டுத்தரையில் அவர்கள் முற்காலத்திற் குடியிருந்ததனுல் தங்களை வானவர் எனவும், பள்ளத்தாக்கிலும் மலையடிவாரங்களிலும் உள்ள மற்றவர்களைத் தங்களுக்குக் கீழ்ப்பட்டவரெனவும் எண்ணியிருந்தார்.

வடவேங்கடந் தென்குமரியின் இடையே உள்ள நாட்டில் வந்து குடியேறுவதற்குமுன்னே தமிழர் கங்கைக்கரையில் இருந்தார் என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. தமிழருக்குள்ளே வேளாளர் என்னும்ஜாதியார் தம்மைக் கங்காகுலத்தவர்என்று கூறுவர். கன்னடதேசத்திலுள்ள வேளாளர் தங்களைக் கவுடர் என்றும், கொ

ங்குதேசத்து வேளாளர் தங்களைக் கவுண்டர் என்றும் வழங்குவது இவர் கங்கைக்கரையிலுள்ள கவுடதேசத்திலிருந்து வந்தோர் என்பதற்குச் சாட்சியாகும். இப்போது மைசூர் என்று பெயர் கூறப்படும் மஹிஷநாட்டை (அல்லது எருமை நாட்டை) வேளாளர் படை எடுத்துச்சென்று கைக்கொண்ட பிற்பாடு கங்கைவாடி என்று அந்நாட்டுக்குப் பெயர் வழங்கினர். அந்நாட்டு அரசரும் தம்மைக் கங்கைவம்சம் என்றும் பெல்லாலமன்னர் என்றும் வழங்கியது பழைய பட்டயங்களிலும் கல்வெட்டுக்களிலும் காணலாம்.

தமிழர் சோழநாட்டிற் குடியேறியபொழுது பங்காளநாட்டிற்கு இராஜதானியாகிய சம்பாநகர் என்னும் பெயரையே தாங்கள் உண்டாக்கிய பட்டணத்துக்கும் இட்டனர். தமிழ்நாட்டில் உண்டான இந்தச் சம்பாநகர் அல்லது சம்பாபதி பின்னிட்டுக் காவிரிப்பூம்பட்டினம் அல்லது புகார் என்று பெயர் பெற்றிருந்தது.

மேலும், தமிழ்நாட்டிலே தொன்றுதொட்டுள்ள போர்வீரருக்கு மறவர் என்றே பெயர் வழங்கிற்று. இக்காலத்திலும் வடஇந்தியாவிலே மார்வார் என்னும் ஜாதியார் பெயர்பெற்ற போர்வீரராய் க்ஷத்திரியர் என்ற ஜாதியாராகி விளங்குகிறார். தமிழருக்குள்ளே பள்ளர் அல்லது பள்ளிகள் என்னும் ஜாதியாருக்கு ஒப்பாகப் பங்காளத்திலும் நாளதுவரையிலும் பலெ, பால என்னும் ஜாதியார் உண்டு. இந்நாட்டிலுள்ள பறையருக்கு ஒப்பாகப் பலைறையர் என்று பங்காளத்தில் ஒரு ஜாதியாருண்டு. அவர்களும் தமிழ்நாட்டிலுள்ள பறையரைப்போலத்தனிவழிகளிலும் இராக்காலங்களிலும் திருடுவதிலும் கொள்ளையடிப்பதிலும் மிக்க விருப்பமுள்ளவராய் இருக்கிறார். இங்ஙனம் ஊரின் பெயரும், பல மரபினர் பெயரும் பங்காளத்திலும் தமிழ்நாட்டிலும் ஒத்திருப்பதால், தமிழர் பங்காளத்திலிருந்துவந்து தென்னாட்டிற் குடியேறியதற்கு யாதோர் ஐயமும் இல்லை. சோழநாட்டுக்கும் தொண்டைநாட்டுக்கும் இடையே உள்ள தேசத்திற்கு மகதநாடென்றும், மலையமானாட்டுக்குச் சேதிநாடென்றும் வடக்கே உள்ள நாடுகளின் பெயர் இட்டதும், தமிழர் வடநாடுகளிலிருந்து குடி எழுந்து வந்ததற்குச் சான்றாகும்.

பாண்டவர் குலத்திலே இருபத்தைந்தாவது தலைமுறையில் உள்ள உதயணன் என்னும் வெற்றிவேற்கை அரசன் வரலாற்றைக் கூறுகின்ற உதயணன்கதையிலே மகதநாட்டு இராஜதானியாகிய இராஜகிருகம் என்னும் பட்டணத்தின் சிறப்பை உரைக்குமிடத்தே பின்புவருமாறு ஆசிரியர் கூறுகின்றார்.

"விண்ணுற நிவந்த பண்ணமை படைமதில்
வாயிலு மருங்கினுங் காவல் கண்ணி
வேந்துபிழைத் தொழுகினுங் காய்ந்து கலக்குறாஅ
முழுப்பரி சார முதற்க ணெய்தி
விழுப்பெருஞ் செல்வமொடு வென்றி தாங்கிய
வைம்பதி னிரட்டி யவனச் சேரியு
மெண்பதி னிரட்டி யெறிபடைப் பாடியு
மன்பெருஞ் சிறப்பி னாயிர மாகிய
தலைப்பெருஞ் சேனைத் தமிழச் சேரியுங்
கொலைப்படுங் கடுந்திறற் கொல்லச் சேரியு
மிலேச்சச் சேரியுந் தலைத்தலை சிறந்து."

இதனால் நூறு யவனச்சேரியும், நூற்றறுபது எறிபடைப்பாடியும், ஆயிரம் தமிழச்சேரியும் இன்னுங் கொல்லச்சேரியும் மிலேச்சச் சேரியும் இராஜகிருகம் என்னும் பட்டணத்தைச் சூழ்ந்திருந்தன என்று தோன்றும். ஆயிரஞ்சேரியிலிருந்த தமிழர் மகதத்தரசனுக்குத் தலைப்பெருஞ்சேனையாக இருந்தார்என்பதனால், அக்காலத்திலே மகதநாட்டிலே மற்ற ஜாதியாரைப்பார்க்கிலும் தமிழரே மிக்க போர் வீரராகவும், அரசனுடைய பரிவாரங்களில் முதன்மையானவராகவும் இருந்தனர்எனத்தோன்றும். பாரதப்போர் கி. மு. பன்னிரண்டாவது நூற்றாண்டில் நடந்ததாகப் பலரும் சம்மதித்துள்ளார். ஆகையால் பாண்டவர்க்குப் பின்னிட்டு இருபத்தைந்தாவது தலைமுறையிலுள்ள உதயணன் கி. மு. ஏழாவது நூற்றாண்டில் அரசாண்டதாக ஏற்படும். ஆகவே இற்றைக்கு இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுக்குமுன்பாகத்தமிழர் மகதநாட்டில் வாசஞ்செய்தனர்எனத்துணியலாம். அக்காலத்திலேயே தமிழரில் ஒரு பகுதியார் தென்னாட்டிலும் வந்து குடியேறியிருந்தார் என்பதற்கு ஐயம்இல்லை.

பூர்வத்திலே தமிழர் மகதநாட்டிலே குடியிருந்தார் என்றால் இக்காலத்திலும் அம்மகதநாட்டில் தமிழர் உண்டோவென்று ஆராய்வோமாயின் இந்நாளிலும் பங்காளத்திற்கு வடக்கே, நேபாளத்திற்குக் கிழக்கே "திமல்" என்னும் ஒரு ஜாதியார் மிகுதியாக வசிக்கிறார் என்று தெரியவருகின்றது. இந்தத் திமலருடைய பாஷை தமிழ்மொழிக்குப் பலவாறு ஒத்திருக்கின்றது. ஆகையால் "திமல்" என்னும் பெயரே தமிழ் என நாளடைவிலே மருவி வழங்கியதாகக் கொள்ளலாம். கங்கைக்கரையிலே முற்காலத்துள்ள முக்கியமான துறைமுகமாய "தமிழுக்" என்னும் பட்டணத்திற்கு அப்பெயர் அமைந்தது, இந்த "திமல்" அல்லது தமிழ் என்னும் ஜாதியார் விசேஷமாக அவ்விடத்தில் வசித்ததனால் என்று நினைக்கும்படியிருக்கின்றது.

மேற்கூறியவற்றால், தமிழ் தென்னாட்டிலேயுள்ள பொதியமலையிலே பிறந்ததன்று: வடநாட்டிலே இமயமலைச்சாரலிலே உண்டானதெனத் தோன்றும். அதனால் நாம் தலைப்பில் மேற்கோளாக எடுத்துக்கொண்ட வெண்பாவிலே "ஓங்கலிடைவந்து" என்னும் தொடருக்குப்பொதியமலையிலேபிறந்து என்று பொருள்கொள்ளாது ஓங்கல்களுக்கெல்லாம் ஓங்கலாகிய இமயமலையினிடத்தே தோன்றி எனப்பொருள்கொள்வதே பொருத்தமாகும்.

இதுவரையிலே "ஓங்கலிடைவந்து" என்னும் மொழிகளுக்கு உரைகூறினோம். இன்னும் அங்ஙனம் மேற்சொல்லிய வெண்பாவிற்கு உரைப்போமாயின் காலம் நீடிக்குமாதலால் இம்மட்டில் நிறுத்தச் சபையாருடைய அனுமதி கேட்போம்.

இது நிற்க: இந்த மங்கலப்பாண்டிவளநாட்டிலே, அன்னம் பயில்பொழில் ஆலவாயாகிய பழம்பதியிலே முற்காலத்திலே செங்கோல்செலுத்திச் செந்தமிழ்வளர்த்த பாண்டியமன்னரில் ஒருவரே இந்நாளிலே பிறந்து பாண்டித்துரையெனப் பெயர்வகித்து மதுரையிலே செந்தமிழ்ச்சங்கம் ஏற்படுத்தினர் என்று நாம் நினைக்கும் வண்ணம், நமது பாண்டித்துரையவர்கள் இச்சங்கத்தினை நிலைநிறுத்திச் சென்றநாலுஆண்டும் தமிழ் மாணாக்கருக்குப் பரிசளித்தும் ஏட்டிலிருந்த அரிய தமிழ் நூல்களை அச்சிடுவித்து வெளிப்படுத்தியு

ம் "செந்தமிழ்" என்னும் பத்திரிகை வாயிலாய்த் தமிழைவளர்ப்பதற்குப் பலவாறாக முயன்றும் வருவதனாலே அவர்களைத் "தமிழ்காக்கும் பெருமான்" என்றே நாம் போற்றல்வேண்டும்.

"தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்தின் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் மண்ணல் யானை
யணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே."

என்பதற்கு இணங்க இச்சங்கம் இப்பொழுது ஓர் ஆலம் வித்தைப்போன்று சிறிதாயிருப்பினும் நாளடைவிலே தழைத்துக் கிளைகள்பரப்பி விழுதுவிட்டுப் பலவிடத்தூன்றித் தமிழகமுழுவதும் நிழற்றுமென்று வாழ்த்துவோம்.

உ

சிவமயம்.

* திருக்குறள்-வீட்டின்பால்.

Theosophy of the Kural.

திருவள்ளுவதேவரின் பெருமையும் அவர் திருக்குறளின் பெருமையும் யாவரானும் அளப்பரிதென எவர்க்கும் தெரிந்ததே. நாயனார் தம் வாய்மொழியானன்றி உலகிற்கு மேலான அறத்தைத் தாமே ஒழுகியும் காட்டினார். துறவறத்தை நன்குமதித்தும், சில ஞானக் கள்ளர்களைப்போல் அத்துறையை நாடாது, இல்லறத்தினின்றுமே பிறவிக்கடலை நீந்தலாகுமென்பதனைக் காட்டி, எந்நிலையினராயினும் தத்தம் நிலைக்குரிய தொழிலைச்செய்து உயிர்வாழ்வதே மேலான ஒழுக்கமென உழைப்பின் பெருமையையும் புகட்டி, யாவர்

* இவ்வியாசம், மதுரைத் தமிழ்ச்சங்கத்து நான்காவது வருஷோற்சவ தினங்களுளொன்றாகிய 1905ஆ மேமீ 25௳ காலை, ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்கள் அக்கிராசனம் வகித்த வித்துவசபையிற் படிக்கப்பெற்றதாகும்.

மாட்டும் அன்புபூண்டொழுகுவதே மேலான அறமெனவும் நாட்டி, மனத்துறக்கமடைந்து தெய்வ பத்தியிற் சிறந்து அவருடைய அதீத பக்குவ நிலையை விளக்கிநின்றார். ஓர் ஆங்கிலேய சரித்திரக்காரர், "உலகிற் பெரியோரெனக் கொண்டாடுபவரெல்லாம் சிலகுற்றம் குறைபாடுள்ளவர்களாகக் காணப்படுகின்றார்" என்றனர். காளிதாசப்புலவரும், 'வெண்ணிலாவிற் களங்கமிருப்பது குற்றமாயினன்றோ, அம்மேன்மக்கள் குற்றமும் குற்றமாகு'மென்றனர். இவ்வுரைகள் உலகியலுக்கு எவ்விதமாக ஒப்பினும், இக்குற்றம் குற்றமேயென, நாயனார் தம்மொப்பற்ற புனிதவாழ்வினால் நிலைநிறுத்தினார். எவ்விதத் திங்கினையும் நினைத்தலும் செய்தலுமின்றி, எவ்விதப் பற்றுக்களையும் களைந்து எவ்வுயிரினிடத்தும் அன்பு பூண்டொழுகுவது அருமையினும் அருமையன்றோ ? அவ்வித அருமையும் பெருமையுமன்றோ நம் நாயனாரது.

மேல், திருக்குறளின் பெருமையைப்பற்றிப் பேசப்புகின், தமிழ்ப்புலமையில் மிகச்சிறந்த கனம் ஜீ. யூ. போப்பையரின் உரை மிகவும் கருதற்பாலது. அவர், இந்நூல் எப்பாடையினும் ஒப்புயர் வற்றதெனக் கூறியுள்ளார். இது சாமானிய உரையன்று. இலரோ, லத்தின், கிரீக் முதலிய ஐரோப்பிய பூர்வீக பாடைகளிலும், ஆங்கிலேயம், பிரஞ்சு முதலிய தற்கால பாடைகளிலும் புலமையடைந்தவரும், இந்திய பாடைகளில் அநேகம் தெரிந்தவருமாயுள்ளவர். ஆக அநேக பாடைகள் அரசுரிமைபெற்று நடக்கும் இக்காலத்திலும், இத்திருக்குறள் இப்பெரும்புகழ் பெறுமாயின், இந்நூல் பிறந்த காலத்திலேயே கல்விச் செருக்கடைந்திருந்த மதுரைச் சங்கப் புலவர்களாற் போற்றப்பட்டது என்பது ஆச்சரியமன்று. நூலாசிரியர் இழிகுலத்திற் பிறந்தவரென்றது உண்மையாகுமேல், அவர் மேனும், அவர் திருக்குறள்மேலும் புலவர்கள் பலரும் சொரிந்த புகழும் பெருக்கமடைந்தது. அச்சங்கப்புலவருள் ஒருவர் இந்நூலை வேதமென்றார். மற்றொருவர் அவ்வேதம்போலல்லாது யாவர்வாய் மடுப்பினும் இச்சொல் தன்னொற்றல்குன்றாது பயன்படும் என்றார். ஒருவர் இதனை தேவாமிர்தமென்றனர். மற்றொருவர் அவ்வமிர்தம்போலல்லாது யாவரும் பருகற்கினியதென்றார். இன்னு

மொருவர், "சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய, வந்த விரு வினைக்கு மாமருந்து" என்னவும், நமக்குமே நாவிற் சுவையூறுகின்றது. ஒருவர் நம்மகவிருளை நீக்கி மனக்கமலத்தைமலரச் செய்யும் ஞானசூரியனைக் கூறியுள்ளார். இன்னொருவர் அறம் தகழியாகவும் பொருள்திரியாகவும் இன்பம்நெய்யாகவும் செஞ்சொற் றீயாகவும் குறட்பா தண்டாகவும் அமைந்து நம்மகவிருளைநீக்கும் விளக்கென்றார். வடமொழியிலுள்ள சிலசூத்திரங்கள் போலல்லாது சுருங்கச் சொல்லுதலோடு, ஐயந்திரிபற விளங்கவைத்தலையும், சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறப்புற்றிருத்தலையும் இச்சங்கப் புலவர்கள் பாடியுள்ளார். "சர்வதர்மங்களும் சர்வசாஸ்திரவிஷயங்களும் அடங்கியிருக்கும் பெருநூலிதுவே : எல்லாப்பொருளும் இதன்பாலுள: இதன்பாலிலாத வெப்பொருளுமில்லையால்" என்னும் வாக்கியத்தால் விளக்கியிருக்கின்றார்.

மேல் கல்லாடர் என்னும் புலவர் இந்நூலின் அரியதாகிய ஒரு மேன்மையைப் பின்வரும் பாட்டாற் சிறப்பித்தனர்.

ஒன்றே பொருளெனின் வேறென்பர் வேறெனி
னன்றென்ப ராறு சமயத்தார்—நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி.

அஃதாவது, திருவள்ளுவர்வாக்கானது எல்லாச் சாஸ்திரங்களின் சாரமாயும், எல்லாச்சமயிகட்கும் சம்மதமாயுமுள்ள சமரச சித்தாந்தமாகும். ஆகவே, அன்றுதொட்டு எல்லாச்சமயிகளும் அவரைத் தம்பாலவரெனக்கொண்டு அன்புபாராட்டி வருகின்றனர். ஆதலால் அவர் வாய்மொழி பொய்யாமொழி யென்பதும், நிர்மலமாயுள்ள தென்பதும், ஒப்புயர்வற்ற நீதிசாத்திரமாயும் சமயசாத்திரமாயுமுள்ளதென்பதும் பெறப்படும்.

மேலித் திருக்குறள் அறம்பொருள் இன்பமென முப்பாலாக வகுத்துளது. இம்முப்பாலின்றிறத்தைப்பற்றித் தமிழினும் ஆங்கிலேயத்தினும் பண்டிதர் பலர் அநேகமாகப் பேசியிருந்தலின், அவற்றைப்பற்றி ஈண்டு விசாரியாதுவிடுத்தாம். ஆயின் இங்கு எடுத்த விசாரணைதான் என்னையெனின் திருக்குறளின், வீட்டுப்பாலைப்பற்றி

*

யேயாம். என்னை? ஆன்றோர் பலரும் இது முப்பால் நூலென்று கொண்டிருக்கவும், வீட்டுப்பாலும் இதன்கண் உளதென்பதற்குச் சான்றென்னையெனின், முற்கூறிய சங்கப்புலவர்களே, நம் நாயனாரை "முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்', ஆகக் கொண்டிருக்கின்றனர். இன்னும், "அறம்பொருளின்பமும் வீடென்னும் நான்கின் திறந்தெரிந்து செப்பியதேவு" என்றும், "அறனறிந்தேமான்ற பொருளறிந் தேமின்பின் திறனறிந்தேம் வீடுதெளிந்தேம்" என்றும் கூறியுள்ளார். ஆகவும் துறவறமாகிய காரணவகையானன்றி இலக்கணவகையால் வீட்டைப்பற்றிக் கூறிற்றில நூல்கள் என்று பரிமேலழகர் கூறியதனுல் துறவறத்துள் வீட்டினைப்பற்றி குறிப்பாகக் கூறினர் என்பதும் தெளிக. வீடென்பது "சிந்தையுமொழியும் செல்லா நிலைமைத்து" என்பதை ஒப்பினும், அவ்வீடென்பதும் ஒன்றுண்டோ, வீடடைபவன் எவன், வீடடையும் வழி யாது என நிகழும் வினக்களுக்கு விடைபகரும் நூல்களே ஞானசாத்திரமாக யாவரும் கொள்ளுகின்றனர். ஆகவே இவர் விஷயத்தில் நம் நாயனரின் கருத்து என்னையெனக் கொஞ்சம் கூர்ந்து விசாரிக்கப்புகுவாம். அவர் கருத்தும், "கடவுள் வாழ்த்து" என்னும் முதலதிகாரத்திலும், "நீத்தார்பெருமை" யென்ற மூன்றுமதிகாரத்திலும், "நிலையாமை" "துறவு" "மெய்யுணர்தல்" என்னுமதிகாரங்களிலும் கிடக்கக்காணலாம்.

மேல் இம்முதலதிகாரம் கடவுள்வாழ்த்தாகக் கூறினும், இதிற் கடவுளதுன்மையும், அவனது இலக்கணமும், வீடடையவிரும்புவானிலக்கணமும் அடையும் வழியும் விரித்துக்கூறியுளது. முதற்குறளில், கடவுள்தான் உண்டோ என்னும் ஆசங்கையை நீக்க, "ஆதி பகவன் முதற்றே யுலகு" என்னும்மொழிகளாற் 'காணப்பட்டதாகிய உலகம் ஒருவனுல் உண்டாக்கப்பட்டிருக்கவேண்டும்' என்னும் நியாயவாயிலாக நிலைநிறுத்தினர். இன்றுவரையும் உள்ள நூல்களிற் கடவுளதுண்மை கூறற்கு இந்நியாயந்தான் விசேடித்ததாயிற்று. இவ்விஷயமே, சிவஞானபோத முதற்சூத்திரத்தினும், பிரம்ம சூத்திரம் இரண்டாமவற்றினும் விஸ்தரித்துள்ளது. ஆதியென்ற சொல்லானது உலகத்தோற்றத்தின் மேற்று, கடவுள் ஆதியுமந்த

மும் இல்லாதவனாகையால்; "போற்றி யருள்கநின் னாதியாம் பாதமலர்" என்றதினும், ஆதியென்னும் சொல் பகவானின் சிருஷ்டிகிருத்தியத்தையே விளக்கிநின்றது. உலகு என்னும் சொல் உரைகாரர் ஈண்டுயிர்கண்மேனின்றது என்றாராகலின், ஆதிபகவன், உலகு, உயிர்கள் என முப்பொருள் உண்மையும் பெறப்பட்டது. இம்முப்பொருள்களில், கடவுளது முதன்மை கால இடவகையானன்று என்பதனை ஓர் உவமைவாயிலாக விளக்கிக் காட்டினார். இறைவன் அகரம்போலுமுயிர்: உலகுயிர்கள் மெய்போலும்உடல்: உலகுயிராகிய இருபொருள்களும் இறைவனுக்கு உடலாகும் தன்மையானே உலகென ஒன்றுபடுத்திக் கூறினார். இவ்வுவமானவாயிலாய், இறைவனுக்கும் உலகுயிர்களுக்கும் உள்ளசம்பந்தம் இனைத்தெனக் காட்டினார். இறைவனும் உலகுயிர்களும் ஒன்றோ, இரண்டோ, அன்றோ என்னும் வினாக்களுக்கு ஒன்றென்றும்; இரண்டென்றும்; அன்றென்றும் கூறாமல், அவற்றின் சம்பந்தம், உயிர் மெய்யெழுத்துக்கள் போலாமென்றனர். இச்சம்பந்தமும் என்னையெனின், உயிரெழுத்தும் விகாரத்தானன்றி, நாதமாத்திரையாய் இயல்பாற்பிறந்து தானே ஒலிக்கும் வலியுளது. மெய்யெழுத்தோ தன் இயற்கையானன்றி, உயிரோடு கூடிமட்டும் ஒலிக்கப்பெறும். அஃதாவது "அ ஆ" முதலிய உயிர்கள் தாமே ஒலிக்கலாம்: ககரமுதலிய எழுத்துக்களை ஒலிக்சப்புகுங்கால்: க (க்—|—அ)என்றேனும், இக் என்றேனும் ஒலிக்கலாமேயன்றி, அகர, இகரங்களை விடுத்து ஒலிக்க இசையா. அம்மட்டன்றி, உயிரெழுத்தினின்றும் மெய்பிறந்ததாகக்கொள்ள எவ்வித ஏதுவுமின்று. அகரத்தினின்றும் ககர சகரங்கள் எக்காலத்தினும் ஒலிக்கா. ஆகவே உயிர்மெய் யெழுத்துக்கள் ஒன்றோ வேறோ, என்னும் வினாநிகழ்த்தும்போது, ஒன்றெனின், உயிரினின்றும் மெய்பிறக்கவேண்டும்: வேறெனின், தானாகவே ஒலிக்கவும்வேண்டும். ஆகவே இவை ஒன்றுமன்று: இரண்டுமன்று. ஒன்றாகாமல், இரண்டாகாமல், ஒன்றுமிரண்டு மின்றாகாத சம்பந்தம் வேறேனும் உளதோ எனின், அச்சொற்களே அப்பொருள்களை விளக்கும். உயிர் என்னும் சொல்லே ஆன்மாவிற்கு உரியபெயராகவும், நம்முடலே மெய்யாகவும், இவ்வுடலுயிர்ச்சம்பந்தம் இனைத்தென அறிந்த பரமஞானியே தமிழ்வகுத்த அகத்தியனாராகவும், அவர் இவ்வுடலுயிர்ச்சம்பந்தம் இவ்வெழுத்துக்

களிற் கண்டுணர்ந்து அவைகளுக்கிட்ட பெயராகும். அத்தமிழை அ-உயிர், க்-மெய்யெனக் கற்கப்புகும் பாலனுமதலையும், ஞானசாத்திரத்தின் முதலெழுத்துக்களைக் கற்பவனுவன்.

மேல் நம்முடலுயிர்ச் சம்பந்தமுமே என்னையென விசாரிக்கப் புகின் இவ்விஷயம் சைவசித்தாந்த சாத்திரங்களினன்றி யேனைநூல்களிற் விஸ்தரிக்கக் கண்டிலேம். ஆனல் பேயன் என்னும் பண்டிதர் தாம் எழுதிய 'உயிர் உடல்' (Mind body) என்ற நூலிற் பின்வருமாறு சித்தாந்தப்படுத்தியிருக்கின்றார்.

"இடம்கொண்ட அசத்துடன் உயிர் ஒன்றுயிருக்கக் கண்டோம். ஆயின், உயிர் உண்மையில் இடங்கொண்டபொருள் அன்று. ஆகவே இடங்கொண்ட அசத்துடன் சேரா. இவ்வரிதாகிய சம்பந்தத்தைக் குறிக்கும் சரியான பதம் கிடைப்பது கஷ்டம். சரியான உபமானமும் கஷ்டம். மற்றெல்லாச் சம்பந்தங்களையும் நோக்க, இந்த சம்பந்தம் விபரீதவிரோத சம்பந்தமாயிருக்கின்றது."

எனினும் நம்மான்றோர் இவ்வுடலுயிர்ச் சம்பந்தத்தைக் குறிக்கவே, உயிர்மெய்யெழுத்துபமானத்தைக் கைக்கொண்டனர். பேயன் பண்டிதர் கண்டவண்ணமே நம்மவர்களும் இச்சம்பந்தமும் ஒன்றுகாம லிரண்டாகாமல் ஒன்றுமிரண்டுமின்றுகாமலென்ற, விபரீதமும் விரோதமுமாகவே காண்கின்றார்கள். எனினும் இப்பொருள்களை ஒன்றுகவும் இரண்டாகவும் எண்ணவும் கூடும். இச்சம்பந்தத்தை விளக்கச் சரியான சொல் ஏற்படாவிட்டாலும்,இஃது உண்மையாமென யாவரும் அங்கீகரிக்கற்பாலதன்றோ? ஆதலாலன்றோ நாயனர் கூறியவுண்மையும், சர்வசாஸ்திரஸாரமாகவும், சமரசஞானமாகவும் கொள்ள இடமுண்டாகிறது.

ஆகவே: இறைவன் உலகுயிர்களின் சம்பந்தம், நம்முடல் உயிர் போன்றும் உயிர்மெய்யெழுத்துப்போன்றுமுள்ளது என்பது திண்ணம். இதனுண்மை, பெய்கண்டதேவரது "அகர வுயிரின்மேல் அக்கரங்களின்றும்" என்னு மூதுரையை மனதிலழுத்த இன்னும் விளங்கும். ஸ்ரீகண்டசிவமும் தம்பாடியத்தில் உலகுயிர்கட்கு இறைவன் உயிராம் தன்மையை விளக்கியிருப்பதைச் சித்தாந்ததீபிகை 5-வது புத்தகம் 95-ம் பக்கம் காண்க.

மேலும் உயிர் மெய்யாகாது—மெய் உயிராகாது எனினும், உயிரன்றி மெய்பிறவாது மெய்யுடன் உயிர்பிரிவின்றி நிற்றலும் காண்கின்றோம். இதனால், இறைவன் சூக்குமலக்ஷணமாகிய "ஒன்று நீயல்லை யன்றியொன்றில்லை" என்பதும் விளக்கியதாமென்க.

இறைவன் உயிரென்றதினாலும், படைத்தல், ஆக்கல், அழித்தல் முதலிய தொழில்வன்மையாலும், அவன் இயற்கையறிவுடையவன் முற்றறிவனென்பதும் பெறப்பட்டது. அதுகொண்டே உலகுயிர்கள் அவன் சந்நிதியில் அறிவற்ற அசேதனம்போலும், அசைவித்தாலன்றி அசையா, அறிவித்தாலன்றி அறியா எனவும் ஏற்பட்டன. இக்கருத்தை வலியுறுத்தும்பொருட்டே, இரண்டாம் குறளில் இறைவனை 'வாலறிவன்' எனவும் இறைவனை வாழ்த்தி வணங்கி அருள்பெறாத உயிர்களின் கல்வியறிவைப் பயனற்றதாகவும் குறித்தார். கல்வியறிவின்பயனும் அவனையடையவேண்டுமென்பதும், 'தாள்' என்ற சொல்லால் அவனது பெருமையும் நமது சிறுமையும் பெற்றாம்.

(இன்னும் வரும்.)

ஜே. எம். நல்லசாமிபிள்ளை.

இடைச்சங்கம்.

ஸ்ரீரங்கத்தில், புதியதாக வெளியிடப்படும் "ஸ்ரீவாணீவிலாஸினி" என்னும் பத்திரிகையின் இரண்டாம் சஞ்சிகையிலே, "தலைச்சங்கம் மகாபாரதகாலத்தை யொட்டி யிருந்தது" என்பதற்குப் பல காரணங்கள் காட்டி ஒருவியாசமெழுதி முடித்தோம். இனி அடுத்த இடைச்சங்கநிலைமை ஆராய்வதற்கு இச் 'செந்தமிழ்' ப்பகுதியை நிலைக்களமாகக் கொண்டு தொடருவோம். தலைச்சங்கம் இன்ன காலத்தது என்பதற்குப் போதிய சாதனங்கள் காணப்பட்டன; இடைச்சங்கத்துக்கோ அவ்வாறு அதிகமின்மையால், நமது விஷயம் பெருகுதற்கு இடமில்லையாயினும், அதன் காலவெல்லையை

ஓராற்றால் முடிவுபடுத்தற்குச் சிலஆதரவுகளும் இல்லாமற் போகவில்லை. தலைச்சங்க வரலாறு போலவே, இடைச்சங்கச் செய்திகள் சிலவும் இறையனார் களவியலுரைப் பாயிரத்திலே வரையப்படுகின்றன. அவையாவன:— "இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும் "தொல்காப்பியனாரும் இருந்தையூர்க்கருங் கோழியும் மோசியும் "வெள்ளூர்க்காப்பியனும் சிறுபாண்டரங்கனும் திரையன்மாறனும் "துவரைக் கோமானும் கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மரென்ப; அவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூற்று "வர் பாடினாரென்ப; அவர்களாற் பாடப்பட்டன கலியுங் குருகும் "வெண்டாளியும் வியாழமாலையகவலுமென இத்தொடக்கத்தன "என்ப; அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபு "ராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமுமென இவை; அவர் "மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப. அவரைச் "சங்கமிரீஇயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திரு "மாறனீறாக ஐம்பத்தொன்பதின்மரென்ப; அவருட் கவியரங்கேறி "னார் ஐவர்பாண்டியரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது "கபாடபுரத்தென்ப; அக்காலத்துப்போலும் பாண்டியநாட்டைக் "கடல் கொண்டது." என வரையப்பட்டுள்ளன. இச் செய்திகளெல்லாம் கர்ணபரம்பரைகளே என்பதை, "என்ப" என்னும் முற்றுச்சொல்லானே ஒவ்வொரு வாக்கியமும் முடிந்திருத்தலால் அறியலாம். இவற்றால் அகத்தியனார் காலமுதலாக முடத்திருமாறன் காலம் வரை இடைச்சங்கம் நிகழ்ந்ததென்பது வெளியாகின்றது. இம்முடத்திருமாறன் காலத்தேதான் கடல் பாண்டியநாட்டிற் சில பகுதியை அழித்ததாகவும், அக்கடல்கோளில் அழிந்த கபாடபுரம் என்னுந் தலைநகரை விட்டு, அவ்வரசன் மதுரையைத் தன்றலைநகராக்கி அங்கே கடைச்சங்கத்தைத் தொடங்கினானெனவும் அக்களவியலுரைப்பாயிரத்து வரையப்பட்டுள்ளன. இதனால், இடைச்சங்கத்தின் முடிவும் கடைச்சங்கத்தின் ஆரம்பமும் அரசனொருவன் காலத்தே நிகழ்ந்தன என்பது தெளிவாகின்றது.

மேற்கூறிய இடைச்சங்க வரலாறுகள் ஒவ்வொன்றையும் வேறு கருவிகொண்டு உண்மையென்று சாதித்தல் இப்போது அருமை

யாயினும், அவற்றுள்ளே கடல் பாண்டிநாட்டின் ஒரு பகுதியை விழுங்கிய விவரமட்டில் உண்மையுடைய தென்பதற்குப் போதிய ஆதரவுகள் உள்ளன. கடைச்சங்கநாளிலே இக்கடல்கோட்செய்தி பேசப்பட்டு வந்தது என்பது,

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்"

எனக்கலித்தொகையிலும், (க0௪)

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடு கொடுங்கடல் கொள்ள"

எனச் சிலப்பதிகாரத்தும் வருதலால் அறியலாம். இவற்றுள்ளே பின்னதில், பாண்டிநாட்டின் தென்கோடியில் இக்கடல்கோள் நிகழ்ந்ததென்று குறிப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே, 'வடவேங்கடந் தென்குமரி யாயிடை" என்னுந்தொல்காப்பியப் பாயிரத்துக்கு உரையெழுதுமிடத்து, உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள், "மங்கலத்திசையாகலின் வடக்கு முற்கூறப்பட்டது; கடல்கோள்வதன் "முன்பு பிறநாடு முண்மையிற் றெற்கும் எல்லை கூறப்பட்டது; கிழ "க்கும் மேற்கும் பிறநாடின்மையிற் கூறப்படாவாயின" என்று எழுதிப்போகின்றார். "வினையினீங்கி" என்னும் மரபியற்சூத்திரவுரையில், பேராசிரியர்—"பனம்பாரனார் வடவேங்கடந் தென்கு "மரியாற்றினை எல்லையாகக் கூறிப் பாயிரஞ்செய்தமையின், சகரர் "வேள்விக்குதிரை நாடித்தொட்ட கடலகத்துப்பட்டுக் குமரியாறு "பனைநாட்டோடு கெடுவதற்கு முன்னையதென்பதும்" என வரைந்தனர். சிலப்பதிகாரத்து வரும் "நெடியோன் குன்றமுந் தொடியோள் பெளவமும்" என்ற வேனிற்காதை அடிகளின் உரையிலே இக்கடல்கோளைப்பற்றி அடியார்க்கு நல்லார் எழுதுவன அடியில் வருமாறு:— "முதற்சங்க காலத்துக் கவியரங்கேறிய எழுவர் பாண்டியருள் ஒருவனும் தொல்காப்பியஞ் செய்வித்தோனுமாகிய

"சயமாகீர்த்தி" என்ற நிலந்தருதிருவிற்பாண்டியன்காலத்தே, பாண்டிநாட்டுத் தென்பாலிமுகத்துக்கு வடவெல்லையாகிய "பஃறுளி" என்னும் யாற்றிற்கும் "குமரி" என்னும் யாற்றிற்கும் இடையே எழுநூற்றுக்காவத ஆறும், இவற்றின்கண்ணவாகிய ஏழ் தெங்கநாடும் ஏழ்மதுரைநாடும் ஏழ்முன்பாலைநாடும் ஏழ்பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ்குணகரைநாடும் ஏழ்குறும்பனைநாடு மென்னும் இந்நாற்பத்தொன்பது நாடும், குமரி கொல்ல முதலிய பன்மலைநாடும், காடும், நதியும், பதியும் தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின்காறும் கடல் கொண்டொழிந்தது .... இதற்கு "வடிவேலெறிந்த .... கடல் கொள்ள" எனவரும் சிலப்பதிகார அடிகளும், கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரையும், உரையாசிரியராகிய இளம்பூரண வடிகள் முகவுரையும் மேற்கோள்களாமெனவும் கூறிப் போந்தனர். நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் கூறியவாறே, தெற்கே கடலாற் கொள்ளப்பட்டவை நாற்பத்தொன்பது நாடுகள் என்று தொல்காப்பியப் பாயிரவுரையில்வரைகின்றார். இவற்றால் முற்கூறிய கடல்கோள் தமிழ்நாட்டின்றெற்கே, குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடையிலிருந்த நிலத்தை விழுங்கியதென்பது ஐயமின்றிப் போதரும். ஆனால், கடல் விழுங்கிய அவ்விடைநிலம் எழுநூற்றுக்காததூரமுடைய நாற்பத்தொன்பது நாடென்று, அதன் வகையெலாங்காட்டிச்சென்றார் அடியார்க்குநல்லார். இதனைக்குறிப்பாக ஆதரிக்கின்றார் நச்சினார்க்கினியார். நான்கு கூப்பீடு அளவுடைய காதமென்பது இப்போதைய இரண்டு மைல் தூரமாக வைத்துக்கொண்டாலும், 700-காதத்துக்கு 1400-மைலளவு நிலம் கடல் கொண்டதாக முடிகின்றது. இவ்வளவு பெருந்தூரம் அக்கடல்கோட்காலத்துப் பரதகண்டத்தில் அழிவுற்றதெனபது ஒப்பத்தக்கதாகத் தோன்றவில்லை. சிலர் பல்லாயிர வருஷங்கட்குமுன்பு, ஆபிரிகாகண்டம் ஆசியாகண்டத்துடன் ஒன்றியிருந்ததைப் பிரிவுபடச்செய்த கடல்கோட்செய்தியைக் குறிப்பதே, அடியார்க்குநல்லார் எழுதியதென்று கூறுகின்றனர். அந்நிகழ்ச்சி ஒருகால் உண்மையாயிருப்பினும், பாரதகாலத்துக்குப் பிற்பட்டதென்று தெளியப்பட்ட இடைச்சங்க வரலாற்றோடு அஃது எவ்வாற்றானும் பொருத்தமுடையதன்றாம். இவ்வா

று பஃறுளியாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடைப்பட்ட நிலம் 700-காவதநீளமுள்ளதென்று அடியார்க்குநல்லார் எழுதியது ஒருபுறம் நிற்க: அவ்வுரையாசிரியர்க்கும் முற்பட்ட சிலப்பதிகார அரும்பத வுரைகாரர் கக-ஆம் காதை கக-ஆம் அடியுரையில் "பஃறுளியாறு-குமரிப்பக்கத்ததோர் யாறு" என்றெழுதியுள்ளார். இது குமரியாறும் பஃறுளியாறும் நெருங்கியுள்ளவையே என்பதை விளக்கி, அடியார்க்கு நல்லார் கூற்றோடு முரணுகின்றது. இதனால், அவ்விரண்டாற்றுக்கும் இடைப்பட்டதொரு சிறுநாடே தென்னாட்டில் அழிந்ததாகல் வேண்டுமென்பது பெறப்படும். பேராசிரியர் எழுத்தாக நாம் முதலிற் காட்டியதில், "குமரியாறு பனைநாட்டோடு கடல்கொள்ள" என வந்த சொற்றொடரைக்கொண்டு, அவ்வாறழிவுற்ற நிலப்பகுதி பனைநாடென்று தெரியலாம். இனி, நாற்பத்தொன்பது பெருநாடுகள் அப்போது அழிந்தன என்பதற்குச் சிறந்தமேற்கோள் நூல்களிற் காணப்படவில்லையாயினும், அந்நாற்பத்தொன்பதும் அவ்விரண்டாற்றுக்கும் இடையிலிருந்த சிறு சிறு நிலப்பகுதிகளே எனக் கொள்ளின், ஒருவாறு பொருந்தலாம். எங்ஙனமாயினும், 1400-மைல் நீளமுள்ளபூமி இந்தியாவில் முற்காலத்து அழிவுற்றதென்பதற்குச் சிறந்த ஆதாரங்கள் கிடையா என்பதே நாம் கூறுவது. ஆனால், இடைச்சங்கநாளில் ஒரு கடல்கோளாற் பாண்டிநாட்டின் ஒருபகுதி முழுகிவிட்டதென்பது மறுக்கப்படாதது. அன்றியும் பாண்டியன், தன்னாட்டிற் சில பகுதியைக் கடல்கொண்டதற்குப் பிரதியாகச் சேரசோழ நாடுகளில் முறையே குண்டூர் முத்தூர் என்னுங்கூற்றங்களிரண்டை வென்றுபெற்று நிரப்பினனென்று அவ்வடியார்க்கு நல்லாரே சிலப்பதிகாரக் காடுகாண்காதை 17-22-ஆம் அடிகளின் விசேடவுரையில் வரைந்திருக்கின்றனர். முற்காலத்திலே கூற்றமென வழங்கியது இப்போது "ஜில்லா" என வழங்கும் நிலப்பிரிவுக்கும் அதிகமானதன்று. ஆக, இழந்த பாகத்துக்குப் பிரதியாகப் பாண்டியன் பெற்றது இரண்டுகூற்றங்களேயாயின், அவ்விழந்த நிலம் 1400-மைல் நீட்சியதாகுமா? இதனால், இரண்டுகூற்றம் அளவுள்ள நிலங்களே அப்போது சமுத்திரத்தால் விழுங்கப்பட்டதென்பது விளக்கமாம். பாண்டியன் சேரசோழநாடுகளினின்று தானிழந்த நிலத்துக்குப் பிரதிநிலம் பெற்றானென்பது, "மலிதிரை

*

யூர்ந்துதன் மண்கடல் வௌவலின், புலியோடு வின்னீக்கிப் புகழ் பொறித்த கிளர்கெண்டை" எனக் கலித்தொகையினும் குறிப்பாக வுரைக்கப்பட்டமை காண்க.

இனி, மேற்கூறிய அடியார்க்குநல்லார் செய்திகளில், முதற் சங்கத்துப் பாண்டியருள் ஒருவனாகிய சயமாகீர்த்தி என்ற நிலந்தரு திருவிற்பாண்டியன் காலத்தே கடல்பொங்கி 49-நாடுகளை அழித்த தென்றும், இஃது இறையனார்களவியலுரையாலும் உரையாசிரியரா கிய இளம்பூரணவடிகள் முகவுரையாலும் பெறுதும் என்றும் எழு தப்பட்டிருக்கின்றன. அவ்வுரையாசிரியர் பிரமாணமாகக்கொண்டவ ற்றுள்ளே, களவியலுரை, இடைச்சங்கத்திறுதியிலிருந்த முடத்திரு மாறன்காலமே அக்கடல்கோட்காலமென்று ஊகிக்கின்றதேயன்றி, முதற்சங்ககாலமென்று கூறிற்றில்லை. இதனை முதற்கண், யாங்கு றித்த அக்களவியலுரைப்பாயிரத்தாற்றெளிக. "முதற்சங்கத்தார் இருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரை என்ப" எனத் தலைச்சங்கவரலாறு எழுதுமிடத்து அவ்வுரையில் வரையப்ப ட்டிருப்பது, இடைச்சங்கமுடிவில் நிகழ்ந்தகடல்கோளால், தலைச்சங் கத்தவரிருந்து தமிழாராய்ந்த தென்மதுரையும் அழிவுற்றதுநோக் கிப் பின்னோர் கூறியதேயன்றி, தலைச்சங்ககாலத்து நிகழ்ந்த செய்தி யன்று. உண்டேல், அக்கடல்கோள் நிகழ்ச்சியை முதற்சங்க வரலா ற்றோடு சேர்க்காது "இடைச்சங்ககாலத்துப்போலும் பாண்டியநாட் டைக் கடல்கொண்டது" என அவ்வுரைப்பாயிரம் ஊகிக்கவேண்டிய காரணமென்னை? ஆனால், தலைச்சங்ககாலத்தில் ஒருகடல்கோளும், இடைச்சங்ககாலத்து ஒருகடல்கோளுமாக நிகழ்ந்தன என்பதற்கு ஆதாரவே கிடையாது. இறையனார் களவியலுரை ஏனையவுரைகளெ ல்லாவற்றினும் பழைமையுடையதாதலால், பிற்பட்ட ஏனையோர் கூறும் செய்திகளினும் அதிகநம்பகம்வைத்தற்கு அஃது ஏற்றது. அடியார்க்குநல்லாருரைச்செய்தி அதனோடு மாறுபடுமாயின், அவ்விர ண்டனுள் நாம் முன்னதையே பிரமாணமாகக் கொள்ளவேண்டுமென் பது இதனாற்போதரும். ஆயினும் மாறுபடுமிடங்களைவிட்டு, ஏற்பன சில அதிகமாகக்காணப்படுஞ் செய்திகளைப் பின்னூலினின்றும் தழு வுதல் குற்றமுடைத்தன்று. இம்முறையில் முற்பட்ட இறையனார்

களவியற்பாயிரத்தாலும் ஏனையோர் கூற்றுக்களாலும் இடைச்சங்கச்செய்திகளாக அறியக்கிடைப்பவை என்னவெனின் :—பாரதகாலத்துக்குப்பின்னும் கடைச்சங்ககாலத்துக்கு முன்னுமாகிய இடைச்சங்கநாளிலே ஒருகடல்கோள் நிகழ்ந்ததுண்மையென்பதும், அந்நிகழ்ச்சியிற் பாண்டியநாட்டின் தெற்கெல்லையாகவிருந்த நிலத்தில் இரண்டு கூற்றமளவுள்ள பூமி அழிவுற்றதென்பதும், அவ்வழிவுநிலம் குமரிபஃறுளியாறுகட்கு இடையிலிருந்த பழனநாடென்பதும், அந்நாடு 49-சிறுநாடுகளாகவும் பகுக்கப் பட்டிருந்ததென்பதும், அக்கடல்கோட்காலத்து இருந்த பாண்டியன் முடத்திருமாறனென்பதும், அவன் தானிழந்த நிலத்துக்குப் பிரதியாகச் சிலகூற்றங்களைச் சேரசோழநாடுகளினின்று பெற்றானென்பதும், அதுபற்றி நிலந்தருதிருவிற்பாண்டியனெனவும் சயமாகீர்த்தியெனவும் அவ்வரசன் பெயர்பெற்றான் என்பதும், அவன்காலத்தேதான் தொல்காப்பியம் வெளியிடப்பட்டதென்பதும், கடல்கோளின்பின் அவ்வரசன் தென்மதுரையை விட்டுக் கூடலைத் தன் தலைநகராக்கினனென்பதும், ஆக்கிக் கடைச்சங்கத்தைத் தானே தொடங்கினனென்பதும் பிறவுமாம். இவ்வாறு கொள்ளநேர்ந்ததற்கு இன்னொரு காரணமுமுண்டு. அடியார்க்கு நல்லார் பிரமாணமாகக் கொண்டவற்றுள், இறையனார் பொருளுரை அவர்க்கு மாறுபட்டதோடு மற்றொரு பிரமாணமாகிய இளம்பூரணர் முகவுரையும் தலைச்சங்ககாலத்தில் நிலந்தருதிருவிற்பாண்டியன் நாளிலே கடல்கோள் நிகழ்ந்ததென்று கூறியதாகவும் காணவில்லை. இதனால் அவர்செய்திகளில் ஒன்றாகிய கடல்கோட்காலத்தை உண்மையென்று கொள்ளுதல் கூடாமையாயிற்று. நாம் இவ்வாறெழுதியது சிறந்த உரையாளராகிய அடியார்க்குநல்லாரைக் குறைகூற வேண்டுமென்னும் எண்ணத்துடன் அன்று. சரித்திரமுறை முன்னுளில் அலக்ஷியஞ்செய்யப்பட்டமையால் நேர்ந்த வழுக்களிவையென்பதுமட்டும் இங்கே குறிப்பித்தோம். இது இடக்க.

இதுவரை கூறிவந்த கடல்கோள், பாரதகாலத்துக்குப் பின் பாண்டிநாட்டின் தென்பாரிசத்திலே நிகழ்ந்ததுண்டா? என்பதே இனி நாம் ஆராயவேண்டுவது. இவ்வாராய்ச்சியில் அத்திசையில் அக்காலத்தே ஒரு கடல்கோள் நிகழ்ந்ததென்பதற்குப் பிரமாணங்

கள் கிடைக்குமாயின், அதனை இடைச்சங்க காலத்தின் கடைஎல்லையாக நாம் கொள்ளுதலில் யாதோரிழுக்குமின்றாகும். மிஸ்டர் 'இ. டென்னன்டு' என்னும் ஆங்கிலபண்டிதர் எழுதிய 'சிலோன்' (Tennent's Ceylon) என்ற புத்தகத்தின் முதற்றொகுதியில், 7-ஆம் பக்கத்துக் கீழ்க்குறிப்பில் அடியில்வரும் வாக்கியங்கள் காணப்படுகின்றன :— "இந்தியாவிலிருந்து இலங்கையானது கடலோரத்தில் "உண்டாகியதோர் கலக்கத்தால் கிறிஸ்துபிறக்குமுன், 2387-ஆம் "வருஷத்தில் பிரிவுற்றதாகப் பௌத்தர்களாற் சொல்லப்படுகின்றது. இஃதன்றி, மற்றுமொருமுறை கி-மு. 504-ஆம் வருஷத்தில் "பாண்டுவாஸா" (இலங்கையரசரி லொருவன்) காலத்தில் அவ்வா "றே ஒரு சமுத்திரக்கலக்கம் உண்டாயிற்றென்றும், இதற்கு 200- "வருஷங்கட்குப்பின், கி—மு. 306-ல் ஆட்சிபுரிந்த தேவானம்பிரிய "திஸ்ஸாவின் காலத்தே கொழும்புப் பக்கத்தில் பூமியானது தன் "மட்டத்திற் றாழ்ந்து அமிழ்ந்ததாகவுங் கூறப்பட்டுள்ளன. இலங்கா "திபமான்மியங்களில் ஒன்றாகிய "இராஜாவளி" என்ற நூலில் அ "டியில் வருமாறு வரையப்படுகின்றன :—இக்காலங்களிற் கடலான "து கல்யாணி என்னும் இடத்தினின்று ஏழுலீக்அளவு தூரம் இரு "ந்தது. கல்யாணி அரசனால் துன்புறுத்தப்பட்ட 'திருநான்வலீன்' "என்னும் ஆசாரியனுக்கு நேர்ந்த துன்பங்காரணமாக, இலங்காதீப "த்தைக் காத்துவந்த தேவர்கள் சினங்கொண்டு பூமியின்மேற்கட "ல் பொங்கிவழியும்படி செய்வித்தார்கள். இராவணனுடைய கொ "டுமையால் துவாபரயுகத்தில் 25-அரமனைகளும் 4-லக்ஷந்தெருக்க "ளும் கடலால் அழிக்கப்பட்டதுபோலவே, இப்போது திஸ்ஸா "ராஜா காலத்திலே லக்ஷம் பெரும்பட்டணங்களும் 910-செம்பட "வர் ஊர்களும், முத்துக்குளிப்போர் வசித்த 400-கிராமங்களும் "ஆக மொத்தம் கல்யாணி ராஜ்ஜியத்தில் 12-ல் 11-பாகம் கடலால் "விழுங்கப்பட்டது. (இராஜாவளி Vol. II. pp. 180,190.)" என்பன. இச்செய்தி மகாவமிசத்தில் இன்னுஞ்சிறிது பிற்காலத்தே நிகழ்ந்ததாகச் சிற்சிலமாறுதலுடன் அதன் 22-ம் அத்தியாயத்துக்கூறப்படுகின்றது.* இவற்றால் இற்றைக்கு 4292-வருஷங்கட்குமுன் நிக

* The Tamils 1800-years ago. pp. 21.

ழ்ந்த முதற்கடல்கோள், ஒன்ருகவிருந்த இலங்கை இந்தியாக்களைப் பிரித்துவிட்டதென்பதும், இரண்டாங் கடல்கோள், கி-மு. 6-ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தே நிகழ்ந்ததென்பதும், மூன்ருங் கடல் கோள் மூன்ரும் நூற்ருண்டில் நடந்ததென்பதும் விளங்கின. இவற் றுள் முதலாஞ்செய்தி, கி-மு. 12-ம் நூற்ருண்டினதென்று தெளியப் பட்ட பாரதகாலத்துக்குப் பெரிது முற்பட்டிருத்தலோடு, இலங்கை யும் இந்தியாவும் ஒன்ருயிருந்த பழங்காலத்து விஷயமாகவும் இருத் தலால், அதனைப் பிந்திய இடைச்சங்ககாலத்து நிகழ்ச்சியாகக் கூறு தல் பொருந்தாது. கி-மு. ஆரும் நூற்ருண்டின் தொடக்கத்து இல ங்கைத் தீவத்தின் தென்மேற்றிசையில், (அஃதாவது கன்னியாகும ரிச் சார்பாயுள்ளகடற்பிரதேசத்திலே)நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் கடல்கோள், தலைச்சங்கமிருந்த பாரதகாலத்துக்குச் சிலநூற்ரு ண்டுக்குப்பின் நிகழ்ந்ததாகத் தெரிதலால், அதனை முடத்திருமாறன் காலத்து நிகழ்ச்சியாக ஒப்புக்கொள்ளலாம். அஃதன்றேல், மூன்ருவ தாகக்கூறப்படும் கி-மு. 3-ம் நூற்ருண்டில் நிகழ்ந்த கடல்கோளாக வே கொள்ளப்படும். எங்ஙனமாயினும் கி-மு. 6-ஆம் நூற்ருண்டுக்கு ம் கி-மு. 3-ம் நூற்ருண்டுக்கும் மத்தியகாலமே இடைச்சங்கவரலாற் றிற்கண்ட கடல்கோட்காலமென்பதற்கு யாதோரிழுக்குமில்லை. ஆக வே, முடத்திருமாறனுகிய நிலந்தருதிருவிற்பாண்டியன் காலமும், 'நி லந்தரு திருவிற் பாண்டிய னவையத்து' என்பதனுல் அப்பாண்டியன் காலத்துச் செய்யப்பட்டதாகவிளங்கும் தொல்காப்பியக் காலமும் அந்நூற்ருண்டுகட்கிடைப்பட்டதென்பதும் தானே பெறப்பட்டது.

இக்கடல்கோட் காலத்தவனுகிய முடத்திருமாறனுக்கு முந்தி யிருந்த பாண்டியன் "பல்யாகசாலை முதுகுடுமி" என்பான். இவன் பஃறுளியாறும் பிறவும் கடல்கொண்டொழிதற்கு முன்பே இருந் தவனென்று அறியப்படுகின்றது. நெட்டிமையார் என்னும் பழம் புலவர் இவனைப்பாடிய பாடலொன்றில் (புறம்-கூ.)

> "எங்கோ வாழிய குடுமி தங்கோச்
> செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
> முந்நீர் விழவி னெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே."

எனப்பஃறுளியாற்றைச் சுட்டிக்காட்டி 'அவ்யாற்று மணலினும் பல காலம் நீ வாழ்வாயாக' என்று அம்முதுகுடுமி என்ற பாண்டியனை வாழ்த்துதலால், அவ்வரசன் மேற்கூறிய கடல்கோட்கு முன்பிருந்தவனென்பது துணியப்படும். பாண்டியன் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடிமருதனார் பாடிய மதுரைக்காஞ்சியில்,

"பால்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டுண்ட புகழ்சால்சிறப்பின்
நிலந்தரு திருவி னெடியோன் போல
..............மகிழ்ந்தினி துறைமதி."

என்னும் அடிகளில், நிலந்தருதிருவிற்பாண்டியன் அவையத்து (இடைச் சங்கத்து) விளங்கிய 'நான்முறைமுற்றிய' அதங்கோட்டாசான், தொல்காப்பியனார், பனம்பாரனார் முதலிய நல்லிசைப் புலவர்பெருமக்களைக் குறிப்பித்து, அவரெல்லாம் முதுகுடுமிபோல வேள்வித்துறையிற் பேர்போனவரென்றும், அப்புலவர் கூட்டரவை (சங்கத்தை)ப்பெற்றநிலந்தருதிருவிற்பாண்டியன்போல நீயும் விளங்குகஎன்றும் புகழப்பட்டிருத்தல் கண்டுகொள்க. [சங்கமென்ப துண்டென்பதற்குப் பழம் பிரமாணங்களில்லை எனக்கூறுவோர், "தொல்லாணை நல்லாசிரியர், புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின், நிலந்தருதிருவினெடியோன்" என மேற்குறித்த அடிகளாற் போதரும் சரித்திரவுண்மையை நுணுகி ஆராயக்கடவர்] இவ்வடிகளிற் சரித்திரவுண்மை அமைந்திருத்தலை ஓராது, ஆசிரியர் நச்சினார்க்கினியர் வேறுபொருள் கூறினார். இனி, மேற்கூறிய முதுகுடுமியைப்பாடிய காரிகிழார், நெடும்பல்லியத்தனார் என்னும் புலவரும் (புறம்-௬, ௬௪) அக்கடல்கோட்கு முற்பட்டிருந்தவராதல் சொல்லாதே விளங்கும். இவருள், காரிகிழார் அம்முதுகுடுமியைப்பாடிய புறநானூற்று ௬-வது பாடலில்,

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅ துருகெழு குமரியின் றெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்."

என்புழி, பரதகண்டத்தின் தெற்கெல்லையாக அமைந்த குமரி என்பது கடலோ ஆறோ என்னும் ஐயத்தை நீக்குதற்கு, கிழக்கும் மேற்கும் கடலெல்லை கூறி, தெற்கெல்லையும் அதுவென்று கூறாது, நதியேயென்பதுபட 'குமரியின் தெற்கும்' எனக்கூறினமை காண்க. அப்புலவர்க்குப் பிற்காலத்திற் கடல் அவ்யாற்றை அழித்துக் கடலாக்கினமையால், பின்னிருந்தவரெல்லாம் "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்" எனவும் "வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத், தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும், வரைமருள் புணரியொடு பொருது கிடந்த, நாட்டியல் வழக்கம்" எனவும் இவ்வாறே வழங்குவாராயினர். இச்செய்தியைப் பிற்காலத்துக் கல்வியிற் பெரியாரும் "கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள், பொன்னி கரையழிந்து போனாளென், றிங்கீ, ருரைகிடக்க லாமோ வுலகுடைய தாயே, கரைகடக்க லாகாது காண்" (செந்தமிழ்த்தொகுதி-௩; பக்-அ) எனக் காவிரியைப் பாடியவிடத்துக் குறிப்பிட்டமை காண்க.

தலைச்சங்கத்தவரைப் பற்றித் தெரிந்த சில செய்திகளளவும், இடைச்சங்கத்தவர்க்கு அறியக் கூடவில்லை. அவ்விடைச்சங்கத்தவரில் துவரைக்கோமான் என்பான் ஒருவனுளன். இவன் கண்ணபிரான் வழியினராய்த் தென்னாடு வந்து ஆண்ட *வேளிர் வழியினனே என்று கருதப்படுகின்றான். இனி, தொல்காப்பியரும் அக்காலத்தவராகக் கொள்ளப்படுகின்றார். இவரை சமதக்கினி முனிவர் புத்திரர் எனவும், திரணதூமாக்கினி என்னும் இயற்பெயரினர் எனவும், அகத்தியர் மாணாக்கரெனவும் கூறுவர். உரையாசிரியர் "தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றி" என்பதனுரையில், தொல்காப்பியன் "பழைய காப்பியக்குடி யிலுள்ளோன்" எனப் பொருள் கூறினார். இவ்வாறு ஓர் குடி முற்காலமுதலே உள்ளதென்பது "காப்பியத் தொல்குடி கவின்பெற வளர்ந்து" என்னும் சிலப்பதிகார அடியால் தெரிகின்றது. இக்குடிப்பெயர் வெள்ளூர்க் காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார், பல்காப்பியனார் முதலிய பழம்புலவர்க்கு வழங்கி வந்தது. சோணாட்டில் சீகாழிக்கடுத்

---

* இவ்வேளிர் இன்னாரென்பது சென்ற பகுதியிற் 'செந்தமிழ்' உதவிப்பத்திராசிரியரால் நன்குவிளக்கப்பட்டுள்ளது.

துக் காப்பியக்குடி என்னும் ஓர் ஊர் உள்ளதாகத் தெரிகின்றது; காப்பியக்குடியினராய பார்ப்பார் பலர்க்கு உரித்தானமைபற்றி அஃது அப்பெயர்பெற்றதுபோலும்! "காப்பியம்" என்னும் ஒரு குடி வேதத்திலே வழங்கப்படுவதாகவும் தெரிகின்றேம். தொல்காப்பியரியற்றிய இலக்கணநூலாற் பல விஷயங்கள் அறியக்கிடப்பன வாயினும், ஈண்டு விரிவஞ்சி விடுக்கப்பட்டது. இடைச்சங்கத் திறுதியினும், முதற்சங்கத்து ஆரம்பத்தினும் இருந்த முடத்திருமாறன் பாடலொன்று, எட்டுத்தொகையுள் ஒன்றாகிய நற்றிணையில் கoடு-ஆம் செய்யுளாக உள்ளது. அவ்வரசன் காலத்தவரும், தொல் காப்பியப் பாயிரஞ் செய்தோருமாகிய பனம்பாரனர் பாட்டொன்றும் குறுந்தொகை நுஉ-செய்யுளாகக் காணப்படுகின்றது.

இனி, மதுரையிலே சிலவருஷங்கட்கு முன்பு "செங்கோன் தரைச்செலவு" என்னும் ஒரு நூல் அச்சிடப்பட்டுள்ளது. அந்நூலால், அது பஃறுளியாறு கடல்கொள்ளப்படுதற்குமுன்பு இயற்றப் பட்டதென்று தெரிகிறது. இதுபாடிய புலவர் 'முதலூழித்தனியூர்ச் சேந்தன்' என்பார். ['முதலூழி - முன்னே கடல்கொள்ளப்பட்ட பெரும்பரப்புத் தமிழ்நிலம்' என்று அந்நூலுரையிற் காண்டலால், இப்பெயரிற்கண்ட 'முதலூழி' என்பது யுகமில்லை. பிற்காலத் தார், அச்சொல் காலத்தைக் குறிப்பதாகக்கொண்டு, தலையிடைச் சங் கங்கள் கிருதயுகத்திலிருந்தன என்று கூறினர்.] இந்நூலில் சுஉ-பாடலும் அவற்றின் உரையுமே இப்போது காணப்பட்டன. இது பெருவளநாட்டரசனாகிய 'செங்கோன்' என்பான், வேற்றரசரது மண்வேட்டுப் படையெடுத்து வென்ற சிறப்பைப்பற்றியது. இந்நூலானும் உரையானும் ஏழ்தெங்கநாடு, பெருவளநாடு என்னும் நாடுகளும், பேராறென்னும் நதியும், மணிமலை என்னும் மலையும், முத்தூர் என்னும்மூரும், சக்கரக்கோ, அகத்தியன், நெடுந்துறையன், இடைக் கழிச்செங்கோடன் எனப்புலவர் சிலரும், பெருநூல், இயனூல், எனச் சிலநூல்களும், தாப்புலி என்னும் பாவிகற்பமும் பிறவும் தெரிகின்றன. இந்நூலாற் சிறப்பிக்கப்பட்ட செங்கோன் என்பவன், சூரிய வமிசத்தவனாகவும், ஏற்றுக்கொடியினனாகவும் கூறப்படுகின்றான். இவனாட்டைச்சார்ந்து பேராறென ஓராறும், வழிக்கழி என ஒருகட

ற்பகுதியும் இருந்தனவாகச் சொல்லப்படுகின்றது. இவ்வளவு செய்தி கொண்டதும் மிகப்பழமையானதுமாகிய இந்நூலைப் பண்டையுரையாசிரியரெவரும் எடுத்தாளாமைக்குச் சிறந்த காரணம் இன்னதென்று தெரியவில்லை. இதன் அமைப்பாற் பழமை விளங்குகின்றதாயினும், இதனை யெடுத்தாளுதற்குப் பண்டையோர் ஆட்சியில்லாக்குறை தடையாகின்றது.

இதுகாறும் கூறிவந்தவற்றால், இடைச்சங்கமென்பது, கி.மு. 12 ஆம் நூற்றாண்டதாகிய பாரதயுத்தத்துக்குப்பின், கி. மு. 6-அல்லது 3-ஆம் நூற்றாண்டுவரை—அஃதாவது நமக்கு 2500 அல்லது 2205 வருஷங்களுக்குமுன்— இருந்ததாகத் துணியலாம்.

ஐயன் ஆரிதன்.

உ

சிவமயம்.

புலவிநுணுக்கம்.

புலவிநுணுக்கம் புலவியினது நுணுக்கம் எனவிரியும். இங்கே புலவியென்றது புலவிக்காரணங்களை. அவை சொல், செயல், வடிவு வேறுபாடு முதலாகப் பலவகைப்படும். இப்புலவிநுணுக்கம் தலைமகள் தலைமகன்மாட்டுப் புலத்தற்காரணமிலதாகவும் காதல் கைம்மிகுதலால் உளதாகவுட்கொண்டு அதனை அவன்மேலேற்றிப் புலந்தலினாலே இன்பத்தை மீதூரச்செய்வதற்குச் சிறந்ததொன்றென்பது நன்குதெளியப்படும். இதனுடைய சிறப்புப்பற்றியே இதனைத் திருவள்ளுவனார் ஓரதிகாரமாக வைத்துக்கூறினார். ஏனைய கவிநூலாசிரியருள்ளும் பலர் தாம்தாம் இயற்றிய நூல்களுள் ஆங்காங்கு எடுத்தோதியிருக்கின்றார்கள். அவற்றுட் சில மேற்காட்டப்படும். அது நிற்க:

நம் செந்தமிழ்நாட்டுக் கவிஞர்போல இன்பங்கூறுவதிற் சிறந்தார் பிறர் இலர். அஃது அவர்களாலே இயற்றப்பட்ட பற்பல நூல்

களானே தெளியப்படும். அவர்கள் இன்பங்கூறும் வித்தகத்தினுள் வைத்து ஓர் வித்தகமாகக்கூறியது இப்புலவிநுணுக்க மென்னலாம். நம் தொல்லாசிரியர்கள் இன்பநூலைக் கடைபோக ஆய்ந்தனர் என்பது, அதிநுட்பமான இப்புலவிநுணுக்கமொன்றுகொண்டே துணியலாம். இப்புலவிநுணுக்கம் அதிநுட்பமுடைத்தென்பது "நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்—யாருள்ளி நோக்கினீ ரென்று' என்னுந் தேவர்வாக்கானே அறியப்படும். அதுநிற்க: மேலே புலவிக்காரணங்கள் சொல், செயல், வடிவுவேறுபாடு முதலாகப் பலவகைப்படும் என்றதை இங்கே விளக்கிக்காட்டுதும்.

க-வது சொற்காரணமாக வந்த நுணுக்கம்.

திருவள்ளுவர் குறள்.

புலவிநுணுக்கம்.

யாரினுங் காதல மென்றேனா வூடினாள்
யாரினும் யாரினு மென்று. என்பது (ச) குறள்.

'யாரினுங் காதலம்' என்ற தலைவன்கூற்றிலே தலைவி நுணுகிச் சென்றுளாதலின், இது சொற்காரணமாக வந்த நுணுக்கமாயிற்று. காமநுகர்ச்சிக்குரியாராகிய இருபாலாரினும் யாமிருவரும் மிக்க காதலையுடையேம் என்னுங் கருத்தால் 'யாரினுங்காதலம்' என்று தலைவன் கூற, அதனைத் தலைவி என்னால் விரும்பப்பட்ட மகளிர் பலருள்ளும் நின்மாட்டு விருப்பமுடையேன் எனக் கூறினான் எனக்கருதியதே நுணுக்கம். தன்னால் விரும்பப்பட்ட மகளிர் பலருளர் என்னுங் கருத்துடையவனாய் 'யாரினுங்காதலம்' என்று தலைவன் கூறினானல்லனாகவும், அங்ஙனங் கூறினானாகவுட்கொண்டு 'யாரினும் யாரினும்' என்று தலைவி புலந்தமை காண்க.

இதுவுமது.

இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள். என்பது (ரு) குறள்.

'இம்மைப்பிறப்பிற் பிரியலம்' என்ற தலைவன் கூற்றிலே தலைவி நுணுகிச்சென்றுளாதலின், இது சொற்காரணமாக வந்த நுணுக்க

மாயிற்று. காதன்மிகுதியால் 'இம்மைப்பிறப்பிற் பிரியலம்' என்று தலைவன்கூற, அதனைத் தலைவி மறுமைக்கட்பிரிவேன் என்னுங் குறிப்பினன் எனக்கருதியதே நுணுக்கம். 'மறுமைக்கட்பிரிவேன் என்னுங் கருத்துடையவனாய் 'இம்மைப்பிறப்பிற் பிரியலம்' என்று தலைவன் கூறினனல்லனாகவும், அங்ஙனங்கூறினனாகவுட்கொண்டு தலைவி புலந்தமை காண்க.

இதுவுமது.

உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள். என்பது (௬) குறள்.

'உள்ளினேன்' என்ற தலைவன் கூற்றிலே தலைவி நுணுகிச்சென்றுளாதலின், இது சொற்காரணமாகவந்த நுணுக்கமாயிற்று. பிரிந்தகாலத்தும் நின்னை இடைவிடாது நினைந்திருந்தேன் என்னுங் கருத்தால் 'உள்ளினேன்' என்று தலைவன்கூற, அதனைத் தலைவி அருத்தாபத்திவகையினாலே உள்ளாதும் இருந்திருக்கவேண்டுமென்று கருதியதே நுணுக்கம். மறத்தற்குறிப்புத் தலைவனிடத்திலதாகவும் உளதாகக்கொண்டு 'மற்றென் மறந்தீர்' என்று தலைவி புலந்தமை காண்க.

இதுவுமது.

கந்தபுராணம்.

தெய்வயானை திருமணப்படலம்.

மின்னார் தமக்கோ ரரசேவெறி வேங்கை வீயும்
புன்னாக வீயுங் கொணர்ந்தேன்புனை கிற்றி யென்ன
மன்னா வுனக்குப் பலருண்டுகொன் மாத ரென்னாத்
தன்னாவி யன்னான் றனைச்சீறியொர் தையல் போனாள்.
என்பது (௧௯௩) செய்யுள்.

'மின்னார்தமக்கோரரசே' என்ற தலைவன் கூற்றிலே தலைவி நுணுகிச் சென்றுளாதலின், இது சொற்காரணமாகவந்த நுணுக்கமாயிற்று. தலைவன், மகளிரிற்சிறந்தாளாதலினாலே 'மின்னார்தமக்கோரரசே' என்றுகூற அதனைத் தலைவி தன்னால் விரும்பப்பட்ட மகளிர் பலர்க்கும் அரசாயுள்ளவள் என்பது கருதிக் கூறினன் எனக் கருதியதே நுணுக்கம். தன்னால் விரும்பப்பட்ட மகளிர் பலருளர்

என்னும் கருத்துடையவனாய் 'மின்னார்தமக் கோரரசே' எனக்கூறி னானல்லனாகவும், அங்ஙனங் கூறினானாகவுட்கொண்டு 'மன்னாவுனக்குப்பலருண்டு கொன்மாதர்' என்று தலைவி புலந்தமை காண்க.

இதுவுமது.

இராமாவதாரம்.

பூக்கொய்படலம்.

செம்மாந்த தெங்கி னிளநீரையொர் செம்ம னோக்கி
யம்மாவிவை மங்கையர் கொங்கைக ளாகு மென்ன
வெம்மாதர் கொங்கைக் கிவையொப்பன வென்றொ ரேழை
விம்மா வெதும்பா வியராமுகம் வெய்து யிர்த்தாள்.

என்பது (கஎ) செய்யுள்.

'மங்கையர் கொங்கைகளாகும்' என்ற தலைவன் கூற்றிலே தலைவி நுணுகிச்சென்றுளாதலின் இது சொற்காரணமாக வந்த நுணுக்கமாயிற்று. தலைவன் பொதுவாக மங்கையர் கொங்கைகளை யொப்பாகும் என்றுகூற, அதனைத் தலைவி தன்னால் விரும்பப்பட்ட மகளிர் பலருளராதலினாலே பொதுவாகக் கூறினான் எனக்கருதியதே நுணுக்கம். தன்னால் விரும்பப்பட்ட மகளிர் பலருளர் என்னுங் கருத்துடையவனாய் 'மங்கையர் கொங்கைகளாகும்' எனக்கூறினானல்லனாகவும், அங்ஙனங் கூறினானாகவுட்கொண்டு 'எம்மாதர் கொங்கைக்கிவையொப்பன' என்று தலைவி புலந்தமை காண்க.

இதுவுமது.

போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொ டிண்டோள்
மாரன் னனையான் மலர்கொய்திருந் தானை வந்தொர்
காரன்ன கூந்தற் கயலன்னவள் கண்பு தைப்ப
வாரென்ன லோடு மனலென்ன வெய்து யிர்த்தாள்.

என்பது (கஅ) செய்யுள்.

'ஆர்' என்ற தலைவன்கூற்றிலே தலைவி நுணுகிச் சென்றுளாதலின் இது சொற்காரணமாக வந்த நுணுக்கமாயிற்று. தலைவன் ஆர் என்று இயல்பாக வினவ, அதனைத்தலைவி பொதுவாக வினவியதினால் இவற்கு என்போல விளையாடற்குரியராய மகளிர் பலருளர்போலும்

என்று கருதியதே நுணுக்கம். தன்னால் விரும்பப்பட்ட மகளிர்பல ருளரென்னுங் கருத்துடையவனைய் 'ஆர்' என்று வினவினனல்லனாக வும் அங்ஙனம் வினவினனாகவுட்கொண்டு தலைவி புலந்தமைகாண்க.

உ-வது செயல்காரணமாக வந்த நுணுக்கம்.

திருவள்ளுவர் குறள்.

புலவிநுணுக்கம்.

தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரிந்நீர ராகுதி ரென்று. என்பது (௬) திருக்குறள்.

'உணர்த்துதல்' ஆதிய தலைவன் தொழிலிலே தலைவி நுணுகிச் சென் றுளாதலின், இது செயல்காரணமாக வந்த நுணுக்கமாயிற்று. தலைவன் தன்னை யுணர்த்துமாறு பணிய, அதனைத் தலைவி பிறமகளிர் க்கும் இங்ஙனமே ஆவான் என்றுக்கருதியதே நுணுக்கம். புலத்தற் காரணம் நாயகனிடத்திலதாகவும், தன்னைப்பணிந்ததுபோலவே பிற ரையும் பணிதற்கு ஆவானென்று கருதி 'பிறர்க்குநீரிந்நீரராகுதிர்' என்று தலைவி புலந்தமை காண்க. ஏனைய குறள்களும் இச்செயல் காரணம்பற்றி வந்தனவாதலின் அவற்றிற்கும் அங்ஙனமே ஏற்பன வாக வுரைக்க.

இதுவுமது.

இராமாவதாரம்.

உண்டாட்டுப்படலம்.

கொள்ளைப்போர் வாட்க ணாளங் கொருத்தியோர் குமர னன்னான்
வள்ளற்று ரகலந் தன்னை மலர்க்கையாற் புதைப்ப நோக்கி
உள்ளத்தா ருயிரன் னாண்மே லுதைபடு மென்று நீயின்
கள்ளத்தாற் புதைத்தி யென்னா முன்னையிற் கனன்று மிக்கார்.

என்பது (௫௧) செய்யுள்.

'அகலந்தன்னை மலர்க்கையாற் புதைத்தல்' ஆதிய தலைவனுடைய தொழிலிலே தலைவி நுணுகிச்சென்றுளாதலின், இது செயல்காரண மாகவந்த நுணுக்கமாயிற்று. கடினமாகிய மார்பிற்படின் அடி வருந்துமென்று கருதித் தலைவன் தன்மார்பைப் புதைப்ப, அதனைத் தலைவி தன்னுள்ளத்திலிருப்பாளுக்குப் படுமென்று புதைத்தான் எ

னக்கருதியதே நுணுக்கம். தன்மனத்திலொருத்தியுள்ளாள்; அவ ளுக்குப் படும் என்னும் கருத்துடையவனாய் நாயகன் புதைத்தானல் லனாகவும், அங்ஙனம் புதைத்தானாகவுட்கொண்டு 'உள்ளத்தா ருயி ரன்னாண்மே லுதைபடுமென் றுநீயின்—கள்ளத்தாற் புதைத்தி' என் று தலைவி புலந்தமைகாண்க.

௬-வது வடிவு வேறுபாடுகாரணமாக வந்த நுணுக்கம்.

கந்தபுராணம்.

தெய்வயானை திருமணப்படலம்.

உட்டெளி வில்லா நங்கை யொலிபுனற் றடத்தி னூடும்
கட்டழ குளதோர் காளை கவிரிதழ் வெளுப்பு நோக்கிக்
கிட்டியா னிற்க வுன்றன் கேழ்கிள ரதரத் தெச்சி
லிட்டன ளியாரிங் கென்னா வெகுளிகொண் டிகலிப் பேணாள்.

என்பது (கஉஎ) செய்யுள்.

'இதழ்வெளுப்பு' ஆதிய தலைவனுடைய வடிவு வேறுபாட்டின் கண் ணே தலைவி நுணுகிச் சென்றுளாதலின் இது வடிவுவேறுபாடு கா ரணமாகவந்த நுணுக்கமாயிற்று. நீராடுதல் காரணமாக இதழில் வெளுப்புண்டாக, அதனைத் தலைவி புணர்ச்சிகாரணமாக வந்ததாகக் கருதியதே நுணுக்கம். நீராடுதல் காரணமாக வந்த வெளுப்பைப் புணர்ச்சிகாரணமாக வந்ததாகவுட்கொண்டு 'கிட்டியானிற்கவுன்றன் கேழ்கிளரதரத்தெச்சி—லிட்டனளியாரிங்கு' என்று தலைவி புலந்த மை காண்க.

சி. கணேசையர்.

பராந்தகன் I.

இப்பத்திரிகையிற் சிற்சில பழங்கோயில்களிற் கண்ட சாசனங் கள் ஆங்காங்கு வரையப்பட்டுவருகின்றன. அவற்றைப்படிப்பவர் க்குதவியாகப் பின்வருவன எழுதப்படும். சென்றமாதப்பத்திரிகை யில் ஸ்ரீமாந்-நடேசசாஸ்திரியாரவர்கள் திருவெள்ளறை என்னுமிட

த்துள்ள சிலபழஞ்சாசனம் எழுதியிருந்தார். அவற்றிற் கூறப்பட்ட சோழமகாராஜனைக்குறித்துச் சாதனவாராய்ச்சியாற் பற்பலவிடத்தும் இதுகாறும் கொள்ளப்பட்ட வரலாறு பின்வருவன:—

இச்சோழ சக்கரவர்த்தியின் பெயர் கல்வெட்டுக்களிற் பெரும்பாலும் 'மதிரைகொண்ட கோப்பரகேசரிபன்மர்' அல்லது 'மதிரையும் ஈழமுங்கொண்ட கோப்பரகேசரிபன்மர்' எனவழங்கும். இவர் விஜயாலயன் மகனான ஆதித்தசோழனது குமாரர்.[1] பராந்தகன் வீரநாராயணன் என்பன இவர் மறுநாமங்கள்.[2] இவர் கி-பி. 905[3] ஆம் வருடம் தொடங்கி சோழசிம்மாசனமேறி அரசுசெலுத்துவாராயினார். இவரது இராச்சியபாரம் சற்றேறக்குறைய நாற்பதுவருடங்களென ஊகிக்கப்படுகின்றது. கோக்கிழானடிகளெனும் பட்டப்பெயர்பூண்ட இவரது மனைவியார் கேரளதேசத்தரசன் புதல்வி.[4] இவருக்கு இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்ஜயன் என மூவர் மக்களிருந்தனராகத் தெரியவருகிறது. அவர்களில் இராஜாதித்தன் சிவபக்தியிற் சிறந்து விளங்கினனாய்த் திருநாமநல்லூரில் ஓர் சிவாலயஞ் சமைத்தான். திருநாமநல்லூரும் அவன் பெயரானே இராஜாதித்தபுரமென வழங்கிற்று. இக்கோயிலுக்கு அவனும் அவனைச்சார்ந்தாரும் பலபரிசளித்தும் பரிபாலித்தார்களென்பது அவ்விடத்துள்ள கல்வெட்டுக்களாற் போதருவது. அவர் மனைவியார் மிலாட்டரையர் (மலைநாட்டரையர்) புத்திரியாகிய மஹாதேவடிகள். போர்க்கோலங்கொண்டு இராஷ்டிரகூடத்தரசனான மூன்றாவது கிருஷ்ணனோடு தக்கோலம் என்னும் இடத்துப் போர்புரியும்பொழுது, அன்னானுடைய சிற்றரசனும், அவன் உடன்பிறந்தாளை மணந்தானுமாகிய பூதுகன் என்பவனாற் கொல்லப்பட்டான். இது நிகழ்ந்தது கி-பி. 949-இல்[5]

---

1. South Indian Inscriptions: Vol. I. p. 112.
2. Do. Vol. II. No. 76.
3. Epigraphia Indica: Vol. VII. Dates of Chola kings.
4. No. 335 of Government Epigraphia list for 1902.
5. Epigraphia Indica: Vol. V. p. 167.

பராந்தகனது இரண்டாங்குமாரரான கண்டராதித்தர் என்பார் காவிரியின் வடகரையிற் றன்பேரால் ஓரூர் அமைத்தார். இவர் மனைவி உடையபிராட்டியார் செம்பியன் மாதேவியார். கண்டராதித்தர் என்னும்பெயர் இவரொருவற்கன்றி வேறியாருக்கும் இருந்ததாகக் காணப்படாமையின், நம்பியாண்டார்நம்பி தொகுத்த ஒன்பதாந் திருமுறைக்கண் 'மின்னுருருவமேல்' என்றற்றொடக்கத்துப் பதிகம் இவராலியற்றப்பட்டிருக்கலாமென்பது அப்பதிகத்தின் ஈற்றுச் செய்யுளாகிய—

சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடிதன்னைக்
காரார்சோலைக்கோழிவேந்தன்றஞ்சையர்கோன்கலந்த
வாராவின்சொற்கண்டராதித்தனருந்தமிழ்மாலைவல்லார்
பேராவுலகிற்பெருமையோடும்பேரின்பமெய்துவரே.

என்ற பாவினால் விளங்குதலோடு, எட்டாஞ்செய்யுளில் 'வெங்கோல் வேந்தன் றென்னனாடு மீழமுங்கொண்டதிறற்,செங்கோற் சோழன் கோழிவேந்தன் செம்பியன்' என்றஇவ்விரண்டடிகளாற் பெறப்படுவோன் இவர் தந்தையேயாவனென்பதும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க.

மூன்றாங்குமாரனான அரிஞ்ஜயன் என்பானுக்கு அரிகுலகேசரி யென்றொரு மறுபெயருண்டு. இதுநிற்க; பராந்தகன்காலத்து நடந்த சிலவிஷயங்களை ஈங்கு எடுத்துக்கூறுவோம். 'மதிரையும் ஈழமுங்கொண்ட' என்பதனால் இவர் பாண்டியநாட்டையும் இலங்கைத் தீவையும் வென்றார் என்பது பெறப்படும். அவ்வாறு கோடற்கு மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களிற் காணப்படும் இவரது கற்சாஸனங்களும் பின்னெடுத்துக் காட்டியிருக்கும் மஹாவமிசவிருத்தாந்தமும் தக்கசான்றாம். அன்றியும், கலிங்கத்துப்பரணியிற் சோழசக்கரவர்த்திகளின் இராசபாரம்பரியத்தில் இவரைக் கூறுமிடத்து, ஜயங்கொண்டார் 'ஈழமுந்தமிழ்க் கூடலுஞ்சிதைத் திகல்கடந்ததோ ரிசைபரந்ததும்' என்றார். இவ்வரசரால் வெல்லப்பட்ட பாண்டிய அரசன் இராஜசிம்மன் என்பான்.[6] இப்பாண்டியனுக்கு உதவிபுரியும் பொருட்டு ஈழத்தரசனால் அனுப்பப்பட்ட தானையும் சோழனால் தோற்கடிக்கப்பட்டதென்பது கி-பி. 920-ல் வரையப்பட்ட உதயேந்

6. South Indian Inscriptions: Vol. II. Udayendram plate.

திரத்துச் செப்பேட்டால் விளங்கும். உதவியாகவந்த சிங்களர் தானையை வென்றமாத்திரத்தானே ஈழமுங்கொண்டானென்பது பெறப்படாது. அவ்வாறு பெறின் இழுக்காம். என்னை? முப்பத்தெட்டாவது[7] இராச்சியவருஷம் வரையும் (அஃதாவது கி-பி. 943-வரையும்) உள்ள பராந்தகன்காலத்துக் கல்வெட்டுக்கள் அவ்வரசரை மதுரைகொண்டானெனக் கூறுதலன்றி, மதுரையும் ஈழமுங்கொண்டானெனக் கூறுகின்றில. ஆனால் பிற்காலத்துக் கல்வெட்டுக்கள் பராந்தகனது இவ்விருவெற்றியையும்பற்றிக் கூறுகின்றன. ஆதலின் இவ்வரசன் இலங்கையை வென்றது கி-பி. 943-ல் என்க. ஈழத்தின்மேற் போருக்குச் சென்றதன்காரணம் எவ்விடத்துங் காணப்பட்டதில்லையெனினும், காசிபன்என்னும் அத்திவின்அரசன், இராஜசிம்மபாண்டியன் சோழனோடு யுத்தஞ்செய்த காலத்து அப்பாண்டியற்குத்தன் தானையையனுப்பி உதவிபுரிந்ததே அதுவாகும். இலங்கையில் அரசு செலுத்திய மன்னர்களுடைய சரித்திரத்தைக்கூறும் மஹாவம்சம் என்னும் நூலில் ஐந்தாம் காசிபனென்பவன் அத்தீவில் கி-பி. 929-முதல் 939-வரை அரசாட்சிசெய்தானென்றும், அவன், சோழசக்கரவர்த்தியால்தோல்வியுண்ட பாண்டியன் வேண்டுகோளுக்கு இணங்கி, அவற்கு உதவிக்காக ஓர்படையை விடுத்தானென்றும், அப்படை சோழனால் முறியடிக்கப்பட்டதென்றும் காண்கிறோம். மஹாவம்சத்திற் கூறும் வரலாறும், சிலாசாஸனங்களாலறியப்படும் இச்சோழசக்கரவர்த்தியின் விஷயங்களும் ஒத்திருத்தலின், இதனுண்மைக்கோர் ஐயமிலது. இதுவுமன்றி, இப்பராந்தகஅரசர் வாணராஜனை வேரறக் கெடுத்து, அவனது அரசாட்சியைக் கைப்பற்றித் தனது சிற்றரசருள் ஒருவரான இரண்டாம் பிரதிவீபதியை ஆந்திரபூமியின் மேற்கிலுள்ள அவ்வாணதேயத்திற்கதிபதியாக்கி, அவனுக்கு மாவலிவாணராயன் என்னும் பட்டமும் சூட்டினார்.[8] இவர், அக்காலத்திருந்த பல்லவவரசனோடும் பொருது வெற்றிபெற்றிருத்தல் வேண்டுமென்பது, அவனது நகரமான 'உதயசந்திர மங்கலத்தைப் பராந்தகன்

---

7. No. 363 of 1902 and South Indian Inscriptions: Vol. VI. p. 19

8. Sonth Indian Inscriptions: Vol. II. p. 381 and Epigraphia Indica: Vol. IV. p. 222.

*

அழித்துத் தன்பேரால் வீரநாராயணச்சேரி என்றொருநகரம் கி-பி. 920-ல் ஆக்கினன்' [9] என்பதால் அறியலாகும். சிதம்பரத்துச் சிவன்கோயிலைப் பொன்னலிழைத்தவரும் இவரேயாவர். 'கூத்தனும் குலோத்துங்கன் கோவையும்' என்று செந்தமிழ்வாயிலாக வந்த வியாசத்தில் இவருக்கே குலோத்துங்கன் என்றொரு பெயரிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அப்பெயர் கல்வெட்டுக்களிலும் செப்பேட்டிலும் இவ்வரசருக்குக் கூறப்படவில்லை.*

பாண்டியனையும் காசிபனையும் வென்று மதுரையும் ஈழமுங்கொண்டு பல்லவனகர் அழித்து, வைதும்பனைத்தோல்வியடைவித்து,[10] வாணனை வேரறக்கெடுத்து அவனுணையைப் பிரதிவீபதிக்களித்த இச்சோழசக்கரவர்த்தியின் ஆற்றலும் அவரது நாட்டின்பரப்பும் உற்றுநோக்குமிடத்து மிகப்பாராட்டத்தக்கனவேயாகும்.

க. வை. சுப்பிரமணிய ஐயர்.

---

*குறிப்பு.

[ஐயரவர்கள் எழுதியவாறு 'கூத்தரும் குலோத்துங்கன்கோவையும்' என்றவியாசத்திற் பராந்தகனுக்குக் குலோத்துங்கப்பெயருண்டென்று குறிக்கப்படவில்லை. ஆனால் "புகழேந்திரெட்டக்கூத்தர்' என்னும் வியாசத்து அவ்வாறு வரைந்தேன். அஃது ஆதாரமில்லாக்கூற்றன்று. மிஸ்டர் ஸூவெல்துரை வெளியிட்ட "லிஸ்ட்ஸ் ஆவ் ஆண்டிகுபுடீஸ்" என்ற புத்தகத்தின் முதற்றொகுதி 157-ஆம் பக்கத்தே, தென்னார்க்காடு ஜில்லா நாராயணவனம் அகஸ்தியேசுரர் கோயிலில், சகா-826-ல் (கி.பி. 904) குலோத்துங்கன் என்பானது 11-வது ஆட்சிவருஷத்து அமைந்தசாஸனமொன்றும், அத்தொகுதி 263-ஆம் பக்கத்தே, திருச்சிராப்பள்ளிஜில்லா பிரம்பலூர்த் தாலூகாவைச் சார்ந்த ஆடுதுறையிலுள்ள பழைய சிவன்கோயிலின் வடக்குப்பிராகாரத்தே கலி-4000-ஆம் ஆண்டில்(கி.பி. 899) குலோ

---

9. Epigraphia Indica: Vol. V. p. 162.

10. No. 685 of Inscriptions: of South India in Vol. VII. of Epigraphia Indica.

த்துங்க சோழனென்பான் அக்கோயிலுக்குக்கொடுத்த தானசாஸன மொன்றுமாக இரண்டு சாஸனங்கள் குலோத்துங்க சோழனதாக வரையப்பட்டுள்ளன. இவற்றுள் முதலாவதாகிய கி. பி. 904-ல் அமைந்த சாஸனம், அச்சோழனது 11-வது ஆட்சிக்காலத்தே வரையப்பட்டது என்பதனால், அவ்வரசன் முடிசூடியகாலம் கி. பி. 893-ஆகும். இரண்டாவது சாஸனம் கி. பி. 899-ஆகும். இவ்விரு காலமும் பராந்தகனுக்கே பொருந்தியன. பராந்தகன் I முடிசூடிய காலம் ஐயரவர்கள்எழுதியவாறு கி. பி. 905-என்பது ஒருதலையாக நாட்டப்பெறுமாயின் மேற்காட்டிய இரண்டு சாஸனங்களினுங் கண்ட குலோத்துங்கசோழன் அப்பராந்தகனுக்கு முந்திய சோழனென்றுசொல்லல்வேண்டும். எங்ஙனமாயினும், கி. பி. 10-ம் நூற்றாண்டின் தொடக்கத்தும் குலோத்துங்கனொருவன் இருந்தனனென்று யான் எழுதியது, ஸுவெல்துரையவர்கள் எழுத்தைக்கொண்டேயன்றிப் பிறிதில்லை. அத்துரையவர்கள் மேற்கூறிய சாஸனகாலங்களைப் பிழையென்று கூறியிருப்பினும், பராந்தகனுக்கேனும் அவற்கு முந்திய சோழற்கேனும் அக்குலோத்துங்கப்பெயர் அமையக்கூடாதென்பதற்கு நியாயமின்மையாலும், அச்சாஸனங்களிரண்டும் வெவ்வேறிடங்களில் அமைந்தும், சோழனொருவனது காலத்தை நன்கு விளக்குதலாலும், கி. பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்த குலோத்துங்கற்கு முன்னும் அப்பெயர்பெற்ற சோழனொருவன் இருந்தனன் போலும் என ஊகிக்கலாயிற்று.]

பத்திராசிரியர்.

உ

தனிச்செய்யுட்கோவை.

—:o:—

ஆதிசரவணப் பெருமாட்கவிராயர் மலையாளஞ்சென்று இராசாவைக் கண்டபோது கூறியது.

இலைநாட்டும் வேற்காத்துச் சேதுபதி தரிசனத்துக் கேழு நாளோர்
மலைநாட்டு ராசன்வந்து காத்திருந்த வாசல்வித்து வான்யான் கண்டாய்
கலைநாட்டிற் பெண்ணெனவே செய்தசரா ஜனகன் கன்னிக் காகச்
சிலைநாட்டி வளைத்தபுய வீரகே ரளராம செயசிங் கேறே.

இக்கவியைக் கேட்டவுடன் 'சேதுபதி தரிசனத்துக்கு மலைநாட்ட ரசரிற் காத்திருந்தவர் யார்?' என இராசா வினவ, 'சேதுபதி என்பது வருணனுக்கும் பெயராம்: ஆதலால் அவனைக்காண்பதற்கு மல்லை நாட்டுகின்ற இராசனாகிய இராமன் தருப்பாசனத்தில் எழுநாட் காத்திருக்கவில்லையா' எனக்கூறினரெனவும், அதற்கு இராசா மிகமகிழ்ந்து உபசரித்தனரென வும் கூறுவர்.

சேதுபதி மந்திரி முத்திருளப்பபிள்ளை ஓர் கவிஞருக்கு 'நான் நூறு பொன் கொடுக்கச்சொன்னேன்' என்று எழுத ஒருவனை ஏவிய போது, அவன் 'நானூறு பொன்' என்றெழுதி வாசிக்க, உடனே அதனைக் கிறுக்கி எழுதும்படி சொல்லினர்; அப்போது அக்கவிஞர் இக்கவியைக் கூறி நானூறு பொன்னும் பெற்றார் என்பர்.

உறுக்குமதி வேந்தருக்குங் கள்வருக்கும் நீதிதப்பி யொளிக்கின்றோர்க்குங்
கிறுக்குவரச் செயுந்துரையே பாவாண ரோலையினுங் கிறுக்குண் டாமோ
பொறுக்குமர சுரிமைமுத்து ராமலிங்க சேதுபதி பூமி யெல்லாந்
திறுக்குமதி மந்திரிமுத் திருளப்பா வருளப்பா திருபந் தானே.

அம் முத்திருளப்பபிள்ளையவர்கள், சேதுபதியரசுரிமைநகரங்களில் விவாகமில்லாத கன்னியர் மிகவிருப்பது கேள்வியுற்றுக் குறுணித்தாலி பண்ணிவரச்செய்து ஒவ்வொரு கன்னிக்குங்கொடுத்துத் தக்கபடி செலவிற்குங் கொடுத்து விவாகம் நடப்பித்தனர்; அதனை வியந்து ஓர் கவிஞர் கூறியது.

அமரிக்கை யாளன்முத்து ராமலிங்க சேதுபதி யவனிக் கெல்லாஞ்
சுமுகப்ர தாபனெங்கண் முத்திருளப் பேந்த்ரமந்த்ரி துலங்கு நாளிற்
சமருக்கென் றெதிர்த்த மன்னர் தனையிலில்லை மதனொருவன் றவிரமின்னார்
குமரிக்குட் கன்னியா குமரியல்லான் மற்றில்லைப்பெண் குமரி தானே.

சிவகங்கையை ஆண்ட மருதுபாண்டியனது வள்ளன்மையையும், ஏகபத்தினி விரதத்தையும் வியந்து ஓர் கவிஞர் கூறிய கவிகள்.

தேனுந்து தாமன் மருதேந்த்ர ராசன் தியாகங்கண்டு
வானும்பர் தாமும் புலவரொன் றோர்வடி வேற்றகனென்
போனும் புலவசினன் றன்புதன் றானும் புலவனென்றே
ஞானுங் கவியென்று சுக்கிரன் றானு நவின்றனனே.

பரனு ரியல்புணரும் பண்பன்றன் னின்பம்
பரனு ரியரறியாப் பண்பன்—திரனு
ரணிமருது பாண்டில்விழ வன்றுதைத்தோன் யாரும்
பணிமருது பாண்டியபூ பன்.

இக்கவி, எழுமலை ஜமீந்தார் மூங்கிலணை நல்லகாமநாயக்கரவர்கள் கொடையை வியந்து ஓர் கவிஞர் கூறியது.

ஆராயும் வேதியர்க்கு ளாருமில்லை யறிவுகெட்ட வலையருமப் படியேயாவர்
சீராயதுருக்கருக்குட்சீதக்காதிசிறப்புடையவணிகருக்குட்செந்தில்காத்தான்
காராளர் தங்களுக்குள் வெண்ணையூரான் கருதரிய மறவருக்குண்மூவ ராயன்
பேரான மூங்கிலணை நல்லகாமா தொட்டியர்க்கு ணீயொருவன் பேர்பெற்
[ருயே.

கன்னிவாடி ஜமீந்தார் மலையாண்டியப்பய நாயக்கரவர்களது கொடையினை வியந்து ஓர் கவிஞர் கூறியது.

கல்லொக்குஞ் சிந்தைமுட் டாட்டுளை காள்கொடை கற்கவென்றால்
வல்லக்க வார்குல ஞாசிங் கையன் வரத்துதித்த
செல்வக் குமாரன் மலையாண்டி யப்பய சிங்கத்துக்குப்
பல்லக்குக் கொம்பு சுமந்திரோன் ருற்புத்தி பாலிக்குமே.

இந்த ஜமீந்தாரவர்கள், துறைசையாதீனத்துத் திராவிட மகாபாஷ்ய கர்த்தர் ஸ்ரீ சிவஞானயோகிகளுடைய மாணாக்கருள் ஒருவராகிய இராசபாளயம்-சங்கரமூர்த்திக் கவிராயரவர்களுக்கு யானைக்கன்றும் வளநாடுங் கொடுத்து உபசரித்தது பலருந் தெரிந்த விஷயமே.

எட்டையபுர முத்துப்புலவரவர்கள் சிவகிரி ஜமீந்தாரவர்கள்மீது திக்குவிசயம்பாடி யரங்கேற்றியபோது, பல்லக்குப் பரிசு கொடுப்பதாக நிச்சயித்ததைச் சிலர் தடுக்கவுடன்பட்டிருந்ததைத் தெரிந்து இவ்வெண்பா முதலிரண்டடியைக்கூற, அதைக்கேட்ட ஜமீந்தாரவர்கள் தங்களுக்குச் செய்புங் காரியங்களிலே நான் மறுத்துப் பேசவில்லையே யென்ருர்கள். உடனே புலவரவர்கள் என் விஷயமாக நான் கூறவில்லையே யெனப் பின்னிரண்டடியைக் கூறினர்கள்.

வாக்கிரண்டு பேசா வரகுணரா மேந்திரனே
வாக்கிரண்டு பேச மனம்வைத்தான்—ருக்கு
மருவலரைக் கொல்லென்ருன் வந்தடைந்த போது
வெருவாமற் காப்போமென் ருன்.

பின்பு பல்லக்கு முதலியன கொடுத்துபசரித்துத் திக்குவிசயத்தைக் கொல்லங் கொண்டான் ஜமீந்தாரவர்களிடத்துஞ் சேற்றூர் ஜமீந்தாரவர்களிடத்தும் வாசித்துக்காட்டிவரச் சொல்லப், புலவரவர்கள் இரண்டிடத்துக்கும்போய் நடந்ததை இக்கவியாற்கூறினார்கள்

வேண்டாத மருவலரை வென்றரசு புரியுமுயர் வேந்தே நாளுந்
தூண்டாத மணிவிளக்கே வரகுணரா மேந்திரனே சொல்லக் கேளாய்
கூண்டார வாரமுட னின்றுனது பதியுடன்யான் கூடப் போனேன்
வாண்டாயன்றலைமறைந்தான்செம்பொன்வடமலைத்திருவன்வழங்கினனே.

கொல்லங்கொண்டான் ஜமீந்தாரவர்கட்கு 'வாண்டாயன்' என்பதும் சேற்றூர் ஜமீந்தாரவர்கட்கு 'வடமலைத்திருவன்' என்பதும் புராதனமாய் வருகிற பட்டப்பெயர்.

இது, சேற்றூர் சிவகிரி ஜமீந்தார்களிருவருக்கும் போர் நடக்கும் போது உதவிபுரிவதற்காகச் சொக்கம்பட்டித் தானாபதிபொன்னம்பலம் பிள்ளையவர்கள் தண்டிகையிலேறிக் கொண்டு சேற்றூருக்கு வந்தவுடன் நடந்ததை ஓர் கவிஞர் கூறிய வெண்பா.

சேற்றூரார் நெஞ்சந் திடப்படுமே தென்மலையான்
றோற்றோமென் றோடித் துயர்படுமே—மாற்றரசர்
தெண்டனிடுஞ் சின்னணைஞ்சான் சேனா பதிப்பொன்னன்
றண்டிகையைக் கண்டவுடன் றான்.

இது, சேற்றூர்ச் சிவப்பிரகாச துரையவர்கள் போசனம் பண்ணிக் கரசுத்தி செய்ய வெளிவரும்போது வந்துகண்ட சொக்கம்பட்டித் தானாபதி பொன்னம்பலம் பிள்ளையவர்கள் கூறிய வெண்பா.

ஒருகையிலே யன்ன மொருகையிலே சொன்னம்
வருகையிலே சம்மான வார்த்தை—பெருகுபுகழ்ச்
சீமானா மெங்கள் சிவப்பிரகா சத்திருவக்
கோமானுக் குள்ள குணம்.

இஃது, அச்சிவப்பிரகாசத்துரையவர்கட்கு மேற்கூறிய பொன்னம்பலம் பிள்ளையவர்கள் வரைந்து விடுத்த கவி.

இலவே யனைய விதழ்மட மாதரொ டின்புறுதல்
குலவே லரசர்க் கியல்பல்ல வேயிக் குவலயத்திற்
பலபேர் புசித்துக் கழித்தே யெறிந்திடும் பாண்டஞ்சுத்தி
யலவேமதன் சேறைச் சிவப்பிர காச வகளங்கனே.

மேற்கூறிய சேற்றூர் ஜமீந்தாரவர்கட்கு முன்புவந்த ஓர் கவிஞர் இக்கவியிலே 'தெரியும்' என்பதுவரைகூறினர்; உடனே அவர்கள் கவிஞர் கழுத்தைப்பிடித்துக்கொண்டு இங்கே இதுவரையும் வசைகூறினவரொருவருமில்லை; ஆதலாற் குறைக்கவியு நசையாகவேண்டும் எனக்கூறக் கவிஞர் அவ்வாறே பின்னர் வருமாறு கூறினர்.

படிவாங்கப் படும்பாடு பரமசிவ னறிவனவன் பங்கில் வாழும்
வடிவாளு மறிவளவண் மக்களுக்குந் தெரியுமிந்த வருத்தந் தீர்ப்பாய்
முடிவேந்த ரடிதாழ்ந்து முறைமுறையே திறையளக்கு முகுந்தா மேலாந்
துடிவேந்தா ரதிகாந்தா துரைத்திருவா தரைக்கொருவா சுகிர்தவானே.

இது, கல்போது ஜமீந்தாரவர்களாகிய முத்துக்குமாரசாமிப் பாண்டியனவர்கள் தம் கடன்வருத்தநீக்கவேண்டுமென்று எட்டையபுரத்திலும் பேரையூரிலும்போய்ச் சொன்னபோது உடன்படாமையால் ஆற்றங்கரை ஜமீந்தாரவர்களிடத்திற்போய்க் கூறிய வெண்பா.

எட்டையா பேரையா வென்றுரையே யென்றுரைத்தே
னெட்டையா பேரையா வென்றுரைத்தார்—கட்டக்
குரைகடற்கு ளீர்த்துக் கொடுபோகா தாற்றங்
கரையதனிற் சேர்த்தெனைநீ கா.

பழனி ஜமீந்தாரவர்கள் ஓர்புலியைச்சுட்டுப் பெருமிதமுடன் வந்திருக்குஞ் சபையத்திலே மதுரையிலிருந்துவந்த ஓர்கவிஞர் கூக்குரலிட்டுப்போய் இக்கவியைக்கூறினர் அதைக்கேட்டு அந்தக் கலிப்புலியைச் சுடுவதற் கிரண்டுபைரூபா கொடுவென்றுத்தரவுசெய்யக் கவிஞர் பெற்றுவந்தார் என்பர்.

பையா டரவப் பணியேந்து சொக்கர் பதியைவிட்டு
வையா புரிக்கு வரும்போதி லென்னை வழிமறித்து
மெய்யாத் தொடர்ந்து கலிப்புலி தானும் வெருட்டுகின்ற
தையா விசய கிரித்துரை யேயுன் னடைக்கலமே.

(இன்னும் வரும்)

இராமசாமிக்கவிராயர்,
சேற்றூர்ச் சம்ஸ்தானவித்வான்.

ஸ்ரீ:

சென்னி அநபாயன் குலோத்துங்கன்.

கம்பர் ஏரெழுபதுநூற்கண்—

முடியுடைய மன்னவரின் மூவுலகும் படைத்துடைய
கொடியுடைய மன்னவரிற் குலவுமுதற் பெயருடையா
னிடியுடைய வொலிகெழுநீ ரெழுபத்தொன் பதுநாட்டுக்
குடியுடையான் சென்னிபிற ரென்னுடையார் கூறீரே.

எனவும், இராமாவதாரப் பிலநீங்கு படலத்து—

புவிபுகழ் சென்னிபோ ரமலன் றோள்புகழ்
கவிகடம் மனையெனக் கனக ராசியுஞ்
சவியுடைத் துகமென் சாந்து மாலையு
மவிர்மழைக் குப்பையு மளவி லாதது.

எனவும், ஷை மருத்துமலைப்படலத்து—

வன்னிநாட் டியபொன் மௌலி வானவன் மலரின் மேலோன்
கன்னிநாட் டிருவைச் சேர்ந்த கண்ணனு மாளுங் காணிச்
சென்னிநாட் டெரியல் வீரன் றியாகமா விநோதன் றெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப் புலன்கொள நோக்கிப் போனான்.

எனவும் பாடியவற்றுள் சென்னி என்னும் பெயரால் ஒரு சோழனைப்புகழ்ந்துரைத்துள்ளார். சென்னி என்பது சோழர் பொதுப்பெயராயினும், கம்பர் தம்மாற் புகழ்தற்குரிய சோழனை மூன்றிடங்களிலும் அப்பெயரொன்றனே வழங்கியவாற்றால் இவராற் புகழப்பட்ட சோழனுக்கு அதுவுமோர் பெயராமெனத் துணியப்படுகின்றது. கம்பர் காலத்தவரான ஒட்டக்கூத்தரால் உலாப்பாடப்பட்ட விக்கிரம சோழன், அவன் மகன் குலோத்துங்க சோழன், அவன் மகன் இராசராச சோழன் என்னும் மூவர் சோழருள் இராசராசன் றந்தையாகிய குலோத்துங்கனுக்குச் சென்னி என்பதும் ஓர் பெயராமென்று

"சிற்றம் பலமுந் திருப்பெரும்பே ரம்பலமு
மற்றும் பலபல மண்டபமுஞ்—சுற்றிய

மாளிகையும் பீடிகையு மாடமுங் கோபுரமுஞ்
சூளிகையு மத்தெருவுந் தோரணமு—மாளுடையான்
கோயிற் றிருக்காமக் கோட்டமு மக்கோயில்
வாயிற் றிருச்சுற்று மாளிகையுந்—தூயசெம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைத்து
முன்னிற் கடல்களின் மூழ்குவித்த—சென்னி
திருமகன் சீராசராசன்."

என இராசராசசோழதேவருலாவின் கண்ணே கூத்தர் கூறியவாற்றாற் றெளியலாகும். கூத்தர் தாம் பாடிய மூன்றுலா விறுதியிலும், தம் முலாப்பெற்ற அவ்வரசர் பெயரானே தனித்தனி ஓர் வெண்பாவும் கூறியுள்ளார். விக்கிரம சோழ தேவருலாவிறுதியிலுள்ள அவ்வெண்பா

கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே—வைய
மளந்தா யகளங்கா வாலிலைமேற் பாயல்
வளர்ந்தாய் தளர்ந்தாளென் மான்.

என்பது. இதனாற் சோழருக்குப் பொதுவாக வழங்கப்பட்ட அகளங்கன் என்னும் பெயரையும் விக்கிரமன் தனக்குரியதோர் சிறப்புப்பெயராகக் கொண்டிருந்தனனென்று தேறலாகும். "தவிராத சுங்கந் தவிர்த்தோன் கவிராசர், போற்றும் பெரியோ ரிவர்பின்பு பூதலங்க, ளாற்றுந் திருத்தோ ளகளங்கன்" எனக் குலோத்துங்க சோழ தேவருலாவின்கண்ணும் சுங்கந்தவிர்த்த சோழன்பின் பட்டமெய்திய இவ்விக்கிரமனை அகளங்கன் எனக் கூறியதனையும் நோக்கிக்கொள்க. இராசராசசோழ தேவருலாவிறுதியிலுள்ள அவ்வெண்பா,

அன்று தொழுத வரிவை துளவணிவ
தென்று துயில்பெறுவ தெக்கால்—தென்றிசையி
னீரதிரா வண்ண நெடுஞ்சிலையை நாணெறிந்த
வீரதரா வீரோ தயா.

என்பது. இதனால், இராசராசனுக்கு வீரன் என்பதும் பெயராமெனக் கொள்ளலாகும். "ஆரந்தான் கண்டா ளயிரா பதந்தொழுதாள், கோரந் தெரியவுங் கும்பிட்டாள்—வீரன், படாகைப் பெரு

ம்புலியும் பார்த்தொழிந்தாள்" என இராசராச சோழ தேவருலா வின்கண் வருதலால் இதனுண்மை யுணர்க. இனிக் குலோத்துங்க சோழ தேவருலாவிறுதியிலுள்ள அவ்வெண்பா,

> இன்றும்யான் மீள்வ தறியே னிரணியனை
> யன்றிரு கூறு வடர்த்தருளிக்—கன்றுடனே
> யாவின்பின் போன வனக னனபாயன்
> மாவின்பின் போன மனம்.

என்பது. இதனாற் குலோத்துங்கனுக்கு அநபாயன் என்பதும் பெயராமெனத் தேறலாகும். இவனைப்பற்றிய உலாவின்கண்ணே "பெருமா னநபாயன் பேரிய மூன்றுந், தருமார வாரந் தழங்க" எனவும், "ஆழிப் பெருமா ளபய னநபாயன், சூழிக் கடாயானை தோன்றுதலும்" எனவும் கூத்தர் வழங்கியவாற்றானும் இவனுக் கிப்பெயர் வழக்குண்மை கண்டுகொள்க. இவன், குலோத்துங்கன் என்பதனையே இயற்பெயராகக் கொண்டவனென்பது, "பெரும் பரணி கொண்ட பெருமாள் தரும்புதல்வன், கோற்றக் குலோத் துங்க சோழன்" என இவனுடைய உலாவின்கண்ணே கூத்தர் கூறி யதனால் அறியப்படும். இவற்றால் ஒட்டக்கூத்தர் காலத்தே செ ன்னி, அநபாயன், குலோத்துங்கன் என்னும் பெயர்களால் விளங் கியோன், இராசராசன் தந்தையே என்பது தேறப்பட்டதாம். அக் கூத்தர்காலமும் கம்பர்காலமும் ஒன்றுதல்பற்றிக் கம்பராற் சென்னி என்னும் பெயராற் புகழப்பட்ட சோழனும் அவ்விராசராசன் றந் தையாகிய குலோத்துங்கனேயாவன் என்றுய்த்துணரலாகும். இவனே கம்பருக்குப் பல்வகைச் சிறப்பும் செய்தவனாதலால் கம் பர் அந்நன்றி பாராட்டி இவனைப் புகழ்ந்துரைத்தனராவர். கம்பர் இராமாவதாரம் பாடிமுடித்த காலத்து இச்சோழன் இருந்தனனி ல்லையென எண்ணுகின்றேன். இருந்தனராயின் "அறைபுகழ்ச் சடையன் வாழி" என்றதுபோல இவனுக்கும் வாழிகூறி முடிப்பர். இராமாவதார வட்டுப்பிரதிகள் சிலவற்றில்

> வான்வளஞ் சுரக்க நீதி மனுநெறி முறையெந் நாளுந்
> தான்வளர்ந் திடுக நல்லோர் தங்கிளை தழைத்து வாழ்க
> தேன்வளர் தருத மாலைத் தெசரத ராயன் செய்கை
> யானளந் தறிந்த பாட லிடையறு தொளிர்க வெங்கும்.

என ஓர் வாழ்த்துச் செய்யுள் காணப்படுகின்றது. இதன் கண்ணும் சோழன் வாழ்த்தப்படாமை காண்க.

இனி, இவன் "ஆடுங்கடைமணி" என்னும் பாட்டால் (செந்தமிழ்த் தொகுதி-௨; பக்கம்-௪0௩) செய்யுள் செய்தலில் வல்லவன் என்பதும், ஒட்டக்கூத்தனை வழிபட்டுக் கல்விபயின்றவன் என்பதும் அறியலாகும். மேற் "சிற்றம் பலமுந் திருப்பெரும்பேரம் பலமும்" என்பது முதலாகவந்த கண்ணிகளால் இவன் சிவபிரான்பாற் பேரன்புடையனென்பதும், தில்லைப் பேரம்பலமெல்லாம் பொன்னாற்குயிற்றினனென்பதும், திருக்காமக் கோட்டத் திருப்பணி முற்றும் புரிந்தனனென்பதும் அறியப்படும். இவன் தில்லையிற் செய்த திருப்பணியெல்லாம் குலோத்துங்க சோழ தேவருலாவில் விரித்துரைக்கப் பட்டுள்ளன. அவற்றை *"தாதைக்குந் தங்கள் தபனற்குந் தோலாத" என்பது முதலாகவருங் கண்ணிகளாற் றெளிந்துகொள்க. இவனுடைய உலாவின்கணன்றி இராசராச சோழ தேவருலாவிலும், இவன் தில்லையிற்செய்த பெரிய பொற்பணியெல்லாம் எடுத்துக் கூறியுள்ளாராதலால் இது முன்னோர்சிறப்பைப் பின்னோனுக்கேற்றி வழங்கியதுபோலாகாது. இஃதன்றித் தக்கயாகப்பரணிக்கண்ணும் இராசராசனாகிய இவன்மகனை வாழ்த்துமிடத்து 'தில்லையி லேர்பெறு மண்டபம் வைத்த பிரான்மகன் வாழியே' என்பது முதலாக இவன் தில்லையிற் செய்த பெரும்பணிகளை எடுத்தோதியுள்ளார். தில்லையம்பல முகடுமட்டிற் பொன்வேய்ந்துபோய இவன்குலத்துமுன்னோர்போலாது. இவன் சிற்றம்பலம் பேரம்பலம் மண்டபம் மாளிகைபீடிகை மாடம் கோபுரம் தோரணவாயில் தெரு முதலாகப் பலவற்றையும் பொன்னாலணிந்து தில்லையைப் பொன்மயமாக்கினான் என்பதுபற்றி அவ்வரிய பெரிய பொற்பணிகொண்டே இவனை இரண்டுலாக்களிற் கூத்தர்புகழ்ந்தாரெனத் தெரிகின்றது. இவனுடைய தில்லைப்பொற்பணியைப் புகழ்ந்துள்ள அவ்விரிடங்களிலும் "புறம்பிற் குறும்பனைத்து, முன்னிற் கடல்களின் மூழ்குவித்த சென்னி" எனவும் "தில்லைத் திருமன்றின் முன்றிற் சிறுதெய்வத், தொல்லைக் குறும்பு தொகுத்தெடுத்து" எனவும் வருதலால்

* செந்தமிழ்த்தொகுதி-௩. பக்கம்-௧௧௩.

இவன் தில்லைநகர்க்கண் திருமன்றின்முன்றிலிற் சிறு தெய்வமாகிய பழம்பகையை அடியோடு பெயர்த்தெடுத்துக் கடலில் மூழ்குவித்தான் எனத்தெரிகின்றது. இதனாற்றில்லைமன்றின் முன்றிலிலிருந்த விண்டுசயனத்தைப் பெயர்த்தெடுத்துக் கடலிற்றார்த்தனன் என்பது கூறிற்றாம். இதனையே தக்கயாகப் பரணிக்கண்ணும்

'முன்றிற்கிடந்த கருங்கடல்போய் முன்னைக்கடல்புகப் பின்னைத்தில்லை
மன்றுக்கிடங்கண்ட கொண்டல்பெற்ற மரகதமேருவை வாழ்த்தினவே'

என்பதனாற் கூறியுள்ளார். முன்றிற்கிடந்த கருங்கடல் என்றது, முன்றிலிற் பள்ளிகொண்டருளிய கருங்கடல்போல் வண்ணன் எ-று. முன்னைக்கடல்புக என்றது, முன்றான் பள்ளிகொண்டருளிய கடற்கண்ணே பின்னும்புக. எ-று. தில்லைமன்றுக்கு இடங்கண்ட என்பதனால், அதற்கு முன்னெல்லாம் தில்லைமன்று இடம்பற்றாததாய்ச் சிறிதாயிருந்ததென்று கருதப்படுகின்றது. இராசராசசோழதேவருலாவில் 'புறர்பிற் குறும்பனைத்து முன்னிற்கடல்களின் மூழ்குவித்த' என்றதுக்கேற்ப இத்தக்கயாகப்பரணிக்கண்ணும் 'முன்னைக்கடல் புக' என்றார். * 'வரங்கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே' என்பதனாற் றிருவாதவூரர் காலத்துக்கு முன்றொட்டு உள்ளதாகத்தேறப்பட்ட இத்தில்லையில் விண்டுசயனம் இச்சென்னிகுலோத்துங்கனால் தில்லைமன்றுக்கு இடங்காணவேண்டி அழிக்கப்பட்டதென்பதொன்றானே இவனது சைவப்பெரும்பற்றும் வைணவவெறுப்பும் அறியப்படும். இவனுடைய பேரவைக்கண்ணேதான் அரனதிகன், அரியதிகன் எனப் பலபலவாதம் நிகழ்ந்தனவாம். இவையெல்லாங் கண்டுகேட்டபின்னேதான், கல்வியிற்பெரியாராகிய கம்பர் 'அரனதிக னுலகளந்த வரியதிகனெனவுரைக்கு மறிவிலார்க்குப், பரகதிசென் றடைவரிய பரிசேபோல்' எனப்பாடினராவரெனக் கருதல்தகும்.

(இன்னும் வரும்.)

ரா. இராகவையங்கார்.
பத்திராசிரியர்.

---

* திருச்சிற்றம்பலக்கோவை. அ௬.

௩௪௮. துறைகோலக் கூடலுக்கு மூடலுக்குந் தூக்கு
நிறைகோலை யொத்தொழுகு நெஞ்சாள்—விறலியரு

௩௪௯. மெல்லையில் பாணரு மேத்த விருந்திரா
வொல்லையில் வீணையிடத் தொன்றேந்தித்—தொல்லருளாங்

௩௫௦. காவிரியுங் காவிரி நாடுங் கழுநீரு
மாவுறையா ரூரு மணிவரையுந்—தாவுபரி

௩௫௧. வேதமு மீரா யிரமருப்பு வேழமு
நாதமாம் பஞ்சா னனமுரசு—மூதுலகங்

௩௫௨. காக்கின்ற வாள்வீர கண்டயமு ஞாலமுழு
தாக்கும் புகழ்த்தியா கக்கொடியும்—பாக்கொண்டு

௩௫௩. பண்ணமரு மூவாறிற் பாடுதலும் பாடினியோ
ரெண்ணரிய பாணா ரியம்புவா—ருண்ணெகிழ்ந்து

௩௫௪. கேட்டோர்தியா கேசரோ கேட்பருனைக் காப்பர்காண்
மாட்டோர் புகழ்ந்தென் மகிழ்ந்தென்றார்—கேட்டவளு

௩௫௫. மென்னுயிர் காப்பரோ வென்று லிறந்தமதன்
றன்னுயிர் மீட்டுந் தருவரோ—முன்னெடியோன்

௩௫௬. பெய்போதி லொன்று குறைத்தார் பெறுஞ்சிறுவன்
கொய்போதி லொன்று குறையாரோ—தெய்வீகக்

௩௫௭. கல்வேழ முண்ணக் கடிவேழந் தந்தமையின்
வில்வேழ முந்தருகை வேண்டாரோ—கல்லோல

௩௫ . வெள்ளத் திரள்கரப்ப விட்ட சடாடவியிற்
பள்ளக் கடல்சுவறப் பண்ணாரோ—வொள்ளழலாய்ச்

௩௫௯. சீறு பிறைவறிது சீறுமே தம்முடியி
லேறு பிறையினுட னேற்றாரோ—கூறுமதோ

௩௬௦. வென்றே மொழிந்தா ளிருந்தோர் கமலேச
ரன்றே யுறவென் றறியாயோ—குன்றை

௩௬௧. யுரிய முலைக்கெதி ரோங்காது வாங்கும்
பெரிய திறலும் பிறிதோ—வரிமீனுங்

௩௬௨. கூற்றும் விடமு மடக்கியதுன் கூர்விழியி
னாற்றும் பகையென்கைக் கல்லவோ—சீற்ற

(பா-ம்) ௩௪௯. 'ஏந்திக்-கொல்லியும்'
௩௫௧. 'வேதமும் வீதி விடங்கத் திருப்பெயரும்'
,, 'வேட்டநடமுரசும்'
௩௫௧-௩௫௨. 'மூதுலகை,யெண்ணரிய கேள்வியயற்று திருவாணையும், பண்ணரிய மூவாறிற் பாடுதலு-முண்ணெகிழ்ந்து'

௩௬௩. மடங்க லுரிப்புந் துடியடிப்பு மற்று
னுடங்க லிடைக்கலது நொய்தோ—தடங்கமட

௩௬௪. வோடு பெயர்த்த தனது்புறவடிக்கா
வாடு மிகலோ வயலொன்றோ—மூடிருளைக்

௩௬௫. கண்ணாற் பலகாலுன் காரளகத் தெவ்வென்று
மெண்ணாற் கடிவ திலாததோ—வண்ணலுமுன்

௩௬௬. மெய்யின் வெறுப்பே தமக்கும் வெறுப்பென்று
செய்யு முரிமை தெரியாதோ—தையலே

௩௬௭. குன்று குனித்தார் விரும்பிற் குறுகாரோ
வென்று தாங்கித் திரங்காதே—நின்றுறங்கித்

௩௬௮. தேவர் விடைகொ டிருக்கா வணத்திருப்போ
தேவர் முகக்குந் தியாகமோ—தேவசபைச்

௩௬௯. செம்பொ னவமணிச்சிங் காதனத்திற் றேவியொடு
மும்பர்சே ணுபதியு முற்றிடவே—பம்பு

௩௭௦. திருவா சிகையுந் திகழ்கண் டயமு
மருவார் கழுநீர்செவ் வந்தி—விரவார்

௩௭௧. பணியும் பலபணியும் பன்னெய் விளக்கி
னணியுஞ்செய் பூசை யழகுந்—துணியு

௩௭௨. மறையா கமவொலியு மந்திரத்தே வார
மறைதோத் திரவடியா ரார்ப்பு—முறைமையுற

௩௭௩. மத்தளங்க டாளங்கள் சின்னம் வளைகளுட
னொத்தவெக்கா ளங்க ளுடன்குமுற—வொத்ததிரி

௩௭௪. புண்டரமுங் கண்டிகையும் பூணும் புனைந்துமுச்சிக்
கொண்டையுட னேவிடைமுன் கூட்டஞ்சேர்—மண்டபக்

௩௭௫. கொத்தி னடுப்பதியி லாள்சபைக் கோலத்துக்
கொத்தலய வத்த முடன்காட்ட—வத்தகையோர்

௩௭௬. பொற்றட்ட மேந்தப் புகழ்விசிறி சாமரங்கண்
மற்றும் வரிசைகளால் வந்திக்க—கொற்றத்

௩௭௭. திருவந்திக் காப்புக்கொள் செல்வமோ தென்றல்
மருவந்த வாயி லருகே—பருவந்

௩௭௮. தருமபசா ரங்கள்செவிச் சார்சமய மேயோ
வரையா வரங்கொடுக்கும் வாய்ப்போ—பரிகரத்தார்

(பா-ம்.) ௩௬௮. 'தேவர் விடை கொள்ளத் திருப் பே ருகந்தளிக்கும்' ௩௭௭-௩௭௮. 'திருவந்திக்காப்புந் திருச்சாலகமு,முருவந்தித்தேருமுவப்போ-பரிகரத்தார்'

௩௭௯. பல்லிய மார்க்கும்பொற் பல்லக்குச் சேவையோ
வல்லியங் கோதை யமளியோ—புல்லத்தார்க்

௩௮௦. கேது திருவுளமோ யாண்டைத் திருநோக்கோ
மாது நினைநினைந்து வந்திலார்—போது

௩௮௧. விடிய வருவர் வருவரெனும் வேலை
யடியர் முடிவணங்கி யார்ப்ப—விடுபரிதித்

௩௮௨. தேருந் தியாகேசர் தெய்வத் திருத்தேரு
மூரும் பெருவீதி யுட்போதக்—காரிகையும்

௩௮௩. வந்து தொழுதெழுந்து மாணிக்கப் பேரழகை
முந்து விழியின் முகந்துண்டாள்—சந்துதிரி

௩௮௪. நம்பா வுமைபங்கா நாயகர்க்கு நாயகா
வெம்பாலுன் னெஞ்ச மிரங்காதோ—வும்பர்தொழ

௩௮௫. வைம்போ துதிர வடித்தகான் மாரன்ற
னைம்போ துதிர வடியாதோ—கம்பேந்தி

௩௮௬. யச்சிலைக்கு நாணை யரிசிதலை போற்கரும்பி
னிச்சிலைக்கு மோர்சிதலை யெய்தாதோ—நிச்சவிழாச்

௩௮௭. சேவிப்பத் தாழ்த்துவருந் தேவர் விலங்கொருநாள்
வாவிப் பொருவேட்கும் வாராதோ—கோவிடுந்தே

௩௮௮. ரங்கட் குழவிக்குச் செய்ததுநின் னூழித்தேர்
திங்கட் குழவிக்குஞ் செய்யாதோ—வெங்காற்று

௩௮௯. மன்றல் கமழ்நீர்த்தந் தூர்த்த மனச்சினமித்
தென்ற லுடன்முடுகிச் செல்லாதோ—வென்று

௩௯௦. விடநோக்க மஞ்சி யிவட்கு வலத்துத்
தடநோக்கந் தந்து தணந்தான்—மடநோக்கி

௩௯௧. முன்னழகு கண்ட முதன்மயக்கின் மும்மடங்கு
பின்னழகு கண்டு பெருகினு—டன்னிற்

தெரிவை.

௩௯௨. பரியு முனிவர் மறைத்தாலும் பத்தி
தெரியு மொருத்தி தெரிவை—மருவை

௩௯௩. யிறையுடன் மோப்ப விறங்கிமதித் தேகாப்
பிறையுட னைத்த பிறையுங்—கறைமிடற்றோன்

(பா-ம்.) ௩௭௯. 'பல்லக்கிற் செல்வமோ' ௩௮௨. 'ஊரும் பெருமை யுடன் போத'
௩௮௦. 'யாது திருவுளமோ' ௩௮௯. 'முடிக்கச்செல்லாதோ'
௩௮௨. 'தெய்வவாழித்தேரும்' ௩௯௦. 'விடநோக்கி'

௩௯௪. கண்ணற் கடந்த வடையாளங் கைக்கொளலின்
வண்ணக் கமல மலர்மகளைப்—பெண்மையின்

௩௯௫. சீலத் தொருதானு மாறழித்த சின்னமே
போலத் திருவும் பொலிகுழலா—ளாலத்தை

௩௯௬. யுண்ணத் துணிந்த துடையா னிவைக்கிடையே
நண்ணப் பயின்றதெனு நாட்டத்தா—டிண்ணியகல்

௩௯௭. வில்லான் றிருமேனி வின்னேயென் றந்தவிண்
ணெல்லாந் தழுவ வெழுமுலையாண்—மெல்லிடை

௩௯௮. யில்லைகொ லுண்டுகொ லென்றென் றிறைதிருக்கண்
வல்லையில் வைக்கும் வகைமானப்—பல்காசின்

௩௯௯. பட்டிகையும் வெண்ணிறப் பட்டு மொளியொளிரக்
கட்டிய செம்பொற் கடிதடத்தாள்—விட்டெறியும்

௪௦௦. பல்கோடி பந்தினும் பத்திமுத் தூசலினும்
வெல்கோ டியமகர வீணையினும்—வல்லியரைச்

௪௦௧. சீறிப் பொருதுவெல்லுஞ் செவ்விபோய்ச் சீறுமே
யாறிப் பொருதுவெல்லு மாற்றலா—ளேறிய

௪௦௨. வேற்று ளுடனே யிவைநம் மவயவத்தே
தோற்றுன் மொழிந்திடா தூதென்று—மேற்றுய்ப்

௪௦௩. புயலுங் குயிலும் பொறியவரி வண்டு
மியலும் பொழிலுக் கெழாமே—மயிலுடன்

௪௦௪. கிள்ளைசூழ் செய்குன்றிற் கிட்டாமே யோதிமக்
கொள்ளைசூ ழோடை குடையாமே—வெள்ளிய

௪௦௫. வேலை பொருவு மரமியத்தில் வீற்றிருக்குங்
காலை யொருத்திவந்து காரிகையே—மேலொருகை

௪௦௬. யோட்டிரக்குங் காலத்து மொண்முனிவர் பன்னியரை
வாட்டிரக்கஞ் செய்து மருள்செய்தார்—தீட்டரும்பொற்

௪௦௭. சிங்கா தனப்பெற்றுத் தேர்பெற்றிப் போதுவந்தாற்
பொங்கா தரவு பொறுக்குமோ—சங்கார்கை

௪௦௮. யான்மோ கினியா யணியோ டெதிர்படத்தம்
மான்மோகஞ் செய்து மருள்செய்தார்—தேன்மொழியார்

௪௦௯. கூடலிளங் கோக்கள் வனிதையர்க்குக் கோலவளை
போடும் பொழுதுமயல் பூட்டினர்—வேடப்

௪௧௦. பரதராய் மீன்வலையாற் பாவைதிளை மங்கைக்
கிரதராய் மால்செய்தின் புற்றார்—வரைமகளா

(பா-ம்.) ௩௯௯. 'வெண்பளிதப்பட்டும்' ௪௦௦. 'மெல்லியரை'

சகக. மங்கை தவங்கள் புரிய வயோதிகராய்த்
தங்கியின்ப வாய்மொழிகள் சாதித்தார்—நங்காய்

சகஉ. முழுதுமோர் கோல முதல்வர் பவனிக்
கெழுதுமோ வைகுதுமோ வென்றாள்—பழுதிலாண்

சகங. மூவரு மோதியவை கற்றோநின் மோகத்தா
லேவருவர் நம்பா விலங்கிழாய்—தீவருத்தா

சகச. தேட்டெழுது நள்ளாற்றுச் செய்யுளே யாமணியுந்
தோட்டெழுதில் வாடை சுடுங்கொலோ—நாட்டுதிரு

சகரு. வாலவா யான்றிருநீ றள்ளிற் குலத்தரசு
போலவா னிந்துவெப்பும் போகாதோ—பாலனார்

சகசு. தைவந்து தென்னவர்கூன் றள்ளுதிருப் பாட்டெடுத்தாற்
கைவந்த வேள்சிலைக்கூன் காணுமோ—பொய்வந்து

சகஎ. போக்குந் தரும புரத்தியாழ் மூரியினாற்
றீக்கு மிசையாழ் சிதையாதோ—மாக்கடலுந்

சகஅ. தெவ்வரிடு கன்மிதப்பச் செய்ததிருப் பாட்டிசைத்தா
னவித் திரவி னலியுமோ—வையாற்றுக்

சககூ. காவிரி யாறுமறி யூரன் கவிக்கிருகண்
மாவிரி யாறு மறியாதோ—மூவர்திருப்

ச௨0. பாடலா லுய்யலா மெங்கோன் பதமலருஞ்
சூடலா மென்று துணிந்தெழுந்தா—ளாடகத்

சஉக. தியாகக் கொடியே தனிவளரச் செய்தொருநாட்
பாகற் கொடியே பலவறுப்பா—ளாகமச்

சஉஉ. சோதியிற் காசிக்குந் தொல்லம் பலத்திற்கு
மாதியிற் பேரூரா மாரூரன்—வீதியிற்

சஉங. பீலிக் குடைநிழலும் பேரிக் குழாமுழக்குங்
கோலித் திசைவிசும்புங் கொந்தளிப்ப—வேலையுஞ்

சஉச. சிந்த விடைக்கொடிமீ தாடத் திருத்தேரின்
வந்த பவனிவந்து வந்தித்தா—ணிந்தையா

சஉரு. ரூரன் புறம்பரனு மொக்கப் புறம்பென்றோர்
பேரன்பன் சீறும் பெருமாளே—கார்தவழும்

(பா-ம்) சகச. 'நள்ளாற்று மெய்ஞ்ஞானம்' சஉங. 'கோத்தளப்ப'
சகஅ. 'உய்வித்த வப்ப னுயிரென்னும் யாப்பிசைத்தால்' சஉரு. 'ஊரன் புறனுயனொக்கப் புறனென்று

௪௨௬. வெள்ளிக் கிரிபசும்பொன் மேருக் கிரியுறைந்து
முள்ளிச் சிறுபுற் றுறைந்தீரோ—புள்ளுயர்த்தோன்

௪௨௭. வாதுபோய்க் காணு மலர்ச்சே வடிகாமத்
தூதுபோய்த் தேயத் துணிந்தீரோ—மீதசைத்து

௪௨௮. மாணிக்கத் தண்டு மணிமன் று மாடியகூத்
தாணிப் புறங்கா டடைந்தீரோ—பேணியே

௪௨௯. பெய்யுமடிக் காயிரம் பொன்னென்னப் பேறளிக்குங்
கையு மிரப்புங் கலந்தீரோ—யையோவிந்

௪௩௰. நாதாந்தக் கோலமொரு நான்மறையோன் யாகத்தே
தீதாம் புலைக்கோலஞ் செய்தீரோ—வேதாந்தக்

௪௩௧. கேள்வியோர் காதிரண்டுங் கிட்டே லமையென் று
வேள்வியோர் வைதனவும் வேட்டீரோ—தாழ்விதனாற்

௪௩௨. புல்கிய துண்டோ வுமைதோய் புயமெனக்கு
நல்கிய துண்டே னலம்போமோ—கொல்கணிச்சி

௪௩௩. வீரரே யெவ்வூர்க்கு மேனூ ரெனநிறுத்த
வூரரே யென்றென் றுருகினாள்—பேரிளம்பெண்

பேரிளம்பெண்.

௪௩௪. வேறொருத்தி பல்கலைக்கும் வேதாவி னாவிற்போ
யேறொருத்தி யேனு மெதிராதாள்—வேறினியென்

௪௩௫. றண்டா மரைமயிலுந் தாமரையும் பாமகளும்
வெண்டா மரையுமா மேனியாள்—வண்டாட

௪௩௬. முன்னஞ் சுமந்த தமையாமே மொய்மணத்தை
யின்னஞ் சுமந்திளைக்கி லென்செய்யுந்—தென்னுலவை

௪௩௭. யாதி திருச்சா லகத்தோட மாட்டாதென்
றோதி பலர்பொதியா வோதியாள்—மோதித்

௪௩௮. திரைபோ யுலகஞ் சிதைப்பச் சிதைந்த
கரைபோல் வரிதுறந்த கண்ணாள்—எரிபிரம

௪௩௯. ரென்பணியும் வன்மீகர் மன்றாட் டெனப்புலியும்
வன்பணியு முன்பணியும் வார்த்தையாள்—முன்பணைத்து

௪௪௰. வானடையத் தாமே வளர்ந்து கவர்ந்தந்த
வானடையக் காணா வகைமையால்—வானொதுங்கி

௪௪௧. மீண்டு நிலத்த தெனமருங்கைப் பார்ப்பதெனப்
பூண்டு முகங்கவிழ்ந்த பூண்முலையாள்—வேண்டியநா

(பா-ம்.) ௪௨௬. 'கவர்ந்தீரோ'

௪௪௨. ணாற் பனசை நகரத் தயன்பறந்துங்
காணாத் தலைசாய்த்த காரிகையும்—பூணாகம்

௪௪௩. பெய்துடைய ஜோவைத்தன் பிட்டுண்ணப் புண்ணியஞ்
செய்துடைய செம்மனச் செல்வியுங்—கொய்துமக

௪௪௪. வன்றரிந்த செங்காட் டமையுந் தலையிறைச்சி
நன்றரிந்த சந்தன நங்கையு—மென்றிவர்க

௪௪௫. ளொண்பிறப்பே போலப் பிறப்பெய்தி னேவாது
பெண்பிறப்பே வேண்டும் பெரிதென்பா—ணன்பினரா

௪௪௬. யல்விளை சோலைகலந் தாயிரங் கோடியராய்ப்
பல்விளை யாட்டயரும் பாவையரை—வில்விளையுஞ்

௪௪௭. சூடகக் கைவண்டு மொய்வண்டுஞ் சூழ்ந்தாட
வாடகத் தம்மானை யாடுவீர்—பீடு

௪௪௮. விரவுதிரு வாசகத்து மெய்வாத வூரர்
பரவுதிரு வம்மானை பாடீர்—விரைகமழுஞ்

௪௪௯. சுண்ணப் பொடியிடிப்பீர் தொன்னூ ளவர்விளம்பும்
வண்ணத் திருச்சுண்ணம் வந்தோதீ—ரெண்ணிறப்பக்

௪௫0. கூடுதிருத் தெள்ளேணங் கொட்டுவீ ராங்கவர்
பாடுதிருத் தெள்ளேணப் பாட்டறையீர்—தோடவிழச்

௪௫௧. சாத்துதிருப் பூக்கொய்வீர் சம்புப் பரியழைத்தா
ரேத்துதிருப் பூவல்லி யின்றேத்தீர்—கூத்தி

௪௫௨. னடுத்ததிரு வுந்தி பறப்பீ ரவர்வா
யெடுத்ததிரு வுந்தி யியம்பீர்—தொடுத்தாடி

௪௫௩. மல்குதிருத் தோணோக்கீர் மாணிக்க வாசகர்
நல்குதிருத் தோணோக்க நாவறையீர்—பல்வரியி

௪௫௪. ராற்றுதிருப் பொன்னூச லாடுவீர் நீடுமவர் [க்கு
போற்றுதிருப் பொன்னூசல் போய்ப்புகழ்வீர்—சாற்றளி

௪௫௫. நன்னர் குயில்கிளிக்கு நம்ப ரிசையிசைப்பீ
ரன்ன ரிசைத்தனவே யாங்கிசையீ—ரென்னு

௪௫௬. மிவையிவை போதித் திருந்துழி மாத
ரவையவை கேட்கு மளவிற்—குவிகையளாய்

௪௫௭. வாங்கிச் சிவபத்த வாணி யெனுங்கிளியைத்
தாங்கிக் கனிகனிவாய்த் தந்தேந்தி—யாங்களிப்ப

(பா-ம்) ௪௪௨. 'தலைதாழ்த்த'
௪௪௪. 'அன்றீந்த'
,, 'நன்றீந்த'
௪௪௬. 'சோலைகவர்ந்து'
௪௫௫. 'குயிலரிக்கு'

௪௫௮. முன்னமொரு சொல்லை முதல்வன் சொலவொருவன்
சொன்னதிருத் தொண்டத் தொகையெல்லா—மென்னமுதே

௪௫௯. பாடுக பாடுக பாடி நெடிதூழி
நீடுக நீடுக நீயென்றாள்—கூட

௪௬௦. வுறைகின்ற வுன்னையத் துள்ளோ ரழகே
யறைகின்ற தொண்டரழ கன்றே—பிறைநுதலா

௪௬௧. யெற்களவு பேச வடங்கா விடங்கழியார்
நெற்களவு போன நிசிவனப்பு—நெற்குழலீ

௪௬௨. வாரி யிளைசையின் மாறர் வருமிருளு
மூரி யளக முடியன்றே—காரிகையே

௪௬௩. பண்டையி னெல்வேலி மாறர் படுமுடற்கூன்
கொண்டையி லிட்டபிறைக் கூனன்றே—பண்டு

௪௬௪. வணங்கா தவரை வணக்கவிறன் மிண்ட
ரணங்காக வைக்கு மசியு—மணங்கமழ்பூப்

௪௬௫. போக்கு மதமாப் பொருதே யெறிபத்தர்
நூக்கு நவியு நுதலன்றே—மாக்கள்

௪௬௬. படுபடை யூனைப் படைத்தகண் ணப்ப
ரடுபடை விற்புருவ மன்றே—நடுவிற்

௪௬௭. குலவு மியற்பகையார் கோட்புலியார் சுற்றம்
பலவு மடியப் படுத்துங்—கலிக்காமர்

௪௬௮. மெய்ச்சிறுத் தொண்டர்சேய் மெய்ப்பொரு ளுயரிவ
ரச்சுறுக் காய மறவறுத்து—மெச்சுகழற்

௪௬௯. சிங்கர் மனைவிகர மூக்குச் செருத்துணையா
ரங்கைகலிக் கம்ப ரரிவைக்குச்—சங்கரன்

௪௭௦. வீறு பழிநா விரிஞ்சையூர்ச் சத்தியார்
கூறு படப்படக் கொய்தெடுத்துஞ்—சீறிக்

௪௭௧. குலச்சிறையா ரோனதி நாதர்குறு காளை
யலற்செய் முனைபடுவா ரட்டுந்—துலக்கிய

(பா-ம்) ௪௬௧. 'நற்குழலீ'
௪௬௪. 'வணங்காவிடரை'
௪௬௫. 'நூக்குநவியம்'
௪௬௭. 'அடையப்படுத்தும்'
௪௬௮. 'அக்சுதன்காயம்'
௪௬௮-௪௬௯. 'மெய்ச்சிங்கன், தேவி காத்தையவண் மூக்கைச் செருத்துணைதன், காவிவி ழிகைக் கலிக்கம்பன்-சேவு யர்த்தோன்'
௪௭௧. 'குலச்சிறையே ஞாதி முனைய டுவான் கூடா, ரலைச்சிறை யெய்த வலைத்துந்'

யும் ஒரூஉமோனையும் கூழைமோனையும் மேற்கதுவாய்மோனையும் கீழ்க்கது வாய்மோனையும் முற்றுமோனையுமென மோனை எண்வகைப்படுமாயிற்று. 'பொழிப்புமொரூஉவும்' (செய்-கo) என்னுஞ் சூத்திரத்தான், இவ்வாசிரியா கொண்ட பொழிப்பும் ஒரூஉவுங் கோடற்கு அஃது இணைகொள்ளுமாறென் னையெனின் :— அச்சூத்திரத்து 'அவையுமாருளவே' எனச் சூத்திரஞ்செ ய்தமையான் அவையும் முன்பிறவும் ஓரடித்தொடையுமுள என்று பொரு டருதலிற் றொடைக்குச் சிறந்துதோன்றும் வினைமுதலியனவுங் கோடும். உ-ம். 'கான மஞ்ஞை யீன்ற முட்டை, சாத லின்றி வீசு மந்தி'—இஃது ஈரடியும் எழுத்தொத்தலிற் றன்னொடுதொன்வந்து தொடுத்த கட்டளை அடி மோனை. 'கோதை மார்பிற் கோதை யானுங், கோதையைப் புணர்ந்தோர் கோதை யானும்'—இஃது எழுத்தொவ்வாமையிற் பிறவடிதொடுத்த கட் டளையடிமோனை. 'யாண்டுங் காணேன் மாண்டக் கோனை, யானுமோ ராடு கள மகளே' (குறுந்தொகை-௩க.) இஃது இருவகையுந் தொடுத்தது. 'கண் டற் கானற் குருகின மொலிப்பக், கரையா டலவன் வளைவயிற் செறிய'— இது சீர்வகையடிதொடுத்தது. 'உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை' (புறம்-௩.) 'ஒடுங்கா வொலிகடற் சேர்ப்பனெடுந்தேர்' இவை கட்டளை யிணைமோனை. 'உலக முவப்ப வலனேர்பு திரிதரு' (திருமுருகாற்றுப் படை) இது சீர்வகையிணைமோனை. 'செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தட க்கை' (ஷை) 'கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு' (திருக்கு றள்-௩கஉ.) இவை கட்டளைப் பொழிப்புமோனை. 'வெயிலுருப் புற்ற வெ ம்பரல் கிழிப்ப' இது சீர்வகைப் பொழிப்புமோனை. 'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்' (புறம்-சு.) 'வானிடு வில்லின் வரவறியா வாய்மை யால்' (நாலடி, கடவுள்வாழ்த்து) இவை கட்டளையொரூஉமோனை. 'கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முன்' (திருக்குறள்-௪o௩.) இது சீர்வகையொரூஉ மோனை. 'வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்' 'அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறு' (நாலடி, பிறனில்விழையாமை) இவை கட்டளைக்கூழைமோனை. 'மடக்கண் மயிலின மறலி யாங்கு' இது சீர்வகைக்கூழைமோனை. 'கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர' (நான்மணி-௪உ) 'பயவார்கட் செல்வம் பறப்பப் பயின்கொல்' (நாலடி, நன்றியில்செல்வம்) இவை மேற்கதுவாய் மோனை. 'எல்லை யெம்மொடு கழிப்பி யெல்லுற' 'நல்லா ரிருவ ருவப்ப நயமிலார்' (நாலடி.) இவ்வ கீழ்க்கதுவாய்மோனை. 'ஒல்லா தொல்வ தென் றலு மொல்லுவது' (புறம்-கஈசு.) இது சீர்வகைக் கீழ்க்கதுவாய்மோனை. 'கற்க கசடறக் கற்பவை கற்றபின்' (திருக்குறள்-௩கக.) இது முற்றுமோ னை. இது சீர்வகை முற்றுமோனை.

இனிக், கலிக்கு 'இணையிரண் டியைந்தொத்த முகைநாப்பட் பிறிதி யாதும்' (கலி-மருதம்-௪உ) இஃது இணைமோனை. 'அரிமதர் மழைக்கண்

ணீ ரலர்முலைமேற் றெறிப்பபோல்' இது பொழிப்புமோனை. 'பெண்டெனப் பிறர்கூறும் பழிமாறப் பெறுகற்பின்' (ஷை) இஃது ஒரூஉமோனை. 'கழிபட்டார் கமழ்கோதை கயம்பட்ட வுருவின்மேல்' இது கூழைமோனை. 'அளியென வுடையேன்யா னவலங்கொண் டழிவலோ' (கலி, பாலை, கக) இது மேற்கதுவாய்மோனை. 'முளிகழை யுயர்மலை முற்றிய முழங்கழல்' (ஷை, பாலை, உச) இது சீர்வகை மேற்கதுவாய்மோனை. 'மணிநிற மலர்ப்பொய்கை வளர்ந்தருளு மயிலோனே' இது கீழ்க்கதுவாய்மோனை. 'அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்' (பாலை-க0) இது முற்றுமோனை. இவற்றுக்குச் சீர்வகைபலவும் வருமாறுணர்க. இச்சூத்திரமுதலாகக்கூறுங் கட்டளையடிக்குத் தொடைகொள்ளுங்காற் றளைவழுக்கழித்துத் தொடைகொள்ளுமாறு 'மெய்பெறு மரபின்' (செய்-க0க) என்பதனுட் காட்டுதும். (கூஉ)

கூங. அஃதொழித் தொன்றி னெதுகை யாகும்.

இஃது எதுகை கூறுகின்றது.

இ-ள். முற்கூறிய முதலெழுத்தினையொழித்து இரண்டடியினும், சீர்முழுதும்ஒன்றினும், இரண்டாமெழுத்தேஒன்றினும், ஓரடிக்கண் முதலிருசீர்க்கண் இரண்டாமெழுத்துஒன்றினும், முதற்சீரினும் மூன்றாஞ்சீரினும் இரண்டாமெழுத்து ஒன்றினும், முதற்சீரினும் நான்காஞ்சீரினும் இரண்டாமெழுத்து ஒன்றினும், முதற்சீரொழித்து ஏனைய ஒன்றினும்,முதலயற் சீரொழித்து ஏனைய ஒன்றினும், ஈற்றயற் சீரொழித்து ஏனைய ஒன்றினும்,நாற்சீரும் ஒன்றினும் தலையாகெதுகை,அடியெதுகை,இணையெதுகை, பொழிப்பெதுகை, ஒரூஉவெதுகை,கூழையெதுகை,மேற்கதுவாயெதுகை, கீழ்க்கதுவாயெதுகை, முற்றெதுகை எனக்கூறப்படும். எ-று.

அயலெழுத் தொன்றின் என்னாது முதலெழுத்தைச் சுட்டியவதனான், முதலெழுத்தின்மாத்திரை தம்முள் ஒத்தல்வேண்டுமென்றுகொள்க. உ-ம். 'மாயோன் மார்பி னாரம் போலுஞ், சேயோன் சேர்ந்த வெற்பிற் றீநீர்' இது தம்மொடு தாம்வந்த கட்டளைத்தலையாகெதுகை. "வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற், கானிலந் தோயாக் கடவுளை, யாநிலம்'

• 'அடிதொறும் முதலெழுத்தொன்றாமல் இரண்டாமெழுத்தொன்றின் எதுகையாகும் எ-று. அஃதேல், முதலெழுத்து மொன்றி இரண்டாமெழுத்துமொன்றில் யாதாகுமெனின், முந்துற்ற மோனையாற் பெயரிட்டுவழங்கப்பெறும் எ-று. உ-ம்.—'அடிதாங்குமளவன்றி..............களிறெனவு முலைத்தனரே எனவரும்' என்பது உரையாசிரியநரை.

(நாலடி,கடவுள்வாழ்த்து)இது தம்மொடு தாம்வந்த கட்டளை அடியெதுகை. 'சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி, முலைவிலங்கிற் றென்று முனிவாள்' இது சீர்வகையடிக்கட்டளையொடு தொடுத்த தலையாகெதுகை. 'அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப், பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி' (பெரும்பாணாற்றுப்படை) இது கட்டளையடிச் சீர்வகையடியொடு தொடுத்த அடியெதுகை.'தலையெழுத்தொப்பதுமோனை' (செய்-கூ௨) என்றலிற்றலையாகுமோனை இவ்வாசிரியர்கொள்ளார். 'வைகலும் வைகல்' (நாலடி-அறன்வலியுறுத்தல்) என்னும் வெண்பாவிற் சீர்முழுதும் வருதலின் வழிமோனைப்பாற்படும். 'புன்கா லுன்னத்துப் பகைவ னெங்கோ' (பதிற்றுப் பத்து-எ-க) 'மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்' (திருக்குறள்-௨0௪) இவை இணையெதுகை. 'பொன்னேர் மேனி நன்னிறஞ் சிதைத்தோர்' 'உஃருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்' இவை பொழிப்பெதுகை. 'உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை' 'பறம்பிற் கோமான் பாரியும் பிறங்குமிசை' (சிறுபாணாற்றுப்படை) 'வாண்மாய் குருதி களிறுழக்கத் தாண்மாய்ந்து' (களவழி-க.) இவை ஒரூஉவெதுகை. 'இன்ன ரென்னா தின்பம் வெஃகி' 'குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து' இவைகூழையெதுகை. 'பொன்னேர் மேனி துன்னினர்' 'கொண்டுபொ ராட்டுவார் கண்டிலர்கொன் மண்டி, (நாலடி,தூஉய்தன்மை) இவை மேற்கதுவாயெதுகை. 'உள்ளி னுள்ளம் வேமே யுள்ளாது' (குறுந்தொகை-க0௨) 'படியை மடியகத் திட்டா னடியினுன்' (நான்மணி, கடவுள் வாழ்த்து) இவை கீழ்க்கதுவாயெதுகை. 'கன்னிப் புன்னை யன்னந் துன்னும்' 'இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது' (நாலடி-அறன்வலியுறுத்தல்) இவை முற்றெதுகை.

இனிக்கலிக்கு—'அடங்காதார் மிடல்சாய மார்வந் திறத்தலின்' 'எறிதிரை செறிகையான் மிகவாங்கி மீதோங்கி' இவை இணையெதுகை. 'பெருவரை யுறழ்மார்பிற் றிருவோங்கு கரியோனை' இது பொழிப்பெதுகை. 'அணிவேங்கை செறிநீழற் கிளியோப்பு மணிநிறத்தாள்' இஃது ஒரூஉவெதுகை. 'மணிவரை யணிமார்பிற் பணிமேவும் *பெரியோனை' இது கூழையெதுகை. 'அலைகடற் றுயி லுணரா மலையெடுத்த நிலையோனை' இது மேற்கதுவாயெதுகை. 'கதிபல விதியாற்சென் றழுந்தாமற் றுதித்தேத்தி' இது கீழ்க்கதுவாயெதுகை. 'திரிபுர மெரிசூழ வரிவாங்கும் பெரியோனை' இது முற்றெதுகை.

* 'பிறையோனை' எனவும் பாடம்.

கூச. *ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய.

இது முற்கூறியவற்றோ டொப்பனசில தொடைகூறுகின்றது.

இ-ள். முற்கூறிய மோனைக்கும், எதுகைக்கும் கிளையெழுத்துக்களும் ஒன்றிவரப்பெறும். எ-று.

கிளையெழுத்தாவன:-வருக்கமோனையும், வருக்கவெதுகையும், வல்லினவெதுகையும், மெல்லினவெதுகையும், இடையினவெதுகையும் என ஐந்தாம். உ-ம். 'வயங்குகதிர் காய்ந்த வாடை வைகறை, விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி'† இது கட்டளையடிச்சீர்வகையடியொடு தொடுத்தவருக்கமோனை. 'கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங், கொள்ளா ரறிவுடையார்' (திருக்குறள்-௪0௪) இது கட்டளைவருக்கமோனை. 'கேளிர் போலக் கேளல வேண்டி, வேளாண் வாயில் வேட்பக் கூறிய' இது கட்டளைவருக்கவெதுகை. 'வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்துஞ், சீருடை நன்மொழி நீரொடு சிதறி' இஃது இரண்டுந் தொடுத்தது. 'வானுயர் வெற்ப விரவின் வரல்வேண்டா, யானை யுடைய சுரம்' இது கட்டளைவருக்கவெதுகை. 'தக்கார் தகவில ரென்ப தவரவ,ரெச்சத்தாற் காணப் படும்' (திருக்குறள்-ககச) இது கட்டளைவல்லினவெதுகை. 'அத்தக் கள்வ ராதொழு வறுத்தெனப், பிற்படு பூசலின் வழிவழி யோடி' இஃதிரண்டுந்தொடுத்தது. 'அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய், நின்றது மன்னவன் கோல்' இது கட்டளைமெல்லினவெதுகை. 'நம்மில் புலம்பினு முள்ளுதொறு நலியுந், தண்வரலசைஇய பண்பில் வாடை' இது சீர்வகைமெல்லினவெதுகை. 'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப், பொய்யா விளக்கே விளக்கு' (திருக்குறள்-௨கக) இஃதிடையினவெதுகை. 'மன்னர் மன்ன மறவர் மறவ, செல்வர் செல்வ செருமேம் படுந' (பெரும்பாணாற்றுப்படை) இது சீர்வகை இடையினவெதுகை. (கச)

---

* 'இ-து எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தலை நுதலிற்று. மோனைத்தொடைக்கும் எதுகைத்தொடைக்கும் எடுத்த எழுத்தே வருதலின்றி வருக்கவெழுத்தும் உரிய எ-று: உ-ம். 'பகலே, பல்பூங் கானற் கிள்ளை யோப்பியும், பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇய, பின்னுப்பிணி யவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்' எ-து வருக்கமோனை. 'ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து, தேறுநீர் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்து' என்பது வருக்கவெதுகை' என்பது உரையாசிரியநரை.

† என்பது வகரவருக்கம் முதற்கண் வந்தமையின் வருக்கமோனையாயிற்று என்ப.


நொருக்கி, அத்துண்டுகளைப்பின்னும் உடைத்தால் சிறுதுண்டுகளாய் உடைக்க உடைக்க முடிவில் தூள் அணுக்களாகவிருக்கும். அவ்வணுக்களில் ஒவ்வொன்றும் பெருஞ்சுண்ணும்புக்கட்டியின் பாகமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால் பெருங்கட்டியானது அதன் தூள்களாலாகியது என்பது உண்மை. இவ்விதமே பெரும்பாறை அதன் தூள்களாலானதாகவும் ஜலம் வாயு முதலியவை அவ்வப்பொருளின் தூள்களாலானதாகவும் கருதக்கூடியதாயிருக்கின்றன. ஆதலால் கனபதார்த்தத்தின் தூளை கனத்தூளாகவும் ஜலபதார்த்தத்தின் தூளை ஜலத்தூளாகவும், வாயுபதார்த்தத்தின் தூளை வாயுத்தூளாகவும் எண்ணி, ஓர் பொருள் கனஸ்திதியிலிருந்து ஜலஸ்திதிக்கும், ஜலஸ்திதியிலிருந்து வாயுஸ்திதிக்கும் மாறுங்கால் அவ்வஸ்திதிக்குப் பொருந்திய தூள்கள் நிலைபெயர்தலினாலாகும் விசேஷத்தைத் தேர்ந்தறிவோம்.

நமது உபயோகத்திற்கு முக்கியமாயுள்ள தண்ணீரை மேற்சொல்லிய மூன்றுஸ்திதியிலும் பார்க்கிறோம். அஃதாவது கனஸ்திதியிற் பனிக்கட்டியாகவும், ஜலஸ்திதியில் நீராகவும், வாயுஸ்திதியில் ஆவியாகவும் பார்த்துவருகிறோம். கனமாயுள்ள பனிக்கட்டி உருகினுற்றான் நீராகிறது. ஆதலால் பனிக்கட்டி உருகுவதற்கு வேண்டுமளவு உஷ்ணம் அதன்மேற் பட்டாற்றான் அஃது உருகும். ஆதலால் வேண்டும்வரையில் உஷ்ணம் ஓர் கனபதார்த்தத்தின்மேற்றாக்கினுல் அப்பதார்த்தத்தின் தூள்களின்மேற்பட்டுத் தூள்களை இளகச்செய்து-அஃதாவது வெகுநெருங்கிய தன்மையிலிருந்து விலக்கி வருவதால் ஜலஸ்திதியடைந்து நீர்போலாகிறது. உஷ்ணம் அதிகப்பட்டால் இவ்விதமே ஜலத்தூள்கள் இளகி-அஃதாவது நெருக்கத்தினின்று விடுபட்டு-அகன்று பரவி வாயு அல்லது ஆவியாகிறது. ஆகையால், பொருள்கள் தன்மையில் மாறுங்கால் உஷ்ணம் முக்கியமாகவும், உஷ்ணம் பொருள்களின் தூள்களை நிலைவேறுபாடுண்டாக்கக் கூடியதாகவும் அறியப்படுகின்றன. பொருள்களுக்குத்தக்கபடி உஷ்ணம்வேண்டியிருக்கும். ஈயத்தை உருக்குவதற்கு அதிக உஷ்ணம் வேண்டும். இரும்பை உருக்குவதற்கு உஷ்ணம் பின்னும் அதிகரிக்கவேண்டும்.

உஷ்ணம் குறையக்குறையக் குளிர்ச்சி அதிகரிக்கும். உஷ்ணம்போற் குளிர்ச்சி தனியாக உரைக்கக்கூடியதன்று. ஒளியில்லாவிடத்து எப்படி இருளென்று அறிகிறோமோ அப்படியே உஷ்ணமில்லாவிடத்திற் குளிர்ச்சியென்றறிகிறோம். ஆகையால் இருளும் குளிர்ச்சியும் தானுகவே புலப்படக்கூடியவையன்று. உஷ்ணம் அதிகரித்துவந்தாற் பொருள்கள் கனத்திலிருந்து ஜலத்திற்கும், ஜலத்திலிருந்து வாயுவிற்கும்; உஷ்ணக்குறைவாலுன்

*


டாகும் குளிர்ச்சி அதிகரித்துவந்தால் வாயுவிலிருந்து ஜலத்திற்கும் ஜலத்திலிருந்து கனத்திற்கும் மாறிவருகின்றன. ஆதலால் இப்பூமிக்குரித்தான எல்லாப்பொருள்களும் மேற்சொல்லிய மூன்றுதன்மையிலு மிருக்கத்தகுந்தவை யென்பது சுலபமாய் அறியத்தக்கது. ஜலவாயுவை (Hydrogen) தகுந்த குளிர்ச்சியினால் நீராக்கும் விதத்தைக் கண்டிருக்கின்றனர். பாலைக் குளிர்ச்சியாற் பாற்கட்டியாக்கித் தேசாந்தரங்களுக்கு விற்பனைக்காக அனுப்புவதும் எல்லாருக்குந் தெரியும். நமது வீடுகளில் நீரைக்காய்ச்சும்போது நீரானது ஆவியாகிப் பாத்திரத்தின்மேலுள்ள மூடியின் அடிப்பாகத்திற்பட்டு நீர்த்துளிகளாதலைப்பார்க்கின்றோம்; காரணமென்னவெனில், மேன்மூடியானது அதைச்சுற்றியிருக்குங் குளிர்காற்றினால் வெப்பத்தை அடையாமற் குளிர்வையடைகின்றது. அந்தக்குளிர்வை யடையும் மூடியின் அடிப்பாகத்தில் நீராவிபட்டமாத்திரத்தே வாயுப்போன்ற ஆவி உஷ்ணக்குறைவினால் நீர்த்துளிகளாகின்றன. அப்படியே பாலை நன்றாகக்காய்த்துப் பாத்திரத்தின்மேல் ஓர் மூடியைச் சிலநேரம் வைத்திருந்தால் மூடிக்கடியிற் பாலினின்று வெளிப்பட்ட நீராவி கனத்தையடைந்து நீர்த்துளிகளாகின்றது. ஓர் கண்ணாடிப்பாத்திரத்தில் தண்ணீரைக்கொண்டு காய்ச்சி அப்பாத்திரத்தின் வாயி லிருந்து மற்றோர் குளிர்ந்த கண்ணாடிப்பாத்திரத்திற்குள், ஆவியை வெளிவிடாத கண்ணாடிக்குழாயொன்றை நுழைத்துக் குழாயைச் சுற்றி ஈரத்துணியைக்கட்டினால், முதற்பாத்திரத்து (a) உள்ள நீராவி அப்பாத்திரத்தை விட்டுக் கண்ணாடிக் குழாய்(b) மூலமாய்ச்செல்லும்போது அந்தக்குழாயைச் சுற்றியுள்ள ஈரத்தினாற் குளிர்வடைந்த உட்புறத்தின்மேல் தாக்க, உஷ்ணங்குறைந்து நீர்த்துளிகளாய் ஒன்றுசேர்ந்து, இரண்டாவதுபாத்திரத்தில்(c)



பெருந்துளிகளாய் ஒழுக, அப்பாத்திரம் நிரம்பும். ஆதலால், தண்ணீரானது உஷ்ணத்தினால் ஆவியாக, ஆவி உஷ்ணக்குறைவினால் நீர்த்துளிகளாய் விழுவதைப் பார்க்கிறோம். இவ்விதம் உஷ்ணத்தினாற் பொருள்கள் விகாசமடைவதென்றும், உஷ்ணக்குறைவால் இறுக்கமடைவதென்றுங்கூறலாம்.

பொருள்களின் தன்மை மாறுபடுதற்கு மற்றுமோர் காரணமுண்டு. அஃதாவது காற்றின்பாரம் பூமியைச்சுற்றி உத்தேசம் 45-மைல் உயரம்

வரையிற் பரவியிருப்பதாக முன்னமேயே படித்தோம். 35-அங்குலம்-அஃதாவது உத்தேசம் 3-அடி நீளமும் 1-சதுர அடியும்-உள்ள கண்ணாடிக்குழாயின் ஒரு மூலையைமூடி, அக்குழாயை வாதரசத்தால் 1-வது சித்திரத்திற் காட்டியபடி நிரப்பி, வாயைக் கட்டைவிரலால் நன்றாகப்பொத்திக்குழாயை வாதரசம் சிறிதும் சிந்தவொட்டாமல் சாக்கிரதையாக 2-வது சித்திரத்திற் கண்டபடி, வாதரஸம் நிரம்பக்கிடக்கும் ஓர் கண்ணாடிக்கிண்ணத்தின் மத்தியில் தலைகீழாகத் திருப்பி வாயைத் திறந்துவிட்டால், வாதரஸம் அதேசித்திரத்திற்கண்டபடி உத்தேசம் 5-அங்குலம் கீழேவிழுந்து 30-அங்குலம் உயரம் மாத்திரம் தங்குகிறது. நிரப்பின



சித். 1. சித். 2.

போதோ, குழாய் முழுதையும்நிரப்பினோம். ஆதலால், அப்போது உத்தேசம் 35-அங்குல உயரம் வரையில் வாதரஸம் இருந்தது : இப்போது வாதரஸம் 30-அங்குலம் உயரம் வரையில் மாத்திரம் இருக்கிறது ; இவ்வகைத்தாய்க் கடலோரத்திலுள்ள பாகங்களிற்றான் காணலாம். இதன் காரணமென்ன ? மேற்கூறிய 2-வது சித்திரத்திலுள்ள கண்ணாடிக்குழாயின் 30-அங்குல உயரமுள்ள வாதரஸத்தைக் கீழேவிழாமல் தாங்குவது எது ? அந்தக் கண்ணாடிக்குழாயை மூடியுள்ள மேல்நுனியை உடைத்துத் திறந்துவிட்டால் என்னும் ? அந்தக்கண்ணாடிக்குழாயின் மேல்நுனிக்கும் வாதரஸத்திற்கும் நடுவிலுள்ள வெற்றிடத்திலொன்றுமில்லையா ? இக்கேள்விகளைப் பரிசோதித்துத் தகுந்த உத்தரங் கூறுவோம்.

அசைவற்றிருக்கிற யாதாயினுமொரு பொருளைத் தள்ளினாலாவது அமுக்கினாலாவது இடையூறில்லாவிடில் அசைகிறது ; அஃதாவது இடம்விட்டுப் பெயர்கிறது. ஓர் பீச்சாங்குழலினின்று கைப்பிடியை நீக்கிக் குழலைமட்டும் ஜலத்திற் கூரியநுனி கீழாகப்பிடித்தால் துவாரத்தின் வழியாய்க் குழாய்க்குள் ஜலமேறுவதில்லை. ஏனெனில், ஜலம் மேலே ஏறவொட்டாமற் காற்றின் கனமானது குழாய்க்குள் அமுக்குகிறது. ஆனால் குழாய்க்குட் கைப்பிடியை முழுதும் செலுத்திக் கூரியநுனியை ஜலத்திற்குள் விட்டுக் கைப்பிடியை வெளியே இழுத்தால், துவாரத்தின் வழியே நீர் குழாய்க்குட் புகுகிறது. அதற்குக்காரணம் என்னவெனில், குழாயின் கூரியநுனிக்கு

மேலுள்ள பருத்த இடம்வரையில் கைப்பிடிக்கொம்பின் அகன்ற அடிவார மிருப்பதாலும், கைப்பிடியை வெளியே இழுக்கஇழுக்க, கைப்பிடிக்கொம் பின் அடிவாரத்திற்கு மேலுள்ள காற்ருனது குழாயினின்று சிறிதுசிறிதாக வெளிப்படுவதாலும், அவ்விதமிழுக்குங்கால் கைப்பிடிக்கொம்பினடிவாரத் தின்கீழுள்ள இடத்தில் யாதாயினும் நுட்பக்காற்றிருப்பின் அதன் பாரம் ஜலத்தின்மேலுள்ள காற்றின்பாரத்தைவிட மிகக் குறைவாதலால் அடிவா ரத்தின் கீழிருக்கக்கூடிய நுட்பக்காற்றைத் தள்ளிக்கொண்டு நீரானது குழா ய்க்குள் மேலே ஏறும்படி வெளிக்காற்றுப்பரவியுள்ள ஜலத்தின்மேல் அமுக் குவதாலும் நீர்குழாய்க்குள் ஏறுவதாக எளிதிலறிகிறேம். அந்தப்படியே இயற்கையாகக் கீழேவிழக்கூடிய இரண்டாவது சித்திரத்திற்காட்டிய கண் ணுடிக் குழாயிலுள்ள வாதரஸம் கீழேவிழாமலிருக்கத் தாங்குவது, அந்தக் கண்ணுடிக்குழாய்க்கு வெளியே கண்ணுடிப்பாத்திரத்திற் பரவியிருக்கும் வா தரஸத்திற்கு மேலுள்ள காற்றின் கனந்தான். ஒருவன் நின்றுகொண்டிருக் குங்கால் அவனுடைய கைகளில் ஒன்றைஒருவனும் மற்ருென்றை மற்ரெரு ருவனும் எதிருக்கெதிராய்ச் சாய்வின்றி நேராகச் சமவேகத்துடனிழுப்பின், நடுவிலுள்ள மனிதன் வேகங்களால் அசைவதில்லை. ஆகையால் எதிர்க்கெ திராயுள்ள வேகம் சமமாகவிருந்தாற் பொருள்கள் அசைகிறதில்லை. அப்ப டியே குழாய்க்கு வெளியேயுள்ள வாதரஸத்தை அமுக்கும் காற்றதுகனத் தின்வேகமும், குழாய்க்குள்ளிருக்கும் வாதரஸத்தினதுகனத்தின் கீழ்நோக் குவேகமும் சமமாயிருந்தாலொழிய, வாதரஸம் குழாயில் 30-அங்குல உயர ம் வரையில் நிற்காது. ஏனெனில், குழாயின் தலைமுனையைத் திறந்துவிட் டால் வெளிப்புறத்தின் காற்றுக்கனம் குழாய்க்குட்புறத்திலும் பிரவேசிப்ப தால், வாதரஸம் நிற்கக்கூடாமற் கீழேவிழும். அப்போது கண்ணுடிக்கு ழாய்க்குள் வாதரஸம் சிறிதும் தங்காது. ஆதலால், குழாய்க்குள் உள்ள வாதரஸத்தின் கனமும் குழாய்க்குவெளிப்புறத்துள்ள காற்றின் கனமும் ஒன்ருகக்கருதி, அளவுக்களவு ஒருசதுர அங்குலத்துடன் 30-அங்குல வுய ரமுள்ள குழாயின் வாதரஸமும், ஒருசதுரவங்குல விஸ்தீரணமும் உத்தே சம் 45-மைல் உயரமுள்ள காற்றின்நிலையும் பாரத்திலொன்றுதானென் று கூறுவர். 30-அங்குல உயரமும் 1-சதுர அங்குலம்அளவுமாகக்கொண்ட கண்ணுடிக்குழாயின் வாதரஸம் 15-பவுன் பாரமுடையதாகத் தீர்மானித் திருக்கின்றனர். ஆதலால், பொருள்களின்மேல் ஒருசதுர அங்குலம் விஸ் தீரணத்தை அமுக்கும் காற்றின்பாரம் 15-பவுன் என்று கூறுவர்.

இரண்டாவது சித்திரத்திற்கண்ட குழாயில் தலைமுனைக்கும் வாதரஸ த்திற்கும் நடுவிலுள்ள இடம் வெற்றிடம்; காற்றுச் சிறிதும் கிடையாது; காரணம் தாமே எளிதில் அறிந்துகொள்ளலாம்.

ருக்கிறதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. மலையாள தேசத்தில் உள்ளவர்கள் தினந்தோறும் எண்ணெய் தேய்த்து முழுகுவார்கள். இதை யனுசரித்தே "வைத்தியனுக்கிடுவதை வாணியனுக்கிட்டழை" என்ற பழமொழி ஏற்பட்டிருக்கிறது. இதன் தாற்பரியம் வைத்தியனுக்குக் கொடுக்கிறதற்குப் பிரதியாக வாணியன் அதாவது எண்ணெய் விற்பவனுக்குக் கொடுத்து அழை என்பதே. எண்ணெய் தேய்த்து முழுகுவதால் வியாதிகள் நேரிடாமலிருக்குமென்பதும் வியாதிநேரிடாவிட்டால் வைத்தியன் அநாவசியமென்பதும் வியாதியை வரவழைத்துக்கொண்டு வைத்தியனை அழைப்பதைக் காட்டிலும் எண்ணெய்தேய்த்துத் தேகத்தை சௌக்கியப்படுத்திக்கொள்வது மேலென்பதும் அப்பழமொழிக்கருத்தாகும். இப்போது பிளேக் என்னும் வியாதி எண்ணெய் தேய்த்து முழுகும் வழக்கமுள்ளவர்களை அநேகமாகப் பற்றுதென்றும் சில வைத்தியர்களின் அபிப்பிராயமாம்.

வைத்தியவிஷயமாக ஏற்பட்ட சில ஸ்நானங்களுமுண்டு. அவைகளில் முக்கியம் பாதங்களின் ஸ்நாநம் (Foot bath). ஒருவன் ஜலதோஷத்தால் வருந்தும்பொழுது வாய் விசாலமான பாத்திரத்திற் கொதிக்கும் வெந்நீர் வைத்து அதில் தனது கால்களை இட்டுக்கொண்டு உட்கார்ந்தால், அதனால் தேகத்தில் வியர்வை உண்டாக ஜலதோஷம் நீங்கும். அப்படி ஒருவன் உட்காரும்பொழுது அவனது தேகத்தைக் கம்பளங்களால் மூடிக்கொண்டு உட்காரவேண்டும். ஏனெனில், தேகத்தில் வியர்வை உண்டாகும்போது குளிர்ந்த காற்று மேனியிற் பட்டால் சீதரோகங்கள் உண்டாகும்.

இடுப்பு ஸ்நாநம் (Hip bath) :— ஒருதொட்டியில் வெந்நீருற்றி முழங்காலுக்கு மேலான பாகம்முதல் இடுப்புக்கு ஒரு சாண் மேலான பாகம் வரையில் ஜலத்தில் ஆழ்ந்திருக்கும்படி அத்தொட்டியில் உட்கார்ந்திருப்பது இடுப்புஸ்நாநம் என்று சொல்லப்படும். இந்த ஸ்நாநத்தால் மலபந்தம் முதலான நோய்கள் நீங்கும்.

இவைகளன்றியும் டர்கிஷ் பாத் (Turkish bath) என்றும் இன்னும் பலவிதப்பெயர்களுள்ள பெரும் ஸ்நாநங்கள் ஔஷதப்பிராயமாகச் செய்யப்படுகின்றன. அவைகள் நமதுதேசத்தார்களுக்கு அவசியமில்லாதவைகளாகையால் நாம் அவைகளைப்பற்றி இவ்விடம் எழுதவில்லை.

பத்தாம் அதிகாரம்.

வ ஸ் தி ர ம்.

Chapter X.—Clothes.

ஸ்நானம் செய்து முடித்த பிறகு ஒவ்வொருவரும் வஸ்திரம் தரித்துக் கொள்ளவேண்டும் என்பது அவசியமல்லவா? அம்மாதிரியே விதியும் ஏற்பட்டிருக்கிறது.* அச்சமயத்தில் தரித்துக்கொள்ளுவதற்குரிய வஸ்திரம் எப்படி யிருக்கவேண்டும்? அதைத் தரிப்பதால் பிரயோஜனமென்ன? என்பதை சுகஸந்தர்சன முறைப்படியே விசாரிப்போம். சில மிருகங்கள், அவ்வவை வசிக்கவேண்டிய இடத்துக்குத் தக்கபடி மேல்மூடலாகிய உரோமங்கள், கெட்டித்தோல்கள் இவைகளுடன் கடவுளால்சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. உஷ்ணதேசத்திலிருக்கும் பூனையின் தேக அமைப்புக்கும் சீதள தேசத்திலிருக்கும் பூனையின் தேக அமைப்புக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. சீதள தேசத்திற் குளிர் அதிகமானதால் அங்கிருக்கும் பூனைக்கு அதிக ரோமம் அடர்த்தியாய்ச் சரீர மெங்கும் வளர்ந்து அதற்குச் சுகத்தைக் கொடுக்கும். சில ஜந்துக்கள் ஒருதேசத்தை விட்டு மற்றொருதேசம் போனால் அத்தேசத்தன்மை அதற்கு ஒத்துக் கொள்ளாமல் மாண்டுவிடும். மனிதன் ஒருவன்தான் அவனுடைய புத்தியால் அவனுக்குத் தகுந்த வஸ்திரம் உடுப்பு முதலியவற்றை ஏற்படுத்திக்கொண்டு எத்தேசத்திலும் சுகமாக வாழலாம்.

அதிக உஷ்ணதேசமாகிய நமது நாட்டில் வஸ்திரத்தின் மகிமை நமக்கு சாதாரணமாய் அதிகமாகத் தெரியாது. ஹிமாசலம் முதலிய சீதளதேசத்தில் வஸ்திரமில்லாமல் மனிதன் பிழைத்திருக்கமுடியாது. அவனை உயிருடன் காத்துவைப்பதில் வஸ்திரம் முக்கியகாரணமாகின்றது. நமது அம்மணத்தை மறைப்பதற்கு வஸ்திரம் என்றும், நமது தேகத்தை அலங்காரம் செய்துகொள்ளும் முறைகளில் வஸ்திரம் ஒன்று என்றும் சில ஜனங்கள் சொல்லுவார்கள். நல்லது: கார்த்திகை மார்கழி மாதங்களில் வடலி வீசும் பொழுது அவ்வாடைக்கு எதிராக நமதுதேகத்தை மூடிக்கொள்ளாமல் நாம் உட்கார்ந்திருந்தால் என்ன உண்டாகுமென்று சிறிது யோசித்துப்பார்ப்போமேயானால், வஸ்திரத்தின் பிரயோஜனம் நமக்கு விளங்கும். குளிர்காற்றால் நமது தேகத்திலிருக்கும் உஷ்ணம் குறைந்து அக்காரணத்தால் நமதுரத்தமும் உஷ்ணத்தையிழந்து நமது சுவாசாசயம், தொண்டைமுதலியவற்றிற்

---

*ஸ்நாநாநந்தரம்வாஸஃ வஸீதயாத்—வைத்யநாத தீக்ஷிதீயம்.

புண்ணை உண்டாக்கி அப்புண்ணின்நிமித்தம் பலவிதவியாதிகளை விளைவிக்கும். இதைக்கொண்டு நாம் யோஜித்துப்பார்ப்போமேயானால், நமது வஸ்திரங்கள் உடுப்புக்கள் இவைகளின்முக்கியபிரயோஜனம் சீதத்தினின்று நமது தேகத்தைக் காப்பாற்றிவைப்பதற்கென்றே ஏற்படுகின்றது. அதுபோலவே, வெப்பத்தினின்று நம்மைக்காப்பாற்றிவைக்கச் சிலவித வஸ்திரங்களும் உடுப்புக்களும்வேண்டும். ஆகையால் வஸ்திரத்தின்பிரதானபிரயோஜனம் நமது தேகத்தைச் சீதத்தினின்றும் அல்லது வெப்பத்தினின்றும் காப்பாற்றிவைக்கவென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

சீதத்துக்குத் தகுந்தபடி நாம் வஸ்திரமணிவதால் நமது தேகச்சூடும் ரத்தச்சூடும் குன்றாமலிருக்க நாம் செய்துகொள்ளுகின்றோம். நமது உடுப்பு இவ்வளவு அழுத்தமாகவிருக்கவேண்டுமென்பது அவ்வவனுடைய தேக அமைப்பை ஒத்ததாகவிருக்கின்றது. நாற்பது வயதுக்குமேற்பட்ட பெரியவர்களும் அதிக பலமற்ற சிறியவர்களும் தங்கள்தேகத்தை ஒட்டி எப்பொழுதும் கம்பளித்துணியால் (flannel) தைக்கப்பட்ட ஒருசட்டை போட்டுக்கொண்டிருப்பது தேகத்துக்கு சௌக்யம் என்று சொல்லப்படுகின்றது. சிலர் வெகுநயமான தோலுள்ளவர்களாகவிருப்பார்கள். அவர்களுக்குக் கம்பளி உறுத்தலாம் ஆகையால், அவர்கள் அக்கம்பளியின் உட்பக்கத்தில் பட்டுத்துணிசேர்த்து உடுப்புத்தைத்துத் தரிப்பது ஆரோக்கியம். பருத்திநூலாலும் சணலாலும் ஆகிய உடுப்புக்களுக்கும் வஸ்திரங்களுக்கும்மேலாகக் கம்பளிவஸ்திரங்களை சுகஸந்தர்சன சாஸ்திரிகள் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

வெளுப்புநிறம் நாம் உடுக்கும் வஸ்திரத்திலும் உடுத்துக்கொள்ளும் உடுப்பிலுமிருத்தல் மிகசௌக்கியமென்றும் மஞ்சள், நீலம், சிவப்பு, கருப்பு இவைகள் உதவாத நிறங்கள் என்றும் சொல்லப்படுகின்றன. நமது தேசத்து ஆசாரஸ்மிருதியாகிய வைத்தியநாததீக்ஷிதீயத்திலும் இப்படியே சொல்லப்பட்டிருக்கின்றன.*

தேசங்களுக்குத் தக்கபடி நாம் உடுப்புத் தரிக்கின்றோம். சென்னையில் இருக்கும் உத்தியோகஸ்தர்கள் நீலகிரிக்குப் போகும்பொழுது ஒத்தையில் சென்னை உடுப்புத்தரித்து சௌக்யமாகவிருக்கமுடியாது.

தேசத்துக்குத் தக்கபடி உடுப்பு என்பதுபோல, காலத்துக்குத்தக்கபடியும் உடுப்புவேண்டும். நமது நாட்டிலேயே சிவராத்திரி கழிந்தபின்பு எல்

* नारक्तमुल्बणं वासो न नीलं च प्रशस्यते ।
मलाक्तं गन्धहीनं च वर्जयेद्वसनं बुधः ॥

ளாக்கம்பளிகளையும் சுருட்டிப் பெட்டியில்வைத்துவிடுகின்றோம். குளிர்காலத்திற் காலே நன்றாகக் கம்பளியாற் போர்த்திக்கொண்டு உட்கார்ந்தாலும் படுத்தாலும் நமதுதேகத்தில் உண்டாகும் பாதிசீதஉபத்திரவம் நீங்கும். இதை உத்தேசித்தே 'கால்மாட்டுக்குப் பாய்வேண்டும்' என்று உலகச்சொல்லும் வந்திருக்கின்றது. குழந்தைகள் தேகத்தைக் குளிர்ந்தகாலத்தில் நன்றாகக் கம்பளியால் மூடிவைப்பதில் நாம் வெகு ஜாக்கிரதையாகவிருக்க வேண்டும். இதில் கொஞ்சம் தவறினால் இதினாலுண்டாகும் நோய்கள்பல. இவ்வண்ணமே வயது அதிகமாகச்சென்றவர்களும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

உடுப்பு அல்லது வஸ்திரத்தின் முக்கிய பிரயோஜனம் சீதத்தினின்றும் வெப்பத்தினின்றும் நமது தேகத்தைப் பாதுகாக்கும் குணம் என்று சொன்னோமே. இதனுடன் நாம்தரிக்கும் வஸ்திரங்கள் நமது தேகத்திலிருந்து உண்டாகும் வியர்வையை எப்பொழுதும் இழுத்துக்கொண்டேயிருக்கின்றபடியால் நாம் நமது தேகத்துக்கு அருகில் தரிக்கும் வஸ்திரத்தையும் உடுப்பையும் அடிக்கடி பரிசுத்தம்செய்துகொள்ளவேண்டும்.

நமது தேகத்தின் அழுக்கு நமது வஸ்திரத்தில் சம்பந்தப்படுகின்றபடியால் ஒருவன் உடுத்த வஸ்திரத்தை மற்றொருவன் உடுத்துக்கொள்ளுவது தேகசௌக்கியத்துக்குக் குறைவு. ஏனெனில் முதல் உடுத்துக்கொண்டவனுக்கு ஏதாவது சொறி, சிரங்கு, கடிமுதலிய சருமநோய்களிருந்தால் அவன் வஸ்திரத்தை மற்றொருவன் கட்டிக்கொண்ட காரணத்தால் இவனுக்கும் அந்தநோய்கள் தொத்திக்கொள்ளும்.

நாம் தொத்துநோயாகிய சொறி, சிரங்கு, கடி, அம்மை முதலிய சமயங்களில் தரித்த உடுப்பையும் வஸ்திரத்தையும் அந்நோய்கள் நம்மைவிட்டகன்றபின்பு தரிப்பது சுகக்குறைவேயன்றி சுகமன்று. ஆனால் நமது வஸ்திரங்களை அவ்விதகாரணத்தால் நாம் அகற்றுகின்றதில்லை. அகற்றாமலே நமது வஸ்திரங்கள் நமக்கு சுகக்குறைவை உண்டாக்காமலிருக்க நாம் வெந்நீர்காயவிட்டு அவ்வெந்நீர் களகளவென்று கொதிக்கும்பொழுது அதில் நமது வஸ்திரத்தையும் உடுப்பையும் நன்றாக அமுக்கி ½-மணி வைத்து அதன்பிறகு எடுத்துச் சுத்தம்பண்ணி உபயோகிக்கவேண்டும். இப்படிச் செய்வதால் தொத்துநோய் சம்பந்தமான சிலகிருமிகள் நமதுஉடுப்புக்களிலும் வஸ்திரங்களிலுமிருக்குமாயின், அவைகள் கொதிக்கும் வெந்நீரில் மாண்டுவிடும். சீதத்திலிருந்து நமது தேகத்தைக் காப்பாற்றிக்கொள்ளலாம். உரோமத்தாற் செய்யப்பட்ட துணிகளை உபயோகிக்கவேண்டும்.

வெப்பத்திலிருந்து நமது தேகத்தைப் பாதுகாத்துக்கொள்ளத் துணியால் அதிக பிரயோஜனமில்லையென்றாலும், துணியின் நிறத்தால் எவ்வளவோ குணகுணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உஷ்ணத்திலிருந்து நம்மைக் காக்க வெண்மையான உடுப்பே சிலாக்கியம். மற்ற நிறங்கள் பிரயோஜனமேயில்லை. இதை உத்தேசித்தே வைத்யநாததீக்ஷிதீயத்தில் 'சுக்லாம்பரதர: சுசி: '—'வெண்மையுடுப்பு உடுத்தவனே பரிசுத்தன்' என்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

வியர்வையை நமது தேகத்திலிருந்து ஆகர்ஷித்துக்கொள்ளவும், சிலவிதநாற்றத்தை அவ்வாறே வாங்கிக்கொள்ளவும் ரோமத்தாலாகிய வஸ்திரங்களும் உடுப்புக்களும் அதிக சக்தியுள்ளவைகளென்றும், இவ்விதமாகப்பஞ்சுநூலாலாகிய வஸ்திரங்களைவிட இரட்டைச்சக்தி ரோமத்தாலாகியவஸ்திரங்களுக்கு உண்டென்றும் சுகசந்தர்சனவாதிகள் எடுத்திருக்கின்றார்கள்.

விஷஜ்வரம் அதிகமாகவிருக்கும் இடங்களில் பிளானல் உடுப்பு நமது தேகத்தை ஒட்டிப்போட்டுக்கொள்ளுவதால் அவ்விஷஜ்வரத்தை ஒருவாறு நாம் விலக்குகின்றோமென்று பிரசித்தவைத்தியர்கள் சொல்லுகின்றார்கள். அது உண்மை. நமது நாட்டில் நாம் கெட்டியான பஞ்சுத்துணியாலாகிய உடுப்புக்கள் தரிப்பது நலமென்றும், அத்துணிகள் வலைபோலச் சிறு இடைவெளியுடன் நெய்யப்பட்டிருந்தால் அவ்வமைப்பு எல்லாவிதத்திலும் சௌக்கியமென்றும் சொல்லப்படுகின்றன.

பதினோராம் அதிகாரம்
நித்திரை.
Chapter XI.— Sleep.

நித்திரையென்பது ஒவ்வொரு பிராணியினுடைய உயிருக்கும் உறுதியையளிக்கும் ஓர் பெரிய ஊட்டம். கால், கை முதலிய உறுப்புக்களிலிருக்கும் சில்களுக்குப்பலங்கொடுத்து, அவைகள் தத்தம் தொழிலைச்செய்ய வலிமைகொடுப்பது தூக்கம் என்பதுதான். ஒரு வைத்தியர் நித்திரையின் அவசியத்தைப்பற்றிப் பின்வருமாறு சொல்லுகிறார்;—பகலில் நாம் காலைமுதல் மாலைவரையில் படுமவஸ்தை நாழிகை ஏறஏற அதிகரித்துக்கொண்டுவருகிறது. ஹிருதயமும் நாழிகையாக அதிகமாக அடிக்கிறது. இராத்திரி நாம் தூங்கப்போவதற்குமுன்னமே அது அடிப்பது வெகு அதிகம். தூக்கமட்

டமிருந்துகொண்டு அந்த வேகத்தைக் குறைத்துக் காலமே மறுபடி சரியா ன அளவுக்குக் கொண்டுவராமற்போனால் மனிதனிந்த உலகத்திற் பிழைத் திருப்பதே வருத்தம். காலையில் அதுவும் நாம் தூங்கி எழுந்திருக்கும்போது ஹிருதயம் அடிப்பது வெகுஙிதானம். இந்தக்காரணத்தைக்கொண்டுதான் நமது நாட்டில் வைத்தியர்களும் காலைவேளையில் நாதுபார்க்கவேண்டுமென் றுசொல்லுகிறார்கள்.

பகல்முழுவதும் ஒருமனிதன் இந்த உலகவிஷயத்தின்பொருட்டு உ ழைத்தேதீரவேண்டும். என்னென்னவோ பகல்முடியச் செய்கிறோம், ஓடு கிறோம், அலைகிறோம், அவஸ்தைப்படுகிறோம். ஜட்காக்குதிரைமாதிரி தே கத்தைச் சக்கைசாறாகப் பிழிந்துவிடுகிறோம். இவ்வளவும் நாம் சந்தோஷ மாய்ச்செய்வது. பகல் 30-நாழிகையுமானவுடன் இரவுவந்துவிடும்; அக்கா லத்தில் நமது வருத்தங்களை மறந்து நாம் தூங்கவேண்டுமென்கிற எண்ணத் துடன் நித்திரைசெய்வதற்கே ஈசுவரனிரவைக் கொடுத்திருக்கிறார். நமக் குப் பலத்தையும் சந்தோஷத்தையும் கொடுப்பது இரவே. மனதிலும் தே கத்திலும் நித்திரையானது, தனது அமிருதத்தை ராத்திரிகாலத்திற் கக் காமற்போனால் நமது வாழ்நாட்கள் வெகுவாயிருக்கா. விளக்கை அணைத்து அல்லது சிறியதாகவைத்துவிட்டுத் தலையணையில் நாம் தலைவைத்துப்படு க்கும்போது நமக்கு இவ்வுலகிலுண்டாகும் எல்லாத்துக்கங்களையும் கஷ்ட ங்களையும் மறந்துவிடுகிறோம்.

இந்த நித்திரை மட்டுமில்லாவிடில் எவ்வளவு கஷ்டம். மனிதனுக்கு மாத்திரமன்று, எல்லாப் பூதப்பிராணிகளுக்கும் பிராணனுடன் பிறந்திருக் கிற ஒவ்வொரு ஜந்துவுக்கும் இது, ஆகாரம் சுவாசம் இவைகளைப்போல, முக்கியமாக வேண்டிய விஷயம். மாலைப்பொழுதாகும் போது பக்ஷிகளெ ல்லாம் தத்தம் இனிமையான குரலாற் பாடிக்கொண்டு இராப்பொழுதைத் தூக்கத்திற் கழிக்கக் கூட்டில் வந்து அடைந்துவிடுகின்றன. ஏழையும் பண க்காரனும் ஏகரூபமாகவே நித்திரையை விரும்புகிறார்கள். தூக்கத்திற்குச் சரியான காலம் இரவு என்பதேயாம். ஏனெனில் இரவிற்கு இயற்கை யாக ஏற்பட்டிருக்கும் நிஸ்சப்தமும் அமரிக்கையும் நாம் சௌக்கியமாகத் தூங் குவதற்குக் காரணங்கள் ஆகின்றன. பகல் வேலைசெய்வதற்கும் இரவு தூங் குவதற்கும் என்று கடவுளாற் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு விரோ தமாகச் சிலர் இரவெல்லாம் விழித்துப் பகலில் தூங்குவார்கள். பகலில் தூங் குவது சில சமயத்தில் தலைக்கனத்தையும் வாய்க் கசப்பையும் உண்டாக் கும். அன்றியும், தூக்கத்தால் ஒருவன் அடையவேண்டிய பொது நன் மையைப் பகலில் தூங்குகிறவன் அடையவேமாட்டான். இரவில் வேலை

செய்து பகலில் தூங்குகிறவனுக்குப் பகலுங்கெட்டு இரவுங்கெட்டு ஒருவித காரியமும் நிறைவேறாமற் போகும். தூக்கமென்பது நாம் தேகத்தாலும் மனத்தாலும் படும் சிரமத்தை ஒருவாறு ஆற்றி வைப்பதற்காகவே ஏற்பட்டிருக்கின்றமையால், ஒவ்வொருவனும் தூங்கவேண்டிய காலவளவு அவனவன் படுகின்ற தேக சிரமத்தையும் மனசிரமத்தையும் சார்ந்ததாயிருக்கும். அது மாத்திரமன்று; ஒருவனுடைய வயது, பலம், புத்தி, சக்தி அவைகளை அவன் செலவிடுவது இவைகளை எல்லாம் சார்ந்ததாகவுமிருக்கும். நாம் குழந்தைகளாயிருக்கும்பொழுது நித்திரைதான் நம்மை வளரச் செய்ததென்று எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிறபடியால், குழந்தைகள் இரவும் பகலும் தூங்கிக்கொண்டேயிருக்கும். இப்படி இரண்டு வருட காலம் தூங்கின பிறகு குழந்தைகளுக்குப் பகல் நித்திரை என்பது போய் விடும். சாதாரணமாக ஒவ்வொருமனிதனும் ஒரு நாளில் எத்தனை நாழிகை தூங்கவேண்டுமென்பதைப் பற்றி விசாரிப்போம். நாழிகையைக்காட்டிலும் மணி என்பது நமக்கு அதிக வழக்கம் ஆகையால் நித்திரையின் பிரமாணத்தை மணிக்கணக்கிற் குறிப்பிடுவோம். சாதாரணமாக ஒருவன் ஒரு நாளைக்குக் குறைந்தபக்ஷம் 5-மணியாவது தூங்கவேண்டும். ஆனால் சில வைத்தியர்கள் ஏழுமணிக்குக்குறையாமல் தூங்கவேண்டுமென்று சொல்லுகின்றார்கள். இவ்வளவு அதிகமாய்த் தூங்க பாக்கியம் பெற்றவர்களை நாம் பார்த்து அசூயைப் படவேண்டாம். இவ்வளவு அதிக காலம் நித்திரையிற் போவது அவசியமேஅன்று. ஒவ்வொருவனும் இரவில் 10-மணிக்குப் படுத்துக் காலையில் 5-மணிக்குத் தப்பாமல் எழுந்திருக்கவேண்டும். இதற்கு மேல் தூங்கப்பட்டவர்கள் நோய் முதலியவைகளால் வருந்தாதிருக்கும் பக்ஷத்தில் அதிகத்தூக்கம் தூங்கப்பட்டவர்களென்றே சொல்லவேண்டும். கிழவர்களும், ஏதாவது ஓர் வித நோயால் வருந்துகின்றவர்களும், நோய்தீர்ந்து உடம்பு தேறிவருகின்றவர்களும் அதிகத்தூக்கத்தை அடையவேண்டும்.

ஒவ்வொருவனுடைய தொழிலுக்கும் வழக்கத்திற்கும் தக்கபடி அவன தூங்கும் பிரமாணம் அவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இரவில் காவல் தொழிலில் இருப்பவர்களுக்குப் பகல் நித்திரை கூடாதென்று நாம சொல்லுவோமேயானால், அது அவர்கள் தேகசௌக்கியத்தை முற்றிலும் கெடுத்து விடுமல்லவா? ஸ்தூலகாயமுள்ளவர்கள் அதிக மாம்ச உணவைப் புசித்து மிகுதியாகத் தூங்கும்வழக்கத்தை அடைகின்றார்கள். இவர்களுக்குக் குறைந்தபக்ஷம் 9-அல்லது 10-மணி நித்திரைவேண்டும். சுக்குப்போல் ஒட்டிய மெல்லிய தேகமுள்ளவர்கள் தாங்கள் விழித்துக்கொண்டிருக்கும்பொழுதெல்லாம் அதிக வேலை செய்கின்றார்கள் என்றாலும், அவர்கள் அதிகமாகத் தூங்கவேண்டுவதில்லை. ஐரோப்பாவிற் பேர்பெற்ற சில அரசர்கள் 5-ம

ணிக்குமேல் தூங்கவில்லையென்று பிரசித்த வைத்தியர்கள் எழுதி யிருக்கி ன்றார்கள். (Fredrick the Great) என்பவரும் (Napoleon I) என்பவரும் ஒரு நாளைக்கு 5-மணிதான் தூங்கியிருக்கின்றார்கள். ஏதோ இரண்டொரு இரவுகளில் தூக்கங்கெட்டுப்போவதால் நமதுதேகத்திற்கு அதிக அசௌக் கியம் நேரிடமாட்டாது. ஆனால் இவ்வாறே ஒவ்வோர் இரவும் நாம் விழி ப்பதென்றேற்பட்டால் அப்பொழுதுதான் நமக்கு தேகசௌக்கியத்திற்குத் தீமைவிளையும். ஒவ்வொருவனுடையதூக்கமும் அவ்வவனுடையவழக்கத்தை ஒத்திருக்கின்றது. முக்கியமாக முன்னிரவில் நாம் படுத்துக்கொண்டு விடி யற்காலம் எழுந்திருக்கவேண்டும். அமெரிக்காதேசத்தில் கீர்த்திபெற்று வி ளங்கிய ஒரு டாக்டர் 'அதிகாலையில் எழுந்திருக்காமற் காலைசென்றுபொ ழுது விடிந்தபிறகு எழுந்திருந்து அப்புறம் என்ன ஓட்டந்தான் ஓடினபோ திலும் மாலைக்குள் ஒருவன் செய்துமுடிக்கவேண்டிய வேலையை அவன் செ ய்துமுடியான்.' என்று எழுதியிருக்கின்றார். இவ்விஷயம் அதிகாலையில் எழுந்திருக்கின்ற வழக்கத்தைப்பற்றி நாம் பேசும்பொழுது எட்டாவது அத் தியாயத்தில் நன்றாக எடுத்துப்பேசியிருக்கின்றோம்.

தூக்கக்குறைவிற் பலவிதநோய்கள் நமக்குஉண்டாகின்றன. தலைநோய் மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளுவது இவைபோன்ற இரண்டொ ரு நோய்கள் தூக்கக்குறைவால் நம்மை முதன்முதற் பீடிக்கும். இவ்விகாரங் களை நாம் ஒருவாறு கவனித்து அகற்றாமற்போவோமேயானால், நமக்கு மண் டைக்காய்ச்சல் பைத்தியம் சித்தப்பிரமை இவைபோன்றநோய்கள் உண்டா கும். சிலர் நமது சரீரம் வைரசரீரம், நமக்கு நித்திரைக்குறைவால் ஒருவித நோயும் உண்டாகமாட்டாது என்று வெகு இறுமாப்புடன் நித்திரையை அலக்ஷியம்பண்ணி உழைப்பார்கள். இவர்களுக்குச் சிலகாலம் சுகமாகச் செல் லலாம். இவர் என்று ஏதாவது ஓர் நோய்வந்துவிட்டாலோ அப்புறம் இவ ர்கள் அந்நோயைவிட்டுநீங்கிக் கரையேறுவது பெரும்பாலும் அசாத்தியமாக வேயிருக்கும்.

இத்தூக்கத்தை நாம் சுகமாக அடையும் வழியெப்படி? தூக்கமென்ப து நமது தேகசிரமத்தாலும் புத்திசிரமத்தாலும் நமக்கு உண்டாயிருக்கும் களைப்பை ஆற்றிவைக்கின்றதென்று நாம் முன்னமேயே சொல்லியிருப்ப தைக்கொண்டு, அதிக தேகசிரமமும் புத்திசிரமமும் உள்ளவர்கள் காடநித் திரை அதாவது அயர்ந்த தூக்கத்தின் சௌக்கியம் அனுபவிப்பார்கள் என்ப து திண்ணம். இந்தச்சித்தாந்தம் வெகு உண்மையாகையால், நாம் நமக்கு வரும் தூக்கத்தைக்கொண்டு நமது தேகவியாயாமத்தின் ஏற்றத்தாழ்வை ஒருவாறு நிச்சயித்துக்கொள்ளலாம்.

செந்தமிழ்.

தொகுதி-ҧ.] விசுவாவசுஹு ஆடிமீ [பகுதி-௯.

பாரதகாலமும் தமிழரும்.

செந்தமிழறிஞர்கள், தமிழ்ச்சரித்திர நுட்பங்களைப் பலபடியாகவும் இக்காலத்து ஆராய்ந்து வருகின்றனராயினும், அவ்வாராய்ச்சிகளிற் பெரும்பாலனவும் கடைச்சங்க நிகழ்ச்சியைப் பற்றியும், அதன் பிற்காலத்து நிகழ்ச்சியைப்பற்றியுமே அமைந்துள்ளன. இவற்றிற்கும் முற்பட்ட தமிழின் உண்மைநிலையைத் தெரிதற்குப் போதிய கருவிகள் இதுவரை கிடைத்தில. இறையனார் களவியலுரை முதலியவற்றில் முற்காலத்திருந்த தலையிடைச் சங்கங்களைப்பற்றிச் சிற்சில செய்திகள் தெரியவரினும், அம்மட்டோடு போதுமென அமையாது, மேலுமறிதற்கு நம்மனம் அவாவுகின்றது. யாழ்ப்பாணத்து ஸ்ரீமத். முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள், இத்தகைய சரித்திரவாராய்ச்சிபற்றி எழுதிய முகவுரை யொன்றை இங்கு எடுத்தெழுதுவதினும் சிறந்ததொன்று எமது ஞாபகத்திற்கு வரவில்லை:—
"காலதேசங்களாற் சேய்மைக்கட்பட்ட பொருளை ஆராய்தலும் துணிதலும் அரிய கருமமாயினும் அப்பொருளை அறிதற்கே மனம் அவாவுவதாகும். ஐயாயிரம் பதினாயிரம் வருஷங்களுக்கு முற்பட்ட விஷயங்களை ஆராய்ந்து துணியுமிடத்து உளதாகும் ஆனந்தத்திற்கு உவமை பிறிதொன்றுமில்லை. தேசத்தாற் சேய்மைக்கட்பட்ட சூரியாதி கிரகங்களின் தன்மைகளை ஒருவாறு யந்திரங்களால் அறிதலும் துணிதலுங் கூடும். இறந்தகால மென்னும் பரந்ததிரையிட்டு மறைந்துபோய்ச் சேய்மைப்பட்ட விஷயங்களை அத்திரை நீக்கிக் காண்டற்கோ ஒரு கருவியையாயினும் யந்திரத்தையாயினும் காண்

கிலம். ஆயினும் அச்சேய்மைக்கு அண்மைக்கட் செய்யப்பட்ட நூல்களைக் கருவியாகக்கொண்டு, அத்திரையை ஒருவாறு துருவி நோக்குதல் கூடும். அங்ஙனம் நோக்கிக் கண்டதே மேல்வரும் விஷயமாம்"

ஆதியில் மூன்று சங்கங்களிருந்தன என்னுஞ் பிரபலச்செய்தியில் நவீனர் சிலர் ஐயுறுகின்றனர். அவ்வையத்திற்கு அவர் கூறுங் காரணங்களில் முக்கியமானது, பழைய நூல்களிற் சங்கத்தைப்பற்றிப் பிரஸ்தாபமில்லை என்பதே. சிறிது நுணுகியாராய்ந்தால் இக்கூற்றுப் பொருத்தமுடையதன்றென்பது புலப்படும். இடைச்சங்கமிருந்தாருள் நிலந்தரு திருவிற்பாண்டியன் என்பான் ஒருவனென்பது முன்னூல்களிற் காணப்படுகின்றது. இவனே தொல்காப்பியம் புலப்படுத்தினோன். இதனை "நிலந்தருதிருவிற் பாண்டியனவையத்து" எனவரும் அவ்விலக்கணநூற் பாயிரத்தால் அறியலாம். இவனைப்பற்றிக் கடைச்சங்கத்தாராகிய மாங்குடிமருதனார், மருதக்காஞ்சியில் "தொல்லாணை நல்லாசிரியர், புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பி, னிலந்தருதிருவி னெடியோன்" எனப்புகழ்ந்திருக்கின்றனர். இதனுள், சங்கமென்னும் வடசொல்லாற் பெயர்கூறுமற்போயினும், அப்பாண்டியன், நல்லிசைப்புலவர் பலரைக்கொண்டு செந்தமிழாராய்ச்சி செய்தான் என்பது "புணர் கூட்டுண்ட" என்பதனுல் விளக்கமாம். அன்றியும், பண்டைத் தமிழ்வேந்தரிடம் தமிழ்ப்புலவர் பேரவை எக்காலத்துமிருந்து செந்தமிழாராய்ச்சி செய்துவந்ததென்பதிலும், அதுவே "சங்கம்" என்னும் பெயராற் பிற்காலத்து அழைக்கப்பட்டதென்பதிலும் அதிசயிக்கத்தக்கதொன்றுமில்லை. ஆதலால், முச்சங்கங்களைப்பற்றிய செய்தி முழுதையும் நவீனர் சிலர் ஐயுறுவது பொருந்தாதாம்.

இனி, அம்முச்சங்கங்களுள் தலைச்சங்கச்செய்திகளாக வழங்குவனவற்றில், முரஞ்சியூர் முடிநாகராயர் என்பவர், அச்சங்கமிருந்தாருள் ஒருவரென்று இறையனர் களவியலுரை முதலியவற்றிற் சொல்லப்படுகின்றது. இவரைப்போலவே, சிவபிரான், முருகவேள், அகத்தியனார் முதலியோரும் அச்சங்கத்தவராகக் கூறப்படினும், அவர்கள் தெய்வங்களாகவும், தெய்வத்தன்மையுடையோராகவும் இருத்தலால், அவரைப்பற்றிய ஆராய்ச்சி ஈண்டு நிகழ்த்தற்குரியதன்று.

ஆனல், அவருள் முடிநாகராயர் என்பார், புதியராய் நிற்றலின், அவர்யாவர்? எக்காலத்தவர்? எவ்வகையினர்? என்பன முதலிய விஷயங்களை முதலில் ஆராய்ந்து, அவர்மூலமாகப் பாரதகாலத்துத் தமிழ்மக்கள் யாவரென்றுந்தேடுவோம்.

பழைய புலவரது வரலாறுகள் சிலவற்றை ஆராய்வதற்குக் கடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்டும் தொகுக்கப்பட்டுமுள்ள நூல்களே சிறந்த கருவிகளாகும். அவற்றுள்ளும் புறநானூறு சிறந்தது. அந்நூலின் இரண்டாவது செய்யுள் சேரமான் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என்பானை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது. இச்சேரலாதன், பாரதயுத்தத்திற் பாண்டவர் பக்கல் நின்று, அப்பெரும்போர் முடியுந்துணையும் பாண்டவசேனைக்கு உணவளிக்கும் அருஞ்செயலை மேற்கொண்டு புரிந்தவன். இக்காரணம் பற்றியே "பெருஞ்சோற்றுதியன்" என்னும் அடையுடன் வழங்கப்பட்டான். அவன் அத்தொழில் புரிந்த செய்தி,

"அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

என அப்புறநானூற்றுப் பாடலிலேயே அவ்வரசனை முடிநாகர் முன்னிலைப் படுத்துக் கூறுதலால் உணர்க. இதனல் அச்செய்யுள் பாடிய முடிநாகராயரும் அப்பாடல்பெற்ற பெருஞ்சோற்றுதியனும் ஒரே காலத்தவரென்பதும், இப்பாடல் பாரதயுத்த முடிந்த சமீபகாலத்தே பாடப்பட்டதென்பதும் இனிது விளங்கும். இவ்வுதியன் பாண்டவ சேனைக்குப் பெருஞ்சோறு கொடுத்துதவிய வரலாற்றைப் பண்டைக் காலத்துப் புலவர் சிலரும் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். இதனை,

"மறப்படைக் குதிரை மாறு மைந்திற்
றுறக்க மெய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை யிரும்பல்
கூளிச் சுற்றங் குடியிருந் தாங்கு"

என மாமூலனரும், (அகநானூறு)

"ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த, சேரன்"

என இளங்கோவடிகளும் பாடியிருத்தல் காண்க. இவற்றுள், முன்னதிற் பெருஞ்சோறு கொடுத்தவன் உதியன் என்னும் பெயருடையவனே என்று விளக்கப்பட்டுள்ளது. இனி, இவ்வுதியனை முன்னிலையில் வைத்துப்பாடிய முடிநாகராயரும், தலைச்சங்கப் புலவர் வரிசையில் நூல்களிற் கூறப்படும் முடிநாகராயரும் ஒருவரே என்பதைக் காட்டற்கு, அவ்விரண்டிடங்களினும் " முரஞ்சியூர் " என ஊர் ஒன்றாயிருத்தலே தக்க சான்றாகும். அன்றியும் இம்முடிநாகர் தமிழ் நூல்களிற்காணும் புலவரெல்லாரினும் மிகப்பழமை யுடையராகத் தெரிதலால், அப்பழமை யொன்றே அவரைப் பாரதகாலத்தவரென்று உறுதி கூறத்தக்கது.

மேற்குறித்த புலவரது பெயரை நோக்கின், பாரதகாலத்தில் பரதகண்டமெங்கும் பரவிப் பெருவலிபெற்ற "நாகர்" என்ற சாதியினராகத் தோற்றுகின்றார். அவ்வுத்தகாலத்தில் நாகர்கள் பரதகண்டமெங்கும் பரவியிருந்தமையும், அதன் பிற்காலத்தே அருச்சுனன் வழித்தோன்றலாகிய ஜனமேஜயன் இவர் குலத்தை வேரறுத்தமையும், மகாபாரதத்தின் சரிதநுட்பங்களாகும். இந்நாகர்கள், உண்மையிற் சருப்ப உருவமுடையர் அல்லர். இவர்கள் தங்கள் முடிமேல் ஐந்தலை முத்தலைகளையுடைய நாகவடிவமுடைய தொன்றைத் தரித்து வந்தமையால், அதுபற்றி, இவர்கட்கு நாகர் என்ற பெயர் வழங்குவதாயிற்று. இவ்வாறு முடியில் நாகவடிவினதைத் தரித்துவந்த அந்நாகரது கற்சிலைகள், பழங்காலத்தனவாக, இன்றும் வடஇந்தியாவிற் பலவிடங்களில் உள்ளன. இந்நாகரைப்பற்றித் தெரிந்தசெய்திகளை ஸ்ரீகனகசபைப்பிள்ளையவர்கள் தமது நூலிற் படத்துடன் விளக்கியிருக்கின்றார்கள். இனி, நாம் கூறிவந்த தலைச்சங்கப்புலவரும் அக்கூட்டத்தில் ஒருவரென்பதற்கு "முடிநாகராயர்" என அவர்க்கு வழங்கும்பெயரே தக்கசான்றாம். இம்முடிநாகரது வாக்காகப் புறநானூற்றிற்கண்ட பாடலால் நிலம், நீர் தீ, வளி, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களை வணங்கும் பழையவழக்கம் இவர் காலத்திருந்ததென்பதும், நான்குவேதப்பகுப்பு இவர் காலத்தே அமைந்

திருந்ததென்பதும், இமயமலைச்சாரலில் அந்தணர் பலர் வசித்தனர் என்பதும் பிறவும் அறியலாகும்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் "அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில் தலைச்சங்ககாலத்திருந்தவராக வான்மீகனார், மார்க்கண்டேயனார், கௌதமனார் இவர்களைக்கூறுகின்றார். ஆயின், இவர்களும் பாரதகாலத்தை யொட்டியிருந்தவராதல் வேண்டும். இவருள் வான்மீகனார் இயற்றிய பாடலொன்று புறநானூற்று ருருஅ - ஆம் செய்யுளாகவுள்ளது. இப்பாடல் தவத்தின் பெருமையைமட்டும் விளக்கிநிற்பது. அதுவருமாறு:—

"பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
ஒருபக லெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்றா தாகலிற்
கைவிட் டனரே காதல ரதனால்
விட்டோரை விடாஅள் திருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே" என்பது.

இவ்வாறே மார்க்கண்டேயனார் பாடலொன்றும் அத்தொகை நூலின் ருகூரு-ஆம் செய்யுளாகக் காணப்படுகின்றது. அது வருமாறு:—

"மயங்கிருங் கருவிய விசும்பு முகனாக
இயங்கிய விருசுடர் கண்ணெனப் பெயரிய
வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்
வயிரக் குறட்டின் வயங்குமணி யாத்துப்
பொன்னந் திகிரி முன்சமத் துருட்டிப்
பொருநர்க் காணாச் செருமிகு முன்பின்
முன்னோர் செல்லவுஞ் செல்லா தின்னும்
விலைநலப் பெண்டிரிற் பலர்மீக் கூற
வுள்ளேன் வாழியர் யானெனப் பன்மா
ணிலமக ளழுத காஞ்சியு
முண்டென வுரைப்பரா லுணர்ந்திசி னோரே."

தலைச்சங்க காலத்தவராகிய மார்க்கண்டேயனாரால் ஒரு காஞ்சி நூல் இயற்றப்பட்டுள்ளதென்று தெரிகிறது. இவர்கள் நூலைத் தலையாய ஓத்தென்பர் நச்சினார்க்கினியர்.

இனி, அடுத்தவராகிய கோதமனாரைக் குறித்துச் சில விஷயங்கள் அதிகமாகக் கூறலாம். புறநானூற்றில் கோதமனாரென்னும் புலவர் தருமபுத்திரனைப் பாடிய பாடலொன்று ௩௬௬-ஆம் செய்யுளாகவுள்ளது. இப்பாடல் இடையிடையே சிதைந்து காணப்படுகின்றது. அப்புலவர் இப்பாடலில் தருமபுத்திரனை "அறவோன் மகனே" என விளிக்கின்றார். இங்குக் காட்டிய தருமபுத்திரன் பாண்டவர் மூன்றோன்றலேயாயின், கௌதமனார் பாரத காலத்தவராவர்; ஆயின் தலைச்சங்க காலமும் அதுவேயெனக் கூறுதல் தானே அமையும். பாரதகாலத்திலும் அதன் பிற்காலத்திலும் தமிழ்மொழி பரதகண்டமெங்கும் பரவியிருந்ததென்பதற்குச் சிலபல குறிப்புகள் காணப்படுகின்றன. ஆரியாவர்த்தத்தே தமிழின் பாகதமாகிய பாஷைகள் இன்றும் வழங்குகின்றன என்னும் பிரசித்தக் கொள்கையே இதனை வலியுறுத்தும். ஆயின், கௌதமனார் தருமபுத்திரனிடஞ் சென்று அவனைத் தமிழ்ப்பாவாற் பாடி மகிழ்வித்திருத்தலும் கூடியதே.

இனிப் பதிற்றுப்பத்து ஆசிரியரில் பாலைக்கௌதமனார் என்னும் புலவரொருவர் உளர். அந்நூலின் மூன்றாம்பத்து அவர் பாடியதாகும். தலைச்சங்கத்தவராக நச்சினார்க்கினியர் குறித்த கௌதமனாரே இப்பதிற்றுப்பத்துக் கௌதமனார் என்று கருதற்குச் சில ஆதாரங்கள் உள்ளன. பதிற்றுப்பத்தில் பாலைக்கௌதமனாராற் புகழப்பட்டவன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்னுஞ்சேரனாவன். இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தம்பி எனவும், இவ்விருவரும் உதியஞ்சேரல் என்பானுடைய மக்களெனவும் பதிற்றுப்பத்தின் 2,3-ஆம் பத்துக்களின் பதிகங்களால் விளங்குவனவாம். "உதியஞ்சேரல்" என்னும் பெயர் பாரதப்போரில் பாண்டவ சேனைக்கு உணவளித்த சேரனுக்கு வழங்குகின்றமை முன்னமே அறிவிக்கப்பட்டது. ஆகவே, அவன் மக்களாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் பாரதகாலத்தை அடுத்திருந்தவரென்பதுந் தானே பெறப்படும். இவருள் இளையவனாகிய குட்டுவனைப் பாடிய பாலைக்கௌதமனாரே தருமபுத்திரனைப் பாடிய கௌதமனாரென்பதற்கு இருவர் காலமும் ஒன்றுதல் சான்றாம். பாலைக்கௌதமனார் என்னும் அடைபுணர்க்கப்பட்டதன் காரணம், குட்டுவனை அவர்

பாடிய மூன்றும்பத்து முழுதும் பாலைத்திணை பற்றி வந்தமையேயன்றி வேறில்லை. உதியஞ்சேரல் மக்களிருவரும் செய்த செயல்கள், பிந்திய கடைச்சங்கப்புலவரால், சேரரது ஆதிமுன்னோர் புரிந்த செய்கைகளாகப் புகழப்படுகின்றன. அன்றியும் பாலைக் கௌதமனார் பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாடிச் சுவர்க்கம் பெற்றார் என வழங்கும் கதையும், கடைச்சங்கநாளிற் பழஞ் செய்தியாக வழங்கப் பட்டு வந்ததென்பது "நான்மறை யாளன் செய்யுட் கொண்டு, மேனிலை யுலகம் விடுத்தோ னாயினும்" எனச் சிலப்பதிகாரத்து வருதலால் விளங்கும். உதியஞ் சேரலது மூத்தமகனாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடிய இரண்டாம் பத்தில், "கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி, பரந்திலங் கருவிய நரந்தங் கனவும், ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்" என வருதலால் அக்காலத்தில், ஆரியரது பிரவேசம் இமயமலைச் சாரலில் அதிகமாயிருந்த தென்பது விளங்கும். இவ்வாறே "அந்தியந்தணர் அருங்கட னிறுக்கும் பொற்கோட் டிமயம்" என்றார் முரஞ்சியூர் முடிநாகரும். கொடைக்குப் பெயர்போன வள்ளலாக, அப்புலவர் காலத்து விளங்கியவன், கௌரவர்க்குத் துணையாயிருந்த யாதவனாகிய அக்குரூரன் என்பான். இவனைத் தலையேழு வள்ளல்களில் ஒருவனென்று சொல்லுவர். தலைச் சங்கநாளில் இவன் பிரசித்திபெற்றிருந்தவனென்பது, "போர்தலை மிகுத்த ஈரைம் பதின்மரொடு, துப்புத் துறை போகிய துணிவுடை யாண்மை, அக்குரனனைய கைவண்மையையே" எனக் குமட்டூர்க் கண்ணனார் பாடுதலால் விளங்கும். பாலைக் கௌதமனார் பாடிய இரண்டாம் பத்தில், உதியஞ் சேரலது இளைய மகனாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவனது செய்கைகளுள் "மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇ" என்பதும் ஒன்றாகப் பதிகத்துட் கூறப்படுகின்றது. பதிற்றுப் பத்துரைகாரர் இவ்வடிக்குச் சிறந்த பொருள் கூறினவராகத் தோற்றவில்லை. இவ்வடியில்வந்த "முதியர்" என்னும்சொல் பாண்டவரைக் குறிப்பதாகும். பல்யானைச் செல்கெழுகுட்டுவன் காலத்தில் பஞ்சவர் மேயோதிகம் பெற்று விளங்கினமையால், அப்பெயர் பெற்றனராவர். பாண்டவர்க்கு இப் "முதியர்" என்னும் சொல்வழக்கம் முற்காலத்திலேயே உண்டென்பது, மேலே நாம் மாமூலனார் வாக்காக அகநானூற்றினி

ன்றுங் காட்டிய "மறப்படைக் குதிரை மாறுமைந்திற், றுறக்க மெய் திய தொய்யா நல்லிசை, முதியர்ப் பேணிய வுதியஞ் சேரல்" என்பு ழியும் பயின்றிருத்தல் காண்க. இம்முதியரென்னும் சொல் பாண் டவரையே குறிப்பதென்பதை, அதற்கு விசேடணமாக "மதியுறழ் மரபின்" என்னும் பதங்கள் புணர்க்கப்பட்டிருத்தலே நன்கு விள க்கும். இவ்விசேடண பதங்களின் பொருள் "சந்திரனோடு பொரு ந்திவரும் வமிசத்தவராகிய" (முதியர்) என்பதாம். தந்தையாகிய உதியஞ்சேரல் பாண்டவரைப் பேணியதுபோல, அவனிளைய மகனா கிய குட்டுவனும் போற்றினமையால், அவன் செய்கைகளுள் "மதி யுறழ்மரபின் முதியரைத்தழீஇ" யதும் ஒன்றாக எடுத்துப் புகழப் பட்டதென்க. இவற்றால், உதியஞ்சேரல் மக்களாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், பல்யானைச் செல்கெழுகுட்டுவனும்; இவ்விரு வரையும் முறையேபாடிய குமட்டூர்க்கண்ணனாரும், பாலைக் கௌத மனாரும் பாரதயுத்த நிகழ்ந்தகாலத்தை ஒட்டி வசித்தவர்கள் என் பது வெள்ளிடைமலைபோல் விளங்கும்.

மேற்காட்டிய சேரரிருவரும் உதியஞ்சேரற்கு, வெளியன் என் னும் வேளின்மகளாகிய நல்லினிவயிற்றிற் பிறந்தவர் என்பதும், அவருள் மூத்தவன் இமயத்தில் விற்பொறித்துத் தமிழகம் முழு தும் தன்கோனிறுவியும், இமயச்சாரலில் வசித்த ஆரியரை வென் றும், மிலேச்ச அரசரைப்பிணித்துச் சிறையிட்டும் இவ்வாறு ஐம்பத் தெட்டியாண்டு ஆட்சி புரிந்தவனென்பதும், இளையவனாகிய குட்டு வன் உம்பற்காடு, அகப்பா என்ற இடங்களில் வென்றும், பெரியோ ராகிய பஞ்சவரை வழிபட்டும், பெரியபூமிகளைப் பலர்க்குப் பகுத் தளித்தும், நெடும்பாரதாயனர் என்னும் புரோகிதரைப் பெற்றும் இவ்வாறு பல சிறப்புக்களுடன் இருபத்தைந்து வருஷம் ஆட்சி புரிந்தவனென்பதும் பதிகங்களால் விளங்குகின்றன. குமட்டூர்க் கண்ணனாரும் பாலைக்கௌதமனாரும் பாடிய பத்துக்களால் அதிகமா கச் சரித்திர விசேடங்கள் அறிதற்கில்லையாயினும், அவற்றிற்கண்ட பாடல்கள் தமிழ்மொழியின் தொன்மை மாட்சியையும், சிறப்பை யும் நன்றாக விளக்கற்குரியன. இங்கே, அவை ஒவ்வொன்றையும் எடுத்து விரிப்பின், இடம்பற்றாதாகலின் அறிஞர் ஆராய்ந்து மகிழக் கடவர்.

இனிப் பாரதயுத்தகாலம் இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன்பு என்பது நமக்குள் வழங்கும் மரபாகும். ஆனால் சுதேச மேதாவிகள் சிலரும், விதேச வறிஞர் பலரும் நாகரிக ஆராய்ச்சி முறையிற் பல்லாற்றானும் சோதித்து வருவதில், முற்காட்டிய காலத்தினின்றும் பெரிதும் வேறுபட்டு அபிப்பிராயமுறுகின்றனர். இவ்வபிப்பிராய பேதங்களில் உள்ள தாரதம்மியங்களையெல்லாம் நன்கு பரிசோதித்து, அவற்றிலொன்றும் பொருந்தியதாகாமை காட்டிச் சித்தூரிலிருக்கும் ஸ்ரீமத் வி. கோபாலையரவர்கள் பிரபலமான பதினொரு தக்க காரணங்களால், கி. மு. 12-ம் நூற்றாண்டினிறுதியே பாரதயுத்த காலமென்று, படிப்போர் மகிழ்ந்துவக்கும்படி, இந்தியன் ரெவ்யூ (Indian Review) என்னும் ஆங்கிலப்பத்திரத்தினும், தாம் தனித்து வெளியிட்ட ஆங்கில நூலினும் (Chronology of Ancient India) நாட்டியிருக்கின்றனர். இவ்வையரவர்களது கொள்கையைச் சரிதவாராய்ச்சி வல்லார் பலர் உண்மையுடையதென்று துணிந்திருக்கின்றார். இவ்வாறு, அக்கொள்கை என்றும் அசைவுபெறாத வலிபெறுமாயின், நமக்கு முப்பத்தொரு நூற்றாண்டுகட்கு முந்திய பாரதயுத்தகாலத்தை யொட்டி, முரஞ்சியூர் முடிநாகராயர், கௌதமனார், வான்மீகையார், மார்க்கண்டேயனார், குமட்டூர்க்கண்ணனார் முதலிய புலவர்கள் தலைச்சங்கத்திருந்து தமிழ்வளர்த்தார்களென்று முடிக்கலாம்.

அகஸ்தியர் தமிழ்நாட்டிற்காடுகளைத் திருத்தி, ஆண்டுக் கண்ணபிரான் வழியினராய வேளிர் பலரைக் குடியேற்றிவைத்தாரென்ற செய்தி நச்சினார்க்கினியரது எழுத்துக்களால் விளங்குகின்றது. இச்சரித்திரம் உண்மையுடையதாயின், அகஸ்தியர் பாரதகாலத்தை யொட்டியே தென்னாட்டுக்கு வந்தனரென்று கொள்ளல் நேரும். கபிலரென்னும் புலவர் பெருமான் இருங்கோவேள் என்பானைப் புகழுமிடத்து "நாற்பத்தொன்பது வழிமுறைவந்த வேளிருள் வேளே" எனக் கூறுதலால், ஏறக்குறைய நமக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வேளிரின் ஆதிமுதல்வர் அகஸ்தியரால் தென்னாட்டுக்குழைக்கப்பட்டனர் என்று தெளியலாம். இதனை விரிவாக "வேளிர் வரலாறு" என்பதிற் காட்டியுள்ளோம். இவற்றால், தலைச்சங்கமிருந்த

அகஸ்தியனாரும், அம்மகாபாரதகாலத்து விளங்கினவரென்று பெறப்படுகின்றது.

இதுகாறும் கூறிவந்த விஷயங்களால், மகாபாரதகாலத்தில், தமிழ்மொழி பரதகண்டத்தில் வியாபகம் பெற்றுச் சிறந்தபுலவர் பலரால் வளர்க்கப்பட்டதென்பது ஒருவாறு விளங்கும்.

மு. இராகவையங்கார்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

தென்றேயத்தின்கண், முனைப்பாடி, மிலாடு, சேதிநாடு என்று பெயர்பெறும் நடுநாடு வெகுகாலமாக மிலாடர்கள் என்னுமரசர்களால் ஆண்டுவரப்பட்டது. மிலாடு என்னும் பதம் மலாடு என்பதன் திரிபு; மலாடு 'மலைநாடு' என்பதன் மரூஉ என்று இலக்கணங்கள் கூறுகின்றன. மிலாடர்க்குச் சேதியர், முனையரையர் என்னும் மறுபெயர்களுமுள. இவர்கள் இராஜதானி திருக்கோவலூர்[1]. இவ்வரசர்கள் சுக்கிராந்வயமுடையவர்களென்றும்[2] உதயாசலாதித்தர், சக்திநாதர் என்னும் அபர நாமதேயங்களை யுடையவர்களென்றும், இவர்கள் குலம் மலையகுலமென்றும், கொடியும் இலாஞ்சனையும்

---

(1) "சேதிநன்னாட்டுநீடு திருக்கோவலூரின்மன்னி
மாதொருபாகர்பின் வழிவருமலாடர்கோமான்."

மெய்ப்பொருணாயனார் பு. பா. 1.

(2) * * * "கன்னரதேவர்க்கு யாண்டு 17வது முனைப்பாடித் திருநாவலூர்த் திருத்தொண்டீஸ்வரத்து மஹாதேவர்க்கு ஸ்வஸ்தி ஸ்ரீ [illegible] ஸ்ரீமத் நரசிம்ம வர்ம்மா மிலாடுடையநாட்டான் சித்தவடவன் ஆகிய நரசிம்ம வன்மன் வைத்த விளக்கு * * "

எபிகிராபியா இண்டிகா.

முறையே சிங்கமும், சிகிமகரமும் என்றும் திருநாவலூரிலுள்ள ஒரு சாஸனத்தால் விளங்குகின்றன. இவர்களுள் இராமன், நரசிங்கன் என்னும் பெயர்கள் அடுத்தடுத்து வருவது மிகுதியும் வழக்கம் போலக் காணப்படுகிறது [3]. நாயன்மார் அறுபத்துமூவர்களுள் இருவர் சேதிநாட்டரசர். இவர்களில் முதல்வர் மெய்ப்பொருளுனார். இவர்தாம், தம்மை யோக்கியமாக வெல்லச்சக்தியற்ற முத்தநாதன் என்னும் மாற்றரசனால் நயவஞ்சகத்தாற் கொலையுண்டு வியோகமடையும்போது, முத்தநாதனைக்கொல்லப்புக்க தம்மனிதர்களைத் தடுக்கும்படி தத்தன் என்னும் தம் ஏவலாளனை நோக்கி "தத்தா நமரேகாண்" என்று கூவினவர். மற்றவர் நரசிங்கமுனையரையர். இவர்காலத்துத்தான் சுந்தரமூர்த்திகளிருந்து தேவாரம்பாடியது. ஆதலால் சுந்தரமூர்த்திகள் காலம் வரையறுக்கப்படின் இவர்காலமும் பெறப்படும்.

சுந்தரமூர்த்தி நாயனார் தம் சரித்திரத்தை ஆங்காங்குப்பொதிந்து தேவாரம்பாடியிருக்கிறார். அவைகளைக்கொண்டும் கர்ணபரம்பரையாக வந்த கதைகளைக்கொண்டும் சேக்கிழார் நாயனார் சரித்திரத்தை யெழுதினார் போலும்! நம்நாயனார்தாம் இசைஞானியார்க்கும் சடையனார் என்னும் ஆதிசைவப்பிராமணர்க்கும் அவதரித்தவர் என்பதை,

"நண்புடைய நன்சடைய னிசைஞானி சிறுவ னாவலூர் கோனாரூரன்" "இசைஞானி சிறுவன்" என்று ஆங்காங்குக் கூறியுள்ளார்.

---

(3) திருநாவலூரிலேயே மேற்கூறிய சாஸனமும், சகவருஷம் 875-ல் வரையப்பட்ட சாஸனம் ஒன்றும் முறையே ஒரு நரசிம்மவர்மனையும் குலமாணிக்கன்இராமதேவன் என்பவனையும் குறிக்கின்றன. திருக்கோவலூரில் திருவிக்கிரமப்பெருமாள் கோயில் கற்பக்கிரகத்தை செங்கற்கட்டிடமாயிருத்தலைக்கண்டு கருங்கல் கட்டிடமாக்கினன், ராஜராஜ தேவன் காலத்திருந்த மிலாட்டரையன் நரசிங்கவன்மன் என்று அவ்விடத்துச் சாஸனமொன்று கூறுகிறது.

எபிகிராபிஸ்ட் ரிபோர்ட்டு 1900 ல் நெ. 120.

இவரிளம்பிராயத்து இவரைக்கண்ட நரசிங்கமுனையரையர், இவரிடம் பேரன்புகொண்டு இவரைத் தம் அபிமான புத்திரராக்கிக் கொண்டார். உரியகாலங்களில் அக்ஷராப்பியாசம் உபநயனாதிகள் செய்விக்கப்பெற்றுக் கல்லியாணத்துக்குரிய பருவமடைந்தார். அப்பொழுது தந்தையார் தம் குலம் கோத்திரத்துக்குத்தக்கவரான புத்தூர் சடங்கவிசிவாசாரியர் திருமகளைத் தம்மகனுக்குப் பத்தினியாக்க நிச்சயித்து முகூர்த்தமுமிட்டு அரசனுக்கறிவிக்க, நரசிங்கமுனையரையரும் இராஜகுமாரர்களுக்குரிய ஆடம்பரங்களோடு வதுவை நடத்தச் சித்தப்பண்ணினுர். முகூர்த்தமும் கிட்டியது. பாணிக்கிரகண காலத்தில், ஒரு விருத்தப்பிராமணர் கலியாணமண்டபத்திற்புக்கு, சபையிலிருக்கும் அந்தணர்களை நோக்கி ஆரூரரைச்சுட்டி "இம்பணமகன் என்னடிமை, என்னிடம் ஊழியஞ்செய்தலொழிந்து யானறியாமல் இவ்விடத்துக் கலியாணம்புரியத்துணிந்தான் [4]. இவன் என்னிடத்திற் பரம்பரையாய் அடிமைத்தொழில்செய்தமைக்கு, இதோ! ஆவணச்சீட்டுமிருக்கிறது" என்று ஒரு சீட்டையும் நீட்டி முகூர்த்தத்தைக் கழியச்செய்தார். அப்பொழுது சுந்தரமூர்த்திகள் தம்மை அடிமையென்று மொழியும் கிழவரிடம் வெகுண்டு, தாம் அவ்வாவணத்தைப்பார்க்கவேண்டும் என்று மெள்ள அவரிடமிருந்து அதைவாங்கிக் கிழித்துவிட்டார். இதைக்கண்டகிழவர், "இப்படி இவன் செய்வானென்பதையுணர்ந்தே நான் மூலவாவணங்கொணராது அதன் பிரதியைக்கொணர்ந்தேன். இப்பொழுது வேண்டுமாயின் நீவிர் என்னுடன் வருவீராகுல் அதைக்காட்டுவேன்" என்று சொல்லி அந்தணர்களும் ஆரூரரும் பின்றொடரச்சென்று திருவெண்ணெய்நல்லூர் அருட்டுறையில் மறைந்து, சுந்தரமூர்த்திகட்கு பா

---

(4) "* * * வெண்ணெய்நல்லூரி
லற்புதப்பழவாவணங்காட்டி
யடியனுவென்னையாளதுகொண்ட
நற்பதத்தைநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே" என்றும்,
"தன்மையினுலடியேனைத் தாமாட்கொண்டநாட்சபைமுன்
வன்மைகள்பேசிவன்றொண்டனென்பதோர்வாழ்வுதந்தார்".
என்றும் நாயனுர்தேவாரத்துக்காண்க.

த்திரம் இருடபா ரூடராய்த் தரிசனமளித்தார். அப்பொழுது பரம சிவத்தினிடம் வன்சொற்களைப்பேசிய காரணத்தால் ஆரூரர்க்கு "வன்றொண்ட"னென்ற பெயர்வந்தது [5]. இவ்வற்புதநடந்த நாள் முதல் பற்பல சிவக்ஷேத்திரங்களை தரிசிக்க இச்சைகொண்டு செல்லுபவர், திருவதிகைவீரட்டத்தைக்கண்டு, அப்பமூர்த்திகள் தொண்டு செய்தவிடமாதலால் அதை மிதிக்கலாகாது என்று அவ்விடத்தருகிலிருந்த "சித்தவடமடத்தில்" எழுந்தருளி இருந்தார். அங்கு அன்றிரவு சிவபிரான் ஓர் கிழவன் உருக்கொண்டு சுந்தரமூர்த்திகளின் முடிமேல் தம் திருவடிகளைச் சாத்தியருளினர்.

பின் சீகாழியடைந்து சம்பந்தர்அவதாரஸ்தலத்தையும் மிதிக்கக்கூடாதென்று வணங்கிச்சென்றார். இவ்வாறு நடந்து வருநாளில்,

கைலையில் 'கமலினி'யாயிருந்த சேடியானவள் "உருத்திரகணிகைமாராம் பதியிலார்குலத்திற் றோன்றிப் பரவையாரென்னு நாமம்" உடையவளாய்த் திருவாரூர்க்கண்ணே பிறந்து வளர்ந்துவந்தாள். அவ்விடத்து நம் நாயனர் சென்றபோது இவளைக்கண்டு காமுற்றுச் சிவபிரானருளால் மணந்தார். குண்டையூர் கிழவர் பரவைநாச்சியாருக்குத் தினந்தோறும் சம்பாநெல் முதலிய பதார்த்தங்களனுப்புவது வழக்கம். அப்பொழுது தேசமெங்கும் க்ஷாமமுண்டாகக், குண்டையூர்கிழவர் வறியராய்ப் பரவையார்க்கு நெல் முதலியன கொடுக்க ஆற்றாதவரானர். இதைக்குறித்து மனம்வருந்தி ஒருநாள் இரவு துயில்கொண்டு எழுந்திருக்க, மறுநாள் குண்டையூரெங்கும் நெற்குவியலாய்க்கிடக்கக்கண்டானந்தமுற்றுச் சுந்தரமூர்த்திகட்கறிவித்தார். அப்பொழுதுதான் நாயனரும் "குண்டையூர்ச்சிலநெல்லு

---

(5) இதையே குறித்து
"அடக்கங்கொண்டாவணங்காட்டிநல்வெண்ணெயூராளுங்கொண்டார்".
என்றும்,
"அன்றுவெண்ணெய்நல்லூரிலுயினேன்றன்னையாட்கொண்டசம்புவே".
என்றும்,
"வலியவந்தென்னையாண்டுகொண்டானே".
என்றும் சுந்தரமூர்த்திகள் பாடியிருக்கிறார்.

பெற்றேன்" என்று திருக்கோளிலிப்பதிகத்திற் பாடியருளி நெல்லை ப்பூதகணங்களால் திருவாரூரிற் சேர்ப்பித்துக்கொண்டார்.

நாயனர் திவ்விய தேசயாத்திரைசெய்து வருவதையறிந்து கோட்புலிநாயனர் இவரைத் தம்மூராகிய திருநாட்டியத்தான்குடிக்கு எழுந்தருளும்படியாக அழைத்து, இவர்க்குத் தம் திருப்புதல்வியராகிய சிங்கடி, வனப்பகை என்பவர்களைக்கலியாணஞ்செய்துகொள்ள வேண்டுமென்றளித்தார். ஆயினும் நாயனர் அவர்களை மனைவியராக்கப்பிரியமில்லாது தம் மக்களாக ஸ்வீகரித்தார். இதனையே, அடிக்கடி தம் தேவாரத்தில் "சிங்கடியப்பன்" "வனப்பகையப்பன்" என்று தம்மை ஆங்காங்குக் குறித்துக்கொள்ளுகிறார்.

பின்பு திருப்புகலூர் சென்று பெருமானைத்தரிசித்துத் திரும்புகையில் அகாலநித்திரைவர, அவ்விடத்திருந்த சில செங்கற்களை தலைக்கடியில் வைத்துத் தூங்கியெழுந்துபார்க்க அவை எல்லாம் பொன்னுகிவிட்டன. மறுபடியும் திருப்பாச்சிலாச்சிராமத்தில் "வைத்தனன்றனக்கே" என்னும் பதிகத்தைப்பாடிப் பொற்குவையடைந்தார்.

திருப்பேரூரிற் சென்றபோது சிதம்பரத்தில் நடனமாடும் சேவையைக்காண நாயனர் அபேக்ஷிக்க சிவபிரான், அக்காட்சியை அவ்விடத்தில் பிரசாதித்தார். திருமுதுகுன்றத்துப் பெருமானடிகளிடம் பன்னீராயிரம் பொன்பெற்று அதை மணிமுக்தா நதியிலிட்டு, கடவுளருளால் திருவாரூர்க்குளத்திற் பெற்றார். இவ்வாறு தேசாடனம் பண்ணிவருகையில் ஒருநாள் திருக்குருகாவூரினிடம்வந்ததும் நாயனர் பசியாற்களைத்துவிட்டார். அப்போது அவ்வூரிலினிதமர்ந்துள்ள சிவபெருமான் தண்ணீரும் கட்டுசோறும் கொண்டுபோயுதவி நாயனரையும் இவர் பரிஜனங்களையும் ஆதரித்தார். இதேமாதிரி திருக்கச்சூரிலும் நேர்ந்தது. இவ்விடத்தில் தம் பரிசனங்கள் உச்சியம்போதாயும் வந்துசேராதிருக்க, நாயனர் பசியால் வருந்துவதையறிந்து அவ்வூர் ஆலக்கோயிலிலிருக்கும் கடவுள் ஒருமறையோன் உருக்கொண்டு ஊரிற் பிச்சையெடுத்து நாயனர் பசியைத்தணிவித்தார்.

நாயனுர் பற்பல சிவஸ்தலங்களைத் தரிசித்தும் அற்புதங்களைச் செய்தும் செய்வித்தும் வருநாளில் ஒருநாள் திருவொற்றியூர் மாநகரஞ்சார்ந்தார். அப்பதியில் ஞாயிறுகிழவன் என்பவருடைய மகளார் சங்கிலியென்பவர் தாம் ஒருவரையும் மணப்பதில்லையென்று நிச்சயித்துக் கன்னிமாடம்புக்குப் பரமசிவன் கைங்கரியங்களைச் செய்து வாராநின்ருர். இச்சங்கிலியாரிடம் சுந்தரமூர்த்திகளுக்கு மனம்பற்ற, சங்கிலியாரும் தம்மைவிட்டுப்பிரிவதில்லை என்று நம்பி வாக்குத்தத்தம் செய்யின், தாம் இவருடன் கூடுவேன் என்று உடன்பட்டார்[6]. அது முதல் கொஞ்சகாலம் சங்கிலியாரோடு வாழ்ந்திருக்கும்போது, திருவாரூர் எம்பெருமானைத் தரிசிக்கவெண்ணமுண்டாயிற்று. அப்பொழுது சங்கிலியாரையும் நினைக்காமல் திருவாரூருக்குச்செல்லப்புறப்பட்டதும் ஒற்றியூருடைய பரமசிவன் இவர் கண்கள் போகும்படிசெய்தார்[7]. பின்பு நாயனுர் திருவேகம்பத்திலும், திருவாரூரிலும் பதிகம்பாடிக் கண்களைத்திரும்பப்பெற்று, பரவையாரிடம்செல்ல அவர் ஒற்றியூர்க்கண் நடந்தவரலாற்றை அறிந்து ஊடியிருந்தார்; இவ்வூடல் தணிவிக்கச் சிவபெருமான் இரண்டுதடவை தூதுசென்று பரவையாரையும் வன்ருெண்டரையும் கூட்டிவைத்தார். இவ்வாறு பரமசிவத்தைத் தூதனுப்பினுர் என்று கேட்ட ஏயர்கோன்கலிக்காமநாயனுர் சுந்தரமூர்த்திகளிடம் வெகுவெறுப்புற்றுத் தம் பிராணனையும் இழந்தார் என்பது ஏயர்கோன்கலிக்காமர்புராணத்திற் கண்டுகொள்வது. இக்காலத்துத்தான் சுந்தரர் திருத்தொண்டத்தொகையைப்பாடியது.

---

(6) "* * * சென்று திருவொற்றியூர்புக்குச்
சார்ந்தனன்சார்ந்தனன்சங்கிலிமென்ருேள்தடமுலை"
"பண்மயத்தமொழிப்பரவைசங்கிலிக்குமெனக்கும்பற்ருயபெருமானே"
"சங்கிலியோடெனைப்புணர்த்ததத்துவனை".
"மான்றிகழும்சங்கிலியைத்தந்துவருபயன்களெல்லாம்
தோன்றவருள்செய்தளித்தாய்".
என்பன சுந்தரமூர்த்திகள் வாக்கு.

(7) "போகுருடாவெனத்தரியேன்
முகத்தினிற்கண்ணிழந்தெங்ஙனம்வாழ்கேன்முக்கண்ணுறுமுறையோ".
"சங்கிலிக்காவென்கண்கொண்டபண்ப" தேவாரம்.

சேரமான் பெருமாள் நாயனார் வன்றொண்டர் பெருமைகேட்டு, இவரை நாடிச்சேர்ந்து இவருக்குப்பணிகள் செய்து தாமும் இவருடன் திவ்விய தேசயாத்திரை செய்து வருங்கால், இருவருமாய்ப் பாண்டிநாட்டு இராஜதானியாகிய மதுரைமாநகரஞ்சார்ந்தார். அப்பொழுது அவ்விடத்துத் தன் மாமனாராகிய பாண்டியன் மனைக்கு வந்திருந்த சோழராஜனும்[8], பாண்டியனும் நாயனாரையும் சேரமானையும் எதிர்கொண்டு அழைத்துவந்து உபசரித்தார்கள்.

அக்காலத்து மதுரையி லாண்டுகொண்டிருந்த அரசன் வரகுண பாண்டியன் என்று,

" மன்றலந்தெரியன்மார்பன்வரகுணன்செங்கோலோச்சிப்
பொன்றலங்காவலானிற்பொலியுநாளேமநாத
னென்றொருவிறல்யாழ்ப்பாணன்வடபுலத்திருந்தும்போந்து
வென்றிகொள்விருதினோடும்விஞ்சைசூழ்மதுரைசார்ந்தான்.

என்னும் திருவிளையாடற் புராணச் செய்யுளால் தெரியவருகிறது. (விறகுவிற்றபடலம்) இப்பாட்டிற் கூறியிருக்கும் பாணபத்திரரே சோமசுந்தரக்கடவுளிடம் திருமுகம் பெற்றுச் சேரமான் பெருமாள் நாயனாரை நாடிப் பரிசுபெற்றவர்.

சேரமான் பெருமாளோடும் பல பதிகளைத் தரிசித்து அவருடன் மேல்நாட்டுக்குச்சென்று அவ்வரசனால் வெகுமதிக்கப்பட்டுத் திரும்பித் திருவாரூர் சென்றடைந்தார். கொஞ்ச காலத்துக்குப்பின் சுந்தரமூர்த்திகள் கைலாசநாதன்திருவடியடைய இச்சித்து வெள்ளானையின்மேல் ஏறி, சேரமான் பெருமாளோடும் இவ்வுலகு நீத்தார்.

இவ்வாறு செய்து போந்த இம்மகான்காலம் இன்னதென்று நிர்ணயிக்கச் சற்று முயல்வோம். சுந்தரமூர்த்திகள் தம் காலத்தின் அரசுவளமையைக் குறித்து,

---

(8) தென்னவர்கோன்மகளாரைத்திருவேட்டுமுன்னரே
தொன்மதுரைநகரின்கணினிதிருந்தசோழனார்
அன்னவர்களுடன்கூடவணையவவருங்கூடி
மன்னுதிருவாலவாய்மணிக்கோயில்வந்தணைந்தார்.

பெரியபுராணம், கழறிற்றறிவார் புராணம் பா. 92.

" கருமையாந்தருமனர்தமர்நம்மைக்கட்டியகட்டறுப்பிப்பானை
யருமையாந்தன்னுலகந்தருவானைமண்ணுலகங்காவல்பூண்ட
வுரிமையாற்பல்லவர்க்குத்திறைகொடாமன்னவரைமறுக்கஞ்செய்யும்
பெருமையாற்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே.

என்று தம் தேவாரத்துக் கூறியிருப்பதைக்கொண்டு, அக்காலத்துப் பல்லவ ராஜர்களுடைய அரசாட்சி தளர்வடைய ஆரம்பித்துவிட்ட தென்று அறியலாம். பல்லவசார்வபௌமத்துவம் குன்றவே சோழர்களும் பாண்டியர்களும் தலையெடுக்கத் துணிந்தார்கள் என்பது உதயேந்திரம் சாஸநத்தால் தெரியவருகிறது. அச்சாஸனப்படி திரமிள அரசர்கள் தம்முள்ளொத்துப் பல்லவ அரசன் மீது படையெடுத்துச்சென்றதாகவும், அப்பொழுது உதயசந்திரன் என்னும் படைத்தலைவன் அவர்களோடு நிம்பவனம், சூதவனம், அழுந்தூர், மண்ணை முதலானவிடங்களிற் பொருதான் என்றும் கூறியிருக்கிறது. பின்னும் இரண்டாம் பிருதிவிபதியின் சாஸனத்தில் (உதயேந்திரம் சாஸனம்) தன் பாட்டனாகிய முதற்பிருதிவிபதி வரகுணனோடு வேம்பில் அல்லது வைம்பல்குழி(இஃது அதன்திரிபாயிருக்கலாம்)என்னுமிடத்துப்பொருததாகச் சொல்லிக்கொள்ளுகிறான். இவ்வரகுணன் சாஸனம் ஒன்று திருச்சிராப்பள்ளிக் கற்கோயிலில் மாறஞ் சடையனென்னும் பாண்டியவரசன் காலத்தில் வரையப்பட்டிருக்கிறது [9]. இவ்வரகுணனும் மாறஞ்சடையனும் சமகாலத்தவர்களென்பது இதனால் ஏற்படுகிறதுமன்றி, வரகுணன் மாறஞ்சடையனுக் கிளையவனும் அவனுக்கேதோ உறவுமுடையவனுமாவனென்பதும் தோன்றுகிறது. இம்மாறஞ்சடையன் வென்ற போர்களைக் குறித்துப் பாக்களாகப் பலரும் பாடி இருதூண்களிற் பதிந்துள்ளார். இப்பொழுது இத்தூண்கள் பரிதிநியமத்தி னருகிலிருக்கும் செந்தலை யென்னும் கிராமத்துப் பிடாரிகோயிலிலிருக்கிறது. அதில் இவ்வரசன் அழுந்தூரிலும் மணலூரிலும் போர் புரிந்தானென்று சொல்லியிருக்கிறது [10]. ஆகவே உதயேந்திரம் சாஸனத்திற் கூறிய சண்டைகளிற் சில

(9) கிரிஸ்டியன்காலேஜ் மாகசீன். மேமீ 1905௵.

(10) " * * உலந்தார்—தோராழந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்த ஆராழந்தி யூரென்னு மூர்" என்றும்,

" * * * விழிகட்பேய்ப்—புண்ணனைந்தையும்பப்போர்மணலூர் வென்றதே, மண்ணணைந்தசீர்மாறன்வாள்". என்றும் எழுதியுள்ளன.

*

வரகுணன், மாறஞ்சடையர்களாலும் செய்யப்பட்டனவெனவே, இரண்டு சாஸனத்திலுங் கூறிய சண்டைகள் ஒன்றுதான் என்று துணியலாம். அப்படித்துணியக் காரணமுமுண்டு. பெரியபுராணத்துட் கூறியவாறு சோழன் பாண்டியன்பெண்ணை மணந்து, இருவரும் ஒன்றுகூடிப் பல்லவசார்வபௌமத்தைத் தாக்கி சுவாதீனமடைய எத்தனித்ததாகத்தோற்றுகிறது. இவ்வாறு பாண்டியன் பெண்ணைச் சோழனொருவன் அக்காலத்துக் கலியாணம்செய்துகொண்டானென்பது கீழே கொடுத்திருக்கும் திருச்செந்துறைச் சாஸனத்தின் முற்பகுதியால் தெரியவரும்[11]. வரகுணன் காலம் மேற்கூறிய சாஸனங்களால் உத்தேசம் கி. பி. 850 என்றுகொள்ளலாம்; அப்பொழுது அரசாண்ட சோழவரசன் விஜயாலயனாயிருத்தல் வேண்டும். ஏனெனில் இரண்டாம் பிருதிவிபதியின் சார்வபௌம சக்கரவர்த்தியாகிய முதற்பராந்தகன் 9-வது நூற்றாண்டின் முதலில் அரசாளத் தொடங்கினனென்றால் இவன் பாட்டனாகிய விஜயாலயன் உத்தேசம் கி. பி. 850-ல் இருந்திருக்கக்கூடும். இவ்விஜயாலயன் ஒரு பரகேசரிவர்மன் என்பது "பெரியன் லேய்டன்" சாஸனத்தால் விளங்கும். திருச்செந்துறையிலுள்ள சாஸனத்துப் பரகேசரியை விஜயாலயன் என்று கொண்டால்,[12] "சோழபெருமானடிகள் மகனார்—" ஆதித்தனும், "தென்னவனிளங்கோவேள்"— வரகுணனுமாவார்கள். (மாறன்சடையன் பெரியவனாயிருக்க வரகுணன் இளங்கோவேளென்றே சொல்லத்தக்கான்). பல்லவராஜன் மேற் படையெடுத்துச்சென்ற திரமிள அரசர்கள் விஜயாலயன், மாறஞ்சடையன் இவர்கள் சிறுவர்களாகிய வரகுணனும், (ஒருகால்) ஆதித்தனுமாயிருக்கலாம். இக்காலமுதற்றான் சோழர்கள் சார்வபௌமத்துவத்தை யடைந்தார்கள். பல்லவர்களைத் தம்மடிப்படுத்தாவிடினும் தாம் அன்றுமுதல்

(11) ஸ்வஸ்திஸ்ரீ கோ (ஒ) பரகேசரிபன்மக்குயாண்டு நூ ஆவது இவ்வாண்டு ஶ்ரீசோழபெருமானடிகள் மகனார் அரிகுலகேசரியார் தேவியார் தென்னவனிளங்கோவேளார் மகளார் பூதி ஆதிச்ச பிடாரியார் பிரமதேயம் ஈசான மங்கலத்து திருச்செந்துறை தாம் எடுப்பிச்ச கற்றளி பெருமானடிகளுக்கு * *,

(12) இவன்பெயர்க்கு ஏற்ப இச்சாஸனத்துக்கூறிய தென்னவனிளங்கோவேளின் பெண்பெயரிலும் 'ஆதிச்சன்' என்னும் பெயர்வருதலும் காண்க.

அவர்கள் கீழிருக்கவில்லை. பாண்டியரும் சோழரும் அக்காலத்து அந்நியோன்னியமா யிருந்தார்கள் என்பதற்குச் சான்று பாண்டியர்களில் மாறன்சடையன் சாஸனம் சோழநாட்டின் கண்ணுள்ள செந்தலை, திருச்சிராப்பள்ளி, திருகோகர்ணம், நார்த்தாமலை, குடுமியான்மலை முதலியவிடங்களிற் காணப்படுகின்றன. பாண்டியர்களையும் சீக்கிரமே சோழர்கள் அடிப்படுத்தினர் என்பது சொல்லவேண்டுவதில்லை.

மேற்கூறியவைகளைக்கொண்டு சுந்தரமூர்த்திகள் பல்லவசக்கரவர்த்திகள் தௌர்ப்பல்லிய மடைந்தகாலமும் சோழபாண்டியர்கள் தம்முள் ஒத்திருந்து பல்லவ சார்வபௌமத்தினின்றும் விடுவித்துக் கொண்டகாலமும், வரகுணன் ஆண்டகாலமும் ஒன்றே என்றுபெறுதலின், இவையெல்லாம் நடந்தது உத்தேசம் கி. பி. 850 என்றும் ஒருவாறு ஸ்தாபிக்கலாம். இது நிற்க,

திருவிடைமருதூர்ச் சாஸனம் ஒன்றில் வன்றொண்டன் என்கிற பெயர் சமானியமனிதன் ஒருவன்முதல் ராஜராஜன் காலத்துத்தரித்திருந்தான் என்று தெரியவருகிறது. இதுவன்றிக்கே இவ்வரசனே இந்நாயனுர் விக்கிரகத்துக்குப் பலநன்கொடைகள் அளித்திருக்கிறன். இவைகளால் இந்நாயனுர் பெயர் இவன்காலத்துக்கு முந்தியே, பூஜிக்கப்படும் நிலைக்கு வந்துவிட்டது என்று ஏற்படுகிறது. இவ்வாறு ஆகற்குச் சாதாரணமாக மூன்று நான்கு தலைமுறையாகவேண்டும். அப்படியே மூன்று நான்கு தலைமுறைதான் ஆயிருக்கிறது என்பது மேற்கூறியவைகளால் நன்குவிளங்கும்.

இந்நாயனுர் காலத்திருந்தவர் நரசிங்கமுனையரையர். திருநாவலூர்ச் சாஸனத்திற் கூறிய நரசிம்மவர்மன் கன்னரதேவன் 17-வது ஆண்டிலிருந்தவன்; அதாவது கி. பி. 957. கி. பி. 954-க்கு சரியான 875 சகவருஷத்திருந்த முனையதியரையன் குலமாணிக்கன்இராமதேவன் முற்கூறிய சாஸனத்தியநரசிங்கவர்மனுக்கு முன்னேனதல்வேணடும். நரசிங்கமுனையரையநாயனுர் குலமாணிக்கன்இராமனுக்கு மூன்றுதலைமுறை முன்னவராயிருக்கவேண்டும் (சுந்தரர் காலம் 850-கி. பி. என்று கொள்ளின், 954 கி. பி-க்கும் 850 கி. பி-க்கு நடுப்பட்ட 100 வருஷம் மூன்றுதலைமுறையாதல் பற்றி இத்துணி

வுகொள்ளப்பட்டது). இம் முனையரையர்கள் மேற்சொன்னபடி இராமன் நரசிம்மன் என்னும் பெயர், முறையே தரித்துவந்ததாக ஊகிக்கின், குலமாணிக்கன் இராமனுக்கு மூன்றாந்தலைமுறையின் முன்னோனும் நரசிங்கனென்னும் பெயரையே யுடையவனுமாவன். ஒருக்கால் இவன்தான் நரசிங்கமுனையரையநாயனாராயிருப்பானோ வென்றுஞ் சங்கிக்கலாம்.

சுந்தரமூர்த்திகள் காலத்திருந்த நாயன்மார்கள் சோமாசியார்' விறன்மிண்டர். மானக்கஞ்சாறர், ஏயர்கோன்கலிக்காமர், பெருமிழலைக்குறும்பர், கோட்புலி (இவர் இருபுதல்வியர் சிங்கடி, வனப்பகை) சடையனார், இசைஞானியார். எனவே இவர்கள்காலமும் சற்றேறக் குறைய 9-வது நூற்றாண்டின் நடுவாயிருத்தல்வேண்டும்.

து. அ. கோபிநாதராவு,
திருவல்லிக்கேணி.

உ

சிவமயம்.

திருக்குறள்-வீட்டின்பால்.

Theosophy of the Kural.

(௨எக-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேல் அவன் முற்றறிவனாகவும், நாம் சிற்றறிவுடையேமாகவும் அவனை நாமறிந் தடைவதெப்படியெனின், இறைவனின் மற்றொரு தன்மையினால் அஃது எளிதாம். அன்பே இறைவன். அன்பு வேறு இறைவன் வேறன்று. ஆகவும் அவன் நினைப்பவர் மனமே கோயிலாகக்கொண்டு வசிப்பவன். 'ஏகினான்' என்ற பதத்தினால், இறைபணி நின்ற அன்பர்களுக்கு அவர்கள் நினைப்பதன்முன்னமே அவன் விரைந்துசென்று அருளுமாறுங் கண்டாம்.

அவன் முற்றறிவுடையனாதலின், நாமவனை அளந்தறிவது இயலாதாகும். மேலும் நம்தற்போதத்தை முன்னிட்டு அறியப்புகின்,

இன்னும் அசாத்தியமாகும். நான் எனது என்னும் அகப்பற்று புறப் பற்றுக்களை நீக்கி இறைவன்பால் உள்ளன்போடுமுருகி மெய்சிலிர்த்து நிற்பார், அவன் அருளைப்பெறுவது எளிதினும் எளிது; உமாபதி சிவமும் அவ்வித அன்பும் இன்றுண்டேல், இன்றே அவனருளைப் பெறலாகுமென்றார். நன்முயற்சி எவ்விதத்தினும் வேண்டுமாயினும், அவன் அருள் முன்னர்வேண்டுமென்பது 'ஏகினான்' என்னும் பதத்தினால் மீண்டும் விளங்கும்.

"அவனருளாலே அவன்றாள் வணங்கி"

"தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினான்"

"அன்பர்க்கு மெய்யன் அல்லாதார்க்கு அல்லாதான்"

"நினைப்பரிய தனிப்பெரியோன்"

"தேவர்களோ, நூலே நுழைவரியான் நுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்திருக்கும் பாவகத்தால்"

"தேவர்கட்கும், தெரிக்கும்படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை,
யுருக்கும் பணிகொள்ளும்"

"பாரார் விசும்புளார்...ஆராலும் காண்டற்கரியன் எமக்கெளியன் என்பன மறைமொழிகள்.

மேல் எங்கே அன்பு விளைபுமோ, அங்கே ஆநந்தம் பிறக்கும். அன்பில்லாதவிடமும் ஆனந்தமுண்டாகுமோ. இறைவனை ஆனந்தனாகவும் ஆனந்தசொரூபனாகவும் சொல்லி, அவன் நம்மிடத்தில் அன்பு அல்லது அருளைச்செலுத்த இயலாதவன் என்றால் ஒருக்காலும் பொருந்துமோ. இறைவன் நம்மிடத்தில் அருளைப்புரிந்து, யாம் அன்புருகிநிற்றலும் அவன் நமக்கு ஆனந்தமாதலும் பின்வரும் திருவாக்குகளாலும் நன்குவிளங்கும்.

"சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரனை"

"உள்ளப்படாத திருவுருவை யுள்ளுதலும்
கள்ளப்படாத களிவந்த வான்கருணை"

"தினைத்தனை யுளவுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தோறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

'உருகிப்பெருகி உளங்குளிர முகந்துகொண்டு
பருகற்கினிய பரங்கருணைத் தடங்கடலை'

"ஞானக் கரும்பின் றெளியைப் பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்டான்."

இருவர் அறிவினால் ஒன்றப்படுவது கூடாதாகும். அன்பே ஒருவரைஒருவர் ஒன்றுபடுத்தல் வல்லது, ஆயின் ஒருவர் ஒருவரை அறிந்தால்தான் அன்பும் பிறக்கும். பூர்வபுண்ணியத்தினாற் பார்த்தவுமே அன்புவிளைவதும் உண்டு. "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை" என்றதும் அதுபற்றி. அன்பின் முன் கீழ்மேலில்லை. வலியார் எளியார் இல்லை. சாதி குலமில்லை. நான் எனதென்பதுமில்லை. தற்சுகம் பாராது பிறர்துன்பம் தானே வகிக்கும். பிறர் நன்மையே நாடும். பிறர்மேல் தீங்கு நினையாது; எல்லாமிருந்தும் உள்ளன்பில்லாவிடில் வற்றன்மரமாமன்றோ.

ஓர் ஐரோப்பியதத்துவ ஞானி, "சூரியனைப்போலும் இறைவன்; அவனையறிவது கூடாது; அவன் றன்னிய ஒளிக்கிரணங்களே அவனது அருள், அவ்வருளொளியாலேமட்டும் நாமவனை யறியலாம்" என்றார்.

மேல் அவன் அகண்ட ஞானமுடையவனாகவும், சால அன்புடையவனாகவுமிருக்க, உயிர்கள் பிறந்திறந்துழன்று துன்பத்தில் ஆழ்ந்து அவதிப்படுவதேன்? இவ்விதந்தோற்றுவித்தல் முதலியவைகளை யேன்செய்யவேண்டுமெனில், இறைவனது செய்கை பயனற்றதுமன்று: தன்பொருட்டுமன்று; பிறர்பொருட்டே: அவன் தனக்கென்று வேண்டுதல் வேண்டாமையிலனாகையின். உயிர்கள் இடும்பையுட்பட்டு நிற்பவர்கள் ஆகையால், அவ்விடும்பை யொழிக்கும்பொருட்டே இப்படைத்தல் முதலிய தொழில்களைச் செய்வதும் ஆகும். இறைவன் என்றும் சலமிலனாதற்கும் உயிர்கள் சஞ்சலத்துக்குட்பட்டதற்கும் ஏது, இத்திருக்குறளினால் விளங்குகின்றது. அஃதாவது இறைவன் விருப்பு வெறுப்பற்றிருத்தலும், உயிர்கள் விருப்பு வெறுப்புற்றிருத்தலுமே. உயிர்கள் தங்கள் சி

ற்றிவால் தங்களுக்கு என்றுமழியாத வின்பங்கொடுப்பது இன்ன தே எனத்தேர்ந்து கொள்ளாமல், தாங்கள் செய்யவேண்டிய கர்மங் கள் துன்பத்தைத்தருவதாயின் அவைகளை விலக்கி, அல்லாத கர்ம ங்கள் தற்காலம் இன்பந்தருவதாயின் அவைகளைச்செய்யவே புண் ணிய பாவங்கள் விளையும். விளைதலும் "இருள்சேரிருவினையும் பற் றும்; பற்றலும்" அடிக்கடி பிறந்திறந்துழலப் பிறப்பின் பிணியறுா. ஆகப் பிறப்பின்பிணியறுவதற்கு வழியாது எனில், இரண்டுண் டு. அவையாவன:—இருவினை யொப்படைதலும், பற்றற்றான்பற் றினைப்பற்றலுமே. வேண்டுதல் வேண்டாமையுடைமையும், இன் மையுமே உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ளகண்டிப்பான பேத ம். தேவர்கள் வறுமையிற்றுன்புற்று, பொருளைநாடி, திருப்பாற்க டலைக்கடையும்போது, மலையிலுங்கடலிலும் உள்ள சர அசரமாகிய உயிர்கட்கு விளையும் துன்பத்தைக் கருதினார்கள் இல்லை. உயிர்க்கத ம் செய்தலே பாவமாகையால், அப்பாவமே விஷமாகத் திரண்டு அ வர்களைத்தீய்த்தது. அதில் வெறுப்புற்று வருந்தி நின்று இறைவ னை நோக்கி ஓலமிட்டழுதார்கள். உயிர்கள் தங்கள் சுயநன்மை யை நாடிச்செல்லும்போது தெய்வத்தை நினைப்பது வழக்கமில்லை. மிடிவரினே 'ஐயோ தெய்வமே இப்படி என்னை விட்டுவிட்டாயே' யென்று கதறுவது. இறைவன் தாயினுமிக்க அன்புடையனாதலின், அவன் அவர்கள் அழுகைக்கு இரங்கி, தற்போதத்தால் விளைந்த பா வத்தைக் கவளமாகக்கொண்டு, அவர்கள் இடும்பையை நீக்கி, தான் பற்றற்றான்; எவ்விதப்பற்றுக்களும் தன்னைப் பற்றாவென்பதையும் விளக்கித் தன்பரதத்துவத்தை நிலைநிறுத்தியவாறுங்காண்க. வேண் டுதல் வேண்டாமையாலேயே இருவினையுண்டாகியவாறு ஆதாம் ஏ வாள்சரித்திரத்தினும் விளங்குவதாம். மரம் (Tree of knowledge of good and evil. நல்லது தீயதென்றுணரும் மரம்) என்னுந் த லைப்பின் கீழ் எழுதிய வியாசத்திற்கண்டுகொள்க.

மேற்சொல்லிப்போந்த விஷயாதிகளால் இக்குறட்கும், பின்வ ரும் 'இருள்சேரிருவினையுஞ் சேரா இறைவன், பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு' என்னும் குறட்குமுள்ள சம்பந்தங்களை ஊகித்து ணர்க.

நாம் விருப்பு வெறுப்புற்று அயர்தலும், ஐம்புலவேடர் வழியாகலின், ஐம்பொறிவாய்களையவித்தவுடன், இருவினையும் நம்மைப் பற்றாது பரிசுத்தர்களாவோம். ஆக, இருவினையொப்படைந்தவழி மலபரிபாகமெய்தலும் பெற்றாம். இறைவன் அநாதியே மலத்தினின்றும் நீங்கி நின்றான் என்பது ஆறாந்திருக்குறளாற் பெற்றாம். அவன் வழியே நிற்கவும், நம் வினைகள் அறும் என்பதும் பெற்றாம்.

ஆயின், உலகில் அநேக கடவுளர்கள் உண்டே அவர்களையெல்லாம் வழிபடல் நன்மை பயக்குமோ என்னும் ஐயத்தை நீக்குதற்கெழுந்தது, எழாந்திருக்குறள். வறியர் வறியரிடத்துச் சென்றாற் பயனென்? ஐசுவரியமுடையவனிடத்திற் சென்றாலன்றோ தன் வறுமை மாறும்; அதுபோல, ஒப்புயர்வற்ற சர்வ ஐசுவரியமுமுடைய ஏகநாயகனிடத்திற் சென்றடைந்தாலன்றோ நம்மனக்கவலையறும். கண்ணனும் கீதையில் ஸோகம் பாவனையால், "அந்தந்தக் கடவுளர்களை யடைந்தவர்கள் அவரவர் உலகத்தை யடைகின்றார்கள். என்னை யடைந்தவர்கள் பிர்ம்ம நிர்வாணத்தை யடைகின்றார்கள்". என்றது, இக்காரணம் பற்றியேயன்றோ. உயிர்க்கிரங்கி அருளவே, அவன் அந்தணன் (கருணைக்கடல்) ஆகின்றான் எனினும், அவன் பக்ஷபாதமில்லாதவனென்பது 'அறவாழி' என்பதனாற் பெற்றாம். "சலமிலன் சங்கரன்" என்றார் பிறரும்.

மேல்விரித்துக்கூறிய இறைவனது மாட்சிகளை எண்குணமாக வகுத்துக்காட்டினார். அவை வருமாறு—தன்வயத்தனாதல் (சுவதவனே என்றது இருக்கு) தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவேபாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பனவாம்.

இக்குணங்களையுடையவனே இறைவன் என்பதும், அவனடிச்சாராதார் பிறவிப்பெருங்கடல் நீந்தாரெனவும், சேர்ந்தவர் நீந்துவர் எனவும் ஆசிரியர் கடைப்பிடித்தார். மேல், உயிர்கள் சிற்றறிவுடையராதலும், அதனால் வேண்டுதல் வேண்டாமை யுடையராதலும், அதனால் இருவினைப் பற்றுத்தொடர்பு உண்டாதலும், அதனால் பிறப்பிறப்புண்டாதலும், உண்மையாக அப்பற்றற்றுப் பற்ற

ற்றான் பற்றினைப்பற்றின் அல்லாது, பற்று விடாதென ஆசிரியர் கருத்தை மேல்விளக்கிக் காட்டினும். ஆகப் பிறவித்துன்பத்துக்கு முதற்காரணமாயுள்ளது உயிர்களது சிற்றறிவேயாம். இதனையே, அறியாமை, அஞ்ஞானம், அவித்தை யல்லது அவிச்சை, மயக்கம், மருள், ஆணவமெனப் பலசொற்களாற் கூறுவது. இவ்வறியாமையின் தன்மை என்னெனின், இதுதான் பொருளல்லவற்றைப் பொருளென்றுணரலாம். பொருள்களை அதனதன் தன்மையினைத்தென அறிதல் அறிவாம். ஒன்றை மற்றொன்றாகவும் சந்தேகமாகவும் கோடலே அறியாமையாகும். இவ்வாறையந்திரிபினால் தான் எல்லாத்தீங்குகளும் விளைகின்றன. ஆசிரியர் "பொருளல்லவற்றை" எனாது, "பொருளில்லவற்றை" எனின், பொருள் வேறுபட்டு, மருட்சிகொள்ளற்குக் காரணமாதலும் காண்க. ஆசிரியர் கருத்து, உயிர் உடல்களை இல்பொருளாகக்கொள்வது அறிவின்றி, உடலை உயிராகவும், உயிரை இறைவனாகவும் கொள்ளுதலும்; இதிலையப் படுதலுமே அறியாமை என்பதாம். உலகர் "இறைவன் உளன், இறைவன் உளன்" எனக் கத்திக்கதறினும், அவர்கள் உண்மையான கடவுளாகக்கொண்டது தங்கள் உடலையேயாம். ஒருவன் காலையிற் படுக்கையினின்று எழுந்ததுமுதல் இராவிற் படுத்துறங்கும் வரை செய்யும் முயற்சிகளைக் கணக்கிட்டு ஆராயின் அவைகள் எல்லாம் தன் உடலைக்காக்கும் வழிமுறைகளாம். வேறு உயிரிருப்பதாகவும் தோன்றாத் துணையாகிய கடவுளிருப்பதாகவும் நினைப்பில்லை. நினைப்பிருப்பினன்றோ, அவற்றைப்போற்றும் வழி தேடுவன். தேடினன்றே, பிறவிப்பிணியும் அறும்.

இவ்வறியாமை நீங்கியபின் அடைவதென்னை? தான் அறக்கெடாமல் அடைகின்றவன் தானுமுண்டோ? என ஐயங்கிழ்த்தினார்க்கு, இருள் நீங்கியபின் கதிரொளி பெறுதல் போல, அறியாமை நீங்கி, இறைவனருள் பெற்று வரம்பிலின்பத்திலாழ்தல் அமையும். கதிரவனன்றி இருள் நீங்குதலும் ஒளியுண்டாதலும் அமையாதாகலின், இறைவனன்றி அறியாமை நீங்குதலும், இன்பம் பெறலும் அமையாது. முதலதிகாரத்தில் 3-முதல், 10-வது வரையுமுள்ள திருக்குறள்களிலும் "பற்றுக பற்றற்றான்" என்ற குறளிலும்,

*

"இருள்நீங்கி யின்பம்பயக்கும்" "பிறப்பென்னும் பேதைமைநீங்க" "சார்புணர்ந்து சார்புகெட வொழுகின்" என்ற திருக்குறள்களிலும், பதிஞானமின்றிப் பாசக்ஷயப்பெறுதல் அமையாதெனவும், உயிர்கள் உய்வெய்தும்பொருட்டு ஈசுவரன் ஒருவன் நிச்சயமாக வேண்டுமென்றும், ஆசிரியர் வெளிப்படுத்திநின்றார். இதைப் பின்னும் வலியுறுத்தும்பொருட்டேயன்றோ எதிர்மறையான்,

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே, மெய்யுணர் வில்லாதவர்க்கு" என மொழிந்தார். அஃதாவது ஒருவன் புலன்வழிகளையெல்லாம் அடைத்து, சுத்தமாய், அறவாழி அந்தணனாகி, தாரணைக்கணின்று, இவ்வெய்துதற்கரிய இந்நிலையில் நின்றும், பதிஞானமில்லாவிடின், அவன் வீட்டுப் பேற்றையடையான் என்பதே. இந்த விஷயத்தை மிகவும் ஆழ்ந்து கவனிக்கற்பாலது. ஏனெனில் இக்காலத்து ஐரோப்பாவிற் பெரும்பாலும் தம் வயத்ததாய வழியே போதுமென்னும் பூர்வபட்சமதம் மிகவும் பிரபலமடைந்திருப்பது மிகக்காணக்கூடும். இம்மதமும் ஓர்காலத்து இந்தியாவிலும் பரவியிருந்து பின் முற்றிலும் ஓட்டப்பட்டது. இதன்முன் ஓடிப்போன இம்மதம் பின்னும் ஈங்குத் தலையெடுக்க ஏது உண்டாயிருக்கிறது. இவ்விஷயங்களை யாம் "புத்தமத விசாரணை" யென்னும் வியாசத்தில் விரிவாக வரைந்திருப்பதால் ஈங்கு இம்மட்டில் விடுத்தாம்.

(இன்னும் வரும்.)

ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை.

உ

பன்னிருமாசப்பெயர்கள்.

வைகாசி;—விசாகத்தின் பெயர்கள் முற்றில், வைகாசி, காற்றுநாள், முறம், சுளகு, சேட்டை என ஆறும். வைகாசி என்பது வடமொழியாகிய வைசாகி என்பதன் திரிவு. முற்றில், காற்றுநாள், முறம், சுளகு என்பன தமிழ்ச்சொற்கள். சேட்டை என்பது சேஷ்டா என்னும் வடமொழித் திரிவு; அசைவென்பது அதன்பொருள்;

காற்றின் அசைவு பெரிதுமுடையதென்பது கருத்து. விசாகமென்பது காந்தியியாபகமுடையதெனப் பொருள்படும். விசாகத்துக்கு வடமொழிநிகண்டிலே ராதாவென வொருபெயரேயுளது; அதன் பொருள் சித்தியைத்தருவதென்பது. முற்றில், காற்றுநாள், முறம், சுளகு என்னும் பொருள்பட விசாகத்திற்கு வடமொழிக்கண்வரும் பெயர்களைக் காண்கின்றிலம். முற்றில் முறம் சுளகு என்பன ஒரு பொருட்சொற்கள்; அவை மூன்றும் வடிவும் தொழிலும் பற்றி வந்த பெயர்கள். நக்ஷத்திரமாலையும் "விசாகமாறு மிடிபாழ்ந்துரவாம்" எனக்கூறும். இடிபாழ்ந்துரவும் முறமும் தம்முள் ஒத்த வடிவுடையனவாதல் ஒப்புநோக்குமிடத்துப் புலனும். விசாகத்தோடுகூடிய பூரணைமாசம் வைகாசி. அது, வடமொழி தமிழில்வந்து வழங்கியகாலத்திலே தொடங்கிய வழக்கு. அதற்குமுன்னர் வைகாசிக்குத் தமிழுரிட்டு வழங்கிய பெயர் முற்றில் காற்றுநாள் முறம் சுளகு என்பனவற்றுள் ஒன்றினால் முற்றிற்றிங்கள் காற்றுத்திங்கள் முறத்திங்கள் சுளகுத்திங்களென வழங்கினராதல்வேண்டும்.

முன்னே மகம் உத்தரம் என்னு நக்ஷத்திரங்களின் பெயர்களுள்ளே முதலெழுஞ்சனி கடையெழுஞ்சனி என்பனவற்றிற்குக் காரணங்கூறாது விட்டேம். அதனைக்கூறி மேற்செல்வாம். மூலத்திரிகோணங்காணுதற்கு மகமே முதல் நக்ஷத்திரமாக வெடுத்துக்கொள்ளப்படுவது. அதற்கடுத்தது பூரம். அதற்கடுத்தது உத்தரம். இப்படியெடுத்துக்கொள்ளப்படும். அச்சுவினி மகம் மூலம். பரணி பூரம் பூராடம். கார்த்திகை உத்தரம் உத்தராடம் எனவரும். முதலெழுஞ்சனி என்பதிற் சனி என்பதன் பொருள் கோணம். ஆகவே முதலெழுஞ்சனி என்பதன் பொருள் முதல்வருங் கோணத்திற்குரிய நக்ஷத்திரமென்பதாம். அது மகமாதலின் அப்பெயர் பெறுவதாயிற்று. அடுத்தகோணத்திற்குரியது பூரமாதலின் அஃது இடையெழுஞ்சனி என்னும் பெயர் பெறுவதாயிற்று. அதற்கடுத்ததும் அவ்விராசிக்குக் கடையிலுள்ளதுமாகிய கோணத்துக்குரிய நக்ஷத்திரம் உத்தரமாதலின் அது கடையெழுஞ்சனி எனப்பட்டது. சனி என்பது வடமொழி 'ஸ்ரீ' என்பதன் தற்பவம். அதன்பொருள் கோணம்.

ஆனிமாசம்:—ஜ்யேஷ்டா நக்ஷத்திரத்தோடு பூரணைவரு மாசம் ஆனியெனப்படும். ஜ்யேஷ்டா என்பது தமிழிலே கேட்டையென த்திரிந்து வழங்குகின்றது. கேட்டையின் பெயர்கள் சேட்டை, இந்திரனாள், வேதி, தழல், எரி, வல்லாரை என்பன. அவற்றுள், சேட்டை என்பது ஜ்யேஷ்டா என்னும் வடமொழியினது திரிவு. இந்திரன் பிறந்தநாளாதலின் அஃது இந்திரனாள் எனப்பட்டது. வேதி என்பது யாககுண்டம்; அதுபோலுதலின் வேதி எனப்பட்டது. தழல் என்பது அக்கினிப்பிழம்பு; அதுபோலுதலின் அப்பெயர்பெற்றது. எரி என்பது சுடர்; அதுபோலுதலின் எரி எனப்பட்டது. வல்லாரை என்பது வல்லாரையிலை. அதுபோலுதலின் அப்பெயர் கொண்டது. வேதிமுதலிய மூன்றும் வடிவுங்குணமும்பற்றி வந்த பெயர்கள். வல்லாரை வடிவுபற்றிவந்த பெயர். நக்ஷத்திரமாலையும் "கேட்டை நான்கு மீட்டி போலும்" எனக்கூறும். வல்லாரையிலை வடிவத்தால் ஈட்டியையொத்ததேயாம்.

ஜ்யேஷ்டா மாசத்துக்கு வடமொழி நிகண்டில் வரும் பெயர் 'சுக்கிர' வென்பதொன்றுமே. அது "பிராணிகளைத் தவிக்கச்செய்வது" எனப் பொருள்தரும். அக்கருத்தைப்பற்றி உஷ்ணாதிகாரமுடைய மாசமென்னும் பொருள்பட ஆக்னியமாசமென்பதும் அதற்கோரபிதானமாயிற்று. ஆக்னியமென்பது தமிழில் ஆனியென்றாயிற்று. எரி, தழல், வேதி என்பனவும் அக்கருத்தேபற்றி வந்தன. சேட்டை இந்திரனாள் வேதி மூன்றும் வடசொற்கள். எரி, தழல், வல்லாரை மூன்றும் தமிழ்ச்சொற்கள். ஆனி என்னும் பெயர்வழக்குவருமுன்னே தமிழில் அம்மாசத்துக்கு வழங்கிய பெயர்கள் எரி தழல் வல்லாரை என்பனவற்றுள் ஒன்றுதல்வேண்டும்.

ஆடிமாசம்:—ஆஷாடி என்பது தமிழில் ஆடியென வந்தது. ஆஷாடி என்பது ஆடிப்பூரணை. ஆஷாடமென்பது பூராடம் உத்தராடம் இரண்டற்கும் பொதுப்பெயர். பூராடம் பூர்வாஷாடம் என்பதன் திரிவு. உத்தராடம் உத்தராஷாடம் என்பதன் திரிவு. ஆஷாடத்திற் பூரணைவருமாசம் ஆடி எனப்படும். ஆஷாடத்திற்கு வடமொழிநிகண்டில் வரும்பெயர் சுசி என்பதொன்றுமே. சகிக்கலாற்றாத கொடியவுஷ்ணத்தையுடையதென்பது அதன் பொருள். தமிழி

லே பூராடவுத்தராடங்களின் பெயர்கள் உடைகுளம், முற்குளம், நீர் நாள்; கடைக்குளம், ஆனி, விச்சுவநாள், ஆடி என்பன. அவற்றுள் முன்னையமூன்றும் பூராடப்பெயர்கள். பின்னைய நான்கும் உத்தராடப் பெயர்கள். உடைகுளம்போலுதலின் உடைகுளம். பூராடமும் உத்தராடமும் முன்னும்பின்னுமாக இருகுளம்போற் கிடத்தலின் முன்னுள்ள பூராடம் முற்குளமெனவும் பின்னுள்ளஉத்தராடம் கடைக்குளமெனவும் பட்டன. நீர்நாள் நீரை அதிகரித்துநிற்குநாள் எனப் பொருள்படும். வராகமிகிரரும் ஆஷாடத்துக்கு அதிகார ஸ்தானமாகக் கிணறுமுதலிய நீர்நிலைகளைக் கூறுவர். விச்சுவநாள் விச்சுவதேவருக்குரிய நாள். ஆனி என்பது எல்லை. சூரியன் வியாபிக்குந்திக்கெல்லையென்பது கருத்து. ஆஷாடமென்பதின் பொருளுமதுவே. உடைகுளம் முற்குளம் கடைக்குளம் என்பன வடமொழிச்சம்பந்தமுங் கருத்துஞ் சிறிதுங் கலவாத செந்தமிழ் நிலத்து வழக்காதலின் அவற்றுள் ஒன்றினாலேயே, ஆடியென்னும் பெயர்வந்து வழங்குமுன்னர், அம்மாசம் வழங்கப்பட்டதாதல் வேண்டும்.

ஆவணி:—சிரவணநக்ஷத்திரத்தோடுகூடிய பூரணைமாசம் ஆவணி. சிராவணி என்பது ஆவணி எனத்தமிழில் வந்தது. சிரவணமென்பது தமிழிலே திருவோணமெனவழங்கும். திருவோணத்தின் பெயர்கள் மாயோனாள், உலக்கை, முக்கோல், சிரவணம், சோணை என்பன. இவற்றுள் மாயோனாள், சிரவணம், சோணை என்பன மூன்றும் வடமொழிப்பதங்கள். உலக்கை முக்கோல் என்னுமிரண்டும் தமிழ்ச் சொற்கள். மாயோனாள் என்பது மாயவனுக்குரியதினமெனப்பொருள்படும். சிரவணமென்பது மழைப்பெயலுடையநாளெனப்பொருள்படும். சிரவணம் - பெயல். சுரோணையென்பது தமிழிலே சோணையெனவந்தது. அதன் பொருள் கூட்டம். மேசக்கூட்டமுண்டாகுநாளென்பதுகருத்து. உலக்கைபோலுதலின் உலக்கையெனப்பட்டது. "ஓணமூன்று முலக்கைபோலும்" என்றார் நக்ஷத்திரமாலைநூல் செய்தாரும். முக்கோல்போலுதலின் முக்கோலெனப்பட்டது. முக்கோலென்பது திரிதண்டு. அஃதாவது அடுக்கிஒருசேரத் தலையிடைகடை மூன்றிடத்துங் கட்டிய மூன்று கோல்கள். அது சங்கியாசமுத்திரை. மனம் வாக்குக் காயமென்னு மூன்றையுமடக்கியாளுதல் சங்நி

யாசத்துக்கு இன்றியமையாவிலக்கணமாதலின் அதன் அறிகுறியாகச் சந்நியாசிகள் திரிதண்டுதரிப்பர். திரிதண்டின் தலை யிடை கடை மூன்றிடத்துமுள்ள பூண்போலத் திருவோணநக்ஷத்திர மூன்றும் விளங்குதலின் அஃதப்பெயர் பெறுவதாயிற்று. வடமொழிமாக்கள் திருவோணத்துக்குத் திரிதண்டை உவமிக்கத், தென்மொழிமாக்கள் தமது நிலத்தில் அதற்கு உவமையாகக்கண்டது உலக்கையேயாம். ஆகவே முக்கோலென்பது தமிழ்ச்சொல்லேயாயினும் வடசொல்லாகிய திரிதண்டின் மொழிபெயர்ப்பாதலின் உலக்கையொன்றுமே பூர்வத்திலே தமிழ்மக்கள் திருவோணத்திற்கு இட்டுவழங்கிய பெயராம். ஆதலால் ஆவணிக்கு அந்நாள் அவரிட்டுவழங்கிய பெயர் உலக்கைத் திங்களென்பதேபோலும்.

(இன்னும் வரும்.)

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

ஸ்ரீ:

அங்கச்சேதன சாஸ்திரம்.

ANATOMY.

அங்கமென்பது உடல். சேதனமென்பதுபிரிவு. ஆக, அங்கச்சேதனயாவது உடலைச் சேதித்து, அதன் வெவ்வேறு பாகங்களைத் தொழிலிற் கேற்றபடி பிரித்துப் பரிசோதித்தலாம். எவ்விதமெனில் பொழுதைக் காட்ட வல்லதோர் கடிகாரத்தைக் கைக்கொண்டு அது முழுவதும் அங்கியாக வெண்ணி, அதனங்கத்தில் யாதாயினும் சற்றுக் கெடுதிநேரிட்டிருப்பின் அதன் பலபிரிவுகளாகிய மேற் கண்ணாடி, முட்கள், எண்ணைக்கொண்ட மேற்றட்டு, இவற்றின் கீழ் உட்புறத்துள்ள யந்திரச் சேர்க்கைக்கு உதவுவனவாகிய பலவகைச் சக்கரங்கள், ஆணிகள், சுற்றுக்கம்பிகள் முதலியவைகளை வேறுபடுத்திப் பரிசோதிக்கின்றமுறையே, ஜீவஜந்துக்களினும் தாவரப் பொருள்களினும், அங்கவியல்பைப்பரிசோதிக்கும்வண்ணம் அவற்றவற்றின் அவயவங்களை வேறுபடுத்தி, மற்றும் அவ்வோரவயவத்தைத்

யும் தனியாக வெடுத்து அதன் நுண்ணிய பாகங்களை வெற்றுக் கண்ணினாலும் பூதக்கண்ணாடியின் மூலமாயும் பார்த்துத் தெளிய வல்லதேயாம். ஆனால், கெடுதியடைந்ததோர் கடிகாரத்தைச் சீர் திருத்துவதற்காகப் பலவாறு நீக்கிப்பரிசோதித்தபின், அக்கடிகாரம் சுயவுருவத்தை மேற்கொண்டு ஓடுமாறு அவ்யந்திரத்தை நடப்பிப்பதுபோல, ஜந்துக்களின் அல்லது தாவரப்பொருள்களின் உடலை ஓர்தரம் வெவ்வேறாகச் சேதித்தபிறகு அவற்றை ஒன்றுசேர்த்து அவற்றின் சுய உருவத்தைத் திரும்ப உண்டாக்கி ஜீவனைச் செலுத்துவது சாத்தியமல்ல. ஆனாலும், மனிதன்முதல் எறும்பீறாகவுள்ள சகல பிராணிகளையும் மரஞ் செடி இலை காய்முதலிய சுத்த மூலபதார்த்தங்களையும் ஒருவாறு நேர்ந்தறியும்வண்ணம் சிறுகுழந்தைகள் யாதாயினுமோர் பொருளைத் தொட்டால் அப்பொருளினியல்பையும் அமைப்பையும் வெகு உற்சாகத்துடன் கண்டறியச் சின்னங்களாய்த் துண்டிப்பதுபோல, நமது ஐம்புலன்களுக்கும் எளிதில் அணுகவொண்ணாத இரகஸ்யங்களைச் சேதித்தாயினுங் கற்க விருப்பங்கொண்டு, அகன்றகல்வியிலனுப்பிரமாணங் கற்றுவரும் மானிடராகிய யாம் ஞானத்திற் சிறுவர்களாய் உற்சாகத்துடன் சேதித்தாயினுங் கற்க முயலவேண்டியதாகின்றது. இவ்வாறு பொருள்களைச்சேதிப்பதில், சேதிக்கும்வழி ஒன்றேயாயினும் பொருள் ஒன்றேயாயினும், பலவித நோக்கங்களை மேற்கொண்டு சேதிக்கக்கூடுமானதாகயால், அவ்வந்நோக்கத்திற்கேற்பவும் தொழில்நோக்கத்திற்கும் பொருளுக்குமேற்றபடியும் பெயரும் மாறிவரவேண்டியிருக்கிறது. இதற்குதாரணமாக அடியில் வருமாறு விஷயங்களைக் கண்டறிவோம்.

பிராணிகளின் தேகவமைப்பைப் பரிசோதித்து அவ்வமைவிற்குத் தக்க தொழிலைக்கண்டு கற்கலாமாகையாலும், தோற்றத்திற்குப் பலவழிகளிலொற்றுமையுடைய பிராணிகள் எவ்வெவ்விதங்களில் வித்தியாசப்படுதலால் அவைகளுக்குட் செயல்வேறுபாடு உண்டாகின்றதென்று சந்தேகம் சிறிதுமின்றி ஊகிக்கலாமாதலாலும் ஒவ்வொருவகைப் பிராணியையும் சேதித்துப்பரிசோதித்தல் கல்வித்திறத்திற்கு இன்றியமையாததோர் மார்க்கமாகக் கருதப்படுகிறது. பிராணிகளில் தலைமைபூண்ட மானிடரின் யாக்கையமைப்பைக் கற்க

வேண்டுங்கால், ஓர் மனித தேகத்தைப் பரீக்ஷிக்கவேண்டி வெறுப்பில்லாது அவ்வுடலைச் சேதித்துத்தான் பார்க்கவேண்டும். நாம் உட்கொள்ளுமன்னமானது எவ்வாறு வாயின்வழி உடலைச்சேர்ந்து நமது அவயவங்களைச் சோர்வடையாமற் காத்து உதவுகின்றதென்பதைத் தேடித்தெரிய, நமது உடலிலுள்ள பைகளையும், குழாய்களையும், நரம்புகளையும், மாமிசங்களையும், குருத்தெலும்புகளையும் (Cartilage) மற்ற எலும்புகளையும், நிணம் அல்லது கொழுப்பு (Fat or Adipose tissue), அவ்வவ்விடத்து உற்பத்தியாகும் பலவித ரஸங்கள் (Juices) ஆகிய இவைகளையும் இவைபோன்ற மற்றுவைகளையும் தெளிவாகப் பார்த்துப் பரிசோதித்தாலொழிய உண்மை புலப்படாதாகையால், வெறுப்பைவிட்டு மனிதவுடலைச்சற்றுச்சேதித்துத்தான் பார்க்கவேண்டுமென்னும் துணிவுடன் முயலவேண்டும். இத்தகைய மனிதவுடலைச் சேதித்து அதன் வெவ்வேறு பாகங்களைக் கண்டறிந்து அதனால் அவ்வுடலின் செயற்கை, உருவம், அமைப்பு ஆகிய இவைகளைக்குறித்துக் காணவல்ல ஞானத்திற்கு மனுஷாங்கச்சேதனம் (Anthropotomy) என்று பெயராகும்.

மானிடருக்குக் கீழ்ப்பட்ட பிராணிகளின் வகைகள் விசேஷித்துளவாகையால் அவைகளின் அங்கச்சேதன சாத்திரத்திற்கு ஒரேபெயரிட்டு அதைப் பொதுவாக மிருகாங்கச்சேதனமென்ற பொருள்பட ஆங்கிலேயத்தில் "Zootomy" என்பர். மிருகாங்கச்சேதனமும் முன்கூறியவாறே அவ்வம்மிருகத்தின் உடற்செய்கை, உருவம், அமைப்பு ஆகிய இவைகளைத் தெற்றெனக் கூறுதலேயாம். ஆனால் மிருகாங்கச்சேதனமென்னும் பெயர் பொதுப்பெயராயினும் அப்பெயர்க்குட்பட்டுத்தனிப்பெயராக ஒவ்வோர் மிருகத்தினங்கச்சேதனத்தை எடுத்துச் சொல்லத்தகும். உதாரணம் :—அசுவாங்கச்சேதனம் (Equine anatomy or anatomy of the body of the horse), கஜாங்கச்சேதனம் (Elephantine anatomy or anatomy of the body of the Elephant), மேஷாங்கச்சேதனம் (anatomy of the body of the sheep) ரிஷபாங்கச்சேதனம் (anatomy of the body of the ox or bovine anatomy) முதலியன. மேல்சொல்லிய உதாரணங்களில் ஒவ்வொன்றும் பிரதியேகாங்கச்சேதனமென்று

மொழிபெயர்க்கத்தக்கதோர் (Special anatomy) சாத்திரமார்க்கமா
ம். இரண்டு வஸ்துக்களைப்பரிசோதித்து அவைகளைச் சிறிதும் சந்தே
கமின்றி அறிந்துகொள்ளவேண்டுமானால் அவற்றின் ஒற்றுமையினும்
வேற்றுமையே தெளிவாக நமது அறிவிற்கு நன்கு விளங்கவேண்டு
மாகையால், அத்தகைய ஒற்றுமை வேற்றுமைகளை யெடுத்துக்காட்
டவல்ல அங்கச்சேதனத்திற்குத் தனிப்பெயர் கொடுத்துக் கூறுவர்.
அதை ஆங்கிலேயத்திற் சுருக்கி (Comparative anatomy) என்பர்.
மேற்கூறிய பிரதியேகாங்கச்சேதனம், ஒற்றுமை வேற்றுமையைக்
காட்டவல்ல பேதாபேதாங்கச்சேதனம் ஆகியஇவை, மிருகங்களுக்கு
மாத்திரமின்றித் தாவரப் பொருள்களுக்குமுள. ஆதலால் மிருகங்க
ளைச்சேதித்துக் கற்குமாறு தாவரப் பொருள்களையுஞ்சேதித்துக் கற்
கத்தகுமென்பதை எளிதில் அறியலாகும். மனிதர், மிருகங்கள், தா
வரப்பொருள்கள் ஆகிய இவைகளின் வாழ்க்கைக்கின்றியமையாதன
வாகிய அவற்றின் பிராணன், உருவம், தேகவியற்கை, வளர்ச்சி, பா
ப்பு முதலான அம்சங்களை யெடுத்துக்கூறும் சாத்திரத்திற்கு ஜீவ
தத்துவமென்று பொருள்படத்தக்க ஆங்கிலேய 'Biology' என்று
பெயர். அதன்கீழ் வெவ்வேறு பிரிவுகளாக முன்கூறிய மனுஷாங்
கச்சேதனமும் மிருகாங்கச்சேதனமும் மற்றும் தாவராங்கச்சேதன
மும் (Phytotomy) காணப்பெறுகிறோம். ஆனால் தாவராங்கச்சேத
னத்தைத் தாவரசாத்திரத்தில் (Botany) ஓர்பாகமாகக் கருதி அத
னுடன் வைக்கத்தக்கது.

பிரதியேகாங்கச்சேதனமென்பதை முன்னமேயே கண்டறிந்
தோம். அதன் விவரமாக அடியில் வருமாறு பலவிதநோக்கங்களை
முதன்மையாகக்கொண்டு கருதுதல் விசேஷமாதலால் அவ்வந்நோக்
கத்திற்கேற்பப் பெயர் கொடுத்து அவற்றில் ஒவ்வொன்றும் எவ்வா
று ஜீவன்களுக்கும், தாவரங்களுக்கும் பொதுவாகவே நின்று கல்வி
யை விர்த்திசெய்யத்தக்கதென்பதைக் கண்டுகளிப்போம்.

முதலாவது.—கருவுற்றகாலமுதல் புக்தவயதையடையும்வரையி
ல் ஆங்காங்குச் சிசுவினிடத்துத்தோன்றவல்ல தேகவளர்ச்சியினாலா
கு முருவக்காட்சியை ஆரம்பம்முதல் கிரமமாகத் தொடர்ந்து பார்த்
தறியும் மார்க்கத்திற்கு அங்கத்தோற்றச் சேதனம் (Developmental

*

or Embryological anatomy) என்று கூறத்தகும். இதற்கோருதாரணமென்னவெனில், குழந்தையானது, பிறந்தவுடன் மெய்வாய் கண் மூக்குச் செவிகளின் காரியங்களாகிய உணர்தல், பேசுதல், பார்த்தல், மோத்தல், கேட்குதலாகிய இச்செய்கைகளைச் சிறிதுமறியாமல், மெய்யிருந்துந் தக்கபடி உணராமலும், வாயிருந்தும் பேசாமலும், கண்ணிருந்தும் பார்க்காமலும், மூக்கிருந்தும் மோவாமலும், காதிருந்துங் கேட்காமலும் நிலையற்றதுபோற் காணப்படுகிறது. ஆனால் உத்தேசம் 6-மாதகாலமானபின் மேற்கூறிய அவயவங்கள் வளர்ச்சிபெற்று உபயோகத்திற்கு வந்துள்ளனவாகையால், குழந்தையானது சற்று உணரவும், பேசவும், பார்க்கவும், கேட்கவும் முயலுகின்றது. இத்தகைய காலத்திற்கேற்ப வளர்ச்சியாலாகும் உருவத்தோற்றத்தைக் கிரமமாக விசாரித்தறியவல்ல சேதனத்தொழிலுக்கு அங்கத்தோற்றச் சேதன மெல்லைலாம்போலும்!

இரண்டாவது ;— சாதாரணமாக நமது அனுபோகத்தில் யாதோர் உறுப்பை நாம் விசேஷித்துபயோகிக்கின்றோமோ அவ்வுறுப்பானது திரட்சியையடைகிறதென்பதைப் பார்த்து வருகிறோம். உதாரணம் :—செம்மட்டியைக் கையிலெடுத்து ஓங்கிப் பலதரம் அடிக்குந் தொழிலையுடைய கொல்லனது கையைப் பார்த்தால் திரண்டு உருண்டு கெட்டியாயிருக்கும். சதாகாலமுமிரைக்காக ஓரிடத்திலிருந்து எங்கும் பார்த்துக்கொண்டிருக்குங் கழுகுக்குக் கண் கூர்மையையடைந்திருக்கும். ஆதலால் அவ்வப்பிராணிவகைக்கு அவ்வவ்வுறுப்புக்கள் அமைந்திருக்குமிலக்கணத்தையும் அவ்வவ்வுறுப்பினது உருவத்தையும்பற்றி விசாரிக்குங்கால் அதனால் நாம் அறியத்தகும் நியாயத்தை யெடுத்துக்காட்டவல்ல சேதனமார்க்கத்திற்கு அங்கவுருச்சேதன மென்று (Morphological anatomy) பெயரிடத்தக்கது.

மூன்றாவது :—யாதொரு ஜீவனது அல்லது தாவரப்பொருளது சினையை அல்லது உறுப்பைக்கொட்டு அவ்வுறுப்பின் ஓர்பாகத்தை பரீக்ஷித்து அதன்செயல், உபயோகம், பயன் ஆகிய இவற்றைச் சொல்லவல்லமோ அதை அங்ககுணச்சேதனமென்று (Physicological anatomy) சொல்லுவோம். உதாரணம் :—ஓர் மாட்டின் உடலைத்திறந்து அதன் வயிற்றிலுள்ள ஆகாரப்பையைப் (Stomach)

பரிசோதித்துப் பார்த்தால் நான்கு அறைகளிருக்கப்பார்க்கிறோம். அப்பையில் ஒவ்வோரறைக்கும் ஒவ்வோர்செயலிருப்பதால் அதன தன் செயலுக்கேற்றபடி உபயோகத்தையும் பயனையுங் காணவல்லோம். ஓர் மாடு புல்லைமேய்ந்தால், புல்லை ஆகாரப்பையின் ஓரறையிற் சேகரித்து அதன்பின் ஓரிடத்திலிருந்து முன்உட்கொண்ட இரையையெல்லாம் மீண்டும் பையைவிட்டு வாயில்வாங்கிக்கொண்டு கடித்துக்கடித்துச் சிறுதுண்டுகளாக்கி இரைப்பையின் மற்றோர் அறைக்குட்டள்ளிவருகிறது. இச்செயலைச் சாதாரணமாய் அசைபோடுதலென்று சொல்வதுண்டு. இவ்விதம் உடலைத்திறந்து இரைப்பையைப் பரீக்ஷிக்கும் மார்க்கத்திற்கு அங்ககுணச்சேதனமென்று சொல்லலாகும். மேலும் ஓர் புஷ்பத்தின் இதழ்களுக்கு மத்தியிலுள்ள அல்லித்தாளை (Pistil) மெதுவாகத் திறந்துபார்த்தால் அஃதோர் குழாயாகவும் அதனுட் கையில் ஒட்டவல்லதோர் ரஸம்பரவவும் அக்குழாயின்வழியே மகரந்தப்பொடி (Anther) உள்ளேசென்று அண்டகோசத்தை (Ovary) அடைகிறதென்றும் பார்த்துத் தெளிவதும் அங்ககுணச்சேதனமாம். இவையெல்லாம் வைத்தியசாத்திரத்திற்கு உதவுவன.

நான்காவது :—ஒருவன் நேராகநின்றால் அவனது கழுத்துமுதல் அரை அல்லது இடுப்பு ஈருகவுள்ள நடுவிடத்தில் எவ்வெப்பாகங்களில் எவ்வெப்பைகளுளவென்றும், ஓர் பைக்கு எப்பக்கத்தில் எந்நிலையில் மற்றோர் பையுள்ளதென்றும் தெளிவாய் அறிவதற்கு உடலைத் திறந்துதான் பார்க்கவேண்டும். இத்தகைய நோக்கத்திற்கேற்ற உடற்சேதனத்திற்கு அங்கநிலைச்சேதனமென்று பெயரிட்டு கூறத்தகும் (Topographical anatomy). உதாரணம்:—இதயம் (Heart) மனிதனது இடப்பக்கத்துள்ளது, மார்பின்கணுள்ளது. ஈரல்(Liver) இரைப்பைக்குமேலே வலப்பக்கத்துள்ளது; முதலியவை. இதுவும் வைத்தியத்திற்குதவுவது.

ஐந்தாவது :—ஓர் பெருங்கட்டிடத்திற்குச் செங்கல், சுண்ணும்பு முதலியவற்றை அற்பமாயிருப்பினும் எவ்வாறு ஆதாரப் பொருள்களாக நாம் எண்ணுகிறோமோ, அவ்வாறே நமது பெருங்கட்டிடமாகிய உடலுக்கு எலும்பு, குருத்தெலும்பு, இரத்தம் முதலியவைகளை ஆ

தாரப்பொருள்களாகக் கருதவேண்டும். இவ்வாதாரப் பொருள்களை இங்கிலீஷில் "Tissue" என்பர். இப்பொருளைக்கான வெகுநுட்பமாய்ப் பரிசோதிக்கவேண்டியிருப்பதால் பூதக்கண்ணாடியை உபயோகிப்பதுண்டு. இப்பரிசோதனை அங்கத்தின் நுட்பபாகங்களைப் பரிசோதிப்பதாகையால் இதை நுட்பவங்கச்சேதனமென்று (Micros copic or Minute anatomy) கூறலாகும். உதாரணம்:—மயிரளவுள்ள இரத்தக்குழாய்கள் உடம்பில் ஓடுகின்றன. மேலும் உருளைக்கிழங்கின் பசைமாவானது (Starch) பூதக்கண்ணாடியின்கீழ் வைத்துப்பார்த்தால் உருளைவடிவினதாய்ப் புலப்படுகிறது.

ஆறுவது:—யாதாயினுமோர் வியாதியானது உடம்பைத் தாக்கினால் உடம்பினுள் மாறுதலைச் செய்கிறது. இத்தகைய மாறுதலைப் பரிசோதிக்கும்வண்ணம் இந்நோக்கத்திற்கேற்றபடி உடலைச்சேதித்தறிதல் குகரணங்கச்சேதனம் (Pathological anatomy). உதாரணம்:—ஒருவன் அன்னத்தைத் தினந்தோறும் நன்றாகவுண்டு அதற்கேற்றசெயலைச் செய்யாவிடின் அவ்வன்னம் ஜீரணமாகுதல் கடினம். இக்காரணத்தால் நாளடைவில் ஜீரணசக்தி குறைவுபட இரத்தம் வறண்டு இரைப்பும் தேகத்திலோர்வெளுப்புமுண்டாகி அசௌக்கியமுமேலிட்டுநிற்கும். இதன்காரணத்தைப் பரிசோதிக்கவேண்டிச் செலுத்தும் செயலுக்குக் குகரணங்கச்சேதனமென்று பெயர்.

ஆதலின் அங்கச்சேதனத்தின் பயனையும், அதன் வேறுபாடுகளாலாகிய பலவிதச்சேதனங்களையுந் தேர்ந்தறிவது கல்விக்கு இன்றியமையாததாம்.

சே. வீ. இராஜகோபாலாசாரி.

உ

சிவமயம்.

இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

[௨௱௯-ம் பக்கத் தொடர்ச்சி.]

கங்கைப்படலம்.

பெண்ணி னோக்குஞ் சுவையிற் பிறர்பிறர்க்
கெண்ணி நோக்கி யியம்பரு மின்பத்தைப்
பண்ணி னோக்கும் பராவமு தைப்பசுங்
கண்ணி னோக்கின ருள்ளங் களிக்கின்றார்.

என்னும் ௧௧-ம் செய்யுளில், 'பெண்ணி னோக்குஞ் சுவையிற் பிறர்பிறர்க்கு' என்பது 'பெண்ணி னோக்குஞ் சுவையிற் பிறர்பெறற்கு' எனக்காணப்படுகின்றது. 'பிறர்க்கு' என்பது பொருள்கொள்ளுமிடத்துச் சிறிதும் பொருத்தமின்மையின் 'பெறற்கு' என்பதே பொருத்தமுடைத்து. சிந்தையுமொழியுஞ்செல்லாநிலைமைத்தாகலின், 'பிறர்பெறற், கெண்ணிநோக்கியியம்பருமின்பம்' என்றார். சுவையின் என்பதில் இன் உவமப்பொருட்டு.

இக்கங்கைப்படலத்து ௩௭-ம் செய்யுளின் சந்தமும், ௩௮-ம் செய்யுளின் சந்தமும் வேறாகக்காணப்படுதலின், ௩௮-ம் செய்யுளின்முன் 'வேறு' என இடவேண்டும். அங்ஙனமே பிரதிகளிலும் காணப்படுகின்றது. அதுவுமன்றி அச்செய்யுளின்முன்னே,

நின்றா னெஞ்சி னிரம்புறு மன்பா
லின்றே நின்பணி செய்திட விறைவா
நன்றே வந்தன னடியேன்யான்
என்றே கூவின னெயினரி னிசையோன்.

என்னும் செய்யுள் ஒன்று காணப்படுகின்றது. இச்செய்யுள் 'கூவாமுன்னம்' என்பதற்கும் பொருத்தமுடைத்தாய் வருதலின் ஈண்டுக்கொள்ளப்படத் தக்கதே. முப்பத்தெட்டாஞ் செய்யுளில் 'நாயடியேனென்றான்' என்பது 'நாயகவென்றான்' எனக்காணப்படுகின்றது. இச்செய்யுளிலும் 'நாயடியேன்' எனவருதலின் அதில் அங்ஙனம் வருதலே பொருத்தமுடைத்து. இன்னும் இப்படலத்து ௪௫-ம் செய்யுளின் பின்னே,

அடிதொழு துவகைதுன்ட வழைத்தன னாழியன்ன
துடியுடைச் சேனைவெள்ளம் பள்ளியைச் சூழவேவி
வடிசிலை பிடித்துவாளும் வீக்கிவா யம்புபற்றி
யிடியுடை மேகமென்ன விரைத்தவண் காத்துநின்றான்.

என்னும் செய்யுள் ஒன்று காணப்படுகின்றது. அதுவும் ஆண்டுப் பொருத்த முடைத்தாதல் காண்க. 'இடியுடை மேகமென்ன வினையடி யெய்திநின் றான்' எனவும் பாடமுண்டு.

வனம்புகுபடலம்.

வெளிறு நீங்கிய பாலையை மெல்லெனப் போனார்
குளிறு வான்மதிக் குழவிதன் சூல்வயிற் றொளிப்பப்
பிளிறு மேகத்தைப் பிடியெனப் பெரும்பனைத் தடக்கைக்
களிறு நீட்டுமச் சித்திர கூடத்தைக் கண்டார்.

என்னும் ௬௭-ம் செய்யுளில், 'குளிறுவான்மதிக் குழவிதன் சூல்வயிற் றொளிப்ப' என்பது 'குளிறுவான்மதிக் குழவிதன் சூல்வயிற் றுதைப்ப' எனக் காணப்படுகின்றது. 'ஒளிப்ப' என்பது பிளிறுதற்கு ஏதுவன்மையின் 'உதைப்ப' என்பதே பொருத்தமுடைத்தாதல் காண்க.

சித்திரகூடப்படலம்.

மாலைவந் தகன்றபின் மருங்கி லாளொடும்
வேலைவந் துறைவிட மேய தாமெனக்
கோலைவந் தமிழ்சிலைத் தம்பி கோலிய
சாலைவந் தெய்தினன் றவத்தி னெய்தினன்.

என்னும் ௬௫-ம் செய்யுளில், 'வேலைவந் துறைவிட மேய தாமெனக், கோலைவந் துமிழ்சிலைத் தம்பி கோலிய, சாலைவந் தெய்தினன் றவத்தி னெய்தினன்' என்பது 'மேல்வனிருந்திடவிரும்பியேமனம், கோலிநற்குணத்தி னங்குரிசிலாங்கொரு, சாலையைவகுத்தமைசாற்றுவாமரோ' எனக்காணப் படுகின்றது. பின்னே சாலைசெய்தமையும், குடிபுக்கமையும் கூறப்படுதலின் பின்னையதே பொருத்தமுடைத்து.

பள்ளியடைப்படலம்.

பண்டி யங்கள் பரந்தன பல்லியங்
கொண்டி யம்பின கொண்டலிற் கோதையில்
வண்டி யம்பின வாளியின் வாவுறுஞ்
செண்டி யங்கு பரியுஞ் செறிந்தவே.

என்னும் கக-ம் செய்யுளில், 'பண்டியங்கள் பரந்தன' என்பது 'பண்டியெங்கும் பரந்தன' எனக்காணப்படுகின்றது. 'பண்டியங்கள்' என்பது பொருத்தமின்மையின் 'பண்டியெங்கும் பரந்தன' என்பதே பொருத்தமுடைத்து.

ஷை

வில்லின் வேதியர் வாள்செறி வித்தகர்
மல்லின் மல்லர் சுரிகையின் வல்லவர்
கொல்லும் வேல்குந்தங் கற்றுயர் கொற்றவர்
தொல்லை வாரணப் பாகருஞ் சுற்றினர்.

என்னும் கரு-ம் செய்யுளில் 'மல்லின்மல்லர்' என்பது 'மல்லின் வல்லர்' எனக்காணப்படுகின்றது. 'மல்லின்மல்லர்' என்பது பொருட்சிறப்பின்மையின் 'வல்லர்' என்பதே பொருத்தமுடைத்தாதல் காண்க.

ஷை

அன்ன தன்மை யகநகர் நோக்கினன்
பின்னை யப்பெரி யோர்தம் பெருந்தகை
மன்னன் வைகும் வளநகர் போலுமீ
தென்ன தன்மை யிளையவ னேயென்முன்.

என்னும் ருசு-ம் செய்யுளில், 'பின்னை யப்பெரி யோர்தம் பெருந்தகை—மன்னன்வைகும்வளநகர்போலுமீது' என்பது 'பின்னினைகபெரிதப் பெருந்தகை—மன்னரின்றியமாநகர்போலுமீது' னெக்காணப்படுகின்றது. 'மன்னன்வைகும் வளநகர்போலும்' என்பது பொருள்கொள்ளுமிடத்துச் சிறந்துகாட்டாமையின் பின்னையதே பொருத்தமுடைத்தாதல் காண்க. முன்தான் பார்த்துவந்த தன்மைகளாலே 'மன்னரின்றிய மாநகர்போலும்' எனஐயுற்றுக் கூறினன் என்க.

ஷை

கொடியவர் யாவருங் குலங்கள் வேரற
நொடிகுவன் யானதா றவல்வ தெங்ஙனங்
கடியவள் வயிற்றினிற் பிறந்த கள்வனேன்
முடிகுவ னருந்துயர் முடிய வென்றுமால்.

என்னும் கக-ம் செய்யுளில், 'முடிகுவன்' என்பது 'முடிகிலேன்' எனக்காணப்படுகின்றது. 'கொடியவர் யாவரையும் கொல்வேன். கொடியவளாகிய கைகேசியின் வயிற்றிற் பிறந்த கொடியகள்வனுகிய நான்மாத்திரம் முடிகின்றிலேன்' என்னுமிடத்துப் பொருட்சிறப்புண்மையின் 'முடிகிலன்' என்

பதே பொருத்தமுடைத்து. முடிகுவன் என்பதிற் பொருட்சிறப்பின்மை காண்க. 'அது நுவல்வதெங்ஙனம்' என்பதற்கும் பின்னையதே பொருத்தமுடைத்து. 'கொடியவர் யாவருங் குலங்கள் வேரற' என்பதும், 'கொடியவர் யாவரக் குலங்கள் வேரற' எனக்காணப்படுகின்றது. பின்னையதே பொருள் வலியுடைத்தாதல் காண்க.

௵

எஃகெறி செருமுகத் தேற்ற தெவ்வருக்
கொஃகின னுயிர்வளர்த் துண்ணு மாசையான்
அஃகலி லறநெறி யாக்கி யோன்பொருள்
வெஃகிய மன்னர்வீழ் நரகின் வீழ்கயான்.

என்னும் ௧௦௬-ம் செய்யுளில், 'அஃகலி லறநெறி யாக்கி யோன்பொருள்' என்பது 'அஃகலி லறநெறி யகற்றி யொண்பொருள்' எனக்காணப்படுகின்றது. முன்னையதினும் பின்னையதே பொருட்சிறப்புடைத்தாதல் காண்க.

அழிவரு மரசிய லெய்தி யாகுமென்
றிழிவரு சிறுதொழி லியற்றி யாண்டதின்
வழிவரு தருமத்தை மறந்து மற்றொரு
பழிவரு நெறிபடர் பதக னாகயான்.

என்னும் ௧௦௭-ம் செய்யுளில் 'அழிவரு மரசிய லெய்தி' என்பது 'அழிவரு மரசிய லகற்றி' எனக் காணப்படுகின்றது. 'எய்தி' என்பதிற் பொருட்சிறப்பின்மையின் 'அகற்றி' என்பதே சிறப்புடைத்து. அழிவற்ற அரசின் முறையை நீக்கி என்பது பொருள்.

(இன்னும் வரும்).

சி. கணேசையர்.

தனிச்செய்யுட்கோவை.

:ப:

[உகூஎ-ம் பக்கத் தொடர்ச்சி.]

திருநெல்வேலிக்குச் சமீபமான ஓமநல்லூர் அனந்தபத்மநாத பிள்ளை என்னும் ஓர் பிரபுவானவர் தம்மைக் குடியிறைப்பணத்திற் காகச் சிறைவைத்திருக்கும்போது வந்து ஓர் கவிஞரிக்கவியைக்கூறக் கேட்டு அவர்மனை முழுவதும் நெற்கொண்டு குவிக்கும்படி செய்தனர். இதையறிந்த அதிகாரிகள் வியந்து, இறையை நீக்கி விடுத்தனர்.

குலைவைக்குஞ் செந்நெல்வய னல்லூர்ச்சங் கரமூர்த்தி குமரா மன்னர்
தலைவைக்குங் கிள்ளாக்கை யனந்தபற்ப நாபாவென் றன்மை கேளாய்
விலைவைக்குங் கடையரிசி வாங்கியுண்ண முடியாதென் வீட்டி லிப்போ
துலைவைக்கச் சொல்லிவந்தே னெற்கொடுத்தா லரிசிகுத்தி யுண்ண லாமே.

இக்கவி அக்கவிஞர் பின்னர்க்கூறியது.

எந்தக்கா லமுமனந்த பற்பநா பன்சுகமா யிருக்கவேண்டும்
வந்தக்கா லவன்றனக்கே மகத்தான பெருஞ்செல்வம் வரவும்வேண்டும்
பந்தற்கால் போலுயர்ந்து பருத்திருக்கு மடையர்தமைப் பாடியொன்று
தந்தக்கா லென்னதரா திருந்தக்கா லென்னசொல்லுந் தமிழ்ச்சொல் வீரே.

இக்கவி, சிறுவிலைக்காலத்திற் றம்மைக்காத்த மன்றுளாடியபிள்ளையின்மீது ஓர் கவிஞர் கூறியது.

ஏகா தசியுஞ் சிவராத் திரியுமென் னில்லைவிட்டுப்
போகா திருக்கின்ற நாளினி லேயென் புதல்வர்வற்ற
லாகாமற் றங்கையென் பாகாமல் யானு மகத்தவளுஞ்
சாகாமற் காக்கவல் லான்மன்று ளாடுந் தயாநிதியே.

இவ்வெண்பா ஓர் கவிஞர் கூறியது; ஆண்டான் கவிராயர் கூறியதென்பர் சிலர்.

உக்ராணப் பையனுமோ வொன்றுதந்தா லொன்றுதரா
னக்ராபச் சேஷியுமோ வப்படித்தா—னிக்கறியி
னுப்பா புளியா வொருகறியு நீர்மோரு
மப்பாவி தாராலே யாம்.

இக்கவி ஆண்டான் கவிராயர் கூறியது.

வாயெரியக்கையெரியவயிறெரியச்சட்டிவைத்துவறுத்துக்கொட்டிக்
காயெரியக்கடினமுடனரைவயிற்றிற்கன்னமிட்டகடினக்காரி
தாயெரியமகளெரியச்சேஷியெனுமொட்டைமுண்டைதலைமேற்பற்றித்
தீயெரியக்கண்டக்காலெனதுடையவயிற்றெரிச்சறீருந்தானே.

இக்கவி வடகரையில் ஓர் புலவர் செங்கோட்டைக்கு மேற்குள்ள ஆரியன்காவில் ஐயனர் தெரிசனம்பண்ணும்போது கூறியது.

ஊராரைப் பின்சொல்லி யுற்றாரைப் பின்சொல்லி யொன்றெனினுந்
தாராரைப் பின்சொல்லித் தந்தாரைப் பின்சொல்லிச் சற்றுமுகம்
பாராரைப் பின்சொல்லிப் பார்த்தாரைப்பின் சொல்லிப் பாழ்த்தகும்பிக்
காராரைப் பின்சொல்லு வேன்றிரு வாரியங் காவையனே.

இக்கவி ஓர் கவிஞர் விநோதமாகக் கூறியது.

நறைபட்ட தொங்க லழகப்ப பூபதி நாமஞ்சொல்லி
முறையிட்ட போதவன் பாரி யெறிந்த முறத்திருகா
தறுபட்டு வீணை யுடைபட்டு நானு மவிடம்விட்டுப்
பறிபட்டு வந்ததென் பாரிமுன் ஞட்செய்த பாக்கியமே.

ஊற்றுமலை ஜமீந்தார் மருதப்பத் தேவரவர்களைக் காணவந்த எட்டையபுர முத்துப்புலவரவர்கள் கூறிய கவிகள். இதிற் கலங்கலென்பது ஒருரெனவறிக.

இலைச்சாருமொதுக்கிடமென்றெண்ணியெண்ணிமிகவுமனமேங்கிவாடித்
தொலைசசாலுந் தொலையாத கலிக்கோடை வெயிலினின்றுசுழல்வதென்னே
கலைச்சாரந் தெரிபுலவீர் கலங்கலரைக் காதவழி கடந்தா லூற்று
மலைச்சார லுண்டதிலே மருதநிழ லுண்டுவிடாய் மாற்றுந் தானே.

வேளுக்கு வாம்பரியும் வில்லுக்கு நீலமும்போர்
வாளுக்கு நேர்விழியார் வாய்க்குமுமு—நாளு
மருதப் பனையே வளர்த்துவிட்ட தாலே
மருதப் பனைவிரும்பு மான்.

இவ்வெண்பாவில் மூன்றமடியில், மருது - மருதமரம். அப்பு - நீர். அனை - தாய் எனப்பொருள்கொள்க.

வேளாளராகிய பலபட்டடைச் சொக்கநாதக்கவிராயர் தெருவழியே சென்றபோது, கம்மாளராகிய சுப்பிரதீபக்கவிராயர் காலிற் பாதரக்ஷைபிட்டு முன்செல்லுதலைக் கண்டு கூறியது.

சாணாருங் கள்ளுக் குடியார் பணிக்கர்சா ராயமுண்ணார்
கோணாது பாத குறடுசெய் தாற்பெறுங் கூலியல்லால்
நாணாமல் வீதி தொறும்போட்டுச் செல்வது ஞாயமில்லை
வீணா வடாசுப்ர தீபா வஞ்ஞான விளக்கொளியே.

இக்கவிராயரூர் சிவகங்கை ஜமீனைச்சார்ந்த கடம்பங்குடி என்பர் இவர் அரையிலெப்பொழும் பட்டடுத்திருந்தமையால் 'பட்டடை' என்னும் அடை இவர்க்கு வழங்கியதாகத் தெரிகின்றது.

அதுகேட்ட சுப்பிரதீபக்கவிராயர் பலபட்டடைக் கவிராயரை நோக்கிப் பாடியது.

தேவைமுத்து ராமலிங்கச் சேதுபதி மீதுவிஞ்சைக்
கோவையென்ற பில்லிவைத்துக் கொன்றாயே—பாவிநீ
யிட்டகவி தான்வசையா யேன்சொன்னாய் சேர்ந்தபல
பட்டடைச் சொக்காமுழுவம் பா.

இக்கவியால், 'விஞ்சைக்கோவை' பலபட்டடைச் சொக்கநாதக்கவிராயர் பாடியதென்பதும், அது முத்துராமலிங்கசேதுபதியைப் பற்றியதென்பதும் நன்குவிளங்கும். சுப்ரதீபக்கவிராயர் விறலிவிடுதூது பாடினவர்.

சுப்பிரதீபக்கவிராயர் இறந்தபோது பலபட்டடைச் சொக்கநாதக்கவிராயர் பாடியது.

செய்ய கொழுநைச் சிவசுப் பிரதிபா
வெய்ய கொழுந்தழலில் வேவதே—ஐயையோ
"நின்மலனார் வெண்ணீற்று நெற்றிக்கண் காணாத
மன்மதன் காண்"என்று சொன்ன வாய்.

இப்பாட்டிற்கண்ட கொழுநை என்பது சிவகங்கை ஜமீனைச்சார்ந்த பழையனூரையடுத்ததென்பர். "நின்மலனார்" என்று தொடங்கிய தொடர், விறலிவிடுதூதின் கணுள்ளது.

(இன்னும் வரும்.)

இராமசாமிக்கவிராயர்,
சேற்றூர்ச் சம்ஸ்தான வித்வான்.

புத்தகக் குறிப்பு.

நல்லாசிரியன் (*Trained Teacher*) சென்ற ஜூன்மாதமுதல் சென்னையினின்று வெளிவரும் இம்மாதாந்தரபத்திரத்தின் முதற் பகுதி கிடைக்கப்பெற்று மகிழ்ந்தோம். இப்பத்திரிகை எழுந்ததன் நோக்கம், தமிழ்நாட்டுள்ள பாலாசிரியர்க்கும் பிறர்க்கும் போதனு முறைகளின் விசேடத்தைத் தெளிவுறுத்தி, கல்வியபிவிர்த்திபெற முயல்வதேயாகும். நம் தமிழ்நாட்டிற் சிற்சில பத்திரிகைகள் ஒவ்வொரு பெருவிஷயத்திற்கென்றே தொடங்கப்பட்டிருத்தல்போல, இதுவும் "மாணவரின் கல்வியபிவிர்த்தி" என்னும் இன்றியமையாத பெருநோக்கத்தைக்கொண்டு வெளிவருதலின், தமிழ்மக்களெல்லாம் அபிமானித்தல்வேண்டற்பாலதாம். இதன் முதற் பகுதியில் "சிறுபிள்ளைகளுக்கு உயிரெழுத்துக்கள் போதிக்குமுறை" என்னுந் தலைப்பிலுள்ள விஷயம் படங்களுடன் சிறப்பாக எழுதப்பட்டிருக்கின்றது. இன்னும், விடுதலைச்சீட்டு, பெற்றோர் விண்ணப்பம், 'ப்ரொபல்' என்னும் பாலபோதகர் சரித்திரம், ஜர்மனியிலும், சென்னையிலும் இங்கிலீஷ்பாஷை போதிக்கப்படும்முறை முதலிய விஷயங்களும் படிப்போர்க்குப் பயனளிக்கத்தக்கன. நமது அரசாங்கத்தார் விவசாயம், நாட்டுப்படிப்பு இவற்றின் அபிவிர்த்தியிற் கவலைசெலுத்திவரும் இக்காலத்தே, இத்தகைய பத்திரமொன்றுந் துணைபுரிய முன்வந்திருத்தலின், கவர்ன்மெண்டார், இதன்நிலைபேற்றினும் கருணைவைத்தல் நன்மைபயக்கக்கூடியதென்னும் எண்ணமுடையோம்.

ஏகாதசிப்புராணம்:— இஃது யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை ஸ்ரீமத்-நா. சிவசுப்பிரமணியசிவாசாரியரவர்களால் இயற்றப்பெற்றது. இஃது ஏகாதசிவிரதத்தைப்பற்றிய பலகதைகளை எடுத்துரைக்கும் ஓர் புராணமாம். இஃது ஐந்து சருக்கங்களையுடைத்தாய், ௩௦௨-செய்யுள்களான் அமைந்தது. யாம், ஆண்டாண்டுப் பார்த்தவிடங்களிற் சொற்பொருணயங்கள் மலிந்திருத்தல் காண்டலால், இதுமுழுதும் நன்கு அமைக்கப்பட்டதொன்றே என்று மகிழ்கின்றேம். இந்நூற்பிரதியொன்றை அன்போடும் எமக்கனுப்பிய இதன்பிரகடனாசிரியர் ஸ்ரீமத்-வி. அம்பலவாணன் அவர்கட்கு எம் முழுவந்தனமுங் கூறுகின்றேம்.

பத்திராசிரியர்.

கூரு. மொழியினும் பொருளினு முரணுதன் முரணே.

இது *முறையானே முரண் கூறுகின்றது.

இ-ள். †சொல்லானும் பொருளானும் பகைத்தல் முரண்டொடை. எ-று.

அவை ஐவகைய : சொல்லும் சொல்லும் முரணுதலும், பொருளும் பொருளும் முரணுதலும், சொல்லும் பொருளும் சொல்லொடு முரணுதலும், சொல்லும் பொருளும் பொருளொடு முரணுதலும், சொல்லும் பொருளும் சொல்லொடும் பொருளொடும் முரணுதலும் என. உதாரணம் :— 'செவ்வரை நிவந்த சேணிடை யருவி, வெண்மறி கறித்த முல்லை' இதுகட்டளை ஈரடியும் சொல்லும் சொல்லும் முரணிற்று. 'செங்கொடைப் பகழி வாங்கிச் சினஞ்சிறந்து, கருங்கைக் கானவன் களிற்றுநிறத் தழுத்தலின்' இஃ திருவகை யடியும் அங்ஙனம் முரணிற்று. 'நெருப்பி னன்ன சூட்டுச் சேவ, னீர்சேர் கானத்து நெடுமெணற் கிளைப்ப' இது கட்டளையீரடியும் பொருளும் பொருளும் முரணிற்று. 'நீரோ ரன்ன சாயற், றீயோ ரன்ன வென் னுரனவித் தன்றே' இஃதிருவகை யடியும் அங்ஙனம் முரணிற்று. 'தண்சே ருஞய தயங்கிணர்க் கடத்து, வெம்பொருட் பிரிவை வேண்டிச் சென்றூர்' இது கட்டளையீரடியுஞ் சொல்லும் பொருளுஞ் சொல்லொடு முரணிற்று. 'சிறுநல் கூர்ந்த செல்சுடர் மாலை, நெடுநீர்ப் பொய்கைக் குறுநர் தந்த' இஃதிருவகை யடியும் அங்ஙனம் முரணிற்று : சிறுநல் கூர்ந்ததுக்குச் சிறிய பொருளின்று. 'செந்தீக் கானஞ் சென்ற மாதர், நீரின் மையி னெஞ்சழிந்து வருந்த' இது கட்டளையீரடியுஞ் சொல்லும் பொருளும் பொருளொடு முரணிற்று. செந்தீக்கு நிறமும் சொல்லுமு

* 'மோனை யெதுகை முரணே யியைபென' என மேலோதிய முறை யானே என்றவாறு.

† 'அடிதொறும் வந்த சொல்லினுனுதல் பொருளினுனுதல் மாறுபடத் தொடுப்பது அடிமுரண்டொடையாம் எ-று. அவற்றுட் பொருள் முரணுவது சொல்லினுனன்றிப் பொருளினுன்மாறுபடுவது. உதாரணம்;— 'இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை, பொன்னி னன்ன நுண்டாதுறைக்கும்'' என்பது இரும்பும் பொன்னும் மாறுபாடுடைத்தாதலிற் பொருண்முரணுயிற்று. 'சிறுகுடிப் பரதவர் மடமகள், பெருமதர் மழைக் கண்ணு முடையவா லணங்கே' என்றவழிக் குடியும் குணமும் மாறுகாது பெருமையென்னுஞ் சொல்லே மாறுகோடலிற் சொன்முரணுயிற்று' என்பது உரையாசிரியநா.

ண்டு, நீர்க்குச் சொல்லின்று, 'செந்தீ யன்ன சினத்த யானை, நீர்நசை பெருஅக் கற்பிற் றேர்நசைஇ' இஃதிருவகை யடியும் அங்ஙனம் முரணிற்று. 'செங்குரற் பைந்தினை விளைபுன மேவிப், பைங்கிளி கடியும் பான்மொழி மகளிர்' இது கட்டளையீரடியும் சொல்லும் பொருளும் சொல்லொடும் பொருளொடும் முரணிற்று. 'செவ்வேற் சேஎய் திருமண மறுத்த, கருவிற் கானவன் வரில்' இது சீர்வகையடி அங்ஙனம் முரணிற்று. 'பன்மை சின்மை பற்று விடுதலென், றென்பன' இது கட்டளை இணைமுரண். 'நிலவு மிருளும் போல்வ நீர்வரை' இது சீர்வகை. 'கார்பெயல் பெய்தபிற் செங்குளக் கோட்டுக்கீழ்' 'எழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின்' (நாலடி-சுயமை) இவை கட்டளைப் பொழிப்புமுரண். 'வருது மெனமொழிந்தார் வாரார்கொல் வானங், கருவிருந்தா லிக்கும் பொழுது' (கார்நாற்பது, க). இது சீர்வகை. 'பின்னுவ தென்று பிடித்திரா முன்னே' (நாலடி-செல்வநிலையாமை) 'இன்சொற் குழியு ளினிதெழூஉம் வன்சொல்' (நான்மணி, கரு) இவை கட்டளை ஒரூஉமுரண். 'வரினு நோய் மருந்தல்லர் வாராது.' இது சீர்வகை. 'நிறுத்தலி னளவி னெண்ணி னென்ரு' 'தேரும் யானையுங் குதிரையும் பிறவும்' இவை கட்டளைக் கூழைமுரண். 'கண்ணுந் தோளுந் தண்ணறுங் கதுப்பும்' (நற்றிணை-அ) இது கட்டளைக் கீழ்க்கதுவாய் முரண். 'அறுத்தலிற் குறைத்தலிற் பிரித்தலின்' (தொல், சொல், வேற்றுமையியல், கக) 'நிற்ற லிருத்தல் கிடத்த லியங்குதல்' இவை கட்டளை முற்றுமுரண். 'நீரு நிலனுந் தீயும் வளியு, மாக விசும்போ டைந்து மாகும்' என்பது சீர்வகை. இவற்றை ஐவகையாக முற்கூறியாங்கு விரிப்பிற் பெருகுமாகலின் அவற்றுளேற்றன கொள்க. (கரு)

கசு. * இறுவா யொன்ற லியைபின் யாப்பே.

இது முறையே இயைபு கூறுகின்றது.

இ-ள். இரண்டடியினும் பொருளியைபின்றி எழுத்தாதல் சொல்லாதல் ஈற்றிலே பொருந்தத் தொடுப்பது இயைபுத்தொடைக்கிலக்கணம் எ-று.

---

* 'அடிதோறும் ஈற்றெழுத் தொத்துவரின் அஃது இயைபுத்தொடையென்று சொல்லுவர் எ-று. உ-ம். 'இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே, நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே, யாடமைத் தோளிக் கூட்டு மணங்கே, யரிமதர் மழைக்கண்ணு மணங்கே, திருநுதற் பொறித்த திலதமு மணங்கே' என வரும். அசை சீரென வரையாது கூறினமையான் ஓரெழுத்து இறுதிக்கண் ஒப்பினும் இயைபாமெனக்கொள்க' என்பதுஉரையாசிரியநுரை:

'அவரோ வாரார் கார்வந் தன்றே, கொடிக்கு முல்லையுங் கடிக்கரும் பின்றே' இது கட்டளைஎழுத்தடியியையபு. 'பரவை மாக்கடற் றொகுதிரை வரவும், பண்டைச் செய்தியின் றிவன் வரவும்' இது கட்டளைச்சொல்லடியியையபு; 'சீர்வகையடிக்கு வந்துழிக்காண்க. 'ஓங்கிய சுரத்தை நீங்கி யேகி' இஃதிணையியையபு. 'விரிந்தானு மலராயின் விளித்தாலுங் குயிலாயின்' இது பொழிப்பியையபு. 'கரவெழூஉங் கண்ணில் குழியு ளிரவெழூஉம்' (நான்மணி கச.) இஃது ஒரூஉவியையபு. 'பொருசமத் தெழுவனர் பொருவினர் விளைவனர்' இது கூழையியையபு. 'நீருந் தீயு மாகிய விறைவனும்' இது மேற்கதுவாயியையபு. 'பொருவனர் விடுகணை தகைவன ரெதிர்வனர்' இது கீழ்க்கதுவாயியையபு. 'இயற்கையி னுடைமையின் முறைமையிற் கிழமையில்' (தொல், சொல், வேற்றுமையியல், கக) இது முற்றியையபு. 'காம்பிவர் தோளுங் கருமதர் மழைக்கணும்' இது சீர்வகைப் பொழிப்பு. 'பகலுங் கங்குலு மகலா தொழுகும்' இது சீர்வகை மேற்கதுவாய். ஏனையவற்றிற்குச் சீர்வகை வந்துழிக்காண்க. இவற்றிற்கு எழுத்தியையபினும் சொல்லியையபினும் ஏற்றன கொள்க. வெவ்வேறாகக் கோடல் அரிதென்றுணர்க. (கசு)

கஎ. அளபெழி னவையே யளபெடைத் தொடையே.

இது *முறையே அளபெடைத் தொடை கூறுகின்றது.

இ-ள். அடி முதற்கண்ணே எழுத்துக்கள் அளபெழுந்தனவாயின் அவை அளபெடைத்தொடை யெனப்படும். எ-று.

அவ்வென்றார், உயிரளபெடையும் ஒற்றளபெடையுங் கோடற்கு. உ-ம். 'உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்-செறாஅஅய் வாழியென் னெஞ்சு' (திருக்குறள், கஉ00) இது கட்டளை உயிரளபெடை. 'பாஅ லஞ்செவிப் பணைத்தாண் மாநிரை, மாஅல் யானையொடு மறவர் மயங்க' இதுவும் இருவகையடியும் வந்த உயிரளபெடை. 'எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர், வெஃஃகு வார்க்கில்லை வீடு' இது கட்டளையொற்றளபெடை. 'கஃஃ றென்னுங் கல்லதர்க் கானிடைச், சுஃஃ றென்னுந் தண்டோட்டுப் பெண்ணை' இதுசீர்வகையொற்றளபெடை. இவ்வொற்றளபெடைகட்டளைச்குக் கொள்ளாம்; ஒழிந்தனவற்றிற்கும் வந்துழிக்காண்க. இவற்றிற்கு இணை முதலியன கொள்ளாம், சிறப்பின்மையின். (கஎ)

---

* 'மோனை யெதுகை முரணே யியைபென' என எண்ணியதன் பின்னே 'அளபெடை தலைப்பெய வைந்து மாகும்' என ஓதிய முறை.

கூஅ * ஒருசீ ரிடையிட் டெதுகை யாயிற்
பொழிப்பென மொழிதல் புலவ ராறே.

இது நிறுத்த முறையானே பொழிப்பிற்கெல்லாம் இலக்கணங் கூறுகின்றது.

இ - ள். ஒரு சீர்..............மொழிதல் எ-து பொழிப்பு ஒரு சீரை நடுவே யிட்டுவைத்து எதுகையாயிற், பொழிப்பெதுகை யென்று பெயர் கூறுக; அன்றிப் பொழிப்பு ஒருசீர் இடையிட்டு மோனைமுரணியைபாய் வந்தனவாயிற் பொழிப்புமோனை, பொழிப்புமுரண், பொழிப்பியைபு எனப் பெயர் கூறுக; புலவராறே எ-து இங்ஙனம் பெயர் கூறுதல் ஆசிரியர் கொண்ட நெறி. எ-று.

இங்ஙனம் எதுகையைப் புலப்பட வைத்து ஏனைய அருத்தாபத்தியாற் கூறியது, எல்லாவற்றினும் எதுகை சிறந்து தோன்றுதல் கருதி. இவற்றிற்கு உதாரணம் முன்னர்க் காட்டினாம். (கூஅ)

கூகூ. † இருசீ ரிடையிடி னொரூஉவென மொழிப.

இது நிறுத்தமுறையானே ஒரூஉவிற்செல்லாம் இலக்கணங்கூறுகின்றது.


---

* "ஒருசீரிடையிட் டெதுகையாயிற் பொழிப்புத் தொடையாம் எ-று. எதுகை என ஓதினாராயினும் 'வந்தது கொண்டு வாராதது முடித்தல்' என்பதனான், மோனை இயைபு முரண் அளபெடை என்பனவும் பொழிப்புத் தொடையாம் எ-று. உ-ம். 'அரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி இது பொழிப்புமோனை. "பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி" இது பொழிப்பெதுகை. "சுருங்கிய நுசுப்பிற் பெருவடந் தாங்கி" என்பது பொழிப்பு முரண். "கடலே, கானலங் கழியே கைதையந் துறையே" என்பது பொழிப்பியைபு. "பூஉங் குவளைப் போஒ தருந்தி' என்பது பொழிப்பளபெடை" என்பது உரையாசிரியநரை.

† "இரண்டு சீரிடையிட்டு மோனைமுதலாயின வரத்தொடுப்பது ஒரூஉத் தொடையாம் எ-று. உ-ம். 'அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி' இஃது ஒரூஉமோனை. 'மின்னிவ ரொளிவடந் தாங்கி மன்னிய' இஃது ஒரூஉவெதுகை. 'குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து' இஃது ஒரூஉமுரண். 'நிழலே யினியத னயலது கடனே' இஃது ஒரூஉவியைபு. 'காஅய்ச் செந் நெற் கறித்துப் போஒய்' எ-து ஒரூஉவளபெடை" என்பது உரையாசிரியநரை.

இப்பூமியானது மலைமேட்டுப் பாகங்களிலுயர்ந்தும், கடலோரங்களிற் ருழ்ந்துமிருப்பது எளிதிற் காணத்தக்கது. ஜலம் தங்குமிடம் பள்ளமாதலால், இப்பூமியில் ஜலம் விஸ்தரிக்கும் கடலோரம் மற்றப்பாகங்களைவிடப் பள்ளமாகத் தானிருக்கவேண்டும். ஆதலால், பக்கத்திற் குறித்த சித்திரத் தோற்றத்தின்படி பள்ளங்களில் காற்றின்கனம் அதிகமாயும் மேடுகளில் குறைவாயுமிருக்கக் காண்கிரும். ஆதலால் இடத்திற்கொத்தபடி காற்றின்பாரம் பேதிக்கலாகுமென்று புலப்படுகிறது. கடலோரத்தில் காற்றின்பாரம் அதிகரித்திருப்பதால் அவ்விடத்தில் 30-அங்குலமாகக் கண்டிருக்கின்றனர். பூமி உயரஉயரப் பாரம் 30-அங்குலத்திற்குக் குறைந்தேவரும். இவ்விஷயம் காற்றைத்தனியாக எடுத்துக்கூறும் பாடத்தில் விஸ்தரித்துச் சொல்லப்படும்.

காற்றின் உயரம்.



பொடிகளாலாகிய பொருள்களின்மேல் பாரம் தாக்கினுல், பொடிகள் நெருங்குமியல்புடையன. பாரம் குறைந்தால் அகலுமியல்புடையன. ஆதலால் எல்லாப்பொருள்களையும் காற்றுப்பாரம் தாக்குவதால், பாரத்திற்கேற்றபடி பொருள்களின்பொடிகள் நெருங்கவும் விலகவுங்கூடும். ஆதலால் பொருள்கள் தன்மையில் மாறுங்கால் உஷ்ணம் முக்கியமாயிருப்பதுமன்றிக் காற்றின் கனமும் முக்கியமாயிருப்பதையுங்காண்கிரும். அவ்விதம் மாறுவதற்கு உஷ்ணமும், காற்றின் பாரமுமே முதற்காரணங்களாம்.


மூன்ருப்பாடம்.

நிலப்பாகம்.

(முதற்பிரிவு—பூமிமட்டம்.)

பூமியானது பந்துபோல் உருண்டையானதென முன்னமே சொல்லப்பட்டது. ஆனுல் பந்து கறடுமுருடின்றிச் சுற்றியும் வழவழப்பாயுள்ளது.


உருண்டைவடிவம்பெற்ற இப்பூமி ஓரிடத்தில் உயர்ந்தும் ஓரிடத்தில் தாழ்ந்துமிருப்பதால், பந்தைச்சுற்றிக் களிமண்ணை மேடும்பள்ளமுமாக அப்பினால் எவ்விதந்தோன்றுமோ அவ்விதம் நமதறிவுக்குப் புலப்படத்தக்கது. பூமியின் சுயவடிவம் ஏறக்குறைய பக்கத்திற்காட்டிய சித்திரம்போன்றதாகும். பூமியின் உருவம் மனிதருக்குத் தோன்றக்கூடியதன்று, ஊகிக்கக்கூடியதுதான். இதைப்பற்றிப் பின்வரும் பாடங்களொன்றிற் சொல்லப்படும். மிகப்பெரிய இக்கோளத்தின் மேல், மனிதன் மிகக் குறுகியவனாகையால் மனிதனுக்குப் பார்வையும் குறுகியுள்ளது. ஆதலால் ஓரிடமிருந்து பார்க்குங்கால் சிலவிடங்களில் பூமிமட்டம் அஃதாவது பூமியின் உயர்வுதாழ்வு ஒரேதன்மைத்தாய் மனிதனுக்குத்



தோன்றுகிறது. வெகுதூரத்திலிருந்து ஓர்மலையின் சார்பைப்பார்க்குங்கால் கரடுமுரடின்றியிருப்பதுபோற் புலப்படுகிறது. அருகிற்சென்றுபார்த்தால் திரண்டபாறைகளுங் கற்களும் பள்ளங்களுமிருப்பதாய்த் தெரியவருகிறது. அவ்விதமே மனிதருக்கு வெகுதூரத்திற்கு வெகுதூரம் பூமிமட்டம் ஒரே மாதிரி தோன்றினாலும் உண்மையில் அப்படியன்று. பக்கத்திற்குறித்த கோடுகளைப் பார்க்க. மேற்கோடு சாய்வுள்ளதாயிருந்தாலும் நுனியிலிருந்து நேராகப்பார்க்குங்கால் சமமட்டமுடையதுபோலத் தோன்றக்கூடும். ஆனால் உண்மையில் அப்படியல்ல. கீழ்க்கோட்டு நுனியிலிருந்து நேராகப் பார்த்தால் சமமட்டம் தோன்றக்கூடும். அவ்வகைத்தான தோற்றம் உண்மைதான். மேற்கோடு வெறுங்கையாலெழுதப்பட்டது. கீழ்க்கோடோ நூல்கழியைக்கொண்டிழுத்தது. இவ்விதம் சாதாரணமாகவுள்ள தோற்றங்களிற் பிழையுண்டாயின், வெகுமைல் தூரம் பரவியிருக்கும்பூமியின் மட்டத்தைச் சரிவர அறிவது நமது வெற்றுப்பார்வைக்கு ஒவ்வாது. அதன்பொருட்டுத் தேர்ந்தறிந்தவர்கள் பூமியின் மட்டத்தைக்கூடியமட்டும் பிழையின்றித்தெளிய ஓர்கருவியைக்கண்டுபிடித்தனர். அதன்பெயர் லேவல் கருவி (Levelling Instrument). அஃதாவது பூமிமட்டத்தைத் தெளிவாக விளக்கக்கூடிய கருவி. இக்கருவியை உபயோகிக்கும் வழியை அடியில் வருமாறு காண்போம்.

பூமிமட்டத்தைத் தேர்ந்தறிய உதவுங் கருவி அல்லது லேவல் கருவி.


கட்டிடங்களுக்காகச் சுவரெழுப்பும்போது அதன்மேலிடம் கூடியமட்டும் சமமட்டமாயிருக்கப் பார்த்துவருகிறோம். இல்லாவிடில் ஒருபக்கம் தாழ்ந்தும் ஒருபக்கமுயர்ந்துமிருக்கும். சேற்றை அல்லது சுண்ணாம்பைத் தொழிலாளிகள் சற்று எழுப்பிவிட்ட சுவர்மேற் கொட்டிப் பரப்பியபின், மூலைக்குமூலை ஆணிகளையடித்து நூலை நேராகக்கட்டியும், செங்கற்களைச் சுண்ணாம்புபரவிய இடத்தில் அமிழ்த்திச் செங்கற்கள் சமமட்டத்திருந்துபார்க்க அவைகளின்மேல் திரிகோணவடிவமான பக்கத்திற்காட்டிய சித்திரம்போன்ற மட்டப்பலகையை நிறுத்தி, மட்டப்பலகையின் மேலுச்சியிலிருந்து தொங்கவிட்ட ஈயக்குண்டு மட்டப்பலகையின் குறுக்காயோடும் பலகைக்கு மத்தியில் மேல்கீழாய் இழுக்கப்பட்ட நேர்கோட்டின்மேற்பட்டுச் சரியாகத் தொங்குகிறதாவென்றுபார்த்தும் வருவதுவழக்கம். மூலைக்குமூலை கட்டிய நூலானது பூமியின் சமமட்டத்திற்கு நேராக இருக்கவேண்டும்.



இல்லாவிடில் சுவரின் உயரம் ஏற்றத்தாழ்வடையும். மட்டப்பலகையின் இரண்டுகால்களும் சமமட்டத்திலிருந்தாற்றான் தொங்கவிட்ட ஈயக்குண்டு நடுவில் நேராகநின்று அதன்நூலை நடுப்பலகையின் நடுக்கோட்டின்மேற் பொருந்தவைக்கும். இவ்விதம் நூலுக்குங் கோட்டிற்கும் பொருத்தமில்லாமல் ஒன்று மற்றொன்றைவிட்டு விலகினால், இரண்டுகால்களும் ஏற்றத்தாழ்வடைந்திருப்பதால், சுண்ணாம்பின்மேற் பதித்த செங்கற்கள் சமமட்டத்திலில்லையென்று தடையின்றிச் சொல்லலாம்.


சுவரின் பக்கங்களில் செங்கல் முதலியவை முன்னுக்குவாராமல் மேல்கீழாக ஒரே மட்டத்திற்றங்க ஓர் நீண்ட-உத்தேசம் 3-அங்குல அகலமும் 1-அங்குல கனமுமுள்ள-பலகையின் கனமுடையதொரு பக்கத்தால் தட்டுவதையும் பார்க்கிறோம்.

ஆனால், மேற்சொல்லிய மட்டப்பலகைகள் கட்டிட முதலியவற்றில் அதிக தூரமில்லாமல் அருகேயுள்ள இடங்களில் மட்டம் சமமாயிருக்கும் பொருட்டு உபயோகிக்கக்கூடியவை. வண்டிகளோடத்தக்க பாதைகளைச் செவ்வைபெறச் செய்யுங்கால், பாறையையுடைத்துக் குவிக்கும் கருங்கற்களைப் பாதைகளின்பக்கம் அவ்வவ்விடத்து, மேலிடமும் பக்கங்களும் நேர்




மட்டமும் சார்வுமட்டமுமாகப் பக்கத்திற்குறித்தபடி மொத்த அளவின்பொருட்டுக் குத்தகைக்காரர்கள் சேர்த்துவருவதுண்டு. இவ்வகைத்தாய்ச் சமமட்டமுண்டாக்குவது முன்காட்டியதிரிகோண மட்டப்பலகைதான். இப்பலகையும் இதுபோன்ற மற்றெந்தப்பலகையும், வெகுதூரம் பூமிமட்டத்தைத் தேர்ந்தறிந்து, நீர்க்குழாய் வாய்க்கால் முதலியவைகளுக்காக எற்படக்கூடிய பருத்தவேலைகளில் சுலபமாய் உபயோகத்திற்கு வரக்கூடியனவல்ல. ஆதலால் இதற்காகப் பெரியதோர் பூமிமட்டமறியக்கூடிய கருவியை உண்டாக்கியிருக்கின்றனர். அதன் விவரத்தை அடியில்வருமாறு காண்போம்.

ஒருமனிதன் நேராகத் தரையின்மேல் நின்றால் அவனது தெளிவான எதிர்நோக்குப்பார்வை சுமார் 1½-பர்லாங்கு செல்லக்கூடியது. அதன்மேற்பட்டு நிதானத்தாற் சொல்லக்கூடியது. பூமிமட்டம் ஒரே தன்மைத்தாய் எல்லாவிடத்திலுமில்லாமல் பக்கத்திற்காட்டிய சித்திரப்படி, மேடுபள்ளமாயுள்ளது. சித்திரத்தில் அ என்பது ஓரிடம்: ஆ என்பது மற்றோரிடம். அவற்றின் நடுவிடத்தின் ஏற்றத்தாழ்வைக் கண்டறியும் வழி என்னவெனில்,




அ என்னுமிடத்தில் ஒருவன் நேராகநின்று ஆ-வின்வழி நேராகநோக்கினால் அவனது பார்வை, சித்திரத்திற்காட்டியபடி நேராகவிழும். அவ்விதம் விழப்பட்ட பார்வைக்கோட்டிலிருந்து மேடுபள்ளங்களிருக்குமிடத்தில் பூமிக்கு இழுக்கப்பட்ட நேர்கோடுகள் அளவில் வித்தியாசப்படுவதை எளிதாகக் காணலாம். சித்திரத்தில் 1-முதல் 8- ஈறாகவுள்ள கீழ்நோக்கும் நேர்கோடுகளின் வித்தியாசத்தைக் கண்டுகொள்க. மேடாகவிருக்குமிடங்களில் நேர்கோடு சிறிதாயும், பள்ளமாயிருக்குமிடங்களில் பெரிதாயுமிருக்கக்காண்கிறோம். இவ்விதக்கோடுகள் சமமாயிருந்தால், பூமியின் மட்டம் அவ்விடங்களில் சமமென்று எளிதில் அறியக்கூடும். மேடும் பள்ளமுமாயிருக்கும் பூமியை ஒரேமட்டமுள்ளதாக்கவேண்டுமானால், மேடுகளைவெட்டிப் பள்ளங்களை மண்ணால் மூடவேண்டும். இவ்விதம் அளவுடன் வெட்டவும் அளவுடன்

பள்ளங்களை மூடவும்செய்ய மேல்கீழாக ஓடும் நேர்கோடுகள் அளவுபெற்றிருக்கவேண்டும். ஆகையாற்றான் பூமிமட்ட அளவெடுப்பவர்கள் யந்திரத்துடன் ஓர்நீண்ட எண்களைக்கொண்டபலகையை உடனெடுத்துப்போவார்கள்: அப்பலகையில் 1-முதல் 14-ஈறாகக் கிழிருந்து மேல் நுனிவரையில்எண்கள் குறிக்கப்பட்டிருக்கும். பக்கத்திற்காட்டிய சித்திரத்தில் க-விலிருந்து ம-வரைமேற்கூறிய 14 இலக்கங்களுமடங்கும். ஒவ்வோரிலக்கமும் ஒவ்வோர்அடி அளவைக்காட்டும். ஆகையால் க-விலிருந்து ம-வரையில் 14அடிகளாம். 14-அடிக்கு மேற்படவேண்டுமாயின் பலகைக்கு மேல்நுனிப்புறமிருந்து இழுத்தால் ம-வ-வைப்போன்று மற்றோர்பலகை எண்களைக்கொண்டு வெளியேவரும். அதில் 15-முதல் மேலுள்ள இலக்கங்களுள்ளன. அதிலும் ஒவ்வோரிலக்கமும் ஒவ்வோரடி அளவைக்குறிக்கும். ஒவ்வோர் அடியையும் பத்துச்சமபிரிவுகளாகப்பிரித்து, ஒவ்வொருபிரிவையும் 10-சமச்சிறுபிரிவுகளாகவும் பிரித்திருக்கிறார்கள். ஆதலால், பூமிமட்டத்தை விளக்கக்கூடிய இவ்வளவு எண்கள் கருவியில் உள்ளன. அவ்வெண்கள் அடிப்புறமாரம்பித்துத் தலைப்புறத்தில் முடிகின்றன. இக்கருவியை இங்கிலீஷில் ஸ்டாவ்(Staff) என்றுகூறுவர். அதன்பொருள் கொம்பு அல்லது கழியென்றாகும். ஆதலால் அஃதோர் அளவுகோல்.




பூமிமட்டத்தின் வித்தியாசத்தைக் காணும் வழியை முன்னமேயே கண்டோம். முந்திய சித்திரத்தில் ஒரு மனிதனுடைய நேர் நோக்கத்திற்குக் கீழே பூமிமட்டம் வரையிலிழுக்கப்பட்ட நேர்கோடுகள், பூமிமட்டத்தின் வித்தியாசத்தைக் காண்பிக்கக்கூடியவையாக விளங்கின. அந்நேர்கோடுகளிடத்தில் இதுவரையிற் சொல்லிவந்த “ஸ்டாவ்” என்னுமளவுகோலை வைத்துவந்தால், பூமிமட்டத்தைச் சரிவரப்பரிசோதித்து வரலாம். பக்கத்திற்காணப்படுஞ் சித்திரத்தில், கண்ணோக்கத்திற்கடியில் சமமட்டம்வரையும் அளவுகோல் 2-எண்ணைக் கொண்டிருக்கிறது. மேட்டில் 1-எண்ணையும், பள்ளத்தில் 3-எண்ணையுங் கொண்டிருப்பதால், மேட்டைவிடச் சமமட்டம் ஓர்



எண்ணளவு தாழ்வாயும், பள்ளம் 2-எண் அளவு தாழ்வாயுமிருப்பதாய்ச் சந்தேகமின்றியறியலாம். ஆதலால், கண்பார்வைக்குக்கீழ் மேட்டிடம் வரையில் 1-அடியானால்; சமமட்டம்வரையில் 2-அடியாகவும், பள்ளம்வரையில் 3-அடியாகவுங் கொண்டு, சமமட்டத்திற்குச் சரியாய் மேட்டைவெட்டியும் பள்ளத்தை மண்கொண்டு நிரப்பியும் வரும்பொருட்டு மேட்டில் 1-அடி ஆழம் வெட்டவேண்டுமென்றும்: பள்ளத்தில் 1-அடி உயரம் மண்போடவேண்டுமென்றும் எளிதிலறியக்கூடியதாம்.

மனிதனது பார்வை வெகுதூரம் எட்டாததையும் கூடியமட்டும் வேலையை விரைவாக முடிக்கவேண்டியிருத்தலையும், மற்றும் மனிதற்கு மிக்க கஷ்டமில்லாமல் வேலை நடைபெறவேண்டுதலையுங் கருதி, இயற்கையில் உண்டான நமது கண்பார்வைக்கொற்றுமையாக, ஓர்வித யந்திரம் கண்டிருக்கின்றனர். அதன்பெயர் "பூமிமட்டம் பார்க்குங்கருவி" அல்லது "லெவல்" கருவி என்பர். அதன் விஷயங்களைத் தேர்ந்துபார்ப்போம்.



ப-முதல் ம-ஈறாக ஒரு குழாயுள்ளது. நமது கண்ணைக்கொண்டு ப-ம-மூலமாக நேராகப்பார்த்தல் கூடும். வெகு தூரத்தில் அளகோலைப் பிடித்துவரவேண்டியிருப்பதால், அளவுகோலிலுள்ள எண்களைத் தெளிவாய்ப்படிக்கக் கண்ணைவைத்துப் பார்க்குமிடத்தில் ஓர் தூரதிருஷ்டிக் கண்ணாடி (Telescope) வைத்துள்ளது. நாம் சாதாரணமாய்ப் பார்த்துவரும் கண்ணாடியில் தூரதிருஷ்டிக் கண்ணாடியென்றும், பூதக்கண்ணாடியென்றும் இரண்டுவிதமுண்டு. தூரதிருஷ்டிக்கண்ணாடியாவது, தூரத்திலுள்ளவைகளை அருகேயிருப்பனபோற் காட்டக்கூடியது. "பினாக்யுலர்" (Binocular) இரண்டு குழாயிற்பதித்த தூரதிருஷ்டிக்கண்ணாடிகளைக்கொண்டு, சாதாரணமாக வேடிக்கைக்காலத்திலாவது, மலையின் மேலேறிச் சுற்றுப்பக்கங்களைப்பார்த்து ஆனந்திக்குங் காலத்திலாவது மனிதர் பார்ப்பது வழக்கம். மேலும் ஆகாயமண்டலங்களைப் பார்த்துவரும் வழியில் நக்ஷத்திரசாலைகளில் (Observatory) சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்களாகிய வெகுயோசனைதூரத்திலிருக்கும் அண்டங்கள்இவற்றைப்பற்றித்தேர்ந்தறிந்த வித்துவான்கள் பரீக்ஷைக்காக மிகப்பெரிய நச்சுக்குழாய்களை அமைத்திருக்கின்றனர். அக்குழாய்களில் தூரதிருஷ்டிக்கண்ணாடி அடங்கியுள்ளது. பூதக்கண்ணாடியாவது சிறியவைகளைப் பெரியனவாகத் தோன்றச்

செய்வது. கடியாரவேலை செய்யுமிடங்களில் கடியாரத்துளிருக்கும் வெகு சிறிய ஆணிகளையும், கம்பிகளையும், சக்கரங்களையுந் தேர்ந்துபார்த்தெடுக்கப் பூதக்கண்ணாடியைத்தான் உபயோகிக்கிறார்கள். மேலும் வயதில் முதிர்ந்தோர்கள் வெள்ளெழுத்தாற் கண்மங்கலையடைவதால் படிக்கவும் பார்க்கவுங் கஷ்டப்படும்போது பூதக்கண்ணாடிகள் பொருந்திய மூக்குக்கண்ணாடிகளை உபயோகிப்பதுவழக்கம். மேற்கண்ட சித்திரத்தின்குழாயில் முன்னமேசொல்லியபடி தூரத்திலுள்ள அளவுகோலைக்கண்டு தெளிவாய்ப் படிக்கத் தூரதிருஷ்டிக்கண்ணாடியை வைத்திருக்கக் காணலாம். மற்றொரு முனையில் ஓர் கண்ணாடியை வைத்து அதன்மத்தியில் ஓர் நேர்கோடுபோற்காணக் குதிரைமயிரைக் கட்டியுள்ளது. எனெனில் யந்திரத்தை நேராக வைத்துப்பார்க்கும்போது நமது கண்ணுக்குக் குழாய் மூலமாகச் சரிநேராக விருக்குமெண்ணைக் கண்டறியும்பொருட்டு அவ்வெண்ணைக்குறிப்பிட. ஓர் உதவிப்பொருள் வேண்டியிருப்பதால் குதிரைமயிர் கட்டப்பட்டிருக்கிறது. கண்விழியைச் சிறிது மேல்கீழாகத்திருப்பினாலும் எண்ணிற் பிழை உண்டாகலாம். ஆதலால் குதிரைமயிர் எண்ணிற்பொருந்தும்படி பார்த்தால் உண்மை அளவு நமது கண்ணுக்குப்புலப்படும்.

சித்திரத்தில் ய, ர என்பது மற்றோர் குழாய். அது கண்ணாடியை நடுவிற்கொண்டுள்ளது. பெரிய குழாயின்மேல் வைக்கப்பட்ட இஃது ஓர் சிறுகுழாய். இந்த குழாய்க்குள் சாராயம்விட்டிருக்கிறது. சிலகருவிகளில் நீரையும் விடுவதுண்டு. ஆனால், இக்குழாயில் உள்ளது முழுமையும் நீரில்லை. ஆதலால் குழாயை அசைக்கும்போது கொப்புளம்போல் வெற்றிடம் புலப்படுகிறது. ஓர் புட்டியில் நீரைப் பூரணமாக விடாமற் சிறிது இடம் விட்டுவைத்தால் புட்டி மேல்கீழாய்த்திரும்பும்போது கொப்புளம் கீழ்மேலாகப் போவதுபோற் புலப்படுகிறது. இக்கருவியின் சாராயக்குழாயிலுள்ள கொப்புளம் (அஃதாவது வெற்றிடம்) குழாய்க்குமத்தியில் வந்தாற்றான் பார்வைக் குழாய் சரிநேரிலிருப்பதாகக் கொள்ளலாம்; இல்லாவிடில் கொஞ்சம் கீழ்மேலாகத்தானிருக்கவேண்டும். யந்திரத்தைத்தாங்குவதற்கு 3-கால்களுள்ளன. யந்திரமும் கால்களும் அசையக்கூடியவை. இவ்விதமான யந்திரத்தைச் சரிவரவைத்துப் பார்ப்பது பூமிமட்டத்தை அறிவதற்கு ஓர்உபாயமாகிறது.

பூமியானது எப்போதும் ஒரே நிலைமையிலில்லை. சுபாவமாகவே பூமிமட்டத்தில் ஏற்றத்தாழ்வுகள் மிக மெதுவாயுண்டாகின்றன. சிலமலைகளின்மேல் சமுத்திரம்போன்ற ஜலவிஸ்தீரணங்களில் அகப்படக்கூடிய "கிளிஞ்சல்" போன்றவைகளும் பெருநீர் பரவியுள்ள இடங்களுக்குரிய மற்றக்குறிகளும் காணப்படுவதால், ஓர்காலத்தில் அம்மலைகள் நீர்மட்டத்தில் இருந்திருக்கவேண்டுமென்றும் நாளடைவில் பூமியின்ப்பாகங்கள் எழுப்

பப்பட்டு மலைவடிவங்கொண்டனவென்றுங் கூறுவர். வெய்யிலுடன்கூடியே எப்படி நிழல் நமது மனதுக்குப் புலப்படுகிறதோ, அவ்விதமே பூமியின்மேல் ஓர்பக்கம் உயர்வுண்டாகியதென்றால், மற்றோர் பக்கம் உடனே தாழ்வுண்டாகவேண்டுமென்பது தெளிவாய் அறியத்தக்கதாம். கடலில் அலைகள் உண்டாகும்போது, ஓரிடம் ஜலமேடுண்டாய் அதன்பக்கம் பள்ளமிருக்க, பிறகு பள்ளமுள்ளவிடத்து மேடு உண்டாய் மேடுள்ளவிடத்துப் பள்ளமுண்டாகி மாறிமாறி வருவதுபோல, எப்போதும் பூமியானது மட்டத்தில் ஓரிடம் ஒருகாலம் மேடாயும் மற்றொருகாலம் பள்ளமாயும் மிகவும் மெள்ள மெள்ள மாறிவருவதாக எண்ணப்படுகின்றது. இவ்வாறு பூமிமட்டத்திற் பேதப்படும் மலை, குன்று, மேட்டுவெளி, பள்ளத்தாக்கு, ஏரி, ஆறு முதலிய இடங்களைப்பற்றிப் பின்வரும் பாடங்களில் ஆங்காங்குப் படித்துவருவோம்.

நான்காவது பாடம்.

நிலப்பாகம்.

(இரண்டாவது பிரிவு—கல்லும் மண்ணும்)

பிள்ளைகள் ஓய்வுக்காலங்களில் வெளியேபோகும்போது சுற்றுப்பக்கங்களிலுள்ள மரம், செடி, புஷ்பம், காய், கனி, புல், பூண்டு, பாறை, கல், மண், பறவைக்கூட்டம் இவைபோன்ற இயற்கையில் தோன்றும் விநோதப் பொருள்களை அசட்டைசெய்யாமற் கவனித்துப்பார்த்துவரப் பழக்கஞ்செய்யவேண்டும். மலைப்பாங்கிற் பெரும்பாறைகள் புரட்டியிருப்பதுபோலவும், வெடிப்புண்டும், ஓர் பெரும்பாறையின்மேல் மற்றோர் பெரும்பாறை அசையாமற்றங்கியும், பார்வைக்குப் பயங்கரமான பெருங்கற்கள் மேல்விழுவதுபோலத்தோன்றி முன்னிற்கவும் சாதாரணமாகப் பார்த்துவரலாம். மேலும், சிலவிடங்களில் மணல் பெருங்கூட்டமாகக்கூடித் திரண்டமேடுகளாகப் பார்வைக்குப் புலப்படுகிறது. மற்றும் சிலவிடங்களில் நிலமானது கருநிறம்பெற்று வெகு விசாலமாய்ப் பரவியுள்ளது. செம்மண் திரளாகவுள்ள பூமி விஸ்தாரமாக எங்குமுள்ளது. வேறுசில விடங்களில் பாறையை உடைத்துக் கற்களாக்கி இறைத்துவிட்டதுபோல அளவற்ற கற்கள் வெகுதூரத்திற்கு வெகுதூரம் மிகுதியாகக் கிடக்கவும் காணப்படுகின்றன. மேலும், ஒவ்வோரிடங்களில் வெகு ஆழம்வரையிற் களிமண் தங்கவும், சுண்ணாம்பு, கிளிஞ்சல் முதலியவை கலந்திருக்கவும் பார்த்துவருகிறோம். மணல்களிலோ வெவ்வேறு நிறம் பார்க்கக்கூடியதாயுள்ளன. மசந்நிறம், கருநிறம், வெண்ணிறம் ஆகிய இவைகளை அவற்றிற்காண்கிறோம். சிலகற்களைக்

நல்லதூக்கத்திற்கு நமது போஜனமும் ஓர்வித காரணமாகும். நாம் இரவில் தூங்கப்போகும் முன்பாக வயிறுநிரம்பப் புசிக்கக்கூடாது. கனக்கும் வயிற்றுடன் நாம் தூங்கும்பொழுது சிலபயங்கரமான கனவுகள் உண்டாகின்றன. தூங்கச்செல்லும்பொழுது ஒருவிதக் கவலையும் வைத்துக்கொள்ளாமல் சுகமாகப்படுத்துக்கொண்டால் நல்லதூக்கம்பிடிக்கும். நாம் தூங்கும் அறையிற் காற்றோட்டம் நன்றாகவிருக்கவேண்டும். இவ்விஷயமாக முன்னமே எழுதியிருக்கின்றோம்.

நாம் சுகமாகத்தூங்கத் தலையைச் சிறிது உயரமானவிடத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். தலையணைவைத்துக்கொள்ளுவதால் நாம் இவ்வித சுகத்தை ஒருவாறு அடைகின்றோம். சிலர் அதிகத் தலையணைகளைவைத்துக்கொண்டு தலையை அதிக உயரமாக அமைத்து நித்திரைசெய்வார்கள். சிலர் மிருதுவான தலையணையின்றிக் கெட்டியாகக் கற்போல் பஞ்சடைத்த தலையணைவைத்து உறங்குவார்கள். இவைகள் தேகசௌக்கியத்திற்கு வெகு குறைவு. கழுத்திலிருக்கும் நரம்புகள் வலிக்கும். சிலருக்குக் கழுத்தே சுளுக்கிக்கொள்ளும். நமது இடதுபக்கத்தில் ஹிருதயமிருக்கின்றபடியால் இடது விலாப்பக்கமாகப் படுத்து வெகுநேரம் நாம் தூங்கக்கூடாது. அவ்வாறு நாம் தூங்குவோமேயானால், நமது தேகபாரமுழுமையும் ஹிருதயத்தின்மேற்றாக்க நமது ரத்தஓட்டம் சிறிது அவஸ்தைப்பட்டு நமக்குத் தூக்கத்திற் கனவைக்கொடுக்கும். முதுகு எலும்புகளில் அதிக அழுத்தல் விழாதவண்ணம் மிருதுவான பஞ்சுமெத்தைகள் அல்லது கம்பிகளாலாகிய தொய்ந்த படுக்கைகள் இவைகளில் தூங்குவது ஆரோக்கியம்.

தூங்கும்பொழுது வடதிசையில் தலை வைத்துக்கொள்ளுவதில், அத்திசையிற் காந்தமிருப்பதால் சில தேகங்களுக்கு ஒத்துக்கொள்ளாதென்று சொல்லப்பட்டிருக்கின்றது. தென்பக்கமாகத் தலைவைத்துத் தூங்குவது தான் எப்பொழுதும் உத்தமம்.

நாம் தூங்கும் அறையில் விளக்கின் வெளிச்சமிருந்தால் தூக்கம் பிடிக்கமாட்டாது. ஆகையால், வெளிச்சத்தை முற்றிலும் மறைத்தாவது அல்லது வெளிச்சமேயில்லாமலாவது நாம் தூங்கவேண்டும்.

தூங்குமிடத்துக்குச் சமீபத்தில் ஏதாவது அதிக சத்தமாயிருந்தால் தூக்கம்பிடிக்காது. என்றாலும் வண்டின் ரீங்காரம் போன்ற சில ஒரே வித மனோகரமான துவனிகள் தூக்கத்தை உண்டுபண்ணி வைக்கின்றன. நோயால் தூக்கம் கெட்டுப்போயிருக்கும்பொழுது, அபினி முதலிய லாகிரி வஸ்துக்கள்சேர்த்த மருந்தால் நல்ல தூக்கம் வரவழைத்துக்கொள்ளலாம்.

ஆனல் இச்சாதனத்தை அடிக்கடி உபயோகப்படுத்துவதைக் காட்டிலும் அதைவிட்டு விலகியிருப்பது வெகு உத்தமம்.

நல்லதூக்கமில்லாததாலும் தூக்கத்தின்குறைவாலும் நமது தேகம் பலமிழந்துபோகும். ஜீரணசக்தி குறைபட்டு நமது பசிமந்திக்கும்; தேகம் வெளுத்துப் பலம் குன்றும்; இவ்வித நோய்கள் நமக்கு விளையாதவண்ணம் நாம் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

அதிகத்தூக்கத்தாலும் விளைவது எண்ணிறந்த நோய்களே; அதிகமாய்த் தூங்குவதால் நமது புத்தி நோய்கொண்டு நமது தேகசக்தி வலிமையையிழக்கும் தன்மையை அடைகின்றது. இத்துடன் நாம் அதிக போஜனம் செய்யும் வழக்கமுள்ளவர்களாகவிருந்தால் நமது தேகத்தில் தசைப்பற்று அதிகமாய் உண்டாக இடங்கொடுத்து நம்மையேநாம் ஓர்பெரும்பிராணியாகச் செய்துகொள்ளுவோம். இவ்வாறு நாம் உருமாறும்பொழுது தூக்கத்தில் அதிககாலம் செலவிடுவதுடன் விழித்திருக்கும்பொழுதும் பிரயோஜனமான காரியம்செய்ய உபயோகமற்றவர்களாக ஆய்விடுவோம்.

தூங்கவேண்டிய தூக்கத்தின் அளவை நாம் ஒருவாறு குறித்திருக்கின்றோம். அதிகச்சுருசுருப்புள்ளவன் தூங்குங்காலம் சோம்பேறி தூங்குங்காலத்தைவிடக் கொஞ்சமாகவிருக்கும். ஆனல் அவன் நித்திரை வெகு அயர்ந்த நித்திரையாகவும் அவனுக்கு நன்றாக சுகத்தைக்கொடுக்கப்பட்டதாகவுமிருக்கும்.

தூக்கத்தில் அனேக விசித்திரங்களுண்டு. பலவிதமாய்ச்சிலர் தேகத்தை வளைத்துக்கொண்டு தூங்குவார்கள். சிலர் அம்புமாதிரி வளைத்துக்கொள்ளுவார்கள். சிலர் முட்டிக்கால் போட்டுக்கொள்ளுவார்கள். வேறு சிலர் தங்களிருகைகளையும் முழங்காலில் மறைத்துக்கொண்டு தூங்குவார்கள். சிலர் தங்கள் ஒரு கண்ணை மாத்திரம் திறந்துகொண்டு தூங்குவார்கள். (திறத்தலாவது அது ஒரு தோற்றம்) சிலர் தங்கள் இருகண்களையும் திறந்துகொண்டு தூங்குவார்கள். (இதுவும் தோற்றந்தான்.) இப்படி ஒரு கண்ணையாவது அல்லது இரண்டுகண்களையுமாவது திறந்துகொண்டு தூங்குகிறவன் முன் ஒரு விளக்கைக்கொண்டுபோய்க் காட்டினல் அவன் விழிப்பானே? மாட்டான். விளக்கொளி தூங்குகிறவன் கண்ணில் பிரதிமைபோல் தெரிய நாம் பார்க்கலாம். ஆனல் அவன் எழுந்திருக்கமாட்டான். கண்ணின் நரம்புஸ்தானங்களில் வெளிச்சம்விழுந்தும் இவனுக்கேனுணர்ச்சி உண்டாகவில்லை: என்றால் இவ்வித உணர்ச்சிக்கு ஆதாரஸ்தானமாகிய இவன் மனம் கலைபடவில்லை. அவனைத்தட்டி எழுப்ப உடனே அவன் தனது கண்

களைப் பிசைந்துகொண்டு "இது என்ன ஆச்சரியம்: யாரவன் வெளிச்சம்கொடுவந்திருக்கிறது? கண் கூசுகிறது" என்பான்.

சிலர் குறட்டைவிட்டுக்கொண்டு தூங்குவார்கள். இந்தக் குறட்டை என்பதை அயலார்கள் தூக்கத்தைக்கெடுக்கும் சத்துரு என்று சொல்லலாம். வீட்டிலும், வெளிப்புறப்பட்டால் ரயில் சத்திரம் சாவடி முதலிய இடங்களிலும் இந்தக் குறட்டையோடு இருப்பவன் வெகு வருத்தப்படுவான். இவனுக்கோ குறட்டையின்றி நித்திரைபிடிக்காது. இவன் குறட்டையோ மற்றவர்கள் ஸௌகரியத்திற்கு விரோதம். குறட்டையில் இரண்டுவிதமுண்டு. (1) அதிகக் காற்றை சுவாசிக்கும்போது உட்கொண்டு கொஞ்சங் காற்றை வெளிவிடுவது ஆரோக்கியமான குறட்டை: (2) கொஞ்சங்காற்றை உட்கொண்டு உட்கொண்ட காற்றவ்வளவையும் வெளிவிடுவது. இந்தக்குறட்டை குணமல்ல. எப்படியிருந்தாலும் குறட்டை என்பது கொஞ்சம் தரப்பியாசந்தான். குறட்டைவிடுகிறவர்களுக்கெல்லாம் தூங்கி எழுந்திருக்கும்பொழுது தாகமுண்டாகும்.

சிலர் கண்களைத்திறந்து தூங்குவதாகச் சொன்னோமே: இவர்கள் வாயைமூடி இருப்பதாக எண்ணிக்கொள்வோம். இவர்களுக்கு எதிர்க்கக்ஷிக்காரர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களிரு கண்களையும் மூடி வாயைத்திறந்துகொண்டு தூங்குவார்கள். இவர்களுக்கும் தூங்கி எழுந்திருக்கும்போதெல்லாம் தாகம் உண்டாகும். இப்படிக் குறட்டைவிடும்போதும் வாயைத் திறந்துகொண்டு தூங்கும்போதும் தாகமில்லாமல் இருப்பதற்கு இவ்விதமாய்த் தூங்கப்பட்டவர்கள் தாங்கள் படுக்குமுன் ஒருசிறு பட்டுக்குட்டையால் தங்கள் வாயைக் கட்டிக்கொண்டால் இந்தத் தாகம் சிறிது சிறிதாய்க் குறையும்; நாளாகவாகத் தாகமும் நின்றுவிடும்.

சிலர் தூங்கும்போதெல்லாம் தங்கள் கைகால்களை உதைத்துக்கொள்ளுவார்கள். இவர்கள் படுக்கை என்பது தூங்குவதற்கன்றி, குஸ்தி செய்ய என்ற எண்ணத்துடன் தூங்குகிறவர்கள்போலும்!

ஒருவனுக்குத் தூக்கம்பிடிப்பது அவனுடைய தேக சுபாவம், தேகமுயற்சி, சிரமம் இவைகளை யனுசரித்ததாகவிருக்கிறது. சிலர் வழக்கத்தாற் படுத்துக்கொண்டவுடன் தூங்கிவிடுவார்கள். ஆனாலிதுமட்டும் நிச்சயம். எவ்வளவுதூரம் வழக்கத்தில் வந்திருந்தபோதிலும் நாம் எப்பொழுது கண்ணைமூடிக்கொண்டு தூங்கவேண்டுமென்று பிரயத்தனப்படுகிறோமோ அப்பொழுது தூக்கம் வருகிறதேயில்லை. எப்போது நமக்குத் தூக்கம் கூடாது என்று சிரமப்பட்டு விழிக்கமுயலுவோமோ அப்போது நம்மை அறியாமல்

அது வந்துவிடுகிறது. ஆகையால் தூங்கவேண்டுமென்று எண்ணுகிறவன் அதற்காக முயலக்கூடாது. தூக்கம் வந்தவுடன் படுத்துக்கொள்ளவேண்டும். நாம் மெய்மறந்து தூங்கும்போது நமது தேகத்தைச்சேர்ந்த ஒவ்வோர் உறுப்புக்களும் அவைகள் செய்யுந்தொழிலிலிருந்துகொண்டு சரியாய்த் தங்கள் காரியத்தைச் செய்கின்றன. சிரமபரிகாரத்தையுமடைகின்றன. மனதும் புத்தியுமட்டும் தேகத்தைவிட்டு எங்கேயோ ஓடிவிடுகின்றன. மற்ற உறுப்புக்கள் படுத்தபடி தங்கள் வேலையைச் சரிவர நடத்தும்போது மனமும் புத்தியுமட்டில் இப்படி ஓடிவிடுகின்றன.

தேகஉறுப்புக்கள் தூக்கத்திலும் தத்தம் காரியத்தைச் செய்வதாகச் சொன்னேமே: எந்த எந்த உறுப்பு என்னகாரியம் செய்கிறது? ரத்த ஓட்டம் விழித்திருக்குங்காலத்தில் தேகத்தில் எப்படி நடந்துகொண்டுவந்ததோ, அந்தப்படியே தூங்கும்பொழுதும் நடக்கிறது. ஆனல் பகலில் நாழிகை ஏறஏற வேகமாய் ஓடுவதுபோல் இரவிலோடாமல் நிதானமாக மெதுவாய் ஓடும். அப்படியே சுவாசத்தின் ஓட்டமும் வெகு கிரமப்படிக்கும் வெகு நிதானமாகவும் நடக்கும். இப்படி இவ்விரண்டும் நடந்தபோதிலும், இவைகள் அதிக புஷ்டியும் பலமுமடைந்து மனிதனுக்குச் சுகத்தைக்கொடுக்கும்; ஒவ்வோர் அவயவமும் தூக்கத்தில் அதிக பலத்தைப்பெறுகின்றது. ஜீரணம் அதிக பலமாய் நடக்கிறதும் தூங்கும்போதுதான். தூக்கத்தில் தேகத்திலிருந்து மேல்தோல்வழியாக வரும்வியர்வை ஒன்று நீங்கலாக, மற்ற வித நீர்வடிவுகள் குறைவாக நடக்கும். ஸ்வேதம்மட்டில் தூங்கும்போது அதிகம். அதுதான் தேகத்திற்கு மிகவும் சௌக்கியம். தூக்கத்தால் கண்களுக்குண்டாகும் சுகத்தைச்சொல்லிமுடியாது. நமது இருநயனங்களும் நமக்கு உபயோகப்படுவது தூக்கத்தாலன்றிவேறல்ல. ஈசுவரவமைப்பிற்கண்கள் வெகு ஆச்சரியமானவை: வெகு நாகரிகமான சிருஷ்டி; திடீரென்று வெளிச்சத்திலிருந்து இருட்டிற்காவது அல்லது இருட்டிலிருந்து வெளிச்சத்திற்காவது நமது கண்களை நாம் திருப்பினல், அவைகள் ஒருவித அதிர்ச்சியடைவதை நாம் பார்த்திருக்கிறேம். அப்படியதிர்ச்சி அடையாமலிருக்கும்பொருட்டே ஈசன் பகலிலிருந்து இரவு வரும்போதும் இரவிலிருந்து பகல் உண்டாகும்போதும் ஸந்தி என்கிற எழுத்து மறையும் வேளையையும் கொடுத்திருக்கிறர்.

இம்மாதிரி நமது ஒவ்வொரு கருவிகளும் நித்திரையில் சுகத்தை அடைகின்றனவென்பதைச் சொன்னபிறகு, நித்திரை மனிதனுக்கு அதிக அவசியமென்பதை மறுபடியும் எடுத்துச் சொல்லவேண்டுமோ? இந்த நித்திரையை எவ்வளவுக்கெவ்வளவு நாம் ஒருவித ஏற்பாட்டுடனும் சுகத்துடனும் செய்கிறேமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் தைரியத்தையும் மற்றக்

காரியஙகளுக்கு அடைகிறோம். வற்றிப்போன குளம் மதகு பிடுங்கிவிட்டவுடன் நீர் விழுந்து நிறைவதுபோலப் பகற்காலத்து வேலைகளால் சோர்வடைந்த நமது தேகமும் நித்திரை என்னும் மடை வழியாக ஒவ்வொரு வித வலியையும் பெற்றுக்கொள்ளுகிறது. இரண்டு விஷயத்தில் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். முதலாவது தூங்கச் செல்லுங்காலம். இக்காலமானது நள்ளிரவுக்கு 4, 5-நாழிகைக்கு (ஒன்று அல்லது இரண்டுமணி) முந்தியதாகவே எப்போதுமிருக்கவேண்டும். 'நடுராத்திரிக்கு முந்தி ஒரு நாழிகை தூங்கும் தூக்கம் நடுராத்திரிச்குப் பிந்தி உ-நாழிகைத் தூக்கத்திற்குச்சமானம்' என்று, வெகு பாஷைகளிற் பழமொழிகள் வழங்கி வருகின்றன. இப்படி யில்லாமற் சிலர் கூத்திலும் ஆட்டத்திலும் படிப்பிலும் விடியற்காலம் வரை செலவிட்டுக் காலைவேளையிற் றூங்குவார்கள். இவர்கள் தேகத்தில் ஆரோக்கியமென்பதே இருக்காது. இரண்டாவது இரவுபோஜனம் பலத்த போஜனமாக ஒருபொழுதும் இருக்கவே கூடாது. இரவில் நன்றாகத்தூங்கி விடியற்காலத்தில் எழுந்திருப்பது தேக சௌக்கியத்திற்கு மாத்திரமல்ல? நல்ல புத்தியையும் நீடித்த வாழ்நாளையும் கொடுப்பதாக அநேக வைத்திய சாஸ்திரிகள்சொல்லி யிருக்கிறார்கள். அநேக சாஸ்திரங்களிலும் இதற்கு உதாரணங்கள் நாம் பார்க்கலாம். அவைகளிலொன்றை நாமிங்கு எடுத்துக்கூறுவோம்.

பிரஷ்யா (Prussia) தேசத்தில் இரண்டாவது பிரடரிக்(Frederic II) என்றோர் மகாராஜன் இருந்தான். அவன் தனது இராஜ காரியங்கள் ஒவ்வொன்றையும் பார்ப்பது வழக்கம். இப்படி அவன் செய்ததற்கு முக்கிய காரணம், தான் விடியற்காலத்திற்கு ஒரு முகூர்த்தத்திற்கு முன் எழுந்திருப்பதுதான் ஸகாயமாகவிருந்தது. ஒரொரு சமயத்தில் ராத்திரிகாலத்தில் அதிக நேரம் விழித்து விடுவான். அப்படி விழித்தபிறகு அவன் தூங்கச்செல்லும்போது, தான் காலையில் நித்திரைசெய்யாதிருக்கும்படி தன்னை எழுப்புமாறு ஓர் ஆளைத் தன் படுக்கை அறையிற் காவல் வைப்பான். அந்தச் சேவகனுடைய கடமை விடிய 2, 3- நாழிகைக்கு முந்தி மகாராஜாவை எழுப்பிவிடவேண்டும். இம்மாதிரி ஓர் இரவு ஒரு சிறு பையனைக் காவல் வைத்து மன்னன் பாதி ராத்திரிக்குப் பிறகு துயில் செய்யச் சென்றான். அதற்கு முந்தி அவன் வெகு சிரமப்பட்டவனாகையால் அயர்ந்த நித்திரையிலிருந்தான். பொழுது விடியுமுன் அச்சிறுபையன் பிரடரிக்படுக்கையண்டை நின்று 'மகாராஜாவே எழுந்திருக்கக் காலம் வந்துவிட்டது: நித்திரையை விட்டு நீங்குங்கள்: சூரியன் உதயமாகி இந்த பூபாரத்தை வகிக்குமுன் தாங்கள் துயிலகன்று வகிக்க வேண்டாமா' என்று எச்சரித்தான். அதைக் கேட்டு மன்னன் பாதி விழித்ததும் விழிக்காததுமாய் 'இன்று எனக்கு வெ

குசிரமமாகவிருக்கிறது: நான் கொஞ்சமதிகமாகத் தூங்குகிறேன் ' என்ருன். அதற்கு அந்த வாலிபன் 'எனக்கு உத்தரவு தங்களை எழுப்பிவிட: தாங்கள் எழுந்துதான் தீரவேண்டும்' என, மன்னன் அதைக்கேட்டு " இல்லை: அரை நாழிகைதூங்கவிடு என்னை " என்று கெஞ்சினன். அதைக் கொஞ்சங்கூட கவனிக்காமல் அச்சிறுவன் தைரியத்தோடு 'மகாராஜாவே தாங்கள் ஒரு நிமிஷங்கூடத் தூங்கக்கூடாது: அப்படி உங்களுக்கு இடங்கொடுக்களனச்கு உத்தரவில்லை' என்று கண்டிக்க, அரசன் சரேலென்று எழுந்து' அடே நீ வெகுதைரியஸ்தன்; என்னை மட்டும் தூங்கவிட்டிருப்பாயாஞல் உன் தலையை நான் காலையில் வாங்கியிருப்பேன் ' என்று சொல்லி அச்சிறுவனை மெச்சினன். இந்த மன்னன் அதிகாலையில் எழுந்திருப்பதால் அனேக காரியங்களைத் தானே நடத்தி முடித்ததாகச் சரித்திரங்களோராயிரம் கூறுகின்றன.

எல்லாப் பிராணிகளும் 60-நாழிகைக்கு ஒரு தடவை அவசியம் தூங்கியே தீரவேண்டும். பகல் 30-நாழிகை விழித்துக்கொண்டிருக்கலாம். அதுபோலவே, இரவு 30-நாழிகையும் சிரமப்பட்டு விழித்திருக்கலாம். இப்படி 60-நாழிகையும் கஷ்டத்தின்பேரில்விழித்தபிறகு ஒருவன் தூங்கியே தீரவேண்டுமேயல்லது சுகத்துடன் தூங்காமலிருக்க முடியாது. அவன் என்ன வேலைக்காரஞகத்தானிருக்கட்டும், எவ்வளவு பலவானுகத்தானிருக்கட்டும்: இதற்கு திருஷ்டாந்தமாக வண்டி ஓட்டுகிறவன் நீலகிரிக்கணவாயில் வண்டிதலைகீழாக இறங்கி வரும்போது வண்டி நுகத்தடியி லுட்கார்ந்துகொண்டே தூங்குகிருன். குதிரையின்பேரில் இடைவிடாமல் 60-நாழிகை ஒருவன் சவாரி செய்தால் அந்தக் காலத்திற்குப் பிறகு அவன் குதிரையின் மேலிருந்தால் ஜேணத்தின் மேலேயே தூங்கிவிடுவான். யுத்த களத்தில் இடைவிடாமற் சண்டை செய்கிற போர்வீரர்கள் 60-நாழிகைக்குப் பிறகு சண்டை மத்தியிலேயே தூங்கிவிடுவதாகச் சரித்திரமெழுதுகிறவர்கள் சொல்லி யிருக்கிருர்கள். எவ்வளவுதான் பலம் ஒருவனுக்கிருந்தபோதிலும் 60-நாழிகைக்குமேல் தூக்கத்தைத் தடுக்கமுடியாது.

அலெக்ஸாண்டர் (Alexander the Great) அர்பேலா (Arbela) என்ற போர்க்களத்திலும், நெபோலியன் (Napoleon) ஆஸ்டர்லிட்ஸ் (Austerlitz) என்னும் போர்க்களத்திலும் போர் நடந்து கொண்டிருக்கும் இடத்திற்கு மத்தியிலேயே தங்களைச்சுற்றி நானுவித ஆயுதங்கள் வந்து விழுந்து தங்கள் பிராணனைப்பிரதிநிமிஷமும் அபாயத்தில் வைத்திருக்கும்போதே அயர்ந்து தூங்கினதாகச் சொல்லி யிருக்கிறது. இவர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். பெருத்தபோர்வீரர்கள். 'தூங்காதே தூங்காதே' என்று ஒருவனைச்சவுக்கால் அடித்த போதிலும் அவன் சுகதேகியானல் 60-நாழிகைக்கு மேல் தூங்கியே தீருவான்.

பன்னிரண்டாம் அதிகாரம்

ஒவ்வோருவனும் தனது சுகத்தைக் காப்பாற்றிக் கோள்ளும் முறைகள்.

Chapter XII.—Individual Hygenic precautions.

இவைகள் பலவகையாதலால் நம்மாற் கூடியமட்டும் சிலபொதுவான முறைகளை இவ்விடம் எடுத்துச்சொல்லுவோம். நாம் சுகமடையும்முறைகளைக்கற்றறிந்திருக்க வேண்டுமென்பது வெகு அவசியம் என்றாலும் எப்பொழுதும் அவைகளிலே கண்ணுங் கருத்துமாக விருப்பது ஒருவன் நியாயமாக அடையக் கூடிய சுகத்தை ஒருவாறு கெடுத்தாலும் கெடுக்கும். சிலர் தங்கட்கே கொஞ்சம் வைத்தியம் தெரிந்திருந்தால் காலையில் எழுந்தவுடன் நிமிஷத்துக்கு ஒருமுறை தங்கள் கையைப் பிடித்து அடிக்கடி நாது பார்த்துக்கொண்டு பித்தம்அதிகம் வாதமதிகம் என்று சந்தேகங்கொள்வார்கள். சிலர் நிலக்கண்ணாடி முன்பாக நின்றுகொண்டு தங்கள் கண்களின் இமைகளையிழுத்துப்பார்த்துக் கொண்டு தேகத்தில் ரத்தமேயில்லை ரத்தமூற என்ன செய்யலாம் என்பார்கள். இவ்வாறு பிரதி நிமிஷமும் ஒவ்வொருவனும் விசாரப்படுவானேயானால் அதுவே அவனுடைய சுகத்தைக்குறைத்துவிடும். ஒவ்வொருவனும் தனது சௌக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் முறைகளை அறிந்திருத்தல் வேண்டும் என்று நாம் சொன்னதால் அவன் இவ்வாறு செய்யவேண்டுமென்பது நம் கருத்தன்று.

தன் தேகத்துக்கு ஒத்துக்கொள்ளும் உணவு அவனவனுக்குத்தான் நன்றாகத்தெரியும். இந்தவிஷயம் அவனவன் வழக்கத்தைச்சேர்ந்தது. அவ்வாறு தனக்கேற்ற உணவைப்புசிப்பதாலும், அதை ஒருவாறு செரித்துக் கொள்ளத்தகுந்த வியாயாமம் குறைவின்றிச் செய்வதாலும், மிதத்துக்கு மீறிப் புசிக்காமலிருப்பதாலும் ஒவ்வொருவனும் தனது ஆகாரவிஷயமாய்த் தான் அடையவேண்டிய சுகத்தை அடைவான் என்பதிற் சந்தேகமேயில்லை. "மிதபோஜீசுகீபவேத்" 'மிதம் புக்த்வா சதம் கச்சேத்' என்று நமது நாட்டில் வழங்கும் பழமொழியும் 'மிகினும் குறையினும் நோய் செய்யும்' என்ற குறளும் நாம் எப்பொழுதும் நமது உணவு முதலிய எவ்வித சௌக்கியங்களிலும் மிகவும் ஜாக்கிரதையாகவிருத்தல் வேண்டும் என்பதைக் காட்டுவன. நாம் நமது போஜனம் முதலிய சில விஷயங்களை அதிகமாகவேனும் குறைவாகவேனும் நடத்தாமல் எப்பொழுதும் மிதமாகவே நடத்திவருவோமானால் நமக்கு ஒருவித அசௌக்கியமும் நேரிடாது. உணவு என்பது

ஒவ்வொருவனையும் வெவ்வேறுவிதமாய் அவனவன் தேக அமைப்புக்குத்த க்கபடி போஷிக்கின்றது. சிலர் அதிகமாகப் புசிக்கின்றார்கள். சிலர் கு றைவாகப் புசிக்கின்றார்கள். நாம் இவைகளையெல்லாம் எப்பொழுதும் தரா சால் நிறுத்துப்புசிப்பதுபோல் யோசியாமல் அதிக உயர்ந்த ஆகாரத்தையே எப்பொழுதும் புசிக்கவேண்டும் என்ற ஆசையின்றிச் சாதாரணமாக நமது ஆகாரத்துக்குச் சேரவேண்டிய யவக்ஷாரம் முதலிய சாமக்கிரியைகள் மட்டும் சேர்ந்திருக்கின்றனவா என்று பொதுவாகமாத்திரம் கவனித்து எவ்வுணவு தேகத்துக்குத் தீங்கைவிளைவிக்கும் என்றுசொல்லப்பட்டிருக்கின்றதோ அ தைமட்டும் நீக்கி, வழக்கப்படி நாம் புசித்துவரும் ஆகாரத்தை உட்கொள் ளவேண்டும். இவ்வாகாரத்தில் நாம் புசித்துவரும் காய்கறி முதலிய உப ஆகாரங்கள் எப்பொழுதும் ஒரேமாதிரியின்றி நாம் அடிக்கடி மாற்றிக்கொ ண்டிருக்கவேண்டும். நமது பசிக்குத்தகுந்தபடி நாம் புசிக்கவேண்டும். நாம் ஒவ்வொரு கவளத்தையும் அழகாயும் மெதுவாயும் மென்று உள்ளிறக்கவே ண்டும். அவசர அவசரமாய் நாம் புசிப்பதாலும் நன்றாகமென்று புசிக்காத தாலும் பலவித நோய்கள் உண்டாகின்றன. ஸ்தூலகாயமுள்ளவர்கள் வியா யாமமேயின்றி அதிகபோஜனம் செய்வதுடன் அதிகநீர்த்தமும் குடிப்பதா ற் பலவித நோய்களை விளைவித்துக்கொள்ளுகின்றார்கள். அப்படியில்லாமல் கஞ்சி அதிகமாகநிற்கும் ஆகாரத்தை யிவர்கள் அகற்றித்தங்கள் தேகவ்யா யாமத்தைப்பெருக்கி அதிகநீர் அருந்துவதையும் நிறுத்தவேண்டும். சிலர் தேகம் ஒட்டி உலர்ந்திருப்பார்கள்; அவ்வாறு தங்கள் தேகத்தைக்கெடுத் துக்கொள்ளும்குற்ற மிவர்களுடையதாகவேயிருக்கும். பெரும்பாலும் பட படவென்று இவர்கள்புசித்து மென்றுசாப்பிடாதகாரணத்தாலும், அதிகங் கஞ்சி நிற்கும் ஆகாரத்தைப் புசிக்காத குறைவாலும் நீரைவேண்டியமட்டும் குடிக்காமல் கொஞ்சம் குறைவாகக் குடிக்கும் வழக்கத்தை இவர்கள் உண்டு பண்ணிக்கொண்டதாலும் இவர்கள் உலர்ந்த சரீரிகளாகவானார்கள் என்ப தை நாம் நிரூபிக்கலாம். சிலர் இரட்டைநாடி சிலர் ஒற்றைநாடி என்று நாம் பிறக்கும்பொழுதே ஒருவாறு ஏற்பட்டிருக்கின்றது: என்றாலும் இவ்வாறு இ யல்பாக நமக்குக் கிடைத்த சரீரத்தை நாம் அடைந்தும் அதை அதற்குத்தக்க சுகத்தில் வைக்காமல் ஏன் கெடுத்துக்கொள்ளவேண்டும்?

வியாயாமம்:— நாம் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய வியாயாமம். நம து சொந்த தேகசௌக்கியத்தைச் சார்ந்தது. வெட்டவெளியில் பரிசுத்தமா ன ஆகாயத்தில் ஒவ்வொருவனும் உலாவுவதாலும் வியாயாமம் செய்வதா லும் தனது தேகசௌக்கியத்தை அடைகின்றான் என்பது நிச்சயம். வெட்ட வெளியில் நடத்தும் வியாயாமத்துக்கும் உலாவுதலுக்கும் தக்க அளவு அதி க சௌக்கியத்தை ஒருவன் அடையலாம். வியாயாமம்என்பது ஆண்களுக்கும்

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩] விசுவாவசுஹு ஆவணிமீ [பகுதி-௧௦

சென்னி அநபாயன் குலோத்துங்கன்.

[செந்தமிழ்த்தொகுதி ௩, பக்கம் ௩௦௨-தொடர்பு.]

இனி இராமாநுஜர் காலத்தேயிருந்த சோழனொருவன் வைண வவெறுப்பும் சைவப்பற்றுமுடையனாயிருந்தனனென்பதும், அவன் தில்லைக்குப்போய் ஆண்டுள்ள திருச்சித்திரகூடத்துச் செங்கண்மால் தன்னை அலைகடலில் எறிந்தனன் என்பதும், இவனே கிருமிகண்ட னென வைணவரால் வழங்கப்பட்டானென்பதும், பிறவும் "ராமாநு ஜார்ய திவ்யசரிதை" என்ற நூலிலும் 'குருபரம்பரை' நூலிலும் விரி வாகக்காணலாம். ஒட்டக்கூத்தர் குலோத்துங்கசோழதேவருலா, இராசராசசோழதேவருலா, தக்கயாகப் பரணி என்னும் மூன்று பெரிய நூல்களில், அகளங்கன் என வேறுபெயர் பூண்ட விக்கிரம சோழன் மகனான குலோத்துங்கனுக்கே ஏற்றியுரைக்கின்ற தில்லைச் சித்திரகூடக்குலைவு இராமாநுஜர் சரிதையிலும் பயிலுதலின் இதனு ண்மையைப்பற்றி ஈண்டு ஆராய்வது இன்றியமையாததாம். 'ராமா நுஜார்ய திவ்யசரிதை' என்னு நூலில் (பக்கம்-௨௩௬) தில்லையிற்றிரு மாலை அலைகடல்புகவிட்ட சோழன் இவனெனவும், அக்காலம் இஃ தாமெனவும் கூறுவதாகத் துணியப்படுகின்ற வெண்பாவொன்று முன்னிரண்டடிகள் சீர்குலைந்து காணப்படுகின்றது: அவ்வெ ண்பா:—

"அம்பொற்குடைச்சக னாயிரத்...........
தொன்பதாம்...........வருடத்துத்—தென்பால்...
சென்னி குலோத்துங்கன் சித்ரகூடச் செங்கண்மால்
தன்னை யலையெறிநாள் தான்."

என்பது. இச்சீரழிந்த வெண்பாவைக்கொண்டு காலந்துணிதலரிதாயினும் தில்லையில் இது புரிந்தவன் சென்னிகுலோத்துங்கன் என்பானெனப் பெயர்துணியலாகும். இராமாநுஜர் கலியுகம் பிறந்து சகககஅ வருஷங்களுக்குப் பின்பு (அஃதாவது கி-பி. 1017) பிறந்து கஉ0 யாண்டு வாழ்ந்திருந்தனர் (அஃதாவது கி-பி. 1137 வரை) எனக் கேட்கப்படுகின்றது. இந்நெடிய வாழ்நாளுட்பட்ட சோழமன்னர் மிகப்பலராவர். அப்பலருள் விக்கிரமசோழன் றந்தையும், விக்கிரமசோழன் மகனுமே இச்சென்னிகுலோத்துங்கனென்னும் பெயர்க்குரியராகத் தேறப்படுகின்றார். விக்கிரமசோழன்றந்தையாகிய சோழன், கங்கைகொண்டசோழன் மகள்மகனும் சளுக்குவேந்தனாகிய விண்டுவர்த்தனன் மகனுமாய் உபயகுலோத்தமனெனப் பெயர் சிறந்து, சயங்கொண்டார்பாடிய பரணிபுனைந்த சுங்கந்தவிர்த்த அபயன் என்பான். இவ்வபயனாகிய உபயகுலோத்தமன் அரசாண்டகாலம் கி-பி. 1070-முதல் கி-பி. 1118-வரை யென்ப. இவன்பின் விக்கிரமனாகிய அகளங்கன் காலம் கி-பி. 1118-முதல் 1132-வரை யென்ப. இதற்குமேல் விக்கிரமன் மகனும் ஒட்டக்கூத்தரால் உலாப்பாடப்பட்டவனுமாகிய குலோத்துங்கன்(II) காலமென்ப. கி-பி. 1132-முதற் குலோத்துங்கன் (II) காலமாகவும், இராமாநுஜர் காலம் கி-பி. 1137-வரையாகவும் அறியப்படுதலால், இராமாநுஜர் குலோத்துங்கன் (II) முன்னாட்சியிற் சில்லாண்டிருந்தனரெனக் கருதற்கு இழுக்கில்லையாகும். இராமாநுஜர் காலத்தவராக இங்ஙனம் தெளியப்பட்ட குலோத்துங்கன் என்னும் பெயருடையாரிருவருள் சித்திரகூடச் செங்கண்மாலை அலையெறிந்தவன் யாவன் என ஆராயுமிடத்துக் குருபரம்பரைப்பிரபந்தம் எனப்பெயரிய பழைய தமிழ்ச்செய்யுள் நூலின்கண் இராமாநுஜர் சரிதையிற் பெரும்பான்மையும் ஓதியபின்னே அவருடைய இறுதிவரலாற்றுள் வைத்து,

சீராரு மரங்கத்துச் சிலபகல்கண் மன்னவந்நாட்
பாராளு மன்னனவன் பாகவதரிடத்திலென்று
மாராத காதலனு மகளங்க நாடாள்வா
னோரரும் வைகுந்த நாடாள வேகினான். (எகூச)

மாசுறுகிருமிகண்டன்மற்றவன்மேளலிதாங்கி
யாசுறுமுலகமெல்லாமாண்டனன் ...
* * * (எகரு)

என்னும் பாடல்களும், இவற்றுட் பின்னதிற்கண்ட பெயருடைய அரசன் தில்லைச்சித்திரகூடத்தைச் சிதைத்த வரலாற்றைக் காட்டும் பாடல்களும் காணப்படுகின்றன. இவற்றால், தில்லைச் சித்திரகூடத்தை யிடித்துக்கடலிலெறிந்தவன் பாகவதர்பால் ஆராதகாதலுடையனாயிருந்த அகளங்கநாடாள்வான் பின்னே மகுடம் புனைந்தவன் என்பது நன்குவிளங்கும். 'ராமாநுஜார்ய திவ்யசரிதை'யால், அகளங்க நாடாள்வார் என்பார் இராமாநுஜருக்குப் பிரதிபக்ஷ நிரசநம் பண்ணிப்போதுபவர் என்று தெரிகின்றது. ஈண்டுக் குறித்த பிரதிபக்ஷநிரஸநத் தொழில், அகளங்கநாடாள்வார் மன்னரேயென்பதைக் குறிப்பானுணர்த்தும். இனி இம்மன்னர் பெருமான் யாரென ஆராயப்புகுமிடத்து, அகளங்கநாமம் சோழர் பலருள்ளும் உபயகுலோத்தமனாகிய சுங்கந்தவிர்த்த அபயனுக்கு மகனான விக்கிரம சோழனுக்கே சிறந்த பெயராமென்பது முன்னரேதுணியப்பட்டதாம் (செந்தமிழ்த் தொகுதி ௩, பக்கம் உ௬௬). ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன் மகனான குலோத்துங்கனை(II) "இன்னற் பகைவனிவன்காணகளங்க, மன்னர்க்கு மன்னன் மகன்" (குலோத்துங்க சோழதேவருலா) எனக் கூறுதலாலும் இதனுண்மையுணர்க. அகளங்கநாடாள்வார் விக்கிரமசோழதேவரெனக் கொள்ளப்படுமாயின், அவருக்குப்பின்னே பட்டமெய்தியவனாகக் குருபரம்பரையாற்பெறப்படும் கிருமிகண்டன் என்பான் குலோத்துங்கன் (II) எனக்கோடல் எளிதேயாகும். கூத்தர் நூல்களிலும் வைணவர் நூல்களிலும் ஒருபடியாக அகளங்கன் பின்போந்த சோழனே தில்லைச் சித்திரகூடஞ் சிதைத்தவன் எனப்படுதலோடு அவன் சென்னி குலோத்துங்கன் என்னும் பெயரினன் எனவும் கூறியதற்குப் பொருந்தநோக்குமிடத்து, விக்கிரமசோழன் மகனான குலோத்துங்கனே (II) வைணவராற் கிருமிகண்டன் எனப்பட்டானென்று தெளியலாம். இராமாநுசர்காலத்தே அகளங்கநாடாள்வானான விக்கிரமன் இறந்தபின்னே மகுடம்புனைந்தவனென மேலே விளக்கப்பட்ட இக்குலோத்துங்கன்(II) இறந்ததுகேட்ட பின்னேதான், இராமாநுசர் திருநாராயணபுரத்தினின்று புறப்பட்டுத் திருவரங்கமெய்தியிருந்தனரெனக் குருபரம்பரைப் பிரபந்தத்தாலும் 'ராமாநுஜார்ய திவ்யசரிதை' யாலும் அறியப்படுதலால், விக்கிரமனுக்குப்பின்

அச்சோழன் அரசாண்ட காலம் சிலவாண்டேயாகுமெனத் தெளிய லாகும். இராமாநுசர் கி-பி. 1137-இல் பரமபதமடைந்தவரெனத் தெரிதலால், அதற்குள்ளேதான் குலோத்துங்க (II) னும் இறந்தானாகக் கருதப்படும். கூத்தர் விக்கிரமன் முதலாக மூன்றுபட்டத்தரசர் காலத்தும் இருந்து பாடினரென்பதற்கு இயையநோக்கும்போது, அம்மூவருளொருவன் சில்லாண்டே ஆண்டு கழிந்தனன் என்பதும் பொருந்தியதாதல் உய்த்துணர்ந்துகொள்க. இவன் ஆண்டகாலம் சில்லாண்டாதல்பற்றி இவன்மிக இளையனாயகாலத்தே பட்டமெய்தினனென்று கருதற்கு இடனில்லை; என்னையென்றால், கூத்தர் இவனுடைய உலாவின்கண்ணே,

... ...மாதரில்
ஒக்க வபிடேகஞ் செய்யு முரிமைக்கட்
டக்க நிலைமைத் தனித்தேவி—தொக்க
புவன முழுதுடைய பொற்றொடியுந் தானு
மவனி சுரர்சுருதி யார்ப்ப......... ...

என்பதனால் குலோத்துங்கன் (II) தேவியை அவனோடொக்கப் பட்டாபிஷேகஞ்செய்யுமுரிமையுடையாள் எனக்கூறியதுபற்றிக் குலோத்துங்கன் (II) பட்டமெய்தற்குமுன்னே நல்லவயதுடையனாய்க் கல்யாணம்பண்ணியிருந்தானெனத் தெரிதலால் என்க. இத்துணையுங் கூறியவாற்றால், மேலே சென்னி, அநபாயன், குலோத்துங்கன்எனப் பலபெயராற் சிறந்தவனே வைணவராற் கிருமிகண்டன் எனப்பட்டானென்பதும், அவனே வைணவராலும் கூத்தராலும் ஒருபடியாகத் தில்லைச்சித்திரகூடத்தை அலைகடலிற் புகவிட்டவனாகக் கூறப்பட்டானென்பதும், அவனே தில்லையிற் சிற்றம்பலம், பேரம்பலம் எல்லாம் பொன்மயமாக்கி அக்கோயில்மண்டபம், மாளிகை, பீடிகை, மாடம், கூடம், கோபுரம், சூளிகை, தோரணவாயில், குளம், வீதி என முழுதையும் அணிவிளக்கிப் பணியியற்றினனென்பதும் அறியலாகும்.

மேற்காட்டிய 'அம்பொற் குடைச்சகன்' என்னும் வெண்பாவின் கண் தில்லைச்சித்திரகூடத்தை அலையெறிந்தகாலம் சகாத்தம்-கOOகூ என்றே குறிக்கப்பட்டதாமெனக் கொள்ளின், அது கி. பி. 1087 ஆதலின், அஃது, அபயனாகிய உபயகுலோத்துங்கனாலியற்றப்பட்ட

தாகக் கருதப்படும். உபயகுலோத்துங்கன் சளுக்குவேந்தனாகிய விண்டுவர்த்தனன் மகனேயன்றி அகளங்கன் மகனன்மையாலும் அவன் இயற்றிய காலமாகக் கருதப்பட்ட கி. பி. 1087, இராமாநுசர் இறுதிக்காலமன்மையாலும் குருபரம்பரைப் பிரபந்தமுடையார் ஒட்டக்கூத்தர் இவர்கள் கூற்றோடு முரணுதலாலும் அவ்வாறு கருதல் பொருந்தாதெனவறிக. தில்லைச்சித்திரகூடஞ் சீர்குலைந்த காலத்து இராமாநுஜர் கொங்குதேசராசாக்கள் சரிதையிற்கண்ட விட்டலதேவராசனிடம் சென்று அவனைத் தமக்குச் சீடனாக்கினரென அவருடைய சரிதைகளால் அறியப்படுகின்றது. விட்டல தேவராயன் கி. பி. 1098 ஆம் ஆண்டிற்பட்டமெய்தி கி. பி. 1149 வரையிருந்தனனென்ப. சகாத்தம் ௯௦௯-ஆகிய கி. பி. 1087, விட்டலதேவராயன் அரசாட்சிக்காலமல்லாமையையும் ஈண்டைக்கு நோக்கிக் கொள்க. இவற்றாற் றில்லைச்சித்திரகூடச் செங்கண்மாலை அலைகடலிலே எறிந்த சென்னி குலோத்துங்கன், அபயனாகிய முதலாங் குலோத்துங்கனல்லாமை தேறுக.

இனித் தண்டியலங்கார நூலார் தம்மினிய நூலின் கண்ணே பலவிடத்தும்,

"வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து
மண்குளிரச் சாயை வளர்க்குமாந்—தண்கவிகைக்
கொங்கா ரலங்க லநபாயன் கொய்பொழில்சூழ்
கங்கா புரமாளி கை."

"மூவாத் தமிழ்பயந்த முந்நூன் முனிவாழி
யாவாழி வாழி யருமறையோர்—காவிரிநாட்
டண்ண லநபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை."

"குழைபொருது நீண்டு குமிழ்மேன் மறியா
வுழைபொருதென் னுள்ளங் கவரா—மழைபோற்
றருநெடுங்கைச் சென்னி தமிழ்நா டனையார்
கருநெடுங்கண் போலுங் கயல்."

"செம்மை மரைமலருந் திங்களு நும்முகமுந்
தம்மிற் பகைவிளைக்குந் தன்மையவே—யெம்முடைய
வைப்பாகுஞ் சென்னி வளம்புகார் போலினியீ
ரொப்பாகு மென்பா ருளர்."

என்பனபோலப் பெரும்பான்மையாக அநபாயன், சென்னி என்னும் பெயர்களாலொருசோழனையே எடுத்துப் புகழ்ந்துரைத்துள்ளார். அந்நூலுட் புகழப்பட்ட சென்னி, அநபாயன் என்னும் சோழன் யாவனென ஆராயுங்கால், அவ்வலங்கார நூற்கண்ணே,

"சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்று—ளொன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு

இதனுள் ஒன்று கண்ணாகவும், மற்றொன்று கவியாகவும் நின்றவாறு கண்டுகொள்க. மலரி என்பது ஓர் ஊர்" (என்பதுரை.)

என ஒட்டக்கூத்தர் கவியைப் புகழ்ந்துரைக்குமாற்றால், அவ்வணிநூல் கூத்தர்காலத்தே இயற்றப்பட்டதாகத் துணியப்படும். கூத்தர்காலத்தே சென்னி அநபாயன் என்னும்பெயர்களால் விளங்கியவன் அகளங்கன் மகனாகிய குலோத்துங்கன் (II) என்பது முன்னே தெளிவிக்கப்பட்டதாம். இவற்றாற் றண்டியலங்கார நூலாற் புகழப்பட்ட சோழனும் இவனாதல் காண்க. இனித் தண்டி யலங்கார நூற்கண்ணே,

"கரடத்தான் மாரியுங் கண்ணால் வெயிலு
நிரைவயிரக் கோட்டா னிலவுஞ் - சொரியுமா
னீளார்த் தொடையதுல னேரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்."

என்பனபோலவும் சிலவிடத்து வருதலால், அவ்வணிநூல், கலிங்கம் வென்ற அபயன் காலத்ததாகக் கூறலாகாதோவெனில், கலிங்கம் வென்ற அபயன் சயங்கொண்டார் பாடிய பரணி புனைந்தவன்; அவன் காலம் ஒட்டக்கூத்தருக்கு முற்பட்டதாதலாலும் அவ்வபயனுக்கு அநபாயன் என்னுமோர் பெயருண்டாயின் அதனை அவனுக்குச்சூட்டிய கலிங்கத்துப்பரணிநூற்கண் சயங்கொண்டார்என்னும் புலவர் பெருமான் கூறுதிராராதலாலும் ஆகாதென்க. மற்றிக்கலிங்கம் வென்றதனை ஈண்டெடுத்தோதியதெல்லாம் பிதாமகன் சிறப்பைப் பேரனுக்கேற்றிப் புகழ்ந்ததாமென்க.

இனித் திருத்தொண்டர் புராணநூற்கண்ணே சேக்கிழார் நாயனார் தங்காலத்துச் சோழனொருவனை:

சென்னி யபயன் குலோத்துங்க சோழன் றில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர் போரே றென்றும் புவிகாக்கு
மன்னர் பெருமா னநபாயன் வருந்தொன் மரபின் முடிசூட்டுந்
தன்மை நிலவு பதியைந்தி னொன்றாய் நீடுந் தகைத்தவ்வூர்.

(சண்டேசுரநாயனார்புராணம்-அ)

அந்நகரிற் பாரளிக்கு மடலரச ராகின்றார்
மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி யணிவிளக்குஞ்
சென்னிநீ டநபாயன் றிருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனார் புகழ்ச்சோழ ரெனப்பொலிவார்.

(புகழ்ச்சோழநாயனார் புராணம்-அ)

என்பனபோலப் பலவிடங்களிலும் அநபாயன், அநபாயன் என எடுத்துப் புகழ்ந்துள்ளார். சேக்கிழார்நாயனாரால், திருத்தொண்டர் புராணத்துள் அநபாயன் என்னும்பெயரை வைத்தோதிய செய்யுள்கள் பலவற்றுள் ஈண்டுக்காட்டிய இவ்விருசெய்யுளுமே அவ்வநபாயன் * தில்லைத்திருவெல்லையைப் பொன்மயமாக்கிய செய்தியையும் தில்லைநகர் மணிவீதியை அணிவிளக்கிய செய்தியையும் கூறுவனவாய்ச் சிறிது சரித்திரம்பற்றி வந்தனவாம். இவ்வநபாயன் என்னும் பெயரும் இவன் செய்த தில்லைத்திருப்பணியுங் கொண்டேதான் இவன் இன்னானென்று காணவேண்டியுள்ளது. சேக்கிழார்நாயனார் காலத்துச்சோழன் கலிங்கம்வென்ற அபயனாயின் மற்றென்னை காரணத்தானே அவர் அவனை உபயகுலோத்தமன் எனவும் கலிங்கம்வென்றவன் எனவுஞ் சுங்கந் தவிர்த்தவனெனவும் புகழ்ந்தனரில்லையென வினா நிகழ்த்தற்கு இடனாகின்றது. அன்றியும் இவராற் குறிக்கப்படுகின்ற தில்லைத் திருவெல்லையைப் பொன்மயமாக்குதலும் தில்லைத் திருவீதியணிவிளக்குதலும் அநபாயன் என்னும் பெயரும் அக்கலிங்கம் வென்ற அபயனையே புகழ்தற்கெழுந்த பரணிநூலிற் சயங்கொண்டார் கூறுமலொழிந்ததற்குக் காரணமும் அறியப்படல்வேண்டும். இவற்றாற் சேக்கிழார்நாயனார் காலத்தவன் கலிங்கம் வென்ற அபயன் என்பது துணியப்படாததாகின்றது. கூத்தர் உலாவிலும், உலாவை யடுத்துரைத்த வெண்பாவிலும், தண்டியலங்காரத்தும் நன்று பயின்றுள்ள அநபாயன் என்னும் பெயருக்கும், கூத்தர் இரண்டுலா

---

* 'பேரம்பலந்தூய பொன்னணிசோழன்' என்றதும் இதன்கணடங்கும்.

க்களிலும் தக்கயாகப்பரணியிலும் விவரணமாக விரித்துரைத்த தில்லைத் திருப்பணிகளுக்கும் பொருந்த நோக்குமிடத்து இப்புராணத்துட் கண்ட பெயரும் செயலும் அகளங்கன் மகனுன சென்னி அபாயன் என்னும் பெயர்களால் விளங்கிய குலோத்துங்கன் (II) என்பானுக்கே யுரியவாமெனத் தெளியலாகும். இவன் தில்லைச் சிற்றம்பலம் பேரம்பலமுதலிய பலவற்றையும் பொன்னிற் குயிற்றி அத் திருவெல்லையைப் பொன்மயமாக்கியதன் விவரணத்தைச் "செந்தமிழ்"த் தொகுதி ௫, பக்கம் ௧௬௬ இல் கண்டுகொள்க.

(இன்னும் வரும்)

ரா. இராகவையங்கார்.

பத்திராசிரியர்.

திருக்குறள்-வீட்டின்பால்.

Theosophy of the Kural.

(௫௨௬-ம் பக்கத்தொடர்பு.)

மேற்கூறிய மெய்யுணர்வென்னையெனில், நிலமுதலுயிரீறாகிய தத்துவங்களின் உண்மைகளையும், அவைகள் காரணகாரிய சம்பந்தமுடையவென்றும், நிலைபேறுடையவென்றும் தெளிந்து, கரணங்களெல்லாம் கடந்துநின்ற அகாரணமாகிய முதல்வனை இத்தத்துவங்கள் எல்லாவற்றிலும் காண்பதே. உள்ளது, மெய்ப்பொருள், செம்பொருள் என்பன தோற்றக்கேடுகளின்றிநித்தியமாய், நோன்மையாற்றன்னையொன்றும் காத்தலின்மையிற் றாய்தாய், தானெல்லாவற்றையும் கலந்துநின்றும் தான் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாய் நிற்கும் முதற்பொருளாகிய பரம்பொருளையுணர்த்திற்று.

இம்முதற்பொருளையடைதற்குச் சிறப்புவகையான் மூன்றுபாயங்கள் கூறுகின்றார். அவைதாம் கேட்டல், சிந்தித்தல், காண்டல் என்பன. இவை மூன்றும், 36வது அதிகாரம் 6.7. ஆவது குறள்களால் அருளிச் செய்கிறார். இவற்றில், காண்கையாவது, உயிர்தன் அவிச்சைகெட்டுப் பரமசுகத்துடன் ஒற்றுமையுற இடைவிடாது அப்பரம்பொருளைத் தானகப் பாவித்தல். என்னை? ஒன்றினைத் தானகப்

பாவிக்க அந்நிலைமை வந்தெய்துவது எப்படியெனில், கூறுதும். உயிர்களுக்கு இரண்டு முக்கிய குணங்களுண்டு. அவைதாம் பற்றின்றி நில்லாததும், அது அதுவாதலும் ஆம். அஃதாவது தானெனத் தனித்து நில்லாது, கட்டையில் அக்கினி போலவும், அல்லது வடத்தில் ஊஞ்சல் போலவும், அல்லது கொம்பிற் பழம் போலவும் பற்றின்றி நில்லாது. அப்படி நிற்பின், யாதொன்றுபற்றின் அதனியல்பாய்நின்று தானென வேறாய் விளங்காது. ஆகவே உடலுடன் கலந்தபோது உடலாகவும் கடவுளுடன் கலந்தபோது கடவுளாகவும் காணப்படாதுநிற்கும் உயிர். அதுபற்றியே, ஒரு சாரார் உடலினைச்சோதித்து உயிரைக் காணாது ஏங்கியும், இன்னொரு சாரார், கடவுளைச் சோதிப்பதுபோற் சோதித்து உயிரைக் காணாது மயங்கியும் உயிரெனப்படுவதொன்றில்லை யெனப் பொய்யுரை கூறி யுழன்றார். இத்தன்மையால், அதைப் பளிங்குக் குவமை கூறியுள்ளார். "பந்தமறும் பளிங்கனைய சித்தநீ" 'அடுத்ததுகாட்டும்பளிங்கெ'ன்றார் நம்மாசிரியரும். நம்மவர்களன்றி,கிறிஸ்துமதத்தில் மிகவும் பேர்போன என்றி டிரம்மண்டுபண்டிதரும், "எல்லா மாந்தரும் பளிங்குகளாவர். இத்தன்மையானே, அதுவதுவாதல் சித்தித்ததாகும். மனிதனுக்கு மிகவும் ஒற்றுமையான உவமானம் அவன் பளிங்கென்பது" என விளக்கினர். மாசுபடிந்த பளிங்கானது பந்தம் அற அறத் தன் ஒளியை மிகுதியும் பிரதிபலிக்கச் செய்து, பந்தம் முற்றும் அறவே, அதன் ஒளி பூரணமாய் விளங்கி, அப்பளிங்கைப் பார்க்கவொண்ணாது அதனை மூடிநிற்கும். பரமாசிரியரும், இஞ்ஞாயிறு, கண் (கண்ணும் பளிங்கே) ஆகிய திருட்டாந்த வாயிலாய், "சென்று சென்றுணுர்வாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்" என்று திருவாய்மலர்ந்தருளியதூஉம் இவ்வுண்மையே. டிரம்மெண்டு பண்டிதர் இத்தன்மையை, (Laws of reflection and assimilation) பிரதிபலித்தல், ஒன்றுகுதல் என்னும் விதிகளாகக் கூறியுள்ளார். அஃதாவது "நான் அதைக் கண்டேன், அதை என்னிடம் தோற்றுவித்தேன், அதுவானேன்" என்பதாகும்.

பின்வரும் சுவேதாசுவதர உபநிடத வாக்கியங்களையும் கவனிக்கவும்.

"அவனை நினைந்து, அவனுடன் கூடி, அவனுடன் ஒன்றாக வும், முடிவில் மலமாயையின்றும்.

"மாசு படியும் கண்ணாடியானது துலக்கவும் ஒளி பெறுதல் போல, தன்னுடைய உண்மை ஸ்வரூபத்தை யறிந்தவுடன் மனக் கவலை தீர்ந்து இன்பத்தை அடைகின்றான். விளக்கைக்கொண்டு பார்ப்பதுபோலத்தன் ஸ்வரூபத்தைக்கொண்டு பரம்பொருளின் உண்மையையறிகிறான். என்றும் உள்ளதாகிய, பிறப்பிலியாகிய எல்லாத்தத்துவங்களையும் கடந்துநின்ற கடவுளை யுணர்ந்ததும், எல்லாப் பாசங்களினின்றும் நீக்கமடைகின்றான்."

இவ்வுண்மைகளெல்லாம் சந்தானகுரவரும் பின்வரும் விருத்தப்பாவிற் றெருகுத்துக்காட்டியதுங் காண்க.

கண்டவிவையல்லேனுனென்றகன்றுகாணக்
கழிபாமுநானல்லேனெனக்கருதிக்கசிந்த
தொண்டினுடுமுளத்தவன்றானின்றகலப்பாலே
சோகமெனப்பாவிக்கத்தோன்றுவன்வேறின்றி
விண்டகலுமலங்களெல்லாங்கருடதியானத்தால்
விடமொழியுமதுபோலவிமலதையுமடையும்
பண்டைமறைகளுமதுநானுனேனென்று
பாவிக்கச்சொல்லுவதிப்பாவகத்தைக்காணே.

ஆகவே, சித்தாந்த மென்னை யெனின், உலகமானது மூவினைப் படுதலின் ஒருவனால் உண்டாக்கப்பட்டதெனவும், அவனும், முடிவிலாற்றலும், முற்றறிவுமுடையவனாக வேண்டுமெனவும், அவனே அன்பாகவும், தனக்கென ஓரிச்சை யில்லாதவனாகவுமிருத்தலின், அவன் செய்யும்படைத்தல் முதலிய தொழில்களும் உயிர்களை மூடிய அழுக்கைப் போக்கற் கென்றும், இறைவனும், உயிர்களும், உயிர் உடல்போல், ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்றுமிரண்டு மின்றாகாமலிருப்பனவென்றும், உயிர்களும்தங்கள் அறியாமையாகிய பாசத்தையகற்றிக்கொள்ள வேண்டுமாயின், நான் எனதென்னும் பற்றுக்கள் அறவும், வேண்டுதல் வேண்டாமை யறவும் வேண்டுமெனவும், தனக்குண்மையான பற்றுக்கோடு ஒப்புயர்வற்ற அருட்பெருஞ் சோதி தனிப்பெருங்கருணை யெனத் தேர்ந்து அவனிடம் அயரா

அன்பினைச்செலுத்தி அவனடிச்சேர்ந்து இறைபணி நிற்கின், அவனை மலம் மாயையாகிய வல்வினைநோய்கள் சார்தரா: அவ்வினையடைத ற்குபாயங்களும், கேட்டல் நினைத்தல் பாவனையாகிய சரியை கிரியை யோகசமாதிகளெனவும் ஆசிரியர் கூறிப்போந்தார்.

மேலதுவே, நமது சிற்றறிவினால் அளந்தபடி வீட்டுவிஷயத் தைக்குறித்து ஆசிரியர் கருத்தாகத்தோன்றுகிறது. இவ்விதமாக விரித்துக்காட்டிய உண்மையில் யாவருக்கும் சம்மதமாயிருக்குமெ ன்பதெமதெண்ணம். ஆயின், ஓர்மதம் எம்மதத்தவருக்கும் சம் மதமாயிருக்குமோ என ஆசங்கை நிகழுங்கால், எல்லா மதங்களின் சாரமாயும் சமரசமாயுமுள்ளது சாலும். நம்மிலும், அவ்வித மதம் உண்டெனவும் துணிவாம். அம்மதம், கண்ணாடியானது பார்ப்ப வர் முகத்தையே காட்டுவிக்குமாறுபோல், எவரும் பார்த்தவுடன் தங்கள் தங்கள் மதமாமெனக் கொள்ளுகின்றார்கள். ஐரோப்பிய பண்டிதர்களிலும், நம் வடமொழியிலுள்ள சிற்சில நூல்களை சாங் கிய நூலாகவும், யோகநூலாகவும், அத்துவிதநூலாகவும் பலவாறு கூறினார்கள். தற்காலத்துப் பண்டித சிரோமணிகளாகிய மக்டன் னல், கார்பே என்பவர்கள் கருத்து, அந்நூல்களிற் கூறிய வுண்மை சாங்கியம், யோகம், துவைதம், அத்வைதம் முதலியவையன்றி, இவைகளின் சாரங்களெல்லாம் அடங்கிய சமரச நூல்களாகும் என் பதே. இவ்வித சமரச சித்தாந்தமடங்கிய நூல்களாகவும் கொண் டது சுவேதாசுவதர உபநிடதமும், பகவற்கீதையுமே; தமிழில் நம து திருக்குறளைச் சொல்லலாம். அவ்வித சமரசநூலாகவே கல்லா டர்முதல் வந்த ஆன்றோர்களாற் கொண்டாடப்பட்டுமிருக்கின்றது. எல்லா மதத்தவர்களும் அதனைத்தழுவுவதும் அதுபற்றி. விரிவ ஞ்சி இம்மட்டே விடுத்தாம்.

திருவள்ளுவநாயனாரின் திருவருளால் இச்சங்கமும் நீடித்து வாழக்கடவதாக.

(முற்றும்.)

ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை.

சேந்தனாரும் திருமாளிகைத்தேவரும்.

தமிழ்நாட்டுள்ள புராதன சிவாலயங்களுட்பல, சைவாசாரியருள் முதல்வர்களாகிய திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்திகளாற் பாடப்பெற்று இற்றைக்கும் புகழுடன் விளங்குகின்றன. இந்நாயன்மார்களால் தேவாரம் பாடப்பட்ட ஸ்தலங்கள்தவிர, நாளடைவிலே பற்பலஸ்தலங்கள் கட்டப்பட்டுப் பெருமையடையத் தலைப்பட்டன. அவற்றுள் அநேகம் அக்காலங்களிலாண்ட அரசர்களால் ஸ்தாபிக்கப்பெற்று, அவர்கள் அபிமானத்தாலும் நன்கொடைகளாலும் பிரபல்லியமடைந்தன. அவ்வாறு தம்மால் ஸ்தாபிக்கப்பெற்ற ஸ்தலங்களும் ஒருவாறு (பழங்கோயில்களைப்போல) பாடல்பெற வேண்டுமென்னும் அவாவும் இவ்வரசர்க்கு உண்டாயிருக்கலாம். இவ்வாசை நிறைவேற அப்பொழுதிருந்த ஸத்சைவர்கள் சிலரைக்கொண்டு பாடுவித்திருக்கலாமென்று துணியலாம். இவ்வாறு பாடல்பெற்ற ஸ்தலங்கள் திருவிசைப்பாப்பெற்ற ஸ்தலங்களென்றும், இப்பாடல்களுக்குத் திருவிசைப்பாவென்றும் பெயராயின. இப்பாசுரங்களைப்பாடினோர் ஒன்பதின்மர்: அவர்கள்தாம், திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்திநம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதியராயர் என்பவர்கள். இவர்களுள் கருவூர்த்தேவர் முதலிராசராசனால் இயற்றப்பட்ட தஞ்சைராசராசேச்சுரத்தையும், அவன் மகன் கங்கைகொண்டசோழனென்னுமறுபெயர் பூண்ட இராசேந்திரசோழன் கட்டிய கங்கைகொண்ட சோளீச்சுரத்தையும் மற்றும் சிலதலங்களையும் பாடினார். கண்டராதித்தர் என்பார் இராசராசனுக்குத் தமயன் முறையாகவேண்டும்.[1] சேதியரா

---

(1) பராந்தன் I.
(மதுரைகொண்டபரகேசரி)
906—907 கி. பி.

ராஜாதித்தன் | கண்டராதித்தன் | அரிஞ்சயன்

கண்டராதித்தன் → மதுராந்தகன் → கண்டராதித்தன் (திருவிசைப்பாக்காரர்)

அரிஞ்சயன் → பராந்தகன் II. → ராசராசன் I. (985 கி. பி.)

யர் என்னும் பெயர் திருமுனைநாடாண்ட சிற்றரசர்கள் பொதுப் பெயர். இவர் முன்னோர்கள் தாம் மெய்ப்பொருணாயனாரும், நரசிங்கமுனையரையரும்.

சேந்தனார் என்பவர் பாடிய ஸ்தலங்களில் திருவீழிமிழலையுமொன்று. இவ்விடத்துக் கோயிலில் இரண்டாம் பிராகாரத்து மேலைக் கோபுரத்தின் நிலையில் அடியிற்கண்ட சாஸனம் காணப்படுகிறது. இதன் முற்பாகம் காணப்படவில்லையாயினும், முக்கியமான பாகம் கெடாமலிருக்கிறது:—

1 [வும் நா]ங்கள் நா—
2 ளொ[2]பாதி எரிக்கக்—
3 கடவொ[3]மாக இவ்வூ—
4 ர்கவிணியன் எறஞ்—
5 செங்[4]தன் பக்கல்
6 கொண்டகாசு உ௰௬
7 இருபத்தாறுங்கொ—
8 ண்டொம்[5]மெலு—
9 ம் ஸ்ரீ கொ[6]யில் பெ—
10 ற்றுடையார் எரிக்க[க்]—
11 கடவாராக இப்பரிசு
12 இசைந்து கல்லில்
13 வெட்டுவித்தொ[7]—
14 ம் இவவனைவொம்[8]
15 ஜாபஞாத ஶிவ—
16 ஜ்ஞாநிஶிவராவந்த
17 தாலகஷ் ஶுபிஷிவ —
18 த்வஹாஸஷ் ஹா—

(2) நாளோபாதி (3) கடவோ
(4) சேந்தன் (5) கொண்டோம் மேலும்
(6) கோயில் (7) வெட்டுவித்தோம்
(8) இவ்வனைவோம்

19 ஹஹ்ரி[ணா]ந்த் த ஜநிரெ |

20 இயஜஜஹீவ நூர்வஹஸ—

21 ஈஈமெக்ஷ உ

இதனடியில் இதேகாலத்ததும் இதேமாதிரியுமான எழுத்தில் முதல்இராசராசன் சாஸனம் ஒன்று வெட்டப்பட்டிருக்கிறது. இதன் பின்பாகம் காணப்படாமற் போய்விட்டது. இதில் இவ்வரசனுடைய யாண்டு குறிக்கும்பாகம் உடைந்துவிட்டது; ஆகையால் அறிந்துகொள்ள முடியவில்லை. இதுநிற்க,

மகாமண்டபத்துத் தென்வாயிலின் நிலைக்காலில் அடியிற்கண்ட சாஸனம் வரைந்துள்ளது:—

(1) ஸஹிஸ்ரீ (2) ஜயஞொ—

(3) த்ரஸ்வஜா (4) நிஜிவஜாவ—

(5) ந தாஈகழ சு (6) கிஷீ*வத்வஶஹெ—

(7) ாஸ்லெஹாஹஹ்ரி (8) ணாஉ தஜநிரெ

(9) திருமாளிகை ெ (10) உவர்ஸவத்ததி—

(11) ருநுந்தாவிளக் (12) கு

இச்சாசனத்தின் எழுத்து உத்தேசம் கி. பி. 11ம் நூற்றாண்டின் பிற்பாதியைச்சேர்ந்ததாயிருக்கிறது. ஆகையால் முன்னெழுதிய சாஸனத்தின் பிரதி என்று காணப்படுகிறது. இங்குள்ள கோயில் ஒருகாலத்துப் புதுப்பிக்கப்பட்டிருக்கவேண்டுமென்பதும், அதன் கற்கள் பலவும் வெவ்வேறு கட்டிடங்களிற் சேர்த்துக்கட்டப்பட்டிருக்கவேண்டும் என்பதும், இவ்வாறு சிதறுண்ட நிலைக்கற்களிலொன்று முதற்சாஸனமுடைமையால் விளங்குவதோடு, இன்னும் பல காரணங்களுமுண்டு[9]. இவ்வாறு புதுப்பித்தகோயிலில் முன்னிருந்த நிலைக்காலின்

* ஸுபிஷ்வத்

(9) இப்பழங்கோயிலின் தூண்கள்சில அம்மன்கோயில் மகா மண்டபத்திற்குபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன: சில திருவுண்ணாழிகை மண்டபத்தில் (சுற்றுமண்டபம் அல்லது சுற்றாலயம் என்னப்படுவது) வைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன. இத்தூண்களைவைத்துப் பின்சொன்னமண்டபங்கட்டினதாக ஸாஈஆஜி.................... என்பவன் ஒருவன் இரண்டு மூன்று இடங்களிற் சொல்லிக்கொள்ளுகிறான். கோயில் ஸ்தாபியும் செங்கல்லால் கருஞ்சாந்தில் கட்டப்பட்டிருக்கிறது. ஆயின், பழங்கோயிலின் வடிவைவிட்டுப் புதியமாதிரியாகக் கட்டவில்லை என்பது திண்ணம்.

சாஸனத்தைத்திரும்பஎழுதிவிடவேண்டுமென்னும்அபிப்பிராயத்தாற் பதிப்பித்திருக்கவேண்டும். பதிப்பிக்கையில் தமிழ்ப்பாகத்தைவிட்டுவிட்டு சம்ஸ்கிருத பாகத்தைமாத்திரம் எழுதி, பின்னால் ஒரு சிறு தமிழ் வாக்கியத்தையும் சேர்த்திருக்கிறது.

முதற் சாஸனத்தின் தமிழ்ப்பாதியால் சேந்தன் என்பார் திருவீழிமிழலையைச் சேர்ந்தவரென்றும், இவர் கௌண்டன்னிய கோத்திரத்தைச் சேர்ந்தவரென்றும், ஏறன் என்னும் மறுபெயர்பூண்டவரென்றும் தெரியவருகின்றன. பின்னதாகிய சம்ஸ்கிருதபாகம் ஓர் அனுஷ்டுப்புஶ்லோகம்: இதன் பொருள் ;—

“ ஹரியால் கொடுக்கப்பட்ட கோயிலிலிருக்கும் பிரபுவாகிய சம்புவுக்கு இவ்விடத்தானாகிய சிவஞானி - ஜயந்தன், சூரிய சந்திருள்ளளவும் (எரியும்பொருட்டு ஒரு) தீபம் வைத்தான்” என்பது. இதனால் ஜயந்தன் என்பார் ஒருசிவஞானி என்பது பெறப்படும். சாஸனமுழுமையும் உற்றுநோக்கின் கௌண்டன்யனாகிய ஏறன் சேந்தன் என்பவருக்குப்பெயர் வடமொழியில் ஜயந்தன் என்பதும், இவர் ஒரு சிவஞானி என்பதும் புலப்படும். இதனுடன் இரண்டாம் சாஸனத்துப் பின்பாகமாகிய தமிழ்வாக்கியத்தின் விஷயத்தையும் சேர்ப்பின், இவரே திருமாளிகைத்தேவர் என்னும் மறுபெயர் பூண்டிருந்தார் என்பதும் ஏற்படுகிறது. பின் சாஸனத்தின் காலத்துக்கும் முன்னெழுதியதற்கும் உத்தேசம் மூன்று தலைமுறைகள்தான் ஆயிருக்கக் கூடும்.* ஆதலால்இரண்டாம் சாஸனம் எழுதியகாலத்து, சேந்தனாரும் திருமாளிகைத்தேவரும் ஒருவரே என்னும் துணிபு இருந்ததாகத் தோற்றுகிறது. இவ்விருபெயர்களும் முறையேதிருவிசைப்பாக்காரர்களாகிய சேந்தனாரதும் திருமாளிகைத்தேவரதுமாயிருக்கவேண்டுமென்றுகொள்ள, ‘சிவஞானி’ என்னும்பதம் பலமாய் உதவுகிறது. ஆகலால் சேந்தனார் என்பது இச்சிவஞானியின் இயற்பெயராயும், திருமாளிகைத்தேவர் என்பது சிறப்புப்பெயராயு மிருக்கலாமென்று தோற்றுகிறது. (சேந்தன் அல்லதுஜயந்தன் என்னும் பெயர் சிவபிரான்பெயர்களுளொன்று.)

---

*ராசராசன் காலத்துக்கும் கி. பி. 11-ம் நூற்றாண்டின் பிற் பாகத்துக்கும் 80-90 வருஷங்கள் இடையிடுவதால் இவ்வாறு கொள்ளப்பட்டது.

திருவிசைப்பாக்காரர்களைப்பற்றிச்சரித்திரங்கள் கிடையா. திருவாவடுதுறையில் ஓர் ஸ்தலபுராணமிருப்பதாயும், அதில் இவர்களிற் சேந்தனாரையும், கருவூர்த்தேவர் திருமாளிகைத்தேவர்களையும் பற்றிச் சொல்லியிருப்பதாயும் பிரஸ்தாபம். திருவிசைப்பாவுடையாராகிய சேந்தனார் பட்டணத்தடிகளார் காலத்தவரென்று சொல்வதுண்டு. அதற்கேற்ப, இவர் பாடலொன்று ஒரு சேந்தனாரைக்குறிக்கின்றது[10]. தொன்றுதொட்டு வந்த சரித்திரமில்லாதவரை இச்சாஸனங்களின் பலத்தால் சேந்தனாரும் திருமாளிகைத்தேவரும் ஒருவரே யாவர் என்று கொள்ளல் பொருத்தமாகின்றது.

து. அ. கோபிநாதராவ்.

---

(10) மத்தளைத் தயிருண்பானும் மலர்மிசை யேகினானும்
நித்தலுந் தேடிக்காணா நிமலனே நீயின்றெய்தி
செய்த்தளைத் திருநாங்கூரிற் சேந்தனை வேந்தினிட்ட
கைத்தளை நீக்கிக்கண்முன் காட்டு வெண்காட்டுளானே.

உ

ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம்.

ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் மொழிகளின் இலக்கணம் இன்னதென்று நன்குவிளங்கவில்லை. ஒன்பது பத்து-தொண்ணூறு, ஒன்பது நூறு-தொள்ளாயிரம் என்று திரிவதில், ஒன்பது என்னும் பதம் தோல் என்னும் முதலையுடைத்தாதலும், பத்து நூறு என்னும் பதங்கள் முறையே நூறு ஆயிரம் என்றாதலும் இன்ன காரணத்தால் என்று ஏற்படவில்லை. இவ்விஷயங்களைக்குறித்து வெவ்வேறு காலங்களிலுண்டான இலக்கணங்களாலறியலாமேயென்று ஆவலுடன் பண்டைத் தோல்காப்பியத்தைத் திருப்பிப் பார்க்க,

"ஒன்பா னொகரமிசைத் தகர மொற்று
முந்தை யொற்றே ணகார மிரட்டும்
பத்தென் கிளவி யாய்த பகரங்கெட
நிற்றல் வேண்டு மூகாரக் கிளவி
யொற்றிய தகரம் றகார மாகும்"

(குற்றியலுகரப்புணரியல்-சூ. 39)

என்னும் சூத்திரமும், அதனுக்கு "நிலைமொழியாகிய வொன்பதென்னுஞ் சொல்லி னொகரத்திற்கு மேலாக, தகரம் ஒற்றாய்மிக்குவரும்; முன்சொன்ன வொகரத்தின் முன்னர், ணகரவொற்று இரண்டுணகரவொற்றாய் மிக்குவரும். வருமொழியாகிய பத்தென்னுஞ் சொற்றன்கட்பகரமும் ஆய்தமுங்கெட, நிலைமொழியிலிரட்டிய ணகரத்தின் பின்னர், ஊகாரமாகிய வெழுத்தினை நிற்றல்வேண்டும். வருமொழியாகிய பத்தென்பதி னீற்றதன்மேலேறிய உகரம் கெடாது பிரிந்து நிற்ப, ஒற்றாய் நின்ற தகரம் றகாரவொற்றாகும். எ-று.

இஃது ஒன்பதும் பத்துமெனநின்றன் முடியற்பாலவென்பது. பகர ஆய்தம் என்னாத முறையன்றிய கூற்றினான், நிலைமொழிக்கட் பகரக்கேடுங் கொள்க. குற்றியலுகரமும் அஃதேறிய மெய்யும் முன்னர்மாட்டேற்றாற் கெட்டன. உ-ம். தொண்ணூறு, எனவரும்"

என்னும் இளம்பூரணர் உரையும் உள்ளன. இதைப்போலவே தொள்ளாயிரத்துக்கும்,

'ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகார மிரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊ ஆ வாகு மியற்கைத் தென்ப
வாயிடை வருத லிகார ரகார
மீறுமெய் கெடுத்து மகார மொற்றும்"

என்னும் சூத்திரமும், "ஒன்பதென்னும் சொல்லின் முதனின்ற வொகரம் மேற்பத்தென்பதனோடுபுணரும்வழிக் கூறியவாறுபோல ஒகரமிசைத் தகரவொற்று மிகும். அவ்வொகரத்தின் முன்னின்ற னகரவொற்று இரண்டு ளகரவொற்றாம். வருமொழியாகிய நூறென்னுஞ் சொல்லும் நகாரமாகிய மெய்கெட, அதன்மேலேறிய ஊகாரம் ஆகாரமாமியல்பையுடைத்தென்பர். அம்மொழியிடை, ஓரிகரமும் நகாரமும் வரும். இதற்கீறாகிய குற்றியலுகரத்தினையும் அஃதேறி நின்ற றகார வொற்றினையுங்கெடுத்து, ஓர் மகரம் ஒற்றாய் வந்து முடியும். எ-று. மெய்யென்றதனான், நிலைமொழிக்கணின்ற பகரம் கெடுக்க. உ-ம். தொள்ளாயிரம் எனவரும்" என அவ்வுரையுமிருக்கின்றது. இச்சூத்திரங்களாலும் அவைகளின் உரையாலும் அறிவதென்னெனில், தொல்காப்பியஆசிரியர் ஒன்பது, பத்து, நூறு என்னும் வார்த்தைகளில் அக்ஷரங்கள் எவ்வாறுமாறின் தொல், நூறு, ஆயிரம் என்னும் பதங்களாகும் என்பதைத் தெரிவிக்கிறார் என்பதே. அவர்காட்டியவாறு அக்ஷரங்கள் ஒருங்காகப் பேதிக்கும் வழக்கம் தமிழிலும், மற்றெப்பாஷையிலுமில்லை. மேற்காட்டிய சூத்திரங்கள் பாஷாசாஸ்திரத்தின் (Philology) கொள்கைகளுக்கு முற்றுமுரணாயிருப்பதுபற்றித் தொல்காப்பியனார் காலத்திலேயே ஒன்பது முதலிய வெண்களைக்குறித்து ஒன்றும் தெரியாமற் போய்விட்டது என்பது வெட்டென விளங்குகிறது.

இஃதிப்படியிருக்க வீரசோழியத்தில்

"* * * ஒன்பதொன்பா னொடுதொண் டொள்ளும் பான்
பன்றுற்ற நூறுபதுபஃது பத்தநூ றுயிரமே."

என்றும், அதனுரையில் "ஒன்பதென்னும் எண்ணுக்கு ஒன்பானென்பதுந் தொண்ணென்பதுந் தொள்ளென்பதுமாதேசம். பத்தென்னுமெண்ணுக்குப் பானென்பதும் பன்னென்பதும் நூறென்பதும் பதுவென்பதும் பஃதென்பதும் ஆதேசமாம். நூறென்னுமெண்ணுக்கு ஆயிரமென்பதாதேசம்." என்றிருப்பது இயல்பே. ஆயின் வீரசோழியக்காரர் தொல்காப்பியக்காரரைவிட ஒருவிஷயத்திலும் தாழ்வில்லை; பழையஇலக்கணக்காரரைப்போலல்லாமல் ஒன்பது, பத்து, நூறுமுறையே தொல், நூறு, ஆயிரமாகின்றனவென்னும் விஷயத்தைச்சொல்லி அதன்மேல் ஏன் அவ்வாறாயினவென்பதை விரித்துக்கூறாது அவ்வளவோடேயே விட்டுவிட்டதுதான் விசேஷம்.

இவ்விஷயத்தில் நன்னூலார் மதமும் வீரசோழிய மதமும் ஒன்றென்பது,

"ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீஇப்பஃ தகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே."

என்பதனால் விளங்கும். இவ்விலக்கணங்களுக்குப் பின்னர் எழுதப்பட்ட வியாகரணங்களும் இவர்கள் மதமே தழுவி எழுதப்பட்டிருத்தலால், அவைகளை ஆராயவேண்டுவதில்லை. தமிழிலக்கணங்களிவ்வாறிருக்க,

கி-பி. 1225-லிருந்த கேசவர் அல்லது கேசிராஜர் என்பவரால் கன்னடத்திலெழுதப்பட்ட கன்னடவியாகரணமாகிய 'சப்தமணிதர்ப்பண'த்தில்

"ಒತ್ತುವಱಂ ಮಿಗೆ ಬರೆ-ಬತ್ತು ತೊಂಬತ್ತುಂ ಸಹಸ್ರ ತೊಳ್
ನೂಱಿಱೊಳೇಱ್ |
ಕ್ಕಂಸಾಸಿರ ಪಿರಿದೆನಲ್-ಒತ್ತು ತೊಂಬಯ್ಯುಂ ತೊಳ್ವಿಲಾಯಿರ
ಆದೇಶಂ ||

என்னும் சூத்திரம் காணப்படுகிறது. இதற்கு விருத்தி பிரயோகமாமாறு;

“ வத்தெவஷ்ரெ வரஜாஷொஸெ ஒம்பத்தகெஷொழு எ ஜாஷெஸஜக்கும்; வரஷொள் நூறிஷெஷாஸ ஸேஹஸாஸிரஷிஷெஷா ஸ ஒம்பத்தகெஷ் ஒம்பய் எஜாஷெஸஜக்கும்’’ என்பதும் “தொம்ப த்து, ஒம்பய்நூறு, ஒம்பய்ஸாஸிரம், தொம்பத்தொம்பய்ஸாஸி ரயோஜனமம் கிஸிஸிஷ்ஷிரி’’ என்பதுமே.[1] கேசிராஜர் மத மும் வீரசோழியக்காரர் மதமும் ஒன்றே என்பது இதனால் விள ங்கும்.

மற்றும் கி-பி. 1604-ல் ‘கர்நாடகசப்தாநுசாஸநம்’ என்று சம் ஸ்கிருதத்தில் எழுதிய கன்னட வியாகரணகாரராகிய பட்டாகள ங்கதேவர்

“ ஒப்பத்தோஸ்தொம்பத்தௌ’’

என்றுசூத்திரித்துப் பின்

“ ஒம்பத்து இதி அஸ்யதொம் இதி ஆதேஸஸ்ஸிஹாஹவதி பத் துஸ்ஸ்பேபரேந ஊஜஸஜாஷெ | மே-வரிது நித்யம் || ” என்று விருத் தியும் “ ஒம்பத்து, ஒம்பத்துபத்து, | தொம்மெ, தொம்பர் || பத் தவ்விதிகிம் | ஒம்பத்துநால்கு || ” என்று பிரயோகமும், இதனு க்கு “தொம்பத்து, நவதிஃ; ஒம்பத்துபத்து, வைதிரேவ; தொ ம்மெ, நவவாராஃ; தொம்பர், நவபுருஷஃ ஸ்த்ரியோவா | ஒம்பத்து நால்கு, ஷஷ்டிர்ஸஹித்யயஃ || என்று வியாக்கியானமும் எழுதியிரு க்கிறார். மேலும்,

“ஒம்பய்நூறுஸாஸிரே’’

என்று சூத்திரமும் ‘ஒம்பத்து இதி அஸ்ய ஒம்பய் இதி யாதேஸ ஸ்ஸிஹாஹவதி. நூறுஸ்ஸ்பே ஸாஸிரஸ்ஸ்பேவ பரே நஊஜஸஜாஷெ | மே-வரிது நித்யம் || ’ என்று விருத்தியும், ஒம்பய்நூறு, ஒம்பத்

(1) “பத்தென்பது வருமொழியானபோது ஒன்பதினுக்குதொம் என் பதாதேசமாகும்; பரத்தில் (வருமொழி) நூறானபோதும், ஆயிரமானபோ தும் ஒன்பதினுக்கு ஒம்பய் என்றாதேசமாகும்.’’

நூறு ; ஒம்பய்ஸாஸிரம், ஒம்பத்துஸாஸிரம் ; ஒம்பய்மெ, ஒம்பெய்வர் || நூறுஸாஸிரஇதிகிம் | ஒம்பத்துலக்கம் ||' எனப் பிரயோகமும், இதற்கு 'ஒம்பத்து இதி யாதேசாயம் ஆதேஸ: || ஒம்பை இதி யைஃகாம் அபிகேஷிஃசு ஹி || ஒம்பய்மெ, நவவாராஸ||" என்று வியாக்கியானமும் ஒம்பய்நூறு, ஒம்பய்ஸாஸிரம் என்னும் தொடர்களுண்டாவதற்கு விதியாகக் கூறுகிறார்.

மேற்கண்டபடி தமிழிலும் கன்னடத்திலும், இப்பதங்களைக்குறித்து இருக்கும் கஷ்டம் தெலுங்கிலில்லை. ஏனென்றால் இப்பாஷையில் முதற் பதத்தை ஆரம்பத்திலேயே தொம்மிதி என்று வைத்துக்கொண்டுவிட்டபடியால், அதினின்றுண்டாகும் தொம்மிதி பதி தொம்பை, தொம்மிதி நூறு தொம்மந்நூறு என்பன தானேபெறப்படும்.

ஆகவே திராவிடவியாகரணங்களெல்லாம் சந்தியில் ஒன்பது தொம்பது என்றாகின்றது என்று ஒரே ரீதியாய்ச் சொல்லியொழிந்தனவேயன்றி இவ்வாறாதற்குரிய காரணத்தை விளக்கினவல்ல. ஆதலால் இவ்வெண்களின் சுவரூபத்தைப்பார்த்துப் பாஷா சாஸ்திரோக்தமாய் ஏதேனும் சொல்லக்கூடுமோவென்றாராய்வோம்.

	தமிழ்	கன்னடம்	தெலுங்கு
9.	ஒன்பது	ஒம்பத்து	தொம்மிதி
90.	தொண்ணூறு	தொம்பத்து	தொம்பை
900.	தொள்ளாயிரம்	ஒம்பய்நூறு	தொம்மன்

மேற்காட்டிய ஒன்பது வார்த்தைகளுள் தொல் என்பது போன்ற ஒருபதம், தடித்த எழுத்துடைய ஆறு வார்த்தைகளுக்கு சாமான்னியமாய் இருக்கிறது. இது தற்செயலாய் ஏற்பட்டதாகத்தோன்றவில்லை. இவ்வாறு வார்த்தைகளினியற்கையை யொட்டி, தொல் என்பது தமிழ் ஒன்பது என்னும் பதத்தின் முதலிலும் இருந்திருக்கவேண்டும் என்று ஊகிக்கலாம். அப்பொழுது இவ்வெண் தொன்பது என்றிருந்திருக்கும். இந்த ரூபம் இன்னமும் தெலுங்கில் தொம்மிதி என்பதிற் காணப்படுகிறது. இப்பழைய ரூபம் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழிலும் கன்னடத்திலும் மறைந்துவிட்டது

போலும். இந்தப் பழம்பதம் திரிந்துவிட்டதினுல் தொல்காப்பிய முதலிய திராவிடவியாகரணங்களில் மாறுபாடு ஏற்பட்டன வென்பது விளங்குகிறது.

இவ்வெண்ணின் முதலிலிருந்த தகரம் மறைந்ததற்குக் காரணம் அடியிற் கூறப்போவதாயிருக்கலாமோ வென்று சங்கிக்கிறேன். அதாவது எண்டு, எட்டு என்னும் எண்களுக்குப்பின் தொம்பத்து, தொன்பது என்று வருவதில், முதல் எண்களினிறுதியிலிருக்கும் வல்லெழுத்தாகிய ட (டு) உச்சரித்தவுடனே, டகரத்தினும் மெல்லிய வல்லெழுத்தாகிய தகரம் உச்சரித்தல் கஷ்டப்படும். எண்டு தொம்பத்து, எட்டு தொன்பதுஎன்னும் இவ்விரண்டு வார்த்தைகளை அடுத்தடுத்து ஐந்து ஆறு தடவை உச்சரித்தால் தொம்பத்து தொன்பது என்பவற்றின் முதலிலிருக்கும் தகரத்தை உச்சரித்தற்குக் கஷ்டப்படும் என்பது தோன்றும். ஒருக்கால் இந்தக் காரணம்பற்றித் தகரம்கெட்டதோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது.

இனித் தோல் என்றாரம்பித்தால்அதற்கேதேனும் பொருளிருக்கவேண்டுமே என்று வினவின், அதற்கு விடை கொடுக்கக்கூடுமாவென்று யோசிப்போம். தோல் என்னும் மூலத்துக்கு தமிழிலிருப்பதுபோலவே மற்றெல்லாத்திராவிட பாஷையிலும் "பழைமை" என்னும் பொருளுண்டு. இப்பொழுது, தொல்பது தொன்பது, தொல்நூறு தொன்னூறு (தொண்ணூறு), தொல் ஆயிரம் தொல்லாயிரம் (தொள்ளாயிரம்) என்னும் பதங்கள் பழைமையான பத்து, பழைமையான நூறு, பழைமையான ஆயிரம் என்றுபொருள்படும். அஃதாவது பத்துக்குமுற்பட்டது, நூறுக்குமுற்பட்டது, ஆயிரத்துக்குமுற்பட்டது என்பது அர்த்தம் என்னலாம்.

இவ்வாறன்றி ஊனவிம்சதி, ஊனத்ரிம்சதி என்றாற்போல, ஊனபம்க்தி என்னும் வடமொழித்தொடர் ஒன்பது என்றாயிற்று என்று சங்கிப்பாருமுளர். இது வெகு பொருத்தமுள்ளதாயிருப்பினும் நாம் சித்தாந்தமாக்கிக்கொள்ளவொண்ணுது. ஏனெனின், முதலில், பம்க்தி என்னும் பதம் பத்து என்றாயிற்று என்று ஒப்புக்கொள்ளவேண்டும். அப்படியாகியிருக்கலாம் என்று கொண்டுவிடலா

ம் ; ஆயின் தகுந்தசாக்ஷிகாணேம். இஃதல்லாமல்தொண்ணூறுகொள்ளாயிரம் உண்டானதற்கு காரணம் இவ்வாறு கொள்ளுவதனுல் ஏற்படாது.

இன்னும் தொள்நூறு, தொள் ஆயிரம் என்று ஒருவாறு கொள்ளுவதுண்டு. அப்பொழுது தொளைக்கப்பெற்ற (ஊனமான ; குறைபட்ட) நூறு, ஆயிரம் என்றர்த்தம் கூறுகிறூர்கள். இப்படியாயின் தொள் பத்து தொண்பத்து என்ருகித் தொண்பது, ஒன்பது, ஒன்பது என்று திரிந்திருக்கவேண்டும்.

து· அ். கோபிநாதராவ்.

பாண்டவர்காலம்.

எமது வேதபுராணேதிகாசங்களின் பழமைகண்டு ஆற்ருணுப்பெரும் பொருமைகொண்டுழலும் ஐரோப்பிய பண்டிதர் சிலருடைய கொள்கையை மெய்யென மேற்கொண்டு நம்மவருள்ளுஞ் சிலர் சிலவிஷயங்களுக்குக் காலநிருபணஞ் செய்யத்தலைப்பட்டனர். அதுவாயிலாக நமது தொல்லாசிரியர் கொள்கைகளையுங் கூற்றுக்களையும் அவமதித்து அவற்றைப் பொய்மையின்பாலனவாக்கித் தள்ளுவாராயினர்.

புராணேதிகாசங்களிலும் மற்றைய நூல்களிலும் கூறப்பட்ட அரசர் பெயர்களுள்ளே எத்தனை விக்கிரமன், எத்தனை போசன், எத்தனை நந்தன், எத்தனை குலோத்துங்கன், எத்தனை நரேந்திரன் உளர் ? ஒரு குலோத்துங்கன் பெயர் ஒரு சாசனத்திற் காணப்பட்டவிடத்து முன்பின்னுள்ள குலோத்துங்கர்களெல்லாம் இல்லாதவர்களாய் விடுகின்ருர்கள்! ஒருவன் தன் புத்திரனுக்குத் தன்றந்தை பெயரையிட்டு வழங்குதலும், அப்புத்திரன் தன்றந்தைபெயரைத் தன்மகனுக்கிட்டு வழங்குதலும், அம்மகன் தன்றந்தை பெயரைத் தன் மகனுக்கிட்டு வழங்குதலும் ஆரியாசாரமன்ருே. இப்படியே ஒரு குடும்பத்தில் ஒருபெயர் எத்தனைமுறை மீளமீள இட்டு வழங்க

ப்பட்டுவருகின்றதென்பதை யாவருமறிவர். இங்ஙனம் வழிவழி மாறிமாறி வரும் பெயர்களை நோக்காது வேறு பிரபல வேதுக்க ளின்றி முன்னே பதினோந்தாந் தலைமுறையிலுள்ளவோரநபாயனுக்கு நட்பினனுயுள்ளானைப் பின்னுள்ள அநபாயனுக்கு நட்பினனென நாட்டுதல் வல்லார்க்குக்கூடுமாயினும் அஃதுண்மையின்பாலதாமோ!

நமது தெய்வப்புலவர்களும் உத்தமகவிகளுங் கூறிய காலங்களை நிராகரிக்கப்புகுதல் முறையா? தங்காலத்துள்ளார்க்கும் தமக்குப் பின்னுள்ள எதிர்காலத்துள்ளார்க்கும் நன்மைபயக்குமென்றெண்ணி க்கைமாறுகருதாது நூல்களை இயற்றிவைத்துப்போன உபகாரத் துக்கு நாஞ்செய்யுங் கைமாறு அவர்கூறிய காலங்களை நிராகரிப்ப தோ? அவர் சகாத்தம் எண்ணூறு எழுநூறெனப் பாடிவைத்த செய்யுட்களுக்கு நேரே பொருள் பண்ணுது ஐரோப்பிய பண்டிதர் கருத்துக்கிணங்கத் திரித்துப்பொருள் பண்ணப்புகுவதழகாமோ? ஐரோப்பிய பண்டிதர் ஒரேதுவை யெடுத்துக்காட்டி "இதனல் இ வன் இன்ன காலத்து விளங்கியிருத்தல்வேண்டும்" என்று சந்தேக ப்பொருளாகக்கூறியவற்றை, அவரைப்பின்பற்றுவார் சிறிதும் விசா ரமின்றித்துணிவுப் பொருளாகக் கொள்வதென்னை?

பாண்டவர்காலம் துவாபர கலியுகசந்தியென்று நூற்பிரமாண த்தோடு பாரம்பரியமாகக் கைக்கொள்ளப்பட்டுவரும் நமது கொள் கையைப்போந்த பிரமாணமின்றி மூவாயிரத்துநூறு வருஷங்களுக் கு முற்பட்டதாகக் கொள்ளப்புகுதல் உலகமலைவா மன்றோ! நமது முன்னோர் வாக்கினும் ஐரோப்பியர் ஊகவுரை சிறந்ததாமோ? ஐரோப்பியர் பெரும்பாலாரும் உலகந்தோன்ற ஆறுயிரம் வருஷ மெனக் கொள்பவராதலின் அவர்கள் நமது புராணேதிகாசங்கூறுங் காலங்களை ஒப்புக்கொள்ளார்கள். அக்கொள்கை அவர் மனத்தை விட்டு ஒருசிறிதும் நீங்காது. அதனை மனத்திடையிருத்திக்கொண் டே நமது காலங்களுக்கெல்லாம் ஊனங்கற்பிக்கின்றனர். அன்னோ ர்கற்பிக்குங் காலநிருபணத்தை நம்மவரும் ஆதாரமாகக்கொண்டு காலநிருபணம் பண்ணப்புகுதல் மண்குதிரைகொண்டு ஆறுதாண்ட லன்றே. நம் முன்னோர்கள் பாண்டவர்க்குப் பழமைகற்பிக்க விரும்பினவரேயாயின் பதினுயிரம் இருபதினுயிரம் வருஷங்களு

க்குமுன்னே அவனை வைத்திருக்கமாட்டாரா! அங்ஙனஞ்செய்த ற்கு நமது சிருஷ்டிகாலம் இடந்தராதா? அவர்காலத்தை உள்ள உள்ளவாறு கூறிப்போந்தாரேயன்றி ஐரோப்பிய பண்டிதரும் நம் மவரும் மெச்சிக்கொள்ளுதற்கேனும் நிராகரித்தற்கேனும் கூறினா ல்லர். அங்ஙனமாகவும் அவர் கூறிய காலத்தைத் தமது மனம் போலச் சுருங்கிய காலக்கிரமத்தோடு பொருந்தாமை நோக்கி அவ மதித்தலும் அசதியாடலுஞ் செய்யும் ஐரோப்பியராற் பெருஞ் சுட்டுப்பெறவேண்டி அவர்போல் நம்மவரும் ஆசங்கிக்கப்புகுவது பேதைமையின் பாலதாமன்றோ. உலகஞ் சிருஷ்டியாகிப் பலகோடி வருஷங்கள் சென்றனவென்றும், மனுசிருஷ்டியாகி ஐம்பது லக்ஷம் வருஷங்கள் சென்றனவென்றும் சாஸ்திர பூர்வகமாக நாட்டும் உத் தம ஐரோப்பிய பண்டிதருஞ் சிலருளரன்றோ. அவர்க்கும் நிந்தை கூறி அவர் கூற்றையுந்தள்ளித் தாங்கூறும் ஆறாயிரம் வருஷத்துக் குள்ளே எல்லாமடங்கவேண்டுமென்றும், அதனுள்ளும் நாலாயிரத் தை விருத்திகாலமாகத் தள்ள எஞ்சிய விரண்டாயிரத்தினுள்ளேயே நாகரீகந்தோன்றியதெனக் கொண்டு அக்காலத்திற்கு முற்பட்டவை களை எளிதில் நம்பலாகாதெனவுங் கொள்ளும் ஐரோப்பியபண்டி தர்பாற் பெறுஞ் சுட்டுஞ் சுட்டாமோ!

இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்தைஞ்ஞூறு வருஷங் களுக்கு முன்னே விளங்கினவரென யாவராலும் அங்கீகரிக்கப் பெற் றவரும் உத்தம வித்துவ சிகாமணியும் சோதிடசாஸ்திரத்திலும் கணிதத்திலும்தமக்கிணையில்லாதவருமாகிய வராகமிகிரர் தமதுபிரு ஹத்சங்கிதையிலே, ௧௩-ம் அத்தியாயத்திலே ௩-ம் சுலோகத்திலே, "விக்கிரம சகந்தொடங்குதற்கு இரண்டாயிரத்து ஐஞ்ஞூற்றிருபத் தாறு (2526) வருஷங்களுக்குமுன்னேயுள்ள உதிஷ்டிரன் அரசியற் காலத்திலே சப்தரிஷிகள் மகநக்ஷத்திரத்திலிருந்தன" என்றுகூறுத லின் பாண்டவர்காலம் 4500 வருஷங்களுக்கு முற்பட்டதென்பது வெள்ளிடை மலையன்றோ. [உதிஷ்டிரன்-தருமபுத்திரன்].

இங்ஙனம் சந்தேக விபரீதமறக் கரதலாமலகம்போலப் பாண் டவர்காலம் கூறப்பட்டுக்கிடப்ப, அதனை அறியாது சிலர் அவர்கால த்தை நிதானிப்போமெனக் கூறிப் பகீரதப் பிரயத்தனத்தோடு நன் னீர் தேடி நச்சுப் பொய்கை கண்டாராயினர்.

நம்முன்னோராகிய மகாவிருடிகளும் தெய்வப்புலவர்களும் பொய்யுரையாதவர்களென்பதை நன்றாக மனத்திடை யிருத்திக்கொண்டு அவர் வாக்கை மறைமொழியெனப் போற்றுதலே ஆரிய மக்களாகிய நமக்கெல்லாமுரிய கடனும். உலகத்தக விருளைப்போக்க அவதரித்துத் தீபங்களாக நூல்களையாக்கிவைத்துப்போன புண்ணிய மூர்த்திகள்,

"எல்லாவிளக்கும்விளக்கல்லசான்றோர்க்குப்
பொய்யாவிளக்கேவிளக்கு" என்னும்

திருக்குறளுக் கிலக்கியமானவர்களன்றோ. ஆதலால் அவர் கூறிய காலங்களைச் சித்த சமாதானத்தோடும் உண்மையெனக்கொள்ளல் வேண்டும். விளங்காமைகொண்டு ஒன்றைப்பொய்யெனத் தள்ளலாகாது. இப்போது விளங்காதன பின்னர் அறிவு விருத்தியாங் காலத்து விளக்கமாகும். கிறிஸ்து இன்னநாள் இன்ன காலத்திற் பிறந்தாரென்பதற்குப் போந்த ஆதாரமில்லாதிருக்கவும் ஐரோப்பியர் ஒப்புக்கொண்டு வழங்கி வருதலால் அவருமோர் சகபுருஷனாயினர். இக்கற்பனைசகமோ நமது உண்மைச்சகங்களை அளந்து நிலையிடுவது !!

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

அசோகன் காலத்துக்கு முந்தியும் சிலாசாசன முண்டென்பது.

தமிழிலக்க விஷயமாக யானும் ஸ்ரீமத்: கோபிநாதராயரவர்களும் எழுதியவைகளை ஆராய்ந்து சீர்தூக்கிய காரணிகர் ஸ்ரீமத்-வெங்கோபராயரவர்கள் நடுநிலைமையும் கலாவன்மையும் செந்தமிழ்ப் பத்திரிகாபிமானிகள் யாவரு மறிவர்.

அசோகன் காலத்துக்கு முந்தியும் சிலாசாசன முண்டென்றும் அதற்குப் பிரமாணம் "என்ஸைக்ளோ பீடியா பிரிட்டானிக்கா" (Encyclopaedia Britanica) என்னும் ஆங்கில சப்த சாகரம் என்றும் யான் கூறியது போதாதெனக் காரணிகர் கூறித் தொகுதியும்

பக்கமும் வினவுகின்றூர்கள். மேற்கூறிய நூல் அகாராதியாதலின் தொகுதியும் பக்கமுங் கூறுவ தநாவசியகம். அதிலே "ரயிட்டிங்" (writing) என்னுஞ் சொல்லை நோக்கி அது சம்பந்தமாக வரும் விஷயத்திலே "போட்டகிராப்" படத்தோடு காட்டப்பட்டிருக்கும் அசோகன் காலத்துக்கு நூற்றைம்பது வருஷங்களுக்கு முந்திய சிலாசாசனத்தின் வரலாற்றைக் கண்டு தெளியுமாறு ஸ்ரீமத்-வெங்கோபராயரவர்களை வேண்டுகின்றேன்.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.

ஸ்ரீ

பாண்டவர்காலம். II.

ஸ்ரீமாந்-முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் "பாண்டவர் காலம்" பற்றி எழுதிய விஷயம் இதற்கு முன்பு அமைந்துள்ளது. பிள்ளையவர்கட்கு நம்முன்னோர்களிடமுள்ள பேரபிமானமும்பக்தியும் அவ்வியாசத்தால் நன்கு விளங்குகின்றன. ஆரியராகிய நாம் கொள்ள வேண்டியதும் அத்தகைய அன்பேயாம். பிள்ளையவர்கள் இக்காலத்துச் சரித்திரவாராய்ச்சி செய்வார் செய்யுந் தவறுகள் இன்னவையென்று விளக்கியெழுதியவற்றில் ஒருபாகம் உண்மையுடையதேயாம். ஆனல் தக்க ஆராய்ச்சி யுடையார்க்கு அத்தவறுகள் அதிகம் இரா. இயற்கையினுரிய தவறுகள் அவர்கட்குஞ் சிலவுண்டெனினும், அவைபற்றி அவர் இகழ்தற்குரியராகாரென்பது பிள்ளையவர்கட்கும் ஒத்ததே. ஐரோப்பியராற் பெருஞ்சூட்டுப் பெறுதல்வேண்டி முன்னோர் கூற்றுக்களை நம்மவர் இழிக்கின்றூர் என்று பிள்ளையவர்கள் கருதியது, யாரேனும் ஓர் அற்பருக்குப் பொருந்துமேனும், பிரபலராக விளங்கும் பண்டிதர்க்குச் சிறிதும்ஒவ்வாதது. அங்ஙனம் நினைக்கும் அறிஞர் இங்கெவரும் இரார். ஐரோப்பியர் கொள்கையை மறுத்து நிறுத்திய அவர் விஷயங்கள் எத்தனை யில்லை? அவைகளுள் இரண்டொன்று தவறினும் பெரும்பாலவும் நன்முடிபுகளாகவே அமைந்தன. பிள்ளையவர்கள் மட்டும் தனித்துநின்று இவ்வாறு அறிஞர்க்கெல்லாம் இழுக்குக் கூறுவது முறையன்று.

தேசசரித்திரம் என்பது நாம்வழங்கியதன்று. மேனாட்டாரால் நெடுங்காலமாக மதிக்கப்பட்டுவரும் கலாவிசேடங்களுள் அஃதொன்று. நம் முன்னோர்கள் அதை ஒருகலையாக மதித்துக் கவலைசெலுத்தியவர்களல்லர். தாம் கண்டுங்கேட்டும் போந்த வரலாறுகள் அவர்களால் எழுதப்பட்டுள்ளனவாயினும், அவை சரித்திரத்துக்குரிய இலக்கணங்களோடும் அமைந்தனவாகா. அவர்கள் கூறியவற்றுட் பல விஷயங்கள் ஏனைய வரலாறுகளுடன் ஒப்பவைத்து ஆராய்தற்கும் உரியன. சரித்திரக்கலையின் சிறந்த வுறுப்புக்களுள் ஒன்றாகிய காலவரையறையை முன்னுள்ளோர் மிகுதியும் போற்றி வந்தவரென்று துணிய முடியாது. "காலங் களனே காரண மென்றிம், மூவகை யேற்றி மொழிநரு முளரே" என உள்ளதை விட்டவரல்லரோ நம்மவர். இப்போது ஆராயப்படுகின்ற ஆராய்ச்சிகளில் காலதேசங்களுக்கிணங்கப் புதிதுபுதிதாய் அமையும் கருவி கருத்துக்களின்பலத்தால் அபிப்பிராய பேதங்களுண்டாகுமாயின், அது முன்னோரைக் குறைகூறப்புகுவதாமா? நம் முன்னோரால் ஆராயப்பெற்ற வானசாஸ்திர முதலியவற்றில், இப்போது அமைந்துள்ள கருவிகளால் அவர் கருத்தோடு மாறுபடுவனவும் புதியனவுமாகிய அபிப்பிராயங்கள்வெளிவருகின்றன. அதனால் முன்னோர்க்குநேர்ந்தஇழுக்கென்னை? முன்னவர் அபிப்பிராயங்களிற் சில, பின்னோராற் றவறியவையென்று தெளியப்பட்டிருக்கவும், அவற்றைப் பூசிமெழுகுதலால், முன்னோர்க்கில்லாத புகழ் புதிதாய் விளைந்துவிடுமா? பின்னவரெல்லாம் அறிவிற்குறழவேண்டுமென்பதுந் திருவருட்கட்டளையோ? உலக விருத்தி யென்பது, முன்னோர் தொட்டதைப் பின்னோர் தொடர்தலும், பின்னோர் தொடர்ந்ததை அவர் வழியினர் முடித்தலுமென்று இவ்வாறுஇடை யீடில்லா நிகழ்ச்சியால் உண்டானதேயன்றி, சிருஷ்டியின் அற்புதங்களுளொன்றாகிய மூளையை மழுக்கிக்கொண்டதால் ஆனதன்று. நாம் இவ்வாறு கூறியதால், இக்காலத்தவர் செய்யும் ஆராய்ச்சியெல்லாம் மறுக்கத்தகாதவை யென்பது கருத்தன்று. ஆராய்ச்சியிற் பற்பல தவறுகள் நேருதலும், அங்ஙனம் நேருந் தவறுகள், கருவிகள் அகப்பட அகப்பட அவ்வக்காலங்களில் திருத்தப்பட்டு முடிவு பெறுதலும் இயற்கையே. புதியதாய் ஒரு கலை நிலைபெறவேண்டுமாயின், அதற்கு எத்தனை காலஞ்செல்லவேண்டா?

இப்போது நிரம்பியுள்ள கலைகளெல்லாம் இரண்டொருவராற் சில்லாண்டில் முற்றுப்பெற்றன என்று சொல்ல முடியுமா? இவையெல்லாம் முற்போக்குடைய மக்களுக்கு ஒருவர் சொல்லாதே இயல்பே தெரிவனவாம். நம்முன்னோர் நம்மேற் சுமத்தியுள்ள கடமைகள் பலவழியாகவும் நம்மைச்சூழ்ந்துள்ளன. நாம் அப்பெரியோர்மேற் பொழியும் வாழ்த்தும் வணக்கமும் அவ்வாறே பல துறைப்பட்டனவாம். அவர்கட்கும் நமக்கும் இடையிலுள்ள இத்தொடர்புகள், இன்னோரன்ன ஆராய்ச்சிகளால் அற்றுவிடுமென்று பிள்ளையவர்கள் அஞ்ச வேண்டிய ஆவசியகமேயில்லை.

பாண்டவர்காலத்தைப் பிள்ளையவர்கள் ஒரேஒரு காரணத்தால் ஸ்தாபித்திருக்கிறார்கள். இதை நோக்கின், அவர்கள் எதிரிகள் நியாயங்களைச் சிறிதேனும் ஆராய்ந்தவர்களாகக் காணவில்லை. பிள்ளையவர்கள்காட்டிய சுலோகம் எதிரிகள் ஆராய்ச்சிக்கு அகப்படாதது என்னும் நம்பிக்கையுடனே அவர்கள் அதை வெளியிட்டதாகத் தோற்றுகிறது. அங்ஙனம் வெளிவருதல் அறிஞர்க்கழகா? நம்முன்னோர் கூற்றை உண்மையென்று உலகறியநாட்டவேண்டின், எதிரிகள் கூறுவனவற்றை ஒவ்வொன்றாய் எடுத்து மறுத்தன்றோ ஆகவேண்டும்? அவ்வாறில்லாத வெற்றடுக்குச்சொற்கள், ஆராய்ச்சியில்லாத் துரபிமானிகளை ஒருகால்மகிழ்விக்குமாயினும், அறிஞர்க்கேற்றதாமோ? பாண்டவர்காலம் 5000ஆண்டு இல்லையென்பார்கூற்றைப் பிரபல வேதுக்களான் மறுத்துப் பிள்ளையவர்கள் நாட்டுவார்களாயின், எமக்கெல்லாம் உண்மையிற் பேருவப்பேயாம். அதுபற்றித் துரபிமான முடையோமல்லோம். இவ்வாறன்றி யாண்டும் பரவிவருகின்ற இச்சரித்திரவாராய்ச்சி செய்வாரையெல்லாம் முறையன்றிப் பொதுப்பட இழித்துக்கூறுவதும், அவர்கட்கு உபதேசிக்கப்புகுவதும், பழங்காலத்துச் செல்லக்கூடியதாயினும், முற்போக்கில் நிற்கும்இற்றையுலகத்தவர்க்கு சமுத்திரகோஷத்தின் முன் சங்கொலிபோல் உபயோகமற்றதாகுமென்பது திண்ணம். இது கிடக்க. பிள்ளையவர்கள் துணிபாகக்கொண்ட பாண்டவர்காலம் பற்றி உசாவுவன வருமாறு:—

விஷ்ணுபுராணத்தில், பாண்டவர் வழியினராகிய பரீக்ஷித்துக்கும் மகதநாடாண்ட நந்தரிற் கடையிலிருந்த மகாபதுமநந்தனுக்கும்

இடையே 1015-வருஷங்கழிந்ததெனவும்*, வாயுமற்சபுராணங்களில் அவ்விடைக்காலம் 1050 எனவும், பாகவதத்தில் 1115-வருஷமெனவும்† கூறப்பட்டுள்ளன. நந்தர்கள் 100-வருஷம் ஆண்டனரென்றும் அவரையடுத்துப் பட்டத்துக்கு வந்தவன் மவுரியவழிமுதல்வனாகிய சந்திரகுப்தனென்றும் அப்புராணங்களே சொல்லுகின்றன. இச்சந்திரகுப்தன் 2200-வருஷங்கட்கு முன் விளங்கினவனென்பது பிள்ளையவர்களும் அறிந்ததே. ஆயின் அக்குப்தனுக்கு முன்னிருந்த, அஃதாவது 2200—2300 வரையிருந்த நந்தர்களிலொருவனாகிய மகாபத்மனுக்கு 1150-வருஷங்கட்குமுன் பரீக்ஷித்து அரசாண்டனரென்று ஏற்படுகின்றது. இவற்றால் பரீக்ஷித்தின் காலம் (2300, 1151)—3451 என்பது ஆகும். மேற்கூறிய புராணக் கூற்றுக்களின்படி பாண்டவர் காலம் 5000 வருஷமென்பதியாங்ஙனம் ?

பிள்ளையவர்கள் எடுத்த சுலோகம், வராகமிகிரர் தம் நூலில் கர்க்கசித்தாந்தத்தினின்று மேற்கோளாகக்காட்டியதேயன்றி, அவரியற்றியதன்று. பிள்ளையவர்கள் அச்சுலோகத்துக்குக் கொண்டபடி 4500-வருஷத்துக்கு மேற் பாண்டவர்காலம் ஏற்படாததென்னை? 5000-என்பது மரபாதலின் அதற்கு விரோதமாக 500-ஆண்டு குறைத்து நிற்றலால் அச்சுலோகப்பொருள் உண்மையாகுமா ? பெரும்பாலும் எட்டியதே எனின், அது "முக்காலே அரைக்காற்கிணறு தாண்டினன்" என்பது போன்றதுதானே ? மேலும் அச்சுலோக கர்த்தாவாகிய கர்க்காசாரியர் காலம் இற்றைக்கு2100 வருஷங்கட்கு முன்னதாமென்பது முடிபாதலின், அவர்தமக்குப்பிற்பட்ட விக்ரமசகத்தை எடுத்தல்எவ்வாறியலும்? அப்பெரியவர்தமதுகணனத்தை கி. மு. 204 லிருந்த சாலிசூகனோடு முடித்தலால் கி. மு. 57-உடன் முடிந்த விக்கிரமன் காலம்வரை அவர் அதைக்கொண்டு சென்றார் என்பதற்கில்லை. இவற்றால் வராகமிகிரர் காட்டிய கர்க்கசுலோகத்திற்குப் பிள்ளையவர்கள் கொண்ட பொருள் பொருந்துமா ?

இற்றைக்கு 747 வருஷத்துக்கு முன் கல்ஹணன் என்னும் பிரசித்த பண்டிதரால் இயற்றப்பட்ட இராஜதரங்கணி என்னும் காஸ்

* 12. ஸ்கந்தம்—2. அத்தியாயம்.

† நாலாம் அமிசம்—24. அத்தியாயம்.

மீர அரசர் சரித்திரத்தில் 1800-வருஷத்துக்கு முன்னிருந்த கானிஷ்கராஜனுடைய புத்திரன் அபிமந்நியுவுக்கும் பாரத அரசராகிய யுதிஷ்டிரருக்கும் இடையே 1268 வருஷங்கழிந்ததென்று சொல்லப்பட்டுள்ளது. அவர் கூறிய இவ்வளவைக்கொண்டு கணிப்பின் யுதிஷ்டிரர்காலம் (1268—1800) 3068-முன்பென்று ஆகின்றது. இஃது 5000 ஆண்டு என்பதனோடு மாறுபடாதா ?

கர்க்காசாரியர் (வராகமிகிரரால் எடுத்தாளப்பட்டவர்) சந்திரகுப்தன்வழியினனாகிய சாலிசூகனைப்பற்றி எழுதுமிடத்துத் தமது சித்தாந்த நூலில் அடியில் வருமாறு கூறுகின்றனர் :—

"மதுரையையும் பாஞ்சாலதேசத்தையும் சாகேதத்தையும் அழித்தபின் யவனர் (கிரேக்கர்) குசுமத்வஜபட்டணத்தை அணுகுவார்கள். புஷ்பபுரம்பிடிபட்டபின் மற்றமாகாணங்களெல்லாம் ஒழுங்கில்லாது நிச்சயமாக நிலைதடுமாறும். வெல்லப்படாத யவனர்கள் மத்தியதேசத்தில் தங்கமாட்டார்கள். கொடுமையும் அஞ்சத்தக்கதுமானபோர் அவர்களுக்குள்ளே நிகழும். யவனர் அழிந்தபின், யுகக்கடையில் அயோத்தியாவில் ஏழு வலிய அரசர் ஆளுவார்" என்பது. இவ்விஷயமே பாணினிவியாகரணத்துக்குப் பேருரையிட்ட பதஞ்சலி பகவான் தம்மகாபாஷ்யத்தில் உதாரணமுகத்தால் "யவனர் சாகேத்தைப்பிடித்தனர்" "யவனர் மத்தியதேசத்தைப் பிடித்தனர்" எனக் காட்டியுள்ளார். இப்பதஞ்சலி முனிவர் சந்திரகுப்தனது சபையையும் புஷ்பமித்திரன் சபையையும் உதாரணமாகக்காட்டுதலால் அவர் அவ்வரசர்க்குப்பின் இருந்தவரென்பது தெள்ளிது. இவ்யவனப் படையெடுப்பு அக்காலத்தில் நிகழ்ந்தமைக்குப் புறதேசக்கருவியும் சிறந்த சான்றாக வுள்ளது. மவுரிய அரசனாகிய சாலிசூகன் காலத்து விஷயமாகக் கர்க்கர் எழுதியதில் "நிகழும் யுகக்கடையில்" என்றிருப்பதற்குச் சிறந்தபொருள் யாது ?

இவ்வாறே எழுதிச்செல்லின் விஷயம் அதிகமாதலால் விரிவஞ்சிநிறுத்திக்கொண்டு, இவற்றுக்குமட்டும் தக்க விடை கூறுமாறு பிள்ளையவர்களை வேண்டுகிறேம். இவை முடிந்ததும் சோதிஷ சம்பந்தமான பல விஷயங்களை உசாவக்கூடும். மேலே காட்டியது, பாரதகாலத்தை நாம்அளந்து எழுதினபடியன்று. நம்முள்ளே

விவாதம் வளருவதினும் மற்றொரு சிறந்தவழியுள்ளது. பாரதகால விஷயமாக வேலங்கை ஸ்ரீமத்-கோபாலையரவர்கள் "Chronology of Ancient India" என்றொரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார்கள். அது சென்னை "மெஸர்ஸ். ஜி. நடேசன் அண்டு கம்பெனி" யிற் கிடைக்கும். பிள்ளையவர்கள் அதன்பேரில் உறுதியாக நிலைக்கக்கூடிய மறுப்புக்களை எழுதிப் பத்திரிகை வாயிலாகவேனும் புத்தக வாயிலாகவேனும் வெளியிடுதல் உலகோபகாரமாம். இவ்வாறல்லாதவை எழுச்சிகொண்ட ஆரியமக்களை அடக்கும் வலியற்றவை என்பது ஒருதலை.

மு. இராகவையங்கார்.

'நல்லொழுக்கம்'

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

இப்பேருலகில் மன்னுயிர்களுக்கு மகுடமும் மகிமையும் ஆவது அவரவர்களுடைய ஒழுக்கமேயாம். மனிதர்களுக்கு நற்குணமே எல்லாப் பேறுகளிலும் பெரும் பேறும். அவர்களுக்கு உயிரும் அதுவே கௌரவமு மதுவே. அனைவரும் உள்ள முவந்து அங்கீகரிக்கத்தக்க ஆஸ்தியு மதுவே. யோக்கியதை எந்தெந்த நிலைமைக்கும் பெருமை யுண்டாக்கும். எவ்வளவு தாழ்ந்த ஸ்திதியையும் உயர்த்தும். சற்குணம் செல்வத்திலும் அதிகச்செல்வாக்குள்ளது. பிரசித்தி பெற வேண்டுமென்கிற பேராவலில்லாமலே பலவிதமான புகழையும் உண்டாக்கும். சற்குண முண்டாயின் அதனோடு சகல விதமான செல்வாக்கும் பெருகும். எப்படியெனில் யோக்கியதை, உண்மை, மாறுபடாத மனவுறுதியாகிய நற்குணங்களே செல்வாக்கை யுண்டாக்குகின்றவை. மனிதர்களுக்கு நற்குணங்கள் உள்ளவரிடத்தில் உண்டாகும் நம்பிக்கையும் மதிப்பும் மற்றெந்த குணமுள்ளவரிடத்திலும் உண்டாவதில்லை.

"ஒருதேசத்தை உயர்த்துவதும் ஒருதேசத்தைப் பலப்படுத்துவதும், ஒருதேசத்திற்கு மகத்துவம் உண்டாக்குவதும், அதன் அதிகாரத்தைப் பரப்பி அதற்குச் செல்வாக்கு உண்டாகப் பிறர் அதற்கு அடங்கி அதை அபிமானிக்கும்படி செய்வதும், இலக்ஷாதிலக்ஷம் பெயருடைய இருதயத்தை வணக்கி அதற்கு முன் இதர தேசத்தார்கள் சர்வம் அடங்கித் தலை வணங்கும்படி செய்வதும், கீழ்ப்படியச் செய்வதற்கு ஏற்றகருவியும், மேன்மை பெறுவதற்கு மூலாதாரமாயிருப்பதும், ஒரு தேசத்தார்க்கு மெய்யான சிங்காசனம், கிரீடம், செங்கோல் ஆகிய இவைகளை விளைவிப்பதும், ஒருவருடையகுலப் பெருமையல்ல; நாகரீகப்பெருமையுமல்ல; புத்திவிவேகங்களின் திறமைமாத்திரமுமல்ல; பின்னென்னவெனில், நல்லொழுக்கமாகிய யோக்கியதையின் பெருமையேயாம். இதுவே மனிதருக்கு மெய்யான குலவிருது வித்தையாம்."

யோக்கியதை யென்பது மனிதனுடைய நல்ல சுபாவத்திற்கு ஓர் பேரடையாளமாம். அது நீதிநெறியே வடிவெடுத்து வந்ததன்றி வேறல்ல. நற்குண முள்ளவர்கள், மற்றெல்லோரும் தத்தமிருதயம் போலவே நம்புவதற் கிடமாயிருப்பது மாத்திரமேயன்றி, செம்மையாய் அரசாளப்படும்இராசாங்க மனைத்திலும் உபயோகமானகாரியமனைத்தையும் நடத்துவதற்குரிய சிறந்தமுதற்காரணமுமாகின்றார்கள். ஏனெனில் முக்கியமாய் இவ் வுலகத்தை யாள்வன நீதிநெறிகளேயன்றி வேறல்ல. ஒரு தேசத்தின் பலம் தொழில் நாகரீகம், இவையனைத்திற்கு மாதாரம் அங்கங்குள்ள மனிதர்களுடைய நடத்தையே. தேசரக்ஷணத்திற்கு மூலாதாரமும், இதுவே. சட்டதிட்டங்களும், நிபந்தனைகளும் இதினின்று உற்பத்தியானவையே. கடவுளுடைய கோணுத கருணையால் இந்தப் பிரபஞ்சத்தில் சகலதேச ஜாதி மதஸ்தர்களுக்கும் அவரவர் நடத்தைக்கு ஏற்றவண்ணம் இன்பத்துன்பங்கள் அமையுமே யன்றி மற்றப்படி யமையா. ஒரு காரிய முண்டானால் அதற்குக் காரணமுமுண்டென்பது எப்படிநிச்சயமோ, அப்படியே அவரவருடைய நடத்தையும் அதததற்கேற்ற பயனை விளைவிக்குமென்பது நிச்சயம்.

ஒருவன் அறிவிற் பண்படாதிருப்பினும் அற்ப சாமர்த்திய முள்ளவனாயிருப்பினும், தனஞ்சிறியனாயிருப்பினும் அவன் ஒழுக்கமட்

டும் மாறுயர்ந்திருக்குமானால் எவ்விதத்திலாயினும் அவன் மேன்மையை அடைவான் என்பதற்குச் சந்தேகமில்லை. நல்லஇருதய பரிபாகமுள்ள அனைவருக்கும் அமையத்தக்கதான விவேகம், ஒழுக்கம், உழைப்பு, ஈவு, இரக்கம் முதலிய நற்குணங்கள் மட்டு மிருந்தாற் போதும்; இவைகளைக் கொண்டு ஒருவன் எதைத்தான் சாதிக்கமாட்டான்? கல்வி, குணநலம் இவற்றின் உதவி மட்டு மிருக்குமாயின் எவ்வளவு அற்ப சாமர்த்தியவானாயினும், மற்றெந்தப்பொருளின் உதவியும் சிறிது மில்லாமலே உலக வியாபார விஷயத்தில் எவ்வளவு போட்டிகளும் பொறாமைகளு மிருந்தாலும், அவற்றின் நடுவண்தாமே மேலிட்டு எவ்வகை அருந்தொழிலும் செய்ய மாட்டுவான். பதவி எவ்வளவு உயர்ந்திருப்பினும், எவ்வளவு தாழ்ந்திருப்பினும் யோக்கியதை யுடையோருக்கு எக்காலமும் மதிப்புண்டாம்.

ஒருவனுடையவாய்மொழியையும் ஆதரவாகக்கொண்டுநிற்காத உண்மை, மனநிறை, நன்மையாகிய இவைகளே ஒருவனுடைய குணங்களில் முக்கியமானவை. அவைகளே சுகிர்தத்திற்குக் கைமாறின்றித் தொழும்புசெய்யத்தக்க உள்ளத்திற்பிறந்த ராஜபக்தராம். இக்குணங்களோடு மனவுறுதியும் சேருமாயின் ஒருவனுடைய வல்லமைக்குத் தடை யாது? அவன் நன்மை செய்தற்குச் சலியான். தீமைகளை வெல்வதற்குப் பின்வாங்கமாட்டான். எப்படிப்பட்ட வருத்தங்களையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் உத்தரிக்கவும் வல்லவனாகின்றான். மனநிலை மாறாத நெறியோனுடைய சற்குணம் நன்றாய்ப் பிரகாசிப்பது அவனுடைய கஷ்டகாலத்திலேதான். மற்றவை யெல்லாம் துணைநில்லாது தவறிப்போக, மனநிறையும் ஆண்மையுமே அப்போது அவனுக்கு முக்கியாதாரமாகின்றன. ஆகவே நன்னடக்கையுடைமையே இவ்வுலகில் உயர்ந்த பெறும்பேறு என்று ஒவ்வொருவனும் அதைத் தனித்தனி நாடுவது கடன்.

உயர்ந்த பதவியை அனுசரித்து ஒழுகும் ஒழுக்கமும் சிந்தையுமுள்ளவன் அப்படிப்பட்ட எண்ணம் சிறிதேனும் இல்லாதவனைப் பார்க்கிலும் மிக மேன்மை பெறுவானென்பதற்கு ஐயமில்லை. மிகவுயர்ந்த சித்தி பெற எத்தனிக்கிற எவனும் தான் ஆதியிலிருந்த நிலைக்கு வெகுதூரம் உயர்ந்த நிலையை அடையாமற்போகான். ஒருவன்

அடைந்த பதவியானது தான் பெற நினைத்து முயன்ற பதவிக்கு மிகவும் இளைத்திருப்பினும் உயர்ந்தோங்க வேண்டுமெனச் செய்த எத்தனம் தன்னளவில் எப்பொழுதும் பயன்படாதிராது.

வெளிக்குத்தோன்றுகிறபடியே உள்ளத்திலுமிருப்பது ஒருவனுக்கு அத்தியாவசியமாம். ஒருவனுக்கு உரையும், ஒழுக்கமும், உள்ளமும் ஒத்திருக்கவேண்டும். சொல்லிலும் செயலிலும் நிறைவுடைமையே யோக்கியதைக்கு முதுகெலும்பு என்னலாம். பக்திபூர்வமாய் வாய்மையைச் சார்ந்து ஒழுகும் ஒழுக்கம் அதன் முக்கிய லக்ஷணமாம். சொல்லிலன்றிச் செயலிலும் உண்மையுடைமை யோக்கியதையின் மேன்மைக்குப் பிரதானம். தன்னையும் மதித்துப் பிறனையும் பெருமைப்படுத்தும் தன்மையுள்ள ஒவ்வொருவனும் சொன்ன சொற்படி தவறாது செய்து ஒன்றிலும் பொய் புரட்டு இல்லாமல் நடக்கக்கடவன். மெய்மையுடையோன் அந்தரங்கத்திலும் பகிரங்கத்திலும் செய்வதை நேர்மையாகச் செய்வான். இவ்வித தர்மபுத்தி ஒருவனிடத்தில் உளதாயின் அது அவனுடைய குணத்தை நாழிகைதோறும் நாள் தோறும் உருவாக்கி அவனை மேன்மை பெறச்செய்கிறது.

நல்லஅப்பியாசத்தினால் ஒருவனுடையயோக்கியதை எவ்வளவு அதிகமாய் உறுதிப்பட்டு நிலைநிறுத்தப்படும் என்பதைச்சற்றுவிசாரிப் போமாக. அப்பியாசங்களின்கூட்டமே மனிதனாவன். அதுவே இயற்கைக்கு இரண்டாவதாம். ஆனதுபற்றியே, கெட்ட வழக்கம் யாதொன்றும் நம்மேல் வந்தேறாவண்ணம் மிகுகவனமும் சாக்கிரதையுமாயிருக்கவேண்டுவதவசியம்; ஏனெனில் ஒருவன்குணம் ஒருமுறை தவறியஇலக்கு எதுவோ அதில்அக்குணத்திற்கு எப்பொழுதும் துர்ப்பலம்தான். ஒருமுறை நெறிதவறிச் சீருக்குவந்தவனுக்கு ஒருபொழுதும் நெறிதவறாதிருந்தவனைப் போல் அத்தனை யுறுதியுண்டாகக் காலஞ் செல்லும். எங்கே பயின்றாலும் பழக்கம் நம்முடைய எத்தனமின்றி நமக்குத் தோன்றாவண்ணமே யியலும். முதலிற் பழக்கத்திற்குச் சிலந்தி நூலினும் அதிக பலமில்லை யெனத் தோன்றக் கூடும். ஆனால் எதையும் ஒரு முறை பயின்று வருவித்துக் கொண்டால் அப்பால் அந்தப் பயிற்சி நம்மை இரும்புச்சங்கிலியாற் கட்டிக்

கொள்வதுபோல் இறுகக்கட்டிக்கொள்ளும். ஆகவே ஒருவன் ஆயுள் காலத்தில் தனித்தனி நடக்கும் சிறிய சங்கதிகளும் ஒன்று சேர்ந்து பெருமலையாகிவிடும். ஒருவனுடைய மானம், கருத்து, முயற்சி, மனநிறை இவை யனைத்தும் கேவலம் எண்ணத்தினல் அமைகின்றவைகளல்ல, அவைகளுக்குப் பழக்கமே முதற் காரணமாம். நமக்குப் பருவம் ஏறஏற, நமக்குச்சுதந்தரமான பிரவிர்த்தியிலும் நாமெனப்படுவதிலும் ஒருபாகம் பழக்கத்தில் தொங்கி நிற்கும்படியாகின்றது. சிறு பருவத்தில் நற் பழக்கம் அமைவது மிகவெளிது. அமைந்த பழக்கம் ஜீவன் உள்ளளவும் நிலைபெறும். "இளமைபிற்கல்" என்னு ஒளவையார்சொன்னது இதனையே வற்புறுத்தும். பருவம்ஏறப் பழக்கத்திற்கு பலம் ஏறி யோக்கியதைக்கு உருவம் அமைவதினல் நூதன வழியில் விலகுவது மேன்மேலும் கஷ்டமாம். ஆனது பற்றியே சற்குணமும் மனநிறையும் ஒருவன் பாலியத்திலிருந்தே பழகி வந்து மேன்மேல் வயது உடையவனுக ஆக சன்மார்க்கத்திற் சிறிதேனும் குறையாது நடப்பானுகில், அவனே இப்பூமிக்கு ஒருதிலகமாவான்.

சாதுக்கள், தம்பெருமையைத் தாம் அறியுந்திறமையுடைமைக்காகவே மேலாகக்கொண்டாடப்படுகின்றனர். அவர்கள் தமதுகுணத்தை மதிப்பது அது மேலுக்குத்தோன்றுமளவு மாத்திரமேயல்ல; தம்மனச்சாக்ஷிக்கு மெய்ப்படஉள்ளதென்று தன் மனதுக்குத் தோன்றுமளவேயாம். அவர்களுக்குத்தம்மானமும் உண்டு, அம்முறையே பிறர்மானமும்உண்டு. தன்னளி அவர்கள்கண்ணுக்குத் திவ்வியகுணமாயிருக்கும். அதினின்று உற்பத்தியாவன விநயம் தயை அன்பு பொறை அடக்கமிவைகளாம். சாந்தகுணம் மேன்மக்களுடைய யோக்கியதைக்கு உத்தமபிரமாணமென்பது மெய்யே. தன்னில் இழிந்தோர் தன்னைச்சார்ந்தோர் தனக்கு ஒப்பாவோர் ஆகிய பிறருடைய மனதை வருத்தலாகாதென்று நினைவிலிருத்திக் கொள்ளும் இயற்கையும், அவர்கள்மானத்தை அபிமானிக்குமியல்பும் சுத்தசாதுவின் ஒழுக்கம் அனைத்திலும் வியாபித்திருக்கும். அவன் தன் பாக்கியத்தையும் பலத்தையும் யோக்கியதையையும் குறித்து வீம்புபாராட்டான். கருமம் சித்தித்ததென்று அவன் மனம் பூரிப்பதில்லை. சிதறியதென்று மெத்தவும் குன்றிப்போவதில்லை. தன்

கருத்துக்களைப்பிறருக்கு வலிந்துசொல்லான். ஆனால்சமயத்தில் தன் மனக்கருத்தை ஒளிக்காமல் தாராளமாய் எடுத்துரைப்பான். அவன் கைமாறொன்றையும் எதிர்பார்த்துஉபகாரம் செய்யான். இவ்விதமான சன்மார்க்கங்களை ஒவ்வொருவனும் படிபெடுத்தொழுகுவானாக.

இனி ஒழுக்கத்தின் வல்லமையைப்பற்றி எவ்வாறு புகழ்வாம், புகழப்புகின் நம்மால் மாளாது. ஆயினும் கடைசியாக தென்னிஸன் (Poet Tenneyson)சொல்வதை எடுத்துக்காட்டி வியாசத்தை முடித்து விடுவோம்.

" தன்னிடத்தில் விளங்கிய சாத்விகமனைத்திலும் குறையாமல் பின்னும் ஆயிரம்மடங்கு அதிகம் உண்டென நெஞ்சார நினைவார அறிந்திருப்பவனும், ஒழுக்கமும் உள்ளமும் ஒத்திருப்பவனும், நால்வருடன் கலந்துறவாடும்பொழுது செய்யும் உபசாரமனைத்தோடுங்கூட உதாரமதியுள்ள சிந்தையில்முளைத்தெழுந்த செடியிற்பூத்தமலர்போலும் சிறந்தநல்லொழுக்கம் இணைந்திருக்கப்பெறுவோனும், சாதுஎனும்மகத்தான பூர்வநாமத்தை ஏசுவாரின்றித்தரித்துக்கொள்வோனுமாகிய இவர்களைத்தவிர, எப்பொழுதும் செய்கையில் வல்லவர்யாவர்?

T. N. பார்த்தசாரதி ஐயங்கார்.

பாலமுது.

(The Nectar of Milk.)

பாலமுதென்பது பாலாகியவமுதென்று பொருள்படும். பாலாவது பசுவின்பால், சாக்காட்டைப் போக்கவல்லது அதுவாம். ஆதலால் பாலின் கண் சாக்காட்டை யழிக்கவல்ல குணமொன்றிருப்பின் பாலமுதென்ற அடை மொழியுடன் பாலைத் துதித்தல் பொருந்தும். தேவர்களுண்ணு முணவை அமுதமென்றே கூறுவர். நமது இந்து தேசத்திற்கு மேற்கே ஐரோப்பாவின் தெற்குப் பக்கத்திலுள்ள க்ரீஸ் (Greece) என்னும் தேசமானது புராதன ஆசாரங்களையுங் கோட்பாடுகளையுங் கொண்டதோர் தேயமாகும். க்ரீஸ் தேசத்தையும் இந்துதேசத்தையும் பல வகையாக ஒப்பிட்டு

ப்பார்த்துப் பூர்வீகமாகவுள்ள அநுஷ்டானங்களையும் தத்வஞான கலாசாத்திரப்பொருள்களையுங் கொண்டு நன்குமதித்து வருகின்றார்கள். இதற்கோருதாரணமாக க்ரீஸ் தேசத்தில், நமது நாட்டில் யாம் தேவர்களிருப்பதாகவும் அவர்களது உணவும் வாழ்க்கையும் மானிடவுணவுவாழ்க்கைகளினும் வெகுமடங்கு சிறந்தனவாயும் நம்பி வருவது போலவே, அத்தேயத்தார் தேவர்களினிருப்பை நம்பி அவரது உணவை தேவதான்னமாகக் கருதி பக்ஷியத்திற்கு அதாவது சாப்பாட்டுக்கு "ambrosia" என்றும் பானத்திற்கு அதாவது குடிக்கு "nectar" என்றும் உணவை வகுத்துத் தனிப்பெயரிட்டுக் கூறுவர் ஆதலால் மானிட யாக்கையினுமதிகமாய்ப்பொலிவினும் மேம்பாட்டினும் விளங்கப்பெற்ற தேவயாக்கைக்குரிய பானம் அம்ருத அல்லது அமுத பானமாம். எங்கு முயர்வாகக் கொண்டாடப்பட்ட பசுவின் பாலானது எவ்வாறு ஓர் வித அமுத பானமாக வெண்ணித் துதித்தற்பால தென்றும் அத்தகைப்பாலமுதை எக்காரணங்களால் எவ்வாறு பரிசோதித்துப் பாதுகாக்கவேண்டுமென்றும் சாமானியத் தோற்றங்களையும் இரசாயனத்தோற்றங்களையும் கொண்டு ஒருவாறு தேர்ந்து பார்ப்போமாக.

நமது யாக்கை பற்பல அவயவங்களாகக்கொண்டுள்ளது. அவயவங்கள் ஒன்றன் பின் ஒன்றாகச் சோர்வை யடையின் யாக்கையும் சோர்ந்துபோம். அவ்வவ் அவயவங்களுக் குரித்தான செயல்களைச் செலுத்திவந்தாற்றான் யாக்கை பிழைத்திருப்பது போற்புலப்பட வல்லது. ஒருவன் சம்மட்டியினாற் பலதரம் அடித்து வந்தக்கால் கைசோர்வடையலாகும். அவ்விதமடிக்க அடிக்கச் சோர்ந்து, கால் சோர்ந்து கடையில் மெய் சோர்வை யடையும். இத்தகைய சோர்வு மிகுதியினால் தேகவசைவுங் குறையும். அசைவு குறையக் குறைய அழிவுண்டாகுதல் திண்ணம். ஆதலால் அழிவிற்குக் காரணமாகிய உடற் செயலை எவ்வாறு நிறுத்தலாகும்? நாம் அவயவங்களினாற் செய்ய வேண்டுஞ் செய்கைகளை இடைவிடாது நடத்திவரச் சோர்வாகிய அழிவை நீக்க வல்ல உணவை உட்கொள்ளத்தான் வேண்டும். ஆதலால் நாழிகைதோறும் உண்டாகும் நமது யாக்கையினழிவைப் போக்க வல்ல அமுதும் நமது உணவே யாகும்.

நமது யாக்கையினது செயற்கைக்குத் தக்கபடி எவ்வாறு உண

வானது உடலிற் பொருந்த தேகம் ஒரே தன்மையிற் றங்குவது போற் காண்கிறதென்பதைத்தெளிந்தபின் அன்னத்தின்கண் உண்டாகிய சூக்ஷ்ம ஜீவாதாரப் பொருள்கள் பாலின்கண்ணு முண்டென்பதாய்த் தேர்ந்தறிவோமாகில் பால் அன்னத்தை மதித்து அஃதோர் நித்தியச் சாக்காட்டை யழிக்கவல்ல அமுதமென்றே நிச்சயிக்க வல்லதேயாம். ஆகையால் ஆரம்பத்தில் நாம் சோர்வடைதலாவது எவ்வாறு என்றும், அதன்பின் சோர்வை நீக்கி உடற்கு நிதானத்தைக் கொடுக்கவல்ல சூக்ஷ்ம ஜீவாதாரங்கள் யாவை, எவ்வகை நிதானத்தை உண்டுபண்ணுகின்றன? வென்றுங், கடைசியில் பாலில் அச்சீவாதாரப் பொருள்கள் எவ்வாறுள வென்றுந் தேர்ந்து அச்சீவாதாரப் பொருள்கள் கெடாமலிருக்கப் பாலை எவ்வாறு பாதுகாக்க வேண்டு மென்பதையு மறிவோமாகில், நமது இல்லற வாழ்க்கையைப் பயன்படுத்தி (benefitting by domestic economy) சுகமாகக் காலங்கழிக்கலாகும்.

முதலாவது:—உடற்சோர்விற்குக் காரணம்.

மாட்டுக் கொழுப்பாலாகிய மெழுகுத் தீபத்தை எரிப்பின் கொழுப்பானது கரைந்து கடைசியில் மறைகின்றது. அதன் காரணம் யாது? மாட்டுக் கொழுப்பாவது என்ன? அஃது அவ்வாறு எரிவதினின்றும் பெறவல்ல பொருள்கள் யாவை? இக்கேள்விகளை நன்றாகத் தேர்ந்து விடை கூறியபின் அதனாலடைய வல்ல நியாயங்களை யாதாரமாகக் கொண்டு நமது உடற் சோர்வையும் அதனாலுண்டாம் பசியையும் தாகத்தையும் சரிவர வுணர்ந்து நமது உணவினது செயற்கையையும் செயலையும் பிழையின்றி யறிந்து வரலாம். நிணம் அல்லது கொழுப்பென்னு மோர் பொருளானது மானிடர்களினும் மிருகங்களினும், தாவரங்களினும் பரவியுள்ளது. நிண மில்லாவிடில் நமது உடல் இளைக்கும். உணவு குறைய நிணமுங் குறையும். ஆதலாற்றான் ஆகாரத்தில் வேண்டுமளவு நிணம் பெறாதவை யெல்லாம் தேகமுலர்ந்து சோர்கின்றன. எள்ளினின்று எடுக்கப்பட்ட எண்ணெயானது எள்ளின் நிணமாம். பாலினின் றெடுக்கப்பட்ட வெண்ணெ யானது பாலினது நிணமாம். உடலில் மாமிசத்தைச் சுற்றி மேலே பரவியுள்ள வெண்ணிறப் பொருளும் நிணமாம். இவ்

வகையான நிணமானது எரிய வல்லது. சற்றுத்தீப்பட்டக்கால் உருகவும் வல்லது. எண்ணெயைக் காய்த்தால் அது உருகி மேல் வழிகிறது. வெண்ணெயைக் காய்த்தாலும் அவ்வாறே உருகுவதாயுள்ளது. ஓர் கண்ணாடிப் புட்டியில் சிறிது நீரையும் எண்ணெயையும் விட்டு நன்றாக அசைத்துக் கலக்கிவிட்டால் எண்ணெயானது சிறு தூள்களைப்போல நீரெங்கும் பரவி மங்கலாகத் தோன்றும். ஒவ்வொரு சிறு தூளையும் பூதக் கண்ணாடியின் கீழ் நோக்கின் வட்ட வடிவு பெற்றிருத்தலைக் காணலாகும். மேலும் அது சற்று மஞ்சள் நிறம் பெற்றுள்ளது போலவும் காண்பதாயுள்ளது. அதன்மேல் சூரியனது இரேகை தாக்கப் பெற்றால் அவ்வொளி பிரதிபலிக்கத் தக்கது. ஓர் நிலைக்கண்ணாடியின் மீது தாக்குவதாகிய ஒளி எவ்விதம் பிரதிபலிக்கப்பெறுகிறதோ அவ்விதமே ஒளியானது எண்ணெய்த் தூள்களினின்றும் பிரதிபலிக்கப்பெறுகிறது. மற்றும் கன பதார்த்தமாகியதோர் பிண்ணாக்கின் மீது (oil cake) ஒளிபட்டக்கால் பிண்ணாக்கு சற்று பளபளப்பாயுள்ளது. இதன் காரணம் பிண்ணாக்கின்கண் பரவியுள்ள சிறிய எண்ணெய்த் தூள்கள்தான். தேர்ந்தெடுத்த வாகாரத்தை விருப்புடன் உண்டு செவ்வை பெற்று வரும் மாந்தரதுடல் ஓர் விதப் பொலிவையும், வழ வழப்பையும், காந்தியையும் பெற்றுள்ளது. அஃதின்றி ஆகார வியல்பைச் சற்றுங்கருதாது உடல் வளர்க்க வெண்ணி உருவளர்க்கவெண்ணாது பசியைத் தீர்க்கும்வண்ணா முண்டுவரும் மாந்தரது மேனி பொலிவினுங் காந்தியினும் சற்றுக் குறைவுபட்டுத் தானிருக்கும். இதன் காரணம் முன்சொல்லிவந்த நிணக்கலப்பின்பாலதேயாம். சற்றேறக்குறைய எவ்வகை மிருகத்தினுந் தாவரப் பொருளினும் நிணமுள்ளதாகும். எள்ளினின் றெடுக்கப்பட்ட எண்ணெய் அதனைவிட்டு நீங்கியபின் பிண்ணாக்கைத் தருவதாயுள்ளது. அப்பிண்ணாக்கினும் சற்று எண்ணெயுள்ளதாக அதன் மேலுள்ள பளபளப்பினின்றும் அறிந்து (இது வெற்றுக்காட்சி.) அதைப்பொடியாக்கி சாராயத்தினின்றும்(alcohol) பெற வல்லதோர் சாராயச்சூக்ஷ்மத்தண்ணீரில் (ether) கலந்து காய்ச்சினால் பிண்ணாக்கிற் பரவியுள்ள எண்ணெயானது சூக்ஷ்மத்தண்ணீரிற் கரைந்து, பிறகு எண்ணெய் கரையப்பெற்ற சூக்ஷ்மத் தண்ணீரை மெதுவாகக் காய்ச்ச எண்ணெயைவிட்டு சூக்ஷ்மத் தண்ணீர்

விலகும். (இது இரசாயனத் தோற்றம்.) இவ்வாறே பாலினுள்ளும் நிணமிருக்கக் காணக்கூடியதுதான். நிணமதிகமாகவுடைய பாலைச் சிறந்த பாலாகச் சொல்ல வேண்டும். ஏனெனிற் பாலின் நிணம் மானிடருக்குப் பொலிவுங் காந்தியுந் தரவல்லது.

நாமுண்ணு முணவில் இருவகைப்பதார்த்தங்கள் கலந்துள்ளன. அவைகளின் செயலுக்குத் தக்கபடி அங்ககுண சாஸ்திரத்தில் "Physiology" எனப்பெயரிட்டுவருவர். அவைகளில் ஒன்று தேகவுஷ்ணமுண்டாக்குவ தென்றும் (Heat Producer) மற்றொன்று தேகத்திற்காதார முண்டுபண்ணுவ தென்றும் (Tissue Former) சொல்லியுளார். ஓர் விளக்கெரிய வேண்டின் நிணமாகிய எண்ணெயை உபயோகிப்பது போலவே நமது தேகத்தில் உஷ்ணம் குறைவுபடாது தேகத்தைக் காப்பாற்ற நிணப்பொருள் ஒன்று வேண்டுகிறோம். அவ்வகை நிணப்பொருள் முக்கியமாய்ப் பாலினின்று யாம் பெறவல்லோம். ஆதலாற் பாலானது நமது சுகவாழ்க்கைக் கின்றியமையாததெனத் தெளிவாகிறது. நிணத்தின் பொருட்டும் தாவரக்கறியைப் பக்குவப்படுத்தி யுண்ணும் பொருட்டும் நல்லெண்ணெயையும் (Gingelly oil) உபயோகித்து வருகிறோம். இத்தகைய நிணமானது, இரசாயன பரீக்ஷையினால், சுத்தக்கரி (carbon), ஜலவாயு (hydrogen) பிராணவாயு (oxygen) ஆகிய இவைகள் ஓரளவிற் சேர்ந்துண்டானதாகத் தேர்ந்திருக்கின்றனர். (தொடரும்).

செ. வீ. இராஜகோபாலாசாரி,

நார்மல்ஸ்கூல், மதுரை.

தனிச்செய்யுட்கோவை.

(தொடர்ச்சி.)

பழனி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் இராமநாதபுரத்திற்கு வந்திருந்தபோது, "கிரியிற் கிரியுருகுங் கேட்டு" என்று ஈற்றடி யெடுத்துக் கொடுக்கச் சொல்லிய வெண்பா.

மாலாம்பொன்னுச்சாமிமன்னர்பிரானன்னாட்டிற்
சேலாங்கண்மங்கையர்வாசிக்குநல்யாழ்—நீலாம்
பரியிற்பரியகொடும்பாலைகுளிரும்மா
கிரியிற்கிரியுருகுங்கேட்டு.

*

அவரைப் பாராச் சேவகர் தடுத்தபோது சொல்லிய கவி.

தருமகுணமிகுநினதுசமுகமுறூர்வறுமையெனச்சலிக்கக்காய்ந்து
வருமிரவிவெயிலதனுன் மயங்கியின்றுநானிங்குவந்தபோழ்தி
லருமைதவிர்பாராச்சேவகர்தமதுபெயர்ப்பொருளையறியக்காட்டிக்
கருவமொடுதடுப்பதென்னேகாமர்பொன்னுச்சாமியெனுங்கருணைமா
[லே.

அவர்க்குச் சுரம் வந்து தீர்ந்த போது கூறிய கவி.

சொற்செறிமுத்தமிழ்வலர்க்குத்துரங்கமணிச்சரங்கவிகைதுலங்குதந்தப்
பொற்சிவிகைமுதலவருள்புனிதபொன்னுசாமியெனும்புயலேயுன்றன்
மற்செழுந்தண்கருணைநெடுமழைநனைப்பவதனுலென்வறுமைமாய
முற்சுரமும்பிற்சிவந்தமுதுசுரமுமிகவயலாய்முடிந்தமாதோ.

படி திட்டஞ் செய்யவேண்டுமென்று கூறியகவி.

கனப்படிவமிதுவெனும்பொற்கமலகரதலசுமுகாகனிந்தசெந்தே, னெனப்படிவண்டிமிர்குழற்பொன்னிணங்குபொன்னுச்சாமிமன்னு வியம்பக்கேண்மோ, மனப்படிநானினைத்தபடிவந்துபடிப்படியுணர்த்தமாட்டேனின்னே, தினப்படியிப்படியுனக்குச்செலும்படியென்ருெருபடிநீசெய்குவாயே.

வெளிப்படையிற் பிராது சமாசாரங்கள் விளங்கக் கூறிய கவி.
ஓர் தலைவி கூற்று.

சீரிலகுதாராபுரந்தாலுகாதாசில்செய்யுமகராசராச
சீகண்யபார்த்தசாரதிமுதலியார்தமதுதிவ்யசமுகத்தினுக்கு [பா
னேரிலெழுதிக்கொண்டவிண்ணப்பமென்னவெனினேற்றிராப்போதுகுப்
னெடுநாட்குறிப்பினுலேயென்னகத்தெய்திநிறையுடைமையைத்திரு
காரியமெவர்க்குந்தெரிந்ததேமச்சமுங்கைக்குள்ளிருக்கின்றதாங் [டினுன்
காண்பதெளிதல்லவாரண்டிற்பிடித்திடுதல்கடன்மையினிலாவுமுளது
கூரியபழங்குற்றவாளிகளுமுதவியக்கொடியதுட்டனையடக்கக்
கூடாவிடிற்சோரகுணமொடுங்காததையைகூர்ந்திரட்சித்தருள்கவே.

இக்கவியிலேதலைவியைக்குறித்துப்பொருள்கூறுங்கால், இராப்போதுகுப்பான் - இராத்திரியிற் புட்பபாணத்தைச் சொரிபவனுகிய மன்மதன். அகம் - மனம். நிறையுடைமை - கற்பாகியவுடைமைப் பொருள். மச்சம் - மீனக்கொடி. வாரண்டில் - கச்சுப்பொருந்திய தானமாகிய முலை. இனிலா,

இனிய நிலா. பழங்குற்றவாளி - பூர்வமான குற்றத்தைச் செய்கின்ற பாணம். சோரகுணம் - மயக்கத்தாற் சோர்கின்ற அகுணம் எனப்பொருள் கொள்க.

ஆபத்துக்காத்தபிள்ளையென்பவர் வாசகங்களை அடைமொழியின்றி அநேகங் கவிகளாகப் பாடியிருப்ப அவற்றைக்கேட்டு வியந்து கூறியகவி.

அருமணலைக்கயிறுதிரித்தாங்குலகவாசகமேயமைபாட்டாகத்
தருநினதுநன் மகிமைத்தரத்தைநினைக்குந்தொறுமாச்சரியம்யார்க்கும்
வருமொருவர்க்கெளிதல்விம்மார்க்கமம்மாகலசமுனிவனுங்குன்றுற்றுன்
கருமுகில்கற்பகமலர்ப்பூங்காவொத்தவாபத்துக்காத்தவேளே.

மணியுரகபதிநாலுல்வணங்கினன்பின்புற்றிருந்தான்வனவான்மீக
னணிகலசமுனிபயங்கொண்டனன்வாணிமறைவாய்நின்றலர்மேலானு
டணிவரியவுனதுகவித்தரந்தெரிந்தென்றூலுனக்குச்சமானம்யார்காண்
கணிதமுள்ளசகலகலைகளுமுணருமாபத்துக்காத்தவேளே.

யோகினியை யறியும்படி ஒருகவி பாடித்தரவேண்டும் என்ற போது கூறியகவி.

நிறைமதிமுற்றிதிதொடுத்துநிலைமகவான்குபேரனங்கிநிருதிகூற்ற
னறைபுனலுக்கிறைகாற்றீசானியன்மற்றிவர்திசைவிண்ணவனியாக
முறையிருக்கும்யோகினிதன்முன்மரணம்பலபிணிபின்முதிர்சீர்வெற்றி
தறைவிணிற்பின்மத்திமமித்தன்மைசண்வெழிநடக்கத்தக்கதாமே.

வேள்குறிச்சி ஜமீந்தார் "தானுமகவானுஞ்சரி" என்றடி யெடுத்துக் கொடுத்தபோது கூறியகவி.

மாகந்தனைப்போற்றிவண்மையுற்றுவாவிபம்பெற்
றூருந்தருக்குலவுமற்புதத்தாற்—பாகுஞ்செந்
தேனுமெனவோது தமிழ்தேர்ந்தருள்வேலப்பதுரை
தானுமகவானுஞ்சரி.

"வீணைநாதங் கேட்பார்மேல்" என்றடி யெடுத்துக் கொடுத்த போது கூறியகவி.

தும்புருவுநாரதனுந்தன்னுபலகின்னரரு
மிம்பர்வரநாணியிருந்தின்னம்—பைம்பொனெடுந்
தூணைநேரும்புயவுத்துங்கவேலப்பதுரை
வீணைநாதங்கேட்பார்மேல்.

சேதுபதியவர்கள் பழங்கொடுத்தபோது கூறியது.

அஞ்சேலெனப்பலந்தந்தானினியார்நேர்மக்கு
நெஞ்சேகலிப்புலியைநீவெருட்டு—விஞ்சுபெருஞ்
சீர்படைத்தகோனலர்ந்ததேன்மலர்ப்பொன்மாதிணங்கு
மார்பன்முத்துராமலிங்கமால்.

மேற்கூறிய மாம்பழக்கவிச் சிங்கநாவலர் நிரியாணமாகும்
போது கூறியது.

என்னபிழைநான்செய்திருந்தாலுமெண்ணுமை
லன்னபிழையெல்லாமகற்றியின்னே—நின்னுபய
பாதநிழனல்கியருள்பாலித்துக்கொள்சமைய
நீதகுகவுன்னைநம்பினேன்.

சேற்றூர்-இராமசாமிக்கவிராயர்,
சேற்றூர்ச் சம்ஸ்தான வித்வான்.

உ

திருவாசகத்தில்
"ஐயாறதனிற் சைவனாகியும்"
என்றதன் வரலாறு.

சோழ நாட்டிற் சிவக்ஷேத்திரங்களு ளொன்றாகிய பஞ்சநதம் என்னுந் திருவையாற்றிலே திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் பஞ்சநதேசுரனை அருச்சனை செய்துவரும் ஆதிசைவப் பிராமணர்கள் இருபத்து நால்வராவார்.

அவருள்ளே யொருவர் கங்காஸ்நானஞ் செய்யும்பொருட்டுக் காசியாத்திரை சென்று நீண்டநாளாகத் திரும்பிவராதிருந்தனர். அதுகண்டு அவருடைய காணிமுதலிய வருவாய்களை ஏனைய இருபத்துமூன்று அருச்சகரும் பங்கிட்டுச் சாதனமெழுதி அனுபவிக்கத்

தொடங்கினர். காசியாத்திரை சென்றவரது மனைவி தன்மைந்தனுடனே அதைத்தெரிந்து அவ்விருபத்துமூவர் சபைக்கட்சென்று என்னுடைய காணியை நீங்களபகரிப்பது தகுதியல்லவென்று தடுத்தனள். அவர்கள் அவளைநோக்கிப் பிள்ளையில்லாதவன் காணியை ஞாதியர்கள் எடுத்துக்கொள்ளுவது நியாயமென்று கூறி மறுத்தலும், அவள் 'யாத்திரைசென்றவர்மனைவியாகிய யானுமிருக்கின்றேன் பிள்ளையுமிருக்கிறது, அவருமினிமேல் வந்துவிடுவர், நீங்களிந்தக் கேடுசெய்யவேண்டா' வென்று மிகவும் வற்புறுத்தி மறுத்தனள்.

இருபத்துமூவரும் அதை அங்கீகரியாமல் பெண்காணி யாளுவாயோவென்று அவளைப் பிடரியைப்பிடித்துத் தள்ளச்சொல்லினர். உடனே காணியிழந்த அம்மாதர்சிகாமணி அவர்களைப்பார்த்துப் பூமியையாளுகின்றவர் வலிமைசெய்தால் நிலைத்துநிற்கமாட்டார்கள். விண்ணுலகத்தை யாளுகின்றவருமிங்ஙனம் அநீதி செய்யார்கள். பஞ்சநதேசுரர் பிரத்தியக்கமாகிய சாட்சியாகவிருக்கின்றார். நீங்களுந் தெரிவீரென்று சொல்லிவிட்டு மனங்கலங்கி வாடிவந்து பஞ்சநதேசுரர் கோயிலின் முன்னேநின்று 'ஆதாரமில்லாதவருக்காதாரமானவரே, மார்க்கண்டனுக்காக யமனையுதைத்தருளிய பெருமானே, திருவையாறுடையவரே, முற்றத்துறந்தவருக்குத் துணையாயுள்ளவரே, பயந்தவருக்குப் புகலிடமானவரே வேறொரு துணைகாணேன். உம்முடைய திருவடித்தாமரைகளுக்கடைக்கலம்' என்றுபலவாறாகத் துதித்து, வஞ்சகராகியஞாதிகள் செய்யுங் கணக்கழிவு கண்டீரோ, இது முறையோவென்று தேம்பிநின்றழுதனள். அவளுடைய குழந்தையுமவ்வாறே அழக்கண்ட கருணாநிதியாகிய பஞ்சநதேசுரர் திருவுளமிரங்கி அழிவழக்குச் செய்யுஞ்சிவப்பிராமணரபகரித்த காணிமுதலியவற்றை உடையவருக்குச் சேரச்செய்யும்பொருட்டுத் திருவையாற்றுக்குப் பக்கத்திலுள்ள விளாங்குடி யென்னுங்கிராமத்தில் காசியாத்திரைசென்ற சிவப்பிராமணரைப்போல் விபூதி யுருத்திராக்கமுதலிய சிவசின்னங்களைத் தரித்துக் காசிக்கங்கை கட்டிய காவடியையுந் தோளிலேசுமந்து திருவையாற்றுக் கெழுந்தருளிவந்து காணியை வஞ்சித்துக் கொண்டவருக்கெதிரேநின்று பஞ்சநதேசுரரும் அறம்வளர்த்தநாயகியும் விநாயகர் குமரக்கடவுளு நீங்களுஞ்சுகமாக

விருக்கின்றீர்களாவென்று வினவி அவர்களைத் தழுவிக்கொண்டனர். அப்பொழுதவர்கள் நாணமடைந்து நின்றனர். அதன்மேலென்னுடைய காணியை இல்லையென்றவர் யாரென்று காசிவாசியாகிய பிராமணர்கேட்க, நாங்கள் செய்தபிழையைப் பொறுத்தருளுமென்று இருபத்துமூன்று பிராமணரும் பிரார்த்தித்தனர்.

அந்தச் சமயத்திலே மனைவியும் புத்திரனும் வந்து பிரிவாற்றாமைக்குங் காணியிழந்தமைக்கும் மனநொந்தழுது நின்றனர். அவ்விருவரையுந்தேற்றி இருப்பிடத்துக்குப் போகச்சொல்லி மீண்டு காசிவாசியாகிய மறையோர் சூரியபுட்கரணி தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து விபூதிதரித்து நித்தியகன்மமுடித்துக் கோயிலினுட்சென்று பஞ்சநதேசுரரைப் பூசிக்கவேண்டுந் திருப்பள்ளித் தாமமுதலியவை கொணர்வித்துக் கங்கைநீரை யெடுத்துத் திருமுடிமேலபிடேகஞ்செய்து திருவொற்றுடை சந்தனங் குங்குமம் புட்பமுதலியவை சாத்தி யலங்காரஞ்செய்து சோடசோபசாரத்தா லருச்சித்துப் பின்னர் அறுசுவையவாகிய நால்வகை யுண்டிகளை யமைப்பித்து மயேசுரபூசைசெய்து அதன்மேல் பஞ்சநதேசுரனா நிவேதிப்பித்துப் பூசனைமுடித்து வெளியேவந்து சிவாசாரியருடைய பொதுமடத்தில் விற்றிருந்தருளினர்.

அப்போது காசியாத்திரை சென்றிருந்த அருச்சகராகிய சைவரும் கங்கைநீர்தாங்கிய காவடியெடுத்துக்கொண்டு சைவாசாரியர்களிருக்குஞ் சபைமுன்னே வந்து நின்றனர். அச்சபையின்கணுள்ளாரெல்லாரும் இஃதென்ன அற்புதமென்று வியந்து மயங்கினர். மனைவியு மைந்தருங்கண்டு திகைத்துநின்றனர். முன்வந்த சிவாசாரியர் நீர் யாவரென்று பின்வந்தவரை வினவலும் அவர் எம்பிரான் பூசைசெய்பு மிருபத்துநால்வரிலொருவன், முதற்பூசை செய்தற்குமுரியனென்றனர். அது கேட்ட திரிநேத்திராதாரியாகிய ஆசாரியர் கோபங்கொண்டு பற்பல விதத்தாலவரைத் துன்புறுத்தினர். அவர் அழுதுகொண்டுபோய்த் தமக்குரிமையாகிய சாதனங்களையெடுத்துத் தந்து காட்டினர். அதுபோலவே பெருமானும் வேண்டிய சாதனங்களெல்லாந் தம்மிடத்தி லிருந்தெடுத்துக் காட்டினர். இவ்விருவர் சாதனங்களையுஞ் சபையின்கணுள்ளாரும், ஏனையோரும் பார்த்ததி

சயித்து முழுவதும் ஒத்திருந்தபோதிலும் சிறிது வேறுபாட்டால் மெய்ச்சாதனத்தையே பொய்ச்சாதனமெனக்கூறினர். பெருமானுகிய ஆசாரியர், சைவர்காள் வெற்றியாருடையதென்று வினவலும் அவர்கள்ளும்முடையதே யென்றனர்.

உடனே பஞ்சநதேசுரராகிய சைவாசிரியர் திருவுருவை மறைத்து ஆகாயத்தினின்று சைவர்களே, நம்மையர்ச்சிக்குஞ் சைவனுகிய இவனுக்குக் காணிமுதலிய வெல்லாவுரிமையுமிரண்டுபங்குகொடுத்து நீங்களும் நீடூழிவாழ்விரென் றருளிச்செய்தனர். அத்திருவாக்கைச் சபையாரும் பிறருங்கேட்டுத் திருவருளை வியந்து பணிந்து பரவசராயினர்.

இச்சரிதந் திருவையாற்றுப் புராணத்திலே சைவசருக்கத்திற் கண்டது. இது நிகழ்ந்தகாலங்கொட்டு இன்றுகாறும் திருவையாற்று மகோற்சவத்தில் பஞ்சநதேசுரர் தம்மைத்தாமருச்சித்த அற்புதம் ஐந்தாந் திருவிழாவில் நடத்தப்பட்டுவருகிறது.

இங்ஙனம்,
மூ. ரா. அருணாசலக்கவிராயர்,
சேற்றூர்ச்சம்ஸ்தான வித்துவான்.

புத்தகக் குறிப்பு.

தக்ஷண இந்திய சரித்திர சாரசங்கிரகம்:—இது, நமது தென்னாட்டு உத்தம தேசாபிமானிகளுள் ஒருவராகிய ஸ்ரீ ப. த்-சே. ப. நரசிம்மலு நாயுடு அவர்களால், சென்னைச் "சுதேசமித்திரன்" பத்திரிகையில் எழுதப்பட்டுப் பின் புத்தக ரூபமாக்கப்பட்டது. தென்னுடாண்ட அரசர் சரித்திரங்களை, நாயடு அவர்கள் பல நூல்களைக்கொண்டு எழுதியிருக்கின்றார்கள். பழைய வரலாறுகள் தெரிய விரும்புந் தமிழ் மக்களுக்கு இது பெரிதும் பயன்படத்தக்கதேயாம். இந்நூல், மூன்று காண்டங்களுடையதாய்ப் பகுக்கப்பட்டு, முதற்காண்டத்தில்

பெருநிலப்பரப்பையாண்ட ஆந்திரர்முதலிய பிரபலவரசர் சரித்திரங்களையும், இரண்டாவதில்தேவகிரியாதவர், கடம்பர், ஹொய்சலர், கேலாத்தியர், மைசூரர், சேரசோழபாண்டியர் சரித்திரங்களையும், மூன்றாவதில் நாயகவரசர் சரித்திரங்களையும் தொகுத்துக் கூறுவதாகும். இந்நூற் பதிப்பில், சொற்பிழைகளும் கருத்து மாறுபாடுகளும் அங்கங்கே காணப்படுகின்றனவாயினும், நாயடு அவர்கள் அவற்றையறிந்து அடுத்த பதிப்பில் நீக்கிக் கொள்ளாதிரார்கள். முதற்பதிப்பில் நேர்ந்த வழுஉக்களைப் பற்றி அவர்களே முகவுரையில் வருந்துகிறார்கள். நாயடு அவர்கட்குத் தமிழ்ப்பாஷா ஞானம் அதிக மில்லாமற் போயினும், தாங்கற்ற கலைகளைத் தமிழர்க்கு எவ்வாற்றானும் பயப்படுத்த வேண்டுமென்னும் பேருபகார சிந்தையை யாம் பெரிதும் வியந்து புகழ்வோம். தாங்கற்றுள்ள பலதுறைகளிலும் தமிழர்க்கு ஓராற்றாற் பயன்விளைக்குமாறு அவர்கள் பல நூல்களெழுதி வெளியிட்டிருக்கிறார்கள். தேசாபிமானப் பற்றால் ஜனோபகாரத்தைக் கவலையுடன் போற்றும் நாயடு அவர்கள், தம் ஒழிவுக்காலங்களை இத்தகைய நூல்களெழுதுவதிற் செலவிட்டு, இவ்வாறு பலவழியாலும் நம்மவரை அதிகநன்றியறிதற்குப் பாத்திரராக்கியுள்ளார்கள். கற்றவற்றைப் பிறர்க்குப் பயன்படுத்தாத் தமிழ்வல்லாரினும், அவற்றை எங்ஙனமாயினும் உபயோகப்படுத்தும் நாயடு அவர்களைப்போன்ற உபகாரிகளையே உலகம் நாளும் அவாவுவதாகும். அவர்கள் எழுதும் பாஷை நடையைச் சீர்திருத்தியழகாக்குவது பின் அரிதன்று. நாயடு அவர்கள் இனித் தாம் உபகரிக்க நினைந்துள்ள ஏனையவற்றில், பிறர் சொல்லும் இக்குறையுமில்லாது போற்றுவார்களென்பது எமது நம்பிக்கை. இந்நூலை, அவர்கள், சங்கத்து அக்கிராசனாதிபதியவர்களும், பாலவனத்தம் ஜமீந்தாரவர்களுமாகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்கட்கு ஸமர்ப்பித்துள்ளார்கள். இந்நூற் பிரதியொன்று எமது பார்வைக்கு விடுத்த அவர்கட்கு எம்முழுவந்தனமும் தருகின்றோம்.

பத்திராசிரியர்.

கையிலெடுத்துப்பார்த்தாற் பளபளப்பாயுள்ளன. மற்றும் சில நீலவர்ணத்தைக்கொண்டிருக்கின்றன. நீர்தங்கிய களர் நிலங்களில் வெகு ஆழம் வரையில் கால்புதையக்கூடியதாகவுள்ளது. இவ்விதம் பாறைகளும், கற்களும், மணல்களும், மண்ணும் அளவிற்கடந்து எங்குந்தோன்றப்பெறுதலால், நாம் அவற்றின் உண்மையைச் சீராயறிவதற்கு, வேண்டுமளவு புத்திபூர்வமாயும் நமது உணர்ச்சிக்கும் பார்வைக்குமொத்த துணைக்கருவிகளைக்கொண்டுமறியப்புகுவோம்.

பூமியின் உட்புறமானது மிகச்சூடாயுள்ளதென்றும், அதனல் வெகு கடினபதார்த்தங்களுங் கரையவல்லனவென்றும் முன்னமேயே கண்டிருக்கிரும். இவ்வகைக்கடின பதார்த்தமாகிய கற்களும் பாறைகளும் மிகுந்த உஷ்ணத்தாற் கரையவல்லன. பூமிக்குள்ளேயுள்ள உருகின கனபதார்த்தங்கள் நாளடைவில் பூமி குளிர்வையடையத் தாமும் குளிர்ச்சியடைந்து கனமாகத்தக்கவை. சில விடங்களில் நிலம் கட்டாந்தரையாகவுள்ளது. மேலும் பெரும்பாறைகள் மேல்வளருவனவாயுங் காணத்தக்கவை. இவைகளை இங்கிலீஷில் (Out crops) "அவுட்க்ராப்ஸ்" என்று கூறுவர். இவை அவ்வவ்விடங்களில் திட்டுத்திட்டாய் வளர்வன. நாளடைவில் மழைபெய்து பெய்து பக்கங்கள் கரைந்து மேலே வரத்தக்கனவாம்.

இவ்விதம் வளர்ந்துவரும் பாறைகள் பல நூற்ருண்டுகளாகப் பனிக்கும் மழைக்கும் சூரியனதுவெப்பத்திற்கு மெதிர்ப்பட்டு வருவதால், ஒரே தன்மையிலிருக்கக்கூடியவையல்ல. ஏனெனில், பாறைகள் வெப்பத்தையடையும்போது விரிந்தும் குளிர்வையடையும்போது நெருங்கியுமிருப்பதால், அடிக்கடி இவ்வாறு விரிவதும் நெருங்குவதும் பெரும்பாறைகளின் பொடிகளைத் தளர்ச்சிசெய்கின்றன. ஒரு கனப்பொருளை அடுத்தடுத்து நெருங்கவும் விரியவுஞ்செய்தால் வெகு சீக்கிரத்தில் தளர்ந்து அப்பொருள் பொடியாய்க் கீழேவிழும். அவ்வாறே பெரும்பாறைகள் மழையிலும் வெப்பத்திலும்பட்டுத் தளர்வடைவதுமன்றி மேற்புறமும் பக்கங்களும் நாளடைவிற் பெயர்ந்து பெருங்கற்களாயும், சிறுகற்களாயும், மணலாயும் மண்ணுயும் விழத்தக்கவை. மேலும் ஓர் பாறையில் யாதாயினும் பள்ளம் அல்லது வெடிப்புண்டாயின், அதிலுள்ள மண்ணில் வேரூன்றி வளருஞ்செடிகள் பருத்து அவை வளரும் வேகத்தால் பெருங்கற்களையும் பேர்க்கத்தக்கவையாயுள்ளன. "நெட்டிருப்புப் பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்" என்று படிக்கின்ருேமல்லவா? இதை இங்கிலீஷில் "செடிவளரும்வேகம்" (Vegetative force) என்று கூறுவர். மற்றும் சில விடங்களில் பாறைகளின் துவாரங்களில் தண்ணீர்கிடக்க, தண்ணீர் குளிர்வினல் கனமடைய, உடனே வேகமாய் விரிந்தால் அவ் வேகத்

தாலே கல் தளர்வடைவதுமுண்டு. இவ்வாறு கற்கள் நாள் செல்லச் செல்லக் கரையுமியல்புடையன. "எறும்பூரக் கற்குழியும்" என்னும் பழமொழி இதனுடன் ஆலோசித்துப்பார்க்கத்தக்கது. மேலும் பாறை எவ்வெப்பொருள்களைக்கொண்டுண்டாகியதென்று சற்றுப்பரிசோதித்துப் பார்த்தால், இதுவரையிற் சொல்லிவந்தபடி தான் கரையக்கூடிய தென்பதைக்காணலாம். நீரில் எளிதாய்க் கரையக்கூடாத மண்ணை, நீரிற் கரையக்கூடிய உப்பு அல்லது சர்க்கரையுடன் சேர்த்துக்கட்டியாகச்செய்து, அக்கட்டியை நீரில் விட்டால், உப்பும் சர்க்கரையும் நீரிற் கரைந்து மண்ணைக் கீழேபடியச்செய்யும். அவ்விதமே கற்களிலும் பாறைகளிலும் நீரில் கரையக்கூடியதும் கூடாததுமான பொருள்களுள்ளன வாகையால், மழைபெய்யும்போது கரைபவை கரைந்து, கரையாத கற்றூள்கள் அஃதாவது மணல் மண் இவைகள் விட்டகல்கின்றன. ஆதலாற் பலவாறு பாறைகளுங் கற்களுங் கடைசியில் மணலும் மண்ணுமாதலைப்பார்த்து வருகிறோம்.

பூமிக்குள்ளாவது பூமியின்மேலாவது சுபாவத்தில் தனித்திருக்கப்பெற்ற ஜீவனற்றபொருளுக்குத் தாதுப்பொருளென்று பெயர். இங்கிலீஷில் இதை மினரல் (mineral) என்று கூறுவர். இப்பொருள் கலப்பில்லாததும் கலப்புள்ளதுமாகக் கண்டுவருகிறோம். பொன், வெள்ளி, இரும்பு போன்றவை கலப்பில்லாத தாதுப்பொருள்கள். அவைகளை உலோகங்களென்று கூறுவர். கல், முதலியன வெவ்வேறு பொருள்களைக்கொண்டிருப்பதால், அவைகளைக் கலப்புத்தாதுப்பொருளென்று கூறுவர். உலோகங்களைப்பற்றிச்சொல்லிவரும்போது கலப்பற்ற தாதுப்பொருளைக்குறித்துப் படித்துவரலாம். கல் ஓர் கலப்புப்பெற்ற தாதுப்பொருளாகையால், மேற்சொல்லிய மழைக்கும் வெப்பத்துக்குமுட்பட்டுக் கரைந்து வெவ்வேறு பொருள்களாகப்பிரிந்து விடுகிறது. சில கற்களில் உலோகங்களையுங்காணலாம். அவைகளில், உலோகங்கள் மற்றப்பொருள்களுடன் கலந்துள்ளன. செந்நிறம் பெற்ற சில கற்களிலும் கருநிறம் பெற்ற சில கற்களிலும் மற்றப்பொருள்களுடன் இரும்புங்கலந்திருக்கக் காண்கிறோம்.

இவ்வகைப்பொருள்கள் ஒன்று சேர்ந்தாகிய கல்லில் அனேகவிதமுண்டு. ஆனால் முக்கியமாய்க் கல்லானது மூன்று வகையுள்ளது. அவை எவையெனில், முதலாவது உஷ்ணசம்பந்தமாய் உண்டானவை. இவை பளபளப்புள்ளவை. சிலவேளை இத்தன்மையான கற்களைச்சுற்றித் துவாரங்களிருக்கக் காண்கிறோம். இவ்வகைத்தான கற்கள் உஷ்ணசம்பந்தத்தாலானவை. நாம் ஜீவித்திருக்கும் இப்பூமியில் பூகம்பமென்று சொல்லப்பட்ட பூமி நடுக்கத்தை அப்போதைக்கப்போது கண்டு வருகிறோம். மலையடர்ந்த இடங்களில் இருக்கக்கூடிய எரிமலை அல்லது அக்கினிமலை சிலகா

லங்களில் வெகு உக்கிரமாய் வெடிப்புண்டு, உள்ளேயுள்ள மிக்க வெப்பப்பொருள்களை வெகுதூரம் வெளியிட்டு வருவதையும் கேட்டிருக்கிறோம். அவ்விதம் வேகத்துடன் வெளியே வரும் பொருள்களில், கல்லுங் கரைந்து கூட வருவதுண்டு. இக்கல்லை யெடுத்துப் பார்த்தால் இலேசாயிருக்கும். கரைந்துள்ள கல்லானது வெளிப்பட்டுப் பெருங்காயவுடன் குளிர்ச்சியடைந்து கனத்தையடைகிறது. இதன் பெயர் "கிட்டக்கல்"; இங்கிலீஷில் "பியூமிஸ்" (Pumice) என்பர். இது கரைந்துள்ள தன்மையில் இங்கிலீஷில் "லாவா" (lava) என்பர். பியூமிஸ் (Pumice) கல்லைக் கையிலெடுத்துப் பார்த்தால் இலேசாயும் துவாரங்களடங்கினதாயும் உள்ளது. செங்கற்களை கொல்லனுலை இவற்றில், மண்ணுருகிக் கிட்டங்களாவதைப் பார்க்கலாம். பியூமிஸ் அதுபோலுள்ளது. இஃதோர் உஷ்ணசம்பந்தமாக சுபாவத்தில் உண்டாகுங் கல்லாம். இரண்டாவது ஜலசம்பந்தம் பெற்ற கற்கள்; இவை எறக்குறைய உருண்டையாயுள்ளன. கூழாங்கற்கள் இதற்குதாரணமாம். சாலைகள் "மராமத்து" செய்யும்போது சிவப்பு நிறமமைந்த "கிராவல்" (Gravel) என்னுங்கல்லை உபயோகிக்கப் பார்த்துவருகிறோம். இதுவுமோர் உதாரணமாம். மேலும் கழிகளின் ஓரங்களில், சில குளங்களுக்குப் படிகளாக உள்ள துவாரங்களைப்பெற்ற கற்களையும் பார்க்கிறோம். அவைகளைச் செம்பாறங்கற்களென்று கூறுவர். இங்கிலீஷில் லாடரைட் (Laturite) என்று பெயர். சில இடங்களில் இக்கற்களை வீட்டுக்கட்டிடத்திற் சுவராகவும் மதிலாகவு முபயோகிக்கிறார்கள். இக்கற்களும் ஜலசம்பந்தத்தாலானவை. இரும்பு அவற்றிலிருப்பதால் சிவப்பாய்த்தோன்றுகின்றன. உஷ்ணசம்பந்தத்தாலாகுங் கற்களைப்போல, ஜலசம்பந்தத்தாலாகுங் கற்கள் வெகு கடினமாயில்லை. இவை மேலிடங்களிலும் பக்கங்களிலும் நேராக விரியக்கூடியவை. மேலும் இவைகளில் அடுக்குப்பொருந்தியுள்ளது. ஒரு புத்தகத்தில் ஏடுகள் எவ்விதம் அடுக்கடுக்காயுள்ளனவோ, அவ்விதமே இவ்வகைக் கற்களின் பாகங்கள் அடுக்காயிருக்கத்தோன்றும். ஆகையால் இவை எளிதில் விரிகின்றன. மேலும் இக்கற்களின்மேல் யாதாயினுமோர் பொருள் வெகுகாலம் பட்டுக்கொண்டிருந்தால் அவை அப்பொருளின் வடிவை மேற்கொள்ளும் இயல்புடையன. மூன்றாவது உருவத்திலும் தன்மையிலும் மாறுதலடைந்த கற்கள். இவை சிலவேளை முதல் வகுப்புக்கற்களினின்றும், பலவேளை இரண்டாம் வகுப்புக்கற்களினின்றும் வரப்பெற்றவை. உருவத்திலுந் தன்மையிலும் மாறுபடுதற்குக் காரணங்கள் அநேகமுண்டு. ஆனால் அக்காரணங்களில் முக்கியமானது உஷ்ணம். நமது பள்ளிக்கூடங்களில், சிறுவர்களெழுதும்பொருட்டு உபயோகிக்குங் கரும்பலகை வடிவமுள்ள சிலேட்டானது (slate) ஓர் உதாரணம்.

மேலும் உயர்ந்த கட்டிடங்களிலுள்ள வழவழப்பான வெண்ணிறம் கருநிறம் பொருந்திய பளிங்குக்கற்கள் (marble) மற்ருேருதாரணமாம்.

மேற்சொல்லியவை கற்களில் முக்கியமான பிரிவுகள். அவைகளைப் பற்றியும் அவைகளினின்றுண்டாகும் பெரும் பிரிவுகளுக்குரிய வெவ்வேறு விதக் கற்களைக்குறித்தும் விஸ்தாரமா யெழுதியுள்ள புத்தகங்களிற் கண்டறியலாம். இவை பூகோள உறுப்பிலக்கணத்தைச் சொல்லும் "பிருதிவி வித்தை" (Geology) என்னும் சாஸ்திரமாம்.

பூசாரவிவரம்:—பூசாரமாவது பூமியின் சத்து: அஃதாவது, விவசாயம் போன்று நமது தொழிலுக்கு இன்றியமையாததாயுள்ள பூமிக்குரிய பொருள்கள். பூசாரமென்ருல் ஒன்றல்ல, பல பொருள்கள் கலந்து பூசாரமாம். சில விடங்களைத் தோண்டிப்பார்த்தால் வெகு ஆழம்வரையிற் பாறைகளுங் கற்களுமாயுள்ளன. இவ்விடங்களில் விவசாயத்திற்குரிய பூசாரமில்லை. வேறு சிலவிடங்களில் மணல் அதிகமாயும், ஈரம் சற்றேனுந் தங்காமல் களிமண் குறைவுபட்டும், புற்பூண்டுகள் அதிகமாய் வளராமலுமுள்ளன. இவ்விடங்களில் விவசாயத்திற்குரிய பூசாரம் வேண்டுமளவில்லை. இது போன்ற மற்றெந்த விடங்களிலும் பயிரிடுந் தொழிலுக்கு அநுகுணமான வஸ்துக்கள் பூமியின்கண் இருந்தால் பூசாரம் நன்றென்றும், சிறிதேனுமில்லாவிட்டாலும் குறைவுபட்டாலும் நன்றல்ல வென்றும் சொல்லிவருவார்கள். ஆகையால், பூசாரமுள்ள இடங்களையும் பூசாரமற்ற விடங்களையும் அடியில் வருமாறு கண்டறிவோம்.

பயிரிடும் பூமியிற் பலவிதப்பொருள்களைப் பார்க்கிருேம். அவை எவை யெனில்:— (1) மணல், (2) மண், (3) களிமண், (4) உப்பு, (5) சுண்ணும்பு, (6) ஈரத்துக்கு வேண்டிய ஜலம், (7) அழுகிக்கருகியுள்ள செடி புற்பூண்டுகள், (8) இரும்பு, இன்னும் இவைபோன்ற வேறு வஸ்துக்களும், மேற்சொல்லிய வஸ்துக்களுமெல்லாம் பூமியிற்கலந்துள்ளன. ஆனுல் எல்லாவிடங்களிலும் அவ்வஸ்துக்கள் சம அளவாகக்கலந்ததில்லை. ஓரிடத்தில் மணல் அதிகமாயும், மற்ருேரிடத்தில் சுண்ணும்பு அதிகமாயும், வேறு சிலவிடங்களில் உப்பு அல்லது களிமண் அல்லது கருகின தாவரவஸ்துக்களதிகமாயுமிருக்கலாம். ஆதலால், அவ்வவ்விடத்து விசேஷப் பொருள்களைக்கண்டு பரிசோதித்துப் பூசாரத்தைத் தேர்ந்தறியவேண்டும்.

பூமியில் ஓரிடத்தில் உத்தேசம் 1-சதுர அடி விஸ்தீரணம், 1-அடி ஆழம் வரையில் தோண்டி யெடுக்கப்பட்ட மண்ணை அப்படியே சாக்கிரதையாய்க் கொண்டு அடியிற் சொல்லியபடி பரீக்ஷித்துப் பார்த்தால், அதன் பூசாரவிவரம் நமக்குச் சுலபமாய் வேண்டுமளவு விளங்கும். அம்மண்ணிற் கொஞ்சமெடுத்துத் தராசில் நிறுத்துப் பார்த்து அளவெடுத்த பின் அம்மண்ணை

வெப்பமான ஓர் அறையிற் சிலகாலம் வைத்து அதன்பின் மண்ணை நிறுத்துப்பார்த்தால், அளவில் வித்தியாசப்படும். இந்த வித்தியாசம் முன் மண்ணோடெலந்திருந்த ஈரம், மண்ணைவிட்டகன்றமையாலுண்டாயது. ஆதலால், அம்மண்ணையுடைய பூமியிலுள்ள ஈரத்தின் அளவை அறியக்கூடும்: மேலும் வெட்டியெடுத்த மண்ணிற்கொஞ்சமெடுத்து அதை முதலில் நிறுத்துப்பார்த்துப் பின்பு, ஒரு கனத்தபீங்கான் கிண்ணத்தில் வைத்தெரித்தால், ஈரமும் தாவரவஸ்துவும் விட்டகன்று மீதியைச் சாம்பலாகத்தங்கச்செய்யும். ஆதலால் முன்னளவுடன் இப்போது நிறுத்தால் ஏற்படும் அளவைக்கொண்டுபார்ப்பின் வரும்வித்தியாசம் ஈரத்தையும் தாவரவஸ்துவின் அளவையுங்கொண்டுகாட்டும். முன்னமேயே ஈரத்தை அறிந்துகொண்டோம். ஆகையால் தாவரப்பொருளினளவு நன்குபுலப்படும். ஒருதெளிவானகண்ணாடிப் பாத்திரத்திற் சிறிது புதுமண்ணைக்கொண்டு நன்றாய்க்கரைத்துக் கலக்கிய பின்பு பாத்திரத்தைச் சிலநேரம் அசைக்காமல் வைத்திருந்தால் களிமண் மேல்மிதக்க, கீழே சிறுமணற்பொடிகளும் எல்லாவற்றினுங்கீழ் பெருமணற்பொடிகளும் மெதுவாய்ப்படியப்பார்க்கலாம். அதைக்கொண்டு அவ்வப்பொருளின் அளவை ஒருவாறுமதிக்கக்கூடும். மேலும் மண்ணிற் சுண்ணாம்பிருப்பதுமில்லாததும் அறியவேண்டுமாயின் சிலதிராவகங்களைக்கொண்டு மேல்விடும்பொழுது, கொதித்தால் சுண்ணாம்பிருப்பதாகவும் இல்லாவிடிலில்லையென்றும் சொல்லத்தகும். இதன்பொருட்டு ஜலவாயுவும் [Hydrogen] புஷ்பம்போன்ற இயற்கைப்பொருள்களின் வர்ணத்தை நீக்கவல்ல வாயுவாகிய க்ளோரீன் (Chlorine)என்னும் வாயுவும் சேர்ந்துண்டாகிய ஹைட்ரோக்லோரிக் ஆசிட்(Hodrochloric acid) என்னும் திராவகத்தைச் சாதாரணமாய் உபயோகிக்கலாம். உப்பு உள்ளதுமில்லாததும் நீரிற் கரைவதால் எளிதில் அறியலாகும்

பூமியின் வெவ்வேறு பெயர்:—வெவ்வேறிடங்களில் பூமியின் தன்மை மேற்கண்டபடி வித்தியாசமடையலாம். மணலானது மேற்பட மற்றவைகள் குறைந்திருந்தால் அப்பூமியை மணற்பூமி யென்று கூறலாகும். மணலும் மற்றவைகளுங் குறைந்து களிமண் அதிகரித்திருந்தால் களிமண்பூமியென்று பெயர் பெறும். மணலுங்களிமண்ணும் ஏறக்குறைய அளவில் சமமாகவிருக்க, மற்றவை கூடியமட்டும் சிற்றளவிலிருப்பின் அப்பூமியை பசலைப்பூமி யென்று சொல்லலாம். இப்பூமி விவசாயத்திற்கு மிக உரித்தானது. பசலைப்பூமியில் மணல் சற்றதிகரித்திருப்பின் அதை மணற்பசலை யென்று கூறல் தகும். களிமண் அதிகரித்திருப்பின் களிப்பசலை யென்றும் சொல்லத்தகும். இவ்வாறு பூமிகள் வித்தியாசப்பட்டுப் பெயர் பெற்று வருவதுமன்றி, பூமியில் தாவரமதிகரித்திருப்பின் தாவரபூமி

யென்றும், உப்பு அதிகரித்திருப்பின் உவர்ப்பூமி யென்றும், சுண்ணாம்பு அதிகரித்திருப்பின் சுண்ணாம்புப்பூமி அல்லது சுக்கான் பூமியென்றுங் கூறலாகும். நீர் மிகத்தங்கினால் நீர்ப்பூமி யென்று கருதலாம். இரும்பைத்திரளாகக்கொண்ட செம்மண்பூமியுமுண்டு. ஆற்றின் வெள்ளப்பெருக்காலுண்டான துழைசேற்றுப் பூமியுமுண்டு (Alluvial soil). பூமியைப்பற்றி மற்றப்படி விசேஷமாயறியவேண்டுமாயின் விவசாயத்தொழிலை நன்குவிளக்குவதற்கேற்ற தனிப்புத்தகங்களைப் படித்தறியவேண்டும்.

முற்கூறிய பொருட்டன்மை:— (1) மணல் (Sand)—ஓர்வயலில்மணலதிகப்பட்டிருந்தால் நீரைக்கட்டாது. ஓர் மணலைக்கையிலெடுத்துப்பார்த்தால் அம்மணல் ஏறக்குறைய திரிகோணவடிவமுள்ளதாகத் தோன்றும். திரிகோணவடிவமுள்ள பல மணல்கள் ஒன்றுசேர்ந்தால் பக்கத்திற்கண்ட சித்திரப்படி நடுவிடங்கள் பலகொள்ளும். அந்நடுவிடங்கள் நீர் உட்கொள்ளவும் வெளிப்படவுமுள்ள சிறுதுவாரங்களாம். ஆகையால் மணலானது நீரை வேகமாய் உட்கொள்ளத்தக்கன; மேலும் நீரைச் சீக்கிரத்தில் ஆவியாகும்படி சூரியவெப்பத்தால் வெளியிடத்தக்கன. ஆதலால் பயிரிட



வேண்டும் பூமிகளில் மணல் அதிகமானால் வேண்டுமளவு ஈரத்தைக் கட்ட முடியாது. நீரை வடிகட்டும்பொருட்டு ஒன்றன்மேல் ஒன்றாகப் பானைகளை அடுக்கி வடிகட்டப்பார்த்திருக்கலாம். புகைவண்டி தங்குமிடங்களில் மனிதர் குடிப்பதற்காக ஓரிடத்தில் முக்காலிவைத்து அதில் ஒன்றன்மேல் ஒன்றாகப் பானைகளை அடுக்கி நீரை வடிகட்டுவதைக்காண்கிறோம். மேற்பானையில் நீரை வார்த்தால் அதனடியிலுள்ள ஓர் துவாரத்தினால் துளிகளாய் அதன் கீழிருக்கும் வேறு பானையிலுள்ள அடுப்புக்கரியிற் சொட்ட, பிறகு அவ்விரண்டாவது பானையைவிட்டு அதன் கீழ்த்துவாரத்தால் அதன் கீழுள்ள மற்றோர் பானையின் மணலின்மேற்சொட்டும். முடிவில் நீரானது மூன்றாவது பானையைவிட்டுக் கீழ்த்துவாரத்தால் நான்காவது கீழ்ப்பானையில் தெளிவுபெற்றுச்சேரும். மூன்றாவது பானையின் மணலில் நீரானது விழ நடுத்துவாரங்களின் வழியாய்ப் பாயிச்சென்று அடிவாரத்தையடைகிறது. ஆதலால் மணல் நீரை விரைவிற்கொள்ளுவதுமன்றி விரைவில் விட்டும்விடும். மேலும் மணலானது செடிகள் உட்கொள்ளத்தக்க பதார்த்தமல்ல. ஏனெனில் மணல் நீரில் கரைவதில்லை. பயிருணவாகிய பூசாரம் நீரில் கரைய அந்நீரைப் பயிர் உட்கொள்ளும். மணல் செடிகளின் வேர்களையும் துண்டுகளையும் பலமாகப் பிடித்துநிற்கச்செய்வதல்ல. மணற்பூமியின்மேல் சுவரையெழுப்பினால் சுவரானது சீக்கிரத்தில் தாழும். ஏனெனில் மணல் உறுதியற்றுச்சரிவதினால் அஸ்திவாரம் நிலைகுலைந்துபோம். ஆதலால் மிக்க மணலைக்கொண்ட பூமி பயனுக்கு ஏற்காது.

(2) களிமண் (Clay):—களிமண்ணானது உறுதியாக ஒட்டிக்கொள்ளத் தக்கது. ஆகையால் நடுவிடங்கள் அஃதாவது துவாரங்கள் வெகுசிறியதாயுள்ளன. களிமண் பூமியின்மேல் நீரைக்கொட்டினால் நீர் பூமியின்மேற்றங்கிச் சில நேரத்திற்கப்புறம் பூமிக்குள் ஊறும். ஆதலால் களிமண் நீரை வேகமாய் உட்கொள்ளாது. அஃதாவது களிமண் மெல்ல மெல்ல நீரை வாங்கிக்கொள்ளும். அதே காரணத்தால் வாங்கினநீரைக் களிமண் சீக்கிரமாய் சூரியனது வெப்பத்திற்கு வெளியிடாது. ஆதலால் களிமண் நீரை வாங்கிக்கொள்ளவும் கொண்ட நீரை அடக்கிக்கொள்ளவும்கூடும்: ஆகவே, பயிருக்குவேண்டிய ஈரத்தை இழவாமல் பூமிக்குள் வைத்திருக்கக் களிமண் மிகவும் உபயோகமான பொருள். களிமண் ஒட்டுமியல்புடையதாகையால் அந்தப் பூமியை உழுவது கஷ்டம். இக்கஷ்டத்தை நீக்கும் பொருட்டு மணலைச் சேர்த்து வருவதுண்டு. பயிர்களின் வேர்களையும் துண்டுகளையும் களிமண் உறுதியாகப்பிடிக்குந்தன்மைத்து. மிக்க ஆழம் வேர் விடும் பயிர்களுக்குக் களிமண் மிகவும்உபயோகமானது. ஆனாற் களிமண் பூமியானது உலர்ந்தால் வெடிப்புக்கொள்ளும். மணலோடு களிமண்ணைச் சேர்த்தும் களிமண்ணோடு மணலைச்சேர்த்தும் வந்தால் பூமி பயிர்த்தொழிலுக்குதவும். களிமண்ணில் இரண்டுவிதமுண்டு. அவை கருநிறமும் வெண்ணிறமுமுடையனவாம். நாம் சாதாரணமாய்ப்பார்த்துவருவது கருநிறக்களிமண். அது பானை சட்டி செய்வதற்குதவும். வெண்ணிறக் களிமண்ணை சீனதேசத்துக் களிமண் (China clay) என்றும், கேயோலின் (Kaolin) என்றும் கூறுவர். பீங்கான் அதிற் சேர்ந்தது.

(3) உவர்மண் (salt land):—மண்ணில் உப்புக்கலந்திருக்கலாமென்று முன்னமேயே படித்தோம். சில உப்புக்கள் பயிருக்காவதில்லை. அவை பயிரை அழிக்கவல்லன. ஆதலாற் சாதாரணமாக உவர்மண்ணைக்கொண்ட பூமியை உழுது பயிராக்குவதில்லை. ஆயினும் சில பயிர்கள் உவர்மண்ணுக்குரியன. கேழ்வரகு (Ragi) அதற்கோருதாரணம். அதை இங்கிலீஷில் உப்பைத்தின்னும்பயிரென்று பொருள்பட்ட "Salt feeder" என்பர். ஓரிடத்தில் உவர்மண் அதிகரித்துப் பயிரிட அசாத்தியமானால் உப்பை நீக்கும் பொருட்டு நாகதாளியையும் புற்களையும் பயிராக்குவர். இந்தியாவில் வடக்கே யுள்ள சிலதேசங்களில் உவர் மண்ணின் உப்பு நீரில் கரைந்து தரையின் மேல் உத்தேசம் ஓர் அடி உயரம் படிகிறது. இதை 'உப்புப்பூத்தல்' (Efflorescence) என்பர்.

(4) சுக்கான் மண் (Calcaious soil):— இது சுண்ணாம்புக்கல் கலந்துள்ள மண். இதுவும் பயிருக்கு விசேஷமாய் உதவாது. ஆனால் புகையிலை மணிலாக்கொட்டை முதலிய பயிர்கள் சிறிது சுண்ணாம்பை மேற்கொள்

ளுமாகையால் இவ்வகைப் பூமியில் சாமானியமாக வளரலாம். ஆனபோதிலும் பயிரிடுவதற்கு சுக்கான்பூமி உபயோகமானதாகக் கருதலாகாது. சில விடங்களிற் சுண்ணும்பைக் கற்கட்டிகளாகப் பூமியினின்றும் வெட்டி யெடுக்கப்பார்க்கலாம். அதை கங்கர் (Kankar) என்றும் கூறுவர்.

(5) துழைசேற்றுமண் (Alluvium):—இவ்வகை மண்ணை ஆற்றோரங்களிற் காணலாம். இஃது ஆற்றுப் பெருக்கினுலாகிய நீரோதுக்குமண். இதுபயிருக்கு மிகவும்உபயோகமுள்ளது. சாதாரணமாய் ஆற்றுப்பெருக்கு இம்மண்ணை ஒதுக்குங்கால் திரிகோணவடிவமாய் ஒதுக்கும். ஆதலால் இம்மண்ணைக்கொண்ட விடத்தை இங்கிலீஷில் டெல்டா (Delta) என்றுகூறுவர். கோதாவரி போன்ற பெரிய நதிப்பிராந்தியங்களில் இவ்வகைத்தான டெல்டா (Delta)வைக் காணலாம். அதில் விஸ்தாரமாகப் பயிரிடுகிறார்கள். பயிர்க்கு வேண்டிய உணவுப்பொருள்கள் தகுந்த பக்குவத்தில் விசேஷித்துள்ளன.

(6) இருப்புக்கலப்புள்ள மண் (Ferruginous Soil):—இம்மண்செந்நிறம் கொண்டிருக்கும். செம்மண்ணில் விசேஷமாய்ப் பயிரிடுவதில்லை. ஆனபோதிலும் நமது வீடுகளில் துவரையை முளைகட்டுங்கால் அதனைச் செம்மண்ணுடன் கலந்து நீரில் ஊறவைக்கிறார்கள். அப்போது துவரை முளை விடுகிறது. ஆனுற் செம்மண்ணைக்கொண்டு இவ்விதம் உபயோகிப்பது துவரை பருக்கவும் எளிதில் தோல்விடவும் பூச்சிக்கிரையாகாயலிருக்கவுமாமென்பார்கள்.

(7) தாவரங்கலந்தமண் (Humous or Peaty soil):—இஃது அழுகியும் கருகியுமுள்ள செடி, இலை, புல், பூண்டுகளுடன் கலந்து கருநிறம் பெற்ற மண். இம்மண்ணில் வேண்டியவளவு ஈரந்தங்கும். மேலும் பயிர்களுக்கு வேண்டிய பூசாரம் அதாவது உணவுப்பொருள் இதில் விசேஷித்துள்ளது. வெகுநாளாக பூமியின்மேல் வளர்ந்துபடும் காய் கனி இலை முதலியவை மண்ணிற்கிடந்து அழுகியுள்ளவை. இம்மண்ணை விவசாயத்திற்கு மிகவும் வேண்டும் பொருளாகக் கருதுவர். சில விடங்களில் வெகு விஸ்தீரணம் இம்மண் பரவியிருக்கப் பார்க்கலாம். இதைக் கரும்பருத்தி மண்ணென்று சொல்லுவர்; இங்கிலீஷில் 'பிளாக்காட்டன்சாயில்' (Black cotton soil) என்று அழைத்து வருவார்.

ஐந்தாம் பாடம்

உலோகங்களும் மற்றவையும்.

பூமியிலுள்ள தாதுப்பொருள்களைப்பற்றி முன்னமேபடித்துவந்தோம். தாதுப்பொருளாவது பூமியின்கண் சுபாவத்திலேற்படக்கூடிய ஓர் வஸ்து.

பெண்களுக்கும் அவசியமாக வேண்டுமாகையால் ஒவ்வொருவரும் மிதத்துக்குமிஞ்சாமல் வியாயாமம்செய்தே தீரவேண்டும். நமதுநாட்டில் நமது பெண்கள் விசேஷமாய் வீட்டிலுள்ள வேலைகளவ்வளவையும் காலைமுதல் மாலைவரையில் அவர்களே செய்கின்றபடியால் அவர்களுக்கு வேறுவித வியாயாமம் வேண்டாம். சில சமயங்களில் வேலையில்லாமல் உட்கார்ந்திருக்கும் பெரிய மனிதர்கள் வீட்டுப்பெண்களுக்கு எளிய வீட்டுப்பெண்களைவிட அதிகநோய் உண்டாவது வியாயாமக்குறைவாற்றான்.

உடுப்பு :—"அரைவயிற்றுக்குச் சாப்பாடு சாப்பிட்டாலும் அரைநிரம்ப வஸ்திரமிருக்கவேண்டும்" என்பது உலகச்சொல். அது அவ்வளவும் உண்மை. உஷ்ணத்திலிருந்தும் சீதத்திலிருந்தும் நமது தேகத்தை நாம் உடுப்பாலும் வஸ்திரத்தாலும் கம்பளங்களாலும் துப்பட்டியாலும் பாதுகாத்துக் கொள்ளுவதால், நமக்குண்டாகும் தேகசௌக்கியத்திற்குக் கணக்கேயில்லை. பல்லாரி, கர்னூல் முதலிய இடங்களிலும், பம்பாய்தேசத்திலும் சஞ்சரித்தவர்கள் அவ்விடத்திலிருக்கும் குடியானவர்களும் தொழிலாளிகளும் போடும் உடுப்பைச் சற்றுக்கவனித்து, அவர்களுடைய தேகபுஷ்டியையும் நமது தென்னாட்டிலுள்ள வேலைக்காரர்களுடைய தேகபுஷ்டியையும் சீர்தூக்கிப்பார்த்திருப்பார்களேயானால், நாம் சொல்லும் இச்சித்தாந்தம் உண்மையென்பது ஒரு நொடியில் அவர்களுக்கு விளங்கும். அத்தேசத்து வேலைக்காரன் கட்டைவிரல் கனமுள்ள இரட்டாற் செய்யப்பட்ட சல்லடம் ஒன்று முழங்கால்வரையில் தொங்கத்தரித்திருப்பான். அதே துணியாலாகிய கெட்டிச்சட்டை தன்தேகத்திற் போட்டிருப்பான். தலையில் பெரும் பறங்கிக்காய் போன்ற ஒரு தலைப்பாகை வைத்திருப்பான். இவைகளுடன் அவனுக்குத் துப்பட்டியோ அல்லது கம்பளியோ உண்டு. சுருங்கச்சொல்லின் நல்ல அழுத்தமும் உறுதியுமான துணிகளால் தனது தேகத்தை வேலைசெய்யுங்காலத்திலும் மற்றக் காலத்திலும் அதற்கேற்றபடி மூடிக்கொண்டிருக்கின்றான். இக்காரணத்தாற்றான் அரோகதிடகாத்திரனயிருக்கிறான். நமது தென்னாடாகிய தஞ்சாவூர் திருச்சி ஆர்க்காடு முதலிய பிரதேசங்களில் கூலிக்காரர்களும் வேலைக்காரர்களும் வெகு குறைந்த வஸ்திரங்கள் உடுத்துக் கொள்ளுவதுடன், வெகு மெல்லிய உடுப்புக்களும் தரித்துக்கொள்ளுகிறார்கள். பெரும்பாலும் சில வேலைக்காரர்கள் இந்தப் பிரதேசங்களில் துணிகளேயின்றி கௌபீனம் மட்டும் தரித்திருப்பார்கள். பம்பாய் வேலைக்காரன் ஒருவன் சென்னைவேலைக்காரர் பத்துப் பெயர்கள் போடும் உடுப்பைப் போட்டுக்கொள்ளுகிறான் என்று சொல்லலாம்.

நம் சருமத்தை அழகாய் மூடுவதுடன் நம் உடுப்பு நம்தேகத்திலுண்டாகும் உஷ்ணத்தைப்பாதுகாத்து நம் ஆகாரத்தையும் சீர்மைசெய்து

கொடுக்கின்றபடியால், உடுப்புவிஷயத்திற் காலத்துக்கும் மாதத்துக்கும் வயதுக்கும் தகுந்தபடி ஒவ்வொருவனும் வெகுஜாக்கிரதையாக விருத்தல் வேண்டும்.

அவ்வாறே ஸ்நாநவிஷயத்திலும் அவனவன் தேகத்துக்கும் பலத்துக்கும் தகுந்தபடி வெந்நீரிலோ அல்லது தண்ணீரிலோ, அதிகாலையிலோ அல்லது எப்பொழுதோ ஒவ்வொருவனும் நீராடித் தன் சருமத்தை வெகுபரிசுத்தமாக வைத்துக்கொள்ளல் வேண்டும்.

மலக்கட்டு என்ற உபத்திரவமில்லாதவண்ணம் நாம் எப்பொழுதும் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். இந்நோயால் வருந்துகின்றவர்கள் அடிக்கடி வாரத்துக்கு ஒருமுறை அல்லது மாதத்திற்கிருமுறை பேதிக்கு வாங்கிக்கொள்ளுவார்கள். அவ்வழக்கம் மலக்கட்டை நீக்காமற்போவதுடன், தேகத்தில் துர்ப்பலத்தை விளைவிக்கும். மலக்கட்டில்லாதவண்ணம் நாம் ஆகாரத்திலேயே அதிகநீர் உட்கொள்ளுவதினாலும், கீரைமுதலிய சாகங்கள் அடிக்கடி புசிப்பதாலும் கனிவர்க்கங்களை அதிகமாகச்சேர்ப்பதாலும், நாம் நமது தேகஸ்திதியை ஒருவித நிதானத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

இவைகளைப்பற்றி நாம் பகிரங்கமாக இவ்வளவு தூரம் சுருக்கிச்சொன்னோம். நமதுதேகத்தைச் சுகமாய்ப்பாதுகாக்க இதனினும் மேலானகாரணம் ஒன்று உண்டு. அது நமது மனோவிகாரங்கள் என்றுசொல்லப்படும் காமம் முதலியவைகளால் நாம்நமது தேகத்தை ஒருபொழுதும் கெடுத்துக்கொள்ளாமலிருக்கவேண்டும். தேகசௌக்யத்துக்கு வெகுமுக்கியமாகையால் இவ்விஷயமாய் நாம் வெகுஜாக்கிரதையாகவிருக்கவேண்டும். காமம் காமத்தைச்சேர்ந்த பலவித துர்வாடிக்கைகள் இவைகளாற் சிறுவயதில் தங்கள் சரீரங்களைப்பாழாக்கிக்கொண்டவர்கள் பலர். இதைப்பற்றிநாம் அதிகமாகச்சொல்ல நம் சாஸ்திரம் இடங்கொடுக்கமாட்டாது. ஆனால் நாம்கட்டாயமாய் அவர்களுக்குச்சொல்லவேண்டியதென்னவெனில், நமது தேகசௌக்கியம் நம் வமிசக்குழந்தைகளின் தேகசௌக்கியமே. இவைகளை நன்றாக யோசித்துப்பார்த்து இவ்விஷயமாய் நாம் எவ்விதமாக நடந்துகொண்டால் ஒருவிதக்கெடுதியும் நேரிடாதோ அவ்விதமாகநடக்கவேண்டும்.

தேகத்திலுண்டாகும் நோய்களுக்கு வியாதி என்று பெயர். மனதிலுண்டாகும் சங்கடங்களுக்கும் துக்கங்களுக்கும் கவலைகளுக்கும் ஆதி என்று பெயர். ஆதிக்கும் வியாதிக்கும் ஓர் அரை* எழுத்துத்தான் வித்தியாசம் என்

---

* "ஆதிக்கும் வியாதிக்கும் அரை எழுத்து வித்தியாஸம்" என்று வடமொழியில் ஒரு பழமொழி உண்டு.

பார்கள். இதன் தாற்பரியம் நாம் நமது மனத்தை விசாரமின்றியே வைத்துக் கொள்வது நமது தேகசௌக்யத்துக்கு ஓர் முக்கிய காரணம். சிலர் எப்பொழுதும் எக்கமாயிருந்துகொண்டு எப்பொழுதும் குறையும் குற்றமும் சொல்லிக்கொண்டு ஒரு நாளும் தனக்கும் மற்றவர்களுக்கும் சுகமில்லாமல் திரிவார்கள். இது ஒரு துர்க்குணமாக விருப்பதுடன் தேக சௌக்யத்துக்கும் வெகு குறைவு. எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பதால் நாம் சுகமாக நமது ஆகாரத்தையும் செரித்துக்கொள்ளுகின்றோம். நாம் நமது தேகசௌக்கியங்களாகின்ற ஆகாரம் வியாயாமம் முதலியவைகளில் ஜாக்கிரதையாக இருந்தாற்றான் நமது மனோபாவமும் சுகமாக விருக்கும் என்றும் சிலர் வேண்டுமென்றே இம்மனோபாவத்தைக் கெடுத்துக் கொள்ளுகின்றார்கள் என்றும் இவ்வாறு கெடுத்துக்கொள்ளாம விருந்தாற்றான் புத்தியாலும் மனத்தினாலும் நாம் செய்யவேண்டிய தொழிலைச் சரிவர நடத்தலாம் என்றும் நாம் சொல்லவேண்டும். நாம் சிறு வயதுக் குழந்தைகளாக விருக்கும்பொழுது பலவித நிபந்தனைகள் நமக்கு உபதேசம் பண்ணப்படும். நமக்கு வயதாக ஆக நாம் பழக்கத்தால் எல்லாவித சுகங்களையும் தெரிந்து கொள்ளுகின்றோம். ஒவ்வொருவனு மிவ்வாறிருக்க வேண்டும் என்று ஒரே நிபந்தனையாகச் சொல்லமுடியாது. அவனவன் தேகக்கூற்றுக்குத் தக்கபடி அவனவன் சௌக்கியத்தைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

சுகசந்தர்சன முறைகளை நன்றாகத் தெரிந்து கொள்ளத் தேசவளம் (climate), நீர்வளம், வாயுவளம் (atmosphere) இவைகளைப்பற்றி நாம் கொஞ்சம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். ஏன்? நாம் ஓரிடத்தில் வசிக்கும் பொழுது அவ்விடத்திலிருக்கும் சீதோஷ்ணங்கள், வாயுவின் சலனம், தீர்த்தம், நிலவளம் இவைகளெல்லாம் நமது தேகசௌக்கியத்தை மாறுபடுத்துகின்றன. உஷ்ணதேசத்திலுள்ளவர்கள் தேகத்தோல் கருத்தவர்களாகவும் சீத தேசத்தில் வசிப்பவர்கள் வெண்மையான தோலுள்ளவர்களாகவுமிருக்கின்றார்கள். தேசவளம், ஆகாரம், நாகரீகம் இவைகளை அநுசரித்துச்சில ஜாதியார்களிருப்பார்கள். மனுஷ தேகமானது எத்தேசத்திலேயும் குடியேறி சௌக்யமாக வசிக்கும் இயற்கையுள்ளது. ஒரு தேசத்திற் பிறந்து வளர்ந்தவன் மற்றொரு தேசம் போய்க்குடியேறுவதால் முதல் முதற் கொஞ்சம் அசௌக்கியப்படலாம். அப்புறம் அந்நாட்டிற் பழகப் பழக அவ்வித அசௌக்கியங்கள் முற்றிலும் அவனுக்கு நீங்கும். ஆங்கிலேயர்கள் நமது தேசத்தில் வந்து சௌக்கியமாய் 20, 30 வருஷகாலம் உத்தியோகம்செய்து விட்டுத் தங்கள் தேசத்துக்குத்திரும்பிப் போவதை நாம் காண்கின்றோமல்லவா? இயல்பாகவே ஒரு தேசம் நோயோடு கூடியதென்

பதுமட்டுமில்லாதபட்சத்தில் எல்லாத்தேசங்களும் மனித வாசத்துக்குத் தகுந்த தேசங்களே யாம்.

உஷ்ண தேசங்களில் இருதயம் அடித்துக் கொள்ளுவததிகம் என்றும் சீததேசத்திற் பசியுண்டாகின்றதுபோல் அவ்வளவு அதிக பசி உஷ்ணதேசத்தில் உண்டாகின்றதில்லை என்றும், வியர்வை அதிகமாகையால் வியர்க்குரு முதலிய உபாதிகள் அதிகமென்றும், மூத்திரமிறங்குவது குறைவு என்றும், நம் தேகத்தின் நரம்புகள் அதிகமாக விலவிலக்கின்றபடியால் நம் தேகம் பலத்தை அடைகின்றதில்லை என்றும், உஷ்ண காலங் குறையாமல் ஒரே ரீதியாக நீடித்தகாலமிருக்கும் பட்சத்தில் இவ்வியாதிகள் அதிகத்துன்பத்தை உண்டுபண்ணுகின்றன என்றும் சுகஸந்தர்சன சாஸ்திரிகள் பரிசோதித்து ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

சதுப்பு அல்லது நீர்நனைந்த காற்றுவீசும் தேசங்கள் சில உண்டு. இவைகள் நீர் அதிகமாகக் காற்றுடன் சம்பந்தப்பட்டுச் சூரியகிரணத்தின் வெப்பத்தால் உலர்த்தப்படாத காரணத்தாற் பலவித நோய்களை விளைவிக்கும். எப்பொழுதும் சௌக்கியமான நாடுகள் என்று ஒப்புக்கொள்ளப்படும் சில நாடுகளும் சில சமயத்தில் ஏதோசில சுகாதாரக் குறைவால் நீர் நனைந்த காற்று வீசும் பிரதேசங்களாகமாறி நோய்களை உண்டாக்கும். இவ்வாகாயம் சலிக்குமிடங்களில் உண்டாகும் நோய்கள் விஷஜ்வரம் அம்மை இவை போன்றவைகளே. காற்று வறண்டு போகப்போக இந்நோய்கள் குறைந்து விடும்.

காற்றோட்டம் :—குளிர்ந்த காற்று நமது தேகத்தின் வெப்பத்தை இழுக்கும். உஷ்ணக்காற்று வியர்வையை அதிகரித்து வைக்கும். குளிர்ந்த தேசத்தில் அதிகக் காற்றோட்டமின்றி சாதாரணமாய் வாயுவிருந்தால் அதிகக்கெடுதலுண்டாக்கமாட்டாது. அத்தேசத்திற் காற்று வீச ஆரம்பித்தால் உடம்பும் குளிரால் விறைக்க ஆரம்பிக்கும். அதிக உஷ்ணமான காற்றாலும் அதிக வியர்வை நமது தேகத்தை விட்டுப் போவதால் தேகம் சில சமயம் குளிர்ந்து விறைத்து விடுகின்றது என்கின்றார்கள். தினத்தின் நேரம் உஷ்ணத்திற்கும் சீதத்துக்கும் காரணமாக விருக்கின்றது. பகல் 15-நாழிகைப்பொழுதிற்றான் நமது நாட்டில் எப்பொழுதும் அதிக வெய்யிலும் உஷ்ணமும், சூரியோதயம் ஆகும் முன்வேளையாகிய பிராஹ்மே முகூர்த்தந்தான் வெகுசீலமுமான வேளை.

பூமியின் உயரம், உத்ஸர்ப்பிணி அல்லது அவஸர்ப்பிணியாகவிருக்கும்தன்மை, நாமிருக்கும் நாட்டின் காற்றோட்டம், மேகந் தங்கும் நிலைமை, மழைபொழியும் இயற்கை, சுற்றியிருக்கும் சமுத்திரம் அல்லது மலைமுதலிய பாங்கு,

கோடைகாலமுதலிய வருஷத்தின்பாகம் இவைகளவ்வளவையும் நாம் குடியிருக்கும் தேசத்தின்பிரகிருதி என்று சொல்லப்படும் தேசவளம் (climate) சம்பந்தித்திருக்கின்றது. நாம் குடியிருக்கும் தேசப்படி நமது தேகசௌக்கியத்தை அத்தேசவளத்துக்குத் தகுந்தபடி நாம் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். தேகத்தில் உஷ்ணமிருக்கிறவரையில் உயிர் இருக்கின்றது என்பது சித்தாந்தம். சீதம் கண்டதானல் உயிர் போயிற்றென்பார்கள் அல்லவா? ஆகையால், பலவித காரணங்களால் நமது தேகத்தின் உஷ்ணத்தை நாம் குறைவுபடாமற் பலவிதத்தாலும் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

வெளிச்சம் ஒவ்வொருவனுக்கும் வெகுமுக்கியம். நாம் வாசஞ்செய்யும் எல்லா இடங்களிலும் வெளிச்சம்வேண்டும். வெளிச்சம் குறைவாகவிருப்பதால் விளையும் தீமையை நாம் ஓர் உதாரணத்தாற் காட்டுவோம். நாம் நமது காட்டுப்பாதைகள் வழியாய்ப் போய்க்கொண்டிருக்கும்பொழுது பாதையின் இருபக்கங்களிலேயும் மரங்கள் வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கின்றோம். அம்மரங்கள் ஓங்கிவளர்ந்து அருகிலிருக்கும் புலங்களில் தழைத்து ஓங்கும். அப்புலங்கள் பயிராயிருப்பதையும் நாம் பார்க்கலாம். ஆனல் மரநிழலின்கீழ்ப் பயிராயிருக்கும் பயிர் ஒன்றுவது செழிப்பாகவேயிருக்கமாட்டாது. சிலவிடங்களில் அந்த நிழலின் கீழ் ஒருபயிரும் உண்டாகின்றதுமில்லை. வெளிச்சம் என்பது வளர்ச்சிக்கு வேண்டும் என்பதற்கு இதை ஓர் உதாரணமாக சுகஸந்தர்சன சாஸ்திரிகள் எப்பொழுதும் சொல்லுவது வழக்கம். பயிருக்கே இப்படியிழுக்குநேரும்பொழுது மனிதர்களாகிய நமது வளர்ச்சிக்கும் வெளிச்சம் அவசியம் வேண்டுமென்பதைச் சொல்லவும்வேண்டுமோ ?

நாம் கொஞ்சம்அசாக்கிரதையாயிருப்பதாற் பலசமயங்களில் ஜலதோஷத்தை வருவித்துக்கொள்ளுகின்றோம். நாம்அயர்ந்து தூங்கும்பொழுது நமதுதேகம் நன்றாகவியர்க்கும். அப்பொழுது தெரியாத்தனத்தால் நாம் காற்று நம்மேலடிக்க இடங்கொடுத்திருப்போம். அயர்ந்து தூங்கும்பொழுது காற்றடிப்பதும் நமக்குத்தெரியாது. அதனல் ஜலதோஷமுண்டாகலாம். வெளியிற் குளிர்ந்த காற்றுவீசும்பொழுது நாம் உலாவும்படிவந்தால் அப்பொழுது வாயால் சுவாசிப்பதால் ஜலதோஷத்தை வருவித்துக்கொள்ளுகின்றோம். நாம்வேகமாய் வெளியில்நடந்துவிட்டு வெயர்க்க வெயர்க்க நமது வீட்டுக்குட்புகும்பொழுதும் அல்லது நன்றாக வியாயாமம் செய்துவிட்டுத் தேகம் உஷ்ணமாய் வெயர்த்துக்கொண்டிருக்கும்பொழுதும் நமது தேகத்தின்மேல் மூடியிருக்கும் துணிகளையகற்றிக் காற்றுமேற்படும்படி செய்வதால் ஜலதோஷம்பிடிக்கும்படி செய்துகொள்ளுகிறோம்.

மூன்றாவது நாம் உஷ்ணஜலத்தில்நன்றாக ஸ்நாநம்செய்து தேகம்விய ர்த்துக் கொண்டிருக்கையில் சீதக்காற்று மேலடிக்கச் செய்துகொள்வதால் ஜலதோஷம்பிடிக்கும்படி செய்துகொள்ளுவோம். இம்மூன்றுவிதமான அஜாக்கிரதையும் நாம் நம்மை விட்டுநீக்கவேண்டும். ஒருவாறு நம்மையறி யாமல் இவ்விதமாய் நோயால் வருந்தும்படிவந்தால் அதை உடனே நீக்கிக் கொள்ளவேண்டும்.

பதின்மூன்றும் அதிகாரம்

தொத்துநோய்கள்.

Chapter XIII.—Epidemic Diseases.

நமது ஆரோக்கியத்துக்கு முக்கிய சத்துருவாகத் தொத்துவியாதி யைச் சொல்லலாம். இவ்வியாதி ஓரிடத்தில் ஆரம்பித்தாற் பலகாரணங்க ளால் எல்லாவிடங்களிலும் பரவித்தீராத்துயரத்தை விளைவிக்கும். பலவித, அம்மைகள், கக்குவானிருமல், பொன்னுக்குவீங்கி, கரப்பான், விஷபேதி பிளேக் என்று சொல்லப்படும் மகாமாரி இவைகளைப்போன்றவைகள் முக் கியமான தொத்துநோய்கள். இவைகள் நம்மைப் பற்றிக்கொள்ளாமலிரு க்கும் வழிகளைக் கற்றறிவது எவ்வளவு சிலாக்கியம். இவ்வறிவால் நமக்கும் நம்மைச்சேர்ந்தவர்களுக்கும் பேர் உபகாரமாம்.

தொத்துவியாதி நமக்கு எவ்வாறு வருகின்றது, அதாவது எவ்வாறு நம்மைப் பற்றிக்கொள்ளுகின்றது என்ற சர்ச்சை வெகுகாலந்தொடங்கி நட ந்துகொண்டே வந்திருக்கின்றது. கடைசியாய் ஒரு வியாதியின் வித்து நம்மேல் விதைக்கப்பட்டு அவ்வியாதி நம்மிடம் தொத்துவியாதியாக வளரு கின்றதென்று சித்தாந்தம் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அது எப்படி ?

ஒரு மனிதனுக்கு ஏதோ தொத்துநோய் என்றுசொல்லப்படும் நோய் களில் ஒன்று உண்டாயிருப்பதாக எண்ணிக்கொள்ளுவோம். அந்தநோய் பெ ரியம்மை. இப்பெரியம்மை எப்படி உண்டாயிற்று ? இப்பெரியம்மை ஒரு வன்மேல் உண்டாவதற்குமுந்தி அவனுடைய தோல், ரத்தம் இவைகளி லெல்லாம் நமது கண்ணுக்குத் தெரியாத கடுகுகள்போன்ற சிறு விதைகள் வியாதியின் அண்டங்களாகப் பரிணமித்துக் கொண்டிருந்தன வென்றும் இச்சிறிய அண்டங்கள்யாவும் சிதறி வியாதிகள் பயிராகும்பொழுதுதான் அந்நோயாளியிடம் பெரியம்மை தோன்றுகின்றதென்றும் இப்பயிர் ஓங்கி வளரும்பொழுது அந்நோயாளியிடம் அம்மையில் உண்டாயிருக்கும் வலி

முதலிய உபத்திரவங்கள் வெகு உக்ரமாகவிருக்கின்றதென்றும் இப்பயிர் வாடி உலர்ந்துவிட்டதும் அம்மையிறங்கி அந்நோயாளி சௌக்கியமடைகின்ருன் என்றும் சொல்லுவார்கள். இவ்வாறு தொத்துவியாதியின் வித்தை அது அண்டமாயிருந்தகாலம்முதல் நாசம் அடையும் காலம்வரையில் நாம் வருணித்தோமே. ஒருவன் ஒருதொத்துநோயால் பிரகிருதத்தில் அம்மை வருத்தும்பொழுது அவன் இவ்வித்தைப் பலவிதமாய்த் தனது தேகத்தினின்று மற்றவிடங்களுக்குப் பரவச்செய்கின்ருன். காற்றின் வழியாகவும் துணிகள் தேகத்திலிருந்து உதிரும் பொடுகுகள் மலம் மூத்திரம் முதலிய கழிவுகள் இவைகள் மூலமாயும் இத்தொத்துநோய் மற்றவிடங்களுக்குப் பரவும்.

ஒருவனுக்கு ஒருதடவை அம்மைபோட்டினுல் உடனே மறுபடி அவனுக்கே சாதாரணமாகப் போட்டுகிறதேயில்லை. அது என்? தொத்துவியாதிகள் நமது தேகத்தைப் பற்றிக்கொள்ள நமது தேகத்தில் ஓர்வித ஸாரம் வேண்டும். தொத்துவியாதி நம்மை ஒருதடவை பற்றிவிடும் பொழுது அச்சாரத்தை அது முற்றிலும் கொள்ளைகொண்டுபோய்விடுகின்றபடியால் மறுபடி அத்தொத்துவியாதி நம்மைப்பற்ற நம்மிடம் அதற்குவேண்டிய சாரம் கிடைக்காதபடி நமதுதேகம் அச்சாரத்தைவிட்டு ஒழிந்துநிற்கின்றது. அக்காரணத்தால் ஒருதடவை நம்மைப்பற்றிய தொத்துநோய் மறுபடியும் நம்மையே பற்றுகின்றதில்லை என்று பிரசித்த வைத்தியர்கள் நிச்சயித்திருக்கின்றார்கள்.

நிற்க; ஒருவன்மேல் ஒருதொத்துவியாதி நிற்கின்றவரையில் அவன் தேகமானது, அவ்வியாதியின் விதைகள் பயிராயிருக்கும் நாற்றங்கால் என்று நாம்சொல்லலாம். அவன் மூச்சுக்காற்று, மலம், மூத்திரம், வியர்வை வஸ்திரம் முதலாக அவனைச்சம்பந்தித்த எல்லாவிஷயங்களிலிருந்தும் அவன் வருந்தும் தொத்துவியாதியின் வித்துக்கள் எத்திசைகளிலும் பரந்துசென்றுகொண்டே இருக்கின்றன. இவ்வித்துக்களை ஒன்றற்கப்பால் ஒன்ருய் 20,000 வித்துக்களை வைத்தால் ஓர் அங்குலநீளங்கூட ஆக மாட்டாதென்ருல் எவ்வளவு நுட்பமானவைகளிவைகள் என்பதை நாமே ஒருவாறு யோசித்துக்கொள்ளலாம். இவ்வித்துக்கள் ஒவ்வொன்றும் மற்ருெரு மனிதசரீரத்தைப் பற்றிக்கொண்டுவிட்டால் அச்சரீரத்திலும் பல வித்துக்களை உண்டாக்கி அச்சரீரத்தையும் இவ்வியாதியின் வித்துக்கள் பயிராயிருக்கும் நாற்றங்காலாகப்பண்ணி இந்நோயை அதிகமாகப் பரப்ப இன்னும் ஒருபெரியகாரணத்தை உண்டாக்கி வைக்கின்றது.

நமது கழனிகளிற் களைகள்வெகுசெழிப்பாக முளைத்து நமக்குவேண்டிய பயிர்களை அழிப்பதுபோல இத்தொத்துவியாதிவித்துக்களும் நமதுதேக

த்தைப்பற்றிக்கொண்டால் வெகுசெழிப்பாக வளர்ந்து நம்மை அழிக்கும் ஆகையால் இத்தொத்துநோய்கள் நம்மைப் பற்ருமலிருக்கும் பலவிதசாதகங்களேயும் ஒருசமயத்திற் பற்றிவிட்டால் அவைகள்நம்மைவிட்டும் இன்னும் நம்மிடமிருந்துதாவிய மற்றவர்களேவிட்டும் நீங்கும் வழியையும் நாம் நன்ருக அறிந்துகொள்ளவேண்டுமென்பது சுகஸந்தர்சனமுறைகளுள் முக்கியமானதாக இத்தத்துவசாஸ்திரிகளாற் கருதப்பட்டிருக்கின்றது.

சிலர் திடீர் என்று ஏதாவது ஒருதொத்துவியாதி ஒருகாரணமுமில்லாமற் சிலவிடங்களில் முதன் முதல் வரக்கண்டு அதுவந்தகாரணத்தைத் தீர விசாரிக்காமல் மேலெழுந்தவாரியாக விசாரித்துத் தொத்துவியாதியென்று அம்மைமுதலியவைகளேச் சொல்லவேகூடாது; இவ்வியாதிகள் தனக்குத் தானுகவே வந்தவைகள் என்பார்கள். இச்சித்தாந்தம் ஒருபொழுதும் உண்மையாகாது. பிரசித்தவைத்தியர்கள் பலகாலங்களில் இவ்வாறு வந்தவியாதிகளே நன்ருக விசாரித்து அவைகள் வந்தவழியையும் கண்டுபிடித்தேயிருக்கின்ருர்கள்.

சிலதொத்துவியாதி சிலசமயத்தில் வெகுஉக்கிரகுண முள்ளதாயிருக்கும். ஒருவீட்டில் அநேகம் குழந்தைகளிருந்தாற் சிலருக்கு உடனேவரும். சிலகுழந்தைகளுக்கு வாரமல் நின்றுவிடும். பெரியவர்கள் என்னதான் வெகுஜாக்கிரதையாயிருந்தபோதிலும் அவர்களுக்குவந்தே தீரும். இத்தொத்துவியாதிகளுக்குட் பெரியம்மை வெகு கொடியது.

இன்றைக்கும் மலேயாள தேசத்தில் பெரியம்மை ஒருவனுக்கு வந்தால், அவனே அவன் தந்தை தாய் கூடப் பரிதவிக்கவிட்டு ஒடி விடுவார்கள். அவ்வளவு பயமுண்டாக்கும் தொத்து நோயாக இப்பெரியம்மை பெயர்எடுத்திருக்கின்றது. இதின் உக்கிரத்தை ஒருவாறு அடக்க சுகஸந்தர்சன சாஸ்திரிகள் "அம்மை குத்துதல்" என்று சொல்லப்படும் வழியை ஏற்படுத்தியிருக்கின்ருர்கள். இவ்வம்மை குத்துவதால் இந்நோய் அவ்வாறு அம்மை குத்தப்பட்டவர்களுக்கு வாராமலே போய்விடுகின்றது. ஒருகால் நோயின் உக்கிரத்தால் வந்தபோதிலும் உபத்திரவம் செய்யாமற் போய்விடுகின்றது. அம்மை குத்தும் இம்முறையிலிருக்கும் சௌக்கியத்தை அதிகாரிகள் கண்டுகொண்டு ஒவ்வொரு முனிசிபாலிடியிலும் ஒவ்வொரு லோகல்பண்டிலும் அம்மை குத்தும் உத்தியோகஸ்தர்களே நியமித்திருக்கின்ருர்கள். அன்றியும் ஒரு முனிசிபாலிடியில் ஒரு குழந்தை பிறந்ததென்ருல் அதற்கு இத்தனைநாளேக்குள் அம்மை குத்தியே தீரவேண்டும் என்றும் அப்படியில்லாத பட்சத்தில் அக்குழந்தையின் தந்தைக்கோ அல்லது ஸம்ரக்ஷகனுக்கோ அபராதம் விதிக்கப்படும் என்றும் ஏற்படுத்தியிருக்கின்ருர்கள்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩] விசுவாவசு௵ புரட்டாசி௴ [பகுதி-௧௧

கம்பர் குறித்த தமிழ்ப்பெருமை.

இக்காலத்துத் தமிழாராய்வாருட் சிலர் தமிழை வடமொழியினின்று திரிந்த மரூஉமொழியெனவும் சிலர் அவ்வாறு திரியாத்தனிமொழியெனவுங் கூறுவர். வேறுசிலர் தமிழ் என்னும் பெயரே திரமிளம் என்பதன்றிரிபு எனவுரைப்பர். பின்னர்ச்சிலர் அப்பெயர் தமிளென்பதனடியாய்ப் பிறந்ததென்பர்: சிலர் தமிழ் என்பது இனிமையென்னும் பொருட்டாதலின் அதுபற்றி அப்பெயர் எய்திற்றென்பர். சிலர் தமிழ்மொழி சிவபிரான்பாற்றோன்றியதெனவுரைப்பர்; சிலர் தமிழ்மொழி என்றுமுள்ளதென வுரைத்து அதனிலக்கணமே சிவபிரானருளினர் என்பர். சிலர் அகத்தியர் அவலோகிதன்பாற் றமிழ்கேட்டார் என்பர்; சிலர் சிவபிரான்பாற் கேட்டனர் என்பர். சிலர் அகத்தியர் தமிழிலக்கணமே செய்திலர் என்பர். சிலர் தமிழ் வடவெல்லையாகிய வேங்கடத்தைக் குமரக்கடவுள் வரைப்பு என்பர். சிலர் அதனை நிலங்கடந்த நெடுமுடியண்ணலதென்பர். சிலர் பாண்டிநாட்டைச் செந்தமிழ்நாடென்பர்; சிலர் சோணாட்டை அங்ஙனங் கூறுவர். சிலர் செந்தமிழ்ப் புலவர்பலர் ஒருங்குகுழீஇயாராய்ந்த சங்கமென்பது முன்னில்லையென்பர். இவ்வாறு தமிழின்பெருமை வரலாறு முதலியனபற்றிக் கேட்கப்படுவன வேறுவேறு மிகப்பலவாம். இன்னோரன்னபலவற்றைப்பற்றி இற்றைக்குப்பன்னூறுவருடங்கட் குமுற் சிறந்துவிளங்கிய அரியகல்வியிற் பெரியகம்பர் கருத்தென்னவாமென ஆராய்வது இக்காலைத் தமிழ்மக்களால் விரும்பப்படுவதேயாகும்.

கம்பர் சீராமாயணமென்னுந் தேவபாடைக்கதையினையே பாடப்புக்காரேனும், தாம் அத்திருக்கதையினைப்பொதிவது, தம்மருமைத்

தாய்மொழியாகிய பெருமைத் தமிழ்க்கண்ணேயாகலான் தாங்கண்டு கேட்டுணர்ந்த தமிழ்நாட்டியல்புகளையும், தமிழ்வழக்குகளையும், தமிழ்நூற்பொருள்களையுமேகொண்டு கோசலநாட்டியல்புகளையும் அயோத்தியர் வழக்காசாரங்களையும் வருணித்தனர் என்று கருதுதலே பொருந்திற்றாகும்; என்னையெனின், மிகப்பழையகாலத்தேநிகழ்ந்தன, வும் பாடையாலும் வழக்காலும் இயல்பாலும் பலவேற்றுமைப்பட்டனவுமாகிய வேற்றுநாட்டுச் சரிதைகளை மிகப்பிற்பட்ட காலத்தே அவ்வேற்றுநாட்டுப்பரிசயமில்லாரொருவர் தந்தாய்மொழியிற் புனைந்துரைக்கப் புகின், அவர்க்குத் தாங்கண்டு கேட்டுணர்ந்த தந்நாட்டு வழக்கியல்புகளேயன்றி வேறுதோன்றாவாதலான் என்க. வான்மீகிமுனிவர் "கோஸலோ நாம முதித:" (பால - ரு,ரு) என்ற சுலோகம் ஒன்றானே மிகச்சுருங்கவுரைத்த கோசலநாட்டினைக் கம்பர் வருணிக்கப்புக்கு மழையமுன்னேதி யாற்றைச்சிறப்பித்து நானிலம் பகுத்துக்கொண்டு விரித்துப் பலபலபாடல்களாற் புனைவதெல்லாம் தமிழ்நாட்டுஇயல்பும் வழக்கும்பற்றியேயாகும். நாட்டுவருணனையில் மருதத்தையே மிகுத்துக்கூறுவதும் தாங்கண்ட காவிரிநாட்டியல்பு கொண்டேயாம. கம்பர் "காவிரிநாடன்ன கழனிநாடு" எனவும் "தெய்வப்பொன்னியே பொருவுங்கங்கை" எனவும் "பொன்னிநாட்டுவமைவைப்பை" எனவும் ஆங்காங்குப்பாடுதலாலும்இக்கருத்து வலியுறுவதென்க. அம்முனிவர் நூற்றுக்கணக்கான சுலோகங்களால் மிகவிரித்துப்புனைந்த தசரதருடைய அசுவமேதத்தை "முகமலரொளிர்தர" (திருவவதாரம்-அசு.) என்னுஞ் செய்யுளொன்றானே கம்பர் மிகச்சுருங்கவுரைத்துவிடுதலும் தமிழர் சுவைக்கேற்பது கருதியேயாம். கம்பர் வான்மீகிமுனிவர்போல அயோத்தியை *அஷ்டாபதாகாரமான கட்டிடங்களையுடைத்தெனவும் †இராமனைக் காகபக்ஷம் எனப்பெயரிய மயிர்முடியுடையனெனவும் கூறினாரில்லை. இவ்வாறு தமிழ்நாட்டில்லைபோலும். கம்பர் "நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்" (ஆற்றுப்படலம்-௩) என்புழி மகட்கொடுத்தானை மாதுலன் என்னும் பெயரால் வழங்கினர். மாதுலன் என்பது

---

* பாலகாண்டம்-ரு-கசு.

† ,, ௫0-உக.

வடமொழியுள் தாயுடன்பிறந்தானுக்காவது. தாயுடன் பிறந்தானே மகட்கொடுத்தற்குரியனுதல் தமிழ்நாட்டுத் தொன்றுதொட்ட வழக்கம்; "கண்போன்ற மாமன்மகள் கண்மணிப் பாவையன்னபெண்" (சிந்தாமணிப்பதிகம்-உஉ.) எனவருதலானுமுணர்க. இவ்வழக்குப் பற்றியே மாமன் என்பது தமிழில் தாயுடன் பிறந்தானுக்கும் மகட்கொடுத்தானுக்கும் பொதுவாக வழங்கப்படும். "மாபனுனென்னு மதத்தா லுனையிகழ்ந்து, தோமுற்றார் தக்கனர் சோமேசா" என மாமனென்பது மகட்கொடுத்தானுக்காயிற்று. இந்தமிழர் வழக்குப்பற்றியே மாதுலன் என்பதை மகட்கொடுத்தானுக்கு வழங்கினராவர்.

இங்ஙனமே கம்பர் முதனூற்கதைகளையும் தமிழர் சுவைக்கும் இயல்புக்கும் ஏற்றபெற்றியாற்றிரித்தும் சேர்த்தும் விரித்தும் விடுத்துங்கூறியன பலவுள. இராமனும் சீதையும் மிதிலையில் வின்முறித்தற்குமுன்னே ஒருவரொருவரைக்கண்டுவிழைவுமிகுத்துக் காமத்தால்வருந்தினர் எனவைத்துவருணித்தல் முனிவர்உடன்படாதது. "ஒத்தகிழவனுங் கிழத்தியுங் காண்ப" (தொல்-கள-உ) என்பதனுற் பிறப்பு முதலியவற்றுனெப்புமையுடைய தலைவனுந் தலைவியும் ஒருவர் முயற்சியானன்றித் தனியெதிர்ப்பட்டு நோக்கெதிர்நோக்கி ஒருவருள்ளத்தொருவர்புகுந்து ஈருடற்கோருயிர்போல இயையும் உழுவலன்பினையே தலையாய காமம் என்பது தமிழ் வழக்காதல்பற்றிக் கம்பர் அங்ஙனங் கூறினராவர். "அண்ணலு நோக்கினனவளு நோக்கினள்" (மிதிலைக்காட்சி-ருரு) "இருவரு மாறிப்புக்கிதய மெய்தினர்" (ஷை-ரு எ) "ஒருங்கிய விரண்டுடற் குயிரொன்றாயினர்" (ஷை ருஅ) என இவர் ஓதியனபற்றியுணர்ந்து கொள்க. முனிவர் சூர்ப்பநகைக்கு மூக்கரிதலே கூறினராகவும் கம்பர் அம்மூக்குடன் முலையுங் காதும் அரிதல் கூறுவர். "மூக்குங் காதும்வெம் முரண்முலைக்கண்களுமுறையாற், போக்கி" (சூர்ப்ப-கூச) "நங்கையிருஞ் செவி முலையுமூக்கு மரிந்தநாள்" (அங்கதப்படலம்.) என வருதலானுமுணர்க. "முலையிரண்டு மில்லாதாள் பெண்காமுற் றற்று*" என்பதும் "கா

* திருக்குறள்-சா0உ.

திரண்டுமில்லாதா ளேக்கழுத்தஞ் செய்தலும் * " என்பதும் தமிழ் நூல் வழக்காதலால் மூலேயரிந்து அவள் பெண்மையைக் குலேத்தும் காதரிந்து அவள் தலேயெடுப்பினேத் தொலேச்தும் மூச்கரிந்து அவள் பிறர்முன் முகங்காட்டலே யொழித்தும் போக்கினர் என்றல் ஆண்டைக் கேற்பதேயாம். இராவணன் சீதையைத் தொடாமலே பன்னசாலேயோடு பெயர்த்துக் கொண்டேகினுன் எனக் கம்பர் கூறுவது முனிவர் கூற்றுக்கு மாறும். அரக்கன் உலகுக்கொருதாயைத் தொட்டிழுத்துச் சென்றுன் என்பது பெருந்தமிழரான தம்பத்திக்கும் தந்நாட்டார் பேரன்பிற்கும் பொருந்தாதாதலின் அவ்வாறு கூறினுர். சீதை இலங்கையிற் சிறையிருந்த காலத்து ஊண்டுறந்திருந்தனளென்பர் கம்பர். இந்திரன் நாளுந்தரும் பாயசத்தின் பகுதியை உண்டு உயிர் தரித்திருந்தனளென்றுர் முனிவர். இதுவும் பத்தியான் மிகுத்துக் கூறியவாறும். இங்ஙனம் சொல், பொருள், வழக்கு, கதை முதலியவற்றையும் தமிழுக்கியையக்கொண்டு இவர் கூறியன வெல்லாம் ஒவ்வொன்றுக எடுத்துக் காட்டப்புகின் மிக விரியுமென்றுணர்க. சுருங்கவைத்து விளங்கவுரைக்கின் இவர் தமிழ் மாட்டுற்ற அளவிலன்பினுல் தாமெடுத்துக்கொண்ட தெய்வக்கதையின் றனிநாயகனுன சீராமமூர்த்தியையும் தமிழ் முழுதுணர்ந்த தமிழறிவனுகக் கூறுவர். இதனே "தென்சொற் கடந்தான் வடசொற்கலேக்கெல்லேதேர்ந்தான்" (அயோத்தி-நகர்நீங்கு-௧௪௦) என இவர்வழங்குதலானுணர்க. நச்சினுர்க்கினியர் சிந்தாமணி யுரையில் (குணமாலே-௬௨) சாதாரணவரசராகிய விக்கிரமாதித்தனும், சீவகனும் முறையே எறும்பின் பாஷையையும் சுரும்பின் பாஷையையும் உணர்ந்திருந்தனரெனக் கொள்ளுதலாற் கல்வியிற்பெரியர் தெய்வவேந்தாகியசீராமமூர்த்தியைத் தமிழ் வல்லவனுகவுங் கூறுதல் இழுக்காதென்க. எடுத்துக்கொண்ட கதாநாயகனேத் தமிழ்ச்சுவை யறியானுகக்கொண்டு அவனேச் செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்றமிழாற் றுதிப்பதே இழுக்காமெனக்கொள்க. இவ்வாறு தமிழன்பும் தமிழறிவும் ஒருருக்கொண்டாற் போன்ற இக்கல்வியிற் பெரியாருக்குத் தமிழைப்பற்றித் தனியே யுரைத்தற்கு அற்றம்வாயாவிடினும் அதன் பெருமையையும் அதன் றென்மை வரலாறு முதலியவற்றையும் பற்றிச் சிறி

* சிறுபஞ்சமூலம்-௫.

தும் விளக்காமற் போயினரில்லை. இவர் பழைய தமிழ்ப் புலவர்களையும் அவர்களினிய கவிகளையும் அக்கவியின் சொன்னடை பொருளமைதிகளையும் அவற்றாலெய்து மின்பத்தினையுமே பலவிடத்தும் வாயாரப் புகழ்ந்து உயர்ந்த உவமையாகக் கூறுவர். "முத்தமிழ்த் துறையின் முறைபோகிய வுத்தமக் கவிகள்" (பாயிரம்) "துறை படுத்த விருத்தத் தொகைக்கவிக் குறைபடுத்த செவிகள்" (ஷை) "செவ்வியமதுரஞ் சேர்ந்தநற் பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞர்" (பால. நகர். க.) "தென்னுண் டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்" (மிதிலை-உ௩) "சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி" (சூர்ப்பந) "பாவரும் கிழமைத் தொன்மைப் பருணிதர் தொடுத்த பத்தி, நாவருங் கிளவிச் செவ்விநடைவருநடையள்" (நாடவிட்ட-௩௪) என வருவனவற்றான் உய்த்துணர்ந்து கொள்க.

இவர் தாடகைப்படலத்துத் "தமிழெனு மளப்பருஞ்சலதி தந்தவன்" எனவும் அகத்தியப்படலத்து "நீண்டதமிழ் வாரிநிலமேனிமிரவிட்டான்"* எனவும் ஆறுசெல்படலத்து "எத்திறத்தினுமேமுலகும்புகழ் முத்துமுத்தமிழும்" எனவும் பம்பைப்படலத்துத் "தன்பாற்றழுவுங்குழல்வண்டு தமிழ்ப்பாட்டிசைக்குந் தாமரையே" எனவும்; சடகோபரந்தாதிக்கண் 'இழைத்தாரொருவருமில்லா மறைகளையின்றமிழாற் குழைத்தார்" எனவும் கூறினராதலான் இவர் தமிழை அளத்தற்கரிய பெருங்கடலாகக்கொண்டு அது பல்வகையானும் பல்லுலகும் புகழத்தக்கதெனவைத்து அஃது இனிமையென்பதையே பொருளாக வுடைத்தென்று காட்டி, அது வடமொழி போற் காடிந்நியம் உடையதின்றிக் குழைவேஇயல்பாகவுடைத்தென்றுரைத்துத் தமிழின்பெருமையை நன்கு விளக்கினர். இக்காலத்துப்புலவர் பல்பிறப்புத்தோறும் இடை விடாமற் பயின்றாலும் எய்தற்காகாவென ஒருதலையாகத் துணியப்படும் பெருங்கல்வியும் நுண்ணறிவும் அருங்கவித்திறனும் இயல்பிற் பெற்றுப் பாற்கடற் போலப் பல்லாயிரஞ் செய்யுட்களை இந்நிலவுலகில் நிமிர்ந்தேறவிட்ட தெய்வப்புலவரே தமிழை அளப்பருஞ் சலதி எனவும் நீண்ட

* 'நீண்டதமிழாலுலகைநேமியினளந்தான்' எனவும் பாடம்.

வாரி எனவும் உரைத்தருளுவரானல் அதன்கலமும் ஆழமும் பெ ரும்பொருளமைதியும் யாமே யளத்தற்குரியேம். தமிழ்ப்பாஷை இரண்டு மூன்று வருஷத்துப் படிப்பின் முற்றுமென்று வாய்பிதற்று வார் இவ்வரியபெரியார் வாய்மொழிவழி நின்று சிறிது சிந்திப்பா ராகுக. அசரீரி, நாமகள், முருகக்கடவுள், சிவபிரான் முதலாகிய தெய்வதங்களும் புகழ்ந்தோதிய பாடல்கள் நிறைதலால்,தமிழ், பல் லுலகும் புகழ்வது எனக்கூறியது மிகையன்றாம். ஸ்ரீசடகோபராந் தெய்வங்கவிவாணர் "பாலேய்தமிழர்" எனப்பராவுதலால் தமிழின் இனிமையுங்குழைவுந் தூய்மையும் எளிதினறியத்தகும். இவ்வாறே சான்றோர்பலருந் தமிழைக் கூறுமிடனெல்லாந் தனியேகூறாமல் தட் பம், ஒட்பம், வண்மை, நறுமை, அருமை, பெருமை, இனிமை, செ ம்மை, பசுமை, நன்மை, விழுப்பம் முதலிய குணங்களாற் சிறப் பித்தே கூறுதலானும் இதனியல்புணரப்படும். இத்துணைக்குணங் களாற் சிறப்பிக்கப்படும் தீந்தமிழை ஒருசாரார் ஒன்றின் மரூஉ மொழி என்பராலெனின் அது கல்விமிற் பெரியார்க்குக் கருத்தன் றாம் எனவுணர்க. அவர் அகத்தியப்படலத்து "என்றுமுள தென் றமிழியம்பியிசை கொண்டான்" என்பதனுல்தமிழை என்றுமுள்ள தென விளங்கவைத்தல் காண்க. ஒன்றினின்றுமருவிய மரூஉவா னல் இதற்குத்தனியே என்றுமுளதாதற்றன்மை யெய்தாதென்பது ஒருதலையாம். மற்று, இத்தமிழை இயம்பி இசைகோடலாவது ஞான்றுமுளதாய தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுத்துப்புகழ் பெறுதலாம் என்பது. புகழாவது குறுமுனியாகிய அகத்தியர் தமிழ்முனியெனச் சிறந்தோங்குதலாம். ஈண்டு 'என்றுமுள தென் றமிழ்' எனவுரைத்தவைத்து மேல்,

"உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவி னினும்மரபி னாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்."

என்பதனுற் சிவபிரான்றந்ததமிழ் என்பராலெனின் ஆண்டுச்சிவபி ரான் தந்தது எனக்கூறியதும் தமிழிலக்கணத்தையே யாமென்க. சிவபிரான்றந்த தமிழிலக்கணத்தையே அகத்தியர் உலகிற்குத்தந்

தார் என்பதே இதன் கருத்தாம். சிவபிரான் பாணினிக்குணர்த்தி யதும் வடமொழி யிலக்கணத்தையேயாகும். அதுபோல இதனையுங் கொள்க. 'நான்மறையினும் உலகவழக்கினும்கவின்பெற நூலினும் முறைப்பட ஆராய்ந்து கடவுள்தந்த தமிழ்'என்றதனாலும் அஃதிலக் கணமேயாவதறிக. நான்மறையினாராய்ந்தன:—மொழிக்குமுதற்கார ணம் எழுத்தென்றலும், அச்சும்அல்லுமாம் அவற்றின் வேற்றுமை யும் கலப்பும் இயக்கமும் கருதி அவற்றிற்கு உயிரையும் உடலையும் உவமையாகக்கண்டு அங்ஙனமே குறியிடுதலும், அவற்றிற்குப்பிறப்பு வருணமுதலிய வுணர்த்தலும், அவற்றிற்கு மாத்திரைகாண்டலும், அவற்றிற்சிலவற்றிற்குப் புலுதங்கோடலும், அறம் பொருள் இன் பப்பகுதிகோடலும், நிலங்கட்குத்தெய்வங்கள் கூறலும், யாழோர் கூட்டமுடன்படலும், அந்தணர் அரசர் வணிகர் வேளாண்பக்கத் தியல்பு காட்டலும், அங்கதம் பிசி மந்திரம் வாய்மொழி முதலியன வகுத்தலும், பிறவும் ஆம். உலகவழக்கினாராய்ந்தன:—இயற்சொல் திரிசொல், செந்தமிழ்ச்சொல், கொடுந்தமிழ்ச்சொல், மரீஇயினசொ ல், மருவாமுதற்சொல், மங்கலச்சொல், அமங்கலச்சொல், இடக்க ரடக்குக் குழூஉக்குறிச்சொல் முதலியனவும், மரபியலிற் குறித்தன வும், பிறவுமாம். மதிக்கவினினுடியன:—தமிழ்நாட்டுத்தொன்றுதொ ட்டுக்கேள்வியான்வந்த அம்மானைவரி, ஊசல்வரி, குன்றக்குரவை, ஆய்ச்சியர்குரவை, வள்ளைப்பாட்டு, உழத்திப்பாட்டு, குறத்திபாட் டு, வெறிப்பாட்டு என்பனபோன்றபாடல்கள்பற்றி ஆராய்ந்தனவாம். மதி - நூல். அகத்தியனாரால் செய்யப்பட்டது மூன்று தமிழிலக் கணம் என அறியப்படுதலால் இம்மூன்றாகிய இயல் இசை கூத்து எனப்பாகுபாடுசெய்தற்கேற்றவாறு, தமிழ் என்னும் பிண்டப்பொ ருள் அவரிலக்கணஞ்செய்வதற்குமுன்னே இருந்ததென்பது நன்கறி யலாகும். இதனாற் சிவபிரான் திருவாய்மலர்ந்த தமிழிலக்கணத் தையே அகத்தியர் முத்தமிழிலக்கணம் எனச்செய்து தொல்காப்பி யர் முதலிய பன்னிரு புலவர்க்கும் அளித்தவாறு கூறிற்றும். தொல்காப்பியனாரும் அம்முந்துநூல்கண்டு முறைப்படவெண்ணிப் புலந்தொகுத்தோராதலால், தாம் அகத்தியர் வாயிலானுணர்ந்த அச்சிவபிரான் பரக்கவருளிய இலக்கணங்களி னொருபகுதியையே.

சில்வாழ்நாட்பல்பிணிச்சிற்றறிவினர்க்கேற்றவாறு தொகுத்துச்சுருங் கவுரைத்தாரெனக் கொள்ளப்படும். இதுவே நல்லறிவுடைய தொல் பேராசிரியர்க்கும் கருத்தென்றுணர்க ; அவர்,

> தாயிற் சிறந்தன்று நாண்டைய லாருக்கந் நாண்டலைசால்
> வேயிற் சிறந்தமென் றோளிதிண் கற்பின் விழுமிதன்றீங்
> கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடுமெங் கூத்தப்பிரான்
> வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே.

என்னுந்திருச்சிற்றம்பலக்கோவையுரையில் ["உயிரினுஞ்சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (தொல் காப்பியம் - களவியல்-உஉ) என்றாராகலின் வாயிற்சிறந்தமதியிற் சிறந்த என்பதற்குத் தாய்போல நாண் சிறத்தலும் நாணினும் கற் புச்சிறத்தலும் ஆகிய இரண்டும் கூத்தப்பிரான் வாயிற்சிறந்த நூல்க ளிடத்துச் சிறப்புடையபொருள் என்றுரைப்பினுமமையும்] என 'உயிரினுஞ் சிறந்தன்று நாணே' என்னுந்தொல்காப்பியத்தினை எடுத் தோதி அதனைக்கூத்தப்பிரான் வாயிற்சிறந்த நூலாகக்கொண்டு நாண் சிறத்தலும் கற்புச்சிறத்தலுமிரண்டும் அந்நூற்பொருளெனக் கூறு தற்குடன்பட்டதனாற் றெளிந்துகொள்க. இதனாலும் கூத்தப்பிரா னருளியதிலக்கணமென்ப துணரப்படும். இனிக் கம்பர் நாடவிட்ட படலத்தின்கண்,

"வடசொற்குந் தென்சொற்கும் வரம்பிற்றாய் நான்மறையு மற்றைநூலு
மிடைசொற்ற பொருட்கெல்லா மெல்லையதாய் நல்லறத்துக் கீறாய்வேறு
புடைசுற்றுந் துணையின்றிப் புகழ்பொதிந்த மெய்யேபோற் பூத்துநின்ற
வுடைசுற்றுந் தண்சார லோங்கியவேங் கடத்திற்சென் றுறுதிர்மாதோ." ()

"கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரே லுங்கொடிய கொடுமைநீங்கி
வீடுறுதிர்" . . . . (உக)

"பிறக்க முற்ற மலைநாடு நாடி யகன்றமிழ்நாட்டிற் பெயர்திர்மாதோ" (௩௦)

'தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனிவன் றமிழ்ச்சங்கஞ் சேர்கிற்
றீரேல்." (௩க)

என ஓதியபின்னரும் ஆறுசெல் படலத்துள்,

"இருந்ததிற் றீர்ந்து சென்றார் வேங்கடத் திறுத்தகாலை." (௩௩)

" வலங்கொ ணேமி மழைநிற வானவ
னலங்கு தாளிணை தாங்கிய வம்மலை
விலங்கும் வீடுறு கின்றன மெய்ந்நெறிப்
புலங்கொள் வார்கட் கினையது பொய்க்குமோ." (௩௫)

" அனைய பொன்னி யகன்புன லூடொரீஇ
* * * *
இனைய தேன்றமிழ் நாடுசென் றெய்தினர்." (௩௭)

" அத்தி ருத்தகு நாட்டினை யண்டர்நா
டொத்தி ருக்குமென் றுலுரை யொக்குமோ
வெத்திறத்தினு மேழுலகம்புகழ்
முத்துமுத்தமிழுந் தந்துமுற்றுமோ." (௩௬)

எனவும் கூறுதலான் வடசொல், தென்சொல் இரண்டிற்குந் தனிப் பேரெல்லையாய் விளங்கியது திருவேங்கடமலையென்றும், அம்மலை தன்னடைந்தார்க் கெல்லாம் வீடளிக்கவல்லதென்றும் அது வலக்கரத்துச் சக்கராயுதத்தைத் தரித்த மழைநிறவானவன் றிருத்தாளிணை தாங்கியதென்றும் சேர சோழ பாண்டிய நாடுகள் மூன்றினுள்ளும் சிறப்பித்துத் தமிழ்நாடென்பது பாண்டிநாடாமென்றும் அந்நாட்டுப்பொதிய முனிவன் தமிழ்ச்சங்கம்ஒன்று முன்னே உண்டு என்றும் அந்நாடே பல்லுலகும் புகழ்கின்ற முத்தையும் முத்தமிழையுந் தந்ததென்றும் விளங்கவைத்தனராவர். திருவேங்கடம் வடசொற்குத் தெற்கெல்லையாகவும் தென்சொற்கு வடவெல்லையாகவும் இருப்பதென்று கருத்தாம். தொல்காப்பியப் பாயிரவுரையில் நச்சினார்க்கினியர் வடவேங்கடத்தை ' நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி யுலகந் தவஞ்செய்து வீடு பெற்ற மலை '' என வுரைத்துள்ளார். அதுவும் " மால்வரையதனைக் குறுகுதிரேல் வீடுறுதிர்'' எனவும் " மழைநிற வானவன் அலங்குதாளிணை தாங்கியவம்மலை விலங்கும் வீடுறுகின்றது '' எனவும் ஓதிய பொருளையே தழீஇநிற்றல் நோக்கிக்கொள்க. ஸ்ரீ சடகோபரும் " திருவேங்கடநங்கட்குச் சமன்கொள்வீடு தருந்தடங்குன்றமே '' எனப்பணித்தருளினர். " வேங்கடமென்னுமோங்குயர்மலையத்துச்சிமீமிசை...நன்னிறமேகநின்றதுபோலச்......செங்கணெடியோ னின்றவண்ணமும்'' எனச் சிலப்பதிகாரத்துக் கூறியது
*

கொண்டு "மழைபிறவானவன் தாளிணை தாங்கிய அம்மலை" என்றார் எனினுமமையும். ஆசிரியமாலை யுடையாரும் * "புடையிது நெடுமால் வரைக் கப்புறம் புகினும்" எனவுரைத்தார். ஐயனாரிதனாரும்,

"வெறிகொ ளறையருவி வேங்கடத்துச் செல்வி
னெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்
கிருளீயு ஞாலத் திடரெல்லா நீங்க
வருளீயு மாழி யவன். (பாடாண்-சஉ)

என ஓதினர். பாரதம் பாடிய பெருந்தேவனாரும்

தேனோங்கு நீழற் றிருவேங்கடமென் றும்
வானோங்கு சோலை மலையென்றுந்—தானோங்கு
தென்னரங்க மென்றுந் திருவத்தி யூரென்றுஞ்
சொன்னவர்க்கு முண்டோ துயர்"

எனப்பாடியருளினர். கம்பர்திருவாக்கு இப்பல்சான்றோர் கருத்தையுந் தழீஇ விளங்குதல் கண்டுகொள்க. இனிக் 'காவிரிநாடன்ன கழனிநாடு' எனச் சோணாட்டை மேம்படுத்துரைக்கின்ற கம்பர் அதனை ஈண்டுத் தமிழ்பற்றிச் சிறப்பியாமற் பாண்டிநாட்டையே தென்றமிழ் நாடெனக்கூறி அதனைத் தமிழ்ச்சங்கத்தானும் முத்தமிழானும் புகழ்தலால் அதுவே செந்தமிழ்நாடெனக் கருதினராவரென உய்த்துணரப்படும். இவர் ஈண்டுக்குறித்த சங்கம் முதற்சங்கமாமென்பது "பொதியத்திருமுனிவன் றமிழ்ச்சங்கம்" என்றதனலறியப்படும். ஈண்டுக்குறித்த சிலகொண்டு இக்காலத்தார் கருத்துக்கும் அக்காலத்துக்கல்வியிற்பெரியார் கருத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நன்குணர்ந்துகொள்க.

இனிக் கம்பர் சடகோபரந்தாதிக் கண்ணே,

சுவடிறக் கத்தொட ராசைக் களிற்றைத் தொடர்ந்திரண்டு
கவடிறக் கட்டிய பாசத் தளைக்கண் பரிந்துசங்கக்
துவடிறக் குத்திய மாறப் பேயர்க்கோலை யானைநங்கா
யிவடிறத் தொன்றும் படரந்தி வான மிருள்கின்றதே.

என்னும் பாட்டிற் சடகோபனைச் சங்கமாகிய மலைக்குவடு இடியக்குத்திய மாறன் என்னும் பெயரையுடைய கொலையானை எனக்கூறியுள்

* புறத்திரட்டு - பல்வகை நிலையாமை.

ளார். இதனாற் சடகோபர் காலத்தே சங்கம் ஒன்றிருந்ததெனவும் அதனை அவர் வென்றனரெனவும் கம்பர் குறித்தனராவர். சடகோபர் சங்கம்ஒன்றை வென்றகதை வைணவருக்குள்ளும் வழங்குகின்றது. அச்சங்கம் கூடலில் முந்நூறு புலவரையுடைத்தாயிருந்ததெனவும் அப்புலவரெல்லாம் வீற்றிருந்த தனியாப்பலகை ஆழ்வாரருளிய ஓர் செய்யுள் வரைந்த ஒலையொன்றிற்கு இடந்தந்து வேறியார்க்கும் இடந்தராமற் றன்னுட்சுருங்கியதெனவும் அதுகண்டு புலவரெல்லாம் ஆழ்வாரைப்புகழ்ந்து பாடினரெனவும் கூறுவர். இதனுண்மை எவ்வாறோ எனக்கருதப்படுமாயினும், இவ்வரிய செய்தியின் குறிப்பு கல்விற்பெரியார் திருவாக்கினும் காண்டலால் இது முழுதும் பொய்யேயாமென நினைத்தற்கு இடமின்றாகிறது. இதற்கேற்ப ஆழ்வார் திருநகரியினின்று கிடைத்த சில பழைய தமிழ் ஏடுகளில் "சங்கத்தார்க்கு ஆழ்வார் அருளிச்செய்த அகவல்" என்ற தலைப்பின்கீழ்,

"அண்ட கோளத் தாரணு வாகிப்
பிண்டம் பூத்த பேரெழி லொருமை
யீருயிர் மருங்கி லோருயிர் தொகுத்து
நித்திலத் தன்ன வெண்மணல் பரப்பி
வேரும் வித்து மின்றித் தானே
தன்வலி யறியாத் தொன்மிகு பெருமர
மூவழி முப்பழ முறைமுறை தருதலி
னொன்றுண் டொண்சுவை தருவது மற்றது
கல்லி லெழுந்து கடலி லழுந்தி
யறுகாற் குறவ னீரற விளக்கு
நிறைபொழிற் குப்பை தறுகட் பொன்றுவித்
தறுகோட் டாமா விளக்கு நாட
னவனே தலையிலி யவன்மகண் முலையிலி
தானு மீனு ளீனவும் படாஅ
ளெழுவர் மூவர் சிறுவரைப் பயந்தன
ளவளிவ ளுவளென் றறித
ருகளறு காட்சிப் புலவர தகடனே"

என ஓரரும்பெருஞ்செய்யுள் காணப்படுகின்றது. இதன் பொருள் இப்போது நன்குவிளங்கவில்லை. இனி இச்சங்கப் புலவர்கள் மூந்

நூற்றுவர் எனக்கேட்கப்படுதலால் இச்சங்கம் முதல் மூன்று சங்கமும் இல்லையென்பது எளிதிலறியத்தகும். முன்னை மூன்று சங்கத்துக்கும் பின்னே வேறுசங்கம் உண்டோ என ஆராயுமிடத்துத் திகம்பரதரிசனம் என்னும் ஓர் ஜைந சமய நூலின்கண் விக்கிரமசகம் ௫௨௬- இல் (கி. பி. 470) பூச்சியபாதர் என்பாருடைய மாணக்கருள் ஒருவராய வச்சிரநந்தி என்பவரால் தென்மதுரையில் ஒரு திராவிட சங்கம் கூட்டப்பட்டதென்று கூறப்பட்டிருத்தல் கேட்கப்படுகின்றது.* மதுரையில் இச்சைநர் தொகுத்த தமிழ்ச்சங்கம் கி. பி. 470- முதல் எத்துணைக்காலம் நடைபெற்றதென அறியப்படாவிடினும், அது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் காலத்துக்குப் பின்னும் ஆண்டிருந்ததெனக் கருதற்கு இடனில்லையாகும். அந்நாயனாரால் மதுரையிற் சைநர் தொலைவுண்டது பலநூல்களாற்றெளிந்தது. அந்நாயனார்காலத்துப் பாண்டியன் நெல்வேலிவென்ற நெடுமாறன். அப்பாண்டியனுடன் நெல்வேலியிற்பொருதவன் நந்திபோதவன்மனுடைய சேனபதியான உதயசந்திரன் என்பதும், நந்திபோதவன்மன் காலம் கி-பி 710 முதல் கி-பி 760 வரையாம் என்பதும் உதயேந்திரசாஸநத்தாலும் பிறசாஸனங்களாலும் உய்த்தறியப்படுகின்றன. இதனால் நெடுமாறனும் நந்திபோதவன்மனும் ஒருகாலத்தவராகத்துணியப்படுதலுடன் ஸ்ரீஞானசம்பந்தர்காலமும் அஃதாமெனக்கருதவுமாகும். அங்ஙனமாயின் மேற்குறித்த சைனர்தமிழ்ச்சங்கமும் கி. பி. 470 முதல் கி. பி. 760-வரைக்குமே இருந்ததாகவைத்துக்கொள்ளலாம். இக்காலந்தான் சைவர் சமணருடனும் சாக்கியருடனும் வாதுசெய்தகாலமாகும். சடகோபர் "இலிங்கத்திட்ட புராணத்தீருஞ் சமணருஞ் சாக்கியரும், மலிந்து வாதுசெய்வீர்களு" மெனப்பணித்தலையும் ஈண்டைக்குநோக்குக. இச்சங்கந்தான் கிளிவிருத்தம், எலிவிருத்தமுதலிய நூல்களைத்தோற்றுவித்ததாகும். ஸ்ரீஞானசம்பந்தருடைய,

கூட்டினார்கிளியின்விருத்தமுரைத்ததோரெலியின்றொழிற்
பாட்டுமெய்சொலிப்பக்கமேசெலுமெக்கர்தங்களைப்பல்லறங்
காட்டியேவருமாடெலாங்கவர்கையரைக்கசிவொன்றிலாச்
சேட்டைகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே.

---

* Bombay Royal Asiatic Society's Journal. No. XLIV, Vol. XVII, pp. 74.

என்னுந் தேவாரத்தான் இதனை உய்த்துணர்க. ஞானசம்பந்தர் காலத்துக்குப்பின்னர்க் கூடலில் வேறுசங்கமுண்டென்பது எவ்வாற்றானும் அறியப்படாமையாற் கல்வியிற் பெரியார்குறித்த ஆழ்வார்காலத்துச்சங்கம் இச்சைசங்கமேயாமெனத் துணியப்படும். கம்பர் சடகோபரைத் "தெருளிற் கரும்பொக்கு மாயிரம்பாப்பண்டு செய்தவரே" எனப்பாடுதலால் ஆழ்வார் கம்பருக்கு மிசமுந்தியகாலத்தவராகக்கருதப்படுதலுங்காண்க.

இனியிக்கல்வியிற்பெரியாரால் மிகவுயர்த்துப்புகழப்பட்டதமிழ் நூல்கள் இரண்டெனத்தெரிகின்றது. அவை திருக்குறளுந்திருவாய்மொழியும். இவர் திருக்குறளை வேதமெனவுந் திருவாய்மொழியினை உபநிடதம் எனவும் புகழ்வர்.

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாருந்
> தொழுதுண்டு பின்செல்வ ரென்றேயித் தொல்லுலகி
> லெழுதுண்டமறை சொன்னூல்" (ஏரெழுபது-கக)

> "தென்றலைத் தோன்று முபநிடதத்தை யென்றீவினையை
> நின்றலைத் தொன்று நியாய நெறியை நிறைகுருகூர்
> மன்றலைத் தோன்று மதுரகவியை" (சடகோபரந்தாதி-௯௨)

எனவருதலா னுணர்க.

(இன்னும் வரும்)

ரா-இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

சேதுபுராணம்.

சேதுபுராணமாவது சேதுவிலே முன்னிகழ்ந்த சரித்திரத்தினைக் கூறும் நூலேயாம். சேது—அணை. புராணம்—முன்னிகழ்ந்த சரித்திரம். இங்கே சேது என்றது ஸ்ரீராமசந்திரன் இலங்கை செல்லுதற்கு வழியாகத் தென்கடலிலே கட்டிய வரம்பினை. இந்தச் சேதுவிலுள்ள தீர்த்தமகத்துவமும், மூர்த்திமகத்துவமும், இராமேச்சுரம் என்னும் ஸ்தலமகத்துவமும், பிறவும் இப்புராணத்திலே விரி

த்துக் கூறப்படும். இப்புராணத்தினைத் தமிழ்ப் பாஷையிலே விருத்தப்பாவினத்திலே திருத்தமுறப் பாடிவைத்தவர் மதுரைமாநகரத்திலே வசித்த நிரம்பவழகிய தேசிகர். இவரோ இலக்கியலக்கணங்களிலன்றிச் சைவசித்தாந்த சாத்திரத்திலும் மகாவல்லவர். சிவஞான சித்தியாருக்குந் திருவருட்பயனுக்கும் இவர் செய்தவுரையே சித்தாந்த வன்மைக்குத் தக்க சான்றாகும்.

இப்புராணத்துள்ள கவிகளெல்லாம் கவிச்சிரேட்டர்களை வசியப்படுத்தும் அத்துணைச் சிறப்புடைய சொற்சுவைகளும், பொருட்சுவைகளுமுடையன, இலக்கியங் கற்கப் பிரவேசிக்கும் மாணவர்கட்செல்லாஞ் சொற்பொருளுணர்ச்சி கைகூடுதற்குப் பேருபகாரமாயுள்ளது. இது பற்றியே செந்தமிழ்ப்பயிற்சியிலுஞ் செந்தமிழ்ப் பரிபாலனத்திலுஞ் சிறப்புற்றிருந்த ஸ்ரீமாந்-பொன்னுச்சாமித்தேவரவர்கள் இப்புராணத்திலே விருப்பமுற்று ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் பரிசோதனை பெற்று வெளிப்படச் செய்தார்கள். அரிதுணரற்பாலனவாகிய திரிசொற்களும், இலக்கணவிஷய நாமங்களும், பலவகை மடக்கலங்காரவகைகளுஞ் சிலேடைவகைகளும், வேதாந்த சித்தாந்த விடயங்களும் பிறவும் இப்புராணத்திலே ஆங்காங்கு வருகின்றன; அவற்றுள்ளே சிலபல இங்கே காட்டுதும்.

திருநாட்டுச்சிறப்பு.

இல்லமென் கிளவி யந்நாட் டிருப்பவ ரிசைக்குங் காலை
வெல்லருங் கேள்வி மேலோர் விதித்திடு மிலக்க ணத்துட்
சொல்லிடும் பெயரே யேனைத் தொழிற்குறிப் பிரண்டி னுள்ளும்
நல்லதோர் பெயரே யன்றி நவின்றிட நாடி டாரே.

இங்கே பெயராயும் வினைக்குறிப்பு முற்றாயும் நின்று பொருள்படத்தக்க "இல்லம்" என்னுஞ் சொல்லினைஎடுத்துக்கொண்டு அவ்விரண்டினையுங் காட்டி அதன் வாயிலாக நாட்டிற்குச் சிறப்புக் கூறினர். இல்லம் என்பது பெயராய் நின்று வீடு என்னும் பொருளையும், வினைக்குறிப்பு முற்றாய் நின்று வறியேம் என்னும் பொருளையும் விளக்கும். "பெயரேயன்றி நவின்றிடநாடிடாரே" என்பதனால் அந்நாட்டவர் யாவருஞ் செல்வர் என்பது பெறப்படும்.

நைமிசாரணியச்சிறப்பு.

கட்டவிழ்ந்துபொலிகமலமென்னவெரிகாமர்வேள்வியழன்முன்னரே
வட்டமாநிலம்வகுத்ததாதையெனமன்னுமாதவர்கண்மலரின்மேல்
எட்டுவாள்விழிவிரிஞ்சன்வைகியிடமென்றிடும்பொருளைமன்றவே
விட்டலக்கணையினூலுணர்த்திடுவர்வேறுகூறுவதென்மேன்மையே.

இங்கே மூவகை இலக்கணைகளுள்ளே விட்டலக்கணை என்பதனைச் சுட்டிக் கூறினர். மூவகை இலக்கணைகளாவன:—விட்டலக்கணை, விடாதலக்கணை, விட்டும் விடாதலக்கணை என்பன. விட்டலக்கணையாவது சொல்லின் பொருட்குப் பொருத்தமில்லாதவிடத்துக் கொள்ளப்படும் சம்பந்தம். விடாதலக்கணையாவது சொல்லின் பொருட்கும் பொருத்தமுள்ளவிடத்துக்கொள்ளப்படும் சம்பந்தம். விட்டும் விடாதலக்கணையாவது சொற்பொருளின் ஏகதேசத்தைவிட்டு ஏகதேசத்திற்குப் பொருத்தமுள்ள இடத்துக் கொள்ளப்படும் சம்பந்தம். இலக்கணையாவது முக்கியார்த்தஞ் சொல்லக்கூடாத இடங்களிலெல்லாம் உபசாரமாகச் சொல்லப்படும் பொருள். இங்கே கொள்ளப்பட்ட விட்டலக்கணைக்குக் “கங்கையிலிடைச்சேரி” என்பது உதாரணம். கங்கையென்னுஞ் சொல் தனது பொருளாகிய வெள்ளத்தை விட்டுக் கரையையே உணர்த்தும். அதுபோலப் பிரமன் தாமரைப் பூவில் இருப்பன் என்பதற்கு அதன் சமீபத்திலிருப்பனெனக் கொள்ளுதலே இங்கே பொருட்கு உபயோகமாகும்.

வேதாளவரதச்சருக்கம்.

வீசிய வுறைவாள் கொண்டு மேயவெஞ் சாபம் வீட்டி
யேசிலந் தணனு யங்க ணிருந்துசங் கற்பங் கூறி
நேசமோ டேக மூழ்கி நிலைமொழி தன்னை நீத்தான்
பூசுர னென்று தொக்க புணர்மொழி யிரண்டு தம்மில்.

இங்கே ஒரு பிராமணன் தேவனாயினன் என்பதனை “நிலைமொழிதன்னை நீத்தான்—பூசுர னென்று தொக்க புணர்மொழி யிரண்டு தம்மில்” என்பதனாற் கூறினர். பூசுரன் என்னும் புணர்மொழியிலே பூ என்பது நிலைமொழி. சுரன் என்பது வருமொழி. நிலைமொழியாகிய பூ என்பதனை நீத்தான் எனவே சுரனாயினன் என்பதாம். சுரன்—தேவன்.

இராமதீர்த்தச்சருக்கம்.

பலத்தினு லிவற லின்றிப் பலபொருள் வைக ருேறு
நலத்தினு லுதவி மேவு நாளிலோர் சேணில் வாணி
உலத்தினு லுயர்ந்த திண்டோ ளுதிட்டிர வுனக்கா சானைச்
சலத்தினுற் கொன்ற தீங்கிச் சலத்தினுற் றீர்ந்த திந்நாள்.

நியாய நூல்களிற் சொல்லப்பட்ட பதினுறு பதார்த்தங்களுள்ளே ஒன்ருகிய சலம் என்பது இங்கே பிரயோகிக்கப்பட்டது. சலமாவது ஒரு கருத்துப்பற்றிக் கூறிய மொழிக்கு மற்ருெரு பொருள் படைத்துக்கொள்ளுதல். மற்ருெருபொருள் படைக்கப்பட்டுச் சலமாக நின்ற மொழி "அசுவதாமனுவிபோனதுண்மையே" என்பது. அசுவதாமன் என்பது துரோணன் மகனுக்கும் யானை ஒன்றிற்கும் பொதுவாக நின்றது. அச்சொல்லே இங்கே துரோணன் இறத்தற்குக் காரணமாயிற்று.

இலக்குமிதீர்த்தச்சருக்கம்.

உறங்கொடைத் தரும னிவ்வா றுவந்தன னிளைய ரோடு
நறுங்குளிர்க் கமலை வாவி நனைந்ததோர் நலத்தி னுலே
தெறுங்கொடு மிடியை யிந்தத் திருத்தடஞ் சேரு மாந்தர்
வெறுங்கையா ரென்னும் பேரின் மென்மையை வன்மை செய்யும்.

இங்கே வறியரைச் செல்வராக்கும் என்பதனை "வெறுங்கையா ரென்னும் பேரின் மென்மையை வன்மை செய்யும்." என்பதனுற் கூறினர். "வெறுங்கையார்" என்னும் பேரிலுள்ள மென்மை ஙகர மெய். அதனை வன்மை செய்யின், வெறுக்கையார் என்ருகும். வெறுக்கை—செல்வம். மென்மை—மெல்லெழுத்து. வன்மை—வல்லெழுத்து.

சங்கரபாண்டியச்சருக்கம்.

மகரகுண் டலங்கண் மின்ன மார்பினிற் கவுத்து வந்தான்
மகரவா ரிதியிற் ருேன்றும் வளர்கதிர்ப் பரிதி மான
மகரவா கார நங்கை மணமக ளுகக் கண்டான்
மகரகே தனனை வென்ருேர் வாழ்கந்த மாதனத்தில்.

இங்கே மாநங்கை என்பதனை 'மகரவாகார நங்கை' என்ருர். மா—இலக்குமி.

இங்கே பிரயோகிக்கப்பட்ட "பெயர்" "தொழிற் குறிப்பு" "நிலைமொழி" "புணர்மொழி" "மென்மை" "வன்மை" "மகரவாகா

ரம்" என்பவைகளும், "விட்டலக்கணை" "சலம்" என்பவைகளும் இலக்கணநூல்களிலுந் தருக்கநூல்களிலும் பயிற்சியுடையார்க்கே புலப்படுவனவாம்.

இராமதீர்த்தச்சருக்கம்.

பொருவு போரிவை போற்பிற வின்மையால்
இருவர் போர்க்கு மிதர விதரமே
மருவு நேருவ மானம் வகுத்திடப்
பெருகு காதல் பெறிற் கவிவாணரே.

இங்கே அலங்கார சாத்திரத்திலே சொல்லப்பட்ட இதரேதரவுவமையைக் கூறினர். இதரேதரவுவமையாவது இரண்டு பொருள் ஒன்றற்கொன்றுவமையாய் வருவது. இதனை உபமேயோபமை எனவுங் கூறுவர். இருவர் போரும் ஒன்றற்கொன்று உவமையாய் உபர்வு காட்டி நின்றதென்பது கருத்து.

கோடிதீர்த்தச்சருக்கம்.

காதலி னோடணை கன்றெறி கைத்துணை காணுமுன்
ஏதமில் செங்கை யிலங்கிய கன்றை யெறிந்திட்டார்
தீதுறு பேய்த்தன மான்மிசை வுற்றிடு செயனோடா
மாதர்க டாமிசை வுற்றன பேய்த்தன மயன்மிக்கார்.

கன்று—பசுவின்கன்று, வளையல். பேய்த்தனம்—பேயின்முலை, பேய்த்தன்மை.

இடையர் தமிற்பா லாடை கவர்ந்தா னிவனென்று
அடைவுறு தம்பா லாடை யளித்தா ரணியாழிச்
குடையவ னென்பா ரங்குலி யாழி யொருங்கீந்தார்
தொடையவிழ் கூந்தற் றோகையர் மோகமொர் துணையின்றால்.

பாலாடை—பாலினடை, வெள்ளைப்புடவை. ஆழி—சக்கரம், மோதிரம். இக்கவிகளிரண்டும் மடக்கோடு கூடிய பிரேளிகை.

சருவதீர்த்தச்சருக்கம்.

மங்கையுமை பங்குறை யபங்கவர வங்கூர்
கங்கையொடு திங்கள்புனை துங்கசன றங்குஞ்
செங்கையணி கங்கண புயங்க சிரகங்கொ
ளங்கைவிதி கங்குல வலங்கலக ளங்கா.

*

அபங்க—பங்கமிலாதவனே. விதிகம்—பிரமகபாலம். அலங்கல்—மாலை.

அரகர வராகமில ரானவர் பராவும்
வரகர வரானவர் விராவரண வஞ்சப்
புரகர புராதன கராவையடு புள்ளூர்
சரகர சராசன தராதர பிரானே.

அரகர—ஹர! ஹர! அராகம்—இச்சை. கரவர்—கள்ளமுடையவர். புரகர—புரத்தினையழித்தவரே! கராவையடு புள்ளூர்சர—விட்டுணுவாகிய அம்பினையுடையவரே! கரா—முதலை. சராசனம்—வில்லு. தராதரம்—மலை.

இக்கவிகளிரண்டும் அநுப்பிராசம் என்னும் வழியெதுகை அமைக்கப்பட்டுள்ளன.

திருநாட்டுச் சிறப்பு.

கன்னியர் வாணிபோலக் கழனியும் வள்ளை காட்டும்
அன்னவர் பாணிபோல வலந்தையுங் குருகு காட்டும்
மின்னிடை யார்மனம்போல் வேலியு முல்லை சேரும்
பொன்னனை யார்தனம்போற் பொதும்பரு மாரஞ் சேரும்.

இது செம்மொழிச் சிலேடையணி அமைந்து வந்த செய்யுள். வள்ளை, குருகு, முல்லை, ஆரம் என்பன சிலேடையாய் அமைந்து நின்ற சொற்கள். வள்ளை—உலக்கைப் பாட்டு, வள்ளைக்கொடி. குருகு—வளையல், பறவை. முல்லை—கற்பு, ஒரு கொடி. ஆரம்—முத்து, சந்தனம்.

திரிசொற்கள் அமைந்த கவிகளும், வேதாந்த சித்தாந்த சாரம் அமைந்த கவிகளும் பிறவும் பின்னர் எழுதப்படுவனவாகும்.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்	இங்ஙனம்,
விசுவாவசுஹூ புரட்டாசிமீ	அ. குமாரசுவாமிப் பிள்ளை.

நூலாராய்ச்சி.

—:o:—

ஐம்புலனுணர்ச்சி, அனுமானம், ஆன்றோர் வழக்கு, கேள்வி, நூலாராய்ச்சி முதலியன மாந்தரது அறிவைப்பெருக்கும் வருவாய்களாம். இவற்றுள் ஒன்றேனும் முற்றிலும் மெய்யறிவையே தருவதன்று: ஐம்பொறிகளுள்சிறப்புற்றிலங்கும் கட்புலனே; வான்சுடர்களுட் பெரிதைச் சிறிதாயும், சிறிதைப் பெரிதாயும், தன்னொளி இல்லதை உள்ளதாயும், மிகச்சேய்மையதையும் கிட்டினதையும் ஒத்ததூரத்தனவாயும், அசைவின்றி விளங்கிநிற்பதை விரைந்துசெல்வதாயும், கணத்துக்குப் பன்னூறு காவதம் செல்லும் கடுங்கதியிற் சுழலுவதை அசையாப் பொருளாயும், பல்வேறு பொய்த் தோற்றங்களைத் தெரிக்குமாயின், ஏனைய பொறிகளின் நம்பொணுத் தன்மையை விரித்துரைக்க வேண்டுவதில்லை. அனுமானமோ என்றும் உறுதிபயப்பதன்று. காலதேயங்களாற் பேதமுறும் ஆன்றோர் வழக்கு ஒருதன்மைத்தன்றாதலின் உண்மை தெளிந்தன்றி ஒருப்படற்குரியதன்று. செல்வத்துட் செல்வமெனக் கேள்வியைப் போற்றிய புலவரே கேட்டபொருளின்மெய்ப்பொருள் காண்பதே அறிவெனக்கூறிக் கேள்வியெல்லாம் மெய்யறிவைத்தாரா என்பதை நாட்டியுள்ளார். "எப்பொருள் எத்தன்மைத்தாயினும அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் மூதுரை, நூலாராய்வார் மறக்கற்பாலதன்றே. இதனல், மனிதனது அறிவை விருத்திசெய்தற்கான சாதகங்களில் ஒன்றேனும் முழுநம்பிக்கைக் குரியதன்று என்பதும், ஒன்றின் விளைவை மற்றவற்றால் பரிசோதித்துத் தன்னுள் ஆராய்ந்து மெய்ப்பொருளை அறிந்தாலன்றி மனிதன் அபிவிருத்தி அடையான் என்பதும் பெறப்பட்டன. இனி, யாம் எடுத்துக்கொண்ட நூலாராய்ச்சி என்னும் விஷயத்தைச் சிறிது நுட்பமாய் ஆராய்வாம்.

நமது தற்கால அறிவு நிலைமைக்கும் நாகரிகத்துக்கும் நாமே நேரில் ஈட்டிய சுயாநுபவஞானம் எவ்வளவு காரணமாயிருக்கிறது என்பதையும் நம்முன்னோர்பெருக்கிவைத்துள்ள அறிவுப்பெருங்கடலினின்றும் பல்லாற்றாலும் பல்வேறு அமயங்களிலும் நாம் கொண்டுகொண்ட அறிவு எவ்வளவு காரணமாயிருக்கிறது என்பதையும்

சற்று ஆராய்வாராயின் நமது முன்னோர்க்கு நாம்பட்டுள்ள கடனின் அருமையும் பெருமையும் சிற்றறிவினர்க்கும் தெற்றெனத் தெரியும். ஒவ்வொன்றையும் நம்முள் ஒவ்வொருவனும் தானே நேரில் அநுப வித்து யூகித்து அறிந்துகொள்ள வேண்டியிருப்பின், அந்தோ இவ் வின்னுயிர்வாழ்க்கை கணமேயும் பொறுத்தற்கரிய கடுந்துயராகவே தோன்றும். அறிவென்னும் பெருமலையின் முகட்டைக் காணமுய லும் மாந்தருள் ஒவ்வொருவனும் தனித்தனியே படிகள் சமைத்துக் கொண்டே மேலேறவேண்டும் என்றிருப்பின், இப்பொழுதினும் நூறுமடங்கு வாழ்நாள் நீடிக்கினும், சிகரம் சேர்வது கிடக்க, மலை யின் அடிவாரத்தினின்றும் ஒருவனேனும் ஒருபனைத்துணையேனும் ஏறமாட்டானென்பது திண்ணம். இதுவுமன்றி, மாந்தருட்பெரும் பாலார் சாமானியராயும் மிகச்சிலரே கூரறிவினராயும் இருத்தலின், இவர் வழிச்சேறலான் அவருறும் நன்மை அளப்பரிதாம். இதனால், முன்னோர் அரிதின் மூளை வியர்க்க முயன்றீட்டிய மெய்யறிவைப் பின்னோர்க்குக் கர்ணபரம்பரைவழியாயும் நூல்களின் வழியாயும் உதவுதல், அன்னோர் தேடிய செல்வப்பொருளை வைத்துப் போதலி னும் எவ்வளவோ பேருதவி ஆகின்றது. நிற்க: ஆன்றோர் தாம் அறிந்துணர்ந்தவற்றை உள்ளவாறு சொல்லி நிறுத்தாது, அவற்றின் உறுதிப்பயனை விதிவிலக்குக்களாக ஆங்காங்குப்பணித்திருக்கின்றமை என்னையோவெனின், சிற்றறிவினரும் சிக்கெனப் பற்றி வழிபடும் பொருட்டேயாம். உதாரணமாக, இலக்கண இலக்கிய வரம்பின்றி ஒருமொழியாளர் பலரும் தத்தம்மனப்படியே பேசுவாராயின் அவர் சமூகம் கடவுளாற் சபிக்கப்பட்ட பேபல்நகரமாக்களின் மந்தையை ஒத்துவிடும் என்பது உண்மையன்றோ. ஆகவே, முன்னோர் அரிதிற் பெற்ற அறிவு பின்னோர்க்குப் பயன்படுமாறும், வரம்பிலா ஒழுக் கும் மொழியும் வழங்கி ஐக்கியவிரோதமான பேதங்களும் மயக்க மும் தழைத்தோங்காவாறும் விதிவிலக்குக்கள் செறிந்த அறிவு நூல் கள் முன்னோரால் இயற்றப்பட்டு வழங்குதல் மனிதனது அபிவிருத் திக்கு இன்றியமையாப் பெருந்துணையாம்.

தாம் கூறும் விஷயபேதங்களான் நூல்கள் பல்வகைப்படுவன: இலக்கணங்கள், இதிகாசபுராணங்கள், காவியங்கள், சரித்திரங்கள்,

சாத்திரநூல்கள், பரீக்கை நூல்கள், வாதநூல்கள், விஞ்சைநூல்கள், ஆத்துமதத்துவ நூல்கள் முதலியன. இவற்றுள் முற்பட்ட நான்கின் ஆராய்ச்சியைமட்டும் ஈண்டெடுத்துப்பேசுவாம். இவற்றினேசாமானியரும் தலையிடலானும், ஏனைய நூல்கள் அவ்வவ்விஷய பண்டிதர்க்கன்றி ஆராய்ச்சிக்கியையா ஆகலானும், இந்நால்வகை நூல்களினும் கூட அவ்வவ்விஷயங்களில் தேர்ந்தார் தலையிடலே தகுதி; ஆயினும் கற்போர் யாவரும் அவற்றொடு சிறிதேனும் மிகவேனும் பயிறலால் அவற்றைப் பொதுநூல்களாக எடுத்துரைக்க நேர்ந்தது. நூலாராயப் புகுவார் எத்தன்மையராய் இருத்தல்வேண்டும்; அவர் துணிபுயாதாயிருத்தல்வேண்டும் என்னும் வினுக்களுக்கு நூலாராய்ச்சி எதன்பொருட்டு என்னும் சங்கை விடையளிக்கும். நூலாராய்ச்சி நூலின் உண்மைப்பொருளை அறியும்பொருட்டே என்று முன்னரோ கூறினும். 'தகநிற்றல்' இதன் பிற்பட்டதென்பதை உணர்க. ஆயின் உண்மையை அறியமுயல்வான் எத்தன்மையனய் எத்துணிபினனய் இருத்தல் தகுதியெனின், தேசம், சாதி, மதம் முதலியன பற்றிவரும் அபிமானம் எதனினும் எல்லாவற்றினும் உண்மை அபிமானமே அவனுக்குப் பெரிதாயிருத்தல்வேண்டும். யாதானும் ஒரு நூலாராய்ச்சியால் தன்னடு, தன்குடி, தன்சமயம் இவை பிறிதொரு நாடு குடி சமயங்களுக்குக் கீழ்ப்பட்டனவாயேனும் தாழ்ந்த சிறப்பினவாயேனும் துலங்கின், அவ்வுண்மையை அவன் ஒப்புக்கொள்ளவேண்டும்; அன்றேல் அவனுற்ற கல்வித்துன்பம் பயனிலதாவதுமன்றி, அவன் பொய்யனே ஆகுவன். உண்மை எத்தன்மைத்தாயினும் உகந்தேற்கும் பேராண்மையிலான் நூலாராய்ச்சியில் தலையிடாமையே நலம். உண்மை இன்னதென்று உணர்ந்திருந்தும் அதை ஒளித்துப் பலியிட்டு ஏனையவற்றைப் போற்றிப்பேணும் அபிமானங்களெல்லாம் போலி அபிமானங்களேயாம். அத்தகைய அபிமானிகள் என்றும் புகழடையார்; அவர் அவ்வாறு போற்றிய பொருள்களும் இழிவையே அடைப. "ஸத்யம் நாஸ்தி பரோ தர்ம:" (உண்மையினும் உயர்ந்ததோர் தர்மம் இல்லை) என்னும் பெருந்தர்மமே நூலாராயப்புகுவார் கைக்கோடற்கேற்ற மதம்; மற்றெம்மதமும் எவ்வபிமானமும் அன்னர்க்குப் பொருந்தா. அதை மறந்து ஏனையவற்றையே நினைந்துகொண்டு நூலாராய்வாராயின், நூலையும் இழித்

து, தாமும் வீண் இன்னற்பட்டு, உலகத்துக்கும் விபரீதங்களையே விளையாநிற்பர். நூலாராய்வார் ஒவ்வொருவரும் இந்நியாயப்படி ஒழுகுவராயின், அம்ம அம்ம! உலகத்திலே வீண்வாதங்களும் போலிநியாயங்களும் பொய்புரைகளும் எத்துணை குன்றி, உண்மை அறிவு எவ்வளவு விரைவில் வளர்ந்தேறும்! தான் சத்தியவிரதியாயும், ஏனைய போலி அபிமானங்களை ஒழித்தவனும், தன் ஆராய்ச்சியால் வெளிப்பட்ட உண்மை யாதேஆயினும் துணிந்தேற்கும் பேராண்மை உடையவனும் இருப்பதும் அன்றி, நூலாராயப்புகுவான், சாமானிய மாந்தருக்குள் எங்குமேபொதுவாயும், நம்மவருக்குள் அதிகமாயும் பரக்கவிளங்கும் சிலபோலி அபிப்பிராயங்களை அறநீக்கிவிடுதலும் அவசியமாம். அவற்றுள் சில ஆவன:—ஒன்று, பண்டைக்காலத்தினும் இப்பொழுது அறிவுகுன்றியிருக்கிறது என்பது. இது பொய்யன்றேல், நம்முன்னோரையும் கடவுளையும் பழிக்கும் உரையாம். என்னை? தலைமுறைதோறும் அறிவு மேன்மேலும் பெருகாது குன்றிவரின், நம்முன்னோர் தந்தைமகற்காற்றும் கடனிற் பிழைத்தவராவர்; கடவுளும் தம் அருளுடைமை ஞானம் முதலிய குணங்களில் தவறினவராவர். முன்னைய பின்னைய நிலைமைகளை மதித்துநோக்கின், சிலசில விஷயங்களில் அறிவு வளர்ந்தும் தளர்ந்தும் காணினும், ஆண்டுகள் செல்லச்செல்ல அறிவுப்பெருங்கடல் பெருகிவருவது நன்குவிளங்கும். இதுவே இயற்கை நியாயமும் ஆம். இப்போலி உரையைத்தழுவி வருவனவே பழைய கிரந்தங்களில்உள்ளனவெல்லாம் கேவலம் உண்மையென்பதும், இப்பொழுது புதிதாய் அறியப்படுவன எல்லாம் முன்னரோ அறிந்து அவற்றிற் கூறப்பட்டுள என்பதும். இவ்விரண்டு அபிப்பிராயங்களும் மெய்யாயின் தொன்னூலாராய்ச்சி அந்நூல்களைப் பழித்து இகழ்ந்ததாம்; அவற்றின் பொருளைமட்டும் அறிதலே நம் கடனும். இப்போலி மொழிகள், இந்நாளிலே அன்னப்புள் இல்லை சிங்கம்இல்லை வெள்ளையானை இல்லை என்பாரைப் போல்வார் உரைகளேனினும், நுண்ணறிவினர் ஒருகணமும் மதித்தாய்தற்குரியனஅன்றேனினும், இப்பொழுது நமக்குள் மிகைபட வழங்கிவருதலால், அவற்றைக் கடிதலும் நமது கடனும். பொதுஜன விரோதமானதோர் உண்மையை எடுத்துரைக்கப் புகுவான் உறும்கைப்பாறு புகழினும் வசையேயாம்;

அதினும் பாமரரேயன்றிப் பண்டிதரிற் சிலராலும் அவ்வுண்மை விபரீதமாக எண்ணப்படின், தன் துணிவுக்கேற்ற அளவு அவன் வசையுறல் திண்ணம். ஆயினுமென்? அவையஞ்சுவாரை 'இல்லாரோடொப்பர்' எனவும், 'கல்லாதவரிற் கடை' எனவும் இழித்துரைத்தாராதலின், புலவர் வசைமொழியையே ஏனையர் பயனில் கூற்றினும் அஞ்சி, எம்முரை 'அங்கணத்துள் உக்க அமிழ்து' ஆகாது, 'வளர்வதன் பாத்தியுள் நீர்சொரிந்தற்று' ஆமாறு திருவருளைத் தியானித்துக்கொண்டு, இவ்வபிப்பிராயங்களின் பொய்ம்மையை விளக்கப் புகுவாம். (இன்னும் வரும்).

அ. மாதவையர்.

---

*செய்யுள்.

:o:

ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் ஆரணியகாண்டத்திலே ஸ்ரீராமனை நோக்கி விராதன் செய்யும் துதியை முதன்முதல் ஓதும்போது எனக்கு இன்னதென்று தெரியாத ஒருவித ஆனந்தம் உண்டாயிற்று. நாலாயிரப்பிரபந்தத்திற் சிற்சில பகுதிகளை ஓதுமிடத்துண்டாகும் ஆனந்தத்திலும் இது மிகுவதாதல் உணர்ந்து மீண்டுமீண்டும் அத்துதியை ஓதுதலுண்டு. இங்ஙனமே இராமாயணத்தில் வேறு சில சந்தர்ப்பங்களிலும் புறநானூறு கலித்தொகை முதலிய சங்கத்தொகை நூல்களின் சிற்சில பாக்களிலும் இவ்விதமான கவியின்பம் உண்டாவதைப் பின்னர் நாளடைவில் உணர்ந்தேன். சில புலவர்களுடைய தனிப்பாடல்களிலும் இது பிரத்தியக்ஷ அனுபவமாக இருக்கின்றது. இங்ஙனம் ஜனித்தலான ஆனந்தத்துக்கு ஆதாரம் யாதோ என்று பலசந்தர்ப்பங்களிற் பலகால் சிந்தித்தேன். தமிழிலும் இங்கிலீஷிலும் இது சார்பான சில நூல்களை ஆராய்ந்துபார்த்தேன். இங்ஙனம் சிந்தித்தும் ஆராய்ந்தும் குறித்துக்கொண்ட சிலகுறிப்புக்களை இப்போது செய்யுள் என்னும் வியாசமாக விவரிக்கிறேன்.

வடமொழியில் காவியம் என்பதும் யூரோப்பிய பாஷைகளில் போயெட்ரி என்பதும் தமிழில் செய்யுள் என்பதும் ஒருபொருளன

---

* இராசதானிக்கலாசாலை மாணவர் தமிழ்ச்சங்கத்தில் ஸ்ரீ K. B. இராமநாத ஐயரவர்கள் M. A. முன்னிலையில் வாசித்தது.

வே. தமிழிற் செய்யுள் என்பது தொழிலாகுபெயர். யூரோப்பிய பாஷைகளில் போயெட்ரி என்பதும் இதுவேயாகின்றது. வடமொழியில் காவியம் என்பது கவியாற்செய்யப்பட்டது என்பதாம். தமிழில் செய்யுள் என்பதற்கு யாப்பு-பா-பாட்டு-தொடர்பு-தூக்கு என்பன பரியாயநாமங்கள். இவைகளில் ஒவ்வொன்றும் காரணப்பெயராதல் வெளிப்படை. ஹீப்ரு பாஷையில் கவிகளுக்குப் பார்ப்பவர் என்று பொருள்படும் பெயர் வழங்குகின்றது. இது மிகவும் பொருத்தமானதேயாகும். உலகியலை ஏனையோரிலும் கவிகள் மிக நன்றாய் ஸூக்ஷ்மித்தறிவது எவரும்உணர்ந்தபடி. தெலுங்கில் "ரவி எருகனி தாவு கவி எருகுனு" என்னும் பழமொழி இதனை நன்குவிளக்குகின்றது.

வடமொழியில் செய்யுளைக் கவிதா என்பதும், செய்யுளியற்றுவோரைக் கவி என்பதும், கவிகளிற்சிறந்தோரை மகாகவிகள் வரகவிகள் என்பதும் மரபு. தமிழிலும் அவ்வழக்கையே வழக்காகக் கொண்டு உரைப்பதன்றிச் செய்யுளைப் பா என்றும் செய்யுளியற்றுவோரைப் பாவலர் என்றும் கவிஞர் என்றும், உத்தம கவிகளைக் கவிராயர் என்றும் கவிராசசேகரர் என்றும், உத்தமோத்தம கவிகளைத் தெய்வப்புலவர் என்றும் கவிச்சக்ரவர்த்தி என்றும் வழங்குவது மரபாக இருக்கின்றது. அவரவர்களுடைய ஆற்றலுக்கேற்றவாறு கவிகளை வடமொழியில் வகுத்துள்ள நாற்பாற் பகுப்பை மேற்கொண்டு தமிழிலும் பாவலர்களைச் சித்திரகவி, மதுரகவி, விஸ்தாரகவி, ஆசுகவி என வழங்குவது மரபாக இருக்கின்றது. இந்நால் வகைத் திறனும் ஒருசேரப் பெற்றவர்கள் சிலர் நாலுகவிப் பெருமாள் என்றும் நாற்கவிராசநம்பி என்றும் விருது பெற்றிருப்பது பிரசித்தம்.

இதுகாறுங் கூறியவற்றால் செய்யுளாவது மானுட சிருட்டியே என்பது தெளியப்படும். புலமைமிக்கவர்கள் யாதொரு கதையை உள்ளிட்டோ அல்லது யாதோர் அகப்புறப் பொருட்டுறையை உள்ளிட்டோ தாங்கள் வழங்குதலான மொழியில் அமைக்கும் பாடலே செய்யுள் என்பதாம். இது செய்யுளியலில் தொல்காப்பியர்,

"எழுத்து முதலா வீண்டிய வடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்."

என உரைத்ததனல் உணர்தலாகும். பிரகிருதியில் (பிரமனுடைய) சிவ சிருஷ்டியைப் போன்றது கவிகளின் கவிதாசிருஷ்டி என்னும் கருத்தை உள்ளிட்டு நன்னூலில்,

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட ஞக உணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்.

என விளக்கினர் பவணந்திமுனிவர். பிரமனையும் கவிகளையும் சீர்தூக்கிக் குமரகுருபரர்,

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு.

எனக்கூறினர்.

கவிஞனுடைய லக்ஷணத்தை அம்பலவாணக்கவிராயர்,

தெள்ளமிர்த தாரையென மதுரங் கதித்தபைந்
தேன்மடை சிறந்த தெனவே
செய்யுமுத் தமிழிெனடு நாற்கவிதை நாற்பொருள்
தெரித்துரைசெய் திறமை யுடனே
விள்ளரிய காவியத் துட்பொரு ளலங்காரம்
விரிவிலக் கணவி கற்பம்
வேறுமுள தொன்னூல் வழக்குமுல கத்தியல்பு
மிக்க ப்ரபந்த வண்மை
உள்ளவெல் லாமறிந் தலையடங் குங்கடலை
ஒத்ததிக சபை கண்டபோ
தோங்கலை யொலிக்கின்ற கடல்போற் பிரசங்கம
துரைப்பவன் கவிஞ னகும்.

எனத்தமது அறப்பளீசுரசதகத்தில் உரைத்துப்போந்தார். கோவிந்தசதகம் பாடினவர் "பாவுக்கழகு சொற்சுவை பொருட்சுவை". என்றார். "சந்தமில்லாக் கவிக்கு அந்தமில்லை" என்றது ஒரு பழமொழி. ஒரு வித்தியார்த்தியானவன் பரீக்ஷையில் செய்யுள் சம்பந்தமாக எழுதிய ஒரு வியாசத்தில் "பாபாதி பண்பாதி" எனவரைந்திருக்கின்றனன். கம்பநாடர் "கவிப்பாவமுதம் இசைக்கறியொடு

*

கன்னனுன்னக் குவிப்பான்" எனச் சடகோபரைப் புகழ்வதும் இக்கருத்தே யன்றோ. அறப்பளீசுரசதகத்தில் உதவியன்றிக் கெடுவனவற்றில் "வருமெதுகைமோனையில்லாதகவியும்" ஒன்று. "அணியிலாக்கவிதை பணியிலாவனிதை" என்றார் அகத்தியர். உத்தமகவி லக்ஷணத்தை,

எற்பொரு நாகர்தம் இருக்கை யீதெனக்
கிற்பதோர் காட்சிய தெனினுங் கீழுறக்
கற்பக மனையவர் கவிஞர் நாட்டிய
சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது.

எனப் பம்பைப் பொய்கையை வருணிக்கின்ற இடத்திலும், அதமகவிலக்ஷணத்தை

... ... அகழி
பொன்விலைமகளிர்மனமெனக்கீழ்போய்ப்புன்கவியெனத்தெளிவின்றி

என அகழியை வருணிக்கின்ற இடத்திலும் விளக்கிய கம்பர், கோதாவிரி நதியின் வருணனையில்

புவியினுக்கணியாய் ஆன்றபொருள்தந்தபுலத்திற்றாகி
அவியகத்துறைகள்தாங்கிஐந்திணைநெறியளாவிச்
சவியுறத்தெளிந்துதண்ணென்றொழுக்கமுந்தழுவிச்சான்றோர்
கவியெனக்கிடந்தகோதாவிரியினைவீரர்கண்டார்.

என அவ்வாற்றையும் சான்றோர் கவியையும் சிலேடையுவமையாக அமைத்துக் கூறியிருப்பதில் கவி லட்சணம் இன்னதென்பது அறியக்கிடக்கின்றது. அஃதாவது 'பூமிக்கெல்லாம் அலங்காரமாய் நிறைந்த அர்த்தங்களைக் கொடுத்து அறிவின்கண்ணே நிகழ்வதாய்த் தேவாமிர்தம் போன்ற அகப்பொருளின் பலதுறைகளைத் தாங்கி மற்றும் ஐந்திணைப் பொருணெறிகளைச் சேர்ந்து விளக்கமுந் தெளிவும் உள்ளதாய்த் தன்மையான நல்லொழுக்கம் அல்லது சொன்னடை உள்ளது' என்பதாம்.

'கவிதா வனிதா' என்றது ஒரு வடமொழிப் பழமொழி. அஃதாவது, கவிதாலக்ஷணம் பலவிதத்திலும் வனிதாலக்ஷணத்தை ஒத்தது என்பதாம். வனிதாலக்ஷணம் புருஷரால் விரும்பப்படுதல்; கவி

தாலக்ஷணம் புலவரால் விரும்பப்படுதல். வனிதையரை வலிந்து கொள்ளும் இன்பம் சிறந்ததன்று: கவிகளைப் பலவந்தம் பண்ணிப் பாடுவிக்கும் பாடலால் உண்டாகும் இன்பம் சிறந்ததன்று. 'பாடு என்றால் பாணனும் பாடான்.' விலைமகளால் உண்டாகின்ற இன்பம் பொருளளவினதான பொய்யின்பமே: கூலிக்குப் பாடுகின்ற கவிடால் வரும் இன்பமும் அன்னதேயாகும். பெண்பால் தனது இயற்கை நலத்தால் விளைவிக்கும் இன்பமே சிறந்தது. கவிதையும் தனது சொன்னயத்தால் விளைவிக்கும் பொருணயமே சிறந்தது. இங்ஙனமாக ஒட்டிக்கொள்ளலாம்.

காரிகைகற்றுக் கவிபாடுவார் சிலர் எக்காலத்தும் உண்டு. அவர்கள் கவிகளின் வரிசையில் வைத்தெண்ணுதற் குரியரல்லர். "காரிகைகற்றுக்கவிபாடுவதினும் பேரிகைகொட்டிப் பிழைப்பது நன்று" மகாகவிகள் காரிகைகற்றுக்கவிபாடுவதாக எம்மொழியிலும் யாதொருவரலாறும் வழங்கவில்லை. "தலைச்சன் பிள்ளை பெற்றவளுக்குத் தாலாட்டும் அகமுடையான் செத்தவளுக்கு அழுகையும் தானே வரும்." திருவாய்மொழியின் வியாக்கியான அவதாரிகையில் பின்வருமாறு உரைத்திருக்கின்றது. "இப்படி பகவத் ஸ்வரூப ரூப குண வீபூதிகளை விசத விசததர விசததமமாக அநுபவித்து அங்குள்ளடங்காமை வழிந்து புறப்பட்ட சொல்லாயிற்று இப்ரபந்தங்கள்; இங்ஙனேயாகில், இப்ரபந்தங்களுக்குப் பாட்டும் ஸங்க்யையும் பாட்டுக்கு நாலடியாகையும் அக்ஷரங்கள் ஸமமாகையும் 'எழுத்தசை சீர் பந்தமடி தொடைபாவினம்' என்றாற்போலச்சொல்லுகிற ப்ரபந்தலக்ஷணங்கள் சேர விழுந்தபடி எங்ஙனே யென்னில், சோக வேகத்தாலே பிறந்த 'மாநிஷாத' இத்யாதி சுலோகமானது "மூச்சாதா தேவ" என்கிற சுலோகத்தின்படியே அத்திக்காயிலனுமான் போலே பகவத் விபூதியில் ஏகதேசஸ்தனான ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே ஸர்வலக்ஷணோபேத மானாற்போலே பகவத் ப்ரஸாதயடியாகப் பிறந்த இப்ரபந்தங்களுக்கு இவற்றில் கூடாததில்லை." நம்மாழ்வாரே திருவிருத்தத்தில்

மெல்லியலாக்கைக் கிருமிக்குருவின் மிளிர்தந்தாங்கே
செல்லிய செல்கைத்துலகையென்காணும் என்னுலுந்தன்னைச்
சொல்லிய சூழற்றிருமாலவன்கவியாதுகற்றேன்
பல்லியின்சொல்லும்சொல்லாக்கொள்வதோவுண்டுபெண்டுபெண்டே.

என்றும், தொண்ணூற்றேழாந் திருவாய் மொழியில்

பண்ணார்பாட 'லின்கவிகள்யானாய்த்தன்னைத்தான்பாடித்
தென்னாவென்னுமென்னம்மான் திருமாலிருஞ்சோலையானே.

என்றும் (இக்கருத்தை வேறிடங்களிலும் குறித்துக்) கூறியிருக்கின்றனர்.

தங்கள் தங்கள் உபாசனா மூர்த்தியின் அருளாலே பாடல்கள் புறப்படுகின்றன என்றும் அப்படிப்பட்டவை அருள் வாக்குஎன்றும் நம்மவர்கள் நம்புகின்றனர். கம்பநாடர் முதலியோர் கலைமகளருளால் கவிபாடலாம் என்று நம்பினதாகக் காண்கின்றது.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

என்றும்

பாவுந்தொடையும் பதங்களுஞ் சீரும் பலவிதமா
மேவுங் கலைகள் விதிப்பாள்... ... ...

என்றும் கம்பர் சரஸ்வதியந்தாதியிற் பாடியிருக்கின்றனர். இராமாயணத்தில் யாதேனும் ஆக்ஷேபணை கேட்பவர்களைநோக்கி 'நானும் அறியேன் அவளும் பொய்சொல்லாள்' எனக்கூறினரென்று ஆசிரியர் பரம்பரையிற் கேட்டுவருகிறோம். இங்ஙனம் கூறினவர்,

பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ

என்றது பொருந்துமாறெவன்; கவித்துவத்தின் மர்மம் கவிகளுக்கே புலனாவதான திரிபுடைத்தெனப்போலும். "கம்பன்வீட்டுக் கட்டுத்தறியுங் கவிபாடும்" என்று வழங்கும் பழமொழியின் கருத்து மகாகவிகளுடைய சகவாசத்தால் சாதாரணர்களும் ஒருவாறு கவித்துவம் அடைவர் என்பதேயாம்.

(இன்னும் தொடரும்).

தி. செல்வக்கேசவராயன்.

உ

பொன்பரப்பினான

மகதைப் பெருமாள் கவி.

அடியில் வரைந்துள்ள இரண்டு சாஸனங்களும் திருவண்ணாமலையில் அருணாசலேசுவரர் கோயிலின் முதற்பிராகாரத்து வடவண்டைச்சுவரிற் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதலாவது உத்தேசம் 20-அடி நீளமும், 2-அடி அகலமுமுள்ள இடத்தில் வெட்டப்பட்டிருக்கிறது. இதன் அக்ஷரங்கள் அழகாயிருப்பதோடுகூட எழுத்துப்பிழைகள் அதிகமாயில்லை. ஒன்றிரண்டு இடங்களைத் தவிர்த்து எழுத்துக்களை யடித்தாவது, வரி பிளந்தாவது எழுதவில்லை. பழைய சோழசாஸனங்களிலும், பிற்காலத்திய விஜயநகரத்தரசர் காலத்திய சாஸனங்களிலும்போலல்லாமல் ணகரமும் நகரமும் கூடியமட்டும் சரியாகவே உபயோகப்பட்டிருக்கின்றன.

முதற்சாஸனம் இருபதுபாட்டுக்களையுடையது. இவை வெண்பா, கட்டளைக்கலித்துறை, விருத்தம் முதலியபாக்களாலாயவை. இவ்விருபது பாட்டுக்களும் சாஸனத்தில் ஒன்பது வரியில் எழுதப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது சாஸனம் 6-அடி நீளமும், 1-அடி அகலமுமுள்ளது. இதில் ஒரு கட்டளைக்கலித்துறையும், ஒரு வெண்பாவுமுள்ளன. இதன் எழுத்து முதலியவை முதற்சாஸனத்தைப்போலவே இருக்கின்றன.

இச்சாஸனங்கள் கி. பி. 1178-1216 வரையிலாண்ட மூன்றாங் குலோத்துங்கன் காலத்ததாகவேண்டும். இவற்றிற் பாடப்பெற்றோன் நடுநாடு அல்லது மகதநாட்டின் சிற்றரசன். இவனும் இவன் முன்னோர்களும் சோழவரசர் கீழடங்கியிருந்தவர்கள். பொன்பரப்பினான் வாணவம்சத்தைச் சேர்ந்தவன். இதை இவன் பெயராகிய 'ஆர்ககளூருடையான் இராசராசன் பொன்பரப்பினான் வாணகோவரையன்' என்று திருவண்ணாமலையிலும், திருவானைக்காவிலும் இருக்கும் சாஸனங்களிற் கூறியிருத்தலினால் நன்குவிளங்கும். இவ்வாணர்தாம் மணிமேகலையிலும்,

"நெடியோன் குறளுரு வாகி நிமிர்ந்துத
னடியிற் படியை யடக்கிய வந்நா
ணீரிற் பெய்த மூரி வார்சிலை
மாவலி மருமான் சீர்கெழு திருமகள்,சீர்த்தி"

என்று கூறப்பட்டுள்ள மாவலி மருமான் (வாணன்)* சந்ததியார்கள். இவர்களாண்ட நாட்டுக்கு (முன்சொன்ன நடுநாடு, மகதை என்பது தவிர) [1]பெரும்பாணப்பாடி என்னும் பெயருமுண்டு. இது வேங்கடமுதலிய பல கோட்டங்களையுடைத்தாயிருந்தது. மேல் எடுத்துக்காட்டிய சாஸனத்தின் பகுதியினால் பொன்பரப்பினான் என்னும் காரணப்பெயர் பூண்டவனுடைய இயற்பெயர் இராசராச தேவன் என்று விளங்குகிறது.[2] இவனைப்பற்றிய சாஸனங்களும், இவன் புகழ்களும், திருவண்ணாமலை, செங்கைமான், திருப்பாலைப்பந்தல், திருவானைக்கா[3] முதலான பலவிடங்களிலும் உள.

---

* மாவலி வாணர்களின் சாஸனங்களிலும்:—

'ஸ்வஸ்தி ஜகத்த்ரயாபிவந்தித ஸுராஸுராதீஶ்வர பரமேஶ்வர ப்ரதிஹாரீக்ருத ஸ்ரீமஹாபலி குலோத்பவ ஸ்ரீவாண &c. &c., என்றுள்ளது.

1. பிற்காலத்தாண்ட வாணகோவரயர்களுடைய நாடு மகதை என்று பெயர்பட்டு விஸ்தீரணமும் குறைந்துவிட்டது. பழைய வாணர்களாண்ட காலத்து வாணகப்பாடி அல்லது பெரும்பாணப்பாடி வடுகவழி மேற்கு (ஆந்த்ரபதாத்பஶ்சிமே) மிகுந்த பெரிய நாடாயிருந்தது;

2. உத்தியோக விஷயத்தினிமித்தம் சிற்றரசர்கள் மிகுதியும் அப்பொழுதாண்டுகொண்டிருக்கும் சார்வபௌம சக்கரவர்த்திபெயர் தரித்துக்கொள்ளுவது வழக்கம். 'கிளியூர் மலையமான் பெரியுடையானான ராஜராஜசேதியராயன்' என்பனபோன்ற பெயர்களிற் கண்டுகொள்க.

3. இவ்விடத்தில் இவன் புகழை வடமொழியில் மூன்று அல்லது நான்கு ஸ்லோகங்களில் வரைந்துள்ளது. அவற்றுள் ஒன்று அடியிற் காட்டியுள்ளேன்.

வீரமாகதன்ஜயத்யவௌவா ணவம்ஶேந்து: |
க்ஷிதௌக்ஷத்ராணாம் ஜதியஸ்யாஹித்யா ||
த[த்வ]து ஹாஸாந்து ந நேத்ரவாமௌஷ்க
வொரகந்யவ நா............,,—

சோழசக்கரவர்த்திகளின் சார்வபௌமத்துவம் மூன்றும் குலோத்துங்கன் காலத்திற் பலஹீனமடையத் தொடங்கிற்று. இவ்வரசன் தம்பெரியோரால் வைக்கப்பெற்ற பெரியநாட்டை ஆண்டு நிர்வகிக்கச்சக்தியற்றவனுனன்.[4] இதையறிந்துநாளடைவிலேயே சிற்சில சிற்றரசர்கள்சுயேச்சையடையமுயன்றூர்கள். ஆயினும்பெரும்பாலார்தொன்றுதொட்டுத்தங்களுக்குஎஜமானர்களாயிருந்த சோழவம்சத்தவரிடம் நன்றிபாராட்டி வந்தார்கள். மேற்சொன்னவாறு சக்கரவர்த்திக்கு விரோதஞ்செய்த மகதைநாடாழ்வானுன வாணகோவரையன், குலோத்துங்க சோழவாணகோவரயன், இராசஇராசகாடவராயன் என்னும் இம்மூவருடன் தாம் எவ்விஷயத்திலும் சேர்வதில்லையென்றும்இவர்களிடமிருந்து கடிதம்முதலியவைவந்தால் அவற்றைச் சக்கரவர்த்தியிடம் சேர்ப்பிக்கவேண்டும் என்றும் இவர்களுக்கு ஆளோலை போகக்காட்டல் முதலிய செய்யக் கடவரல்லர் என்றும்

---

4. இத்தௌர்பல்லியம் இவ்வரசன் மகனுகிய மூன்றும் இராஜராஜன் காலத்து இன்னமும் அதிகரித்தது. அப்பொழுது பராக்கிரமசாலியாயிருந்த பல்லவ சிற்றரசனுகிய அவனியாளப்பிறந்தான் கோப்பெருஞ்சிங்கனென்பான், அரசனை அவன் பெண்டுபிள்ளைகளோடும் பிடித்துச் சேந்தமங்கலத்தில் (தென்ஆர்க்காடுஜில்லாவில் திருவயிந்திரபுரத்தின் பக்கத்துள்ளது) சிறையில் வைத்துத் தான் சக்கரவர்த்திப்பட்டம் தரித்துக்கொண்டான். இதைக்கேள்வியுற்ற மற்றொரு சிற்றரசனுகிய போசள வீரநாரசிம்மதேவன், அப்பண்ணன், சமுத்திர கொப்பய்யன் ......என்னும் தண்டநாயகரை யேவி அரசனைச்சிறைமீட்டுச் சிங்காதனத்தில்வைத்துவரச் சொன்னுன். இவர்களும் எள்ளேரி, கல்லியூர்மூலை, தொழுதகையூர், தொண்டைமானல்லூர் திருப்பாதிரிப்புலியூர், திருவதிகை, திருவக்கரை என்னுமிடங்களில் கோப்பெருஞ்சிங்கன் முதலானோர் சேனைகளை முறியடித்து இராஜராஜனையும் சிம்மாசனத்திலிருத்தி மீண்டார்கள். இச்சண்டையில் சிங்கள தேசத்தரசனுன பராக்கிரமபாஹுவு, இவன் தண்டநாயக்கர்கள் நால்வரும் சோழகோன், கொள்ளிசோழகோன், வீரகங்கநாடாழ்வான், சீனத்தரையன் என்பவர்களும் சேர்ந்திருந்தார்கள். இவர்களில் பராக்கிரமபாஹுவும் இவன் தண்டநாயகர்களும், வீரகங்கநாடாழ்வானும், சீனத்தரையனும் மடிந்தார்கள்.—எபிகிராபியா இண்டிகா தொகுதி. 7. (எபிகிராபியா கர்னுடிகாவின் துமகூர் ஜில்லாத் தொகுதியில், குப்பிதாலூகா சாசனங்களில், 45-ம் நிம்பரையும் பார்க்க).

சேனாதிபதியான கிளியூர் மலையமான்பெரியுடையானான ராஜராஜ சேதியராயனும் மற்றும் ஒன்பதின்மர் சிற்றரசரும் கூடி நிவந்தம் செய்துகொண்டார்கள் என்றும் திருவண்ணாமலையின் மற்றொரு சாஸனம் கூறுகிறது. ஆதலால் முதன்முதல் குலோத்துங்கன் அரசாட்சியிற் சரியாய் நடந்துவந்த ராஜராஜவாணகோவரையன், பிற்படஅரசனிடம் அபராதப்பட்டான் என்று தெரியவருகிறது. மூன்றாங் குலோத்துங்கன் காலத்தில், பாண்டியரிருவரில் விவாதம் வந்து ஒருவருடன் ஒருவர் போர்புரிய, அதில் தோல்வியுற்றவன் ஈழவரசனிடம் துணைவேண்டிப்பெற்றுச் சண்டைசெய்துவர, மற்றவன் சோழனைத் தனக்குத் துணையாகக் கோர, அவன் தன் சிற்றரசர்களிற் சிலரை யனுப்பினனென்று ஆரப்பாக்கத்துச் சாஸனம் ஒன்றால் தெரிகிறது.[5] அப்பொழுது வாணகோவரயனும் போயிருக்கலாம் என்று இரண்டாஞ்சாஸனத்துக் கீழ்வரைந்துள்ள இரண்டாஞ் செய்யுளாலும், முதற் சாஸனத்து 2, 5, செய்யுட்களாலும் ஏற்படுகிறது. இவன் வடுகர்மேற் பொருது அவர்களை அற்றுப்போகும்படி தொலைத்தான் என்று முதற் சாஸனத்து 13, 14, 15 செய்யுட்களிற் காணலாம். வங்காரதுங்கன் என்னும் சிற்றரசன் இவனாற் கொல்லப்பட்டானென்றும்சொல்லியிருக்கிறது. வங்காரமுத்தரையனென்று இக்காலத்தொருவனிருந்தானென்பது பல சாஸனங்களினால் தெரியவருகிறது. அரசனுடைய சேனாபதியாகிய மலையமானை ராஜராஜவாணகோவரையன் எதிர்த்துப் பொருதான் என்று 12-ம் செய்யுள் கூறுகிறது. இதுவாணகோவரயன் அரசனுடன் முரணியபின்னரே நடந்திருக்கவேண்டும்.

திருவானைக்காவிலிருக்கும் ஓர் சாஸனத்தில் இவ்வாணனும், சீயன் உடைய பிள்ளையான அகளங்கநாடாழ்வாரும் ஒரு நிலைமை செய்துகொண்டார்கள் என்று சொல்லியிருக்கிறது. இதில் பின் சொல்லியவன் வம்சத்தவன் ஒருவனைப் பற்றின சாஸனம் மூன்று "செந்தமிழில்" விசுவாவசு வருஷம் வைகாசிமாசத்தில் ஸ்ரீமாந் எம். நாராயணசாமி ஐயரவர்கள் பதிப்பித்திருக்கிறார்கள். இச்சாஸனத்திற் குறித்திருக்கும் சீயன் உடைய பிள்ளையான அகளங்க நாடாழ்வானுக்கு இருப்பு, பாச்சிலும் திருவரங்கமுமென்று ஏற்படுகிறது.

---

5. எபிகிராபிஸ்ட்டாபீஸ் ரிபோர்ட் 1899-ளு 20-நம்பர்.

இராஜராஜ வாணகோவரயன் திருவண்ணுமலைக்கோயிலைப் பொன்வேய்ந்தான் என்று சாஸனங்களால் தெரியவருகிறது. அதையிட்டு இவனுக்குப் ‘பொன்பரப்பினுன்’ என்னும் காரணப்பெயர் வாய்த்தது. இவன் தாயார் பெயர்...................என்று திருப்பாலைப்பந்தலின் ஒரு சாஸனத்தில் கூறியுள்ளது.

சோழர்களாண்ட காலத்து நடுநாட்டிலிருந்த வாணவம்சத்தார்கள் பிற்காலத்து (அதாவது 15-வது சக நூற்றாண்டில்) பாண்டிய நாட்டில் திருமாலிருஞ்சோலையின் பக்கத்து ஆண்டார்கள் என்று மதுரை ஜில்லாவின் சில சாஸனங்களால் தெரிகிறது. ஒரு மாவலி வாணுதராயன், மணவாளமாமுநிகளுக்கு ‘முத்தரையன்’ என்னும் கிராமங்கொடுத்தான் என்றும் அதை அவர் முன்பெயர் தவிர்த்து அழகிய மணவாளநல்லூர் என்று பேரிட்டு பிராமணரைக் குடியேற்றினர் என்றும், இவ்வாணுதராயன் இவ்வாசாரியர்க்கு பல்லக்குத் தூக்கினுன் என்றும் பிள்ளைலோகஞ்சீயர்எழுதிய ‘யதீந்திரப்பிரவண தீபிகை’யில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவர்கள் பிற்காலத்து வைணவந் தழுவியிருக்கலாமென்பதற்கு ஆதாரமிருக்கிறது.

இச்சாஸனங்களின் செய்யுட்களைப் பிழையறச்செய்துகொடுத்த ஸ்ரீமாந் பண்டித. வே. சாமிநாதையரவர்களுக்கும், ஸ்ரீமாந்-பண்டித அநந்தராமையரவர்களுக்கும் மிகக் கடமைப்பட்டவனுயிருக்கிறேன். சாமிநாதையரவர்கள் தயவுசெய்து எழுதி விடுத்த திருத்தங்களை அடியில் ஆங்காங்குக் காட்டியுள்ளேன்.

சாஸனங்கள்.

[I*]

1. ஸ்வஸ்திஸ்ரீ பொன்பரப்பிநா[1]ணுன மகதைப்பெருமான் கவி ||

[நேரிசை வெண்பா*]

தாரு முடியு முரசுந் தமக்குரிய
பாரு முடன்பெறுவர் பார்வேந்தர்—[வீர]ப்
பெருமாள்[2] மகதேசன் பேரெழுதி[த்*] தத்தம்
திருமார்பி லாளோலை செய்து ||| (க*)

---

1. பரப்பினுனை 2. பெருமாண்

*

வன்மதுரை விட்டு வடகடல[ா]ன் மால்வழுதி
தென்மதுரை [வி]ட்டின்று தென்கடலான்—நன்னுதலாய்
மல்லார்தோள்[3] மாகதர்கோ மான்முனிந்தால்[4] மன்னவருக்
கெல்லாங் கடலோ விடம் ||| (உ*)

2 (விருத்தம்*)

ஆழந் தருகடல் வையத் தரசு செலுத்திய
செங்கோ லரசெல்லாம்
வேழந் தருகொடை வாண திவாகரன்
விதிமுறை செய்வது மெய்கண்டீ[5]
ரீழந் திறையிடு மாணிப்படி[6]
[யி]டுமின் தெனன ரிடீராகிற்
சோழன்[7] திறையிடும் யானைக் குங்களை
யிடுமென் றிருமிது சொன்னேமே. (ரு*)

(நேரிசை வெண்பா*)

பாரோங்கு கொற்றக் குடைவாணன் பல்புரவித்
தேரோன் திருவுத் திராடநாள்—பேருவமை[க்]
குன்றெடா மாலி[8]யானைக் கோவேந்தர் வீற்றிருப்ப
ரின்[றெ]டா னின்றெடா னென்று ||— (ச*)

தென்னர் முதலா வுலகாண்ட—
3 செம்பொன்முடி
மன்னர் பெருவாழ்வும் வாள்வலியு—மின்னு
முருவத் திகிரி யுயர்நெடுந்தேர் வாணன்
புருவக் கடைவளையப் போம் |||— (ரு*)

தியந்து [9] பொழிலாகா மிந்தி நகராகா
தா[*ர்]ந்து மணிநீர்த் துறையாகா—வேந்துமுலைப்
பூணாகா மாறி விழவாகா பொன்னெடுந்தேர்
வாணாகா வென்னுதார் மண்:— (சு*)

---

3. மல்லார்தோண்.
4. முனிந்தான்.
5 மெய்க்கண்டீர் ஈழந்.
6 படிமைகளிடுமின்.[வே.சாமி.]
7 சோழன்றிறை.
8 மால்யானை.
9 பேர்ந்து [வே. சா.]

பொருப்பிற் கரிய புகர்முகவெங் கூற்றின்
மருப்பிற் றுளைப்புண்ணை வாரா—திருப்பில்[10]
வடியுளவாஞ் செவ்வேல் மகதையார் கோமா
னடியுளவாம் வேந்தர்க் கரண்:— (எ*)

[பு]ரிந்த கனைகழற்காற்—
4 போர்வளவர் கோனை
வரிந்த திறைக்காக வாணு—தெரிந்தானை
வாங்கினு யென்று வழுதியர்கள்[11] தாங்கலங்கி
யேங்கினர் பாரிழுந்தோ மென்றுஃ— (அ*)

(கட்டளைக் கலித்துறை*)

முருகுந்து காஞ்சியும் வஞ்சியுங் கொண்டமொய் தார்மகதன்
திருகுங் கனைகழல் வீக்கிய நாள்சீ[12] பராந்தகனிற்
பெருகுங் குருதிப்பு [ன*]ல் [ப]ாய் தொறுப்பில வாய்மடுத்துப்
பருகுங் கழுதுடன் செம்மை கொண்டாற்[13]கு[ம்]பனிக்கடலே(கூ*)

மட்டி(யெ)யன் றேறிய தார்புனை வாண புரந்தரனீ[14]
வெட்டியன் றேகொன்ற [வே]வண்மணிப் பாடி யுதிரவெள்ளத்
தொட்
5 டியென் றேனுந் து[15]லைவதுன் டேது[15]லை யாதபந்தி
க்கட்டியன் றேதெவ்வர் பாய்பரித்தானை கலக்குவதே :— (ய*)

கோங்குங் கலிங்கமுங் கொண்டகண் டாகொடித் தேருதியர்
தங்கும் படிகொண்ட வாணுதி பாதணி யாததென்கொல்
பொங்குஞ் சினப்படை வங்கார தோங்கன் புரண்டுவிழ[ச்*]
செங்குன்ற மின்று பிணக்குன்ற மாக்கிய தேர்மன்னனே :— (யக*)

(விருத்தம்*)

(தோழிவம்பென்றல்*) [தன்

வாரொன்று முலையாய்மற் றவரொன்றும்பழுதுரையார் மகதை வேந்
போரொன்றுபுரியாமுன்பெரியகுறிஞ்சியிலெழுந்தபுகையேகண்டாய்
காரன்று

10. வாராதிருப்பின்.
11. வழுதியர்கடாங்கலங்கி
12. நாட்சீ.
13. கொண்டார்க்கும்
14. புரந்தரநீ
15. தொலை

6 கனலெரிவைய மின்னெ[16]ன்று தளரேலக் காரைக் காட்டி
லூரொன்று மதில்விழுந்த பேரொலியும் உ[17]ருமதிர்வ தொக்குங் கா
[ணே :—(யஉ*)]

(ஷை வேறு*)

முன்பொரு படைக்கடலை விட்டரச ரானூர்
மூலதன மும்பரியு முறைமுறைய [ளிப்]பார்[த்]
தென்பகைய டக்கியபின் வாணகுல தீபன்
செய்ததனி யா(ழ்)ண்மைவட திக்கிலறிகிற்[பா][18]
மின்பொருப்பரன் விடா மலைய மானைப்
போரயிலி[லே*]ல பொருத போதொரு பெரும்போர்
வன்பனை[க]தவிர்[த்]ததொரு குதிரைவலி யா[லே*]ல
[வடுகர்]பனை[க] தவி]ர்*] த்[த*]தொருகோலின்வலி
[யாலே:—(யங*)]

(நேரிசை வெண்பா*)

மண்ணாள் திகிரிக்கைவா—
7 ணான் வடுகேறிந்த
எ[19]ண்ணுபிரஞ்சூழ்ந்த எண்டிசையும்—புண்வடி[20]ந்த
நீரை[21] நீர்(க்)காக நிழலே நிழல்நெடும்பேய்த்
தேரேதேர் செஞ்சேறே சேறு :— (யச*)

(கட்டளைக்கலித்துறை*)

[எ]ண்மேன் மிரும்பரித் தேர்மக தேச விகல்விசையப்
பெண்மேல் விரும்பிவெம் போர்செய்த நாட்பின் குடா[22]வடுகர்
விண்மேல் நடந்து வடுகென்னு நாமம் விலக்குண்டபின்
மண்மேல் நடந்தது தேசிமுன் னைன வடுகொன்றுமே :— (யரு*)

(நேரிசை வெண்பா*)

சூழும் பிணவணைமேல் தோய்கழுகின் பந்தற்[23]கீழ்
வீழுங் கழுதினங்கள் பெய்காப்ப—

---

16. மின்னென்று
17. பேரொலியுமுருவதிர்
18. வடதிக்கிலறைகிற்பாம் பொன்பொரு பொருப்பரண். [வே. சாமி.]
19. வடுகெறிந்தவெண்ணுயிர.
20. புண்வார்ந்த-[வே.சாமி.]
21. நீரே.
22. கொடா
23. பந்தர்க்கீழ்

8 வாழுந்தன்
தொன்னகரே போல்வடுகர் துஞ்சத் துயிற்றியதே
மன்னவர்கோன் மாகதர்கோன் வாள் :— (யசு*)

(விருத்தம்*)

ம(ண்)[24]டலளவு நிறைந்தொழுகு மதுமலர்த்தார்
மகதேசன் வை(ய்)யங் காக்கும்
அட[ல்*]வினவி லணிநெடுந்தேர் ஆய்
[மலர்த்தா]மனே வணங்கா வரசரியாவர்
கடலளவு நடந்தவன் [குரக்[25]கு]
மவன்றன் கதிர்வேல்[26] மன்ன
ருடலளவு நடந்ததுமற் றுலகளவு
[நட]ந்ததவ ளொருசெங் கோலே :— (யஎ*)

(நேரிசை வெண்பா*)

தேற்[27]கொடி மாமறுகில்[28] தெண்மணலைச் சேயிழையார்
மாற்[29]கு மருந்தாக்க வல்லவா[ம்*]—யாற்[30]கு
முயிராய செங்கோ லுயர்—
9 நெடுந்தேர் வாண
னயிரா வதத்தி னடி :— (யஅ*)

(விருத்தம்*)

சொல்லி விடுசெரு பினவர் [சூ]ழு முரிமைகொ டாழ்கட
லெல்லி விடுப[ட] வேறுவ ரேனுமி யமபுரி யேறுவ[ர்*]
கொல்லி விடு[முத காதிபா] கூளி கருதி[31]ல ரூர்புக
வல்லிவிடும்[32] அயிராவதம் வாணன் வரவிடு நாளையே :—உ (யகூ)

---

24. மடலளவு.
25. நடந்தவனுக்கினைச் சக்கர -[வே. சாமி.]
26. கதிர்வேன்.
27. தேர்க்கொடி.
28. மறுகிற்றெண்.
29. மார்க்கு.
30. யார்க்கு.
31. கருதல.
32 விடுமெயிராவதம்.

(நேரிசை வெண்பா.*)

வேளை (ெ)நடுங்கல்லும் வெட்டும்வீ ரற்கு[33]கையும்
மூளை தெறிக்கு முடித்தலையு—நாளை
மதிவா ணுதல்மடவாய் காணலாம் வாண
னதிவா ரணன்தொடர்விட் டால்:— (உய*)

(II*)

1 ஸ்வ[ஸ்தி ஸ்ரீ]பொன்பரப்பினானை மகதைப்பெருமாள் கவி:—

2 (கட்டளைக் கலித்துறை*)

நாமான்[1] அரவிந்தமாங்[2]விந்தமாங்[3]முடி நாகர்சென்னிப்
பூமா[ன்*]விரும்பும் புகழ்மக தேசற்குப் போர்வழுதி
3 வாமா னி[4]றையிட்ட வன்[5]னாள் துடங்கி அவ்வானவர்தங்
கோமான் றனதென் றிரான்[6] அமராபதிக் குஞ்சரமே. (க*)

(வெண்பா*)

4 மேருவின்மேல் வென்று கயல்பொரித்த வார்த்தையிலும்
வாரிபட வேலெறிந்த வார்த்தையிலும்—கார்விலங்கு
முன்னிட்ட வார்த்தையிலுந் தென்னவர் மாகதற்[க்குப்]ப்
பின்னிட்ட வார்த்தை [பெ]ரிது. (உ.*)

து. அ. கோபிநாதராவு.
திருவல்லிக்கேணி.

---

33. வீரக்குகையும்-[வே. சாமி.]

1 நாமானரவிந்த·

2 ·மான்.

3 ·மான்.

4 வாமான்றிறை.

5 ·வன்னாடொடங்கியவ்வான.

6. றிரானமராபதி

பாலமுது.

(ஈஅஎ-ம் பக்கத்தொடர்ச்சி.)

பால்வெண்ணிறம்பெற்றிருப்பதற்கு அதன்நிணமே காரணமாகும். மற்றும், ஓர் தெளிவானகண்ணாடிப்புட்டியில் நீரைவிட்டுப்புட்டியின் ஓர் பக்கத்திற்கைவிரலைக்கொண்டு அதற்கெதிராகவுள்ள பக்கத்தினின்று நீரின்மூலமாக விரலைப்பார்த்தால் விரல்கண்ணுக்குப்புலப்படும். அதைப், புட்டியில்பாலைக்கொட்டி நிரப்பியபின் பார்த்தால் கைவிரல் தோன்றுவதில்லை. கண்ணாடியின்மூலமாகப்பொருள்களைப் பார்க்கவல்லோம். அவ்வாறே சில உலோகங்களை மெல்லியதகடாகவடித்தபின் அவைகளின் வழிப்பார்ப்பின் பொருள்கள் சற்று விளங்குபவையாயுள்ளன. இவ்வாறு தமதுமூலமாகப்பொருள்களைத் தோற்றத்திற்கெதிர்ப்படுத்தக்கூடியவைகளைமூலத்தோற்றத்திற்கான பொருள்களென்று (Transparent bodies) கூறத்தகும். தோற்றத்தைத்தடுக்கும் பொருள்களை மூலத்தோற்றத்திற்காகாப் பொருள்களென்று கூறத்தகும் (opaque bodies). சுருக்கிச்சொல்லின் முதலதைத் தெளிவாகவும் பின்னதை மங்கலாகவுங்கூறலாம்.

பாலின் நிணமானது மங்கலாகவும் (opaque) ஒளியைத்திருப்பிச்செலுத்தவல்லதாகவும் (refracting light) பார்க்கிறோம். ஆதலாற்றான் பால் வெண்ணிறம்பொருந்தியுள்ளது. இத்தகையபாலின் நிணத்தைப் பாலினின் றெடுத்தபிறகு அதன் ஜலபதார்த்தம் வெண்ணிறமற்று நீர்போலுள்ளது. எப்படி நமதுஉடலினது இரத்தத்தினின்றும் சிவப்பு நிறங்கொடுக்குமோர் இரும்புகலந்த பொருளை (Hæmoglobin) நீக்கிவிடின் இரத்தம் நீர்போற்றங்கவல்லதோ (blood plasma) அவ்வாறே பாலினின்றும் வெண்ணிறத்திற்குக்காரணமாகிய அதன் நிணப்பொருள்நீங்க, பால் நீர்போலக்காணவல்லது (milk plasma). ஆதலால் சிறந்ததோர் பசுவின்பாலானது தகுந்த வெண்ணிறத்தையும் மிக்கமங்கலையும் கொண்டிருக்கவேண்டும். அவ்விதமின்றேல் பாலில்நீர்கலந்திருத்தல் நிச்சயிக்கலாம். இடையர்கள் பாலினதளவைப் பெருக்கவெண்ணிப் பால்கறக்கச்சற்றுமுன்னமே

பசுவிற்குத் தண்ணீரையூட்டிவருவதுண்டு. இது செய்யின் பாலில் நீரினது அளவுமிகுந்து நிணத்தினது அளவுகுறையும்.

பாலில் வெகுவளவு நீராகவேயுள்ளது. டாக்டர்வாயல்கர் துரை அவர்கள் (Doctor Voelcker) இரசாயனபரீக்ஷையினால் 100-பங்கு பாலில் ஏறக்குறைய 93-பங்கு நீராகப்பார்த்து நிச்சயித்திருக்கின்றனர். ஆதலால் பாலில்நீரானது அதிகரித்திருப்பின் அப்பாலைச் சிறந்ததாகக்கொள்ளலாகாது. பாலினது கனத்தை அதாவது அதன் நீரினதுசிற்றளவை (Minimum percentage of water) ப்பரிசோதிக்க ஓர்வகைக்கருவியுண்டு. அதன்பெயர் பாலைப்பரீக்ஷிக்குங்கருவி (lactometer) யென்பது.

நாம் தினந்தோறும் உட்கொள்ளுமுணவானது ஆகாரப்பைமுதலியவற்றையடைந்து இரத்தத்திற்கரைந்து சரீரத்திற் பரவவல்ல பக்குவத்தையடைய, கடையில் ஆகாரமானது உடலிற்பொருந்திவலிமையைக்கொடுப்பதாயுள்ளது. உடலில் அவ்வவ்விடத்தில்ஜீவாதாரப்பொருள்களைக்கொடுத்து இரத்தம்செல்வதுமன்றி அவ்வவ்விடத்துண்டாம் கழிவுப்பொருள்களையும் கொண்டு அது வீடுகளிலுள்ள சாக்கடையைப்போல் ஓடுவதாயுமுள்ளது. ஆதலால் நாமுண்ணுமுணவினுடைய சுத்தக்கரி, ஜலவாயு, பிராணவாயுவாகிய இவைகள்தேகத்தில் ஒன்றுசேர்ந்து நீராகவும், கரிமலவாயுவாகவும்(carbon dioxide) பிரிகின்றன. பிராணவாயுவும், ஜலவாயுவுஞ்சேர்ந்து நீராகின்றன. சுத்தக்கரியும், பிராணவாயுவுங்கூடிக் கரிமலவாயுவாகின்றன. நீரானது தேகத்தைவிட்டுப்பலவாறாக வெளியாகின்றது. நாம் வெளியேவிடும் சுவாசத்திற்கரிமலவாயுவும், நீராவியுங்கலந்துள்ளன. உடற்றோலினின்றும் வெளியாம் வெயர்வையில் மெழுகுபோன்றதோர் பதார்த்தத்துடன் (Sebaceous matter) நீர்கலந்துள்ளது. மற்றும் கழிவுப்பொருள்களில் நீர்திரண்டிருக்கவுங்காண்கிறது. ஆதலால் அன்னத்துடன் நாம்உட்கொள்ளுந்தண்ணீரெல்லாம் பலவாறாகத்தேகத்தைவிட்டுவெளியாகப் பார்க்கிறோம். அவ்விதமே பாலின் கண்ணதாகிய நீரெல்லாம் தேகத்தினின்று வெளியாகத்தக்கதாகையால் அதன் நீரை உணவுடன் உட்கொள்ளத்தக்க நீரிற்கொப்பிட்டுக் காணத்தகும். மற்றும் பாலின் ஊனது (fat-நிணம்) மேற்கண்ட மூன்று வகை

ப்பொருள்களையும் அதாவது சுத்தக்கரி, ஜலவாயு, பிராணவாயு வாகிய இவைகளைப்பெற்றுள்ளதாக முன்னமேயே சொல்லிவந்தோம். ஆதலால் இவையும் மேற்கண்டபடி நீராகவும், கரிமலவாயுவாகவும் பிரிந்து வெளியேசெல்லவல்லவையென்று அறியலாகின்றது.

நாம் உட்கொள்ளுங் சுவாசத்தின் வழியினாலே வாயுவானது (oxygen) கலந்து வருகின்றது. உட்கொள்ளும் காற்றில் பிராண வாயு சுத்தமாயுள்ளது (pure oxygen). இத்தகைய பிராணவாயு உடலின் கண்ணுள்ள உணவினது சுத்தக்கரி, ஜலவாயு ஆகிய இவைகளுடன் வேண்டியவளவு கலந்து நீரையும், கரிமல வாயுவையுமுண்டாக்கக் கரிமலவாயு இரத்தத்தினுட்சென்று முக்கியமாய் வெளிச்சுவாச மூலமாகத் தேகத்தைவிட்டுவிலகுகிறது. அவ்வாறே பாலினது ஜல வாயுவும், சுத்தக் கரியும், வேண்டுமளவு பிராண வாயுவுடன் கலந்து வெளியாகத்தக்கவை. பிராணவாயுவானது, சுத்தக் கரி, ஜலவாயு இவைகளுடன் தக்கபடி கலந்து கரிமலவாயு, நீர் இவைகளை உண்டாக்குங்கால் உஷ்ணமுண்டாகுதலின் தேகத்தி லெப்பொழுதும் சற்று வெப்பமிருக்க வுணர்கிறோம். நாம் வெளிவிடும் சுவாசமானது வெப்பமாக விருக்கின்றது. இதன் காரணம் முன் கூறியதேயாகும். மனித வுடலினும் மிருகவுடலினும் வெப்பமுண்டாக்குவது அவ்வவ்வுடலின் நிணமே யாகும். ஆதலால் நிணமானது தேகவுஷ்ண முண்டாக்கும் பொருளாம். இந்நிணத்தை மெழுகுவத்தியின் மெழுகுக்கொப்பிட்டு நமது ஜீவ வொளியை நிலைபெறச் செய்வதாகக் கொள்ளத்தகும்.

தேக வளர்ச்சியை முழுதும் பெற்றுப் பக்குவமாகசவுக்கிய மடைந்துள்ளவோர் மனிதனது தேகத்தை அடியில் வருமாறு தேர்ந்து கொள்ளலாகும். இவ்வளவுகள் கவனிக்கத்தக்கவை.

அவனது உடற்பளுஉத்தேசம் 154-பவுன். இத்தகையவுடலின் கண்ணுள்ள உத்தேசப் பிரமாணங்களையும் ஒருவாறளடுத்துச்சொல்லத்தகும். அவை நூற்றுக்கு :—

(1)	தசையும் தசைநாரும் (Muscles and Tendons)	41

*

(2)	எலும்புக்கட்டிடம் (Skeleton)	16
(3)	உடற்றோல் (Skin)	7
(4)	நிணம் (Fat)	18
(5)	மூளை (Brain)	2
(6)	மார்பினுட்புற அங்கங்கள் (Thoracic Viscera)	2
(7)	வயிற்றினுட்புற வங்கங்கள் (Abdominal Viscera)	7
(8)	இரத்தம் (Blood)	7
	மொத்தம்	100

இத்தகைய வுடலிலுள்ள இரத்தம் மொத்தவளவில் ஒருகாலன் (Gallon) அதாவது ஏறக்குறைய 3—படிக்கதிகப்பட்டுள்ளது. இவ் விரத்தத்தினது பளு உடற்பளுவில் 14-இல் ஒன்றாகும். மேற்கண்ட வளவுகள் ஹக்ஸ்லீ (Professor Huxley) துரையவர்களிட்டவண்களாம்.

மேற்கண்ட கணக்கில் உடற்குரிய நிணம் காற்பங்களவுக்குச் சற்றுக் கீழதாகப் பார்க்கின்றோம். ஆதலால் உடல் நிணம் அவ்வளவிற்கதிகமாயினும் குறைவாயினும் தேகம் சவுக்கியத்தில் மட்டுப்படும். உடலது வெப்பத்தைச் சரிவரக்காண அவ்வளவு நிணம் உடலில் வேண்டுகின்றோம். ஆதலால் வேண்டுமளவு நிணங் கொள்ள ஊனுள்ள ஆகாரத்தை உட்கொள்ளவேண்டும்.

(இன்னும் வரும்.)

செ. வீ· இராஜகோபாலாசாரி.
நார்மல் ஸ்கூல், மதுரை.

சிவமயம்.

உயிர்.

உயிருண்மைக்குப் பிரமாணம்.

க. உயிரென்பது சூன்யமென்றாலென்னையெனில், அவ்வாறு இல்லையென்கின்ற அறிவுடனே சொல்வதொன்றுளதாய் நிற்றலால், அது சூனியமன்றென்க.

உ. உடம்பே உயிரென்றாலென்னையென்னில், உடம்பினிடத்தே நின்று, யானென்றும் எனதென்றுஞ் சொல்லப்படுஞ் செருக்கைப்பொருந்துதலால், உடம்பு உயிரன்று, உடம்பின் வேறாயுயிரென்பதொன்றுண்டென்க;

உடம்பின் வேறாயுயிருண்டென்பானேன்? இந்த உடம்பு தானே அறியுமென்றாலென்னையெனில், அவயவங்களிலொன்றுங் குறைவின்றிப் பிணமாகக் கிடக்கும்போது அவ்வுடம்பிலே அறிவில்லை ஆதலால் உடம்பு உயிரன்றென்க;

பிணமாகக்கிடக்கும்போது இவ்வுடம்பினுள்ளே பிராணவாயு நீங்கினபடியால் அறிவுநிகழாதென்பாயாயின், நீயுயிரெனக்கொண்டவுடம்பிற்குக் காரணமாயிருக்கின்ற பூதங்களின் கூட்டங்களிலே ஒன்றாயினுங் குறைவின்றிக் கிடக்குமுறக்கத்தினும் பிராணவாயு நிகழ்ந்திருந்தும் அறிவில்லையாதலால், உடம்பு உயிரன்றென்க.

ங. மெய், வாய், கண், மூக்குச், செவிகளினிடமாயிருக்கின்ற ஐம்பொறிகளே உயிரென்றாலென்னையெனில், இவைகள் ஞானேந்திரியமாதலின் ஞானமாத்திரையன்றி, ஞானங் கிரியை யிச்சையாகிய மூன்றையுமுடைமையால், ஐம்பொறிகளுயிரல்லவென்க.

பிணமாகுங்காலத்திற் கெடுவதாகிய ஐம்பொறிகளே இவ்வுடம்பினின்று நனவிலேயறியும் உறக்கத்திலே அறிதலின்றி யொடுங்கிநிற்கு மென்றாலென்னையெனில், நனவிலே அவ்வைம்பொறிகளறிவதும் ஒவ்வொரு பொறியாக அறிவதன்றி அவைகளொருங்கே யறியமாட்டாவென்க. ஒன்றொன்றாக வறிவதே அவ்வைம்பொறிகளியல்பென்பாயாயின், அவ்வாறாயினும் அவ்வைப்பொறிகளிலே ஒரு

பொறி யறிந்ததை மற்றொரு பொறி யறியமாட்டாது, ஆதலால் அவ்வைம்பொறிகளாலும் ஐம்புலன்களையுமறியத்தக்கதொன்றுண்டு அதுவே உயிரென்க.

௪. மனம், புத்தி, ஆங்காரஞ், சித்தம் என்னு நான்காகிய அந்தக்கரணங்களே அறியுமுயிரென்றாலென்னையெனில், இவ்வந்தக் கரணங்களுமுற்கூறிய ஐம்பொறிகளைப் போலவே ஒன்றனையொன்றுணரமாட்டா; ஆதலால் உயிரானது இவற்றின் வேறாகி யானெனதென்னுஞ் செருக்கு அதற்கேதுவாகிய *ஆணவமலத்துடனியைந்து நிற்குமாகலால், அவ்வந்தக்கரணங்களாலாகிய நான்கு தொழிலையும் அவற்றோடு கூடியறிந்து, அவற்றையடக்கவேண்டும் போது சொப்பன முதலிய அவத்தைகளிற் செலுத்தி [1]யுட்கருவியாக்கி, அவற்றையாக்கவேண்டும்போது சாக்கிராவத்தையிற் செலுத்திப் [2]புறக்கருவிகளிற் போக்கி வேறு வேறு அவத்தையுற்று நிற்கும். ஆதலால்உயிர் அவ்வந்தக்கரணங்களின் வேறென்க. இனி இவ்வந்தக்கரண நான்கும் ஒரு விஷயத்தை யறிதற்குக்கருவியாகப் பொருந்தி உயிரோடொற்றித்து நின்று நிகழ்வனவாம்; இவைகள் கண்ணுக்குவிளக்குப்போல உயிர்க்குக் கருவியாய் வேறு நிற்பனவென்றறிந்து நீங்கிநின்று இவற்றைக்கொண்டறியுங் கருத்தாவாகிய உயிருண்மையை யுணர்ந்தவரே ஆன்ம சொருபத்தையுணர்ந்தோராவர். இங்ஙன மறியுமறிவே பசுஞானமென்க; இதனைத்தருவது சிவஞானம்; அது பின்னர் வரும்.

இவ்வந்தக்கரணங்கள் நான்குடன் புருடதத்துவ மொன்று கூட்டி ஆகவைந்தினையும் ஆங்காரம், புத்தி, மனம், சித்தம், [3]உள்ளம் என்றிம்முறையே வைத்து, இவற்றினைச்செலுத்தும் அக்கரங்கள் முறையே அகரமும், உகரமும், மகரமும், விந்துவும், நாதமுமென [4]ஐந்தாகக்கூறி, இவ்வைந்தக்கரங்களையுஞ் செலுத்தும்

---

*ஆணவமலம் இன்னது என்பது சிவஞானசித்தியாரிலிரண்டாஞ் சூத்திரத்தாற் காண்க.

1 உட்கருவி | சிவ—இரண்டாஞ்சூத்திரத்திற்காண்க.
2 புறக்கருவி |
3 உள்ளம்—புருடதத்துவம்.
4 இவ்வைந்தக்கரமுஞ்சமட்டியிற்பிரணவமாம்.

அதிதேவதைகள் அயன், அரி, அரன், மகேசன், சதாசிவன்-ஐவரெனக்கூறி, இம்முத்திறத்தைந்துடன் ஆன்மா இயைந்தவழி அறிதற்பயனுறுமென்றும், இயையாதவழிச் சடம்போல அறிவில்லாததேயொக்குமென்றும், இவ்வியல்பெல்லாம்இருவகைச்சுவாசமுமடக்கிச் செய்யும் யோகப்பயிற்சியிலினிது விளங்கு மென்றுங் கூறினர்; சிவஞான சித்தியாரிற் காண்க.

ரு. முற்கூறிய கருவி கரணங்கள் முதலிய அனைத்துங்கூடிய கூட்டமாகிய சமுதாயமே உயிர் என்றாலென்னையெனில், அவையெல்லா நீங்கிய நிலையாகிய துரியாதீதத்திலே யுளதாதலால், சமுதாயம் உயிரன்றென்க. துரியாதீதத்திலே யுயிருண்டென்பது விழித்தபின்னர்ச் சுகமாகத் துயின்றேன் என அறிவு நிகழ்தல்பற்றித் தெளிந்துகொள்க. இவ்வாறன்றி முற்கூறிய கரணங்கள், அக்கரங்கள், அதிதெய்வங்களாகிய பலபொருட்கூட்டமே உயிர்வடிவமென்பாயாயின், ஆராய்வார்க்குக் கூட்டமென்றொரு பொருளில்லையாகி அப்பலபொருளே உண்மையாகத் தோன்றுதலால் அக்கூட்டமென்பது உயிரன்றென்க.

கூடுதலாகிய அவை பதினைந்துமே உயிர் என்பாயாயின், அறிவோரெல்லார்க்கும் அப்பதினைந்தும் அறிபவனாகிய ஆன்மா வேறாகவும் அறியப்படும் பொருளாகிய அப்பதினைந்தும் வேறாகவும் விளங்குதலால் அவை உயிரன்றென்க.

சா. சூக்குமவுடம்பே உயிரென்றாலென்னையெனில், அச்சூக்குமவுடம்பு கனவுடம்பெனக் கூறலாற், கனவின் மாத்திரமறியவேண்டும். அவ்வாறன்றிக் கனவிலே அறிந்தவிடயத்தைச் சாக்கிரமாய நனவிலேயறிந்து நிற்பதாற், சூக்குமவுடம்பு உயிரன்றென்க. சூக்குமவுடம்பாவது மனநிதன்மாத்திரைகளாம். (சிவ - இரண்டாஞ் சூத்திரத்திற் காண்க.)

எ. பிராணவாயுவே உயிரென்று லென்னையெனின், கருவிகளொடுங்கின விடத்தே பிராணவாயு இயங்கி நிற்பதால் அப்போது அனுபவியாது, கருவிகளொடுங்காது விழித்தபோது இன்பத்துன்பங்களை யனுபவித்து நிற்றலாற், பிராணவாயு உயிரன்றென்க.

பிராணவாயு அடங்குதலும் விடுதலுஞ்செய்தாலே அறிவு நிகழக் காண்பதனால், அப்பிராணவாயுவே முற்கூறிய ஐம்பொறியையுங் கொண்டறிவதாகியவுயிர் என்பதுபொருந்தும். உடம்பிலே உறக்கத்தில் அப்பிராணவாயு இயங்கினும் அங்கே கருவிகளில்லாமையால் அறிவில்லையாகி அறியாதாயிற்று என்பாயாயின், அது பொருந்தாது; அறியப்படுங்கருவிகளையுடைய கர்த்தா அப்பிராணவாயுவாலால், அப்பிராணவாயுவாகிய கர்த்தா இருக்கும்போது அக்கருவிகள் அக்கர்த்தாவைவிட்டு நீங்குதல் கூடா. அதலால், அக்கருவிகளையடக்குதலும் விடுதலுஞ்செய்து அப்பிராணவாயுவையுங்கொண்டு அறிவதாகியவுயிர் வேறுண்டென்க.

அ. பிரமமே உயிரென்றாலென்னையெனில், அறிந்தாங்கறிதலின்றி ஐந்தவத்தைப் பட்டறிதலானும், அறிவிக்கவறிதலானும், பிரமமுயிரன்றென்க.

இனி ஆன்மவிலக்கணம்.

க. சீவான்மாக்களெல்லாம் பிரமப்பொருளின் பரிணாமமாய்த்தோன்றி, அறிவிச்சைசெயல்களையடைந்து தீயுஞ் சூடும்போலப் பேதாபேதமாகிய குணகுணித்தன்மையுற்றுப் பலவேறுவகைப்பட்டு நிற்குமென்றாலென்னையெனில், அவ்வாறாகிய சீவான்மாக்களுக்குப் பொறிகரணமுதலிய கருவிகளைப்பொருத்தினாலன்றி அறியமாட்டாமைக்குக்காரணம் யாது? அதனால் அது பொருந்தாதென்க.

(இன்னும் வரும்).

இங்ஙனம்

இராமசாமிக்கவிராயர்.
சேற்றூர்ச்சம்ஸ்தான வித்துவான்.

புத்தகக்குறிப்பு.

சிவத்தலமஞ்சரி:—இஃது, இப்புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திற் சிவபெருமான் திருக்கோயில்கொண்டருளும் ஆயிரத்தெட்டுத் திருப்பதிகளுள் தேவாரப்பாடல்பெற்ற இருநூற்றிருபத்துநான்கு ஸ்தலங்களின் பெயர், இடம், அவற்றின்மார்க்கம் முதலிய விசேடங்

களை நன்கு விளக்கி எழுதப்பெற்றது. தலவிசேடங்கள் தெரிய விரும்புவோர்க்குஇது பெரிதும்பயன்படத்தக்கது. இந்நூல், சிறந்தகாகிதத்தில் அழகாகஅச்சிடப்பட்டிருத்தல் இதனைப்பலரும் அவாவுதற்கு மற்றோர் காரணமாகும். சைவாபிமானிகள் ஒவ்வொருவர் கையிலும் இது தவறுதிருத்தற்குரியது. இஃது எழுதியோர் பென்ஷன் டிஸ்டிரிக்ட் முன்சீப் வடக்குப்பட்டு ஸ்ரீமாந்-வ. த. சுப்பிரமணிய பிள்ளையவர்கள். இவர்கள் தம் இளைப்பாறுங்காலத்தை ஜனோபகாரமான இத்தகைய நல்வழியிற் செலவிடுதல் நாமெல்லாம் மகிழ்ந்து புகழத்தக்கதாம். இப்புத்தகவிலை அணா-6.

சுதேசி:—இப்பெயர்பெற்ற வர்த்தமானபத்திரிகையொன்று ஏறக்குறைய ஓராண்டாகச் சென்னையினின்று வாரமிருமுறை வெளிவருவதென்பது நம்மவர் பலரும் நன்கறிந்தது. இது தொடங்கப்பெற்றுச் சிலகாலமேயாயினும், இதனால் தமிழர் அடைந்துவரும் தேசஞானம் பெரிதாகும். இதனாசிரியர் உலகவறிவு நிரம்பவுடையராய் அவ்வக்காலங்களில் எழுதிவரும் அரும்பெரும் விஷயங்கள் தேசத்தவர்க்குப் பற்பல நன்மையை விளைத்திருக்குமென்பதில் ஐயமில்லை. வர்த்தமானபத்திரமென்று தமிழ்நாட்டில் உலவுவனவற்றிற் சுதேசமித்திரன், சுதேசிபோன்ற சிறுவிரல்விட்டெண்ணக்கூடியவைகளே, ஒழுங்காகவும் சுவாபிப்பிராயவன்மை பெற்றனவாயும், ஜனங்களுக்குள் மறைந்துகிடக்கும் ஒற்றுமையுணர்ச்சி, தேசாபிமான முதலிய அருங்குணங்களைக் கிளரச்செய்வனவாயுமிருந்து, பெரும்பயனளிப்பன. மேனாடு மகோந்நதநிலையில் வந்திருத்தற்குப் பற்பல காரணங்களுண்டாயினும், இத்தகைய பத்திரிகைகள் அதற்கு ஒரு முக்கியகாரணமென்பது திண்ணம். அந்நாட்டவர்போல் எல்லாரும் அதனை அபிமானிக்கும் அறிவுமுதிர்ச்சி நம்முள் இன்னும் பரவவில்லையாயினும், அந்நிலை வெகுவிரைவில் நந்தேசத்தையடையாமற்போகா. இச்சுதேசியின் அதிபர், இனிமையான செந்தமிழ்நடையில் ஒவ்வொருவரும் இன்றியமையாது தெரியவேண்டிய எத்தனையோ நல்லபிப்பிராயங்களை வெளியிட்டுவருவதோடு, பிறரெழுதும் சீரியவிஷயங்களாலும் பத்திரிகையைச் சிறப்பித்துவருகின்றனர். இவர் தம் நாட்டுக்குப் பேருபகாரம் புரிந்துவருதற்கு நம்மவர் செய்யுங்கைம்மாறு அள

விலதாக வேண்டுமாயினும் அத்தகையாளரை அம்முயற்சியில் மேலும் ஊக்கியுதவுதல் பலரும் இப்போது எளிதிற் செய்யத்தக்கதென்பதை நாம் வற்புறுத்துகின்றோம். இப்பத்திரிகையும் இதனதிபரும் என்றும் நின்றுநிலவத் திருவருள்பெருகுக.

சக்கரவர்த்தினி:—இது சென்னையினின்று மாதந்தோறும் வெளியேறும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. பெண்பாலாரின் அறிவுப்பெருக்கத்துக்கென்று தொடங்கப்பெற்றது. இதன் முதலிருபகுதிகள் கிடைக்கப்பெற்றோம். நம்நாட்டு மாதர்கணிலையைச் சீர்ப்படுத்தற்கென்றே எத்தனைபத்திரிகைகள் வெளியேறினும் அவை மிகையாகாவென்று பத்திராசிரியர் இப்பத்திரிகையின்முதற்பகுதியில் எழுதியது முற்றும் பொருத்தமேயாம். ஒருநாட்டின் சீருஞ்சிறப்பும் அந்நாட்டு மாதர்களைப் பொறுத்தே பெரும்பாலும் இருத்தலின், தேசநலத்தைக்கருதும் நன்மக்களெல்லாம் அதினுங்கவலை செலுத்தற்குரியர். இப்பத்திரிகை, பெண்பாலார்க்கு முக்யமாகத் தெரிய வேண்டிய பல இனிய வியாசங்களைத் தன்பால் நிரம்பவுள்ளது. இதுபோன்ற சிறந்த பத்திரங்களை நம் நாட்டுமாதர்கள் பெற்றுப் படித்துவரின் அவர்கள் இலௌகிக வைதிக ஞானங்களில் நல்லதேர்ச்சிபெற்று விளங்குவரென்பது திண்ணம். இதற்குச் சுதேசமித்திரன் பத்திராசிரியராகிய ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் முதலிய நல்லறிஞர்கள் விஷயமெழுதி வருகின்றனர். இதன் பத்திராசிரியர் ஸ்ரீ சி. சுப்பிரமணியபாரதியாரவர்கள். இப்பத்திரிகையை எல்லாரும் அபிமானித்து, அதனை நடாத்துபவர்க்கு ஊக்கமளித்துவர நம்மவர் கடமைப்பட்டவர்களாவர்.

பத்திராசிரியர்.

பிழைதிருத்தம்:—"பாரதகாலமுந்தமிழரும்" என யான்எழுதிய வியாசத்தில் "பாலைக்கௌதமனாரென்னும் பெயர்க்காரணம் இவர் பாடிய மூன்றாம்பத்து முழுதும் பாலைத் திணைபற்றி வருதல்பற்றியேயன்றி வேறன்று" என்றெழுதியது தவறு; அவ்வாசகத்தை அவ்வியாசத்தினின்று நீக்கிவிடுமாறு செந்தமிழறிஞர்களை வேண்டுகிறேன்.—மு. இராகவையங்கார்.

௪௭௨. வாளுமொரு தாய ரதிபத்தர் மாவடுமீன்
கோளுமிந கண்ணின் குலமன்றே—தாளிணையிற்

௪௭௩. பொய்யடிமை யில்லாப் புலமையோர் காடவர்கோன்
செய்யடிமைக் காரியார் சேக்கிழார்—மெய்யிற்

௪௭௪. பணிந்து பரமனையே பாடுவார் பாட்டி
னணிந்த சிவப்புவா யன்றே—மணந்து

௪௭௫. தருமுத்தி மெய்ஞ்ஞான சம்பந்தர் பந்த
ரருமுத்து வெண்முறுவ லன்றே—திருமூலர்

௪௭௬. மந்திரத்திற் கூறும் வரிக்குயிலுஞ் சண்டேசர்
தந்திரத்தி னோட்டுந் தடம்பாலு—மைந்தெழுத்தி

௪௭௭. னேயர் நீலகண்டப் பாண ரமைக்குழலுந்
தேனேய வீணைத் திறநெறியு—மூனுதிர்த்த

௪௭௮. காரைக்கா லம்மை கனியுமுன் கையுரைத்த
பாரைக்கா மூர்த்தியார் பைஞ்சாந்துஞ்—சேருந்

௪௭௯. தருணா வினிமையைந்துந் தன்மைய தொன்று
மருணா மொழிமொழி யன்றே—வருபவர்க்குத்

௪௮௦. துப்பமைத்து நல்குமொரு சூக ரெறிசூது
மப்பரைக்கை கூப்பு மடைகடு—மெய்ப்பொதுவின்

௪௮௧. வேண்டுமொரு கூற்றுவனார் மேன்முடியுங் கோன்முடியைத்
தீண்டு புகழ்த்துணையார் செங்குடமு—மாண்டைக்க

௪௮௨. ணன்போ மிழலைக் குறும்பரா ரூரர்க்கு
முன்பேர் மலையு முலையன்றே—பொன்போலு

௪௮௩. மானக்கஞ் சாறர் மகளளகப் பஞ்சவடி
ஞானக் கலையர் நறுந்தாம—மூன

௪௮௪. வினையர் மனக்கறுப்பு மிக்கோ ரொழுங்கு
மனைப வரிரோம மன்றே—புனையிழாய்

௪௮௫. தில்லையில் வாழந் தணர்நற் சிறப்புலியார்
வல்லையி லம்பர்ச்சோ மாசியா—ரில்லறத்து

௪௮௬. நாவற் சடையரிசை ஞானியார் பூசலார்
தேவத் திருமேனி தீண்டுநர்—நாவுரைக்குந்

(பா-ம்.) ௪௭௬. 'கூவும் வரிக்குயிலும்'
௪௭௯. 'அன்றே - கருணையினால்'
௪௮௦. 'துப்பனைத்தும்'
,, 'அப்பனையி லாளுடையார்க் காங்காயும்'
௪௮௨. 'அன்றே-வன்பான'
௪௮௪. 'வினையருள வாணவமும்'
௪௮௬. 'பூசலையார்'

௪. ௭. தங்கலையுஞ் சாலியரு ணேசனார் தாபதர்க்கு
வெங்கலை நெய்திழைக்கு மெல்லிழையுஞ்—செங்கணார்மு

௪௮௮. னுய்த்தநா னீலநக்கர் தேவி யுமிழ்சிலம்பி
வைத்தநூல் யாவு மருங்கன்றே—பத்திவிடு

௪௮௯. மல்கு லரனுணைக் கப்பூதி யார்மகத்தந்
தொல்கு மரவி னுருவன்றே—நல்வணிக

௪௯௦. ரம்பொ னமர்நீதி யார்கோ வணநிறுத்த
பைம்பொற் றராசு பரடன்றே—நப்பதிக்கே

௪௯௧. தண்டி யடிக டடாகத்து நீலகண்டர்
மண்டி யிளமைபெறு வான்குளத்துங்—கொண்டவெழுத்

௪௯௨. தஞ்சு மியம்பிப் பசுபதியா ராழ்கயத்தும்
விஞ்சு முளரி விரிகோலஞ்—செஞ்சொல்

௪௯௩. படியு முகமு மிருகையும் பஞ்சுட்
டடியு முடன்சிறப்ப வன்றே—நொடியே

௪௯௪. திருவா திரைக்குநர சிங்க முனைய
ரொருவாத பாணர்க் குதியர்—சொரிபொன்னு

௪௯௫. மோனைகாந் தன்றளியி னண்பர்க் கொளித்தளித்த
கானமு மேனிக் கவினன்றே—வானிலவு

௪௯௬. மென்மை முருகர் கணநாதர் வேணியர்க்குத்
தொன்மை தருபூந் தொடையன்றே—நன்மைக்

௪௯௭. கலிநீதி யார்நமி நந்திகணம் புல்லர்
மலிய விடுந்தீப மாண்பு—முலக

௪௯௮. முயத்தகு வாயிலா ருட்பூசை யின்கண்
வியத்தகு ஞான விளக்கு—மியற்கருவூர்ச்

௪௯௯. சென்னிபுகழ்ச் சோழர் திருநாளைப் போவார்வீழ்
வன்னிநிற மும்பூண் மணியன்றே—கன்னித்

௫௦௦. திருமங் கையைவென்ற செவ்விக் கிவரே
யருமங் கையர்க்கரசி யன்றே—கிரிமுகிலின்

(பா-ம்.) ௪௮௯. 'சிவநேச ரப்பூதி யார்மகத்தந்து' ௪௯௦. 'பைம்பொற்றுலையும்' ௪௯௧. 'தண்டி யெடுத்த தடாகத்துய்' ௪௯௫. 'நாகையிற் கீழ்வேளூர் நம்பர்க் கொளித்தளித்த, மாகையிற் பொன்னும் வடிவன்றே - வா கத்து' ௪௯௭. 'கலிய னமிநந்தி காரிகணம் புல்லன், மலியவிடுஞ் சோதி வடிவும்' ௫௦௦. 'அரசி'

௫௦௧. மூசுவார் மென்முலைக்கற் பூர முழுநீறா
பூசுவார் பூதிப் பொடியன்றோ—விசனையே

௫௦௨. துற்று திருக்குறிப்புத் தொண்டருஞ் சாக்கியரு
மெற்று சிலையு மெறிசிலையு—மற்றச்

௫௦௩. சமையத்துந் தெய்வத் தலத்து நெகிழா
தமையப் பிடித்திட மன்றோ—நமதுதிரு

௫௦௪. வாரூர்ப் பிறந்தா ரயலோ விவர்க்குமிப்
பேரூர்ப் பிறப்பே பிறப்பன்றோ—தீராத

௫௦௫. பத்தராய்த் தாழ்வாரப் பாலுமடிச் சார்ந்தார்கள்
சித்தமே சங்கரன்பாற் சேர்வித்தோ—ரித்தனையே

௫௦௬. ரிங்கிவ ரன்றோவென் றேற்பக் கிளிதெளியக்
கொங்கிவரோ தியுடன் கூறுதலு—மங்காந்

௫௦௭. தரகர வென்றுருகு மவ்வேலை மூன்று
புரகரன் வீதி புகுந்தான்—கரமுகிழ்த்துத்

௫௦௮. தத்தையை வைத்துத தமரிற் சதகோடி
யொத்தயல் செல்ல வுடன்சென்று—ளத்திரளை

௫௦௯. நீந்தி நுதலு நிலமணப்பத் தாழ்ந்துதொழு
தேந்தி மலைகுனித்த வேந்தலே—மாந்தளிர்

௫௧௦. வண்ணத் துமையாண் முலைத்தழும்பு மார்பகத்தி
னண்ணத் தவஞ்செய்த நாயகனே—கண்ணப்ப

௫௧௧. ரெச்சிற் றடியு மெழில்வாயின் மஞ்சனமு
முச்சிப்போ துங்கொள்ளு முத்தமனே—செச்சைமயில்

௫௧௨. வாகனத்தோன் வானவரைக் காத்துபாச் சூர்தடிய
மாகனத்த வேலுதவும் வள்ளலே—மோகமிகப்

௫௧௩. பிட்டுக்கு மண்ணுஞ் சுமந்து பிரம்பினடி
பட்டுப் பரிந்தளித்த பாக்கியனே—நிட்டைபெறுஞ்

௫௧௪. சங்கப் புலவருடன் சங்கத்தி லேயிருந்து
கொங்குதேர் வாழ்க்கை கொடுத்தோனே—பங்கயற்க

௫௧௫. ணம்மை யுடன்சுந் தரபாண் டியனாகி
யிம்மையிலே நன்மைதரு மெம்மானே—மும்மையுல

௫௧௬. கேந்துமுசு குந்தமன்னற் கின்பமுறு மெவ்வரமு
மீந்ததியா கேச விறைவனே—வீந்தவிந

(பா-ம்.) ௫௦௨. ‘பற்று திருக்குறிப்பன் ௫௦௫. சித்தத்தைச்’
சாக்கியன் பண்டுதலை’

௫௧௭. கன்னுங் கவிவினவக் கச்சிகம லாலயத்து
நண்ணும் படிகொடுத்த நங்கோவே—தண்ணியலாக்

௫௧௮. காயினு நீசிலநாள் வைகிய காரணத்தின்
வேயினு ணேயம் விளைக்கின்றேன்—வாயினாற்

௫௧௯. சுட்டா லு நின்கச்சிச் சூதத் திருப்பதனால்
விட்டா லுங் கோகிலத்தை வேட்கின்றே—னட்டாலும்

௫௨௦. பிள்ளை பணித்தபணிப் பெண்ணை யகலாத
புள்ளை யெளியேன் புகல்கின்றே—னுள்ளயரக்

௫௨௧. கைக்கு மெனினுமுன் காதுபெறப் பெற்றமையி
னுய்க்கு மிசையை யுவக்கின்றேன்—பெய்க்கமலாய்

௫௨௨. வேடைய தெய்த வெதுப்பினு நின்குவட்டு
வாடைய தென்று மகிழ்கின்றேன்—கோடிநம

௫௨௩. ஞகு மெனினுமுன் வேணி யணிந்தமையி
ஞகு மதியை நயக்கின்றேன்—வேகத்தா

௫௨௪. லிக்கு வளைத்துவே ளெய்யவெறுப் பாயினுமுன்
மெய்க்கு வளைத்தார் விழைகின்றேன்—கைக்குதவா

௫௨௫. யென்று திருத்தேர் நிலையளவு மேத்தெடுத்துத்
துன்று கழுநீர்த் தொடைபெற்று—னின்ற

௫௨௬. வினைப்பகையுங் காமத்து விற்காமன் செய்யு
முனைப்பகையுங் கூட முடித்தா—டனைப்பணிந்தே

௫௨௭. யிவ்வா றெழுபருவத் தெல்லோரு முன்போது
வுய்வார் பவனிக் குடன்போதச்—சைவ

௫௨௮. வழிப்போந்தான் றாதாய்ப் பரவையார் பாடத்
தூழிப்போந்தான் போந்தா னுலா.

நேரிசை வெண்பா.

மாதர் நலங்கொண்டு வீதி வலங்கொண்டு
மாதை யிடங்கொண்டு வாழ்கந்த—நாதனடுக்
கொண்டுதியா கேசர்பூங் கோயிற்சிங் காதனமேற்
கொண்டா ரசபைநடங் கொண்டு.

(பா-ம்.) ௫௧௯. ‘வெஃகினேன்’ ௫௨௮. ‘சந்தாய்ப்’
௫௨௪. ‘தார் விரும்பினேன்’

பயன்.

நாட்டுங் கமலைத் திருவுலா நற்செவியாற்
கேட்டும் படித்துங் கிளரின்பங்—காட்டும்
பொருளைப் புகழ்ந்துதினம் போற்றத்யா கேச
ரருளைப் பெறுவா ரவர்.

சிறப்புப் பாயிரங்கள்.

க. தெள்ளுதமி ழாரூர்த் தியாகேசர் மெய்யன்பு
கொள்ளுங் கமலையுலாக் கூறினனா—லுள்ளக்
குவிவிர ராகவன்சொற் கூடிற் புலவீர்
கவிவிர ராகவன்சொற் கண்டு.

கட்டளைக் கலித்துறை.

உ. புவியோர் பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெலாஞ்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவனு
பவியே யெனுநங் கவிவிர ராகவன் பாடியநற்
கவியே கவிபவ னல்லாத பேர்கவி கற்கவியே.

[இஃது, இலங்கைப் பரராசசேகரரென்னும் அரசர் பாடிய செய்யுளென்று தமிழ்நாவலர்சரிதையால் தெரிகின்றது.]

திருவாரூருலா முற்றிற்று.

ஸ்ரீதியாகராசர் துணை.

உ

கணபதிதுணை.

திருவாரூருலா

அரும்பதவுரை.

காப்பு.

வாதாவிவிநாயகர்துதி. கமலை-திருமகள், திருவாரூர். கம் - நீர். மீ - மேலே. வேழம் உக - கொறுக்காந்தட்டைகள் உகும்படி.

மாற்றுரைத்தவிநாயகர் துதி. போற்று உரைத்த - துதிகளைக் கூறிய, ஆரணமே - வேதமே. கைச்சிலம்பு - கையையுடைய மலைபோல்வார். திருமுதுகுன்றத்திற் பெற்றுத் திருமணிமுத்தநதியில் இட்டு இத்தலத்தில் தேவதீர்த்தத்தில் எடுத்த பன்னீராயிரம் பொன்னைச் சுந்தரமூர்த்தி நாயனருக்கு மாற்றுரைத்துக் காட்டியதுபற்றி, இவர் இத்திருநாமம் பெற்றனர். (தியாக. கஅ. சு).

அவையடக்கம்.

சோதிகையும் - சிவபெருமானது திருக்கரமும். மா நாகமும் - பெரிய வாசுகியென்னும் பாம்பும். பூநாகம் - நாகப்பூச்சி; “திருக்கழுக்குன்ற. அவை.”

நூல்.

க. தேவு - தெய்வம். ஒன்பானெனும் பேறு - நவந்தருபேதம்.

உ. நாதாந்தமேயாய் - நாததத்துவத்திற்கு அப்பாலாய்.

ங. உயிர்களை உய்விக்தற்பொருட்டு, பராசத்தி தவஞ் செய்துகொண்டு எழுந்தருளியிருத்தல்பற்றி, இத்தலம், பராசத்தி யெல்லை என்றும் சத்திபுரமென்றும் வழங்கப்பெறும்; “இறந்திடா ஞானசத்தி யெல்லையாமாரூர்” (திருவாரூர்ப்பு) என்பதனுலுணர்க. பராசத்தி யென்றது கமலாம்பிகையை.

ங-ரு. இடையில் இளைப்புறுமல் நிறைவேற்றுவோரே தலைவரென்று திருமாலும் இந்திரன் முதலிய தேவர்களும் தம்முள் நிச்சயித்துக்கொண்டு சென்று குருக்ஷேத்திரத்தில் யாகமொன்று செய்கையில், தேவர்கள் அயர்ச்சியடைந்து நின்றுவிட, திருமால் அதனை ஆயிரம் வருடத்தில் நிறைவேற்றித் தாமே தலைவரென்று செருக்குற்றனர்; சிவாஞ்ஞையால் யாகத் தீயிலிருந்து அப்பொழுது, ஐசுவரமென்னும் பெயரையுடைய வில்லொன்று எழுந்தது. அவர், எளிதிப்பின்மிகுதியால் அதனைக்கைப்பற்றி வளைத்து அம்புகளைத் தொடுத்துத் துரத்தத் தேவர்கள் ஓடிவந்து இத்தலத்தை அடைந்தார்கள். உடன்வந்த திருமால் இத்தல விசேடத்தால் தம் வன்மையும் செருக்கும் குறையப்பெற்று மயக்கமுற்று அவ்வில்லையூன்றி அதன் தலையின்மேல் தமது தலையைச் சாய்த்துத் துயில்வாராயினர். அப்பொழுது தேவர்கள் பிருகஸ்பதியின் குமாருடைய கட்டளைப்படி அவ்வில்லின்கீழ் ஒரு புற்றை உண்டாக்கித் தாம் சறையான் வடிவங்கொண்டு அப்புற்றுவழியாகச் சென்று மேற்கூறிய வில்லினது நாணின் அடியை அரித்தபொழுது சிவபெருமான் அப்புற்றிலிருந்து சோதிவடி

வாகத் தோற்றினரென்பது வரலாறு. (திருவாரூர்ப்பு, வன்மீக)

எ. சனகாதிகளுக்குக்கலியின் துயரம் தீர்த்ததுபற்றி இத்தலத்திற்குக் கலிசெலாநகரம் என்பது ஒரு திருநாமம். (திருவாரூர்ப்பு. தலமகிமை. ௪௨).

அ. குணதீரம் - கீழ்கரை. ஈர்த்த - அறுக்கப்பட்ட.

௯. தம்முடைய தமையனார் உண்ண வைத்திருந்த கனி முதலியவற்றை அவரனுமதியின்றி உண்டு, அந்தத் தோஷபரிகாரமாக அவரால் தம்முடைய கைகள் அரியப் பெற்ற சங்கமுனிவரென்பவர், இத்தலத்துள்ள அமுததீர்த்தத்தில் ஆடி அக்கைகள் வளரப்பெற்றனர்; இதனால் அத்தீர்த்தம் சங்கதீர்த்தமென்று பெயர் பெற்றது; (திருவாரூர்ப்பு. சங்க) "கரங்கொடுத்துச் சங்கருக்குக் கனைகடல் வாய்த் துயில்வோற்குச், சிரங்கொடுத்த பெருஞ்செல்வத் திருவாரூர்" (திருவாரூர்ப்பு. அசலே. ௧௧) என்பதனுலுமறிக.

௧௦. கமலை - திருமகள். திருமாலுக்குத் திருமகளை மணஞ்செய்வித்ததை மகாலட்சுமிச்சருக்கத்தாலுணர்க. (திருவாரூர்ப்பு.)

௧௧-௧௪. கண்ணன் கருத்து-புத்திரன் வேண்டுமென்பது. இக்கண்ணிகளால், தியாகராஜமூர்த்தி, முதலில் திருமாலாலும் அப்பால் இந்திரனாலும் பூசிக்கப்பெற்றுப் பின்பு முசுகுந்தசக்கரவர்த்தியால் இத்தலத்திற்கு எழுந்தருளினமை கூறப்படுகின்றது. (திருவாரூர்ப்பு. தியாகராச; கந்த. கந்தவி). தொடிக்கைமான் - உமாதேவியார்.

௧௫-௧௬. கோ - பசு. கூலிக்கு ஊர்ப்பசுக்களை மேய்ப்பவனாகிய வணிகனொருவன் ஓடிப்போன பசுவொன்றைத் தொடர்ந்து இத்தலத்தைச் சூழ்ந்த புண்ணியத்தால் மறுபிறப்பில் தசானன தேசத்து அரசனாயினன்; அப்பசு மறுபிறப்பில் அவனுக்கு மந்திரியாயிற்று; இருவரும் பின்பு முத்து பெற்றன ரென்பது வரலாறு. (திருவாரூர்ப்பு. பிரதக்ஷிண.)

௧௬. திரிசங்கு - திரிகின்ற சங்குகள்; ஓரரசன். வசிஷ்ட முனிவருடைய பிள்ளைகளின் சாபத்தாற் புலையன் வடிவம் பெற்ற திரிசங்கு வென்னுமரசன், கௌசிகமுனிவருடைய கட்டளையால் இத்தலத்தை யடைந்து தேவதீர்த்தத்தில் ஆடி நல்ல உடம்பு பெற்றானென்பது வரலாறு. (திருவாரூர்ப்பு. திரிசங்கு.)

௧எ-௧அ. சுருதியன் - கேமசருமனென்னும் அந்தணன்; இவன் நீர் வேட்கையுற்றுப் பரத்தையொருத்தி கொடுத்த கள்ளைக் கள்ளென்றறியாமற் பருகிப் பின்பு தெரிந்து வந்து இத்தேவதீர்த்தத்தில் ஆடி அப்பாவம் தீரப் பெற்றனன். காரி - இந்திரன். ஆவி கொள்வினை யென்க. இந்திரனுக்கு விருத்திர ஹத்தியை இத்தீர்த்தம் போக்கியது. (திருவாரூர்ப்பு. கேம. இந்திர.)

௧அ-௧௯. வடக்கேயுள்ளகயையால் தீர்க்கப்படாததான நன்றிமறப்பென்னும் பாவத்தை இத்தலத்துள்ள கயாதீர்த்தம் ஒரு பேய்க்குத் தீர்த்தது. (திருவாரூர்ப்பு. கயா) இத்தீர்த்தமுள்ள இடம் கயக்கரை யென்று இக்காலத்து வழங்கும்.

௨௦. கோடி முனிவர்கள் வந்து தவம் புரிந்து தரிசித்த பொழுது, வன்மீகநாதர் கோடியளவான திருவுருவங்கள் கொண்டு அவர்களுக்குக் காட்சி கொடுத்தருளினர். (திருவாரூர்ப்பு. உருத்திர)

௨௦-௨௧. தேர் பத்தன் - தசரதன். ஒருசித்தன் - சித்தீசனென்னும் அரசன். இவர்களுக்கு ஸ்ரீவன்மீகநாதர் மகப்பேறு அருளினர். (திருவாரூர்ப்பு. தசரத; சித்தீ.)

௨௧-௨௨. கோகருணரென்று பெயருள்ளவர்களாகிய இருவர்க்கு முத்தி

யளித்தனர். (திருவாரூர்ப்பு. கோகருணச்)

உஉ-உங. முருகு - இளமை. சித்திரகாயம் - புலி. குலிசித்திரநாமம் - குலிசேசனென்னும் திரமான பெயரை; கேகயநாட்டரசனுகிய குலிசனென்பவன் தன்னிடம் பாரணஞ்செய்ய வந்த துருவாச முனிவருக்கு ஊனோடு கலந்த உணவை அருத்திய குற்றம் பற்றி, அவராற் புலியாகச் சபிக்கப் பெற்று இத்தலமடைந்து அவ்வுருவம் நீங்கினன். (திருவாரூர்ப்பு. குலிசே)

உங-உச. மூத்து ஈர்த்த-முத்துக்களை இழுத்த. கலிக்கு அஞ்சி மூன்றரைக்கோடி புண்ணிய தீர்த்தங்கள் இத்தலத்தை அடைந்தன. (திருவாரூர்ப்பு. சர்வ).

உரு-உசா. ஓர் எழும் - திருவாரூர், திருநாகைக்காரோணம், திருக்காருயல், திருக்கோளிலி, திருமறைக்காடு, திருநள்ளாறு, திருவாய்மூர் என்னும் எழுதலங்களும், ஸ்ரீ தியாகராஜமூர்த்திகள் எழுந்தருளப்பெற்றிருத்தலின், இத்தலங்கள் ஸப்தவிடங்கஸ்தலமென்று கூறப்படும்; இதனை, "சீரார் திருவாரூர் தென்னுகை நள்ளாறு, காரார் மறைக்காடு காருயல்—பேரான, ஒத்ததிரு வாய்மூருவந்ததிருக் கோளிலி, சத்த விடங்கத் தலம்." என்னும் ஆன்றோர் திருவாக்காலுணர்க. விடங்கர் - தியாகராசர்; இவ்வெழுவருள் இத்தலத்து மூர்த்திக்கு வீதிவிடங்கரென்பது திருநாமம்.

உஎ. மணித்தண்டு - மாணிக்கத்தண்டு. இத்தலத்தில் ஸ்ரீ தியாகேசருடைய திருவாடுதண்டு மாணிக்கத்தண்டென்று கூறப்படும். தியாகேசர் சிங்காதனம் இரத்தின சிங்காதனமாதலின், 'மணிச் சிங்காதனம்' என்றார். பெருமாள் - பெருமையையுடையவர்.

உஅ. தேவாகண்டரென்பது தியாகேசருடைய திருநாமம்.

உகூ. தியாகேசருடைய துவசம் - தியாகக்கொடி என வழங்கும்.

ஙஉ. வாதித்தல் - விலங்கிடல்.

ஙரு. பங்குனி யுத்திரத்தில் தியாகேசருடைய திருவடியைத் தரிசிப்போர் முத்தி பெறுவர்.

ஙஎ. திருமகளுக்கு மணஞ்செய்வித்தது.

ஙசா-ஙஅ. கடு - விடம். சூரியோதயவர்ணனை. தனது மகளென்றது திருமகளை. மருகன் - திருமால். கனமணி - கவுத்துவம். தினமணி - சூரியன.

ஙகூ. அல்லியங் கோதை யென்பது, அம்பிகையின் திருநாமம். நீலோத்பலாம்பிகை என்பர்.

ச0-சக. இரண்டு - உவர்க்கடலும், கட்கடலும். ஐந்து - நெய்க்கடல் முதலியன. இந்நூலாசிரியர், இக்கருத்தை, "ஆட்ட, முதுபெருங் கடலோரைந்துய" (நகர. உஎ.) எனத் திருக்கழுக்குன்றப்புராணத்திலும் அமைத்திருக்கின்றார்.

சஉ-சங. சேடனுகிய காப்பைத் திருக்கரத்தில் அணிந்து; பொறைவில் - மேருவாகிய வில். கணைக்கு அணையாய் - அம்பாகிய திருமாலுக்குப் படுக்கையாகி. கோடாத தேர் - பூமி. சாதிபற்றியும் தலைமைபற்றியும் வாசுகியின் வேறு சேடன்மேலேற்றப்பட்டது. கோடு - மலை.

சச-சரு. மருங்கை யொத்தது நூல். சஅரு-ம் கண்ணி முதலியன ஈண்டு ஆராயத்தக்கன.

சரு-சசா. அராக்கச்சு - ஆதிசேடனுகிய கச்சு. உடைவாளிற்குச் சூரியனும் அராக்கச்சிற்குக் கேதுவும் உவமைகள். மருளிக்கொள - ஒப்ப.

சஎ-சஅ. உழை - மான். காப்பு - சேடன். உழை இடக்கரத்தும், காப்பு வலக்கரத்தும் உள்ளவைகளாதலின், இரண்டிற்கும் இரண்டு மதிகள் வேண்டுவன வாயின. செவ்வந்தித்

கூகூ. * இருசீ ரிடையிடி னொரூஉவென மொழிப.

இது நிறுத்தமுறையானே ஒரூஉவிற் கெல்லாம் இலக்கணங்கூறுகின்றது.

இ-ள். இரண்டு சீரை நடுவேயிட்டுவைத்து முதற்சீரும் நாலாஞ்சீரும் ஒன்றிவரின் ஒரூஉமோனை, ஒரூஉவெதுகை, ஒரூஉமுரண், ஒரூஉவியைபு எனப்படும் எ-று.

ஒரூஉவை விதந்தோதினர், வெண்பாவிற்குச் சிறந்துவருதலானும், ஆசிரியத்திற்கு ஏனையவற்றிற்சிறந்து தோன்றுதலானும். உதாரணம் முன்னர்க்காட்டினும். (கூகூ)

க00. சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்
சொல்லியற் புலவரது செந்தொடை யென்ப.

இது செந்தொடை கூறுகின்றது.

இ-ள். சொல்லிய.........டியலின் எ-து முற்கூறிய தொடைகளெல்லாவற்றோடும் ஒவ்வாதுவரின் அதனை. சொல்லியற்......யென்ப எ-து இயற்சொல்லாற் செய்யுள் செய்யும் புலவர் செந்தொடை யென்று கூறுவராசிரியர் எ-று.

எனவே, விகாரப்படச் செய்யுஞ் செய்யுட்குச் செந்தொடையின்றாதலின்று. உ-ம். "நெடுவேண் மார்பி னாரம் போலச், செவ்வாய் வானந் தீண்டிமீ னருந்து" (அகம்-கஉ0) "விருந்தினர் மூத்தார் பசுசிறை பிள்ளை" இவை கட்டளைச்செந்தொடை. "பூத்த வேங்கை வியன்சினை யேறி, மயிலின மகவு நாட, னன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே" இது சீர்வகைச் செந்தொடை. (க00)

---

* "இரண்டு சீரிடையிட்டு மோனைமுதலாயினவரத் தொடுப்பது ஒரூஉத் தொடையாம் எ-று. உ-ம். "அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி" இஃது ஒரூஉமோனை. "மின்னிவ ரொளிவடந் தாங்கி மன்னிய" எ-து ஒரூஉ வெதுகை. "குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து" இஃது ஒரூஉமுரண். "நிழலே யினியத னயலது கடனே" இஃது ஒரூஉவியைபு. "காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்" எ-து ஒரூஉவளபெடை" என்பது உரையாசிரியருரை.

௧0௪. *மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற்
றொன்பஃ தென்ப வுணர்ந்திசி னோரே.

---

* "வடிவுபெற்ற மரபினையுடைய தொடையினது பாகுபாடு பதின்மூவாயிரத்தறுநூற்றுத்தொண்ணூற்றொன்பதென்றவாறு. அவைவருமாறு:— மொழிமுதலாகெழுத்து உயிர் பன்னிரண்டு: இதன்கிளையெழுத்தும் ஒரோவொன்றுக்குப் பதினொன்றுளவாகலின் அவற்றையுறழ நூற்றுமுப்பத்திரண்டாம். க த ந ப ம என்பனவற்றை உயிர் பன்னிரண்டோடு முறழ அறுபதாம்; அவ்வறுபதும் முதற்றொடையாகிய கிளையெழுத்தோடு முறழ அறுநூற்றறுபதாம். சகரத்தின் முதலாகெழுத் தொன்பது; அவற்றைக் கிளையெழுத்தோடுறழ எழுபத்திரண்டாம். வகரத்தின் முதலாகெழுத்து எட்டு. அவற்றைக் கிளையெழுத்தோடுறழ ஐம்பதாம். யகரத்தின் முதலாகெழுத்தொன்று: கிளையெழுத்தில்லை. ஞகாரத்தின் முதலாகெழுத்து மூன்று: கிளையெழுத்தோடுறழ ஆறும் இவ்வகையினான முதலெழுத்துத் தொண்ணூற்றுமூன்றுங் கிளையெழுத்துத் தொள்ளாயிரத் திருபத் தாறுமாக மோனைத்தொடை ஆயிரத்தொருபத்தொன்பதாம். எதுகையாமாறு:— உயிரெழுத்து மொழியிடையில் வாராது. உயிர்மெய்யெழுத்து இருநூற்றொருபத்தாறில் வருக்கமொழிந்த வெழுத்து இருநூற்றுநாலினையும் கிளையெழுத்தினோடுறழ இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டாம். இதனோடு ஒற்றுப்பத்தொன்பதும் குற்றுகரமாறுங் கூட்ட எதுகைத்தொடை இரண்டாயிரத்து நானூற்றெழுபத்துமூன்று பாகுபாடாம். முரண்டொடை பொருண்முரண், சொன்முரண் என இரண்டாம். இயைபுத்தொடை வருமாறு. உயிரெழுத்து மொழியீற்றின்கண் ணுயிர்மெய்யே வருதலின் அவையாகா. உயிர்மெய் இருநூற்றொருபத்தாறினும் இறுதிக்கண் வாராதாம். ஙகரவுயிர்மெய்பன்னிரண்டும் அகரம்பதினேழும் இகரம்பதினொலும் உகரமிரண்டும் எகரமொன்றும் ஒகரமொன்றும் இவையொழிந்துநின்ற எழுத்து நூற்றறுபத்தைந்தும், ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் புள்ளியிறுதி பதினொன்றும் குற்றியலுகரம் ஒராறும் ஆக இயைபுத்தொடை நூற்றெண்பத்திரண்டு பாகுபாடாம். அளபெடைத்தொடையாமாறு:—மொழிமுதலாகும் உயிரளபெடை எழு, க த ந ப ம என்னும் உயிர்மெய்யளபெடை முப்பத்தைந்து, சகரவளபெடை ஐந்து, வகரவளபெடை ஐந்து, யகரவளபெடையிரண்டு இவை ஐம்பத்துநான்கில் உயிரளபெடை தனிநிலையாம். ஏனையவற்றை முதனிலை இடைநிலை இறுதிநிலை எனவுறழ நூற்றுநாற்பத்தொன்றும்.

இது வரையறைப்படுங் கட்டளையடிக்குத் தொடைத்தொகை கூறுகின்றது ; எனவே சீர்வகைக்குத் தொடைவரையறை யின்று எ-று.

ஒற்றுக்களுள் வல்லெழுத்தாறும் மகரமும் ழகரமும் ஒழிந்து ஒழிந்த வினையபதினொன்றும் அளபெடுக்க ஒற்றளபெடை பதினொன்று. இவ்வகையினான் அளபெடைத்தொடை நூற்றைம்பத்தொன்பது வகையாம். இவ்வகையான் அடித்தொடை மூவாயிரத் தெண்ணூற்று முப்பத்தைந்து வகையாம். பொழிப்புத்தொடை கிளையெழுத்துவாராது. மோனைப் பொழிப்புத் தொண்ணூற்றுமூன்று ; எதுகைப்பொழிப்பு இருநூற்றிருபத்தொன்பது ; முரண்பொழிப்பு இரண்டு; இயைபுப்பொழிப்பு நூற்றெண்பத்திரண்டு; அளபெடையுள் ஒற்றளபெடை பொழிப்பாக வாராமையின் உயிரளபெடைப் பொழிப்பு நூற்றுநாற்பத்தெட்டு ; இவையெல்லாங்கூட்டப் பொழிப்புத்தொடை அறுநூற்றைம்பத்துநாலு வகைப்படும். ஒரூஉத்தொடையும் இவ்வகையினால் அறுநூற்றைம்பத்து நாலாம். இனிச்செந்தொடையாமாறு:—மொழிமுதலாமெழுத்துத் தொண்ணூற்றுமூன்றும் மற்றையடியினும் ஒத்துவருங்கால் அவை மோனையுளடங்குதலின் அவற்றையொழித்து வினை எழுத்துத் தொண்ணூற்றிரண்டோடுறழ எண்ணாயிரத் தைந்நூற்றைம்பத்தாறு வகையாம். இவ்வகையினாற் றொடைவிகற்பம் பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதாம் என்றறிக" என்பது உரையாசிரியருரை. இவ்வுரைகாரர் கொண்டபாடம் "தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற், றொன்று மென்ப" என்பதாகும். ஈண்டு ஒன்றும் என்பது முற்றுவினை. பத்துக்குறை எழுநூறு-அறுநூற்றுத்தொண்ணூறும். தொண்டு தலையிட்ட அறுநூற்றுத்தொண்ணூறு அறுநூற்றுத்தொண்ணூற்றொன்பதாயவாறுகாண்க. இவ்வுரையாசிரியர் கொண்ட இப்பாடத்தையும் உரைத்த வுரையினையும் பேராசிரியர் மறுத்துரைத்தனர். பேராசிரியர் 'தொண்டுதலையிட்ட பத்துக்குறை யெழுநூற் றொன்பஃது' என்பது எழுநூற்றெட்டு எனக்கொண்டு தொடைவகை பதின்மூவாயிரத்தெழுநூற்றெட்டு என்பர். பத்துக்குறை எழுநூற்றொன்பஃது அறுநூற்றுத் தொண்ணூற் றொன்பதாம். தொண்டு தலையிட்ட அறுநூற்றுத் தொண்ணூற் றொன்பது எழுநூற்றெட்டாதல் காண்க. நச்சினார்க்கினியர் பத்துக்குறை எழுநூற்றொன்பஃது அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது எனக்கொண்டு, அதனைத் தொண்டுதலையிடுதலாவது ஒன்பதாற் பெருக்கல் என்றுகருதி ஒன்பதனாற் பெருக்கிய அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது ஆறாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன்றென்பது பற்றித் தொடைவகை பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன்று என்பர். இங்ஙனம் உரையாளர் மூவரும் கருத்து மாறுபடுதல் கண்டுகொள்க.

இ-ள். மெய்........தாமே எ-து கேட்டார்க்குத் தொடைப்பாடு வெளிப்படுக்கும் இலக்கணத்தவாகிய தொடைக்கூறுபாடுதாம் ; ஐயீரா......ஞ்ஞூற்றொடு எ-து பதின்மூவாயிரத்தோடே; தொண்டு......தென்ப எ-து ஒன்பது தலையிலேவைத்த பத்துக்குறைந்த எழுநூற்றொன்பது என்றுகூறுவர்; என்பது ஆறாயிரத்திருநூற்றுத்தொண்ணூற்றொன்று என்று கூறுவர் எ-று. உணர்ந்திசினோரே எ-து சட்டளையின் றொடைப்பகுதியறிந்தோர் எ-று.

பதின்மூவாயிரத்தோடே ஆறாயிரத்திருநூற்றுத் தொண்ணூற் றொன்றெனவே, தொகை பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன்றாயிற்று. ஆக, கசு உசுக. பத்துக்குறையெழுநூற்றொன்பதாவது அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது. இதனை ஒன்பதனோடு பெருக்க ஆறாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன்றாயிற்று. இதனை ஆறாயிரத்திருநூற்றுத் தொண்ணூற்றொன்று என்று விளங்கக்கூறாது ஒருகாற்குறைத்து அதன்மேலொருகாலேற்றி ஞாபகப்படச் சூத்திரஞ்செய்தது ஒரு பயனோக்கி; அது கட்டளையடி அறுநூற்றிருபத்தைந்துந் தொடைகொள்ளுங்கால் ஐம்பத்தொன்பது வழுவுள அவை களையப்படுமென்றற்கு. அவற்றுள் அடிமோனைத்தொடை மூன்று பாவினும் எழுபத்தெட்டுச் சீரானும் வருங்கால் ஈரடிக் கூட்டத்துத் தளைவழுக் களையவேண்டும்; அவ்வழி அகவற்கு நாற்பத்தொன்றும் வெள்ளைக்குப் பதினெட்டுமாக ஐம்பத்தொன்பது களையப்படும். அவை களையுமாறு:—நுந்தை, வண்டு, தேமா, மின்னு, ஞாயிறு, போதுபூ, போரேறு, பாதிரி, மேவுசீர், நன்ஞானு, பூமருது, நீடுகொடி, காருருமு, நாணுத்தளையென இந்நேராதி பதினொன்கும் அகவற்குப் பெருகிய நிலத்தில் விரண்டடி தளை வழுப்படும். வரகு, புளிமா, அரவு, வலியது, கடியாறு விறகுதீ, கணவிரி, உரறுபுலி, பெருநாணு, உருமுத்தீ, மழகளிறு, விரவுகொடி, நரையுருமு என இந்நிரையாதி பதின்மூன்றுஞ் சுருங்கிய நிலத்து ஒரோவோரடி தளைவழுப்படும். ஆக அகவற்கு நாற்பத்தொருதளை வழுவாயின. இனி வெள்ளைக்கு முற்கூறிய சீர்களுள் ஆசிரியவுரிச்சீர் நான்குநீக்கி வெண்சீர் நான்குங்கூட்ட இருபத்தேழாம். இதில் நேராதி பதினொன்குஞ் சுருங்கிய நிலத்து ஒரோவொன்று தளைவழுப்படும். நிரையாதியில் வரகு, கடியாறு, விறகுதீ, வலியது என்னுநான்கும் பெருகிய நிலத்து ஒரோவொன்று தளைவழுப்படும். ஆக வெள்ளைக்குப் பதினெட்டு வழுவாயிற்று. ஆகத் தளைவழு ஐம்பத்தொன்பதாயிற்று. அவை வருமாறு:—வண்டு காருருமு நளிமுழவு நளிமுழவு என நிற்பக் கண்டு எனத் தொடைவருங்கால் வெண்டளையாய் வழுவாம். பதினொன்செழுத்திற்கும் இவ்வாறே கூறிக்கொள்க. வரகு நாகு காம்பு வண்டு என நிற்பக் குரவு எனத் தொடைவருங்கால் வெண்டளையாய் வழுவாம். இனி வண்டு வரகு வரகு வரகு என நிற்பக் கண்டு

இஃது உறுப்பற்றது. ஆனால் மரம் முதலியவை உறுப்புள்ளன. உறுப்பாவது ஓர் செயலைத் தானாகவே செய்யக்கூடிய கருவி. நமது கை கால்கள் நமக்கு உறுப்புக்களாம். ஏனெனில் கையால் எடுப்பதும் பிடிப்பதுமாகிய செயலைச்செய்ய வல்லோம். காலால் நடப்பதும் எறிவதும் உதைப்பதுமாகிய செயல்களைச்செய்ய வல்லோம். அவ்விதமே மரஞ்செடிகளின்வேர் நமது வாய்போன்று செடிகளுக்காகப் பூசாரத்தை உட்கொள்ளவும் அவைகளின்தண்டு நமது தேகத்தைப்போன்று மேற்பாகங்களைத்தாங்கவும், இலைகள் சுவாசம் விடுவதுபோல் வாயுக்களை உட்கொள்ளவும் வெளிவிடவு முபயோகமாதலால் ஒவ்வொன்றையுமோரோ ருறுப்பாகக்கூறுவர். அவ்வகை உறுப்புக்கள் ஏறக்குறைய ஜீவனுள்ளபொருள்களுக்கு மாத்திரமுண்டேயல்லது, ஜீவனற்றவைகளாகிய பொன், வெள்ளி, செம்பு, இரும்பு போன்ற உலோகங்களுக்கும் கந்தகம், வைரம், காரீயம் போன்ற உலோகங்களென்று கூறத்தகாத மற்றவஸ்துக்களுக்கும் இல்லை. ஆதலால் சுபாவத்திலுண்டாகும் ஜீவனற்றதும், அதனால் உறுப்பற்றதுமான பொருள்கள் தாதுப்பொருள்களென்று சொல்லப்படும்.

தாதுப்பொருள்களி லிரண்டுவிதமுண்டு. அவை (1) மூலதாதுப்பொருள்களென்றும்(Elements), (2) கலவைத்தாதுப் பொருள்களென்றும் (Compounds and mixtures) கூறத்தக்கவை. மூலதாதுப்பொருள்களானவை எவ்விதத்தாலும் வேறுபொருள்களாகப் பிரியக்கூடாதன. உதாரணம். பொன், வெள்ளி, கந்தகம், பிராணவாயு (oxygen), ஜலவாயு (Hydrogen) முதலியவை. மேற்கூறியுள்ள ஒவ்வொருபொருளும் எவ்விதத்திலும் வேறுபொருள்களாகப்பிரியாது. அஃதாவது அடுப்புக்கரியையும் உப்பையும் சேர்த்த செயற்கைப்பொருளைக் கரியையுமுப்பையுந் தனியாக எவ்விதம் பிரிக்கலாகுமோ அப்படியும், உப்பை நீரிற்கரைத்தபிறகு எவ்விதம் உஷ்ணத்தைக்கொண்டு சூரியவெப்பத்தினாலாவது நெருப்பினாலாவது நீர் ஆவியாகவும் உப்பு உப்பாகவும் பிரியலாகுமோ அப்படியும், பொன் வெள்ளி போன்ற பதார்த்தங்கள் வேறுபொருள்களாகப் பிரியமாட்டா. பொன் பிரியப்பிரியப் பொன்னாகவே நிற்கும். வெள்ளி பிரியப்பிரிய வெள்ளியாக ஒதுங்கும். ஆகையால் மூலதாதுப்பொருள்கள் எவ்விதத்திலும் பிரியலாகாதவை. கலவைத்தாதுப்பொருள்கள் இரண்டுவிதமுள்ளவை; அவை (1) வேறோர் உபகரணமுமின்றித் தானாகவே சுலபமாய்ப்பிரியக்கூடியவை. அவைகளை நாம் சுயமாகவே பிரிக்கலாகும். முன்சொல்லிய உப்புக்கரியை உப்பாகவுங்கரியாகவும் நாமே பிரிக்கலாம்(Mechanical mixtures). (2) எவ்விதத்திலு முஷ்ணத்தையே உபகரணமாகக்கொண்டு தாம் பிரியக்கூடியவை. உதாரணம்:—இரும்பு துருவடைகிறதைப் பார்க்கிறோம். இரும்புச்சாவி

கள் உபயோகத்திலில்லாவிடில் நாள் செல்லச்செல்லச் செந்நிறம் பொருந்திய துருவைமேற்கொள்ளுகின்றன. அதற்குக்காரணமென்னவெனில் இரும்பைச்சுற்றியுள்ள காற்றின் நீராவியானது இரும்புடன் சேர்ந்து அவ்விதமாக்குகிறது. அவ்வகையே வெள்ளியும் காற்றின் கந்தகத்தைக்கொண்டு கருநிறத்தை யடைகிறது. இவ்வகைத்துருக்களை நீக்கவேண்டுமானால் அவைகளைக்காய்த்து நீரையும் கந்தகத்தையும் அகற்றவேண்டும். துருப்பிடித்த இரும்பு முதலியவைகளை அரத்தால் அராவினால் துருப்பொடிகள் விழுகின்றன. அப்பொடிகள் இரும்பும் நீருங் கலந்துள்ளன. ஆகையால் அரத்தால் அராவினால் துருவுக்குக்காரணமாகிய நீர் அகல்வதில்லை. மேலும் நீரை சூக்ஷ்மத்தீயினால் (Electricity) ஜலவாயுவாகவும் (Hydrogen) பிராணவாயுவாகவும் (Oxygen) பிரிக்கவல்லோம். இவ்வகைத்தான கலவைத்தாதுப்பொருள்களையும் அவற்றின் தன்மையையும்பற்றி (Chemical compounds) ரசாயனசாஸ்திரப் புத்தகங்களில் (Chemistry) கண்டறியலாம்.

இப்பாடத்தில் முக்கியமாய் நாம் பார்த்து வரவேண்டியதாவது, உலோகங்கள். உலோகங்களெல்லாம் மூலதாதுப் பொருள்களேயாம். உலோகங்களல்லாத மற்ற மூலதாதுப் பொருள்கள் சில உள. உதாரணம்—கந்தகம், சுத்தக்கரி அல்லது இருந்தை (carbon) என்பதன் ஓர் உருவமாகிய வைரக்கல், தீக்குச்சிகளின் முனையில் சிவப்புவர்ணங்கொண்ட நிபாக்கினி (Phosphorus) முதலியனவாம். இவைகளில் கந்தகமும், வைரக்கல்லும் சாதாரணமாய் நாம் பார்த்துவருகிறோமாதலால் அவைகளைக்குறித்து அடியில்வருமாறு கண்டு அதன்பின் பல உலோகங்களில் நமதுஉபயோகத்துக்குச் சாதாரணமாக ஏற்பட்ட உலோகங்கள் படித்துவரத்தக்கது.

உலோகங்களல்லாத மூலதாதுப்பொருள்கள்.

உலோகங்களல்லாத மூலதாதுப்பொருள்கள் பலவுள. அவைகளில் (1) கந்தகம்;— இயற்கையிற் கந்தகத்தைச் சுயமாகவும் கலப்பாகவுங் காணலாம். அக்கினிமலைத் தேசங்களில் சுயகந்தகம் அகப்படக்கூடியது. அக்கினிமலைப்பக்கங்களில் பெருத்தபள்ளங்களுண்டு. அப்பள்ளங்களில் வெகு சாக்கிரதையுடனிறங்கிப் பள்ளங்களின் உட்பக்கத்தில் கந்தகத்தைச் சீவியெடுப்பார்கள். மேலும் கந்தகம் கலந்துள்ள பதார்த்தங்கள் அனேகமுள. சாதாரணமாய் ஓர்வித உப்புமண்ணைக்கொண்டு நமது விநாயக பூஜைக்காலங்களில் விநாயகராகப் பிரதிமைகள் களிமண்ணைக்கொண்டு செய்துவருவதுபோல அனேகவிதமான விநோதப்பிரதிமைகளைச் செய்கிறார்கள். அம்மண் வெண்மையாயுள்ளது. இதுபோன்ற பிரதிமைகள் சிலாசத்தினால் செய்து வருமாறு கூறுவர். சிலாசத்தென்பது (Gypsum) ஓர்வகைக்கந்தகங் கலந்

த உவர்மண். மேலும் இரும்புங் கந்தகமுங் கலந்துள்ள ஓர்வகை அக்கினிக் கல்லும், செம்பும் இரும்புங் கந்தகமுங் கலந்த கல்லும், ஈயமுங் கந்தகமுங் கலந்தகல்லும் மற்றுமிவைபோன்ற அன்னியபதார்த்தங்கள் கந்தகத்துடன் கலந்து வெவ்வேறுவிதக் கற்களாகக் காணலாம். கந்தகத்தை ஜீவனுள்ள பிராணிகளின் மாமிசத்திலும் மரஞ்செடிகளுள்ளும் சிற்றளவு தேர்ந்தறியக்கூடும். மேலுஞ்சில சுரங்கங்களிலிருந்து வெளிப்படத்தக்க நீரிலும் கந்தகம் கலந்துள்ளது.

உஷ்ணமதிகரித்தால் கந்தகமுருகும். கந்தகத்தில் வெவ்வேறுவிதங் காணலாம். அவையெவையெனில் :—(1) வடிவம்பெற்றுள்ள கந்தகம்: இது கொஞ்சம் பளபளப்புள்ளது. இதைப்பெருங்கட்டியாகக் காணலாம். (2) ஒட்டுங்கந்தகம்: இது பிசின்போலுள்ளது. (3) உருவம் யாதுமின்றிப் பொடியாயுள்ளது. அல்லது இவ்வகைப்பொடிகளாலாகியது. கந்தகமும் ஜலவாயுவும் சேர்ந்து ஓர் நாற்றமுள்ள வாயுவாக(Sulphuretted hydrogen) சிற்சிலவிடங்களில் புலப்படுகிறது.

கந்தகத்தின் விசேஷவரலாற்றைப்பற்றியும் கந்தகத்தைத் தனியாக வெடுக்கும் வழியைப்பற்றியும் விவரமாய் வேறுபுத்தகங்களிலறியலாகும்.

(2) வைரக்கல்லும் மற்றும் :—சாதாரணமாக ஏறக்குறைய ஜீவனுள்ள எல்லாப்பொருள்களிலும் விசேஷமாய் சுத்தக்கரி அல்லது இருந்தையென்னும் சுயதாதுப்பொருளை(Carbon) க்காணலாகும். எலும்புகளில் இந்தச் சுத்தக்கரி விசேஷித்துள்ளது. எலும்பைக் காய்ச்சக் காய்ச்சக் கடைசியிற் கரியாய்விடுகிறது. இது சுத்தக்கரியாம். மேலும் மரப்பொருள்களை எரித்தால் கரியாகிறது. இதுவும் சுத்தக்கரியாம். இதை வைரக்கல்லாகவும் காரீயமாகவும், நிலக்கரியாகவும்: இயற்கையில்பூமியினிடத்துக்கண்டுவருகிறோம். மேற்சொல்லிய மூன்றும் உருவத்தில் வேறாகவுள்ளனவேயன்றி சத்தில் ஒன்றுதான். காரீயத்தைக்கொண்டெழுதினால் எழுதலாகிறது. இதைத்தான் எழுதுகோல்களில் வைத்து உபயோகிக்கிறார்கள். இதைப் பூமியிலிருந்து எடுப்பதுண்டு. மேலும் இரும்பை உருக்கி அதனுடன் சுத்தக்கரியைச்சேர்த்துக் குளிரவைத்துப் பிறகுபார்த்தால் சேர்க்கையாலாகுங் காரீயமாகிறது. இலங்கைத்தீவிலும், தென்னிந்தியாவிலும், ருஷியா, அமெரிக்கா தேசங்களிலும் காரீயமுண்டாகிறது. துப்பாக்கி மருந்திலும், யந்திரங்களுக்கு வழவழப்புக்கொடுக்க வார்க்குமெண்ணெயிலுங்கூடக்காரீயத்தை உபயோகிக்கிறார்கள். சூக்ஷ்மத்தீயந்திரங்களில் காரீயத்தை உபயோகிப்பதற்குக் காரணமென்னவெனில், காரீயமானது சூக்ஷ்மத்தீயை (Electricity) எளிதில் செலுத்தவல்லது.

நிலக்கரியானது பூமியினின்றுதோண்டி யெடுக்கவல்லகரியாம். இக் கரி இயற்கையிலுண்டாகுந்தன்மையை அடியில்வருமாறு ஊகிக்கலாகும். நிலக்கரியை நன்றாக எரித்தால் மிக்க புகையை முதலிலுண்டாக்கப் பிறகு வெவ்வேறுவித வாயுக்களாகப்பிரியக்கண்டு கடையில் சாம்பலாவதைப்பரீக்ஷித்திருக்கிறார்கள். அவ்வகைத்தான வாயுக்கள் சுத்தக்கரியும் (Carbon) ஜலவாயுவுங்கலந்த (Hydrogen) வாயுவாகவும், சுத்தக்கரியும் ஜலவாயுவும் பிராணவாயுவுங்கலந்துள்ள (Oxygen) மற்றோர் வாயுவாகவும்:மேலும் நம் லமைச்சுற்றியுள்ள காற்றிலிருக்கும் எரியும்விளக்கை அணைக்கவல்ல தர்க்கியசம்என்பதோர் வாயுவும்(Nitrogen) கந்தகமுங்கலந்த வாயுவாகவுந்தனித்தனி பிரியப்பார்க்கலாம். இக்காரணங்களால் மேற்சொல்லிய உலோகமல்லாத மூலதாதுப்பொருள்களாகிய ஜலவாயு, பிராணவாயு, சுத்தக்கரி, தர்க்கியசம், கந்தகம்போன்றவை இரண்டாகவும் மூன்றாகவுங்கலந்து தனியாகப் பெருங்கலவைப்பொருள்களைக்கொண்ட மரப்பதார்த்தங்கள் மேற்கூறியுள்ளபடி வாயுக்களைக்கொண்ட நிலக்கரியை உண்டுபண்ணத்தக்கவையென்பது சுலபமாய் ஊகிக்கத்தக்கது.

நாம் ஜீவித்துவரும் இப்பூவுலகில் மரஞ்செடிகளடர்ந்த காடுகளை விசேஷமாய்ப்பார்க்கின்றோம். முன்னமேயே இப்பூமியானது மெதுவாய் நாளடைவிலே அவ்வவ்விடங்களில் உயர்வு தாழ்வை யடைவதாகப்படித்திருக்கின்றோம். ஆகையால் தாழ்வான இடங்களில் நாளடைவிலே தாழ்வை எப்போதுங்கருதுகின்ற நீர் வந்தடைவது சுலபமாய் அறியத்தக்கது. ஆதலால் மேடானபாகங்களில் மரஞ்செடிகளடர்ந்த காடுகள் ஓர் காலத்தில் விசேஷித்திருந்து அம்மேட்டிடங்கள் நாள்செல்லச்செல்லத்தாழ்வையடைந்து கடல்நீரைப்பெற்றால் அம்மேடுகளின் இலை சருகுகளாகிய தாவரப்பொருள்கள் அடியிற் படிந்து அதன்மேல் மணலும் மணலின்மேற் களிமண்ணுமாகப் படியலாகுமென்றும் தெளிவாயறியத்தக்கது. ஆதலால் தாவரப்பொருள்கள் வெகுகாலமாக மணலாலும் களிமண்ணாலும் அப்பப் பெற்றுப்பூமியிற்கிடந்தால் கொஞ்சம்வெப்பங்கொண்டு கருகலாகும். நமது வீட்டில் விறகை எரிக்குங்கால் கொஞ்சமளவு எரித்தபின் விறகு அடுப்புக் கரியாவதைப்பார்த்து வருகிறோம். அடுப்புக்கரியைப்பின்னும் தட்டாரவேலை செய்பவர்கள் கொண்டு உலையில் வைத்துத்தீயெழுப்புவதையுங்கண்டிருக்கிறோம். ஆதலால் அடுப்புக்கரியானது எவ்விதமாகச்சிறிது வெப்பங்கொண்டு கருகியபோதிலும் பிறகு ஓர்தரம் எரிக்கஉதவுகிறதோ அவ்விதமே பூமிக்குள் வெகுநாளாகப்பாரத்துக்கும் வெப்பத்துக்குமெதிர்ப்பட்டுக்கிடந்த தாவரப்பொருள்கள் நிலக்கரியாய் கடையிற்கொண்டு எர்க்கலாகிறதென்பது தெளிவாயறியத்தக்கது. ஓர்பொருளைத்தாக்கத்தாக்க உஷ்

ஒரு சிசுப்பிறந்த 6-வாரம்முதல் அதற்கு அம்மைகுத்தி வைப்பதில் சுகஸந்தர்சனமுறைப்படி யாதோர் ஆக்ஷேபமுமில்லை. அம்மைப்பால் என்பது தற்காலத்தில் எவ்வளவோ சாஸ்திரப்பிரகாரம் பரிசுத்தமாக எடுக்கப்பட்டு எல்லா மருந்துச்சாலைகளிலும் கிடைக்கின்ற சுலபமான வஸ்துவாக வந்துவிட்டது. ஒவ்வொருவனும் தனக்கும் மற்றவர்களுக்கும் உபகாரம் பண்ணச்சிந்தைவைத்திருப்பது உண்மையென்றால் அவனிவ்வத்தியாயம் படிக்கும்பொழுதே தனது வீட்டில் அம்மைகுத்தப்படாமலிருக்கும் ஒவ்வொருவனையும் அம்மைகுத்தி வைக்கவேண்டும்.

அம்மை குத்துவதெப்படி? இதுபெரும்பாலும் எல்லாருக்குந் தெரிந்த விஷயம். நமது தோட்பட்டைக்குக் கீழாக இருபுயங்களிலும் ஒன்றின்கீழ் ஒன்றாக ஒவ்வொரு புயத்திலும் 3-மச்சங்கள் நாம்பார்த்திருக்கின்றோம். அம்மை குத்துகின்றவன் அப்புயங்களின் மேற்றோலை ஒரு சிறு ஊசி அல்லது கத்திமுனையால் சிறுகாயப்படுத்தி அக்காயங்களில் அம்மைப்பாலைச் செருகுவான். இப்பால் காயங்களில் நன்றாக உலர்ந்துபோகவேண்டும். மூன்று நான்குநாள் அம்மைவைத்தவிடத்தில் அச்சிறுகாயம் உலர்ந்திருப்பதைத்தவிர வேறொன்றும் காணப்படமாட்டாது. அம்மை வைத்த மூன்றாம் அல்லது நான்காம்நாளில் அக்காயங்கள் கொஞ்சந்தடித்துச் சிவக்கும். ஐந்தாநாளில் சிறுகொப்புளமுண்டாகும். ஐந்தாம்நாள் முதல் பத்துநாள்வரையில் இக்கொப்புளம் பெரியதாய் அதிகச்சிவந்தும் தடித்தும் வந்து 10-வது அல்லது 11-வது நாளில் வாட ஆரம்பித்து 12-வது நாளில் அநேகமாய் உலர்ந்துவிடும். அம்மைவைத்த நான்காவது நாள்முதல் 12-வது நாள்வரையில் காய்ச்சல் உண்டு. அதன்பிறகு காலக்கிரமத்தில் அவ்வாறு உலர்ந்தஅம்மை உதிர்ந்து தழும்புதோன்றும். இதுதான் அம்மைவைப்பென்பது.

இவ்வாறு நாம் அம்மைகுத்திக் கொள்ளும்பொழுது அம்மைபோட்டினால் எவ்வாறு நமது தேகம் மாறுபாடடையுமோ, அவ்வாறான மாறுபாட்டை அடைகின்றோமாகையால் அம்மைகுத்தியவர்களுக்குப் பெரியம்மை புகட்டுகின்றதில்லை என்கிற சித்தாந்தம் ஏற்பட்டிருக்கின்றது. ஒரு தடவை அம்மைபோட்டினவனுக்கு மறுபடியும் அம்மைபோட்டுகிறதில்லை என்ற சித்தாந்தத்துக்குக்காரணம் அம்மையானது நம்மைப்பற்றிக்கொள்ள நமது தேகத்தில் ஓர்விதஸாரம் வேண்டும் என்றும் தொத்துவியாதி நம்மை ஒருதடவை பற்றிக்கொள்ளும்பொழுது அது அச்சாரத்தை முற்றிலும் வாங்கிக்கொண்டு போய்விடுகிறதென்றும் அக்காரணத்தால் மறுபடியும் நம்மைத் தொத்துவியாதி பற்றுகின்றதில்லையென்றும் நாம் முன்னமேயே சொல்லியிருக்கின்றோமல்லவா? அம்மை வைத்துக்கொள்ளுவதால்

தொத்துவியாதியாகிய அம்மையையே நாம் வரவழைத்துக்கொண்டு அதினின்று விலக்கிக்கொள்ளுகிறோம். ஆகையால் அம்மைவைத்துக்கொள்ளுவதென்பது ஒரு தடவை நமது தேகத்தில் அம்மையையே வரவழைத்துக்கொள்ளுவது போலவாகும். அவ்வாறு நாம் செய்யும்பொழுது மறுபடியும் அதே அம்மை எவ்வாறு நம்மை அணுகும்? இதைக்கொண்டேதான் அம்மை குத்துவது இக்காலத்தில் இவ்வளவுமேன்மையாக விளங்கிவருகின்றது.

ஆனால் சிற்சிலசமயத்தில் அம்மைகுத்துவது பற்றுகின்றதில்லை. சில சமயத்தில் நன்றாகப்பலிக்காமல் ஏதோ ஏகதேசத்திற் பலித்துவிட்டுப்போம். இக்காரணத்தால் அம்மைவைத்தவர்களுக்கும் ஏதோ 100-ல் பத்து மறுபடியும் அம்மைபோட்டுவதுமுண்டு. ஒருசமயத்தில் ஓர் ஊரில் வெகு மும்மரமாக அம்மைஉபத்திரவம் காணுமேயானால் அக்காலத்தில் நன்றாக அம்மைகுத்தினவர்களுக்கும் அம்மை போட்டும். இவைகளையெல்லாம் உத்தேசித்து ஒவ்வொருவனும் 7-வருஷகாலத்துக்கொருதடவை மறுபடியும் மறுபடியும் அம்மைகுத்திக்கொள்ளவேண்டும் என்றும், அவ்வாறு அம்மை குத்திக்கொள்ளுவானேயானால் அம்மைநோய் அவனை ஒருபொழுதும் வருத்தவே வருத்தாதென்றும் சுகஸந்தரிசன சாஸ்திரிகள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

அம்மை என்பது தொத்துநோய்களுள் ராஜநோய். அது வெகுசடுதியிற் பரவும். இந்நோயினும் கொடிய நோய் பிளேக் என்று சொல்லப்படும் மகாமாரி. அது இக்காலத்தில் இந்நாட்டில் அதிகத்தொந்தரையை விளைவிக்கின்றபடியால் இதைப்பற்றியும் கொஞ்சம் விவரமாகவெழுதக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதற்கு முன்பாகவே வேறுசில தொத்துநோய்களைச் சொல்லுவோம்.

கண்வலி, கக்குவானிருமல், சிலவித விஷஜ்வரங்கள் (Influenza Dengue) காலரா என்று சொல்லப்படும் விஷபேதி இவைகளையும் தொத்துவியாதியாகச் சொல்லவேண்டும். விஷபேதியால் அடிக்கடி நமக்கு உண்டாகும் தீமை அதிகமாகையால் அதைப்பற்றிக் கொஞ்சம் இவ்விடத்திற் சொல்லுவோம்.

தொத்துநோய்களுக்குள் ஒருவித சாஸ்திரத்துக்கும் அகப்படாத நோயாக இவ்விஷபேதியைச் சொல்லலாம். இது ஆகாரத்தினாலும் காற்றினாலும் தண்ணீராலும் பரவுகின்றதென்று ஒருவாறு சொல்லுகின்றார்கள். அம்மையைப்போல இதுவும் ஒரு வித்துள்ளநோய். இது திடீர் என்று சில

விடங்களில் தோன்றும். நாம் பலவிதப்பிரயத்தனங்களைச் சுகாதாரமுறைப் படி செய்யும்பொழுதெல்லாம் நிற்காமல் சரேலென்று தனக்குத்தானகவே நிற்கும். சிலசமயத்தில் ஓரிடத்தில் வெகுகுறைவாகத்தோன்றி அவ்விடத்தைச்சுற்றிப் பதின்காதவழி வெகு வேகமாகப் பரவும். சிலசமயத்தில் தான் தோன்றிய சிற்றிடத்திலேயே நசித்துவிடும். விஷபேதிரோகமானது, அந்நோயால் வருந்தும் மனிதனுலும் அவன் அணிந்த துணி, அவன்மேற்பட்டு வீசும் காற்று, அவன் புசித்த போஜனம், அவன் அருந்திய தீர்த்தம் இவைகளை நாம் தொடும் மூலமாயும் இவைகளில் விஷபேதியின் வித்து சம்பந்திப்பதாலும் உண்டாகின்றது. இவ்விஷயமாய் வைத்தியர்கள் பரீக்ஷிக்கப் பரீக்ஷிக்க இன்னும் கண்டறியவேண்டிய விஷயங்கள் அதிகமாகவிருந்துகொண்டு பிடிபடாமலிருக்கின்றனவேயன்றி, எல்லாம் பிடிபட்டதாகச் சொல்ல முடியாது. இவ்விஷவித்து சம்பந்தித்து வெகுவேகமாகப் பரவி சிலமணிக்குள் ஆட்களைக் கொல்லும். சிலவேளைகளில் இதேவியாதி வெகுநாள்வரையில் (20–25 நாள்) ஒருவனிடமிருந்து ஔஷதங்களால் அடங்கும். சுகஸந்தர்சனவிதிகளால் இந்தநோயை அகற்ற ஏற்பட்டிருக்கும் எல்லாவிதிகளையும் நாம் அனுசரிக்கவேண்டும். அவைகளைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் எழுதுவோம். நாமிம்முறைகளை அதிகாரிகள் ஏற்படுத்தியிருக்கின்றபடி என்னதான் பிரயோகித்துப்பார்த்தபோதிலும், சிலவேளைகளில் இவ்வித ஏற்பாடுகளையெல்லாம் மீறிக்கொண்டு விஷபேதி பரவும். இது ஒன்றிலு மடங்காநோய்: என்றாலும் இதுவிஷயமாய் அதிகாரிகளும்ஜனங்களும் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தேதீரவேண்டும்.

பிளேக் என்னும் மகாமாரி :—இது சமீபத்தில் நமது தேசத்தில் உண்டான நோயல்ல. வெகுநாளாக நமதுதேசத்திலிருந்துகொண்டிருப்பதாகச் சரித்திரங்கள் மூலமாய் ஏற்படுகின்றது. பாரவீகம், அரேபிபா, சீனு, ஆபிரிகா, ஐரோப்பா முதலான தேசங்களில் அடிக்கடி இந்நோய் உண்டாய் அடங்கினதற்கு அநேக ஆதாரங்களிருக்கின்றன. மகாமாரியின் ஸூக்ஷ்மவித்தை (Microbe) ப்பற்றிப் பலபிரவித்தவைத்தியர்கள் பரிசோதித்திருக்கின்றூர்கள். ஜபான்தேசத்துப் பிரவித்தவைத்தியராகிய கிடஸாதோ என்பவர் தான் இவ்வித்தை முதன்முதற் கண்டுபிடித்தார். இவர் சித்தாந்தப்படி ஓர் அரை அணுத்தலையின்மேல் 500,000,000 மகாமாரிவித்துக்கள் நிற்கலாம். ஆகையால் இவ்வித்துக்கள் வெகு நுட்பமானவைகள். மற்றத்தொத்து நோய்களைப்போல, இம்மகாமாரியும் பலவிதமாகப் பரவும். ஈரம் இந்நோய்க்கு வெகு அநுகூலம். சூரியகிரணம் இந்நோய்க்குப் பெரும் சத்துரு. இம்மகாமாரியின் உபத்திரவம் வஸ்திரங்கள், கோணிப்பைகள்; தின்பண்டங்கள் தானியங்கள் இவைகளில் இந்நோயின் வித்துக்கள் சம்பந்திக்க, இப்பண்டங்

கள் போகுமிடமெல்லாம் பரவும். வெயிலும் அதிக உஷ்ணமுந்தான் இந்நோயை அடக்கமுடியும்.

பிரஸித்த வைத்தியர்கள் இந்நோய் எலி, பெருச்சாளி, குரங்கு, பூனை, அணில், பாம்பு, மான் முதலிய மிருகங்களையும் பற்றுகின்றதென்றும், இவைகள் ஓரிடத்தில் அதிகமாக மரிக்க நாம் காண்போமேயானல், அவ்விடத்தில் இம்மகாமாரிநோய் உண்டாயிற்றென்பதற்கு அடையாளம் என்றும் சொல்லுகின்றார்கள்.

மகாமாரி என்னும் நோய் ஒருவனைப் பற்றுமேயானல், அவன் இரண்டொரு ஜாமத்தில் மாண்டுபோனலும் போவான். அல்லது 10-அல்லது 15-நாள் வியாதியாகவிருந்து மாண்டுபோவான். ஆனல் பெரும்பாலும் இந்நோய்கண்ட 5-ம் நாள் இதன் உக்கிரம் அதிகமாகக்காணப்படும். இந்நோயின் வித்து ஒருவன் மேனியிற் பற்றியதும் மிகுதியாக எப்பொழுதும் பெருகிக்கொண்டிருக்குமாகையால், பிழைப்பது துர்லபம்.

இவ்வியாதியின் வித்து எவ்வாறு நமது தேகத்தில் சம்பந்திக்கின்றதென்று கேள்வியுண்டாகலாம். நாம் புசிக்கும் ஆகாரத்தாலும், சுவாசிக்கும் காற்றாலும், நாம் அருந்தும் நீராலும், இன்னும் நமதுதேகத்தின்மேல் ஏதாவது காயமுதலியவைகளிருந்தால் அவைகளாலும் இவ்வித்தை நாம் உட்கொள்ளலாம்.

இந்நோயின் லக்ஷணம்:—இந்நோய்கண்ட மூன்றுவதுமணிக்கெல்லாம் தேகத்தில் ஓர்விதச் சோர்வுகாணும். நமது சருமத்தின்நிறம் கொஞ்சமாக மஞ்சள்நிறமாய் மாறும். நோய்கண்டவன் சகிக்கக்கூடாத தலைவலியால் வருந்திக்கொண்டு ஒன்றுந்தெரியாமல் படுக்கையிற் புரண்டுகொண்டிருப்பான். சிற்சில சமயத்தில் இடுப்பு, முதுகு, விலாப்பக்கம் இவைகளும் வலிக்கும். தேகமெல்லாம் நடுங்கிக்கொண்டு பெருங்காய்ச்சல்வரும். இரண்டு மூன்று நாள் விடாக்காய்ச்சலடித்தபிறகு, தொடை சந்து அக்குள் அல்லது கழுத்து சிற்சில சமயத்தில் இம்மூன்று இடங்களிலும் கொப்புளம் உண்டாகும். இக்கொப்புளம் உண்டானபின் காய்ச்சலின் வேகம் கொஞ்சம் குறையும். அதன்பிறகு அக்கட்டி தனக்குத்தானே ஆழ்ந்திப்போவதாலும் அல்லது சீழ்கொண்டு பழுத்து உடைவதாலும், இந்நோயின்வேகம் குறையும். வேகம் குறையாமல் நோய் அதிகரிக்கும்பக்ஷத்தில் நோயாளி வாயாலும் மூக்காலும் ரத்தத்தைக்கக்குவான். மலத்திலும் மூத்திரத்திலுங்கூட ரத்தங்கலந்து போகும். கொப்புளம் அழுகித் தேகத்தில் வலிப்பும் மயக்கமும் உண்டாய் நோயாளி பிராணனை விடுவான்.

இந்நோய் இவ்வளவு கொடியநோய் ஆகையால் இது குடிகளை வருத்தாமலிருக்க, இது ஓரிடத்திற் கண்டதும் அவ்விடத்தைவிட்டு பரவாததற்கு வேண்டிய நிபந்தனைகளைப் பலவாறு ஏற்படுத்தியும் நோய்கண்டவர்களுடைய அவஸ்தையை நீக்க அவனுக்கு சௌக்யத்தை உண்டாக்க டாக்டர்களை நியமித்தும் பலவாறு அதிகாரிகள் சிரமப்படுகின்றார்கள்.

அம்மைக்கு ஏற்படுத்தியிருப்பதுபோல இம்மகா மாரிக்கும் இம்மகா மாரிப்பாலை அம்மையாக நமது மேனியிற் குத்துவதென்று கண்டுபிடித்திருக்கின்றார்கள். இது அம்மைகுத்தினால் எப்படி அம்மை உண்டாவதில்லையோ அதுபோலவே அவ்வளவு பிரயோஜன மல்லவென்றாலும் இப்பிளேக்கம்மை குத்தினவனுக்கு பிளேக் கண்டால் அவன் அநேகமாய்ப் பிழைக்கின்றானாகையால் இது குணமுள்ளதே. இவ்வம்மையின் பிரயோஜனம் 6 மாத காலமாகையால் 6 மாதங்களுக்கு ஒருதடவை அம்மை குத்திக்கொள்ளவேண்டும்.

இவ்வளவுதூரம் தொத்துநோய்களைப்பற்றி இவ்விடம் சொல்லிவிட்டு அடுத்த அத்தியாயத்தில் இந்நோய்கள் சம்பவிக்கும்பொழுது நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் நமது நாட்டுக்கும் நகரத்துக்கும் செய்துகொள்ளவேண்டிய பாதுகாப்பை யெடுத்து எழுதுவோம்.

பதினான்காம்—அதிகாரம்.

தொத்துநோயைக் குறைத்தலும் துர்க்கந்தத்தைப் போக்குதலும்.

Chapter XIV.—Suppression of the Epidemic and removal of Filth.

தொத்துநோய்கள் அதிகமாயிருக்கும்பொழுது நாம் அந்நோய்களைப் பரவாமலிருக்கச்செய்வதற்கும் அந்நோய்களின் வித்துக்களை நாசம்பண்ணி வைப்பதற்கும் பல முறைகளை அனுசரிக்க வேண்டும்; அவைகளைப்பற்றி இங்கு எழுதுவோம். தொத்துநோயில் ஓர்வித விஷவித்து (Bactoria) ஏற்படுகின்றதென்றும் இவ்வித்து கணக்கில்லாத வித்துக்களாகப்பரவுவதால் தொத்துநோய் பரவுகின்றதென்றும் நாம் முன்னமேயே சொல்லியிருக்கின்றோம்.

சில தொத்துநோய்கள் சிலவித உத்ஸிருஷ்டங்களினின்றும் இவ்வியாதியின் வித்தை விசேஷமாக வெளியிற் கக்குகின்றனவென்று பிரசித்த

வைத்தியர்கள் பரிசோதித்துப் பார்த்துச் சொல்லியிருக்கின்றார்கள். அவ்வித்துக்கள் நமது தேகத்தின் ஒவ்வொருபக்கத்திலுமிருக்கலாம் ஆன்றாலும் சிலபாகங்கள் வழியாக அதிகமாய் வெளிப்படும். பெரியம்மையானது அவ்வம்மை போட்டினவன்மேல் நாம்பட, அவ்வம்மையின்பால் நம்மேல் ஒட்டினால் அதிகமாகப்பரவும். அதாவது இவ்வியாதி பரவுங்குணம் அப்பாலில் அதிகமாகவிருக்கின்றது. அதேமாதிரி விஷபேதி பேதியானமலத்தின் மூலமாக அதிகமாகப் பரவுகின்றது. ஆகையால் நாம் தொத்துநோய்களை அடக்கவும் அவைகளைப் போக்கவும் எத்தனப்படும்பொழுது எவ்வாறு அவ்விஷவித்துக்கள் அதிகமாகப்பரவுகின்றன என்பதை அறிந்துகொள்ளுவது வெகு அவசியமாகவிருக்கின்றது. சிலநோய்கள் (விஷஜ்வரம் முதலியவைகள்) அந்நோயால் வருந்துகின்றவனுடைய மேற்றோல்வழியாக இவ்வியாதிகளின் வித்தை வெளிப்பரவச் செய்கின்றன.

இந்நாட்டில் வெகு கொடியவைகளாகக் கருதியிருக்கின்ற தொத்துநோய்கள் விஷபேதியும் பிளேக்குமாம். இவைகளின் தீமையை அரசாங்கத்தாரும் ஒருவாறு நன்றாக அறிந்துகொண்டு இவைகளுண்டாகுங்காலங்களில் நாம் நடந்துகொள்ளவேண்டிய பலவித முறைகளைப்பற்றியும் அவர்கள் தாங்களே செய்யவேண்டிய நிபந்தனைகளைப்பற்றியும் பலவித உத்தரவுகள் பிறப்பித்திருக்கின்றார்கள். அவைகளிலும் இன்னும் சுகஸந்தர்சன முறைகளிலும் ஏற்பட்டிருக்கும் முக்கியமான விஷயங்களை நாம் எடுத்துக்காட்டுவோம். எல்லா ஏற்பாடுகளுடைய முக்கிய கருத்தும் இத்தொத்துநோயின் வித்தைப்பரவவிடாமல் உடனே கண்டிப்பதாம்.

இவ்வாறு அதிகாரிகளும் நாமும் கண்டிக்கும்பொருட்டு ஏதாவது தொத்துநோய் என்று சொல்லப்படும் வியாதி உண்டானதும் அதை ஒளிக்காமல் ஜனங்கள் அதிகாரிகளிடம் தெரிவிக்கவேண்டும்.

அக்காலங்களிற் குடியரசு என்று ஏற்பட்டிருக்கும் நமது முனிசிபாலிடிகளும் லோகல்போர்டுகளும் இவ்வாறு உண்டாகும்நோய்களை அடக்கப் பணத்தை லட்சியமில்லாமற் செலவிடவேண்டுமென்று ராஜாங்கத்தார்கள், அச்சங்கத்தார்கள் செய்யவேண்டிய ஜாக்கிரதையைப்பற்றி உத்தரவுகள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் நியமிக்கப்பட்டிருக்கும் பிரதானடாக்டர்கள், அவர்கள்கீழ் வேலைசெய்யும் சுகசந்தர்சனசாஸ்திரிகள் (Sanitary Officers) மூலமாக அச்சங்கத்தார்கள் அச்சமயங்களில் நியமித்திருக்கும் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றார்களாஎன்றுபார்க்கவேண்டும்.

தொத்துநோய் உண்டாய்விட்டதென்பது திண்ணமானவுடன் எவ்விடத்தில் அந்நோய் உண்டாயிற்றோ அவ்விடத்தை இரண்டு மூன்றுபாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்துக்கும் சிலசிப்பந்திகள் ஏற்படுத்திச் சிலமருந்துகளையும் கையோடு காவலாக வைத்திருக்கவேண்டும். விசேஷமாய் 5000-ஜனத்தொகையடங்கிய ஓர் அம்சத்தை ஒருபாகமாக அதிகாரிகள் பிரிப்பார்கள். ஒவ்வொருபாகத்துக்கும் ஏற்படவேண்டிய சிப்பந்திகளைப்பற்றியும் அங்கிருக்கவேண்டிய மருந்துகளைப்பற்றியும் சர்க்கார் உத்தரவுகள் ஏற்பட்டிருக்கின்றன. குறைந்தபட்சம் ஒவ்வொரு பாகத்துக்கும் வேண்டிய சிப்பந்திகள் ஒரு ஸர்கில் இன்ஸ்பெக்டர் ஒரு சேவகன் ஒரு தோட்டி—இவர்கள் அடிக்கடி தங்கள் தங்கள் எல்லைகளுக்குள் சுற்றிக்கொண்டேயிருந்து முன்னமே ஏற்பட்டிருக்கும் சிப்பந்திகளின்மூலமாய்ச்சுகமான வாழ்க்கைக்கு விரோதமாயிருக்கும் குப்பை கூளம் சாக்கடைத்தேக்கம் இவைமுதலியவைகளை அகற்றிக்கொண்டும், அப்பாகத்தில் வசிக்கும் குடிகளை சாதாரணமாயுள்ள சுகமானவழிகளைச் சரிவரப் பாதுகாத்துக்கொண்டிருக்கும்படி செய்தும் வரவேண்டும். அந்நகரம் முனிசிபாலிடியாகவிருந்தால் அச்சங்கத்தின் உத்தியோகஸ்தர்களும் எப்பொழுதும் போலீஸ் உத்தியோகஸ்தர்களும் இத்தொத்துநோயை அடக்கமுயன்று வரும் சிப்பந்திகளுக்குத் தங்களாற் கூடிய உதவி தப்பாமற்செய்யவேண்டும்.

ஒரு வீட்டில் விஷநோய் உண்டாயிற்றென்ற சங்கதி எட்டியதும் அந்நோயை அடக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்கள் அவ்வீடு சென்று செய்யவேண்டிய ஏற்பாடுகள் பல உண்டு. விஷபேதியாகவிருந்தால் நோயாளி வாந்திசெய்த அழுக்குகள், வெளிக்குச்சென்ற மலமூத்திரங்கள் இவைகளையெல்லாம் சார்பாலிக்ஆசிட் என்றமருந்துகலந்த ரம்பத்தூள் தூவப்பட்ட சட்டிகளில் பெருக்கித்தள்ளி அவ்வீட்டுக்கப்பால் எரித்துவிடவேண்டும். சிலவேளைகளில் ரம்பத்தூள் அகப்படாமற்போனால் உமி அல்லது சாம்பலிவைகளைக் கலந்தெடுத்து அப்புறப்படுத்தலாம். நன்றாக இம்மஷ்டுக்கள் தீப்பற்றி எரிய கிரோஸின் என்றுசொல்லப்படும் மண்ணெண்ணெயை ஊற்றியெரிக்கலாம்.

துணிமணிகள் படுக்கை இவைகளின்மேல் வாந்தியாவது மலமாவது பட்டிருந்தால் அவைகளையும் எரித்துவிடவேண்டும். இவ்வாறு நாம்செய்ய எவ்விதமான நோயாளிகளாகவும் விவேகிகளாகவுமிருந்தபோதிலும் அந்நோயாளிகள் சம்மதிக்கமாட்டார்கள் ஆகையால் அவர்களிடம் இத்துணிமணிகளை எரிக்காமல் வைப்பதால் விளையுந்தீமையை நன்றாக எடுத்துக்காட்டி அவர்கள் வெகு ஏழைகளாக விருப்பார்களேயானால் அவர்களுடைய

நஷ்டத்தையும் நாம் கொஞ்சத்துக்குக்கொஞ்சம் ஒத்துக்கொடுக்கவேண்டும். இதற்கு ராஜாங்கத்தார்கள் உத்தரவுகொடுத்திருக்கின்றார்கள். துணிகளையும் படுக்கைகளையும் எரித்துவிட அந்நோயாளிகளுக்குமனமில்லாத பட்சத்தில் அவைகளைப் பரிசுத்தப்படுத்தும்பொருட்டு ஏற்பட்டிருக்கும் மருந்தை நீரிற்கலக்கிக் கொதிக்கும்படிகாய்ச்சிக் காயும்அவ்வெந்நீரில்அமுக்கிவைத்து அவைகளின்மேல் நின்ற விஷத்தை ஒருவாறு போக்கி அவைகளை அந்நோயாளிகளுக்குத் திரும்பிக்கொடுக்கவேண்டும்.

விஷபேதி சிதறியகட்டில் முதலிய பொருள்களை மண்டமை முதலியவைகளில் ரஸகற்பூரங்கலந்த *ஓர்வித திராவகத்தை நன்றாகத் தெளித்துப் பரிசுத்தம் பண்ணவேண்டும்.

சிலர் தங்கள் வீடுகளைப்பரிசுத்தம் பண்ணுவதற்காக கந்தகம், தார், எண்ணெய், கற்பூரம்இவைமுதலியவைகளை எரிப்பார்கள். இவைகளால் ஓர்வித நன்மையுமில்லையாகையால் அவைகளை எரிப்பதைநாம் நிறுத்தவேண்டும். சாக்கடைகளை நன்றாகக்கழுவி அவைகளிற் கொஞ்சம் ரஸகற்பூரம் கலந்த திராவகத்தை ஊற்றவேண்டும். நோயாளி நோய்நீங்கித் தேறினதும் அவன் படுத்திருந்த அறையை நன்றாக நாம் சாஸ்திரப்படி பரிசுத்தம்பண்ணிவைக்கவேண்டும். அவ்வறையின் தரையில் எங்கெங்குப் பேதியின் மலமொருகாலத்தில் விழுந்திருக்குமோ அவ்விடங்களை எல்லாம் மண்வெட்டியெடுத்து அம்மண்ணை அப்புறப்படுத்தவேண்டும். இது சாத்தியமில்லாத பட்சத்தில் அத்தரையில்வைக்கோல்முதலியவைகளைப்பரப்பி அவைகளால் தரையை முற்றிலும் தீயிட்டுச்சுடவேண்டும். மேற்சொன்ன ரஸகற்பூர திராவகத்தை நோயாளி படுத்திருந்தவீட்டில் தரைமேலும், அவ்வீட்டின் சாக்கடைகள்மேலும் அவ்வீட்டைச்சேர்ந்த கட்டில் நாற்காலிமுதலிய பொருள்கள் மேலும் தாராளமாக நாம் ஊற்றிக்கழுவவேண்டும்.

இத்தொத்துநோய்கள் முற்றிலும் நின்றுபோனபிறகுங்கூட எங்கு ஒருக்கால் மறுபடி உண்டாகின்றதோ என்ற பயத்தால் அதை அடக்கவென்று நியமித்த வேலைக்காரர்களைப் பின்னும் 15. 20. நாள்வைத்திருக்கவேண்டும்.

தொத்து நோய்காணும்பொழுது ஒவ்வொரு ஜில்லாவின் பிரதான நகரத்திலேயும் அந்நோய்க்குச் சிகிற்சைசெய்ய ஓர்முக்கிய வைத்தியனிருக்கவேண்டும். ஒவ்வொரு நகரத்திலும் ஓரிடத்திலாவது தனிக்குடிசைகள் என்று சொல்லப்படும் இருப்புகள் அந்நகரத்துக்கு வெளிப்புறம் கொஞ்ச

* Perchloride of mercury.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩.] விசுவாவசுஹு ஐப்பசிமீ [பகுதி-கஉ.

இரட்டையர்.

இவர்கள் இளஞ்சூரியர், முதுசூரியர் எனப்பட்ட பெருங்கவிப்புலவர்கள் எனவும் திருவக்கையிலிருந்த ஆட்கோண்டான் எனப்பெயரிய கோங்கராயன் காலத்திருந்தவர்கள் எனவும் அக்கொங்கராயனுலும் கச்சியிலிருந்த சம்பராயனுலும் நன்றுபோற்றப்பட்டவர்கள் எனவும் திருவாமாத்தூர்க் கலம்பகம் பாடினுர்கள் எனவும் திருவண்ணுமலைச் சம்பந்தன் சொன்ன சமுத்திபாடினுர்களெனவும் ஆறுவிலகப் பாடினுர்களெனவும் வறுமைமிகுத்துக் குன்றும்வனமுங்கடந்து போய்ப் பலர்பிறரைப் புகழ்ந்துபாடி வாணுள்கழித்தனர்கள் எனவும் தமிழ்நாவலர் சரிதையால் அறியலாவன. 'கலம்பகத்திற் கிரட்டையர்கள்' எனப்பிற்காலத்தார் பாடியது, இவர்களியற்றிய ஆமாத்தூர்க்கலம்பகம்பற்றியேயாமெனத் தோன்றுகின்றது. இவர்களில் ஒருவர் முடவரும் ஒருவர் குருடருமாயிருந்தனர் எனவும் குருடர் முடவரைத்தூக்க முடவர் குருடர்க்கு வழியுணர்த்தச் செல்வார்களெனவும் ஒருசெய்யுளை ஒருவர்பாதியும் மற்றொருவர் பாதியுமாகப் பாடிமுடிப்பார்கள் எனவுங்கூறுவர்.

இனி வில்லிபுத்தூரர் மகனுர் வரந்தருவார் பாடிய பாரதச்சிறப்புப் பாயிரத்தில்,

தார காயண வண்டலை தண்டலைச் சனியூர்
வீர ராகவ னருள்பெறு வில்லிபுத் தூர
னூர ராமுடி மண்மிசை யுயர்புகழ் நிறுத்தித்
தீர காகளம் பெறுதலின் யாரினுஞ் சிறந்தோன்.

எங்குமிவனிசைபரப்பிவருநாளில்யாமுரைத்தவிந்தநாட்டிற்
கோங்கர்குலவரபதியாட்கோண்டானேனென்றொருவண்மைக்குரிசிறோன்றி
வெங்கலியின்மூழ்காமற்கருநடப்பேர்வெள்ளத்துவிழாமஞன்காஞ்
சங்கமெனமுச்சங்கத்தண்டமிழ்நூல்கலங்காமற்றலைகண்டானே.

ஆற்றியமெய்ச்செல்வத்தாலளகையைவென்றிருங்கவிஞலமாரூரை
மாற்றியபொற்றடமதில்சூழ்வக்கபாகையினகத்தின்வடிவம்போலத்
தோற்றியவக்கோங்கர்பிரான்சூழ்தமிழினுட்கோண்டான்சுற்றத்தோடு
போற்றியவிப்புவிமுழுதுந்தன்றிருப்பேர்மொழிகொண்டேபுரந்தானம்மா.

பிறந்துய்யக்கொண்டவனிப்பேருலகம்பெருவாழ்வுகூருநாளி
னிறைந்தபுகழ்ச்சனிநகர்வாழ்வில்லிபுத்தூரனைநோக்கிநீயுநானும்
பிறந்ததிசைக்கிசைநிற்பபாரதமாம் பெருங்கதையைப்பெரியோர்தங்கள்
சிறந்தசெவிக்கமுதமெனத்தமிழ்மொழியின்விருத்தத்தாற்செய்கவென்றான்

எனவருதலால் வக்கபாகையிற் கொங்கர்குலபதியாய் வந்த ஆட்கோண்டான் என்னும் வள்ளல் சனியூர்வில்லிபுத்தூரரைப் பாரதவிருத்தம் பாடுமாறுவேண்டினன் என்பதுஅறியப்படுகின்றது. தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படும் வக்கைநகர் இவ்வக்கபாகையேயாமென்பதும் ஆண்டு ஆட்கொண்டநாயன், கொங்கர்கோன் எனப்பாடப்படுவானும் இக்கொங்கர்குலபதியாகிய ஆட்கொண்டானே என்பதும் பெயரொற்றுமைபற்றி எளிதிலறியப்படும்.

இதனல் பாரதவிருத்தம்பாடிய வில்லிபுத்தூரரும், இரட்டையரும் ஒரு காலத்தவர்களாதல் நன்கு தெளியப்படும்.

தமிழ் நாவலர் சரிதை.

இரட்டையர் திருவக்கைக் கொங்கராயன் அசனம் இடுவித்த போது பாடிய கவி.

சாணர்க்கு முன்னிற்கு மாட்கோண்டநாயன் றமிழ்க்கோங்கர்
பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை நகராதி பக்கத்திலே [கோன்
யூணுக்கு வாரா திருப்பாய் விருப்பாகி யுயர்வானிலே
வீணுக்கு நின்னுக மெலிகின்ற தெவ்வாறு வெண்டிங்களே.

சாணர்—சதுரர். விழுப்புண்பட்ட தழும்புடைமைபற்றி வீரர்எனினு மமையும். சாணம்—தழும்பு.

திருவண்ணாமலைச் சம்பந்தன் சமுத்தி பாடச்சொன்னபோது பாடியது.

மன்னுதிரு வண்ணா மலையிற்சம் பந்தனுக்குப்
பன்னு தலைச்சவரம் பண்ணுவதென்—மின்னி
னிளைத்த விடைமடவா ரெல்லாருங் கூடி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு.

சம்பராஜன் விகடசமுத்தி பாடச்சொல்லப் பாடியது.

எறிக்கும் புகழ்க்கச்சி யேகாம் பரன்சம்ப னெண்டிசைக்கும்
பொறிக்கும் புலிக்கொடி யான்புயம் வேட்டபின் பூவையன்னாள்
வெறிக்குங் குமக்கொங்கை மீதே விழிசொரி வெள்ளந்துள்ளித்
தெறிக்குந் துவலை பழிக்குஞ்சிந் தூரத் திலகத்தையே.

படைவீடு முற்றியிருந்த பாண்டியனுக்குப் பாடியது.

காற்று லலைப்புண்டு கண்ணன் கடல்கடைந்து
மேற்று னெடுத்து வளைத்தெய்து—மாற்றாத
சொம்பொன் மலையில்லைச் சேலுக் கிடங்கொடுக்கச்
சம்பன் மலைகை தவா.

ஆறுவிலகிய பாட்டு.

*ஆற்குழை யோவர வோவாயர் பாடி யருமனையோ
பாற்கட லோதம்ப மோதங்கு மாவம் பலபலவா
மாற்கமு மாகிநின் ஞர்மாதை நாதர் வலங்கொள்பம்பை
மேற்கரை கோயில்கொண் டார்புரஞ் சிறிய வெங்கணைக்கே.

திருவாமாத்தூர்க் கலம்பகம் பாடச்சொன்னபோது பாடியது.

†தொல்காப் பியதேவர் சொற்றதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நாமுரைத்த தேறுமோ
மல்காப் புனறதும்ப மாநிலத்துக் கண்பிசைந்து
பல்காற் ‡பொருளழற்றும் பாற்கடலோன் றீந்தார்க்கே.

---

* ஆற்குழை - ஆலந்தளிர்.

† தொல்காப்பியதேவர் - இவரொரு புலவர்.

‡ பொருளழற்கும் - பிள்ளையழுதற்கும்.

காட்டுவழியிற் போகும்போது இளஞ்சூரியர் வினவுக்கு முதுசூரியர் விடை கூறியது.

குன்றும் வனமுங் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ—வொன்றுங்
கொடாதாரைச் *சங்கென்றுங் கோவென்றுஞ் சொன்னு
விடாதோ வதுவே யிது.

பத்திராசிரியர்.

இராமாவதாரச் செய்யுட்பாடாந்தரம்.

ஆற்றுப்படலம்.

மல்கிய கேகயன் மடந்தை வாசக
நல்கிய தரிவையர் நடுவிற் கேகொலாம்
புல்கிய மலர்வடம் பூண்கி லாமையா
லொல்கிய வொருவகை பொறையு யிர்க்கவே.

என்னும் சக-ம் செய்யுளில், 'ஒல்கிய வொருவகை பொறையு யிர்க்கவே' என்பது 'ஒல்கிய தொருவகை பொறையு யிர்த்ததே' எனக்காணப்படுகின்றது. 'பொறையு யிர்க்கவே' எனக்கொள்ளுமிடத்து முடிபின்மையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. வலிந்து முடித்தல் இத்துணைச் சிறப்பின்று என்க.

கிளைகண்டு நீங்குபடலம்.

ஆய காதலொ டையனைக் கொண்டுதன்
தூய சாலை யுறைவிடந் துன்னினான்
மேய சேனைக் கமைப்பென் விருந்தெனத்
தீயி னுவுதி செங்கையி னீக்கினன்.

என்னும் கூ-ம் செய்யுளில், 'தீயினுவுதி செங்கையி னீக்கினன்' என்பது 'தீயினுகுதிச் செல்வனுஞ்சிந்தித்தான்' எனக்காணப்படுகின்றது. 'தீயினுவுதி செங்கையினீக்கினன்' என்பது பொருள் கொள்ளுமிடத்துப் பொருத்தமின்மையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. வருஞ்செய்யுளில் 'தீனைய' வென்பதற்கும் பின்னையதே பொருத்தமுடைத்தாதல் காண்க.

---

* சங்கநிதியென்றும், காமதேநுவென்றும்.

ஷை

கோதறத் தவஞ்செய்து குறிப்பி னெய்திய
நாதனைப் பிரிந்தன னலத்து நீங்கினள்
வேதனைத் திருமகண் மெலிகின் றாள்விடு
தூதெனப் பரதனுந் தொழுது தோன்றினன்.

என்னும் ருஉ-ம் செய்யுளில் 'நாதனைப்பிரிந்தன னலத்து நீங்கினள் வேதனைத்திருமகள்' என்பது 'நாதனைப்பிரிந்துதன் னலத்து நீங்கிய-வேதனைப்பூமகள்' எனக்காணப்படுகின்றது.

பிரிந்தவள் பூமகளாதலின் 'பூமகள்' எனக்கோடலே பொருத்தமுடைத்து. பரதன் ஸ்ரீராமபிரானை அழைத்துவரும்படி காடுசென்றதும் அரசுசெய்வித்தற்பொருட்டே யாதலிற் பின்னையதே பொருத்த முடைத்தாதல் காண்க.

ஷை

வரதன் றுஞ்சினன் வைய மானையாற்
சரத நின்னதே மகுடந் தாங்கலாய்
விரத வேடநீ யென்கொல் வேண்டுவான்
பரத கூறெனப் பரிந்து கூறினன்.

என்னும் கூசு-வது செய்யுளில் 'விரதவேடநீ யென்கொல் வேண்டுவான்' என்பது 'விரதவேடநீ யென்கொன் மேவினாய்' எனக்காணப்படுகின்றது. 'வேண்டுவான்' என்பது பொருள் கொள்ளுமிடத்து முடிபுஞ் சிறப்பு மின்மையின்'மேவினாய்' என்பதே சிறப்புடைத்தாதல் காண்க.

ஷை

மனக்கொன் றுதன வரத்தி னின்னையு
நினக்கொன் றுமில்ல நிறுவி நேமியான்
றனக்கொன் றுடருந் தனைய னாகலா
லெனக்கொன் றுதவ மடுப்ப தெண்ணிறால்.

என்னும் கூஅ-வது செய்யுளில் 'எனக்கொன்றுதவ மடுப்பதெண்ணிறால்' என்பது 'எனக்கன் றேதவ மடுப்ப தெண்ணிலே' எனக்காணப்படுகின்றது. 'ஒன்று' என்பது பொருள் கொள்ளுமிடத்துப் பொருத்தமின்மையின் 'அன்றே' என்பதே பொருத்தமுடைத்து. சிந்திப்பின், நமக்கல்லவா? தவமியைவது எனப்பொருள் கொள்ளுமிடத்துப் பின்னையதே பொருத்தமுடைத்தாதல் காண்க. யான்றான் றவஞ்செய்தற்குரியவன் என்பது கருத்து.

ஷை

இம்மை பொய்புரைத் திவறி யெந்தையா
ரம்மை வெம்மைசேர் நரக மாளயான்
கொம்மை வெம்முலைக் குவையின் வைகிவாழ்
செம்மை சேர்நிலத் தரசு செய்வெனே.

என்னும் ககഠ-வது செய்யுளில் 'கொம்மை வெம்முலைக் குவையின்வை கிவாழ்' என்பது 'கொம்மை நன்னிதிக் குவையின் வைகிவாழ்' எனக்காணப் படுகின்றது. ஈண்டு மகளிரின்பத்தை வைத்துக்கூறல் சிறப்பின்மையின் நன்னிதி என்பதே சிறப்புடைத்து. நன்னிதி—இன்பத்தைத்தரும் நிதி. அரசிற்குச்செல்வமே இயைபுடைத்தென்க. எந்தை துன்பத்தைத்தரும் நரகத்தையாள, நான் இன்பத்தைத்தருஞ் செல்வத்தின்கண்ணே நிலையுற்று வாழுகின்ற அரசை ஆள்வேனே என்பதுகருத்து. குவை என்பதும் முலைக்கியைபின்மை காண்க.

ஷை

அன்றவ னுலகினை யளிக்க வாகிய
தின்றனிக் குலமுத லுள்ள வேந்தர்க
ளின்றள வினுமுறை யிகந்து ளாரிலை
யொன்றுள துரையின முரைக் கேட்டியால்.

என்னும் கஉஉ-வது செய்யுளில், 'அன்றவனுலகினை யளிக்கவாகியது' என்பது 'அன்றவனுலகினை யளிக்கவாக்கிய' எனக்காணப்படுகின்றது. 'ஆகியது' என்பது தன்வினையாதலின் 'ஆக்கிய' தென்பதே பொருத்த முடைத்து. உலகினைக்காக்கும்படி சிருட்டித்த என்பது பொருள்.

ஷை

தாய்பணித் துவந்தன தந்தை செய்கென
வேயவெப் பொருள்களு மிறைஞ்சி மேற்கொளாத்
தீயவப் புலையனிற் செய்கை தேர்கிலா
நாயெனத் திரிவது நல்ல தல்லதோ.

என்னும் கஉஎ-ம் செய்யுளில் 'தீயவப் புலையனிற் செய்கை தேர்கிலா-நாயெனத் திரிவது நல்ல தல்லதோ' என்பது 'தீயவப் புலையனி லிகழ்ந்து தேர்கிலா-நாயெனத்திரிவது நல்ல தாகுமோ' எனக்காணப்படுகின்றது. நல்லதல்லதோ' என்பது'நல்லதல்லவா' எனப்பொருள்பட்டுப் பொருத்த மின்றாதலின் 'நல்லதாகுமோ' என்பதே பொருத்தமுடைத்து. புலையனைப்போல நானும் அப்பணியை இகழ்ந்து எனப்பொருள் கொள்ளுமிடத்து இகழ்ந்து என்பதும் சிறப்புடைத்தாதல் காண்க.

ஆரணியகாண்டம்.

விராதன்வதைப்படலம்.

முத்தி ருத்தியவ் விருந்தனைய மொய்நகையொடுஞ்
சித்தி ரக்குனி சிலைக்குமரர் சென்றணுகினர்
அத்தி ரிப்பெய ரருந்தவ னிருந்தவமைதிப்
பத்தி ரப்பழு மரப்பொழி றுவன் றுபழுவம்.

என்னும் உ-ம் செய்யுளில் 'முத்திருத்தி யவ்விருந்தனைய மொய்நகையொடும்' என்பது 'முத்திருத்திய தெனத்திகழு மொய்நகையொடும்' எனக் காணப்படுகின்றது. ''முத்திருத்தியவ் விருந்தனைய'' என்பது பொருட் பொருத்தமின்ருதலின் 'முத்திருத்திய தெனத்திகழும்' என்பதே பொருத் தமுடைத்து.

சரபங்கர்பிறப்புநீங்குபடலம்.

குரவங் குவிகோங் கலர்கொம் பிறைெடும்
இரவங் கனுறும் பொழுதே கினராற்
சரவங் கனிருந் துதவங் கருதும்
மரவங் கிளர்கோங் கொளிர்வா சவனம்.

என்னும் க-ம் செய்யுளில் 'சரவங்கனிருந்து தவங்கருதும், மரவங்கிளர் கோங்கொளிர்வா சவனம்' என்பது 'சரவங்கனிருந்து தவஞ்செய்வனத்,தர வங்கிளர் வெஞ்சிலை யாண்டகையோர்' எனக்காணப்படுகின்றது. 'கொம்பிறைெடும்' எனக்கூறுதலின் ஆண்டகையோர் என எழுவாய் வெளிப் பட்டுவருதலே சிறப்புடைத்தென்க.

அனையின் றுறையைம் பதொடைம் பகுநால்
வினையின் றொகைவேள் விநிரம் பியமா
முனைவன் முதுதே வரின்மூ வரலார்
புனையும் முடிதுன் றுபொலன் கழலான்.

என்னும் ௫-ம் செய்யுளில் 'அனையின்றுறை' என்பது 'அனலின்றுறை எனக்காணப்படுகின்றது. வேள்விக்கியை புடையது அனலாதலின் 'அன லின்' எனக்கோடலே பொருத்தமுடைத்து. சுட்டின்கட் பொருட்சிறப் பின்மைகாண்க.

சி. கணேசையர்.

நூலாராய்ச்சி.

(சகஎ-ஆம் பக்கத்தொடர்ச்சி).

தொல்லுரை யாவுமே மெய்யுரை, தொன்முறை யாவுமே நன்முறை என்பன எத்துணை உண்மை பொதிந்த உரைகள் என்பது யாம் முதற்கண் ஆராய்தற்குரியது. பழமுறை எல்லாம் இழிமுறை என்றேனும், பழவுரை எல்லாம் வழுவுரை என்றேனும், அவ்வுரையினும் முறையினும் பெரும்பகுதி பழுதென்றேனும் யாம் கூறிலம். எவ்வுரையாயினும் எம்முறையாயினும் தொன்மைச் சிறப்பான் மாத்திரம் மெய்ம்மையும் நன்மையும் எய்தா என்பதும், பகுத்தறிவுள்ள மக்கட் பிறப்பினர் யாவரும் நான்முறைகளைத் தம் அறிவுக்கு ஏன்றவாறு ஆராய்ந்து உண்மை தெளிந்து கொள்ளவும் தள்ளவும் உரிமை உடையர் என்பதுமே எம் கூற்றுக்கள். எமக்கு இயற்கைப் பிரமாணமாகத் தோற்றும் இத்துணிபை அங்ஙனம் காணவொண்ணு ஏனையர்பொருட்டு எம்சிற்றறிவினுக்கு எட்டியவாறு விளக்குவேம். உலகத்திலே அரிய பெரிய நூல்களைப்பற்றி வழங்கும் அபிப்பிராயங்கள் எவ்வாறு விளைகின்றன, நடைபெறுகின்றன என்பதை மேனாட்டு மேதாவி ஒருவர் பின்வருமாறு விவரித்துளர்: 'இவ்வபிப்பிராயங்கள் சாமானிய பாக்களால் தெரிந்து தீர்மானிக்கப்படா; மிகச்சிலராம் பேரறிஞரால் தீர்மானிக்கப்பட்டுச் சாமானியரால் கையாளப்படும். மிகச்சிலரென மேற்சுட்டிய பேரறிஞர் குறிப்பிட்ட நூலின் நன்மைக்கும் அருமைக்கும் ஏற்ப எண்ணிற் குறைந்தவரா யிருப்பர். இச்சிலரது கோட்பாடு அறிவில் அவர்க்கு அடுத்த கீழ்ப்படியில் உள்ளார்க்கு வெளியிடப்படும். முதற்கண் குறித்த சிலரினும் எண்ணின் மிக்க இக்கீழ்ப்படி அறிஞர், தம்மினும் அறிவிற்குன்றினோரும் எண்ணில் மூன்றினோருமான அடுத்த கீழ்ப்படியாளர்க்குத் தாம் கேட்டறிந்த அபிப்பிராயத்தை ஓதுவர். இவ்வண்ணம் படிப்படியாய்க் காலக்கிரமத்தில் சில தெள்ளறிஞர் மனக்கோள் (நீர்மடுநடுவண் எறியுண்டதோர் கல்லிற் பிறந்த அலைபோல) உலகெங்கும் பரவிச், சிறந்ததொரு மதக்கோட்பாடு போல நம்பப்படும். அவ்வபிப்பிராயமும் அதற்கேதுவான நூலின் அருமைபெருமைகளும் எவ்வளவு தம்மறிவுக்கு மேற்பட்டனவாயும்

தம் யூகத்தை மீறினவாயும் இருப்பவோ, அவ்வளவு சாமானிய ஜனங்கள் அதை உறுதியோடும் பக்தியோடும் கைப்பற்றுவர். ஒவ்வொரு படியினர்க்கும் தம்மின் அறிவிற் சிறந்தார் மாட்டுள்ள முழு நம்பிக்கையும் அதனுல் விளையும் மரியாதையுமே இதன் காரணம். இக்கூற்றின் உண்மையை அறிய விழைவார், உதாரணமாக, வடமொழியில் மறைகளைப் பற்றியேனும் தென்னுரையில் திருக்குறளைப் பற்றியேனும் நடைபெறும் உலகபிரசித்தியையும், அப்புகழ் எவ்வளவு பெரிதோ அவ்வளவு சிறிதே அந்நூல்கள் பயிலப்படுகின்றன என்பதையும் நினைந்து ஒப்பு நோக்குக. ஆயினென்; அவ்வுலகுரைக்கு மூலமாய் நின்றது நூலை நன்கு மதித்தற்குரிய நுண்ணறிவினரது துணிபேயன்றேவெனின், கூறுதும். நூலாயும் நுண்ணறிவினர், நூலின் குணநாடிக் குற்றமும் நாடி அவற்றுண் மிக்கவே கொள்வர். ஆதலின் அன்னுர் புகழ்ந்து போற்றும் நூல்களில் குற்றமே இன்றெனக் கொள்வது பொருந்தாது; பல் வேறு புரைகளும் பொய்யுரைகளும் மலிந்து கிடக்கலாம்; அவற்றினும் குணங்கள் மிகைபடக் காணின் அவர் போற்றவே செய்வர். சீத்தலைச் சாத்தனுர் காலத்து அரங்கேறிய நூல்களில், திருக்குறளன்றி, ஏனைய நூல்கள் இக்காலத்தே எல்லையிலிசையொடும் இலங்கிலவோ? நூல்களை ஆய்தற்கான நுண்ணறிவில்லாச் சாமானியமாக்கள், அவற்றின் குணங்களையேனும் குற்றங்களையேனும் பெரியோர் கொண்ட அபிப்பிராயங்களின் ஆதாரங்களையேனும் அறியகில்லார்; ஆயின் அவ்வபிப்பிராயங்களை ஒன்று பத்து நூறுக விஸ்தரித்துப் பரவச்செய்யும் பேராற்றல் உடையராவர். 'சர்வ வல்லமையுள்ள தெய்வத்தின் முன்பாக நான் சொல்வதெல்லாம் முற்றிலும் மெய்யே' என்று சத்தியவிரதம் பூண்டு நியாய சபையிலே படியேறிக் கரிகூறுவாரில், உளமறிந்த பொய்யர் கிடக்க, உள்ளதை உள்ளவாறு உரைக்க விரும்பும் சான்றோர் வாக்கையே ஆராயினும், அன்னுர் சாமானிய மாந்தராய் மட்டும் இருப்பின், அவர்கூற்று உண்மையின் மாறுபட்டு மிகையுறலைக் காணலாம். அப்போழ்து அவர் மனமறியப் பொய்கூறிலர்: தாம் உணர்ந்தனவற்றை அலங்கரித்து விரித்துரைத்தலும், தாம் அறியாமே தம்மைத் தூண்டும் மனோபாவ வயத்தினராய் அறியாதனவற்றையும் சிலவமயங்களில் அறிந்தனவாக அனுபவத்துக்கிணங்கக் கூறுதலும், அத்

தகையோர் இயற்கைக் குணமாம். அஃதுவேனும் உண்மையில் திறம்பா வாய்மொழி நாகாக்குர் நோன்பினர்க்கும் இயல்பின் அமைவது எளிதன்றாக, இன்னார்க்கு எங்ஙனம் அமையும்? ஆதலின், காலையில் அடிப்புண்ட நீர்நாகத்தை மாலைக்குள் திட்டிவிடமுள்ள ஐந்துதலை நாகம் ஆக்கிவிடுதல் உலகவழக்கு. கொங்கணியன் புலிகண்டகதை யாரும் அறிந்ததே. இத்தகைய உலகபிரசித்தி, தம் கண்கள் உண்மையைக்காணுவாறு மறைத்துவிடாது. நாலாராய்வார் ஒவ்வொருவரும் விலக்கிக் காத்தற்குரிய தோர்பொய்த்திரையென்பது, நன்கு விளங்கும். இத்தகைத்தே உலகஇகழ்ச்சியும்: உலகத்தால் அவமதிக்கப்பெற்ற நூல்களிற் குணங்களும் மெய்யுரைகளும் நிகழப் பெறுவெனக் கொள்ளலாகாது; குற்றங்கள் மிகுந்திருக்கும் என்றே சாதாரணமாய் மதிக்கலாம்.

ஜனசமூகத்தின் நடுவே பிறந்து வளரும் நாம் ஒவ்வொருவரும் இளம் பிராயம் தொட்டு அவ்வக் கூட்டத்தாருள் வழங்கும் பல்வேறு அபிப்பிராயங்களைக் கைப்பற்றுகிறோம். நாமறியுமுன்னரே அவை நம் மனப்புலத்திற் பதிந்து வேரோடித் தழைக்கின்றன. ஆரணங்களையும், ஆகமங்களையும், புராண இதிகாசங்களையும், இன்னும் பல நூல்களையும்பற்றி, அரிச்சுவடி தொடங்குமுன்னமே நாம் அநேக அபிப்பிராயங்களைக் கொள்கின்றோம். தெருவில் விளையாடும் சிறுமகார்க்குள் ஒருவன் வருங்காலத்தொன்றைக் கூறின், 'ஆம், உன் பேச்சென்ன வேதவாக்கோ?' அல்லது, 'நீ என்ன பிரகஸ்பதியோ?' என்னும் உரைகள் நிகழ்கின்றன. நம் வாழ்நாளில் நிகழும் சம்பவங்களைப்போல உண்மையில் நிகழ்ந்த சம்பவங்களே புராண இதிகாசங்களில் நிகழ்ந்தவாறு கூறப்பட்டுள்ளனவாய் நாம் நம்புகிறோம். 'இருட்டிலே பூச்சாண்டி இருக்கிறான்' என்னும் அன்னை உரையை நம்புவது போலவே இயற்கை விரோதமான பல் வேறு பூதங்களையும் இராக்கதர்களையும் செயல்களையும் மெய்யென நம்புகின்றோம். இதுவுமன்றி, நம்முன்னோர்கள் தேவாம்சங்களென்றும், அவர்கள் இயற்றினவெல்லாம் சத்தியவாக்கென்றும், ஆசாரமெல்லாம் சதாசாரமென்றும், இவற்றை ஐயுறல் நிரீச்சுரவாதமாம் என்றும் போதிக்கப்பட்டு முழுதும் நம்புகிறோம். தாய்முலைப்பாலோடே இக்கொள்கைகளும் நமக்கு ஊட்டப்படுகின்றன. இவ்வாறு பதிந்தன எளிதில்

மாறுபவோ? தெள்ளறிவாம் கடப்பாரையும் அவற்றைக் கல்லுவ தில் முனைமழுங்குமன்றோ? பின்னருற்ற திண்ணறிவின் பயனாக அவற்றைக் களைந்து ஒருசார் நீக்கினும், தொட்டிற்றொழுனை இழக்கும் துன்பம் அப்பொழுது விளையுமன்றே. இது நிற்க.

தொன்மைபற்றி உண்மை நாட்டும் உரையாளர் இக்காலத்தோராகிய நாமும் சில்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் அக்காலத்தோர்க்குச் சேணிடைத் தொல்லோராய் விளங்குவோம் என்பதை நினையார் போலும். தொன்னூலொடும் முறையொடும் ஒப்புநோக்கி இப்பொழுது கடியப்படுவனவெல்லாம் அக்காலத்தே தொன்னூலாயும் தொன்முறையாயும் கொண்டாடப் பெறுபவோ? இக்காலத்து வழுவுரைகள் அக்காலத்தே பழைய மெய்யுரைகளாகப் போற்றப்படுபவோ? நமது பின்னோரே அக்காலத்திருப்பாராதலின், அவர்க்கும் இத்தகைய மயக்கம் உண்டாகாவண்ணமும், இப்போழ்தினும் அப்போழ்தினுள் பன்னூறு மடங்கு அறிவு வளர்ந்து தழைத்தோங்குமாறும் திருவருளை வேண்டுவோம். தம்மினும் * தம்மக்கள் அறிவுடைமையன்றோ மாநிலத்தில் மன்னுயிர்க்கெல்லாம் இனிது? 'அறிவிற் பெருகியுள்ள நாம் நம்முன்னோரை அறிவினர் என்கின்றோம்; நம்மினும் பேரறிவினராம் நம் புதல்வர் நம்மையும் அவ்வாறே (அறிவினர் என்று) கூறுவார் என்பது திண்ணம்.' என்னும் மேனாட்டுரை நம் கொள்கையொடு முரணியதேயாம். மானிடரானோர் எல்லோரும் தம்முள் ஏற்றத்தாழ்ச்சி வாய்ந்த சிற்றறிவினரே யன்றி ஒருவரேனும் முற்றறிவினரிலர் என்பதை மறுப்பாரில்லை. 'ஆனைக்கும் அடிதவறும்' 'கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி கதலித்தண்டுக்கு நாணும்', 'கொல்லுலைக் கூடத்தால் தகராதகல் சிற்றுளியால் தகரும்' இவைபோன்ற மூதுரைகள், மானிடருள் அறிவான் மேலானோர் பிழைக்கக் கூடுமென்பதையும், சிலவேளை அப்பிழைகளைக் கீழானோர் உணர்ந்து திருத்தலாகும் என்பதையும் விளக்குப. இதனால் ஆன்றோர் நூல்களை ஆராய்ந்து குற்றங்கடிந்து குணங்கோடல் அவர்க்கு இழுக்காகாது, இயல்பு முறையேயாம் என்பது தெளியப்

* இத்திருக்குறளுக்குப் பரிமேலழகரால் வேறு கருத்தொடு உரை கூறப்பட்டுளது.

பட்டது. அன்றியும், தொன்னூல்களிற்பல ஒன்றோடொன்று முரணுவதும், ஒன்றையொன்று கடிந்துரையாடுவதும், அக்காலத்தே அவை பிழையிலா நூல்களாகப் பாராட்டப்பெற்றில என்பதை வற்புறுத்தும். ஆயின் அவற்றை ஆராய்ந்து தெளிதலே எப்பொழுதும் நல்லறிவாம்.

உண்மை இவ்வாறிருக்கத், தொன்னூல்கள் மாட்டு இத்துணை மூடபக்தி எங்ஙனம் விளைந்ததோ சற்றுக் கவனிப்போம். ஆப்பிரிக்கா கண்டத்திலே ஒரூரில் தம் தொழிலை நடாத்திவந்த கிறிஸ்துமதப் போதகரொருவர் நாகரிகமற்ற வனவாசியாகிய அவ்வூரான் ஒருவனோடு ஒருநாள் வெளியே சென்றார். தமக்கு வேண்டியதொன்றை வீட்டில் மறந்து வைத்துவிட்டதை வழிநடுவில் உணர்ந்து, எழுதுகருவிகள் ஒன்றும் கைவசமின்மையால், மரப்பட்டை ஒருதுண்டையெடுத்துச் சுண்ணும்புக் கட்டியினால் தமக்குவேண்டிய பொருளின் பெயரை அதன்மேலெழுதி, அப்பட்டையை அவ்வனவாசிகையிற் கொடுத்து, அதைத் தம் மனையாட்டியிடம் கொடுத்து அவள் தருவதை வாங்கிவரச்சொன்னார். எண்ணெழுத்தென்னும் கண்களைப்பற்றிக் கனவும் கண்டறியா அப்புல்லறிவாளன், அவர் தன்னைப் பரிகசிப்பதாக நினைத்து வாதாடினான்: வாய்மொழியின்றி, அவர்க்கு வேண்டியதிதுவென்று அவர் மனையாட்டி அறிவதெப்படி? மரப்பட்டை வாய்பேசுமோ? இத்தூதை மேற்கொண்டு செல்லின் தன்னினத்தார் தன்னைப் பித்தனாய் மதிப்பரன்றே? கடைசியில் அவரையே பித்தராய் எண்ணிக்கொண்டு அவரது ஆணையை அஞ்சினவனாய் அவன் அவர் வீட்டுக்குச் சென்று, அம்மரப்பட்டையை அவர் மனையாட்டி கையிற் கொடுத்தான். இதென்ன புதுமை! அப்பட்டையைப் பார்த்துக் கீழே எறிந்துவிட்டு அவள் வீட்டுட் போய்த் தன் கணவர் விரும்பிய பொருளைக் கொணர்ந்து அவன் கைக்கொடுத்துத் தன் கணவரிடம் கொடுக்கச் சொன்னாள். அப்பட்டையை எடுத்துச்சேமித்து வைத்துக்கொண்டு காணுதுகண்ட அவ்வனவாசி வேகமாயோடிப்போய் அப்பொருளைப் போதகரிடம் கொடுத்துவிட்டுத், தன்னினத்தார் வசிக்கும் சேரிக்குச் சென்று அப்பட்டையை அவர்க்குக்காட்டித் தான்கண்ட அதிசயங்களையெல்லாம் பன்னிப் பன்னி வியந்தான்.

என்னே இவ்வெள்ளைமேனியர் மதி, மரமட்டைகளையும் பேசச்செய் கின்றனர்!

வனவாசிகளுக்கேயன்றி நாகரிகமுற்றோர்க்கும் தம்மறிவைக் கடந்த விஷயங்களில் அளவின்றி வியப்புறுதல் இயல்பே. ஆயின் அவ்வியப்பு எப்பொழுதுமே புகழ்ச்சியாய் முடியாது; வெகுவாய் இகழ்ச்சியாயும் முடியும். மேற்கூறிய கதையில் அவ்வனவாசிகள் அப்போதகர் செயலைப் பைசாச மந்திரோபாயமாக மதித்து, அப்பட்டையை ஊர்ப்புறத்தே எரித்துத் தம்மூர்க்கும் தமக்கும் தீங்குறு வண்ணாம் தம்முறைப்படி கழுவாய் இயற்றியிருந்தாலும் இயல்போ டொத்திருக்கும்.

(இன்னும்வரும்.)

அ. மாதவையர்.

செய்யுள்.

(சஉஉம் பக்கத் தொடர்ச்சி.)

மன்பதைகளில் எல்லாருமே எவ்வகைத்தொழிலையும் செய்யக் கூடும் என்பதில்லை. "எல்லார்க்கும் ஒவ்வொன்றெளிது". ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழிலுக்கேற்ற இயற்கையமைப்பு இருக்கும். அதையறிந்து அவரவர் அவ்வத்தொழிலிற் பிரவேசித்தால் பலதொழில்களும் செவ்விபெற்று நடக்கும். கையும் விரல்களும் மிருதுவாய்ச் சிறியனவாய் இருப்பவர்கள் மருத்துவச்சிவேலைக்கேற்றவராவர். சுருதிலய உணர்ச்சியோடு நல்ல சாரீரமும் பெற்றவர்கள் ஸங்கீதஸாஹித்தியராவர். கல்வியறிவோடு உயரமும் காத்திரமுமான உடல்பெற்றவர்கள் உவாத்திமைத்தொழிலுக்கு உரியவராவர். திருடன் இராஜவிழி விழிப்பானா? கொட்டிக்கிழங்கு வெட்டுகிறவனுக்குக் கோயிலில்வந்து ஆடத்தெரியுமா? நெல்லுக்குற்றுகிறவளுக்குக் கல்லுப்பரீக்ஷை தெரியுமா? கருவிலே திருவில்லாதவர்களைக் கவிபாடச்சொல்வது கூலிக்குக்குற்றுகிறவளைக் கேளிக்கைஆடச்சொல்வதுபோலாம். கமனசக்தி உள்ளவர்களிடத்தில் கவிகள் தாமாகவே சுரக்கும். "தெய்வப்புலவனுக்கு நாஉணரும் சித்திரவோடாவிக்குக் கை உணரும்."

நிகண்டு வாகடம் சோதிடம் முதலியன ஞாபகநிமித்தமாக எதுகை மோனையுடனே பாட்டில் அமைக்கப்பட்டு வந்தனவேனும் அவைகளில் கவித்துவமென்பது ஒன்றுமில்லை. யாப்பருங்கலம் காரிகை முதலிய இலக்கணங்களில் சொல்லியிருக்கும் விதிகளையெல்லாம் இலக்கியப்பயிற்சியுள்ள ஒருவன் இரண்டொருநாளில் அறிந்துகொள்ளக்கூடியனவே. அவ்விதிகளையறிந்த எவனும் சாஸ்திரவிஷயங்களை ஞாபகநிமித்தமாக எதுகை மோனையுடனே பாட்டில் அமைக்கலாம். எப்படியும் சதுரகராதியில் எதுகைபகராதியும் ஒன்று ஏற்பட்டிருப்பதனால் எதுகை விஷயத்தில் யாதொருகஷ்டமும் இல்லை. இன்னபொருளை இத்திறப்பாட்டில் இன்னவிதமாக அமைக்க என்றவளவிலே அங்ஙனமே அமைத்துக்கொடுக்கின்ற ஆசுகவிகள் அந்த வித்தையை அப்பியாசம் பண்ணினவரே யாவர். கூடசதுக்கம் கோமூத்திரி நாகபந்தம் முரசபந்தம் முதலான சித்திரகவிகளைப்பாடுவதும் அப்பியாச வித்தையேயாகும். மதுரகவிகளும் விஸ்தாரகவிகளுமே கவிவர்க்கத்தில் சேர்ந்தவர்கள். பலவிதமான தொடர்நிலைச் செய்யுளும் தனிநிலைச் செய்யுளும் பாடவல்லவர்கள் அகலகவிகள் அல்லது வித்தாரகவிகள் எனப்பெறுவர். ஓசையும் பொருளும் இனிதாய் முழுதுஞ் செஞ்சொல்லாய் அலங்காரமுந் தொடையும் தெற்றென்று கேட்டார் துதிக்கும்படி பாடுவது மதுரகவி.

எடுத்த பொருளினோ டோசை யினிதாய்
அடுத்தவைசெஞ் சொல்லா யணியும் - தொடுத்த
தொடையும் விளங்க அவைதுதிப்பச் சொல்லின்
இடமுடைய மாமதுர யாப்பு.

என்றார் பாட்டியலார். இங்ஙனம் பாடவல்லவர் மதுரகவிகள் எனப்படுவர்.

காரிகைமாத்திரங்கற்றுக் கவிபாடுவோர் கவிகள் ஆகார். கவிகள் கருவிலே திருவுடையவர். பழைய காவியங்களை வாசிப்பதும் யாப்பிலக்கணமறிவதும் அவர்கட்கு ஒருவாறு துணைக்கருவிகளேயாகும். கல்விப்பயிற்சி கவித்துவத்தைப் பின்னும் மேம்படுத்துமேயன்றிக் கவித்துவத்தை உண்டாக்கமாட்டாது. கல்வியிற்பெரிய கம்பர்போன்ற கனகவிகளும்உளர். ஷேக்ஸ்பியர்போலே கல்விப்பயிற்சி வெகுவாயில்லாத மஹாகவிகளும் உளர். உலகியலை நன்கு

ண்ர்ந்து ரஸஞானம் விசேஷித்த மதியூகிகளாகையால் அவர்களுடைய கவித்துவம் தன்னூற்றலே ஆற்றலாக ஒளிர்வதாகும். கற்ற வித்தையைக் காய்ச்சிக்குடிக்கலாம். கவித்துவம் அது செய்யலாவதன்று. உள்ளடங்கா மகிழ்ச்சியாலும் உள்ளக்கொதிப்பினாலும் உதிப்பதே உத்தமகவிதை. உலகிற் பொருள்களைக் கண்ணாடியன்றிக் கல்லும் சுவரும் பிரதிபிம்பிப்பதில்லை. உலகவியற்கையைக் கவிதையாகிய கண்ணாடியால் பிரதிபிம்பிக்கச்செய்பவர்களே உத்தமகவிகள். உலகவியற்கைஎன்பதுபிரகுர்தி. மனுஷப்பிரகுர்தியையும்தேவசிருஷ்டியில் கேவலருக்கு விளங்காதபிரகுர்தி விசேஷங்களையும் உத்தமமான உலக நீதிகளையும் சுவைபட உரைப்பதே கவிலக்ஷணமாம். இங்ஙனம் உரைப்பதே தமிழில் 'பாடல்சான்ற புலனெறி வழக்கம்' எனப்படும். "இல்லது கூறுதல் தொல்லாசிரியர் தமிழ்வழக்கன்று" புனைந்துரை வகையால் புலவர் இல்லனவுங் கூறுபஎனின் உலகத்தோர்க்கு நன்மைபயத்தற்கு நல்லோர்க்குள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறமெனக்கருதி, நல்லோர்க் குள்ளனவற்றில் சிறிது இல்லனவுங் கூறுதலன்றி, யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார். இல்லதென்று கேட்டோர்க்கு மெய்ப்பாடுபிறந்து இன்பஞ் செய்யாதாகலின், உலகியலாவது எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழ்வது. "(நச்சினார்க்கினியர்) "செய்யுள்என்பது விழுமியபொருள் கொண்டு விளங்கிய சொற்றொடையாம். விழுமியபொருளாவது:- 'உனக்கு மகன் பிறந்தான்' 'உன் பகைவன் பட்டான்' என்னும் இத்திறத்த வாக்கியங்களால் விளையும் இன்பத்தினும் வேறாயதோர் பேரின்பம் விளைப்பது. இதனை விளக்குவன குணமும் அலங்காரமுமாம். ஆகவே செய்யுளுக்கு அப்பொருள் உயிரும் சொற்றொடை உடம்பும் குணவலங்காரங்கள் அழகுசெய்வனவுமாம் என்பது பெறப்படும். இதனை உள்ளிட்டே பவணந்திமுனிவர் 'பல்வகைத்தாதுவினுயிர்க்குடல் போற்பல, சொல்லாற் பொருட்கிடனாக வுணர்வினின், வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்' என்று கூறினார்" (தண்டியலங்காரஸாரம்).

குணவலங்காரங்கள் என்பதில் குணம் என்பது குணவணி; அலங்காரம் என்பது சொல்லணியும் பொருளணியுமாம். ஒருவனுக்குள்ளதிண்மை இளமை முதலிய தேககுணங்களும் தயைதைரி

யம் முதலிய ஆத்துமகுணங்களும் அவனைவிளக்குவதுபோலக் குண வணிகள் செய்யுளை விளக்குகின்றன. இளமை நீங்கிய உடம்பில் ஆபரணங்கள் விளங்காமைபோலக் குணவணிகள் இல்லாக்கவிகளில் உவமை முதலிய அலங்காரங்கள் விளங்கா. குணவணியாவது வாக்கியமாகிய முடிவின் நடையை நோக்கியது. இது நெறியெனவும் பாகமெனவும் படும். அஃதாவது கவியமைப்புவகை என்பதாம்.

கவியமைப்பில் ஓசையுடைமையும் ஆழமுடைமையும் இருத்தல்வேண்டும். பொருள் அழுத்தமும் சொல்வன்மையும் அமைந்து நடை மிடுக்காக இருப்பதைப் புலவர்கள் போற்றுவதில்லை. சொல்வன்மையின்றிப் பொருள் எளிதில் விளங்குவதான செய்யுள் நடையே சிறந்ததென்பது புலவர் துணிபு. வல்லினமுந் தொகை நிலைத்தொடர்களும் மிகுதலின்றி, வலிமெலியிடைகளும் நெடில் குறில்களும் கலந்து செவிக்கின்பந் தரத்தக்க சொற்கள் வரத்தொடுத்தலால் வாக்கியங்கள் தேனூறபாய்ச்சலாய் இனிமைபயக்கும். ஒவ்வொரு வாக்கியத்திலும் கருதிய பொருள் தெளிவாகப் புலப்படுதற்கு வேண்டிய சொற்கள் அமைந்திருக்கவேண்டும். ஒரு பொருளைப் புகழுமிடத்து அசம்பாவிதமாய் உலகவொழுக்கத்துக்கு விரோதமாகக்கூறுமல் உலகவியற்கைக்கியையப் புகழ்வதே சிறப்பாகும். குறிப்பினாலே ஒரு சிறப்பு விளைக்கும் பொருள்படப்பாடுவது உசிதம்.

தொடைகளைப்பற்றிநின்று அழகுசெய்வன குணவணிகள்: சொல்லையும் பொருளையும் பற்றிநின்று அழகுசெய்வன சொல்லணியாகிய அலங்காரங்கள். இளமை முதலியனபோல் ஒற்றுமை நயத்தினின்று அழகு செய்வன அவை. கடககுண்டலாதிகளைப்போல வேற்றுமை நயத்தினின்று அழகு செய்வன இவை. ஆதலால் சொல்லணி பொருளணியான அலங்காரங்களை இடமறிந்து ஏற்றபெற்றி அமைப்பதன்றி, அமிதமாக அமைப்பது அருவருப்பே தருவதாகும். தக்கபடியே குணவலங்காரங்கள் அமைந்துள்ள செய்யுளால் ஜனிக்கின்ற இன்பமானது அப்படிப்பட்ட செய்யுளைப் படிக்கும்படி உற்சாகத்தை உண்டுபண்ணுகின்றது. அவ்வின்பம் மனத்தைவிட்டகல்வதில்லை.

கவி செய்வதெல்லாம் காவிடமேயாயினும், தமிழில் உலா மடல் கலம்பகம் பரணி ஆற்றுப்படை முதலான தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களும் சிறுகாவியங்கள் எனப்படும். தன்னிகரில்லாத் தலைவன் வரலாறு உரைப்பதாய்ப் பலவருணனைகள் உள்ளதாய் ஒரு திறப்பாட்டாலேனும் பலதிறப்பாட்டாலேனும் அமைக்கப்பட்டு மெய்ப்பாடும் சுவையுந் தோன்றநிற்பது தொடர்நிலைச்செய்யுள் அல்லது பெருங்காப்பியம் எனப்படும். சிலப்பதிகாரம்—மணிமேகலை—சிந்தாமணி—கம்பராமாயணம் என்றாற்போல்வன பெருங்காப்பியத்துக்கு உதாரணமாம். "உலகவியல்பறிதலும் ரஞ்சனையும் காப்பியத்திற்குப் பயன்" என்பவாதலின் பலவருணனைகள் வேண்டுவனவாயின. 'தன்னிகரில்லாத்தலைவன்' என்ற கருத்து ஒப்புயர்வில்லாத நற்குண நற்செய்கைகளுடைய தலைவன்மேல் பிரபந்தம் இசைத்தல் இம்மை மறுமைக்கு உறுதிபயக்கும் என்பதாம். இப்படிப்பட்ட தலைவன் மேம்பாட்டைச் சிறப்பிப்பதாயின் இழிந்தோன் சிறப்புங் கூறற்குரியது."

சிறுகாப்பியமாயினும் பெருங்காப்பியமாயினும் மெய்ப்பாடும் சுவையுந் தோன்ற நிற்பதே செய்யுட்குச் சிறப்பிலக்கணம். மெய்ப்பாடாவது பொருட்பாடு. அஃதாவது உய்த்துணர்ச்சியின்றி அவ்விடத்து வந்தபொருளானே சொல்லப்படும்பொருள் தானே வெளிப்பட்டாங்குக் கண்ணீரரும்பல் மெய்ம்மயிர்சிலிர்த்தல் முதலாகிய சத்துவம்படுமாற்றான் வெளிப்படச்செய்வது. வடநூலில் பாவம் என்பதிதுவே. இதற்கு மனநிலை என்பது பொருள். சத்துவங்களெல்லாம் பிறரிடத்துள்ள சுகதுக்கங்களைத் தமதாகப்பாவித்தலால் வருவனவாகும். சுவையாவது வடநூலில் ரஸம் எனப்படுவது. சந்தோஷத்தை உண்டாக்குவது என்பதாம். சுவைகளுக்கு மெய்ப்பாடுகளே அடியாம். "இவை நாடகத்திலும் காவியத்திலும் செய்திறத்தினாலும் சொற்றிறத்தினாலும் தூண்டப்பட்ட வாசனையின் திண்மையால் தம்மவையே போல அநுபவநிலையில் வந்து ஆனந்தமயமாகவே நிற்பன." ஆகவே பாவனாசக்தியால் சுவை விளைப்பதே கவிலக்ஷணமாகும். பாவனாசக்திக்குக் கற்பனாசக்தி என்றும் ஒரு பரியாயநாமம் உண்டு.

*

கற்பித்தல் என்பது நியமித்தல் பிறப்பித்தல் என்பதாம். கற்பனை என்பது இல்லதை உள்ளதாக உண்டுபண்ணல். கவிகற்பனை என்பது ஒரு பொருளில் கவியானவன் தனது சாதுரியத்தால் முன்னில்லாத சுவையைப் பிறப்பித்தல். பொய்யும் புனைந்துரையும் கவிகற்பனையல்ல. கட்டுக்கூட்டாய் மனம்போன போக்கிலே உரைப்பதும் கவிகற்பனையன்று. உத்பிரேக்ஷை மாத்திரமுமே கற்பனையன்று. வர்ணியங்களை உள்ளது உள்ளபடியே உரைப்பது வசனத்திலும் வசனரூபமான சரித்திரத்திலும். கவிகற்பனைகலந்தபோது மாத்திரமே கத்தியமும் கத்தியரூபமான சரித்திரமும் பத்தியமாவது வர்ணியத்தை விளக்கும் பொருட்டும் பிரகுர்தியிலும் பிரகுர்திசம்பவங்களிலும் மற்றவர்களுக்குக் கட்புலனாகாத ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக்காட்டுவதும், வர்ணியங்களின் அந்தர்ப்பாவ சூட்சுமங்களைப் பலரும் அறிந்து வியக்குமாறு சித்திரித்துக் காட்டுவதும், சந்தர்ப்பங்களுக் கேற்றபடி கவியானவன் தற்குறிப்பேற்றியுரைப்பதும், 'அப்பத்தை எப்படி சுட்டாளோ அதற்குள்ளே தித்திப்பை எப்படி நுழைத்தாளோ' என்று அதிசயிப்பவனைப்போலச் சொற்களை இந்தக்கவி எப்படி அமைத்தானோ அதில் ஆனந்த ரஸத்தை எப்படி ஏற்றினனோ என்று படிப்பவர் அதிசயிக்கும்படி செய்வதும் முதலான சாதுரியங்கள் கற்பனசக்தியின் கூறுபாடுகளாம். பகுத்தறிவுக்கும் கற்பனசக்திக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஏனையரிடத்தில் காணப்படாத கவியூகை ஒருவனிடத்தில் சுவபாவமாய் எவ்வளவுக்கெவ்வளவு அமைந்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவாக அவன் கவித்துவம் சிறப்புறுகின்றது. இந்த யூகையில்லாதவிடத்தில் கவிரஸம் ஜனிப்பதில்லை. கவிரஸத்துக்குக் கற்பனசக்தியே காரணம். கற்பனசக்தியில்லாதவன் கவி என்கிற பெயருக்கு உரியனாகான். இந்த சக்தி விஞ்சிய பேர்களே மஹாகவிகள் எனப்படுவர். வடமொழியில் 'கவிகாளிதாஸ:' என்பதுபோலே, கிரீக்கில் ஹோமரும் லாடினில் டான்டேயும் இங்கிலீஷில் ஷேக்ஸ்பியரும் பாரசிகத்தில் பெர்டோஸியும் தமிழில் கம்பரும் இந்தக் கற்பனசக்தி விசேஷத்தாலே லோகப்பிரசித்தமான கவிகளாயினர்.

(இன்னும் தொடரும்.)

தி. செல்வக்கேசவராயன்.

பாண்டவர் காலம்.

பாண்டவர் காலத்தைப் பற்றி யான் ஆவணி மாசத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையிலெழுதிய விஷயம், பத்திராசிரியரை* நடுநிலை சிறிது தடுமாறவும், சுடுமொழி சிலவழங்கவுஞ் செய்தமை செந்தமிழ்ப் பத்திரிகாபிமானிகள் யாவர்க்கும் புலனும். சுடுமொழிக்கஞ்சுகின்றிலேன். அவர்கள் நடுநிலை பிழைத்தமைக்குக் காரணனாயினேனேயென அப்பழிக்குப் பெரிது மஞ்சுகின்றேன்.

பத்திராசிரியரவர்கள் நடுநிலை சிறிது துளங்கினார்களாயினும், "இக்காலத்துச் சரித்திரவாராய்ச்சி செய்வார் செய்யுந் தவறுகள் இன்னவை யென்று விளக்கி யெழுதியவற்றில் ஒரு பாகம் உண்மையுடையதேயாம்" என்று கூறியவாற்றால், யான் எழுதிய விஷயத்தில் ஒரு பாகமாயினும் அவர்களுக்கங்கீகாரமாயிற்றே எனமகிழ்கின்றேன். மற்றப்பாகம் அவர்கள் கூறியவாறு "வெற்றடுக்குச்சொற்கள்" ஆயினமை என்புன்புலமைக்கிழுக்கன்று. அது நிற்க.

யானெடுத்துக் காட்டிய பிருகத்சங்கிதைச் சுலோகம், "சககாலத்துக்கு 2526 வருஷங்களுக்கு முன்னே உதிஷ்டிரன் அரசியல் புரியும்போது சப்தரிஷிகள் மகத்திலிருந்தன" எனக் கூறுகின்றது. அச்சுலோகத்தில் வரும் சககாலம் என்பதற்குப் பூர்வவியாக்கியான கர்த்தர்களும், ஸ்ரீமத். N. சிதம்பர ஐயரவர்களும் விக்கிரமசகமெனப் பொருள் கொண்டார்கள். அவர்கள் கொண்டதையே யான் எடுத்துக்காட்டிப் பாண்டவர்காலம் 4500-க்கு முற்பட்டதென நாட்டினேன். அவ்விஷயத்தில், முந்தியுள்ள கர்க்காசாரியார் பிந்தியுள்ள விக்கிரமசகத்தைச் சுட்டல் கூடாதென்பது பத்திராசிரியர் அவர்கள் ஆக்ஷேபம்.

அஃதுண்மையே. பத்திராசிரியர் தமது கூற்றுக்கு வேலங்கைக் கோபாலையரவர்களை ஆதாராசிரியராக்கொண்டனர். கோபா

---

* பிள்ளையவர்களது கொள்கைக்கு எதிராகப் "பாண்டவர்காலம் II" எழுதினவர், "செந்தமிழ்" உதவிப்பத்திராசிரியர் ஸ்ரீமத்-மு. இராகவையங்காரவர்களேயன்றி யானல்லன். எனக்கும் அவர்க்குமுள்ள பெயரொற்றுமையால் அவரையானாகவெண்ணிப் பிள்ளையவர்கள் "பத்திராசிரியர்" என்றெழுதிச் செல்கின்றார்களாயினும்; செந்தமிழபிமானிகள், அவ்விடங்களை "உதவிப்பத்திராசிரியர்" என்றே படிப்பார்களென நம்புகின்றேன்—ரா. இராகவையங்கார், பத்திராசிரியர்.

லையரவர்கள் சக மென்பதற்குப் புத்தசகமெனப் பொருள் கண்டார்கள். புத்தசகந்தொடங்கி 2450 வருஷமாயினவன்றே. இத்தொகையோடு 2526 சேர வருவது 4976 வருஷமன்றே. எனவே உதிஷ்டிரன் காலம் 5000 வருஷத்தை அடுப்பது பிரத்தியக்ஷமன்றே.

கோபாலையரவர்கள் சகமென்பதற்குப் புத்தசகமெனப் பொருள் கொண்டதுண்மையே; அச்சுலோகத்தில் வரும் "ஷட்துவிகபஞ் சதுவி" என்பதற்குத் தொல்லாசிரியரெல்லாம் 2526 எனவுரைத்த பொருளைக் கொள்ளாது 26 தரம் 25 எனப் பொருள் பண்ணினர்களன்றேவெனின், அது புரட்டுரை யென்றே நம் பத்திராசிரியரும் அதுபற்றிப் பேசாதொழிந்தாரென்க. பாண்டவர் காலத்துக்கு எல்லை 3100 வருஷம் எனச் சங்கற்பித்துக்கொண்ட கோபாலையரவர்கள் இச்சுலோகம் தமக்குச் சத்துருவாயிருப்பது கண்டு அதனைத் தமது கொள்கைக்கியையுமாறு புரட்டி யர்த்தம் பண்ணிக்கொண்டார்களென்பது சிறுவர்க்கும் புலனும். சோதிஷ சித்தாந்தங்களில் பெருந்தொகைகளை ஒவ்வோரிலக்கமாக வலப்புறந்தொடங்கிக் கூறி இடப்புறத்தின் முடிப்பது வழக்காறன்றே. அதுவுமன்றி "ஷட்துவிகபஞ்சதுவியுதாசககாலே" என்பதில் "யுதா" என்னுஞ்சொல்லுக்குக் கூடிய வென்பது பொருளன்றிப் பெருக்கிய என்பது பொருளாகாமையுங் கண்டுகொள்க. ஆகவே வேலந்தையாருரை புரட்டுரையேயாமென்க.

இவ்வகைப் புரட்டுரைகாரரை உத்தமவித்துவசிகாமணியாகிய நம் பத்திராசிரியர் மேற்கொண்டு அவர் கொள்கையைப் போற்றுவது அறிஞர்க்கெல்லாம் பெருந்துக்கமும் வெட்கமுமாம்.

பத்திராசிரியர் தாம் பாண்டவர்க்குக் கூறும் 3100 வருஷ எல்லைக்கு ஆதாரம் வேலந்தைக் கோபாலையர் செய்த பூர்வ இந்திய காலாக்கிரமமென்னும் நூலென்றும், தமது கூற்றைக் கண்டிப்பதினும் வேலந்தையார் நூலைக்கண்டிப்பதே உலோகோபகாரமாமென்றும் கூறி அவரைக் காட்டிவிட்டுத் தாம் பின் வாங்குகின்றனர். இஃதொரு கிருஷ்ணவியாஜம்.

வேலந்தையார்நூல் ஸ்ரீமத். T. சதாசிவையரவர்களாற் கண்டிக்கப்பட்டது பத்திராசிரியர் அறியார் போலும்!

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

கொச்சி தேசத்துக் "காடர்கள்."

'காடர்' என்பார் யாவர்?

"காடர்களும்" யானைகளும் இல்லாவிடத்துக் கொச்சிசம்ஸ்தானக்காடுகள் பிறருக்கு யாதொருபலனையும் கொடுத்திராவென்று கூறப்பட்டிருக்கின்றது. யானைகளைப் பலரும் அறிந்திருக்கிறார்கள். காடர்களையறிந்தோர் சிலரேயாவரென்று மதிக்கிறோம். குன்றுகளும் மரஞ்செடிகொடிகளும் புதர்களும் நிறைந்த காடுகளில் அகப்படக்கூடிய விலையுயர்ந்த அமிசங்களில் காடர்களையும் யானைகளையும் சேர்க்கலாம். ஏனெனில் கொச்சிசம்ஸ்தானத்துக் காடுகளிலிருந்து வெட்டப்படும் பெருத்தகட்டைகளை யிழுப்பதற்கும் தூக்கிக்கொண்டுவருவதற்கும் யானையில்லாவிடில் முடியாது. அதுபோலவே காடர்கள் இல்லாவிடில் சாமானியஜனங்கள் பயமின்றிக் கொச்சிக்காடுகளுக்குள் போதற்கியலாது. காடர்களென்பார் கொச்சி சம்ஸ்தானத்துக் குன்றுகளில் வசிக்கும் ஒருவகை ஜாதியைச் சேர்ந்தவர்; ஏனையோர் இவர்களை வனவாசியென்றுங்கூறுவர்; ஜனத்தொகையில் மிகுந்திருக்கவில்லையாயினும் மலைநாடான கொச்சிசம்ஸ்தானம் முழுவதும் அவர்கள் பரவியிருக்கிறார்கள். ஊன்றிப்பார்க்குமிடத்து அவர்களுட்பெரும்பாலார் நீக்ரோவரை நிகர்த்தவராவரென்றுஞ் சொல்லலாம். அவர்களிடமிருக்கும் விசேஷமென்னவெனில் அவர்களுக்குக் கூர்மையில்லாத சப்பட்டையான மூக்கும் கருநிறங்கொண்ட சுருட்டைமயிரும் அம்மயிர் ஒன்றுசேராது, கறுப்புநிறமுள்ள முகத்திலும்தோளிலுமாய்த் தொங்குதலுமாம். கொச்சிசம்ஸ்தானத்திலுள்ள நெல்லியம்பட்டி, பொரம்பிக்குளம் மற்றுமுள்ளகாடுகள் எல்லாவற்றிலுமாக 600 காடர்களுக்கதிகமிருக்கமாட்டார்களென்று கூறப்படுகின்றது. காட்டுக்கிழங்குகளையும் பழங்களையும் தின்றுதான் அவர்கள் ஜீவித்துவருகிறார்களேயன்றி வேறுவிதமான காட்டுமிருகங்களை அடித்துக்கொன்று அவைகளின் இறைச்சியையாவது நாகரிகமிகுந்தஜாதியர் தினசரி உண்ணுவதற்காக உபயோகிக்கும் அரிசி, கோதுமை போன்ற நவதானியங்களையாவது சமையற்செய்து புசிக்கிறார்கள் என்று சொல்

வதற்கில்லை. சிற்சில சமயங்களில் மாமிசம் தின்பதில் அவர்கள் கவனஞ்செலுத்துகிறார்களெனினும் எக்காரணத்தாலும் காட்டெருதின் மாமிசத்தைத் தொடமாட்டார்கள். காட்டெருதோ (Bison) கொச்சிக்காடுகளெங்கும் நிறைந்திருக்கிறது. சாதாரணமாய்த் தென்னிந்தியாவிலுள்ளோர் தாம் தினந்தோறும் அரிசிச்சமையல் செய்து அன்னம்புசிப்பதோடு கோதுமையைச் சமையல்செய்து புசிப்பார்களானால் அதை எப்படி அதிகம், அளவுக்குமிஞ்சினதென்று நாம் கூறுகிறோமோ அப்படியே இக்காடர்கள் தாம் தினந்தோறும் உண்ணும் காய் கிழங்குகள் ஒருபுறமிருக்க வருஷத்தில் ஒருமுறையோ அல்லது இருமுறையோ இவர்கள் அரிசிகொண்டு சமையல்செய்து உண்பார்கள். இவர்கள் தங்கள் தெய்வத்திற்குப் பூஜை போடுவதுமுண்டு; பொங்கற் பண்டிகையென்று கொண்டாடுவார்கள்; இவர்களுக்குத் தெய்வபக்தி பொதுவாயிருந்தபோதிலும் பிரதானமாக இவர்கள் தொழுவது தேவி என்ற அம்மனைக்குறித்ததாகும். தேவிபூஜைசெய்யுங்காலத்தில் முதிர்ந்த வயதுடையோர் முன்வரமாட்டார்கள்; பூப்படையாப்பெண்கள் ஸ்நானம்பண்ணி வெகு ஆசாரத்துடன் அரிசிச்சமையல்செய்து அப்போதே பறித்த கந்தமூலாதிகளைப் பக்குவம்பண்ணி முதன்முதலாய் தேவிக்கு நிவேதனம் செய்துவிட்டுப் பின்புதான் சிறியோர் பெரியோர் எல்லோருமாகச் சேர்ந்து உண்பார்கள்; இவ்வளவு ஆசாரத்துடனிருக்கும் இவர்கள் அபின்சாராயம்போன்ற லாகிரிவஸ்துக்களை உபயோகிக்காமலிருப்பதில்லை. அவைகளிலும்பிரியமுண்டென்பதற்கறிகுறியாய் சிறிதுசிறிதாக அபினை உட்கொள்ளுவார்கள்; இதைக்காட்டிலும் சாராயத்தில் அவர்களுக்கு ஆர்வம் அதிகமுண்டு; ஏனெனில் கங்குகரையின்றி ஆண்பெண் இருபாலாரும் தத்தம் குஞ்சுகுழந்தைகளோடு சேர்ந்து குடிப்பார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள சூத்திரஸ்திரிகளையொப்ப இக்காடர்களைச் சேர்ந்த ஸ்திரிகள் புடவையுடுத்திக்கொள்ளுவார்கள்; இவர்களுக்கு ஆபரணாலங்கிருதமும் உண்டு; பொன் வெள்ளியினாலாய காதணிகளும் கழுத்தணிகளும் அவர்களுக்கு அகப்படாமற்போனாலும் இலைகளைக்கொண்டும் பூக்களைக்கொண்டும் அந்தஸ்திரிகள் அலங்காரஞ்செய்துகொள்ளுகிறார்கள். பித்தளைக்கம்பிகளினாற் செய்த நத்துத்தான் அவர்களது மூக்காபரணமாம். சென்ற சிலதினங்களாகவே ஆங்

கிலநாட்டிலிருந்து இந்தியாவில் இறக்குமதியாகும் வர்ணம்பூசிய சித்திரப்பட்டாடை (Chintz) அவர்களுள் உபயோகிக்கப்பட்டு வருகிறது; இக்காடர்களில் சிறிது மேன்மையடைந்தவராகக் கருதப்படும் ஸ்திரீகள் அச்சித்திரவாடைகளைப் புடவைகளுக்குப் பிரதி உடுத்திக்கொள்ளுகிறார்கள்.

இவரது நற்கருமம்.

இனி இவர்களால் இதர ஜனங்களுக்கு ஆகும் உதவியைக் குறித்துச் சிறிதுபேசுவோம். காட்டிலாகாச் சிப்பந்திகள் காடுகளுக்குள் வேலைசெய்யப்போகும்போது இக்காடரென்ற வனவாசிகள் கண்டிராக்டர்கள் போல முன்வந்து பனைநாரெடுப்பதிலும் வாழைநாரெடுப்பதிலும் கவனஞ்செலுத்துகிறார்கள். இவ்வாறெடுக்கும் நார்களால் வெகுபலமான கயிறுகள் பின்னப்படுகின்றன. இவைகளுக்கு யானைக்கயிறுகள் என்றும் பெயர்; ஏனென்றால் காடுகளில் வெட்டப்பட்டிருக்கக்கூடிய பெருத்தமரத்துண்டுகள் மூன்று நான்கினை ஒன்றாகச் சேர்த்து இக்கயிறுகளால் கட்டிவிட்டால் யானைகள் அக்கயிறுகளைப் பிடித்துத்துதிக்கையினால்தூக்கி யாதொருசிரமமுமில்லாமல் கட்டைகளை எவ்விடத்திற் சேர்க்கவேண்டுமோ அவ்விடத்திற் கொண்டுபோய்ச்சேர்க்கின்றன. பின்னும் இவ்வனவாசிகள் தேன்கூடு பொறுக்குவதிலும் பசைசேர்ப்பதிலும், மெழுகுசேகரிப்பதிலும் மிகுந்ததிறமைசாலிகளாயிருக்கிறார்கள்; மரமேறுவதில் இவர்களுக்கு நிரம்பப் பரிச்சயமுண்டு; கொச்சிக்காடுகளில் 100 அடி உயரமும் 20 அடி சுற்றளவுமுள்ள மரங்களைக்காணக்கூடும். இத்தகையமரங்களில் இவ்வேடர் ஒரு நொடியிற் குரங்கேறுவதுபோல ஏறிவிடுவார்கள். உண்மையைச்சொல்லப்புகின் காடர்கள் மரமேறும்போது ஒருவன் கீழிருந்தாவது சற்றுத் தூரத்திருந்தாவது பார்த்தால் குரங்கு மரத்தின் மீதேறுவதாகக்கூறுவனேயல்லாது மற்றொன்றுங்கூறான்; செங்குரங்கென்று நினையான்; கருங்குரங்கென்றுதான்நினைப்பான். அவர்கள் தேன்கூடடிப்பதுவெகு வேடிக்கையாயிருக்கும். பகற்பொழுதெல்லாம் காட்டில் அலைந்துதிரிந்து எங்கெங்குத்தேன்கூடுகள் காணப்படுகின்றனவோ அவ்விடங்களிலெல்லாம் அடையாளமிட்டு வந்துவிடுவார்கள். பகற்காலம்போய்இரவில்நன்றாய் இருள்கவ்விய பிற்பாடு அவர்கள் தம் கைகளில்தீவர்த்திகளைக்கொளுத்திக்கொண்டு மரங்களிலேறித்

தேன்கூடுகளை அடிக்கிறார்கள்; இருள்கவ்விய பின் அவர்கள் தேன் கூடுகளடிக்கப்போவானேன், பகற்காலத்தில் ஏன் போகக்கூடாதென்றாலோ தேனீக்கள் தம்மைவந்துகடிக்காமலிருக்கும்பொருட்டேயாம். தேன்கூடுகள் இருக்கும் மரங்கள் ஒரேசெங்குத்தாய்க்கிளைகளின்றியிருக்குமானால் இச்சாதியர்அத்தகையமரங்களில் நீளநீளமாகக் கொப்புகளை அடித்துப் படிக்கட்டுகளைப்போல் கால்வைத்தேறுவதற்கும் இறங்குவதற்கும் அநுகூலமாகச்செய்துகொள்ளுகிறார்கள்.

குடும்பவிவகாரங்கள்.

இனி இவர்களது குடும்பாசார வழக்கப்பழக்கங்களைப்பார்ப்போம். இக்காடர்கள் சூதுவாது செய்தலைச்சிறிதும் அறியார்; தம் ஜாதியரானாலும் வேறு ஜாதியரானாலும் தமக்கேதேனும் தீங்கு விளைத்தாலொழிய அவர்களிடமணுகார்; பண்டைக்காலப் பிராமணரையொப்ப இவர்கள் ஏகபத்னி விரதங்கொண்டவர்; ஆனால் ஒருவனது வாணாளில் கணவனாவது மனைவியாவது மாண்டுபோவாளாயின் பிழைத்திருப்போர் வேறு கணவனையாவது மனைவியையாவது தேடி மணந்துகொள்ளலாம் என்ற விதி அவருக்குள் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் சொன்ன சொற்பிறழார்; எடுத்தகாரியத்தைச் செய்துமுடிக்குந்தன்மையர்; பொய்பேசார்; மோசக்கருத்துடன் பிறரிடமணுகார்; வேலைசெய்வதிற்சிறிதும் பின்னிடார். அவர்கள் சவங்களைக்குழிவெட்டி நிலத்திற்புதைக்கிறார்களேயன்றித் தகனிப்பதில்லை. பகல் முழுவதும் வேலை செய்தாலும் அதனை அவர்கள் ஒரு பொருட்டாய் மதிப்பதுகிடையாது. எச்சுமையையும் தம்முதுகிலேயே சுமந்துபோகச் சித்தமாயிருப்பர். காடர் ஜாதியைச்சேர்ந்தமாதர்கள் சிற்சில விஷயங்களில் அந்தண ஜாதியாசார அநுஷ்டானங்களைச் செய்பவராயிருக்கிறார்கள். உதாரணமாக மாதர்கள் ரஜஸ்வலையாகுங்கால் அவர்கள் தனியே யொருகுடிசைக்குள் ஒதுங்கிவிடுகிறார்கள்; மூன்று தினங்கள் வரை அக்குடிசையினுள் ஆடவரெவரும் போவதில்லை; நான்காந்தினத்தன்று ஸ்நானமாடியபின்னரே அவர்கள் மற்றவரோடு சேர்ந்து உண்ணுதற்கு முன்வருவார்கள். இந்தமாதிரியே பிரஸவகாலத்திலுமாம். ஆனால் இந்துக்கள் 10- தினம் பிரஸவ அறைக்குள் இருப்பது வழக்கமெனின் காடர்

ஜாதி மாதர்கள் ஒரு மாதம் வரை ஏனையோர் இருக்கும் குடிசைக்குச்சற்றுத் தூரமாக வேறுகுடிசை போட்டுக்கொண்டு அதனில் தங்கியிருப்பர். சீர்திருத்தம் மிகுந்த நகரத்திலும் சங்கங்களிலும் வருதற்குச்சந்தர்ப்பமின்றி வனத்திலேயே வாணுட்களைச்செலுத்தும் இச்சாதியினர்க்கு இத்தகைய ஆசாரத்திருத்தக்கொள்கைகள் எங்கிருந்துவந்தனவோ அதுவே எமக்கு மிக்க ஆச்சரியத்தை விளைக்கின்றது.

பின்னும் தீட்டுள்ள ஸ்திரீயானவள் ஓராற்றிலாவது நீரோடையிலாவது ஸ்நானஞ்செய்வாளாயின் நீரோட்டத்தினூடேவரும் நீரை ஏனையோர் கொஞ்சநேரம் வரை தொடமாட்டார்கள்; ஏனென்றால் எங்கே தீட்டுத் தம்மைப்பற்றிவிடுமோ என்ற பின்புத்தியுடையோராவரவர்.

அவர்களது கற்புநிலை.

காடர் ஜாதியினர் வனவாசிகளாயிருந்தும் அவர்கள் கற்புநிலை தவறாதவரென்று கூறப்படுகின்றனர். மணமானதொரு ஸ்திரீயிடம் மற்றவர் பாராட்டும் மரியாதையும், அம்மரியாதைக்குகந்தபடி அந்த ஸ்திரீ நடந்துகொள்ளுதலும் தன் பர்த்தாவைத்தெய்வமென்று பாராட்டும் அம்மாதர்களின் தன்மையும் நம்மிராஜதானியிலிருந்து ஒருவன்சென்று பார்க்குமிடத்து, கலியாணமென்பதைக் கனவிலுமறியாத இக்காடர் என்ற வனவாசிகளுக்குள் கற்பு நிலைமை எவ்வளவு ஆழமாய் வேரூன்றியிருக்கிறதென்பதைப் பார்த்து ஆச்சரியமுறுகிறான். கொச்சிராஜாவின் ஆதீனத்தில் இக்காடர்கள் இருப்பவர்களென்றும், ராஜாவிடத்து இவர்களனைவருக்கும் மிகுந்த விசுவாசமுண்டென்றும் தெரியவருகிறது. ராஜாவானவர் அடவியின் மார்க்கமாய்ச் சுற்றுப்பிரயாணம் போகும் ஒவ்வொரு சமயத்திலும் இக்காடர்கள் அவருக்குவேண்டிய சகலவிதமான பணிவிடைகளையுஞ் செய்துகொண்டும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ராஜாவைப் பல்லக்கில் தூக்கிக்கொண்டும், சாமான்களை முதுகிற் சுமந்துகொண்டும் போவார்கள். இச்சாதியார் எப்போதும் கொச்சிராஜரை 'மாதே' என்று தம் தாய் ஸ்தானத்தில் குறிப்பிட்டழைப்பராம். ராஜாவும் இக்காடர்களுக்குத் தமது சுற்றுப் பிரயாணகாலத்தில் வயிறு நிரம்ப அன்னமளிப்பதும், வஸ்திரம் ஆபரணம் சீப்பு கண்ணாடிபோன்ற

*

சில்லறைச் சாமான்களைக் கொடுப்பதுமாய் அவர்களுக்கு உதவு வாராம். இவர்கள் அவ்வளவு தைரியத்தோடு வனத்தில் சஞ்சரிப் போராயிருந்தும் எவனாவது அவர்களைப் பார்த்துக் கடுஞ்சொல் சொல்லி விடுவானானால் அவனுக்கு எதிரிடையாக ஒன்றுஞ் சொல் லாமல் தங்களுடைய இருப்பிடத்தை மட்டும் மாற்றிவிடுவாராம். இவ் விதமாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஓடும் இவர்களுக்கு தலைவராயினார்க்கு மூப்பன்மாரென்று பெயராம். சுவீகாரம் எடுத்துக் கொள்ளுவதாவது சுவீகாரம் வாங்கிக்கொள்ளுவதாவது அவர்களில் சம்பிரதாயங்கிடையாதாம். அப்படி ஏதாவது நடக்குமேயானால் மூப்பன்மார்களது சம்மதத்தை யனுசரித்தே நடத்தப்படுமாம். வேட்டையாடுவதிற் காடர்கள் திறமையுள்ளவர்; வேட்டையாடும் போது எவ்வெவ்விடத்தில் எவ்விதமாயிருக்க வேண்டுமென்பதை நன்குணர்ந்தவர். சென்ற மாதத்தில் இச்சென்னைராஜதானிக் கவர்ன ரான லார்டு ஆம்ட்தில் கொச்சிக்காடுகளின் வழியாகச் சுற்றுப்பிர யாணஞ் செய்தபோது அவருடன் கூடச்சென்ற ஷிகாரிகள் நாம் மேலே சொல்லி வந்த காடர் ஜாதியைச் சேர்ந்தவரென்றுஞ் சொல் லப்படுகிறது. கொஞ்சங் கொஞ்சமாய் இவர்கள் நாகரீகமடைந்து வருவது தற்காலத்திற்குரிய அறிகுறியே போலும்.

ல. அனந்தய்யர்.
"இந்துநேசன்" பத்திராசிரியர்.

பாலமுது.

(௬௱௬௰-ம் பக்கத்தொடர்ச்சி.)

பாலிற் கலந்துள்ள பலவகைப் பொருள்களை அடியிற் கண்ட படியிருக்கப் பார்த்து அவற்றினளவைத்தனித்தனி எடுத்துச்சொல் லலாகும். பாலில் சற்றுப் புளிப்பைக் கொண்டதோர் திரவப் பொ ருளைக் கலந்தால் அது இறுகிப்போய் ஓர் வகை நீரிற்றங்குவதாயுள் ளது. கட்டியாகவுள்ள பாகத்தை ஓர் விதத் தயிராகவும் (curd) நீராகச் சற்றுப்பச்சைநிறம் பொருந்தியுள்ளதை ஓர் வித மோராக வும்கொள்வோம். பாலைச் சற்று நேரம் காற்றில் தங்கவைத்தால்

இவ்வாறே தயிராகவும் மோராகவும் பிரியப் பார்க்கலாம். தயிராக வுள்ளது யாது ?. மோராக வுள்ளது யாது ? இவைகளைத் தேர்ந்தறிவோம். நமது தேகத்திலும், மிருகங்களினுடலிலும், தாவரங்களிலும் உடற்காதார முண்டாக்க வல்லதோர் கலவைப் பொருளிருக்கப்பார்த்தல் கூடும். அதன் பெயரை "ஆல்பியூமின்" (albumen) என்பர். அது பலவகைப் பொருள்களிலிருக்கக் காணலாம். கோதுமை, துவரை, பால், கோழியினது கரு (முட்டை) முதலானவைகளில் அவ்வால்பியூமின் (albumen) உளது. மயிர், நகம், தோல், மாமிசம் போன்றவைகளை எரித்தால் ஓர் வித நாற்றமும் சற்று மஞ்சள் நிறமும் பொருந்தியுள்ள வோர்வகைப் புகை கிளம்புகின்றது. அதில் நவச்சாரப் பொருளிருப்பதால் (ammoniacal substance) துர்நாற்றம் கிளம்புவதாயிருக்கிறது. நவச்சாரத்தில் (Ammonia) வெடியுப்பினிடத்துளதாகிய (Potassium nitrate or salt petre) தர்க்கியசமென்னும் (Nitrogen) எரிகின்ற விளக்கை யணைக்க வல்லதோர் வாயுப்பொருள் கலந்துள்ளதாகையால், இவ்வாயுப் பொருளைக் கொண்ட நவச்சாரம், வெடியுப்பு இவைகளைத் தர்க்கியசப் பொருள்களென்று (Nitrogenous matter) கூற வல்லோம். தர்க்கியசம் கலந்துள்ள பொருள்கள் பல வகையாகவிருக்கின்றன. மேற்கண்ட ஆல்பியூமின்னில் தர்க்கியசமிருக்கிறபடியால் அதையும் அவ்வாறே தர்க்கியசப் பொருளென்று கூறத்தகும். பாலைக் குறித்துச் சொல்லிவரும் இவ்விஷயத்தில் இனி ஆல்பியூமினைத் தர்க்கியசப்பொருளென்றே கூறி வருவோம். ஒவ்வோர் பொருளிலுமுள்ள தர்க்கியசப்பொருளுக்குத் தனிப்பெயர் கொடுத்துக் கூறுவர். கோதுமையிலிருப்பதை குளுடென் (Gluten) என்றும், பாலிலுள்ளதை கேஸியின் (Casein) என்றுங் கூறுவர். ஆதலால், பாலின்கண் கலந்துள்ளவையாக இதுகாறும் பார்த்து வந்த பொருள்கள் (1) நீர், (2)ஊன(Fat) ரஸந்திரளாகக்கொண்டுள்ள வெண்ணெய் (butter), (3) தர்க்கியசப்பொருளாகிய கேஸியின் (casein) இவைகளையன்றி மற்றுமுள. அவையாவன:— (1) பாற் சர்க்கரை (Milk Sugar), (2) தாதுப்பொருள்களாலான உப்புக்கள். பால் சுயமாயிருக்குங்கால் சற்று இனிப்பைக் கொடுப்பது அதன் சர்க்கரைதான். மற்றும் செவ்வையாக உணவு கொடுத்துப் பாதுகாக்

கப்பட்ட பசுவினதுபால் சற்று உப்பாகவும் உருசிக்கவல்லது. இதன் காரணம் அதனுள் கலந்துள்ள உப்புக்களாம். பாலை வெவ்வேறுகப் பிரித்துப் பார்க்குங்கால் அடியில் வருமாறு நாற்றளவில் காணலாம். இது ரசாயன சாத்திரத்திற் கூறியது.

	பெயர்.	அளவு.
(1)	நீர்	92·95
(2)	தார்க்கியசம் (casein)	·81
(3)	வெண்ணெய் ஊனம் முதலியன (Butter)	·24
(4)	பாற் சர்க்கரை (Milk sugar)	5·27
(5)	உப்புக்கள் (Salts)	·73
	பொத்தம்	100·90

மேற்கண்ட அளவுகள் வாயல்கர் (Doctor Voelckor) துரையவர்களால் இரசாயன பரீக்ஷையைக்கொண்டு நிச்சயிக்கப்பட்டவை.

1. பாலின் நீர்.

ஓர் கிண்ணத்திற் பாலைக்கொண்டு காய்ச்சினுல் அதன் நீர் ஆவியாக மேலே செல்லுவதையும், அதனுல் பால் அளவில் குறைந்து கனமடைவதையும் பார்த்து வருகிறோம். அதைப் பால்சுண்டுவதென்று சொல்லுவர். மேலும், பாலானது வெகு ஜலத்தன்மையடைந்துள்ளது. ஆகையாற்றுன் பாலில் நீர் அதிகவளவைக் கொண்டிருப்பதென்று எளிதாகச் சொல்லவல்லோம். இரசாயனத்தால் அதன் அளவைச் சரிவரச் சொல்லலாம். மேற்கூறிய நீரினளவிற்கு அதிகப்பட்டால் பாலில் நீர் கலந்துள்ளது. அவ்வளவிற்குக் குறைந்தால் பாலில் வேறு பதார்த்தங்கள் கலந்துள்ளன. பாலில் சர்க்கரையைக் கரைத்தால் பால் சற்றுக் கனமடைகிறது. ஆதலால் பாலினது சிறப்பைச் சோதிக்க அதன் நீர் வேண்டுமளவிருக்கப் பார்க்கவேண்டும். எப்பொழுதும் இரசாயன பரீக்ஷை செய்து வருதல் அனுகூலப்படாதாகையால் நமதறிவிற்கும் தோற்றத்திற்கும் பொருந்துமாறு பாலினது கனத்தையும் நீர்த் தன்மையையும் ஒருவாறு தேர்ந்து பழக்கத்தினுல் நமது மனதில் தீர்மானிக்கவேண்டும்.

II. தர்க்கியசம் (Casein),

நமது உடலிலுள்ள மாமிசத்தை யெரித்தால் தர்க்கியசம் (Nitrogen) கலந்துள்ளதாக ஓர் வகை துர்நாற்றத்தினின்றுந் தெரியலாகும். ஆகையால் உடன்மாமிசத்தில் தர்க்கியச முள்ளதென்று நிச்சயிக்கின்றோம். ஆகவே ஊன் அல்லது மாமிசம் வளர்வதற்குத் தர்க்கியசம் வேண்டுவதாயுள்ளது. அதனால் ஊனைத்தின்றானைப் பெருக்குவது முண்டு. நாமுண்ணும் பலவகைத் தானியங்களில் தர்க்கியச மிருத்தல் ஊனுக்கு ஆதாரமாகின்றது. பலவகைப் பருப்புகளில் தர்க்கியச மிருக்கக் காணலாம். நாம் உபயோகிக்கும் துவரையில் தர்க்கியசம் அளவுக்களவு அதிகமாயுள்ளது. துவரையினுள் பருப்பினும் அதன் மேலதாகிய தோலின்கண்ணுமுள்ள தர்க்கியசம் அதிகம். ஆதலாற்றான் துவரையினது சத்து அதன் தோலிலுள்ளதென்பர். இத்தகைய தர்க்கியசப் பொருள் பாலின்கண்ணு முள்ளது இப்பொருளை ஆங்கிலேயத்தில் கேஸீயின் (casein) என்பர். பாலில் சற்றுப் புளிப்பான பதார்த்தமொன்றைக் கலப்போமாகில் மேற் கூறிய தர்க்கியசப் பொருள் ஒன்றுசேர்ந்து இறுகிப் போகின்றது. இவ்வாறே நமது வீடுகளில் பாலைத் தயிராக்குங்கால் பாலின்கண், சற்றுப் புளிப்பான மோரைச் சேர்ப்பது வழக்கம். பின்னும் எலுமிச்சம் பழத்தின் (Lemon) புளிப்பான இரசத்தைப் பாலில் சிறிது சொட்டவிட்டால் சடிதியிற் பால் கடினமடைகிறது. கெட்டித் தன்மை யடைந்த பொருளாவது ஏறக்குறைய முழுதும் மேற் கூறிய கேஸீனே. நாமுண்ணு முணவுடன் கலப்பதாகிய தயிரில் கேஸீயின் சுயத்தன்மையிலில்லை. ஏனெனில் அதனுடன் நீரும், வெண்ணெயுங் கலந்துள்ளன. ஆயினும் தயிரின்கண் கேஸீயின் அதிக அளவில் தங்கியுள்ளது. சீமை முதலியவிடங்களில் கேஸீயின் என்பதைக் கூடிய மட்டும் சுயமாகவே பிரித்து அதைச் சாதாரணமாகச் சொல்லி வரும் ஓர் விதப் பாற்கட்டி யாக்குகிறார்கள். அதை ஆங்கிலேயத்தில் சீஸ் (cheese) என்பர். இக்கட்டியை நீண்ட சதுர மமைந்துள்ள குச்சிகளைப்போல் (rectangular rods) அமைக்கின்றனர். அதன் நிறம் சற்று மஞ்சளும் சிவப்பும் கலந்தது போலுள்ளது. நிறத்தில் ஏறக்குறைய நாட்டுச் சர்க்கரையைப்

போல் காணலாம். தொட்டால் மெதுவாயும் வளைவதாயுமிருக்கும். மோந்தால் ஓர் வித நாற்றத்தை யுடையதாகப் புலப்படுகிறது. அந் நாற்றம் நமக்குக் கிடைப்பதாயுள்ள வெகு தாழ்ந்த விதமான நெய்யி னது நாற்றத்தினு மிழிவாகப் புலப்படுகிறது. நமது நாட்டில் சீஸ் என்னு மிப்பொருளைச் சாதாரணமாயுபயோகிப்பதில்லை. சீமை போன்ற விடங்களில் இதை நாம் நெய்யை உபயோகிப்பது போல் உபயோகிக்கின்றனர். ஆனால் நாமுபயோகிக்கும் நெய்க்குப் பிரதி, சீமைபோன்ற அன்னிய விடங்களில் வெண்ணெயைத் திரளாக உபயோகிக்கிறார்கள். ஆயினும் சீஸ் என்னுந் தர்க்கியசப் பொருளில் அளவுக்களவு தயிரினுமதிகமடங்கு கேஸீயின் இருப்பதால் அஃதோர் சிறந்த ஊன் பண்டமாகக் கருதலாகிறது. சீஸ் என்பது நன்றாகக் கடித்துண்ண வேண்டுவதாய்த்தோன்றும். நமது நாட்டில் விலைக்குத் தக்கபடி உயர்வான நெய் கிடைப்பது போலவே வெளிநாடுகளில் விலைக்குத்தக்க சீஸ் என்னும் தர்க்கியசப்பொருள் கிடைக்கக்கூடியதுதான்.

பாலின்கண் கேஸீயின் என்னும் தர்க்கியசப் பொருள் வெகுவாய்க் கலந்து பெறும்பொருட்டுத் துவரையின் மேற்றோலைப் பசுவிற்கு ஆகாரமாகக் கொடுத்தல் நலமென்பதை அறியலாகின்றோம். நமது உடற்கு வலிமை கொடுக்கும் ஜீவதாதுப் பொருள் தர்க்கிய சமாகையால் கூடிய வரையில் தர்க்கியசம் பெற்றுள்ள கேஸீயின் என்னும் பாகமானது பாலின்கண் சிறக்கக் காண்ட லியல்பு.

III. வெண்ணெய் (ஊனம்) Butter.

எண்ணெயைப் போன்றதாகும் வெண்ணெயென்று முன்னமே கண்டோம். நீரில் சற்று எண்ணெயை வார்த்துக் கலக்கினால் எண்ணெயானது வெகுசிறு பொடிகளாய் எவ்வாறு நீரின்கண் விரவியுள்ளதோ அவ்வாறே வெண்ணெயும் பாலில் எங்கும் விரவியுள்ளது. இத்தகைய வெண்ணெயினது விரவியதாந்தன்மையை ஆங்கிலேயத்தில் (emulsification) என்பர். சூரியனது காந்தி இப்பொடிகளின்மீதே பிரதிபலித்தலால் பால் வெண்மை நிறம் பொருந்தியுள்ளது. வெண்ணெய்த் தூள்களிலொன்றைக் கொண்டு பரிசோதிக்குங்கால் அத்தூள் இரண்டு விதப் பாகங்களைக் கொண்டுள்ளதாக

க்காண்கின்றன. எவ்விதமெனில் மத்தியில் அதாவது நடுவிடத்தில் ஊனப்பொருளாகிய வெண்ணெயும் அதைச் சுற்றி வெகு மெலிவடைந்த நுண்ணிய தோலுமாம். ஆதலால் ஒவ்வோர் வெண்ணெய்த்தூளும் வெண்ணெய்யும், வெண்ணெயைச்சுற்றியுள்ள தோலுமாக விளங்குகின்றது. ஓர் பெட்டியின்கண் அடங்கியுள்ளபணம் போலத் தோலாகிய பெட்டியினுள் வெண்ணெய் அகலாமற் பொருந்தப் பார்க்கின்றோம். இத்தகைய வெண்ணெய்த் தூள்கள் எங்கும் விரவியுள்ள பாலைக் காய்ச்சினால் உஷ்ணத்தால் பாலினது நீர் நீராவியாகக் கிளம்பி மேலெழுவதுமன்றி வெண்ணெயினது தோலும் உடைபட்டு ஒன்று சேர்ந்து ஏடாகப் பாலின்மேல் மிதக்கின்றது. இவ்விதப் பாலின் ஏட்டை ஆங்கிலேயத்தில் தோலென்று பொருள்பட (Skin of the Milk) என்பர். வெண்ணெயைப்போல அதன் தோலும் வெகு இலேசானதுபற்றிப் பாலின் ஏடானது மேலெழும்பி மிதப்பதாயுள்ளது. மற்றும் வெண்ணெயைப்போல அதன்தோல் இளகிய தன்மையால் பாலின் ஏட்டைச் சற்றுக்கடித்துத்தானுண்ண வேண்டுகின்றோம்.

பாலைக் காய்ச்சாமல் அதனின்றும் பெறவல்ல வெண்ணெயைப் பச்சை வெண்ணெயென்று கூறுவது வழக்கம். இவ்வாறே பச்சை மோரென்றும் சொல்லி வருவார்கள். நமது நாட்டில் காய்ச்சாத பாலினின்றும் பெறவல்ல வெண்ணெய், மோர் ஆகிய இவைகளைச் சிறப்பாகக் கருதுவதில்லை. ஏனெனில் இவ்வெண்ணெயில் வெண்ணெயைச் சுற்றியுள்ள தோலுடன் ஓர் விதப் பசுமையான நாற்றத்தைப் பெறுகிறோம். இந்நாற்றம் நமது வழக்கங்களுக்கும் ஆசாரத்திற்கும் பொருந்துவதில்லை. மற்றும் இத்தகைய வெண்ணெய் சுயவெண்ணெயுமல்ல. பாலைக்காய்ச்சி யதன்பின் நாம் பெறவல்ல வெண்ணெயானது நமக்குச்சரிவரத் தோன்றும் ஓர்வித நன்னாற்றத்துடன் நெய்யெடுப்பதற்கு நன்றாக உதவுகின்றது. தோல் நீங்கப்பெற்ற அதாவது ஏட்டினின்றும் விடுபட்ட இவ்வெண்ணெயானது சுயமாயுள்ளது.

(இன்னும் வரும்.)

செ. வீ. இராஜகோபாலாசாரி,

நார்மல் ஸ்கூல், மதுரை.

ஸ்ரீமத்-தாயுமானசுவாமிகள் வரலாறும் அவர் மதக்கொள்கையும்.

சோழநாட்டின்கண் பாடல்பெற்றஸ்தலங்களுட்சிறப்புற்றோங்கிய திருமறைக்காடென்னுந் தென்மொழிப்பெயர்பெற்ற வேதாரணியம் என்ற திவ்வியக்ஷேத்திரத்தில் சுமார் இருநூற்றுமுப்பது வருஷங்களுக்கு முன் வேளாண்குலத்துத் தோன்றிய கேடிலியப்பப் பிள்ளை என்பார் ஒருவர் இருந்தார். அவர் கல்வி கேள்விகளின் முதிர்ந்து சிவபக்தி அடியார்பக்தியிற் சிறந்து வேதங்களாற் பூசிக்கப்பெற்ற தம்மூர்ச் சிவன்கோயிற்றருமவிசாரணைத்தொழிலில் அமர்ந்திருந்தனர். அப்போது விஜயநகர ராஜ்ஜியத்தின் பிரதிநிதியாய் மதுரை முதலிய தென்னாடாண்ட திருமலை நாயகருக்குப் பவுத்திரராய்த் திரிசிரபுரத்திற்றங்கிச் சோழநாட்டையும் பாண்டியநாட்டையும் கி. பி. 1704-வருஷ முதல் 1731-வருஷம் வரையில் அரசாண்ட விஜயரங்க சொக்கநாதநாயகர்[1] என்பவர் கேடிலியப்பப்பிள்ளையவர்களின் திறமையினையுங் குணத்தையுங் கேள்வியுற்று அவர்தமை வரவழைத்து அவர் தமக்குப் பெரியதோருத்தியோகந் தந்து தம்மிடத்திலே அவரையமர்த்திக் கொண்டனர். பிள்ளையவர்களும் தம்மரையன் மகிழ்வுறுமாறு இராஜாங்ககாரியத்தைச் செவ்வனே நடாத்திக்கொண்டுவந்தனர். வேதாரணியத்திலேயிருந்த தமது தமையனார் சந்ததியின்றித் துயருறுவதுகண்டு தம்முடைய அருமைப்புதல்வராகிய சிவசிதம்பரப் பிள்ளையைத் தமையனாருக்குச் சுவீகாரமாகக்கொடுத்து விட்டார். தாம் கதிபெறத் தமக்குமோர் புத்திரன் வேண்டுமென்னும் விருப்பத்தால் தக்ஷிண கயிலாயத்துள் ஒன்றாகிய திரிசிரமலைக் கண்ணெழுந்தருளியிராநின்ற தாயுமானேசுரரைத் தினந்தோறும் திரிகரணத்தாலும் தம் தேவிசகிதம் வழுத்தி வருவாராயினர். சின்னாளிலேயே சிவனது திருவருளால் தம்மனைவி வயிறுவாய்த்தனள். பத்துத் திங்கள் செல்லலும் தம்மூர் சேர்ந்திருந்த தம்மனைவியார்

1. See page 60, South Indian Dynasties, by Robert Sewell. இதனையாய்ந்தறியாது முத்துவிஜய ரகுநாத சொக்கலிங்கநாயகர் என்றும் வேறுசிலநாயகரென்றும் எழுதியுள்ளார் சிலர்.

ஓர் ஆண் மகவைப் பெற்றனர். அவர் தமக்குத் தநயன் பிறந்தலம் திருமறைக்காடாயினும் திரிசிரபுரத் தீசரது திருவருளாற்றோன்றியதனால் அக்குழந்தைக்குத் தாயுமானவர் என்னும் பெயரே இடப்பட்டது. இக்குழந்தைக்குத் தக்ககாலத்தில் வித்தியாரம்பஞ் செய்விக்கவே, சின்னளிலேயே வடமொழி தென்மொழிக்கணுள்ள இலக்கியவிலக்கணங்களையும் வேதாகமஸ்மிருதிபுராண இதிகாச முதலியனவற்றையும் நன்குகற்று மிக்க வல்லவராயினர். இவையேயன்றித் தேவார திருவாசக முதலிய பன்னிரண்டு சைவத் திருமுறைகளையும் மெய்கண்ட சாத்திரமெனப் பேர்பெற்ற பதினன்கு சித்தாந்த சாத்திரங்களையும் அருணகிரிநாதரருளிய திருப்புகழையும் பாராயணஞ் செய்து வருவாராயினர். இவர் இருமுது மொழியினும் மிகுந்த பயிற்சியுடையாரென்பது பின்வரும் இவருடைய செய்யுளாற்றெரியவரும்.[2]

கல்லாதபேர்களேநல்லவர்கணல்லவர்கள்கற்றுமறிவில்லாதவென்
கர்மத்தையென்சொல்வேன்மதியையென்சொல்லுவேன்கைவல்யஞான
நல்லோருரைக்கிலோகர்மமுக்கியமென்றுநாட்டுவேன்கர்மமொருவ [நீதி
னாட்டினாலோபழையஞானமுக்கியமென்றுநவிலுவேன்வடமொழியிலே
வல்லானொருத்தன்வரவுந்த்ராவிடத்திலேவந்ததாவிவகரிப்பேன்
வல்லதமிழறிஞர்வரினங்ஙனேவடமொழியின்வசனங்கள்சிறிதுபுகல்வேன்
வெல்லாமலெவரையுமருட்டிவிடவகைவந்தவித்தையென்முத்திதருமோ
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்றவித்தகச்சித்தர்கணமே.

தாயுமானவர் மிக்க இளமையிலேயே அவர் தம் தந்தையினும் பல்லாற்றானும் சிறப்புற்றிருக்கிறதை அரசன் கேள்வியுற்று மிக்க மகிழ்வுற்றனன். தாயுமானவர் தமக்குப் பதினறாண்டு நிரம்புமுன் தமது தந்தையார் சிவசாயுஜ்யமுற்றபிறகு உடனே அரசனது பலாத்காரத்துக்கிணங்கித் தகப்பனருடைய உத்தியோகத்தைத் தாம் வகித்துக் காரியங்களைச் செவ்வனே நடாத்தி வந்தார். இவ்வாறு லௌகிகத் தொழிலை யேற்று நடத்திவந்தபோதிலும் அவரது மனமோ ஆன்மஞானம் பெற்று உயிர்க்கோருறுதிதேடும் வழியை நாடிநின்றது. இவர்க்கு இருவினை யொப்பு நேருங் காலமாதல்பற்றி உண்மை யாராய்தலே ஒருபெருங் கடமை யெனத் தோற்றிற்று; அர

2. சித்தர்கணம், பாட்டு-10.

*

சனிடத்தில் பரிசில்பெற விரும்பிவரும் பண்டிதர், பாரதி, பாவலர், கவி, கவிராஜர், கவிச்சக்கரவர்த்தி, நாவலர், வித்துவான், மஹாவித்வான், வித்வசிரோமணி முதலிய பலவிதப் பட்டங்களைத் தரித்தவர்களையும் தம்மருகழைத்து அவரோடு யதார்த்த வாதஞ் செய்து தாம் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க சமாதானஞ்சொல்ல வல்லமையின்றி அவர்களிருப்பதைக் கண்டு "ஐயன்மீர்! ஆய்ந்து உண்மை காணுதிர்" என விடுப்பர். இவர் தாமும் தமது சந்தேக விபரீதங்களைத் தீர்க்கக்கூடிய ஞானசாரியர் எங்குளர்? எப்போது நமது கண்ணுக்குப் புலப்படுவர்? என்று மனமுளைந்து எதிர்பார்த்த வண்ணமாயிருந்தனர்.

அப்படி இருக்கு நாளில் உலகமுய்யுமாறு சித்தாந்தப்பொருளைத் திருமந்திரத்தாற் காட்டிய திருமூலநாயனார் மரபிலுதித்துத் திருக்கயிலாயபரம்பரைச்சந்தானகுரவருள் ஒருவராய மெய்கண்டதேவரது வழித்தோன்றிய குரவரொருவரிடத்து ஞானோபதேசம் பெற்ற சற்குரு மூர்த்தியாகிய மௌனகுருசுவாமிகள் திரிசிரபுரத்திற் கோயில் கண்டருளிய தாயுமானேசுரரைத் தரிசிப்பான் திரிசிரபுரம் போந்தனர். குருசுவாமிகளைக் கண்ட போதே நமது தாயுமானவர் தன்வயமிழந்து, அவர் வயப்பட்டு, அடியற்ற மரம்போல் அவர் பாதத்தில் வீழ்ந்து அவரை நமஸ்கரித்து "ஐய! எம்பெரும! தமது திருக்கரத்திலுள்ள புத்தகம் யாது?" என்றிரந்தனர். மௌனகுருசுவாமிகள் யாதொன்று முரையாமல் மௌனமாயேகினர். இவரும் மேன்மேலும் இரந்து அவரைப் பின்றொடர்ந்தனர். மௌனகுருசுவாமிகள் இங்ஙனஞ் சென்று இறுதியில் நடுநிசிவேளையில் தாயுமானேசுரர் கோயில் புக்கு பத்மாசனமிட்டு உட்கார்ந்தனர். உட்கார்ந்ததும் எதிரிற் கைகட்டி வாய்பொத்தி நின்ற தாயுமானவரைக் கண்டனர். பின்பு அருள் நோக்குடன் குருசுவாமிகள் தாயுமானவரைப் பார்த்து அவர்மனத்தை அறிந்து பின்னர், எனது கையில் உள்ளது சிவஞானசித்தி என்றனர். ஐயமுற்ற சீடரும் சற்று மயங்கி நின்று, ஐய! தயாநிதி!

1. சிவம் யாது?
2. ஞானம் என்பது எது?

3. சித்தியாவது யாது? என்று வினவ, ஆசாரிய சுவாமிகள் ஏ. மாணவ!.

1. சிவம் என்பது பதி.
2. ஞானம் என்பது (அந்தப்பதியையுள்ளவாறறியும்) அறிவு.
3. சித்தியாவது அவ்வறிவை பருவியது என்றார்.

தாயுமானவர் தமக்கிருந்த ஐயங்களை யெல்லாம் குருசுவாமிகளிடம் வெளிப்படுத்தவே அவர் இவருடைய பக்குவத்திற்குரிய தீக்ஷை செய்து, மாணவ! நின்னைச் சூழ்ந்த ஐயங்களை யறுத்து விபரீதங்களை விட்டு உண்மை யறிவாகிய அத்துவித ஞானத்தைக் கொடுப்பது இந் (சிவஞானசித்தியார்) நூலேயாம்; இது சந்தானகுரவருள், சகலாகமபண்டிதர் என்னும் அருணந்திசிவாசாரிய சுவாமிகளால் அருளப்பட்டது. சிவஞானபோத வழிநூலாகிய இது, வேதாகம சாரமாகிய சித்தாந்தவியல்பினை எடுத்துத் தாபித்தலாற் சுபக்கம் என்றும், அதற்கு ஒவ்வாதவாயுள்ள சமயக் கொள்கைகளை எடுத்துக் கண்டனஞ்செய்தலாற் பரபக்கம் என்றும் சொல்லப்பட்ட விருபகுதிகளை யுடைத்து.

3"பாரிலுள்ள நூல்களெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
யோர்விருத்தப் பாதிபோ தும்"

என்று சித்தியாரையும் மற்று முள்ள சித்தாந்த சாத்திரங்களின் பொருணுட்பங்களையும் சாங்கோபாங்கமாக உபதேசித்தருளினர். இதனுனே, வைதிக, சைவ, சுத்தாத்துவித சைவசித்தாந்தமே உண்மை நிலை யென்பதும் சிவபெருமானே பரமபதி யென்பதும் அவருடன் இரண்டறக் கலத்தலே அத்துவித முத்தி யென்பதும் அறிந்தார். குரு சுவாமிகள் இவரை நோக்கி 'இங்கு இன்னுஞ் சில காலமிருந்து இல்லறத்தொழுகிப் புத்திர சந்தானம் பெறுதி; பின்னர் யாம் வந்து நிட்டைகூடு முபாயம் தெரிவிப்போம்' என்று சொல்லிவிட் டேகினர். குருவின் பிரிவை யாற்றாது வருந்தி நின்ற தாயுமானவரை நோக்கி மௌனகுருசுவாமிகள் 'சும்மா இரு' என்று சொல்லிப் போய்விட்டனர். அச்சொல்லும் சொல்லின் பொருளும் அவரும் அவர் மனத்தை விட்டகலவேயில்லை. என்னே?

---

3. "பாதிவிருத்தத்தாலிப்பார்விருத்தமாகவுண்மை
சாதித்தார்பொன்னடியைத்தான்பணிவதெந்நாளோ."
தருமரபின் வணக்கம், பாட்டு-5.

ஐந்துவகையாகின்றபூதமுதனுதமுமடங்கவெளியாகவெளிசெய்
தறியாமையறிவாதிபிறிவாகவறிவார்களறிவாகநின்றநிலையிற்
சிந்தையறநில்லென்றுசும்மாவிருத்திமேற்சின்மயானந்தவெள்ளந்
தேக்கித்திளைத்துநானதுவாயிருக்கநீசெய்சித்ராமிகநன்றுகாண்
எந்தைவடவாற்பரமகுருவாழ்கவாழவருளியநந்திமரபுவாழ்க
வென்றடியர்மனமகிழவேதாகமத்துணிபிரண்டில்லையொன்றென்னவே
வந்தகுருவேவீறுசிவஞானசித்திநெறிமௌனஉபதேசகுருவே
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்மரபில்வரும்மௌனகுருவே.

என்னும் மௌனகுரு வணக்கத்துள்ள இச்செய்யுளேயும்[4] ஆங்காங்கு மற்றைச் செய்யுட்களில் எடுத்துக் கூறியிருப்பனவற்றையும் உற்றுநோக்குக.

ஆசிரியர் சென்றதும் தாயுமானவர் தாம் உபதேசம் பெற்றவைகளைச் சிந்தித்து அவ்வாறு ஒழுகிவரலால் விரக்தி தோன்றிற்று. தோன்றவே லௌகிகத் தொழிலை அறவே மறந்தனர். அரசன் இவருடைய குணங்களை அறிந்திருப்பவனுதலாலும் நாளுக்குநாள் அவர் ஆன்ம ஞானம் பெற்று முதிர்ச்சியடைந்து வருகிறார் எனக் கேள்விப்பட்டுமிருக்கிறபடியாலும் அவர்பால் அன்பும் அச்சமுமீதூர அவரை அணுகி "சுவாமி, தேவரீரது பெருமையை அறியகில்லாது நிரந்தரமில்லாத இந்த லௌகிகத்தொழிலில் தங்களையமர்த்தினேன்; தேவரீருக்கு யானே எல்லாஏவலும் புரியும்படி கட்டளையிடுமின்" என்றிரந்து நின்று அன்றுமுதல் அவர்மனம் மிகவும் சந்துஷ்டியடையும்படி நடந்துவந்தான். சின்னுளில் அரசனும் இவ்வுலகை நீத்தான். அரசனது மனைவியாகிய மீனுக்ஷியம்மையோ[4a] இவரைப் பன்முறையும் பார்த்துளாளாகலின், கண்கவர்வனப்பினர் இவரை நிகர்த்தவர் வேறெவரையுங்காணுது இவர்மீது காதலுற்று இவரை வரவழைத்து "என்னிபாக்ஜியத்திற்குத் தேவரீரைத் தலைவராக் குவல்; என்னுடல் பொருள் ஆவி மூன்றுந்தந்துவிட்டேன்." என்னலும் அவளது எண்ணமின்னதென அறிந்து அவளுக்கு எவ்வாறு

4. மௌனகுருவணக்கம், செய்யுள்-2.

4a. தன்னயகன் இறந்தபின்னர் மீனுக்ஷியம்மைதான் தனியரசாண்டனள். (1731—1736). See page 61, South Indian Dynasties by Robert Sewell.

புத்திபுகட்டவேண்டுமோ அவ்வாறு இதோபதேசம் செய்து பிறகு அவ்விடமிருந்தால் தன்பெருமைக்குச் சிறுமைவருமென்றஞ்சி அதைவிட்டு இராமநாதபுரத்திற்கருகிலுள்ள தேவைநகரிற் சென்று உறைந்தனர் [5]. இதனைக் கேள்வியுற்றுத் தமது தமையனாராகிய சிவசிதம்பரப்பிள்ளையவர்களும் தமதுசிறியதாயார் குமாரராகிய அருளையப்பிள்ளையவர்களும் இராமநாதபுரஞ்சென்று பிறகு அவரையணுகி சந்ததிவிளங்கும்படி திருமணஞ்செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். சம்சாரபந்தத்திற் கட்டுண்டிருப்பதற்கு அவருக்கிஷ்டமில்லாமற்போனபோதிலும் மௌனகுருசுவாமிகள் ஆஞ்ஞையையும் தமையனாரது வேண்டுகோளையும் நிராகரிப்பதற்கில்லாது மன்றல் புரிந்து மனையாளொடு மில்லறநடாத்த இயைந்தனர். அவர்தேவியும் ஓராண்குழந்தையைப் பெற்றபின் சிவபதமடைந்தனர். அக்குழந்தைக்குக் கனகசபாபதி என்னும் பெயரிடப்பட்டது.

முன் தாயுமானவரைவிட்டுப் பிரிந்த குருசுவாமிகள் மீட்டும்வந்து சிடர்பக்குவத்தைக் கண்டு சரியையும் கிரியையும் கடந்து யோகபாதசோபானமுற்றதையறிந்து அதற்குரிய தீட்சைசெய்து, யோக[6] நிஷ்டைகளினியல்புகளை உணர்த்தித் துறவுபூணும்படி ஆஞ்ஞாபித்துச்சென்றனர். அன்றுமுதல் தாயுமானவர் கௌபீனதாரியாய் வெளிப்பட்டு, இயமம், நியமம், ஆதனம் பிராணாயாமம் என்னும் யோகத்திற் சரியையும், பிரத்தியாகாரம், தாரணை என்னும் யோகத்திற் கிரியையும், தியானமாம் யோகத்தில் யோகத்தையும், சமாதியாம் யோகத்தில் ஞானத்தையும் முறையேயனுட்டித்து சிவஞானப் பெருஞ்செல்வராய் நிட்டைகூடுவாராயினர். இவர் 1742௵ இராமநாதபுரத்திற்கருகிலுள்ள தேவைநகரில் சமாதியிலமர்ந்தனரென்ப[7]

(இன்னும் வரும்).

கல்குளம்-குப்புசாமி முதலியார்.

---

5. "மலைவளர்காதலி" என்னும்செய்யுட்டொடர்நிலையிலும் தேவைநகரிலுள்ள தேவியைக்குறித்துப் பாடியது.

6. யோகமாவது அகத்தொழிலின் மாத்திரையானே ஈச்சுரன் அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு.

7. See foot note, (5).

தனிச்செய்யுட்கோவை.

(தொடர்ச்சி)

ஓர் கவிஞரைக் கள்ளரடித்துப் பொருளைப்பறித்துக்கொள்ள அப்பொழுது முல்லைத்தாண்டவராயபிள்ளை யென்னும் பிரபுவின் பால்வந்து அவர் கூறியது:—

ஆகாத கள்ள ரடித்துப் பறித்தமுதல்
போகாது போகாது போகாது—வாகார்
சதுரனைத் தென்முல்லைத் தாண்டவரா யேந்தர
விதுரனைவாங் காமல் விடேன்.

பாவவிநாசத்தில் உலகம்மைபேரில் விக்கிரமசிங்கபுரம் நமச்சிவாயக்கவிராயரவர்கள் கூறியகவிகள்.

என்பா லிரங்கா திரும்பால் மனம்படைத்த
வன்பா லறப்பால் மறப்பால தாகாதோ
வன்பால் முலைப்பா லழும்பால னுக்களித்த
வுன்பா லடைந்தே னுலகுடைய மாதாவே.

ஓலையிட்ட வினையடி யேன்றனக் குண்ணச் சோறிட் டெனைப்போற்ற நீயொரு, வேலையிட்டு நடத்தா திதற்கொரு வினையமிட்டதோர் வெவ்வினைக் கென்செய்வேன், காலையிட்ட கலியாணப் பந்தரிற் கடகமிட்டசெங் கையா னென்னையர்க்கு, மாலையிட்டபெண் பிள்ளாய்செழுந்தமிழ் மலையச்சாரலில் வாழுல கம்மையே.

காளமேகப்புலவர் வேலூர்க்கம்பனென்னுங்கொல்லனை வியந்து கூறியது.

கன்னனரை நாட்கொடுப்பான் காவேரி பாதிநா
ளன்னை முலைகொடுப்ப தக்காலம்—பன்னுங்
கலையார்ந்த வேலூர்வாழ் கம்பனெனுங் கொல்ல
னுலைவைத்தாற் றூருண் கும்.

தனிச்செய்யுள்கள்.

காலையிலே பல்கலைநூல் கல்லாத் தலைமகனு
மாலையெரி போன்ற வயலானுஞ்—சால
மனைக்கட் டழிக்கு மனையாளிம் மூன்றுந்
தனக்கட் டமத்துச் சனி.

அந்நாட் புலவர்கவிக் காயிர மைஞ்ஞூறு
பொன்னுங் கவிதை புனிதமா—மிந்நாளில்
வாசமற்ற தோசியெனு மாந்தர் தலையெடுக்கக்
காசுக்கைஞ் ஞூறு கவி.

வெள்ளிலைவே லற்பரிழல் மெத்தவே முட்டைக்குந்
துள்ளுநறு வாழைபலாச் சோலைக்குள்—மெள்ள
வடுக்கவொட்டா வாறுபோ லற்பர்சிலர் கூடிக்
கொடுக்கவொட்டார் தாமுங் கொடார்.

பார்த்துப் பார்த்திரு கண்களும் பூத்தன பாடிப்பாடியென் னாவுஞ் சலித்தது
காத்திருந்து மனமும் வெறுத்தது காலிரண்டு நடந்து வலித்தன
வாத்திரத்துக் குதவா வுலுத்தரை யான்வணங்கித் துதித்திட னீதியோ
சேத்திரத்தி லுயர்பழ னாபுரிச் சேயனேயென் றனக்கருள் செய்வையே.

படிக்காசுப் புலவர் கூறியது.

அஞ்சாலிச் சாதியும் வண்ணானுஞ் செட்டியு மம்பட்டனுஞ்
செஞ்சாயக் காரனும் வேசைச் சுதருந் தினங்கவியைப்
பஞ்சாகத் தூற்றி யரைக்காசுக் கோர்கவி பாடுவதால்
நஞ்சாகப் போயிற்றி ராசாக் களுக்கெங்க ணற்கவியே.

சேதுபதிமந்திரி முத்திருளப்பபிள்ளை கூறியது.

கண்ட கனவிலிம்மிக் காசளவே னுங்களவி
னுண்டு செலுத்திடநா னெட்டுவனோ—மண்டுந்
திருமுத்தி ராமலிங்கச் சேதுமதி மந்த்ரி
தருமுத் திருளப்பன் முன்.

குப்பச்சியென்பவள் செய்த உபசாரத்தை வியந்து ஓர்கவிஞர் கூறியது.

சோற்றை யரசிலைமேற் றூவி வழுதுணங்காய்க்
கீற்றை யதன்மேற் கிடத்தியே—வாற்றியுண்ணு
மப்பச்சி யென்பா ளருமையர சேயென்பாள்
குப்பச்சி யாயி குணம்.

மல்லைச் சிற்றம்பலம்பிள்ளைமீது ஓர் கவிஞர் கூறியது.

காசா கிலுங்கற்ற பேர்க்குத வாத கசடர்தமக்
காசார மென்ன முழுக்கென்ன பூசைக ளாவதென்ன
சீசா கவுமறி யார்கரம் போலத் திரிவர்நல்ல
பூசா பலாமல்லை வேந்தாசிற் றம்பல பூபதியே.

இக்கவி சிவகங்கையாண்ட மருதுபாண்டியனை நோக்கி ஓர் கவிஞர் கூறியதாக வழங்குகிறார்கள். கருத்து விளங்கவில்லை.

ஒருபுருடன் றனக்கிரண்டு மனைவிகளி லொருத்தியக முடையாள் சிந்தை
வரநடந்து பதினறு பிள்ளைபெற்றே யகமகிழ்ந்தாண் மற்றொருத்தி
யிரவுபகல் புருடன்முகம் பாராமற் கற்பழியா திருந்தாள் பிள்ளை
கருதிநொந்து பெற்றவட்கோ மற்றவட்கோ மருதேந்த்ர கழறுவாயே.

ஓர் கவிஞர் சிவந்தபல்லவன்என்னுமோர் பிரபுவின்மீது தலைவி கூற்ருகக்கூறியது.

குளக்காவி மலர்த்தொடையான் சிவந்தெழுந்த பல்லவனைக் கூடா நாளி
லிளச்கார மோபிரிந்த வாறுகண்டோ நானேழை யென்று தானே
வுள்க்காத றூண்டுகோல் பனிநீர்நெய் யானுறங்கு மூச னல்ல
விளக்காக வெனைத்திரியா விடியுமட்டு மெரித்தனையே வெண்ணிலாவே.

சவ்வாதுப்புலவரை வியந்து ஓர்கவிஞர்கூறியது.

வெண்டா மரையனந்தான் வேறுருக்கொண் டுற்றனளோ
தண்டா மரையனந்தன் றுணிவனோ—வண்டமிழி
னெண்ணோ வெழுத்தோ யிசையோ வியற்புலவர்
கண்ணோசவ் வாதுக் கவி.

இரண்டாமடியில், தாமரையன்—பிரமன். நந்தன்—திருமால்.

யானைப்பாகனுகிய திருமலைராயன் கவியைவியந்து ஓர்கவிஞர்கூறியது.

தேமணக்குங் கோடிவருந் திருமலைரா யன்றமிழைச் செப்பும் போது
நாமணக்குஞ் செவிகுளிரு மகமலரு மெழுதிவைத்த நல்லே டெல்லாந்
தாமணக்கு மரப்பாவை நடனமிடுஞ் சீவன்மரந் தளிர்க்குஞ் செஞ்சொற்
பாமணக்கு மண்மேலிவ் வுலகெல்லாஞ் சிட்டைகட்டிப்பறக்குந் தானே.

சீவன்மரம்—வெட்டுகட்டை.

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான்,
இராமசாமிக்கவிராயர்.

ஸ்ரீ:

திருமங்கையாழ்வார் காலவாராய்ச்சி.

இதற்கு முன்பு யாம் "செந்தமிழ்"ப் பத்திரிகையில், "பொய்கையார்" என்னுந் தலைப்பின்கீழ் முதலாழ்வாரைப்பற்றிய சில விசேடங்களையும், "பெரியாழ்வார் காலநிருணயம்" என்னுந் தலைப்பின்கீழ் திருமழிசைப்பிரான், சடகோபர், குலசேகரப் பெருமாள், பெரியாழ்வார், ஆண்டாள்—இவர்கள் காலங்களையுஞ் சுட்டி இரண்டு வியாசங்கள் எழுதியிருந்தமை செந்தமிழபிமானிகள் பலர்க்குத் தெரிந்திருக்கலாம். அவற்றின் தொடர்ச்சியாக எஞ்சிய ஆழ்வார்காலங்கள், திருமங்கையாழ்வார்காலவாராய்ச்சிமூலமாக, இப்பகுதியில் ஆராயப்படுகின்றன.

குருபரம்பரை நூல்களில் தொண்டரடிப் பொடிகள், திருப்பாணாழ்வார், திருமங்கைமன்னன்—இம்மூவர்க்குங் கொடுக்கப்பட்ட காலவளவுகள் அடியிற் கண்டவை.

1. தொண்டரடிப்பொடிகள்—கலிபிறந்த 289-வது ஆண்டு.
2. திருப்பாணாழ்வார் ,, ஷை 342 ,, ,,
3. திருமங்கைமன்னன் ,, ஷை 397 ,, ,,

இக்காலங்கள் நிரம்ப அதிகப்பட்டிருத்தலால், இவற்றினுண்மையிற் பலர் ஐயப்படினும், இவ்வளவுகளால் நாம் அறியக்கிடக்கும் உண்மை ஒன்றுண்டு. அம்மூவர் காலங்களும் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டளவே ஏற்றத்தாழ்வு பெற்றிருக்கக் காணுதலால், அவ்வாழ்வார்கள் ஒருவர்க்கொருவர் மிகவும் சமீபகாலத்தில் விளங்கியவர்கள் என்று கருதலாம். ஒருகாலத்தவ ரென்பதற்கேற்ப, திருப்பாணாழ்வார் ஏனையிருவருடன் வாழ்ந்தவரென்பதற்குச் சரித்திரங் காணவில்லையாயினும், தொண்டரடிப்பொடிகளும், திருமங்கையாரும் ஒருவரையொருவர் நேரில்அறிந்திருந்ததாகக் குருபரம்பரைகள் கூறுகின்றன. திருமங்கைமன்னன், ஸ்ரீரங்கத்தின் நான்காந்திருமதிட்டிருப்பணி நடத்திவரும்போது, தொண்டரடிப்பொடிகள் வைத்துப் போற்றிவந்த துளசித்திருநந்தவனம் குறுக்கிட, அதற்கு யாதொரு பழுதும் நேராவண்ணம், அவர் தம் திருமதிலை அந்நந்தவனத்தைச் சுற்றிக்கட்டினரென்றும், இவ்வாறு தம்பால் அன்புகாட்டிய ஆழ்வார்க்குத் தொண்டரடிப்பொடிகள் தம் நன்றியை நேரிற் செலுத்

*

தினரென்றும் சொல்லப்பட்டுள்ளன. இனி இவர்கள் காலம் யாதென்று பார்ப்போம்.

ஸ்ரீமாந்-து. அ. கோபிநாதராயரவர்கள், M. A., வைணவாசிரியருள் தலைவரான நாதமுனிகள்காலத்தைப்பற்றித் தாம் எழுதிவரும் "ஸ்ரீவைஷ்ணவசமயசரித்திரம்." என்னும் வியாசத்தில் அடியில் வருமாறு கூறுகின்றனர்:—"இந்நாதமுனிகள் காலத்தைத் தீர்மானிப் "போம். ஆளவந்தார் வியோகமானகாலம் கி. பி. 1080-ஆம் ஆண் "டென்றேம; அவ்வாளவந்தார் நாதமுனிகள் பேரனார் என்றுங் "குறித்தோம்; ஆதலால் நாதமுனிகள் கி.பி. 990-ல் அவதரித்திருக் "கவேண்டும். மேலும், கி. பி. 1011-முதல் 1032-வரை ஆட்சி "புரிந்த கங்கைகொண்ட சோழனால் அவர் ஆதரிக்கப்பெற்று அவ் "வரசனுக்கு இராஜதானியாகவிருந்த கங்கைகொண்ட சோழபுரத் "துக்கு அடிக்கடி போக்கு வரவுடையராயிருந்தனர். அந்நகரம் "கி.பி. 1024-ம் ஆண்டிற்குப்பிறகு அவ்வரசனாலே உண்டாக்கப்பட் "டது. இதனாலும் நாதமுனிகள் காலம் 11-ஆம் நூற்றாண்டின் "முற்பகுதி யென்றேற்படுகின்றது." என்பதாம்.

இவ்வாறு, 11-ஆம் நூற்றாண்டினரென்று நன்குதெளியப்பட்ட நாதமுனிகள், ஆழ்வார்கள் பன்னிருவரும் அருளிச்செய்த நாலாயிரப் பிரபந்தத்தை உலகிற்கு வெளியிட்டவரென்று சரித்திரங்கள் கூறுகின்றன. அன்றியும் இராமாநுஜர் காலத்தவரும், கூரத்தாழ்வான் சிஷ்யருளொருவருமானவரென்று தெளியப்பட்ட திருவரங்கத்தமுதனார் இயற்றிய இராமாநுஜநூற்றந்தாதியில், 8-வது முதல் 21-வது வரையுள்ள பாசுரங்களில், நாதமுனிகளுக்கு முன் ஆழ்வார்களையெல்லாம் பரம்பரைமுறைப்படியேவைத்துப் பின்பு அம்முனிகளையும் ஆளவந்தாரையும் கூறுதலால், அவ்ஆழ்வார்கள் இவ்விருவர்க்கும் முந்தியவர்களென்பது நன்கு விளங்கும். (இவ்வமுதனார் கூரத்தாழ்வான் சிஷ்யரென்பதை இவரந்தாதியின் 7-ம் பாசுரமும் தெளிவுறுத்தும்.) அன்றியும் பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகரப் பெருமாள்—இவர்கள் அருளிச்செயல்களுக்கு, நாதமுனிகளும் அவர் சிஷ்யர்களாகிய உய்யக்கொண்டார் மணக்காலநம்பிகளுமருளிய தனியன்கள் முறையே காணப்படுகின்றன. இத்தனியனகள் அவர்கள் பாடியனவென்பது இன்றுநேற்றன்றித் தொன்றுதொட்டு வழங்கிவரும் மரபாதலால், அவை வறிய தனிப்பாடல்களைப் போன்றன ஆகா. இனி, நவீனர் சிலர், திருமங்கைமன்னன் முதலியோர், நாதமுனிகட்குப்பின் ஆளவந்தாரதுபதேசம் பெற்றவரென்று கூறுதல் சிறிதும் ஒவ்வாவுரையென்பது மேற்கூற்றுக்களால்தேற்றமாம். அவர் கூறுவது உண்மையானால், உடையவர்காலத்துக்குச் சிறிது முந்திய செய்திகளை யெல்லாங் கூறும் "திவ்யசூரிசரிதை" முதலிய

பழைய குருபரம்பரைகள், ஆளவந்தார்க்கும், ஆழ்வார்களிற் சிலர்க்குமுள்ள இவ்வரியபெரிய சம்பந்தத்தை விட்டொழிந்ததற்குச் சிறந்தகாரணம் வேண்டுமன்றோ! மூற்காட்டியவற்றால், நம் ஆராய்ச்சுரிய ஆழ்வார், நாதமுனிகள்காலமாகிய கி. பி. பதினோராம் நூற்றாண்டுக்கு முந்தியதோர் காலத்தில் எழுந்தருளியிருந்தவரென்பது தெளிவாகின்றது.

இனி, திருமங்கைமன்னன், 1800-வருஷங்கட்கு முற்பட்ட சங்ககாலத்துக்குப் பின்பே விளங்கியவரென்பது, அச்சங்ககாலத்தவனாகிய சோழன் கரிகாலன்வழியில்வந்த கோச்செங்கணனைத் திருநறையூர்ப்பதிகத்தில் அவர் புகழ்தலால் விளங்கும். இன்னும் சிறிதாராய்ந்துசெல்லின், கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் தென்னாடு வந்து ஆட்சி தொடங்கியவராகத் தெரியும் பல்லவவரசரை அவ்ஆழ்வார் தம் பாசுரங்களில் ஓதுதலால், அவர், அவ்வைந்தா நூற்றாண்டுக்குப் பிந்தினவரென்பதும் நிச்சயமாம். ஆகவே, கி. பி. 11-ஆம் நூற்றாண்டுக்கும், 5-ஆம் நூற்றாண்டுக்கும் மத்தியகாலமொன்றே திருமங்கை மன்னனுக்குரியதென்று விளங்கிற்று.

இனி, அக்காலந்தான் யாது என்று பார்ப்போம். ஸ்ரீஅப்பர் ஞானசம்பந்தமூர்த்திகள் காலங்களிற்போலவே இவ்வாழ்வார் நாளிலும் ஜைனபௌத்தர் கூட்டம் அதிக இமிசை செய்துவந்ததென்று அவர் பாடல்களால் தெரியவருகின்றது.* அன்றியும், திருமங்கை

* "பிச்சச்சிறு பீலிபிடித்துலகிற் பிணந்தின்மட வாரவர்போலங்ஙனே
அச்சமிலர் நாணிலாதன்மையால் அவர்செய்கைவெறுத்து."

"பிச்சச் சிறுபீலிச் சமண்குண்டர் முதலாயோர்
விச்சைக் கிறையென்னு மவ்விறையைப் பணியாதே."

"துவரித்த வுடையவர்க்குந் தூய்மையில்லாச் சமணர்க்கும்
அவர்கட்கங் கருளில்லா வருளானே."

"வந்திக்கு மற்றவர்க்கு மாசுடம்பில் வல்லமணர் தமக்கு மல்லேன்."

"வெள்ளியார் பிண்டியார் போதியா ரென்றிவ ரோதுகின்ற
கள்ளநூல் தன்னை."

"புந்தியில் சமணர் புத்தரென்றிவர்க ளொத்தன பேசவுமுகந்திட்
டெந்தைபெம்மானுரிமையவர் தலைவரெண்ணிமுன்னிடங்கொண்ட
[கோயில்."
(திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி).

"புலையற மாகிநின்ற புத்தொடு சமணமெல்லாங்
கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோ."
"வெறுப்பொடு சமணமுண்டர் விதியில்சாக்கியர்கள் நின்பாற்
பொறுப்பரி யனகள்பேசிப் போவதே நோயதாகி."

(தொண்டரடிப்பொடிகள் திருமாலை)

யார் பாசுரங்களில் அடிக்கடி பயிலும் பல்லவவரசர்பெருமையை * நோக்கின், அவர் அவ்வரசர் விளங்கிய காலமொன்றில் எழுந்தருளி யிருந்தவரென்று தோன்றுமற்போகாது. இவ்விரண்டு காரணங்களும் திருமங்கைமன்னனது காலநிலையை ஒருவாறு சூசிப்பிக்கின்றதோடு, அவ்வாழ்வார் அருமைபாராட்டிக்கூறும் அரசர் செய்திகள் சில, அவர் இன்னகாலத்தவரென்று துணியுமாறு நம்மைத் தூண்டவுஞ் செய்கின்றன. எப்படியெனில், பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்தில், பல்லவவரசனொருவன் மண்ணை, நெல்வேலி, கருவூர் என்னுமிடங்களில் நிகழ்ந்த பெரும்போர்களிலே வெற்றிபெற்றவனென்று திருமங்கைமன்னன் புகழ்கின்றார்.† இப்போர்களை நோக்கும்போது அவை, கி. பி. 710-ல் ஆட்சிதொடங்கினவனாகத்தெரியும் நந்திபோத பல்லவமல்லன் செயல்களொன்று விளங்குகின்றன. உதயேந்திரந் தானசாஸனத்தில் அந்நந்திபோதன் சேனாபதியாகிய உதயசந்திரனென்பான் மண்ணை, நெல்வேலி, விந்தியமலைத்தொடர்ச்சி என்னும் இடங்களில் மூன்றுயுத்தநடத்தி வென்றதாக வரையப்பட்டுள்ளது. இவற்றுள், மண்ணைப்போர் பாண்டியனொருவனுடன் நடத்தியது. அப்போரில், பாண்டியன் தனக்குரிய "காளிதுர்க்க"த்தை

* பரமேச்சுரவிண்ணகரப் பதிகம் முழுவதுங்காண்க.

"மன்னுதண்பொழிலும் வாவியுமதிளு மாடமாளிகையு மண்டபமும் தென்னன் தொண்டையர்கோன் செய்தநன்மயிலை."

"மன்னவன் தொண்டையர்கோன் வணங்குநீண்முடி மாலைவயிரமே [கன்."

"பைம்பொன்னுமுத்து மணியுங்கொணர்ந்து படைமன்னவன் பல்ல [வர்கோன்வணங்கும்."

"துளங்குநீண்முடி யரசர்தங்குரிசி றொண்டைமன்னவன் றிண்டிற [லொருவற்கு."

† "நிரந்தவர் மண்ணையிற் புண்ணுகர்வே னெடுவாயிலுகச்செருவின் முனநாட் பரந்தவன் பல்லவர்கோன்."

"உலகுடைமன்னவன் தென்னவனைக் கன்னிமாமதிள்சூழ் கருவூர் வெருவப், பலபடை சாயவென்றான்."

"படைத்திறல் வில்லவனேல்மேலியில் வெருவச்செருவேல் வலங் கைப்பிடித்த, படைத்திறற் பல்லவர்கோன்."

(திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி.)

இழந்தானென்று அச்சாஸனத்திற்சொல்லப்படுகின்றது.† இவ்வாறு திருமங்கைமன்னன்குறித்த மன்னை, நெல்வேலிப்போர்கள் உதயேந்திரசாஸனத்தில் நந்திபோதனைச் சார்ந்ததாகக் காணப்படுதலோடு, பாண்டியன் "காளிதுர்க்கம்" என்னும் மலையரணிழந்தசெய்தி, "தேம்பொழிற் குன்றெயிற் றென்னவனைத் திசைப்பச் செருமேல் வியந்தன்று சென்ற, பாம்புடைப்பல்லவர்கோன்" என அப்பதிகத்தில் குறிப்பிக்கப்பட்டுமுள்ளது. (குன்றெயில் - மலைக்கோட்டை; இது சாஸனத்திற்கண்டபாண்டியனது "காளிதுர்க்க" மாதல்வேண்டும்) இவற்றால், திருமங்கைமன்னனாற் புகழப்பெற்ற பல்லவவேந்தன் நந்திபோதவன்மனென்றே கருதலாம். அன்றியும் அவ்வரசன் வைணவாபிமானியாகவுங் காண்டலால், அவன் ஆழ்வார் பாடலுக் கேற்றவனுமாகின்றான். ஆகவே, அவனிருந்த கி. பி. 8-ஆம் நூற்றாண்டின் மத்தியமே, அவனைப்பாடிய திருமங்கையார் காலமுமாமென்று கூறலாம். ஆனால், அப்பல்லவன் இவ்வாழ்வார்க்கு முந்தினவனென்று தக்ககாரணமின்றியே சிலர் சங்கிக்கின்றனர். அச்சங்கை, நாம் அடியிற்காட்டப்போகும் வேறோர் அருமையான காரணத்தால் ஒருவாறு நீங்கக்கூடும்.

திருமங்கை மன்னனது பெரியதிருமொழி அட்டபுயகரப்பதிகத்துள்ளே;—

மன்னவன் தொண்டையர்கோன்வணங்கு நீண்முடிமாலை வயிரமேகன்
தன்வலிதன்புகழ் சூழ்ந்தகச்சி யட்டபுயகரத் தாதிதன்னைக்
கன்னிநன் மாமதிள்வேந்தன் காமருசீர்க்கலிகன்றிகுன்றா
வின்னிசையாற்சொன்னசெஞ்சொன் மாலையேத்தவல்லார்க்கிடமவை
[குந்தமே.

என்னும்பாசுரம் ஈற்றிலுள்ளது. இதன் முதலிரண்டடியையும் சிறிதுற்றுநோக்கினால், தொண்டைவேந்தனொருவனால் வணங்கப்பட்ட அரசன்பெயரும், அவன் காஞ்சியிலடைந்திருந்த பிரதாபமும் கீர்த்தியும் உரைக்கப்படுதல் விளங்கும். பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம், இப்பாசுரத்தில்வரும் "வயிரமேகன்" என்பது "சக்கரவர்த்திக்குப்பெயர்" என்று கூறுகின்றது. இவற்றால் 'வயிரமேகன்' என்பான் ஒரு பெருவேந்தனென்றும், அவன் கச்சியையாண்ட அரசனால் வணங்கப்பட்ட பெருமையையுடையானென்றும், அவன் கீர்த்திப்பிரதாபங்கள் காஞ்சிமண்டலத்திற் பரவின என்றும் தெளிவாகின்றன. அட்டபுயகரம் காஞ்சியைச்சார்ந்ததென்பதைக்

† Salem District Mannual, Vol. II, pp. 356.

குறிக்கவந்தஆழ்வார், அக்கச்சியை மற்றப்பெருமைகளால் அலங்கரிக்காது "வயிரமேகன் தன்வலி தன்புகழ்சூழ்ந்த கச்சி" என்று பெருமைப்படுத்தலால், அஃது அவர்காலத்து நிகழ்ச்சியென்று கருதலே நேராகும். இனிஇவ்வயிரமேகனென்பான் யாவன்? எக்காலத்தவனென்பதை ஆராய்வோம்.

இராஷ்டிரகூடநாட்டு மான்யகேதயாதவவரசர்கள், மேலைச்சளுக்கியரைக் கி. பி. எட்டாநூற்றாண்டின் மத்தியில் முறியடித்தோட்டிய பெருவலிபடைத்த வகுப்பினர். இவ்வரசர் சரித்திரம் தக்க ஆதாரங்களுடன், மிஸ்டர் பிளீட் (Mr. Fleet), டாக்டர் பர்ஜஸ் (Dr. Burgess) முதலிய பண்டிதரால் வெளியிடப்பெற்ற நூல்களிற் சொல்லப்படுகின்றது. இவ்வரசர் வடபுலத்தினின்று வந்தவர்கள். இவர்களில் ஆறும் அரசனாகிய தண்டிவன்மன் கி. பி. 753-754-வரை ஓராண்டே ஆட்சிபுரிந்தவனென்று குறிக்கப்பட்டுள்ளது. இவன் "வயிரமேகன்" என்றும் அழைக்கப்படுவானென்பது மிஸ்டர் லூயிஸ் ரைஸ்(Mr. Lewis Rice)துரை வெளியிட்டசாஸனமொன்று தெளிவாக்குகின்றது (Indian Antiquery, XII. 11). ஆயின் வடநாட்டானாகிய இவ்விராஷ்டிரகூட அரசனுக்கும் தென்னாட்டுக் காஞ்சிபுரத்துக்கும் சம்பந்தமென்னையென்று சிலர் உசாவவரலாம். இவ்வயிரமேகன் அரசர்பலரை வென்றவனெனப்படுதலோடு இவன் காஞ்சிப்பல்லவனைப் போரில்வென்று, அந்நகரைப் பிடித்தவனென்றும் இவன் சரித்திரம் குறித்தலால், இத்தண்டிவன்மனாகிய வயிரமேகனே, திருமங்கையாழ்வார் குறித்த "வயிரமேகன்" என்பதில் ஐயமில்லை. இவன் சரித்திரத்துக்குப் பொருந்தவே, அவ்வாழ்வார் வாக்கினுள் "மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும்" என்பது வயிரமேகன் பல்லவஅரசனைவென்றவனென்பதையும் "வயிரமேகன் தன்வலி தன்புகழ்சூழ்ந்த கச்சி" என்பது இவ்வரசன் கச்சிநகரைப் பிடித்த பெருவலியாற் கீர்த்திபெற்றவனென்பதையும் குறிப்பால் விளக்குதல் காண்க. "தொண்டையர்கோன்" என்பது தொண்டைநாடாண்ட பல்லவர்க்கும் வழங்குவதென்பது, நந்திக்கலம்பக முதலிய நூல்களாற் றெளிவாம். இனி வயிரமேகனாகிய தண்டிவன்மன் வழியினர்சிலரும், பல்லவரோடு பகைமைகொண்டவராகக் கா

ணப்படுகின்றார். காஞ்சியை, அவ்வயிரமேகன்பிடித்தகாலம் 753-754-க்குள் ஆகவேண்டுமாதலால் அக்காலத்தை மிகவும் ஒட்டியே ஆழ்வார் தம் அட்டபுயகரப்பதிகத்தையும் அருளினரென்று சொல்லலாம். இவ்வயிரமேகனென்னும் பெயர் வேறரசர்க்கு வழங்குவதாக எம்மாராய்ச்சியிற் புலப்படவில்லை.

இனி, 754-ல் இருந்த வயிரமேகனல் வெல்லப்பட்ட பல்லவவேந்தன் 760-வரை ஆட்சி செய்தவனாகச் சொல்லப்படும் நந்திபோதவன்மனாதல் வேண்டும். பரமேச்சுர விண்ணகரப் பதிகத்திற் கண்ட செய்கைகளுடையவன், அந்நந்திபோதனென்று முன்புகாட்டினேமாதலால், திருமங்கையாழ்வார் ஏறக்குறையத் தங்காலத்துச் செய்திகளையே அப்பதிகத்திற் குறித்திருக்கிறாரென்று பெறப்படுகின்றது. அந்நந்தி செய்கைகள், ஆழ்வாரால், "செருமேல் வியந்தன்று சென்றான்" "செருவின் முனநாட் பரந்தவன்" "பண்டோருகால் வளைத்தான்" எனப்பழைமையுடையனவாகக் காட்டப்படுதலால், நீடித்த ஆட்சியுடையவனாகத் தெரியும் அப்பல்லவவேந்தனது இளமைக்கால நிகழ்ச்சிகளே பரமேச்சுர விண்ணகரப் பதிகத்திற் குறிக்கப்பட்டவையென்றும் ஊகிக்கவேண்டியிருக்கிறது. ஒருகால், இப்பதிகத்திற் சொல்லப்பட்ட பல்லவவேந்தன், நந்திபோதன் அல்லனென்று பின்னாராய்ச்சியால் மாறுவதாயினும், திருமங்கையார் காலத்தவன் வயிரமேகனென்னும் எம்முரை மாறுபடாததாம்.

இனிச்சிலர் கூறுவதுபோல், திருமங்கைமன்னன் கி. பி. 11-ம் நூற்றாண்டுக்கும் பிந்தினவராயின், பல்லவராஜ்யத்தைத் தலைகவிழச் செய்த பராந்தகன்(I) முதலிய பிரபலவரசர்பெருமைகளைத் தம்பாசுரங்களில் அமைக்காது, அவர் பல்லவர்பெருமைகளையே தம்பதிகங்களில் அடிக்கடி எடுத்தோதுவதும், அதினும் "மன்னவன் தொண்டையர்கோன் வணங்கு நீண்முடிமாலை வயிரமேகன், தன்வலி தன்புகழ்சூழ்ந்தகச்சி" எனக்கச்சியைப்புகழ்தற்கு, வேண்டாததும் பிற்காலத்துப்பிரசித்தமில்லாததுமான இராஷ்டிரகூடன் செய்தியைத் தம்பாசுரத்தில அருமைபாராட்டுவதும் எக்காரணம்பற்றிஎன்பதற்குத் தக்கசமாதானம் வேண்டுமன்றோ! இன்னும் அச்சிலர், திருமங்கைமன்னன் அருளிச்செயல் இராமாநுஜர்நாளில் வழக்குப்பெரிது

டையதன்றென்றுங் கூறுவர். உடையவர் காலத்தவரென்று தெளிந்த அமுதனார், தம் இராமாநுஜ நூற்றந்தாதியில் "கலிமிக்கசெந்நெற் கழனிக்குறையல் கலைப்பெருமான், ஒலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளந்தடித்ததனால், வலிமிக்கசியம் இராமாநுஜன்" "குறையற்பிரானடிக்கீழ் விள்ளாத வன்பன் இராமாநுஜன்" "நீலன்றனக்கினியானை" என, பெரியதிருமொழியிடத்தும், அதனையருளிய திருமங்கைமன்னனிடத்தும் உடையவர்க்கிருந்த அளவிலீடுபாட்டை விளக்கியிருத்தலால், அன்னோர்கூற்றுச் சிறிதும் பொருந்தாமை காண்க. இவ்வாறெல்லாம் அவர்எழுதற்கு, நம்மாழ்வார்காலம் 11ம் நூற்றாண்டென்று ஆதியில் தாம்சங்கற்பித்துப்புகுந்தமையால், ஆழ்வாரெல்லார்க்கும் பிந்திய திருமங்கைமன்னன்முதலியவர்க்கு ஆளவந்தார் காலத்தைக்காட்ட நேர்ந்ததேயன்றி வேறில்லை. நம்மாழ்வார் பெரியாழ்வாரிருவரும் முறையே தம் வாக்காலும்,சரித்திரத்தாலும் கி. பி. ஏழாநூற்றாண்டின் தொடக்கத்தவரென்று காட்டிக்கொள்வதையும், அவருட் பெரியாழ்வார் அந்நூற்றாண்டிலிருந்த "நெடுமாறன்" என்னும் அரசனைத் தம்பதிகத்தில் ஓதுதலையும் நாம் "பெரியாழ்வார் காலநிருணயம்" என்னும் விஷயத்திற் பரக்கவிளக்கியிருக்கிறோம்.

இதுகாறுங் கூறிவந்தவைகளால், திருமங்கைமன்னன் கி. பி. எட்டாநூற்றாண்டின் மத்தியில் விளங்கிய நந்திபோதவன்மன், இராஷ்டிரகூடவேந்தனான வயிரமேகன் (தண்டிவன்மன்)- இவ்விருவரது காலத்தவரே என்பதும், ஆகவே, அவ்வாழ்வாருடனிருந்த தொண்டரடிப்பொடிகளும், திருப்பாணாழ்வாரும் அதேகாலத்தவராவரென்பதும் விளங்கியவாறு காண்க. இவற்றால் இடைத்தொகுதியினராகிய நம்மாழ்வார், பெரியாழ்வார் முதலியோர் ஏழாநூற்றாண்டின் முற்பகுதியினராக, இறுதியினிற்கும் திருமங்கைமன்னன்முதலியோர் அவர்க்கு ஒரு நூற்றாண்டுக்குப்பின் எழுந்தருளியிருந்தவரென்பது பலிலிலக்காயிற்று.

மு. இராகவையங்கார்,

உதவிப்பத்திராசிரியர்.

தோடுகளுக்கு மதிகள் உவமை. ஆற்றிய - ஆற்றுதற்கு.

சஅ. நீலரத்நகண்டசரத்திற்கு உமாதேவியாருடைய கை உவமை.

சகூ-ருக. உரகன் - ஆதிசேடன்; அவன்தாங்கு மடந்தை - பூமிதேவி; அவள் தந்தை - பிரமதேவர்; அவள் காந்தன் - திருமால். அவர்கள்பிறப்பைத்தாங்கும் உறுப்புக்கள் - திருத்தோள்கள்; அவற்றைஉரகன் தழீஇயென்னவென்க. இலயப்புயங்கம் - புயங்கநடனம்; அரவுபோல் ஆடல். வலயப்புயங்கம் - பாம்பாகிய வாகுவலயம். வாகுவலயங்கட்குச் சேடனுவமை.

ருக-ருஉ. மிடற்றுமஞ்சு - நீலகண்டமாகிய மேகம். புரிநூல் - பூணூல்.

ருஉ-ருச. கஞ்சம் - தாமரை. குருகு அங்கைநாயகி - வளையலையணிந்த அழகியகையையுடைய உமாதேவியார். செங்கழுநீர் சேர்த்தமை - செங்கழுநீர்மாலை. கங்காதேவியாருடைய சிவந்தகண்களின் ஒளிக்குச் செங்கழுநீர்மாலையும் நகையொளிக்கு முத்துமாலையும் உவமைகள்.

ருச-ருசு. மார்த்தாண்டன் - சூரியன்; எழுவாய். சூரியனைப்பாரதயுத்தத்தில் மறைத்த முன்னோன் - திருமால். தடித்து - மின்னல். இரத்தினகடகத்திற்குச் சூரியன் உவமை.

ருசு-ருஅ. உந்தியென்பது ஆற்றிற்கும் கடலுக்கும் நாபிக்கும் பெயர். தன்பூதம் - அப்பு. பந்தி மருவு தாம முத்து - வரிசையாக மருவிய தகுதியையுடைய முத்துக்கள்; முத்தாலாகிய உதரபந்தனத்திற்கு நுரைஉவமை.

ருஅ-சுO. இவற்றால், திருவடிகளில் ஆடரவமும் கிண்கிணியும் அணிந்தமை கூறுகின்றார்; இவை - ஆடரவக் கிண்கிணியென்றுங் கூறப்படும். இவ்வரலாற்றை உகரு-ம் கண்ணிமுதலியவற்றாலுணர்க.

சுக-சுஎ. இவற்றால், திருமேனியிற் பச்சைக்கருப்பூரம் சாத்துதல்கூறுகின்றார். கருப்பூரத்திற்குப் பாற்கடற்றுளிகளின்செறிவும் நீறும் நிலவும் முத்தும் கங்கையும் நகையும் உவமைகள்.

சுக. திருப்பாற்கடலில் திருமாலின்மார்பில் தியாகேசர் முதலில் எழுந்தருளியிருந்தமை ஈண்டுஅறியற்பாலது.

சுஉ. திருமேனியாகிய தழல்.

சுச. திருநெல்வேலியில் மூங்கிலடியில் தோன்றியதுபற்றி, சிவபெருமான், வேய்முத்தென்று கூறப்படுவர்.

சுஅ. பளிதம்-பச்சைக்கருப்பூரம்; பளிதமாகிய மதி. ஊர் - பரிவேடம்.

சுகூ-எஉ. இவற்றால், நிலைக்கண்ணாடிபார்த்தல் கூறப்படுகின்றது. சிவபெருமானுடையதிருமேனியின் ஒவ்வொரு கூற்றைக்கவர்ந்த உமாதேவியார் முதலியோருடைய தவத்திலும் அதனை முற்றுங்கவர்ந்த நிலைக்கண்ணாடியின் தவமே பெரிதென்றபடி. கண்ணாடி, உலோகத்தாலும் செய்வித்தலுண்டு. சுருதி நிலைக்கண்ணாடித் தோன்ற அரியான் - சிவபெருமான். பருதி - வட்டம்.

எங. வேதவனம் - வேதாரணியம். அடைத்தோன் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். அது திறந்தோன் - திருநாவுக்கரசுநாயனார். தாதுவிடுத்தோன் - சுந்தரமூர்த்திநாயனார். சொற்பாட்டு - தேவாரங்கள்.

எச. நானூறு காரிகையை நல்கினேன் - நானூறு கட்டளைக்கலித்துறையாலாகிய திருக்கோவையாரை அருளிச்செய்த மாணிக்கவாசகர்.

எரு. கல்லெனல் - ஒலிக்குறிப்பு. கல்என்னும் உண்டியான்கான்முளை - கல்லென்கின்ற உணவையுடையவராகிய சிலாதமுனிவருடைய புத்திர

ரான திருநந்திதேவர். சிலாதரென்பதற்குக் கல்லையுண்பவரென்று பொருள்.

எடு-எசு. விசயன் செம்மலுக்கு - அருச்சுனனுடைய செவ்வியமற்போருக்கு. தோள்கொடுத்த செம்மலை - சிவபெருமான். செம்மல் - நிர்மாலியம், பெருமையிற் சிறந்த சண்டேசநாயனர். மயிலை - மயிலாப்பூரில்.

எஎ. என்பினுற்பெண்ணைப் பெற்றென்க. பெருத ஆண்பெண்ணை - ஈனுத ஆண்பனையை; ஆண்பனையைப் பெண்பனையாகச்செய்தோர் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

எஅ. பூதியம் - உடம்பு. மைந்தனுக்கு உயிரையளித்தோன் - திருநாவுக்கரசு நாயனர்.

எகூ. அப்பு அரவை இட்ட - ஆகாயகங்கையையும் பாம்பையுமணிந்த. தூதினுற் பரவையினது விருப்பத்தையடைந்தவர் - சுந்தரமூர்த்திநாயனர்.

அ0. அஞ்சு அம்புவாசி - (மன்மதனுடைய) ஐந்துபாணங்களின் விசேடத்தை. அம் சம்புவாசி - அழகிய நரியாகிய குதிரைகளை. அழைத்தோன் - மாணிக்கவாசகர்.

அ0-அக. துஞ்சு அமளி அம்பர்க்கு - தூங்குதற்குரியபடுக்கையை நீராகவுடைய திருமாலுக்கு. போதற்கு- பிரமதேவற்கு. சுந்தரமூர்த்திநாயனருடைய திருவருளால், தியாகேசரைத் திருவம்பரிலுள்ள தம்முடையயாகசாலைக்கு எழுந்தருளச் செய்தவர், சோமாசிமாறநாயனர். இக்கதையை, இந்நூல், சஉக, களஎ, சஙo-ம் கண்ணிகளாலும், "இகத்துக்குப் போகமறுமைக்கினிய பேரின்ப மெவர்க்கு நல்கிச், சகத்துக்குப் போகவினைதுரந்தவாரூரிறையைத் தையல் செம்பொ, னகத்துக்குப் போகவென விடுத்தமட்டோ சோமாசி யம்பர்ச் செய்யு, மகத்துக்குப் போகவென வாய்மலர்ந்த கவிமுகிலை வாழ்த்தி வாழ்வாம்." (பாயிரம், கூ.) என்னுந்திருக்கடவூர்ப்புராணச் செய்யுளாலும், திருவம்பர்ப்புராணத்துள்ள, மாறநாயனர் வழிபடுபடலத்தாலுமுணர்க.

அஉ. கால்சிலம்பின் சந்து அணிந்து - தென்றற்காற்றையுடைய பொதியின்மலையில் உண்டாகும் சந்தனக்காப்பைச் சாத்தி. தினந்தோறும் பூசையில் சிவபெருமானுடைய திருவடிச்சிலம்போசை கேட்டவர் - சேரமான்பெருமாணயனர்.

அஉ-அங. நூல் சிலம்ப கற்று-நூல்களை மிகக்கற்று; ஆவி காவி கமலைவாய் - தடாகங்கள்தோறும் நீலோற்பலங்களையுடைய திருவாரூரில்; கன்று ஆவிக்கு மகவை ஆவிகளைந்தோன் - மநுநீதிச்சோழர்; பெரியபுராணம், திருவாரூர்ச்சிறப்பைப்பார்க்க.

அங-அச. சற்றேனும் நீ எள்வாய் அலை - சிறிதேனும் நீ இகழாதே. 'என்னைஎன்வாயிலுமிழ்' என்றவர், வரகுணபாண்டியதேவர்; இதனை, "வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய, செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு, பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன, இடித்துக்கொண்டவனெச்சிலை நுகர்ந்தும்" (உஅ) என்னும் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையாலும், "பரிந்திடை மருதர் நன்னி ராடமுன் பரப்பு மெள்ளைக், கரந்தொரு கள்ளன் றின்னக் கண்டவர் கொடுசெ லுங்கா, லருந்திய தென்னை யென்ன வரன்றமர்க் கடிமையாக, வரும்பிற வியின்க ணென்றூன் மன்னவ னயின்றூன் வாங்கி" (சஅ-வது. உடு.) என்னும் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தாலும், மருதவனப்புராணம், வரகுணச்சருக்கம், சுகூ-ம் செய்யுளாலுமுணர்க.

அஎ. கம்பிக்காதழகரென்பது, தியாகேசர் திருநாமம்.

அஅ. தானமு தன்மையர் - ஸ்தானீகர்.

அகூ. சைவச்சுருதித் தலைவர்கள் - ஆதிசைவர்கள். பரிகரத்துச்சேயோர் - தொண்டுசெய்பவர்.

கூக. போற்று - துதி.

கூக-கூஉ. கூற்றை அழலுமூளரி - சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளை. அகக்கோளர் - உள்ளேகொண்டிருப்பவர்கள்.

கூங. தண்டு - மாணிக்கத்தண்டு. விட்டதிருவாசல் - விட்டவாயில். இது, சந்நிதியிலுள்ள பெரியகோபுரத்தையடுத்த வடக்குவாசல்.

கூச. எடுப்பளவோ - எடுத்தல்மட்டுமோ. காராயவண்ணக்கணை - திருமாலாகிய கணைகள்.

கூரு. உரககுணம் - பாம்பாகிய நாண். பீடுகெழீஇ-பெருமைபொருந்தி.

கூசு. அன்றைத்தேர் ஆழிக்கு - திரிபுரசங்காரகாலத்துக்கொண்ட தேரின் உருளைகளாகிய சந்திரசூரியர்களுக்கு.

கூஎ-கூஅ. நேமி - உருளை; ஆகாயகங்கையையும் மதியையும் இத்தேரின் முடி தொடச்செல்கின்றதென்றபடி.

க00. தூபத்தால் விண்புதைய. புணரி - பாற்கடல்.

க0க. பூசை - திருமால் செய்த பூசை. அந்த - அப்பாற்கடலில்.

க0உ. அவியைக் கையால் தொடநின்றார் - தேவர்.

க0ங. விரிந்த விழியில் உள்ளதீ - கோபாக்கினி. எரிவிழி - நெற்றிக்கண்.

க0ச. வேல் ஆலம் - வேற்படையையும் விடத்தையும். ஆலவட்டம் - விசிறி.

க0ச-க0ரு. வேலைதருகொடி - திருமகள். திருமகளை மார்பிலும் பூமிதேவியைப் புயத்திலும் வைத்தகொடி - திருமாலாகிய இடபக்கொடி.

க0சு. சேயோரிருவர் - விநாயகரும் முருகக்கடவுளும். ஏயோரிருவர் - திருமாலும் பிரமதேவரும்; ஏயோர், ஏனையோரென்பதன் விகாரம். இருபுள் - கருடனும் அன்னமும்.

க0எ. அருக்கர் - சூரியர் பன்னிருவர். முடிவெள்ளருக்கர் - உருத்திரர் பதினொருவர்.

க0அ. எண்மர் - அட்டவசுக்கள். நிலாஒருவர் - சந்திரன். ஐம்முனிவரோடு இருவர் - சப்தரிஷிகள். மானம் - விமானம்.

க0அ-க0கூ. இருகாரிப்பெயரோர் - வைரவக்கடவுளும் ஐயனாரும். ஞமிலி - நாய். வாரிப்பணையோன் - மன்மதன். மலைக்கால் - தென்றல்.

க0கூ-கக0. ஓரெட்டுவேந்தர் - திசாபாலரெண்மர். வருடை - ஆடு.

கக்க. நவசித்தர் - ஆதிநாதர்முதலியோர். போகர் - போகபூமியிலுள்ளோர். ஆகம் - மார்பு.

ககஉ. ஏமப்பூண்-பொன்னாபரணம். வாமம் - இடப்பக்கம்.

ககங. வரைப்பிறந்த அன்னம் - உமாதேவியார்.

ககச. வான்மகள் - இந்திராணி. மூன்று திருக்கண்மகள் - துர்க்கை. திரிசிக்கைமகள் - காளி.

ககசு. இருவர் - தும்புரு நாரதர்; கம்பளர் அசுவதரரென்னும் உரகர்களுமாம். இசையாகிய தேனை இறைப்ப.

ககஎ-ககஅ. குடமுழவு முதலியன வாத்திய விசேடங்கள்.

ககஅ-கஉ0. மகுடத்தலையன் - முசுகுந்தசக்கரவர்த்தி. தருநாடு - சுவர்க்கலோகம்.

கஉக. ஒருமறையோன் - சோமாசிமாறநாயனார்.

கஉஉ. முனைவர் - தேவர்.

௧௨௪. ஆயின் - ஆராய்ந்தால்.

௧௨௫. எழுகடலும் சிறுகும்

௧௨௬. செல்விவரும்ஆலயத்து மடவார் - திருமகள் அவதரித்த பாற்கடலிற்றோன்றிய தெய்வமகளிர்.

௧௨௬-௧௨௭. அரிமகன்-மன்மதன். சாபம் - 'இறக்க' என்று உமாதேவியாரிட்டசாபம். நீக்கியது - இறந்த பின்பு மீட்டும் தோன்றுவானென்றது. (திருவாரூர்ப்பு - தியாகராச.)

௧௨௭-௧௨௮. ஒருவன் - விசுவாமித்திரமுனிவர். அவரால் மேனகை ஒருகாலத்துச் சாபமுற்று இத்தலத்தை யடைந்து அச்சாபத்தை அவள் நீக்கிக்கொண்டனள். (திருவாரூர்ப்பு - விசுவா.) மால் நகரின் - பெருமை பொருந்திய வீடுகளையுடைய.

௧௨௮ ௧௨௯. ஒருபெண் - காயத்திரி. பிரமன்பாற் காயத்திரியைச்சேர்த்த சரிதையைப் பிரமயாகச் சருக்கத்தாலுணர்க. (திருவாரூர்ப்பு.)

௧௩0. ஒருவிஞ்சையன் - சுந்தரமூர்த்திநாயனர். விஞ்சையர் மாதர் - வித்தியாதரமகளிர்.

௧௩0-௧௩௧. ஸந்நிதியில்வந்து யாழ் வாசிக்கவேண்டுமென்று திருநீலகண்டயாழ்ப்பாணநாயனர் நிரம்பப்பிரார்த்தித்தபொழுது, ஸ்ரீவன்மீகநாதர், வடமதிலில் ஒரு வாயில்செய்வித்து, அவ்வழியே வருவித்து யாழ்வாசிக்கச்செய்து கேட்டருளினர்; அவருடன் சிலகந்தருவமகளிர் வந்தனரென்பது வரலாறு: இதனை, பெரியபுராணத்தில் திருநீலகண்டயாழ்ப்பாணநாயனர் புராணம், அ-ம் திருவிருத்தத்தாலும், "திருநீல கண்டத்துப் பெரும்பாணன் திருமூலட் டானன் முன்னே, பெருகார்வத் துடனேயாழ் வாசிக்கப் பெறுவேனோ வென்னக பேணி, யுரமாரும் வடமதிலி லொரு வாய்தல் செய்வித்துள் வரவுமேவித், திருவாரூர்த் திருமூலட்டானனவன் யாழ்கேட்டுச் சிறப்புச் செய்தான்." (திருவாரூர்ச். ௩௮) என்னும் கமலாலயச்சிறப்பாலும், "பாதியிரா, வாரூர் வடபுரிசை யன்பாற் றிறந்ததுவும்." (௩௬௬, ௩௬௭) என்னும் திருக்கழுக்குன்ற உலாவாலுமுணர்க.

௧௩௨. பிரமதேவர் இத்தலத்தை ஒருதட்டிலும் மற்றைத் தலங்களை ஒருதட்டிலும் வைத்து நிறுத்தபொழுது, இத்தலம் கனத்துவிளங்கியதென்பது வரலாறு; "ஒருதலையின ப்புரிமைத் தொழிந்தசிவ புரிவிதங்க ளனைத்து மற்றை, யொருதலையி னுறவைத்தே யுறத்தூக்கிப் பார்த்தலுமப் புரிக்கே யொத்த, குருவிலைமற்றப்புரிகட் கப்புரியிற் பராசத்தி குலவ லாலே, யுரியபெயர் சீநகர மததனையே திருவாரூ ரென்ப ரோர்ந்தோர்." (கமலா. பசுபதி). இப்படி - இத்தலம்.

௧௩௪. கோடி - வளைவு.

௧௩௬-௧௩௭. வாய்முத்தும் தோள் வேயம் எதிர்நிரனிறை.

௧௩௯-௧௪௧. ஆனந்தர் - ஆனந்தேசுவரர். தாமரைப்பூக்களைப் பறித்து விற்று வயிறுவளர்ப்பவனுகிய பட்டினசாமியென்னும் வணிகனொருவன், ஒருநாள் அவைகள் விற்கப்படாமையால் மெலிந்து இத்தலத்தை அடைந்து அன்றிரவிற் சிலபெரியோர்கள் கட்டளைப்படி ஆனந்தேசரை அம்மலர்களால் அருச்சித்து விழித்துக் கொண்டேயிருந்து தாங்க முடியாதபசியால் மறுநாட்காலையில் இறந்தான்; மனைவியுமிறந்தாள். பின்பு அவன் சூரியகுலத்தில் இக்ஷ்வாகுபரம்பரையிற் பத்திரசேனனென்னும் அரசனானன். அவள் அவனுடைய தேவியாயினளென்பது வரலாறு. (திருவாரூர்ப்பு. ஆனந்தே.) தெளிர்த்தல் - முழங்குதல். குருகு - வளையல்.

௧௪௨. முழுக - முழுங்க.

௧௪௫. அந்தி போதும் மதி - அந்தியில் வருகின்ற சந்திரன்.

கசசு. முகிழ்ப்பு - அரும்புதல்.

கசஅ. தார் - மார்பின்மாலை.

கசகூ. வனசம் கரன் - தாமரைமலர்போன்ற திருக்கைகளில். கனசக்கரன் அமளி கக்சு - கனவியசக்கரத்தையுடைய திருமாலின் படுக்கையாகிய அராக்கச்சு.

கருo. தியாகவினோதப் பெயர் வரைந்த சேலை - தியாகவினோதனென்னும் திருநாமத்தை எழுதிய சேலை; இஃது இக்காலத்து, தியாகவர்ணமெ ன வழங்கும். சீரா - தலைச்சிரா.

கருக. ஆடரவக்கிண்கிணி - ஆடரவமும் கிண்கிணியுமென்க.

கருச. முசுகுந்தசக்கரவர்த்தி, வைவச்சுதகற்பத்தில் மாசிமாதத்தில் அத்தநக்ஷத்திரத்தில் இத்தலத்தே ஸ்ரீ தியாகேசரை ஸ்தாபனஞ்செய்து திருவிழாச் செய்வித்தனர். (கயிலா. சோமா. உஅ; திருவாரூர்ப்பு. தியாகராச. உ௩ச; திருவிழா.)

கருரு. வீரை - கடல். வீரகண்டையம் - தியாகேசருடைய வாட்படை.

கருஎ. திருமார்பிற்குச் செவ்விய அந்திவானமும் செவ்வந்திமாலைக்கு நிலாவும் உவமைகள்.

கருஎ-கருஅ. சிவபெருமானுடைய திருச்செவிகளிற் கம்பளர் அசுவதரரென்னு மிருவரும் இடைவிடாமற் பாடிக்கொண்டிருக்கின்றன ரென்பது சைவபுராணவரலாறு.

கசுo. தோற்று அழகு - தோற்றுமழகு.

கசுக. கங்கைக்கு முகங்கள் ஆயிரமாதலின், கண்கள் ஈராயிரம் கூறப்பட்டன.

கசுஉ. வீதியிடத்து எள்விழா.

கசுச. நெருப்பினால் நீர்குறையும்.

கசுசு. 'அம்பொன் குடத்தோடளித்து' என்றார், கொங்கைகளைப் பசப்பித்தது கருதி.

கசுஎ. அமண் - சமணமதம், ஆடையின்மை. தென்னாட்டுஅமணைச் சிதைத்தார் - பாண்டிநாட்டிற்சமண மதத்தை அழிவித்தார். கூறை - ஆடை.

கசுஅ-கசுகூ. கன்று - பசுக்கன்று, வளையல்கள்; பெரியபுராணத்தில் திருவாரூர்ச்சிறப்பிற்கூறியகதை ஈண்டு உணரற்பாலது.

கஎஉ. சாலகம் - தியாகேசர் பக்கத்திலுள்ள பல்கணி.

கஎ௩-கஎச. அடிவைப்பு ஒன்றற்கு ஆயிரம்பொன் பெய்தல், "கனகமோரடிக் காயிர நல்குமெங் கடவுளனக நாயகன்" (திருவாரூர்ப்பு. திருநகரச். சஎ) என்பதனாலுமுணரப்படும்.

கஎரு. மாலானவர் தனுநாண் - திருமாலினுடைய வில்லிற்பூட்டிய நாணி, மயக்கமடைந்த மகளிருடைய உடம்பிலுள்ள இலச்சை.

கஎசு. வேதியன் - சோமாசிமாறநாயனார்.

கஅo. மாறு - விடை.

கஅக. சிவதத்த மாவளவன், அரசுரிமையைப் பெறுமளவும் தியாகேசர் அரசராகவீற்றிருந்து நாட்டிலுள்ளாருடைய இன்பதுன்பங்களைத் தமது திருவாக்காலேயேவிசாரித்துஅரசாட்சிசெய்தருளினமையின், 'திருவாய்க்கேள்வி செய்தகதை' என்றார். இச்சரிதையைத் தியாகராசலீலையாலுணர்க. திருவாய்க்கேள்வி என்னுமொழியைத் தமிழ்ச்சிலாசாசனங்களிற் பரக்கக்காணலாம்.

கஅ௩. சாந்து - கருஞ்சாந்து.

கஅரு. காமன் - காமனால்.

கஅஎ. கலை - கலைமான், வித்தை.

ககூo. தக்கன்மகம் பலரையுங்கூட்டிமுடித்ததென்றது ஈண்டுஅறியத்தக்கது. கூட்டிமுடியாத, சிலேடை.

கககஉ-கககங. தேரூர்ந்தசேய் முதலியோர்கள் இறந்துபிறந்தமை, இவளுடையபற்கள்வீழ்ந்து முளைத்தமைக்கு உவமை. தேரூர்ந்த சேய் - வீதிவிடங்கன். செங்காட்டிற் சேய் - சீராளதேவர். கரா - முதலை.

கககங-கககச. சேயும் உடன்கூடுந் துணையும் - திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரும் வந்து கூடச்சேருமளவும்.

கககக. வள்ளம் - கிண்ணம். அதென்று - அக்கிண்ணமென்று. ஆயம் நள் - ஆயத்தின் நடுவே.

உ0க-உ0உ. சூரியகுலத்தில் தசரதர் மரபிற் பிறந்து ஊமையாகவேயிருந்து அரசாட்சிசெய்துவந்த தசரதனென்னுமரசன், இத்தலத்தையடைந்து வாணிதீர்த்தத்தில் ஆடியெழுந்தவுடன் வாக்கு உண்டாகப்பெற்று அதன் வடகரையில்எழுந்தருளிய பராசத்தியைப் பலகவிகளால் துதித்தானென்பதுவரலாறு; "மேதகு வாணிதீர்த்த வியன்புனற் படிந்தவேந்தன், வாதவூ ராளி செய்ய வதனதாமரைகொ ழிக்குஞ், சீதமா கருணை வெள்ளந் திளைத்திடு மூங்கை யென்னப், போதமா மதுரச் செந்தேன் பொழிகவி பல்மொ ழிந்தான்" (திருவாரூர்ப்பு. பரா. உ௪.)

உ0௩-உ0௪. சிதம்பரத்தில் அர்த்தயாமதரிசனமும் இத்தலத்தில்திருவந்திக்காப்புத் தரிசனமும் மிக்கவிசேடமுடையன; இவ்வுண்மை, "ஆதலாற்கம லாலயத் தந்தியங் காப்புங், கோதி லாமணி மன்றத்தி யாமமுங் குடியாப், போதும்" (திருக்கழுக்குன்ற. உருத்திர. ௬௬) என்பதனால் உணரற்பாலது இதுபற்றியே தியாகேசருக்குத் திருவந்திக்காப்பழகரென்பது திருநாமமாயிற்று. தில்லை ஆர் ஊர் - தில்லைமரங்கள் நிரம்பிய ஊர்; சிதம்பரம்.

உ0௫. ஆனர்த்ததேசத்து அரசனாகியசமற்காரனென்பவன், வேட்டையாடச்சென்று, கன்றுக்குப் பாலூட்டிக்கொண்டுநின்ற பெண்மானின்மீது அம்பையெய்து, வெண்குட்டமுண்டாகும்படி அதனாற் சபிக்கப்பெற்று, எவ்விடத்தும் அந்நோய் தீரப்பெறுமல் இத்தலத்தையடைந்து சங்கதீர்த்தத்திலாடி அந்நோய் நீங்கப்பெற்று இந்நகரத்தைப் புதுப்பித்துப் பலஅந்தணர்களை இங்கே தாபனஞ்செய்தமையால், இதற்குச் சமற்காரபுரமென்பதுபெயராயிற்று. (திருவாரூர்ப்பு. சமற்கார.)

உ0௬. திருவாரூரிற் பிறந்தவர்கள் முத்தியெய்துதற்கு உரியவர்களென்பதை, "திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கு மடியேன்" (திருத்தொண்டத். க0) என்பதனாலுமுணர்க. பேரின்பத்தை அடைவிக்கும் பெம்மான்.

உ0௬ - உ0௭. புலை-அசுத்தம். திருவாரூரில் உத்ஸவதரிசனஞ் செய்துவிட்டுத் தமது ஊரையடைந்த நமிநந்தியடிகள்நாயனார் பலரும் தீண்டினமையால் தமக்கு அசுத்தமுண்டாயிற்றென்றும் ஸ்நானஞ்செய்துவிட்டே சிவபூசை செய்யவேண்டுமென்றும் கருதி ஸ்நானத்திற்குத் தீர்த்தங்கொண்டுவரச் சொல்லிவிட்டுத் தமது வீட்டின் புறத்திண்ணையில் தங்கினர். அயர்ச்சிமிகுதியால் சிறிதுதுயில்வந்தது. அப்பொழுது, தியாகேசர் அவருடைய கனவி லெழுந்தருளி, "திருவாரூரிற் பிறந்தவர்களெல்லாரும் நம்கணங்கள்; அதனை நாளைக் காண்பாயாக" என்று அருளிச்செய்துவிட்டு மறைந்தருளினர். (பெரிய. நமிநந்தி).

உ0௯. மொய்த்து ஆயம் முன் செல்ல.

உகக-உகங. தியாகேசர் திருவடியிலுள்ள ஆடரவக் கிண்கிணியைப் பேதை வேண்டுமென்றல் இக்கண்ணிகளாற் கூறப்படும். ஆட்டைக்கு இருதினம் - பாதசேவைக்கு உரிய நாட்கள், மார்கழித்திருவாதிரைப்பும்

பங்குனிஉத்தரமும். பந்தித்த - கட்டிய.

உகசு. விதிப்பதோ - உண்டுபண்ணுவதோ.

உகஎ. இரண்டு - ஆடரவமும் கிண்கிணியும். இந்தவிரண்டும் ஒன்றாகவுங் கூறப்படும்.

உகக. இவ்வாட்டு - அஜபாநடனம். ஆடரவமாகிய பதஞ்சலி, ஆதிசேஷனுடையஅவதாரமாதலின், 'இன்னமரி பாயிழக்குமோ' என்றார்.

உஉ0. உரைத்திமோ, உளப்பாட்டுத்தன்மைப்பன்மை.

உஉக. ஆழியான்சேய்-மன்மதன்.

உஉஉ. பெட்குமது - விரும்புதற்குரியது. பொதும்பு - மரப்பொந்து. எதிர்ந்து - மழையை யெதிர்ந்து.

உஉ௩. வேட்பு - வேட்டல்.

உஉ௪. பறை - வாத்தியம்.

உஉ௫-உஉஎ. சிவபெருமானுடையவிடை - திருமால்; அவர் இராமாவதாரத்தில் இராவணனை முதற்போரினிறுதியில், 'இன்றுசென்று நாளைவா' என்றது ஈண்டு அறியற்பாலது. (கம்ப. யுத்த. முதற். உ௫௬)

உஉஅ. கமலை என - திருவாரூரைப்போல. கொண்டைக்குத் திருவாரூருவமை. செங்கமலை மாலேயே கூடும்படியென்றதற்கு, திருமகள் திருமாலைச் சேரும்படியென்றும் திருமகள்வடிவாகச் செய்யப்படும் அணியும் பூமாலையும் தன்பாற் சேரும்படியென்றும் பொருள்கொள்க.

உஉஅ-உஉக. ஆடும்வினை - விளையாட்டு. வேகடஞ்செய்யாதாய் - சாணைபிடித்தல் செய்யப்படாதமாணிக்கமாய். செய்மணியாய் - வேகடஞ்செய்தமணியாய்.

உ௩க. பாவைவிளையாடி - பாவையை வைத்துக்கொண்டு விளையாடி. கொல்லி-கொல்லிமலை. அம்மலைதன்பாற் பாவையையுடைமையின், பாவையையுடைய இவளுக்கு உவமையாயிற்று; அப்பாவை கொல்லிப் பாவை யெனப்படும். 'போய்' என்றார், பேதைப்பருவங்கடந்தமையின்.

உ௩௩-உ௩௫. சத்தவிடங்கத்தலத்துள், திருக்காறாயலில் ஆதிவிடங்கரென்றும், திருக்கோளிலியில் அவனிவிடங்கரென்றும், திருமறைக்காட்டில் புவனிவிடங்கரென்றும், திருவாய்மூரில் நீலவிடங்கரென்றும், திருநள்ளாற்றில் நகரவிடங்கரென்றும், திருவாரூரில் வீதிவிடங்கரென்றும், திருநாகைக் காரோணத்தில் அழகவிடங்கரென்றும்தியாகராசமூர்த்திகளுக்குத் திருநாமங்கள் உள்ளன. செவ்வந்திக்கு இட்டபெயராதலின், 'விடங்கு' என்றார். ஆரூரன்நாமத்தது-வீதிவிடங்கென்பது; உ௫-உசு-ம் கண்ணிகளின் குறிப்பைப்பார்க்க.

உ௩௬. தொடலை - மாலை. தொடலைசெய்தென்க. மிலைந்து - சூடி.

உ௩எ. தியாகேசன்விருப்பே - தியாகேசருடைய விருப்பத்திற்குரியதே. கொடுத்துமென - கொடுப்போமென்றுசொல்ல.

உ௩அ. சூடியபின் - நீ அணிந்தபின்பு.

உ௩க. கண்ணுக்குக்கண்ணை இடந்துஇட்டார்-கண்ணப்பநாயனார். தாம்சூடியபூவைச்சூட்டுதற்குரியவர் கண்ணப்பநாயனாரே யென்றபடி.

உ௪0. திருமாலுக்கல்லாமல்.

உ௪க. பிறர் - பிறமகளிர். பங்குடையாள் - உமாதேவியார்.

உ௪௩-உ௪௪. திருத்தொண்டத்தொகை.

உ௪௫-உ௪௬. கருணாகரத்தொண்டைமானென்பவர், அரசனிடத்து அமைச்சராக விருந்து அவனுடைய அனுமதியின்றி அவன்பொருள்களைக்கொண்டு தியாகேசருக்குப் பற்பல

திருப்பணிகள் செய்த பின்பு அவனு ல் வருத்தமுற்றுப் பலர் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே தியாகேச ருடைய திருவடிகளை அடைந்தாரெ ன்னும் வரலாறு ஈண்டு அறியற்பால து; தியாகேசருடைய விருதாவளித் திருநாமங்களுள் கருணாகரத்தொண் டைமானென்பதும் ஒன்று; "கரு ணாகரன்செய் திருப்பணியைக் கருதி நலமாய்க் கண்டுசெய்த, பொருளா க ரனை வைத்துடையான்பூமியானைப்போ லாரோ" என்னும் சோழமண்டலச தகமும் அவர் திருப்பணிசெய்ததை வலியுறுத்துகின்றது.

உ௪௬-உ௪எ. கரம் - ஒளி. துங்க த்திகிரி - மேலாகிய தேருருள். திகி ரிவெற்பு - சக்கரவாளகிரி. பொங்க- ஒலிக்க.

உ௫0. அரியணை - தியாகேசருடை ய சிங்காதனம்.

உ௫உ. போதனையும் பாப்பனையு ம் முறையே பிரமருக்கும் திருமாலு க்குமுரியவை. பண்டுஅளந்த - முன் பு திறையாகஅளந்த. ஆரம் - முத்து.

உ௫௫. மறி - மான். அல்லாய - இருளையொத்த.

உ௫எ-உ௫அ. மேல் - பண்டைப் பிறப்பில். இடம் கிட்டுமோவென்க. சிவபெருமான் உண்டருளிய விடத் தின் கொடுமையை உமாதேவியார் தணித்தருளினரென்பது புராணவர லாறு

உ௫௯. பணி - வணங்குவாய். நிங் குநீங்கும்.

உ௬0. இடம், சிலேடை.

உ௬௧. தேவரகண்டரென்பது, ஸ் வாமி திருநாமம்.

உ௬உ. அருத்திவைத்த - ஆசை வைத்த.

உ௬௩-உ௬௪. பிறிது - திருமகளு க்கு வேறாக. பொய்கையில் - தேவ தீர்த்தத்தில்.

உ௬௪. வேழமுகன் - விநாயகர். மாற்றை வேழமுகனறியும் போதெ ன்க. ஆணிப்புதுக்கனகம் - உரையா ணிப்பொன்; இந்நூற்காப்பில், மாற் றுரைத்த விநாயகர் துதிக்குறிப்பை ப்பார்க்க.

உ௬௬. அது - அவ்விருள். முச்சி- உச்சிக்கொண்டை. நச்சு உதயம் — விடத்தின்தோற்றம்.

உ௬௧. தாலக்கா - பனங்காடு. சே ய்க்கு - திருஞானசம்பந்தமூர்த்தி நா யனாருக்கு. அவர் பதிகத்தால் திரு வோத்தூரில் ஆண்பனை பெண்பனை யாகிக் காய்த்த குரும்பையும் அவர் திருக்கோலக்காவிற்பெற்றதாளமும் கொங்கைகளுக்கு உவமை.

உஎ௬. தொழநின்ற - தொழும்ப டி தியாகேசர் எழுந்தருளியிருந்த. பொன் - இலக்குமி.

உஎஅ. பாகத்தினும் - பாகத்திலி ருந்தும். அசைந்தாடி - தியாகராசர். பால் — வெண்மை. பளிதம் - பச்சை க்கருப்பூரம்.

உஅ௧. திருமகளும் கலைமகளும்.

உஅஉ. வேய்முத்து - சிவபெருமா ன். உஅ௩. கருமா — ஆதிவராகம்.

உஅ௫. நிலவை - சந்திரனை.

உஅ௬. அரிக்கரியதாமரை - திரு மாலுக்கு அரிய திருவடி ; வண்டுக் கு அரிய தாமரைப்பூவென்பது மற் றொரு பொருள்.

உஅஎ. நந்து - சங்கம்.

உஅ௩-உஅஎ. முத்துப் பிறக்குமி டங்களாதலின், கரும்பு, பன்றி, யா னை, சந்திரன், சங்கம் இவைகள் கூற ப்பட்டன. இவற்றாற் சிவாதிக்கியம் கூறினமை அறியத்தக்கது ; முன்பு சிவபெருமானை, 'வேய்முத்து' என் றமைக்கேற்ப, ஒன்றன்பால் வினை முற்றுக்கள் கூறப்பட்டன.

உஅ௯. பனிப்போதின் - பனிக் காலத்துத் தாமரைப்பூவைப் போல.

எனத் தொடைவருங்கால் ஆசிரியத்தளையாய் வழுவாம். வரகு நளிமுழவு காருருமுப் பாதிரி என நிற்பக் குரவு எனத் தொடைவருங்கால் ஆசிரியத் தளையாய் வழுவாம். இவ்வாறே எல்லாவற்றோடும் ஒட்டி வழுக்காண்க. கலிக்குத் தளைவழுவின்று. நுந்தை மொழிமுதற்குற்றுகரமாதலின் இதற்கொத்த மொழிமுதற் குற்றுகரமின்மையிற் கட்டளைக்குத் தொடை கோடல் சிறப்பின்று. இச்சிறப்பின்மை கருதாது தொடைகோடலும் ஒன்று. நுந்தைக்கு இருபதடிக் கழித்து அறுநூற்றைந்தடியுள் ஐம்பத்தாறு தளை வழுக்களைந்து ஒழிந்தவடி ஐந்நூற்று நாற்பத்தொன்பதனுட் பெற்ற அடி மோனைத்தொடை ஐந்நூற்று நாற்பத்தொன்பது—௫௪௯. நுந்தையொழிந்த நேர்பதின்மூன்றுங் குற்றெழுத்து ஒற்றெடுத்த நேரசையும் நெட்டெழுத்துத் தனியேவந்த நேரசையுமாக உதாரணங்காட்டிற்றேனும் அவற்றிற்குரிய மூவகையசையானும் வரும் உதாரணங்களையும் கூறிக்கொண்டு தொடைகொள்க. ஒழிந்தனவற்றிற்கும் இவ்வாறே வேறுபடுமாறு அறிந்து சொற்களை வருவித்துத் தொடைகொள்க.

"ஒன்று தலையிட்ட வையைந்து சீரும், வழுவா யகவல் தொடைகொளல் கூறி, னேரா திச்சீர் பதின்மூன் றற்குத், தத்தமக் குரிய பன்னீ ரடிக்குண், முடிவில் வருமீ ரடிக ளெல்லாம், பின்வரு மடியின் முதற்சீ ரோடு, வெண்டளை யாகித் தளைவழூஉப் படுதலு, நிரையாதிச்சீர் பதின்மூன்றற்குந், தத்தமக் குரிய பன்னீ ரடிகளுண், முதல்வருமொரோவோ ரடிகளெல்லாம், பின்வரு மடியின் முதற்சீ ரோடு, வெண்டளை யாகி முற்கூறி யாங்குத், தளை வழூஉப் படுதலு, முடையவிவ் வடித்தொகை மூப்பத் தொன்பதுந், தொடைகோ ளின்றெனத் துணிந்தனர் புலவர்" "ஒன்று தலையிட்ட வையைந்து சீரும், வழுவா வெள்ளைத் தொடைகொளல் கூறி, னேரா திச்சீர் பதின்மூன் றூனு, முறமுழ நிலங்களுட் பெற்ற வடிகளுண், முதல்வரு மொரோவோ ரடிக ளெல்லாம், பின்வரு மடியின் முதற்சீர் தம்மோ, டாசிரி யத்தளை தட்டு வழுப் படுதலும், வரகு கடியாறு விறகுதீ வலியதெனு, நிரையாதி யாகிய சீர்க ளைன்கா, னுறமுழ மடிகளு ளிறுதி யடிகளு, மங்ஙனந் தளைவழுப் படுதலு முடையைமி, னிவற்றான் வந்த வடிபதி னேழுந், தொடைக்கியை பின்றெனத் துணிந்தனர் புலவர்" "வழூஉக் களைந்த முதற்பா விரண்டிற்குங், கலிக்கும் வரூஉ மடிமோனைத்தொடை, யைஞ்ஞூற்று நாற்பத் தொன்பதாகும்" "அவை பகுக்குங்கால், அகவற் கிருநூற் றெழுபத்து மூன்றும், வெள்ளைக் கொருநூற் றைம்பத் தாறும், கலிக்கு நூற்றிரு பஃது மாகும்" "வண்டு தேமா மின்னு ஞாயிறு, போதுபூ போரேறு பாதிரி மேவுசீர், நன்ஞெறு பூமருது நீடுகொடி காருருமு, நாணுத் தளையிவை யொரோவொன்று பத்தாக, வகவல் பெற்ற விணைமோனைத்தொடை, யிரைம் பஃதொடு

முப்ப தாகும்"; நேராதி பதின்மூன்றுக்குத் தொடை ௯௫௰. "வாகு புளி மா வரவு வலியது, கடியாறு விறகுநீக் கணவிரி யுராறுபுலி, பெருவேணு உருமுத்தீ மழகளிறு விரவுகொடி, நரையுருமு ஒரோவொன்று பதினொன் ருக, வகவல் பெற்ற வினைமோ னைத்தொடை, நூற்று நாற்பத்து மூன் றென நுவல்வர்" நிரையாதி பதின்மூன்றற்குத் தொடை ௯௪௩. ஆக அக வற்கு இணைமோனைத்தொடை உ௭௩.

"வண்டு ஞாயிறு போதுபூப் போரே, றென்றிவை யொரோவொன் றெவ்வே ழாகத், தேமா மின்னுப் பாதிரி மேவுசீர், நன்னாணுப் பூமருது மா செல் வாயிவை, யொரோவொன் ருகக் காருருமு மாவருவா, யொரோவொ ன் றைந்தாக வெள்ளைக் கிணைமோனை, யெண்ப தாக வியலு மென்ப;" நேராதி பதின்மூன்றுக்குத் தொடை அ0. "வாகு வலியது கடியாறு விறகு நீக், கணவிரி பெருவேணுப் புலிசெல்வாய் மழகளிறு, உருமுத்தீப் புளிமா விவையவ் வாறு, நரையுருமுப் புலிவருவா, யொரோவொன் றைந்தாக வெ ள்ளை பெற்ற, வினைமோனைத்தொடை யெழுபத் தாறும்;" நிரை யாதிச் சீர் பதின்மூன்றற்குத்தொடை எ௬. ஆகவெள்ளைக்கு இணைமோனைத் தொடை ௯௫௬.

"நேராதிச் சீரானு நிரையாதிச் சீரானு, மொரோவொன் றைந்தாகக் கலிக்குவரு மிணைமோனை, நூற்றிரு பஃதா நுவன்றனர் புலவர்" ஆகக்கலி க்கு இணையோனைத் தொடை ௯௨௰.

"மூவகைப் பாவிற்கு மொழிந்த வினைமோனை, ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்" ஆகத்தொடை ருா௪௰௯.

"நேராதி யாகிய சீர்பதின் மூன்ரு, ஒரோவொன்று பத்தாக வக வல் பெற்ற, பொழிப்புமோ னைத்தொடை நூற்றுமுப் பஃதே" நேராதி பதின்மூன்றுக்குத் தொடை ௯௩௰. "நிரையாதி யாகிய சீர்பதின் மூன்ரு, ஒரோவொன்று பத்து மொன்று மாக, வகவல் பெற்ற பொழிப்புமோ னைத்தொடை, நூற்று நாற்பத்து மூன்றென நுவல்ப" நிரையாதி பதின் மூன்றுக்குத் தொடை க௪௰௩. ஆக அகவற்குப் பொழிப்பு மோனைத் தொடை உ௱௭௰௩.

"வண்டு ஞாயிறு போதுபூப் போரே, றென்றிவை யொரோவொன் றெவ்வே ழாகத், தேமா மின்னுப் பாதிரி மேவுசீர், நன்னாணுப் பூமருது மாசெல் வாயிவை, யொரோவொன் றிருமூன் ருகக் காருருமு, மாவரு வாயி வை யொரோவொன் றைந்தாக, வெள்ளை பெற்ற பொழிப்புமோ னைத்

தொடை, யெண்ப தாக வியம்பினர் புலவர்" நேராதி பதின் மூன்றற்குத் தொடை அம. "வரகு வலியது கடியாறு விறகுதீக், கணவிரி பெருவேணுப் புலிசெல்வாய் மழகளிறு, உருமுத் தீப்புளி மாவிலை யொரோவொன், றிரு மூன் றாக வியைந்த பின்னர், நரையுருமுப் புலிவருவா யொரோவொன் றைந்தாக, வெள்ளை பெற்ற பொழிப்புமோ னைத்தொடை, யெழுபத்தா றென வியம்பினர் புலவர்" நிரையாதி பதின்மூன்றற்குத் தொடை எம்சு. ஆக் வெள்ளைக்குப் பொழிப்புமோனை ளாருமசு.

"நேரு நிரையு மாகிய சீர்க, ளிருபத்து நான்கா னொரோவொன் றைந் தாகத், துள்ளல் பெற்ற பொழிப்புமோ னைத்தொடை, யீரைம் பஃது மிரு பது மாகும்" ஆகக்கலிக்குப் பொழிப்புமோனை ளஉம.

"மூவகைப் பாவின் பொழிப்புமோ னைத்தொடை, ஐந்நூற்று நாற்பத் தொன்ப தாகும்" ஆகத்தொடைட் ருளசமகூ.

"நேராதி யாகிய சீர்பதின்மூன்று, னொரோஒவொன்றுபத் தாகவகவல், பெற்றவொரூஉ மோனைத்தொடை நூற்றுமுப் பஃதே" நேராதிபதின்மூன் றுக்குத்தொடை ளஙம. "நிரையாதியாகிய சீர்பதின்மூன்று, னொரோவொன் றுபத்து மொன்று மாக, வகவல் பெற்ற வொரூஉமோ னைத்தொடை, நூற்று நாற்பத்து மூன்றென நுவல்வர்" நிரையாதி பதின்மூன்றுக்குத் தொடை ளசங. ஆக அகவற்கு ஒரூஉமோனைத்தொடை உஎமங.

"வண்டு ஞாயிறு போதுபூப் போரே, றென்றிவை யொவ்வொன் றெவ்வே ழாகத், தேமா மின்னுப் பாதிரி யேவுசீர், நன்னாணுப் பூமருது மாசெல் வாயிவை, யொரோவொன் றிருமூன் றாகக் காருருமு, மாவரு வாயி வை யொரோவொன் றைந்தாக, வெள்ளை பெற்ற வொரூஉமோ னைத்தொ டை, யெண்ணொரு பஃது மெய்து மென்ப" நேராதி பதின்மூன்றுக்குத் தொடை அம. "வரகு வலியது கடியாறு விறகுதீக், கணவிரி பெருவேணுப் புலிசெல்வாய் மழகளிறு, உருமுத் தீப்புளி மாயிலை யொரோவொன், றிரு மூன் றாக வியன்ற பின்னர், நரையுருமுப் புலிவருவா யிவையொரேவொன் றைந்தாக, வெள்ளை பெற்ற வொரூஉமோ னைத்தொடை, யேழொரு பஃது மாறு மாகும்." நிரையாதி பதின்மூன்றுக்குத் தொடை எமசு: ஆகவெள்ளை ஒரூஉமோனைத்தொடை ளாருமசு.

"கலிக்கு வருஞ்சீர் பத்து நான்கு, மொரோவொன் றைந்தாகப் பெற்ற வொரூஉமோனை, யீரைம் பஃது மிருபது மாகும்." ஆகக்கலிக்கு ளஉம.

"மூவகைப் பாவிற்கு மொழிந்த வொரூஉமோனை, ஐந்நூற்று நாற்பத் தொன்ப தாகும்." ஆகத்தொடை ருளசமகூ.

"நேர்பதின் மூன்று னொரோவொன்று பத்தாக, வகவல்பெற்ற கூழை மோ னைத்தொடை, நூற்றுமுப் பஃதென நுவன்றனர் புலவர்" ளாகூய. "நிரையாதி யாகிய சீர்பதின் மூன்று, னொரோவொன்று பத்து மொன்று மாக, வகவல் பெற்ற கூழைமோ னைத்தொடை, நூற்று நாற்பத்து மூன் றென நுவல்வர்" ளாசஙு. ஆக அகவற்குக் கூழைமோனைத்தொடை உளஎயங.

"வண்டு ஞாயிறு போதுபூப் போரேறு, எனவிவை ஒரோவொன் றெ வ்வே ழாகத், தேமா மின்னுப் பாதிரி மேவுசீர், நன்னுணுப் பூமருது மாசெல் வாயிவை, யொரோவொன் றுகக் காருருமு மாவருவா, யொரோவொன் றை ந்தாக வெள்ளை பெற்ற, கூழைமோனைத்தொடை யெண்பஃ தாகும்" அய. "வரகு வலியது கடியாறு விறகுதீக், கணவிரி பெருவேணுப் புலிசெல்வாய் மழகளிறு, உருமுத்தீப் புளிமா விவையொ ரோவொன், றீரா றுக வியன்ற பின்னர், நரையுருமுப் புலிவருவா யொரோவொன் றைந்தாக, வெள்ளை பெற்ற கூழைமோனைத்தொடை, யெழுபத் தாறு வியலு மென்ப." எயசுூ. ஆக வெள்ளைக்குக் கூழைமோனை கஙியசுூ. "நேரு நிரையு மாகிய சீர்க, ளிரு பத்து நான்கா னொரோவொன் றைந்தாகத், துள்ளல் பெற்ற கூழைமோ னைத்தொடை, யீரைம் பஃது மிருபது மாகும்" கஉய.

"மூவகைப் பாவிற்குங் கூழைமோனைத்தொடை, ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்" ருாசயக.

"நேர்பதின் மூன்று னொரோவொன்று பத்தாக, வகவற் குவருமேற் கதுவாய் மோனை, நூற்று முப்பஃ தென நுவன் றனரே" கஙுய. "நிரை யாகியசீர் பதின்மூன் றுனொரோ, வொன்று பத்து மொன்று மாக, வகவல் பெற்ற மேற்கதுவாய் மோனை, நூற்று நாற்பத்து மூன்றென நுவல்வர்." கசயஙு. ஆக அகவற்கு மேற்கதுவாய்மோனை உளயங. "வண்டு ஞாயிறு போதுபூப் போரேறு, என்றிவை யொரோவொன் றெவ்வே ழாகச், தேமா மின்னுப் பாதிரி மேவுசேர், நன்னுணுப் பூமருது மாசெல் வாயிவை, யொ ரோவொன் றுருகக் காருருமு மாவருவா, யொரோவொன் றைந்தாக வெ ள்ளைக்கு மேற்கதுவாய், மோனை யெண்பஃ தாகு மென்ப" அய. "வரகுவலி யது கடியாறு விறகுதீக், கணவிரி பெருவேணுப் புலிசெல்வாய் மழகளிறு, உருமுத்தீப் புளிமா விவையொ ரோவொன், றீரா றுக வியன்ற பின்னர், நரையுருமுப் புலிவருவா யொரோவொன் றைந்தாக, வெள்ளை பெற்ற மேற்கதுவாய் மோனை, யேழொரு பஃது மாறு மாகும்" எயசுூ. ஆகவெ ள்ளைக்கு மேற்கதுவாய்மோனை கஙியசுூ. 'நேரு நிரையு மாகிய சீர்க, ளிரு பத்து நான்கா னொரோவொன் றைந்தாகத், துள்ளல் பெற்ற மேற்கதுவாய் மோனை, யீரைம் பஃது மிருபது மாகும்" கஉய.

ணமதிகரிக்கும். இரண்டுகைகளை உறைக்கத்தேய்த்தால் வெப்பம் உண்டாகக்காண்கிறோம். பாதையில் வண்டிகள் ஓடும்போது வண்டிகளின் சக்கரத்துவட்டஓரம் பாதையின்கணுள்ள கற்களில் தாக்குண்டு நெருப்புப்பொறிகளை உண்டுபண்ணுகிறது. மேலும் லாடமடித்த குதிரைவேகமாயோடுகையில் லாடமானது வெகு உறுதியான உலோகமாகிய இரும்பினால் ஆனதாகையால் கற்களிற்பட்டுத் தீப்பொறிகளை உண்டுபண்ணுகிறது. மேலும் கத்தி, கத்திரி முதலியவைகளைச் சாணைபிடிக்குங்கால் அவை, உருளும் கற்சக்கரத்திற்பட்டு உறைத்து நெருப்புப்பொறிகளை வீசுகின்றன. இரும்பைக்கொண்டு சக்கிமுக்கிக்கல்லிலும் (Flint) எரித்தால் நெருப்புப்பொறியுண்டாய் உடன்வைக்கப்பட்டபருத்திபோன்ற இலேசாயுமெளிதில் தீயைக்கொள்ளும்படியானதுமானபொருள்களைக்கொளுத்துகின்றது. இதுபோன்ற காரணத்தினாலேயே பூமிக்குள் தாக்கப்பட்டுள்ள தாவரப்பொருள்கள் வெப்பத்தையுண்டுபண்ணி வெப்பத்தினாற் கருகி நிலக்கரியாகின்றன. நிலக்கரியும் சுத்தக்கரியைக் (Carbon) கொண்டானதுதான். நமது இந்து தேசத்தில் சிங்கரேனி என்னும்ஊரில் மிகுதியாய் நிலக்கரியைவெட்டியெடுக்கிறார்கள்.

மேலும் மாமிசத்தை நீக்கி எலும்புகளைச்சுட்டால் எலும்புக்கரியாம். தசை குளம்பு முதலான மாமிசங்கொண்ட பொருள்களும் வெப்பத்திற் கருகினால் சற்றுச்சுத்தக்கரியை (Carbon) வெளிவிடும். நமது வீடுகளில் எரியும் விளக்கின்மேற் சற்று உயரமாய் வெண்மையானகாகிதத்தைப் பிடித்தால் விளக்கின்புகை அதின்மேற்படியக் காகிதம் கருநிறமடைகிறது. இக்கருநிறம் சுத்தக்கரியின் பொடிகளாலாகியது.

எலும்புக்கரியும் அடுப்புக்கரியும் அடியிற் கூறியபடி உபயோகமாகின்றன. கரும்பை ஆலையில் ஆட்டி அதன் இரசத்தை யெடுத்துக் காய்ச்சி வெல்லம், சர்க்கரை முதலானவைகளை எடுப்பது எல்லோருக்குந் தெரியும் அவ்விதமெடுக்கும் சர்க்கரை சிவப்புவர்ணத்தைக் கொண்டுள்ளது. சிவப்பு வர்ணத்தை நீக்கினால் சர்க்கரை வெண்ணிறம்பெறும். ஆகையால் சிவப்பு வர்ணத்தை நீக்கும்பொருட்டு சர்க்கரையை நீரிற்கரைத்து எலும்புக்கரித் தூள்களைக்கொண்டு கலப்பார்கள். இவ்வெலும்புத்தூள்கள் சிவப்பு நிறத்தை உட்கொண்டு சர்க்கரையினின்றும் அவ்வர்ணத்தைநீக்கவல்லன. ஆகையால் எலும்புக்கரியானது சிவப்புச்சர்க்கரை அதாவது நாட்டுச்சர்க்கரையின் வர்ணத்தை நீக்கவல்லது. பெரும்பாலார் வெள்ளைச்சர்க்கரையுடன் எலும்புத்தூள்கள் கலந்திருப்பதாகக்கருதி அதை எலும்புச்சர்க்கரை யென்று பரிகாசமாய்க்கூறுவர். மேற்சொல்லிய வழியையறிந்து உண்மையைத் தீரப் பரிசோதிக்கலாகும்.

அடுப்புக்கரியைக்கொண்டு நீரைச் சுத்தப்படுத்துவார்கள். தண்ணீரை வடிகட்டுங்கால் அடுக்குப்பானைகளில் நீர்சொட்டப்பார்க்கிறோம். பானைகளிலொன்றில் அடுப்புக்கரி பரவியுள்ளது. நீரிற்கலந்திருக்கும் துர்வாயுக்களை அடுப்புக்கரியானது இழுத்துக்கொள்ளவல்லது. அடுப்புக்கரியிலுள்ள சிறு துவாரங்கள் துர்வாயுக்களுக்குத் தங்குமிடமாம். இவ்விதமுபயோகிக்க வல்ல அடுப்புக்கரியை அப்போதைக்கப்போது நன்றாகக்காய்த்துத் துவாரங்களினின்று துர்வாயுக்களை நீக்கவேண்டும். எல்லாக்கரிகளும் சுத்தக்கரியைக் கொண்டவைகளே.

வைரக்கல்லானது சுத்தக்கரியாலாகியது. அது பளிங்குகொண்டது (Crystalline). இந்தியா, பர்மாதேசங்களில் வைரக்கற்கள் அகப்படுகின்றன. வைரக்கல்லானது கடினபதார்த்தங்களாகிய கண்ணாடி எஃகுகளையும் அராவக்கூடிய கடினவஸ்து. வர்ணமற்றதும், பச்சை, மஞ்சள் முதலிய வர்ணத்தைக்கொண்டதுமான வைரக்கல்லை அவ்வந்நிறத்திற் காணலாம். மஞ்சள் நிறங்கொண்டால் சிறப்பாகக்கருதலாகாது. கண்ணாடி, பாறைபோன்ற கடினப்பொருள்களை உடைப்பதற்கும் மற்றும் சில யந்திரங்களினுபயோகத்திற்கும் வைரக்கல் உதவும்.

சுபாவத்தில் வைரக்கல்லுண்டாகும் வழியை அடியில்வருமாறு கூறுவர். வெகு ஆழம்வரையில் பூமியில் சுத்தக்கரியைக் கொண்ட பொருள் யாதாயினுங்கிடந்தால் வெகுபாரத்தினாலும் பிராணவாயுநீங்கி மிக்க உஷ்ணத்தாலும் அப்பொருள் வைரக்கல்லுருவத்தை மேற்கொள்ளலாகும். இவ்விதமாகவே அடுப்புக்கரியைக்கொண்டு பிராணவாயுவை நீக்கியுள்ளவிடத்தில் மிக வெப்பத்தினாலும் பளுவினாலும் மிகச்சிறுவைரக்கற்களை உண்டுபண்ணிப் பரீக்ஷித்திருக்கின்றனர்.

உலோகங்களாகிய மூலதாதுப்பொருள்கள்.

உலோகங்களாகிய மூலதாதுப்பொருள்களில் உத்தேசம் எழுபது இருக்கின்றன. அவையெல்லாவற்றையும் நாம்சாதாரணமாக உபயோகிப்பதில்லை. அவற்றுள் இரும்பு, செம்பு, பொன், வெள்ளி இவைபோன்றவை நமது பழக்கத்திற்குஇன்றியமையாதன வாயுள்ளன. இப்போது நமதுபழக்கத்துக்கு நூதனமாய் உபயோகப்பட்டுவரும் அலுமினியம் (Aluminium) என்னும் உலோகத்தை நாள்தோறுமதிகரித்துவரப் பார்க்கின்றோம். இவ்வகைத்தான உலோகங்களில் முக்கியமான சிலவற்றைக் குறித்துப்படிக்குமுன் உலோகமாகிய தாதுப்பொருளின் இயல்பு பொதுவாக அறியத்தக்கது.

நாம் பொறுக்கத்தகுந்த சாதாரண வெப்பத்தில் ஏறக்குறைய உலோகங்களெல்லாம் கனஸ்திதியிலுள்ளன. அவ்வப்பொருளுக்கு வேண்டியபடி

வெப்பம் அதிகரித்தால் பொருள்கள் கனஸ்திதியினின்று ஜலஸ்திதிக்கு மாறுவதாக முன்னமேயே படித்தோம் ஆனால் நாம் முன்படித்த வாதரஸமென்பது (Mercury) ஓர் ஜலபதார்த்தமென்பது தெரியுமானாலும் அது மற்ற உலோகங்களைப்போல் சாதாரண வெப்பத்தில் கனஸ்திதியில்லாமல் ஜலஸ்திதியிலுள்ள உலோகமென்பது கவனிக்கத்தக்கது. மேலும் உலோகமானது தேயத்தேயப் பளபளப்பைக்கொள்ளும். பொன், வெள்ளி, இரும்பு முதலியவற்றால் செய்யப்பட்ட சாமான்கள் அததற்கேற்றபடி பிரகாசமடைவதைப் பார்த்திருக்கிறோம். ஏறக்குறைய எல்லா உலோகங்களும் மூலப் பார்வைக்குபயோகப்படுவதில்லை. எவ்விதமெனில் ஓர்கண்ணாடியைக்கொண்டு அதன்மூலமாய்ப் பொருள்களைப்பார்த்தால் அவை தெளிவாய்க் கண்ணுக்குப் புலப்படுகின்றன. அதுபோல உலோகத்தைத் தகடாக அடித்து அதன்மூலமாய் யாதாயினுமோர் பொருளைப்பார்த்தால் அப்பொருள் கண்ணுக்குத் தெளிவாய்ப் புலப்படாது. ஆனால் பொன்னைத் தகடாக அடித்து அதன்மூலமாய்ப்பார்த்தால் ஓர்விதப்பச்சைநிறமுள்ள பிரகாசமும், வெள்ளியை அவ்விதமே தகடாகக்கொண்டு பார்த்தால் ஓர்வகைச் சிவப்புநிறமுங் காணலாம். ஆதலால் அவைமுழுதுங் குருடல்ல. ஓர்கண்ணாடியின்மூலமாய்ப் பார்க்கக்கூடாவிட்டால் அதை ஓர் குருட்டுக்கண்ணாடியென்று கூறுவதுண்டு. அவ்விதம் மற்ற உலோகங்களைக் கூறலாமானாலும் பொன் வெள்ளியாகிய உலோகங்கள் முழுமையுங்குருடாக மேற்கூறிய காரணங்களாற் சொல்லலாகாது. மேலும் உலோகங்களெல்லாம் சற்றேறக்குறைய வெப்பத்தைச் செலுத்தவல்லன. வெப்பத்தைச் செலுத்துவதாவது (Conduction) ஓர்முனையைத்தீயைக்கொண்டு காய்ச்சினால் மற்றோர்முனை சுடுதல். இவ்விதமே சூக்ஷ்மத் தீயையும் உலோகங்கள் செலுத்தவல்லன. அவற்றுள் அனேகம் தகடுகளாகவும் கம்பிகளாகவும் அடிக்கப்படுவனவாம். மேலும் செம்புபோன்ற சிலஉலோகங்கள் ஓர்விதநாற்றத்தை வெளிவிடுகின்றன. சுத்தமானஉலோகங்கள் எல்லாம் மெதுவானவை. பொன்னும் இரும்பும் இதற்குதாரணமாம். வேண்டுமானால் பலசேர்க்கைகளினால் உலோகங்கள் மெதுவானதன்மையை விட்டு முருட்டுத்தன்மையை யடையக்கூடும்.

உலோகங்கள் எல்லாம் ஒரே அளவான வெப்பத்தைக்கொண்டு உருகுவதில்லை. உதாரணம்:—ஈயத்தை உருக்குவதற்கு நான்கு விறகுவேண்டுமானால் இரும்பை உருக்குவதற்கு 8-விறகு வேண்டுவதாயிருக்கும். அதாவது ஈயத்திற்குவேண்டுமளவைவிட இரும்பிற்கு வெப்பம் அதிகவளவாயிருக்கவேண்டுமென்பதாம். ஈயம், துத்தநாகம், (Zinc)போன்றவை செந்நிறமடையாமலே உருகுபவை. பொன்னும் வெள்ளியும் செம்பும் செந்நிறமடைந்தபிறகு உருகுபவை. இரும்பு முதலானவை வெண்ணிறமடைந்தபிறகு

தான் உருகுவன. சிலலோகங்களில் வெப்பம் மாறுபட்டால் அவை எளிதில் ஒடியத்தக்கன. சில உலோகங்களின் தூள்கள் வெகுகெட்டியாய்ப்பிடித்துக்கொண்டிருக்கலாமாகையால் அவ்வுலோகங்கள் அவைகளைத் தகடாகவும் கம்பிகளாகவுமடித்தபிறகும் ஒடியமாட்டா. உதாரணம்:—இரும்பு.

பொன், வாதரஸம், பிளாடினம் (Platinum) என்னுமோர் உலோகம் ஆகிய இவை சுத்தமாக அகப்படக்கூடியவை. ஆனால் அவை மற்ற உலோகங்களுடன் கலக்கக்கூடியன. ஆகையாற்றான் வாதரஸத்தை உபயோகிக்கும்போது பொன்நகைகளைக் கழற்றியபின் உபயோகிக்கவேண்டுமென்பார்கள். சாதாரணமாய் உலோகங்கள் பிராணவாயுவுடனும் (Oxygen) கந்தகத்துடனும் கலந்துள்ளன. அத்தன்மையில் உலோகங்கள் உலோகங் கலந்த மண் என்பர் (Ores).

1. ஈயம்:—ஈயமானது ஓர்விதப் பச்சையும் வெண்மையுங்கலந்த நிறமுடைய உலோகம். அது வெகு மெதுவானது. அதைக் கீறினால் வடிவு பெறும். ஈயத்தைக் கம்பியாகத்தட்டமுடியாது. ஏனெனில் ஈயப்பொடிகள் ஒன்றுக்கொன்று உறுதியாகப்பிடித்துக்கொள்ளுகிறதில்லை. ஆனால் ஈயத்தைத் தட்டையாகஅடிக்கக்கூடும். ஆகையாற்றான் நாம் ஈயப்பாத்திரங்களைச் செய்யவல்லோம். அஃதோர் பளுவான உலோகம். வெகு அதிகமாக ஈயத்தைக் காய்ச்சினால் ஈயம் பிராணவாயுவுடன் கலந்து பொடியாய்விடும். இவ்வித ஈயப்பொடிகளைச் சுலபமாய் நீக்கலாம். ஈயத்தை உருக்கி அதில் பொன், வெள்ளியை விட்டால் அவை கரையும். சிறுநீர்க்குழாய்களுக்காக ஈயத்தை உபயோகிப்பார்கள். துப்பாக்கிக்குண்டுகளை ஈயத்தைக்கொண்டு செய்கிறார்கள். வெகு உயரத்தில் உருகின ஈயத்தைச் சல்லடையிற்கொட்டினால் ஈயக்குண்டுகளாகக் கீழேவிழுகின்றன. அச்சடிப்பதற்கும் எழுத்துக்களின் உருவைக்கொள்ள ஈயமுபயோகமாகிறது. ஈயத்தை வெகு பொடிகளாக்கிக்காற்றில் வைத்தால் ஈயப்பொடிகள் சிலநேரத்தில் தீயைக்கொண்டு எரிகிறது. இதை இங்கிலீஷில் லெட் பைராபாரஸ் (Lead pyrophorus) என்பர்.

கதவு, சாளரம் முதலியவைகளுக்கு வர்ணம் பூசுங்கால் ஓர்வித வெண்ணிறங்கொண்ட ஜலபதார்த்தத்தைப் பூசப்பார்த்திருக்கிறோம். இதை ஈயவெள்ளையென்பார்கள். இது வெள்ளீயந்தான். இஃது ஈயமும் சுத்தக்கரியும் பிராணவாயுவுங்கலந்துண்டாகியது. வெள்ளீயம் அதாவது ஈயவெள்ளை வெகுவிஷமானபதார்த்தம். நேரஞ்செல்லச்செல்ல மெதுவாய்க்கருநிறமடைகிறது. சிலமஞ்சள் வர்ணங்களுக்காகவும் சாயம் பூசுங்கால் ஈயக்கலவைப் பதார்த்தங்களை உபயோகிப்பார்கள். மருந்தாகவும் பாஷாணங்களாகவும்

தூரத்தில் கட்டப்பட்டிருக்கவேண்டும். தொத்துநோயால் வருந்துகின்ற வர்களை அவர்கள் வீட்டைவிட்டு அப்புறப்படுத்தி இக்குடிசைகளில் கொண்டுவந்து போட்டு வைத்தியம் நடத்தவேண்டும். இது சிலர் மனதுக்கு ஒவ்வாமலிருக்கலாம். நமது சௌக்கியத்தையும் நம்மைச்சேர்ந்தவர்கள் சௌக்கியத்தையும் நாம் உண்மையாகக் கருதியிருக்கும்பக்ஷத்தில் அவ்வாறு ஏற்படுத்தப்பட்டிருக்கும் குடிசைகளில் போயிருந்துகொண்டு சிகிற்சை செய்துகொள்ளுவதால் நாம் எல்லாருக்கும் நன்மை செய்தவர்களாவோம்.

தொத்துநோய் எக்காலத்தில் வரும் என்பது நமக்குத் தெரியாதாகையால் ஒவ்வொரு நகரத்தின் முனிசிபாலிடி சபையார்களும் தங்கள் நகரத்தின் ஜனத்தொகையைக்கணக்குப்பார்த்து அந்தந்தவருஷத்துச் செலவுகணக்கு ஏற்படுத்தும்பொழுது தொத்து நோய்களுக்கென்று ஜனத்தொகை 25,000-க்கு ஆயிரம் ரூபாவீதம் ஒதுக்கிவைத்து அதை வேறு ஒருவிதச்செலவுக்கும் உபயோகப்படுத்தாமல் வருவார்களேயானால் இத்தொத்து நோய் வரும்பொழுது செலவுக்கு ஓர்வித சிரமமுமில்லாமலிருக்கும்.

விஷபேதி முதலிய தொத்துநோய்கள் வந்துவிடலாமென்ற பயமிருக்கும்பொழுது நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டிய சிலவிஷயங்கள்:—

(1) நமது வீடுகளை நன்றாகச்சுண்ணாம்பு அடித்து, நமது வீடுகளின் உட்பக்கங்களிலேயும் வெளிப்பக்கங்களிலேயும் குப்பை கூளங்கள் குவிக்சப்பட்டிருந்தால் அவைகளை வீட்டுக்குச்சமீபத்தில் ஒருபொழுதும் வைக்காமல் அப்புறப்படுத்தவேண்டும்; மாட்டுக்கொட்டில் அழுக்குத்தண்ணீர் வீட்டின் சாக்கடைநீர் இவைகள் ஒன்றும் தேங்கிநிற்காமல் அப்போதைக்கப்போது அகற்றப்படுவதில் நாம் வெகு ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும்.

(2) இவ்வாறு குப்பைகூளங்கள் சாக்கடைத்தேக்கங்கள் இவைகளை நாம் அகற்றியபிறகும் இவைகளிருந்த இடங்கள் நாற்றமடித்துக்கொண்டிருந்தால் அவ்விடங்களைக் கொஞ்சம் ஆழமாகக்கொத்தி நாற்றம் நாறும் மண்ணை எடுத்து எறிந்துவிட்டுப்பரிசுத்தமான மண்கொண்டுவந்துகொட்டி அவ்விடங்களை மூடவேண்டும். வெட்டியெடுக்கும் கெட்ட மண் நாம் நல்லமண் காண்கிறவரையில் வெட்டவேண்டும். இவ்வாறு வெட்டியெடுத்த பழையமண்ணையும் குப்பைகூளங்களையும் நகரத்துக்கு அப்பாலிருக்கும் புலங்களுக்கு எருவாக உபயோகப்படுத்தலாம்.

(3) நாம் நமது வாசஸ்தலங்களின் உட்பக்கம் வெளிப்பக்கம் இவ்விரண்டுபக்கங்களிலேயும் நன்றாகச்சுண்ணாம்படிக்கவேண்டும். அவ்வளவு செலவு

செய்ய நமக்குச் சக்தியில்லாதபக்ஷத்தில் உட்பக்கத்திலாவதுசுண்ணும்படித் தே தீரவேண்டும்.

(4) நமது வீடுகளுள் சந்து பொந்துகளில் அடைக்கப்பட்டும் திணிக்க ப்பட்டும் சில கந்தைகள் சிலதுணிமூட்டைகள் இவைகளிருக்கலாம். இவை களை நாம் தூங்குமறைகளில் குவியாதபடி பாதுகாக்கவேண்டும். அதிகக் கந்தைகளை எரித்துவிடலாம்.

(5) வீட்டுக்கதவுகளையும் பலகணிகளையும் அடைத்து வைக்காமல் காற்றுப்போக்குக்குக்குறைவில்லாதபடி எப்பொழுதும் திறந்துவைத்திருக்க வேண்டும்.

(6) நகரங்களில் வசிப்பவர்களுக்குப்பெரும்பாலும் கக்கூசுகள் வீட்டிற் குள்ளேயே யிருக்கலாம். அக்கக்கூசுகளில் அழுக்குநிற்காமல் அவ்வாறு நின் று நமது தேகசௌக்கியத்தைக் கெடுக்காமல் ஒருநாளைக்கிருமுறையாவது அவைகள் பரிசுத்தமாகும் வழியை நாம் தேடவேண்டும்.

(7) அவ்வாறே நமது வீட்டைவிட்டு வெளியில் ஓடிக்கலக்கும் சிறு சாக்கடைகளையும் தினந்தோறும் இருமுறை சீராகக் கழுவவேண்டும். நமது வீட்டுக்குச்சமீபத்தில் சாக்கடைநீர் தேங்கிநிற்கும் குழிகளையும் கொட்டிலி லிருந்து மாடுமுதலிய கால்நடைகளின் மூத்திரம் ஓடிவந்து தேங்கும் குழிக ளையும் நாம் அடிக்கடி அவ்வழுக்கு ஜலத்தையும் அகற்றி வெகுபரிசுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

இவ்வேழு நிபந்தனைகளும் நம்மைச்சுற்றிய ஸ்தலங்களையும் நமதுவாஸ ஸ்தலத்தையும் நாம் பரிசுத்தமாய் வைத்துக்கொள்ளும் முறைகளைப்போதி க்கின்றன. இவைகளன்றியும் நாம் நமது சொந்த தேகம் உடுப்பு உணவு முதலிய விஷயங்களிலும் வெகு ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும்.

(8) தொத்துநோய் வியாபித்திருக்கும் காலத்தில் நமது தேகத்தை நாம் வெகு பரிசுத்தமாக வைத்துக்கொண்டு எல்லாவிதத்திலும் பரிசுத்த மான ஆடை உடுக்கவேண்டும். தேகத்துக்கு ஒத்துக்கொள்ளவில்லை யெ ன்று ஸ்நானஞ் செய்யாமலிருக்கலாகாது. வெந்நீரிலாவது பிரதிதினமும் நாம் குளித்தோ அல்லது ஸ்நானம்பண்ணியோ நமது சரீரத்தை வெகு நிர் மலமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

(9) நாம் புசிக்கும் ஆகாரம் வெகு சுலபத்தில் செரித்துக்கொள்ளக் கூடிய ஆகாரமாகவிருக்கவேண்டும். அது புஷ்டிகரமாகவும் பரிசுத்தமான தாகவுமிருக்கவேண்டும். வயிற்றுப்போக்கையும் அஜீர்ணத்தையும் உண்டா

க்கும்—கீரைகள் கனிகள் இவைகளை நாம் தொத்து நோயுள்ள காலத்தில் புசிக்கலாகாது. இவைகளில்லாது நாம் புசிக்கும் மற்றய காய்கறிப் பதார்த்தங்களை நாம் நன்ருகக் குழையவிட்டுச் சமைத்துப் புசிக்கவேண்டும். பாதிவெந்ததும் வேகாததுமாக சாகங்களை நாம் அக்காலத்தில் புசிக்கவேகூடாது. சமையற்செய்யும் முன்பாக நாம் அறியும் சாகங்களை நன்ருகக் கழுவி அரியவேண்டும். எப்பொழுதும் நாம் உபயோகிப்பதைவிட வீசம் பங்கு உப்பு அத்தொத்துநோய் பரவியிருக்கும் காலத்தில் அதிகமாகச்சேர்த்துக் கொள்ளலாம். ஆனுல், அதற்கு அதிகமாக உப்புச் சேர்ப்போமேயானுல் ஒருக்கால் வயிற்றுப் போக்கு உண்டாகலாம். நாம் புசிப்பதற்காக வைத்திருக்கும் ஆகாரத்தின்மேல் ஈ, கொசு முதலிய மசகங்கள் வந்துட்காராத வண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

(10) தீர்ந்தம் விஷபேதி முதலிய தொத்துநோய் பரவியிருக்கும் பொழுதும், அல்லது அந்நோய் சீக்கிரம் சம்பவிக்கலாம் என்ற பயம் உண்டாயிருக்கும்பொழுதும் நாம் உபயோகிக்கும் தீர்த்த விஷயமாக வெகு ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும். அசுத்தமான நீரை நாம் ஒன்றுக்கும் உபயோகிக்கவே கூடாது. எவ்வளவுமட்டும் சுத்தநீர் நமக்குக் கிடைக்குமோ அவ்வளவுதூரம் அச்சுத்தநீரையேஉபயோகிக்கும்வழிபார்க்கவேண்டும். நாம் குளிக்கிற நீர், நாம் அருந்தும் நீர், நமக்கு உணவுகளாகின்ற பால் தயிர் மோர் இவைகளில் கலக்கும் நீர், நமது போசனத்தை சமையற்செய்யும் நீர் இவ்வளவுவித காரியங்களுக்கும் உபயோகப்படும்நீர் வெகு பரிசுத்தமான நீராகவேயிருக்கவேண்டும்.

(11) விஷபேதி பரவியிருக்குங்காலத்தில் நாம் நமது தேகத்தைப்பரிசுத்தம் செய்துகொள்ளுவதற்காகவென்று சாதாரண பேதிக்குச்சாப்பிடவே கூடாது. ஏதாவதுஒருகாரணத்தால் நமக்கு மலப்பிரவிருத்தி அதிகமானுல் அதை அடக்க நாம் ஔஷதம் சாப்பிடவேண்டும். ஒருநாளைக்கு இரண்டு தடவைக்குமேல் நமக்கு மலப்பிரவிருத்தியானுல் நாம் இவ்விதமாக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

(12) இவ்வித ஜாக்கிரதைகளுக்கெல்லாம் மேலாக நாம் மனோதைரியமாக விருக்கவேண்டும் என்பதை சுகஸந்தர்சனவாதிகள் எடுத்துக்கூறுகின்ருர்கள். ஏதாவது ஒருவிதநோய் வந்திருக்கும்பொழுது ஐயோ எப்பொழுது நம்மை அந்நோய் பற்றுமோவென்று பயப்படுகிறவனும் அதைப்பற்றி எப்பொழுதும் பேசிக்கொண்டிருப்பவனும்சுகப்படமாட்டான். ஆகையால் அந்நோயை நினைக்காமலும் அதைப்பற்றிப்பயப்படாமலும் அலட்சியமாகவேயிருக்கவேண்டும்.

நாமிதுவரையிற் சொல்லிவந்த ஏற்பாடுகள் ஒவ்வொருவிதத் தொத்து நோய் உண்டாகின்ற காலத்திலெல்லாம் நாம்நடத்தவேண்டிய ஏற்பாடுகள். பிளேக் என்பது ஓர் பெரும் தொத்துநோய்: ஆதலால் இந்நோய் உண்டாகும் காலத்தில் இவ்வித ஏற்பாடுகளை அனுசரிப்பதுடன் இன்னுஞ்சில அதிகமான நிபந்தனைகளையும் நாம் அனுசரிக்கவேண்டும். அரசாங்கத்தார்களும் பலவிதமான பந்தோபஸ்துக்கள் செய்வார்கள். அவ்விஷயமாய் முக்கியமான சில ஏற்பாடுகளை இவ்விடம் எடுத்து எழுதுவோம்.

மகாமாரி அல்லது பிளேக் என்பது பெரியம்மை விஷபேதி இவ்வியாதிகளைப்போல ஓர் பெரும் தொத்துநோயாக விருப்பதுடன் நேராகவோ அல்லது மறைந்தோ மற்றொரு பிளேக்நோயாளி மூலமாகத்தான் ஒரு புதியவிடத்துக்கு வருகின்றதென்று பிரசித்த வைத்தியர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். அன்றியும் இந்நோய் ஓர் இடத்தில் தோன்றினால் அங்கிருந்து ஒன்றும் மற்றவிடங்களுக்குப் போகக்கூடாதென்று ஏற்படுத்திக்கொண்டால் இவ்வியாதி மற்றவிடங்களில் பரவாமல் தடுக்கப்படும் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். மனிதர்கள், சாமான்கள் இவைகள் ஒவ்வொன்றும், பிளேக் இருக்குமிடம் அல்லது இருந்த இடத்திலிருந்து பிளேக் நின்ற 10, 15 நாள்வரையிலும் மற்றவிடங்களுக்குப் போகாமலிருந்தால் அந்நோய் மற்றவிடங்களில் ஒருபொழுதும் பரவமாட்டாது. ஆனாலிவ்வாறிருப்பது கஷ்டம். முற்றிலும் தடுக்க ஒருபொழுதும் முடியாது. பிளேக் இல்லாதவனை பிளேக்கிருக்கும் ஊரைவிட்டு மற்றவிடங்களுக்குப் போகக்கூடாதென்று எப்படித் தடுக்கமுடியும்? அவன் அவ்வாறு மற்றவிடங்களுக்குப் போகும்பொழுது அவனிடம் ஓர் சீட்டை அதிகாரிகள் கொடுத்து அவன் பிளேக்நோய் பரவிய விடத்தைவிட்டு வருகின்றவன் என்றும் அவன் எந்த ஊருக்குப்போகின்றானோ அந்த ஊரிலிருக்கும் அதிகாரிகள் அவன்மேல் கண்ணோக்கமாகவிருந்து அவன்மூலமாகப் பிளேக் அவ்வூரில் உண்டாகாதவண்ணம் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்றும் எச்சரிப்பார்கள். இவ்வாறு வந்தவனை 10-நாள்வரையில் பிரதிதினமும், ஜாக்கிரதையாகப் பரிசோதித்து அவனுக்கு அந்த 10 நாளைக்குள் ஜ்வரம் முதலிய நோய்கள், பிளேக் நோய் இவைகள் ஒன்றும் உண்டாகாதபட்சத்தில் அவனால் இனி பிளேக் உண்டாகமாட்டாது என்று நம்பி அவனைப்பற்றி விசாரமின்றியிருக்கலாம். இவ்வண்ணம் பாதுகாத்துக்கொள்ளும் முறையானது பாஸ்போர்ட் (Pass ports) என்று சொல்லப்படும் சாதனத்தால் நடக்கின்றது. அது எப்படியெனில்—பிளேக் என்பது ஓர் ஊரில் தோன்றியிருப்பதாகக் கருதுவோம். பிரகிருதத்தில் பம்பாயில் பிளேக் உண்டாய் இன்னும் முற்றிலும் நீங்காமலிருப்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. பம்பாயிலிருந்து சென்னைக்கு